தமிழரசு

ஜூலை 2004





227159
சென்னை-600 008
நூலகம்

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
ஆனி – ஆடி
ஜூலை 2004
மலர் : 36 இதழ் : 1
விலை ரூ.10

இந்த இதழில்...

- கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு மாற்றுப் பயிர்த் திட்டம் 2
  மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை
- விவசாயிகள் வாழ்வு வளம் பெற மாற்றுப் பயிராக சர்க்கரைக் கிழங்கு பயிரிடுங்கள் 5
  – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை
- குடும்பநலம் – தாய் சேய் நலப்பணிகள் வெற்றி பெறப் பாடுபடுவோம் 8
  மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் "உலக மக்கள் தொகை நாள்" செய்தி
- பயோ டீசலைத் தரும் காட்டாமணக்கு 9
- உயிரி எரிபொருள் தயாரிக்கும் திட்டத்துக்கு மத்திய அரசு சலுகை வழங்க வேண்டும் 13
  (மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதம்)
- சுற்றுலாப் பயணிகளுக்கான இணையதளம் 16
- கும்பகோணம் தீ விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு
  மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரில் ஆறுதல் 17
- ஊனமுற்றோர்களுக்கு விருது 21
- தூத்துக்குடி மாவட்டத்தில் பயோ டீசல் தயாரிப்பு மையம் 23
- திண்டுக்கல் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத்திட்டம் 25
- மேட்டூர் அனல்மின் நிலையம் – நிலக்கரிச் சாம்பலின் பயன்பாடு – ஒரு அறிமுகம் 28
- இயற்கை உர உற்பத்தியில் முன்னோடியாகத் திகழும் குமரி மாவட்டம் 30
- தேனி மாவட்டத்தில் பால் உற்பத்தி அதிகரிப்பு 32
- ஸ்டான்லி மருத்துவமனையின் சிறப்பு மிகுந்த செயல்பாடுகள் 33
- தரிசு தரும் பரிசு : மரப்பயிரும் ஓர் பணப்பயிரே 36
- 10–ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் தமிழகத்தில் வறுமையை ஒழிப்போம் 37
  (மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அளித்த உரை)
- மாநகரம் (சிறுகதை) 49
- விருதுநகர் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சணல் பொருள் பயிற்சி 59
- மாணவ, மாணவியருக்கு கல்வி பயில நிதி உதவி 61
- மூலிகைக் கண்காட்சி 63
- முத்துலெட்சுமி ரெட்டி பிறந்தநாள் 65
- கர்மவீரர் காமராசர் "புகழ் மாலை" 68
- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை 69
- ஏலகிரியில் எழில்மிகு கோடை விழா 70
- மாணவர் பக்கம் 72
- தமிழ்நாட்டில் கல்வெட்டுகள் 73
- வீரமரணம் அடையும் தமிழ்நாடு அரசு காவல்துறையின் சிறப்பு அதிரடிப்படை வீரர்களுக்குக்
  கருணைத் தொகை உயர்வு 75
- புத்துயிர் பெற்ற நரிப்பையூர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் 77
- வீடியோ கலந்தாய்வு மூலம் சிறைக் கைதிகளிடம் விசாரணை 79
- ஈரோடு மாவட்டத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் தீவிரச் செயல்பாடு 81
- கிருஷ்ணகிரி மாவட்ட அரசு அலுவலகங்களுக்கு ரூ.25 இலட்சம் மதிப்பிலான ஊர்திகள் 82
- மகளிர் சுயஉதவிக் குழுவினர் தயார் செய்யும் காகிதக் குவளை 84

அட்டைப்பட விளக்கம்

முதல் பக்க அட்டை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வீடியோ கலந்தாய்வு மூலம் சிறைக்கைதிகளிடம் விசாரணை செய்யும் புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இரண்டாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்புகள் – சத்துணவில் முட்டை வழங்கல், மாணவ–மாணவிகளுக்கு இலவச பேருந்துப் பயண சலுகை மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கல்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: **வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு மாற்றுப்பயிர்த் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

தமிழ்நாட்டில் தொடர்ந்து தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதன் விளைவாக நீடித்த வறட்சி நிலை ஏற்படுவதையடுத்து, விவசாயிகளின் வாழ்க்கை வளம் பெரும் வகையில் நம்பகமான வருவாய் கிடைக்க ஏதுவாக, வேளாண்துறை மேம்பட புதிய திட்டங்கள் உருவாக்கிட நான் தொடர்ந்து சிந்தித்து வருகிறேன். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்திடவும், மாற்றுப் பயிர் செய்திடவும், பல புதிய திட்டங்களை வேளாண் துறையில் என்னுடைய அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தில் தரிசாகவும், பயன்படுத்தப்படாமலும் கிடந்த விவசாய நிலங்களை பசுமை நிறைந்ததாக மாற்றிட, மரப் பயிர்களை, குறிப்பாக தோட்டப் பயிர்களை பயிரிட்டு வளர்த்திட 2002–ஆம் ஆண்டில் விரிவான தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தை நான் தொடங்கி வைத்தேன். 2003–2004ஆம் ஆண்டின் இறுதியில், இந்த திட்டத்தின் கீழ் 1 இலட்சத்து 19 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலம் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, மரப்பயிர்கள் நடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. 2004–2005ஆம் ஆண்டில் மேலும் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பாட்டிற்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு போதிய அளவு தண்ணீர் இல்லாத ஒரு மாநிலமாகும். இந்தியாவிலேயே, நபர் ஒருவருக்கு கிடைக்கக் கூடிய தண்ணீரின் அளவு மிகக் குறைவாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று ஆகும். எனவே, குறைவான தண்ணீரைப் பயன்படுத்தி, அதே நேரத்தில் கிராமப் பொருளாதாரம் மேம்படும் வகையில் கணிசமான வருமானத்தை விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஈட்டித் தரும் பயிர் வகைகளை பயிரிடுவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அதே நேரத்தில், அத்தகைய புதிய பயிர்களைப் பயிரிட்டு தொடர்ந்து மேற்கொள்ளப்படும் வேளாண் பதனம் செய்தல் மூலமாக, ஊரகப் பகுதிகளில் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகின்ற வகையில் மதிப்புக் கூடுவதை உறுதி செய்திட வேண்டும்.

தமிழ்நாட்டின் வேளாண் துறையின் வேகமான வளர்ச்சிக்கு நம்பிக்கை அளிப்பதாக சர்க்கரைச் சோளம் (Sweet Sorghum) மற்றும் காட்டாமணக்கு (Jatropha) ஆகிய இரண்டு பயிர் வகைகள் உள்ளன. உயிரி எரிபொருளை உற்பத்தி செய்கின்ற புதிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது வர்த்தக ரீதியான, உறுதிப்படுத்தப்பட்ட சந்தை இருப்பதால் சாத்தியம் ஆகும். சர்க்கரைச் சோளப் பயிர் மிகக் குறைந்த அளவு தண்ணீரைப் பயன்படுத்தி, சூழ்நிலைக்கு ஏற்ப வளரக்கூடிய ஒரு பயிராகும். சர்க்கரைச் சோளப் பயிரின் தண்டில் 10%–லிருந்து 12% வரை சர்க்கரைச் சத்து உள்ளது. எனவே, இதனை உயிரி எரிபொருள் தயாரிக்க பயன்படுத்தலாம். இப்பயிர் ஒரு குறுகிய காலப்பயிர் என்பதால் நான்கு மாதங்களுக்குள் ஒரு ஏக்கருக்கு சராசரியாக 30 டன் வரை விளைச்சலைத் தரக்கூடியதும், விவசாயிக்கு 10,000 ரூபாய் நிகர வருவாய் ஈட்டித்தரக்கூடியதும் ஆகும். மேலும் விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு கூடுதலாக 10,000 ரூபாய் இரண்டாவது பயிர் அல்லது மறுதாம்புப் பயிரிலிருந்து பெற முடியும். எனவே, வருடத்திற்கு நிகர வருவாயாக ஏக்கர் ஒன்றுக்கு 20,000 ரூபாய் பெற முடியும். கரும்புப் பயிருக்குத்

தேவையான தண்ணீரின் அளவில் 40% தான் சர்க்கரைச் சோளப் பயிருக்குத் தேவைப்படும். கரும்பின் ஒரு சாகுபடிக்குப் பயன்படுத்தப்படும் தண்ணீரின் அளவைவிட குறைவான தண்ணீரில் சர்க்கரைச் சோளப் பயிர் இரண்டு போகம் சாகுபடி செய்ய முடியும். சர்க்கரைச் சோளப் பயிர் களர் மற்றும் உவர் நிலங்கள் உள்ளிட்ட பல வகையான நிலங்களிலும் பயிரிட முடியும். இப்பயிர் எல்லாப் பருவங்களுக்கும் ஏற்ற பயிராகும். இது ஒரு குறுகிய காலப் பயிர் என்பதால் தொழிற்சாலைகளின் பயன்பாட்டுக்குத் தேவையான உயிரிப் பொருட்களை ஆண்டு முழுவதும் உற்பத்தி செய்ய முடியும். சர்க்கரைச் சோளப் பயிரின் தண்டிலிருந்து பிழிந்தெடுக்கப்படும் சாற்றை,

நொதிக்கச் செய்து அதன்மூலம் கிடைக்கும் 'எத்தனால்' ஒரு உயிரி எரிபொருள் ஆகும். சாறு பிழிந்தெடுக்கப்பட்ட சர்க்கரைச் சோளப் பயிரின் தண்டுகள் கரும்புச் சக்கையைப் போலவே தொழிற்சாலைகளின் மின்சார உப உற்பத்திக்கு எரிபொருளாகப் பயன்படுத்த முடியும்.

இதைப் போலவே தமிழகத்திற்கு சிறந்த பயன் தரக் கூடிய மற்றொரு பயிர் வகை காட்டாமணக்கு (Jatropha) ஆகும். இந்தப் பயிர் வறட்சியைத் தாங்கி நிற்கக் கூடிய, மிகக் குறைந்த அளவு மழை உள்ள இடங்களிலும் வளரக் கூடிய, உறுதியான, பல்லாண்டு வளரக்கூடிய புதர் வகைத் தாவரமாகும். இது, தரிசு நிலங்களில் மழையை நம்பி மானாவாரியாகப் பயிரிட ஏற்ற ஒரு அதிசய தாவரம் ஆகும். வளம் குறைந்த, தரமற்ற தரிசு நிலங்கள் உள்ளிட்ட அனைத்து வகையான நிலங்களிலும் வளரக் கூடிய பயிராகும். இதை ஆடு மாடுகள் மேய்வதில்லை என்பதுடன், இதன் மேலாண்மைக்கு மிகச் சிறிய அளவு கவனம் செலுத்தினாலே போதுமானதாகும். இதனை பூச்சிகளோ, நோயோ தாக்குவது கிடையாது. பத்து மாதங்களிலேயே இது பயன் தரத் தொடங்கி, மூன்று வருடங்களில் போதுமான அளவு உற்பத்தி கிடைக்கிறது. இது 30 ஆண்டுகளுக்கு நல்ல பலன் தரக் கூடியது ஆகும். எனவே, விவசாயிகள் தங்களிடம் உள்ள நிலங்களில் ஒரு பகுதியில் தற்போது பயிரிடப்படும் பயிருக்கு மாற்றாக காட்டாமணக்கு பயிர் செய்யலாம்; தரிசாக உள்ள நிலங்களிலும் இதனைப் பயிரிடலாம். காட்டாமணக்கு எண்ணெய், குறிப்பாக கிளிசரால் பிரித்தெடுக்கப்பட்ட பிறகு, ஒரு சிறந்த உயிரி எரிபொருள் ஆகிறது. காட்டாமணக்குப் பயிரின் விதைகள் முழுவதையும் உயிரி எரிபொருளாக மாற்றிட தொழிற்சாலைகள் வாங்கிக் கொள்ளலாம். காட்டாமணக்கு எண்ணெய்ப் பிண்ணாக்கு ஒரு சிறந்த உரம் ஆகும். நச்சு நீக்கிய பின் இந்தப் பிண்ணாக்கைக் கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்திட முடியும். இதிலிருந்து கிடைக்கும் 'கிளிசரால்' என்னும் உப பொருளை சோப்பு மற்றும் மருந்துப் பொருட்கள் தயாரிக்க பயன் படுத்தலாம். இதிலிருந்து கிடைக்கும் மற்றொரு பயனுள்ள உப பொருள் பொட்டாசியம் சல்பேட் ஆகும். தொடக்கத்தில் ஒரு ஏக்கருக்கு 8,000 ரூபாய் முதலீடு செய்து மூன்றாண்டுகளுக்குப் பிறகு ஆண்டு ஒன்றுக்கு ஏக்கருக்கு 12,000 ரூபாய் நிகர வருவாய் ஈட்ட முடியும். முதல் மூன்றாண்டுகளில் பருப்பு வகைகள் மற்றும் எள் போன்ற எண்ணெய் வித்துப் பயிர்களை இதனுடன் ஊடுபயிராக விவசாயிகள் பயிர் செய்யலாம்.

இவ்வாறாக, சர்க்கரைச் சோளம் மற்றும் காட்டாமணக்கு ஆகிய இரு பயிர்களும் விவசாயிகள் தங்களது வருவாயைப் பெருக்கி, வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள ஒரு மகத்தான வாய்ப்பை அவர்களுக்கு வழங்குகின்றன. தண்ணீர்த் தட்டுப்பாட்டால் விளைச்சல் தடைபட்டுப் போகும் பயிர்களுக்கு ஒரு சிறந்த மாற்றாக இவை விளங்குகின்றன. கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், நமது சுற்றுச்சூழலைப்

பாதுகாப்பதிலும் மிகுந்த திறன் படைத்ததாக இப்பயிர்கள் உள்ளன. வேளாண்மை உற்பத்தி பெருகுவதும், உற்பத்தித் திறன் அதிகரிப்பதும், ஊரகப் பகுதிகளில் வருவாயைப் பெருக்கி, அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும்.

கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு புதிய உத்வேகத்தை வழங்கிடும் வகையில் சர்க்கரைச் சோளம் மற்றும் காட்டாமணக்கு பயிர்களை சிறந்த மாற்றுப் பயிர்களாக வேளாண்மை செய்யும் ஒரு திட்டத்தைத் துவக்கிட நான் முடிவு செய்துள்ளேன். இத்தகைய ஒரு சீரிய திட்டம் வெற்றியடைய வேண்டுமானால், இதனை பயிர் செய்யும் விவசாயிகளுக்கு அவர்களது உற்பத்திப் பொருள் தொடர்ந்து நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும் என்னும் உறுதி அளிக்கப்பட வேண்டும். எனவே, வேளாண் விளைச்சலைப் பயன்படுத்தி மதிப்பூட்டிய பொருளாக மாற்றும் தொடர் நடவடிக்கைகள் முறையாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, சர்க்கரைச் சோளம் மற்றும் காட்டாமணக்கு ஆகிய பயிர்களைக் கொண்டு எத்தனால், உயிரி–டீசல் மற்றும் இதர உபபொருட்களைத் தயாரித்திட, தொழில் நிறுவனங்களின் விருப்பத்தினை தெரிவிக்குமாறு என்னுடைய அரசு கேட்டுக்கொள்ளும். கருப்பஞ்சாற்றுக் கழிவினைக் கொண்டு தற்போது எத்தனால் தயாரித்து வரும் வடிப்பகங்களும் மேலே குறிப்பிட்ட உயிரி எரிபொருள் தயாரித்திடும் வகையில் தங்கள் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவோ, மாற்றி அமைக்கவோ முன் வரலாம். உயிரி எரிபொருளின் தேவை பெருகி வரும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தொழில் நிறுவனங்கள் இத்தகைய தொழிற்சாலைகளை ஏற்படுத்த முன்வரும். இத்திட்டத்தில் விவசாயிகள் பங்கேற்பதையும், தேவையான விவசாய நிலங்களைக் கண்டறிவதிலும் எனது அரசு உதவி புரியும். தொழில் நிறுவனங்கள் தங்களது உற்பத்தித் தொழிலகங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள விவசாயிகளுடன் பயிரிடும் ஒப்பந்தம் செய்து கொண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்தலாம்.

சர்க்கரைச் சோளம் மற்றும் காட்டாமணக்கு ஆகிய இரண்டு பயிர்களுமே தமிழகத்திற்கு புதியவை என்பதால், இத்திட்டத்திற்குத் தேவையான முழுமையான தொழில்நுட்ப உதவி வழங்கிட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பொறுப்பேற்றுக் கொள்ளும். இத்திட்டத்தை செயல்படுத்தும் தொழில் நிறுவனங்கள் சிறந்த விதை வகைகள் மற்றும் இடுபொருட்களை தேர்ந்தெடுத்து விவசர்யிகளுக்கு வழங்கிடவும், சிறந்த மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தக்க உதவி செய்யும். வேளாண்மைத்துறை இத்திட்டத்திற்கு முழு விரிவாக்க ஒத்துழைப்பு அளிக்கும் வகையில் தனது விரிவாக்க அலுவலர்களைப் பயன்படுத்தும். விவசாயிகளுக்குத் தேவையான விரிவாக்க ஆதரவை வழங்கிடும் வகையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் இவ்வலுவலர் களுக்குத் தக்க பயிற்சி அளிக்கப்படும்.

இத்திட்டத்தை செயல்படுத்த முனையும் தொழில் நிறுவனங்கள் தங்கள் விருப்பத்தினை தெரிவிக்கக் கோரி, தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை செயலாளர் அறிவிக்கை வெளியிடுவார். அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தொழில் நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம். இதற்கான காலவரையறை பின்வருமாறு:–

விருப்பம் தெரிவிக்கக் கோரி அறிவிக்கை வெளியிடப்படும் நாள்	4.7.2004
தொழில் நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் பெறுவது	17.7.2004க்குள்
விண்ணப்பங்கள் பரிசீலனை	31.7.2004க்குள்
இத்திட்டத்தில் விவசாயிகள் பங்கேற்க கலந்தாலோசனை	31.8.2004க்குள்
உற்பத்திப் பொருளை வழங்கிட ஒப்பந்தம் மேற்கொள்ளுதல்	30.9.2004க்குள்
பயிர் சாகுபடி நடவடிக்கைகள்	செப்டம்பர்– அக்டோபர், 2004

இத்திட்டத்தின் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடல் கூட்டங்களை இந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நடத்திட நான் முடிவு செய்துள்ளேன். தமிழக விவசாயிகளின் வாழ்வில் வளம் பெருகவும், விவசாயத் தொழிலாளர் மற்றும் ஊரக ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் வகை செய்திடும் இந்த மகத்தான திட்டத்தில் வேளாண் பெருமக்களும், தொழில் நிறுவனங்களும், தனியார் தொழில் முனைவோர்களும் முழுமையாகப் பங்கேற்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
2–7–2004

விவசாயிகள் வாழ்வு வளம்பெற மாற்றுப் பயிராக சர்க்கரைக்கிழங்கு பயிரிடுங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை (13–7–2004)



தண்ணீரைச் சரியான விகிதத்தில் முழுமையாகப் பயன்படுத்திடவும், வேளாண் பதப்படுத்துதல் துறையின் மூலம் தாவர எண்ணெயை உற்பத்தி செய்யும் வகையில் மாற்றுப் பயிர்களான சர்க்கரைச் சோளம் மற்றும் காட்டாமணக்கு ஆகியவற்றைப் பயிரிடுவது குறித்து நான் ஏற்கெனவே கடந்த ஜூலை 2, 2004 அன்று இதனைப் பயிரிடுபவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்யும் என்று தெரிவித்திருந்தேன்.

தற்போது அந்த வகையில் நம்முடைய அறிவிப்பை உறுதி செய்யும் விதமாக மற்றொரு மாற்றுப் பயிரான சர்க்கரைக் கிழங்கையும் இத்திட்டத்தில் இணைத்துள்ளோம். இதன்மூலம் நமது நோக்கம் உறுதியாக நிறைவேறும். சர்க்கரைச் சோளம், காட்டாமணக்கு ஆகிய மாற்றுப் பயிர்களுடன் விவசாயிகள் மற்றொரு மாற்றுப் பயிரான சர்க்கரைக் கிழங்கையும் பயிரிடவேண்டும்.

அதிக அளவில் சர்க்கரை ஆதாரத்தைத் தன்னுள் அடக்கிய இந்த வகை சர்க்கரைக் கிழங்குச் செடிகள் பெரும்பாலும் மித வெப்பமண்டலப் பிரதேசங்களில் காணப்படுகிறது. மேலும் இந்த வகையான கிழங்கு வகைகள் குளிர்ப் பிரதேசங்களில்தான் மிக அதிக அளவில் பயிரிடப்படுகிறது. சமீபகாலமாக இப்பயிர்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியின் விளைவாக இந்த வகையான பயிர்கள் பல்வேறு வெப்பமண்டல காலநிலைகள் உள்ள பகுதிகளிலும் மற்றும் அனைத்து வகையான மண் வகைகளிலும் விளைவதற்கு ஏற்ற வகையில் உள்ளது.

சர்க்கரைக் கிழங்குப் பயிர்கள் 5 முதல் 6 மாதங்களுக்குள் வளர்ச்சி அடைந்து பயனைத்

தருகிறது. ஆனால் கரும்பு முழு வளர்ச்சியடைய 12 முதல் 13 மாதங்கள் தேவைப்படுகிறது. சர்க்கரைக் கிழங்கை பயிரிடுவதன் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு 40 டன் விளைச்சலைப் பெறமுடியும். ஆனால் கரும்பு ஏக்கர் ஒன்றுக்கு 25 முதல் 30 டன் விளைச்சல்தான் கிடைக்கிறது. சர்க்கரைக் கிழங்குகளில் கரும்பைவிட 1.5 மடங்கு கூடுதலாக சர்க்கரைச் சத்து உள்ளது. இந்த வகை சர்க்கரைக் கிழங்கில் சர்க்கரை அளவு 15 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதம் வரை உள்ளது. கரும்பில் சர்க்கரை அளவு 10 சதவிகிதம் மட்டுமே உள்ளது.

ஏக்கர் ஒன்றுக்கு சர்க்கரைக் கிழங்கைப் பயிரிடுவதன் மூலம் 4 முதல் 6 டன் அளவுக்குச் சர்க்கரையை உற்பத்தி செய்ய வழிவகை செய்கிறது. ஆனால் கரும்பைப் பயிரிட்டால் ஏக்கர் ஒன்றுக்கு 2 முதல் 4 டன் அளவுக்குத்தான் சர்க்கரை உற்பத்தி செய்ய இயலும். சர்க்கரைக் கிழங்கைப் பயிரிடுவதன் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு 2,800 முதல் 4,000 லிட்டர் அளவுக்கு எத்தனால் அல்லது ஆல்கஹாலை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் ஏக்கர் ஒன்றில் விளையும் கரும்பிலிருந்து 1,700 முதல் 2,700 லிட்டர் அளவுக்குத்தான் எத்தனால் அல்லது ஆல்கஹாலை உற்பத்தி செய்ய முடியும்.

கரும்பு விளைச்சலுக்குத் தேவைப்படும் நீரின் அளவில் 40 சதவிகிதம் மட்டுமே சர்க்கரைக் கிழங்கு வளர்வதற்குத் தேவைப்படுகிறது. அனைத்து வகையான மண் வகைகளிலும் பயிரிடுவதற்கு ஏற்ற அதே நேரத்தில் ஆண்டு முழுவதும் பயிரிட ஏதுவான மாற்றுப் பயிராக இந்தச் சர்க்கரைக் கிழங்கு பயிர்வகை உள்ளது. மேலும் இந்த சர்க்கரைக் கிழங்கு பயிரானது மணற்பாங்கான, மண்சேறு மற்றும் களிமண் பிரதேசங்களிலும் உவர்நிலம் மற்றும் சதுப்பு நிலங்களிலும் நல்ல முறையில் வளரும்.

சர்க்கரைக் கிழங்கைப் பொறுத்தமட்டில் நவீன மேலாண்மை முறைகளைப் பயன்படுத்துவது அவசியமாகிறது. அதே நேரத்தில் பூச்சிகளோ நோயோ இந்தப் பயிரைத் தாக்குவதற்கான வாய்ப்புகள் குறைவு. சர்க்கரைக் கிழங்கு பயிர்களின் பசுந்தழைகள் கால்நடைகளுக்கு சிறந்த பசுந்தீவனமாகக் கண்டறியப் பட்டுள்ளது. கால்நடைத் தீவனங்களுள் அதிக அளவு சத்து நிறைந்ததாக இதன் காய்ந்த சக்கைகள் உள்ளன. சர்க்கரைக் கிழங்கைப் பொறுத்தமட்டில் இது ஆண்டுதோறும் பயிரிடுவதற்கு ஏற்ற பயிராக உள்ளதால் இந்த விளைச்சலின் மூலம் ஆண்டு முழுவதும் அனைத்து சர்க்கரை ஆலைகளையும் இயக்க முடியும். ஆனால் கரும்பை மட்டும் நம்பி இருந்தபோது அவ்வாறு இயக்க இயலவில்லை.

சர்க்கரைக் கிழங்கைப் பயிரிடுவதன் மூலம் விவசாயிகள் அதிக அளவில் பயன் பெறுவார்கள். மிகக் குறுகிய காலத்தில் வளர்ச்சியடையும் இந்த வகையான பயிரின் மூலம் 6 மாதத்திற்கு ரூ.12,000 நிகர வருமானம் கிடைக்கும். இரண்டு பருவங்கள் சர்க்கரைக் கிழங்கோ அல்லது ஒரு பருவம் சர்க்கரைக் கிழங்கு மற்றொரு பருவம் சர்க்கரைச் சோளம் ஆகியவற்றைப் பயிரிடுவதன் மூலம் மொத்தத்தில் ஏக்கருக்கு நிகர ஆண்டு வருமானமாக ரூ.22,000 கிடைக்கும். வெப்பமண்டலப் பகுதிகளில் விளையும் சர்க்கரைக் கிழங்குப் பயிர்கள் உண்மையிலேயே நல்ல பலனைத் தரும்.

ஆகவே நான் சர்க்கரைக் கிழங்கை, சர்க்கரைச் சோளம் மற்றும் காட்டாமணக்கு பயிரிடுவதற்காக அறிவித்துள்ள புதிய திட்டத்தில் இணைக்க முடிவு செய்துள்ளேன். தண்ணீர் தேவை குறைந்த இந்தப் புதிய மாற்றுப் பயிர்கள் உண்மையிலேயே தமிழ்நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறையால் வாடும் விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். மேலும் அவர்களுடைய நிகர வருமானம் அதிகரிப்பதுடன், தரமான் மேம்பட்ட கிராமப்புற பொருளாதாரத்திற்கு இது அழைத்துச் செல்லும்.

கடந்த 2.7.2004 அன்று நான் வெளியிட்ட அறிக்கையில் தொழில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. சர்க்கரைக் கிழங்குகளைப் பயிரிடுவது குறித்தும் அதனை மேம்படுத்துவதற்கும் மற்றும் சர்க்கரைக் கிழங்கிலிருந்து எத்தனால் உற்பத்தி செய்வதற்குத் தேவையான உற்பத்தி வசதிகள் குறித்தும் தொழில் நிறுவனங்கள் தங்களுடைய கருத்துகளை அரசுக்குத் தெரிவிக்க கடந்த 4.7.2004 அன்று தமிழக அரசு பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தது. கருப்பஞ்சாறு கழிவினைக் கொண்டு எத்தனாலை உற்பத்தி செய்து வரும் வடிப்பகங்கள் தாமாக முன்வந்து சர்க்கரைக் கிழங்கிலிருந்து எத்தனாலை உற்பத்தி செய்வதற்கு தங்களுடைய ஆலைகளை விரிவுபடுத்தவும் மாற்று உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்தவும் முன்வர வேண்டும்.

சர்க்கரைக் கிழங்குப் பயிரிட மேற்கண்ட திட்டத்தில் சேர விருப்பம் தெரிவிக்கக் கோரி அறிக்கை 4.7.2004 அன்று வெளியிடப்பட்டது.

ஏற்கெனவே தொழில் நிறுவனங்களில் இருந்து விண்ணப்பங்கள் பெறும் நாள் ஜூலை 17 என்று அறிவிக்கப்பட்டதானது தற்போது ஜூலை 23ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முனையும் தொழில் நிறுவனங்கள் தங்கள் விருப்பத்தினை தங்கள் சொந்த நடைமுறையில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் நிறுவனத்தை அமைப்பதற்கான இடம் ஆகியவை அடங்கிய திட்ட ஆவணத்தை தமிழக அரசின் வேளாண்மைத் துறை செயலாளரிடம் 23, ஜூலை 2004க்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

மிக முக்கியமான திட்டமான மாற்றுப் பயிர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், நீரை முழுமையான அளவில் பயன்படுத்தவதற்குத் தேவையான நடைமுறையை அறிமுகப்படுத்துவதற்கும், வேளாண் பதப்படுத்துதல் மற்றும் கிராமப்புறங்களை தொழில் மயமாக்குதல் ஆகியவற்றைச் செயல்படுத்து வதற்கும் என்னுடைய தலைமையிலான அரசு கீழ்க்காணும் அனைத்து உதவிகளையும் செய்யும்.

★ விரிவுபடுத்துதல் மற்றும் வகைப்படுத்துதல் ஆகிய திட்டங்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இணைத்துக் கொள்ளப்படும்.

★ சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர்ப் பாசன முறைகள் இனம் கண்டறியப்பட்ட பகுதிகளில் சிறப்புத் திட்டங்களின் மூலம் அறிமுகப்படுத்தப்படும்.

★ இந்த விரிவாக்கப் பணிகளுக்கு ஒருங் கிணைந்த உதவிகளை வேளாண்மைத்துறை செய்து தரும்.

★ நவீன தொழில்நுட்ப உதவிகளை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் வழங்கும்.

★ சர்க்கரைக் கிழங்கு – சர்க்கரைச் சோளம் – காட்டாமணக்கு ஆகியவற்றின் கொள்முதலுக்கு வரி கிடையாது.

★ சர்க்கரைக் கிழங்கு மற்றும் சர்க்கரைச் சோளத் திலிருந்து உற்பத்தி செய்யப்படும் எத்தனாலுக்கு விற்பனை வரி 8 சதவிகிதம் காட்டாமணக்கு விதையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் தாவர எண்ணெய்க்கு விற்பனை வரி 4 சதவிகிதம்.

★ தமிழ்நாடு அரசின் 2003 தொழிற்கொள்கையில் கூறியுள்ளபடி சிறப்புச் சலுகைகள் வழங்கப்படும்.

அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதுதான் தங்களுடைய முன்னுரிமையான நோக்கமாகும் என்று அறிவித்துள்ள மத்திய அரசு உள்கட்டமைப்பு வசதிகளில் மிக முக்கியமான ஒன்றான எரிபொருள் உற்பத்தித் துறையின்கீழ் வரும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் முழுஅளவில் செய்து தர வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துவோம்.

இந்த வகையான பயிர்களைப் பயிரிடத் தேவையான மூலப் பொருட்களையும், தொழில்நுட்ப வசதிகளையும் இறக்குமதி செய்வதற்குத் தேவையான அனைத்து வகையான இறக்குமதி வரிகளையும் முற்றிலுமாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துவோம். அதேபோல உணவுக்குப் பயன்படாத மற்ற தாவர எண்ணெய் உற்பத்தியில் உள்நாட்டில் தன்னிறைவு அடையும் காலம்வரை அவற்றுக்கான இறக்குமதி வரியையும் ரத்து செய்ய வேண்டும்.

மேலும் பெட்ரோல் மற்றும் பெட்ரோலியப் பொருட்களில் குறிப்பாக எத்தனால், டீசல், பயோடீசல் மற்றும் தாவர எரிபொருள் ஆகியவற்றிற்கு விதிக்கப்படும் கலால் வரியினை மத்திய அரசு முழுமையான வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துவோம். இதன்மூலம் தாவர எரிபொருளை அதிக அளவில் பயன்படுத்துவதற்கு ஊக்கமாக அமையும். மேலும் நம்நாடு பெட்ரோலியத் துறையில் முழுவதுமாகத் தன்னிறைவு அடைவதற்கும் இது வழிவகை செய்யும்.

எனவே நான் ஏற்கெனவே அறிவித்த மாற்றுப் பயிர் திட்டம் விவசாயிகளுக்கு நல்ல பலனைப் பெற்றுத்தரும் என்பதில் நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். மேலும் தொழில் நிறுவனங்கள் தாமாக முன்வந்து, இத்திட்டத்தில் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் நான் அழைப்பு விடுக்கிறேன்.

★ ★ ★

உலகம் முழுவதும் ஜூலைத் திங்கள் 11–ஆம் நாள், உலக மக்கள் தொகை நாளாக அனுசரிக்கப்படுகிறது.

உலகிலேயே சீனாவிற்கு அடுத்தபடியாக மாபெரும் மக்கள் தொகை கொண்ட நாடாக விளங்கும் நமது இந்தியத் திருநாட்டின் இன்றைய மக்கள் தொகை 109 கோடி என்பதும், உலக மக்கள் தொகையில் அறுவரில் ஒருவர் இந்தியர் என்பதும், நாம் இன்று நினைவில் கொள்ள வேண்டிய செய்திகளாகும். இன்று நமது மாநிலமாகிய தமிழகத்தின் மக்கள் தொகை 6.4 கோடியாக விளங்குகிறது.

அளவு கடந்த மக்கள் தொகைப் பெருக்கம், மனிதனின் அடிப்படைத் தேவைகளில் பற்றாக்குறையை உண்டாக்குகின்றது. உண்ணும் உணவு, உடுக்கும் உடை, இருக்கும் இடம் ஆகியவற்றில் தொடர்ந்து பற்றாக்குறையை ஏற்படுத்தி, வீட்டு வளர்ச்சிக்கும், நாட்டு வளர்ச்சிக்கும் அது தடையாக இருக்கின்றது. அத்தோடு, அளவுகடந்த மக்கள் தொகைப் பெருக்கம் சுற்றுப்புறச் சூழலுக்கும் பெருத்த பாதிப்பை உண்டாக்குகின்றது.

எத்தனை திட்டங்கள் தீட்டப்பட்டாலும், எத்தனை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும், ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது மக்கள் தொகைப் பெருக்கமேயாகும்.

அளவு கடந்த மக்கள் தொகைப் பெருக்கத்தைத் தடுப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் மக்கள் நலத்தைக் காத்து, அவர்களது வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பாடுபடுவது. ஆகவேதான், குடும்ப நலத் திட்டம் என்னும் கருத்து, விரிந்த பொருளைக் கொண்டதாக இன்றைக்கு விளங்குகின்றது. குடும்பநலத் திட்டம் என்பது, தாய்–சேய் நலத்திட்டம் என்பதே இன்றைய கோட்பாடும், செயற்பாடும் ஆகும்.

இத்திட்டத்தின் மூலம் கருவுற்ற தாய்மார்கள் சுகாதார முறையில் பிரசவிக்கவும், பிறந்த குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடவும், தாய்–சேய் இறப்பைக் குறைக்கவும், வளரும் பெண்களுக்கு வலிமை அளிக்கவும், தமிழ்நாடு அரசு முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் காரணமாக, தமிழகத்தில் தாய்–சேய் இறப்பு மிகவும் குறைந்துள்ளது.

இந்திய மாநிலங்களிலேயே கேரளத்துக்கு அடுத்தபடியாக தமிழகத்தில்தான், மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் குறைவாக உள்ளது. இந்த வெற்றி முழுமையாகத் தமிழகத்துத் தாய்மார்களுக்கே உரித்தானதாகும். இத்திட்டத்தின் வெற்றிக்கு ஆண்களின் பங்களிப்பும் அவசியம் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

10–ஆவது ஐந்தாண்டு திட்ட முடிவில் அதாவது 2007–ஆம் ஆண்டுக்குள், இரண்டுக்கு மேல் குழந்தைகள் பெறும் தம்பதியர் நமது மாநிலத்தில் இல்லை என்னும் நிலையை ஏற்படுத்துவோம். தமிழகத்தின் பிறப்பு விகிதம் 1000 மக்கள் தொகைக்கு 15 என்ற நிலையை உருவாக்குவோம். சிசு மரண விகிதத்தை 1000 பிறப்புகளுக்கு 30 என்ற அளவுக்குக் குறைப்போம்.

இந்த இலட்சியங்களை அடைகின்ற வகையில், குடும்பநலம் மற்றும் தாய்–சேய் நலப்பணிகள் தமிழகத்தில் முழுவெற்றி பெறப் பாடுபடுவோம்.

வளமான குடும்பம், வலிமைமிக்க தமிழகம்!
– இதுவே நமது முழக்கமாகட்டும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் *அவர்களின்*
“உலக மக்கள் தொகை நாள்” செய்தி.

பயோடீசலைத் தரும் காட்டாமணக்கு

பல் நோக்குத் தன்மை கொண்ட, வறட்சியைத் தாங்கும் சக்தி உள்ள காட்டாமணக்கு பெரிய புதர் அல்லது சிறு மரங்களாக வளர்கின்றன. இதன் தாயகம் அமெரிக்க பூமத்திய ரேகைப் பிரதேசமாக இருப்பினும், இப்போது ஆப்பிரிக்க மற்றும் ஆசியக் கண்டங்களின் பெரும் பகுதிகளில் வளர்கின்றது. எல்லா வகையான வெப்ப மற்றும் மித வெப்ப நாடுகளில் இச்செடி வளரக் கூடியதாக உள்ளது. குறைந்த மழை அளவு உள்ள பகுதிகளிலும், பிரச்சினைக்குள்ளான மண்ணிலும் இது வளரக் கூடிய ஒன்றாகும். வறட்சி தாங்கும் தன்மையுள்ள இச்செடியை கால்நடைகள் சாப்பிடுவதில்லை. எனவே இதை நிலங்களின் எல்லைகளிலும் உயிர் வேலியாகவும் உழவர்கள் வளர்க்கின்றனர்.

காட்டாமணக்குச் செடியின் மரப்பகுதியும், விதையும் பல்வேறு வகையில் பயன்படுகின்றன. இதில் ஆற்றல் உற்பத்தியும் அடங்கும். காட்டாமணக்கின் விதைகளில் இருந்து 35 முதல் 40 சதவிகிதம் வரை வளவளப்பான, அடர்த்தியான எண்ணெய் எடுக்கப்படுகிறது. இதை சோப்பு தயாரிக்கவும், மெழுகுவர்த்தி செய்யவும், மெழுகு விளக்கு தயாரிக்கவும், எரிக்கவும், சமையல் அடுப்புக்கு என பல்வேறு வகையில் வெவ்வேறு நாடுகளிலும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

அண்மைக் காலமாக இந்த எண்ணெய்யை நேரிடையாகவும், சுத்தப்படுத்தியும், இயந்திரங்களை இயக்கும் எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர். டீசலுடன் 20 சதவிகிதம் வரை கலந்து பயன்படுத்துவது வழக்கத்தில் இருந்து வருகிறது. இந்தியாவில் இன்னும் இச்செடி வர்த்தக ரீதியில் பயிர் செய்யப்படவில்லை. பிரேசில் நாட்டில் இதைப் பயிர் செய்கின்றனர். இதே போல கேப் வெர்டி தீவுகளிலும் இது பயிரிடப்படுகிறது. இந்தத் தீவில் பயிர் செய்யப்படும் ரகம் ஆண்டு முழுவதும் விளைச்சல் தரக்கூடியது என்று அறியப்பட்டுள்ளது. இதன் விதையில் இருந்து திரவ எரிபொருள் எடுக்கப்படுவது பற்றி இப்போதுதான் அதிக அளவில் பேசப்படுகிறது. இவை பல்வேறு பகுதிகள் பல வகைகளில் பயன்படுத்தப்படுவதால், இச்செடி இன்னும் அழிந்து போகாமல் உள்ளது. தமிழகத்தின் பெரும் பகுதிகளில் வேலிப் பயிராக இருந்த இச்செடி இப்போது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. இன்னும் சில நாடுகளிலும், இதன் பயன் முழுமையாக அறியப் படாததால் அழிவை நோக்கிச் சென்று கொண்டுள்ளது. டச்சு கிழக்கிந்தியத் தீவுகளில் இதன் துளிர் இலைகளைச் சமைத்து உண்ணும் பழக்கம் உள்ளது. இதேபோல, இவர்கள் ஆட்டிறைச்சியை சமைக்கும் போது, அதன் வாசத்தை நீக்கிடவும், துரிதமாக வேகவைக்கவும் இந்தத் துளிர் இலைகளைப் பயன்படுத்துகின்றனர்.

கனடா நாட்டில் இதன் இலைகளைப் புகைத்து மூட்டைப் பூச்சிகளை விரட்டவும், அஸ்ஸாமில் ஈரிப் பட்டுப் புழு வளர்க்கவும் உபயோகிக்கின்றனர். இதன் பட்டையில் 37 சதவிகிதம் டானின் உள்ளது. இதன் பட்டையில் இருந்து தயாரிக்கப்படும் சாயம், துணி, வலை





ஆகியவற்றிற்கு சாயமேற்றப் பயன்படுத்தப்படுகிறது. இவை அனைத்தும் இச்செடியின் மற்ற பாகங்களின் பயன்பாடாகும். இப்போது இதன் விதை பயோ டீசல் தயாரிப்பதற்கான பொருளாக அறியப்பட்டு பல நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

காட்டாமணக்கு விதையில் நீர் 6.62 சதவிகிதமும், புரதம் 18.20 சதவிகிதமும், கொழுப்பு 38.00 சதவிகிதமும், கார்போ–ஹைட்ரேட் 17.98 சதவிகிதமும், நார்ப்பொருள் 15.5 சதவிகிதமும், உலோக உப்புகள் 4.5 சதவிகிதமும் உள்ளன. தமிழகத்தின் பல பகுதிகளில் இச்செடிகள் காணப்பட்டாலும் இன்னும் வர்த்தக ரீதியில் பயிரிடப்படுவது தொடங்கப்படவில்லை. தமிழக அரசின் உதவியுடன் இதன் நாற்றுகளை உற்பத்தி செய்து கொடுக்கும் பணியை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உள்ள தோட்டக்கலை கல்லூரியும், அரசின் தோட்டக்கலைத் துறையும் இப்போது மேற்கொண்டுள்ளது.

இப்போது காட்டாமணக்கின் முக்கிய பங்கு ஆற்றல் உற்பத்தி என்ற நோக்கில்தான் பார்க்கப்படுகிறது. தொடக்க காலங்களில் இதன் எண்ணெய் சமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருப்பினும், இதில் உள்ள சில நச்சுத்தன்மைகளின் அறிதலுக்குப் பின் பயன்படுத்துவது குறைந்து விட்டது. விளக்குகளை எரிக்கவும், கெரசின் அடுப்புகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

காட்டாமணக்கின் விதையினுள் 60 முதல் 65 சதவிகிதம் பருப்பும், 40 சதவிகிதம் எண்ணெய்யும் உள்ளது. எண்ணெய் பிழியும் இயந்திரங்களின் மூலம் இதில் இருக்கும் எண்ணெய்யை எடுக்கலாம். இதை இருமுறை பிழிந்தெடுத்தால் பருப்பில் இருந்து 30 முதல் 35 சதவிகிதம் வரை எண்ணெய் எடுக்கலாம். இன்னும் மேம்படுத்தப்பட்ட சரியான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தினால் கிடைக்கும் எண்ணெய்யின் அளவை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இந்தக் காட்டாமணக்கு எண்ணெய்யை டீசலில் கலந்து நேரடியாகவே எஞ்சின்களுக்குப் பயன்படுத்தலாம். அவ்வாறு பயன்படுத்தும்போது எண்ணெய்யின் அளவு 20 சதவிகிதத்திற்கு மேல் செல்லாமல் பயன்படுத்த வேண்டும். அதற்கு மேல் பயன்படுத்தும்போது நீண்டகால அடிப்படையில் எஞ்சின்களின் பாகங்கள் பாதிக்கப்படும் வாய்ப்புகள் கூடுகின்றன. இவ்வாறு ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்க காட்டாமணக்கு எண்ணெய்யை, சுத்தமான டீசலுக்கு இணையான எரிபொருளாக மாற்றி பயன்படுத்தும் தொழில்நுட்பம் உள்ளது. இந்த எண்ணெய்யை திரவ எரிபொருளாக மாற்றும் தொழில்நுட்பத்தை எஸ்டிரிப்பிகேசன் என்று அழைக்கின்றோம். விதையில் இருந்து பிரித்தெடுக்கப் பட்ட எண்ணெய்யிலிருந்து இந்த பயோடீசல் எனப்படும் திரவ எரிபொருள் தயாரிக்கப்படுகிறது. காட்டாமணக்கு எண்ணெய்யுடன் குறிப்பிட்ட சதவிகிதத்தில் மெத்தனால் எனப்படும் எரிசாராயம், வேதியியல் கிரியாயூக்கியும் கலந்து வினையாற்ற விடுவதன் மூலம் இச்செயல் நடைபெறுகிறது. இச்செயல் நடைபெற காட்டாமணக்கு எண்ணெய்யை ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலைக்கு கொண்டு வந்த பின்னரே இந்த மெத்தனால் கலவையைச் சேர்க்க வேண்டும். சேர்த்த பின்னர் ஒரு குறிப்பிட்ட நேரம் இதைத் தொடர்ந்து கலக்கிக் கொண்டு இருக்க வேண்டும். அவ்வாறு கலக்கும் போது,





எண்ணெய்யில் உள்ள கிலிசிரால் பிரிகிறது. இதை ஒரு குறிப்பிட்ட நேரம் கலனில் வைத்திருந்தால், கிலிசிரால் தனியாக கலனின் அடிப்பாகத்தில் படிந்து விடும். அதன் பின்னர் கிலிசிராலைத் தனியாகப் பிரித்து எடுத்துவிட்டால், நமக்கு பயோடீசல் கிடைக்கிறது. இதைச் சுத்தமான நீர் கொண்டு இருமுறை கழுவினால், இதில் இருக்கும் வேதியியல் பொருட்கள் நீருடன் கலந்து வெளியேற்றப்பட்டுவிடும். நீரில் கழுவிய பயோடீசல் பயன்பாட்டிற்கு நேரடியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. எண்ணெய்யின் அடர்த்தியான 0.920 கிராம்/லிட்டரில் இருந்து 0.865 ஆக குறைக்கப்படுகிறது. மேலும் எண்ணெய்யின் பாகுத்தன்மை மிகவும் அதிகம். அதாவது 32.5 ஆக உள்ளது. இதை எஸ்டிரிப்பை செய்யும் போது 5.2 ஆகக் குறைக்கப்படுகிறது. பயோடீசலாக மாற்றிய பின், டீசலுடன் ஒப்பிடும் போது, இதன் அடர்த்தி 0.865 ஆகவும் டீசலின் அடர்த்தி 0.841 ஆகவும் உள்ளது.

இந்த சாதனத்தில் வெப்பப்படுத்தும் இணைப்புடன் கூடிய வினைக்கலன், கலக்கும் சாதனம், மெத்தனாலையும் கிரியா ஊக்கியையும் கலக்கும் கலன், தெளிய வைக்கும் தொட்டி மற்றும் நீரில் கழுவும் தொட்டி ஆகியன உள்ளன. இப்போது உருவாக்கப்பட்டுள்ள சாதனத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 250 லிட்டர் பயோடீசலைத் தயாரிக்கலாம். மேலும் இத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நமது தேவைக்கு ஏற்ப சாதனத்தைப் பெரிய அளவிலும் வடிவமைத்துக் கொள்ளலாம்.

சிறப்பு அம்சங்கள்

கொள்ளளவு	: 250 லிட்டர் / நாள் ஒன்றுக்கு
எண்ணெய்யிலிருந்து மாற்றும் திறன்	: 99%
கிடைக்கும் உபபொருள்	: கிலிசிரால்
சாதனத்தின் விலை	: ரூ.1.5 இலட்சம்
ஒரு லிட்டர் பயோடீசல் தயாரிக்க ஆகும் செலவு	: ரூ.5 / லிட்டர் ஒன்றுக்கு (எண்ணெய் விலை தவிர்த்து)



பயோ டீசலின் சிறப்பு அம்சங்கள் பல உள்ளன. இது உயிர் பொருளில் இருந்து உற்பத்தி செய்வதால், தொடர்ந்து கிடைக்கும் தன்மை கொண்டது என்பதே முதன்மையான சிறப்பு அம்சமாகும். இதன் குணங்கள் ஏறக்குறைய டீசலுக்கு சமமாக உள்ளது. எனவே இதை டீசலுக்கு இணையாகப் பயன்படுத்தலாம். இதைப் பயன்படுத்தும்போது, எஞ்சினில் இருந்து அதிக அளவு மாசுக் காற்று வெளிவருவதில்லை.

அதாவது இதில் சிறிய அளவு கூட சல்பர் இல்லை. இருக்கும் டீசல் எஞ்சினில் எந்தவித மாற்றமும் செய்யாமல் அப்படியே இதனைப் பயன்படுத்தலாம். நாம் ஒரு டன் பயோடீசலைப் பெற ஒரு ஏக்கர் காட்டாமணக்குச் செடியை வளர்க்க வேண்டும். இது காற்று மண்டலத்தில் உள்ள கார்பன்–டை–ஆக்ஸைடைக் குறைக்கிறது.

தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும், குறிப்பாக பாசன நீர் குறைவாக உள்ள பகுதிகளில் பயிரிட ஏற்ற பயிராகும். இச்செடி பயிரிடப்பட்டு ஓர் ஆண்டு கழித்து காய் பிடிக்கத் தொடங்கினாலும், இதன் முழு விளைச்சல் மூன்றாம் ஆண்டில் இருந்தே தொடங்குகிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் ஆண்டுக்கு மூன்று டன் வரையில் விளைச்சல் கொடுக்கக் கூடியது.

ஒரு நாட்டின் பொருளாதாரம், அதன் ஆற்றல் வளத்தைச் சார்ந்துள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். பெட்ரோலியம் சார்ந்த எரிபொருட்களைக் கொண்டுள்ள நாடுகள் தொழில் வளத்திலும், பொருளாதாரத்திலும் முன்னிற்பதற்கு இதுவே முதன்மைக் காரணமாகும். நமது நாட்டின் பெரும் பகுதியான அந்நியச் செலாவணி எரிபொருள் இறக்குமதிக்கே செலவிடப்படுகிறது. இந்நிலையில், நமது நாட்டிலேயே ஆற்றலை, அதுவும் மாசு குறைந்த உயிர் ஆற்றலைத் தரும் இச்செடியும், இதில் இருந்து கிடைக்கும் பயோடீசலும் வரும் காலங்களில் பெரிய மாற்றத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

முனைவர் **ப.வெங்கடாசலம்,**
இணைப்பேராசிரியர், உயிர்சக்தித் துறை,
வேளாண்மைப் பொறியியல் கல்லூரி,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்–3.





உயிரி எரிபொருள் தயாரிக்கும் திட்டத்துக்கு மத்திய அரசு சலுகை வழங்கவேண்டும்

மாண்புமிகு இந்தியப் பிரதமர்
டாக்டர் **மன்மோகன்சிங்** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
எழுதிய கடிதம் (14-7-2004)

"என்னுடைய தலைமையிலான அரசு கடந்த மே 2001இல் பதவியேற்றவுடன் தமிழகத்தில் தண்ணீர் பற்றாக்குறையினால் அதிக அளவில் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள வேளாண்மைத் துறையை மேம்படுத்துவதற்காக பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று உறுதிபூண்டேன். என்னுடைய பிரதான நோக்கமே கிடைக்கும் தண்ணீரை முழு அளவில் உரிய முறையில் பயன்படுத்துவது மற்றும் மாற்றுப் பயிர் திட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கிராமப்புற வேளாண் தொழில்களின் மதிப்பை அதிகரிப்பதற்கு உதவும் என்பதுதான்.

வேளாண் உற்பத்தியை அதிகரிக்க உதவும்

வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாடுதான் உங்களின் பிரதான முன்னுரிமை துறைகள் என்பதையும் அதற்கு தனி கவனம் செலுத்துவதையும் அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். என்னுடைய முயற்சியின் ஒரு பகுதியாக சமீபத்தில் நான் சர்க்கரைச்சோளம், சர்க்கரைக்கிழங்கு மற்றும் காட்டாமணக்கு ஆகியவற்றைப் பயிரிடுவதற்கும் மற்றும் அம்முறையை பரவலாக்குவதற்கும் ஏற்ற வகையில் ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கிவைத்தேன்.

இந்த வகையான பயிர்கள் வளர குறைவான அளவிலேயே தண்ணீர் பயன்பாடு தேவைப்படுகிறது. மேலும் இந்த வகைப் பயிர்களிலிருந்து உயிரி எரிபொருள் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருட்களையும் பெற இயலும். மேலும் கீழ்மட்ட அளவில் வேளாண் துறையில் பதப்படுத்துதல் பிரிவுக்கு உற்பத்தியின் மதிப்பை அதிகரிப்பதற்கும் இந்த வகை பயிர்கள் மிகப் பெரிய அளவில் உதவியாக அமையும்.

கிராமப்புற வேலைவாய்ப்பை உருவாக்க முயற்சி

இந்த மூன்று வகைப் பயிர்களும் உயிரி எரிபொருளைத் தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்களை வழங்குவதுடன், அயல்நாடுகளிலிருந்து எரிபொருள் தேவைக்கான பெட்ரோலியப் பொருட்களை அதிக அளவில் நாம் நம்பியிருப்பதைக் குறைக்க இயலும். இந்த வகையான பயிர்களை பயிரிடுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கித் தருவது நமது தேச நலனின்பால் நமக்குள்ள கடமையாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் தண்ணீர் பற்றாக்குறை அதிகம் உள்ள பகுதிகளில் வாழும் நம்முடைய விவசாயப் பெருமக்கள் அதிக அளவில் வருமானம் ஈட்டும் வகையில் இவை பயனுள்ளதாக அமையும். மேலும் பயனுள்ள கிராமப்புற வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும்



இவை அடிப்படையாக அமையும். இந்த வகையான திட்டங்களைத் தொடங்குவதற்கும் அவற்றை விரிவுபடுத்துவதற்கும் மிகப் பெரிய முயற்சி தேவைப்படுகிறது. அது நம்மிடம் உள்ளது என்று நான் நம்புகிறேன்.

ஆண்டு முழுவதும் பயிரிடுவதற்கு ஏற்ற பயிரான சர்க்கரைச் சோளம் வளர்வதற்கு 4 மாதங்கள்தான் தேவைப்படுகிறது. மாறாக கரும்பு விளைச்சலுக்கு 12 முதல் 18 மாதங்கள் தேவைப்படுகிறது. மேலும் இந்த வகையான பயிர்கள் வளர்வதற்குத் தேவைப்படும் தண்ணீரின் அளவானது கரும்பு வளர்ச்சிக்குப் பயன்படும் தண்ணீரின் அளவில் 40 சதவிகிதம் மட்டுமே போதுமானது. சர்க்கரைக்கிழங்கு மற்றொரு வகையான குறுகிய காலப் பயிராகும். இது வளர்வதற்கு 5 முதல் 6 மாதங்கள் தேவைப்படுகிறது. மேலும் இதற்குத் தேவையான தண்ணீர் கரும்பு வளர்ச்சிக்குத் தேவைப்படும் தண்ணீரின் அளவில் 40 சதவிகிதம் மட்டுமே.

மானாவாரி நிலங்களிலும் ஆண்டு முழுவதும் பயிர் செய்வதற்கு ஏற்ற மற்றொரு வகைப் பயிரான காட்டாமணக்குக்குக் குறைந்த அளவுதான் தண்ணீர் தேவைப்படுகிறது. சர்க்கரைக்கிழங்கு, சர்க்கரைச் சோளம் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படும் எத்தனாலை டீசலுடன் கலந்து உருவாக்கப்படும் பொருளையும், காட்டாமணக்கு எண்ணெய் ஆகியவற்றை விரிவான மாற்று முறைகளுக்கு உட்படுத்தி அதன்மூலம் கிடைக்கும் எண்ணெயையும் டீசலுடன் கலந்து பயன்படுத்தலாம்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இத்திட்டத்தை அறிமுகப்படுத்தி விரிவுபடுத்தும் வகையில் இத்துறையில் முதலீடு செய்யுமாறு தொழில் நிறுவனங்களுக்கு நான் ஏற்கெனவே அழைப்பு விடுத்துள்ளேன். மேலும் விளைநிலங்களில் இந்த வகையான பயிர்களைப் பயிரிட்டு விளைச்சலை எடுக்க ஒப்பந்த முறையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க முயற்சி செய்து வருகிறோம். இதற்குத் தேவையான அனைத்து வகையான தொழில்நுட்ப வசதிகளையும் மற்ற உதவிகளையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழக அரசின் வேளாண்மைத் துறையும் செய்து தரும்.

வேளாண் துறை புத்துயிர் பெறும் திட்டம்

இந்த முக்கியமான நடவடிக்கையின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள வேளாண் துறை புத்துயிர் பெறும் என்று நான் எண்ணுகிறேன். குறிப்பாக கடுமையான நீர் பற்றாக்குறையைத் தொடர்ந்து எதிர்கொண்டு வரும் மாநிலங்களுள் ஒன்றான தமிழ்நாட்டுக்கு இது சிறந்த திட்டம் என்று நான் நம்புகிறேன்.

மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்க வேண்டும்

இந்தப் பயிர்களைப் பயிரிடுவதற்குத் தேவையான அனைத்து வகையான நடவடிக்கைகளுக்கும் மற்றும் புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்குவதற்கும் நாங்கள் அனைத்து வகையான முயற்சிகளையும் மேற்கொண்டு வந்தாலும் இந்த ஒருங்கிணைந்த உயிரி எரிபொருள் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமைத் திட்டமாக அறிவித்து நிதியுதவியைச் செய்துதர வேண்டும். அடிப்படைக் கட்டுமானத் துறையின் முக்கிய துறையாக உள்ள உயிரி எரிபொருள் உற்பத்தி செய்வதற்கு அடிப்படையாக உள்ள இந்தத் திட்டத்தை அடிப்படை கட்டுமானத் துறையின் முன்னுரிமைத் திட்டமாக மின் திட்டங்களைப் போன்று மத்திய அரசு அறிவிக்க வேண்டும். மேலும் இதனைச் செயல்படுத்துவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் எரிசக்தித் துறைக்கு வழங்குவதைப் போன்று இதற்கும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இறக்குமதி சலுகைகள் வழங்க வேண்டும்

விரைவான வேகமான வளர்ச்சியை உயிரி எரிபொருள் துறை அடைவதற்குச் சில சலுகைகளை வழங்க வேண்டும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்வதற்கும், மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் இறக்குமதிச் சலுகைகள் வழங்க வேண்டும் என்றும் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாற்றுப் பயிர்கள் மூலம் எரிபொருள் உற்பத்தி செய்ய சிறிது கால அவகாசம் தேவைப்படும் என்பதால் அதுவரை சமையலுக்குப் பயன்படாத எண்ணெய் வகைகளுக்கு இறக்குமதி வரிவிலக்கு அளிக்க மத்திய அரசு முன்வர வேண்டும். அதன்மூலம் மாற்றுப் பயிர் திட்டத்தை நிரந்தரமாகப் பயிரிடுவதற்கு ஏற்ற சூழலை உருவாக்கித் தர முடியும்.

தற்போது ஒட்டுமொத்தமாக உயிரி எரிபொருள் திட்டத்துக்கு மிகப் பெரிய அளவில் வரவேற்பு உருவாகி உள்ளது. உயிரி எரிபொருள் அடங்கிய பெட்ரோலியப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு முழு வரிவிலக்கு அளிக்க வேண்டும். இதனால் கிராமப்புற விவசாயிகள் தங்களுடைய விளைச்சல் பொருட்களை உயிரி எரிபொருள் உற்பத்தி செய்வதற்கு விற்பதன் மூலம் அதிக அளவில் வருமானத்தை ஈட்ட இயலும். மேலும் விவசாயிகள் தங்களுடைய பயிர்களுக்குத் தற்போதைய விலையைக் காட்டிலும் கூடுதல் விலையைப் பெற இயலும்.

மாற்றுப் பயிர்த் திட்டத்தைப் பயன்படுத்த முன்வரும் விவசாயிகளுக்கு இது மிகப் பெரிய கொடையாக அமையும். தமிழகத்தில் கடுமையான நீர்ப் பற்றாக்குறையால் உள்ள சூழ்நிலையை எதிர்கொள்வதற்கும் அதனைச் சமாளிப்பதற்கும் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று ஆராய்ந்தபோது மாற்றுப் பயிர்த் திட்டத்தை செயல்படுத்துவது ஒன்று தான் சரியாக இருக்கும் என்று நான் அறிந்தேன்.

மாற்றுப் பயிர்களான சர்க்கரைச் சோளம், சர்க்கரைக்கிழங்கு மற்றும் காட்டாமணக்கு ஆகியவற்றைப் பயிரிடுவதன் மூலம் அந்த



விளைச்சலிலிருந்து உயிரி எரிபொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஓர் அறிவுபூர்வமான வழிமுறை கிடைக்கப் பெற்றுள்ளது. இதன்மூலம் கிராமப்புற விவசாயிகளுக்கு அதிக அளவில் வருவாய் கிடைப்பதுடன் தமிழகத்தில் நிலவும் நீர்ப் பற்றாக்குறை பிரச்சினையைச் சமாளிக்கவும் அதே நேரத்தில் கிராமப்புறப் பகுதிகளில் புதிய தொழில் வாய்ப்புகள் வேளாண் சார்ந்த தொழில்களில் உருவாவதற்கும் இது அடிப்படையாக அமையும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

மத்திய அரசின் புதிய அறிவிப்புகளை எதிர்பார்க்கிறேன்

இந்த புதிய உயிரி எரிபொருள் திட்டம் கிராமப்புற வளர்ச்சிக்கு உதவுவதுடன் விரைவான வேகமான வேளாண்துறை வளர்ச்சிக்கு உறுதி அளிப்பதாக உள்ளது. மேற்கண்ட இந்த ஆலோசனைகளை தயவுகூர்ந்து உடனடியாக பரிசீலிக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த உயிரி எரிபொருள் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசின் உதவிகள் குறித்த புதிய அறிவிப்புகளை விரைவில் அறிவிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்''. □



சுற்றுலாப் பயணிகளுக்கான இணையதளம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2.7.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் சுற்றுலா மேற்கொள்ளும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் பயன்பெறும் வகையில் இணையதளத்தைப் பயன்படுத்தி ஆன்லைன் மூலமாக சுற்றுலா மற்றும் தங்கும் விடுதி ஆகியவற்றுக்கு உரிய தொகை செலுத்தி முன்பதிவு செய்யும் முறையினைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்தியாவிலேயே அரசுக்குச் சொந்தமான மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் ஆன்லைன் மூலமாக பணம் செலுத்தி முன் பதிவு செய்யும் முறையினை முதன் முதலாக அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின்படி, உலகத்தின் எந்த மூலையிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் http://www.ttdconline.com என்னும் இணைய தளத்தின் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் தங்கவும், பேக்கேஜ் பயணங்கள் மேற்கொள்ளவும் உரிய பணம் செலுத்தி முன் பதிவு செய்து கொள்ள முடியும்.

சுற்றுலாப் பயணிகள் தங்கள் வீட்டிலிருந்தே பயணத்தைத் திட்டமிட்டு மேற்கொள்ள வசதியாக இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் தங்களது வங்கிக் கடன் அட்டைகள் (Master Cards and VISA Cards) வாயிலாக ஆன்லைனிலேயே பணம் செலுத்தி தங்கும் விடுதியில் உறுதி செய்யப்பட்ட இருப்பிடமும், பயணத் திட்டத்தில் உறுதி செய்யப்பட்ட இருக்கையுடன் கூடிய சுற்றுலாப் பயணங்களையும், உத்தரவாதத்துடன் பதிவு செய்து கொள்ளலாம். உறுதி செய்யப்பட்ட சுற்றுலாப் பயண ஆவணம் மற்றும் தங்கும் வசதி உறுதி செய்யப்பட்ட ஆவணம் ஆகியன ஆன்லைன் மூலம் பதிவு செய்து கொள்ளும் பயணிகளுக்கு அனுப்பப்படும். மேலும், அவர்களே தங்களது கணினி அச்சு இயந்திரத்தில் பிரதி எடுத்துக் கொள்ளலாம்.

இணையதளம் மூலமாக பய்ணம் மற்றும் தங்கும் இடத்திற்கு பதிவு செய்து கொண்டவர்கள் அதனை ரத்து செய்ய விரும்பினால், ttdc@md3.vsnl.net.in என்னும் இ–மெயில் முகவரிக்கு தங்களது கேட்பு மனுவை அனுப்பி ரத்து செய்து தங்களுக்குச் சேர வேண்டிய தொகையைப் பெற்றுக் கொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள், தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விடுதிகள், பயணத் திட்டங்கள் மற்றும் அதற்குரிய கட்டண விவரங்கள் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டு தங்கள் பயணத்தைத் திட்டமிடும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் http://www.tamilnadutourism.org என்னும் இணையதளம், ஆன்லைன் இணையதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய வசதிகளுடன் ஆன்லைன் மூலமாக சுற்றுலா மற்றும் தங்கும் விடுதி ஆகியவற்றுக்கு உரிய தொகை செலுத்தி முன்பதிவு செய்யும் முறையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2.7.2004 அன்று தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின்கீழ், திருப்பதி செல்வதற்காக ஆன்லைன் மூலம் உரிய தொகையை செலுத்தி முன்பதிவு செய்து கொண்ட சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீவித்யா மற்றும் திரு. ஜி. கார்த்திக் ஆகியோருக்கு அவர்களது பயணம் உறுதி செய்யப்பட்டதற்கான ஆவணத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்த நிகழ்ச்சியில் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. அ. மில்லர் அவர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு. ஆதி ராஜாராம் அவர்கள், தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி பிராணேஷ்,இ.ஆ.ப., அவர்கள், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு. வ. ராமதாஸ்,இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். □

கும்பகோணம் தீ விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரில் ஆறுதல்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நகரில், இன்று (16–7–2004) நண்பகல் கொடுமையான தீ விபத்து நிகழ்ந்த அரசு உதவி பெறும் தனியார் பள்ளிக் கூடத்திற்கு இன்று பிற்பகல் நான் நேரில் சென்று பார்வையிட்டேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் மொத்தம் 80 குழந்தைகள் இறந்துள்ளனர். 30 குழந்தைகள் கடுமையான காயம் அடைந்துள்ளனர். இறந்தவர்களில் ஆண் குழந்தைகள் 28 பேர் என்றும், பெண் குழந்தைகள் 38 பேர் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்; மேலும், மற்றவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். காயம் அடைந்தவர்களில் 16 பேர் பெண் குழந்தைகள், 14 பேர் ஆண் குழந்தைகள் ஆவர். இந்தச் சம்பவம் முழுவதற்கும் காரணம், பள்ளியின் நிருவாகம் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் ஆகியோரின் குற்றம்சார் அலட்சியமே ஆகும். இந்தப் பள்ளிக்கூடத்தை ஆய்வு செய்து 3 ஆண்டுகள் ஆகின்றன என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. உதவித் தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோர் ஆய்விற்குப் பொறுப்பு ஆவார்கள்.

விதிமுறைகளின்படி இத்தகைய கீற்றுக் கூரைக் கொட்டகைகள் அமைப்பது அனுமதிக்கத்தக்கது அல்ல. அதுவும் குறிப்பாக, சத்துணவு சமைப்பதற்கான சமையலறை இவ்வளவு அருகில் இருக்கும்போது அதற்கு அனுமதிக்கவே கூடாது. கடும் அலட்சியத்துடன் சமையலறைக்கு மிக அருகில் இருக்கும் வண்ணம் கீற்றுக்கூரை அமைக்கப்பட்டிருப்பது குற்றம் ஆகும். பள்ளி நிருவாகம் விதிமுறைகளைக் கடைபிடிக்கவில்லை என்பது தெளிவாகிறது. 870 மாணவ, மாணவிகள் படிக்கும் ஒரு பள்ளிக்கூடத்தில், உள்ளே செல்வதற்கும், வெளியே வருவதற்கும் ஒரே ஒரு குறுகிய வழிதான் உள்ளது என்பது அதிர்ச்சி அளிக்கிறது. மேலும் பொது நுழைவு வாயிலில் இருந்து ஒரே ஒரு குறுகிய மாடிப்படிக்கட்டுதான் உள்ளது. பள்ளியின் மொத்த மாணவ–மாணவிகளும் இந்தப் பொது நுழைவு வாயிலையும் மற்றும் பொதுவான மாடிப்படிக்கட்டையும் தான் பயன்படுத்தவேண்டும். அவசரகால வழியோ, தீயிலிருந்து தப்பிப்பதற்கான வழியோ அமைக்கப் படவில்லை. இதன் விளைவாக, பள்ளியின் கீற்றுக்கூரை விரிவாக்கம் தீ பிடித்தவுடன் பள்ளியின் முன்புற செங்கல் கட்டடப் பகுதியில் இருந்த அனைத்து மாணவ–மாணவியரும் வாயிலை நோக்கி விரைந்து சென்றதால், பின்புற கீற்றுக் கொட்டகையில் இருந்த மாணவ–மாணவிகள் தப்பிக்க இயலாமல் போனது. இது, பள்ளி நிருவாகத்தின் குற்றம்சார் அலட்சியமாகும். எனவே, பள்ளி நிருவாகத்தின் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க நான் ஆணையிட்டுள்ளேன். அவர்கள் மீது

(3)

சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும். உடனடியாக அந்தப் பள்ளியை மூட நான் ஆணையிட்டுள்ளேன். பள்ளியை நடத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி ரத்து செய்யப்படும். இந்தத் துயர சம்பவத்தில் உயிர் தப்பிய இந்தப் பள்ளியின் மாணவ–மாணவியர்களை வேறு பள்ளிகளுக்கு உடனடியாக இடமாற்றம் செய்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

உதவி தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் ஆகிய அதிகாரிகள், இந்தப் பள்ளியை ஆய்வு செய்து, கீற்றுக் கொட்டகை அமைக்கப்படுவதைத் தடுத்திருக்கவேண்டும். தீ விபத்து ஏற்பட்டால் தப்பிப்பதற்குப் போதிய வசதிகள் செய்யப்பட்டிருப்பதை அவர்கள் உறுதி செய்திருக்க வேண்டும். தங்கள் கடமையில் இருந்து தவறிய குற்றத்தை அவர்கள் செய்துள்ளார்கள். எனவே, இந்த நான்கு அலுவலர்களையும் தற்காலிக பணிநீக்கம் செய்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

இந்தத் துயர சம்பவத்தில் இறந்துபோன குழந்தைகளின் பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இதயபூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

காயம் அடைந்துள்ள குழந்தைகள் விரைவாக குணமடைய நான் பிரார்த்திக்கின்றேன்.

இந்தக் கொடுமையான துயர சம்பவத்தில் இறந்துபோன குழந்தைகளின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 1 இலட்சம் ரூபாயை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும் கடுமையான காயம் அடைந்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாயும், சிறிய அளவில் காயம் அடைந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாயும் வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன்.

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தீவிரமாக ஆய்வுமேற்கொண்டு, பாதுகாப்பு வசதிகள் தரமாக பராமரிக்கப்படுவதை உறுதிசெய்யுமாறு பள்ளிக் கல்வித்துறைக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
(16–7–2004)

❖ ❖ ❖

போர்க்கால அடிப்படையில் தமிழக அரசின் நிவாரண உதவிகள் மற்றும் நடவடிக்கைகள்

உயிரிழந்த குழந்தைகளின் குடும்பத்திற்கு தலா ரூ.1 இலட்சம் அரசு நிதி உதவி

தீ விபத்து நேர்ந்த கும்பகோணத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, மாவட்ட நிருவாகம் விரைந்த நடவடிக்கையை மேற்கொண்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தீ விபத்தில் உயிரிழந்த 90 குழந்தைகளின் குடும்பத்திற்கு உதவித்தொகையாக தலா 1 இலட்சம் ரூபாயை குழந்தைகளின் பெற்றோர்களிடம் மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் 17–7–2004 அன்று வழங்கினார்.

இதேபோல் பலத்த காயமடைந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு ரூ.25 ஆயிரமும், லேசான காயமடைந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு ரூ.10 ஆயிரமும் உதவித்தொகை வழங்கப்பட்டது.

தீக்காயம் அடைந்த குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை

இந்தக் கொடூர தீ விபத்தில் சிக்கி உயிர் பிழைத்து மருத்துவ சிகிச்சை பெற்று வரும் குழந்தைகளுக்குத் தேவையான அனைத்து வகையான சிறப்பு மருத்துவ வசதிகளையும் தமிழக அரசால் ஏற்பாடு செய்து தரப்பட்டது. தீக் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கும் சிறப்பு மருத்துவக்குழுக்கள் சென்னையிலிருந்தும், தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்தும் தலைச்சிறந்த மருத்துவர்கள் கும்பகோணத்திற்கு விரைந்து வந்து சிறந்த தரமான சிகிச்சையை வழங்கினார்கள்.

இந்தத் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் எவருக்காவது சிறப்பு மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டால், அவர்களுக்கு சென்னையில் உள்ள பிரபல பிளாஸ்டிக் சிகிச்சை நிபுணர்களைக் கொண்டு நவீன பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை அளிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்ததற்கிணங்க, தோல் ஒட்டு சிகிச்சை தேவைப்பட்ட விஜய், கவுசல்யா ஆகிய இரு குழந்தைகளும் உடனடியாக சென்னைக்கு வரவழைக்கப்பட்டு, அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக 19–7–2004 அன்று காலை தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் இறைவணக்கக் கூட்டங்களில் இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்திய பின்னர் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இதற்கிணங்க தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள், மாணவ–மாணவியர்கள் உயிரிழந்த பிஞ்சுகளுக்கு மவுன அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர், பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளில் அமைந்துள்ள ஓலைக்கொட்டகைகளை உடனடியாக அகற்ற உத்தரவு

தமிழ்நாட்டில் இதுபோன்ற ஒரு கொடிய சம்பவம் நடைபெறக்கூடாது என்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளில் அமைந்துள்ள ஓலைக்கொட்டகைகளை உடனடியாக அகற்ற உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18–7–2004 அன்று வெளியிட்ட தமது அறிக்கையில், "19–7–2004 முதல் 23–7–2004க்கு இடைப்பட்ட காலத்தில் தங்களது வரம்புக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் தீவிர ஆய்வுகள் மேற்கொண்டு அறிக்கை அளிக்கும்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஓலை வேயப்பட்ட வகுப்பறைகள் கொண்ட பள்ளிக்கூடங்கள் குறித்த பட்டியலை மாவட்ட ஆட்சியர்கள் தயாரிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து அப்பட்டியலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட அனைத்துப் பள்ளிக்கூடங்களுக்கும் மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கைக் கடிதம் அனுப்ப வேண்டும். அதாவது அனைத்துப் பள்ளிகளும் உடனடியாகத் தங்கள் பள்ளி வகுப்பறைகளில் ஓலைக் கொட்டகைகளை அகற்றிவிட்டு தீப்பிடிக்காத பொருட்களைக் கொண்டு கூரைகள் வேயப்பட வேண்டும் என்று உத்தரவிட வேண்டும்.

சம்பந்தப்பட்ட பள்ளிக்கூடங்கள் பணிகள் நிறைவடைந்ததற்கான தங்கள் அறிக்கைகளை மாவட்ட ஆட்சியரிடம் 30–7–2004க்குள் சமர்ப்பிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர், முதன்மைக் கல்வி அதிகாரி, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கூட்டமைப்பைச் சேர்ந்த 2 உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய குழு மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் ஓலைகளால் வேயப்பட்ட கட்டடங்கள் உள்ள பகுதிகளில் அவை அகற்றப்பட்டு, தீப்பிடிக்காத பொருட்களைக் கொண்டு அவை அமைக்கப்பட்டுள்ளனவா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அதுவரை கூரை வேயப்பட்ட வகுப்பறைகளின்கீழ் எந்த வகுப்புகளும் நடைபெறக்கூடாது என்று நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த நடைமுறைகளை 30–7–2004க்குள் எந்தப் பள்ளிக்கூடம் நிறைவேற்றவில்லையோ அந்தப் பள்ளியின் அனுமதி ரத்து செய்வதற்கு வழிவகையாகிவிடும். மேலும் அவ்வாறு இந்த நடைமுறைகளைச் செயல்படுத்தாத பள்ளி நிருவாகங்கள் மீது சட்டத்தை அலட்சியப்படுத்திய பிரிவின்கீழ் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

பள்ளிக்கூடங்களை நடத்திவரும் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்கள் சூழ்நிலையை உணர்ந்துகொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நிர்ணயிக்கப் பட்ட விதிமுறைகளை முழு அளவில் செயல்படுத்துவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நாட்டின் எதிர்காலமான குழந்தைகளின் பாதுகாப்பு விஷயத்தில் எந்தவித விதிமுறைமீறல்களுக்கும் அரசு இடமளிக்காது'' எனத் தெரிவித்திருந்தார்கள்.

தீ விபத்திற்குள்ளான பள்ளிகளில் பயின்ற மாணவ – மாணவிகள் வேறு பள்ளிகளில் சேர்ப்பு

கும்பகோணத்தில் தீ விபத்துக்குள்ளான பள்ளிகளில் எல்.கே.ஜி. முதல் 10ஆம் வகுப்பு வரை படித்துக் கொண்டிருந்த 740 மாணவ – மாணவிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, வேறு பள்ளிகளில் 18.7.2004 அன்று சேர்க்கப்பட்டனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி அந்த மாணவர்களுக்கு இலவச சேர்க்கை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தீ விபத்துக்குள்ளான பள்ளிகளில் எல்.கே.ஜி. வகுப்பு முதல் யு.கே.ஜி. வகுப்பு வரை படிக்கும் 140 மாணவ – மாணவிகளை ஏ.ஆர்.ஆர். மெட்ரிக் பள்ளியிலும், சரஸ்வதி பாட சாலையிலும், 1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை படிக்கும் 400 மாணவ – மாணவிகள் தூய வளவனார், சரஸ்வதி பாட சாலையிலும், 6–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை தமிழ் மீடியத்தில் படித்த 200 மாணவ – மாணவிகளை பாணாதுறை திருமஞ்சன வீதியிலிருக்கும் சரஸ்வதி உயர்நிலைப் பள்ளியிலும், ஜூபிடர் தியேட்டர் அருகில் உள்ள செயின்ட் ஜோசப் பள்ளியிலும் பள்ளிக் கல்வி இயக்குநர் முன்னிலையில் சேர்க்கை நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி இவர்களுக்கு இலவசமாக சேர்க்கை வழங்கப்பட்டுள்ளது. இலவச புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், பயிற்சி ஏடுகள், ஸ்கூல் பேக்குகள், எழுதுபொருட்கள், சீருடை, காலணிகள், வாட்டர்கேன், டிபன்பாக்ஸ் ஆகியவற்றையும் வழங்கினார்கள்.

தொடர்ந்து மற்ற மாணவர்களும் வேறு சில பள்ளிகளில் சேர்த்து விடப்படுகிறார்கள். மாணவர் சேர்க்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் தெரிவித்தார். தீ விபத்து நடந்தபோது அந்தப் பள்ளிக்கூடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல மாணவ – மாணவிகளின் சைக்கிள்கள் தீயில் கருகி நாசமாயின. அந்த சைக்கிள்களுக்குப் பதில் புதிய சைக்கிள்கள் வாங்கிக் கொடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

18.7.2004 முதல் மாணவர் சேர்க்கை நடைபெற்று வரும் நிலையில், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் 17–7–2004 அன்று, மாணவ – மாணவிகளுக்கு இலவச புத்தகங்களையும், சீருடைகளையும் வழங்கினார்.

மேலும், பாதிக்கப்பட்ட மாணவ – மாணவிகளிடம் எந்தவிதமான கல்விக் கட்டணங்களையும் வசூலிக்கக் கூடாது என்பது உள்ளிட்ட தமிழக அரசின் நிபந்தனைகளையும் பள்ளி நிருவாகங்கள் ஏற்றுக் கொண்டன.



அமைச்சரவை அஞ்சலி

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில்19–7–2004 அன்று காலையில் கூடிய தமிழக அமைச்சரவை, 16–7–2004 அன்று கும்பகோணம் நகரில் அரசு உதவி பெறும் தனியார் பள்ளியில் ஏற்பட்ட தீ விபத்தில் 90 குழந்தைகள் உயிரிழந்தது குறித்து தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொண்டது. பின்னர், “தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகரில் உள்ள அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஒன்றில், 16–7–2004 அன்று ஏற்பட்ட கொடிய தீ விபத்தில், நாளைய உலகின் நம்பிக்கை மலர்களான 90 குழந்தைகள் விலை மதிப்பற்ற தங்களது இன்னுயிரை இழந்தது குறித்து, தமிழ்நாடு அமைச்சரவை தனது ஆற்றொணாத துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இதுபோன்ற துயர நிகழ்ச்சி எதுவும் எதிர்காலத்தில் நடைபெறவே கூடாது என்பதால், தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிக் கட்டடங்களிலும் தக்க பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்வது என அமைச்சரவை தீர்மானிக்கிறது.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் தமிழ்நாடு அமைச்சரவை தனது இதயபூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது'' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர், இக்கொடிய தீ விபத்தில் காலமான குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களும், மற்ற அமைச்சர்களும் இரண்டு நிமிட நேரம் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம்

19–7–2004 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தின் தொடர்ச்சியாக 1952ஆம் ஆண்டு விசாரணை சட்டத்தின்கீழ், ஒரு விசாரணை ஆணையத்தை நியமித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இதன்படி, விசாரணை ஆணையமாக செயல்பட சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி, நீதியரசர் திரு.கே. சம்பத் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த ஆணையத்தின் விசாரணை அறிக்கை நான்கு மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று உத்தரவிடப் பட்டுள்ளது.

கும்பகோணம் மாணவ–மாணவிகளுக்கு 10 ஆயிரம் இலவச நோட்டுப் புத்தகங்கள்

16–7–2004 அன்று கும்பகோணம் நகரில் ஏற்பட்ட கொடிய தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மாணவ–மாணவியர்களுக்கு ஆதரவு அளிக்கும் நல்லெண்ண நடவடிக்கையாக தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் சார்பில், அந்த நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட நோட்டுப் புத்தகங்களை இலவசமாக வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை யிட்டுள்ளார்கள்.

அதன்படி, ஒவ்வொன்றும் 8 ரூபாய் மதிப்புள்ள மொத்தம் 10 ஆயிரம் நோட்டுப் புத்தகங்கள் கும்பகோணம் நகரில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ–மாணவியர்களுக்கு, தஞ்சாவூர் மாவட்ட நிருவாகத்தின் மூலம் வழங்கப்படவுள்ளது.

□ □ □

ஆ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் ஆகியோரை அதிக அளவில் பணியமர்த்திய அரசு நிறுவனங்கள், அரசு சார்ந்த பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சிறந்த தனியார் தொழிலதிபர்களுக்காக என 18 விருதுகளும்,

இ) ஊனமுற்றோரை அதிக அளவில் வேலைக்கு அமர்த்திய பணியமர்த்தும் அலுவலர் (Placement Officer) நான்கு நபர்களுக்கும்,

ஈ) ஊனமுற்றோருக்குச் சிறப்பாக சேவை புரிந்த ஐந்து தனி நபர்களுக்கும் (Best Individual Award)

உ) ஊனமுற்றோருக்குச் சிறப்பாக சேவை புரியும் ஆறு தொண்டு நிறுவனத்துக்கும் (Best Institution Award)

ஊ) ஊனமுற்றோரின் மறுவாழ்விற்காக உதவும் நவீன சாதனங்களைக் கண்டுபிடித்த சிறந்த தொழில் நுட்பச் சாதனைக்காக (Best Technological Innovations Award) 3 விருதுகளும்,

ஊனமுற்றோர்களுக்கு விருது

ஊனமுற்றோரில் சிறந்த முறையில் பணிபுரிந்த நபர்களுக்கும், ஊனமுற்றோர்களுக்காகச் சிறப்பாகச் சேவை புரிந்தவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங் களுக்கும் இத்துறையின் மூலம் ஆண்டுதோறும் மாநில விருதுகள் மற்றும் தேசிய விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதைப் போன்று இந்த ஆண்டும் விருதுகள் வழங்கப்பட உள்ளன.

தேசிய விருது (NATIONAL AWARD)

அ) அரசு மற்றும் அரசுச் சார்ந்த நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பார்வை யற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தோர் ஆகியோருக்கான சிறந்த பணியாளர் (Best Employee) மற்றும் சிறந்த சுயதொழில் செய்யும் பணியாளர் (Best Self Employed) ஆகியோருக்காக மொத்தம் 25 விருதுகளும்,

எ) இலக்கியம், கலாச்சாரம் போன்ற துறைகளில் புதிய படைப்புகளை உருவாக்கிய ஊனமுற்ற நபருக்கு ஒரு விருதும்,

ஏ) ஊனமுற்றோர் தடையின்றி சென்றுவர சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கட்டடத்திற்காக மூன்று விருதுகளும்,

ஐ) ஊனமுற்றோரில் அவர்கள் சார்ந்த துறையில் சாதனை புரிந்து சிறந்த முன் மாதிரியாக விளங்கும் ஊனமுற்ற நபர்கள் 5 பேருக்கு (Role Model Award) விருதுகளும்,

ஒ) மறுவாழ்வு பணிகள் சிறப்பாக வழங்கும் மாவட்டத்திற்கு ஒரு விருதும்,

ஓ) தேசிய அறக்கட்டளையின் சிறந்த உள்ளூர் குழுவிற்கு ஒரு விருதும் என மொத்தம் 72 தேசிய விருதுகளுக்காக மாநில அரசு தகுந்த விண்ணப்பங்களை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

மாநில விருதுகள் (STATE AWARD)

அ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர் ஆகியோரை அதிக அளவில் பணியமர்த்திய அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சிறந்த தொழிலதிபர்களுக்கான 2 விருதுகளும்,

ஆ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களுள் சிறந்த பணியாளர்களுக்கான ஒவ்வொரு பிரிவிலும் ஒருவருக்கென 5 விருதுகளும்,

இ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளித்தல் மற்றும் கல்வி போதித்தமைக்கான சிறந்த ஆசிரியர்களுள் 5 நபர்களுக்கும்,

ஈ) ஊனமுற்றோருக்குச் சிறப்பாகச் சேவை புரிந்த தொண்டு நிறுவனங்களுக்கு 2 விருதுகளும்,

உ) ஊனமுற்றோருக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கும்,

ஊ) ஊனமுற்றோருக்குச் சிறப்பாக மருத்துவ உதவிகள் செய்த சிறந்த மருத்துவர் அல்லது இணை மருத்துவ நிபுணர்கள் (Para Medical Personnel) என ஒரு நபருக்கும்,

எ) ஊனமுற்றோருக்குச் சேவையாற்றிய 2 சமூகப் பணியாளர்களுக்கும்,

ஏ) மகளிர் நலத்திற்குத் தொண்டாற்றிய ஒரு மகளிர் நிறுவனத்திற்கும் ஒரு சமூகப் பணியாளர்க்கும் என மொத்தம் 20 விருதுகள் வழங்கப்படும்.

மேற்கண்ட 20 விருதுகளில் கீழ்க்கண்ட ஆறு விருதுகள் சுதந்திர தின விழாவின்போது வழங்கப்படும்.

1) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்த நபர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பளித்த ஒரு தனியார் தொழிலதிபருக்கும்,

2) ஊனமுற்றோர் உயர்வுக்குச் சிறப்பாகப் பணியாற்றிய ஒரு நிறுவனத்திற்கும்,

3) மகளிர் உயர்வுக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு மகளிர் நிறுவனத்திற்கும்,

4) ஊனமுற்றோருக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும்,

5) ஊனமுற்றோருக்குச் சிறப்பாக மருத்துவ உதவிகள் செய்த ஒரு மருத்துவருக்கும்,

6) ஊனமுற்றோருக்குச் சேவையாற்றிய ஒரு சிறந்த சமூகப் பணியாளருக்கும் என மொத்தம் ஆறு விருதுகள் சுதந்திர தினத்தன்றும், இதர 14 விருதுகள் 3.12.2004இல் நடைபெறும் "அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாள்" அன்றும் வழங்கப்படும். மேலும் விவரங்கள் பெற விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

சிறப்பு ஆணையர்,
ஊனமுற்றோருக்கான சிறப்பு ஆணையர் அலுவலகம்,
15/1, மாதிரிப் பள்ளிச் சாலை,
ஆயிரம் விளக்கு, சென்னை – 600 006.

அறிவியல் துளிகள்

உயிரணு பற்றிய உண்மைகளை முதன் முதலில் ஆய்வு செய்து வெளியிட்டவர் ராபர்ட் ஹூக் (Robert Hooke)

❖

சார்லஸ் டார்வின், உயிர்களின் தோற்றம் பற்றிய பரிணாமக்கொள்கையை 1859இல் வெளியிட்டார்.

❖

சராசரி வளர்ச்சியுள்ள ஒரு சிறுவன் அல்லது சிறுமியின் உடலில் சுமார் 100 கோடி உயிரணுக்கள் உள்ளன.

சிலதுளிச் செய்திகள்

தஞ்சை பெரிய கோயிலின் கோபுரத்தில் மேல் உள்ள கல்லின் எடை 80 டன்.

❖

கி.மு.2300இல் ஆசியாமைனரில் வாழ்ந்து வந்த ஹிட்டைட்ஸ் என்ற மக்கள் தான் முதன் முதலில் இரும்பைக் கொண்டு ஆயுதங்களைச் செய்தவர்கள்.

❖

உருளைக்கிழங்கு, தென் அமெரிக்க நாடுகளின் மலைப் பகுதிகளில் தான் தானாக முளைத்து பயிராகி வந்தது. பின்னர் உலகம் முழுவதும் பரவி இன்று முக்கிய உணவுப் பொருளாக உள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் பயோ டீசல் தயாரிப்பு மையம்!

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஏராளமான புங்கை மரங்கள் உள்ளன. புங்கை மரத்தின் விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய், இயற்கை எரிபொருளாக (பயோ டீசல்) பயன்படக் கூடியது. தற்போது அவை எந்தப் பயனுமின்றி வீணாகி வருவதைக் கருத்திற்கொண்டும், திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்திலும், டீசலுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய இயற்கை எரிபொருள் தயாரிக்கும் நோக்கிலும், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் திட்ட அலுவலர் ஆகியோரின் ஆலோசனைப்படி, ஸ்ரீபராங்குச நல்லூர் ஊராட்சியில், ஆழ்வார் தோப்பு கிராமத்தில் புங்கை மர எண்ணெய் விதைகளிலிருந்து பயோடீசல் தயாரிக்கும் ஆலை நிறுவ உத்தேசிக்கப்பட்டது.

இதனடிப்படையில், கர்நாடகா மாநிலம் பெங்களூரில் செயல்படும், தாவரப் பொருட்களிலிருந்து பயோடீசல் தயாரிக்க ஆலோசனை வழங்கும் நிறுவனமாகிய SUTRA (Sustainable Transformation of Rural Areas) மூலம் ஆலோசனை பெறப்பட்டது. இந்நிறுவனத்தின் ஆலோசனைப்படி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக முதற்கட்டமாக 40 அடி x 20 அடி நீள அகலத்தில் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூரைக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பெங்களூர் நிறுவனத்திடமிருந்து இதற்கான 5 குதிரைதிறன் சக்தி கொண்ட, புங்கை மரக்கொட்டைகளிலிருந்து விதைகளை தனியாகப் பிரிக்கும் இயந்திரமும், 14 குதிரைதிறன் சக்தி கொண்ட புங்கை விதைகளிலிருந்து எண்ணெய் பிழியும் இயந்திரமும் கொள்முதல் செய்யப்பட்டு மேற்படி நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது. இவ்வியந்திரங்களின் மொத்த விலை ரூ.2.10 இலட்சமாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் பயோ டீசல் மூலம் தான் இவ்வியந்திரங்கள் இயக்கப்படுகின்றன.

புங்கை விதையில் 0.23% எண்ணெய் சத்து உள்ளது. அதாவது 4 கிலோ விதையிலிருந்து 1 கிலோ பயோ–டீசலும், 3 கிலோ புண்ணாக்கும் (ஆயில் கேக்) பெறலாம்.

வரவு செலவு லாப விவரம்

4 கிலோ புங்கை விதையின் விலை (4 x ரூ.5)	: ரூ.20.00
1 கிலோ எண்ணெய் தயாரிக்க மனித கூலி	: ரூ.1.00
பேக்கிங் மற்றும் இதர செலவு	: ரூ.1.00
1 கிலோ எண்ணெய் தயாரிக்க ஆகும் மொத்த செலவு	: ரூ.22.00
1 கிலோ எண்ணெய் விலை	: ரூ.20.00
3 கிலோ ஆயில் கேக்கின் விலை (3 x ரூ.4)	: ரூ.12.00
ஆக மொத்தம் 4 கிலோ புங்கை விதையில் இருந்து கிடைக்கும் வரவு	: ரூ.32.00
நிகர இலாபம் 4 கிலோ புங்கன் விதை மூலம்	: ரூ.10.00
ஒரு நாளைக்கு 5 மணி நேரம் இம்மையம் செயல்பட்டால் நிகர இலாபம்	
பயோ–டீசல் மூலம் (50 kg x ரூ.20)	: ரூ.1000
ஆயில் கேக் மூலம் (150 kg x ரூ.4)	: ரூ.600
ஆக மொத்தம்	: ரூ.1600



ஜெனரேட்டர் மற்றும் ஆயில் இஞ்சின்கள் இயக்கப்படுகின்றன. சாதாரண டீசலுக்கு நிகரான தன்மை உடையது.

இந்த ஆலையில் ஒரு மணி நேரத்தில் 40 கிலோ விதையினை பயன்படுத்தி 10 கிலோ எண்ணெய் தயார் செய்ய முடியும். இதன்படி ஒரு நாளைக்கு 5 மணி நேரம் செயல்பட்டால் 50 கிலோ பயோ டீசல் தயார் செய்ய இயலும். மேலும், 150 கிலோ ஆயில் கேக் உபபொருளாக கிடைக்கும். பயோ டீசல் மூலம் டிராக்டர்கள், ஆட்டோ,

இவ்வாலையினை நிர்வகிக்கும் பொறுப்பு ஆழ்வார்தோப்பு கிராமத்தில் செயல்பட்டுவரும் டான்வா பண்ணை மகளிர் குழு வசம் ஒப்படைக்கப்பட உள்ளது. இக்குழுவில் 15 பெண் உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மானியக் கடன் வழங்கப்படவுள்ளது. மேலும், இவர்களுக்குத் தேவையான பயிற்சி, தொழில்நுட்ப ஆலோசனைகளும் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் அளிக்கப்படும்.

துரை. ராஜ்குமார்
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்
தூத்துக்குடி

அஜந்தா குகை ஓவியங்கள்

கற்பனை வளம் மிகுந்த ஓவியங்களைப் பார்க்க வேண்டும் என்றால் அஜந்தா செல்ல வேண்டும். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இந்தியாவை நம் கண்முன் நிறுத்துகின்றன அஜந்தா குகை ஓவியங்கள். இங்கு சிற்பங்களைவிட குகைச் சுவர்களில் தீட்டப்பட்ட வண்ண ஓவியங்களே நம் நாட்டிற்கு உலகப் புகழை தேடித் தந்திருக்கின்றன. ஓவியக் கலையில் உலகப் புகழ் பெற்றவை இத்தாலிய ஓவியங்கள். அந்த இத்தாலிய ஓவியங்களையே தலை நிமிர்ந்து பார்க்கும்படிச் செய்த பெருமை அஜந்தா ஓவியங்களுக்குண்டு.

இந்தக் குகைகள் மிகப் பழமையானவை. கி.பி.இரண்டாம் நூற்றாண்டுவாக்கில் உன்னத நிலையிலிருந்த புத்த மதச் சின்னங்களை இங்கே பார்க்கலாம். இந்தக் குகைகள் வாகட மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டவை என்கிறார்கள். பின்னர் பௌத்தர்கள் ஏழாம் நூற்றாண்டு வரை இங்கே வசித்து சிற்பக் கலையையும், ஓவியக் கலையையும் வளர்த்தனர்.

நில மட்டத்திலிருந்து 50 அடியிலிருந்து 100 அடிவரை சுமார் 600 மீட்டர் தூரம் வரை இக்குகைகள் பரவியுள்ளன. இங்குள்ள ஓவியங்கள் அனைத்தும் புத்த சமய சம்பந்தமானவைதான். இங்குள்ள ஓவியங்களைக் கதைக் கூற்று ஓவியங்கள், வரையுரு ஓவியங்கள், ஒப்பனை மிகு ஓவியங்கள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். துவண்டு கொடுக்கும் விரல்கள், சுழன்று நோக்கும் விழிகள், துவளும் இடை ஆகியவற்றின் மூலம் உருவங்களுக்கு உயிரோட்டம் கொடுத்திருக்கிறான் ஓவியன்.

பெண்கள், அவர்களது ஆடை அணிகலன்கள், பொது மக்கள், வீரர்கள், குழந்தைகள் என்றெல்லாம் அன்றைய வாழ்க்கையை எடுத்துக்காட்டும் ஓவியங்கள் உள்ளன. சமைத்தல், தண்ணீர் எடுத்து வருதல், கடைகளில் சாமான் வாங்குதல், வேட்டையாடுதல், யானைச் சண்டைகள், நடனமாடுதல், இசைக் கருவிகள் வாசித்தல் முதலான வண்ண ஓவியங்கள் உள்ளன.

1 ஆம் எண்ணுள்ள குகையில் 29 அடி உயரமுள்ள 'நிர்வாண புத்தர்' சிலை உலகப் புகழ் பெற்றது. புத்தர் சரிதம், ஜாதகக் கதைகள் முதலானவை ஓவியங்களாகத் தீட்டப்பட்ட குகைகள் அனைத்தும் புத்தர் பற்றிய ஓவியக் கண்காட்சியாகவே விளங்குகின்றன.

மரணப் படுக்கையில் இளவரசி. அவள் கண்கள் சொருக, ஆவி பிரியும் காட்சியை அப்படியே தீட்டியிருக்கிறான் ஓவியன். சுற்றியிருக்கும் தாதியர் இதை அச்சத்துடன் பார்ப்பதையும் சித்தரித்திருக்கிறான்.

அஜந்தா குகைச் சித்திரங்களின் ஒவ்வொரு வரிகளும் கீற்றுகளும் ஓவிய உலகில் அமரத்துவம் பெற்றவை.

☐ ☐ ☐

திண்டுக்கல் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம்

திண்டுக்கல் மாவட்டத்தில் மானாவாரி மற்றும் தரிசு நிலங்கள் அதிக அளவில் உள்ளதால் அரசின் நிதியுதவியுடன் 30,000 எக்டேர் மானாவாரி மற்றும் தரிசு நிலங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் வாயிலாக நீர்வடிப்பகுதி திட்டப் பணிகளால் மேம்படுத்தப் பட்டு வருகின்றது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. முருகய்யா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் நத்தம், ஆத்தூர் மற்றும் கொடைக்கானல் ஒன்றியங்களில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டமும், வேடசந்தூர் மற்றும் வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியங்களில் ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் நீர்வடிப்பகுதி திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த 1995–1996 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் மக்கள் பங்கேற்பு முறையில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

ஒவ்வொரு நீர்வடிப்பகுதியும் சுமார் 500 எக்டேர் நிலப்பரப்பைக் கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு திட்ட செயலாக்க முகமையும் 10 முதல் 12 நீர்வடிப் பகுதிகளை தனியாக ஒரு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு அணியினர், நால்வரின் தொழில்நுட்ப உதவியுடன் மேம்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஒரு எக்டேர் நிலப்பரப்பிற்கு நான்கு அல்லது ஐந்து வருட திட்ட காலத்திற்கு ரூ.4,000 முதல் ரூ.6,000 வரை நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு நீர்வடிப்பகுதிக்கும் நிலத்தின் சரிவிற்கேற்ப ரூ. 20 இலட்சம் முதல் ரூ. 30 இலட்சம் வரை நிதி ஒதுக்கீடு செய்யப் படுகின்றது.

திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் நான்கு பகுதித் திட்டங்களின் வாயிலாக 27 நீர்வடிப் பகுதிகளில் சுமார் 13,000 எக்டேர் நீர்வடிப் பகுதி மேம்படுத்தப்பட்டு வருகின்றது. மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 660 இலட்சத்தில் இதுவரை அரசுகளிடமிருந்து ரூ.307.65 இலட்சம் ரூபாய் பெறப்பட்டு, அதில் ரூ.301.81 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. சுமார் 11,600 பயனாளிகள் இதன் மூலம் பயனடைந்துள்ளார்கள்.

ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் பகுதி 2 மற்றும் 3–ன் கீழ் 30 நீர்வடிப்பகுதிகளில் சுமார் 15,000 எக்டேர் தரிசு நிலம் மேம்படுத்தப்பட்டு வருவதோடு தமிழகத்திலேயே மத்திய அரசு வழிகாட்டி முறைகளின் படி செயல்படுத்த திண்டுக்கல் மாவட்டம்

முதலாவது தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும். சாணார்பட்டி ஒன்றியத்தில் 5,095 எக்டேர் தரிசு நிலப்பரப்பு ரூ. 200 இலட்சத்தில் மேம்படுத்தப் பட்டுள்ளது. இதன்மூலம் 12,000 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். நீர்வடிப்பகுதிகளில் நில, நீர் மட்டம் உயர்ந்ததுடன் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

திட்டம் செயல்படுத்தும் முறை

இத்திட்டத்தின் கீழ் நிலமுள்ள பயனாளிகள் மற்றும் நிலமில்லா பயனாளிகள் என இரு வகைப்படுத்தப்பட்டு நிலமுள்ள விவசாயிகள், பயனாளிகள் குழுக்களாக அமைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவைப்படும் தரிசுநில மேம்பாட்டுப் பணிகள் நீர்வடிப்பகுதி குழு மூலம் செயல்படுத்தப்படுகின்றது. நிலமற்ற கூலித் தொழிலாளர்கள், பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரைக் கொண்டு சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இக்குழுக்களுக்கு மேலாண்மை மற்றும் தொழிற்பயிற்சி அளிக்கப் படுகின்றது. இக்குழுக்களுக்கு கோழி வளர்த்தல், பால் மாடுகள் வளர்த்தல், ஆடு வளர்த்தல், தேனீ வளர்த்தல், நாற்றங்கால் பண்ணை ஏற்படுத்துதல், மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் காளான் வளர்த்தல் போன்ற பயிற்சிகள் இதுவரை 83 குழுக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மேம்பாட்டுப் பணிகளாக நிலம் சீர்படுத்துதல், கல், மண் மற்றும் தாவர வரப்புகள் அமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், பண்ணைக் குட்டைகள் மற்றும் கால்நடை குட்டைகள் அமைத்தல், குளம் மேம்பாடு செய்தல், வரத்துக் கால்வாய்கள் சீர் செய்தல், பழத்தோட்டங்கள் அமைத்தல், வேளாண் காடுகள் மற்றும் சமூகக் காடுகள் வளர்த்தல், பசுந்தீவனப் பயிர்கள் வளர்த்தல், பயிர் விளக்க வயல் அமைத்தல், நாற்றங்கால் பண்ணைகள் ஏற்படுத்துதல் முதலிய பணிகளின் மூலம் 12,864 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மக்கள் பங்கேற்பு

சுயஉதவிக் குழுக்கள், பயனாளிகள் குழுக்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய 10 முதல் 12 நபர்கள் அடங்கிய நீர்வடிப்பகுதி குழு ஒவ்வொரு நீர்வடிப்பகுதிக்கும் அமைக்கப்பட்டு அக்குழுக்களின் மேற்பார்வையில் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. இப்பணிகளுக்காக நிதி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் இருந்து நேரடியாக சம்பந்தப்பட்ட நீர்வடிப்பகுதித் திட்ட வங்கி கணக்கிற்கு அளிக்கப்படுகிறது. பணிகளுக்கான செலவுத் தொகை நீர்வடிப்பகுதியின் குழுத்தலைவர் மற்றும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர் ஆகியோர் இணைந்து கையொப்பமிட்ட காசோலை மூலம் வழங்கப்படுகிறது. திட்டப் பணிகளின் பங்குத் தொகையாக பயனாளிகள் தனியார் நிலப் பணிகளுக்கு 10 சதவிகிதமும், பொதுப் பணிகளுக்கு 5 சதவிகிதமும் செலுத்துகின்றனர். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர் 5 சதவிகித பங்குத் தொகை அளிக்கின்றனர். இப்பங்குத் தொகையானது திட்டக் காலத்திற்கு பின்னர் பொதுப்பணிகளின் பராமரிப்பிற்கு பயன்படுத்தப்படும்.

நாற்றங்கால் பண்ணைகள்

இத்திட்டத்தின் சிறப்பம்சமாக வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் நத்தம் ஒன்றியத்தில் குடகிபட்டி, சாணார்பட்டி ஒன்றியத்தில் அம்மாபட்டி ஆகிய இடங்களில் நாற்றங்கால்கள் ஏற்படுத்தப்பட்டு பயிற்சி பெற்ற சுயஉதவிக் குழுக்களால் ஆண்டு சராசரியாக ரூபாய் 3 இலட்சம் லாபத்தில் செயல்பட்டு வருகின்றது. இதன்மூலம் 36 சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்த

குடும்பங்கள் பயன்பெற்று தற்சார்பு உடையனவாக வளம் பெற்றுள்ளன.

மேலும், ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேடசந்தூர் ஒன்றியம் வைவேஸ்புரத்தில் இத்தாலி நாட்டு தொழில்நுட்பத்துடன் நாற்றங்கால் பண்ணை, வத்தலக்குண்டு ஒன்றியம் செக்காப்பட்டியில் ஒருங்கிணைந்த வேளாண் பண்ணைகள் அமைக்கப்பட்டு சுயஉதவிக் குழுக்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பண்ணையில் நீர்வள, நிலவள மேம்பாட்டுப் பணிகள், பழ மரங்கள், காடுகள் வளர்த்தல், பசுந்தீவனம் வளர்த்தல் முதலிய பணிகளுடன் கால்நடை வளர்த்தல், மண்புழு உரம் தயாரித்தல், காளான் வளர்த்தல், காய்கறிகள் உற்பத்தி முதலிய பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன வயல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிராம மக்களுக்கு விளக்கும் வகையில் சூரிய ஒளி விளக்குகள், சாண எரிவாயுக் கலன்கள் மற்றும் பயிர் விளக்க வயல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இஸ்ரேல் நாட்டு முறைப்படி இரட்டிப்பு உற்பத்தியைக் கொடுக்கும் காய்கறி நாற்றுகள், நிழல் வலைகளில் அமைக்கப்பட்டு பயனாளிகளுக்கு குறைந்த விலையில் வழங்கப்படுகின்றது. இந்த வேளாண் பண்ணைகளில் தரிசுநில மேம்பாட்டுப் பணிகள் குறித்து களப்பயிற்சி அளிப்பதற்காக பயிற்சி அரங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, வைவேஸ்புரத்தில் அமைக்கப்பெற்ற இத்தாலி நாட்டு தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்ட 1 இலட்சம் தக்காளி மற்றும் கத்தரி நாற்றுக்கள் இரண்டு நாட்களிலேயே விவசாயிகளிடம் பெரும் வரவேற்பைப் பெற்று விற்பனையானது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

எதிர்காலத் திட்டங்கள்

முட்டை கோழி வளர்த்தல், மூலிகை பயிர்கள் வளர்த்தல், அதிகப்படியான தேனீ வளர்த்தல், சுயஉதவிக் குழுக்களுக்கு தொழில் பயிற்சி அளித்தல், பூ பயிர்கள் வளர்த்தல் முதலிய பணிகளை மேற்கொள்வதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இம்மாவட்டத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண் பண்ணைப் பணிகள், நாற்றங்கால் பணிகள் மற்றும் நீர்வடிப்பகுதி திட்ட மேம்பாட்டுப் பணிகளை தமிழ்நாட்டிலுள்ள தென்மாவட்டங்களைச் சார்ந்த சுமார் 5,000 பயனாளிகள் இதுவரை பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இப்பணிகளை சிறப்பாகச் செய்வதற்கு திட்டப் பணியாளர்கள் ஊட்டியிலுள்ள மத்திய நில, நீர் வள பாதுகாப்பு மற்றும் பயிற்சி நிறுவனம், குடுமியான் மலையிலுள்ள மாநில வேளாண்மை, மேலாண்மைப் பயிற்சி நிறுவனம், காந்தி கிராம பல்கலைக்கழகம், பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி முதலிய பயிற்சி நிலையங்களில் பெற்ற பயிற்சியானது பேருதவியாக அமைந்துள்ளது.

பயிற்சி கையேடுகள்

நீர்வடிப்பகுதி திட்டம் செயல்படுத்துவது குறித்து களப்பணியாளர் கையேடு, பயிற்சியாளர்கள் கையேடு, பயனாளிகள் கையேடு முதலிய புத்தகங்களை வெளியிட்டு அனைத்து மாவட்ட திட்டப் பணியாளர்கள் மற்றும் பயனாளிகள் பயன்பெறும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பணிகள் ஆய்வு

திண்டுக்கல் மாவட்டத்தில் இதுவரை செயல்படுத்தப் பட்டுள்ள நீர்வடிப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் மத்திய அரசின் மதிப்பாய்வாளர்கள், ஊட்டியிலுள்ள மத்திய நில, நீர் வள பாதுகாப்பு மற்றும் பயிற்சி நிறுவனம், காந்தி கிராம பல்கலைக்கழகம், இயக்குநர், தமிழக அரசு மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை, சென்னை மற்றும் கேரளா ஆய்வு மையம் ஆகியவற்றின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளதாக பாராட்டுப் பெற்றுள்ளது. இதுபோன்று வருங்காலங்களில் நீர்வடிப்பகுதி திட்டங்களை சிறந்த முறையில் அதிக பயனாளிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்த தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு. முருகய்யா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

– மு. பழனிச்சாமி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல் மாவட்டம்.

• • •

மேட்டூர் அனல்மின் நிலையம் -

நிலக்கரிச் சாம்பலின் பயன்பாடு

- ஒரு அறிமுகம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்த மின் உற்பத்தியில் 85 விழுக்காடு, அனல்மின் நிலையங்கள் மூலமாக தற்பொழுது உற்பத்தி செய்யப்படுகிறது. அதில் மேட்டூர் அனல்மின் நிலையம் மட்டும் 29 விழுக்காடு உற்பத்தி செய்கின்றது.

இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட மின் உற்பத்தி அளவை விட அதிகமான மின் உற்பத்தி செய்து கடந்த 4 ஆண்டுகளாகத் தொடர்ந்து சாதனை செய்து மத்திய அரசின் தங்கப்பதக்கம் பெற்று வருகின்றது.

அனல்மின் நிலையத்தின் மின் உற்பத்திக்கு நிலக்கரி எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறு நிலக்கரி எரிக்கப்படும்பொழுது பெறப்படும் கழிவே நிலக்கரிச் சாம்பலாகும்.

மேட்டூர் அனல்மின் நிலையத்தின் ஒரு நாளைய நிலக்கரி பயனீட்டு அளவு 14,000 டன் ஆகும். ஒரு நாளைய சாம்பல் கழிவின் அளவு 6,000 டன் ஆகும். இந்த சாம்பல் கழிவானது உலர் சாம்பலாக குதிர்களிலும் (Silos) ஈரச் சாம்பலாக சாம்பல் ஏரிகளிலும் சேகரிக்கப்படுகின்றது. சேகரிக்கப்பட்ட உலர் சாம்பலானது குதிர்களிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 1,500 டன் வரை சிமெண்ட் உற்பத்திக்காக தொழிற் சாலைக்கு, சில சிமெண்ட் நிறுவனங்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது. இது தவிர சாம்பல் ஏரியிலிருந்து ஈரச்சாம்பலும், நாளொன்றுக்கு சுமார் 1,500 டன் வரை சிமெண்ட் நிறுவனங்கள் மூலமாக சிமெண்ட் உற்பத்திக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

இதன்படி மேட்டூர் அனல்மின் நிலையத்தில் தினசரி மின் உற்பத்தியில் கிடைக்கப்பெறும் சாம்பலானது சுமார் 50 விழுக்காடுகள் தினமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மத்திய அரசின், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் 1999ஆம் ஆண்டு குறிப்பாணையின்படி படிப்படியாக அனைத்து அனல்மின் நிலையங்களும் 15 ஆண்டுக்குள் 100 விழுக்காடு சாம்பல் கழிவை உபயோகப்படுத்திட துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மேலும் மத்திய அரசின் ஆணையின்படி அனல்மின் நிலையம் அமைந்துள்ள இடத்தில் இருந்து 100 கி.மீ. சுற்றளவுக்கு உட்பட்ட பகுதிகளில் மண், செங்கல், ஓடு மற்றும் இதர கட்டுமானப் பொருட்களைத் தயாரிக்கும்பொழுது, மண்ணுடன் 25 விழுக்காடு வரை சாம்பலை கட்டாயம் கலக்க வேண்டும் என்றும், 2004 ஆகஸ்ட் 26ஆம் தேதிக்குள் நடைமுறைப்படுத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



மேற்படி செங்கற்கள் முழுவதும் தற்பொழுது மண்ணால் தயாரிக் கப்படுவதால் விலை மதிப்புள்ள விளை நிலங்கள் யாவும் அழிக்கப் படுகிறது. அதனால் பின்னால் வரும் சந்ததியினருக்கு விளை நிலம் கிடைக்காமல் போய்விடும். அது நாம் அவர்களுக்கு நம்மை அறியாமலேயே செய்யும் கெடுதல் ஆகும். ஆகவே நம் நாட்டில் விவசாய வளம் குறைந்துவிடாமல் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். அதற்காக மண்வள ஆதாரத்தைப் பாதுகாத்திட வேண்டும்.

உலர் மற்றும் ஈரச்சாம்பலை பல்வேறு வகைகளில் உபயோகப்படுத்துவதற்காக இந்திய தரக்கட்டுபாடு நிறுவனம் (ISI), இந்திய சாலை குழுமம் (IRC), மத்திய பொதுப்பணித்துறை (CPWD) மத்திய மின்துறை (CEA) போன்ற மத்திய அரசு நிறுவனங்கள், பல்வேறு குறிப்பாணைகளையும், அறிவுரைகளையும் வழங்கியுள்ளது. அதன்படி தாழ்வான பகுதிகளை நிரப்புதல், கட்டட அடித்தளத்தை நிரப்புதல், புதிய சாலைகள் அடித்தளம் அமைத்தல், சிமெண்ட் தயாரித்தல், செங்கல், ஒடு மற்றும் பிளாக்குகள் தயாரித்தல், கான்கிரீட் சாலைகள் அமைத்தல், பள்ளத்தாக்குகளை நிரப்புதல், ஏரி, குட்டை முதலான கரைகளை அமைத்தல் மற்றும் உயர்த்துதல், சாலைப்பணிகளில் கரை அமைத்தல் போன்ற பணிகளுக்கு நிலக்கரிச் சாம்பலை உபயோகப்படுத்தலாம்

மேலும் விவசாயத்திற்குப் பயன்படுத்துவதால், நிலத்தின் தழைச்சத்து அதிகரிக்கும், மகசூல் அதிகரிப்பதாக ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலமாக கண்டறியப்பட்டுள்ளது. விவசாயப் பணிகளில் பல்வேறு வகைகளிலும் சாம்பலை உபயோகப்படுத்திடவும், விளைச்சலைப் பெருக்குவதற்கும் மத்திய அரசு தேவையான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் இலவசமாகத் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு வழங்கும். கான்கிரீட் அணைகள், சுரங்கப் பூச்சுப் பணிகள், கால்வாய்ப் பணிகள் மற்றும் இதர கட்டுமானப் பணிகளுக்கும் பயன்படுத்தலாம்.

மத்திய பொதுப்பணித்துறையின் மே 2004இன் சுற்றறிக்கையின்படி, கான்கிரீட் கட்டுமானப் பணிகளில் 25 விழுக்காடு உலர் சாம்பல் சேர்த்து, 15 விழுக்காடு சிமெண்ட் அளவைக் குறைத்துக் கொள்ளலாம்.

மேட்டூர் அனல்மின் நிலையத்தில் முன்னோடியாக 1995ஆம் ஆண்டு முதல் உலர் சாம்பலைப் பயன்படுத்தி செங்கற்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 25 இலட்சம் சாம்பல் செங்கற்கள் தயாரிக்கப்பட்டு மேட்டூர் அனல்மின் நிலையத்திலும் மற்றும் சேலம், ஈரோடு வட்டங்களில் உள்ள மின் வாரியப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேட்டூர் அனல்மின் நிலைய உலர் சாம்பலைப் பயன்படுத்தி பல தனியார் நிறுவனங்கள் செங்கற்கள், கான்கிரீட் பிளாக்குகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

சாம்பலை விவசாயம் மற்றும் இதர கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்திட அனைத்து அரசு நிறுவனங்கள் முன்வருவதற்கு, மேட்டூர் அனல்மின் நிலையத்தில், நிலக்கரிச் சாம்பலின் உபயோகம் பற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ. சுகுமாரன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கிவைத்து, நிலக்கரிச் சாம்பலைப் பயன்படுத்துவதை அதிகரித்து நாம் ஒவ்வொருவரும் நமது நாட்டிற்கு நம் கடமையை ஆற்றிட உறுதி பூண்டிட வேண்டுமென கேட்டுக்கொண்டார். இக்கருத்தரங்கில் சேலம் மாவட்ட சுற்றுச்சூழல் பராமரிப்புப் பொறியாளர் பொறிஞர் என். செல்வன், கீழ்மேட்டூர் நீர் மின் திட்டம் தலைமைப் பொறியாளர் திரு. என். சசிகுமார், ஈரோடு மாவட்ட சிறுதொழில் முனைவோர் சங்கம் உதவித்தலைவர் திரு. எஸ்.கே. ராஜேஸ்வரன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். மேட்டூர் அனல்மின் நிலையம் தலைமைப் பொறியாளர் திரு. என். பொன் அகஸ்டன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மேற்பார்வைப் பொறியாளர் பொறிஞர் திரு. எம். ஜெயபாலன் நன்றி கூறினார்.

– மூ.நா. கிருட்டிணசாமி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம்.

★ ★ ★

கைக்குடை எறும்பு

எறும்புகளில் இலை வெட்டி எறும்பு என்ற ஒரு வகை உள்ளது. இதைப் பயிர் செய்யும் எறும்பு என்றும் கூறுவார்கள். இது ஃபார்மிஸிடே குடும்பத்தின் உட்கிளையான மிர்மிஸினே (MYRMICINAE) குடும்பத்தைச் சேர்ந்தது. இது தங்களுக்கு வேண்டிய உணவைத் தாங்களே பயிர் செய்து கொள்ளுகிறது. உருவத்தில் பெரிய இது இலைத் துணுக்குகளை தலைக்கு மேல் வைத்துக் கொண்டு வரிசையாகச் செல்வதால் இதற்குக் கைக்குடை எறும்பு என்ற பெயரும் உண்டு. வெப்ப மண்டலப் பகுதிகளிலேயே இவை பெரும்பாலும் காணப்படும்.

இவை கட்டும் 'கூடு' மிகப் பெரியது. ஒரு ஏக்கர் பரப்பளவும் ஐந்து மீட்டர் ஆழமும் கொண்டது. அதிலே நூற்றுக்கணக்கான காற்றோட்டமான பெரிய அறைகள். இந்த அறைகளில் ஈரப்பசையுள்ள இலைகளைப் பரப்பி தங்களுக்குத் தேவையான குறிப்பிட்ட காளானை வளர்த்துக் கொள்கின்றன. இளம் காளான்களையே இந்த எறும்புகள் உண்ணும்.

• • •

இயற்கை உர உற்பத்தியில் முன்னோடியாகத் திகழும் குமரி மாவட்டம்

வேளாண்மையில் தன்னிறைவு அடையும் பொருட்டு பசுமைப் புரட்சி ஏற்பட்டது. உணவு உற்பத்தியை அதிகரிக்க, உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிடுதல், அதிக அளவில் இரசாயன உரங்களைப் பயன்படுத்துதல், பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்துதல் போன்ற நிகழ்வுகள் மேற்கொள்ளப் பட்டன. விளைச்சல் அதிகரித்து, உணவு உற்பத்தியில் தன்னிறைவு ஏற்பட்டது.

உற்பத்தியைப் பெருக்கப் பயன்படுத்திய இராசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் தேவையை அறிந்து போதிய அளவிற்குப் பயன்படுத்தாமையால் மண்ணின் இயல்பான வளம் குறைந்தது. பூச்சி மருந்து தெளிப்பதால், உணவே விஷமாக மாறும் நிலை ஏற்பட்டது. சுற்றுப்புற சூழலும் பாதிப்பிற்குள்ளாகியது. இரசாயன உரம் மண்ணில் வாழும் பயனுள்ள உயிர்களையும், நன்மை தரும் புழு, பூச்சிகளையும் அழித்து விடுகிறது. நுண்ணுயிர்கள் உயிர் வாழ இயலாத மண் – உரத் தன்மையற்றதாகவே காணப்படும். இத்தகைய மண்ணில் விவசாயம் செய்வதற்கு செலவு அதிகமாவதோடு விளைச்சலும் குறையும். பாக்டீரியா, பூசனங்கள், தாவரங்களின் வேர்களிலிருந்து கசியும் சத்துப் பொருட்கள், மண்புழுக்கள் போன்றவற்றின் மூலம் மண்ணிற்கு வேண்டிய சத்துப் பொருட்கள் மண்ணிலிருந்தே கிடைக்கச் செய்வதால் ஆரோக்கியமான தாவரங்களையும், பயிர்களையும் வளர்க்க முடியும்.

தமிழக அரசு நீர்வளத்தையும், நிலவளத்தையும் பாதுகாக்க மழைநீர் சேகரிப்புத் திட்டம், தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களைத் தீட்டி, சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில், விஷமில்லா உணவு தானியங்களை உற்பத்தி செய்யவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், குமரி மாவட்டத்தில் இயற்கை உரங்களின் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இயற்கையாகக் கிடைக்கும் தொழு உரம் போன்ற, அதை விட வீரியமுள்ள மண்புழு உரம் தயாரித்தல், கதம்பைத்தூள் கம்போஸ்ட் உரம் தயாரித்தல் ஆகிய இயற்கை உரம் தயாரித்தலில் விழிப்புணர்வூட்டும் பணியை வேளாண்துறை மேற்கொண்டு வருகிறது.

மண்புழு மண் குப்பைகளைத் தின்று சத்து நிறைந்த கழிவுப் பொருட்களை வெளியேற்றுகிறது. ஒரு கிலோ மண்புழு (சுமார் 1,000 புழுக்கள்) ஒரு நாளில் 5 கிலோ கழிவுப் பொருட்களை வெளியேற்றுகிறது. 1 டன் மண்புழு கம்போஸ்ட் தயாரிக்க ரூ.1,300 மட்டுமே செலவாகிறது. மண்புழு உரம் தயாரிக்க இயற்கை கழிவுகளே போதுமானது. விலங்குகளின் கழிவு, சமையல் அறை கழிவு அல்லது உணவகக் கழிவு போன்ற இயற்கை கழிவுகளை மண்புழுக்களின் உதவியுடன் கம்போஸ்டாக மாற்றலாம்.

மண்புழு கம்போஸ்ட் உரத்தில் 1.8 சதவிகிதம் தழைச்சத்து, 0.21 சதவிகிதம் மணிச்சத்து, 0.16 சதவிகிதம் சாம்பல் சத்து முதலியன அடங்கியுள்ளன. மண்புழு கம்போஸ்ட் ஒரு ஏக்கருக்கு 2,000 கிலோ என்ற அளவிலும் மரம் ஒன்றிற்கு மரத்தின் அளவைப் பொறுத்து 1 முதல் 10 கிலோ வரை இடுவதற்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.

மண்ணில் வாழும் உயிரினங்களைப் பயன்படுத்தி மண் வளத்தைப் பெருக்கும் முறைகளும் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் எளிதாகக் கிடைக்கும் கதம்பைத்தூளைப் பயன்படுத்தி கதம்பைத்தூள் கம்போஸ்ட் தயாரித்தல் அதிக அளவில் உள்ளது. கதம்பைத்தூளை கம்போஸ்ட் ஆக்க புளுரோட்டஸ் என்ற காளான் பயன்படுத்தப் படுகிறது. கதம்பைத்தூளை இயற்கை எருவாக மாற்றும் தொழில்நுட்பத்தைக் கையாண்டு, உரமாக மாற்றும் போது, தொழு உரத்தில் இருப்பதை விட 2 மடங்கு தழைச்சத்தும், 2 மடங்கு சாம்பல் சத்தும், 60 மடங்கு மணிச் சத்தும் உள்ள சிறந்த உரமாகத் திகழும். இந்த கதம்பைத்தூள் கம்போஸ்ட் உரத்தை தென்னை, வாழை, ரப்பர், காய்கறிகள் மற்றும் நெல் பயிருக்கு இட்டால் குறைந்த செலவில் நிறைந்த இலாபத்தைப் பெறமுடியும். கதம்பைத்தூள் கம்போஸ்ட் உரம் 1 கிலோ தயாரிக்க 75 காசுதான் செலவாகிறது. ஆனால் 50 கிலோ ரூ.140 வரை விற்பனை செய்யப்படுகிறது.



குமரி மாவட்டத்தில் இயற்கை உரம் தயாரிக்கும் திட்டம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்ததாவது :

"தமிழக அரசு, நிலவளம் மற்றும் நீர்வள மேம்பாட்டிற்காகவும், சுற்றுச்சூழலை மாசு இன்றி பாதுகாக்கவும், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குமரி மாவட்டத்தில் குமரி மாவட்ட விவசாயிகளிடையே சுற்றுச்சூழல் மாசு ஏற்படா வண்ணம் இயற்கை உரங்களைப் பயன்படுத்த நல்ல விழிப்புணர்வு உள்ளது. எனவே தாராளமாக கிடைக்கும் கதம்பைத்தூளை, கம்போஸ்ட் உரமாக மாற்றும் தொழில் நுட்பத்தில் விவசாயிகளுக்குப் பயிற்சிகள் வழங்கவும் கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் இயற்கை உரம் தயாரிப்பில் விவசாயிகளிடம் விழிப்புணர்வூட்டும் வகையில் நாகர்கோவில் கோட்டத்தில் 23 இடங்களிலும், பூதப்பாண்டி கோட்டத்தில் 10 இடங்களிலும், தக்கலை கோட்டத்தில் 23 இடங்களிலும் மொத்தம் 73 செயல் விளக்க மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன'' என்று தெரிவித்தார்கள். மேலும், குறிப்பாக மூவாற்றுமுகம், திருவட்டார், செருதிகோணம், திற்பரப்பு, வில்லுக்குறி, கொல்லாய், வடக்கன் பாகம் ஆகிய பகுதிகளிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் கதம்பைத்தூள் சிறந்த உரமாக்கப்பட்டு, குறைந்த செலவில் இயற்கை உரம் மூலம் மண் வளமும் பாதுகாக்கப்படுகிறது. தென்னை வளர்ச்சி வாரியம் மூலம் குமரி மாவட்டத்தில் கதம்பைத்தூள் கம்போஸ்ட் உரம் தயாரித்தலை ஊக்குவிக்க 5 யூனிட்டுகளுக்கு தலா ரூ.20,000 வீதம் ரூ.1 இலட்சம் மானியம் வழங்கப் பட்டுள்ளது'' என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்கள்.

கன்னியாகுமரி மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குநர் அவர்கள், "கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்புழு உரம் மற்றும் கதம்பைத்தூள் கம்போஸ்ட் தயாரிக்கும் பணியில் டான்வா பண்ணை மகளிர் குழுவினருக்குப் பயிற்சி வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டது. கதம்பைத்தூள் கம்போஸ்ட் உரம் தயாரித்தல் மூலம் அக்குழுவுக்கு நல்ல வருமானம் கிடைத்தது. தற்போதும் அம்மகளிர் கதம்பைத்தூள் கம்போஸ்ட் உரம் தயாரிப்பில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இயற்கை உரங்களால் மண்ணின் தரம் உயருகிறது. நீர்ப்பிடிப்புத் தன்மை அதிகரிக்கிறது. மண்ணரிப்பைத் தடுத்து சத்தான மேல் மண் பாதுகாக்கப்படுகிறது. மண்ணில் பாக்டீரியா போன்ற நுண்ணுயிர்கள் பெருகுகின்றன. பூச்சிகளின் தாக்குதல் குறைகிறது. பூச்சிக்கொல்லி மருந்துகளின் தேவை 50 முதல் 60 சதவிகிதம் குறைகிறது. உணவு உற்பத்தி அதிகரிப்பதோடு ஆண்டுதோறும் விளைச்சல் குறையாமல் தடுக்கிறது. தென்னை வளர்ச்சி வாரியம் மூலம் உற்பத்தியான விளைப்பொருள்களின் சுவை, பளபளப்பு அதிகரிப்பதோடு அழுகாமல் நீடித்து இருக்கும்'' என்று தெரிவித்தார்கள்.

– கு. தாணப்பா
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி.

தேனி மாவட்டத்தில் பால் உற்பத்தி அதிகரிப்பு

தேனி மாவட்டம் மேற்கு மலைத் தொடர்ச்சியின் அடிவாரத்தில் இயற்கை எழிலுடன் அமைந்துள்ளது. தேனி மாவட்டத்தில் முதன்மைபெற்றுத் திகழும் விவசாயத்துக்கு அடுத்தபடியாக பால் உற்பத்தி முதன்மைத் தொழிலாக விளங்குகின்றது.

தேனி மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் பால் மாடு வளர்த்தலில் ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் ஈடுபட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் துணைப்பதிவாளர், கூட்டுறவு பால்வளத்தின் கீழ் 286 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. தேனி தொழிற்பேட்டை வளாகத்தில் பால் குளிரூட்டும் நிலையம் உள்ளது.

தேனி மாவட்டத்தில் பரவலாக தென்மேற்குப் பருவமழை பெய்யத் தொடங்கியதால் கால்நடைகளுக்கு தீவனத் தட்டுப்பாடு குறைவில்லாமல், பசும்புல் தீவனம் கிடைக்கிறது. இதனால் இம்மாவட்டத்தில் பால் உற்பத்தி படிப்படியாக அதிகரித்துள்ளது.

கடந்த ஏப்ரல், மே மாதங்களில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 71 ஆயிரத்து 222 லிட்டர் பால் தேனி மாவட்டத்தில் உற்பத்தி செய்து, மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கமான ஆவினுக்கு வழங்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்படும் பால் தேனியிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு காலை, மாலை வேளைகளில் டேங்கர் லாரிகள் மூலம் மதுரை ஆவினுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

தமிழகத்தில் பால் உற்பத்தித் தொழிலினை செம்மைப்படுத்தும் பொருட்டு, கிராமங்களில் பால்மாடு வளர்த்தலில் ஈடுபட்டு வருகிற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1.6.2004 அன்று பால் கொள்முதல் விலையினை உயர்த்தி ஆணையிட்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பால் கொள்முதல் விலையினை உயர்த்தி ஆணை யிட்டுள்ளதால், கடந்த மாதங்களில் 1 லிட்டர் பால் ரூ.8.77 காசுக்கு கொள்முதல் செய்தது, தற்போது 1.6.2004–க்குப்பின் 1 லிட்டர் பால் ரூ.9.69 காசுக்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் நாள் ஒன்றுக்கு சராசரியாக 76,771 லிட்டர் பால் தேனி மாவட்டத்தில் உற்பத்தி செய்து மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கமான ஆவினுக்கு வழங்கப் படுகிறது. கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் 55,000 லிட்டராக இருந்த பால் உற்பத்தி தற்போது 76,771 லிட்டராக அதிகரித்துள்ளது. தனியார் பால் கொள்முதல் நிலையங்கள் உற்பத்தி யாளர்களிடம் பாலை கொள்முதல் செய்து பிற மாவட்டங்களுக்கு அனுப்புவதோடு கேரள மாநிலத்திற்கும் அனுப்பி வைக்கின்றன.

தேனி மாவட்டத்தில் ஆயிரக்கணக் கான கறவை மாடுகளை வைத்திருக்கும் பெருவாரியான கிராம மக்கள், குறிப்பாகப் பெண்களின் நலன் இதன் மூலம் காக்கப்படுகின்றது. தேனி மாவட்டத்தில் பால் உற்பத்தி எதிர் பார்த்ததை விட அதிகமாக உற்பத்தியாவதால் அதன் மூலம் கிராமப் பொருளாதாரம் மேம்பாடு அடைவதுடன் தனிநபர் வருமானமும் பொருளாதார ரீதியாக உயர்ந்து வருகின்றது. தேனி மாவட்டத்திலுள்ள ஆயிரக் கணக்கான பால் உற்பத்தியாவதால் பால் கொள்முதல் விலையினை உயர்த்தியமைக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, மனமாரப் பாராட்டி மகிழ்கின்றனர்.

– ச. செல்வராஜ்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி.

ஸ்டான்லி மருத்துவமனையின்
சிறப்பு மிகுந்த செயல்பாடுகள்......

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடந்த மூன்றாண்டுகளில் அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் பல்வேறு துறைகளுக்கு புதிய உபகரணங்கள் வாங்கப்பட்டும், மருத்துவமனை நவீனப்படுத்தப்பட்டும் மக்களுக்கு சிறப்பான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கை அறுவையம், ஆராய்ச்சி, புனரமைப்பு மையம் மற்றும் ஒட்டுறுப்பு அறுவையத்துறை

இம்மருத்துவமனையின் கை சீரமைப்பு மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைப் பிரிவுகள் பழுதடைந்த இரண்டு கட்டடங்களில் செயல்பட்டு வந்தன. அனைத்துப் பிரிவுகளும் ஒரே கட்டடத்தில் செயல்படும் விதமாக, ரூ.5 கோடி செலவில் புதிய கட்டடம் கட்ட முடிவு செய்யப்பட்டு, இதற்காக, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.2.05 கோடியும், ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடனாக ரூ.2.95 கோடியும் பெறப்பட்டு அரசு மருத்துவமனைக் கட்டடங்களின் முன் மாதிரிக் கட்டடமாக உருவாக்கப்பட்டது. இப்புதிய கட்டடம் 27.6.2003 அன்று, மாண்புமிகு சட்டம், தகவல்நுட்பவியல் மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.என். தளவாய் சுந்தரம் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இப்புதிய கட்டடத்தில், 24 மணி நேர கை அவசர சிகிச்சைப் பிரிவு, அவசர அறுவைய அரங்கு, தெரிவு செய்யப்பட்ட அறுவையத்திற்கான அரங்கு (எலக்டிவ் ஆபரேஷன் தியேட்டர்), புறநோயாளர் பகுதி, ஆண்கள் உள்நோயாளர் பகுதி (அறுவையத்திற்கு முன்), ஆண்கள் உள்நோயாளர் பகுதி (அறுவையத்திற்கு பின்), கை காயமுற்றோர் பகுதி, பெண்கள் உள்நோயாளர் பகுதி (அறுவையத்திற்கு முன்), பெண்கள் உள்நோயாளர் பகுதி (அறுவையத்திற்கு பின்), தீவிர சிகிச்சைப் பிரிவு, இயன்முறை சிகிச்சைப் பிரிவு, சிம்பு பொருத்துதல், ஊடுகதிர் பிரிவு, சமூக சேவைப் பிரிவு, நுண்தாள பயிற்சியகம்,மருந்தகம், கணினி மையம், நூலகம், கலை அரங்கம், குளிர்சாதனக் கூடம், சலவையகம் ஆகிய பிரிவுகள் செயல்படுகின்றன.

இப்புதிய கட்டடத்திற்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் மருத்துவ அறுவை சிகிச்சை உபகரணங்கள் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் வாங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. சி.ஆர்ம். என்னும் புதிய உபகரணம் ரூ.6 இலட்சத்தில் மாண்புமிகு சட்டம், தகவல்நுட்பவியல் மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயகுமார் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வாங்கப்பட்டுள்ளது. அறுவைய அரங்கில் நடைபெறும் அறுவையத்தை கலை அரங்கில் நேரடி ஒளிபரப்பு செய்யும் வசதியுள்ளது. இத்துடன் கலை அரங்கில் உள்ளோரும் அறுவைய சிகிச்சை செய்யும் நிபுணரும் உரையாடும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

இம்மையத்திற்கென தனியாக மருந்தகம், சலவையகம் மற்றும் வாரமிருமுறை செயல்பட்ட புறநோயாளர் பிரிவு தினமும் செயல்படுதல் ஆகியவை சிறப்பு சேர்க்கைகள் ஆகும்.

இதுநாள் வரை 2.26 இலட்சத்திற்கும் மேற்பட்ட கை காயமுற்றோரும் 48,000–க்கும் மேற்பட்ட ஒட்டுறுப்பு அறுவையும் தேவைப்பட்டோரும் இம்மையத்தில் சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

புதுடில்லியில் உள்ள தேசிய தேர்வுக் குழுமம், கை அறுவையத்தில் பயிற்சி அளிக்கவும், ஒட்டுறுப்பு அறுவையத்தில் பயிற்சி பெற்றோருக்கு தேர்வு நடத்தவும் இம்மையத்தினை அங்கீகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்டுதோறும் நடக்கும் தேசிய மற்றும் பன்னாட்டு மாநாடுகளில் இம்மையத்தின் சார்பில் சிறப்பான கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு பாராட்டுகளைப் பெற்றுள்ளன. பல தேசிய மற்றும் பன்னாட்டு மாநாடுகள், அறுவையப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதய இயல்துறையின் செயல்பாடுகள்

இதய இயல்துறை 25 ஆண்டுகளாக சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. புறநோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இத்துறையில் நவீன உபகரணங்கள் உள்ளன. அவை, எக்கோ லேப் (Echo), இ.சி.ஜி.லேப் (E.C.G.), டிரெட்மில் டெஸ்ட் (Treadmill Test) புறநோய் பகுதி சிகிச்சை வாரத்தில் 6 நாட்கள் நடைபெறுகின்றன. புதிய நோயாளிகள் வந்த அன்றே எல்லா பரிசோதனைகளும் செய்யப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படுகிறது. உள் நோயாளி பிரிவில் தீவிர சிகிச்சைப் பகுதியில் மொத்தம் 8 படுக்கைகளும் சாதாரண இதய நோய் பிரிவில் மொத்தம் 32 படுக்கைகளும் உள்ளன. கடந்த ஆண்டுகளில் தீவிர சிகிச்சைப் பகுதியில் சென்ட்ரல் மானிட்டரிங் சிஸ்டம் இல்லாமல் இருந்தது. மாரடைப்பு நோயாளிகள் அவசர சிகிச்சைப் பகுதிக்கு (Zero Delay) வந்து உடனடியாக தீவிர சிகிச்சைப் பகுதியில் (I.C.C.U.) உள் நோயாளியாக் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையளிக்கப்படுகிறார்கள். 24 மணி நேரமும் மாரடைப்பு நோயாளிகளின் உயிர் வாயுவின் அளவு பற்றியும், இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு போன்றவற்றைப் பராமரிக்கும் சென்ட்ரல் மானிட்டரிங் சிஸ்டம் மற்றும் பல்ஸ் ஆக்ஸிமீட்டர் அரசால் வழங்கப்பட்டன. பெட்சைட் மானிட்டர் மற்றும் டெம்ப்ரவரி பேஸ்மேக்கர் போன்ற நவீன உபகரணங்கள் மிக நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. இதனால் ஏராளமான நோயாளிகள் பயனடைந்திருக்கிறார்கள்.

இரைப்பை மற்றும் குடல் சார்ந்த சிகிச்சைப் பிரிவு

ஸ்டான்லி மருத்துவமனையில் இரைப்பை–குடல்–கல்லீரல்–கணைய ரத்தக் கசிவுத் தடுப்பு சிறப்புப் பிரிவு தற்போது ஐ.எஸ்.ஓ.9002 தரச் சான்றிதழைப் பெற்று சாதனை படைத்துள்ளது. உலகம் முழுவதும் ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழை வழங்க நான்கு நிறுவனங்கள் உள்ளன. தரச் சான்றிதழ் கோரும் மையங்களின் செயல்பாட்டை முழுமையாகத் திறனாய்வு செய்து ஐ.எஸ்.ஓ. வழங்கப்படுகிறது. சேவை, தரம், நோயாளிகளைக் கவனிப்பதில் மருத்துவர்கள்–செவிலியர்களின் ஈடுபாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஸ்டான்லி இரைப்பை–குடல் பிரிவுக்கு இத்தரச் சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

மாரடைப்பைப் போன்று இரைப்பை–குடல் ரத்தக் கசிவும் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது. பொது வார்டில் இரைப்பை–குடல்–கல்லீரல் ரத்தக்கசிவு உள்ள நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் நிலையில் உயிரிழப்பு 40 சதவிகித அளவுக்கு இருக்கும். ஆனால் இது போன்ற சிறப்புப் பிரிவுகளில் சிகிச்சை அளிப்பதன்

மூலம் உயிரிழப்பை 4 சதவிகித அளவுக்குக் குறைக்க முடிந்துள்ளது.

பெரிய தனியார் மருத்துவமனை செய்யாத சாதனைகளை, ஸ்டான்லியின் இந்தத்துறை செய்திருக்கிறது.

'விப்பில்ஸ்' ஆபரேஷன் இதுவரைக்கும் 170 பேருக்கு இங்கு செய்யப்பட்டுள்ளது.

நோயாளிகளின் நோய்கள் பற்றிய அனைத்து குறிப்புகளும் இங்கு கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்படுகின்றன.

மயக்கவியல் துறை

அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மயக்கவியல் துறை, தமிழகத்திலேயே முதன்முதலாக அனைத்து வசதிகளையும் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறது. இந்தத் தீவிர சிகிச்சைப் பிரிவில் 8 செயற்கை சுவாசக் கருவிகள் மற்றும் குருதி சார்ந்த உயிர் வேதியியல் சோதனைகள் அனைத்தும் 24 மணி நேரமும் செய்யப்படுகின்றன. இந்தத் துறையில் பல்வேறு அவசர சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக மருத்துவர்கள் உள்ளனர். தேவையான மருத்துவ உபகரணங்களும் உள்ளன. இத்துறை இரண்டு தீவிர சிகிச்சைப் பிரிவுகளைப் பராமரித்து வருகிறது. மருத்துவம் சம்பந்தப்பட்ட சிகிச்சைக்கென்று ஒரு பிரிவும், அறுவை சிகிச்சைக்குப் பின் வரும் நோயாளிகளைக் கவனிப்பதற்காக இன்னொரு பிரிவும் உள்ளது.

பல தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற வசதியில்லாதவர்கள் மற்றும் பல்வேறு புறநகர் பகுதிகளிலிருந்தும் இம்மருத்துவமனைக்கு ஏராளமான நோயாளிகள் பரிந்துரைத்து அனுப்பப்படுகிறார்கள்.

இந்தத் தீவிர சிகிச்சைப் பிரிவைத் தவிர, இந்த மயக்கவியல் துறை ஏராளமான அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக நடத்தித் தருகிறது. குறிப்பாக சொல்ல வேண்டுமானால் கல்லீரல் சம்பந்தப்பட்ட அறுவை சிகிச்சை, மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சை, இதயவியல் அறுவை சிகிச்சை, நரம்பியல் அறுவை சிகிச்சை மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை என்று பல துறைகளில் தங்கள் திறமையை வெளிப்படுத்தி வருகிறது. **தமிழகத்திலேயே மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சையில் அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதலிடத்தில் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.**

அண்மையில் இத்துறையின் தீவிர சிகிச்சைப் பிரிவு புதுப்பிக்கப்பட்டு, பல செயற்கை சுவாசக் கருவிகள் மற்றும் நோயாளிகளைக் கண்காணிக்கும் மருத்துவக் கருவிகள் அனைத்தும் உள்ள மிக அதிநவீன தீவிர சிகிச்சை துறையாக உள்ள அனைத்து வசதிகளையும் பெற்ற துறையாக விளங்குகிறது.

– **மரு. டி.ஆர்.குணசேகரன்**, எம்.எஸ்.,
முதல்வர் (பொறுப்பு)
அரசு ஸ்டான்லி மருத்துவமனை
சென்னை

தரிசு தரும் பரிசு : மரப்பயிரும் ஓர் பணப்பயிரே

தமிழ்நாடு தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2003–2004ஆம் ஆண்டில் சுமார் 206 எக்டேர் பரப்பளவில் உள்ள அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்கள் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்துக்கு 30 ஆண்டுகள் குத்தகைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம் டி.இடையப்பட்டி கிராமத்தில் 80 எக்டேர் நிலப்பரப்பு தேர்வு செய்யப்பட்டு 27.10.2003 அன்று கரூர் மாவட்ட ஆட்சித் தலைவருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

திருச்சி மாவட்டம், திருச்சி வட்டம் சூரியூர் கிராமத்தில் 77 எக்டேர் நிலப்பரப்பும், மணப்பாறை வட்டம் லக்கநாயக்கன்பட்டி கிராமத்தில், 33 எக்டேர் நிலப்பரப்பும், முசிறி வட்டம் ஊரக்கரை கிராமத்தில் 26 எக்டேர் நிலப்பரப்பும் தேர்வு செய்யப்பட்டு 18.11.2003 அன்று திருச்சி மாவட்ட ஆட்சியரிடம் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

இந்த 206 எக்டேர் தரிசு நிலங்கள் குறைந்தபட்சம் 8 எக்டேர் முதல் அதிகபட்சமாக 33 எக்டேர் வரை தனித்தனி பகுதிகளாக 18 இடங்களில் அமைந்துள்ளது.

மேற்கண்ட தரிசு நிலங்களில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்துக்குத் தேவையான மரக்கூழ் தயாரிப்பதற்குப் பயன்படும் மரங்களான சவுக்கு (Casuarina), சூபாபுல் (Subabue), சுத்திசவுக்கு (Acacia anriculibermis) முதலிய மரங்களை வளர்ப்பதற்கு உத்தேசித்து நிலமேம்பாட்டுப் பணிகள் 20.11.2003 அன்று தொடங்கப்பட்டது. பல ஆண்டுகளாகப் பயன்பாடு அற்று கிடந்த இத்தகு தரிசு நிலங்களில் வளர்ந்த முட்புதர்களை அகற்றி நில மேம்பாட்டுப் பணிகளான உழவு செய்தல், சமன்படுத்துதல், மண் நீர் அரிமானம் தடுப்பாணை அமைத்தல், வேலி அமைத்தல் மற்றும் நீராதாரம் மேம்பாடு போன்ற பணிகள் மேற்கொண்டு மேற்கூறிய மரக்கூழ் மரங்கள் நடவு செய்ய தயார்படுத்தப்பட்டது.

இதற்குத் தேவையான தரமான நாற்றுகளை நிறுவனமே உற்பத்தி செய்து நடவு செய்து வருகின்றது. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததன் காரணமாக சுமார் 32 எக்டேர் நிலப்பரப்பில் மட்டும் நடவு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 174 எக்டேர் நிலங்களில் நில மேம்பாட்டுப் பணிகளை முடித்து எதிர்வரும் பருவமழைக் காலத்தில் நடவுக்குத் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளது. இதற்காக ரூ.16.34 இலட்சம் காகித ஆலை நிறுவனத்தினால் செலவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் இப்பகுதியைச் சார்ந்த விவசாயக் கூலி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டதுடன் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தையும், மரம் வளர்ப்பின் வழிமுறைகளையும், அறியச் செய்து வேலைவாய்ப்புடன் வருமானம் ஈட்டக்கூடிய வழிகளும் உணர்த்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும்
காகித நிறுவனம்,
கிண்டி, சென்னை–32

10ஆவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் தமிழகத்தில் வறுமையை ஒழிப்போம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

மாண்புமிகு பிரதமர்
டாக்டர் மன்மோகன் சிங் அவர்களே!

மாண்புமிகு மத்திய அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு மாநில முதல்வர்களே!

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச
உயர் அதிகாரிகளே!

'வறுமை ஒழிப்பு மற்றும் கிராமப்புற மேம்பாடு' பற்றி மத்திய அரசின் ஊரக வளர்ச்சித்துறை இம்மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளதைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கிராமப்புற மக்களின் தனிநபர் வருவாயைப் பெருக்குவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் ஒட்டுமொத்த கிராமப்புற வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு வெறும் உரையோடு இல்லாமல் விரிவான செயல் திட்டத்தின் தேவையை உணர்த்துவது இம்மாநாட்டின் குறிக்கோளாகும். இச்செயல் திட்டம் பொருள் இழப்பை மட்டும் கருத்தில் கொள்ளாமல் நெருக்கடியான காலகட்டங்களில் எவ்வாறு அச்சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டும் என்பதை உள்ளடக்கியதாகவும் அமைய வேண்டும். **பேராசிரியர் அமர்த்தியாசென் குறிப்பிடுவதைப் போல, ஒரு மனிதன் தான் மதிக்கின்ற வாழ்க்கையை வாழ்வதற்கு அவன் பெற்றிருக்கின்ற ஆற்றல்களையும், அவன் அனுபவிக்கின்ற சுதந்திர உணர்வுகளையும் பெறுவதற்கு வாய்ப்பாக அதற்கான தடைகளை நீக்குவதே நமது முக்கியக் கடமையாகும். நம்முடைய வறுமை ஒழிப்பு செயல் திட்டம் இத்தகைய மிக ஆழமான புரிதலை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். இந்த செயல் திட்டம், வாய்ப்பளித்தல், அதிகாரப்பகிர்வு,**

சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துதல், சிறந்த நிருவாகம் ஆகிய நான்கு அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டும். இந்த வழிமுறைகளை ஒருங்கிணைத்து செயல் படுத்துவதின் மூலமே உண்மையான கிராமப்புற வளர்ச்சியை எட்டமுடியும்.

நாம் தற்பொழுது முற்றிலும் வித்தியாசமானதும் சிக்கலானதுமான பல்வேறு சூழல்களை எதிர்கொண்டுள்ளோம். தொண்ணூறுகளின் இறுதியில் விவசாய உற்பத்தி மிகவும் சரிவான நிலையை நோக்கிச் செல்லத் தொடங்கியது. 2001ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாகப் பருவமழை பொய்த்ததால் தமிழ்நாடு மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நாட்டிலேயே தனிநபருக்கு தேவைக்கும் குறைவான தண்ணீர் உள்ள மாநிலமாகத் தமிழ்நாடு உள்ள நிலையில் மேலும் மிகக் கடுமையான நீர்ப்பற்றாக் குறையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு மற்றொரு காரணம் காவிரியிலிருந்து சட்டப்படி தமிழ்நாட்டிற்கு உரிய பங்கான தண்ணீரைத் திறந்துவிட கர்நாடகம் மறுத்து வருவதுதான். இது மிகவும் மோசமான எதிர்விளைவுகளைத் தமிழ்நாட்டில் வேளாண்மைத்துறையில் உருவாக்கியதன் தொடர்ச்சியாக கிராமப்புற மேம்பாடு பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. தொடர்ச்சியாகப் பருவமழை பொய்த்ததாலும் 2002–2003ஆம் ஆண்டுகளிலும் இதனைத் தொடர்ந்து 2003–2004ஆம் ஆண்டுகளிலும் ஏற்பட்ட கடும் வறட்சி தமிழ்நாட்டில் கிராமப்புற பொருளாதாரத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது. இக்காரணங்களினால்தான் தமிழ்நாட்டைப் போன்று தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களின் கிராமப்புற மேம்பாட்டிற்கு நாட்டில் ஓடும் மிகப் பெரிய நதிகளை இணைப்பது மட்டுமே சிறந்த வழி என்பதை நான் மிகவும் வலியுறுத்தி முன் வைக்கின்றேன்.

மிக முக்கியமான திட்டமாகிய இத்தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்தை செயல்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு பிரதமர் அவர்கள் விரைந்து மேற்கொள்வார் என்று நான் நம்புகிறேன். இது உண்மையான வளமான கிராமப்புற பொருளாதார வளர்ச்சியை உறுதிப் படுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டிருக்கிறது.

வறுமை குறைப்புக்கு விரைவான பொருளாதார வளர்ச்சி மட்டும் காரணியாக அமைந்துவிட முடியாது எனும் நிலையில் முறையான செயல்திட்டம் என்பது ஆரோக்கியமான பொருளாதார வளர்ச்சியை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். இந்தப் புதிய செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஒரு நிலையான 8 சதவிகித பொருளாதார வளர்ச்சி விகிதத்தை உண்மையில் எட்ட இயலும் என்பதை உறுதிப் படுத்துவதற்கு நாம் முன்னுரிமை அளிக்கவேண்டும்.

நம்முடைய 10ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இலக்கு நாட்டின் ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி 8 சதவிகிதத்தை அடையவேண்டும் என்பதே. இவ்வளர்ச்சி விகிதம் விவசாயத்துறை ஆண்டிற்கு 4 சதவிகிதம் வளர்ச்சியடைய வேண்டியிருப்பதை உள்ளடக்கியதாகும்.

புதிய செயல் திட்டங்கள்

நாட்டில் 62 சதவிகிதம் பேர் விவசாயத்தை நம்பியுள்ள நிலையில் நாட்டின் நிகர மொத்த உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்கு 17 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் உள்ளது. இதற்குக் காரணம் தொடர்ச்சியாக ஏற்பட்ட பருவநிலை மாறுபாடுகளும் மற்றும் வறட்சியுமே முக்கியக் காரணியாகும்.

வறுமை ஒழிப்பை கணிசமான அளவுக்குச் செயல்படுத்தவும், கிராமப்புறப் பொருளாதாரத்தை மறுசீரமைக்கவும் வேளாண்மைத் துறையில் குறிப்பிடத்தக்க சில மாற்றங்களைச் செய்வதுடன் அத்துறையின் வளர்ச்சிக்குப் புதிய உத்வேகத்தை அளிப்பதன் மூலம் வேளாண்மைத் துறையின் வளர்ச்சியை மீண்டும் அதன் பாதையில் கொண்டு வந்து சேர்க்க இயலும். இதன் மூலமாகத்தான் உண்மையான வறுமை ஒழிப்பு மற்றும் கிராமப்புற மேம்பாட்டு இலட்சியங்களை நிறைவேற்ற முடியும். இதற்கு கிராமப்புறப் பகுதிகளில் பல்வேறு புதிய பெரிய திட்டங்களை நாம் செயல்படுத்தியாக வேண்டும்.

விவசாயிகளுக்கு வணிக வங்கிகளில் கடன் வழங்குவதற்கான அறிவிப்பில் மத்திய அரசு அண்மையில் சில மாற்றங்கள் செய்து அறிவித்துள்ளதை நான் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். அதே நேரத்தில் கூட்டுறவு வங்கிகளை மறுசீரமைப்பு செய்து அவற்றை முன்பைவிட சிறப்பாகச் செயல்பட வைப்பதற்கு அதிக அளவு நிதியுதவி தேவைப்படுகிறது.

கூட்டுறவு வங்கிகளை மறுசீரமைப்பு செய்வதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ச்சியான பருவநிலை மாறுபாடு மற்றும் வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயப் பொருளாதாரம் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும்.

அதற்கு ஆரோக்கியமான – திடமான கூட்டுறவு கடன் வழங்கும் முறை இன்றியமையாதது. எனவே கூட்டுறவு நிறுவனங்களின் கடன் வழங்கும் திட்டத்திற்கு ஒருங்கிணைந்த நிதி உதவியைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடு, தண்ணீர்ப் பற்றாக்குறையால் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் காரணமாக கிராமப்புற விவசாய வளர்ச்சி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. வறுமை ஒழிப்பிற்கு முக்கியக் காரணியாக விளங்கும் வேளாண் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாற்றுப்பயிர்த் திட்டம், நீர்வடி மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், தண்ணீர் பயன்பாட்டுத் திறனை ஊக்குவித்தல் மற்றும் அதிகரித்தல், புதியதொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல், சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் விளைச்சலுக்குப் பின்னர் தானியங்களை சேமிப்பது மற்றும் சந்தைப்படுத்துதல், விலை நிர்ணயம் ஆகியவையும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மூலம் விவசாயிகள் தகவல்களைப் பெற வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

வேளாண் சாரா கிராமப்புற விவசாய மேம்பாட்டுப் பணிகளுக்காக 'புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' மற்றும் கூட்டுறவு கடன் வழங்கும் முறைகளும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டங்கள் அதனுடைய பலனை அடைய சில காலம் பிடிக்கும் என்றாலும் கிராமப்புற பொருளாதார மேம்பாடு சரியான பாதையில் சென்று நிச்சயம் பிரகாசிக்கும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

நம்முடைய ஒருங்கிணைந்த விவசாயம் மற்றும் நீர் கொள்கைகளை முழுமையாக மறுபரிசீலனை செய்யாத வரையில் வறுமை ஒழிப்பு மற்றும் கிராமப்புற மேம்பாடு என்பது முற்றுப் பெறாது. எனவே, இப்பிரச்சினையில் ஒருங்கிணைந்த ஒரு பார்வை அவசியமாகும்.

வறுமையை ஒழிக்க நாங்கள் பல்நோக்கு ஒருங்கிணைந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். இதில் உணவுப்பாதுகாப்பு, வேலைக்கு உணவுத்திட்டம், சுயதொழில் வளர்ச்சி, தன்னிறைவு, கிராமப்புற வளர்ச்சிக்குத் தேவையான பாதுகாப்பு முறைகள் ஆகியவை கிராமப்புற மேம்பாட்டிற்கு இன்றியமையாததாக அமைந்துள்ளன. தொடர்ச்சி யான பருவநிலை மாறுபாடு மற்றும் வறட்சி ஆகியவை கிராமப்புற மக்களின் உண்மையான வருமானத்தில் மிகப் பெரிய வீழ்ச்சியை உருவாக்கியுள்ள இந்த நிலையில் இதனைச் செயல்படுத்துவது எளிதான காரியமன்று.

வறுமை ஒழிப்பில் என்னுடைய தலைமை யிலான அரசு மேற்கண்ட திட்டத்தை திறம்பட தமிழ்நாட்டில் செயல்படுத்தியதன் விளைவாக தொடர்ச்சியான பருவநிலை மாறுபாடுகள் மற்றும் வறட்சியால் கிராமப்புற மக்கள் பாதிக்கப்பட்டாலும் அவர்கள் மீண்டெழுவதற்கு இத்திட்டம் காரணமாக அமைந்தது.







பொது விநியோகத் திட்டத்தில் தமிழ்நாடு முதலிடம்.

மத்திய திட்டக்குழு சமீபத்தில் நடத்திய ஆய்வில் நாட்டிலேயே பொதுவிநியோகத் திட்டத்தினை செயல்படுத்துவதில் சிறந்த மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மை இடத்தில் உள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் பொதுவிநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசி ஒரு கிலோ ரூ.3.50க்கு விநியோகிக்கப்படுகிறது. இது நாட்டிலேயே பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் விலையில் மிகவும் குறைந்ததாகும். அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் இந்த மானிய விலையில் வழங்கப்படும் அரிசியைப் பெறுவதற்கு விருப்பத்தின் அடிப்படையில் தகுதியானவர்கள். இதற்காக என்னுடைய தலைமையிலான அரசு மாநில நிதிநிலை அறிக்கையின் மூலம் ஆண்டுக்கு ரூ.775 கோடி அரிசிக்காக ஒதுக்கீடு செய்து வருகிறது. உணவுப் பாதுகாப்புக்காக ஒரு மாநில அரசு இந்த அளவுக்கு மானியம் வழங்குவது நாட்டிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் உள்ளது.

ஊட்டச்சத்து குறைவில்லாத மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றுவது என்பதே எங்களின் இலட்சியம். கடந்த 2003–ஆம் ஆண்டு எனது தலைமையிலான அரசு வறட்சியால் பாதித்த தமிழக கிராமப்புறப் பகுதிகளில் தலா 30 கிலோ அரிசியை இலவசமாக ஒவ்வொரு மாதமும் சுமார் 10 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கியது. மேலும் உணவுப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு வேலைக்கு உணவுத் திட்டத்தை முறைப்படியாக அதே நேரத்தில் சமூக நோக்கோடும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

வறுமை ஒழிப்புத் திட்டத்தை செயல்படுத்துவதில் உறுதியான சம்பளத்துடன் கூடிய வேலைகள் உருவாக்கித் தருவது இன்றியமையாத ஒன்றாகும். இதன் அடிப்படையில் தமிழ்நாடு வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் தமிழகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியையும், உணவு தானியத்தையும் முழுவதுமாக சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் வேலைக்கு உணவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளை முழுமையாகப் பயன்படுத்தியதுடன் மேலும் இத்திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தும் வகையில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம்.

மழைநீர் சேகரிப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள சூழ்நிலையை எதிர்கொள்ளும் வகையில் கடந்த ஆண்டு மாநிலம் முழுவதும் மிகப் பெரிய அளவில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை செயல்படுத்தினேன். இதனை அனைத்து இல்லங்களிலும் காலக்கெடுவுக்குள் மக்களின் ஒத்துழைப்புடன் செய்து முடித்துள்ளோம். பருவமழை பொய்த்தாலும் இந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை செயல்படுத்தியதன் மூலம் தண்ணீர்ப் பற்றாக்குறையை இதன் மூலம் எதிர்கொள்ள முடிந்தது.

நடப்பாண்டில் மழைநீர் சேகரிப்பு முறையை மாநிலத்தில் உள்ள அனைத்து கிராமப்புறப் பகுதிகளிலும் வேளாண்துறையினர் பயனடையும் வகையில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். ஏற்கெனவே வழிவழியாக இருந்துவரும் குடிநீர் ஆதாரங்களை மறுசீரமைப்பு செய்து இத்திட்டத்தை செயல்படுத்துவதில் ஒருங்கிணைத்து நிறைவேற்றி வருகிறோம்.

வேலைக்கு உணவுத் திட்டத்தை மேற்கண்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முழு அளவில் செயல்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். மேலும் மத்திய அரசு தேசிய வேலை உத்தரவாதச் சட்டத்தை நிறைவேற்ற உள்ளது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைவதோடு அதனைப் பாராட்டி வரவேற்கிறேன். இதன் மூலம் தகுதியான நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இதனைச் செயல்படுத்துவதற்கு அதிக அளவில் நிதியும் அரிசியும் வழங்க வேண்டும். இந்த ஒதுக்கீடுகளைச் செய்வதன் மூலம்தான் தேசிய வேலை உத்தரவாதச் சட்டத்தை எந்தவித இடையூறுமின்றி தொடர்ந்து செயல்படுத்திட இயலும்.

சாதனை புரியும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

பெண்கள் தன்னிறைவு அடைவதுடன் நாட்டின் வளர்ச்சித் திட்டங்களில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ள ஏதுவாக கடந்த 1992ஆம் ஆண்டு ‘மகளிர் சுயஉதவிக் குழுக்கள்’ என்ற அமைப்பை நான் தொடங்கி வைத்தேன். இன்று தமிழ்நாட்டில் இது மிகப் பெரிய வளர்ச்சி பெற்ற ஒரு இயக்கமாக உருவெடுத்துள்ளது. தமிழ்நாட்டில் தற்போது 1.66 இலட்சம் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உள்ளன. இவற்றில் 28.23 இலட்சம் பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்த மகளிர் சுயஉதவிக் குழுவினரின் வங்கிச் சேமிப்பு ரூ.469.06 கோடியாகும். மேலும் இக்குழுவினருக்கு வங்கிகளில் இருந்து வழங்கப்பட்ட கடன் அளவு ரூ.726.54 கோடியாகும். சுவர்ண ஜெயந்தி கிராம சுவரோஜ்கார் யோஜனா திட்டம் மகளிர் சுயஉதவிக் குழுவினரின் வளர்ச்சிக்கு உதவுகிறது. மிகப்பெரிய சாதனையை நாம் அடைந்துள்ளபோதிலும், எஸ்ஜிஎஸ்ஒய்–ன் கீழ் மாநில அரசுகளுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு குறைந்து வருகிறது. எனவே தற்போதுள்ள முறையை மாற்றியமைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இத்திட்டத்துக்காக ஒதுக்கப்படும் ஒதுக்கீட்டுத் தொகையை கணிசமான அளவில் உயர்த்துவதன் மூலமே இத்திட்டத்தை விரைவாக சிறப்பாக செயல்படுத்த இயலும் என்று நான் கருதுகிறேன்.

மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு வணிக வங்கிகள், கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் அதிக அளவில் கடன் வழங்குவதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளை மிகப் பெரிய அளவில் மேம்படுத்த முடியும். குறுகிய காலக் கடன் வழங்கும் அமைப்புகளை எந்த அளவுக்கு மேம்படுத்த முடியும் என்பதை ஆராய்ந்து அவற்றின் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்குப் புதிதாக ஒரு செயலாக்கக் குழுவை நியமனம் செய்து அதன் மூலம் ஆய்வு மேற்கொண்டு இதனை மேம்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மகளிர் சுயஉதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும்

வழிமுறைகளையும் பரிசீலிக்க வேண்டும். திறமையை அதிகரித்தல், புதிய தயாரிப்பு யோசனைகள், சந்தை வசதிகள் உட்பட பல திட்டங்களை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தி உள்ளோம். எஸ்ஜிஎஸ்ஒய்–ன் கீழ் இதுபோன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். அதன்மூலம் எங்களுடைய இலக்கை எட்டி வருகிறோம். மேலும், இதுபோன்ற திட்டங்களை மனதாரப் பாராட்டி வரவேற்கிறோம். இது போன்ற இன்னும் பல திட்டங்களை நடப்பாண்டில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் சில முக்கியப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து தற்போது சில கருத்துகளை உங்கள் முன் எடுத்து வைக்க விழைகிறேன்.

தரிசுநில மேம்பாட்டுத் திட்டம்

வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில், நீர் வடிநில மேலாண்மைத் திட்டம் முக்கிய அம்சமாகும். இதனைச் செயல்படுத்துவதில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி இத்திட்டத்தின் மூலம் நாம் எதிர்பார்க்கும் பலன்களை அடையும் வகையில் செயல்படுத்திட வேண்டும். ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும் பகுதிகளில் முக்கியமானது.

இப்பகுதிகளில் அதிக அளவு அக்கறை செலுத்த வேண்டும். இதனைச் செயல்படுத்தும் விதமாக நாங்கள் மாநிலம் தழுவிய அளவில் ஒருங்கிணைந்த நீர் வடிநில மேலாண்மை மற்றும் தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். இதன் மூலம் விவசாயத்திற்கு ஏற்ற அதே நேரத்தில் தரிசாகப் போடப்பட்டுள்ள நிலங்களை மேம்படுத்தி பயன்படுத்துவதற்கு ஏற் நிலங்களாக மேற்கூறிய திட்டத்தின் மூல சீரமைத்து வருகிறோம்.

இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே 1.19 இலட்ச ஏக்கர் நிலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன நடப்பு 2004–05ஆம் நிதியாண்டில் கூடுதலாக 1. இலட்சம் ஏக்கர் நிலத்தை இத்திட்டத்தின் கீ சேர்த்துக் கொள்ள உறுதிபூண்டுள்ளோம் இத்திட்டத்தின் கீழ் தோட்டக்கலை மற்றும் ம வகைகள் மேம்படுத்தப்படும். கடுமையான வறட்சி காலங்களில்கூட எங்களுடைய இலக்கை எட்டியுள்ளோம்.

தற்போது பருவமழை வழக்கமான அள பெய்யும் சூழ்நிலை உள்ளதால் எங்களுடைய முயற்சியை மேலும் அதிகரித்துள்ளோம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்து இலக்கை எட்டுவதுடன் விரைவான செயல்பாடுகள் மூலம் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதற்குத் தேவையான ஆலோசனைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

பல்வேறு வகையான திட்டங்கள், பல்வேறு வகையான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து ஒரே குடையின் கீழ் கொணர்ந்து செயல் படுத்துவதன் மூலம் விரைவான வளர்ச்சியை உருவாக்க முடியும். இதனைச் செயல்படுத்தும் போது உள்ளூர் காலச் சூழ்நிலைகளையும் மற்ற அம்சங்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

கிராமப்புற வசதிகள் விரிவாக்கம்

கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாடு வசதிகள் கிராமப்புற வாழ்க்கை முறைக்கு இன்றியமையாத ஒன்றாகும். தரமான மேம்படுத்தப்பட்ட கிராம



வாழ்க்கையைப் பெற கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாடு இன்றியமையாததாகிறது. 'பிரதம மந்திரி கிராம் சடக் யோஜனா திட்டம்' (Prime Minister's Gram Sadak Yojana Programme) கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளில் மிகப் பெரிய அளவில் மாற்றத்தை உருவாக்கியுள்ளது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்தப்படுவதற்கு தற்போது முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் நடப்பாண்டில் மேலும் அதிகரிக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

தற்போதைய சூழ்நிலையில் இச்சாலைகளை ஒருங்கிணைத்து மேம்படுத்த வேண்டும். அதன் மூலம் உண்மையான கிராமப்புற மேம்பாட்டினை நம்மால் கொணர இயலும். கிராமப்புற சாலைத் திட்டங்கள் விரிவுபடுத்தப்படுவதன் மூலம் கிராமப்புறப் பகுதிகளில் வாழ்பவர்களின் வசதிகள் மிகப் பெரிய அளவில் மேம்பாடு அடைய உதவியாக இருக்கும். நடப்பு 2004–2005ஆம் நிதியாண்டில் இதனை சிறப்பான வகையில் செயல்படுத்துவதற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறப் பகுதிகளின் செயல்பாடுகளில் மற்றொரு முக்கிய அம்சம், தரமான வாழ்க்கையை உருவாக்கிக் கொடுப்பது மட்டுமல்லாது உற்பத்தி சார்ந்த வேலை வாய்ப்பையும் உருவாக்கித் தருவது. கிராமப்புற வீடு கட்டும் திட்டம், 'இந்திரா ஆவாஸ் யோஜனா' (ஐஏஒய்) திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 15 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் துரதிஷ்டவசமாக வீடு பற்றாக்குறை ஒருபுறம் அதிக அளவில் உள்ளது. 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் 29.34 இலட்சம் குடிசைகள் உள்ளன. இது மொத்த இல்லங்களில் 35.5 சதவிகிதமாகும். இந்த கொள்கை முடிவின்படி இத்திட்டத்தின் மூலம் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற உண்மை தெரிய வருகிறது. எனவே, இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய நிதிநிலை அறிக்கையிலிருந்து ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடு இதனைச் செயல்படுத்துவதற்குப் போதுமானதாக இல்லை. கிராமப்புறங்களில் உள்ளவர்கள் வீடு கட்டுவதற்குத் தேவையான கடன்களை வணிக வங்கிகள் செய்துதர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வங்கிகளுக்கும் பயனாளிகளுக்கும் இதுவரை முறையான தொடர்பை உருவாக்கிக் கொடுக்கும் இடைநிலை ஊழியர்கள் இல்லாமல் இருந்தது இத்திட்டங்கள் இதுவரை செயல்படுத்த முடியாமல் போனதற்கு ஒரு காரணமாகும். இன்னும் நீண்ட நாட்களுக்கு இதையே காரணமாகச் சொல்ல முடியாது.

தற்போது சுயஉதவிக் குழு இயக்கம் நாடு முழுவதும் கணிசமான அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த சுயஉதவிக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களை மற்றும் கூட்டமைப்பினரை வங்கிகள் மற்றும் பொது நிதி நிறுவனங்கள் இடைநிலை ஊழியர்களாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். கிராமப்புற வீட்டுவசதி மேம்பாட்டுப் பணிகளை சிறப்பாக நடைமுறைப்படுத்துவது குறித்து விரிவான அளவில் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள ஓர் செயலாக்கக் குழுவை நியமனம் செய்து அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் போன்று தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களில் கிராமப்புறப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குவது மிகவும் சிக்கலான பணியாக உள்ளது. இதில் முக்கியமான பிரச்சினை தண்ணீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கும் பட்சத்தில் அவை தரமான குடிநீராக இருக்க வேண்டியது முக்கியமான அம்சமாகும்.

குடிநீர்ப் பற்றாக்குறை மிகவும் மோசமான நிலையை எட்டியுள்ளது. அதே நேரத்தில் நிலத்தடி நீர்மட்டமும் மிகவும் அபாயகர நிலைக்குச் சென்றுள்ளது. ஏற்கெனவே தேவையான அளவு குடிநீர் பெற்றுவந்த பயனாளிகளும் தற்போது பகுதிநேரம் குடிநீர் பெறும் பிரிவுக்கு மாற்றப்பட வேண்டிய அளவிற்குக் குடிநீர்ப் பற்றாக்குறை உருவாகியுள்ளது. மேலும் இன்னும் ஒரு சில பிரிவினர் குடிநீரே கிடைக்காத நிலையில் உள்ளனர். இந்தச் சூழ்நிலை புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

—

கிராமப்புறங்களில் குடிநீர்த் திட்டம்

தமிழ்நாட்டில் இது குறித்து ஏற்கெனவே எடுக்கப்பட்ட ஆய்வில் கூறப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் 66,631 குடியிருப்புப் பகுதிகள் முழுவதும் குடிநீர் வசதி பெற்றுள்ளதாகக்



கூறப்பட்டுள்ளது. நாங்கள் ஏற்கெனவே மேற்கண்ட தகவல்கள் தவறு என்று தெளிவுபடுத்தியுள்ளோம். தமிழகத்தில் உள்ள 81,787 குடியிருப்புப் பகுதிகளில் 29,067 குடியிருப்புகள்தான் குடிநீர் இணைப்பைப் பெற்றுள்ளன. 11,790 குடியிருப்புகள் இன்னும் குடிநீர் இணைப்பைப் பெறவில்லை. 40,930 குடியிருப்புகள் பகுதிநேர குடிநீர் இணைப்புப் பெற்றுள்ளன. மேற்கண்ட தகவல்கள் 2003 ஏப்ரல் முதல் தேதி திட்டக்குழு அறிக்கையின்படி எடுக்கப்பட்ட தகவல்களாகும். எனவே எப்போதோ எடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் செயல்படாமல் தற்போதுள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ற வகையில் திட்டங்களை திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும். தற்போது கிடைக்கும் நீர் ஆதாரமும் மற்றும் தேவையான நீர் அளவும் நேர் எதிராக உள்ளது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

கிராமப்புறங்களில் குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்த தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது. நாடு முழுவதும் குடிநீர் வழங்கும் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திய அளவில் 26 சதவிகிதம் தமிழகத்தில்தான் நிறைவேற்றப்பட்டுள்ளது. கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையை தமிழகம் சந்தித்து வந்துள்ள நிலையிலும் இந்தப் புதிய பிரச்சினையை என்னுடைய தலைமையிலான அரசு எதிர்கொள்ளும் விதமாக தொடர்ச்சியாக கிராமப்புற குடிநீர் வழங்கலில் முக்கிய கவனம் செலுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் திட்டங்களை விரைவில் செயல்படுத்த உள்ளோம். இதற்கான ஒப்புதல் உலக வங்கியின் இறுதிக்கட்ட பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாடு இயற்கையாகவே கடுமையான நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலமாக உள்ளது. இதனைச் சீரமைத்து தன்னிறைவு அடையத் தேவையான வழி முறைகளை எட்டுவதுதான் எங்களுடைய நோக்கமாக உள்ளது. இதனைச் செயல் படுத்துவதற்கும், நீர்ப் பற்றாக்குறையைச் சமாளித்து தன்னிறைவு அடைவதற்கும் தமிழக அரசின் இந்த மிகப் பெரிய முயற்சிக்கு பிரதமர் முழு உதவி அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் 2004–2005ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் 'சுவஜல்தாரா' திட்டத்தின்கீழ் தமிழக அரசுக்கு ஒதுக்கிய ரூ.211.50 கோடியில் வெறும் ரூ.8.89 கோடிதான் இதுவரை தரப் பட்டுள்ளது. நாங்கள் ஏற்கெனவே ஊரகக் குடிநீர் திட்டங்களுக்காக ரூ.50 கோடி அளவுக்குப் புதிய திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். இதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு உடனடியாக ஒதுக்கீடு செய்து நிதி வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

சுகாதாரம் பேண கழிப்பறை வசதிகள்

கிராமப்புறப் பகுதிகளில் தரமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையிலும் மற்றும் தரமான வாழ்வியல் வசதிகளை மேம்படுத்தவும் சுத்தமான சுகாதாரமான கழிவுமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதில் நான் மிகுந்த அக்கறை எடுத்து வருகிறேன். இதனையொட்டி மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் முழுமையான அளவில் கழிப்பறைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாநிலம் தழுவிய மிகப் பெரிய செயல் திட்டமாகும்.

இதன் ஒரு பகுதியாக பெண்களுக்காக மாநிலத்தில் உள்ள அனைத்து பஞ்சாயத்துக்களிலும் சமுதாயக் கழிப்பறைகளை என்னுடைய தலைமையிலான அரசு கட்டிக் கொடுத்துள்ளது. ரூ.191.78 கோடி செலவில் 9,241 கழிப்பறைகள் இதுவரை மாநிலம் முழுவதும் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன. இவை முறையாகச் செயல்படவும், பராமரிக்கப்படவும் இவற்றை சுயஉதவிக் குழுக்கள் மூலம் நிருவகித்து வருகிறோம். இந்த சமுதாய கழிப்பறைத் திட்டம் மிகக் குறைந்த செலவில் கிராமப்புற தூய்மை மற்றும் சுகாதாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

கழிப்பறை வசதிகள் பெற்றவர்களின் எண்ணிக்கை கடந்த 2002ஆம் ஆண்டு 15 சதவிகிதமாக இருந்தது. தற்போது 40 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. அனைவருக்கும் கழிப்பறை வசதியை வரும் 2006க்குள் உருவாக்கித் தர வேண்டும் என்பது எங்கள் இலட்சியமாகும். 2006க்குள் அனைத்துப் பள்ளிகளுக்கும் அங்கன்வாடிகளுக்கும் கழிப்பறை வசதி செய்துகொடுக்க உறுதிபூண்டுள்ளோம். அதுபோல சுத்தமான கிராமங்களுக்கு ரூ.5 இலட்சம் மதிப்பிலான 'தூய்மையான கிராமம்' விருது வழங்க உத்தரவிட்டுள்ளேன். இதன் மூலம் கிராமப் பஞ்சாயத்துக்கள் தனிப்பட்ட மற்றும் பொதுவான கழிப்பறை திட்டங்களைச் செயல்படுத்துவதில் தீவிர ஆர்வம் காட்டும். மாநிலம் முழுவதும் அனைவருக்கும் கழிப்பறை வசதிகள் கிடைக்கவேண்டும் என்ற இலட்சியத்தில் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறோம். இதனை விரைவாக சிறப்பாக செயல்படுத்தத் தேவையான நிதியுதவியை இத்திட்டத்துக்கு வழங்க வேண்டும் என்று மத்திய அரசை இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்று எரிசக்தி

கிராமப்புறப் பகுதிகளில் பயன்படுத்தப்படும் எரிசக்திப் பயன்பாட்டை அந்தப் பகுதிகளில் கிடைக்கும் பொருட்களில் இருந்து மாற்று எரிசக்தி தயாரிப்பதற்கும் அவற்றை தரம் உயர்த்துவதற்கும் குறிப்பாக மரபுசாரா எரிசக்தியை உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு நான் தனிப்பட்ட வகையில் முன்னுரிமை அளிக்க விரும்புகிறேன்.

இதன் தொடர்ச்சியாக தாவர வாயு சார்ந்த கழிப்பறைகள், சூரிய ஒளி தெருவிளக்குகள் மற்றும் தண்ணீர்ப் பம்புகள், சாண எரிவாயு அடுப்புகள், கிராம நீர் சுத்திகரிப்பு மையங்களுக்கு காற்றாலைகள் மூலம் மின்சக்தி வழங்கவும், பஞ்சாயத்துக் களுக்குத் தேவைப்படும் மின் உபயோகத்துக்கு காற்றாலைகளைப் பயன்படுத்துவது, சாலைகள் அமைப்பதற்கு பழைய பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவது ஆகிய திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறோம்.

கிராமப்புற மாசுக்கட்டுப்பாட்டை பாதுகாக்கும் விதத்தில் கிராமப்புறங்களில் மாற்று மின்சக்தியைப் பயன்படுத்துவதற்கு மரபுசாரா எரிசக்தித் துறையில் அதிக அளவு முதலீடு செய்வதன் மூலம் மின்சக்தி உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதுடன் கிராமப்புற மாசுக்கட்டுப்பாட்டை செயல்படுத்த இயலும்.

—

தமிழ்நாட்டில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மூலம் ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மரபுசாரா எரிசக்தியைப் பயன்படுத்தி கிராமங்களின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறோம். கிராமப்புறங்கள் எரிசக்தித் தேவையில் தன்னிறைவு அடைய எரிசக்தித் தேவைக்கு மாற்று வழிமுறைகளை இனம் கண்டு

சிறப்பாக மிகப்பெரிய அளவில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்த முன்னோடித் திட்டத்துக்குத் தேவையான அதிக அளவு நிதியை ஒதுக்கீடு செய்து மத்திய அரசு ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயல் படுத்துவதில் முதன்மையானது நல்ல நிருவாகம். கிராமப்புற வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பலன்தரும் பல்வேறு திட்டங்களை வகுத்து அவற்றைத் திறம்படச் செயல்படுத்துவதன் மூலம் உண்மையான இலக்கை எட்ட இயலும். இதனை எங்கள் அரசு உறுதியாக முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

மாநில அரசுகளை வளர்ச்சித் திட்டங்களில் சரிநிகர் சமானமான அளவுக்கு பங்காளிகளாக பயன்படுத்துவதில் மத்திய அரசு தயக்கம் காட்டுவது ஏன் ? இதன் மூலம் உள்ளாட்சி நிருவாகங்களை நிருவகிப்பதில் மத்திய அரசு முதன்மையான தாகவும், மாநில அரசுகள் அதில் பங்களிப்பின்றி விடுபடவும் இது வழிவகை செய்கிறது.

மாநில அரசுகளை புறந்தள்ளக்கூடாது

பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் மாநில அரசு அவர்களுடன் பின்னிப் பிணைந்துள்ளது. இதுபோன்ற நடைமுறைகளைச் செயலாக்க நினைப்பதன் மூலம் மாநில அரசுகளை மக்களிடம் இருந்து தனிமைப்படுத்த நினைப்பது மாநில அரசைக் குறைத்து மதிப்பிடுவதாகும். மாநில அரசுகள் ஒருங்கிணைந்து தங்களுக்குள்ளேயே முடிவெடுத்து மக்களுக்கு நியாயமான நல்ல நிருவாக நடைமுறைகளை வழங்க வேண்டும் என்ற உறுதியுடன் செயல்பட்டு வருவதன் விளைவாகத் தான் மக்கள், அரசின் நலத்திட்டங்களை உண்மையிலேயே முழுவதுமாகப் பெற்று வருகிறார்கள். இதுபோன்ற நடவடிக்கைகள் மற்றும் எண்ணங்கள் உண்மையிலேயே நம் அரசியலமைப்பின் அடிப்படையையே அசைத்துப் பார்க்கக்கூடிய நிகழ்வாக அமைந்துவிடும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் உள்ளாட்சி நிருவாக அதிகாரப் மாநிலங்கள் பட்டியலிலேயே இடம்பெற வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியிருக் கிறார்கள். அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 9 மற்றும் 9ஏ ஆகியவை உள்ளாட்சி அமைப்புகளை சீரமைப்பதற்கான கொள்கைகள் குறித்து புதிய வழிகாட்டு நெறிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்துவதனால் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் உருவாகும். இதனை செயல்படுத்துவதற்கு முன்பு விரிவான அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேநேரத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் போது மாநில அரசுகளை புறந்தள்ளிவிட்டு மத்திய அரசு நேரிடையாக உள்ளாட்சி அமைப்புகளை நிருவகிக்கும் முறையில் செயல்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

மாநில அரசுகளின் அதிகாரத்தை குறைக்கும் முயற்சி

இந்த நேரத்தில் உங்கள் அனைவருடைய கவனத்தையும் ஈர்க்க விழைகிறேன். கடந்த 2002ஆம் ஆண்டு அக்டோபர் 18ஆம் தேதி அப்போதைய பிரதமர் தலைமையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மாநிலங்களில் நிதிநிலைப் பற்றிய விவாதத்தில் தெரிவிக்கப்பட்ட

கருத்துகளைப்பற்றி இப்போது தங்கள் அனைவருடைய கவனத்துக்கும் கொண்டுவர விழைகிறேன். அந்தக் கூட்டத்தில் மத்திய அரசின் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை மாநில அரசுகள் மூலம்தான் வழங்கப்பட வேண்டும், மத்திய அரசு நேரடியாக வழங்கக்கூடாது என்று ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது. அந்த நிபந்தனையின்படி மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் தொகையானது மாநில அரசின் கடைசி பயனாளிகளுக்கு 3 வார கால அவகாசத்துக்குள் கொடுத்துவிட வேண்டும். மேலும் அதுகுறித்த விவரங்களை மத்திய அரசின் நிருவாகத்துறைக்கு தகவல் அனுப்ப வேண்டும். மத்திய அரசின் நிதி அமைச்சகம் இதுகுறித்து கடந்த 2003 ஜனவரி 13ஆம் தேதி ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டது.

தற்போது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ள ஆய்வில் மத்திய அரசு அட்டவணை 12இன் கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்படும் நிதியை நேரடியாக வழங்குவதற்கு முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. இந்த முடிவு முற்றிலும் ஜனநாயக முறைகளுக்கும் மற்றும் அரசியலமைப்புச் சாசனத்திற்கும் எதிரானது; மறுக்கத்தக்கது. மாநில அரசுகளின் அதிகாரத்தைக் குறைக்க எடுக்கும் முயற்சியாகவும் இது உள்ளது.

உள்ளாட்சிகளுக்கு உரியநிதி

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குறித்த நேரத்தில் நிதியை ஒதுக்குவதில் பெரும் சாதனையை நிகழ்த்தியுள்ளது. மத்திய அரசு தேவையான நிதியை வழங்கும் என்று எதிர்பார்த்தே இந்த நிதியை மாநில அரசு வழங்கி வந்துள்ளது. எனவே இதில் மத்திய அரசு நேரடியாகத் தலையிட வேண்டிய அவசியம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

அரசியலமைப்பு சாசனம் பிரிவு 9 மற்றும் 9ஏ-யில் கூறியுள்ளதற்கு ஏற்ப அதற்கு மதிப்பளிக்கும் விதமாக தமிழ்நாட்டில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தின் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் 1,17,000 பேரும் அரசின் திட்டங்களை சிறப்பான முறையில் நடைமுறைப் படுத்தி உறுதிபூண்டு உளப்பூர்வமாகப் பணியாற்றி வருகின்றனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இங்குள்ள நடைமுறையில் இரண்டு அடுக்கு பஞ்சாயத்து முறையே சிறந்தது. நாட்டிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான், நிருவாகிகளுக்கு உரிய அதிகாரங்களை முறைப்படி பயன்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது. இது மிகவும் முக்கியமான அம்சமாகும். கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் அவர்களுக்குரிய அதிகாரங்களுடன் செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. தேவையான நிதியை பயன்படுத்துகின்ற அதிகாரத்தை பஞ்சாயத்து தலைவர்கள் பெற்றிருப்பதன் வாயிலாக அதிகாரப் பகிர்வு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள், சுயநிருவாகம் ஆகியவற்றுக்கான கொள்கைகள் அதில் கூறியுள்ளதைப் போன்றே சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் பஞ்சாயத்துத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தங்கள் பணிகளை செவ்வனே திறம்பட செய்யும் வகையில் அவர்களின் தகுதிகளை மேம்படுத்தும் பயிற்சி முகாம் மிகப் பெரிய அளவில் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப் பட்டுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் சுயஉதவிக் குழுக்கள் அமைப்புகளின் பணிகள் கிராமப் பஞ்சாயத்து செயல்பாடுகளில் ஒரு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது. சுயஉதவிக் குழுவைச் சார்ந்த உறுப்பினர்கள் கிராமசபைக் கூட்டங்களில் அதிக அளவில் பங்கேற்பதோடு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகின்றனர்.

மேலும், இந்த சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் கிராமசபைத் தலைவர்களாகவும், வார்டு உறுப்பினர் களாகவும், கிராமப் பஞ்சாயத்துக்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த முறை உண்மையிலேயே எங்களுடைய வறுமை ஒழிப்புத் திட்ட முயற்சிகளுக்கு மிகப் பெரிய பலமாக உள்ளது.

கிராமப்புற மக்களின் தரமான வாழ்க்கைக்கு உதவி

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இரண்டுமுறை நிதிக்குழு அமைக்கப்பட்டு அதனுடைய பரிந்துரைகள் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலாக நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமசபைக் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் என்பதில் நான் தனிப்பட்ட முறையில் அதிக அக்கறை எடுத்து வருகிறேன். தற்போது கிராமப் பஞ்சாயத்துக்களில் கிராம வளர்ச்சி

தொடர்பாக குழுக்களை மறுசீரமைப்பு செய்து வருகிறோம்.

அரசின் செயல்பாடுகள் மற்றும் நிதிப் பகிர்வு ஆகியவற்றில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அளவு பங்களிப்பு அளிக்க வேண்டும் என்பது குறித்து அரசியல் கட்சிகள் இந்த நேரத்தில் ஒருமித்த முடிவு எடுக்க வேண்டும் என்பது இன்றியமையாத ஒரு முக்கிய அம்சமாக உள்ளது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு மரபுவழித் திட்டங்கள் அவசியம் என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். அதேநேரத்தில் ஏழை எளிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஏற்ற வகையிலும் அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையிலும் அவற்றைச் செயல்படுத்துகின்ற நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகள் ஆகியவை மாற்றியமைக்கப்பட வேண்டும். கிராமப்புறங்களில் வாழும் மக்களின் பயம், இயலாமை, நம்பிக்கை, விருப்பம், அவர்களுடைய எண்ணங்கள், அவர்களுடைய சுயமரியாதை ஆகியவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நல்ல நிருவாகத்தை வழங்குவதன் மூலம் கிராமப்புறங்களில் வாழும் மக்கள் தரமான வாழ்க்கையை நடத்துவதற்கு உதவியாக இருக்கும்.

வறுமை ஒழிப்புத் திட்டங்களை நிறைவேற்று வதில் எக்காரணத்தைக் கொண்டும் அரசியலை நாம் கலக்கக்கூடாது. வறுமை ஒழிப்புத் திட்டங்களை செயல்படுத்துவதில் உருவாகும் புதிய பிரச்சினைகளை எல்லோரும் ஒரே சிந்தனையுடன் எதிர்கொள்ள உறுதிபூணவேண்டும். வறுமை ஒழிப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்குத் தேவையான மேம்படுத்தப்பட்ட தரமான திட்டங்களை வரையறை செய்வதுடன் நல்ல நிருவாகத்தை அளிப்பதற்குத் தேவையான ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை கலந்தாய்வு செய்து இம்மாநாட்டில் நல்ல செயல்திட்டம் உருவாக்கப்படும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

நாட்டிலேயே வறுமை ஒழிப்பு தொடர்பான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழக அரசு நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றுள்ளது என்பதை இந்த நேரத்தில் பெருமிதத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வறுமை ஒழிப்புக்கு புதிய திட்டங்களை மேலும் திறமையாக செயல் படுத்துவோம். ஏற்கெனவே செயல்பட்டு வரும் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவ தோடல்லாமல் 10ஆவது ஐந்தாண்டு திட்ட காலத்துக்கு முன்பாகவே வறுமை ஒழிப்பை நிறைவேற்றி தமிழக அரசு இலக்கை எட்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(புதுடெல்லியில் 29-6-2004 அன்று கிராமப்புற வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு குறித்து நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சார்பில் வழங்கப்பட்ட உரை.)

மாநகரம்

பிரேமேந்திர மித்ர

மனிதனின் ஆன்மாவிலிருந்து எழும் பிரார்த் தனையைப் போல் அந்த மாநகரின் வானளாவிய கட்டடங்கள், நட்சத்திரங்கள் ஜொலிக்கும் விண் முகடுகளை எட்டி நிற்கின்றன.

நீல வானக் கூரையின் கீழே இந்தப் பூமிப்பரப்பில் ஒரு புண்ணைப் போல, அது பரந்து விரிந்து கிடக்கிறது.

வாருங்கள், நாம் அந்த நகரத்திற்குப் போவோம். அம்மாநகரின் சந்துகள், சாலைகள், தெருக்கள், குடியிருப்புப் பகுதிகளில் நடப்போம்.

இந்நகரின் சந்துகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை நீரோட்டத்தைப் போலவே, சில வழிகள் வளைந்து உருக்குலைந்து தென்படுகின்றன. சில பாதைகள் க்ஷீணித்துப் போயிருந்தன. மனித இதயத்தில் உதிக்கும் கொடிய எண்ணங்களைப் போலவே சில இருளடைந்து பயங்கரமாகத் தோற்றமளிக்கின்றன. மனிதனின் நுண்ணறிவு, வாழ்க்கை மீது கொண்ட அளவிடற்கரிய

பாதைகள் க்ஷீணித்துப் போயிருந்தன. மனித இதயத்தில் உதிக்கும் கொடிய எண்ணங்களைப் போலவே சில இருளடைந்து பயங்கரமாகத் தோற்றமளிக்கின்றன. மனிதனின் நுண்ணறிவு, வாழ்க்கை மீது கொண்ட அளவிடற்கரிய ஆர்வம் போல சில தெருக்கள் அகன்றும் ஒளிபொருந்தியும் திகழ்கின்றன.

ஆச்சரியமும் அச்சுறுத்தலும் ஏற்படுத்தும் ஓசைகள் நிறைந்த இந்த மாநகரத்தைக் கருவாக வைத்து ஒருவர் இசையமைத்தால் எப்படியிருக்கும்? அந்த இசையில், இயந்திரங்களின் இரைச்சல், பெரும் புகைபோக்கிகளைக் கொண்ட ஆலைகளிலிருந்து வெளிவரும் இனிமையற்ற சங்கொலி, கணக்கற்ற சக்கரங்களின் சுழற்சியோசை, சங்கிலிகள், கம்பிவடங்களின் கணீரென்ற சப்தம். உலோகங்கள் ஒன்றுடனொன்று மோதும் ஒலி ஆகியவை இடம் பெற வேண்டும். இந்த மாநகரின் மத்தியில் ஓடும் நதியைப் போல், பாம்பு ஊர்வது போன்று வளைந்து நெளிந்து அங்குமிங்கும் நகரும் நீர்த்தாரைகளின் சலசலப்பு. நிழல் சூழ்ந்த குடியிருப்புப் பகுதிகளில் விசையுடன் வீசும் காற்றின் ஓசை, அந்தரங்க அறைகளில் கேட்கும் காதலர்களின் மெல்லிய முனகலொலி ஆகியனவும் அந்த இசையில் கலந்திருக்க வேண்டும்.

சீறிப் பாய்ந்து வரும் வெள்ளத்தைப் போன்று அணிவகுத்து நடக்கும் வீரர்களின் காலடியோசை அவ்விசையில் பரவியிருக்க வேண்டும். தெரியாத இலக்கைத் தேடிப் புறப்பட்டு, வழி தடுமாறிப் பின்னிரவில் தெருவில் தளர்ந்து நடந்துவரும் வழிப்போக்கர்களின் காலடிச் சப்தமும் அந்த இசையில் ஒலிக்க வேண்டும்.

செங்கல், சுண்ணாம்பு, இரும்பு, உருக்கு ஆகியவற்றிலான இருப்பிடங்களில் வசிக்கும் இலட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கையை ஊடும் பாவுமாகக் கொண்டு இந்த மாநகரம் ஒரு பெரிய திரைச் சீலையை நெய்கிறது. நூலின் ஆரம்ப நுனி கண்டேபிடிக்க முடியாமல் எங்கோ காணாமல் போய்விட்டது. புதிய நூலிழைகள் ஒரு அவசர கதியில் இணைந்து அவசரமாக அறுந்து போகின்றன. அந்த இசைக் கோவையில், புரிந்துகொள்ள இயலாத பரந்த மானிட வாழ்வின் இந்தப் பின்னலுக்கும் இசைவடிவம் கொடுத்து இணைத்துவிட வேண்டும்.

ஆனால், இந்த எண்ணங்களுக்கெல்லாம் இசை வடிவம் கொடுக்கும் திறன் எனக்கு இல்லை. என்னால் அப்படிப் பாசாங்கு செய்ய முடியாது. இந்தப் பெரிய நகரத்தின் கதையின் ஒரு சிறு பகுதியை மட்டுமே என்னால் சொல்ல இயலும். அதுவும், பெரிய சமுத்திரத்தில் ஓரிரு அலைகளைப் போல இந்த நகரின் கதையில் ஒரு துளியை மட்டும்.

அன்னிய நாட்டிற்குள் திருட்டுத்தனமாகத் தயங்கித் தயங்கி நுழையும் ஊடுருவல்காரனைப் போல, தயக்கமான நீரோட்டத்துடன் அந்த மாநகருக்குள் ஊடுருவிச் செல்லும் நதியின் ஒரு கிளையில் படகுச் சவாரி செய்யலாம் வாருங்கள். அந்தக் கிளை நதி அவ்வளவு ஆழமில்லாதது. அப்படியே போனாகட்டிற்குச் செல்வோம். நரைல் பாலத்தின் கீழே காலங்காலமாக இருந்துவரும் போனாகட், சிறு மீன்களுக்குப் பிரசித்தி பெற்ற இடம். பூத்துக் குலுங்கி நிற்கும் கடம்ப மரத்தைக் கொண்டு அவ்விடத்தை எளிதாகக் கண்டு கொள்ளலாம். பல படித்துறைகள், உருக்குலைந்த கோயில்கள், செங்கற் சூளைகள், நெற்கிடங்குகள், மரக்கட்டைகள், நேர்த்தியாக அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் ஓட்டுக் குவியல்கள், செங்கல் தூசு மணற் படிவங்கள் ஆகியவற்றைக் கடந்து செல்வோம். நீரிலே துள்ளும் ஆயிரக்கணக்கான சிறுமீன்கள் விளிம்பு வரை ஏற்றப்பட்டுள்ள நமது படகும் அவ்வளவு குழிவானதல்ல. போனாகட் அடைந்ததும் பித்தளையிலான அளவுக் குடங்களில் அளந்து மொத்தமாகவோ சில்லறையாகவோ இந்த மீன்களை விற்பனை செய்வார்கள்.

பொழுது விடிகிறது. அது மழைக்கால ஆடி மாதம். மழையில்லையெனினும், வானம் மேகமூட்ட மாயிருக்கிறது. நிழல்களாகத் தெரியும் வானளாவிய கட்டடங்களுக்கு அப்பால் சூரியன் எங்கோ இருக்கக்கூடும். கரிய மேகங்களைத் தாண்டி மங்கலான சூரிய ஒளியே பூமியை எட்டுகிறது. இந்தப் பூதாகாரமான தோற்றத்தில் புறநகர்ப் பகுதிக் குடிசை வீடுகள் மிகவும் பரிதாபமாகத் தோன்றுகின்றன. கரையில் தெரியும் சிறு ஆடைக் குவியல் தனி வழிப்போக்கர்கள் சிலர் அதிகாலைக் குளியலுக்கு வந்திருப்பதைத் தெரிவிக்கிறது. தானியக் கிடங்குகள் காலியாகக் கிடக்கின்றன. அவற்றையொட்டி வரிசையாக்க் காலிப்படகுகள். எங்கும் ஒரே வெறுமை.

தாழ்ந்த அலை ஏற்றம் காரணமாகப் படகு இலக்கின்றி மிதந்து கொண்டிருக்கிறது. பெரிய நதியில் நீண்டதூரம் படகு வலித்துவந்த களைப்பில் படகோட்டிகள். மீன் கூடை முடையும் சார்ப்பின் கீழே குட்டித் தூக்கம் போடுகின்றனர்.

முகுந்தன் மட்டும்தான் சுக்கான் அருகில் அமர்ந்திருக்கிறான். யாருக்கும் தெரியாமல் எப்படியோ நழுவி வந்து ரத்தன் தன் தந்தையின் அருகில் உட்கார்ந்திருக்கிறான். அதிகாலைப் பொழுதில் படகு நதியின் மத்தியில் சென்று கொண்டிருந்தபோது அவன் உள்ளே நுழைந்திருக்க வேண்டும்.

கரிய மேகங்களுக்கு அப்பால் நட்சத்திரம் எதையும் காணமுடியவில்லை.

ஆனால், மாநகரத்தினூடே படகு வந்தபோது இருள் சூழ்ந்த நதியில் நட்சத்திரங்களின் சிமிட்டல்களைப் பார்க்க முடிந்தது. நதியின் இரு கரையோரங்களிலும் கப்பல்கள், நீராவிப் படகுகள், வாடகைக் கப்பல்கள், சரக்கு கப்பல்கள் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருக்கின்றன. இருளில் அவற்றின் முழு உருவமும் தெரியவில்லை. கரைகளின் ஓரமாகக் கணக்கற்ற ஒளிப் புள்ளிகள் மட்டும் தெரிகின்றன. அந்த நதியில் நீராடுவதற்காகத் தமது மேகச் சிம்மாசனங்களை விட்டு நட்சத்திரங்கள் கீழிறங்கி வந்திருக்க வேண்டும்.

சுக்கான் அருகில் ரத்தன் அமைதியாக அமர்ந்திருக்கிறான். அவன் அங்கு உட்கார்ந்திருப்பதை அவன் தந்தை பார்த்தால் என்ன ஆகும்? அவனுக்கு நிறைய வசவு கிடைக்கும். திரும்பவும் கூடை முடையும் இடத்திற்குப் போகும்படி அவன் தந்தை அவனுக்குக் கட்டளையிடுவார். ஆனால், அவனால் எப்படி இப்போது அங்கு போய் விழுந்து கிடக்க முடியும்? மாநகரின் தோற்றத்தையெல்லாம் அந்தப் படகு அவனுக்குக் காட்டியிருக்கிறது. வானத்து விண்மீன்களெல்லாம் இருள் கப்பிய நதியில் நீராடக் கீழிறங்கி வந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் காண வேண்டும் என்றுதான் அவன் நாட்கணக்கில், மாதக்கணக்கில் கனவு கண்டு கொண்டிருந்தான்.

ஒளித் துணுக்குகள் விரவிய நகரத்தின் இருளை, ஆச்சரியத்தால் விரித்த கண்களால் அள்ளி விழுங்கிக் கொண்டிருக்கிறான் ரத்தன். சுவாசிக்கக்கூட அச்சம் கொண்டு கல்லாய்ச் சமைந்திருக்கிறான். அவன் அங்கிருப்பதை அவன் தந்தை பார்த்துத் திரும்பவும் கூடை முடையும் இடத்திற்கு அனுப்பிவிடுவாரோ என்ற பயம் அவனைப் பிடித்திருக்கிறது. வயதானவர்களை ஒருபோதுமே நம்ப முடியாது.

படகில் ரத்தனும் வரவிரும்பியது குறித்து முகுந்தனுக்கு அரை மனதுதான். சிறு பையன் நகரத்திற்கு வந்து என்ன செய்யப் போகிறான்? படகில் நீண்ட தூரம் பயணம் போவது ஒன்றும் சாதாரண விஷயமல்ல. தந்தையின் அனுமதி பெறுவதற்குள் அவன் அழுது, கெஞ்சிக் கூத்தாட வேண்டியிருந்தது. அப்படியும் ஏகப்பட்ட எச்சரிக்கைகளுக்குப் பின்தான் அவனால் படகில் ஏறமுடிந்தது.

"சமர்த்தாகப் படகில் இருக்க வேண்டும், ஏதாவது விஷமம் செய்தாலோ, தெரியும் சேதி",

அவன் ஏன் விஷமம் செய்யப்போகிறான், பாவம்? யாருக்கும் அவன் தொல்லை தரமாட்டான். தந்தை சொன்னபடி கேட்பான். தேவதைக் கதைகளில் வரும் அதிசயங்களைவிட அற்புதங்கள் நிறைந்ததாகக் கூறப்படும் அந்த நகரத்தைப் பார்க்கமட்டுமே அவன் விரும்பினான். ஆனால், அவன் ஒரே பிடிவாதமாக கிளம்பியதற்கு அது மட்டுமா காரணம்?

அந்த விஷயம் ஒருபுறமிருக்கட்டும்.

தன் உடலின் ஒவ்வொரு மயிர்க்காலும் நகரின் பல காட்சிகளைப் பேரார்வத்தோடு அள்ளிப் பருக, துளியும் அசைவின்றி அந்த இடத்திலேயே ரத்தன் அமர்ந்திருப்பது எல்லோர் கண்ணிலும்பட்டது. இருப்பினும் யாரும் அவனைக் கவனிக்கவில்லை.

மெள்ளமெள்ளக் கிழக்கு வெளுக்கத் தொடங்கியது. நதியின் முழுப் பரிமாணமும் இன்னும் துலக்கமாகியது. முதலில், பார்வையை மறைக்கும் அளவு பனி சூழ்ந்திருந்தது. இயற்கைக் காட்சிகளிலும் நதியின் தோற்றத்திலும் இருளும் ஒளியுமாக ஒழுங்கற்ற பல வண்ணத் திட்டுகள் தெரிந்தன. இந்த ஒழுங்கற்ற சூழலில், ரத்தனின் கண் முன்னால், ஒரு புதிய உலகம் விரிந்தது. வானத்திரையில் தோன்றிய ஒரு கரிய நிறத்திட்டு நிமிடங்களுக்குள் கப்பலாக மாறியது. அதன் கொடிமர உச்சிகளும் புகைபோக்கிகளும் அடர்ந்த ஒரு காட்டைப் போன்று வானைத் தொட்டு நின்றன. கப்பலை நங்கூரத்துடன் பிணைக்கும் கம்பி வடம் ஒரு பயங்கரமான மலைப்பாம்பு நீர் பருகுவதுபோல் தோன்றியது. சுற்றி நிற்கும் பிரம்மாண்டமான கப்பல்களினூடே அவர்களது படகு ஒரு சிறு பொம்மையைப் போல் இருந்தது. பயங்கரத் தோற்றம் கொண்ட கொடிய பூதங்களின் நடுவே ஒரு சிறு குள்ளன் திருட்டுத்தனமாகப் புகுந்து போவதைப் போல் சென்றது அது.

நதியின் மறுபுறம் அடர்ந்திருந்த பனிமூட்டம், அங்கு ஏராளமாக நிறுத்தப்பட்டிருந்த தட்டை அடிப்பாகம் கொண்ட வாடகைக் கப்பல்களுடன் இரண்டறக் கலந்துவிட்டது போலிருந்தது. அக்கப்பல்களைக் 'கழுதைப் படகுகள்' என்று அழைப்பது வெகுபொருத்தம் என வேண்டும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்களுக்குச் சொந்தமான படகுத்துறைகளில் தாம் ஏற்றிச் செல்ல வேண்டிய சரக்குகளை எதிர்பார்த்துப் பொறுமையுடன் அவை காத்திருக்கின்றன.

ரத்தன் அமர்ந்த இடத்திலிருந்து பார்க்கையில், உறக்கத்திலாழ்ந்துள்ள கடலரக்கியின் கரங்களுக்குள் அவளது குழந்தைகள் கதகதப்பாக அடைக்கலம் புகுந்துள்ளதுபோல் அந்த படகுகள் தோற்றமளித்தன. நதியின் மீது படர்ந்திருந்த பனிமூட்டம் மேலும் விலகி, அதன் இருகரைகளிலும் அமைந்திருந்த பெரும் ஆலைகளும் தொழிற்சாலைகளும் புலப்பட்டன. நதி விளிம்புவரை அவை நீண்டிருந்தன. அவற்றின் கழுத்துப் பகுதிகள் அரக்க உருவம் கொண்ட கொக்குகளைப் போல் உயர்ந்திருந்தன.

மீன்பிடி படகுகள், உல்லாசப் படகுகள், நீராவிப் படகுகள், சிறு படகுகள் ஆகியவற்றை வர்த்தகக் கப்பல்கள் சூழ்ந்திருந்தன. இதுதான் அந்த மாநகரம். அதன் முதல் தரிசனம் ரத்தனுக்கு ஆச்சரியத்தையும் அச்சத்தையும் ஆர்வத்தையும் அளிப்பதாயிருந்தது.

அதன் பிறகு அவர்களது படகு ஒரு வளைவில் திரும்பிக் கிளை நதியொன்றில் பிரவேசித்தது. பழைய நகரத்தின் புறநகர்ப் பகுதிகள் ஊடே பாய்வது அக்கிளை நதி.

முதல் பார்வையில் அந்த மாநகரத்தின் தோற்றம் ரத்தனுக்குப் பயபக்தியை ஏற்படுத்தியது. பயபக்தி என்பதைவிட, அவனுக்கு ஒருவிதமான விரக்தியுணர்வே ஏற்பட்டது. சிதலமடைந்த, புராதனக் கட்டடங்கள் அமைந்த அந்தப் புறநகர்ப் பகுதி அந்த உணர்வை ஊர்ஜிதப்படுத்தியது. இருப்பினும் ஒரு சிறுவனது பிஞ்சு உள்ளத்தில் அது ஏன் நம்பிக்கையைத் துளிர்விடச் செய்ய வேண்டும்?

அந்த விஷயம் ஒருபுறமிருக்கட்டும்.

மற்றொரு வளைவில் படகு திரும்பியதும் நரைல் பாலம் தென்பட்டது. போனாகட்டில் சிறிய மீன் சுமைகளை ஏற்றிய படகுகள் ஏற்கெனவே வந்து குழுமியிருந்தன. முகுந்தனின் குரல் கேட்டு, உறங்கிக் கொண்டிருந்த இதர படகோட்டிகள் விழித்தனர். லக்ஷ்மணன் பித்தளைக் குடங்களில் மீன்களை அளந்து வைத்துக் கொண்டிருந்தான். உறக்கத்தின் பிடியிலிருந்து மீண்ட படகோட்டிகள் கொட்டாவி விட்டவண்ணம் சோம்பல் முறித்தனர். உள்ளத்தில் கிளர்ந்த வியப்பு மேலிட ரத்தன் அப்படியே அமர்ந்திருந்தான். இறுக மூடியுள்ள அவனது மெல்லிய சிறு உதடுகளின் பின்னே என்ன தீர்மானம் மறைந்திருக்கிறது என்று யாரால் கூறமுடியும்? எந்த எதிர்பார்ப்பினால் அவனது அகன்ற கண்கள் ஒளிவீசுகின்றன? அந்த மாநகரத்தைப் பார்க்க வேண்டும் என்ற இயற்கையான எண்ணம் மட்டுமே அவனது ஆர்வத்திற்கு முழுக் காரணமாக இருக்க முடியாது.

அந்த விஷயம் ஒருபுறமிருக்கட்டும்.

அவர்களின் படகு போனாகட்டை அடைந்ததும் மீன் வாங்கிப் போய் விற்கும் சில்லறை வியாபாரிகளின் கூட்டம் அங்கு மொய்த்துக் கொண்டிருந்தது. இருபுறமும் உறிபோல் மண் குடங்கள் கட்டப்பட்ட மூங்கிற் கழிகள் அவர்களின் தோள்களில் தொங்கின. மீன் வாங்கிப்போக அக்கம்பக்கத்திலிருந்து வருபவர்கள் அவர்கள். ஆற்றங்கரையில் அந்தக் கூட்டத்தின் மத்தியில் பீடா, பீடி, கடுகு எண்ணெயில் பொரித்த மட்டமான ரொட்டிகளை விற்கும் தரையில் பரப்பிய சிறு கடைகள். சப்தமாகப் பேசிக்கொண்டு அங்குமிங்கும் உலவும் தரகர்கள்.

அவர்கள் படகை நிறுத்துவதற்கு இடமேயில்லை. ஆனால், முகுந்தனின் படகை நிறுத்துவதற்கும், நங்கூரம் பாய்ச்சுவதற்கும் இடம் ஏற்படுத்தித் தரப்பட்டது. முகுந்தன் ஒன்றும் சாதாரண ஆளில்லை. மழைக்காலத்தில் அவனுக்குச் சொந்தமான ஆறு மீன்பிடி படகுகள் தினந்தோறும் அந்த ஆற்றில் சென்று வரும்.

படகில் அதிகப்படியாக இருந்த தண்ணீரை அகற்றுவதில் படகோட்டிகள் ஏற்கெனவே முனைந்து விட்டனர். மீன்களை அளந்துவைத்த பித்தளைக் குடங்களைச் சரிபார்ப்பதில் லக்ஷ்மணன் ஈடுபட்டிருந்தான். அதிக நீர் சேர்த்து வாடிக்கையாளர்களுக்கு மீன்களை அளந்து கொடுத்துவிடுவதில் லக்ஷ்மணன் சமர்த்தன். மகா மோசக்காரன். முகுந்தன் படகிலிருந்து இறங்கி நீரைக் கடந்து கரைக்குச் சென்றான். திரும்பிப் பார்த்தபோது அவன் பின்னால் ரத்தனும் வருவதைக் கண்டு, "ராஸ்கல், உன்னை யார் படகைவிட்டு இறங்கச் சொன்னது?" என்று கோபத்துடன் இரைந்தான்.

கண்களில் பரிதாபம் தோன்ற ரத்தன் தந்தையைப் பார்த்தான். "சரி, சரி, அங்கேயிங்கே ஓடித் திரியாதே." முகுந்தனின் குரலில் சிறிது மென்மை தெரிந்தது.

"அந்தக் கடம்ப மரத்தடியில் போய் உட்கார். அதற்கப்பால் வேறெங்கும் போகக்கூடாது".

தந்தை சொன்னபடி கேட்டான் ரத்தன். முழுதும் மலர்ந்த பூக்கள் ஒரு முதிர்ச்சி நிலையை அடைந்து அப்புறம்தான் கீழே விழுகின்றன. அந்த மரத்தைச் சுற்றியிருந்த பகுதி முழுவதும் மணம் பரப்பும் கடம்ப மலர்கள் விரவிக்கிடந்தன. எண்ணற்ற காலடிச் சுவடுகள் அந்த மலர்களின் மீது பட்ட அடையாளம் தெரிந்தது. சில பூக்கள் நசுங்கிச் சிதைந்து மண்ணோடு மண்ணாகியிருந்தன.

மீன் மார்க்கெட்டில் பூக்களுக்கென்ன கிராக்கியிருக்கும்?

படகுத்துறை முழுவதும் ஒரே கூச்சலும் குழப்பமுமாயிருந்தது.

"ஏய், அங்கே பார். கொஞ்சம் தண்ணீர் ஊற்று, இல்லையானால் உன் மீனெல்லாம் கறிசமைக்கத்தான் லாயக்கு!"

"ஒரு புதுக் குடம் கூட வாங்கி வர உன்னால் முடியாதா? எவ்வளவு கரிபடிந்து இருக்கிறது பார். உன் மீன் குடம்? சமையல் செய்கிற பானையெல்லாம் மீன் வாங்கக் கொண்டு வருகிறாய். நன்றாகச் சுடப்பட்ட பானையில் விட்டால் மீன் சீக்கிரம் உயிரை விட்டுவிடும் என்பது உனக்குத் தெரியாது? எல்லாம் இந்தத் திருட்டுத் தரகர்களின் வேலை. மீனெல்லாம் செத்துப்போனால் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்."

சில மீன் விற்பனையாளர்கள் காலிக் குடங்களை முன்னால் வைத்துக்கொண்டு குத்துக்காலிட்டு அமர்ந்திருக்கின்றனர். சிலர் மீன் கொள்முதலை முடித்துவிட்டுத் தம் நண்பர்களுக்காகக் காத்திருக்கின்றனர். மீன் வாங்கியவர்கள் குடங்களில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் குறையாமல் தண்ணீர் இருக்கும்படி கவனமாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டும். மீன் ஏதாவது செத்துப் போனால் உடனே அப்புறப்படுத்த வேண்டும்.

கடம்ப மலர்களின் வெளிறிய மஞ்சள் பூந்தாது காற்றில் பறந்து செத்துப்போன மீன்களின் வெள்ளிநிற உடல்களில் படிந்திருப்பதை ரத்தன் தான் நிற்குமிடத்திலிருந்தே பார்க்க முடிந்தது.

கடம்ப மரத்தினடியில் அவன் அதிக நேரம் இருக்கவில்லை. தந்தையிடம் கெஞ்சிக் கூத்தாடி அவன் படகில் புறப்பட்டு வந்தது அதற்காக அல்ல. அவன் புறப்பட்டு வந்த ரகசியம் அவனுக்கு மட்டுமே தெரியும். ஒரே ஒரு முறை அவன் மாமன் லக்ஷ்மணனைத் தனியாகப் பார்த்தபோது மட்டும், "உல்தாதிங்கி போனாகட்டுக்குப் பக்கத்திலிருக்கிறதா?" என்று ரகசியமான குரலில் கேட்டான்.

"அட முட்டாள்!" என்று சிரித்தான் லக்ஷ்மணன்.

"உல்தாதிங்கி எங்கே, போனாகட் எங்கே? போனாகட்டிலிருந்து அது வெகுதூரம்."

சிறிது கழித்து, ஆச்சரியம் கலந்த குரலில் லக்ஷ்மணன் ரத்தனை விசாரித்தான்.

"இவ்வளவு இடம் இருக்க, உல்தாதிங்கி மேல் உனக்கு என்ன அப்படி அக்கறை? யார் உனக்கு அந்தப் பெயரைச் சொன்னது?"

ரத்தன் அதற்கு ஏதும் பதில் கூறவில்லை. வாயை இறுக மூடிக்கொண்டுவிட்டான். எந்தக் காரணம் கொண்டும் தன் ரகசியத்தை வெளிப்படுத்தக்கூடாது அவன்.

சூழ்நிலை எப்படி இருக்கிறது என்று ஆர்வத்துடனும், எதிர்பார்ப்புடனும் ஆராய்ந்தான். அவன் தந்தை வியாபாரத்தில் கவனம் கொண்டிருந்தார். உடனே நழுவி அருகிலிருந்த ஒரு சாலையை அடைந்துவிட்டான் அவன். யாரிடமும் எதுவும் கேட்க அவனுக்கு இன்னும் பயமாக இருந்தது. கால் போன போக்கில் போய்க் கொண்டிருந்தான்.

நகரம் எனும் பெருங்காட்டுக்குள், பலர் பற்பல ஆசைகளுடன் பிரவேசிக்கின்றனர். சிலருக்குப் பணம் சேர்க்கும் ஆசை. சிலருக்கு புகழாசை. இன்னும் சிலருக்கோ கேளிக்கை விருப்பம், வேறு சிலருக்குத் தலைமறைவு நிர்ப்பந்தம்.

ஆனால், அந்த கிராமத்துச் சிறுவன் எந்த ஆசையில் நடந்து கொண்டிருக்கிறான்? அவனுடைய தேடல் என்ன? செங்கல்லும் சுண்ணாம்பும் கலந்து பிரம்மாண்டமாய் வியாபித்துள்ள இந்தக் கட்டடக் காட்டுக்குள் தன் ஆசை நிறைவேறும் என்ற நம்பிக்கை அவனுக்கு எப்படி ஏற்பட்டது?

ஒரு மைல் தூரத்துக்கு மேல் நடந்தபின், ஒருவரிடம் வழிகேட்கும் தைரியம் பிறந்தது அவனுக்கு. அந்த நபர் அவனை விநோதமாகப் பார்த்தார்.

"தவறான திசையில் நீ வந்துவிட்டாய் தம்பி. உல்தா–திங்கிக்கு நீ அந்தப் பாதையில் செல்ல வேண்டும். அது இங்கிருந்து வெகுதூரம்" என்று பதில் சொன்னார்.

வெகுதூரம்... எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் இருக்கட்டும். தொலைவைப் பற்றி ரத்தன் அச்சப்படவில்லை. அந்த நபர் சுட்டிக்காட்டிய பாதையில் திரும்பினான்.

"தனியாகவே போகிறாய்? யாரும் உனக்குத் துணைக்கு வரவில்லை?"

அச்சத்தால் ஒடுங்கிய குரலில் "இல்லை" என்று பதில் கூறினான் ரத்தன்.

"வீட்டிலிருந்து யாருக்கும் தெரியாமல் ஓடி வந்துவிடவில்லையே நீ?" அவரின் குரலில் கடுமையும் சந்தேகமும் தொனித்தது.

"உல்தாதிங்கியில் நீ யாரைப் பார்க்கப் போகிறாய்?"

"என் அக்கா அங்கே இருக்கிறாள்". நடுங்கியபடியே பதில் கூறிவிட்டு, அங்கிருந்து ஓட்டம் பிடித்தான் ரத்தன். அந்த நபர், அவனைப் பிடித்து அவன் தந்தையிடம் கொண்டுபோய் விட்டால்?

இப்பொழுது உங்களுக்கு விஷயத்தை சொல்கிறேன் நான்.

அந்தப் பெரிய நகரத்தில் தன் அக்காவைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறான் ரத்தன். இழந்து போன தங்கள் ஆன்மாக்களை மனிதர்கள் வீணே தேடிக்கொண்டிருக்கும் இடங்கள்தாம் நகரங்கள். அவன் அக்காவும் அப்படிதான் அங்கு காணாமல் போய்விட்டாள்.

நகரத்திற்குப் போனால் எப்படியும் அவளைக் கண்டுபிடித்துவிட முடியும் என்ற எண்ணம், அந்தக் கிராமத்துச் சிறுவனுக்கு ஏற்பட்டது. நகரம் இவ்வளவு பரந்ததாக இருக்கும் என்று அவனுக்குத் தெரியாது. இப்போதுதான் அவனது முட்டாள்தனமாக நடவடிக்கை எவ்வளவு அபத்தமானது என்று தெரிகிறது.

இருப்பினும் அவன் மனந்தளரவில்லை. நிச்சயமாகத் தன் சகோதரியைக் கண்டுபிடித்துவிட முடியும் என்று அவன் நம்பினான். சிறுபிள்ளைத்தனமான நம்பிக்கைகளுக்கு எல்லைதான் ஏது?

நகரத்திற்குத் தான் வந்த ரகசியத்தை அவன் இனி மேல் யாரிடமும் சொல்லமாட்டான். அக்காவின் பெயரை உச்சரிப்பதைக்கூட வீட்டில் தடுக்கிறார்கள். அந்தச் சிறுவனின் இதயத்தில் வெளியே சொல்லாத இது போன்ற பல கேள்விகள் உறைந்து கிடக்கின்றன.

அதன் காரணமாகத்தான், தன் நம்பிக்கையையும் அச்சத்தையும் வெளிக்காட்டாமல் அவன் படகில் நீண்ட பயணம் செய்ய முடிவு செய்தான். அதனால்தான் தன் சகோதரியைத் தேடி தன்னந்தனியாகப் புறப்பட்டான்.

அவளை எப்படியும் கண்டுபிடித்தாக வேண்டும். அவள் இல்லாமல் இனிமேல் உயிர்வாழ முடியாது. குழந்தைப் பருவம் முதல் தாயின் முகத்தைப் பார்த்தறியாத அவனுக்கு எல்லாம் அவன் அக்காள்தான். அவள்தான் அவனுக்குத் தாய், தோழி.

ஒரு நாள் அவளுக்குத் திருமணம் நடந்தது. அதன் பின் அவள் கணவனுடன் போய்விட்டாள். ஆனால், அவள் கண்காணாமல் போய்விடவில்லை. அவள் கணவன் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவன்தான். நினைத்த நேரத்தில் அக்கா வீட்டுக்கு ரத்தன் ஓடிவிடுவான். அவனை அங்கிருந்து திரும்பக் கூட்டி வருவது பெரும்பாடு. சகோதரி வாழப்போன வீட்டில் தானும் போய் நெடுநாள் இருக்கக்கூடாது என்பது அவனுக்கு எப்படிப் புரியும்?

அதன் பிறகுதான், ஏதோ விபரீதம். அவனுக்கு எதுவும் புரியவில்லை. வீட்டில் ஏகப்பட்ட கூச்சல், குழப்பம். சகோதரியின் கணவன் வீட்டார், அண்டை அயலார் எல்லாம் வந்து கூடியிருந்தனர். ஊருக்கு அப்பால் உள்ள போலீஸ் நிலையத்திலிருந்துகூடப் போலீஸ்காரர்கள் வந்திருந்தனர். எல்லோரும் காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தனர். யாரும் அவனை அங்கே போகவிடவில்லை.

இருப்பினும், அவர்கள் பேசிக்கொள்வதிலிருந்து அவன் சகோதரியை யாரோ கடத்திக் கொண்டு போய்விட்டார்கள் என்பது அவனுக்கு புரிந்தது. போய் அவளைக் காப்பாற்றித் திரும்பக் கூட்டி வருவதை

விட்டுவிட்டு, ஏன் இவர்கள் வீண் வார்த்தை பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவனுக்குப் புரியவில்லை. அவனுக்குக் கோபமும், ஆச்சரியமும் ஏற்பட்டது. விழிப்பான அவன் குழந்தை மனத்திற்கு மேலும் சில விவரங்கள் எட்டின. தன் சகோதரியை எங்கே கொண்டுபோய்விட்டார்கள் என்று யாருக்கும் தெரியவில்லையென்பது இறுதியாக அவனுக்குத் தெரியவந்தது.

அதன் பிறகு அவனால் அழத்தான் முடிந்தது. கடத்தியவர்கள் எப்படிப்பட்ட ஆசாமிகள்? அவர்கள் அவளை அடிப்பார்களோ? உணவு தராமல் பட்டினி போடுவார்களோ? ரத்தனை நினைத்துக் கவலைப்பட்டு கொண்டிருப்பாளோ அவள்? இப்படி நினைத்தவுடன் அவனுக்கு அழுகை பீறிட்டு வரும்.

தந்தை அவனைச் சமாதானப்படுத்த முயன்றார். அவன் தலையை ஆதுரத்துடன் தடவிக்கொண்டே

"எதற்கு அழுகிறாய், மகனே?" என்று கனிவுடன் கேட்டார்.

"அக்காள் ஏன் வரவேயில்லை, அப்பா" அழுகையை அடக்கியவாறு கேட்டான் ரத்தன்.

குழந்தையின் மன ரகசியங்களை அறியாத முகுந்தன், ரத்தனின் கவனத்தைத் திசை திருப்பும் நோக்கில், "ஒரு நாள் வந்துவிடுவாள், ஐயா. கணவன் வீட்டிலிருந்து அவள் அடிக்கடி இங்கு வந்துவிடுவது சரியில்லையல்லவா?" என்றான்.

அதற்குமேல் ரத்தன் பேசவில்லை. தந்தையின் நொண்டிச் சாக்கு அவனுள் தோன்றிய இனந்தெரியாத அச்சத்தை மேலும் அதிகரித்தது.

சில மாதங்கள் கழித்து அவன் சகோதரி கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாகத் தகவல் வந்தது. உள்ளூர்ப் போலீஸ் அதிகாரி எங்கோ கண்காணாத ஊரில் அவளைக் கண்டுபிடித்துவிட்டதாகச் சொன்னார்கள். ரத்தன் மகிழ்ச்சியடைந்தான். கடைசியாக அக்காள் கிடைத்துவிட்டாள். இனிமேல் அவனுக்கு கவலையில்லை.

ஆனால் அப்புறமும் அவள் வரவில்லை. நாட்கள் கடந்தன. அவனது ஆர்வமும் எதிர்பார்ப்பும் வெறுங்கனவாகின.

ஏன் அவள் வரவேயில்லை? கடத்திச் சென்றவர்களிடமிருந்துதான் அவளை மீட்டு விட்டார்களே? ரத்தனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுக்கு அவள்மீது சற்றுக் கோபம்தான். அவனைப் பார்த்து எவ்வளவு நாளாகிவிட்டது என்பது அவளுக்குத் தெரியாதா? அவளாகவே ஏன் வரக்கூடாது? அப்படி அவளால் உண்மையிலேயே வரமுடியவில்லையென்றால், அப்பாவாவது போய் அழைத்து வரலாமே? ரத்தனுக்கு எல்லோர் மீதும் கோபம் வந்தது.

யாருக்கும் தெரியாமல் அவள் தன் கணவன் வீட்டிற்குச் சென்றிருப்பாளோ? ஒரு நாள் காலை ரத்தன் அவளைத் தேடிக் கொண்டு அவள் கணவன் வீட்டிற்குச் சென்றான். அவள் அங்கு இல்லை. அங்கு இருந்தவர்கள் அவனிடம் சரியாக முகம் கொடுத்துப் பேசவில்லை. அவன் வந்திருப்பதே தெரியாததுபோல் அக்காவின் கணவர் நடந்துகொண்டார். அவன் உடனே வீடு திரும்பிவிட்டான். அவமானத்தால் முகம் சோம்பிப் போயிருந்தது.

"அக்காவை ஏன் கூட்டிவரமாட்டேன் என்கிறீர்கள் அப்பா?" அழுகை கலந்த குரலில் ஒரு நாள் கேட்டான் ரத்தன்.

முதன் முறையாக அன்றுதான் ஏதுமறியாத அந்தக் குழந்தை மீது முகுந்தன் எரிந்து விழுந்தான். இனிமேல் அவள் விஷயமாக வாயைத் திறக்கக்கூடாது என்றான். அவள் இனித் திரும்பி வரவேமாட்டாள் என்று பின்னர் ரத்தனுக்குத் தெரியவந்தது.

ஆனால் ரத்தனுக்குத் தெரியும், யாருமே தன்னைத் தேடி வரவில்லையென்று அக்காவுக்குக் கோபம். அதனால்தான் அவள் வரவேயில்லை.

அவள் எங்கிருக்கிறாள் என்று அச்சிறுவனுக்கு என்ன தெரியும்? அவளைப் பற்றி யாரும் அவனுடன் பேசுவதில்லை. அவள் பெயரைச் சொல்வதற்குக் கூடத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இரவில் யாரும் கவனிக்காத சமயத்தில் தன் சகோதரியை நினைத்து அழுவான் அவன். தன்னை அவள் எப்படி மறக்கலாயிற்று என்று அவளுடன் மானசீகமாகச் சண்டைபிடிப்பான்.

குழந்தையின் மனது நாம் நினைப்பதைவிட விழிப்பானது. எந்தக் குழந்தையும் தான் புரிந்து கொள்வதை விட அதிகம் கவனிக்கும். தேவதைக் கதைகளில் வரும் அற்புதங்களைவிட அதியற்புதங்கள் நிறைந்த அந்த மாநகரத்தில் அவள் இருக்கிறாள் என்று அவனுக்கு எப்படித் தெரிய வந்தது? எப்படியோ, தெரியாது எந்தவிதத்தில் உல்தாதிங்கி என்ற பெயரை அவன் முதன் முதலில் தெரிந்து கொண்டான்? யார் அவனுக்குச் சொன்னது? உறக்கம் வராமல் இரவில் கிடந்து தவிக்கும் அவன் அன்பு மனத்திற்குக் காற்றுதான் ரகசியமாக வந்து உண்மையைக் கூறியிருக்கும் போலும்.

ஆதலால்தான், அவள் படகில் வருவதற்குத் தந்தையிடம் கெஞ்சியிருக்கிறான். அவளைத் தேடிப் புறப்பட்டிருக்கிறான்.

அவன் அவளை எப்படியும் கண்டுபிடித்துவிட வேண்டும். அவள் முன் அவன் போய் நின்றால் போதும். மறுவார்த்தை பேசாமல் அவள் அவனுடன் புறப்பட்டு விடுவாள் என்று அவனுக்குத் தெரியும். குறைந்தபட்சம் அவன் நம்பிக்கை அது.

சற்று நேரம் நாம் ரத்தனை அவன் போக்கில் விட்டு விடலாம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நோக்கத்தில் நகரத்திற்கு வருகிறார்கள். பணம், புகழ், கேளிக்கை, தலைமறைவு வாழ்க்கை, அல்லது அவற்றினும் பெரிய வேறு ஏதாவது நோக்கங்கள் நிறைவேறுகின்றனவா? இலக்கை நோக்கித் தங்களை இட்டுச் செல்லும் என்று அவர்கள் நம்பும் நகரின் சாலைச் சந்திகளில், அவர்கள் தங்களையே தொலைத்து விடுவதில்லையா? அவர்களின் தேடல்களை நகரம் அழித்துச் சிதைத்துவிடுகிறது. அவ்வாறு திக்கற்று, குறிக்கோள் மறந்துபோன மக்கள் கூட்டத்தில் ரத்தனும் ஒருவனாக மாறிவிடக் கூடும். அப்படியானால் அவனைத் தனியாக விட்டுவிடுவோம் நாம்.

ஆனால், ஆச்சரியம் என்னவெனில், ரத்தன் தொலைந்து போகவில்லை. சாத்தியக்கூறு என்னும் விதி எத்தனையோ விதங்களில் வேலை செய்கிறது. உண்மையிலேயே ரத்தன் தன் சகோதரியைக் கண்டுபிடித்து விடுகிறான்.

உச்சிப் பொழுது, மேக மூட்டமாக இருந்ததால் சரியான நேரத்தை யாரும் எளிதில் கண்டு கொள்வது சிரமம். ரத்தன் ஒரு வீட்டின் முன் நின்றான். மண் சுவரால் ஆன ஓட்டு வீடு அது. அவனது முகம் கருத்துப் போயிருந்தது. நடந்து நடந்து கால்கள் கெஞ்சின. அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்தான் அவனை அங்கு அழைத்து வந்தாள்.

அவன் எங்கெங்கோ சுற்றினான். எத்தனையோ வழிகளில் புகுந்து வந்தான். யார் யாரையோ கேட்டான். இறுதியில் தன் இலட்சியத்தை அடைந்துவிட்டான். அன்பு எதைத்தான் சாதிக்காது?

சற்று நேரத்திற்கு முன்தான் அவன் அப் பெண்ணைப் பார்த்தான். தேடிக் களைத்துப் போன அவன் கண்களுக்குத் தூரத்தில் தென்பட்டாள். அவனிடமிருந்து திடீரெனக் குரல் வெடித்தது.

“தீதி!” (அக்கா)

அவள் திரும்பிப் பார்த்தாள். அவனது நம்பிக்கைகள் அனைத்தும் நொறுங்கிப் போயின. இல்லை. அப்பெண் அவன் சகோதரியில்லை. அவன் தலை தாழ்ந்தது. தர்மசங்கடமாகிவிட்டது. எங்காவது ஓடி ஒளிந்து கொள்ள முயன்றான். ஆனால், அவள் அவனை அருகில் அழைத்தாள். களைத்துக் கருத்துப் போன முகத்துடன் நின்ற அவனைப் பார்த்துக் கேட்டாள் அவள்:

“யாரைத் தேடுகிறாய், தம்பி?”

மிகுந்த வெட்கத்துடன் ரத்தன் தன் சகோதரியின் பெயரைச் சொன்னான். அந்தப் பெண் புன்முறுவல் பூத்தாள்.

“அவள் எங்கிருக்கிறாள் என்று உனக்குத் தெரியாதா? வா நான் கூட்டிப் போகிறேன்”.

ஓட்டு வீட்டுமுன் நின்று “சபலா, யார் உன்னைத் தேடி வந்திருக்கிறது பார்” என்றாள் அப்பெண்.

“இந்த நேரத்தில் யாரும் என்னைத் தேடி எதற்காக வர வேண்டும்?” எரிச்சலுடன் பதில் வந்தது உள்ளிருந்தது.

“கதவைத் திறந்து யாரென்றுதான் பாரேன்”.

கதவைத் திறந்த சபலா அப்படியே உறைந்து நின்றாள். அவளைப் பார்த்த ரத்தனும் வாயடைத்து நின்றான். தன் சகோதரியை அடையாளம் காண்பதில் அவனுக்குத் தடுமாற்றம் ஏற்பட்டது. அவள் தோற்றம் வெகுவாக மாறியிருந்தது. இருவர் முகங்களும் ஒரு கணம் சலனமற்றுப் போயின.

அவனை அழைத்து வந்த பெண் அவர்கள் இருவரையும் சந்தேகத்துடன் பார்த்தாள்.

“அப்படியானால் இவன் உன் தம்பி இல்லையா? உன் பெயரை இவன் சொன்னான். அதுதான் அழைத்து வந்தேன்”.

சபலா விரைந்து வந்து ரத்தனை மார்புறத் தழுவிக் கொண்டாள். அவள் தொண்டையிலிருந்து கேவல் வெடித்தது.

“என் செல்லத் தம்பி நீயா? என்னைத் தேடித் தனியாக இவ்வளவு தூரம் எப்படி வந்தாய்?”

ரத்தன் அவள் மார்பில் கண்புதைத்திருந்தான். எதுவும் பேசவில்லை.

அந்த மாநகரத்தின் சாலைகளும், தெருக்களும் தூசு நிறைந்தவை. வானம் எப்போதும் புகையால்

சூழப்பட்டிருக்கும். காற்றில் நச்சுப் புகை கலந்திருக்கும். எப்போதாவது அங்கு நமது நம்பிக்கைகள் நிறைவேறும். நமது தேடல் கிடைத்துவிடும். ஆனால் நமது ஆசைக் கனவை நாம் அடையும்போது, அது கசப்பாகிவிடும். மாநகரம் எந்த விஷயத்தையும் தன் போக்கில்தான் செயல்படுத்தும். வெற்றிகூடத் தோல்வியாகவும் ஏமாற்றமாகவும் மாறிவிடும்.

சபலா ரத்தனை வீட்டினுள் அழைத்துச் சென்றாள். அங்கிருந்த அறை அமைந்திருந்த விதமும், அலங்கரிக்கப்பட்டிருந்த விதமும் அவனுக்கு அசாதாரணமாகத் தோன்றியது. ஒரு மண் வீட்டுக்குள் இவ்வளவு அழகான, ஆடம்பரமான அறையை அவனால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை.

“இதெல்லாம் உன்னுடைய பொருள்களா தீதி” வியப்புடன் கேட்டான் அவன்.

“ஆமாம்”.

பதில் சொல்லும் போது, அவள் கண்களில் இன்னும் கண்ணீர் வழிந்து கொண்டிருப்பதை அவன் கண்டான்.

அறை எப்படி அழகாயிருந்தாலும் தான் வந்த காரியத்தை ரத்தன் மறக்கவில்லை.

“என்னுடன் நம் வீட்டுக்கு வந்துவிடு தீதி” அவன் அழுதுவிட்டான்.

“வருகிறேன்”, அவள் அவனை அன்புடன் தேற்றினாள்.

தொடர்ந்து, குரலில் வருத்தம் தொனிக்க, “முதலில் நீ சற்று ஓய்வெடுத்துக்கொள்” என்றாள்.

“நான் ஓய்வெடுத்த பின் நாம் சற்றும் தாமதிக்கக் கூடாது. நம் படகு நாளை திரும்பி ஊருக்குப் புறப்பட்டுவிடும். அதனால்தான் இவ்வளவு சாமான்களையும் எப்படி கொண்டு போவது தீதி”.

சபலா பதில் எதுவும் கூறவில்லை.

திடீரென்று, காரணம் எதுவுமில்லாமல் ரத்தன் ஆர்வத்துடன் கேட்டான்.

“நான் சிறிது ஓய்வெடுத்த பின் நாம் புறப்படலாமல்லவா, தீதி?”

அப்பொழுதும் அவள் பேசவில்லை. ஒரு வேளை இத்தனை பொருள்களையும் எப்படி எடுத்துக் கொண்டு போவதென்று அவள் யோசிக்கிறாளோ என்று நினைத்தான் ரத்தன்.

“இதையெல்லாம் படகுக்குக் கொண்டு போக ஒரு மாட்டு வண்டி பிடித்து வரட்டுமா தீதி”.

“என்னால் முடியாது தம்பி, எனக்கு அந்தத் தைரியம் இல்லை”.

விம்மலுடன் மேலும் அவள் சொன்னாள்:

“என்னால் ஊருக்குத் திரும்பி வரவே முடியாது. அந்த வழி நிரந்தரமாக அடைபட்டுப் போய்விட்டது”.

“நிரந்தரமாக அடைபட்டு விட்டதா?” ரத்தனின் முகத்திலிருந்த மலர்ச்சி ஒரு நொடியில் மறைந்தது.

அவளைப் பற்றிக் கேட்ட போது தந்தை எவ்வளவு கோபமும், எரிச்சலும் அடைந்தார் என்பது அவன் மனக் கண்ணில் தெரிந்தது. வீட்டில் அவள் பெயரை உச்சரிப்பதற்குக் கூட தடை. அவள் சொல்வது சரியாயிருக்கலாம். அவள் வீடு திரும்புவதற்கான சாத்தியம் முற்றிலும் அடைபட்டுப் போயிருக்கலாம். அவன் அவளைத் தேடி வந்தது வீண்தான். அவளை அவன் கண்டுபிடித்தும் என்ன பிரயோஜனம்?

திடீரென்று அவன் முகம் பிரகாசித்தது.

“அப்படியானால், நானும் திரும்பிப் போகப் போவதில்லை தீதி”.

“சிறுபிள்ளைத்தனமாகப் பேசாதே. எங்கே தங்குவாய் நீ?”

“ஏன், நான் உன்கூடவே இருப்பேன்” புன்முறுவலுடன் ரத்தன் பதில் சொன்னான். அவனது பதிலைக் கேட்டு சபலாவின் முகம் பேயறைந்து போனதை அவன் கவனிக்கவில்லை.

சாப்பாட்டிற்குப் பின் அக்காவும் தம்பியும் பேசுவதிலேயே மதிய நேரம் முழுதும் கழிந்தது. பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன. பொழுது சாயச் சாய சபலா பதற்றமடைந்தாள்.

“நீ திரும்பிப் போய்விடேன், அப்பா உன்னைக் காணாமல் கவலையுடன் இருப்பாரில்லையா?”

தன் சகோதரிக்கு தன் தந்தை இழைத்த

அநீதிக்காக அவரை நன்றாகத் திட்ட வேண்டும் என்ற மனநிலையில் இருந்தான் ரத்தன்.

"கவலைப்பட்டால் படட்டும்".

சிறிது இடைவெளிக்குப் பின் சபலா பேச்சை தொடர்ந்தாள்.

"இங்கிருந்து நரைல் பாலம் ரொம்ப தூரம், இல்லையா ரத்தன் ?"

அவ்வளவு நெடுந்தூரத்தைக் கடந்துதான் வந்திருக்கிறோம் என்பதை நினைக்க அவனுக்கு பெருமையாக இருந்தது.

"உனக்குத் தெரியாதா ? ரொம்ப தூரமில்லை, ரொம்ப ரொம்ப தூரம்" அவன் குரலில் பெருமிதம் இருந்தது.

"நான் பணம் கொடுத்தால் டிராம் அல்லது பஸ் மூலம் உன்னால் அங்கு போய்ச் சேர்ந்துவிட முடியுமில்லையா ?"

"நான் ஏதோ திரும்பிப் போகத் துடித்துக் கொண்டிருப்பதைப் போலல்லவா கேட்கிறாய்!"

சகோதரியின் முகத்தை ஏறிட்டு பார்த்த அவன் ஸ்தம்பித்துப் போனான். அவள் கண்களில் கண்ணீர் தளும்பி நின்றது.

"அது முடியாது. தம்பி, நீ என்னுடன் தங்க நினைப்பது சரியில்லை. தங்கவும் கூடாது" அவள் தலை கவிழ்ந்திருந்தது. குரல் நடுங்கியது.

ரத்தனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் எதிர்பார்த்து வந்த அன்பு அவளிடம் இல்லாதது அவனுக்கு வேதனை தந்தது. வீட்டுக்குத் திரும்பி வரமுடியாது என்கிறாள். அவன் அவளுடன் இருக்கக் கூடாது என்கிறாள். சரி, அப்படியானால் இனி ஒருபோதும் அவள் பெயரை அவன் உச்சரிக்க மாட்டான். தந்தையைப் போல அவன் மனசும் கல்லாகிவிடும்.

"சரி நான் கிளம்புகிறேன்" தேய்ந்த குரலில் சொன்னான் ரத்தன்.

ஏற்கெனவே மேகமூட்டத்தால் இருண்டிருந்த பகல்பொழுது மேலும் இருண்டுவிட்டது. சபலா எழுந்து அலமாரியைத் திறந்து நான்கு ரூபாய்களை எடுத்து அவன் கைகளில் வைத்து,

"ஏதாவது வாங்கிச் சாப்பிடு" என்றாள்.

நான்கு ரூபாய் பெரிய பணம்தான். அதை மறுதளிக்கும் மனநிலையில் ரத்தன் இல்லை. அவன் அங்கிருந்து போய்விட வேண்டும் என்பது இப்போது வெகு உறுதியாகிவிட்டது. அதை நினைத்து அவன் வருத்தத்தில் ஆழ்ந்தான். அவன் மனம் சுக்குநூறாக உடைந்து சிதறியது.

அதற்கு மேல் அந்த அறையில் அவன் ஒரு நிமிடம் கூடத் தாமதிக்கவில்லை. வெளியில் இறங்கினான். திரும்பிச் சகோதரியின் முகத்தைப் பார்க்க வேண்டும் என்று கூட அவன் விரும்பவில்லை. அந்தச் சந்து வழியாக நடந்து தெருவை அடைந்தான். அருவி போல் கண்ணீரைச் சொரிந்து நிற்கும் தன் சகோதரியை அவன் திரும்பிப் பார்த்திருந்தால்கூட, அவளது கண்ணீருக்கு என்ன பொருள் என்று அவனால் புரிந்து கொண்டிருக்க முடியாது.

"பஸ்ஸிலே போ ரத்தன். நடந்து போகாதே" கண்ணீருக்கிடையில் குரலை உயர்த்திக் கூவினாள் சபலா.

அந்த வார்த்தைகள் அவன் காதை எட்டினவா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவன் தெருவை அடைந்தவுடன் திடீரென்று திரும்பி வந்த வழியே ஓடினான்.

சபலா முன்பு போலவே கதவ்ருகில் நின்றாள். ரத்தன் அவள் அருகில் சென்றான்.

"நான் பெரியவனானதும் உன்னை வீட்டிற்கு அழைத்துப் போவேன் தீதி. யாரும் அப்போது என்னை எதுவும் சொல்ல முடியாது. அவர்கள் ஏதாவது சொன்னாலும் நான் காதில் வாங்க மாட்டேன்".

இதைக் கூறிவிட்டு அவன் திரும்பி நடந்து தெருவை அடைந்தான். அவன் முகத்தில் வலியின் சாயல் துளியும் இல்லை. அவன் நடையில் கம்பீரம் இருந்தது. கவலை அவனிடமிருந்து அகன்றுவிட்டிருந்தது. சில கணங்களில் அவன் தெருவைக் கடந்து காணாமல் போனான்.

எல்லாவற்றையும் மூடி மறைக்கும் கருந்திரை போல் அந்தி மறைந்தது. அந்த மாநகரத்தின் மீது இருள் கவிழ்ந்தது.

– தற்கால இந்தியச் சிறுகதைகள்
தொகுதி-II நூலிலிருந்து.
வெளியீடு : சாகித்ய அகாதமி

ருதுநகர் மாவட்டத்தில்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சணல் பொருள் பயிற்சி

மத்திய அரசின் துணி அமைச்சகத்தின் ட்டுப்பாட்டில் கொல்கொத்தாவில் உள்ள சணல் ம்பாட்டு மையமும், விருதுநகர் மாவட்ட மகளிர் ம்பாட்டுத் திட்டமும், கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. பாறியியல் கல்லூரியில் உள்ள சணல் மையமும் ணைந்து மேம்படுத்தப்பட்ட சணல் பொருள்களுக்கான ழிப்புணர்வு குறித்த கருத்தரங்கினை விருதுநகர் திய பேருந்து நிலைய வளாகத்தில் 26.6.04 அன்று த்தியது.

இக்கருத்தரங்கினை மத்திய அரசின் சணல் ம்பாட்டுச் செயல் இயக்குநர் திரு. சவுரக் கே.தாஸ் தாடங்கி வைத்தார். அப்போது அவர் கூறியதாவது :

"இந்திய அரசின் துணி அமைச்சகத்தின் ட்டுப்பாட்டில் கொல்கொத்தாவில் உள்ள சணல் மம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மயத்தில் சணல் பொருட்கள் உற்பத்தியாளர்களின் ண்காட்சி நடத்துதல், அதன் விற்பனையை மம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மற்கொள்ளப்பட்டு வருகிறது. சணல் பொருட்கள் மூலம் அழகு பொருட்கள், தரை விரிப்புகள், படுக்கை விரிப்புகள் உள்ளிட்ட பல பொருட்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சுற்றுப்புறச்சூழல் ற்றும் நிலத்தடி நீர் அபாயத்தை உருவாக்கும் பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தைத் தவிர்ப்பதற்கும் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்கும் இதுபோன்ற சணல் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் சணல் தேசிய மையத்தின் உதவியுடன் கோவை பி.ஸ்.ஜி. பொறியியற் கல்லூரியில் சணல் சேவை மையம் இயங்கி வருகிறது. இந்த மையத்தில் சணலை உபயோகித்துப் பொருட்களைத் தயாரித்தல், புதிய தொழில்நுட்பத்தில் மேம்படுத்தப்பட்ட சணலின் உபயோகத்தைக் கண்டறிந்து மகளிர் சுயஉதவிக் குழுக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தொழில் முனைவோர்களுக்கு சணல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அதற்குத் தகுந்த பயிற்சி அளித்து, அதனை சந்தைப்படுத்துவதற்கு உதவி செய்து வருகின்றன. எனவே, சணல் சேவை மையத்தை முழுமையாகப் பயன்படுத்தி சணல் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அதிகமாக முன்வர வேண்டும்".

இக்கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.முகமது அஸ்லம், இ.ஆ.ப., அவர்கள் பேசும் போது தெரிவித்ததாவது :

"நமது மாநிலத்தில் பல்வேறு திட்டங்களில், விருதுநகர் மாவட்டம் பல சாதனைகளைப் படைத்து வருகின்றது. காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப தொழில்களை மேற்கொள்ள வேண்டும் என்ற வகையில், விருதுநகர் மாவட்டத்தில் சுயஉதவிக் குழுக்களின் பொருளாதாரம் மேம்படுத்துகின்ற வகையில் பல்வேறு புதிய தொழில்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு, இவற்றின் மூலம் சுயஉதவிக் குழுவினர் புதிய தொழில்களை மேற்கொண்டு தங்கள் பொருளாதாரத்தினை மேம்படுத்தி உள்ளார்கள். இன்றையதினம் நடைபெறுகின்ற பயிற்சி முற்றிலும் வேறுபட்ட ஒரு பயிற்சி ஆகும். ஒருமுறை பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்தால் அதனை அழிப்பது கடினமான செயல். அதனை அழிப்பதன் மூலம் காற்றில் நச்சுத்தன்மை உருவாகிறது. மண்ணின் தன்மையும்

கெடுகிறது. நீர்வளத்தைக் குறைக்கின்றது. தவறி கால்நடைகள் உட்கொள்ளும்போது கால்நடைகள் இறப்பதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. இவையெல்லாம் தவிர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில்தான் இயற்கை பொருட்களைக் கொண்டு நாம் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும். இதனடிப்படையில்தான் இன்றைய தினம் சணலைக் கொண்டு எவ்வாறு பொருட்களை உற்பத்தி செய்வது என்ற பயிற்சி சணல் சேவை மையத்தின் மூலம் அளிக்கப்படுகின்றது. சணல் பொருட்கள் நூறு சதவிகிதம் இயற்கையானது. அவை உறுதியாக, பாரமற்று எளிதில் தூக்கிச் செல்லக்கூடியதாக உள்ளது. சணல் பொருட்களை உபயோகிப்பதன் மூலம் நமது சுற்றுப்புறத்திற்கும், பூமியின் பாதுகாப்பிற்கும் நாம் உதவிட முடியும். இந்தியாவில் சணல் பொருட்கள் சந்தைப்படுத்துவதற்கு அரசு கண்காட்சிகள், வாங்குவோர்–விற்போர் சந்திப்பு மற்றும் விற்பனை நிலையங்களை ஏற்படுத்தித்தருகிறது. அவற்றின் மூலமாக தொழில்முனைவோர் சணல் பொருட்களை சந்தைப்படுத்தலாம். மேலும் நகரின் பல்வேறு அங்காடிகள் கடைகள் மூலமாகவும் சணல் பொருட்களை விற்பனை செய்யலாம். இந்த அரிய சந்தர்ப்பத்தினை மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பயன்படுத்திக் கொண்டு அதிகமான அழகான மேம்படுத்தப்பட்ட பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டு தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும்" என்று அவர் கூறினார்.

இக்கருத்தரங்கில் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு பி.எஸ்.ஜி. பொறியியல் கல்லூரியின் சணல் சேவை மையத்தினர் பயிற்சி அளித்தனர்.

இக்கருத்தரங்கில் கோவை பி.எஸ்.ஜி.பொறியியல் கல்லூரி முதல்வர் பேராசிரியர் விஜயரங்கன் வரவேற்புரையாற்றினார். பி.எஸ்.ஜி.பொறியியற் கல்லூரி சணல் சேவை மைய பொறுப்பாளர் டாக்டர் இராமசாமி திட்ட விளக்கவுரையாற்றினார். விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திரு. டி.கே.எஸ். மணிமந்திரி, நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் திரு. கிருஷ்ணன், மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் திரு. இராமா, மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திரு. கலைவாணன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திரு. வீரராகவன் நன்றி கூறினார்.

– **பொ. முத்தையா,**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
விருதுநகர் மாவட்டம்.

ஒரு வித்தியாசமான சாதனை!

ஒருவன் ஒரே வகுப்பில் பலமுறை தோல்வி அடைந்தால் அவனைக் 'கஜினி முகம்மது' என்று கிண்டல் செய்வோம். அதுவும் இரண்டு மூன்று முறை தோல்வி அடைந்தாலே இவ்வாறு சொல்வதுண்டு. ஆனால் சிங்கப்பூரில் ஒருவர் 28 ஆண்டுகள் முயன்று படித்து அறிவியல் பட்டம் வாங்கியிருப்பதும், அம்மாதிரி பட்டம் வாங்கியிருப்பவரின் வயது 70 என்பதும் உண்மையில் வியப்பூட்டும் நிகழ்ச்சிதான்.

அவர் பெயர் ஸ்டூவர்ட் பல்ட்வின் சிங்கப்பூரைச் சேர்ந்தவர். வயது 70. குடும்பச் சூழ்நிலை காரணமாக 16 வயதிலேயே இவரை வேலைக்குச் செல்லுமாறு கட்டாயப்படுத்தி வேலையில் சேர்த்துவிட்டார் இவரது தந்தை. இவருக்கோ படிக்க வேண்டும் என்பதில் கொள்ளை ஆசை. கல்லூரியில் சேர்ந்து படிக்க முடியவில்லை. படிப்புச் செலவிற்காக ஒரு சிறிய புத்தகக் கடையைத் தொடங்கினார்.

ஒரு வழியாகத் தனது நாற்பத்தி எட்டாவது வயதிலே அதாவது 1978ஆம் ஆண்டு சிங்கப்பூரில் உள்ள திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் பட்டப் படிப்பில் சேர்ந்தார் ஸ்டூவர்ட் பல்ட்வின். எப்படியும் அறிவியல் பட்டதாரி ஆகவேண்டும் என்ற வெறி அவரை உந்தித் தள்ளியது. விடா முயற்சியுடன் ஓராண்டல்ல, ஈராண்டல்ல இருபத்தி எட்டு ஆண்டுகள் தொடர்ந்து படித்தார். அவரது விடா முயற்சியின் பலன் 2000ஆம் ஆண்டில் தான் கிடைத்தது. அறிவியல் பட்டப் படிப்பில் தேர்ச்சிப் பெற்றார்.

இவர் பட்டப்படிப்பை முடித்தவுடன் பல்கலைக் கழகத்தினர் இவர் எப்போது பல்கலைக்கழகத்தில் தனது பெயரைப் பதிவு செய்தார் என்பதைத் தேடத் தொடங்கினர். தூசி மண்டிக் கிடந்த பழைய பதிவேடுகளைப் புரட்டிப் பார்த்து இவர் சேர்ந்த ஆண்டைக் கண்டு பிடித்தனர்.

இவருக்கோ ஒரு வழியாக தான் அறிவியல் பட்டப் படிப்பில் தேர்வு பெற்றது மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. "கல்வியின் மதிப்பு எனக்குத் தெரியும். எப்படியும் பட்டம் பெற வேண்டும் என்ற துடிப்புடன் செயல்பட்டேன்" என்கிறார் இந்த எழுபது வயது இளைஞர். மேலும் "நான் இத்துடன் என் படிப்பை முடித்துக் கொள்ளமாட்டேன்; டாக்டர் பட்டம் வாங்குவதே என் குறிக்கோள்" என்று பெருமையுடன் கூறுகிறார் இவர்.

இவரது பொழுதுபோக்கு புதை படிமங்கள் சேகரிப்பது. அதிலேயே இவரது பெரும் பொழுது கழிந்துவிட்டது. இப்போது அவரிடம் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட புதை படிமங்கள் உள்ளனவாம்.

ஸ்டூவர்ட் பல்ட்வின்னின் பெயர் இப்போது கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. உலகிலேயே மிக மிக மெதுவாகப் படித்துப் பட்டம் பெற்ற சாதனையாளர் இவர் என்று அந்தப் புத்தகம் இவரை அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஒரு வித்தியாசமான சாதனை தான்!

– **வியப்பூட்டும் உண்மைகள் 100**
என்ற நூலிலிருந்து...

மாணவ, மாணவியருக்கு கல்வி பயில நிதி உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.7.2004 அன்று தலைமைச் செயலகத்தில் B.E., B.Tech., MBBS., B.Sc., (Nursing) மற்றும் BPT (Physiotherapy) ஆகிய பிரிவுகளில் சேர்ந்து கல்விச் செலவுக்கு போதிய வசதியில்லாது தவித்த 41 மாணவ, மாணவிகளுக்கு, தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 10 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள்.

ஈரோடு மாவட்டம் எஸ்.சரவணகுமார், காஞ்சிபுரம் மாவட்டம் வி.விஜயலட்சுமி, ஆர்.பிரபு, ஜே. ராஜகோபால், நாகப்பட்டினம் மாவட்டம் ஆர். கிருத்திகா, சிவகங்கை மாவட்டம் சி.காசி ஆனந்தன், தேனி மாவட்டம் லக்ஷ்மிகாந்த சொரூபன், எஸ்.பிரேம்குமார், திருவள்ளூர் மாவட்டம் ஆர். கோபி ஆகியோர் பி.இ. பயிலவும், காஞ்சிபுரம் மாவட்டம் எச்.ஷபனா பானு பி.டெக். பயிலவும் தங்களுக்கு நிதி உதவி செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

இரண்டாம் ஆண்டு பி.இ. பயிலும் காஞ்சிபுரம் மாவட்டம் எம். வெங்கடேஷ் பிரபு, தேனி மாவட்டம் எம். சுந்தர மகாலிங்கம், எஸ். செல்வேந்திரன், தஞ்சாவூர் மாவட்டம் கே. சதீஷ்குமார், நாமக்கல் மாவட்டம் வி.பி. ஆனந்த், எம். துரைராஜ்,



எம். ஜான் பிரைட்டன், இரண்டாம் ஆண்டு பி.டெக். பயிலும் திருவள்ளூர் மாவட்டம் இ. மாரியப்பன், காஞ்சிபுரம் மாவட்டம் டி.நாகராஜ் ஆகியோரும், நிதி உதவி வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனு செய்திருந்தனர். மேலும், காஞ்சிபுரம் மாவட்டம் சி. பாபு, நாகப்பட்டினம் மாவட்டம் ஆர். கணேஷ்குமார், ஈரோடு மாவட்டம் எம். லோகநாதன், சிவகங்கை மாவட்டம் ஆர். நாகரத்தினம் ஆகியோர் மூன்றாம் ஆண்டு பி.இ. பயிலவும், காஞ்சிபுரம் மாவட்டம் டி.பிரேம்குமார், எஸ்.நந்தகுமார் ஆகியோர் மூன்றாம் ஆண்டு பி.டெக். பயிலவும் நிதி உதவி செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

அதேபோல, திண்டுக்கல் மாவட்டம் இ.கவிதா, ஈரோடு மாவட்டம் எஸ். யோகசத்யா, பி.ரெஜினாமேரி, எஸ்.கதிர்வேல், பெரம்பலூர் மாவட்டம் எம். செல்வராஜ், எம். சங்கர், புதுக்கோட்டை மாவட்டம் கே. தியாகராஜன், தஞ்சாவூர் மாவட்டம் டி. அருண்பிரசாத், திருவள்ளூர் மாவட்டம் பி. கார்த்திகேயன் ஆகியோர் மருத்துவக் கல்லூரியில் MBBS பயில இடம் கிடைத்து, போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் அவதிப்படும் தங்களுக்கு நிதி உதவி செய்யும்படியும், MBBS இரண்டாம் ஆண்டு பயிலும் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி ஏ. பிரபா தனது கல்விச் செலவுக்கு உதவும்படியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

திண்டுக்கல் மாவட்டம் எஸ்.திராவிட செல்வி, பெரம்பலூர் மாவட்டம் டி. இளவரசி, தேனி மாவட்டம் கே. உமா ஆகிய மூவரும் B.Sc. (Nursing) பயிலவும், மதுரை மாவட்டம் கே. நிர்மல்குமார், திருச்சி மாவட்டம் ஆர்.சாவித்திரி, தருமபுரி மாவட்டம் ஆர்.மதன்குமார் ஆகிய மூவரும் BPT (Physiotherapy) பயிலவும் நிதியுதவி செய்யும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனு செய்திருந்தார்கள்.

இவர்களது கோரிக்கையை பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், போதிய நிதி வசதி இல்லாமல் தவித்த இந்த 41 மாணவ, மாணவிகளுக்கும் 'முதலமைச்சர் பொது நிவாரண நிதி'யிலிருந்து, தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்க அனுமதி அளித்து இதற்கான காசோலைகளை 5.7.2004 அன்று அந்த மாணவ, மாணவிகளுக்கு நேரில் வழங்கினார்கள்.

நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட மாணவ, மாணவிகள் தங்களது குடும்ப சூழ்நிலையை அறிந்து தக்க நேரத்தில் நிதி உதவி வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். ❖

மூலிகைக் கண்காட்சி

பண்பாட்டின் பிறப்பிடமான தமிழகத்தின் லைநகரில் மேற்கத்திய கலாச்சாரத்தின் ஊடுருவலால் ம்மண்ணின் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை நெறிமுறைகள் கொஞ்சம் கொஞ்சமாக மாறி ருகின்றது. இதனால் இச்சமுதாயம் அதன் சமூக, ண்பாட்டு அடையாளங்களை இழந்து கொண்டிருக்கும், க்காலகட்டத்தில், கடந்த ஜுன் 28, 29, 30ஆம் ததிகளில் விடிவெள்ளியாக சென்னை அரும்பாக்கம், அண்ணா மருத்துவமனை வளாகத்தில் தமிழ்நாடு சித்த ருத்துவ பட்டதாரிகள் சங்கமும், தமிழ் மருத்துவக் ழகமும் இணைந்து இளம் மருத்துவ மாணவ, ாணவியரின் உதவியோடு ஒரு மாபெரும் மூலிகைக் ண்காட்சியை நடத்திக் காட்டினர். இந்திய ருத்துவத்துறையின் இயக்குநர் திரு.எம்.எஃப். பாரூகி, இ.ஆ.ப., அவர்கள், இக்கண்காட்சியை தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். சென்னை சித்த ருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் திருமதி. சுப்புலஷ்மி,எம்.டி.(எஸ்), அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மூலிகைக் கண்காட்சியில் சிறப்பம்சமாக அரிதான மூலிகைகள் மட்டுமல்லாது அனைவருக்கும் மிகவும் தெரிந்த மூலிகைகளும் வைக்கப்பட்டிருந்தன. மூலிகைகளின் பயன்பாடுகளைப் பற்றி மாணவ–மாணவியர் மூலம் மூலிகைக் கண்காட்சியை காண வந்தோருக்கு தெளிவாக விளக்கம் தந்தனர்.

அரிதான மூலிகைச் செல்வங்களின் புகைப்படங்கள் அதன் பெயருடன் ஒரு பகுதியில் பார்வைக்கு

வைக்கப்பட்டிருந்தன. இவைகளில் அவுரி, வெட்பாலை போன்ற அறிமுகமான மூலிகைகளுடன் நாகமல்லி, ஆதலை போன்ற அரிதான மூலிகைகளும் இடம் பெற்றிருந்தன.

மேலும் மூலிகைகள் அவற்றின் பயன்பாடுகளுக்கு ஏற்ப நோய், குணங்கள் பிரிக்கப்பட்டு மக்களுக்கு விளக்கம் தரப்பட்டது.

உதாரணமாக, சர்க்கரை நோய்க்கு சிறுகுறிஞ்சான், ஆவாரை, நாவல், சீந்தில் மற்றும் சரக்கொன்றை; கல்லீரலுக்கு கீழ்க்காய்நெல்லி, கரிசாலை, மூக்கிரட்டை, பிரண்டை; காயகல்ப மூலிகைகள் (Natural-anti oxidants) பொன்னாங்காணி, எலுமிச்சை மற்றும் மஞ்சள் கரிசாலை; தோல் நோய்களுக்கு பூவரசு, சிவனார்வேம்பு, வெட்பாலை, ஆடுதீண்டாபாளை, ஆகாசகருடன் மற்றும் கருஞ்சீரகம்; மலச்சிக்கலுக்கு பொன்னாவாரை, அரைக்கீரை, ஆமணக்கு போன்றவை; மலடுநீக்கும் மூலிகைகள் ஆண்:– ஓரிதழ் தாமரை, பூனைக்காலி சூரணம் மற்றும் தண்ணீர் விட்டான் கிழங்கு; பெண்:– அசோகு, குமரி மற்றும் அரசு; வயிற்றுப்புண் தீர்ப்பவை பிரண்டை, சீந்தில், வில்வம், கரிசாலை மற்றும் மணத்தக்காளி; சிறுநீரகக் கற்களுக்கு சிறுபீளை, நெருஞ்சில், மூக்கிரட்டை, நீர்முள்ளி, வெள்ளரி விதை, சுரை விதை மற்றும் மாவிலிங்கம்; உடல்தேற்றிகள் அமுக்ரா தேற்றான் மற்றும் நெல்லிக்காய் ஆகியவை இடம் பெற்றிருந்தன.

கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், கார்போ அரிசி, மிளகு, சுக்கு, திப்பிலி, குன்றிமணி, அத்தரகாரம், வால்மிளகு, வாய்விளங்கம், தண்ணீர்விட்டான் மற்றும் கோரைக் கிழங்கு போன்றவை இருந்தன.

மூலிகைக் கண்காட்சியை சித்த, ஆங்கில, ஆயுர்வேத, யுனானி, ஹோமியோபதி மற்றும் இயற்கை மருத்துவர்கள் உட்பட அனைத்துத் தரப்பு மக்களும் பங்கேற்று பயனடைந்தனர்.

இக்கண்காட்சியின் மூலம் பொது மக்கள் பண்டைய மருத்துவத்தில் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியென எடுத்தியம்பியது.

❖ ❖ ❖

மூலிகைகளைத் தவிர மூலிகைப் பொருட்களும் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. அவற்றில் நாபி, அதிவிடயம், அதிமதுரம்,

அதிசய மனிதர்

மனதில் உறுதி இருந்தால் எதையும் சாதிக்கலாம். வரலாற்றில் இடம் பெறலாம். உடல் ஊனமோ மற்ற எவ்விதத் தடையும் ஒரு பொருட்டல்ல! இதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். இத்தகையவர்களின் சாதனை நமக்கு பிரமிப்பையும், வியப்பையும் அளிக்கும். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த வில்லாலோபார் பிரபு ரோட்ரிகோ ராமிரெஸ்-டி-ஸாவெட்ரா ஒய். வினெண்ட் என்பவர் அத்தகைய விந்தை மனிதர்களில் ஒருவர். பெயரே இத்தனை நீளமாக உள்ளதே. இதுவே ஒரு விந்தைதான். ஆனால் இன்னொரு விந்தையும் உண்டு. 1866 ஆம் ஆண்டு பிறந்த இவர் அறுபது ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். அதற்குள் அவர் செய்த சாதனை அனைவரையும் வியக்க வைக்கும்.

முதலில் இவர் ஸ்பெயின் இராணுவத்தில் கர்னலாகப் பணி புரிந்தார். பின்னர் லிஸ்பன், வாஷிங்டன், பிரஸ்ஸல்ஸ் ஆகிய இடங்களில் ஸ்பெயினின் தூதராகவும், ஸ்பெயினில் ஸாரகோஸா பிராந்திய ராணுவத் தளபதியாகவும் இருந்தார். பெல்ஜிய நகரங்களான கெண்ட், பிரஸ்ஸல்ஸ், லீஜ், ஆண்ட்வெர்ப் முதலான நான்கு நகரங்களும் இவருக்கு 'கௌரவ குடிமகன்' என்ற உரிமையை அளித்தது. ஜெர்மனியின் ஆக்கிரமிப்பிற்குள்ளான பெல்ஜியத்திற்கு ஸ்பெயினின் தூதராக இருந்தார். லீஜ் பல்கலைக்கழகமும் புருகெஸ் பல்கலைக்கழகமும் இவருக்கு டாக்டர் பட்டம் அளித்து கௌரவித்தது.

முதல் உலகப் போரின்போது பிரிட்டிஷாருக்காக உளவு பார்த்ததாக எடித் காவெல் எனும் நர்ஸ் ஜெர்மனியால் கைது செய்யப்பட்டு 1915ஆம் ஆண்டு கொல்லப்பட்டாள். அவளது விடுதலைக்காக ஜெர்மனியை எதிர்த்து துணிச்சலாகப் போராடி பெரும் புகழ் பெற்றார்.

அது சரி! இவரது இத்தகைய செயல்களில் வியப்படைவதற்கு என்ன இருக்கிறது என்று நீங்கள் கேட்க நினைப்பது தெரிகிறது. அது என்ன தெரியுமா? பிறக்கும் போதே இரண்டு கால்களும் கிடையாது! ஒரு கையும் கிடையாது இந்த அதிசய மனிதருக்கு! இது விந்தையிலும் விந்தையல்லவா? இவர் விந்தை மனிதர் மட்டும்தானா? இல்லை...இல்லை... இவர் வியக்க வைக்கும் மனிதர்.

❖ ❖ ❖

பெண் குலத்தின் பொன் விளக்கு
டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

புதுமைப் பெண்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்ட மாதர் குல மாணிக்கங்கள் தமிழகத்தில் மிகச் சிலரே. அந்த மிகச் சிலரில் தலையாய இடம் பெறும் தகுதி பெற்றவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள்!

அந்தப் பெருமாட்டி 30.7.1886 அன்று புதுக்கோட்டை நகரில் பிறந்தார்.

முத்துலட்சுமி 4–ஆவது வயதில் திண்ணைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு ?' என்று வினாக்குறி எழுப்பிய காலம் அது! ஆகவே எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதும் என்ற எண்ணத்தில்தான் அவரது தந்தை நாராயணசாமி பள்ளியில் சேர்த்தார். ஆனால் முத்துலட்சுமியின் நுண்ணறிவும், நினைவாற்றலும் சிறந்திருந்தபடியாலே, ஆறாம் வகுப்பை ஆசிரியர் புகழத்தக்க வகையில் முடித்தார். 13 வயதில் எட்டாம் வகுப்பை முடித்தார்.

கல்லூரிக் கல்வி கற்க விரும்பிய முத்துலட்சுமியின் முயற்சிகளுக்குத் தந்தை ஊக்கமளித்தார்.

1907–இல் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார்.

மருத்துவப் படிப்பில் சேர்ந்த முதல் பெண்மணியான முத்துலட்சுமி ஒவ்வொரு ஆண்டும் நற்சான்றிதழ்களும் தங்கப் பதக்கங்களும் பெற்றுத் தனிச் சிறப்போடு 1912–இல் மருத்துவப் பட்டதாரியானார். இந்தியாவிலேயே மருத்துவக் கல்லூரியில் பயின்ற முதல் பெண் பட்டதாரி என்ற சிறப்புக்கும் உரியவரானார்.

இக்காலகட்டத்தில் டாக்டர் நஞ்சுண்டராவ், அன்னி பெசண்ட் அம்மையார், கவிக்குயில் சரோஜினி நாயுடு, மகாகவி பாரதி ஆகியோரின் தொடர்பு கிடைத்தது.

முத்துலட்சுமி அம்மையார் சென்னை எழும்பூர் பெண்கள் மருத்துவமனையில் ஹவுஸ் சர்ஜனாகச் சேர்ந்தார். சென்னை மருத்துவத்துறை வரலாற்றில் முதல்

பெண் ஹவுஸ் சர்ஜன் இவரே! 1913–இல் இப்பயிற்சியையும் முடித்து எழும்பூரில் தனியே மருத்துவத் தொழில் புரியத் தொடங்கினார்.

1923–இல் டாக்டர் முத்துலெட்சுமியார் சகோதரி சுந்தரம்மாள் புற்றுநோயால் இயற்கை எய்தினார். அவரின் மரணம், புற்றுநோய் சிகிச்சைத் துறையில் டாக்டர் முத்துலட்சுமியின் கவனம் திரும்பக் காரணமாயிற்று.

டாக்டர் முத்துலட்சுமியின் மருத்துவ ஆற்றலையும், அரும்பணியையும் கண்ட இந்திய அரசு அவரை, குழந்தைகள் – பெண்கள் மருத்துவ நோய் ஆராய்ச்சிப் படிப்புக்காக இலண்டனுக்கு அனுப்ப முன்வந்தது. 1925–இல், கணவருடனும் குழந்தைகளுடனும் இலண்டன் சென்றார். செல்சியா மருத்துவமனையில் தாய்–சேய் மருத்துவப் பயிற்சி பெற்றார். புற்று நோய் ஆய்வுப் பயிற்சி பெற ஏதுவாக இருக்கும் என்பதற்காகவே இலண்டன் வந்த டாக்டர் முத்துலட்சுமி, இராயல் புற்றுநோய் மருத்துவமனையில் புற்றுநோய் ஆய்வும் செய்தார்.

தாயகம் திரும்பிய டாக்டர் முத்துலட்சுமி நாட்டுப் பெண்களின் நிலையை உயர்த்த அரும்பணியாற்றினார். பின்னர் அம்மையார் சட்ட மேலவை உறுப்பினராக ஆக்கப்பட்டார். முதன் முதல் பெண்களுக்கு வாக்குரிமை உண்டு என அறிவித்ததும், முதன் முதல் சட்ட மேலவையில் ஒரு பெண் இடம் பெற்றதும் தமிழகத்தில்தான் நிகழ்ந்தன. சட்ட மேலவைத் துணைத் தலைவராகவும் அம்மையார் பொறுப்பேற்றார். 1926 முதல் 1930 வரை சட்ட மேலவை உறுப்பினராக அம்மையார் ஆற்றிய பணிகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை.

அவரது பெருமுயற்சி காரணமாக இயற்றப்பட்ட சமூக சீர்திருத்தச் சட்டங்கள் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை தேவதாசி ஒழிப்புச் சட்டம், விபசார ஒழிப்புச் சட்டம், பெண்கள் திருமண வயதை உயர்த்தும் சட்டம் ஆகியவையாகும்.

1927–ஆம் ஆண்டு சென்னைக்கு வந்த அண்ணல் காந்தி அடிகளை டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சந்தித்து தேவதாசி ஒழிப்புச் சட்டத்துக்கு

ஆதரவு வேண்டினார். பல பொதுக் கூட்டங்களில் காந்தியடிகள் அம்மையாரின் முயற்சியைப் பாராட்டி ஆதரவளித்தார். மேலும் நீதிக் கட்சித் தலைவர்கள் பனகல் அரசர், எம்.கிருஷ்ண நாயர் ஆகியோர், தந்தை பெரியார், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், தமிழ்த் தென்றல் திரு.வி.க. மற்றும் அனைத்துக் கட்சியினர் ஆதரவையும் பெற்றார்; தமது முயற்சியில் மாபெரும் வெற்றி கண்டார்.

1930–ஆம் ஆண்டில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் இல்லத்தில் அவ்வை இல்லம் தொடங்கப்பட்டது.

1936–இல் அடையாறுக்கு அவ்வை இல்லம் மாற்றப்பட்டது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, அவ்வை பொதுப்பணி மருத்துவமனையொன்றை நிறுவி சுற்றுப்புற மக்களுக்கு மருத்துவப் பணியாற்றினார்.

1937 முதல் 1939 வரை சென்னை மாநகராட்சி, நியமனக் குழு உறுப்பினராகப் பணியாற்றிய காலத்தில் மருத்துவப் பணிக்காகவும், சுகாதாரப் பணிக்காகவும் சிறந்த தொண்டாற்றினார்.

கண்ணெதிரே தம் தங்கை புற்று நோயால் நலிந்து மாண்டதைக் கண்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, பலரின் உயிரைப் பலிகொள்ளும் இந்தப் பயங்கர நோய்க்கு முடிவு காண, புற்றுநோய் மருத்துவமனை அமைக்க அரும்பாடுபட்டார். நாடு விடுதலை பெற்ற பின்பே அவரது கனவு நனவாயிற்று. 1949–இல் புற்றுநோய் நிவாரண நிதி அமைப்பை ஏற்படுத்தி, இரண்டாண்டுகள் கடும் முயற்சி எடுத்து, நிதி வசூல் செய்து புற்றுநோய் நிலையத்தை அடையாற்றில் ஏற்படுத்தினார். 1952 அக்டோபரில் இந்தியப் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு புற்றுநோய் மருத்துவமனைக்கான அடிக்கல் நாட்டினார்.

1954–57 ஆண்டுகளில் தமிழ்நாடு சமூக நல வாரியத் தலைவராகத் தொண்டாற்றினார். சட்டமன்ற மேலவை உறுப்பினராக இரண்டாவது முறை அரும் பணியாற்றினார்.

1956–இல் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டிக்கு பத்மபூஷன் விருது வழங்கி மைய அரசு சிறப்புச் செய்தது.

இளமையிலிருந்து நோயோடு போராடி, மருத்துவப் பணியும், மக்கள் பணியும் ஆற்றிய மாதரசி தமது 82–ஆம் வயதில் 1968 ஜூலை 22 அன்று அடையாறு புற்றுநோய் நிலையத்தில் அமைதியாக விழிகளை மூடினார்.

அம்மையாரின் வாழ்வு பெண் குலத்துக்குப் பெரும் வழிகாட்டியாக அமைந்தது. அவர் ஈட்டிய வெற்றிகள் ஏராளம். பல துறைகளில் முதன் முறையாக ஈடுபட்ட பெண்மணி என்ற பெருமையைப் பெற்றவர் இவர். மருத்துவப் படிப்பில் சேர்ந்த முதல் மாணவி இவரே! இந்தியாவிலேயே மருத்துவக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்ற முதல் பெண் பட்டதாரி இவரே! சென்னை மருத்துவத் துறை வரலாற்றிலேயே முதல் பெண் ஹவுஸ் சர்ஜன் இவரே! சென்னை இந்திய மகளிர் மன்றத்தின் முதல் இந்திய உறுப்பினர் ஆனவர் இவரே! தமிழகச் சட்ட மேலவையின் முதல் பெண் உறுப்பினரும் பெண் துணைத் தலைவரும் இவரேயாவார்.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களை ஜெர்மனி குடியரசின் வெளியுறவுத்துறை அமைச்சரும், துணை அதிபருமான ஜோஷ்காஃபிஷர் அவர்கள் 20–7–2004 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 102–ஆவது பிறந்தநாளையொட்டி 15–7–2004 அன்று, சென்னை காமராசர் சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு, மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. **ஓ. பன்னீர்செல்வம்**, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



தியாகி ஆர்யா என்கிற **பாஷ்யம்**

தியாகி **சங்கரலிங்கனார்**

தியாகிகள் தினத்தையொட்டி, 17–7–2004 அன்று சென்னை கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள தியாகிகள் மண்டபம் முகப்பில் உள்ள தியாகி ஆர்யா என்கிற **பாஷ்யம்** மற்றும் தியாகி **சங்கரலிங்கனார்** ஆகியோர் சிலைகளுக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத்தலைவர் டாக்டர் **கா. காளிமுத்து**, மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு. **டி. ஜெயக்குமார்**, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **கே.பி. அன்பழகன்** மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



கர்மவீரர் காமராசர்

"புகழ் மாலை"

தியாகத்தின் சின்னம்

தியாகத்தின் அடையாளச் சின்னம் காமராஜர். போராடிப் போராடி வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராஜர். காமராஜர் முதல்வராக இருந்தபோது வீணாக சட்டப் பிரச்சினையை வைத்து அவர் செய்ய வேண்டிய காரியங்களைத் தள்ளிப் போட்டதில்லை. மக்களுக்காகத்தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர்.

– டாக்டர் எம்.ஜி.ஆர்.

நல்ல காரியங்களைச் செய்தவர்

காமராஜர் தமது பணிகளின் மூலம் நாட்டின் தரத்தை உயர்த்த முயன்றார்; தமிழர்கள் பெருமைப்படத்தக்க நல்ல காரியங்களைச் செய்தார்.

கல்லூரியில் அவர் படித்துப் பட்டம் பெறவில்லையே தவிர, படிக்கவே இல்லை என்று பொருள் கொள்ளக் கூடாது. அவர் தமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் படித்துக் கொண்டுதான் இருப்பார். இதை, ஆறடி மேடையில் மாலை நேரத்தில் பொதுக் கூட்டங்களில் மட்டுமே பார்ப்பவர்கள் புரிந்து கொள்ள முடியாது.

– பேரறிஞர் அண்ணா

ஒளி வீசிய எளிமை

பல்வேறு பண்பு நலன்களைக் கொண்டு விளங்கியவர் பெருந்தலைவர் காமராஜர். அவருடைய எளிமை தமிழகத்தை மட்டுமல்ல, இந்தியாவை மட்டுமல்ல, உலகத்தையே வசீகரித்தது. முன்பு சோவியத் நாடு என்று அழைக்கப்பட்ட தற்போதைய ரஷ்யாவில் அவர் சென்ற இடங்களில் எல்லாம் அவருக்கு மக்கள் மகத்தான வரவேற்பு அளித்தார்கள். அவருடைய எளிமை எல்லோரும் அறிந்ததே. மாஸ்கோ க்ரெம்லின் மாளிகையில் கூட கதர் வேஷ்டி, முக்கால் கைச்சட்டை, ஒரு துண்டு என்று எளிய காட்சியிலேயே அவர் தோன்றினார். உடையில் மட்டுமல்ல; உணவில், பிறருடன் பழகுவதில், மேடை பேச்சு இப்படி எல்லாவற்றிலும் அவருடைய எளிமை ஒளி வீசியது.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா

சமதர்மக் கொள்கை

ரஷ்ய ஆட்சியில் பொதுவுடைமைத் தத்துவம் ஏற்பட லெனின் எப்படிக் காரணமாயிருந்தாரோ, அதே மாதிரிதான் இந்தியாவில், இந்திய அரசாங்க ஆட்சியில், சமதர்மம் கொள்கையாக ஏற்பட திரு. காமராஜர் தான் காரணம்.

– தந்தை பெரியார்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

தமிழ்கூறும் நல்லுலகம் உள்ளவரை மறக்கமுடியாத பெரும் கவிஞராகத் திகழ்பவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. இவர் தமிழுக்குச் செய்த மாபெரும் தொண்டு காலத்தால் அழியாதது. இவர் 1897ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் நாள் பிறந்தார். தந்தையார் சிவதாணு பிள்ளை. தாயார் ஆதிலட்சுமி அம்மாள்.

இளமையில் தேரூர் தொடக்கப் பள்ளியில் படித்தார். கேரளத்திற்கு அருகாமையில் உள்ள இவரது சொந்த ஊரில் தாய்மொழித் தமிழைக் கற்பதைவிட மலையாளம் கற்கக் கூடுதல் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. எனினும் கவிமணியின் தமிழ்ப் பற்று இதனால் குறையவில்லை.



இளமையிலேயே நினைவாற்றல் மிக்க கவிமணி எதையும் எளிதில் மனப்பாடம் செய்துவிடும் திறன் படைத்தவர். இசைஞானம் இவருக்கு மிகவும் அதிகம்.

கவிமணியின் கவிதைகள் பத்திரிகைகளால் பெரிதும் வரவேற்கப்பட்டு வெளியிடப்பட்டன. 'மான்மியம்' என்கிற தலைப்பில் கவிமணி எழுதிய தொடர்கவிதைத் தொகுப்பு நூல் நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் என்பதாகும். இந்நூல் பெரும் புகழ் பெற்றது. இந்நூல் தமிழ்த்தாய்க்கு ஓர் அணிகலனாக அமைந்துவிட்டது.

இவர் படைத்த 'மலரும் மாலையும்', 'ஆசிய ஜோதி', 'உமர்கய்யாம் பாடல்கள்' வினாயகம் பிள்ளையின் கீர்த்தனங்கள், கவிமணியின் உரை மணிகள், காந்தளூர்ச்சாலை என்கிற பிற படைப்புகளும் மிகச் சிறந்தவை.

கவிமணி பெரும் கவிஞர் நிலையில் வைத்துப் போற்றப்பட்டார். 1940ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் தேதி சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த புலவர் பெருங்குழு அறிஞர் பெருமான் உமாமஹேஸ்வரனார் தலைமையில் தேசிக விநாயகம் பிள்ளைக்கு 'கவிமணி' என்கிற பட்டத்தைச் சூட்டியது.

"நல்ல சகுனம் நோக்கிச் செல்லடி – சென்று
நான் படும் பாடவர்க்குச் சொல்லடி" –

என்கிற கவிமணியின் பாடலைத் தமிழ் மேடைகளில் நடனமணிகள் பாடி, ஆடி மகிழ்ந்தனர்.

கவிமணி எழுதிய 'ஆசிய ஜோதி' ஒரு வரலாற்றுக் காவியம். புத்தரின் வாழ்க்கையையும் தத்துவத்தையும் ஆராய்ந்து எளியவர்க்கும் புரியும்படி பாடல்களாக அமைத்தார். நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் 'ஆசிய ஜோதி'யைப் பற்றிக் குறிப்பிடுகையில், "ஆசியஜோதி எனும் புத்தர் போதம், அழகு தமிழில் சொன்னான் – அதுவே போதும்" என்று பாடியுள்ளார்.

பெண் உரிமைக்காகப் பாடல்கள் பல எழுதியுள்ளார் கவிமணி. அவரது பாடல் ஒன்று மிகப் பிரபலமானது. அது

"மங்கையராய் பிறப்பதற்கே
நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா"

– என்னும் உள்ளம் நெகிழ வைக்கும் பாடலாகும்.

இந்தப் பாடலை இன்றளவும் தமிழ்நாட்டு மேடைகளில் பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் கையாண்டு வருகின்றனர்.

மது ஒழிப்பு அவரது அடுத்த சிறந்த இலட்சியம். திருவிதாங்கூரில் மதுக்கடைகள் மூடப்பட்டபோது,

உமர்கய்யாம் எழுதிய 'ருபாயத்' என்கிற சிறந்த கவிதை நூலைத் தமிழில் சிறப்புறத் தந்தார் கவிமணி. இது இவரது ஈடுஇணையில்லாத படைப்பாகும்.

வெயிற்கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுமுண்டு
கையில் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வகீதம் பல உண்டு
தெரிந்து பாட நீயுண்டு
வையம் தருமிவ்வளமின்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ"

– என்று உமர்கய்யாமின் தத்துவம் ஓர் இழை பிசகாது கவிமணியின் பாடலாகியது.

"பருவமழை பொய்யாது பெய்யவேண்டும்
பயிர்களெல்லாம் செழித்தோங்கி வளரவேண்டும்
தருமநெறி தவறாது தழைக்கவேண்டும்
சாதிமதச் சண்டையெல்லாம் ஒழியவேண்டும்"

– என்பது கவிமணியின் மற்றொரு பாடல்.

தமிழுக்கு தொண்டு செய்து, தமிழ் இலக்கிய உலகில் நீங்கா இடம் பெற்றவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. தமிழ்ப் பணிகள் பல புரிந்த தகைசால் கவிஞர் கவிமணி என்றால் அது மிகையல்ல. ❖

ஏலகிரியில் எழில்மிகு கோடைவிழா

மலைகளின் இளவரசி என அழைக்கப்படும் ஏலகிரி மலை, வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஏலகிரி மலை 29.2 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டது. கடல் மட்டத்திலிருந்து 3,500 அடி உயரத்தில் இம்மலை அமைந்துள்ளது. ஏலகிரி, ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்ல தகுந்த தட்பவெப்ப சூழல் கொண்ட மலைப்பகுதியாகும்.

இம்மலையில் கண் கவரும் இடங்களாக படகு இல்லம், சிறுவர் பூங்கா, அரசு பழத்தோட்டம், மூலிகைப் பண்ணை, மலை மீதான நீண்ட நடைபாதை, டெலஸ்கோப் பார்வை மையம், வேலவன் திருக்கோயில், மங்களம் ஏரி, நிலாவூர் ஏரி போன்றவை இயற்கை அழகுடன் அமைந்துள்ளன. இந்த எழில்மிகு ஏலகிரி மலையில் சுற்றுலா கோடைவிழா ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு ஏலகிரி மலை சுற்றுலா கோடைவிழா, மலர்க் கண்காட்சி மற்றும் தமிழக அரசின் மூன்றாண்டு சாதனை பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சியை 12.6.2004 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் கிராமிய கலை நிகழ்ச்சிகள், போட்டிகள், பட்டிமன்றம், இன்னிசை நிகழ்ச்சிகள், பல்சுவை நாட்டியம், விளையாட்டுப் போட்டிகள், நாய் கண்காட்சி, சிலம்பாட்டம், கராத்தே பயிற்சி, கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, ஆட்டங்கள், அரசின் சாதனை விளக்கக் கண்காட்சி ஆகியவை நடத்தப்பட்டன. விழாவின் இறுதி நாளான 13.6.2004 அன்று கோடைவிழா விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ. மில்லர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். ஏழை, எளிய மக்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள் வழங்கினார். விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் "ஏலகிரி மலை சுற்றுலா இடங்களைப் பற்றி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் பல்வேறு கையேடுகள் வெளியிடப்படும். மேலும் மாவட்ட இணையதளம், மற்றும் சுற்றுலா இணைய தளத்தில் இடம் பெற ஏற்பாடு செய்வதோடு, மலையேறும் போட்டி நடத்துபவர்களுக்கு உரிய தகவல்கள் குறித்தும் வெளியிடப்படும்" என்று தெரிவித்தார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ. மில்லர் அவர்கள் பேசும்போது , "மொழி, மதம்,

றம், இனம் என்ற எல்லைகளைக் கடந்து மக்களிடம் னித நேயத்தை வளர்க்கும் சக்தி வாய்ந்த பாலமாக ற்றுலா திகழ்கிறது. தமிழகத்தை சுற்றுலாவின் அச்சாணியாகவும், சென்னையை சுற்றுலா நுழைவாயிலாகவும் மேம்படுத்தும் நோக்கத்துடன் சுற்றுலாவுக்கு முக்கியத்துவமும், ஆக்கபூர்வ பணிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீட்டையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள் என்றும் தெரிவித்தார்கள். மேலும், தமிழகத்தில் சுற்றுலா மேம்பாட்டுக்கு தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. ஏலகிரி மலையில் உள்ள ஏரியில் புதிய படகுகள் விடுவதற்கும், நிலாவூர் ஏரியில் புதிய படகு இல்லம் அமைப்பதற்கும் முயற்சி எடுக்கப்படும்" என்று கூறினார்.

விழாவில், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள் :

"ஏலகிரி ஊராட்சியில் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.24 இலட்சம் மதிப்பில் 52 பணிகளும், 2002–2003ஆம் ஆண்டில் 19 பணிகள் ரூ.14 இலட்சம் மதிப்பிலும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.16 இலட்சம் செலவில் படகு ஏரிக்கரை அகலப்படுத்தும் பணி, குடிநீர் வசதி, நிலாவூர் ஏரி ஆழப்படுத்தும் பணி, ஜலகம்பாறை அருவி, தடுப்புப் பணிகள், மலையைச் சுற்றியுள்ள இடங்களில் தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

எல்லாக் காலங்களிலும் மிதமான தட்பவெட்பநிலை கொண்டது ஏலகிரி. இது வேறு எந்த மலைகளிலும் காணமுடியாத ஒன்று. ஆன்மிகத் துறையில் முக்கியத்துவம் அளிப்பது போல் பொதுமக்கள் சுற்றுலாவுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஏலகிரியில் தேன் வளர்ப்புக்கு ஆர்வம் உள்ளவர்கள் உடனடியாக கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கி அதன் மூலம் தேன் உற்பத்தி செய்தால் அதை முழுவதும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் பெறும் வாய்ப்பு உருவாக்கப்படும்.

கிராமப்புற வளர்ச்சிக்கு முக்கியமாக கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, வேளாண்மைத் துறை உள்ளது. இதை மேம்பாடடையச் செய்யும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை தொடங்கி செயல்படுத்தி வருகிறார்" என்று தெரிவித்தார்.

– மா. கலைமணி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களை 14–7–2004 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் டாக்டர் எம்.ஆர். சிவசாமி அவர்கள் தலைமையில், தமிழக விவசாயிகள் சங்கத்தின் பொறுப்பாளர்களும் மற்றும் சங்கப் பிரமுகர்களும் நேரில் சந்தித்து இலவச மின்சாரம் மற்றும் வீட்டு உபயோகத்திற்கான மின்கட்டணக் குறைப்பு போன்ற பல சலுகைகளை வழங்கி விவசாயிகளின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக சர்க்கரைச் சோளம், காட்டாமணக்கு, சர்க்கரைக் கிழங்கு ஆகிய மாற்றுப்பயிர்கள் பயிரிடும் திட்டம் வழங்கியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

துன்பம் வரும் போது சாதுர்யம் தேவை

டெல்லியை அப்போது ஆண்டு கொண்டிருந்தார் பேரரசர் அக்பர். அவர் ஒரு நாள் காலையில் உணவருந்தி விட்டு வெளியில் வந்தார். அப்போது அவர் எதிரே பீர்பால் வந்தார். அவரைப் பார்த்தவுடன் அவரிடம் ஏதேனும் வேடிக்கைச் செய்ய வேண்டும் என்று அவர் எண்ணினார்.

'ஓய் பீர்பால், இப்போதே நமது டெல்லியில் உள்ள காகங்களின் மொத்தத் தொகையையும் எண்ணில் சொல்ல வேண்டும் என்று நான் உத்தரவிடுகின்றேன்?' என்றார்.

இதைக் கேட்ட பீர்பால் புன்முறுவலுடன் சொன்னார்.

'இதை இனிமேல் புதிதாகக் கணக்கெடுக்க வேண்டியதில்லை ஆலம்பனாவ். இதை எப்போதாவது நீங்கள் கேட்பீர்கள் என்று நான் கருதினேன். ஆகவே இது குறித்து நான் தெளிவாகக் கணக்கு வைத்திருக்கிறேன்.'

இதைக் கேட்ட அக்பர் திடுக்கிட்டார்.

'நான் சொல்லுவதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா பேரரசே! இதோ இப்போதே அந்தக் கணக்கைச் சொல்லி விடுகின்றேன். டெல்லியில் உள்ள மொத்தக் காகங்களின் எண்ணிக்கை அறுபதிலிருந்து ஐந்நூற்று ஐம்பத்து இரண்டு காகங்கள்' என்று கூறினார் பீர்பால்.

பீர்பால் தன்னிடம் இம்முறை வசமாக மாட்டிக்கொண்டார் என்று எண்ணிய அக்பர், 'அது எப்படி அவ்வளவு சரியாகக் கணக்கிட்டுச் சொல்ல உங்களால் முடிந்தது?' என்று கேட்டார்.

'ம்னிதன் நினைத்தால் முடியாதது எதுவுமே இல்லை பேரரசே' என்று கூறினார் பீர்பால்.

'ஒரு வேளை நீங்கள் கூறிய கணக்குப்படி இல்லாமல், காகங்கள் கூடவும் இருக்கலாம், குறையவும் இருக்கலாமில்லையா?'

'இருக்கலாம்!'

'அப்படி என்றால் நீங்கள் சொன்னது பொய்யா?'

'இல்லை, உண்மைதான்! நான் கூறிய காகங்களுக்கு மேல் ஒரு வேளை அதிகமாக இருந்தால் அது என் தவறு இல்லை. மனிதர்களுக்குத்தான் உறவினர்களும் நண்பர்களும் இருப்பார்கள் என்ற கட்டாயம் இல்லையே!

பறவையினங்களுக்கும் உண்டல்லவா? அதன்படி பார்த்தால் இங்குள்ள காகங்களின் நண்பர்களும், உறவினர்களும் வெளியூரிலிருந்து நம் ஊர்க் காகங்களின் வீட்டுக்கு விருந்துண்ணவும், கலந்து உரையாடவும் வந்திருக்கலாமே!' என்றார் பீர்பால்.

'ஒரு வேளை நீங்கள் சொன்ன தொகைக்கும் குறைவாக இருந்தால்?'

'அதுவும் என் தப்பில்லை! நம் ஊர்க் காகங்களைத் தேடித்தான் மற்ற ஊர்க் காகங்கள் வருமா? நம் காகங்களும் பிற தேசங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்து விருந்து செய்து வரப் போயிருக்கலாம் இல்லையா?'

'இதற்கு மேலும் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் நீங்களே காகங்களின் எண்ணிக்கையைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்! எனக்கு அதில் தடையில்லை!'

அக்பர், பீர்பாலின் புத்திசாலித்தனத்தைக் கண்டு பிரமித்தார்.

நீதி மொழி :— சொல்வன்மை உள்ளவரை வெல்வது அரிது.

"அறிவு உடையார் எல்லாம் உடையார் அறிவு இலார்
என் உடையரேனும் இலர்."

திருக்குறள் : 430

அறிவுடைமை எனப்படுவது புத்திசாலித்தனம். அறிவு உடையவர்கள் மற்ற எது இல்லாவிட்டாலும் எல்லாம் உள்ளவர்களாவார்கள். மற்ற எது இருந்தாலும் அறிவில்லாதவர்கள் ஒன்றும் இல்லாதவர்களே யாவார்கள்.

அரசியல் : அதிகாரம் 43

திருக்குறள் காட்டும் எளிய நீதிக்கதைகள் நூலிலிருந்து...

தமிழ்நாட்டில் கல்வெட்டுகள்

கல்லில்-வரி வடிவில் எழுத்துக்கள்

இந்தியப் பெருநாட்டில் கற்பாறைகளில், மலைக் குகைகளில், கல் தூண்களில், கருங்கல்லால் கட்டப்பட்ட கோயில்கள் ஆகியவற்றில் கல்லெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

உருவங்கள் பல்வேறுபட்ட நிலைகளில் புடைப்புச் சிற்பமாக உருவாக்கப்பட்ட தனிக் கற்களும் கிடைத்துள்ளன. இவை, நடுகற்கள், வீரக் கற்கள், சதிக்கற்கள் எனப் பெயர் பெறுவனவாகும். இவைகளில் வரிவடிவில் எழுத்துக்கள் செதுக்கப்பட்டுள்ளன.

காலத்தாலும் பிறவாலும் எளிதில் அழிவு பெறாமல் நிலைத்து நின்று, வருங்கால மக்களும் அறிந்து கொள்வதற்கு ஏதுவாகவே கல்லெழுத்துக்கள் தோன்றியுள்ளன.

இத்தகைய கல்வெட்டுகளில், காணப்பெறும் செய்திகள் முற்கால நிகழ்ச்சிகளை இக்காலத்தவர் அறிந்து கொள்வதற்கு இடனாக இருப்பதுடன், அக்கால எழுத்துக்களின் வரிவடிவ நிலைகளையும் அறிந்து கொள்வதற்குச் சான்றாகவும் உள்ளன.

கல்லெழுத்தின் கால வளர்ச்சியாகச் சாசனங்கள் செப்பேடுகளில் பொறிக்கப்பெறும் வழக்கும் வரலாற்றுக் காலங்களில் வழக்கில் தொடர்ந்துள்ளது.

இந்திய வரலாற்றையும் தமிழக வரலாற்றையும் திட்டமாகச் சான்றுகளுடன் எழுதுவதற்குக் கல்லெழுத்துக்களும், செப்பேடுகளும் பெரிதும் பயன்பட்டுள்ளன. சென்ற கால நிகழ்ச்சிகளை அறிவிக்கும் பாங்கினைப் போன்றே, அக்கால எழுத்து முறைகளையும் அறிந்து கொள்வதற்கு இவை ஆதாரமாகவுள்ளன. மற்றும், அக்கால வழக்கில் உருவாக்கப்பட்ட ஏட்டுச் சுவடிகளில் காணப்படும் எழுத்து வடிவங்களும், பல்வேறுபட்ட காலங்களில் அரசுகள் வெளியிட்ட நாணயங்கள் ஆகியவற்றில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களும், பண்டைய எழுத்து வடிவங்களை அறிவிக்கின்றன.

கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு

இந்திய நாட்டிலுள்ள கல்வெட்டுகளையெல்லாம் படியெடுக்க வேண்டும் என்ற திட்டத்தினை முதன் முதலில் செயல்படுத்தியவர், 'ஜேம்ஸ் பிரின்ஸப்' என்பவராவர். இவரது திட்டம் ஆங்கில அரசின் வழி கி.பி.1837–இல் செயல்பட்டது. பழமையானவற்றைக் கண்டுபிடிக்கும் ஆர்வம் மிகுந்தது. அதன் பயனாகத் தொல்பொருள் ஆய்வுத்துறை அமைந்தது. சென்னை மாநிலக் கல்வெட்டு ஆய்வுத்துறையும் அதன் கிளையாக இயங்கியது. வரலாற்றுச் சான்றுகளை, தொல்பொருள் கல்வெட்டு ஆகியவற்றைக் கண்டுபிடித்து, அவற்றை அறிந்து 'தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி' களாகவும், 'இந்திய கல்வெட்டுகளின் ஆண்டறிக்கை' என்ற வெளியீடுகளாகவும் அரசு வெளியிட்ட அரும்பணியில் பயன் கருதாது பாடுபட்ட பேரறிஞர்கள் பலராவர்.

திரு.ஹுல்ஷ், கன்னிங்காம், டாக்டர் பூலர், டாக்டர் பர்னல், டாக்டர் கீல் ஹார்ன், பேராசிரியர் துப்ராய் போன்றவர்கள் பல மொழிகளைக் கற்றுணர்ந்து கல்வெட்டுகளைப் படித்தறிந்து வெளியிட்ட அறிஞர்களாவர். இவர்களது வரிசையில் எண்ணத் தக்கவராக இருந்து தமிழ்நாட்டில் எத்தகைய சாதனங்களும் இல்லாத நிலையில் கருமமே கண்ணாக உழைத்துக் கல்வெட்டுகளைக் கண்டுபிடித்து; படித்தறிந்து ஆய்வுரைகளுடன் வெளியிட்ட பேரறிஞர் திரு.டி.ஏ.கோபி நாதராயர் அவர்கள் நினைவு கூறத்தக்கவராவர். இம்முறையில் தனி ஆர்வமுடன் பல தமிழ்ப் பெரியார்கள் பாடுபட்டுள்ளனர். அவர்களது மதிப்பிட முடியாத தியாகவுழைப்பினால் தமிழக வரலாறு சிறந்த முறையில் எழுதப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கல்வெட்டுகள்

இந்திய கல்வெட்டு, தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் இதுவரையில் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் பல்வேறுபட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இருபதாயிரத்

திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் கிடைத்துள்ளவைகளாகும்.

ஆராய்ச்சியாளர்கள் கல்வெட்டுகளை ஆராய்ந்து அவற்றின் காலத்தைக் கணக்கிட்டுள்ளனர். கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள அரசன், அவனது ஆட்சியாண்டு, செய்தி ஆகியவற்றைக் கொண்டு கணக்கிட்டு காலத்தினை வரையறை செய்வது நேர் முறையாகும். கல்வெட்டில் உள்ள எழுத்துக்களின் வரிவடிவினைக் கொண்டும், பிற கல்வெட்டுகளிலுள்ள எழுத்துக்களை ஒப்பிடும் காலத்தினைக் குறிப்பாகக் கூறுவது மற்றொரு முறையாகும்.

இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள முறைக்குரிய கல்லெழுத்துக்களில் பழமையான எழுத்துக்களும் உண்டு. அவற்றை இனம் கண்டு படித்தறியும் ஆற்றலையும் பழைய கல்வெட்டாய்வாளர்கள் பெற்றிருந்தார்கள். தாம் இனம் கண்ட எழுத்து வகைகளுள் பண்டைய தமிழ் எழுத்தின் வரிவடிவினை முறைப்படுத்தி விளக்கமுடன் எழுதி வெளியிட்ட பேரறிஞர்கள் பர்னல், ஹூல்ஷ், டி. ஏ. கோபிநாதராவ் ஆகியோரின் அரும் பணிக்கு நிகர் மற்றொன்று அமைந்திலது.

பர்னல் எழுதியுள்ள "தென்னிந்திய எழுத்தியல்" (South Indian Paliography), டி.ஏ. கோபிநாதராவ் எழுதியுள்ள "திருவாங்கூர் தொல் பொருள் தொகுதி" (Travancore Archaeological Series) இவ்விரண்டு நூல்களிலும் தென்னிந்தியாவில் சிறப்பாக தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பழைய கல்வெட்டுகள், செப்பேட்டுச் சாசனங்கள், பழமையான சுவடிகள் ஆகியவற்றிலுள்ள எழுத்து வடிவங்கள், அவற்றின் வளர்ச்சி நிலைகளைச் சுட்டும் வரைபடங்களுடன் மிகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. தமிழெழுத்தின் பழமையினைப் பற்றியும் அவ்வெழுத்துக்களின் வளர்ச்சி நிலைகளைப் பற்றியும் டாக்டர் பர்னல் அவர்கள் நூலின் முன்னுரையில் தந்துள்ள கருத்துகள் குறிப்பிடத் தக்கனவாகும்.

பழைய கல்வெட்டு

தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டைக்கு வடமேற்கே சித்தன்னவாசல் என்னும் சிற்றூர் உள்ளது. அவ்வூரைச் சார்ந்துள்ள மலை சித்தன்னவாசல் மலை என்றே பெயர் பெற்றுள்ளது. இம்மலையின் மேற்பகுதியில் நீண்ட மலைப் பிளவொன்று இயற்கையாகவே அமைந்துள்ளது. அப்பிளவிடத்தை பாழி என்று கூறுவர். அப்பாழியில் கிறித்து காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து சமண சமய முனிவர்களும், ஆசிரியர்களும், சமணச் சாரணர்களும் வாழ்ந்து வந்துள்ளனர். ஆடையின்றிய நிலையில் ஆன்ம சக்தியும், அறிவாற்றலும் தெய்வீகமும் பெற்றிருந்த முனிவர்கட்கு, பாழியின் கீழ்தளப் பாறைகளில் நீண்ட சதுரமானதும் சிறிதளவு குழிப்பானதுமான கற்படுக்கைகளைச் செய்தமைத்துத் தந்துள்ளனர். அக்கற்படுக்கையில் நடுவிலமைந்த கற்படுக்கை அளவில் பெரியதாகச் செய்யப்பட்டுள்ளது. அப்படுக்கையின் விளிம்புப் பகுதியில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள், வடக்கே அசோக மன்னன் கையாண்ட பிராமி எழுத்துகளில் உள்ள கல்வெட்டினை ஆராய்ச்சியாளர்கள் குறிக்கின்றனர். அதனைச் சார்ந்துள்ள பழைய தமிழெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டினையும் அதனால் பெறப்படும் செய்தியினையும் குறிக்கப் பெறாமல் பிராமி எழுத்திலான கல்வெட்டே எடுத்துக்காட்டப் பெறுகின்றது. இக்கல்வெட்டின் காலம் இரண்டாயிரத்துக்கு முற்பட்ட காலமென்று குறிக்கப்படுகிறது.

இரண்டாவதாக, செஞ்சிக்கு அடுத்துள்ள திருநாதர் குன்றிலுள்ள பழமையான கல்வெட்டாகும். இதனைக் கண்டுபிடித்துப் படியெடுத்து எழுத்துகளைப் படித்தறிந்து வெளியிட்டவர் கோபிநாதராவ். இக்கல்வெட்டில், சந்திரநந்தி எனும் சமண ஆசிரியர் ஐம்பத்தேழு நாட்கள் உண்ணாநோன்பாகிய சல்லேகணம் இருந்து உயிர் நீத்தாருக்குச் செய்யப்பட்ட நிசீதிகை என்னும் கற்படையினைக் குறிக்கும் செய்தி புலனாகின்றது.

இவ்விரண்டு கல்வெட்டுகள் தவிர, திருநெல்வேலி மாவட்டத்தில் வீரசிகாமணி மலை என்று பெயர் பெறும் மலையில் முதல் பாழியிலுள்ள பழைய தமிழெழுத்திலான கல்வெட்டும் கோயில்பட்டிக்கு மேற்கே உள்ள கழுகு மலையில் சமண முனிவர்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும் மிகப் பழைய தமிழெழுத்துக்களைக் கொண்டதாகவே காணப்படுகின்றன. வீரசிகாமணி மலைப் பாழியில் சமண முனிவர்கள் வாழ்ந்துள்ளார்கள். பழைய தமிழெழுத்தாலான கல்வெட்டினைச் சார்ந்து சங்கு இலச்சினை, குடை இலச்சினை ஆகிய சின்னங்களையும் தளப்பாறையில் சமணர் பொறித்துள்ளனர். இச்சின்னங்களைக் கொண்டு இப்பாழியில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சமண தீர்த்தங்கரிலொருவரான நேமிநாதர் வழிவந்த சமண முனிவர்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பது அறியப் பெறுகின்றது.

"தமிழெழுத்தின் வரிவடிவம்" நூலிலிருந்து...
வெளியீடு : **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

வீரமரணம் அடையும் தமிழ்நாடு அரசு காவல்துறையின் சிறப்பு அதிரடிப் படை வீரர்களுக்குக் கருணைத் தொகை உயர்வு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

சென்னை-600 008

பணியில் இருக்கும் போது, வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு வீரமரணம் அடைகின்ற தமிழ்நாடு அரசு காவல்துறையின் சிறப்பு அதிரடிப் படை (Special Task Force STF) வீரர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் 5 இலட்சம் ரூபாய் கருணைத் தொகையை, 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதேபோல, பணியில் இருக்கும்போது வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு அதன் விளைவாக நிரந்தர உடல் முடக்கம் அடைகின்ற சிறப்பு அதிரடிப் படை வீரர்களுக்கு கருணைத் தொகையாக 10 இலட்சம் ரூபாய் வழங்கிடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதிகாரிகள் மற்றும் காவலர் போன்ற பதவி நிலையைக் கருத்தில் கொள்ளாது, வீரமரணம் அல்லது நிரந்தர உடல் முடக்கம் அடையும் சிறப்பு அதிரடிப்

கருணைத் தொகை உயர்வு

பணியில் இருக்கும் போது வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு வீரமரணம் அடையும் தமிழ்நாடு அரசின் சிறப்பு அதிரடிப் படை வீரர்களுக்குத் தற்போது 5 இலட்சம் ரூபாய் கருணைத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. தங்களது உயிரைத் துச்சமென மதித்துக் கடமையாற்றுகின்ற சிறப்பு அதிரடிப் படை வீரர்களுக்கு வழங்கப்படுகின்ற கருணைத் தொகை குறைவு என்கின்ற காரணத்தாலும், நிரந்தர உடல் முடக்கம் அடைகின்ற வீரர்களுடைய குடும்பங்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும், அவர்களுக்கு உயரிய பாதுகாப்பு உணர்வையும், நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்ற வகையில், பணியில் இருக்கும் போது வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு வீரமரணம் அல்லது நிரந்தர உடல் முடக்கம் அடையும் சிறப்பு அதிரடிப் படை வீரர்கள் அனைவருக்கும்

படை வீரர்கள் அனைவருக்கும், இந்தக் கருணைத் தொகையை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், பணியில் இருக்கும் போது, வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு வீர மரணமோ அல்லது நிரந்தர உடல் முடக்கமோ அடையும் காவல் துறையினருக்குக் குழுக்காப்பீட்டுத் தொகை அல்லது அரசின் கருணைத் தொகை இவற்றில் ஏதேனும் ஒன்று மட்டுமே பெற முடியும் என்று இது வரை இருந்த நிலையை மாற்றி, குழுக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுடன் வீர தீரச் செயலுக்கான அரசின் கருணைத் தொகையையும் சேர்த்து வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.



கருணைத் தொகையினை 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கருணைத் தொகையுடன் குழுக்காப்பீட்டுத் தொகையையும் சேர்த்து வழங்கிட ஆணை

தமிழ்நாடு அரசு காவல்துறையின் சிறப்புப் பாதுகாப்புப் பிரிவு (Special Security Group) மற்றும் சிறப்பு அதிரடிப் படை ஆகியவற்றில் பணியாற்றுவோருக்கு ஓர் உத்வேகத்தை அளித்து அவர்கள் முழு ஈடுபாட்டுடனும், துணிவோடும் பணியாற்ற ஊக்கம் அளிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1993–ஆம் ஆண்டில் குழுக் காப்பீட்டுத் திட்டம் எனும் திட்டத்தைத் தொடங்கினார்கள்.

தற்போது சிறப்பு அதிரடிப் படை மட்டுமல்லாமல் பொதுக் காவல் பிரிவினருக்கும் சேர்த்துச் செயல்படுத்தப்படும் குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், சிறப்பு அதிரடிப் படை, கமாண்டோ படை, கமாண்டோ பள்ளி, சிறப்புப் பாதுகாப்புப் படை, Core Cell ஆகியவற்றில் பணியாற்றுவோர் வீர மரணம் அடைந்தாலோ அல்லது நிரந்தர உடல் முடக்கம் ஏற்பட்டாலோ 10 இலட்சம் ரூபாயும், பொதுக் காவல் பிரிவில் பதவி நிலைக்குத் தக்கவாறு, 1 இலட்சம் ரூபாய் முதல் 10 இலட்சம் ரூபாய் வரையிலும் நிதி வழங்குகின்ற வகையில் குழுக்காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், காவல் படையினர் பணியில் இருக்கும் போது வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு, வீரமரணம் அல்லது நிரந்தர உடல் முடக்கம் அடைந்தால் அவர்களுக்குக் கருணைத் தொகை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், பணியில் இருக்கும் போது வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு வீரமரணம் அல்லது நிரந்தர உடல் முடக்கம் அடைகின்ற காவல் துறையினரின் குடும்பத்தினர், குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிதி அல்லது அரசு வழங்குகின்ற கருணைத் தொகை இவற்றில் ஏதேனும் ஒன்று மட்டுமே பெற முடியும் என்று தற்போது விதிமுறை உள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்த நிலையினை மாற்றி வீரமரணம் அல்லது நிரந்தர உடல் முடக்கம் அடைபவர்களின் தியாகத்தைக் கருத்தில் கொண்டு, அந்தத் தியாகச் செயலுக்கு உரிய மதிப்பு அளித்து நன்றி செலுத்தும் வகையில், வீர தீரச் செயலுக்கான அரசின் கருணைத் தொகையுடன், குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற நிதியையும் சேர்த்து வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். ❖

புத்துயிர் பெற்ற நரிப்பையூர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்

இராமநாதபுரம் மாவட்டம் வரலாற்றுச் சிறப்பும், புராதனச் சிறப்பும் ஒருசேரக் கொண்டதாகும். இதன் மற்றொரு சிறப்பு மாவட்டத்தின் பெரும்பகுதி 272 கி.மீ. தூரம் கடற்கரை சார்ந்த பகுதியாகவே இருக்கின்றது என்பதாகும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி, கடலாடி, முதுகுளத்தூர், சாயல்குடி ஆகிய பகுதிகளில் எப்போதும் குடிநீர்ப் பிரச்சினை இருந்து வருகிறது. எனவே கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் குறித்து அரசு பரிசீலித்தது.

12.7.1993இல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு ஆணையிட்டு, இந்தத் திட்டம் 1999 முதல் செயல்படத் தொடங்கியது. ரூ.35 கோடியே 48 இலட்சம் மதிப்பில் நிறைவேற்றப்பட்ட இத்திட்டம், பெல் நிறுவனம் பொறுப்பில் கடல்நீரைக் குடிநீராக்கித் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கும் பணி அளிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வரும்போது, மிக முக்கிய பாகமான "மெம்ரைன்கள்" பழுதுபட்டது. ஆனால் இவற்றை பழுதுநீக்கி, திட்டத்தை முழு அளவில் செயல்படுத்தாத நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக கடல்நீரைக் குடிநீராக்கி, குடிநீர் வழங்கும் பணியில் தேக்கநிலை ஏற்பட்டது. இதனால் கமுதி, சாயல்குடி, கடலாடி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளில் 296 கிராமங்களில் கடுமையான குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டது.

இப்பிரச்சினை தொடர்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதும், மீண்டும் இத்திட்டத்தைப் புனரமைப்பு செய்து, புத்துயிர் அளித்து, செயல்பட உத்தரவிட்டார்கள். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நரிப்பையூர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை சென்னையைச் சேர்ந்த "டோசிட் அயன் எக்சேஞ்ச் மற்றும் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்" என்ற தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்தது. இந்த நிறுவனத்திற்கு இந்தியா முழுவதும் கிளைகள் செயல்படுகின்றன. இந்நிறுவனம் பல்வேறு இடங்களில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை வெற்றியுடன் செய்து வருகிறது. இதன் தலைமை அலுவலகம் குஜராத்தில் உள்ளது.

இந்நிறுவனம் நரிப்பையூர் திட்டத்தில் பழுதுபட்டுள்ள 168 மெம்ரைன்களையும் மாற்றி, மீண்டும் இயக்கிட ரூ.5 கோடி முதலீடு செய்துள்ளது. புதிய ஒப்பந்தப்படி, இந்தத் தனியார் நிறுவனம் கடல்நீரைக் குடிநீராக்கி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துக்கு வழங்கும். இதற்கென தயாரிப்புச் செலவுக்கு 1000 லிட்டருக்கு ரூ.58.70 வீதம் குடிநீர் வடிகால் வாரியம் வழங்குகிறது.



1 லிட்டர் குடிநீர் தயாரிப்புக்கு 6 காசு செலவாகிறது.

ஒரு இலட்சம் லிட்டர் தண்ணீரில் 500 கிராம் அளவுக்குக் குறைவாக உப்பு இருக்க வேண்டும். இதை ஆய்வு செய்ய 15 பொறியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். 1 மணி நேரத்திற்கு ஒரு முறை சோதனை செய்யப்படுகிறது. தற்போது 1 இலட்சம் லிட்டரில் 350 கிராம் அளவே உப்புத் தன்மை உள்ளது. பராமரிப்பு, உற்பத்திச் செலவு மின்சக்தி உள்பட அனைத்தையும்



தனியார் நிறுவனமே ஏற்கிறது. 296 கிராமங்களுக்குக் குடிநீர் விநியோகிக்கும் பொறுப்பை மட்டும் குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுள்ளது.

நரிப்பையூர் திட்டத்தில் தினசரி 90 இலட்சம் லிட்டர் தண்ணீர் கடலில் இருந்து எடுக்கப்பட்டு, 4 இயந்திரங்கள் மூலம் தூய்மைப்படுத்தப்பட்டு, தண்ணீரில் உள்ள கழிவுகள் நீக்கப்பட்ட பின்னர், ரிவர்ஸ் ஆஸ்மாஸிஸ் சிஸ்டம் மூலம் தண்ணீர் சுழற்சி செய்யப்படுகிறது. பின்னர் 168 மெம்ரைனிலும் செலுத்தப்படுகிறது. மெம்ரைன்கள் உப்புத் தண்ணீரை ஒருபுறமாகவும், நல்ல தண்ணீரை ஒருபுறமாகவும் பிரித்து அனுப்புகிறது. உப்புத் தண்ணீர் மீண்டும் கடலுக்குள் செல்ல வழிவகுக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் தினசரி 38 இலட்சம் லிட்டர் தண்ணீர் தயாரிக்கப்படுகிறது. இந்தப் புதிய ஒப்பந்தம் தனியார் நிறுவனத்துடன் 7 ஆண்டுகள் நீடிக்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் புத்துயிர் பெற்றுள்ள நரிப்பையூர் குடிநீர் திட்டம் 28.4.2004 அன்று முதல் *தனது* குடிநீர் விநியோகத்தைத் தொடங்கியுள்ளது.

தற்போது கமுதி, கடலாடி, சாயல்குடி, முதுகுளத்தூரைச் சுற்றியுள்ள 296 கிராமங்களில் சுமார் 1.92 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் தலா 15 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும் இம்மாவட்ட மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டி 2004–2005 ஆம் ஆண்டிற்கு 565 திட்டப் பணிகள் ரூ.14.48 கோடி மதிப்பில் நிறைவேற்றப்படவுள்ளது. இதனால் 75,000 மக்கள் பயன் பெறுவார்கள்.



மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மீண்டும் நரிப்பையூர் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்திட உத்தரவிட்டு, நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை இப்பகுதி மக்கள் நன்றி உணர்வோடு பாராட்டுகின்றனர்.

– ரெ. இராவணன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம்.

வீடியோ கலந்தாய்வு மூலம் சிறைக் கைதிகளிடம் விசாரணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கிவைத்தார்கள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.7.2004 அன்று தலைமைச் செயலகத்தில், வீடியோ கலந்தாய்வு மூலம் நீதித்துறை நடுவர்கள் விசாரணை சிறைவாசிகளின் நீதிமன்றக் காவலை நீட்டிப்பு செய்யும் புதிய திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

விசாரணை சிறைவாசிகளின் காவலை நீட்டிப்பு செய்வதற்காக, அவர்களை வழிக்காவல் மூலம் நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜர்படுத்துகின்ற காவல் .துறையின் பெரும்பணியை எளிமைப் படுத்தவும், சிறைவாசிகளை நீதிமன்றங்களுக்கு நேரடியாக அழைத்துச் சென்று மீண்டும் சிறைக்குக் கொண்டு வருவதில் உள்ள இன்னல்களைத் தவிர்க்கவும், சிறைவாசிகளை சிறைச்சாலைகளில் இருந்தவண்ணம் வீடியோ கலந்தாய்வு மூலம் காவல் நீட்டிப்பு செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த ஆணையின்படி 8 கோடியே 61 இலட்ச ரூபாய் மதிப்பில், 7 மத்திய சிறைகள் மற்றும் வேலூரிலும், திருச்சியிலும் உள்ள பெண்கள் தனிச் சிறைகள் ஆக 9 சிறைச்சாலைகளிலும், மற்றும் தமிழகத்தில் உள்ள 59 நீதிமன்ற வளாகங்களில் அமைந்துள்ள 270 நீதிமன்றங்களிலும், வீடியோ கலந்தாய்வு மூலம் விசாரணை சிறைவாசிகளின் நீதிமன்றக் காவலை நீட்டிப்பு செய்யும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென வீடியோ கலந்தாய்வு வசதி 72 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் உள்ள நீதிமன்றங்களையும், மத்திய சிறைகளையும் மிக உயரிய டிஜிட்டல் தொழில்நுட்ப கேமரா மற்றும் தொலைக்காட்சி மூலம் ISDN தொலைபேசி இணைப்பு அளித்து ஒரு

வினாடிக்கு 384 KB வீதம் ஒளி மற்றும் ஒலியுடன் கூடிய தகவல்களை வழங்குகின்ற வகையில் வீடியோ கலந்தாய்வு வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி காவல் நீட்டிக்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட நீதிபதி முன் வீடியோ வாயிலாக சிறைவாசிகள் ஆஜர்படுத்தப்படுவார்கள். மத்திய சிறையில் உள்ள வீடியோ கலந்தாய்வு அறையில் அமைக்கப்பட்டுள்ள கேமரா முன்பு சிறைவாசி அமர்ந்து வீடியோ கலந்தாய்வு தொழில்நுட்பம் மூலம் நீதிபதியுடன் உரையாடலாம். இதன்மூலம் சிறைவாசியை முழுமையாக நீதிபதி காண இயலும் என்பதுடன் சிறைவாசி நீதிபதியுடன் பேசவும், கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும்.

விஞ்ஞான வளர்ச்சியின் ஓர் அங்கமாக கணினி தொழில்நுட்ப மேம்பாட்டைப் பயன்படுத்தி இந்தியாவிலேயே முதன் முதலாக மாநிலம் முழுவதையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தப்படும் இந்த சீரிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து வீடியோ கலந்தாய்வின் மூலம் சென்னை பெருநகர 4ஆவது நீதித்துறை நடுவர் திரு. தீனதயாளன் அவர்கள், வேலூர் சிறைச்சாலையின் விசாரணை சிறைவாசியான திரு. ராஜமாணிக்கம் என்பவருக்கு 14 நாட்கள் காவல் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கியதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ள இந்தப் புதிய திட்டத்தின் மூலம் வழிக்காவலுக்கென காவல் துறை ஆண்டுதோறும் இதுவரை செலவழித்து வந்த மனித ஆற்றல் மற்றும் எரிபொருள் செலவினம் ஏறத்தாழ 10 கோடியே 69 இலட்சம் ரூபாய் மீதம் ஆகும். இந்தத் திட்டத்தின் மூலம் வழிக்காவலின் போது சிறைவாசிகள் தப்பிச் செல்வது முற்றிலுமாகத் தடுக்கப்படும். மேலும் சிறைக்குள் சட்டத்திற்குப் புறம்பான பொருட்கள் கடத்தப்படுவது முழுமையாகத் தவிர்க்கப்படுவதுடன் நீதிமன்ற வளாகங்களில் தேவையற்ற கூட்டம் சேர்வதும் தடுக்கப்படும். □

ராணுவ வீரர் குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் சிறப்பு நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

ஜம்மு காஷ்மீர் மாநிலம் அனந்த்நாக்குண்ட் மாவட்டத்தில் தீவிரவாதிகளுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் வீர மரணமடைந்த திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலைச் சேர்ந்த ராணுவ வீரர் ஷாகுல் ஹமீது குடும்பத்திற்கு, தமிழக அரசு சார்பாக ரூ.5 இலட்சம் சிறப்பு நிதியுதவியை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதுகுறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை வருமாறு :

ஜம்மு காஷ்மீர் மாநிலம், அனந்த்நாக்குண்ட் மாவட்டத்தில் தீவிரவாதிகளுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில், திண்டுக்கல் மாவட்டம் கொடைக் கானலைச் சேர்ந்த ராணுவ வீரர் ஷாகுல் ஹமீது 10.7.2004 அன்று வீர மரணம் அடைந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

ராணுவ வீரர் ஷாகுல் ஹமீதை இழந்து வாடும் அவர்தம் மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் தமிழக அரசின் சார்பாக, எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலைச் சேர்ந்த, ராணுவ வீரர் ஷாகுல் ஹமீதின் இறுதிச் சடங்கின் போது, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் ஆகியோர்களைக் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளேன்.

வீரமரணம் அடைந்த ராணுவ வீரர் ஷாகுல் ஹமீதின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு சார்பாக சிறப்பு நிதி உதவி ரூ.5 இலட்சம் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

□ □ □

ஈரோடு மாவட்டத்தில்

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்

தீவிரச் செயல்பாடு

தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்கள் தோறும் ரூ.20 இலட்சம் முதல் ரூ.1 கோடி வரை முதலீடு செய்து வேளாண் சார்ந்த தொழில்களை உருவாக்கி தமிழகம் தொழில் வளர்ச்சி பெற்ற மாநிலமாக உருவாக பல்வேறு சலுகைகளை அறிவித்து அதற்கான மானியத் திட்டங்களையும் அறிவித்துள்ளார். இதுபோன்று இயற்கை வளங்களை ஆதாரமாகக் கொண்டு வேளாண் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க, ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட திட்டம்தான் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டமாகும்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் தொடங்கப்படும் தொழில்களுக்கு ரூ.15 இலட்சம் வரை முதலீட்டு மானியம் 10 சதவிகிதம் முதல் 30 சதவிகிதம் வரை மின் மானியம் வழங்கப்படுகிறது. குறிப்பாக பெண்களை 50 சதவிகிதத்தினருக்கு அதிகமாகப் பணியில் அமர்த்தும் நிறுவனங்களுக்கு 5 சதவிகிதம் கூடுதல் மானியம் அளிக்கவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் இருந்து 40 விண்ணப்பங்கள் மாநில அளவிலான குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களில் இருந்தும் ஒரு தொழிற்சாலை உருவாக்கும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டு மாநில குழுவில் இருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதுவரை 10 நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன. மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.105 இலட்சம் மதிப்பில் டைரி தொழிற்சாலை, சத்தி மாடர்ன் ரைஸ்மில், கே.எஸ்.மாடர்ன் ரைஸ்மில், பெருந்துறை ஒன்றியத்தில் ரூ.100 இலட்சம் மதிப்பில் ஆதித்யா மசாலா நிறுவனத் தொழிற்சாலையும், அம்மாபேட்டை ஒன்றியத்தில் ரூ.46 இலட்சம் மதிப்பில் பயோடெக் தொழிற்சாலையும், பவானி ஒன்றியத்தில் ரூ.51.50 இலட்சம் மதிப்பில் தென்னைநார், தேங்காய் தொட்டி பவுடர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும், தாளவாடி ஒன்றியத்தில் ரூ.49.05 இலட்சம் மதிப்பில் கயிறு தொழிற்சாலையும், சென்னிமலை ஒன்றியத்தில் ரூ.75.05 இலட்சம் மதிப்பில் காளான் பொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலையும், தாராபுரம் ஒன்றியத்தில் ரூ.54 இலட்சம் மதிப்பில் நவீன அரிசி ஆலையும், மூலனூர் ஒன்றியத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பில் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலையும், கோபி ஒன்றியத்தில் ரூ.42 இலட்சம் செலவில் மில்க்டைரி தொழிற்சாலையும்,



நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.70.24 இலட்சம் மதிப்பில் முருங்கை பவுடர் தொழிற்சாலையும், பவானி ஒன்றியத்தில் ரூ.29.65 இலட்சம் மதிப்பில் ஒரு தொழிற்சாலையும் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் அந்தியூர் ஒன்றியத்தில் புகையிலை தயாரிப்பு குளிர்பதன கிடங்கு தொழிற்சாலை, சத்தி ஒன்றியத்தில் மலர்ச்சாறு தயாரிப்பு, குண்டடம் ஒன்றியத்தில் பதப்படுத்தப்பட்ட வெங்காயம் மற்றும் குளிர்பதனக் கிடங்கு, ஊத்துக்குளி ஒன்றியத்தில் தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை, கொடுமுடி ஒன்றியத்தில் கால்நடை தீவன ஆலை, அரிசி ஆலை ஆகிய தொழிற்சாலைகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் தொடங்கப்படும் தொழில்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெறும் ஒருவழிக் கருத்துக்குழு கூட்டத்தின் வாயிலாக சுகாதாரத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை, தொழிற் சாலைகள் ஆய்வுத்துறை, நகர் ஊரமைப்புத்துறை, ஊராட்சி அமைப்புகள், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், மின்சார வாரியம் ஆகிய துறைகளிடமிருந்து அதி விரைவில் உரிமங்கள் மற்றும் தடையில்லாச் சான்றுகள் வழங்கப்படவுள்ளன. இவ்வாறு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் தொழில் தொடங்க வருகின்ற தொழில் முனைவோர்களை சிறப்பு கவனத்துடனும், நேரடிப் பார்வையிலும், அனைத்து உதவிகளையும் மாவட்ட நிருவாகம் செய்து ஈரோடு மாவட்டத்தை தொழில் வளர்ச்சியில் முதன்மை பெற்ற மாவட்டமாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

– எம்.ஆர்.லிங்கம்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு.

கிருஷ்ணகிரி மாவட்ட அரசு அலுவலகங்களுக்கு ரூ.25 இலட்சம் மதிப்பிலான ஊர்திகள்

கிருஷ்ணகிரி மாவட்ட நிருவாகத்திற்கென ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலான கார், மற்றும் ஜீப்புகளை மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்கள். கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகத்திற்கு வாகனங்களை வழங்கி, செய்தியாளர்களிடம் "கிருஷ்ணகிரி மாவட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கப்பட்டு 4 மாதங்களாகின்றது. இந்த மாவட்ட மக்களின் மீது தனி அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாவட்ட வளர்ச்சித் திட்ட முகமைக்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கியிருந்தார்கள். அதில் 2 கார்கள், 4 ஜீப்புகள் ரூ.25 இலட்சம் மதிப்பில் வாங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள ரூ.25 இலட்சத்தில் தளவாடப் பொருட்கள் வாங்கப்படும். மேலும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் 1,435 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வேலைக்கு உணவளிக்கும் திட்டத்தின் மூலம் 10 ஆயிரம் டன் அரிசியும், ரூ.1.88 கோடி நிதியும் வழங்கப்பட்டுள்ளது. பாரதப் பிரதமர் கிராமச் சாலைகள் திட்ட சார்பில் ரூ.9.36 கோடி ரூபாய் பணிகள் முன்மொழியப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டில் அனுமதி பெற்று பணிகள் தொடங்கப்படும். சம்பூர்ண கிராம வேலைவாய்ப்பு திட்டத்தில் மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தில் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கென தமிழகத்திற்கு ரூ.300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் தமிழ்நாட்டில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரி மாவட்ட சாலைப் பணிகளுக்கென ரூ.7 கோடி ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அனுமதி கோரியுள்ளோம். 650 தொகுப்பு வீடுகளும், 330 கச்சா வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அரசு அலுவலர்கள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

தொட்டில் குழந்தைகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

தருமபுரி மாவட்ட நாயக்கன்கொட்டாய் பகுதியிலுள்ள வேள்ளாளப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் திரு.முருகேசன். இவரது மனைவி திருமதி. தமிழ்செல்வி. இவர்களுக்கு, கடந்த 29.5.2004 அன்று நான்காவது பெண் குழந்தை பிறந்தது. முன்னதாகவே மூன்று பெண் குழந்தைகளைப் பெற்று வளர்த்து வருவதால் நான்காவது பெண் குழந்தையை வளர்க்க மனமில்லாமல் தருமபுரி தலைமை மருத்துவமனை வளாகத்திலுள்ள அரசு தொட்டில்குழந்தைகள் வரவேற்பு மையத்தில் ஒப்படைத்தனர்.

இதேபோன்று, திம்பரானஅள்ளி குண்டாங் காடு கிராமத்தைச் சேர்ந்தவர் திரு. சண்முகம். இவரது மனைவி திருமதி. முனியம்மாள். இத்தம்பதியினருக்கு கடந்த 16.6.2004 அன்று, மூன்றாவதாகவும் பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையை தொட்டில் குழந்தைகள் வரவேற்பு மையத்தில் ஒப்படைத்து விட்டனர். ஒப்படைக்கப்பட்ட குழந்தைகள் இரண்டும் சென்னையிலுள்ள கலைச்செல்வி கருணாலயா சமூக நல மையத்தில் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டன.

இந்நிலையில் புதிய மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்ற திரு. ஆஷிஷ் வச்சானி, இ.ஆ.ப., அவர்கள், பெண் குழந்தைகளை அரசு தொட்டிலில் ஒப்படைத்த பெற்றோர்களை அழைத்து ஆலோசனை மேற்கொண்டதோடு பெற்றோர்களே குழந்தைகளை வளர்க்க அறிவுரைகள் வழங்கினார். அதனையடுத்து மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு பெற்றோர்களும் மனம் மாறி, குழந்தைகளை வளர்க்க ஒப்புக் கொண்டு குழந்தைகளைத் திருப்பித் தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டுக் கொண்டனர். அதைத் தொடர்ந்து அவர்களது குழந்தைகள் சென்னை சமூக நல மையத்திலிருந்து கொண்டு வரப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குழந்தைகளை பெற்றோர்களிடம் ஒப்படைத்தார். மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்ட பெற்றோர்கள், குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதாக உறுதி கூறி எடுத்துச் சென்றனர்.

– த. மனோகரன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.

சில துளிச்செய்திகள்

இயற்கை வாயுவிலிருந்து சுமார் 2 ஆயிரம் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.	இமயமலையின் மொத்த நீளம் கிழக்கு மேற்காக சுமார் 2400 கி.மீட்டர்.	சித்தார், சரோடு, ஷெனாய், தபலா, டோலக் ஆகிய இசைக் கருவிகள் இந்துஸ்தானி இசைக் கருவிகளாகும்.	இந்தோனேசியா, ஏறத்தாழ 3000 சிறிய மற்றும் பெரிய தீவுகளைக் கொண்ட நாடு.

மகளிர் சுயஉதவிக்குழுவினர் தயார் செய்யும் காகிதக்குவளை

கடலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கிராமம் வரக்கால்பட்டு. இந்த கிராமத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பெருமுயற்சி எடுத்துப் பாடுபட்டு வருபவர்கள் 'தேனீ' மகளிர் சுயஉதவிக் குழுவினர்.

இக்குழுவின் ஊக்குநராக உள்ள திருமதி சந்திரா, தமது அயராத உழைப்பால் இங்குள்ள 20 பெண்கள் ஒருங்கிணைத்து 'தேனீ' மகளிர் சுயஉதவிக் குழு ஒன்றைத் தொடங்கி அதன்மூலம் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுத்துள்ளார்கள். கிராமப்புறப் பெண்களின் பொருளாதார நிலை உயரவும், வாழ்க்கைத் தரம் மேம்படவும் அரசு நிதி உதவி வழங்கி வருகிறது.

அரசின் ஆணைப்படி, மகளிர் சுயதொழில் செய்ய அவர்களுக்குக் கடனுதவியும், சுழல் நிதியும் வழங்கப் படுவதால் இக்குழுக்கள் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. இந்த வகையில் காகித கப், காகிதக் குவளை, நாப்கின்ஸ், பேக்கரி, இன்டர்நெட் மையம் அமைத்தல் போன்ற பல்வேறு தொழில்களைச் செய்து பணம் ஈட்டி வருகின்றனர்.

கடலூர் ஒன்றியத்தைச் சார்ந்த வரக்கால்பட்டு 'தேனீ' மகளிர் சுயஉதவிக் குழு, மாதர் நல தொண்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் காகித கப் மற்றும் காகிதக் குவளை ஆகிய பொருட்களை உற்பத்தி செய்யும் மையத்தைத் தொடங்கியுள்ளது. இதற்கு, கடலூர் வள்ளலார் கிராம வங்கி ரூ.2 இலட்சத்து 27 ஆயிரத்து 663 கடனுதவி வழங்கியுள்ளது. இந்தக் குழு காகிதக் கப்புகளைத் தயார் செய்ய சென்னையில் உள்ள ஒரு நிறுவனம் இதற்கு செய்முறைப் பயிற்சி அளித்துள்ளது. பின்னர், இக்குழு காகித கப்புகளைத் தயார் செய்யும் விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களைச் சார்ந்த பாக்கம் மற்றும் மெல் ரோஜாபுரம் ஆகிய மையங்களைப் பார்வையிட்டு, அதன்மூலம் உற்பத்தி செய்வதற்கான பல்வேறு சாத்தியக் கூறுகளை அறிந்து வந்துள்ளது.

தற்போது இந்தக் குழு நாளொன்றிற்கு 7,000 காகிதக் கப்புகள் மற்றும் குவளைகளைத் தயாரித்து வருகிறது.

காகித கப்–அலுவலகம், தனியார் நிறுவனங்கள் மற்றும் தேநீர் கடைகளில் பயன்படுத்துவதற்கு எளிமையாக இருக்கும். பயன்படுத்திய பின்னர் இவைகளை எளிதாக அழித்து விடலாம். இதனால் சுற்றுச் சூழல் பாதிப்படையாது. ஆனால் பிளாஸ்டிக் பொருட்கள் அப்படியல்ல. அழிக்க இயலாது. இதனைத் தீயிட்டு கொளுத்தும்போதோ, அல்லது மண் மூடி புதைக்கும்போதோ சுற்றுப்புறச் சூழல் பெரிதும் பாதிக்கப்படும். பிளாஸ்டிக் கப்புகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் சாக்கடைகளில் தேங்கும்போது சாக்கடை தண்ணீர் வெளியேறாமல் தேங்கி நின்று சுகாதாரத்தைப் பாதிக்கிறது.

இந்த மையத்தைத் திறந்து வைத்துப் பேசிய மாவட்ட ஆட்சியர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், "இந்த வருடம் 101 சுயஉதவிக் குழுவிற்கு காகித கப், நாப்கின், பேக்கரி போன்ற பொருட்களை உற்பத்தி செய்வதற்காக 50 சதவிகிதம் மானியத்துடன் கடன் தரப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.210 இலட்சம் கடன் தரப்பட்டுள்ளது. இதில் மானியம் மட்டும் ரூ.105 இலட்சமாகும். மகளிர் சுய தொழிலில் ஈடுபடுவதால் அவர்களின் பொருளாதார நிலை மேம்பட்டுள்ளது.

காகித கப்பினை டாஸ்மாக் மற்றும் அரசு அலுவலகங்களில் வாங்கி பயன்படுத்திட சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இதற்கான விற்பனை வசதியும் கூடுதலாகச் செய்து தரப்படும். இவர்கள் முந்திரி மற்றும் காய்கறி தொழில் செய்திடவும் கடன் தரப்பட்டுள்ளது. இவர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு சுயஜோதி என்றும் பெயரிடப்பட்டுள்ளது. இவர்கள்

உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு மாவட்ட நிருவாகம் ஒரு வருடத்திற்கு விற்பனை வசதியை செய்து தரும்'' என்றார்.

இந்த மையத்தின் ஊக்குநர் திருமதி சந்திரா தெரிவித்ததாவது:– "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் எங்களுக்கும் விடிவு காலம் பிறந்துள்ளது. நாங்கள் வங்கியில் கடன் பெற முடியாத நிலை இருந்தது. ஆனால் தற்போது இந்த நிலை மாறியுள்ளது. எங்கள் மையத்தில் 20 பெண்கள் உள்ளனர். நாங்கள் காகித கப் தயார் செய்கிறோம். ஒரு கப்பின் விலை 35 காசிலிருந்து 57 காசு வரை உள்ளது. 50 முதல் 250 மி.லிட்டர் வரை கப் தயார் செய்கிறோம். மொத்தமாக அனுமதி ஆணை பெறும்போது இதன் விலை கப் ஒன்றிற்கு 3 காசு குறையும்.

எங்கள் குழுவில் 2 பேர் வெளியில் அனுமதி பெறச் சென்று விடுவார்கள். 9 பெண்கள் கப் தயாரிக்கும் பணியில் மாறி, மாறி ஈடுபடுவார்கள். காகித கப்பிற்கு விற்பனை அனுமதி ஆணைகள் கிடைக்கப் பெற்றுள்ளது. நல்ல வருமானம் எங்களுக்குக் கிடைத்துள்ளது. எங்களின் பொருளாதார நிலை மற்றும் எங்களை சமூகத்தில் நல்ல நிலைக்குக் கொண்டு வந்த முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்''என்று தெரிவித்தார்.

– என். பாலையா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கடலூர்.

உங்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்

9 மாத சந்தா செலுத்துவீர்!

10 வது மாத சந்தா இலவசம்

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

மேலும்
அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!

மாதச் சந்தா ரூ. 1	அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. 2	கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 3	கூடுதல் தொகை (2+3) ரூ. 4	அரசு தள்ளுபடி ரூ. 5	அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 6
300	2,700	300	3,000	750	3,750
400	3,600	400	4,000	1,000	5,000
500	4,500	500	5,000	1,250	6,250
600	5,400	600	6,000	1,500	7,500
700	6,300	700	7,000	1,750	8,750
1,000	9,000	1,000	10,000	2,500	12,500

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

01.	தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை,	எழும்பூர்	✆ : 28260775
02.	வானவில்,	தேனாம்பேட்டை	✆ : 24336346
03.	அங்கயற்கன்னி,	மதுரை	✆ : 2621754
04.	தங்கம் பட்டு மாளிகை,	சேலம்	✆ : 2260651
05.	அமுத சுரபி,	திருச்சி	✆ : 2705034
06.	இராஜ ராஜன் வணிகமையம்,	தஞ்சாவூர்	✆ : 231929
07.	காந்திமதி,	திருநெல்வேலி	✆ : 2334360
08.	மங்கை,	கடலூர்	✆ : 234474
09.	தீபம்,	வேலூர்	✆ : 2220730
10.	மருதம்,	கோயம்புத்தூர்	✆ : 2380591

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at: www.cooptex.com Visit us at: www.tn.gov.com

பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
பற்றுவரவு பரிவர்த்தனைகளை இணையதளத்தை 2-7-2004 அன்று தொடங்கி வைக்கிறார்கள்

RGN/NO/TN/PMG (CCR) 838/08-05 WPP-5

தமிழரசு

ஆகஸ்ட் 2004



தமிழரசு

சென்னை-600 008

திருவள்ளுவர் ஆண்டு 2035
ஆடி – ஆவணி
மலர் : 36 இதழ் : 2
ஆகஸ்ட் 2004
விலை ரூ.10

அட்டைப்பட விளக்கம்

முதல், இரண்டாம் மற்றும் நான்காம் பக்க அட்டைகளில் :

சுதந்திர தின விழா

இரண்டாம் பக்க அட்டை :

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு

இந்த இதழில்...

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சுதந்திரத் திருநாள் வாழ்த்துச் செய்தி 2
- தமிழ்நாடு அரசின் சார்பில் 58–ஆவது சுதந்திர தினவிழா 4
- வறட்சியைச் சமாளிக்க நிதி வழங்கப்படும் மாநிலங்கள் பட்டியலில் தமிழகத்தையும் சேர்க்க வேண்டும் – மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதம் 6
- மாற்றுப் பயிர் திட்டத்தின் மூலம் தமிழகத்தின் கிராமப்புற பொருளாதாரம் மேம்பாடு அடையும் 8
- 7 இலட்சம் விவசாயிகள் பயன்பெற குறைந்த வட்டியில் ரூ.1,037 கோடி கடனுதவி 9
- சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் புதிய அறிவிப்புகள் 13
- அனைத்து மருத்துவமனை, அரசு அலுவலகங்களிலும் அழைப்போரை அடையாளம் காணும் கருவி 15
- ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு 16
- தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சீரிய பணிகள் 17
- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் புதிய அறிவிப்புகள் 22
- தருமபுரி மாவட்டத்தில் காட்டாமணக்கு நடவுப்பணி 24
- மக்களுக்கான வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் தமிழகம் முதலிடம் (மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரை) 25
- மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு விருதுகள் 49
- ஈரோடு மாவட்ட கிராமப் பொருளாதார முன்னேற்றத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பங்கு 54
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் புதிய அறிவிப்புகள் 56
- படகோட்டி தாரிணி (வங்காள மொழிக்கதை) 57
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் உயிரி எரிபொருள் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் 66
- திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்று வரும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் 67
- ஒலிம்பிக் வரலாறு 70
- கும்பகோணம் தீ விபத்தில் காயமுற்று சிகிச்சை பெற்ற குழந்தைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி 72
- பெரம்பலூர் மாவட்ட சுகாதாரப் பணிகள் ஆய்வுக் கூட்டம் 74
- குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறியக் கணக்கெடுப்புப் பணி 76
- திருவாரூர் மாவட்டத்தில் மக்களே மேற்கொண்ட மகத்தான பணி 78
- இந்திய சுற்றுலாவில் இடம் பெறும் செட்டிநாடு பாரம்பரிய நகரம் 79

ஆசிரியரும் வெளியிடுபவரும்: **வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கிவைத்த

நமது கிராமம்

எனும் புதிய திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
சுதந்திரத் திருநாள் வாழ்த்துச் செய்தி
(15.8.2004)

பொன்னொளிர் பாரத நாட்டின் புகழ்மிகு வரலாற்றில் தன்னிகர் இல்லாத திருநாளாம் இந்தச் சுதந்திரத் திருநாளில், எனதருமைத் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த சுதந்திரத் திருநாள் வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னியர் ஆட்சிக் காலத்தில் அன்னை நாடு பட்ட துன்பங்களைத் துடைக்கவும், அவலங்களை அகற்றவும், ஆயிரம் ஆயிரம் வீரர்களும், வீராங்கனைகளும் அன்று ஆர்த்தெழுந்து போராடினார்கள். அவர்கள் உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்துப் பெற்றுத் தந்த சுதந்திரம் தான் இந்தச் சுதந்திரம்! சுதந்திரத்தின் கனிகளைச் சுவைக்கின்ற நாம், வேர்களை நினைவு கொள்ள வேண்டிய நாள் இந்த வீர சுதந்திரத் திருநாள்.

இந்தியத் தாய்க்கு நூறு கோடி முகங்கள் இருந்தாலும், இதயம் ஒன்று தான்! இந்த உண்மையை மறந்தால் எதிர்காலம் கேள்விக்குறியாகும். இன்று தேசத்தை அச்சுறுத்திக் கொண்டு இருப்பவை தீவிரவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதம். இவற்றை எதிர்த்துப் போராட வேண்டிய மாபெரும் கடமை நம்மை எதிர்நோக்கி இருக்கிறது. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டிய பெருங்கடமை ஒவ்வொரு இந்தியர்க்கும் உண்டு என்பதை இன்று நினைவு கொள்வோம்.

'மக்களின் நம்பிக்கையே நமக்கு வலிமை தருகின்ற மகாசக்தி' என்பதை உணர்ந்த எனது அரசு மக்களுக்கு என்னென்ன செய்யலாம் என்பதையே தீர்க்கமாகச் சிந்தித்து, சிறப்பாகத் திட்டம் தீட்டி, தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.

விவசாயிகளுக்கும், குடிசைவாசிகளுக்கும் முற்றிலும் இலவச மின்சாரம் வழங்கும் அரசு – இந்தியாவிலேயே வீட்டு உபயோகிப்பாளருக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்க மானியம் வழங்கும் ஒரே அரசு – பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலைக்கு அரிசி வழங்கும் அரசு – ஏழை எளியோருக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் அரசு – வட்டித் தள்ளுபடி செய்து எளிய முறையில் விவசாயிகள் பயிர்க் கடன் பெற வழிவகை செய்த அரசு – பள்ளிக் குழந்தைகளுக்குச் சரிவிகித சத்துணவு வழங்கும் அரசு – ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவியர்களுக்கு இந்தியாவிலேயே வேறெங்கும் இல்லாதபடி இலவச சைக்கிள் வழங்கும் அரசு – கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்த வேலைவாய்ப்பு, அதிக சலுகைகளுடன் புதிய காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றை வழங்கும் அரசு – மீன்வளம் பெருக்கும் திட்டங்கள், காப்பீட்டுத் திட்டம் மற்றும் வீட்டுவசதித் திட்டம் மூலம் மீனவர் நலன் பேணும் அரசு – பல்வேறு புதிய முயற்சிகள் மூலம் மகளிர் நலன் காக்கும் அரசு என்று சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரது நலன் காக்கும் அரசாக எனது தலைமையில் அமைந்த அரசு திகழ்ந்து வருகிறது.





இந்த இனிய நாளில், **"நமது கிராமம்"** என்னும் புதிய திட்டத்தைத் தொடங்கி வைப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் தவறாது சேர்த்தல், அவர்கள் படிப்பைப் பாதியில் நிறுத்திவிடாமல் தொடர்ந்து கற்க வகை செய்தல், சிசு மரண விகிதத்தைக் குறைத்தல், பெண் குழந்தைகளைக் கருவிலேயே மாய்க்கும் செயலை அறவே நீக்குதல், வறுமையை ஒழித்தல், கிராமத் துப்புரவு, பொது சுகாதாரம் மற்றும் தூய்மை முதலான கிராமங்களின் அனைத்துச் சமூக மேம்பாட்டு அம்சங்களையும், சம்பந்தப்பட்ட கிராம மக்களின் முழுமையான ஈடுபாட்டோடு, சிறப்புடன் செயல்படுத்தும் ஊராட்சிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், இணைப்புச் சாலைகள், உட்புற சிமெண்ட் சாலைகள், தெரு விளக்குகள், மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகியவை இந்தத் திட்டத்தின் கீழ் அரசால் செய்து தரப்படும். தமிழகத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பல்வேறு முற்போக்குத் திட்டங்கள் மூலம் – முன்னோடித் திட்டங்கள் மூலம் – இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்கி வரும் எனது அரசின் முயற்சிகள் அனைத்துக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளித்திட வேண்டும் என்று என் அன்புக்குரிய தமிழக மக்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

வலிமையான பாரதம் அமைய
வளமான தமிழகத்தை உருவாக்குவோம்!

அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை எனது சுதந்திரத் திருநாள் வாழ்த்துகள்!

★ ★ ★

தமிழ்நாடு அரசின் சார்பில் 58ஆவது சுதந்திர தினவிழா



இந்தியத் திருநாட்டின் 58ஆவது சுதந்திர தினவிழா 15–8–2004 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை தலைமைச் செயலகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சுதந்திர தின விழாவையொட்டி மிகச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதிகாலை முதலே பொதுமக்கள் திரளாக கோட்டையை நோக்கி வந்தவண்ணம் இருந்தனர்.

காலை எட்டுமணியளவில் விழாவிற்கு வருகைதந்த முப்படைத் தளபதிகளை, தமிழக அரசின் தலைமைச் செயலர் திருமதி.லக்ஷ்மிப்ராணேஷ், இ.ஆ.ப., அவர்களும் மற்றும் உயர் அதிகாரிகளும் வரவேற்றனர்.

காவலர்கள் மோட்டார் சைக்கிளில் அணிவகுத்துவர, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காலை 8.16 மணிக்கு கோட்டை கொத்தளத்திற்கு வருகைபுரிந்தார்கள். அப்போது காவல்துறையினரால் வாத்திய இசை முழங்க வரவேற்பு கொடுக்கப்பட்டது.

அதனைக் தொடர்ந்து தமிழக அரசின் தலைமைச் செயலர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு முப்படைத் தளபதிகளையும், காவல்துறைத் தலைவர், காவல்துறை கூடுதல் தலைவர் (சட்டம்–ஒழுங்கு), சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் ஆகியோரையும் அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

அடுத்து, காவல்துறையினரின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த படையினர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு வரவேற்பு அளித்தனர்.

பின்னர், சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்த வாகனத்திலிருந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்கள். அதன் பின்னர் 8.25 மணிக்கு காவல்துறையினரின் வாத்திய இசைக்குழு தேசிய கீதம் இசைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்கள்.

தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி முடிந்தவுடன், பல்வேறு விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, கடந்த ஆண்டு முதல் வழங்கப்படடுவரும் துணிவு மற்றும் வீரதீரச் செயல்களுக்கான விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா நினைவு விருதும், ரூ. 5 இலட்சம் காசோலையும் கன்னியாகுமரி மாவட்டம் தெங்கன்குடியைச் சேர்ந்த திருமதி. அமலமேரி என்பவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

500க்கும் மேற்பட்ட ரயில் பயணிகளின் உயிரைக் காப்பாற்றியதற்காக திருமதி. அமலமேரிக்கு, இந்த விருது அளிக்கப்பட்டது. 9–7–2004 அன்று நாகர்கோவில்– திருவனந்தபுரம் இரயில் தடத்தில் மார்த்தாண்டம் அருகே தெங்கன்குடி என்னும் இடத்தில் 50 அடி உயரத்திலிருந்து திடீரென மண் சரிவு ஏற்பட்டு

தண்டவாளத்தில் விழுந்தது. மண் சரிவு ஏற்பட்ட சில நிமிடங்களில் திருவனந்த புரத்திலிருந்து நாகர்கோவில் செல்லும் இரயில் வேகமாக வந்து கொண்டிருந்தது. இதனைக் கண்டு மனம் பதைத்து, தன் உயிரைத் துச்சமெனக் கருதி **திருமதி. அமலமேரி 300 மீட்டர் எதிர்கொண்டு ஓடி, தான் அணிந்திருந்த சிவப்புச் சேலையை, சிவப்புக் கொடிபோல் உயர்த்திக் காட்டி நிகழவிருந்த பெரும் விபத்தைத் தடுத்து நிறுத்தினார். இந்த வீரதீரச் செயலுக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கல்பனா சாவ்லா விருதை அமலமேரிக்கு வழங்கி பெருமைப்படுத் தினார்கள்.**

தொடர்ந்து, தூய்மையான கிராமப் பராமரிப்புத் திட்டத்திற்கான பசுமை விருதை காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம், கடுவாஞ்சேரி ஊராட்சி மன்றத்தலைவர் கலா, திருச்சி மாவட்டம், தாத்தையங்கார் பேட்டை ஒன்றியம், ஆராய்ச்சி ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.விஜயா மதிவாணன் மற்றும் கடலூர் மாவட்டம் கீரப்பாளையம் ஒன்றியம், கீரப்பாளையம் ஊராட்சி மன்றத்தலைவர் திரு.கே.பி. பன்னீர்செல்வம் ஆகியோருக்கு வழங்கினார்கள். இந்த விருதும் பாராட்டுப் பத்திரமும், ரூ.5 இலட்சம் ரொக்கத்தொகையுடன் கூடியதாகும். பின்னர், ஊனமுற்றோர்க்கு மிகச் சிறந்த சேவை புரிந்தோருக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன. சிறந்த மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் விருதை திண்டுக்கல் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் திரு.கு. செல்லமுத்து அவர்களுக்கும், சிறப்பு மருத்துவருக்கான விருதை டாக்டர் மயில்வாகனன் நடராஜன் அவர்களுக்கும், சிறந்த தனியார் தொழில் நிறுவனத்திற்கான விருதை இந்துஸ்தான் கோகோ–கோலா பீவரேஜஸ் பி. லிட்., நிறுவனத்திற்கும், ஊனமுற்றோர் நலனை நடைமுறைப்படுத்தியதற்கான விருதை சேரன் ரீஜியன் கிரிஸ்டியன் நிறுவனர் திரு.சாம்சனுக்கும், மகளிர் நலத்துக்காக ஆசாநிவாஸ் சமூக சேவை நிறுவனத்தலைவர் அருள்தந்தை டாக்டர் குரியன்தாமசுக்கும், சிறந்த சமூகப் பணியாளருக்கான விருதை (ஊனமுற்றோர் நலம்) திரு.எஸ். சங்கரராமனுக்கும், சிறந்த சமூகப் பணியாளர் விருதை (மகளிர் நலம்) திரு.எஸ். வித்யாகருக்கும் வழங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள்.

பின்னர் ஊனமுற்ற குழந்தைகளுக்கு சுதந்திர தினவிழாவையொட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இனிப்புகளை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

விழாவைக் காண சாலையின் இருமருங்கிலும் குழுமியிருந்த பொதுமக்கள் முதலமைச்சர் அவர்களுக்கு கையசைத்து சுதந்திர தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர். ☐

வறட்சியைச் சமாளிக்க நிதி வழங்கப்படும் மாநிலங்கள் பட்டியலில் தமிழகத்தையும் சேர்க்க வேண்டும்

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
எழுதிய கடிதம் (29.7.2004)

9 மாநிலங்களில் வறட்சி நிலைமையை ஆய்வு செய்வதற்காக 27.7.2004 அன்று இந்திய அரசின் அமைச்சரவைச் செயலாளர் ஒரு கூட்டத்தை நடத்தியதாக ஊடகச் செய்திகள் வாயிலாக நான் அறிந்தேன். இந்த 9 மாநிலங்களில் தமிழகம் இடம் பெறவில்லை. மழை நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களின் முதலமைச்சர்களின் கூட்டத்தைப் பாரதப் பிரதமர் அடுத்த வாரம் கூட்ட இருப்பதாகவும் நான் அறிகிறேன்.

வறட்சிக்கு நிகரான நிலை உருவாகி வருவதை சமாளிப்பதற்காக ஆதரவு வழங்கப்படும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாட்டையும் சேர்க்க வேண்டிய தேவையை வலியுறுத்தி நேற்று (29.7.2004) பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். என்னுடைய கடிதத்தில் நான் தெரிவித்திருப்பதாவது:

'தமிழகத்தைத் தவிர்த்து, 9 மாநிலங்களின் தலைமைச் செயலர்களுடன் வறட்சிக்கு நிகரான நிலை உருவாகி வருவதைப் பற்றியும், அதற்கு ஆயத்தமாவது பற்றியும் 27.7.2004 அன்று இந்திய அரசின் அமைச்சரவைச் செயலர் தனித்தனியாக ஆலோசனை நடத்தியதாக வந்த செய்தியை நான் கவலையோடு படித்தேன்.

தமிழ்நாட்டில் 2001–2002 முதல் பருவ நிலைகள் தொடர்ந்து பொய்த்தன. 2002–2003 மற்றும் 2003–2004 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் சென்னை மாவட்டம் நகர்ப்புறப் பகுதி என்பதால், அது நீங்கலாக ஏனைய அனைத்து மாவட்டங்களும் வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. மேலும், காவேரி நதிநீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவுப்படியோ அல்லது மத்திய நீர் ஆணையத்தால் வகுக்கப்பட்ட இடர்ப்பாடுக்கால விதிமுறைகளின்படியோ, 2003–2004ஆம் ஆண்டிலும் கர்நாடகம் காவேரியில் தண்ணீரைத் திறந்து விடவில்லை. இதன் விளைவாக, காவேரி நதிநீர்ப் பாசனம் பெறும் மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. தமிழகத்தின் முக்கியமான சம்பாப் பயிர் பெரிதும் பாதிக்கப்பட்டது.

2003ஆம் ஆண்டு அக்டோபர்–நவம்பர் காலத்தில் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாக, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகள் டிசம்பர் மாதத்திலேயே முழுவதும் காய்ந்து போய்விட்டன. மாதம் ரூ.30 கோடி செலவில், சென்னைக்கு இன்றியமையாது வழங்கப்பட வேண்டிய தண்ணீரை லாரிகளின் மூலமே இன்றும் வழங்கிக் கொண்டு வருகிறோம். இது கடுமையான சிக்கலை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த அசாதாரண சூழ்நிலையைச் சமாளிக்க நாங்கள் கடுமையாகப் போராடி வருகிறோம்.

சென்னை மாநகரம் நீங்கலாக தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் நிலவிய வறட்சி நிலைமைகளைப் பற்றி 1.2.2004 அன்று தமிழக அரசு ஒரு விரிவான அறிக்கையை மைய அரசுக்கு அளித்தது. சென்னை மாநகரில் ஏற்பட்ட அசாதாரண குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காகத் தனியே ஒரு அறிக்கை 16.1.2004 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. சென்னை நீங்கலாக இதர மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 1,584 கோடி ரூபாய் நிதி உதவியையும் 10.8 இலட்சம் டன் அரிசியையும் நாங்கள் கோரி இருந்தோம். அசாதாரணப் பற்றாக்குறை ஏற்பட்ட சென்னை மாநகரக் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காகத் தனியே 700 கோடி ரூபாய் மதிப்பிலான உதவித் தொகுப்பைக் கோரி இருந்தோம். மத்தியக் குழு ஒன்று அனுப்பப்பட்டு, அதன் மதிப்பீட்டின் அடிப்படையில் தேசிய பேரிடர் எதிர்பாரா நிதி – பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 292.95 கோடி ரூபாயும், உணவுக்கு வேலைத் திட்டத்தின் கீழ் 3.04 இலட்சம் டன் அரிசியும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது.

இந்த நிதி உதவியை நாங்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டோம். இன்னும் சொல்லப் போனால், பெறப்பட்ட உதவிக்கும் மேலாக மிக அதிகமாகவே செலவழித்து உள்ளோம். மாநில அரசின் நிதி நிலைக்கு இது கடும் சுமையை ஏற்படுத்தி வருகிறது. இந்த வருடமும் தென்மேற்குப் பருவமழை ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. தொடர்ந்து பருவமழை பொய்த்து வரும் நிலையில், இந்தப் பருவ மழையும் பொய்ப்பது மிகுந்த கவலையை அளிக்கிறது.

2004ஆம் ஆண்டு ஜூன் முதல் தேதியிலிருந்து ஜூலை இறுதி வரை கணக்கிட்டால் 30 மாவட்டங்களில் 15 மாவட்டங்களில் பெறப்பட்டது பற்றாக்குறை மழையே (Deficit) ஆகும். அதிலும், இந்த 15 மாவட்டங்களில், 11 மாவட்டங்கள் வழக்கமான மழை அளவை விட 20 சதவிகிதத்திற்கும் மேல் குறைவான மழையைப் பெற்றுள்ளன. ஆந்திரா, மகாராஷ்டிரம் மற்றும் மத்தியப் பிரதேச மாநிலங்களிலும் இது போன்ற நிலைமை உள்ளது. அங்கும் சில மாவட்டங்கள் மிகக் குறைவான மழையைப் பெற்றுள்ளன.

மேற்கண்ட மாநிலங்கள் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருக்கும் போது என்ன காரணமோ தெரியவில்லை, தமிழகத்தை அழைக்காமல் விட்டுவிட்டார்கள். தமிழ்நாட்டில் கிழக்குக் கடற்கரையோரம் உள்ள இந்த பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை காலத்திலும் போதுமான மழையைப் பெறவில்லை.

மேலும், கர்நாடகம், தமிழகத்திற்கு உரிய தண்ணீரை விடுவிக்காத காரணத்தால் காவேரி நீரால் பாசனம் பெறும் 9 மாவட்டங்கள் மீண்டும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. 29.7.2004 அன்றைய நிலவரப்படி கர்நாடகத்திலிருந்து பெறப்பட வேண்டிய காவேரித் தண்ணீரின் அளவு 16.619 டி.எம்.சி. அடி அளவுக்கு குறைவாகும். இதன் விளைவாக, குறுவைப் பயிர் சாகுபடி செய்ய தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட இயலாத நிலையில் உள்ளோம்.

காவேரி நீரில் தமிழ்நாட்டுக்கு உரிய சட்டபூர்வமான பங்கைப் பெறுவதற்கு ஏதுவாக காவேரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தைக் கூட்டுமாறு 4.6.2004 நாளிட்ட எனது கடிதத்தின் வாயிலாக நான் ஏற்கெனவே உங்களைக் கேட்டுக் கொண்டுள்ளேன். காவேரி நீரில் எங்களுக்கு உரிமையுள்ள பங்கை கர்நாடகம் தர மறுப்பதாலும், தொடர்ந்து பருவமழை பொய்த்து வருவதாலும் ஏற்பட்டுள்ள கடும் பற்றாக்குறை, தேவைகள் ஆகியவற்றைத் தங்களது தனிப்பட்ட கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இந்த நிலையில் தங்களது உடனடி தலையீடு அவசியம் தேவைப்படுகிறது.

தனி நபருக்கு மிகவும் குறைந்த அளவு தண்ணீர் கிடைக்கும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு உள்ளது. பருவமழை தவறியதும், வறட்சி நிலையும் தண்ணீர்ப் பற்றாக்குறைச் சுமையை மேலும் கடுமையாக்கி வருகிறது. தமிழ்நாடு தண்ணீர்ப் பற்றாக்குறை மாநிலமாக உள்ளது என்பதும், வறட்சி நிலையால் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஆதரவு தேவைப்படுகின்ற மாநிலமாக உள்ளது என்பதும் எல்லோரும் அறிந்ததே.

ஆகவே, வறட்சி நிலையைச் சமாளித்திட ஆதரவு தேவைப்படும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாட்டையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், கூட்டப்பட உள்ள வறட்சி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களின் கூட்டத்திற்குத் தமிழகம் அழைக்கப்பட வேண்டும் எனவும் நான் வேண்டிக் கொள்கிறேன்.'

மத்திய அரசில் 12 அமைச்சர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும், வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்காக மத்திய அரசின் ஆதரவைப் பெற உள்ள மாநிலங்களின் பட்டியலில் தமிழகத்தைச் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்வது குறித்து அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை என்பது அதிர்ச்சி அளிப்பதும், அவமானகரமானதும் ஆகும். அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் உள்ள ஏழைஎளிய மக்களின் நலன் பற்றியும், விவசாயிகளின் நலன் பற்றியும் நாவறளப் பேசி, இன்று அமைச்சர்களாகப் பதவி வகிக்கும் இவர்கள், மத்திய அரசின் உதவியைத் தமிழ்நாட்டுக்குப் பெற்றுத் தரும் விஷயத்தில் தங்கள் கடமையில் இருந்து தவறிவிட்டார்கள். தேர்தல் நேரத்தில் ஒரு பேச்சு பேசி, தேர்தல் முடிந்து மத்தியில் அதிகாரத்தைப் பெற்று ஆட்சியில் அமர்ந்தவுடன் தங்களுடைய வாக்குறுதிகளை எல்லாம் மறந்து போகின்ற இரட்டை வேடதாரிகளான இந்த மந்திரிகளும், அவர்கள் சார்ந்துள்ள கட்சிகளும் தமிழக மக்களின் பழிப்புக்கு உள்ளாகியே தீருவார்கள். □

தமிழகத்தின் கிராமப்புற பொருளாதாரம் மேம்பாடு அடையும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

ஆடிப்பெருக்கு விழாவை முன்னிட்டு மேட்டூரில் இருந்து 7 நாட்களுக்கு, ஒரு நாளுக்கு 1டி.எம்.சி. அடி வீதம் தண்ணீர் திறந்துவிட உத்தரவிடப்பட்டுள்ளது. ஆக 7 நாட்களுக்கு மொத்தம் 7 டி.எம்.சி. அடி தண்ணீர் திறந்துவிடப்படும். மேலும் மேட்டூருக்கு நீர்வரத்தைப் பொறுத்து விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடுவதைப் பற்றி பின்னர் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கிடையில் விவசாயிகள் எந்தச் சாகுபடியும் இல்லாமல், எந்த இலாபமும் அடையாமல் இருந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் ஒரு விசேஷ திட்டத்தை இந்த அரசு அறிவித்திருக்கிறது. காட்டாமணக்கு – Jatropa, சர்க்கரைக் கிழங்கு – Sugar Beet, Sweet Sorgham – சர்க்கரைச் சோளம் ஆகிய பயிர்களைப் பயிரிட்டால் குறைந்த அளவு தண்ணீர் இருந்தாலே போதும். நெல் சாகுபடியைவிட பன்மடங்கு அதிக இலாபம் பெறலாம் என்பதை விவசாயிகளுக்கு ஏற்கெனவே விளக்கிக் கூறியிருக்கிறோம். இதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தையும் அறிவித்திருக்கிறோம். அதுதான் Contract Farming என்பதாகும். பெரிய தொழிலதிபர்களை நாங்கள் Expression of Interest கொடுக்கும்படி அழைத்திருக்கிறோம். பலர் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான காலக்கெடு கடந்த 23 ஆம் தேதியன்று முடிவடைந்தது. இப்போது வந்திருக்கின்ற அந்த விண்ணப்பங்களை ஆராய்ந்து இன்னும் சில நாட்களில் முடிவு எடுக்கப்படும். இதன்படி பெரிய தொழிலதிபர்கள் தங்கள் பொறுப்பில் 25,000 ஏக்கர், 30,000 ஏக்கர் என்று பெரிய நிலப்பரப்புகளை எடுத்துக்கொண்டு அந்த நிலப்பரப்பில் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்று சிறிய அளவில் நிலம் வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு, அவர்கள் தேவையான உதவிகளைச் செய்து, அந்த விவசாயிகளோடு இந்தத் தொழிலதிபர்கள் ஒப்பந்தங்கள் 'செய்துகொண்டு அவர்களுடைய நிலங்களில் அவர்களை காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு ஆகியவற்றைப் பயிரிடச் செய்து அதற்குத் தேவையான விதைகள், உரங்கள் மற்றும் தேவையான உதவிகள் அனைத்தையும் இந்தத் தொழிலதிபர்களே சிறு விவசாயிகளுக்குக் கொடுத்து அவர்கள் அந்தப் பயிர்களைச் சாகுபடி செய்த பின், இந்தப் பெரிய தொழிலதிபர்களே விலை கொடுத்து, நல்ல விலைக்கு அந்தச் சிறிய விவசாயிகளிடமிருந்து அவற்றை வாங்கிக்கொள்வார்கள். இந்தப் பயிர்களின்மூலம் இந்த விவசாயிகளும் இலாபம் அடைவார்கள். அவர்களுக்கு ஒரு உத்தரவாதம் இருக்கின்றது. இத்தனை நாளும் காட்டாமணக்குப் பயிரிடுங்கள், சர்க்கரைச் சோளம் பயிரிடுங்கள் என்று அரசு அறிவுரை வழங்கினாலும், விவசாயிகள் கேட்ட கேள்வி, இந்தப் பயிர்களை எல்லாம் சாகுபடி செய்தால் எப்படி விற்பனையாகும்? யார் வாங்குவார்கள் என்ற கேள்வியைக் கேட்டார்கள். இப்போது அதற்கும் ஒரு வழி செய்தாகிவிட்டது. பெரிய தொழிலதிபர்களே விவசாயி களோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, அவர்கள் சாகுபடி செய்கின்ற பயிர்களை அவர்களிடமிருந்து விலை கொடுத்து வாங்கிக் கொள்வார்கள். இந்தத் தொழிலதிபர்கள் தொழிற்சாலைகளைத் தொடங்கி இருக்கின்ற தொழிற்சாலைகளை விரிவுபடுத்தி Ethanol, Bio-Diesel, Bio- Fuel தயாரிப்பார்கள். இது வெற்றிகரமாக செயல்படமுடியும், செயல்படுத்தமுடியும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. ஆகவே, விரைவிலேயே தமிழகத்தின் Rural Economy – கிராமப்புற பொருளாதாரம் மேம்பாடு அடையும்; ஒரு பெரிய உன்னத நிலையை அடையும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

7 இலட்சம் விவசாயிகள் பயன்பெற குறைந்த வட்டியில் ரூ.1037 கோடி கடனுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
(3.8.2004)

வேளாண் பிரிவின் விரைவான வளர்ச்சிக்கும், ஊரகப் பகுதிகளின் துரிதமான முன்னேற்றத்திற்கும் நான் எப்பொழுதும் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறேன். மக்களுடைய, குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வாழ்வோர், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர் ஆகியோரது மகத்தான ஆதரவுடன் 2001ஆம் ஆண்டு மே திங்களில் எனது தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றது. துரதிருஷ்டவசமாக, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தின் போது, 90ஆம் ஆண்டுகளின் இறுதிவாக்கில் வேளாண் பிரிவு வீழ்ச்சி அடைந்தது. முந்தைய தி.மு.க. அரசால் கூட்டுறவுக் கடன் முறை முற்றிலுமாகப் பாழ்படுத்தப்பட்டது. முதலமைச்சராக நான் பொறுப்பேற்றவுடன், 310.50 கோடி ரூபாய் வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து, விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கி நான் ஆணையிட்டேன். கூட்டுறவுக் கடன் முறையைப் பாதுகாப்பதற்காகத் தேவையான தொகையைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு ஈடு செய்தது.

அதன் பிறகு, என்னுடைய அரசு, 2002–2003ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சியையும் தொடர்ந்து, மீண்டும் 2003–2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சியையும் சமாளிக்க வேண்டியதாயிற்று. இந்த இரண்டு ஆண்டுகளில் என்னுடைய அரசு வேளாண் துறைக்கு மாபெரும் ஆதரவை அளித்தது; பரவலாகவும், தீவிரமாகவும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. என்னுடைய அரசு, 1.4.2002லிருந்து 31.3.2004 வரை, இந்த வறட்சி நிவாரணப் பணிகளுக்காக – விவசாயிகளின் பயிர் இழப்பை ஈடு செய்யவும் அவர்கள் வேளாண் பணிகளை மீண்டும் தொடங்கவும் வழங்கப்பட்ட 325.56 கோடி ரூபாய் உட்பட – மொத்தம் 850.44 கோடி ரூபாய் வழங்கியது. 10 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்கள், 2002 அக்டோபர் மாதம் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடும் வகையில், அவர்களுக்கு 21 கோடி ரூபாய் மதிப்பிலான பரிசுப் பைகளை வழங்கியது. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் என்னுடைய அரசு 2003ஆம் ஆண்டு ஜனவரியில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் மதிய உணவு வழங்கும் திட்டத்தை அறிமுகப் படுத்தியது. அவர்களுடைய வேண்டுகோளின் அடிப்படையில் பிப்ரவரித் திங்கள் முதல் நாளிலிருந்து ஒவ்வொரு மாதமும் ஒரு குடும்பத்திற்கு 30 கிலோ இலவச அரிசி வழங்குகின்ற திட்டமாக இந்த உதவி மாற்றப்பட்டது. இந்தத் திட்டம், 10 இலட்சம் குடும்பங்களுக்கு வறட்சி நிவாரண உதவியாக, 2003ஆம் ஆண்டு ஆகஸ்டு இறுதிவரை மொத்தம் 109.54 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டது. இவ்வாறு, வறட்சிக் காலத்தில் என்னுடைய அரசு, விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு ஓடோடிச் சென்று தனது முழு

ஆதரவை அளித்து, அவர்களை முழுமையாகப் பாதுகாத்தது.

என்னுடைய அரசு அப்போது இருந்த 28 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்ததுடன், 2002–2003 பசலி ஆண்டின் வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு 50 கோடி ரூபாய் அளவிலான நில வரி மற்றும் இதர வரிகளைத் தள்ளுபடி செய்தது. மீண்டும் 2003–2004 பசலி ஆண்டிற்கு 50 கோடி ரூபாய் அளவுக்கு நிலவரி மற்றும் உள்ளூர்த் தல வரி மற்றும் தல மேல் வரி போன்ற இதர வரிகளை என்னுடைய அரசு தள்ளுபடி செய்தது. 250 கோடி ரூபாய் குறுகிய காலப் பயிர்க் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டு வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குகின்ற வகையில், 61.05 கோடி ரூபாய் வட்டி மற்றும் அபராத வட்டியை எனது அரசு தள்ளுபடி செய்தது. மீண்டும் 2004ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், 2003–2004ஆம் ஆண்டில் விவசாயிகளால் செலுத்தப்பட வேண்டிய 62 கோடி ரூபாய் அளவிலான பயிர்க் கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றை என்னுடைய அரசு தள்ளுபடி செய்தது.

ஒரு மாநில அரசு தன் சக்திக்கு மிகவும் அப்பாற்பட்ட வகையில் எவ்வளவு வழங்க முடியுமோ அவ்வளவு அதிக பட்ச உதவியை எனது அரசு விவசாயிகளுக்கு வழங்குவதை நான் உறுதிப்படுத்தியிருக்கிறேன். முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு கூட்டுறவு அமைப்புகளை வலிவோடு வைத்துக் கொள்ளத் தவறி விட்டதாலும் தொடர்ந்து சில ஆண்டுகளாகத் திரும்பத் திரும்ப வறட்சி நிலைமை தொடர்ந்ததாலும் ஒட்டு மொத்தக் கூட்டுறவுக் கடன் வழங்கும் அமைப்பின் வலிமை பெரிதும் பாதிக்கப்பட்டது. விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் புதிய முதலீடுகளை மேற்கொள்வதற்காகவும் தேவையான கடன் வசதிகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களை வலிமை உடையதாக ஆக்குவது அவசியம். இருப்பினும், தொடர்ந்து ஏற்பட்ட வறட்சிகளும் அதனைத் தொடர்ந்து விவசாயிகள் கடன்களைச் செலுத்த இயலாமல் போனதும் கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இந்த நிறுவனங்கள் மேலும் விவசாயக் கடன் வழங்க இயலவில்லை.

கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களை ஆரோக்கியம் உள்ளவைகளாக ஆக்குகின்ற பிரச்சினையை ஒரு தேசியப் பிரச்சினையாக மத்திய அரசு எடுத்துக் கொண்டு, விவசாயிகளுக்குத் தேவையான நிவாரணத்தை வழங்க வேண்டும். மத்தியில் உள்ள புதிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு விவசாயிகளுக்கு உற்ற காலத்தில் உதவ உடனடி நடவடிக்கைகளை எடுக்கும் என்று நான் நம்பி இருந்தேன். துரதிர்ஷ்டவசமாக, 2004–2005ஆம் ஆண்டுக்கான மத்திய நிதி நிலை அறிக்கையில் இந்தப் பிரச்சினை சுட்டிக் காட்டப்பட்டுள்ளதே தவிர, இதற்கான தீர்வு காணப்படவில்லை. ஒரு 'சிறப்புப் பணிப்பிரிவு' (Task Force) மட்டுமே அமைக்கப் பட்டுள்ளது. பெருந்தொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டுத் திரும்பிவராக் கடன்களைச் சரிப்படுத்த, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) 9,000 கோடி ரூபாய் பெறுவதற்கு மத்திய அரசு வழி வகை செய்துள்ள அதே வேளையில், விவசாயிகளுக்கு எதுவும் மத்திய அரசால் செய்யப்படவில்லை. விவசாயத்திற்கும்,, விவசாயி களுக்கும் உறுதுணையாக இருப்போம் என்ற உறுதி மொழியின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு விவசாயிகளின் சிக்கல்களைத் தீர்ப்பதில் பரிதாபகரமாகப் படு தோல்வி அடைந்துள்ளது. மாநில அரசுகள் இதற்கு மேல் ஒன்றும் செய்வதற்கில்லை; ஏனெனில் இது அவைகளுடைய நிதித் திறனுக்கு அப்பாற்பட்டது. மேலும் கூட்டுறவுக் கடன் வழங்கும் அமைப்புக்குப் புத்துயிர் ஊட்டும் அமைப்புகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. எனவே, தொடர்ச்சியான வறட்சிகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட கூட்டுறவுக் கடன் அமைப்புக்குப் புத்துயிர் அளிப்பதற்கு நிதி வழங்கும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்கள் ஒட்டு மொத்தமாகத் தங்களது செயல்பாட்டை நிறுத்திவிடும் அபாயத்தைத் தடுக்க, புதிய சிறப்புக் கடன் வசதி 'நபார்டு' வங்கியால் வழங்கப்பட வேண்டும்.

கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்குப் புத்துயிர் ஊட்ட ஏதேனும் சிறப்பு உதவித் திட்டத்தை மத்திய அரசு வழங்குவதற்கு இடையில், 2004–2005ஆம் ஆண்டில், கூட்டுறவுக் கடன் அமைப்பு தொடர்ந்து செயல்படும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் கொண்ட ஒரு திட்டத்தைச் செயல்படுத்த நான் முடிவு செய்துள்ளேன். இது, இந்த ஆண்டு, சிறந்த பருவகாலச் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு பயிரிடும் ஒரு வாய்ப்பை விவசாயிகளுக்கு வழங்கும். 217.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எனது அரசால் வழங்கப்படும் இந்தச் சிறப்புத் திட்டம், கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களை வலிமைப்படுத்தும். தொடர்ச்சியான வறட்சிகளின் விளைவுகளால் பலவீனம் அடைந்திருக்கும் விவசாயிகள் அதிலிருந்து மீள உதவும் முக்கிய திட்டமாக இது இருப்பதால், 217.32 கோடி ரூபாய் மதிப்பில் கூட்டுறவுக் கடன் அமைப்பைப் புத்துயிர் ஊட்டும் வகையில், ஓர் உதவித் திட்டத்தை வழங்க நான் முடிவு எடுத்துள்ளேன். விவசாயிகளுக்கு உதவும் இந்தத் திட்டத்தின் அம்சங்கள் வருமாறு:

- கடந்த ஆண்டு, விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க்கடன் வட்டி விகிதத்தை 14%ல் இருந்து 12% ஆகக் குறைக்க நான் ஆணையிட்டிருந்தேன். கவனமான பரிசீலனைக்குப் பின், விவசாயிகள் மேலும் பயன்பெறுவதற்காக, கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்கள் ஒவ்வொரு நிலையிலும் தங்களது செயல்பாட்டுச் செலவுகளைக் குறைத்துக் கொண்டு 2004–2005 பருவக் காலத்துக்கு ஆண்டுக்கு 9% என்ற குறைந்த வட்டி விகிதத்தில் விவசாயிகளுக்குக் கடன் வழங்க வேண்டும் என்று நான் ஆணையிட்டுள்ளேன்.
- கூட்டுறவுக் கடன்வழங்கும் சங்கங்கள் 2004–2005ஆம் ஆண்டுக்கு வழங்கும் பயிர்க் கடன்களின் குறியீடு 1,037 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். 2003–2004ஆம் ஆண்டில் இந்தக் குறியீடு 688 கோடி ரூபாயாக இருந்தது.
- கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்குப் புது வலிமை ஊட்டுவதன் மூலம் 1,037 கோடி ரூபாயாக இந்தக் குறியீட்டை உயர்த்துவது சாத்தியமாக ஆக்கப்படும். 31.3.1999–க்கு முன்பு தங்களது குறுகிய காலப் பயிர்க் கடன்களை நடுத்தரக் கடன்களாக மாற்றிக் கொண்ட விவசாயிகள், மத்திய காலக் கடன்களின் தவணைகளைச் செலுத்த முடியாமல் உள்ளார்கள். இந்த விவசாயிகளுக்குப் பயன் அளிக்கும் வகையில் புதியதொரு திட்டத்தை நான் வழங்க முடிவு எடுத்துள்ளேன். இந்தக் கடன்கள் ஒரு தனிக் கணக்காக (Blocked Account) தொகுத்து அமைக்கப்படும். விவசாயிகளுக்கு இந்தத் தொகைக்கு முழு வட்டித் தள்ளுபடி அளிக்கப்படும். 2 ஆண்டு காலத்திற்கு அசல் தொகை எதையும் திருப்பித் தர வேண்டியதில்லை என்ற சலுகை வழங்கப்படும். அதற்குப் பிறகு, சம அளவில் ஆன ஐந்து ஆண்டுத் தவணைகளில், விவசாயிகள் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தலாம். இந்த வசதியை விவசாயிகளுக்கு அளிக்க உதவும் வகையில், இதற்குத் தேவையான 68.95 கோடி ரூபாயை தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு எனது அரசு கடனாக வழங்கும்.
- கூட்டுறவு நூற்பு ஆலைகள் தங்கள் செயல்பாடுகளை நிறுத்திக் கொண்டதால் அவற்றுக்குக் கடன் வழங்கிய மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனது அரசு இந்தக் கடன் சுமையை ஏற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளது. இதன்படி கூட்டுறவு நூற்பாலைகள் மாவட்டக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்த ஏதுவாக நலிவடைந்திருக்கும் 13 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு 76.57 கோடி ரூபாய் வழங்கப்படும். இதன் மூலம் இந்த வங்கிகளுக்குப் பயிர்க் கடன்களை வழங்குவதற்கான புதிய வலிமை கிடைக்கும்.

- 2003–2004ஆம் ஆண்டு, வறட்சியின் காரணமாக விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. இதற்காக, கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகையில் எஞ்சியுள்ள 40 கோடி ரூபாய் ரொக்கமாகக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்படும்.

- சில்லறை குடிமைப் பொருள் வழங்கும் நடவடிக்கைகளுக்காக கிராமத் தொடக்க வேளாண் கடன் வங்கிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியத் தொகையான 30 கோடி ரூபாய் உடனடியாக ரொக்கமாக வழங்கப்படும்.

அளவுக்குப் புதிய பயிர்க் கடன்களை இந்த வங்கிகள் வழங்க உதவிகரமாக இருக்கும்.

கூட்டுறவுக் கடன் வழங்கும் வங்கிகளுக்குப் புத்துயிர் ஊட்டி, புத்துணர்ச்சி அளிப்பதன் மூலம் 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு மேலும் சிறப்பான சேவை புரியும் வகையில், மாநில அரசால் இந்த ஒட்டு மொத்தப் புதிய உதவித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பருவகாலத்தில் விவசாயிகள் பயிர் செய்வதற்கு உதவி புரியும் வகையில் புதிய கடனை வழங்குவதே எங்கள் நோக்கமாகும். எங்களால் உச்சபட்சமாக என்ன செய்யமுடியுமோ அதனைச் செய்திருக்கிறோம். கூட்டுறவுக் கடன் வழங்கும் அமைப்புக்குப் புத்துயிர்



- மாநிலத்தில் தேயிலை விவசாயிகள் தாங்கள் பெற்ற கடன்களுக்காகச் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதற்காக, நான், ஏற்கெனவே 1.80 கோடி ரூபாய் ஒப்புதல் அளித்துள்ளேன். இந்தத் தொகையும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்படும்.

- இவ்வாறு மொத்தம் 217.32 கோடி ரூபாய், எனது அரசால், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள், மற்றும் தொடக்க வேளாண் வங்கிகள் ஆகியவற்றுக்கு உடனடியாக ரொக்கமாக வழங்கப்படும். இந்தத் தொகை இந்த வங்கிகளுக்குப் புத்துயிர் ஊட்டி, 2004–2005ஆம் ஆண்டில் 1,037 கோடி ரூபாய்

அளிக்க ஒரு சிறப்பு கடன் திட்டத்திற்கு மத்திய அரசும் 'நபார்டு' வங்கியும் ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு தமிழக விவசாயிகள் சார்பாக நான் மத்திய அரசையும், 'நபார்டு' வங்கியையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உதவி தேவைப்படும் இந்த நேரத்தில், விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்க, எனது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. எனது அரசின் நிதி நிலைக்கு அப்பாற்பட்டு இருந்த போதிலும், இந்தப் பருவத்தில் விவசாயிகள் தேவையான கடனைப் பெற்று புதிய சாகுபடி நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் வகையில் நான் இந்த புதிய உதவித் திட்டத்தைச் செயல்படுத்த உத்தரவிட்டுள்ளேன். ❖

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் புதிய அறிவிப்புகள்

- தலைமைச் செயலக, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் பயன்பாட்டிற்கென ரூ.3 இலட்சம் செலவில் நான்கு கணினிகள், ஒரு வண்ண பிரிண்டர் (பராமரிப்பு செலவுடன்) மற்றும் ரூ.17 ஆயிரம் செலவில் மூன்று இரும்பு பீரோக்கள் (அலமாரிகள்) வழங்கப்படும்.

- சேவை இல்லத்திலுள்ள சிறார்களுக்கான உணவூட்டுச் செலவினம் ரூ.200லிருந்து ரூ.225ஆக உயர்த்தப்படும். இதற்காக மொத்தம் ரூ.15 ஆயிரம் செலவிடப்படும்.

- சமூக நலத்துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து ரூ.1 இலட்சத்து 27 ஆயிரம் செலவில் சமூக நல இயக்கக கண்காணிப்பாளர்களுக்கு மேலாண்மை தகவல் முறைப் பயிற்சி அளிக்கப்படும்.

- சமூக நல இயக்ககத்தில் தற்போது உள்ள இரு பழைய ஜெராக்ஸ் இயந்திரங்களுக்குப் பதிலாக ரூ.1 இலட்சத்து 15 ஆயிரம் செலவில் புதிதாக ஜெராக்ஸ் இயந்திரம் வாங்கப்படும்.

- மேலாண்மை தகவல் முறையின் கீழ் சமூக நல இயக்ககத்திற்கு ரூ.3 இலட்சம் செலவில் புதிய கணினிகளும், லைன் பிரிண்டரும் வாங்கப்படும். மேலும், ரூ.31 ஆயிரம் செலவில் 5 அலமாரிகள் வாங்கப்படும்.

- தருமபுரி மற்றும் மதுரையில் உள்ள அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கென ரூ.20 இலட்சம் செலவில் இரண்டு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

- 15 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ரூ.3 இலட்சம் செலவில் 15 படிப்பெருக்கிச் சாதனங்கள் வழங்கப்படும்.

- மாவட்ட சமூக நல அலுவலகம் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு அலமாரிகள் ரூ.3 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

- 25 அரசு குழந்தைகள் காப்பகங்களில் ரூ.3 இலட்சத்து 75 ஆயிரம் செலவில் நூலகம் மற்றும் ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் விளையாட்டுச் சாமான்கள் வழங்கப்படும்.

- தாம்பரம் சேவை இல்லத்தில் ரூ.19 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் கூடுதலாக ஆறு வகுப்பறைகள் கட்டப்படும்.

- தொண்டு நிறுவனங்கள் மூலமாக ரூ.5 இலட்சம் செலவில் 3 முதியோர் இல்லங்கள் ஏற்படுத்தப்படும்.

- சத்துணவு பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு ஒன்றும் டம்ளர் ஒன்றும் ரூபாய் ஒரு கோடி செலவில் வழங்கப்படும்.

- கை, கால் ஊனமுற்றவர்களுக்கு / முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்த பின்னர் தேவைப்படும் பராமரிப்புத் தொகையும், மருத்துவப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.4 இலட்சம் அளிக்கப்படும்.

- ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரகத்தில் ரூ.1 இலட்சத்து 30 ஆயிரம் செலவில் தொலைபேசி டிஜிட்டல் போர்டு தொலைத் தொடர்பு முறை நிறுவப்படும். மேலும், கணினி அறைக்கு ரூ.30 ஆயிரம் செலவில் சீர்வளி சாதனம் வழங்கப்படும்.
- அரசினர் சிறப்புப் பள்ளிகளில் உணவுக் கட்டணங்கள் ரூ.200லிருந்து ரூ.225 ஆக உயர்த்தப்படும். இதற்கென ரூ.4 இலட்சத்து 91 ஆயிரம் செலவிடப்படும்.
- மேல்பாக்கம் அரசினர் மறுவாழ்வு இல்லங்கள் / காப்பு முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு கட்டில்கள், படுக்கைகள், ரப்பர் ஷீட்டுகள் ரூ.3 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.
- அரசினர் மறுவாழ்வு இல்லங்களில் ஏழு தலைமைக் கண்காணிப்பாளர்களுக்கு ரூ.84 ஆயிரம் செலவில் தொலைபேசி வசதி செய்து தரப்படும்.
- சென்னை அரசு மனநலம் குன்றியோர்களுக்கான பள்ளிக்கு ரூ.1 இலட்சம் செலவில் பயிற்றுவிப்புச் சாதனங்களும் பொருட்களும் வாங்கப்படும்.
- அரசு சாரா அமைப்புகளுக்கு ஆலோசனை பணிகள் அளித்திட மதிப்பூதியம் வழங்கப்படும். இதற்கென ரூ.2 இலட்சம் செலவிடப்படும்.
- சமூகப் பாதுகாப்பு இயக்ககத்திற்கென ரூ.75 ஆயிரம் செலவில் கணினி ஒன்று வழங்கப்படும்.
- ஆறு மாநகராட்சிப் பகுதிகளில் சாலையோர சிறார்களுக்கென ரூ.9 இலட்சம் செலவில் விரிவான திட்டம் வகுக்கப்படும்.
- சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தில் உள்ள நூலகத்தை வலுப்படுத்த ரூ.15 ஆயிரம் வழங்கப்படும். கையடக்க மின் உற்பத்தி இயந்திரம் ரூ.49 ஆயிரம் செலவில் வழங்கப்படும். மேலும், ரூ.60 ஆயிரம் செலவில் அறைகலன்கள் வழங்கி வலுப்படுத்தப்படும்.
- ஊனமுற்றோருக்கென ரூ.75 இலட்சம் செலவில் உதவி உபகரணங்கள் வழங்கப்படும். ரூ.15 இலட்சம் செலவில் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அளிக்கப்படும்.
- அரசு காது கேளாதோர் பள்ளிகளுக்கு எப்.எம்.காது கேட்கும் கருவிகள் ரூ.10 இலட்சம் செலவில் வழங்கப்படும்.
- ஊனமுற்றோருக்கென ரூ.5 இலட்சம் செலவில் விளையாட்டுப் போட்டிகளும், பண்பாட்டு கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படும்.
- பார்வையற்றோருக்குத் தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு (Scribe Assistance) உதவித் தொகை ரூ.30 லிருந்து ரூ.50 ஆக உயர்த்தப்படும். இதற்கென ரூ.1 இலட்சத்து 35 ஆயிரம் செலவிடப்படும்.
- சென்னை ஆயிரம் விளக்கு அரசினர் மறுவாழ்வு இல்லத் தலைமை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு ரூ.55 ஆயிரம் செலவில் கணினி வழங்கப்படும்.
- இராணிப்பேட்டை அரசு சிறார் சிறப்பு இல்லத்தின் கண்காணிப்பாளர்களுக்கு ரூ.2 இலட்சத்து 40 ஆயிரம் செலவில் குடியிருப்பு கட்டப்படும்.
- மகளிர் மற்றும் சிறார்களைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்கும் எதிர்ப்பதற்கும் சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தில் ரூ.2 இலட்சம் செலவில் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.
- தட்டப்பாறை அரசு சிறார் இல்லத்திற்கு ரூ.3 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து தரப்படும்.
- இரு கண்காணிப்பு இல்லங்களிலும் இரு சிறார் இல்லங்களிலும் மின் கம்பி தொடர்களை பழுதுபார்த்திடவும், பழையவற்றிற்குப் பதிலாகப் புதிய மின் கம்பி அமைத்திடவும் ரூ.6 இலட்சத்து 88 ஆயிரம் செலவிடப்படும்.
- பஞ்சப்பள்ளி, மல்லிப்புதூர், தட்டப்பாறை ஆகிய இடங்களிலுள்ள அரசு சிறார் இல்லக் கட்டடங்கள் ரூ.10 இலட்சம் செலவில் சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.
- இராணிப்பேட்டை அரசு சிறார் இல்லத்தில் வரவேற்புப் பிரிவுக்கு ரூ.5 இலட்சத்து 20 ஆயிரம் செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.
- செங்கற்பட்டு அரசு சிறார் இல்லம் ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் சிறப்புப் பழுது பார்க்கப்படும்.
- மல்லிப்புதூர் அரசு சிறார் இல்லத்தில் துயிற்கூடங்கள் ரூ.2 இலட்சத்து 93 ஆயிரம் செலவில் கட்டப்படும்.
- இளங்குற்றவாளிகளுக்கு நீதி வழங்கும் குழுக்கள் செயல்படுவதற்காக ஆறு இடங்களில் ரூ.7 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் அறைகள் கட்டப்படும்.
- செங்கற்பட்டு அரசு சிறார் இல்லத்தில் ரூ.4 இலட்சத்து 88 ஆயிரம் செலவில் உணவுக் கூடம் கட்டப்படும்.

❖ ❖ ❖

அனைத்து மருத்துவமனைகளிலும் அரசு அலுவலகங்களிலும் அழைப்போரை அடையாளம் காணும் கருவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை

23.7.2004 அன்று சென்னை மாநகரில் உள்ள 27 பள்ளிகளுக்கு வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக தொலைபேசியில் பொய் மிரட்டல்கள் வந்துள்ளன. இதனையடுத்து, சென்னை மாநகர காவல் துறையினர் சம்பந்தப்பட்ட 27 பள்ளிகளுக்கும் உடனடியாக விரைந்து சென்று பள்ளி வளாகங்களைத் தீவிர சோதனை செய்ததில் அங்கு வெடிகுண்டுகள் ஏதும் இல்லை என்றும், அவை வெறும் பொய் மிரட்டல்கள் தான் என்றும் கண்டறியப்பட்டது.

27 பள்ளிகளில் அனாமதேய தொலைபேசி மிரட்டல்கள் பெறப்பட்டு, அங்கிருந்த அனைவரும் பீதிக்கு உள்ளாகும் நிலைமை ஏற்பட்டது மிகவும் கண்டனத்திற்கு உரியதாகும். காவல் துறையினர் 27 பள்ளிகளுக்கும் விரைந்து சென்று மோப்ப நாய்களைப் பயன்படுத்தி, சோதனைகளை மேற்கொண்டனர். இந்த தொலைபேசித் தகவல்கள் வெறும் பொய் மிரட்டல்கள் என்பது பின்னர் தெரிந்தது. எனினும் பீதி பரவி விட்டது. இந்தப் பொய்யான தகவல்கள் காரணமாகப் பள்ளிகளுக்கு விரைந்து சென்ற பெற்றோர்கள் அங்கு வகுப்பறைகளுக்குள் நுழைந்து தங்களது குழந்தைகளை வெளியே இழுத்து வந்தனர். குழந்தைகளும் பீதி அடைந்திருந்த நிலையில் பள்ளிக் கட்டடங்களை விட்டு விரைவாக வெளியேற முனைந்தனர். இதன் விளைவாக சென்னை, சூளைமேடு நமசிவாயபுரத்தில் உள்ள ஜான் மில்டன் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியில் ஏற்பட்ட நெரிசலில் 15 குழந்தைகள் கீழே தள்ளப்பட்டு மற்றவர்கள் அவர்களை மிதித்த வண்ணம் வெளியேறியுள்ளனர். அவர்களில் கொடுங்காயம் அடைந்த 7 குழந்தைகள் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

எக்காரணமும் இன்றி இப்படிப்பட்ட சம்பவம் ஏற்பட்டது என்பது மிகவும் கண்டனத்திற்கு உரியது. எந்த ஒரு காரணமுமின்றிப் பரப்பப்பட்ட இந்த பொய் வதந்திகளால் ஏற்பட்ட பீதியின் காரணமாக 7 பள்ளிக் குழந்தைகள் கொடுங்காயம் அடைந்தனர். இதன் காரணமாக 23.7.2004 அன்று சுமார் 100 பள்ளிகள் இயங்கவில்லை. பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் தேவையற்ற மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளனர். காவல் துறையினரும் தங்களது வழக்கமான பணிகளை எல்லாம் விட்டு விட்டு ஒரே சமயத்தில் 27 பள்ளிகளுக்கும் விரைந்து செல்ல நேர்ந்தது. இந்த 27 பள்ளிகளின் வளாகங்களிலும் வெடிகுண்டு உள்ளதா என்று தீவிர சோதனைகள் மேற்கொண்டனர். முடிவில், இவை வெறும் பொய் மிரட்டல்கள் தான் என்பது தெரிய வந்தது.

துரதிஷ்டவசமாக, சமூகத்தில் சில தீய மனிதர்கள் உள்ளார்கள். இவர்கள் இப்படிப்பட்ட கொடிய செயல்களை நல்ல நகைச்சுவை என்று கருதுவது போல் தோன்றுகிறது. தங்களின் கொடூரக் குறும்புகளால் ஏற்படும் விளைவுகள் பற்றி இவர்கள் கொஞ்சமும் கவலைப் படுவதில்லை.

எனவே, எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதைத் தடுக்கும் வகையிலும், இந்தக் கொடூரக் குறும்புகளைப் புரிவோருக்கு எச்சரிக்கையாக இருக்கும் வகையிலும், காவல் துறையினர் தங்கள் கடமைகளை மேலும் விரைவாகவும், திறமையுடனும் ஆற்ற உதவும் வகையிலும், மாநிலத்தில் தொலைபேசி வசதி உள்ள அனைத்துக் கல்வி நிலையங்களிலும் 'அழைப்போரை அடையாளம் காணும் கருவி' – Caller ID Equipment பொருத்தப்பட வேண்டும் என்று நான் ஆணை யிட்டுள்ளேன். எதிர்காலத்தில் தொலைபேசியில் இத்தகைய பொய் அழைப்புகள் வந்தால் அவ்வாறு அழைத்தவரை உடனடியாகக் கண்டுபிடித்து, தாமதமின்றி குற்றவாளிகளைப் பிடிக்க காவலர்களுக்கு உதவுவதை இது உறுதிப்படுத்தும்.

அனைத்து மருத்துவமனைகளிலும், அரசு அலுவலகங்களிலும், அரசுக் கட்டடங்களிலும், அனைத்துக் காவல் நிலையங்களிலும், 'அழைப்போரை அடையாளம் காணும் கருவி' –Caller ID Equipment உடனடியாகப் பொருத்தப்பட வேண்டும் என்றும் நான் ஆணையிட்டுள்ளேன்.

குடிமக்களின் பாதுகாப்பே மிக முக்கியம் என்பதால், அனைத்து தனியார் கட்டட உரிமையாளர்களும், பெருமளவில் மக்கள் பணிபுரியும் நிறுவனங்கள் மற்றும் பெருமளவில் மக்கள் கூடும் இடங்களின் உரிமையாளர்களும் 'அழைப்போரை அடையாளம் காணும் கருவி' – Caller ID Equipment–ஐ தங்கள் தொலைபேசிகளில் பொருத்திக் கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். இது, 'அத்தகைய விஷமக்காரர்களைக் கண்டறிந்து, சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வந்து, சட்டப்படி அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாகும்.

23.7.2004 அன்று நிகழ்ந்த நெரிசலில் படுகாயமுற்ற 7 குழந்தைகளும் விரைவில் குணம் அடைய நான் பிரார்த்திக்கிறேன். இந்தக் குழந்தைகள் அனுமதிக்கப் பட்டுள்ள மருத்துவமனைகளில் சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்குமாறு நான் சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளின் நிருவாகத்தினரைக் கேட்டுக் கொண்டுள்ளேன். இந்தக் குழந்தைகள் அனுமதிக்கப் பட்டுள்ள மருத்துவமனைகளுக்கு நேரில் சென்று சிகிச்சை பெறும் குழந்தைகளைப் பார்வையிடவும், அவர்களது உடல்நிலை முன்னேற்றத்தைப் பற்றி விசாரித்து அறியவும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ந.தளவாய் சுந்தரம் அவர்களை நான் அனுப்பி வைத்துள்ளேன். □

ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவு

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள மொத்தம் 22,817 ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.7.2004 அன்று உத்தரவிட்டுள்ளார்கள்.

பள்ளிக் கல்விக்காகத் தமிழக அரசு தலையாய முன்னுரிமை அளித்து வருகிறது. 2004–2005 வரவு–செலவுத் திட்டத்தில் 4,202 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இதற்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, கடந்த மூன்று ஆண்டுகளில் 22,178 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இவ்வாறு நிரப்பப்பட்ட பின்னரும் 1.6.2004 அன்றைய நிலவரப்படி ஆசிரியர்கள் ஓய்வு, ஆசிரியர்கள் பதவி உயர்வு மற்றும் புதிய பள்ளிகள் திறப்பதால் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் போன்றவை காரணமாக அரசுப் பள்ளிகளில் 22,817 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இந்த 22,817 ஆசிரியர் பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.7.04 அன்று ஆணையிட்டுள்ளார்கள். இப்பணியிடங்கள் நிரப்பப்பட்ட உடன், தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு விடும்.

12,900 இடைநிலை, உடற்கல்வி, ஓவியம், இசை மற்றும் தையல் ஆசிரியர் பணியிடங்களை வேலை வாய்ப்பகங்கள் மூலம் 31.8.2004–க்குள் நிரப்பவும், 8,634 பி.எட் தகுதி ஆசிரியர்கள் மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் போட்டித் தேர்வு நடத்தி நான்கு மாத காலத்திற்குள் நிரப்பவும், இது தவிர 1,293 பி.எட். தகுதி ஆசிரியர்கள் மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் பணியிடங்களைப் பதவி உயர்வு மூலம் நிரப்பவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். 1.12.2004 அன்றைய தேதியில் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் ஆசிரியர் காலிப் பணியிடம் ஏதும் இருக்காது என்பது இதன் மூலம் உறுதி செய்யப்படும். □

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சீரிய பணிகள்

– திரு. **ப. ரா.சம்பத்**, இ.ஆ.ப.,
தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாட்டின் 992 கிலோ மீட்டர் நீள கடற்கரை பகுதியில் சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 3 பெரிய துறைமுகங்களும், காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், கடலூர், திருச்சோபுரம், பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், நாகப்பட்டினம், இராமேசுவரம், பாம்பன், வாலிநோக்கம், புன்னக்காயல், மணப்பாடு, கூடங்குளம், கன்னியாகுமரி மற்றும் குளச்சல் ஆகிய 15 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன. இவற்றுள் காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், திருச்சோபுரம், பி.ஒய்–3 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், புன்னக்காயல், மணப்பாடு மற்றும் கூடங்குளம் ஆகியவை தனியார் நிறுவனங்களின் சிறப்புப் பயன்பாடுகளுக்காக சிறு துறைமுகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இங்கு அனைத்து துறைமுக வசதிகளையும் மேம்படுத்தும் பொறுப்பு சம்பந்தப்பட்ட நிறுவனங்களைச் சார்ந்ததாகும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சிறு துறைமுகங்களும், கடலில் கப்பலை நங்கூரமிட்டு நிறுத்துவதற்கு ஏற்ற துறைமுகங்களாகும். நடுக்கடலில் நிறுத்தப்படும் கப்பல்களிலிருந்து கரைக்கும், கரையிலிருந்து கப்பல்களுக்கும் சரக்குகள் சிறு படகுகள் / மிதவைகள் மூலமாக இறக்கி ஏற்றப்படுகின்றன. எண்ணூர் மற்றும் திருக்கடையூர் துறைமுகங்களில் கப்பலிலிருந்து முறையே திரவ அமோனியா மற்றும் நாப்தா நேரடியாக கடலுக்கடியில் புதைக்கப்பட்டுள்ள குழாய்களின் மூலமாக கரையிலுள்ள சேமிப்புக் கலத்திற்கு அனுப்பப்படுகிறது.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சரக்குகள் :

சிறு துறைமுகங்களில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் சரக்குகள் கீழ்வருமாறு :

ஏற்றுமதி	இறக்குமதி
கச்சா எண்ணெய்	சமையல் எண்ணெய்
பொது சரக்குகள்	திரவ அமோனியா
சிமெண்ட்	நாப்தா
	புரப்பலீன் திரவ வாயு
	கச்சா எண்ணெய்
	இயந்திரங்கள்
	பொது சரக்குகள்

தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம், 1996 (தமிழ்நாடு சட்டம் 4.96)ன் கீழ் 1997 மார்ச் மாதத்தில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு கடல்சார் வாரியம் பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களைச் சார்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களின் செயல்பாடுகளை முறைப்படுத்தி, கட்டுப்படுத்தி, நிர்வகித்து வருகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழிற் சாலைகளின் தேவைகள் மிக முக்கியமானதென தமிழ்நாடு கடல்சார் வாரியம் உணர்ந்து துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகளான எண்ணெய் ஆலைகள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றின் சிறப்புப் பயன்பாட்டிற்கென துறைமுகங்கள் / தோணித்துறைகள் / நங்கூர மிதவைகள் ஆகியவற்றை தனியார் பங்கேற்பின் மூலமாக அமைப்பதற்கு ஊக்கமளித்து வருகிறது.

(3)

துறைமுகக் கொள்கை

தனியார் முதலீட்டு வாய்ப்புகளின் மூலம் துறைமுகங்களை மேம்படுத்துவதற்காக அரசு, துறைமுகக் கொள்கையை வகுத்துள்ளது.

துறைமுகக் கொள்கையின் நோக்கங்கள் கீழ்வருமாறு :

* நிலக்கரி / நாப்தா / எண்ணெய் / இயற்கை வாயு போன்ற எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கான தனித்துறைமுக வசதிகளை அளிப்பதன் மூலம் துறைமுகங்களைச் சார்ந்த மின் நிலையங்களை ஏற்படுத்துதல்.
* தமிழ்நாட்டின் கடற்கரையோர மாவட்டங்களில் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றை அமைப்பதற்கான துறைமுக வசதிகளுக்கு வகை செய்தல்.
* கிழக்குக் கடற்கரை நெடுக சரக்கு / பயணிகள் கப்பல் போக்குவரத்திற்கு வசதிகள் செய்வதன் மூலம் நெடுஞ்சாலைகள் / ரயில் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்தல்.
* ஓய்வு நேர மற்றும் நீர் விளையாட்டிற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் சுற்றுலாவிற்கு வகை செய்தல்.
* கப்பல் பழுது பார்த்தல் மற்றும் உடைத்தல், பாரந்தூக்கிகள், மிதவைக் கப்பல்கள் கட்டுதல் போன்றவற்றை ஊக்குவிக்க வசதிகளைச் செய்து கொடுத்தல்.
* சென்னை மற்றும் தூத்துக்குடி போன்ற பெரிய துறைமுகங்களில் போக்குவரத்து நெரிசலை குறைத்தல்.

கடலூர் துறைமுகம்

தமிழக அரசு கடலூர் துறைமுகத்தை, தனியார் பங்கேற்பின் மூலம் மேம்படுத்த முடிவு செய்துள்ளது. இதன் அடிப்படையில், தமிழ்நாடு கடல்சார் வாரியம், திருவாளர்கள் யுடிஐ. வங்கி லிமிடெட்/ ரைட்ஸ் லிமிடெட் நிறுவனத்தை இதற்குரிய தொழில் நுட்ப உதவி வழங்கும் நிறுவனமாக நியமனம் செய்துள்ளது. இத்தொழில்நுட்ப உதவி வழங்கும் நிறுவனம், முதல்நிலை தெரிவு அறிக்கை, வரைவு ஒப்பந்தப்புள்ளி ஆவணம், வரைவு சலுகை ஒப்பந்தம் மற்றும் இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான கால அட்டவணை ஆகியவற்றை தயாரித்து அளித்துள்ளது. துறைமுக மேம்பாட்டுத் திட்டத்தினை மேற்கொள்வதற்கான உலகளவிலான ஒப்பந்தப்புள்ளி கூடிய விரைவில் கோரப்படவுள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகம்

நாகப்பட்டினம் துறைமுகத்தில் திருவாளர்கள் பட்ஸ்,பேட்ஸ் மற்றும் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் சமையல் எண்ணெய் கையாளுவதற்கான சேமிப்புக் கலத்தை 1999இல் நிறுவி உள்ளனர். உணவு எண்ணெய்க் கப்பல்கள், இத்துறைமுகத்திற்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. 2003–04 நிதியாண்டில் 10 கப்பல்களின் மூலம் 25,638 மெட்ரிக் டன்கள் சமையல் எண்ணெய் கையாளப்பட்டுள்ளது.



துறைமுக நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவதற்காகத் துறைமுக நிலங்கள் இரு தனியார் நிறுவனங்களுக்குச் சமையல் எண்ணெய் கையாள்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்களால், சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது.

திருவாளர்கள் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தினரால் அவர்களது பனங்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய்யைக் கையாளுவதற்காக அணுகு பாலத்துடன் கூடிய கான்கிரீட்டிலான தோணித்துறை கட்டப்பட்டுள்ளது. முதல் கச்சா எண்ணெய் கப்பல் 15.02.2003 அன்று துறைமுகத்திற்கு வந்து 12,520 மெட்ரிக் டன் கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்தது. 2003–04 நிதியாண்டில் இதுவரை 23 கப்பல்கள் வந்து 2,79,174 மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

13 ஆண்டுகள் இடைவெளிக்கு பின்னர் பிப்ரவரி 2004இல் இத்துறைமுகத்தில் திருவாளர்கள் ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் ஸ்ரீலங்காவிற்கு சிமெண்ட் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நிதியாண்டில் 10 கப்பல்கள் மூலம் இதுவரை 16,804 மெட்ரிக் டன்கள் சிமெண்ட் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு கடல்நீர் தடுப்பியை வலுப்படுத்தி நீட்டித்தல், நீர் வழித்தடத்தினை ஆழப்படுத்துல் மற்றும் தூர்வாருதல் அவசியம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. ரூ.500 இலட்சம் செலவில் இதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு கடல்சார் வாரியம், இந்நிதியை ஹட்கோ நிறுவனம்/ தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகம் மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெற தீர்மானித்துள்ளது. இத்திட்டப்பணி இரு கட்டமாக நிறைவேற்றப்படவுள்ளது. நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு கடல்நீர் தடுப்பியை வலுப்படுத்தி நீட்டித்தல், நீர் வழித்தடத்தினை ஆழப்படுத்துதல் மற்றும் தூர்வாருதல் அவசியம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. ரூ.500 இலட்சம் செலவில் இதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு கடல்சார் வாரியம், இந்நிதியை ஹட்கோ நிறுவனம்/ தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகம் மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெற தீர்மானித்துள்ளது. இத்திட்டப்பணி இரு கட்டமாக நிறைவேற்றப்படவுள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் சரக்கு கப்பல்களை இத்துறைமுகத்தில் கையாளுவதற்கு ஏதுவாக, இத்துறைமுகம் "பன்னாட்டு பாதுகாப்புச் சான்றிதழ்" (ISPS Certificate) பெற்றுள்ளது.

பாம்பன் துறைமுகம்

பாம்பன் கால்வாயைக் கடந்து செல்லும் கப்பல்களுக்கு வழி காட்டுதலே இத்துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையாகும். 2003–04 நிதியாண்டில் 25 கப்பல்கள் இக்கால்வாயைக் கடந்து சென்றுள்ளன.

இராமேசுவரம் துறைமுகம்

இராமேசுவரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து நடைபெற்று வந்தது. ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் காரணமாக 08.01.1985 முதல் இக்கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. தற்போது இத்துறைமுகத்தில், துறைமுக நடவடிக்கை ஏதுமில்லை.

பாக் ஜலசந்தியையும், மன்னார் வளைகுடாவையும் கப்பல்கள் செல்லும் வகையில் கால்வாய் கட்டி இணைக்க, இந்திய அரசு இராமேசுவரம் பகுதியில் சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்தினை மேற்கொள்ள உள்ளது. இத்திட்டத்தால் சுமார் 400 கடல்மைல் தூரம் கப்பல் பயண தூரம் குறையும் என்பதுடன், 36 மணி நேரக் கப்பல் பயணமும் குறையும்.

1980ன் துவக்கத்தில் இராமேசுவரம் துறைமுகத்தில் இந்தியா – இலங்கைக்கிடையே பயணிகள் போக்குவரத்திற்காகக் கட்டப்பட்ட கட்டுமான வசதிகள் மேற்கூறிய சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே, சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்துடன் இராமேசுவரம் துறைமுகத்தினையும் ஒருங்கிணைத்து மேம்படுத்த மத்திய அரசினைக் கேட்டுக் கொள்ள இவ்வாரியம் முடிவெடுத்துள்ளது. அதன் தொடர்பாக தமிழக அரசினை மத்திய அரசுடன் தொடர்பு கொள்ள இவ்வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

வாலிநோக்கம் துறைமுகம்

இத்துறைமுகம் அமைதியான கடல் மற்றும் சரிவான கடல் நிலப்பகுதியின் காரணமாக கப்பல் உடைக்கும் பணிக்கு உகந்தது என கண்டறிப்பட்டது. திருவாளர்கள் டிட்கோ நிறுவனத்திற்குச் சொந்தமான 30 ஏக்கர் நிலத்திலுள்ள 6 தனியார் கப்பல் உடைக்கும் தளங்கள் கப்பல் உடைப்புப் பணிகளைத் தொடர்வதற்காக தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

இத்துறைமுகத்தில் கப்பல் உடைப்பு தளங்களை நிறுவுவதற்கான கருத்துரு மாநில கடல் பாதுகாப்பு குழுமத்தால் பரிசீலிக்கப்பட்டு, சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்பதால் மைய அரசிற்கு தடையின்மைச் சான்றிதழ் வழங்குவதற்காக பரிந்துரைக்கப்படவில்லை என தமிழக அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் துறைமுகத்தில் கப்பல் உடைப்புப் பணி அனுமதிக்கப்படுவதில்லை.

கன்னியாகுமரி துறைமுகம்

இத்துறைமுகத்தில் திருவாளர்கள் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தால், கடற்கரைக்கும் விவேகானந்தர் நினைவுப் பாறை மற்றும் திருவள்ளுவர் சிலைக்குமிடையே நடத்தப்பட்டு வரும் படகுப் போக்குவரத்தைக் கண்காணிப்பது தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் பணியாகும். இதற்கான நிர்வாகக் கட்டணத்தை வாரியம் மேற்படி கழகத்திடமிருந்து பெறுகிறது.

2003–04 நிதியாண்டில் 15,16,571 பயணிகள் படகுகளில் பயணம் செய்துள்ளனர்.

குளச்சல் துறைமுகம்

குளச்சல் துறைமுகம் திருவாளர்கள்.ரைட்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட "போர்ட்ஸ் விஷன் 2020" அறிக்கையின்படி, பெட்டகங்கள் கையாளுவதற்கு ஏற்றவகையில் மேம்படுத்துவதற்கு தகுதியுள்ள துறைமுகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இத்துறை முகத்தினைப் பன்னாட்டுப் பெட்டகங்கள் கையாளும் துறைமுகமாக மேம்படுத்த ஆர்வம் காட்டிய மலேசிய அரசு அதற்குரிய நிதி ஆதாரத்தினைத் திரட்ட இயலாததால், இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. எனினும், இத்துறைமுக அமைப்பின் திறன், தன்மை மற்றும் வாய்ப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு, மத்திய அரசிடம் இத்துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான கருத்துருவை மத்திய அரசின் "சாகர் மாலா" திட்டத்தில் சேர்த்துக்கொள்ள பரிந்துரை செய்துள்ளது. மேலும் சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்தின் மூலம் திட்ட அபிவிருத்தி வாய்ப்பு கூடும் என்பதைக் கருத்தில் கொண்டு இத்துறைமுகத்தினை சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்துடன் ஒருங்கிணைத்து மேம்படுத்த மத்திய அரசினைக் கேட்டுக் கொள்ள வேண்டி இவ்வாரியம் முடிவெடுத்துள்ளது. அதன் தொடர்பாக தமிழக அரசினை மத்திய அரசுடன் தொடர்புகொள்ள இவ்வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

காட்டுப்பள்ளி துறைமுகம்

இத்துறைமுகம் திருவாளர்கள் ஓபக் சீக்கால் டெர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தினரால் பெட்ரோலியப் பொருள்களைக் கையாளுவதற்கான துறைமுக விதிகளை நிறுவுவதற்காக சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு காரணங்களால், இந்நிறுவனம் கடந்த நான்கு ஆண்டுகளாக திட்டமிட்டபடி, இத்துறைமுகத்தினை மேம்படுத்த இயலவில்லை. எனவே, இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி திரும்பப் பெறப்பட்டு, இத்துறைமுகத்தினை மேம்படுத்துவதற்கு ஆர்வம் காட்டும் தனியார் நிறுவனத்திற்கு கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) / கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) / கட்டுதல் தனதாக்குதல், இயக்குதல்,பங்கிடல் மற்றும் ஒப்படைத்தல் (BOOST) அடிப்படையில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

எண்ணூர் சிறு துறைமுகம்

பன்முனை நங்கூர மிதவை திட்டம் மற்றும் கடலுக்கடியில் புதைக்கப்பட்ட குழாய் அமைப்புகள் ஆகிய கடல்சார் வசதிகள் திருவாளர்கள் கோரமண்டல் ஃபெர்டிலைசர்ஸ் லிட்., சென்னை நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டு, திரவ அமோனியா இத்துறைமுகத்தின் மூலம் 1996 அக்டோபர் முதல் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

2003–04 நிதியாண்டில் 9 அமோனியா கப்பல்கள் மூலம் 54,038 மெட்ரிக் டன் திரவ அமோனியா கையாளப்பட்டுள்ளது.

திருச்சோபுரம் துறைமுகம்

திருவாளர்கள் நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தினரால் நிறுவப்படவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளுக்காக ஆண்டொன்றுக்கு 6.5 மில்லியன் டன்கள் கச்சா எண்ணெய் இறக்குமதிக்காகவும் மற்றும் 2.8 மில்லியன் டன்கள் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் பொருட்கள் ஏற்றுமதிக்காகவும் திருச்சோபுரம் சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது மைய அரசினால் சுங்கத் துறைமுகமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காகச் சுற்றுப்புறச்சூழல் தடையின்மை சான்றிதழ் மைய அரசின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தினரால் திட்டத்திற்கான நிதிநிலை முடிப்பதற்கான ஒப்புதல் பெறப்பட வேண்டியுள்ளது.

பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி

கடலூருக்குத் தென்கிழக்கே முழுவதுமாக கடலிலேயே அமைக்கப்பட்டுள்ள இத்துறைமுகம் ஒரு தீவுத் துறைமுகமாகும். இங்கு கடலுக்கடியில் அமைந்துள்ள எண்ணெய் கிணறுகளிலிருந்து கச்சா எண்ணெய் எடுக்கப்பட்டு வருகிறது.

2003–04ஆம் நிதியாண்டில் 15 கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு வருகை தந்து, 1,77,506 மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன.

திருக்கடையூர் துறைமுகம்

திருவாளர்கள் பி.பி.என்.பவர் ஜெனரேட்டிங் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தினரால் பிள்ளைபெருமாள் நல்லூரில் நிறுவப்பட்டுள்ள 330 மெகாவாட் கேஸ் கம்பைண்ட் சைக்கிள் பவர் திட்டத்திற்குத் தேவையான எரிபொருள்



நாப்தா மற்றும் இயற்கை வாயு ஆகியவற்றை கையாளுவதற்காக திருக்கடையூர் சிறு துறைமுகம் அறிவிக்கப்பட்டது.

2003–04ஆம் நிதியாண்டில் 11 கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு வந்து 1,51,114 மெட்ரிக் டன் நாப்தா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

புன்னக்காயல் துறைமுகம்

திருவாளர்கள் தாரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனத்தினரால் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சாகுபுரத்தில் நிறுவப்படவுள்ள தொழிற்சாலைக்கு தேவைப்படும் வினைல் குளோரைடு மோனமர் (வி.சி.எம்) லோ சல்ஃபர் ஹெவி ஸ்டாக் மற்றும் எல்.பி.ஜி. ஆகியவற்றைக் கையாளுவதற்காக இத்துறைமுகம் அறிவிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான நிதிநிலை முடிவு செய்வதற்கான ஒப்புதல் நிறுவனத்தால் எதிர்பார்க்கப்படுகிறது.

மணப்பாடு துறைமுகம்

திருவாளர்கள் இந்தியன் பவர் ப்ராஜக்ட் நிறுவனத்தால் வேம்பாரில் அமைக்கப்படவுள்ள 2000 மெகாவாட் கேஸ் டர்பைன் மின் திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு 2.5 மில்லியன் மெட்ரிக் டன்கள் திரவ இயற்கை எரிவாயு திருவாளர்கள் இந்தியன் கேஸ் லிமிடெட் அவர்களால் கையாளப்படுவதற்காக மணப்பாடு சிறு துறைமுகம் அரசால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி நிலை முடிப்பதற்கான ஒப்புதல் நிறுவனத்தால் பெறப்பட வேண்டியுள்ளது. மணப்பாடு துறைமுகத்தைப் பல்வேறு சரக்குகளை கையாளும் துறைமுகமாக மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கூடங்குளம் துறைமுகம்

இந்திய அணுமின்சக்தி கழகத்தால், கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுவரும் 1000 மெகாவாட் திறன்கொண்ட இரு அணு உலைகளின் பயன்பாட்டிற்காக இத்துறைமுகம் அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு கிலோ மீட்டர் நீளம் மற்றும் 500 மீட்டர் அகலம் கொண்ட, நீர்த்தேக்க அமைப்பு மற்றும் தேவையான நீர்த்தடுப்பிகளுடன் கூடிய தோணித்துறை ஆகியவை இத்திட்டத்திற்கான அதிக பளுகொண்ட பெரிய இயந்திரங்களை இறக்குமதி செய்யும்பொருட்டு துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இத் துறைமுகத்திற்கு 15.01.2004 அன்று முதல் கப்பல் வந்து இயந்திரப் பகுதிகள் இறக்குமதி செய்யப்பட்டன. நடப்பாண்டில் இதுவரை 603 மெட்ரிக் டன் இயந்திரப் பகுதிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

சரக்குப் போக்குவரத்து

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களில் 2003–2004–ஆம் நிதியாண்டில் மொத்தம் 6,90,136 மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன.

• • •

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் புதிய அறிவிப்புகள்

★ கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, சேலம், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி ஆகிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு ரூ.100 இலட்சம் மொத்தச் செலவில் மருத்துவ சாதனங்கள் மற்றும் அறைகலன்கள் வழங்கப்படும்.

★ சென்னை தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் பட்டமேற்படிப்பு கட்டடத் தொகுதியில் தற்போதுள்ள முதல் தளத்திற்கு மேலே ரூ.80 இலட்சம் மொத்தச் செலவில் கூடுதல் தளம் ஒன்று கட்டப்படும்.

★ செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ரூ.70 இலட்சம் மொத்தச் செலவில் நீராவி சலவையகம் கட்டப்படும்.

★ தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.15 இலட்சம் மொத்தச் செலவில் 160 கிலோவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரம் வழங்கப்படும். மேலும், ரூ.150 இலட்சம் மொத்தச் செலவில் கட்டாய உள்ளுறை பயிற்சியாளர் குடியிருப்பும், ரூ.160 இலட்சம் மொத்தச் செலவில் மகளிருக்காக கூடுதல் மாணவியர் விடுதியும், ரூ.11 இலட்சம் மொத்தச் செலவில் தீவிர சிகிச்சைப் பிரிவும் அமைக்கப்படும்.

★ கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ரூ.60 இலட்சம் மொத்தச் செலவில் படியடுக்கு அமைப்பு கொண்ட விரிவுரைக் கூடம் கட்டப்படும்.

★ சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அறுவை சிகிச்சைப் பிரிவு கட்டடத்தில் ரூ.20 இலட்சம் மொத்தச் செலவில் ஒரு மின்தூக்கி புதுப்பிக்கப்பட்டுப் புதிதாக வாங்கப்படும்.

★ சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ.20 இலட்சம் மொத்தச் செலவில் மயக்க மருந்தியல் துறை வலுப்படுத்தப்படும்.

★ சென்னை, தாம்பரம் அரசினர் நெஞ்சக நோய் மருத்துவமனை, புறநோயாளிகள் பிரிவு ரூ.6.50 இலட்சம் மொத்தச் செலவில் விரிவுபடுத்தப்படும்.

★ திருச்சி கி.ஆ.பெ.விசுவநாதம் மருத்துவக் கல்லூரியில் ரூ.10 இலட்சம் மொத்தச் செலவில் விலங்ககம் (Animal House) ஒன்று கட்டப்படும்.

★ தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் ரூ.60 இலட்சம் மொத்தச் செலவில் விலங்ககம் ஒன்று கட்டப்படும்.

★ பெரியகுளம் மாவட்ட தலைமையிட மருத்துவமனையில் மொத்தம் ரூ.32 இலட்சம் செலவில் புறநோயாளிகளுக்கான கட்டடம் கட்டப்படும்.

★ மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள 12 அவசர ஊர்தி / அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக மொத்தம் ரூ.48 இலட்சம் செலவில் புதிய ஊர்திகள் வாங்கப்படும்.

★ சீர்காழி மற்றும் ஆண்டிபட்டியில் உள்ள அரசு வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் ரூ.64 இலட்சம் செலவில் புறநோயாளிகளுக்கான கட்டடம் கட்டப்படும்.

★ நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் ரூ.28 இலட்சம் செலவில் குளிர்பதன வசதிகளுடன் கூடிய பிணவறைப் பிரிவு கட்டப்படும்.

★ வள்ளியூர் அரசு மருத்துவமனையில் ரூ.71.89 இலட்சம் மொத்தச் செலவில் 10 படுக்கை வசதிகளுடன் கூடிய விபத்து மற்றும் காயங்கள் சிகிச்சைப் பிரிவு கட்டப்படும்.

★ வட்ட தலைமையிட மருத்துவமனையில் ரூ.0.19 இலட்சம் செலவில் தொலைபேசி வசதிகள் செய்து தரப்படும் (3 எண்ணிக்கை).

★ மயிலாடுதுறை, சிவகாசி, மானாமதுரை, விருத்தாசலம், ஏற்காடு மற்றும் முதுகுளத்தூர் ஆகிய வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள 6 அவசர ஊர்தி / அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக ரூ.24 இலட்சம் செலவில் புதிய ஊர்திகள் வாங்கப்படும்.

★ வட்டம் சாரா 10 மருத்துவமனைகளில் 10 அறுவை சிகிச்சை கூடங்களுக்கு ரூ.6.10 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

★ குமாரபாளையம் மற்றும் உதயரம்பாளையத்திலுள்ள வட்டம் சாரா மருத்துவமனைகளில் ரூ.22.60 இலட்சம் செலவில் மின் உற்பத்தி எந்திரத்திற்கான கட்டடங்கள் கட்டுவதன் மூலம் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி 40 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் உற்பத்தி சாதனம் வழங்கப்படும்.

★ வட்டம் சாரா தலைமையிட 38 மருத்துவமனை களுக்கு ரூ.2.36 இலட்சம் செலவில் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும்.

★ மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் அலுவலகத்திற்கு மொத்தம் ரூ.4 இலட்சம் செலவில் கணினி இணைப்பு மற்றும் துணை பாகங்கள் வழங்கி அலுவலக நிருவாகம் நவீனப்படுத்தப்படும்.

★ மொத்தம் ரூ.5 இலட்சம் செலவில் நீரிழிவு நோய்க் கட்டுப்பாடு முன்னோடித் திட்டம் செயல் படுத்தப்படும்.

★ ரூ.5 இலட்சம் செலவில் பிறப்பு – இறப்புகளை பதிவு செய்வது குறித்து விளம்பரம் செய்யப்படும்.

★ ரூ.6 இலட்சம் செலவில் மாவட்டப் பொது சுகாதார அலுவலர் அலுவலகத்திற்கு கணினிகள் வழங்கப் படும்.

★ இரண்டு மாவட்டங்களில் பல் மருத்துவத் திட்டம் மொத்தம் ரூ.20 இலட்சம் செலவில் விரிவாக்கப்படும்.

★ மொத்தம் ரூ.15 இலட்சம் செலவில் பேறுகாலத்திற்குப் பிந்தைய தாய்மார்களுக்கு வைட்டமின் 'ஏ' மாத்திரைகள் வழங்கப்படும்.

★ மொத்தம் ரூ.90 இலட்சம் செலவில் 1,000 சுகாதார துணை மையங்களுக்கு லேபர் போர்டு (Labour Boards) வழங்கப்படும்.

★ மொத்தம் ரூ.6.90 இலட்சம் செலவில் 150 தொடக்க சுகாதார நிலையங்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும்.

★ மொத்தம் ரூ.9.50 இலட்சம் செலவில் இந்திய முறை மருத்துவத்தைப் பயன்படுத்தி இரத்த சோகையைக் கட்டுப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

★ மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கு ரூ.50 இலட்சம் செலவில் 20 லேப்ராஸ்கோப் கருவிகள் (ஒற்றை துளை கொண்டது) வாங்கி வழங்கப்படும்.

★ மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிருவாகத்தின் கீழ்வரும் அனைத்து மண்டல அலுவலகங்களுக்கும் ரூ.7.50 இலட்சம் செலவில் கணினிகள், துணைபாகங்கள் மற்றும் அறைகலன்கள் ஆகியவை வாங்கி வழங்கப்படும்.

★ 35 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.92.07 இலட்சம் செலவில் இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும்.

★ ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.5.68 இலட்சம் மொத்த செலவில் யோகா மற்றும் இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும்.

★ சென்னை, அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியில் மொத்தம் ரூ.15 இலட்சம் செலவில் பணியாளர் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

★ இந்திய மருத்துவத்துறை பிரிவில் உதவி மருத்துவ அலுவலர்களுக்கு முழுச் சம்பளத்துடன் கூடிய பட்ட மேற்படிப்பு படிப்பதற்கு மொத்தம் ரூ.14.40 இலட்சம் வழங்கப்படும்.

★ அரசு சித்தா / யுனானி / ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் பகுதி நேர / மதிப்பூதியத்தின் அடிப்படையில் ரூ.5.76 இலட்சம் செலவில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

★ தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத்துறைக்கு மொத்தம் ரூ.0.99 இலட்சம் செலவில் துணைப் பாகங்களுடன் கூடிய ஒரு கணினி மற்றும் அறைகலன் முதலியவை வழங்கப்படும்.

★ தலைமைச் செயலகத்தில் உள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு மொத்தம் ரூ.1 இலட்சம் செலவில் நிழற்பட படிப்பெருக்கி சாதனம் (Xerox Machine) வாங்கி வழங்கப்படும்.

□ □ □

தருமபுரி மாவட்டத்தில்

காட்டாமணக்கு (Jatropha curcus) நடவுப் பணி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாற்றுப்பயிர் திட்டத்தின் மூலம் காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு ஆகிய மூன்று பயிர்களை அறிமுகம் செய்துள்ளார்கள். இப்பயிர்கள் குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தி அதிக வருமானம் தரும் பயிர்களாகும். மேலும் காட்டாமணக்கு (Jatropha curcus) பயிர் செய்து அதன்மூலம் உயிரிஎரிபொருள் (Bio-Diesel) தயார் செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் விரிவான தரிசு நிலத் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் 100 நீர்வடிப் பகுதிகளிலும் மற்றும் தரிசாக உள்ள பொது நிலங்களில் காட்டாமணக்கு 500 எக்டேர் நிலப்பரப்பிலும் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. காட்டாமணக்கு பயிர் செய்வதன் மூலம் மூன்று நன்மைகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

1. காட்டாமணக்கு விதையிலிருந்து எடுக்கும் எண்ணை உயிரி எரிபொருள் (Bio-Diesel) ஆகும்.
2. இதிலிருந்து கிடைக்கும் புண்ணாக்கு விவசாயத்திற்கு உரமாகப் பயன்படுகிறது.
3. இதன்மூலம் கிடைக்கும் கிளிசரின் சோப்புத் தொழிற்சாலைக்குப் பயன்படுகிறது.

இத்தகு சிறப்புமிகு திட்டத்தினை மாநிலத்திலேயே முதன் முறையாக தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வளாக நிலப்பரப்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆஷிஷ்வச்சானி, இ.ஆ.ப., அவர்கள் காட்டாமணக்குச் செடியை நடவு செய்து தொடங்கி வைத்தார். காட்டாமணக்குச் செடிகள் வேளாண்மைத் துறை மூலமும், சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு ஆகிய பயிர்களுக்கான விதைகள் தேர்ந்தெடுக்கப்படும் தொழில் முனைவர் மூலமும் வழங்கப்படும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாய் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

– மூ.நா.கிருட்டிணசாமி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி

மக்களுக்கான வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் தமிழகம் முதலிடம்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய தொடக்க உரை (9.8.2004)

“**மா**ண்புமிகு தமிழக அமைச்சர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, காவல்துறைத் தலைவர் அவர்களே, வளர்ச்சிப்பணி ஆணையாளர் அவர்களே, அரசு செயலாளர்களே, துறைத் தலைவர்களே, காவல்துறையின் மூத்த அதிகாரிகளே, காவல்துறை ஆணையாளர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களே மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்களே.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்களின் இந்த ஆண்டு மாநாட்டினைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மாநாட்டினை முன்னரே நடத்த திட்டமிட்டிருந்தேன். ஆனால், இடையில் நாடாளுமன்றத் தேர்தல்கள் வந்துவிட்டதால், மாநாடு நடைபெறும் நாட்களை மாற்ற வேண்டியதாயிற்று. ஆண்டு தோறும் நடத்தப்படுகின்ற இந்த மாநாட்டினை ஒரு வெறும் சடங்காக எடுத்துக் கொள்ளாமல், நாம் ஒன்றாக இணைந்து மக்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவை புரிந்திட இயலும் வகையில், நம்முடைய செயல்பாடு பற்றிய ஒரு உள்முக ஆய்வு நடத்திடவும், புதிய மாறுதல்களைக் கொண்டு வரவும் நமக்கு கிடைத்த ஒரு அரிய வாய்ப்பாக இதைக் கருத வேண்டும்.

2. எனது அரசு 2001, மே திங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர், உடனடியாக 2001 ஆகஸ்டு திங்களில் நான் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் முதல் மாநாட்டை நடத்தினேன். அதில் நடப்பியல் உண்மைகளையும் மக்களின் நாட்டங்களையும் கருத்திற்கொண்டு, தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கான உத்திகளை நாம் வகுத்தோம். வறட்சி நிலைமையைச் சந்திக்க வேண்டியிருந்ததால் வறட்சி நிவாரணப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு மக்களுக்கு நிவாரணமும், இடருதவியும் வழங்கிட நான் 2002, ஜூலைத் திங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் சிறப்பு மாநாட்டை நடத்தினேன்.

2002, டிசம்பர் திங்களில் நடத்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறைக்

கண்காணிப்பாளர்களின் அடுத்த மாநாட்டில் சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு, வளர்ச்சிக்கான சிறப்பு முயற்சிகள், நல்லாட்சி ஆகியவற்றிற்கு நான் முக்கியத்துவம் அளித்தேன்.

3. நம் முன்னேற்றப்பாதையில் எதிர்ப்பட்ட அசாதாரணத் தடைகளைத் தகர்த்தெறிந்து, தமிழ்நாட்டை, நாட்டிலேயே முதல் மாநிலமாக உருவாக்குவதற்குரிய சரியான சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளோம் என்பதில் நாம் பெருமைப்படலாம். தொடர்ந்து பருவமழை தவறியதால் ஏற்பட்ட சவால்களையும், அதனால் ஏற்பட்ட வறட்சி நிலைமைகளையும் பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மிகவும் கவனத்துடனும், நுட்பமாகவும் கையாண்டுள்ளோம். முந்தைய ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட மோசமான நிதி சீர்கேடுகளை வெற்றிகரமாகவும், திறமையாகவும் சமாளித்துள்ளோம். இவை இந்த அரசின் முக்கிய சாதனைகளாகும்; இத்தகைய உறுதியான, சிறப்பான நடவடிக்கையை நான் எடுத்திருக்காவிடில், இம்மாநிலம் மோசமான நிதி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும். இவ்வாறு நடப்பதற்கு ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது என்பதில் நான் உறுதியாக இருந்தேன்.

இன்று, தமிழ்நாடு அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக அமையும் இலக்கை நோக்கி பீடுநடைபோடத் தொடங்கியுள்ளது என்பதில் நான் மனநிறைவடைகிறேன்.

4. உள்ளபடியே நாம் மிகச் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளோம். மழைநீர் சேகரிப்புத் திட்டம், ஊரக வளர்ச்சித் திட்டங்கள், கல்வித் திட்டம் ஆகியவற்றின் செயலாக்கத்தில் தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்குகிறது. தற்போது அனைத்து மாநிலங்களாலும் பின்பற்றப்பட்டு வரும் இலவச சத்துணவுத் திட்டத்தின் முன்னோடி மாநிலம் தமிழ்நாடுதான். முழுமையான துப்புரவுத் திட்டத்தைச் செயல்படுத்தியதில் தமிழ்நாடு முதல் மாநிலமாக ஒளிர்கிறது.

2003ஆம் ஆண்டு மின்–தயார்நிலை அறிக்கையின்படி (e Readiness Report) மிகச் சிறப்பாகச் செயல்படுகின்ற மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

வீடியோ கலந்தாய்வு முறையைப் பயன்படுத்தி மாநிலம் முழுவதும் உள்ள நீதிமன்றங்களையும் சிறைச் சாலைகளையும் ஒருங்கிணைக்கும் தொலை–நீதி நிருவாக ஏற்பாட்டிலும் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. நாட்டில் முதல் முறையாக 1992இல், நான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் தொடங்கி வைத்தேன். இன்று அது 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்களாக உயர்ந்து மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. விரைவில் மேலும் 7 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கும் திட்டமுள்ளது. அனைத்து மகளிர் கமாண்டோ பிரிவையும், அனைத்து மகளிர் காவல் படைப் பிரிவையும் ஏற்படுத்தியதிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. மனித வள மேம்பாட்டிலும் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்து, மனித வள மேம்பாட்டு குறியீட்டில் அனைத்து மாநிலங்களிலும் மூன்றாவது இடத்தில் உள்ளது.

கடந்த காலங்களில் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட நிலையை மாற்றி, கடந்த ஓராண்டில் மட்டும் நெடுஞ்சாலைகள் துறையின் கீழ் வருகின்ற 10,946 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மீண்டும் போடப்பட்டு, தரம் உயர்த்தப்பட்டுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்றாண்டு கால அளவில் நம்முடைய சாதனைகளைப் பட்டியலிடுவதென்றால் அதற்கு நீண்ட நேரம் பிடிக்கும். நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்த அனைத்துத் தடைகளையும் முறியடித்து முன்னேற்றப் பாதையில் நடைபோட்டுள்ளோம் என்பது நமக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது.

5. நாம் நமது வெற்றிகளைப் பற்றி பேசியே வாளாயிருந்துவிடக் கூடாது. மேலும் நன்முறையில் செயல்படுவதற்கான புதிய அணுகுமுறைகளை ஆராய்ந்து, அவற்றிற்குப் புதிய வடிவம் கொடுப்பதற்கு நமக்குக் கிடைத்த அரியதோர் வாய்ப்பாக இதை எடுத்துக் கொள்ள வேண்டும். சட்டம்–ஒழுங்கைச் சிறந்த முறையில் பராமரிப்பதற்கு உத்தரவாதம் அளிக்காவிட்டால் எவ்வித முன்னேற்றத்தையும் அடைய முடியாது.

தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ வேண்டும் என்பதில் நான் எந்தவிதச் சமரசத்திற்கும்

இடங்கொடுத்துவிடக் கூடாது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு சிறந்த முறையில் பராமரிக்கப்படுகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இது, ஏதோ தற்செயலாக நடந்ததல்ல. அமைதியைச் சீர்குலைக்க முயற்சித்த அனைத்து தீய சக்திகளையும் நாம் திட்டமிட்டு ஒடுக்கியதாலேயே இது சாத்தியமாயிற்று.

மத நல்லிணக்கத்திற்குத் தீங்கு பயக்கும் விரும்பத்தகாத சம்பவங்கள் எவையும் ஏற்படவில்லை. அடிப்படைவாதிகள், மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்புகளின் நடவடிக்கைகள் முற்றிலும் ஒடுக்கப்பட்டுள்ளன.

2003ஆம் ஆண்டில், காவல்துறையின் பாதுகாப்பில் இருக்கும்போது மரணமடைந்தோரின் எண்ணிக்கையும், காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டினால் மரணமடைந்தோரின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்துள்ளது. கடந்த ஆண்டில் குற்றங்களின் விகிதமும் குறைந்துள்ளது. காவல் படையின் கட்டுப்பாட்டமைதி, முன் எப்போதையும் விட மிகச் சிறப்பாக உள்ளது. நானே நேரடியாக காவலர் குறை தீர்க்கும் நிகழ்ச்சியை, ஐந்து நாட்கள் நடத்தி, 8,395 காவல்துறைப் பணியாளர்களின் குறைகளைக் கேட்டறிந்தேன். இதை, முன்னுதாரணமாகக் கொண்டு, காவல்துறையின் மூத்த அதிகாரிகள் இதுபோன்ற குறை தீர்க்கும் நிகழ்ச்சியைத் தவறாமல் நடத்தி, காவல்துறைப் பணியாளர்களின் குறைகளைக் கேட்டறிந்து, உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்து வந்துள்ளனர். இவ்வாறு சரியான முறையில் நடவடிக்கை எடுத்து வந்துள்ள போதிலும், ஒரு சில சம்பவங்களைப் பெரிதுபடுத்தி, சட்டம்–ஒழுங்கைப் பராமரிப்பதில் மெத்தனப் போக்கு இருப்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்குவதற்காக ஊடகங்கள் மூலம் திட்டமிட்டு பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

வாய்மையே எப்போதும் வெல்லும். எனினும் வேறு சில சுயநல எண்ணத்துடன் சுயநலவாதிகள் உருவாக்கும் அடாத சூழ்ச்சித் திட்டங்களை நாம் கவனமாக எதிர்நோக்கி சமாளிக்க வேண்டும். சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு என்ற வலுவான அஸ்திவாரத்தின் மீதுதான் வியப்பூட்டும் வீறார்ந்த கலங்கரை விளக்கமாகத் திகழும் ‘தமிழ்நாட்டின் வளர்ச்சி’ என்ற உன்னத மாளிகையை நிர்மாணிக்க இயலும். இதனை, பின்வரும் திருக்குறள் விளக்குகிறது.

“கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.”

மனம் கலங்காமல் ஆராய்ந்து, துணிந்து ஏற்ற பணியைச் சோர்வு கொள்ளாமல், காலந்தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

6. கும்பகோணத்தில் அண்மையில் நிகழ்ந்த பயங்கரமான தீ விபத்தில், கொடூரமான முறையில் 94 குழந்தைகள் மாண்டு போன கோரமான தீ விபத்தை நான்

உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன். நெஞ்சை உருக்கும் இந்தப் பயங்கரத் தீ விபத்து, இத்தகைய விபத்துகள் நேராவண்ணம் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான சில அடிப்படை அம்சங்களை நமக்கு உணர்த்துகிறது. கும்பகோணத்தில் நிகழ்ந்த தீ விபத்துக்கான காரணங்களை ஆராய்வதோடு மட்டுமன்றி எடுக்கப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும் பரிந்துரைப்பதற்காக, நீதிபதி திரு. கே. சம்பத் அவர்கள் தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்றை எனது அரசு அமைத்துள்ளது. விசாரணை ஆணையத்திற்கு, வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்று உதவி புரியும். இதற்கிடையில், அனைத்துப் பள்ளிகளிலும் ஓலை வேய்ந்த கூரைகள் உடனே அகற்றப்படுவதை உறுதி செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மாவட்ட ஆட்சியர்கள் இந்தச் சவாலை ஏற்று, 4,503 பள்ளிகளிலும் ஓலை வேய்ந்த கூரைகள் அகற்றப்படுவதை உறுதி செய்துள்ளனர் என்பதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அரசுப் பள்ளிகள், நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், தீ பிடிக்காத கூரைகளுடன் கூடிய நிரந்தரமான பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட உடனே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அனுமதியளித்தல், தவறாமல் ஆய்வு செய்தல், அதன் பின்னர் உரிய காலத்தில் தொடர் நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றில் விதிகளும், வழிகாட்டிக் குறிப்புகளும் முறையாகப் பின்பற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் கும்பகோணத்தில் நிகழ்ந்த தீ விபத்து நமக்கு வலியுறுத்துகிறது.

சென்னை மாநகரத்திலும், அதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளியிலும் கோயம்புத்தூரிலும் வெடிகுண்டு புரளிகள் கிளப்பப்பட்ட கண்டிக்கத்தக்க சம்பவங்களைத் தொடர்ந்தும், மாநிலம் முழுவதிலும், தொலைபேசி உடைய அனைத்துக் கல்வி நிலையங்களிலும், அனைத்து மருத்துவமனைகளிலும், அரசு அலுவலகங்களிலும், அரசுக் கட்டடங்களிலும் மற்றும் அனைத்து காவல் நிலையங்களிலும் உடனடியாக அழைப்பாளரை அடையாளம் காட்டும் கருவி ("காலர் ஐடி") பொருத்துமாறு நான் உத்தரவிட்டுள்ளேன். இதன் பொருட்டு, 35.86 இலட்சம் ரூபாய்க்கு நான் அனுமதியளித்துள்ளேன். எல்காட் நிறுவனம் இக்கருவிகளை உடனடியாக கொள்முதல் செய்து வழங்கும். பாதுகாப்பு நடவடிக்கைகளின் தரம் குறித்து எவ்விதச் சமரசத்திற்கும் இடங்கொடுக்காமலிருப்பதையும், வரையறுக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளைச் சொல்லளவில் மட்டுமல்லாது செயலளவிலும் செயல்படுவதை உறுதி செய்திடும் வகையிலும் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் உறுதி செய்ய வேண்டும்.

7. தமிழ்நாடு 2002–2003 மற்றும் 2003–2004ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து வறட்சியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. என்னுடைய அரசு உழவர்களுக்கும் மற்றும் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும் அனைத்து வகையிலும் உதவி புரிகிறது. அவர்களின் தேவையறிந்து தக்க தருணத்தில் உதவியும், உணவும் வழங்கி வருகிறது.

ஒவ்வொரு நிலையிலும் என்னுடைய முழுமனதுடன் கூடிய தலையீடு இல்லாது இருந்திருக்குமாயின் தமிழ்நாட்டில் உள்ள உழவர்கள் மற்றும் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களைத் தொடர்ந்து ஏற்பட்ட வறட்சியின் பாதிப்பினால் ஏற்பட்ட வேதனையிலிருந்து மீட்டிருக்க முடியாது. ஏழைகள் மற்றும் வறியவர்களுக்குப் பரவலான பயன்கள் கிடைக்கும் வகையில் வறட்சி நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு நிலையிலும் மாவட்ட ஆட்சியர்கள் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளுக்காக, நான் அவர்களைப் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

தென்மேற்குப் பருவம் இன்னும் முடியவில்லை. நிலைமையை நாம் மதிப்பிட வேண்டும். சில மாவட்டங்களில் போதுமான அளவிற்கு மழை பொழியவில்லை. கள நிலைமையையும் நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

8. 2001ஆம் ஆண்டு மே திங்களில் எனது அரசு பதவியேற்ற போது நிதிச் சீரழிவு மற்றும் மந்தமான வளர்ச்சி என்ற படுகுழியில் வீழ்ந்து கிடந்த தமிழ்நாட்டை மீட்டு மீண்டும் வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு வந்துள்ளோம். 2001–2002ஆம் ஆண்டில் ரூ.5,200 கோடியாக இருந்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு, 2004–2005ஆம் ஆண்டில் ரூ.8,001 கோடியாக

அதிகரிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தை மீண்டும் விரைவான வளர்ச்சிப் பாதையை நோக்கி இட்டுச் செல்ல நாம் எடுத்த உறுதியான நடவடிக்கையின் பயனாகவே இது சாத்தியமாயிற்று. இம்மாநிலத்திற்காக தொலைநோக்குடன் நான் செய்துள்ள பெருமளவிலான திட்ட ஒதுக்கீடு அனைத்துத் துறைகளிலும், குறிப்பாக மனித வள மேம்பாட்டுத் துறையில் தமிழ்நாடு வளர்ச்சியடைவதை உறுதி செய்யும். இவ்வாறாக, மற்ற எல்லா மாநிலங்களையும்விட முன்னதாக புத்தாயிரம் ஆண்டின் வளர்ச்சி இலக்குகளை எய்த வேண்டுமென்ற நோக்குடன் சுகாதாரம், சத்துணவு, கல்வி மற்றும் சமூக நலன் ஆகியவை குறித்து நமது திட்ட ஒதுக்கீட்டில் தனி கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

9.பயன்கள் கண்கூடாக மக்களைச் சென்றடைந்தால் தான், பொதுமக்களுக்காகப் பெருமளவு ஒதுக்கீடுகளுடன் திட்டங்களையும் திட்டப் பணிகளையும் செயற்படுத்துவதில் பொருளிருக்கும். இத்தகைய நிலைகளில் மாவட்ட ஆட்சியர்களின் பங்கு பணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒவ்வொரு வளர்ச்சித் திட்டத்திலும் பொதுமக்கள் முழு அளவில் பங்கேற்பது உறுதி செய்ய வேண்டும். பொதுமக்கள், முக்கியமான பயனாளிகள் என்ற முறையில், கிராம சபைகளில் பங்கேற்பதை ஊக்குவித்துத் தங்களுடைய விதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ள உதவ வேண்டும். இங்குதான் ஒரு நல்லாட்சிக்கான நடைமுறைகளின் வீச்சு முக்கியத்துவம் பெறுகிறது. கடந்த மாநாட்டில் கூட, நல்லாட்சி ஆளுகை நடைமுறைகள் குறித்து நான் வலியுறுத்தினேன். வெறுமனே நிதிகளை அல்லது திட்ட முதலீடுகளை ஒதுக்கீடு செய்வது மட்டுமே போதாது என்பது தற்போது மிகவும் தெளிவாகிறது. ஏழை எளிய மக்கள் அதிகபட்சம் பயன் பெறுகின்ற வகையில் இந்த நிதியைப் பயன்படுத்தும் முறைதான் நாம் விரும்புகிற வளர்ச்சி வேகத்தை எட்டுவதற்கான வழியாகும்.

10. தேவையை உணர்த்துகின்ற ஒவ்வொரு மனுவும், கவனமுடனும், கனிவுடனும் பரிசீலிக்கப்பட்டு மனுதாரருக்கு எவ்வாறெல்லாம் உதவ முடியும் என்பது குறித்து ஆக்கபூர்வமாகப் பரிசீலிக்கப்படுவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

வெறும் மனுக்களின் எண்ணிக்கையை மட்டும் வைத்துக் கொண்டு, அதிக எண்ணிக்கையிலான மனுக்களுக்குத் தீர்வு கண்டுவிட்டதாகப் புள்ளி விவரம் அளிப்பது மிகவும் எளிதான வேலை. ஒவ்வொரு மனுவின் பின்னணியிலும் உதவி தேவைப்படக் கூடிய ஒரு நபர் இருக்கிறார் என்ற உண்மையை உணர்ந்து மாவட்ட ஆட்சியர்கள் செயல்பட வேண்டும். இப்பணியில் மாவட்ட நிருவாகம் காட்டும் பரிவுடன் கூடிய புரிதலும், ஆர்வமுமே ஓர் அரசின் நற்பெயருக்கு அச்சாணியாக விளங்குகின்றன.

ஏழைகளின் நலன் நோக்கிலான இத்தகைய புனிதமானப் பணிக்கு ஊக்கமும், உத்வேகமும் ஊட்டுவதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமைப் பணி மிகவும் முக்கியம் வாய்ந்ததென நான் கருதுகிறேன்.

11. தகவல் தொழில் நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் பயனாக பணிகளில் விரைவு ஏற்பட்டுள்ளது. மக்களின் குறைகளையும் செவ்வனே தீர்க்க முடிகிறது. இந்த ஆண்டில் வரவு–செலவு திட்டத்தில் ரூ.58.10 கோடி முதலீட்டுச் செலவில் மாபெரும் மின்னாளுகைத் திட்டம் ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளேன். இது பொதுமக்களோடு நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள 10 அரசுத் துறைகள் ஆற்றும் பணிகள் எவ்விதமான தொய்வும், சுணக்கமுமின்றி நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டுமென்ற குறிப்பான நோக்கத்துடன்தான் நான் இத் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன்.

இந்தத் துறைகள் அனைத்திலும் விரிவானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் பயன்கள் மக்களை விரைவில் சென்றடைவதை உறுதி செய்வதே நம்முடைய முயற்சியாக இருக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள், இந்தச் சிறப்பு முயற்சிகள் பற்றி நன்கு தெரிந்து வைத்துக் கொண்டு, அவரவர் மாவட்டங்களில் இவை சரியான முறையில் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்த நல்லாட்சி நடைமுறைகள், குறிப்பாக, மின் ஆளுகை, அனைத்து வளர்ச்சிப் பணி, சிறப்பு முயற்சிகளுக்கும் குறிப்பாக நிருவாகப் பணிகளுக்கும் பொருந்தும் என்பதால், இது பற்றி இங்கு விரிவாக எடுத்துரைத்தேன்.

12. நாம் அதிக கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான பிரச்சினைகள் குறித்து இப்பொழுது காண்போம். உணவுப் பாதுகாப்பு இவ்வரசின் மிக முக்கியமானதொரு குறிக்கோளாகும். தமிழ்நாடு இன்றைக்கு நாட்டிலேயே மிகச் சிறப்பான பொது விநியோக ஏற்பாட்டு முறையைக் கொண்டுள்ளது. இது பல்வேறு ஆய்வுகளிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தேவைகள் உள்ள ஒவ்வொரு குடும்பமும் இந்த பொது விநியோக ஏற்பாட்டு முறையின் கீழ் கொண்டுவரப்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டிய அதே நேரத்தில், இந்த ஏற்பாட்டு முறையைத் தவறாகப் பயன்படுத்தக் கூடிய சமூக விரோத சக்திகளைத் தடுக்க வேண்டியதும் அவசியமாகிறது. பொது விநியோக ஏற்பாட்டு முறையின் கீழ் வராத, ஆனால் அதன் கீழ் கொண்டுவரப்பட வேண்டிய நிலைமையிலுள்ள குடும்பங்கள் அனைத்தையும் இந்த ஏற்பாட்டு முறையின் கீழ் கொண்டுவரத் தக்க வகையில் இதனை விரிவுபடுத்த நான் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளேன். தமிழ்நாட்டில் மட்டுமே ஒவ்வொரு மாதமும் ஒரு கிலோ ரூ.3.50 என்ற விலையில் 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. இந்தியா முழுமையிலும் இதுதான் மிகமிகக் குறைந்த விலையாகும்.

குடும்ப அட்டை வழங்கப்படாத, ஆனால் உண்மையிலேயே குடும்ப அட்டை தேவைப்படும் குடும்பங்களைச் சேர்க்கவும், போலி குடும்ப அட்டைகளை ஒழிக்கவும், முனைப்பார்வத்துடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொது விநியோக கடைகளுக்கு உரிய காலநேரத்தில் பொருள்களை வழங்கவும், பொதுமக்களுக்குச் சரியான எடையில் பொருட்கள் வழங்கப்படுவதையும், பொதுமக்களுக்குச் சிறந்த சேவையையும் புரிதல் உறுதி செய்வதற்காகவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட நிருவாகத்தை முடுக்கி விட வேண்டும்.

13. தமிழ்நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கியமான பிரச்சினையே தண்ணீர்ப் பற்றாக்குறையை எவ்வாறு சமாளிப்பது என்பதுதான். இந்நாட்டில் தனி நபருக்குக் கிடைக்கும் தண்ணீரின் அளவு மிகக் குறைவாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று ஆகும். நதிகளை இணைப்பதுதான் இதற்கு அறுதியான தீர்வாக அமையும் என்ற போதிலும் குறைவான நீரே கிடைக்கின்ற உண்மையை உள்வாங்கிக் கொண்டு, விரைந்த வேளாண்மை வளர்ச்சியை எட்ட நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டுதான், நான் காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு போன்ற சாகுபடிக்குக் குறைந்த நீரே தேவைப்படுகின்ற பயிர்களை ஊக்குவிக்க ஒரு திட்டத்தை தொடங்கி வைத்தேன். இப்பயிர்களிலிருந்து உயிரி எரிபொருள் உற்பத்தி செய்வதற்கான செய்முறை தளவாடங்களை அமைக்குமாறு பெரும் தொழில் நிறுவனங்கள் கோரப்பட்டுள்ளன. விரைவில் இது முடிவு செய்யப்படும். சாகுபடிக்குக் குறைந்த நீரே தேவைப்படுகின்ற இப்பயிர்களைப் பயிரிடுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்துவதற்கு இத்தொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்ய வேண்டும். இத்தொழில் நிறுவனங்கள் விவசாயிகளுடன் பண்ணைத் தொழில் ஒப்பந்தம் செய்து கொள்ளும் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்படுவதை உறுதி செய்வதில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முனைப்புடன் செயல்பட வேண்டும்.

14. வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்கு பாசனம் மிக முக்கியம் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. தமிழ்நாடு போன்ற தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவும் மாநிலத்தில், மழைநீர் சேகரிப்பு மிக முக்கியமானதாகிறது. என்னுடைய உத்தரவுகளின் பேரில் கடந்த ஆண்டு நிறுவப்பட்ட மழைநீர் சேகரிப்பு அமைப்புகளினால் சிறந்த பயன் கிட்டியுள்ளது. இந்த இயக்கம் அனைத்து ஊரகப் பகுதிகளிலுள்ள பாசன அமைப்புகளிலும் பின்பற்றப்பட வேண்டும். இது நீர் வரத்துப்பகுதி அடிப்படையில் செயற்படுத்தப்பட வேண்டும். வளமான வேளாண்மைக்கு வழி வகுக்கும் சிறந்த பாசனத்தைப் பெற ஏதுவாக மழை நீர் சேகரிப்பு திட்டத்தின் அடிப்படையில் பெரும் நீர்வரத்துத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் வேளாண்மைத் துறையும் ஊரக வளர்ச்சித் துறையும் இணைந்து செயல்பட வேண்டும்.

15. அடுத்தடுத்து ஏற்பட்டு வரும் வறட்சியின் காரணமாக விளைந்த பாதிப்புகளைப் புறந்தள்ளி பண்ணைத் துறைக்கு புத்துயிர் அளிக்கப்பட வேண்டும். நடப்பு தென்மேற்குப் பருவக் காலத்தில், புதிய பயிர்களை நடுவதற்கு, விவசாயிகளுக்கு ஏதுவாக கடன் வசதி அளிக்கப்பட வேண்டும். வரும் பருவக் காலத்தில் விவசாயிகளுக்கு ரூ.1,037 கோடி வரை பயிர் கடன் வசதி அளிக்க ஏதுவான வகையில், கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டங்களை நான் அண்மைக் காலத்தில் அறிவித்திருக்கிறேன். விவசாயிகள் நடப்புப் பருவக் காலத்தில் சாகுபடி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக அவர்களுக்குக் கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து அல்லது வணிக வங்கிகளிடமிருந்து புதிய கடன் கிடைப்பதை உறுதி செய்யும்பொருட்டு, மாவட்ட ஆட்சியர்கள் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

16. பெண்களுக்கு வாய்ப்பு அளித்தால், ஆண்களைக் காட்டிலும் சிறந்த முறையில் செயலாற்றி வெற்றியடைவார்கள் என்பதை என்னுடைய தலைமையில், தமிழ்நாட்டுப் பெண்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். 1992ஆம் ஆண்டில் நான் தொடங்கி வைத்த மகளிர் சுயஉதவிக் குழு, அரும்பாகி, வளர்ந்து, ஆலமரமாகத் தழைத்தோங்கி பல ஆயிரம் விழுதுகளுக்கு ஒப்பான புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்களாக உருவெடுத்துள்ளது. இன்றைக்கு, 28,91,267 பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட 1,70,802 சுயஉதவிக் குழுக்கள் ஏற்படுத்தப் பட்டிருப்பதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அவர்களுடைய மொத்த சேமிப்புத் தொகை ரூ.469.33 கோடியை எட்டியுள்ளது. அவர்கள் பெற்றுள்ள கடன் தொகை ரூ.767.89 கோடி ஆகும். உள்ளபடியே, இது நாம் எண்ணி எண்ணி இறும்பூது எய்தத் தக்க அளப்பரிய சாதனையாகும். இந்த வலுவான அடித்தளத்தின் மீது தான் நாம் கட்டுமானத்தை எழுப்ப வேண்டும். கடன் வசதிகளை மேம்படுத்தி அங்காடி நிலவரத்திற்கேற்ப பொருளாதார நடவடிக்கைகளையும் நாம் முடுக்கிவிட வேண்டும். அங்காடி வசதிகளும் மேம்படுத்தப்பட வேண்டும். இவை குறித்து, வங்கியாளர்கள் மற்றும் வளர்ச்சித் துறைகளுடனான கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர்கள் முழுமையாக எடுத்துரைக்க வேண்டும். மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த புதிய வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கிலான நமது தேடுதல், அங்காடி நிலவரம் சார்ந்த தொலைநோக்கின் அடிப்படையிலானதாக இருக்க வேண்டும்.

17. இதுகாறும், மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. வேலையில்லாப் பிரச்சினையையும் அதன் காரணமாக ஏற்படக் கூடிய சமூகப் பிரச்சினையையும் தீர்க்க வேலைவாய்ப்பில்லாத, குறிப்பாக, கிராமப் பகுதிகளில் உள்ள இளைஞர்களைக் கொண்டு, சுயஉதவிக் குழுக்கள் அமைப்பதில், மாவட்ட ஆட்சியர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

18. நாம் பல முக்கியப் பிரச்சினைகளை விவாதிக்க வேண்டியுள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டுமென மக்கள் இவ்வரசுக்கு ஆணையிட்டுள்ளார்கள். நம் மீது சுமத்தப்பட்டுள்ள இப்பொறுப்பினை முழுவதுமாகச் செயல்படுத்துவதில் மாவட்ட நிருவாகம் எங்களுக்கு உதவ வேண்டும். இதற்கு, சாதரணமாக மேற்கொள்ளப்படும் மேலோட்டமான முயற்சிகள் பலனளிக்கா. எனவே மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் பாராட்டத்தக்க பயன்களை அளித்துள்ள சிறந்த நடவடிக்கைகளை நோக்கி சாதனையில் புதிய சிகரத்தை எட்ட முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்''.

10.8.2004 அன்று நடைபெற்ற காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

"மாண்புமிகு தமிழக அமைச்சர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களே, வளர்ச்சிப்பணி ஆணையர் அவர்களே, உள்துறைச் செயலாளர் அவர்களே, முதுநிலை காவல்துறை அதிகாரிகளே.

வரும் ஆண்டில், சீரிய முறையில் செயலாற்றி புதிய சிகரத்தை எட்டும் பொருட்டு நமது பணிகள் பற்றி மறுஆய்வு செய்து, உள்முக ஆய்வினை மேற்கொண்டு, புதிய வழிமுறைகளை வகுப்பதற்காக கூட்டப்பட்டுள்ள காவல்துறை அதிகாரிகளின் இந்தத் தனி மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

2. உங்களுடைய தளராத ஒத்துழைப்புடன் நான் நிலை நாட்டிய சிறந்த சட்ட–ஒழுங்கு நிலைமை நமது சாதனையின் ஒரு புதிய சிகரமாகும். இச்சாதனை இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடு ஒரு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்ற நற்பெயரை உலக

அளவில் நமக்கு ஈட்டித் தந்துள்ளது. சீரிய இச்சாதனை, நுணுக்கமான உளவுத் தகவல், உன்னிப்பான திட்டமிடல், விடா முயற்சியுடன் கூடிய செயலாக்கம், தக்க நேரத்திலான தொடர் நடவடிக்கை ஆகியவற்றின் மூலம் தொடர்ந்து கட்டிக் காக்கப்பட வேண்டும். பலதரப்பட்ட சுயநலவாதிகள், தவறாக வழி நடத்தப்பட்ட கூட்டத்தினர், பிரச்சினையை வேண்டுமென்றே உருவாக்குபவர்கள் ஆகியோர் எவ்வகையிலேனும் பெருமைக்குரிய இச்சாதனைக்குக் களங்கம் உண்டாக்கிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் அமைதியைக் குலைத்து, பிரச்சினைகளைத் தூண்டுவதான தங்களுடைய கொடிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்கள் எந்த அளவுக்கும் இறங்குவர். அண்மையில், சென்னை, கோயம்புத்தூர், மற்றும் சில இடங்களில் பல்வேறு பள்ளிகளில் கட்டவிழ்த்து விடப்பட்ட வெடிகுண்டு புரளி காரணமாக பள்ளிக் குழந்தைகள் உடனடியாகப் பள்ளியை விட்டு வெளியேற்றப்பட்டதும், அக்குழப்பத்தில் சில குழந்தைகளுக்குக் கடுமையான காயங்கள் ஏற்பட்டதும், இந்த விஷமிகள் சட்டம்–ஒழுங்கைக் குலைப்பதில் எந்த அளவுக்குக் கீழே இறங்குவார்கள் என்பதற்குச் சான்று பகர்கின்றன. எப்போதும் விழிப்புடன் இருப்பதுதான் நமது தாரக மந்திரமாக இருக்க வேண்டும். சாதாரணமாகத் தெரிகிற விஷயத்தின் பின்னணியில் கூட பயங்கர சதி இருக்கக் கூடும் என்பதால், கிடைக்கும் ஒரு துண்டுத் தகவலையும் கூட அலட்சியம் செய்யாமல் மிகவும் விழிப்புடன் ஆராய வேண்டும் என்று காவல்துறை அதிகாரி ஒவ்வொருவரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் ஆற்றும் இச்சிறந்த பணியைத் தொய்வின்றித் தொடருவீர்கள் என்றும், நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு பணியிலும் உங்கள் முன்னேற்றத்தின் முத்திரையைப் பதிப்பீர்கள் என்றும் நான் உளமார நம்புகிறேன்.

3. பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், அடிப்படை வாதிகள் குறித்து நடவடிக்கை எடுப்பதில் எந்தவிதச் சுணக்கத்தையும் என்னால் சகித்துக் கொள்ள முடியாது என்பதை நீங்கள் அனைவரும் நன்கறிவீர். பயங்கரவாத கும்பல்களும், அடிப்படைவாத சக்திகளும் ஒரு கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளார்கள். அனைத்து முக்கியமான பயங்கரவாத அமைப்புகளையும், அவர்களைச் சார்ந்துள்ள துணைக் குழுக்களையும் என்னுடைய அரசு தடை செய்துள்ளது. இவற்றிலிருந்து பிரிந்த சிறு குழுக்கள் கூட செயலிழந்துவிட்டன. இம்மாநில மக்களிடத்தில் நாம் பாதுகாப்பான, அமைதியான சூழலில் வாழ்ந்து வருவதாக ஒரு நிம்மதி நிலவுகிறது. இதனால் அவர்கள் தங்களுடைய சொந்தப் பணிகளை எவ்வித அச்சமோ, பதற்றமோ இன்றி ஆற்ற முடிகிறது. தீய எண்ணங்கொண்ட பல விஷமிகள் நம்மிடையே இருக்கின்றார்கள்; இவர்கள் நம் சாதனையைக் கண்டு பொறாமையுற்று, இந்த அரசின் நற்பெயருக்குக் களங்கம் உண்டாக்க எதுவேண்டுமானாலும் செய்வார்கள்.

4. 1.7.2004 அன்று வீடியோ கலந்தாய்வு தொலை–நீதி முறைமையைத் தொடங்கி வைத்ததன் வாயிலாக, பாதுகாப்பு ஏற்பாட்டு முறைகளை நிலைகுலையச் செய்யும் பயங்கரவாதிகளின் செயல்பாட்டை ஒடுக்கும் உங்களுடைய திறமையை நான் மேலும் அதிகரித்து கூடுதல் வலு சேர்த்துள்ளேன். இந்த ஏற்பாட்டின் வாயிலாக ரூ.8.61 கோடி செலவில், மாநிலத்தில் உள்ள 78 இடங்களில், 270 நீதிமன்றங்களுடன் 11 சிறைச்சாலைகள் இணைக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதையும் உள்ளடக்குகின்ற இந்த வசதி நாட்டிலேயே முதன் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், சிறைக் கைதிகளுக்குப் பாதுகாப்பளித்து அவர்களை நீதிமன்றங்களில், நீதித்துறை மாஜிஸ்திரேட்டுகள் முன்னிலையில் ஆஜர்படுத்துவது போன்ற இடைஞ்சலான நடைமுறைகள் இல்லாது ஒழிகின்றன. இது கைதிகளை அழைத்துச் செல்லும் போது அவர்கள் தப்பி விடுவதற்கான வாய்ப்பு, சிறை வளாகங்களுக்குள் கள்ளத்தனமாக கடத்தல் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான வாய்ப்பு மற்றும் நீதிமன்றங்களில் பெருமளவில் கூட்டம் கூடுவதற்கான வாய்ப்பு ஆகியவற்றையும் ஒழித்துவிட்டது. இதனால், ஆண்டொன்றுக்கு ரூ.10.69 கோடி மீதமும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறாக, பயங்கரவாதத்துக்கு எதிரான நமது யுத்தத்தில், நாம் எப்போதும் ஒரு படி முன்னிலையிலேயே இருப்பதை நான் உறுதி செய்துள்ளேன். 2002ஆம் ஆண்டில், நான் தொடங்கி வைத்த, காவல் படையைப் பெருமளவில் நவீனப்படுத்தும் திட்டமும், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்த யுத்தத்தில், அதிநவீன தொழில்நுட்பத்தை நீங்கள் பயன்படுத்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

தீவிரவாதம், பயங்கரவாதம் மற்றும் அடிப்படைவாதம் ஆகியவற்றை வேரோடு களைந்து முறியடிப்பதற்கான முயற்சியில் யாதொரு தொய்வு ஏற்பட்டாலும், அதனை நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன் என்ற தகவலை மீண்டும் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

5. சமுதாய நல்லிணக்கத்தை முழு அளவில் சிறப்பாகப் பராமரிப்பதில் தமிழ்நாடு தனிச்சிறப்புப் பெற்று விளங்குகிறது. இந்த வகையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன் மாதிரியாக விளங்குகிறது. 2003–2004ஆம் ஆண்டுகளில் சமுதாய நல்லிணக்கம் முழுமையாக நன்கு பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. சமுதாய மோதல்களைத் தூண்டிவிட முயற்சி செய்கிற, தீய சக்திகளைத் தீவிரமாகக் கண்காணித்து, கட்டுப்பாட்டில் வைக்கவேண்டும் என்ற என்னுடைய உத்தரவுகளை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சமுதாய அமைதியின்மை தொடர்பான ஒரு சில சிறு சம்பவங்களே நடைபெற்றுள்ளன. காவல்துறையினர் உரிய நேரத்தில் தடுப்பு நடவடிக்கை எடுத்ததனால், பெரிய அளவில் ஏற்பட்டிருக்கக் கூடிய ஒரு சில சாதி மோதல்கள் தடுக்கப்பட்டன. சட்டம்–ஒழுங்கு திறம்பட பராமரிக்கப்பட்டது. இந்த முயற்சிக்காகக் காவல்துறை அதிகாரிகள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். இத்தகைய நற்பணியை நீங்கள் தொடர்ந்து ஆற்றவேண்டும் என நான் விரும்புகிறேன்.

6. முந்தைய சந்தர்ப்பங்களில், காவல்துறை காவலில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்கள் குறித்து நான் என்னுடைய கவலையைத் தெரிவித்துள்ளேன். இது தொடர்பாக காவல் படையினரை நெறிப்படுத்த நாம் எடுத்த முயற்சிகள் பயனளித்து வருகின்றன என்பதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 2003ஆம் ஆண்டில் காவல்துறை காவலில் ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. மனித உரிமை அமைப்புகள் இந்தச் சாதனையை நிச்சயமாகப் பாராட்ட வேண்டும். இருப்பினும் நாம் சாதனை களிப்பில் வாளாவிருந்துவிடலாகாது. இம்மாநிலத்தின் காவல் படை மனித உரிமைகளை இடைவிடாது பேணி காப்பதன் மூலமும், காவல்துறை காவலில் நிகழும் வன்முறைகளையப்படுவதன் மூலமும் நாட்டின் எஞ்சிய மாநிலங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும்.

7. ஒவ்வொரு துறையிலும் மகளிர் சிறப்பாக விரைந்து முன்னேற வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்த வகையில் பல்வேறு சிறப்பு முயற்சிகளை நான் எடுத்துள்ளேன் என்பதும் உங்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்திருக்கும். மகளிர் மட்டும் இடம் பெற்றிருக்கக் கூடிய அதிரடிப்படை பிரிவு ஒன்றை முதன்முறையாகத் தொடங்கிவைத்துள்ளேன். மற்றும் மகளிர்க்கென்று தனி காவல்படைப் பிரிவு ஒன்றையும் நான் தொடங்கி வைத்துள்ளேன்; இந்த வகையான அனைத்து மகளிர் படைப் பிரிவுகளை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது.

8. இந்த ஆண்டில் 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு நான் அனுமதி வழங்கியுள்ளேன். இத்துடன் சேர்த்து இம்மாநிலத்தில் 188 மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், 7 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு இப்போதுதான் அனுமதி வழங்கியுள்ளேன். இவற்றையும் சேர்த்துப் பார்க்கையில் காவல்துறையில் உள்ள அனைத்து காவல்துறை உட்கோட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைந்திருக்கும். இந்த வகையில், நாட்டிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்கும்.

9. என்னுடைய உத்தரவுகளின் பேரில் ஒவ்வொரு வட்ட அளவிலான காவல் நிலையத்திலும், ஒரு பெண் காவல்துறை உதவி ஆய்வாளரும், 2 பெண் காவலர்களும் பணியமர்த்தப்படுகின்றனர். மேலும், இந்த ஏற்பாடு தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று நான் ஆணையிட்டுள்ளேன். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆட்சேர்ப்புப் பணி முடிந்தவுடன், ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு பெண் காவல்துறை உதவி ஆய்வாளர் தலைமையில் மகளிர் காவல் பிரிவு இருக்கும்.

10. காவல் துறையினர், மனித நேயமுடையவர்களாகவும், நலம் நாடுபவர்களாகவும், அனுதாபமும், இரக்கக் குணமும் உடையவர்களாகவும், மக்களுக்கு, குறிப்பாக, பெண்களுக்கு ஆபத்துகால நண்பர்களாகவும், ஆலோசகர்களாகவும் இருக்க வேண்டும். இதனை உறுதிப்படுத்துவதற்காகத்தான் மகளிரைக் காவல்துறையில் பணியமர்த்துவதற்கு நான்

மிகவும் முக்கியத்துவம் அளித்து வருகிறேன். மகளிர் தங்கள் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை எதிர்நோக்கித்தான், காவல் நிலையத்தை அணுகுகின்றனர்; மேலும், அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டியதன் தேவையை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். ஆலோசனைகள், வழிகாட்டுதல்களுடன் அவர்களது புகார்களின் பேரில் குற்றவாளிகளைப் பிடித்து உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் மகளிர் விரும்புகின்றனர். எனவே, இத்தகைய மகளிருக்கு எதிரான அனைத்துக் குற்றங்களையும் களைவதற்கு ஒட்டுமொத்த காவல்துறையும் புரிந்துணர்வுடனும் பொறுப்புடனும் பாடுபடவேண்டியது அவசியமாகிறது.

11. 2001 மே திங்களில் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து, மாநிலத்தில் குற்றங்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வந்துள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது. எனினும், ஒன்று அல்லது இரண்டு சம்பவங்களை ஊதிப் பெரிதாக்கித் திட்டமிட்டு, ஒன்று சேர்த்துப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. மாநிலத்தில் குற்றத்தின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்பதையும், குற்றங்களின் கண்டுபிடிப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பதையும், கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு அதிகரித்துள்ளது என்பதையும் உண்மை நிலவரங்கள் தெளிவாக்கியுள்ளன. எந்த வகையைச் சேர்ந்த குற்றங்களை எடுத்துக் கொண்டாலும், அது சொத்து சம்பந்தப்பட்ட குற்றமாக இருந்தாலும் சரி, வன்முறை சம்பந்தப்பட்ட குற்றமாக இருந்தாலும் சரி, மகளிருக்கு எதிரான குற்றமாக இருந்தாலும் சரி அல்லது ஏனைய குற்றங்களாக இருந்தாலும் சரி, 2004 ஜூன் வரையில் ஏற்பட்ட அத்தகைய நிகழ்வுகளின் எண்ணிக்கை 2003, ஜூன் வரையில் இருந்ததை விடக் குறைவே. 2004 ஜூன் வரையில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் சதவிகிதம் 76 சதவிகிதத்தை எட்டியுள்ளது; இது முந்தைய ஆண்டில் 69 சதவிகிதமாக இருந்தது. சொத்துக்கள் மீட்கப்பட்ட இனங்களின் சதவிகிதம் 2004 ஜூன் வரையில் 73 சதவிகிதத்தை எட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டில் 65 சதவிகிதமாக இருந்தது. குற்றங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 2002ஆம் ஆண்டில் 1 இலட்சம் மக்கள் தொகைக்கு 266.2 ஆக இருந்தது. 2003ஆம் ஆண்டில் இது 248.71 ஆகவும், நடப்பு ஆண்டின் 2004 ஜூன் வரையிலான முதல் ஆறு மாதங்களில் 245ஆகவும் குறைந்துள்ளது. இந்த உண்மையை எவரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

12. எண்ணிக்கைகளுக்கு அப்பாற்பட்டு, இது தொடர்பாக முன்பு நான் தெரிவித்ததையே மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். குற்றங்களை முழுமையாக புலனாய்வு செய்து, கண்டறிந்து, இறுதியாக குற்றவாளிக்குத் தண்டனை பெற்றுத்தருவதில்தான், குற்றங்களைக் கட்டுப்படுத்துவதன் வெற்றி அடங்கியிருக்கிறது. தகவல் தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் குற்ற நிகழ்வுகளின் பாங்குகள் மற்றும் குற்றங்கள் தொடர்பான முந்தைய புள்ளி விவரங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து, அவற்றின் விவரங்களை அறிந்து, தங்களது பணியைத் திட்டமிட்டுக் கொள்ள காவல் நிலையத்திற்கு சாத்தியமாகிறது. வழக்கமாகக் குற்றம் புரிபவர்கள் மீதும் திட்டமிட்டு குற்றங்களில் ஈடுபடுகின்ற கும்பல்கள் மீதும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

13. 1991–1996ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட கால அளவில் முதல்முறையாக நான் முதலமைச்சராக இருந்தபோது, நெடுஞ்சாலை ரோந்து உருவாக்கப்பட்டது. ஆனால், அடுத்து வந்த அரசு அதைச் செயல்படுத்தவில்லை. மீண்டும் 2001 மே திங்களில் ஆட்சிப் பொறுப்பேற்றபின் அதனை மீண்டும் செயல்படுத்த நான் ஆணையிட்டேன். 2002 நவம்பரில் அவசர கால விபத்து – நிவாரண மையங்களை நான் தொடங்கிவைத்தேன். நெடுஞ்சாலை ரோந்துப் பணியை விரிவுபடுத்தி, அவசர கால விபத்து நிவாரண மையங்களுடன் அவற்றை ஒருங்கிணைக்க நான் ஆணையிட்டேன். ஒருங்கிணைக்கப்பட்ட இந்தப் புதிய திட்டத்தை 22.8.2003 அன்று நான் தொடங்கிவைத்தேன். தேசிய நெடுஞ்சாலைகளில் அடிக்கடி விபத்து நடக்கக்கூடிய எண்பது விபத்து பகுதிகளில் நவீன கருவிகள் பொருத்தப்பட்ட 80 புதிய நெடுஞ்சாலை ரோந்து வண்டிகள் 24 மணி நேரமும் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபின், இந்த இடங்களில் நெடுஞ்சாலை விபத்து உயிரிழப்பு 27 சதவிகிதம் குறைந்துள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். 2004 ஜூன் இறுதிவரையிலான கால அளவில் விபத்துக்களின் எண்ணிக்கையும் 28 சதவிகிதம் குறைந்துள்ளது. நெடுஞ்சாலை ரோந்துக் காவல் படையுடன் இணைந்து செயல்படுகிற அவசர கால விபத்து நிவாரண மையங்கள் உரிய காலத்தில் தலையிட்டு, சாலை விபத்துகளால் பாதிக்கப்

பட்டோருக்கு மருத்துவ சிகிச்சை அளித்ததன் மூலம், 2002 நவம்பர் திங்கள் முதல் 2004 மே திங்கள் வரையிலான கால அளவில், சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்ட 9,395 பேரின் உயிரைக் காக்க முடிந்ததை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் வாயிலாகவும், பாரபட்சமின்றி சட்டத்தைச் செயல்படுத்துவதன் வாயிலாகவும் காவல் துறையினர் மேலும் திறம்படச் செயல்பட வேண்டியுள்ளது. போதையில் வண்டிகளை ஓட்டுதல், அசட்டை துணிச்சலுடன் விரைவாக வண்டி ஓட்டுதல் போன்ற இரட்டை அபாயங்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

14. கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சுவதும், கள்ளச் சாராயம் விற்பனை செய்வதும் சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கின்ற, உறுதியாக ஒழிக்கப்பட வேண்டிய கேடுகளாகும். குற்றவாளிகள் பற்றிய தகவலைச் சேகரித்தல், திடீர் சோதனை செய்தல், குற்றவாளிகளைப் பிடித்தல் ஆகியவற்றில் (வழக்கமான) காவல் படையினர், மதுவிலக்கு பிரிவு, வருவாய் நிருவாகம் ஆகியவற்றுக்கிடையே அதிக ஒருங்கிணைப்பு இருக்க வேண்டியது அவசியமாகும். கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும் கள்ளச் சாராயம் விநியோகம் செய்வதையும் அடியோடு ஒழிக்க, காவல்துறை கண்காணிப்பாளர்கள் சிலர் மாபெரும் முயற்சி மேற்கொண்டதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதனை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு அனைத்து காவல் துறை கண்காணிப்பாளர்களும் செயல்பட வேண்டும். ஒவ்வொரு நிலைய அலுவலக அதிகாரியும், அவருடைய அதிகார வரம்பின் கீழ் உள்ள பகுதி, "கள்ளச்சாராய நடமாட்டம் அற்ற பகுதி" என்று அறிவிக்கப்படும் வகையில் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

15. எல்லா இடங்களிலும் போதை மருந்துகளின் கள்ளத்தனமான வியாபாரமும், தடை செய்யப்பட்ட பொருட்களின் பயன்பாடும் பெருகி வருவதை கருத்திற்கொண்டு, இது தொடர்பாக தீவிர கண்காணிப்புச் செலுத்த வேண்டியது அவசியமாகியுள்ளது. அவ்வாறே, உயர் தொழில்நுட்ப கேளிக்கை நிறைந்த இந்த யுகத்தில், வீடியோ திருட்டு, மிகப் பெரிய அளவில் நடைபெறுகிறது. இந்தக் கேட்டினை ஒழிக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். எனவே, தற்போது உருவெடுத்து வருகின்ற இக்கேட்டினை ஒழிக்க நடவடிக்கை எடுப்பதற்காகப் போதை மருந்துகள் மற்றும் வீடியோ திருட்டுப் புலனாய்வு சிறப்புப் பிரிவுகள் தக்கவாறு வலுப்படுத்தப்பட்டுள்ளன.

16. ஆயுதங்கள், சாதனம் மற்றும் நவீனமயமாக்கப்பட்ட தகவல் தொடர்பு வசதிகள் ஆகியவற்றுடன், நமது காவல் படையை, நாட்டிலேயே மிக நவீனமான காவல்படையாக உருவாக்க வேண்டியதன் அவசியத்தை நான் எப்போதுமே வலியுறுத்தி வந்துள்ளேன். 2001–2003 ஆகிய ஆண்டுகளுக்கிடையில் ரூ.272.4 கோடி செலவில் காவல் படையை நவீனமயமாக்கும் திட்டத்தை நான் தொடங்கி வைத்தேன். 2003–2004ஆம் ஆண்டில் நவீனமயமாக்கும் திட்டப் பணிகளுக்காக நான் ரூ.89.14 கோடி அனுமதித்துள்ளேன். இத்திட்டங்கள், செயல்பாட்டின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

17. நமக்குப் பாதுகாப்புக்காகத் தனியே நின்று, ஒவ்வொரு முறைக் காவலிலும் விழிப்புடன் பணியாற்றுகின்ற ஒவ்வொரு காவலரின் நலன் குறித்தும் நான் எப்போதும் கவலை கொள்வதுண்டு. சட்டம் – ஒழுங்கு நிலையைப் பாதுகாக்கக் காவல்துறைப் பணியாளர்களுக்கு இன்றியமையாமல் தேவைப்படும் கடின உழைப்பு, கடமை உணர்வு சற்றும் தளராமல் இருக்கவும், அவர்களின் செயலார்வம் குன்றாமல் இருக்கவும், அவர்களை ஊக்குவிக்கவும் அவர்களுடையக் குறைகளைக் களைய நாம் தீவிர கவனமெடுத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது. இதன் பொருட்டு, குறை தீர்க்கும் நிகழ்ச்சியை நானே நேரடியாக ஐந்து நாட்கள் நடத்தி, சுமார் 8,395 காவல்துறைப் பணியாளர்களிடம் குறைகளைக் கேட்டறிந்தேன். என்னுடைய கட்டளைகளுக்கிணங்க, காவல்துறையைச் சேர்ந்த முதுநிலை அதிகாரிகள், குறிப்பிட்ட கால இடைவெளியில் இதைப்போன்றே குறைகேட்கும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். மேலும் அவர்களிடம் தெரிவிக்கப்படும் குறைகளைக் களைவதற்காக உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுத்தும் வருகின்றனர். எவ்வித விட்டுக் கொடுத்தலும் இன்றி நம்முடைய காவல் படையின் கட்டுப்பாடு நீடித்திருக்க வேண்டியது அவசியம். இதன் பொருட்டு அவர்களுடைய பணி ஆர்வத்தை அதிகரிக்க

அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

18. காவல்துறைப் பணியாளர்களுக்கான நல நடவடிக்கைகள் தொகுப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் நான் முனைப்புடன் இருக்கிறேன். முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மானியங்கள் வழங்குவதுடன், மருத்துவ வசதிகள், படிப்புதவித் தொகைகள், பரிசுத் தொகைகள், கருணைத் தொகை வழங்குதல் மற்றும் காப்பீட்டுறுதித் திட்டங்கள் போன்ற நான் தொடங்கிவைத்த பல்வேறு நடவடிக்கைகள் காவல் பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு காவல்துறைப் பணியாளரும் அவருடைய கடமைப் பொறுப்பை, முழுத் திறமையுடன் ஆற்றுவதற்கு ஊக்கமளித்து வருகின்றன. வீரதீரச் செயல்களில் ஈடுபட்டிருக்கும்போது கொல்லப்படும் அல்லது ஊனமுற்று செயலிழந்துபோகும் சிறப்புப் படைப் பிரிவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை ரூ.10 இலட்சமாக உயர்த்தி நான் ஆணை பிறப்பித்துள்ளேன். வீரத்துடன் போராட வேண்டிய சூழ்நிலைகளில், தீரத்துடன் பணியாற்றி தமது இன்னுயிரை இழக்கும் அல்லது ஊனமடைந்து செயலற்றுப் போகும் காவல்துறைப் பணியாளர்கள் அனைவருக்கும் அவர்களுடைய வீரதீர சாகசச் செயல்களுக்கு அங்கீகாரமளிக்கும் வகையில் அவர்களுக்கு வழக்கமாக அனுமதிக்கப்படும் கருணைத் தொகையுடன், தொகுதி ஈட்டுறுதித் திட்டத்தின் கீழும் அனைத்துப் பயன்களும் அளிக்கப்பட வேண்டுமென்றும் நான் ஆணை பிறப்பித்துள்ளேன். எனது இந்த நடவடிக்கையானது என்னுடைய அரசு காவல்துறைப் பணியாளர்களின் நலனையும், அவர்களுடைய குடும்ப நலனையும் எப்போதும் கவனித்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையைக் காவலர் ஒவ்வொருவருக்கும் அளித்துள்ளது.

19. தமிழ்நாடு காவல்துறைக்கென நற்பெயரும் புகழும் உண்டு. சவாலான சூழ்நிலைகளில் மிகவும் தீவிரமாகவும், திறமையுடனும், கடமை உணர்வுடனும் செயலாற்றுதல், பணித்திறமை, சிறந்த வீரம் ஆகியவற்றைப் பெற்றது தமிழ்நாடு காவல்துறை என்ற சிறப்பானதோர் நற்பெயர் அதற்கு உண்டு. இத்தகைய, சிறந்த செயல்பாடு தொடர நல்ல தலைமை மிகவும் இன்றியமையாததாகும். உயர் காவல்துறை அதிகாரிகள், தமக்கு கீழ் பணியாற்றுபவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருந்து வழி நடத்திச் செயலாற்ற வேண்டும். எனவே, கடமையாற்றும்போது எப்போதும் நேர்மையுடனும் அச்சமின்றியும் மற்றும் நாணயத்தோடும் செயல்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். நமது சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு உரிமைகளை அளித்து, பாதுகாப்பளித்து, அதன்மூலம் நமது மாநிலம், மனிதாபமுடைய, நியாயமான, திறமையான காவல்துறையைப் பெற்ற ஒரு முன் மாதிரியான மாநிலமாகத் திகழச் செய்ய வேண்டியது உங்களுடைய முதன்மையான கடப்பாடாகும்.

10.8.2004 அன்று நடைபெற்ற காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய நிறைவு உரை

நேற்று நடைபெற்ற கூட்டுக் கூட்டத்திலும், இன்று நடைபெற்ற காவல்துறை அதிகாரிகளின் சிறப்பு மாநாட்டிலும் பொது நலன் சம்பந்தப்பட்ட முக்கியமான பல்வேறு பிரச்சினைகள் குறித்து பொருளார்ந்த கருத்து பரிமாற்றங்களைச் செய்து கொண்டோம். இம்மாநாடு, ஒவ்வொரு மாவட்ட காவல்துறை அதிகாரிகளும் தங்கள் மாவட்டங்கள் சம்பந்தப்பட்ட முக்கியப் பிரச்சினைகள் குறித்தும் அதனைச் சீர்செய்வதற்குத் தேவையான பொதுவான அணுகுமுறைகள் குறித்தும் ஆலோசனைகளைத் தெரிவிக்க ஒரு வாய்ப்பாக அமைந்தது.

தலைமைச் செயலாளர், வளர்ச்சிப் பணி ஆணையர் மற்றும் உள்துறைச் செயலாளர் ஆகியோர், நீங்கள் அளித்த மேலான ஆலோசனைகளைப் பரிசீலனை செய்து தொடர் நடவடிக்கையை முடிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளேன். நாம் விவாதித்த பல்வேறு முக்கியமான பிரச்சினைகளுக்கு உறுதியான தீர்வு கண்டு, அவற்றைத் திறமையான முறையில் நடைமுறைப்படுத்த முடியும் என்று உறுதியாக நம்புகிறேன். இங்கு நடைபெற்ற ஆலோசனையின் அடிப்படையில் செயல்படுத்த வேண்டிய நடைமுறைகளைப் பட்டியலிட்டுள்ளேன். அவற்றை நீங்கள் அந்தந்த மாவட்டங்களில் கடமையுணர்வுடனும், பொறுப்புணர்வுடனும், முழு உத்வேகத்துடனும் செயல்படுத்த வேண்டுமென நான் விரும்புகிறேன்''.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவிப்புகள்

10.8.2004 அன்று காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகள்

★ புலனாய்வு வளையத்தை எச்சரிக்கை தகவல்களை முன்கூட்டியே தரும் வகையில் மேம்படுத்தி பலப்படுத்துங்கள்.

★ முன்கூட்டியே எதிர்பார்த்து திட்டமிட்டு உங்களது பணிகளைத் தீவிர கவனத்துடன் ஆற்றுங்கள். வருமுன் காப்பதே சாலச்சிறந்தது.

★ ஒட்டுமொத்த காவல்படையும் இலக்குகளை அடைய முனைப்புடன் பணியாற்றத் தயார்படுத்துங்கள்.

★ அனைத்து மட்டத்திலும் உள்ள அதிகாரிகள் பொதுமக்கள் கொணரும் பிரச்சினைகளை மனிதநேயத்துடன் அணுக அறிவுறுத்துங்கள்.

★ உங்களது பணி மேலும் சிறக்க, புதிய தொழில் நுட்பங்களைக் கற்றுப் பயன்படுத்துங்கள்.

★ பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த விசாரணையில் மனப்பான்மை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

★ காவல்துறையினருக்கும் பொதுமக்களுக்கு மிடையேயான உறவை பலப்படுத்த வேண்டும்.

★ கள்ளச்சாராய உற்பத்தி மற்றும் விநியோகத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும்.

★ மிகப்பெரிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் திட்டமிட்டு குற்றங்களைச் செய்து வருபவர்களுக்கு எதிராக முனைப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ காவல்துறையினருக்கு மென்மேலும் தரமான பயிற்சி அளித்து எந்தச் சூழ்நிலையிலும் தீய சக்திகளை எதிர்த்து போராடத் தகுதியானவர்களாக உருவாக்க வேண்டும்.

★ காவலர் குறைகளை, கருணையுடன் பரிசீலித்து கட்டுப்பாட்டுணர்வை வளர்க்கவேண்டும். அதன் மூலம் தான் உண்மையான தலைமைப் பண்பு வெளிப்படும்.

★ இவைதான் தற்போது தேவைப்படுகின்ற செயல் திட்டங்களாகும். ஏற்கெனவே தமிழ்நாடு காவல்துறை தனக்கென்று ஒரு பெருமையை பெற்றுள்ளது. இவற்றை நடைமுறைப்படுத்தினால் இப்பெருமைக்கு மேலும் புகழ் சேர்க்கும்.

★ தமிழக காவல்துறையை நவீனமயமாக்க வேண்டும் என்பதில் நான் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளதை, நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பீர்கள். அதன்மூலம் தான் காவல்துறையின் செயல்பாடுகளில் அதிக அளவு முன்னேற்றத்தை நம்மால் உறுதி செய்ய முடியும். உங்களுடைய திறமைகளையும் தகுதிகளையும் மேம்படுத்தி அதன்மூலம் குற்றங்களைக் கட்டுப்படுத்தி சட்டம் – ஒழுங்கை மேலும் சிறப்பாக நடைமுறைப்படுத்த கீழ்க்காணும் நடவடிக்கைகளை அறிவிப்பதில் மகிழ்ச்சி யடைகிறேன்.

★ கடந்த முறை நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் நான் மாநிலத்திலுள்ள 1,250 காவல் நிலையங்களில் கணினி வசதி செய்து தரப்படும் என்று அறிவித்திருந்தேன். அதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2004 செப்டம்பர் இறுதிக்குள் அனைத்துக் காவல் நிலையங்களிலும் கணினி வசதி செய்துத் தரப்பட்டு விடும்.

★ அனைத்து காவல் நிலையங்களுக்கும் நிகரி இயந்திரம் வழங்கப்படும்.

★ தருமபுரி மாவட்டத்திலுள்ள சாமல்பட்டி கிராமத்தில் புதிய காவல் நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

★ போச்சம்பள்ளியிலுள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் அணிக்கு நிர்வாக அலுவலகம் மற்றும் பிற அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி நடப்பாண்டில் ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

★ ரூ.81.18 இலட்சம் மதிப்பில் 13 நோயாளர் வண்டிகள் மாவட்ட நிர்வாகங்களுக்கும், ஆணையரகங் களுக்கும் மற்றும் சிறப்பு காவல் படை அணிக்கும் வாங்கி வழங்கப்படும்.

★ பல்வேறு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாவட்ட மறுவாழ்வு நிதிக்கு கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதன் மூலம், திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கான மறுவாழ்வுப் பணிகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த இயலும் என்றும் தெரிவித்துள்ளார்கள். முதற்கட்டமாக, இதற்கென ரூ.2.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து மேலும் ரூ.2.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை மாவட்ட ஆட்சியர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். அதன் மூலம், மாவட்ட ஆட்சியர்கள் மறுவாழ்வுப் பணிகளைச் சிறப்பான வகையில் தொடர்ந்து செயல்படுத்த முடியும். மேலும், கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விநியோகத்தைத் தடுப்பதற்குரிய நிரந்தரத் தீர்வை மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை கண்காணிப் பாளர்கள் கண்டறிய இயலும்.

★ கடலூர் மாவட்ட கடற்கரையோரப் பகுதிகளில் மீனவர் குழுக்களுக்கு இடையே நடைபெறும் மோதல்களைத் தீர்த்து அமைதியை ஏற்படுத்தவும்; கடற்கரையோரம் நடைபெறும் கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்கும் ஒரு அதிவேக எந்திரப் படகை வாங்கித் தர வேண்டுமென்று மாவட்ட ஆட்சியரும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரும் என்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். இதே போன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர், கன்னியாகுமரி மற்றும் கடலோர மாவட்டங்களின் ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்களும் வேண்டுகோளை வைத்துள் ளார்கள். தகுதியான அதிவேக படகுகள் வழங்கப்படும். அப்படகுகளைச் செலுத்துவதற்குத் தேவையான படகோட்டிகள் உள்ளூர் மீனவர்களிடையேயிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளப்படுவர். பெண்களும் இப்பணிகளில் படிப்படியாக ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள்.

★ ஆதிதிராவிட மக்கள் மயானங்களுக்குச் செல்லும் பாதையில் அவ்வப்போது பிரச்சினைகள் உருவாகி அதன்மூலம் ஆங்காங்கே சிற்சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இதற்குத் தீர்வு காணும் வகையில் மாற்றுப்பாதை அமைப்பதற்கு நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான நிதியுதவியை அதிகரிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதற்காக, நடப்பு நிதியாண்டு 2004–2005ல் ரூ. 66 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் இந்தப் பணியை மேற்கொள்ள ஏதுவாக இந்தத் தொகை இரட்டிப்பாக்கப்படும்.

★ வட்டாட்சியர்களுக்கும், வருவாய் கோட்டாட்சி யர்களுக்கும் கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப் பாளர்கள் என்னிடம் வேண்டுகோள் விடுத்தார்கள். பேரிடர் நிவாரண நிதியிலிருந்து, ஒரு முன்னோடித் திட்டத்தின்கீழ், கடலோர வட்டங்களில் தனி வானொலி அலைவரிசையைக் கொண்ட கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 'ராசித் திட்டம்' விரிவுபடுத்தப்படும். இதன்மூலம், தரமான தகவல் தொடர்பு வசதிகள் அமையும். மேலும் தரமான தகவல் பரிவர்த்தனை வசதிகளை வருவாய் கோட்டாட்சியர்களுக்கும், வட்டாட்சியர்களுக்கும் வழங்குவது குறித்து ஒரு குழு தனியாக ஆய்வு மேற்கொள்ளும்.

★ கடலூர் கிளை சிறைச்சாலை வளாகத்தில் பெண்களுக்கென்றே தனியாக ஒரு சிறைச்சாலை அமைக்கப்படும்.

★ கடலூரிலும் பெரம்பலூரில் மகளிர் நீதிமன்றங்கள் அமைக்கப்படும். இதற்காக தலா ஒவ்வொரு நீதிமன்ற தொடரினச் செலவாக ரூ.8 இலட்சமும் தொடரா இனச் செலவாக ரூ. 5 இலட்சமும் ஒதுக்கப்படும்.

★ தருமபுரி மாவட்டத்தில் 35 கிராமங்களில், 105 ஊர்காவல் படையினர் பணியமர்த்தப்படுவர். இப்படைக்கென சம்பந்தப்பட்ட கிராமங்களிலிருந்து இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேலும் இவர்கள் கிராமப் பாதுகாப்பு குழுவினராகவும் பயன்படுத்தப்படுவர்.

★ தருமபுரி வருவாய் கோட்டாட்சியர், பாலக்கோடு வட்டாட்சியர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் ஆகியோருக்கு மாற்று ஊர்திகள் வழங்கப்படும்.

★ மாவட்ட மேம்பாட்டுப் பணிகளுக்காக தருமபுரி மாவட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.5 கோடியிலிருந்து ரூ. 6 கோடியாக உயர்த்தப்படும். கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு நடப்பு 2004–2005 ஆம் ஆண்டிற்குச் சிறப்பு ஒதுக்கீடாக மேலும் ரூ. 3 கோடி வழங்கப்படும். இதன்மூலம் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை செப்பனிட்டு மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், தளி பகுதியில் உள்ள சாலைகள் சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

★ திருவள்ளூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் அண்டை மாநிலங்களிலிருந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவகைகள் கடத்தப்படுவதைத் திறம்படத் தடுக்க ஏதுவாக 6 நடமாடும் சோதனைச் சாவடிகளுக்கு அனுமதி வழங்கப்படும். ஒவ்வொரு வாகனத்திலும் ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் நான்கு காவலர்கள் பணியில் இருப்பார்கள்.

★ தற்போது தேசிய நெடுஞ்சாலை ரோந்துப் பணியின்கீழ், 80 சாலைப் பகுதிகளில் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் மேலும் விரிவுப்படுத்தப்படும். இதனுடைய அடுத்தக் கட்டமாக, இந்த சாலை ரோந்துப் பணி, அதிக வாகன போக்குவரத்து நெரிசல் மிகுந்த மாநிலச் சாலைகளுக்கு விரிவுப்படுத்தப்படும். மாநிலச் சாலைகளில் 40 புதிய ரோந்து வாகனங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதில் கிழக்குக் கடற்கரைச் சாலை ரோந்துப் பணியும் உள்ளடங்கும்.

★ மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் நெடுஞ்சாலைத் துறையினருடன் இணைந்து போக்குவரத்துப் பொறியியல் பணிகளை செயல்படுத்துவதற்கு ஒவ்வொரு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு சில சமயங்களில் அரிஸ்தம் என்ற பெயரில் கள்ளச்சாராயம் விற்பனை நடைபெறுகின்றது. இதனைத் தடுக்க, மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் முறைப்படி அனுமதி வழங்குவதற்கு முன் சம்பந்தப்பட்ட காவல்துறை அலுவலர்களிடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெறவேண்டும்.

★ தற்போதைய கரூர் நகரக் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து கரூர் நகரத்தில் புதிதாக ஒரு காவல்நிலையம் அமைக்கப்படும்.

★ காவல்துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ், மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில், ரூ. 3 கோடி செலவில், நாமக்கல் மாவட்ட புதிய காவல்துறை அலுவலகம் அமைக்கப்படும்.

★ நாமக்கல் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோட்டுக்கென ஒரு புதிய போக்குவரத்துப் பிரிவு தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ காவல்துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ், மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் ரூ. 3 கோடி செலவில், பெரம்பலூர் மாவட்ட புதிய காவல்துறை அலுவலகம் அமைக்கப்படும்.

★ பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டு ஆயுத சேமக்காவல் படை பிரிவுகள் பணியமர்த்தப்படும்.

★ ரூ.45 இலட்சம் செலவில் வாங்கப்படும் புதியதொரு இடத்தில் ஈரோடு மாவட்ட ஆயுத சேமக்காவல் படை வளாகம் நிர்மாணிக்கப்படும். இந்தப் புதிய ஆயுதப்படை வளாகம் அமைக்கும் பணி 2004 டிசம்பருக்குள் முடிக்கப்படும்.

★ ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பயிற்சி நிதி வழங்கப்படும். இதன்மூலம் அந்தந்தப் பகுதிகளில் பணியாற்றும் காவல் துறை அலுவலர்களுக்குப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து குறுகிய கால பயிற்சிகள் நடத்தப்படும்.

★ புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கறம்பக்குடியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க அனுமதி அளிக்கப்படும்.

★ புதுக்கோட்டை மாவட்ட ஆயுத சேமக்காவல் படை வளாகத்தில், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ரூ. 45 இலட்சம் செலவில், சமூகநல கூடத்தை அமைக்கும்.

★ இராமேஸ்வரம் மற்றும் தொண்டி ஆகிய இடங்களில் உள்ள துறைமுகங்களைச் சீரமைக்கும் பணி ரூ.48.31 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

★ கடலோரக் கண்காணிப்பு மற்றும் கடல் சார்ந்த ஏனைய நடவடிக்கைகளில் காவல்துறையினருக்குப் பயிற்சி அளிக்க மண்டபத்தில் கடல்சார் பயிற்சி மையம் ஒன்று அமைக்கப்படும்.

★ தஞ்சாவூர் மாவட்ட தீயணைப்புப் படைக்கு 9,000 லிட்டர் கொள்ளளவு டேங்கர் ஒன்று கூடுதலாக வழங்கப்படும்.

★ நீலகிரி மாவட்டத்திற்குச் சீரமைப்பு பணிகளுக்கான மீட்பு வாகனம் உடனடியாக வழங்கப்படும்.

★ நீலகிரி மாவட்டத்தில், பணியாற்ற வரும் காவலர்கள் தங்குவதற்கென ரூ.75 இலட்சம் செலவில் துயில் கூடங்கள்/தங்குமிடங்கள் கட்டப்படும்.

★ தேனி மாவட்டத்தில் தற்போது கட்டப்பட்டு வரும் நீதிமன்ற வளாகத்தில் குற்றவாளிகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு சிறப்பான வசதிகள் செய்து தரப்படும். மேலும் பணி நிமித்தம் நீதிமன்றத்துக்கு வரும் காவல்துறை பணியாளர்கள் தங்களுடைய பணிகளைக் கவனிக்கவும், சட்ட ஆலோசகர் களுடன் ஆய்வு செய்வதற்கும் தேவையான வசதிகள் செய்து தரப்படும்.

★ மேற்கண்ட வசதிகள் மற்ற அனைத்து நீதிமன்ற வளாகங்களிலும் செய்து தரப்படும்.

★ தூத்துக்குடியிலுள்ள 'சிப்காட்' வளாகத்தில் பல்வேறு பெரிய தொழிற்சாலைகள் அமைந்திருப்பதாலும், அவற்றில் ஏராளமான தொழிலாளர்கள் பணியாற்றி வருவதாலும் அவ்வளாகத்தில் தனியாக ஒரு காவல் நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ மோட்டார் வாகனச் சட்டப்படி பதிவு செய்யப்படும் சிறு வழக்குகள் குறித்து விசாரணை மேற்கொள்ள

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் நடமாடும் நீதிமன்றம் அனுமதிக்கப்படும். போக்குவரத்து நெரிசலுள்ள பகுதிகளில் இந்த நடமாடும் நீதிமன்றங்களுக்கு அனுமதி அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

★ திருச்சி மாநகர காவல் துறை ஆணையரகத்திற்கு 8 புதிய குற்றப்பிரிவு ஆய்வாளர்கள் நியமிக்கப்படுவார்கள். 24 உதவி ஆய்வாளர்கள், 42 தலைமைக் காவலர்கள் மற்றும் 120 காவலர்களும் நியமிக்கப்படுவர்.

★ திருச்சி மாநகர காவல்துறை ஆணையரகத்திற்குப் புதிய மாநகர காவல் அலுவலகம் கட்டப்படும்.

★ திருச்சி மாநகர காவல்துறைக்குத் துணை ஆணையாளர் ஒருவர் தலைமையில் ஒரு தனி உளவுத் தகவல் பிரிவு அமைக்கப்படும்.

★ திருச்சி மாநகருக்கு உட்பட்ட மணிகண்டம் புறக்காவல் நிலையம், முறையான காவல் நிலையமாக நிலை உயர்த்தப்படும்.

★ திருச்சிராப்பள்ளி சரக காவல்துறை துணைத் தலைவர் அலுவலகத்திற்குப் புதிய அலுவலகம் கட்டப்படும்.

★ திருச்சிராப்பள்ளி மாநகர காவல் ஆணையாளர் அலுவலகத்தில் சுருக்கெழுத்துப் பிரிவு, விரல் ரேகைப் பிரிவு, புகைப்பட மற்றும் வீடியோ பிரிவுகள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்படும்.

★ பொதுமக்களிடையே கள்ளச்சாராயத்தால் ஏற்படும் தீங்கு குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்களும், அந்தந்த மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து முகாம்கள் நடத்த வேண்டும். இதற்காக, மாவட்டம் ஒன்றிற்கு ரூ.1 இலட்சம் என்ற வீதத்தில் ரூ.30 இலட்சம் அனுமதிக்கப்படும்.

★ திருநெல்வேலி மாவட்டத்தில் புதிய மாவட்ட காவல் அலுவலகம் கட்டப்படும்.

★ தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், திருநெல்வேலி மாநகர காவல்துறை ஆணையரகத்தின் பராமரிப்புப் பணியை மேற்கொள்ளும்.

★ திருவண்ணாமலை நகரில் மேலும் ஒரு புதிய காவல் நிலையம் (திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையம்) அமைக்கப்படும்.

★ திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலை மற்றும் ஆரணியில் புதிதாக மேலும் 2 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

★ வேலூர் மாவட்டத்தில் உள்ள அணைக்கட்டில் புதிய காவல் நிலையம் அமைக்கப்படும்.

★ விழுப்புரம் மாவட்டத்திற்கு 2 நடமாடும் கலந்தாய்வு வாகனங்கள் வழங்கப்படும்.

★ விழுப்புரம் மாவட்டத்தில் ஆயுத சேமக்காவல் படை மைதானத்திற்கு அருகேயுள்ள வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான இடம், காவலர் பயிற்சி மைதானம் ஏற்படுத்த வழங்கப்படும்.

★ விழுப்புரம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் விபத்து மற்றும் தீவிர சிகிச்சை அளிப்பதற்குரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். சிறப்பு மருத்துவர்களும் நியமிக்கப்படுவர்.

★ காவல்துறையினர் அனைத்துத் தருணங்களிலும் எதிரிகளை சந்திக்க ஆயத்தமாக இருக்கும் வகையில் அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் எளிமையான உடற்பயிற்சி உபகரணங்கள் வழங்கப்படும். காவல்துறையினர் தங்களுடைய உடல் நலனை மேம்படுத்திக்கொள்ள மன அழுத்த கட்டுப்பாட்டுப் பயிற்சி, குழு சிகிச்சை (Group theraphy) வசதி ஆகியவை அளிக்கப்படும்.

★ கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மற்றும் திண்டிவனம் ஆகிய இடங்களில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

★ விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ராஜபாளையம் மற்றும் திருவில்லிப்புத்தூரில் 2 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

★ அருப்புக்கோட்டை காவல்துறை உட்கோட்டம், அருப்புக்கோட்டை மற்றும் திருச்சுழி உட்கோட்டங்கள் என இரண்டாக பிரிக்கப்படும்.

★ நெடுஞ்சாலை ரோந்துப் பணித் திட்டத்தை 3 முறை மாற்றுப் பணி அடிப்படையில் செயல்படுத்துவது குறித்த செயற்குறிப்பு காவல்துறைத் தலைமை இயக்குநர் தலைமையிலான ஒரு பணிக்குழுவால் பரிசீலிக்கப்படும்.

★ சென்னை மாநகரில் உள்ள காவல் துறை இணை ஆணையர் மற்றும் துணை ஆணையர்களுக்கு செல்போன் வழங்கப்படும்.

★ சென்னை மாநகரில் உள்ள காவல் துறை இணை ஆணையர்களுக்கும் லாப்-டாப் கணினிகள் வழங்கப்படும்.

★ காவலர் பயிற்சிக் கல்லூரி நூலகம் புதுப்பிக்கப்படும்.

★ காவல்துறை பேண்டு இசைக் குழுவிற்கு ஊதுகொம்பு இசைப்பவர்கள் நியமிக்கப்படுவர்.

★ தமிழ்நாடு சிறப்பு காவல்படைக்கு ஓட்டுநர்களைத் தேர்ந்தெடுக்க சிறப்புத் தேர்வு நடத்தப்படும்.

★ பதற்றமான பகுதிகளிலுள்ள 100 காவல் நிலையங்கள், வழக்கமான எண்ணிக்கைக்கு அதிகமான காவலர்களை நியமிப்பதன் மூலம் வலுப்படுத்தப்படும்.

★ தமிழ்நாடு குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வு அலுவலகங்களுக்கு ஒளிஅச்சு இயந்திரம், நிகரி, தொலைபேசி மற்றும் செல்போன்கள் வழங்கப்படும்.

★ சேலம் மாநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும்.

★ 2 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் அனுமதிக்கப்படும். ஒரு வாகனம் கிழக்கு கடற்கரைச் சாலையிலும், மற்றொரு வாகனம் விழுப்புரம்–திருக்கோவிலூர்–எறையூர் சாலையிலும் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்படும்.

★ மதுரை மாநகரில் போக்குவரத்தை நெறிமுறைப்படுத்த, துணை ஆணையாளர் பதவி ஒன்று உருவாக்கப்படும்.

★ தெற்கு மண்டலத்தில் மாநகர காவல்துறையினர் திறம்பட செயல்படுவதற்கு ஏற்ற வகையில் பழைய வாகனங்களுக்குப் பதிலாக, 77 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

★ அனைத்து மண்டல காவல்துறை தலைவர்களுக்கும் செல்போன்கள் வழங்கப்படும்.

★ தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் கம்பியில்லா தகவல் தொடர்பு சாதன அமைப்பை நவீனப்படுத்த ரூ.55 இலட்சம் வழங்கப்படும்.

★ கன்னியாகுமரி, காஞ்சிபுரம் மற்றும் சிவகங்கையில் 3 போதைப் பொருள் உளவுத் தகவல் பிரிவு அமைக்கப்படும்.

★ போதைப் பொருள் தடுப்புப் பிரிவில் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள வாகனங்களுக்குப் பதிலாக 8 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

★ சொந்த அலுவலகக் கட்டடங்கள் இல்லாத அனைத்து மண்டல காவல்துறை தலைவர்களுக்கும் புதிய அலுவலகங்கள் கட்ட நிதி ஒதுக்கப்படும்.

★ மக்கள் தொகை மற்றும் வணிகப் பெருக்கம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, தற்போதைய திருப்பூர் காவல்துறை உட்கோட்டம், திருப்பூர் வடக்கு மற்றும் திருப்பூர் தெற்கு உட்கோட்டம் என இரண்டாகப் பிரிக்கப்படும். மேலும், கூடுதலாக 2 காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

★ மேலும், திருப்பூரில் உள்ள அனைத்து காவல் நிலையங்களும் 'ஏ' கிரேடு நிலைக்கு நிலை உயர்த்தப்படும்.

★ சென்னை மாநகர போக்குவரத்துப் பிரிவு தென் பகுதி இணை ஆணையர் (போக்குவரத்து) அலுவலகத்திற்கு ஒரு துணை ஆணையாளர், 3 உதவி ஆணையாளர்கள் மற்றும் 5 ஆய்வாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இதன்மூலம் தென்பகுதி போக்குவரத்துப் பிரிவு வலுப்படுத்தப்படும்.

★ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்கும் நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கும் அதிகாரம், துணை ஆணையாளருக்கு (போக்குவரத்து) வழங்கப்படும்.

★ வெகுமதி வழங்குவதற்காக ஒதுக்கப்படும் தொகை ரூ.60 இலட்சத்திலிருந்து ரூ.130 இலட்சமாக உயர்த்தப்படும்.

★ கார்கள் உட்பட பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள அனைத்து வாகனங்களுக்கும் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

★ கடலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்குப் புதிய வாகனம் வழங்கப்படும். மேலும் அவருடைய அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதிகளில் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள அனைத்து வாகனங்களுக்கும் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

★ தற்போது இயங்கி வரும் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு இரட்டிப்பாக்கப்படும்.

★ விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு சமூகநலக் கூடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

மேற்கண்டவைதான் 10.8.2004 அன்று நான் வெளியிட்டுள்ள புதிய அறிவிப்புகள். மேலும் பல நல்ஆலோசனைகளும், திட்டங்களும் உள்ளன. இவற்றுக்குச் சுற்றோட்ட முறையில் ஆணைகள் பெறப்பட வேண்டும். ஆகவே, அந்த வகையான அறிவிப்புகளை, வழக்கமான நடைமுறைகளை எல்லாம் நிறைவு செய்த பின்னர்தான் செய்ய முடியும். அதனால்தான் நான் இப்போது அந்த அறிவிப்புகளை செய்ய இயலாத நிலையில் உள்ளேன். தற்போது நான் அறிவித்துள்ள பல்வேறு புதிய அறிவிப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நாம் இங்கு நடத்திய பயனுள்ள விவாதங்கள், அவற்றுடன் நான் வகுத்தளித்த செயல்திட்டங்கள் ஆகியவை அனைத்திற்கும் நனி சிறப்புடனும், மிகுந்த அக்கறையுடனும், அதீத கவனத்துடனும் செயல் வடிவம் கொடுத்து அனைத்துத் தரப்பினரின் ஏகோபித்த பாராட்டுதல்களை பெற வேண்டும். உங்களுடைய பணியிலுள்ள நிறை குறைகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நீங்கள் கற்றுக் கொள்வதற்கும், உங்களை நீங்கள் மேம்படுத்திக் கொள்வதற்கும் காலம் தாழ்ந்துவிடவில்லை. பயமின்றி நீங்கள் செயல்படும்போதுதான் சட்டம் – ஒழுங்கு சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதை நீங்கள் உங்கள் மனதில் எப்போதும் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். எந்த நேரத்திலும் காவல்படை எவரையும் எதிர்கொள்ளும் வகையில் அனைத்து தகுதிகளுடனும் தயார் நிலையில் இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பதுதான் ஓர் அரசு சோதனையான கால கட்டங்களில் கூட, சட்டம் – ஒழுங்கைத் திறம்பட நடைமுறைப்படுத்தி அதன்மூலம் அரசுக்கு நற்பெயரை ஈட்டித் தர முடியும். திறமையில் புதியதொரு சிகரத்தை எட்ட வேண்டுமென்ற ஆர்வத்துடன் கூடிய உங்களுடைய அனைத்து முயற்சிகளிலும் நீங்கள் வெற்றி பெற வேண்டுமென நான் வாழ்த்துகிறேன்.

11.8.2004 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகள்

★ பெரும்பாலான சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வைகை அணைப் பகுதியில் உள்ள பூங்கா ரூ.5 கோடி செலவில் மேம்படுத்தப்படும். இந்தப் பூங்காவில் நீர் விளையாட்டுக்கள், இசை நீரூற்றுகள் மற்றும் அனைத்துப் பொழுது போக்கு அம்சங்களும் ஏற்படுத்தப்படும்.

★ தேனி மாவட்டத்தில் உள்ள வருசநாடு மற்றும் கே.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

★ தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள டி. சுப்புலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் பணியாளர்களுடன் புதிய கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

★ அனைத்து வட்ட அலுவலகங்களுக்கும் இணையதள தொடர்பு மற்றும் மின்-அஞ்சல் ஆகிய பயன்பாட்டிற்காகச் சிறப்பு தொலைபேசி வசதி செய்து தரப்படும்.

★ சென்னையில் புறநகர் பகுதிகளில் விரைவாக வளர்ந்து வரும் நகரமைப்பு சூழ்நிலையில் நில நிருவாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக திருவள்ளூர் மாவட்டத்திற்கு ஒரு தனி அலுவலர் பதவியிடம் உருவாக்க அனுமதி வழங்கப்படும்.

★ மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள சுயஉதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை பொதுமக்களின் பார்வைக்காக வைத்து விற்பனை செய்ய இயலும் வகையில் தலைமைச் செயலக வளாகத்தில் ஒரு பொது இடம் ஒதுக்கப்படும்.

★ மன்னார்குடி தாலுகா மருத்துவமனையில் பெருகி வரும் நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் 48 படுக்கை வசதி கொண்ட புதிய வளாகம் ஒன்று கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ திருவாரூர் மாவட்டத்தில், நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூடுதலாக அமைக்கப்படும்.

★ சம்பா சாகுபடிக்காக காவிரி டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளுக்குத் தரமான விதைகளை வழங்க வேளாண்மைத் துறை சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

★ என்னுடைய அறிவுறுத்தலின் பேரில் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளின் கடன் தேவைகள், கூட்டுறவு கடனுதவி நிறுவனம் மூலம் நிறைவு செய்யப்படும்.

★ பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்குரிய கால அளவான ஓராண்டு, மூன்றாண்டுகளாக நீட்டிக்கப்படும்.

★ திருத்தியமைக்கப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பைக் கருத்திற்கொண்டு, 2004–2005 நிதியாண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.20 கோடியிலிருந்து ரூ.35 கோடியாக உயர்த்தப்படும்.

★ திருச்சி மாவட்டத்தில் உள்ள குழுமணி மற்றும் வையம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள அறுவை சிகிச்சை கூடங்களுக்கு எக்ஸ்ரே கருவிகள் வழங்கப்படும்.

★ திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியம், வளநாடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சை கூடம் அமைக்கப்படும்.

★ திருச்சி மாவட்டம் முசிறி தாலுகாவில் ரெட்டியாப்பட்டி ஏரியிலிருந்து கரிகாலி ஏரிக்கு நீர் வழங்கும் கால்வாய்க்கு கரைகள் அமைக்கப்படும்.

★ திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மாணவியர் இல்லம் மற்றும் தேர்வு மையம் அமைக்கப்படும்.

★ திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கூடுதலாக ஒரு கட்டடம் கட்டப்படும்.

★ திருநெல்வேலியில் உள்ள ஹாக்கி விளையாட்டு அரங்கில் ரூ.30 இலட்சம் செலவில் பார்வையாளர் அமர்விடம் அமைக்கப்படும். மேலும், திருநெல்வேலியில் ஒரு சிறு விளையாட்டு அரங்கமும் அமைக்கப்படும்.

★ திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் ரூ.40 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

★ சுற்றுலா நோக்கில் குற்றாலத்தில் உள்ள அருவிகள் ரூ.82 இலட்சம் செலவில் மேலும் மேம்படுத்தப்படும்.

★ நபார்டு வங்கி நிதியுதவியுடன், தண்டராம் பட்டிலிருந்து ராயம்பட்டு செல்லும் சாலையில் ஒரு புதிய பாலம் கட்டப்படும். இதேபோல் திருவண்ணாமலை– தானிப்பாடி சாலையில் மற்றொரு பாலம் கட்டப்படும்.

★ திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஆரணி மற்றும் வந்தவாசியில் சாலைகளில் மக்கள் நெருக்கம் அதிகரித்துள்ளதால் அச்சாலைகளின் இருபுறமும் பாதசாரிகள் செல்வதற்கேற்ற வகையில் ரூ.60 இலட்சம் செலவில் நடைபாதைகள் மேம்படுத்தப்படும்.

★ குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கும் திட்டத்தின் கீழ் சிறப்புப் பள்ளிகளில் பயின்று வரும் அனைத்துக் குழந்தைகளுக்கும் சீருடைகள் வழங்கப்படும். இந்தத் திட்டத்தை செயல் படுத்துவதற்கான நிதியுதவியை மாநில அரசு வழங்கும்.

★ பணியில் இருக்கும்போது அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அடையாள அட்டையை அணிந்திருக்க வேண்டும்.

★ இளம் குற்றவாளிகளுக்காக வேலூர் மாவட்டத்தில் குழந்தைகள் சீர்திருத்த இல்லம் ஒன்று அமைக்கப்படும்.

★ குழந்தைகள் சீர்திருத்த ஆணையம் வேலூரில் அமைக்கப்படும்.

★ விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் ரூ.99 இலட்சம் செலவில் முதன்மை கல்வி அலுவலர் அலுவலகம் கட்டப்படும்.

★ விழுப்புரம் மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள அரசினர் பழங்குடியினர் உறைவிடப் பள்ளியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1,363லிருந்து 2,177ஆக அதிகரிக்கப்படும். இதன் மூலம் காத்திருப்போர் பட்டியலில் உள்ள அனைவரையும் பள்ளியில் சேர்த்துக்கொள்ள இயலும்.

★ கல்ராயன் மலையில் அமைந்துள்ள அரசினர் பழங்குடியின உறைவிடப் பள்ளியில் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், சமையல்காரர், காவலாளி ஆகியோருக்கு தங்கும் இல்லங்கள் கட்டித்தரப்படும்.

★ விழுப்புரம் சரக காவல்துறை தலைவருக்கு அலுவலகக் கட்டடம் கட்டித்தரப்படும்.

★ விழுப்புரம் பெருந்திட்ட வளாகத்தில் ரூ.90 இலட்சம் செலவில் விழுப்புரம் வட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தரப்படும்.

★ விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட 7 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தாக்குநர், மருத்துவ உதவிச் செவிலியர்கள், துப்புரவாளர் ஆகிய பதவிகளை ஏற்படுத்த அனுமதி வழங்கப்படும்.

★ விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பொதுப் பணித்துறை (கட்டடம்) செயல் பொறியாளருக்கும், மக்கள் தொடர்பு அலுவலருக்கும் குவாலிஸ் வாகனம் வழங்க அனுமதி வழங்கப்படும்.

★ விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 43 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நிரந்தர கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.14 கோடி நிதியுதவி வழங்கப்படும்.

★ விழுப்புரம் மாவட்டம், சோத்தாணைக்குப்பம், நடுக்குப்பம் மற்றும் கோட்டக்குப்பம் ஆகிய பகுதிகளில் கடலரிப்பைத் தடுப்பதற்காக ரூ.1.06 கோடி செலவில் தடுப்புச்சுவர் கட்டப்படும்.

★ சாத்தூர் தீயணைப்பு நிலையத்திற்கு ஒரு நோயாளர் ஊர்தி வழங்கப்படும்.

★ ராஜபாளையம் தீயணைப்பு நிலையத்திற்கு 9 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் டேங்கர் வழங்கப்படும்.

★ விருதுநகர் நகராட்சி குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் உள்ள குழாய்களைப் புதுப்பிக்கும் பணி ரூ.50 இலட்சம் செலவில் எடுத்துக்கொள்ளப்படும். அரசு ரூ.25 இலட்சத்தை மானியமாக விருதுநகர் நகராட்சிக்கு வழங்கும்.

★ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டியில், வட்டார விநியோக கிடங்கு அமைக்கும்.

★ விருதுநகர் மாவட்டத்தில் ஒரு செவிலியர் பயிற்சிப் பள்ளியை தொடங்க அனுமதி வழங்கப்படும்.

★ விருதுநகர் மாவட்டம், விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பொதுமக்களின் போக்குவரத்து தேவைக்கேற்ப கூடுதலாக 6 பேருந்து வழித்தடங்களுக்கு அனுமதிக்கப்படும்.

★ தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள 308 கடற்கரையோர மற்றும் கிராமப்புற குடியிருப்புகள் பயனடையும் வகையிலும், விருதுநகர் மற்றும் அருப்புக்கோட்டை நகராட்சிகளில் உள்ள ஊரக குடியிருப்புகளும் பயனடையும் வகையில், ரூ.68 கோடி செலவில் கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தப்படும்.

★ விருதுநகர் மாவட்ட நிர்வாகத்தால் தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள கருவூல பட்டிகள் அடங்கிய புத்தக தொகுப்பு அரசு வெளியீடாக வெளியிடப்படும்.

★ கோவை மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதி மக்களுக்கு சேவையாற்றும் வகையில் ஓர் நடமாடும் மருந்தகம் ஏற்படுத்தப்படும்.

★ கோவை மாவட்டத்தில் குழந்தைகள் நல மையங்கள் இல்லாத பகுதியில் 398 குழந்தை நல மையங்கள் தொடங்கப்படும்.

★ கடலூர் மாவட்டத்தில் உள்ள வடக்குத்து மற்றும் மருவாய் கிராமங்களுக்கு விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தப்படும்.

★ கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில், ஓர் திட்ட இல்லம் கட்டப்படும்.

★ அறுவை சிகிச்சை மற்றும் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் தொழுதூரில் ஒன்றும், ஸ்ரீமுஷ்ணத்தில் மற்றொன்றுமாக இரு ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும்.

★ குழந்தைகள் நல மையத்தில் 3 முதல் 5 வயது குழந்தைகளுக்கு கருவேப்பிலைப் பொடி மற்றும் முருங்கையிலைப்பொடிகள் வழங்குவது அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

★ கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்காக மாநாட்டு கூடத்துடன் கூடுதல் கட்டடம் கட்டப்படும்.

★ தருமபுரி மாவட்ட நுகர்பொருள் வழங்கல் கண்காணிப்புப் பிரிவுக்குப் புதிய வாகனம் வழங்கப்படும்.

★ தருமபுரி மாவட்டத்தில் மீனவர்களுக்கு 30 குடியிருப்புகள் கட்டித்தரப்படும்.

★ சிறப்புப் பணிகளுக்காக வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கும், வட்டாட்சியர்களுக்கும் ஒதுக்கீடு செய்வதற்காக ஒவ்வொரு மாவட்ட ஆட்சியருக்கும் சிறப்பு எரிபொருளாக ஆண்டுக்கு 1000 லிட்டர் எரிபொருள் வழங்கப்படும்.

★ காரியமங்கலம் மற்றும் தருமபுரி மருத்துவமனைகளில் எய்ட்ஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கு தேவையான நவீன கருவிகளும், மருந்துகளும் வழங்கப்படும்.

★ சத்தியமங்கலம் வட்ட அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டப்படும்.

★ ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த காளிங்கராயன் கால்வாயில் உள்ள 300 மதகுகள் இரண்டு கட்டமாக செப்பனிடப்படும்.

★ மாவட்ட ஆட்சியர்களுக்கான விருப்புரிமை நிதி ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்படும்.

★ மரம் வளர்க்கும் பழக்கத்தை பொதுமக்களிடையே ஊக்குவிக்கும் வகையில் இலவசமாக மரக் கன்றுகளை வழங்குவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் வனத்துறைக்கு ஆண்டொன்றுக்கு ரூ.50 ஆயிரம் வழங்கப்படும்.

★ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், காஞ்சிபுரம் மாவட்டம் பழைய சீவரம் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு மின் உற்பத்தி இயந்திரம் ஒன்றை வழங்கப்படும்.

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்த ரூ.1 கோடி செலவில் புதிதாக படகுகள் வாங்கப்படும்.

★ கன்னியாகுமரியில் ஆண்டு சுற்றுலா விழா நடத்தப்படும்.

★ கன்னியாகுமரியில் மீன் தொழில் பூங்கா அமைக்கப்படும்.

★ கன்னியாகுமரியில் புதிய சுற்றுலா மாளிகை கட்டப்படும்.

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் தடிக்காரக் கோணத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக அமைக்கப்படும்.

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முட்டம் மற்றும் ராஜாக்கமங்கலம்துறை ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறை ஆராய்ந்து ஆலோசனை அளிப்பதற்கும் ரூ.20 இலட்சம் அனுமதிக்கப்படும்.

★ அனைத்து மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் டிஜிட்டல் கேமரா வழங்கப்படும்.

★ அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும் செல்போன்கள் வழங்கப்படும்.

★ கரூர் மாவட்ட தலைமையிட மருத்துவமனை, கூடுதல் கட்டடங்கள் மற்றும் பிற வசதிகளுடன் விரிவாக்கப்படும்.

★ கிருஷ்ணகிரி மாவட்ட தலைமையிட மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் வசதி செய்து தரப்படும்.

★ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிருஷ்ணகிரியில் ரூ.4 கோடி செலவில் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கும்.

★ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பன்முனை பயன்பாட்டுக்கு உகந்த உள்விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும்.

★ தளியில் தோட்டக்கலை பயிற்சி மையம் அமைக்கப்படும்.

★ தளியில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டப்படும்.

★ கீழவாரப்பள்ளி குடிநீர் வழங்கல் திட்டத்தின் நீர் வழங்கு கால்வாய்களை சீரமைக்க ரூ.1.75 கோடி வழங்கப்படும்.

★ தளிக்கு அருகே அரசு பழங்குடியினர் உறைவிடப் பள்ளி அமைக்கப்படும்.

★ அனைத்து மாவட்டங்களிலும் குறைதீர் நாள் கூட்டங்களை சிறப்பாக நடத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

★ மதுரை ராஜாஜி அரசு பொது மருத்துவமனைக்கு கூடுதலாக மருத்துவ சாதனங்கள் வழங்கப்படும்.

★ மதுரையில் உள்ள சுற்றுலா மாளிகையில் புதிய அறைகள் கட்டப்படும்.

★ மதுரை மாவட்டத்திற்கு வரும் அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக 2 கார்கள் மற்றும் ஒரு ஜீப் வழங்கப்படும்.

★ கோடியக்கரை சுற்றுலாத் தலத்தில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

★ பொறையார் மற்றும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு ரூ.13 இலட்சம் செலவில் நவீன கருவிகள் வழங்கப்படும்.

★ சிவகங்கை மாவட்டம் இளையாங்குடி தாலுகா வட்டாட்சியருக்கு குடியிருப்பு வசதி செய்து தரப்படும்.

★ சிவகங்கை மாவட்டத்தில் பழுதடைந்த 5 வாகனங்களுக்கு பதிலாக புதிய வாகனங்கள் வாங்கித்தரப்படும்.

★ அனைத்து வட்ட அலுவலகங்களுக்கும் நிகரி இயந்திரம் வழங்கப்படும்.

★ தொலைநகல் மற்றும் புகைப்பட நகல் கருவிகள் அனைத்து வருவாய் கோட்ட அலுவலர்களுக்கும் வழங்கப்படும்.

★ சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

★ ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏர்வாடி ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும்.

★ பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள தா.பழூர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக நிலை உயர்த்தப்படும்.

★ புதுக்கோட்டை, காவிரி–மேட்டூர் திட்டப் பகுதியில் மின்சார விநியோகம் தற்போது உள்ள 16 மணி நேரத்தில் இருந்து 20 மணி நேரமாக உயர்த்தப்படும்.

★ நீலகிரி மாவட்டத்திற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு ஒரு தனி திட்ட அலுவலர் பதவி ஏற்படுத்த அனுமதிக்கப்படும்.

★ நீலகிரி மாவட்ட ஆட்சியருக்கு புதிய வாகனம் வழங்க அனுமதி வழங்கப்படும்.

11–8–2004 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல்வேறு புதிய அறிவிப்புகளை அறிவித்து ஆற்றிய நிறைவு உரை

"தற்போது நாம் இம்மாநாட்டின் இறுதிக் கட்டத்தில் இருக்கின்றோம். கடந்த மூன்று நாட்களாக, சிறந்த நிருவாகத்தை வழங்குவதற்குத் தேவையான பல்வேறு வழிமுறைகள் குறித்தும், புதிய முயற்சிகள் மற்றும் அணுகுமுறைகளை மேற்கொள்வதை வலியுறுத்தியும், பொதுமக்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்வது குறித்தும் விரிவாக விவாதித்தோம். நமக்கு அளிக்கப்பட்ட வாக்கானது, மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய திறமையான, நியாயமான, பரிவுணர்வுடன் கூடிய நல்ல நிருவாகத்தைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக அளிக்கப்பட்டதாகும். இந்த அரசு எடுக்கும் முயற்சிகளை மாவட்ட ஆட்சியர்கள் முன்னின்று செயற்படுத்த வேண்டும்.

சாந்தமான, அமைதியான சூழ்நிலையில்தான் நல்லாட்சி வழங்க இயலும். இதற்காக நான் மிகச் சாதாரண அணுகுமுறைகளை ஒருபோதும் அனுமதித்ததில்லையென்றாலும் சட்டம்–ஒழுங்கிற்கு உத்தரவாதம் இல்லாமல் முன்னேற்றத் திட்டங்களை மேற்கொள்ளக்கூட இயலாது என்பதை மறுப்பதற்கில்லை. நேற்று நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில், மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்கான ஒரு புதிய செயல் திட்டத்தை நான் அறிவித்துள்ளேன். இதனை நடைமுறைப்படுத்துவதில் மாவட்ட ஆட்சியர்கள் காவல்துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்று நான் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். அதாவது, முன்கூட்டியே தகவல்களைச் சேகரிக்கும் உளவுப் பணி, சமூக விரோத நிகழ்ச்சிகளை எதிர்பார்த்துத் தடுப்பது, பிரச்சினைகளுக்கு சாமர்த்தியமான மற்றும் சரியான முடிவுகள் எடுக்க மற்றும் நீதியை நிலைநாட்ட, மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். அக்கறையின்மை காரணமாக ஒரு சில

சிறிய சம்பவங்கள் சில நேரங்களில் மிகப்பெரிய கிளர்ச்சியாகவோ போராட்டங்களாகவோ உருவெடுத்து விடுகின்றன. இதனை முன்கூட்டியே அறிந்து தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு மாவட்ட ஆட்சியர்களுக்கு உள்ளது. ஆரம்ப நிலையில் உள்ள கிளர்ச்சி அல்லது போராட்டத்தை முளையிலேயே கிள்ளி எறியும் வகையில் மாவட்ட ஆட்சியர்கள் முன்கூட்டியே முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தீவிரவாதிகள், அடிப்படைவாதிகள் மற்றும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்களுடன் இணைந்து விழிப்புடன் கண்காணித்து வரவேண்டும்.

அடுத்ததாக வளர்ச்சித் திட்டங்களுக்கு வருகிறேன். நாம் எதனை சாதிக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்? உண்மையிலேயே மக்களுக்கு தரமான வாழ்க்கைத் தரத்தை உருவாக்கித் தருவதற்கு, அவர்களைத் தன்னிறைவு பெற்றவர்களாக மாற்றுவதற்குத் தேவையான வழிமுறைகளை நாம் உருவாக்கித் தரவேண்டும். இதன்மூலம்தான் உண்மையான பொருளாதார வளர்ச்சியை உருவாக்க இயலும். தொடர்ந்து ஏற்பட்ட வறட்சியாலும் மற்றும் மாநிலத்தின் நிதிநிலைமை சீர்கேட்டாலும் ஏற்பட்ட பாதிப்பைக் களைந்து நடப்பாண்டில் 8 சதவிகிதம் வளர்ச்சியை எட்ட வேண்டும் என்று நாம் இலக்கு நிர்ணயித்து இருக்கிறோம். விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கு உதவும் புதிய ஏவுதளத்தை உருவாக்க நாம் பெருமுயற்சி எடுக்க வேண்டியதாயிற்று. இந்த ஆண்டு வேளாண்மை உற்பத்தியில் சிறப்பான பலன் கிடைக்கும் என்றும் அதன் பயனாக தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் விரைவான உயர் வளர்ச்சியைப் பெற்று ஒளிரும் என்றும் நான் நம்புகிறேன்.

நாம் தற்போது தென்மேற்கு பருவமழை காலத்தின் மத்தியில் உள்ளோம். ஒருசில மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் மழையளவு மனநிறைவை அளிப்பதாக உள்ளது. தொடர்ந்து நிலைமையைக் கண்காணிக்க வேண்டியுள்ளது. இந்த ஆண்டு சற்று நம்பிக்கை உருவாகும் வகையில், சூழ்நிலைகள் தென்படுகின்றன. நடப்பு பருவ காலத்தில் விவசாயிகள் நல்ல விளைச்சல் பெறும் வகையில் வேளாண் துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதனை உறுதி செய்யும் வகையில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கான குறைதீர்ப்பு நாள் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தி அவர்கள் எழுப்பும் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு காண வேண்டும் என்று நான் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

“அனைத்துத் தரப்பு வளர்ச்சி” என்பதுதான் நம்முடைய பிரதான வளர்ச்சி இலக்காகும். ஏழைகளின் முன்னேற்றத்திற்கு இந்த வளர்ச்சி திட்டத்தில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். இதன் காரணமாகத்தான், ஊரக வளர்ச்சி, சமூகநலம் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை நாம் செயல்படுத்தி வருகின்றோம். புத்தாயிரம் ஆண்டில் வளர்ச்சி இலக்குகளை விரைவில் எட்டுவதே நமது அணுகுமுறையாக இருக்க வேண்டும். இதில் பெண்களை அதிக அளவில் கல்வி அறிவு பெற்றவர்களாக உருவாக்குவது, பள்ளிகளில் 100 சதவீதம் மாணவர் சேர்க்கை, சிசு இறப்பு விகிதத்தைக் குறைப்பது, வறுமை ஒழிப்பு, எளிதில் குடிநீர் கிடைக்கச் செய்வது, ஊட்டச்சத்தில்லாத குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது ஆகியவை அடங்கும். இந்த இலக்குகளை எட்டுவதில், தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விஞ்சி வேகமாக முன்னேறி வருகிறது. நாம் இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டும். இந்த இலக்குகளை எட்டி, உண்மையான பலன்களை நாம் அடைவதற்குத் துறை சார்ந்த கட்டுப்பாடுகள் தடைகளாக இருக்கக்கூடாது. அனைத்துத் திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்று சேரும் வகையில் அவற்றை ஒருங்கிணைக்கின்ற பணியினை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்ள வேண்டும். பல்வேறு புதிய வழிமுறைகளைக் கையாண்டு, பொதுமக்களை நலத் திட்டங்களின் செயலாக்கத்தில் பங்கேற்கச் செய்வதன் மூலம் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்த முடியும். கற்பனை திறத்துடன் கூடிய முயற்சிகளுக்கு உந்து விசையாக இருந்து செயல்படும்

மாவட்ட ஆட்சியர்களின் ஆற்றல் திறத்தின் மீது எனக்கு பெரிதும் நம்பிக்கை உள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் தங்களிடம் உள்ள வள ஆதாரங்களைக் கொண்டு சிறப்பான பலன்களை உருவாக்கும் வகையில் தங்களுடைய தலைமைப் பண்பை வெளிப்படுத்த வேண்டும். பல்வேறு துறைகள் இணைந்து எடுக்கும் முயற்சிகளுக்கு மாவட்ட ஆட்சியர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய நிலையில் உள்ளனர்.

என்னுடைய தொடக்க உரையில் நான் நல்ல ஆட்சி நடைமுறைகள் மற்றும் குறைதீர்ப்பு நடவடிக்கைகளின் அவசியம் குறித்து விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். ஒரு அரசின் செயல்பாடுகள், வெற்றி அடைவது என்பது மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு அதனை நவீன முறையில் ஆளுமையுடன் செயல்படுத்துவதில் தான் உள்ளது. பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் சரியான நேரத்தில் சிறப்பான வகையில் அதே நேரத்தில் புன்முறுவலுடன் ஆற்றப்படுவதற்கு ஏதுவான அனைத்து சிறப்பு முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று நான் உங்களை கேட்டுக் கொள்கின்றேன். அரசு அலுவலகங்களை நாடி தங்கள் குறைகளைத் தெரிவித்து தீர்வுபெற வரும் எவரும் ஏமாற்றத்துடன் திரும்பக் கூடாது என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும்.

நடப்பாண்டில் நல்ல மழை பெய்யும் வாய்ப்புள்ளதால், திட்டங்கள், குறிப்பாக விரிவான தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் சிறப்பு முயற்சியாகத் தாவர எண்ணெய் செடிகளை வளர்ப்பது ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். மேலும் அவற்றைச் சிறப்பான வகையில் செயல்படுத்த வேண்டும். இதன்மூலம் சிறந்த பலன் கிடைக்கும். இந்த திட்டங்களின் நோக்கத்தை எய்த மாவட்ட ஆட்சியர்கள் சிறப்பு முயற்சிகள் எடுக்க வேண்டும். இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் புதிய முயற்சிகளையும், சிறப்பான செயல்பாடுகளையும் உங்களிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

கடந்த ஆண்டு என்னால் தொடங்கப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டம் மிகப்பெரும் வெற்றியடைந்ததுடன் பொதுமக்களும் இத்திட்டத்திற்கு மாபெரும் வரவேற்பு அளித்துள்ளார்கள் என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நீர்வரத்துப் பகுதி ஒவ்வொன்றிலும் செயல்படுத்தப்படும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது. மழைநீர் சேகரிப்பு மற்றும் மண்வள மேம்பாட்டு திட்ட அடிப்படையில் மாநிலம் முழுவதும் நீர்வரத்துத் திட்டத்தை தொடங்க முடிவு செய்துள்ளேன். இத்திட்டத்தை உடனடியாக செயல்படுத்த இயலும் வகையில், திட்ட அறிக்கையை விரைவில் இறுதி செய்ய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை செயலாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில்கூட நான் திடக்கழிவுகள் அகற்றுவது குறித்தும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்தும் சிறப்பாக வலியுறுத்தினேன். தூய்மையான கிராமங்கள் இயக்கம் சிறப்பான அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளது என்று அறிகிறேன். இத்திட்டத்தில் அனைத்து கிராமங்களையும் நட்புறவுடன் பங்கேற்க செய்வதன் மூலம் மாவட்ட ஆட்சியர்கள் இதனை பிரபலமாக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கிராமங்களில் கிடைக்கும் கழிவுப் பொருட்களை மரபுசாரா எரிசக்திக்கான மூலப்பொருட்களாகப் பயன்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும். சுற்றுச்சூழலைக் கெடுப்பதுடன் உடல் நலத்திற்கும் மிகப்பெரிய அளவில் கேடு விளைவிக்கும் பயனற்ற பிளாஸ்டிக் பைகள் அகற்றப்படுவதைப் பொதுமக்கள் பெரிதும் வரவேற்பர். இந்த பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களைச் சாலை அமைப்பதற்கான மூலப் பொருட்களாகப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

சிசுக்கொலையைத் தடுப்பதற்காகக் கருவிலேயே குழந்தைகளை ஆணா பெண்ணா என்று கண்டறிதலைத் தடை செய்யும் சட்டத்தை அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கடுமையாக நடைமுறைப்படுத்த

வேண்டும் என்று நான் ஏற்கெனவே அறிவுறுத்தியுள்ளேன். இந்தச் சட்டம் ஒரு மத்தியச் சட்டமாகும். இந்தத் திருத்தச் சட்டத்தின்படி சிசுக்கொலை செய்வது, அதாவது, பாலினத்தைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் பரிசோதனை முறைகளைக் கையாளுதல் ஆகியவை குற்றமாகும். இந்தச் சட்டத்தின் பிரிவு 4(1)ன்படி ஆணா பெண்ணா என்பதை கண்டறிய பரிசோதனை முறைகளைப் பயன்படுத்துவது குற்றமாகும். இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்க இச்சட்டம் வகை செய்கிறது. இது பிடியாணை வேண்டாக் குற்றமாகும். மாவட்ட அளவில் சுகாதாரத் துறை இணை இயக்குநர் இந்த சட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு வகிக்கிறார். இச்சட்டத்தின் விதித்துறைகள் செயற்படுத்தப்படுவதைக் கண்காணிக்க மாவட்டம் மற்றும் வட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்கள் உள்ளன. பெண் சிசுக்கொலை செய்யும் காட்டுமிராண்டித்தனமான செயல்களை ஒடுக்க மாவட்ட ஆட்சியர்கள் இந்த சட்டத்தின் கீழ் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவை தவிர, பல்வேறு கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். எவற்றையெல்லாம் உடனடியாக முடிவு செய்ய. முடியுமோ அவற்றையெல்லாம் உடனடியாக முடிவு செய்து உடனுக்குடன் அறிவிப்புகளாக வெளியிட்டுள்ளேன். மற்ற உங்களுடைய வேண்டுகோள்கள் எல்லாம் நிராகரிக்கப்பட்டு விட்டன என்று இதற்குப் பொருளல்ல; உங்களுடைய அனைத்துக் கோரிக்கைகளுமே உங்கள் மாவட்டங்களின் வளர்ச்சிக்கானவை. அதைத்தான் இவ்வரசும் கருத்தில் கொண்டுள்ளது. அதையே இவ்வரசும் விரும்புகிறது. ஆகவே, உங்களுடைய கோரிக்கைகள் அனைத்தும் சாதகமாக பரிசீலிக்கப்படும். உங்களுடையக் கோரிக்கைகளைச் செயல்படுத்த இயன்ற அனைத்தும், நடப்பாண்டிலேயே மேற்கொள்ளப்படும். இது சாத்தியமில்லையாகில் அவை வரும் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

இம்மாநாட்டில் கலந்துகொண்டுள்ள பல்வேறு மாவட்ட ஆட்சியர்கள் முதன்முறையாகப் பங்கேற்றுள்ளனர். அவர்கள் தங்கள் மாவட்டங்களில் நிர்வாக நடைமுறைகளை விரைவில் முழுவதுமாக புரிந்து கொள்ள வேண்டும். பல மாவட்ட ஆட்சியர்கள் பிற மாவட்டங்களுக்குச் சென்றுள்ளனர். ஒரு சில மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து பழைய மாவட்டங்களிலேயே பணியாற்றி வருகின்றனர். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட சில நல்ல வாய்ப்புகள் இருக்கும். புதியவர்கள் புதுமையான அணுகுமுறைகளைக் கையாள்வர். மற்ற மாவட்டங்களுக்குச் சென்றவர்கள் தங்களுடைய அனுபவங்களையும் தங்களோடு எடுத்து வருவர். ஏற்கெனவே பணியாற்றி வந்த மாவட்டங்களில் தொடர்ந்து பணியாற்றும் மாவட்ட ஆட்சியர்கள் தங்களுடைய இலக்குகளை எய்துவதற்கு தொடர்ந்து எழுச்சியுடன் செயல்பட வேண்டும். நான் நிர்ணயித்துள்ள இலக்குகளை எட்டும் வகையில் அவற்றில் இருந்து உண்மையான பலனை பெறும் வகையில் நீங்கள் அனைவரும் முழு உத்வேகத்துடன் பணியாற்ற வேண்டும் என்று உங்களை கேட்டுக் கொள்கிறேன். இந்த வாரத்தில் , ஏதென்ஸ் நகரில் தொடங்கவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் முழக்கங்களான Citius, Altius, Fortius ஆகியவற்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். "வேகம், உயர்வு, வலிமை" என்பது இதன் பொருளாகும். அதாவது, ஒரு 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்கும் ஒரு வீரருக்குரிய உணர்வு மற்றும் ஊக்கத்துடனும், தொலைதூர ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்கும் வீரருக்கு இருக்கும் தைரியம் மற்றும் மன வலிமையுடனும் நீங்கள் செயல்பட வேண்டும். பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தி அதற்காக இன்று பரிசும் பாராட்டும் பெற்ற மாவட்ட ஆட்சியர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். விருதுபெற்ற புதிய மாவட்ட ஆட்சியர்கள் தாங்கள் பெற்ற பதக்கங்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''. ★

11-8-2004 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டின் நிறைவு நாளன்று அரசு உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் விருதுகள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்புப் பிரிவில் பெறப்பட்ட மனுக்களின் மீது உரிய தீர்வு கண்ட செயல்திறனுக்காக 2003-2004 ஆம் ஆண்டுக்கான விருது

திரு. **வி. பாண்டியன்**, இ.ஆ.ப., ... முதலிடம்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

திரு. **ஆர். வெங்கடேசன்**, இ.ஆ.ப., ... இரண்டாமிடம்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.

திரு. **ககன்தீப் சிங் பேடி**, இ.ஆ.ப., ... மூன்றாமிடம்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர்.

திரு. **எஸ். கோபாலகிருஷ்ணன்**, இ.ஆ.ப., ... நான்காமிடம்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

திரு. **எஸ். முருகையா**, இ.ஆ.ப., ... ஐந்தாமிடம்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திண்டுக்கல்

2003 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலனுக்கு சிறப்பான சேவைபுரிந்தமைக்கான விருது

1. திரு. **கா. பாலசந்திரன்**, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம்
2. டாக்டர் **ஜெ. ராதாகிருஷ்ணன்**, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர்
3. திரு. **அதுல் ஆனந்த்**, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி

2003-2004 ஆம் ஆண்டு சிறுசேமிப்பில் இலக்கை அடைந்ததற்கான விருது

1. திரு. **ஆனந்த்ராவ் விஷ்ணுபட்டேல்**, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், சிவகங்கை
2. திரு. **அ. முகமது அஸ்லாம்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர்
3. திரு. **ஆர். வெங்கடேசன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம்
4. திரு. **டி. ராஜேந்திரன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை
5. திரு. **எம்.பி. விஜயகுமார்**,இ.ஆ.ப., ஆணையர், சென்னை மாநகராட்சி
6. திரு. **அதுல் ஆனந்த்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி
7. திரு. **ராஜேஷ் லக்கானி**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி
8. திரு. **எஸ். கோசலராமன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர்
9. டாக்டர் **டி. கார்த்திகேயன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு
10. திரு. **குமார் ஜெயந்த்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர்
11. திரு. **ஏ. சுகுமாரன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம்
12. திரு. **கே.எஸ். முத்துசாமி**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி
13. திரு. **எஸ். கோபாலகிருஷ்ணன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர்
14. திரு. **சுனில்பாலிவால்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி
15. திரு. **வி. சந்திரசேகரன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி
16. திரு. **வி.எம். சேவியர் கிறிஸோ நாயகம்**, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல்
17. திரு. **வி. பாண்டியன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி
18. திரு. **கே. செல்லமுத்து**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம்

2003-2004 ஆம் ஆண்டு சிறுசேமிப்பில் இலக்கை அடைவதில் முதல் நான்கு இடங்களைப் பெற்றவர்களுக்கு சிறப்புக் கேடயங்கள்

1. டாக்டர் **ஜெ. ராதாகிருஷ்ணன்**,இ.ஆ.ப., முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் (மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர்)
2. திரு. **அ. முகமது அஸ்லாம்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர்
3. திரு. **ஆர்.வெங்கடேசன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம்
4. திரு. **எம்.பி. விஜயகுமார்**,இ.ஆ.ப., ஆணையர், சென்னை மாநகராட்சி

2002-2003 ஆம் ஆண்டு சிறுசேமிப்பில் இலக்கை விஞ்சியதற்காக சிறப்புக் கேடயம்

திரு. **டி.கே. ராமச்சந்திரன்**, இ.ஆ.ப.,
முன்னாள் இயக்குநர், சிறுசேமிப்புத்துறை

2003-2004 ஆம் ஆண்டு சிறுசேமிப்பில் இலக்கை விஞ்சியதற்காக சிறப்பு கேடயம்

திரு. **த. மூர்த்தி**,இ.அ.ப.,
இயக்குநர், சிறுசேமிப்புத்துறை

2003-2004 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான பசுமை விருதுகள்

1. திரு. **ககன்தீப் சிங் பேடி**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர்.
2. திரு. **ராஜேஷ் லக்கானி**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி

3. டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர், சிவகங்கை.

குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பிற்கான விருது

1. திரு. எஸ். கோசலராமன்,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர்



திரு. த. மூர்த்தி, இ.ஆ.ப,
இயக்குநர், சிறுசேமிப்புத்துறை



திரு. ஆனந்த்ராவ் விஷ்ணுபட்டேல், இ.ஆ.ப,
மாவட்ட ஆட்சித்தலைவர், சிவகங்கை

திரு. கே.எஸ். முத்துசாமி, இ.ஆ.ப,
மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி



திரு. எஸ். முருகையா, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல்



திரு. வி. பாண்டியன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி



திரு. ஆர். வெங்கடேசன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம்

திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர்

திரு. எஸ். கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர்



திரு. கா. பாலசந்திரன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம்

திரு. அ. முகமது அஸ்லாம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர்

திரு. அதுல்ஆனந்த், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி



திரு. டி. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை

திரு. டி. கார்த்திகேயன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு

திரு. எம்.பி. விஜயகுமார், இ.ஆ.ப.,
ஆணையாளர், சென்னை மாநகராட்சி

டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர்



திரு. சுனில்பாலிவால், இ.ஆ.ப,
மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி

திரு. எஸ். கோசலராமன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர்

திரு. கே. செல்லமுத்து, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம்



திரு. குமார்ஜெயந்த், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர்



திரு. வி. சந்திரசேகரன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி

திரு. ஏ. சுகுமாரன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம்

திரு. வி. எம். சேவியர் கிறிஸோ நாயகம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல்



திரு. டி.கே. இராமச்சந்திரன், இ.ஆ.ப.,
முன்னாள் இயக்குநர், சிறுசேமிப்புத்துறை

திரு. ராஜேஸ் லக்கானி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி

தேனி மாவட்டத்தில்
கோதுமை சாகுபடி

கோதுமை, மலைப்பிரதேசங்களிலும், மலைசார்ந்த சமவெளிப் பகுதிகளிலும் சாகுபடி செய்யப்படும் பயிராகும். வடமாநிலங்களிலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும் இறக்குமதியான கோதுமை தற்போது, தேனி மாவட்டத்தில் தமிழக அரசின் வேளாண்மைத் துறை உதவியுடன் முதன்முதலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உதகமண்டலம், கோவை, உடுமலைப்பேட்டை உள்பட பல மாவட்டங்களில் குளிர்ச்சியான பகுதிகளிலும், தட்பவெப்பம் குறைவாக உள்ள இடங்களிலும் அதிக அளவில் கோதுமை சாகுபடி செய்யப்படுகிறது. மேலும், கிராமம் முதல் நகரம் வரையில் வாழும் மக்களின் உணவு, பழக்க வழக்கங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு கோதுமை போன்ற தானியங்களின் தேவை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் கோதுமை சாகுபடியினை செய்ய ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர்.

கோதுமை சாகுபடிக்கு தேனி மாவட்டம் முதல் காஞ்சிபுரம் வரையிலான மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகள் உகந்தவை என்றாலும், தேனி மாவட்டத்தில் தட்பவெப்பநிலையும், வேர் அழுகல் மற்றும் துருவநோய் போன்றவற்றையும் தாங்கி வளரக்கூடிய கோதுமை ரகங்கள் அறிமுகம் இல்லாததாலும், விவசாயிகள் கோதுமை சாகுபடி செய்யமுடியுமா என்று முன்பு தயங்கினர்.

தேனி மாவட்ட விவசாயிகளின் தயக்கத்தை போக்கும் வகையில், தேனி மாவட்ட வேளாண்மைத் துறையினர் இச்சாகுபடிக்கு உரிய வழிமுறைகளைக் கண்டறிந்து, கோதுமை சாகுபடிக்கு ஏற்ற தட்பவெப்பம் மற்றும் இயற்கை சூழல் இம்மாவட்டத்தில் உள்ளது என்றும், மேலும் வறட்சியால் நீர் ஆதாரங்கள் குறையும் நேரத்தில் நெல் சாகுபடிக்கு மாற்றாக கோதுமை சாகுபடி செய்யலாம் என வேளாண்மைத் துறையினர் அறிவுறுத்தினர்.

இதையடுத்து ஊட்டி–வெலிங்டனில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் புதிதாக கண்டறியப்பட்ட எச்.டபிள்யூ.3094, எச்.டபிள்யூ.3070 என்ற கோதுமை ரகங்கள் சோதனை முறையில் தேனி மாவட்டத்தில் பயிர் செய்யப்பட்டது.

அதன் விளைவாக கோதுமைப் பயிர் 85 முதல் 90 நாட்களில் நல்ல விளைச்சலைத் தருகின்றது. ஒரு ஏக்கருக்கு 40 கிலோ விதையைப் பயன்படுத்த வேண்டும். மொத்தம் 4 அல்லது 5 முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. நெல் சாகுபடி செய்ய 1,500 மி.மீ. தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால், கோதுமை சாகுபடிக்கு 300 மி.மீ. தண்ணீர் போதுமானது. கோதுமை சாகுபடியில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்கள் கிடையாது. ஒரு எக்டேருக்கு சுமார் 5 டன்வரை மகசூல் கிடைக்கிறது. ஒரு எக்டரில் நெல் சாகுபடி செய்தால் 6 டன் மகசூல் கிடைக்கிறது. நெல் சாகுபடிக்கு அதிகளவில் செலவும் பிடிக்கிறது. கோதுமை சாகுபடியில் குறைந்த செலவில் அதிகளவில் வருமானம் கிடைக்கிறது.

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் மாவட்ட வேளாண்மைத் துறையினரின் ஆலோசனைப்படி கோதுமை சாகுபடியினை முன்வந்து செய்கிறார்கள். அத்துடன் விவசாயிகள் கோதுமை சாகுபடி முறையினை நேரில் சென்று பார்வையிடுவதற்கு ஏதுவாக கோட்டூர், டி.மேட்டுப்பட்டி, கடபுதுப்பட்டி ஆகிய மூன்று இடங்களில் சிறப்பு அனுசரணை ஆராய்ச்சித் திடலும் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் தேனி மாவட்டத்தில் முதன்முதலாக கோதுமை சாகுபடி குறைந்த செலவில் சாகுபடி செய்யப்பட்டு அதிக வருமானம் ஈட்டும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் இப்பகுதியிலுள்ள விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கோதுமை சாகுபடி செய்வதற்கு ஆர்வமூட்டும் வேளாண்மைத் துறையினருக்கும், தமிழக அரசுக்கும் தங்களின் உளமார்ந்த பாராட்டுகளை தெரிவித்து மகிழ்கின்றனர்.

– ச. செல்வராஜ்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி.

• • •

ஈரோடு மாவட்ட

கிராமப் பொருளாதார முன்னேற்றத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பங்கு

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது கிராமப் பொருளாதாரம் ஆகும். கிராமப் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் கிராமத்தில் உள்ள பெண்கள் சுயமாகத் தொழில் செய்திட வேண்டும். அதற்கு வழிவகை செய்யும் வகையிலும், சுகாதாரம், ஊட்டச்சத்து, வாழ்க்கைக்கல்வி, புதிய வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் போன்ற அம்சங்களில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ளவும் பெண்களுக்கு தலைமைப் பண்பினை வளர்த்துக் கொள்ளவும் ஏற்படுத்தப்பட்டதுதான் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஆகும்.



ஈரோடு மாவட்டத்தில் 9 அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் உதவியால் இதுவரை 7,950 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மொத்தம் 1,10,000 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியின மகளிர் சுமார் 53,000 பேர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களின் மொத்த சேமிப்பு ரூ.13.51 கோடி ஆகும். மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் இம்மாவட்டத்தில் 44 நியாய விலைக்கடைகள் தொடங்கப் பெற்று நடைபெற்று வருகின்றது. மேலும் பொருளாதார முன்னேற்றத்திற்காக 10 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கல்குவாரி குத்தகைக்கு வழங்கப் பட்டுள்ளன. வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் மகள் ஆகிய புதுமணத் தம்பதிகளுக்கு இலவசமாக 150 எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 7 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் பொருளாதார கடனுதவிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி குழுக்களுக்குப் பயிற்சி அளித்து தரிசு நிலங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் மாவட்ட நிருவாகம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதோடு வேளாண் திறன் மேம்பாட்டுப் பயிற்சி விவசாயத்துறை மூலம் 1,000 மகளிருக்கு அளிக்கப்பட்டு வருகிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வித்தியாசமான முறையில் தொழில்கள் செய்திட வேண்டும் என்பதற்காக அந்தியூர், அம்மாபேட்டை வட்டாரங்களில் உள்ள 51 மகளிருக்கு பனை ஓலைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள 7,950 மகளிர் சுயஉதவிக்குழுக்களில் 6,048 குழுக்களுக்கு ரூ.1,871 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டு உள்ளது. இதில் 2,566 மகளிர் குழுக்களுக்கு ரூ.642 இலட்சம் சுழல் நிதியாகவும், 522 குழுக்களுக்கு ரூ.563 இலட்சம் பொருளாதாரக் கடன் உதவியாகவும், 253 குழுக்களுக்கு தாட்கோ மூலம் ரூ.63.25 இலட்சம் சுழல் நிதியாகவும், தாட்கோ மூலம் ரூ.62.66 இலட்சம் 107 குழுக்களுக்கு பொருளாதாரக் கடனுதவியாகவும், 2,495 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.518.86 இலட்சம் நேரடி கடனுதவியாகவும் வழங்கப்பட்டு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தொழில் செய்வதற்குத் தேவையான உதவிகள் செய்யப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தைப் பொருத்தவரையில் பாய்முடைதல், கீற்றுபின்னுதல், துணிகளுக்கு சாயம் இடுதல், ஊறுகாய் தயாரித்தல், துணி தைத்தல், கால்மிதியடி தயாரித்தல், இலவம் பஞ்சு மெத்தை தயாரித்தல், பொம்மைகள் தயாரித்தல் போன்ற தொழில்கள் செய்து வந்தனர். ஆனால் தற்போது புதுமாதிரியாக நம்பியூர் வட்டாரம், சுண்டக்காம் பாளையம் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட செல்வ

வினாயகர் மகளிர் சுயஉதவிக் குழுவில் 13 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுக்களுக்கு வங்கி மூலம் ரூ.2 இலட்சம் கடன் வழங்கப்பட்டு இவர்கள் எலாஸ்டிக் டேப் தயாரித்து அதை விற்பனை செய்து வருகின்றனர். இவர்கள் தயாரிக்கும் எலாஸ்டிக் டேப்பிற்கு சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது. இக்குழுவினர் நாள் ஒன்றிற்கு 25 கிலோ எலாஸ்டிக் டேப் உற்பத்தி செய்கின்றனர். இதன்மூலம் இவர்களுக்கு நாள் ஒன்றிற்கு ஒரு மகளிர்க்கு கூலியாக ரூ.40 கிடைக்கிறது. ஒரு கிலோவுக்கு ரூ.10 வீதம் 25 கிலோவிற்கு ரூ.250 இலாபம் கிடைக்கிறது. அதாவது இக்குழுவினர் நாள் ஒன்றிற்கு ரூ.770 வருவாய் கிடைக்கும் வகையில் தங்கள் உற்பத்தியை அதிகரித்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தைப் பொருத்தவரையில் கிராமப்புறங்களில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தேவையான வங்கிக் கடன்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டு அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வகையில் மாவட்ட நிருவாகத்தின் மூலம் முனைப்பான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றால் அது மிகையாகாது.

– எம்.ஆர்.லிங்கம்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு.

அயல்நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற சிறப்புச் சலுகை

அயல்நாடுகளில் வேலை தேடும் இந்தியர்களுக்கு தகுந்த பணியிடங்கள் கிடைக்கப் பெற செயல்பட்டு வரும், தமிழக அரசுக்குச் சொந்தமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், 25 ஆண்டுகால மகத்தான சேவையைக் கடந்த ஆண்டு நிறைவு செய்து வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். வெள்ளிவிழா ஆண்டை நினைவு கூறும் வகையில் இந்நிறுவனத்தில் வேலை வாய்ப்புக்காகப் பதிவு செய்து, பதிவைப் புதுப்பிக்காத நபர்களுக்கு இந்நிறுவனம் பதிவைப் புதுப்பிக்க ஒரு சிறப்புச் சலுகையை அறிவித்துள்ளது. அயல்நாட்டில் வேலை அளிப்பவர்களுக்கு பரிந்துரைப்பதற்காக, இந்நிறுவனத்தில் முற்றிலும் கணினி மயமாக்கப்பட்ட தகவல் வங்கியில் தொழில்நுட்பம் அறிந்தவர்கள், மருத்துவப் பணியாளர்கள், பகுதி அளவிலான திறம் படைத்தவர்கள், தனித்திறம் வாய்ந்த பணியாட்கள் பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

பதிவுதாரர்கள் தங்களுடைய பதிவை இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இந்நிறுவனத்தில் பதிவு செய்து, பதிவைப் புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்கள் ரூ.216க்கான வரைவோலையை "அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், சென்னை" என்ற பெயருக்கு அனுப்பி தங்கள் பதிவைப் புதுப்பித்து முந்தைய பதிவு மூப்பைத் தக்க வைத்துக்கொள்ளலாம். இச்சிறப்புச் சலுகை இந்நிறுவனத்தின் வெள்ளிவிழா ஆண்டினை முன்னிட்டு அளிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் பதிவைப் புதுப்பிக்கத் தவறிய மனுதாரர்கள், 31.10.2004ஆம் நாள் வரை வழங்கப்பட உள்ள இச்சிறப்புச் சலுகையினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பதிவைப் புதுப்பிக்க விரும்பும் மனுதாரர்கள் தங்கள் பதிவு எண் மற்றும் விலாசம் ஆகியவற்றினை தெளிவாக எழுதி தற்போதைய கல்வித் தகுதி, முன் அனுபவம் போன்ற விவரங்களை கணினி வழியில் தயார் செய்து விண்ணப்பத்துடன் இணைத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
(தமிழக அரசு நிறுவனம்)
41, மெக்னிக்கல்ஸ் ரோடு,
சேத்துப்பட்டு, சென்னை–600 031
தொலைபேசி : 28365099 / 28365188**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் புதிய அறிவிப்புகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நலனுக்கென பின்வரும் புதிய திட்டங்கள் நடப்பாண்டில் செயல்படுத்தப் படும்: –

- ரூ.8.15 இலட்சம் செலவில் 10 அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப் படும்.
- ரூ.24.65 இலட்சம் செலவில் ஒரு அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.



- ரூ.29.92 இலட்சம் செலவில் ஒரு அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.
- ரூ.4.08 இலட்சம் செலவில் 5 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.
- ரூ.24.65 இலட்சம் செலவில் ஒரு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.
- ரூ.29.92 இலட்சம் செலவில் ஒரு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.
- வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியர் விடுதிகளுக்கு நடப்பு ஆண்டில் ரூ.31.50 கோடி செலவில் கட்டடங்கள் தாட்கோ மூலம் கட்டித் தரப்படும்.
- ரூ.99 இலட்சம் செலவில் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதலாக 30 வகுப்பறைகள் கட்டப்படும்.
- ரூ.7.50 இலட்சம் செலவில் 25 ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகளுக்குச் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்படும்.
- ரூ.17.50 இலட்சம் செலவில் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 500 மாணவர்களுக்கு அறைகலன் வசதி செய்து தரப்படும்.
- ரூ.11.87 இலட்சம் செலவில் 5 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டப்படும்.
- ரூ.9.44 இலட்சம் செலவில் 5 அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு இருக்கையுடன் கூடிய சாய்வு மேசைகள் வழங்கப்படும்.
- ரூ.50 இலட்சம் செலவில் 5 அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கூட கட்டடங்கள் கட்டப்படும்.
- ரூ.3 இலட்சம் செலவில் மின் ஆளுகைக்காகத் தலைமைச் செயலக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்குக் கணினிகள் வழங்கப்படும்.
- ரூ.18 இலட்சம் செலவில் மின் ஆளுகைக்காகத் துணைக் கருவிகளுடன் கூடிய 30 கணினிகள் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்களுக்கு வழங்கப்படும்.
- ரூ.1.20 இலட்சம் செலவில் பழங்குடியினர் நல இயக்ககத்திற்கு 2 கணினிகள் வழங்கப்படும்.

◆ ◆ ◆

☐ தாராசங்கர் பானர்ஜி

படகோட்டி தாரிணி எப்போதும் ஒரு விதமாக கூனியே நடப்பான். சராசரி உயரமுள்ள அவன் அடிக்கடி வாசல் நிலையிலும் மரக் கிளையிலும் மூங்கில் குடிசைக் கூரையிலும் தலையை மோதிக் கொண்டதால் கற்ற பாடம் இந்தக் கூனல். ஆனால் நதியிலோ அவனது படகைத் தள்ள நீண்ட கழியைக் கொண்டு துடுப்பு வலிக்கும் போது சரியாக நிமிர்ந்தே நிற்பான்.

அது மழை நிறைந்த புரட்டாசி மாதம் அம்புபாச்சி திருவிழாவுக்காக கங்கையில் நீராடிய யாத்திரிகர்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள். களைத்துப்போன கூட்டம்; பெரும்பாலும் மூதாட்டிகள். மயூராட்சி ஆற்றைக் கடந்து வீடு நோக்கி விரைந்து கொண்டிருந்தது கூட்டம்.

புகைந்துக் கொண்டிருந்த தாரிணி கடைசிப் புகை விட்டு விட்டுக் கூவினான் "இதற்கு மேல் ஒருவரையும் ஏற்ற முடியாது அம்மா தாய்மார்களே. உங்கள் புண்ணிய மூட்டை ரொம்பவும் கனக்கிறது''.

" இன்னும் ஒரே ஒரு ஆளுமட்டுமடா என் அப்பனே'' என்று புலம்பினாள் ஒரு கிழவி. "இந்த சின்னப் பையன்'' இன்னொருத்தி சிநேகிதியிடம் உரக்கக் கூவினாள். "சீக்கிரம் வா, சாபி போதும், நிறுத்து, உன் சிரிப்பையும் கிண்டலையும் உன் ராட்சசப் பல்லை எல்லாருக்கும் காட்டாதே"

சாபி என்ற சாவித்திரி அண்டை கிராமத்துச் சிறுமிகளுடன் சிரித்து வேடிக்கை செய்து கொண்டிருந்தாள் " சரி நீ போ. நாங்கள் எல்லாரும் அடுத்த முறை வருகிறோம்''.

படகோட்டி உடனே கத்தினான். " இல்லையம்மா இந்த முறையே வந்துவிடு. உன் கூட்டம் ஒன்று சேர்ந்தால் என் படகு நிச்சயம் கவிழ்ந்துவிடும்."

அந்தப் பெண் சளைக்காமல் பதில் சொன்னாள் "அப்படி அது கவிழ வேண்டி வந்தால், கிழவிகளோடு கவிழட்டும். ஒவ்வொருத்தியும் கங்கையில் பத்துப்

பனிரண்டு முழுக்குப் போட்டிருக்கிறாள். சாவுக்குத் தயார்தான். நேரே சுவர்க்கம் தான். எனக்கு இது முதல் யாத்திரை தெரியுமா ?"

" தெரியுது தாயே. நீ கங்கை அலைகளை உன் கற்பனையிலே கொண்டு வந்துவிட்டாய்" படகோட்டி படகில் தாவிக் குதித்தான். அவன் கூட்டாளி , காலாசாந்த் கட்டணம் வசூலிக்கத் தொடங்கினான்.

கரையிலிருந்த படகை நகர்த்தினான் தாரிணி, நதிக்கரையில் கழியை அழுத்தி நெம்பியபோது " ஆண்டவா ஆண்டவா" என்று கூவினான். யாத்திரைப் பயணிகளும் பதிலுக்குக் கூவ இந்த ஒலி இரு கரையிலிருந்த காட்டிலும் எதிரொலித்தது. வேகமாக ஓடிய நதியோ, பரிகசிப்பில் மெல்லச் சிரிப்பது போல ஒலித்தது.

" நீ நாசமாகப் போக, காலா சுங்கான் கட்டையைக் கெட்டியா பிடிக்க முடியாதா ?" தாரிணி உறுமினான். "சோறு தின்னலை ? ஆத்திலே சுழலைப் பார்க்கலேடா முட்டாள்"

"தாரிணி சொன்னது சரி, மயூராட்சியின் வேகச் சுழல்கள் பிரசித்தமானவை. வருடத்திலே ஏழெட்டு மாதத்திலே அது வெறும் பாலைவனம். இக்கரைக்கும் அக்கரைக்குமாக ஒன்றரை மைல் தூரம் வெறும் மணல்தான். ஆனால் மழை வந்ததோ, நதி அடக்கமுடியாத சக்தியாகிவிடும். அவள் ஒரு ராட்சசி. நாலைந்து மைல் பரந்து ஒட்டமாக ஓடி மெல்லக் கறுத்து வரும் நீர்க்கரங்களால் கைக்கு எட்டியதையெல்லாம் தொட்டு ஒடுவாள். எப்போதாவது ஹர்பா வெள்ளம் வரும். அப்போது நான்கு ஆள் உயரத்து நீர் அருகிலுள்ள கிராமங்களில் புகுந்து வீடுகள் தானியக் களஞ்சியங்கள் உட்பட வழியில் அகப்பட்டதையெல்லாம் அடித்துக் கொண்டு போய் விடும். இது அடிக்கடி நேராது. கடைசியாக நடந்து இருபது வருடம் ஆகிறது.

வெயில் தாங்க முடியவில்லை. ஒரு பயணி தனது குடையைத் திறந்தார். "உங்கள் பாய்மரத்தை விரிக்காதீர் தாகுர் நீங்கள் காற்றிலே பறந்து போய்விடுவீர்கள்" என்று அனுபவப் பேச்சு பேசினான் தாரிணி. அந்த மனிதர் உடனே குடையை மடக்கிவிட்டார்.

திடீரென்று நதியிலே கிரீச் என்று ஒரு கூச்சல் படகில் இருந்த அனைவரும் பயத்திலும் வியப்பிலும் திரும்பிப் பார்த்தார்கள். 'எல்லோரும் ஜாக்கிரதை' என்று கூவினான். தாரிணி. " ஒல்குரா துறை கிட்டே ஒரு படகு மூழ்கிக் கொண்டிருக்கிறது. ஏய் பாட்டியம்மா என்ன இப்படி நடுங்குறே. "தாகுர் ஐயா இவளைக் கொஞ்சம் கவனிச்சுக்குங்க பயப்பட ஒண்ணுமில்லே. நாம நதியை அநேகமாக கடந்துட்டோம் காலா. இந்த கழியைப் பிடி சீக்கிரம் " அடுத்தகணம் தாரிணி நதியிலே குதித்தான். ஆபத்திலே மாட்டிக்கொண்ட படகை நோக்கி நீந்தினான். கிழவிகள் "தாரிணி போய்விட்டானே நம் கதி என்ன ?" என்று ஓலமிட்டார்கள்.

"சும்மா இருங்க பாட்டியம்மா. அவனைக் கூப்பிடாதீங்க இல்லேன்னா நீங்களும் மூழ்கிடுவீங்க" என்று ஆவேசமாக கத்தினான் காலாசாந்த்.

சாம்பல் நிற நீரிலே எதிரே ஏதோ மிதந்து வருவது தெரிந்தது. அந்தப் பொருள் மிதப்பதும் அமிழ்வதுமாக இருந்தது. அநாயாசமாக நீந்தியபடி தாரிணி வெகு விரைவாய் அதன் அருகே சென்றான். கிட்டச் சென்றதும் நதியில் மூழ்கினான். மேலே வந்தபோது அந்தப் பொருளை ஒரு கையில் பிடித்தபடி நீந்தி வந்தான்.

கரையிலே ஒரு கூட்டம் பயத்தோடும் ஆர்வத்தோடும் தாரிணியைக் கவனித்துக் கொண்டிருந்தது. ஒரு நிமிடத்தில் எல்லோரும் கத்தினார்கள். " ஆண்டவன் அருள்!" எதிர் கரையிலிருந்து யாரோ கத்தினார்கள்.

"எல்லாம் சரியாயிருக்கா ? எல்லாரும் பத்திரமா ?" காலாசாந்த் தாரிணியை நோக்கிப் படகைச் செலுத்தினான்.

தாரிணிக்கு நல்ல காலம் அவன் காப்பாற்றிய பெண் அந்த வட்டாரத்தில் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் வந்த படகு மூழ்கவில்லை. ஓரத்தில் உட்கார்ந்தவள் அவள் முக்காடு மறைத்துத் தடுக்கிய காரணத்தால் நதியில் விழுந்து விட்டாள். சிறிது நீர் விழுங்கிவிட்டாள். அதிகமில்லை. உடனடியாக அவளுக்கு சிசுருட்சை செய்ததும் மீண்டும் சுயநினைவு பெற்றாள்.

பதினாறே வயதிருக்கும். பார்வைக்கு அழகி. நிறைய நகை அணிந்திருந்தாள். காதுத்தோடு, மூக்குத்தி, கைவளை, கழுத்துச் சங்கிலி. அங்கே அவள் கணவனும் மாமனாரும் வந்து சேர்ந்தபோது அவள் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தாள். இருவரையும் தாரிணி குனிந்து வணங்கினான். அந்தப் பெண் தனது முக்காட்டை இழுத்து முகத்தை மறைத்துக் கொண்டாள். "வெட்கப்படாதே தாயே. கொஞ்சம் இழுத்து மூச்சு விடு சங்கோசத்தால் வந்த கஷ்டம் போதும்" என்றான் தாரிணி.

" சொல்லப்பா தாரிணி, என்ன பரிசு வேண்டும் ?" என்று கேட்டார் மாமனார். தலையைச் சொரிந்து கொண்டான் தாரிணி. முணுமுணுத்தான் ' ஒரு பானை கள்ளுக்குப் பணம் தாரும் ஐயா, எட்டணா'

கூட்டத்திலிருந்து சாபி கத்தினாள் " இவ்வளவு முட்டாளா இருக்கிறே, உருப்படியா ஏதாவது கேளேன்."

விஷயம் என்ன என்று புரிந்து கொண்டது போல தாரிணி இளித்தான். " பெரிய மூக்குத்தியா ஒண்ணு தாரும் ஐயா."

மறுபடியும் சாபியின் குரல் கேட்டது. " ஆகா தாரிணி. உன் பெண்டாட்டி இனிமே வாயைத் திறக்கும் போது என்னமாதான் அவ சிங்கார மூக்கு ஆடப் போவுதோ" இதைக் கேட்டு கூட்டமே சிரித்தது.

தப்பிப் பிழைத்த அந்தப் பெண் தன் கரத்தை நீட்டினாள். உள்ளங்கையில் இருந்த தங்க மூக்குத்தி காலை வெயிலில் பளபளத்தது.

"தசரா நாளில எங்கள் வீட்டுக்கு வா தாரிணி. வேட்டியும் மேல் துண்டும் தருகிறேன். இப்போ இந்த ஐந்து ரூபாய் வைத்துக் கொள்'' என்றார் மாமனார்.

தாரிணி அடக்கமாகக் குனிந்து நன்றியுடன் பேசினான். " ஐயா எனக்கு வேட்டி தருவதை விட என் பெண்சாதிக்குச் சேலை தாருமேன்".

" சரி சரி. புடவை தருகிறேன்" என்று சிரித்தார் மாமனார்.

" உன் பெண்சாதியை நாங்கள் பார்க்கவேண்டுமே" என்று சாபி குரல் கொடுத்தாள்.

" பார்க்க என்ன இருக்கிறது ? பார்க்கும்படி இல்லை. அவள் கறுப்பு. அழகுமில்லே" என்றான் தாரிணி.

அன்று இரவு தாரிணி வீடு நோக்கி நடந்த போது அவன் முட்டமுட்டக் குடித்திருந்தான். தடுமாறியபடி வழி பிடித்துக் கொண்ட அவன் கூட்டாளி காலாசாந்திடம் குறைப்பட்டான். " இப்படி யார் குழிவெட்டியது காலா ? இங்கே குழி. அங்கே குழி. எங்கேயும் குழி" அதேஅளவு குடித்திருந்த காலாசாந்தால் ஒத்துப் பாடவே முடிந்தது.

தாரிணி பேசிக் கொண்டே போனான். "வா நீச்சலடிப்போம். இந்தப் பள்ளங்களில் தண்ணி வந்துடும். இதென்னடா இது, இங்கு தண்ணி இல்லே. தரையா இருக்கு. என்னஆச்சு காலா ?" பதில் இல்லாது போகவே தாரிணி நீச்சல் அடிப்பது போல கைகளை ஆட்டி ஆட்டி முன்னேறினான். அவன் குடிசை கிராமத்துக்கு வெளிப்புறம் இருந்தது. அவன் மனைவி சுகி வாசலிலேயே விளக்கைப் பிடித்துக் கொண்டு அவனுக்காகக் காத்திருந்தாள்.

மூக்குத்தியைப் பற்றி படகோட்டி பாட முயன்றான். சுகி தடுத்தாள். " போதும் கூச்சல். வந்து சோறு தின்னு ஏற்கெனவே ஆறி விளைச்சுப் போச்சு."

தாரிணி அவளைப் பின்னுக்குத் தள்ளினான். "சோறு, சோறு! அதை விடு முதல்லே மூக்குத்தி மாட்டிக்க. எங்கே வச்சேன் அதே ?" தடுமாறும் கைகளால் இடுப்பைச் சுற்றித் தன் வேட்டியில் துழாவினான்.

" இப்படியே ஒரு நாள் யாரையாவது காப்பாத்தறேன்னு நீயே போயிடுவே" என்றாள் சுகி. காலை நடந்த விஷயம் அவள் காதுக்கு எட்டியிருந்தது.

"அப்படி ஏதாவது ஆனா நான் தூக்கிலே மாட்டிக்குவேன்" என்றாள்.

" நான் என்ன செய்துட்டேன் ?" என்றான் தாரிணி குழப்பமாக.

" என்ன பயங்கர வெள்ளம் அதிலே நீ.."

அவனது சிரிப்பில் அந்த மழைநாள் மாலையில் கவியும் இருளே அதிர்ந்தது. " யாராவது சொந்தத் தாயிடம் பயப்படுவார்களா ? மயூராட்சி எனக்குத் தாய் இல்லையா ? இப்ப கிடைக்கும் சோறு அவள் போடுவது தானே என்ன ?

இதை கேட்டுக்கொண்டு நிற்கவில்லை சுகி. சாப்பாட்டை கவனிக்கச் சென்று விட்டாள்.

"சொல்கிறேன் கேட்கமாட்டே ?" என்றபடி தாரிணி அடுக்களைப் பக்கம் போனான். பின்னாலிருந்து சுகியைப் பிடித்துக் கொண்டு கத்தினான் "உடனே வா இப்போதே நதியைப் போய் பார்ககலாம் வா."

"முட்டாள் தனமா என்னைத் தொந்தரவு செய்யாதே" என்று அவள் சொல்ல தாரிணி கத்தினான். "நீ வந்துதான் ஆகவேண்டும். நூறுமுறை சொல்வேன் வா ஆற்றுக்குப் போவோம். நான் அதிலே குதிப்பேன். நீ என் முதுகைப் பிடித்துக்கொள்ளு. அப்படியே போய் பஞ்ச்துபி துறையிலே மேலேறுவோம்."

"சரி சரி ஆகட்டும் முதல்லே நீ இந்த சோறு துண்ணு."

தாரிணி மறுபடி கோபமாகப் பொங்கத் தொடங்கினான். கதவு நெற்றியிலே மோதியது. நிதானத்துக்கு வந்தான். சோறு தின்றபடியே சொன்னான். 'அப்போ இரண்டு பசங்களைக் காப்பாத்தினேனே நினைவிருக்கா ? அந்தப் பாவி மதன கோபு என்னை பதினைஞ்சு ரூபாய் ஏமாத்தினானே பதினைஞ்சு ரூபா! எவ்வளோ பணம்! இன்னும் அஞ்சு சேர்ந்தா இருபது ரூபா! உனக்கு இந்த வளையல் கொடுத்தது யாரு! சொல்லு உன்னுடைய எந்த மாமன்காரன் கொடுத்தான் ? அந்த அயோக்கியன் மதன் ஆத்திலே மூழ்கினா அவன் இழுத்துப் போடறத்துக்கு முன்னாடி அவன் கொஞ்சம் வெள்ளத்தை விழுங்க விட்டுடுவேன் ஆமா. சாமி சத்தியமா." இதனிடையில் அவன் இடுப்பு வேட்டி தளர, சுகி மூக்குத்தியையும் மூன்று ரூபாயும் கண்டு எடுத்தாள்.

"மீதி இரண்டு ரூபாய் என்னாச்சு ?" என்று கேட்டாள்.

" ஓ அதுவா காலாவுக்கு கொடுத்துவிட்டேன்" என்ற போது அவன் குரலில் கள்ளம் தெரிந்தது. அந்தப் பயல்கூட இருந்தானா ? இந்தா வச்சுக்கன்னேன்''.

அவன் எங்கே போய் வருகிறான் என்பது சுகிக்குத் தெரிந்திருந்தது. ஆனால் ஒன்றும் பேசவில்லை. வீண் பேச்சில் அவளுக்கு விருப்பமில்லை. தாரிணி மறுபடி ஆரம்பித்தான். "அப்போ.. நெனப்பிருக்கா ? உனக்கு உடம்பு சுகமில்லே நான் படகு வலிக்கலே. படகு ஓட்ட யாருமே இல்லே. போலீசு ஆபீசுரு அக்கரைக்கும் போக முடியலே. எனக்குச் சொல்லி அனுப்பிச்சாங்க. அப்போ கிடைச்ச காசிலிருந்து ஒனக்கு காது வளையம் வாங்கிப்போட்டேன் இல்லையா" எனக்கு இந்த ஆறு நல்லதுதான் செய்யறது"

"கொஞ்சம் இரு இதை மூக்கிலே மாட்டிக்கிறேன்" என்றாள் சுகி.

திருப்தியுடன் உளரலை நிறுத்தினான் தாரிணி. சாப்பிடுவதைக்கூட மறந்து, கண்ணாடியும் கையுமாக அலங்காரம் செய்து கொள்ளும் பெண்டாட்டியை பார்த்துக் கொண்டிருந்தான். அவள் முடிந்ததும் சாப்பிட்ட கைகூடக் கழுவாமல் லாந்தர் விளக்கைத் தூக்கி எடுத்து " இப்படித் திரும்பு சுகி. உன்ன நல்லா பாக்கிறேன்" என்றான்.

அவள் முகம் கபடமற்ற மகிழ்ச்சியில் ஆனந்தமயமாக இருந்தது.

சாவித்திரியிடம் தாரிணி சொன்னது நிஜமல்ல. சுகி அழகாக இருந்தாள். மெல்லிய உடல் அவ்வளவு கறுப்பும் இல்லை. அவளைக் குறித்து அவன் பெருமைப்பட்டான். மகிழ்ச்சியாக இருந்தான்.

படகோட்டி கூறியது சரியே. மயூராட்சி தான் அவனுக்கு ஜீவனம். ஆண்டுதோறும் தசரா சமயத்தில் அவன் ஆற்றுக்குப் பூசை இடுவான். இந்த ஆண்டும் வழக்கம்போல பூசையிட்டான். அவன் புதிய வேட்டி கட்டினான். சுகி புது சேலை கட்டினாள். இரண்டுமே கோஷ் ஐயா வீட்டில் கொடுத்தவை. மழை இன்னும் தொடங்கவில்லை. கோடை வெயிலில் காய்ந்தது. ஆற்றின் மணல் படுகை பளபளத்தது. போக்பூர் கிராமத்து கெஸ்டோ தாஸ் சொன்னார். "ஆத்தை கும்பிடு தம்பி. நல்லா கும்பிடு. நல்ல மழை வரட்டும். வெள்ளமும் வரட்டும். குடியானவங்க பொழக்கணும் இல்ல ?''

இரு கரைகளிலும் ஆறு அடித்துப்போட்ட வண்டல் காரணமாக கழனிகள் பொன் என விளைச்சல் கண்டன.

"சரிதானுங்க'' என்று சிரித்தான் தாரிணி "எல்லாரும் என்ன சொல்றாங்க தெரியுமா ? நான் ஆத்துக்குப் படையல் வச்சு வெள்ளம் வரவேணும் என்று வேண்டிக்கிறேனாம். முட்டா சனங்களுக்கு மறந்து போவுது. இந்த ஆறுதான் நம்ம அம்மா. நம்ம நிலத்துக்கு

வளம் சேக்கறா'' பலிக்குத் தயாராக இருந்த ஆட்டைப் பார்த்தான். "ஆடு ஓடிப்போகாம பார்த்துக்கோ காலா'' என்றான். ஆற்றுப் படுகையின் சுடுமண்ணில் நெளிந்தது ஆடு.

பூசை முடிந்ததும் தோழன் காலாசாந்துடன் தாரிணி முட்ட முட்டக் குடித்தான். காலாசாந்த் குடிபோதையில் பேசினான் : "இந்த தடவை யாராவது நீரில் மூழ்கினால் நான் தான் காப்பாத்துவேன். வெகுமானம் பெறுவேன். ஆமா தெரியுமா ?''

பலக்கச் சிரித்தான் தாரிணி "என்ன ஆசை! நீரிலே காலா காப்பாத்துவானாம்! ஹா! ஹா!''

"என்னடா சொன்னே. பிசாசே!'' ரோஷத்துடன் கோபமாகக் காலாசாந்த் கத்தினான். தாரிணியும் சண்டைக்குத் தயார் தான். ஆனால், சுகி குறுக்கிட்டுச் சமாதானப்படுத்தினாள். "இதோ பாரு வெள்ளம் வந்தா. அதோ தெரியுதே அந்தப் பாக்கு மரம். அந்த மரத்துக்கு இந்தப் பக்கம் யாராவது மூழ்கிப்போனா என்று தன் புருஷனை பார்த்து நீ அவனை காப்பாத்து. அதுக்கு அந்தப் பக்கமாக நேர்ந்தா'' என்று கூறி, அடுத்தவனைப் பார்த்து "நீ காப்பாத்து!'' என்று முடித்தாள். குடிவெறியில் காலாசாந்த் கேவி அழுதான். சுகியின் காலடி மண்ணை எடுத்து வணங்கினான். "அக்கா நீ எவ்வளவு நல்லவ. உன்னை போல யாரும் இல்லே''.

அடுத்த நாள் இருவரும் படகைச் சீர்படுத்தத் தொடங்கினார்கள். இருட்டும் வரை வேலைபார்த்து அதைப் புதிதுபோல ஆக்கினார்கள். ஆனால் வெயிலின் உக்கிரம் காரணமாகப் படகு விரிசல் கண்டது. ஆவணி மாதம் முழுவதும் வெள்ளம் வரவில்லை. பெய்த மழையும் ஆற்று மணலை நனைத்ததோடு சரி. அழிவுக்கு அறிகுறி தெரிந்தது. தாகம் தாங்காது நிலம் மெல்ல ஓலமிடுவது போலிருந்தது. ஒருவேளை அழிவு என்பது எங்கோ அருகில் வந்துவிட்டதோ, அதன் முன்னோட்ட அறிகுறி தெரிகிறதோ ? பிழைப்புக்குப் போதிய வருமானம் தாரிணிக்கு இல்லை.

எவராவது உத்தியோகஸ்தருக்காக இந்த மணல் வெளியிலே சைக்கிள் வண்டியைத் தூக்கிவந்தால் சில்லறைக் காசு கிடைக்கும். அது அவன் குடிப்பதற்கே காணும். மக்கள் படும் பாட்டை விசாரிக்க அவ்வப்போது அதிகாரிகள் வந்து போவார்கள். ஒரு பயனும் இல்லை. அவர்கள் விரும்பும்போது கசங்கிய சிகரெட்டுத் துண்டுகள் தான் மிச்சமிருக்கும்.

அடுத்த மாதமான சிராவ (புரட்டாசி) மாதத்திலே மழை வந்தது. தாரிணி மறுபடி ஆனந்தமாக வாழ்க்கையை அனுபவித்தான். நீரிலே குதித்து சிறுபிள்ளை போல உற்சாகமாக நீச்சலடித்தான். மூன்று நாள் கழித்துப் பார்த்தால், தண்ணீர் முழங்கால் ஆழமே இருந்தது. தாரிணியும் காலாசாந்தும் படகை ஒரு மரத்தில் கட்டிக் காத்திருந்தனர். எவராவது ஒரு கனவான நதியைக்

கடக்க வரமாட்டாரா. அவருக்கு படகு வலிக்கமாட்டோமா என்று காத்திருந்தனர்.

மாலை ஆயிற்று. எவரும் வரவில்லை. "வேடிக்கையாக இருக்கிறதே காலா'' என்றான் தாரிணி. "ஆமாம். இப்படி என் ஆயுளில் பார்த்ததில்லை'' என்றான் காலாசாந்த்.

"மேக்கு வானத்தைப் பார். அது நீலமாக இருக்கு. ஒரு மேகம் இல்லையே ஆகாசத்திலே. ஒரு ஓசை இல்லையே''

"ஆமா, ஆமா'' என்று ஆமோதித்தான் காலாசாந்த்.

தாரிணி திடீரென்று ஆவேசத்துடன் காலாவின் கன்னத்திலே அறைந்தான்.

"ஆமா, ஆமா, ஆமா, நீ அப்படிச் சொல்லணும்முனுதா காத்திருக்கேனாக்கும்''

பிரமிப்பும் அசட்டுத்தனமும் கலந்த பார்வையில் விழித்தான் காலாசாந்த். அவனுக்குக் கோபம் கூட வரவில்லை. எத்தனை நேரம் இந்த நிலையைப் பொறுப்பது. தாரிணி பொறுமை இழந்தான். அசையாமல் ஒரு புறம் தள்ளி அமர்ந்தான். சற்றுப் பொறுத்து திடீரென்று "டேய் காலா, காற்று திசை மாறிப் போச்சு. மேற்கே இருந்து வீசுது பாரு'' என்றான். "உம்...ம் மேக்குக் காத்துதான். வா, வா. காலாரப் போய் ஒரு மெடா குடிப்போம். கையிலே ரெண்டனா இருக்கு. சுகியிடமிருந்து பறிச்ச காசு. சேலையிலே ஒரு மூலையிலே முடிஞ்சு வச்சிருந்தா...''

"காலாசாந்த் உயிர் பெற்றான். விருப்பமான இந்த அழைப்பு அவனைக் கிளற, தாரிணியைப் பின் தொடர்ந்தான். "அண்ணே, உன் பெண்சாதிக்கிட்டே ஏதோ காசு இருக்கு. நீ வீடு திரும்பினா உனக்குச் சோறு கிடைக்கும். ஆனா நா...நா... நான்தான் தவிப்பேன்''.

"சுகி ரொம்ப நல்லவ காலா, ரொம்ப நல்லவ'' என்றான் தாரிணி. "அவ இல்லாம நா என்ன செய்வேனோ தெரியாது. அன்னிக்குப் பாரு என் தம்பிக்குக் கல்யாணம் ஆகச்சே...''

"ஒரு நிமிஷம் அண்ணே. அங்கே கிடக்கும் நுங்கை எடுத்துக்கறேன்'' என்று காலா கள்ளுப் பனை மரத்தின் அடிக்கு ஓடினான்.

மரத்தடியிலே ஒரு சிறு கூட்டம் குந்தியிருந்தது.

"எங்கேயிருந்து வறீங்க? எங்கே புறப்பட்டீங்க?'' என்று தாரிணி விசாரித்தான்.

"நாங்க மீர்சந்த்பூரிலிருந்து வாரோம் அண்ணே. பர்த்வான் போறாம். அங்கே பொழைக்க வேலை கிடைக்குமாம்''

"பர்த்வானிலே மழை பெஞ்சுதாமா?''

"இல்லே. மழை ஒண்ணுமில்லே. ஆனா பாசனத்துக் கால்வா வெட்டறாங்க''.

கஷ்டகாலம் ஆரம்பமாகிவிட்டது. காயும் வெயிலில் தரை பாளம் பாளமாக வெடிக்க பூமிக்கு அடியில் ஒளிந்து கொண்டிருந்த பஞ்சத்தின் பயங்கர முகம் தெரியத் தொடங்கியது. ஏதோ கொஞ்சம் கொஞ்சம் தானியம் வைத்திருந்த குடிசைவாசிகள் அதை விற்பதை அடியோடு நிறுத்திவிட்டனர். ஏழை குடியானவர்கள் பட்டினி கிடந்தார்கள். மக்கள் கூட்டம் கூட்டமாக வீடுகளை விட்டு வெளியேறினார்கள்.

ஒருநாள் காலை தாரிணி ஆற்றுக்குப் போனான். காலாசாந்தைக் காணவில்லை. பகல் வெயில் ஏறியது. காலாசாந்த் இன்னும் வரவில்லை. அவன் குடிசைக்குப் போய் தாரிணி பெயர் கூவி அழைத்தான். பதில் இல்லை. உள்ளே போய்ப் பார்த்தால் அங்கே எவரும் இல்லை. அடுத்த குடிசையிலும் அப்படியே. அந்தப் பகுதியில் எல்லாருமே எங்கே போய்விட்டிருந்தார்கள் போலிருந்தது. தாரிணி விசாரித்துப் பார்த்தான். முதல் நாள் இரவு தான் அங்கிருந்தவர்கள் எங்கோ போய்விட்டார்கள் என்று தெரிந்தது.

ஹரிமந்தோல் சொன்னான் : "இதோ பார் தாரிணி, நான் திரும்ப திரும்ப அவனிடம் சொன்னேன். போகாதேடா என்று. அவன் கேட்கவில்லை. அவன் ஏதாவது வசதியான கிராமத்துக்குப் போய் பிச்சை எடுப்பானாம்'' நெஞ்சை ஏதோ அடைக்க, குரல் எழுப்பமுடியாமல் கேட்டுக்கொண்டிருந்தான் தாரிணி.

ஹரி சொல்லிக்கொண்டே போனான். "தேசத்திலே யாராவது பணக்காரர்கள் இருக்கிறார்களா என்ன? எல்லாரும் போய்விட்டார்கள். சிலபேர் நிலமை மிகவும் மோசம். பட்டினி கிடந்தாலும் கௌரவம் பார்த்து வெளியே காட்டாமல் இருக்கிறார்கள். பலஷ்தங்காவில் ஒரு பெரிய மனுஷன் கழுத்திலே சுருக்குப் போட்டுக்கொண்டாராம் பாவம். சாப்பாட்டுக்கு வழியில்லை.

அடுத்த நாள் தாரிணி கண்ட காட்சி வயிற்றை குமட்டியது. அது ஒரு கிழவியின் பிணம். நரியும் நாயும் அவளது கைகால்களை இரவு தின்றுவிட்டிருந்தன. அவள் யார் என்று தாரிணிக்கு தெரிந்தது. பாரிச வாயு நோயாளி

அவள். அவள் குடும்பத்தார் – முதல்நாள் இரவு அவளைப் பின்னே விட்டுவிட்டு அந்தப் பஞ்சம் பிடித்த கிராமத்தை விட்டு விரைந்துவிட்டிருக்கிறார்கள்.

எங்கும் அலையாமல் நேரே வீட்டுக்குப் போய் மனைவியிடம் "சுகி புறப்படு. உன் சேலை நகை எல்லாம் இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொள். இங்கிருந்து போய்விடலாம். பட்டணத்திலே வேலை கிடைக்கும்''.

சாலையிலே போகும்போதுதான் சுகியிடம் நகை ஒன்றும் இல்லை என்பதை தாரிணி கவனித்தான். வியப்புடன் என்ன ஆயிற்று என்று விசாரித்தான். சுகி வரட்டுச் சிரிப்புடன் சொன்னாள் : "இத்தனை நாள் எப்படிக் குடித்தனம் நடத்தினோம்?''

மூன்று நாள் கால் வலிக்க நடந்தார்கள். இரவே நேரத்தில் ஒரு ஒரு கிராமத்து எல்லையிலே தங்கினார்கள். பழுத்துக் கீழே உதிர்ந்த இரு பனம் நுங்குகள் அவர்கள் சாப்பாடாயிற்று.

"ஒரு நிமிஷம் உன் துண்டைக் கொடு'' என்று தாரிணி அந்தத் துணியை ஒரு மரக்கிளையிலே தொடங்கவிட்டான். துணி அசைவிலிருந்து காற்றின் திசையைக் கவனமாகப் பார்த்தான். பொழுது விடியும்போது தாரிணி இன்னும் அப்படியே துணியைக் கவனித்தப்படி இருக்கக் கண்டாள் சுகி.

"என்ன நீ தூங்கவே இல்லையா?'' என்று அவனைக் கடிந்தாள். "நீ வேறே உடம்பு முடியாம படுத்து என்னைப் படுத்தாதே. உன்ன போல ஆளுங்க ஏன்தான் வீட்டை விட்டு வரணும்?''

தாரிணி அவளைச் சட்டை செய்யவில்லை. திடீரென்று கத்தினான், "இதைப் பார்த்தாயா சுகி?''

"என்ன சொல்லறே? எனக்கு ஒண்ணும் புரியல்லே''

"பாரேன். எறும்புக் கூட்டம் வாயிலே முட்டையோட மரத்து மேலே ஏறிப்போறது. மழைப் பெய்ய போகிறது நிச்சயம்''.

"ஒன் மண்டையிலே என்னென்னவோ வச்சிருக்கே'' என்றாள் சுகி.

"புரியலயா சுகி? எறும்புக்கு எப்போ மழை வரும்னு தானே தெரியும். உடனே அது மரத்துமேலே ஏறிடும். பார் இதே மேக்கிலிருந்து காத்து அடுக்குது''

"என்ன சொல்றே? ஆகாசம் பளிச்சுன்னு இருக்கு. உனக்குன்னு ஏதோ தோணுது''.

தாரிணி தொலைவில் அடிவானத்தை உற்றுப் பார்த்தான். "மேகம் மேலே வர நேரமாகாது. பாரேன். காக்கா கூட்டம் காய்ந்த சுள்ளியை எடுத்துப் போவுது. கூட்டை பலப்படுத்த. இங்கேயே இருப்போம் சுகி. மழை பெய்யுதா பார்ப்போம்''.

படகோட்டியின் அனுபவ வாக்குப் பொய்க்கவில்லை. பொழுது சாயத் தொடங்கியபோது வானத்திலே மேகம் கவியத் தொடங்கியது. மேலைக் காற்று விர்விர் என்று வேகமாக வீசியது.

"எழுந்திரு சுகி. நாம் திரும்பிவிடலாம்''

"இந்த நேரத்திலா?''

"என்னம்மா, இருட்டுன்னா பயப்படறே? நான் கூட இல்லயா? வா, வா, தலைக்கு தாழங்குடை எடுத்துக்கோ தூறல் உனக்கு. ஆகாது''

"உனக்கு? உன் ஒடம்புமட்டும் கல்லாக்கும்'' என்றாள் சுகி.

"ஆமாம்'' தாரிணி சிரித்தான். "மழை எனக்கு தோழனாச்சே. நான் வெயில்லே காய்வேன். மழையிலே துள்ளுவேன். வா, வா, அந்த மூட்டையை என் கையிலே கொடு''

சிறிது நேரம் பலத்த மழை பெய்தது. பிறகு பயங்கரக் காற்று குறைந்து மழையும் நின்றுவிட்டது. அப்புறம் மறுபடி காற்று வீசத்தொடங்கியதும், மழை கொட்டோ கொட்டு என்று கொட்டியது.

இரண்டு நாளில் வீடு திரும்பிவிட்டார்கள். போகும்போது மூன்று நாள் பிடித்த தூரம். ஆறு எப்படி இருக்கிறது, எப்படி இருக்கிறது என்று பார்க்க ஓடினான் தாரிணி. திரும்பி வந்து, இரண்டு கரையும் கடக்கும் அளவு தண்ணீர் வந்து விட்டது என்று சுகியிடம் மகிழ்ச்சியான செய்தி கூறினான்.

அடுத்த நாள் காலை வானம் கவிந்து இருட்டானது. அடை மழை பெய்தது. காற்று அழுத்தமாக வீசியது. தாரிணி நதிக்குச் சென்றான். நடுப்பகலில் வீடு திரும்பி மனைவியிடம் சொன்னான் : "கருமார ஆசாரியைப் பார்க்கவேணும்.

"சாப்பிட்டு விட்டு போ'' என்றாள் சுகி கவலையுடன்.

"படகுக்கு ஒரு புது தண்டு போடவேணும். நதியிலே தண்ணி ஏறிக்கொண்டே போவுது. இல்லாட்டா நானே சமாளித்திருப்பேன். வாயேன் வந்து பாரேன் நதியை'' அவளைக் கையைப் பிடித்து இழுத்துப் போனான். மயூராட்சியின் பயங்கர அழகு பரவசமாக இருந்தது. எதிர்க்கரை கண்ணுக்குத் தெரியவில்லை. தண்ணீர் செம்மண் வண்ணத்தில் ஓட வெள்ளை நிறத்தில் நுரைத்து அலை எம்பியதைப் பார்த்தால், கொத்துக் கொத்தாய் மலர்கள் ஆடி அசைவது போல இருந்தது. "அவள் உறுமுவது கேட்கிறதா, சுகி பார், இன்னும் மோசமாகிவிடும். நீ வீட்டுக்குப் போ. நான் எப்படியாவது நாளைக்கு அக்கரைக்கு படகு வலிக்கவேணும்''.

"இந்த மழையிலே போகாதே'' தாரிணி கேட்கவில்லை. அவன் போய்விட்டான்.

இருட்டியபின் அவன் முகத்தில் கவலை தெரிய வீட்டுக்கு விரைந்தான். தூக்! தூக்! ஆம். அது என்ன என்று தெரியும் அவனுக்கு. அபாயம் வருகிறது. வெள்ளம் வரப்போகிறது. அது அவன் தொழிலுக்கு உதவாது.

மயூராட்சியுடன் சேரும் ஓர் அற்ப கிளை நதி கிராமத்தை ஒட்டிச் செல்லும். அதிலே ஒரு சிறு மூங்கில் பாலம் உண்டு. அதுவே கண்ணை மூடிக்கொண்டு அவன் போகக் கூடிய வழக்கமான பாதை. ஆனால் இப்போது பாலத்தைக் காணவில்லை. அது இருந்திருக்க வேண்டிய இடத்தில் வெறும் பிசுபிசுத்த நீர்தான் இருந்தது. வேட்டி ஈரமாகாமல் இருக்க மேலே தூக்கிக் கட்டவேண்டியிருந்தது. ஒரு நடுங்கவைக்கும் சீறல் ஒலியைக் கேட்டான். வேகமாக வீசும் ஓலமும் பாய்ந்து செல்லும் நீரின் இரைச்சலும் தெளிவாகக் கேட்டான். நீரில் அவனைப் புழு, பூச்சிகள் தாக்கின. நிலத்தின் அடியில் இருந்து அவை இப்போது பாதுகாப்பான இடத்தைத் தேடிப் புறப்பட வேண்டியிருந்தது.

தாரிணி நீரிலே குதித்து குறுக்கே நீச்சலடித்தான். எங்குமே இடுப்பளவு தண்ணீர். கிராமத்து மக்கள் எப்படியோ நீரில் மூழ்காமல் சமாளித்துக் கொண்டிருந்தார்கள். உதவி கோரி ஒருவரையொருவர் அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஆபத்துக் காலத்தில் பசுவும், ஆடும், நாயும் கூட எப்படி முனகுகின்றன! எல்லா இரைச்சலுக்கும் மேலாக மயூராட்சியின் உறுமல் கேட்கிறது. தொடர்ந்து மழை இரைச்சல் காற்றின் கொடூரமான சிரிப்பு, தங்களிடம் அகப்பட்டுக்கொண்ட அப்பாவிகளின் அவலச்சத்தத்தை அடக்கும் கொள்ளையர் கூச்சலைப் போல இருந்தது இந்த ஒலி.

இருட்டில் வழி தெரியவில்லை. தாரிணியின் காலடியில் ஏதோ இடறிற்று. மெத்தென ஏதோ மிருகம் போல குனிந்து அதை எடுத்தான். ஆட்டுக்குட்டி செத்துக்கிடந்தது. அதை வீசி எறிந்தான். எப்படியோ தன் குடிசையை அடைந்து கத்தினான். "சுகி எங்கே இருக்கிறாய் சுகி!''

சிறிய முற்றத்தில் தண்ணீர் இடுப்பளவு ஏறிவிட்டது. திண்ணையிலே முழங்கால் அளவு இருந்தது. அங்கே சுகி நின்றிருந்தாள். கண்ணிலே பீதியுடன் கூரை மூங்கிலைப் பிடித்தபடி நின்றிருந்தாள்.

"சீக்கிரம் வா வெளியே!'' தாரிணி அவள் கையைப் பிடித்து இழுத்தான். "ஏன் இங்கேயே நின்னுட்டே ? எந்த நிமிஷமும் வீடு இடிந்துவிழும்''

"நான் உனக்காகக் காத்திருந்தேன். என்னை வேறு எங்கே தேடுவாய் ?''

இருவரும் அடுத்த கணம் இடுப்பளவு நீரில் தெருவில் வந்தார்கள். "என்ன செய்வோம் ? சுகி'' என்று கேட்ட அவன் குரல் நடுங்கியது.

"என்ன கவலை ? எல்லாருக்கும்தானே வந்த கஷ்டம் தானே ?''

"வெள்ளம் இன்னும் அதிகமானால் ? இப்போவே இரைச்சல் கேட்கிறது''

"வெள்ளம் ஏறாது'' என்றாள் சுகி. பெண்களுக்கே உரிய ஒருவித அசிரத்தையுடன், "அப்போ நாடு தான் என்ன ஆகும் ?'' தான் படைச்சதே தானே அழிக்குமா சாமி ?

கடவுளின் கருணையிலே ஆறுதல் காண முயன்றான் தாரிணி. முடியவில்லை. திடீரென்று நீரிலே பலத்த சலசலப்பு கேட்டது. "போகலாம். இங்கிருந்து தண்ணி உன் மார் அளவு வந்துவிட்டது''.

"ஐயோ காப்பாத்துங்களேன். என் குழந்தை போயிருச்சே. என் கண்ணே என் பையா!'' என்று ஓலக் குரல் கேட்டது.

வழக்கமான அலட்சியப் போக்குடன் தாரிணி கத்தினான். "நீ இங்கே இரு. நான் கூவும்போது குரல் கொடு'' என்று நீரிலே தாவி மூழ்கினான். "எங்கே குழந்தை ?''

"இந்தப் பக்கம். இந்தப் பக்கம்''

"இதோ வந்துவிட்டேன்''

ஏதேதோ குரல் கேட்டது. வார்த்தைகள் தெளிவாக இல்லை. பிறகு எல்லாம் அமைதியாகிவிட்டது. அடுத்தகணம் தாரிணியின் குரல் "சுகி! சுகி!''

"இந்தா, இங்கே இருக்கேன்'' குரல் வந்த திசையை நோக்கிச் சென்றான். அவளைப் பார்த்ததும் "நிலைமை ரொம்ப மோசமா இருக்கு சுகி. என் இடுப்பை பிடிச்சுக்கோ''.

சுகி புருஷனின் இடுப்பைச் சுற்றியிருந்த வேட்டியைப் பிடித்துக்கொண்டாள். "யார் குழந்தை அது ? காப்பாத்த முடிஞ்சுதா ?''

"ஊம். அது பூபதே பல்லாவின் குழந்தை'' அவர்கள் நீரிலே அளைந்து நடந்தார்கள். போகப் போக சிரமமாக இருந்தது. "என் முதுகு மேலே ஏறிக்கோ சுகி'' என்றான் தாரிணி. "இப்போ எங்கே இருக்கோம், எங்கே ?'' சட்டென நின்றான். அவர்கள் இருந்த இடத்தில் ஆழம் அதிகமாக இருந்தது. "ஐயையோ ஆத்துக்கே வந்துவிட்டோம் சுகி. என் வேட்டியைப் பிடித்துக்கொள்ளு மிதக்க முடியுமா பார்க்கலாம்''

ஆற்று வெள்ளத்திலே இருவரும் வேகமாக அடித்துச் செல்லப்பட்டார்கள். கும்மிருட்டு கூரான அம்பு போல விர்ரென்று அடித்த காற்றொலியும் வெள்ளத்தில் ஓடும் ஆற்றின் உறுமலும் கலந்தன. துரும்பு என மிதந்தனர் அவர்கள். இன்னும் எத்தனை நேரமோ தெரியாது. கைகால்கள் மரத்துப்போகத் தொடங்கின. இரக்கமற்ற அலைகளால் மூச்சு முட்டியது. சுகியின் பிடிப்பில் வித்தியாசம் தெரிந்தது. ஏதோ மாதிரி இருக்கிறதே என்று நினைத்தான் தாரிணி.

"சுகி!'' மூச்சு திணறக் கத்தினான்.

"ஊம்'' என்று ஊனசுரமாக பதில் வந்தது.

"பயப்படாதே கண்ணம்மா''

அடுத்த கணம் இருவரும் மூழ்குவதை உணர்ந்தான். சுழலிலே சுழன்று சுழன்று மூழ்கினார்கள். தான் நேசிக்கும் ஆற்றிலே தோற்றுவிடமாட்டோம் என்று நினைத்தான். ஆனால் சுகி அப்படியா ? தன் முழுபலத்தோடும் முக்கி, நீர்மட்டத்துக்கு மேலே வந்துவிட்டான். அந்த இடம் சுழல் பகுதி அதைவிட்டு வெளியேவரப் பாடுபட்டான். ஆனால் சுகி கெட்டியாக அவனைப் பற்றிக்கொண்டிருந்தாள். "சுகி! சுகி!'' என்று கெஞ்சினான். பதில் ஒன்றும் இல்லை.

இருவரும் சுழன்று சுழன்று வந்தார்கள். அப்படியே மூழ்கினார்கள். நிர்கதியான சுகியின் அணைப்பில் அவன் அசைய முடியாமல் போயிற்று.

அவள் உயிரோடு இருக்கிறாளா ? அவன் மூச்சுவிட வலியுடன் திணறினான். அவனால் பொறுக்க முடியவில்லை. ஒரு கணத்தில் அவன் கைகள் சுகியின் கழுத்தைச் சுற்றி அழுத்தின. அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அவன் உடல் பாரம் அத்தனையும் அவன் கைகளில் இறங்கியது.

இந்தச் சுமையைத் தளர்த்தினால் தான் அவன் பிழைப்பான். அப்பாடா நீண்ட பெருமூச்சு விட்டான். நிம்மதியாக இருந்தது. வெளிச்சம் எங்கே ? கரையை எட்ட விரும்பினான் – அவன் சாகவில்லை.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

– தற்கால இந்தியச் சிறுகதைகள்
தொகுதி–II நூலிலிருந்து.
வெளியீடு : *"சாகித்ய அகாதமி''*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில்

இந்தியாவிலேயே முதன்முதலாக உயிரி எரிபொருள் தயாரிப்பதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில், 17.8.2004 அன்று தலைமைச் செயலகத்தில், உயிரி எரிபொருள் (Bio-diesel) தயாரிப்பதற்காக காட்டாமணக்குப் பயிர் சாகுபடி மற்றும் உற்பத்தி செய்வதை மேம்படுத்தவும், மேலாண்மை செய்திடவும் மற்றும் உயிரி எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்திடவும், சென்னையிலுள்ள M/s.Mohan Breweries and Distilleries Limited நிறுவனத்திற்கும், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த M/s. D1 Oils Limited நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) கையெழுத்தானது.

கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு புதிய உத்வேகத்தை வழங்கிட காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு ஆகிய பயிர்களை சிறந்த மாற்றுப் பயிர்களாக வேளாண்மை செய்யும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2.7.2004 அன்று அறிவித்தார்கள்.

இதன் அடிப்படையில், காட்டாமணக்குப் பயிர்கள் மூலமாக உயிரி எரிபொருள் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த இது போன்ற ஒப்பந்தம் இந்தியாவிலேயே முதல் முதலாக தமிழ்நாட்டில் தான் கையெழுத்தாகி உள்ளது. அது மட்டுமல்ல, இங்கிலாந்து நாட்டு நிறுவனம் வேறு ஒரு நாட்டில் உள்ள நிறுவனத்துடன் இத்தகைய உயிரி எரிபொருள் தயாரிக்க ஒப்பந்தம் செய்து கொள்வதும் இதுவே முதன் முறையாகும். இத்திட்டத்தின் மூலம் தரமான விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன் மூலம் அவர்கள் அதிக அளவில் உற்பத்தித் திறனைப் பெருக்கி பயனடைய முடியும். தரிசு நிலங்கள் பயன் தரும் நிலங்களாக மாற்றப்படுவதோடு கிராமப்புறங்களில் அதிக அளவில் வேலைவாய்ப்பு பெருகவும், பொருளாதார மேம்பாடு அடையவும் மற்றும் சுற்றுப்புறம் தூய்மை அடையவும் இந்தத் திட்டம் வழிவகுக்கும்.

□ □ □

திண்டுக்கல் மாவட்டத்தில்

போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வரும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ரூ.91.35 கோடியில் தொடங்கி வைக்கப்பட்டு நடைபெற்று வரும் கரூர் – திண்டுக்கல் – நத்தம் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.இரா.விசுவநாதன் அவர்களுடன் இணைந்து பார்வையிட்டு பணிகளை ஆய்வு செய்தார்கள்.

திண்டுக்கல் நகராட்சி, திண்டுக்கல் மாவட்டத்தின் தலைநகர் பகுதியாகும். திண்டுக்கல் நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீரானது 1962ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான நீர் ஆதாரமான ஆத்தூர் காமராஜ சாகர் அணையிலிருந்து நீர் எடுக்கப்பட்டு பின் சுத்திகரிக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டுப் பின்னர் விநியோகிக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் 1986ஆம் ஆண்டு வைகை அணையிலிருந்து நீர் எடுக்கப்பட்டு அபிவிருத்தித் திட்டம் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து பருவமழை பொய்த்ததனால் திண்டுக்கல் நகராட்சிக்கு குடிநீர் வழங்கி வரும் நீர் ஆதாரங்களின் கொடுதிறன் மிகவும் குறைந்து கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும், மாவட்டத்தின் பிற பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளிலும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சியினால் மிகவும் பாதிக்கப்படும் பகுதியான குஜிலியம்பாறை, வேடசந்தூர், வடமதுரை மற்றும் திண்டுக்கல் ஒன்றியங்களிலுள்ள கிராம குடியிருப்புகளில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டினை முழுமையாக நீக்கும் பொருட்டு காவிரியாற்றினை நீராதாரமாகக் கொண்டு திண்டுக்கல் நகராட்சி, நத்தம் பேரூராட்சி, தாடிக்கொம்பு, அகரம், எரியோடு, வடமதுரை ஆகிய ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள 764 கிராம குடியிருப்புகள் மற்றும் கரூர் மாவட்டத்திலுள்ள 52 கிராம குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில் ரூ.91.35 கோடிக்கு

திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஆண்டு பராமரிப்பு செலவு ரூ.499 இலட்சம் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகளைத் துரிதப்படுத்தும் வகையில் திட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பகுதி 1ல் திண்டுக்கல் நகராட்சி, தாடிக்கொம்பு, அகரம், எரியோடு, வடமதுரை ஆகிய ஊரகப் பேரூராட்சிகளுக்கும் அய்யலூர் ஊரகப் பேரூராட்சி, திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களைச் சார்ந்த 816 கிராம குடியிருப்புகளுக்கும் மொத்த குடிநீர் ஒதுக்கீடு உள்ளிட்ட கூட்டு குடிநீர்த் திட்டம் செயல்படுத்த ஆணையிடப்பட்டது. இதற்கு ரூ.8,504.18 இலட்சம் முதல் கட்டமாக நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு நீராதாரமாக கரூர் மாவட்டம், புதுப்பாளையம் மற்றும் அரங்கநாதன் பேட்டை அருகில் காவிரியாற்றில் இரண்டு நீர் சேகரிப்பு கிணறுகள் (Collector Well) அமைக்கப்பட்டுள்ளன. நீர் சேகரிப்பு கிணறுகளிலிருந்து நீர் எடுக்கப்பட்டு 85 கி.மீ. நீளமுள்ள 800 மி.மி. முதல் 1000 மி.மி. விட்டமுள்ள பி.எஸ்.சி. (Pre Stressed Concrete) பிரதான நீர் உந்து குழாய் மூலம் கொண்டு செல்லப்பட்டு ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்புக் கிணறுகளில் நீர் சேகரிக்கப்பட்டுப் பயன்பெறும் பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் மற்றும் பகிர்மான குழாய் மூலம் விநியோகம் செய்யப்படும்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் குடிநீர் வழங்கல் குறித்த விவரம்:-

வ. எண்	பயன்பெறும் நகராட்சி மற்றும் பேரூராட்சி	மக்கள் தொகை	தற்போது குடிநீர் வழங்கும் அளவு (எம்.எல்.டி.)	எதிர் காலத்தில் குடிநீர் வழங்கப் படும் அளவு (எம்.எல்.டி.)
1.	திண்டுக்கல் நகராட்சி	1,96,619	11.90	19.20
2.	நத்தம் பேரூராட்சி	22,532	0.60	1.732
3.	எரியோடு பேரூராட்சி	7,866	0.186	0.452
4.	தாடிக்கொம்பு பேரூராட்சி	16,091	0.19	1.10
5.	வடமதுரை பேரூராட்சி	15,418	0.20	0.97
6.	அகரம் பேரூராட்சி	12,784	0.22	0.831

இத்திட்டத்தில் உள்ள பணிகள் யாவும் வெவ்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் பிப்ரவரி 2005இல் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்திற்கு ரூ.2,287.91 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து நத்தம் பேரூராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

நத்தம் நகரப் பேரூராட்சிக்கு ஒரு நபருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க மத்திய அரசின் விரைவுப்படுத்தப்பட்ட நகர குடிநீர்த் திட்டத்தின் கீழ் ரூ.490.30 இலட்சம் 23.1.2003 அன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மைய அரசின் மானியம்	ரூ.245.18 இலட்சம் (50%)
மாநில அரசின் மானியம்	ரூ.220.66 இலட்சம் (45%)
உள்ளாட்சி அமைப்பின் மானியம்	ரூ.24.52 இலட்சம் (5%)
மொத்தம்	ரூ.490.36 இலட்சம்

இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக நத்தம் பேரூராட்சிக்கான திட்ட மதிப்பீடு மற்றும் மைய அரசு ஒப்புதல் அளித்த திட்ட செலவுகள்:

திட்ட மதிப்பீடு	மைய அரசு ஒப்புதல் அளித்த தொகை	வித்தியாசம்
ரூ.630.82 இலட்சம்	ரூ.490.36 இலட்சம்	ரூ.140.46 இலட்சம்

இத்திட்டத்திற்குத் தமிழக அரசு நிதி பங்கேற்பில் உள்ளாட்சி அமைப்புப் பங்குத் தொகையாக ரூ.164.98 (24.52+ 140.46) இலட்சமாக உயர்த்தி மொத்தம் ரூ.630.82 இலட்சத்திற்குத் தமிழக அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்திற்குக் காவிரியாற்றினை நீராதாரமாக கொண்டு அமைக்கப்பட்டுள்ள திண்டுக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து திண்டுக்கல்லில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது நீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து நீர் உந்து குழாய் வழியாக நத்தம்



பேரூராட்சிக்குக் கொண்டு செல்லப்பட்டு ஏற்கெனவே செயல்பாட்டிலுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளில் ஏற்றி பகிர்மான குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்தில் உள்ள பணிகள் யாவும் வெவ்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் செப்டம்பர் 2004இல் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை திட்டத்திற்கு ரூ.210.92 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு நடைபெற்று வரும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளைத் திண்டுக்கல்லுக்கு வருகை தந்த மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே.பி.அன்பழகன் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. இரா.விசுவநாதன் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு.முருகய்யா, இ.ஆ.ப. அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆத்தூர் திரு. பி.கே.டி.நடராஜன், பழனி திரு. வி.சின்னசாமி, வேடசந்தூர் திரு. பி.ஆண்டிவேல். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் திரு பெருமாள், திரு. செல்வம், திட்ட அலுவலர் மாவட்டஊரக வளர்ச்சி முகமை, திரு. நீ.இடிமன்னன், உதவி இயக்குநர், பேரூராட்சிகள் திரு. மைக்கேல் டேவிட் ஆகியோருடன் ஆலோசனை மற்றும் ஆய்வு செய்த பிறகு அனைத்துப் பணிகளையும் நேரிடையாகச் சென்று 09.07.2004 அன்று பார்வையிட்டார்கள். அனைத்துப் பணிகளையும் அரசு நிர்ணயித்துள்ள காலக்கெடுவிற்குள் முடிக்குமாறு மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன் அவர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மேலும், திண்டுக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பகுதி 2ல் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஆறு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 759 ஊரகக் குடியிருப்புகள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு ரூ.2,137 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பரிசீலனையில் உள்ளது. மேலும், கரூர் மாவட்டத்தில் உள்ள தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 50 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.148 இலட்சம் செலவில் நிறைவேற்ற நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிவடையும் போது குடிதண்ணீர் பிரச்சினையை எதிர் கொண்டுள்ள திண்டுக்கல் மாவட்டம் திட்டத்தின் வாயிலாக பயன்பெற்று எவ்வித குடிநீர்த் தட்டுப்பாடும் இல்லாத ஓர் மாவட்டமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. இத்திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்டறிய வந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களிடம் ஆய்வு செய்த இடங்களிலெல்லாம் பொதுமக்கள் திரளாக வருகை தந்து திட்டத்தைத் தந்துதவிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, தங்களது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

– மு.பழனிசாமி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல்.

ஒலிம்பிக் வரலாறு

சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த கிரேக்க மக்கள் ஒலிம்ப்பியா என்னும் சமவெளி ஒன்றில் ஜூஸ் என்னும் தேவதைக்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை விழா எடுத்து வந்தார்கள். இவ்விழாவை யொட்டிச் சில விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி வந்தனர். இவையே பின்னர் ஒலிம்பிக் ஆட்டங்கள் எனப்பட்டன.

கிரேக்கர்கள் நடத்திய இந்த விழாவில் முதல் நாள் கடவுள் வணக்கமும், பலியிடுதலும் நடைபெறும். பிற நாள்களில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். தொடக்கத்தில் ஓட்டப் பந்தயம் மட்டுமே நடந்தது. பின்னர் குத்துச் சண்டை, மல்யுத்தம் போன்ற போட்டிகளும் சேர்க்கப்பட்டன. இப்போட்டிகளில் பெண்கள் கலந்து கொள்வதில்லை. போட்டியில் வென்ற வீரர்கள் புகழ்ந்து பாராட்டப்பட்டனர். ஆலிவ் மரத்தின் பூங்கொத்துகளாலான முடிகள் அவர்கள் தலையில் சூட்டப்பட்டன. அவர்களின் பெயர்கள் நாடு முழுவதும் பறைசாற்றி மக்களுக்கு அறிவிக்கப்பட்டன. புலவர்கள் அவர்களைப் புகழ்ந்து பாடினர். சிற்பிகள் அவர்களின் உருவச் சிலைகளைச் செதுக்கி வைத்தார்கள். இவ்வாறு இவ்விழா கி.மு. 8ஆம் நூற்றாண்டு முதல் நான்காண்டுகளுக்கு ஒரு முறை நடந்து வந்தது. கி.பி.394-இல் ரோம் மன்னர் இவ்விழாவைத் தடைசெய்தார். அது முதல் 1,500 ஆண்டுகள் வரை இவ்விழா நடைபெறாமல் நின்றுவிட்டது.



ஒலிம்பிக் ஆட்டங்கள் நடைபெற்று வந்த பண்டைக்கால விளையாட்டு அரங்கு ஒன்றை 1878-இல் தொல்பொருள் ஆய்வாளர்கள் அகழ்வாய்வின் போது கண்டறிந்தனர். அதையடுத்து ஒலிம்பிக் ஆட்டங்களை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்று ஓர் இயக்கம் தோன்றியது. 1894-இல் பன்னாட்டு மாநாடு ஒன்று நடைபெற்றது. இதில் பன்னாட்டு ஒலிம்பிக் ஆட்டக்குழு அமைக்கப்பட்டது. இக்கால ஒலிம்பிக் போட்டியின் முதல்விழா 1896-இல் கிரேக்க நாட்டிலுள்ள ஏதென்ஸ் நகரில் நடத்தப்பட்டது. அதுமுதல் பல்வேறு நாடுகளில், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 1900ஆம் ஆண்டில்தான் முதன் முதலில் பெண்கள் அனுமதிக்கப்பட்டனர். சென்ற நூற்றாண்டில், இரு உலகப்போர்கள் நடந்து கொண்டிருந்தபோது மட்டும் (1914-18, 1939-45) ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை.

ஒலிம்பிக் போட்டி மத்தியக் குழு ஒன்று உள்ளது. இதில் எல்லா நாடுகளும் உறுப்பினர்களாக உள்ளன. ஒவ்வொரு நாட்டிலும் தேசிய ஒலிம்பிக் கழகமும், ஒலிம்பிக் போட்டிக் குழுவும் உண்டு. தேசிய ஒலிம்பிக் கழகம் உள்நாட்டில் ஒலிம்பிக் விழாவை நடத்துகிறது.

மேலும், பன்னாட்டு ஒலிம்பிக் போட்டிகளுக்கு தன் நாட்டு ஆட்டக்காரர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது.

ஒலிம்பிக் போட்டி நடந்த இடங்கள்

ஆண்டு	இடம்
1896	ஏதென்ஸ் (கிரீஸ்)
1900	பாரிஸ் (பிரான்ஸ்)
1904	செயின்ட் லூயி (அமெரிக்கா)
1908	லண்டன் (பிரிட்டன்)
1912	ஸ்டாக்ஹோம் (சுவீடன்)
1920	ஆன்ட்வெப் (பெல்ஜியம்)
1924	பாரிஸ் (பிரான்ஸ்)
1928	ஆம்ஸ்டர்டாம்(ஹாலந்து)
1932	லாஸ் ஏஞ்சலிஸ் (அமெரிக்கா)
1936	பெர்லின் (ஜெர்மனி)
1948	லண்டன் (பிரிட்டன்)
1952	ஹெல்சின்க்கி (பின்லாந்து)
1956	மெல்போர்ன் (ஆஸ்திரேலியா)
1960	ரோம் (இத்தாலி)
1964	டோக்கியோ (ஜப்பான்)
1968	மெக்சிக்கோ (மெக்சிக்கோ)
1972	மியூனிச் (ஜெர்மனி)
1976	மான்ட்ரீல் (கனடா)
1980	மாஸ்க்கோ (ரஷ்யா)
1984	லாஸ் ஏஞ்சல்ஸ் (அமெரிக்கா)
1988	சியோல் (கொரியா)
1992	பார்சிலோனா (ஸ்பெயின்)
1996	அட்லாண்டா (அமெரிக்கா)
2000	சிட்னி (ஆஸ்திரேலியா)
2004	ஏதென்ஸ் (கிரீஸ்)



1916, 1940, 1944 ஆகிய ஆண்டுகளில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை.

இக்கால ஒலிம்பிக் போட்டிகளில் ஓட்டம், தாண்டுதல் முதலிய கள விளையாட்டுகளுடன், நீந்துதல், குதிரையேற்றம், சிலம்பம், கத்திச் சண்டை, துப்பாக்கி சுடுதல், சைக்கிள் ஓட்டுதல், படகு ஓட்டுதல், பளு தூக்குதல், ஈட்டி எறிதல், கால்பந்து, கூடைப்பந்து, ஆக்கி முதலிய பலவகையான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறுகின்றன. ஒலிம்பிக் ஆட்ட விழாவில் சமயம், வகுப்பு, இனம், நிறம் ஆகியவற்றைப் போன்ற வேறுபாடுகள் எதுவுமின்றி எல்லா நாட்டவர்களும் கலந்து கொள்கின்றனர். விழாத் தொடக்கத்தில் ஆதிகாலத்தைப் போன்று பலியிடும் வழக்கமில்லை; பதிலாக ஒலிம்பிக் ஒளிவிழா நடைபெறுகிறது. ஒலிம்பிக் சுடர் எடுத்துவரப்பட்டு முதலில் விளையாட்டு அரங்கத்தில் ஏற்றி வைக்கப்படும். பின்னர் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கும். ❖

கும்பகோணம் தீ விபத்தில் காயமுற்று சிறப்பு உயர் பிளாஸ்டிக் சிகிச்சை பெற்ற குழந்தைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிறப்பு உயர் பிளாஸ்டிக் சிகிச்சை அளிக்கப்பட்ட, கும்பகோணம் தனியார் பள்ளி தீ விபத்தில் காயமடைந்த குழந்தைகளான செல்வி அ. கவுசல்யா, செல்வன் பா. விஜய் ஆகிய இருவரும் பூரண குணமடைந்து தங்களது பெற்றோருடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை 18.8.2004 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து, தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் அரசு உதவி பெறும் தனியார் பள்ளியில் 16.7.2004 அன்று கொடிய தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் துயரச் செய்தியைக் கேட்டதும், நெஞ்சம் பதைபதைத்துப் போன மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உடனடியாக நேரில் அங்கு சென்று ஆய்வு மேற்கொண்டு, தீ விபத்தில் சிக்கி உயிர் பிழைத்து தீவிர சிகிச்சை பெற்று வரும் குழந்தைகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை செய்து கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்கள்.

தீக்காயங்களுடன் போராடிக் கொண்டிருந்த குழந்தைகளை எப்பாடு பட்டேனும் காப்பாற்றி விட வேண்டும் என்ற நோக்கத்துடன், தேவையான அனைத்து வகையான சிறப்பு மருத்துவ வசதிகளையும் அளித்திட ஆணையிட்டதுடன், தீக்காயங்களுக்கு சிகிச்சை அளிக்க சிறப்பு மருத்துவக் குழுக்களை சென்னையிலிருந்தும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள தலைசிறந்த மருத்துவமனைகளிலிருந்தும் கும்பகோணத்திற்கு வரவழைத்து சிகிச்சை அளிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

மேலும், கடுமையான காயம் அடைந்து சிறப்பு உயர் மருத்துவ சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளை உடனடியாக சென்னைக்கு அழைத்து வந்து, சென்னையிலுள்ள பிரபல பிளாஸ்டிக் சிகிச்சை நிபுணர்களைக் கொண்டு நவீன பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்வதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளும்படி ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த ஆணையின்படி, கும்பகோணம் பழைய பாலக்கரையைச் சேர்ந்த அறிவழகன் – ஜோதி ஆகியோரது மகள் செல்வி அ. கவுசல்யா, கொரநாட்டுக் கருப்பூர் நத்தம் கிராமத்தைச் சேர்ந்த பாலசிவராமன் – ராஜலட்சுமி ஆகியோரது மகன் செல்வன் பா. விஜய் ஆகிய இரு குழந்தைகளும் தோல் ஒட்டு சிகிச்சை மேற்கொள்ளப்படுவதற்காக சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

அப்பல்லோ மருத்துவமனையில் இந்த இரு குழந்தைகளுக்கும் உயரிய சிகிச்சைகள் சிறப்புடன் வழங்கப்பட்டு தற்போது பூரண குணம் அடைந்துள்ளனர். சாவின் விளிம்பிலிருந்த தங்களது உயிரை மீட்டுத் தரும் வகையில் தக்க சிகிச்சை அளிக்க ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து தங்களது நன்றியைத் தெரிவிக்க வேண்டும் என்று இவ்விரு குழந்தைகளும் விரும்பினர்.

இந்த இரு குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 18.8.2004 அன்று தலைமைச் செயலகத்திற்கு அவர்களை நேரில் வரவழைத்து, கண்ணீர் மல்க நன்றி தெரிவித்த குழந்தைகளுக்கும் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கும் தமது வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், குழந்தைகளிடம் சாக்லேட்டுகளை வழங்கி, அவர்கள் தங்களது சொந்த ஊரான கும்பகோணம் செல்லப் பிரியாவிடை அளித்து வழியனுப்பி வைத்தார்கள். □

பெரம்பலூர் மாவட்ட சுகாதாரப் பணிகள் ஆய்வுக் கூட்டம்

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்டத்தில் நடைபெற்று வரும் சுகாதாரப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ந.தளவாய் சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் பேசும் போது, 'தமிழக அரசு ஆண்டு தோறும் ரூ.94 கோடி மதிப்பில் நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகளை வழங்குகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் உள்ள 1,413 ஆரம்ப சுகாதார மையங்களில் 93 மையங்கள் 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதுவரை மொத்தம் 119 ஆரம்ப சுகாதார மையங்கள் இவ்வாறு தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 333 ஆரம்ப சுகாதார மையங்களில் சித்த மருத்துவப் பிரிவு புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை அருகில் உள்ள தாம்பரத்தில் ரூ.30 கோடி மதிப்பில் தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைக்கப் பட்டுள்ளது.



அரசு தலைமை பொது மருத்துவமனைகளில் நாளொன்றுக்கு 3 இருதய அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. மேலும், ஆண்டிற்கு ரூ.3 கோடியே 38 இலட்சம் மதிப்பில் 70 பேஸ்மேக்கர் கருவிகளும் இருதய நோயாளிகளுக்கு பொருத்தப்படுகின்றன. தமிழக அரசின் சிறப்புத் திட்டமான மலை மற்றும் மலை சார்ந்த பகுதி மக்களுக்கு நேரடியாகச் சென்று மருத்துவம் செய்ய மருத்துவ உபகரணங்களுடன் வாகனமும், ரூ.1 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு 45 வாகனங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதில் ஒரு மருத்துவரும் செவிலியரும் உள்ளனர். பெரம்பலூர் மாவட்டத்தி மணக்குடையான், அரும்பாவூர், கொளக்காநத்த ஆகிய இடங்களிலும் இப்பணிகள் நடைபெறுகின்றன மேலும், மருத்துவமனைகளுக்குத் தேவையான 2,80 ஆம்புலன்ஸ் வாகனங்கள் விரைவில் வாங்கப்படும். அர மருத்துவமனைகளில் உள்ள 245 பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பகத்தின் மூலம் மருத்துவர்கள் தேர் செய்யப்படவுள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர் அர பொது மருத்துவமனை மேம்பாட்டிற்கு ரூ.35 இலட்சம் நி ஒதுக்கப்படும். அங்குள்ள பிரேத பரிசோதனை கட்டட புதுப்பிக்கப்பட்டு, குளிர்சாதன வசதி செய்துதரப்படும் அரியலூரில் உள்ள இரத்த வங்கி சீரமைக்கப்பட்டு இரத்த சேமிப்பு வங்கியாக மாற்றப்படும். இதற்கான நி விரைவில் வழங்கப்படும். பெரம்பலூர் அரசு தலைமை பொது மருத்துவமனைக்கான அடிப்படைத் தேவைகளை மேம்படுத்துவதற்கு நிதி ஒதுக்கப்படும். மேலும் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள வட்ட தலைமை மருத்துவமனைகளுக்கான அடிப்படைத் தேவைகள் குறித்த திட்டங்கள் வகுத்து, அதற்குத் தேவையான நி மதிப்பீட்டுடன் அரசுக்கு அறிக்கை அனுப் சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுப்பணித் துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது", என தெரிவித்தார்.

ஆய்வுக் கூட்டத்திற்கு முன்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெரம்பலூர் மற்றும் அரியலூர் அரசு பொது மருத்துவமனைகளுக்குச் சென்று மருத்துவமனையின் மருத்துவப் பிரிவுகள் மற்றும் பரிசோதனை நிலையங்கள், அவசர சிகிச்சைப் பிரிவு, பிணவறை, பிரேத பரிசோதனை அறை, மருந்துக்கிடங்கு ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக சட்டப்பேரவைத் துணை தலைவர் வரகூர் திரு. அ.அருணாசலம், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.து.விவேகானந்தன்,இ.ஆ.ப., தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. மா.ரவிச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெரம்பலூர் திரு ப.இராஜரத்தினம், அரியலூர் திரு. ப.இளவழகன், ஜெயங்கொண்டம் திரு. செ.அண்ணாதுரை, மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் பெரம்பலூர் திருமதி.ச.இராஜேஸ்வரி, அரியலூர் திரு.ப.தவசீலன் மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள், மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ❖

பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் தொழிற்சாலைகளை உருவாக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள 385 ஒன்றியங்களுக்கு தலா ரூ.1 கோடி முதலீட்டில் தொழில் தொடங்க வழிவகை செய்து புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை அறிவித்தார்கள்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் மொத்தம் ரூ. 1 கோடியே 18 இலட்சம் அரசு மானியத்தில் ரூ.7 கோடியே 90 இலட்சம் முதலீட்டில் 16 தொழிற்சாலைகளுக்கு அரசு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. வரகூர் தொகுதிக்குட்பட்ட ஆலத்தூர் ஒன்றியத்தில் ரூ.2 கோடியே 26 இலட்சம் மதிப்பில் சக்ரா பால் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலை தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இத்தொழிற் சாலையில் நாளொன்றுக்கு 25 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இது மேலும் அதிகரிக்கப்பட்டு 50 ஆயிரம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்படும். இத்தொழிற்சாலையில் 125 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வேப்பந்தட்டை ஒன்றியம் மலையாளப் பட்டியில் ரூ.80 இலட்சம் மதிப்பில் ஜவ்வரிசி தொழிற்சாலையும், பூலாம்பாடியில் ரூ.25 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் கரும்பு, மாம்பழச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலையும், பெரம்பலூர் ஒன்றியம் எசனையில் ரூ.4 இலட்சம் மதிப்பிலும், வேப்பூர் ஒன்றியம் வேள்வி மங்கலத்தில் ரூ.26 இலட்சம் மதிப்பிலும் பால் குளிரூட்டும் நிலையங்களும், அந்தூரில் ரூ.35 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் தேங்காய் நார்க் கட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலையும், கார்குடியில் ரூ.30 இலட்சம் செலவில் நவீன அரிசி ஆலையும், செந்துறை ஒன்றியம் நமங்குணத்தில் ரூ.77 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பில் நவீன அரிசி ஆலையும், உஞ்ஜினியில் ரூ.32 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் முந்திரிக் கொட்டையிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையும் நிறுவப்பட்டு வருகிறது.

ஆண்டிமடம் ஒன்றியம், பட்டணங் குறிச்சியில் ரூ.21 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பிலும், சூரக்குழியில் ரூ.32 இலட்சம் மதிப்பிலும், 2 முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலைகளும், அரியலூர் ஒன்றியம் வாலாஜா நகரத்தில் ரூ.43 இலட்சம் மதிப்பில் முந்திரி தொழிற்சாலையும், கயர்லாபாத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பில் சமையல் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையும், தா.பழூர் ஒன்றியம் நாயகனைபிரியாளில் ரூ.37 இலட்சம் மதிப்பில் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலையும், திருமானூர் ஒன்றியம் மேலப்பழூரில் ஜவ்வரிசித் தொழிற்சாலையும், ஜெயங்கொண்டத்தில் சமையல் எண்ணெய் மற்றும் மசாலா பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும் தொடங்க அரசு அனுமதி அளித்து, தொழிற்சாலைக்கான ஆக்கப்பூர்வப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பில் பின்தங்கி இருந்த பெரம்பலூர் மாவட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினால் தொழில்துறையில் முன்னேறி வரும் மாவட்டமாக மாறிவருகிறது.

– எம்.ஏ. லாரன்ஸ்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரம்பலூர்.

குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறிய கணக்கெடுப்புப் பணி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.8.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை உடனடியாக நல்கிட ஏதுவாக, அத்தகைய குழந்தைகள் பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுக்கும் வகையில், தமிழகத்திலுள்ள அனைத்து கிராமச் சுகாதார செவிலியர்கள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள கணக்கெடுப்புப் பணியைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்தக் கணக்கெடுப்பின் அடிப்படையில், அரசு மருத்துவ மனைகளில், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு, அகில இந்திய பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மருத்துவச் சங்கத்தின் உறுப்பினர்கள் உதவியோடும், ஏனைய குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு அரசு சிறப்பு மருத்துவர்கள் மூலமும் உரிய மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படும். இந்தத் திட்டம் இந்தியாவில் உள்ள ஏனைய அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக, தமிழ்நாட்டில் தான் முதன் முதலாக செயல்படுத்தப்படுகிறது.

கடந்த 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஊட்டியில் நடைபெற்ற அகில இந்திய பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மருத்துவர் சங்க மாநாட்டில், பிறவிக் குறைபாடாக குழந்தைகளுக்கு ஏற்படும் உதடு பிளவு மற்றும் அன்னப் பிளவு ஆகியவற்றுடன் உள்ள குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்கு அகில இந்திய பிளாஸ்டிக் மருத்துவச் சங்கத்தின் உறுப்பினர்கள் இலவசமாக மருத்துவ

சிகிச்சை அளிக்க உள்ளதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துக் கூறப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இதனை ஏற்று உதடு மற்றும் அன்னப் பிளவுக்கு சிகிச்சை அளிப்பதோடு மட்டுமல்லாமல், குழந்தைகளுக்கு ஏற்படும் ஏனைய பிறவிக் குறைபாடுகள் அனைத்துக்கும் இந்தத் திட்டத்தை விரிவு செய்ய ஆலோசனை வழங்கினார்கள். குழந்தைகளுக்கு ஏற்படும் பிறவிக் குறைபாடுகள் அனைத்தையும் பொது சுகாதாரப் பிரச்சினையாகவே கருதி, இதற்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்த ஆணையை ஏற்று சென்னைக்கு அருகே உள்ள திருநின்றவூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த சுகாதார உதவி மையங்களில் சென்னை அப்பல்லோ மருத்துவமனையின் பிரபல பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கே. ஸ்ரீதர் அவர்களது வழிகாட்டுதலின்படி ஒரு முன் ஆய்வுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்த முன் ஆய்வுத் திட்டத்தில் கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில், பிறவிக் குறைபாடு உள்ள குழந்தைகளைப் பற்றிய கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான படிவங்கள், பயிற்சி கையேடுகள் மற்றும் படங்களுடன் கூடிய வழிகாட்டி நூல் ஆகியவை தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நூல்கள், பல்வேறு வகையான பிறவிக் குறைபாடுகளை அடையாளம் கண்டு அது பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்திட கிராம சுகாதார செவிலியர்களுக்கும், சுகாதார ஆய்வாளர்களுக்கும் உதவியாக இருக்கும். தமிழ்நாட்டில் உள்ள 15 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அனைவரும் இந்த கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்படுவார்கள். இந்தக் கணக்கெடுப்புப் பணியில் 3,000 மருத்துவர்களும், 15,000 சுகாதாரத்துறை பணியாளர்களும் ஈடுபடுத்தப்படுவார்கள். வீடு வீடாக கணக்கெடுப்பு நடத்தப்பட்டு புள்ளி விவரங்கள் தொகுக்கப்படும். இந்தக் கணக்கெடுப்புப் பணி 15 நாட்களுக்குள் முடிக்கப்படும். வெளிப்படையாக கண்ணுக்குத் தெரிகின்ற குறைபாடுகளைக் கண்டறிய படங்களுடன் கூடிய வழிகாட்டி நூல் பயன்படும். இந்தக் கணக்கெடுப்பின் போது வெளிப்படையாகத் தெரியாத இதய நோய் போன்ற குறைபாடுகள் மருத்துவர்களின் பரிசோதனைக்குப் பின்னர் உறுதி செய்யப்பட்டு கணக்கெடுப்பில் சேர்க்கப்படும். கணக்கெடுப்பு முழுமையாக முடிந்ததும், அதன் அடிப்படையில், அரசு மருத்துவமனைகளில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத் தேவைப்படும் குழந்தைகளுக்கு, அகில இந்திய பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மருத்துவச் சங்கத்தின் உறுப்பினர்கள் உதவியோடும், ஏனைய குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு அரசு சிறப்பு மருத்துவர்கள் மூலமும் உரிய மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சுகாதார உதவி மையங்களில் பணியாற்றும் கிராம சுகாதார செவிலியர்களான காந்திமதி (லட்சுமிபுரம்), கே. உதயகுமாரி (தாசர்புரம்), ஆர்.எஸ். சாந்தி (கொசவன்பாளையம்), எஸ். முனியம்மாள் (நெமிலிச்சேரி), ஜி. பரமேஸ்வரி (திருநின்றவூர்) ஆகியோருக்கு இக்கணக்கெடுப்புப் பணிக்குத் தேவையான படிவங்கள் மற்றும் புத்தகங்களை நேரில் வழங்கி இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ந. தளவாய்சுந்தரம், தலைமைச் செயலாளர் திருமதி.லக்ஷ்மி பிராணேஷ், இ.ஆ.ப., சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறைச் செயலாளர் டாக்டர் என். சுந்தரதேவன், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் பி.கே. ராஜேந்திரன் ஆகியோரும், அகில இந்திய பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மருத்துவச் சங்கத்தின் சார்பாக டாக்டர் கே. ஸ்ரீதர் மற்றும் மருத்துவர்கள் எஸ். ராஜசபாபதி, எஸ். கணபதி கிருஷ்ணன், வி. ஜெயராமன், ஜேம்ஸ் பாண்டியன் ஆகியோரும் கலந்து கொண்டனர். ❖

வண்ணத்துப் பூச்சி

வண்ணத்துப்பூச்சி, பூச்சிகள் வகுப்பில் லெபிடோடெரா எனும் செதில் சிறகிகள் வரிசையைச் சேர்ந்தது. இவற்றிற்கு அகன்ற இரு ஜதை இறக்கைகள் உள்ளன. இந்த இறக்கைகள் சிறு சிறு செதில்களினால் போர்த்தப்பட்டிருக்கும். கைட்டின் எனும் பொருளினாலான இந்தச் செதில்கள் கையால் தொட்டால் உதிர்ந்துவிடும். சில மில்லி மீட்டர் இறக்கை விரிப்பு கொண்ட சிறிய வகையிலிருந்து முப்பது செ.மீ. இறக்கை விரிப்புகள் கொண்டவை வரை பல உருவ அளவுகளில் உள்ளன. இவற்றின் வாழ்க்கைப் பருவத்தில் முட்டை, புழு, கூட்டுப் புழு, பூச்சி என்று நான்கு நிலைகள் உள்ளன. புழுவிலிருந்து கூட்டுப் புழு நிலையை அடையும் முன் மூன்று அல்லது நான்கு முறை சட்டை உரித்துக் கொள்ளும். பல வண்ணங்களைக் கொண்ட இறக்கைகளைக் கொண்டது வண்ணத்துப் பூச்சி. இந்த வண்ணமே இதன் எதிரிகளிடமிருந்து இதைக் காக்கிறது. ❖

திருவாரூர் மாவட்டத்தில்
மக்களே மேற்கொண்ட மகத்தான பணி

மக்களாட்சி என்பது மனித சமூகம் கண்ட உன்னத ஆட்சி முறையாகும்.

அரசியல் மேதைகளும், ஆட்சித் துறை விற்பன்னர்களும் தத்துவ ஞானிகளும் இந்த ஆட்சி முறைக்கு பலவகையில் விளக்கம் தந்துள்ளார்கள்.

"மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்கள் அரசு" என்று ஆப்ரகாம்லிங்கன் குறிப்பிட்டார்.

" இரத்தம் சிந்தாமல் மக்களின் சமூக பொருளாதார வாழ்வில் மாற்றத்தை கொண்டு வருவதற்கு வல்லமை படைத்த அரசு அமைப்பு" என்று அரசியல் சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் விளக்கம் தந்தார்.



இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழறிஞர் என்று போற்றப்படும் பேரறிஞர் அண்ணா மக்களாட்சிக்கு சிறப்பானதொரு விளக்கத்தினைத் தந்தார்கள்.

" Democracy is not a form of Government alone. It is an invitation to a new way of life" என்று குறிப்பிட்டார்.

" மக்களாட்சி என்பது ஒரு அரசு அமைப்பு முறை மட்டுமல்ல. அது ஒரு புதிய வாழ்க்கை முறைக்கான அமைப்பாகும்" என்பது பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்தாகும். இத்தகைய மக்களாட்சி அமைப்பு முறையில் அரசின் எந்த ஒரு திட்டமும் முழுமையாக செயல்வடிவம் பெற வேண்டுமெனில் மக்களின் ஈடுபாடும் பங்கேற்பும் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

இந்த உன்னத நோக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் திருவாரூர் மாவட்டத்தில் மக்களின் பங்கேற்போடு மகத்தான பணி ஒன்று வெண்ணாற்றில் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதுதான் 25,000– க்கும் மேற்பட்ட மக்கள் மேற்கொண்ட நெய்வேலி காட்டாமணக்கு செடி அகற்றும் பணியாகும்.

வெண்ணாற்றில் 50 கி.மீ. தொலைவிற்கு நெய்வேலி காட்டாமணக்கு செடி அழிக்கும் பணியினை செம்மையாக நிறைவேற்றி மாவட்ட நிருவாகத்தின் துணையோடு பொதுமக்கள் சாதனை படைத்துள்ளார்கள்.

காவிரி டெல்டா பகுதியில் பாயும் முக்கிய பாசன ஆறுகளில் ஒன்றான வெண்ணாறு, நீடாமங்கலம் அருகே மூணாறு தலைப்பிலிருந்து பிரிந்து சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தொலைவிற்குச் சென்று திருத்துறைப்பூண்டி அருகே உள்ள பொன்னிரை கிராமத்தில் அரிச்சந்திரா நதியில் இணைகிறது.

வெண்ணாற்றில் வரும் தண்ணீர் மூலம் இம்மாவட்டத்தில் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. ஆனால் இந்த ஆற்றில் அதிக அளவில் நெய்வேலி காட்டாமணக்கு செடிகள் மண்டிக் கிடப்பதால் பாசனம் தடைபடும் நிலை உள்ளது. எனவே வேளாண்மைக்கு இடையூறாக உள்ள இந்த காட்டாமணக்கு செடிகளை அகற்றி விவசாயத்தை பாதுகாக்க பொது மக்களின் பங்களிப்புடன் இந்தப் பணியினை மேற்கொள்ள மாவட்ட நிருவாகமும், மாவட்ட ஊராட்சியும் முயற்சி எடுத்தது.

இந்தப் பணியில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், பொதுமக்கள், தொண்டு நிறுவனங்கள், சேவை அமைப்புகள் 'ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 25 ஆயிரம் பேர் பங்கு கொண்டு ஒரே நாளில் ஐம்பது கிலோ மீட்டர் தொலைவிற்கு ஆற்றில் படர்ந்திருந்த காட்டாமணக்கு செடிகளை அப்புறப் படுத்தினர்.

திருவாரூர் மாவட்டம் லெட்சுமாங்குடியில் இந்தப் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பி. ஏகாம்பரம் , இ.ஆ.ப., தொடங்கி வைத்தார். மாநிலங்களவை உறுப்பினர் திரு. ஆர். காமராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கோ. பழனிச்சாமி, திரு. சிவபுண்ணியம் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் தலைவர்கள், அரசு அலுவலர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

கடைமடைப் பாசனப் பகுதி என்றாலே பாசனத்திற்கு தண்ணீர் தடையின்றி வராது. மழைக்காலத்தில் வெள்ளம் வந்தால் வடியாது என்று சொல்வார்கள்.

ஆற்றில் மண்டிக் கிடக்கும் நெய்வேலி காட்டாமணக்கு செடிகளே இதற்கு அடிப்படைக் காரணமாகும். அரசின் அரவணைப்போடு மாவட்ட நிருவாகத்தின் உதவியுடன் மாவட்ட ஊராட்சியின் முனைப்பான செயல்பாட்டில் பொதுமக்களின் அளவற்ற ஆதரவோடு நடைபெற்ற இந்த அரும்பணி மகத்தானது என்றால் மிகையாகாது.

– இரெ. மகாலிங்கம்
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருவாரூர்

இந்திய சுற்றுலாவில் இடம் பெறும்
செட்டிநாடு பாரம்பரிய நகரம்

இந்திய சுற்றுலாத்துறையின் பட்டியலில் சிவகங்கை மாவட்டம் 'செட்டிநாடு பாரம்பரிய நகரமும்' இடம் பெற இருக்கிறது. நகரத்தார்கள் என்றழைக்கப்படும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் 'கட்டடக் கலை மற்றும் கலாச் சாரங்களை' மையமாகக் கொண்டு இந்நகரம் அமைகிறது. காரைக்குடி அருகிலுள்ள கானாடு காத்தான், செட்டிநாடு, தேவாரப்பட்டி, தாதம்பட்டி ஆகிய மரங்கள் சூழ்ந்த இயற்கை எழில் கொஞ்சும் கிராமங்களை உள்ளடக்கி இந்தச் சுற்றுலா நகரம் உருவாகிறது. இந்த நான்கு கிராமங்களில் இருக்கும் கட்டட அமைப்புகளில் எந்த மாறுதலும் செய்யாமல் பாரம்பரிய மாளிகைகள், இயற்கை எழில் மிக்க சுற்றுப்புற நகரங்களை ஒருங்கிணைத்து 'பாரம்பரிய நகரம்' உருவாக்கப்பட உள்ளது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே உள்ள கானாடுகாத்தான் கிராமத்தில் ரூ.50 இலட்சத்தில் நடைபெற உள்ள செட்டிநாடு பாரம்பரிய பகுதி அபிவிருத்திப் பணியை செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலர் திரு.வ. ராமதாஸ், இ.ஆ.ப., பார்வையிட்டார். சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் சுற்றுலா வளர்ச்சிப் பணிக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான பணிகள் குறித்து அறிவுரைகள் வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசும் போது, "இப்பகுதியில் உள்ள கம்பீரமான தோற்றத்துடன் கலை வேலைப்பாட்டுடன் கூடிய சிற்பம் மற்றும் ஓவியங்கள் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ள வீடுகளைப் பார்வையிட்டேன். பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் இத்தகைய வீடுகளின் சிறப்புகளை வெளி உலகிற்குத் தெரியப்படுத்தும் வண்ணம் சிறு புத்தகங்கள், வரைபடங்கள் மூலம் விளம்பரம் செய்யப்படும்.

சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் இந்தப் பகுதியில் வாழும் மக்கள் வாழும் விதம், அவர்கள் பயன்படுத்திய பொருள்கள் கலை நயம் மிகுந்த அரண்மனை போன்ற வீடுகள் வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கும். செட்டிநாட்டை நோக்கி வரும் சாலைகள் சிறப்பாகப் போடப்பட வேண்டும். மின் விளக்கு, குடிநீர் வசதிகள் நன்கு செய்யப்பட வேண்டும். கழிப்பறை வசதி போன்ற முக்கியமான பணிகள் செய்து முடிப்பது தலையாய பணியாகும். அரண்மனை போன்ற கட்டடத்தின் உரிமையாளர்கள் மனம் நோகாமல் சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டு இது குறித்து மற்றவர்களிடம் சொல்லும் அளவிற்கு நடந்து கொள்ள வேண்டும். அங்கு உள்ள எந்தப் பொருளும் சேதம் ஆகாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். செட்டிநாட்டு கலைநயம் மிகுந்த பொருள்கள், வாழ்க்கைக்கு உகந்த பொருள்கள், கலைநயம் மிக்க ஓவியங்கள் ஆகியவைகளைக் கொண்டு அருங்

காட்சியகம் கூட ஏற்படுத்தலாம். இது குறித்த புகைப்படங்கள் மற்றும் செய்திகளைச் சேகரித்து நன்கு விளம்பரம் செய்யப்படும்" என்று கூறினார்.

பிரமாண்ட மாளிகைகள்

மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, இலங்கை, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா நாடுகளில் நகரத்தார்கள் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். போருக்குப் பின்னால் பல நாடுகளுக்கு சுதந்திரம் கிடைத்ததால், நகரத்தார்களின் ஏராளமான அசையாச் சொத்துக்கள் மற்றும் வணிக வருவாய் புதிய அரசுகளின் கைகளுக்கு சென்றதால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வெளிநாடுகளில் வணிகத்தில் கொடிகட்டிப் பறந்த காலத்திலும் நகரத்தார்கள் தங்களது பாரம்பரிய கலாச்சாரங்களையும், பிறந்த மண்ணையும் மறக்கவில்லை. காடுகள் சூழ்ந்த வறண்ட பொட்டல் காடுகளைச் செம்மைபடுத்தி வெளிநாடுகளில் தரமான விலை உயர்ந்த மரங்களைக் கொண்டு வந்து சிற்ப வேலைப்பாடுகளுடன் அரண்மனை மாளிகைகளை உருவாக்கினர். 70 ஆண்டுகளுக்கு முன்பு நினைத்துக்கூட பார்க்க முடியாத வகையில் கட்டடங்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு மாளிகையும் ஒரு தெருவில் தலைவாசல் என்றால் மறுதெருவில் புறவாசல் இருக்கும். அந்த அளவிற்குப் பரந்து விரிந்த பிரமாண்டமான மாளிகைகளை நகரத்தார்கள் கட்டினார்கள். பர்மா தேக்கு, சந்தன மரங்கள், இத்தாலியன் மார்பிள்களைக் கொண்டு வந்து கலை நயத்துடன் கட்டடங்கள் வடிவமைக்கப்பட்டன.

கட்டடச் சிறப்புகள்

ஒவ்வொரு கட்டடத்திலும் தீட்டப்பட்ட வண்ணங்கள், மரச்சிற்பங்கள் இன்றைக்கும் மெருகு குலையாமல் கண்ணைக் கவருகின்றன. வரவேற்பு அறை, பார்வையாளர் அறை, படுக்கை அறை, படிப்பக அறை, ஓய்வு அறை, நவதானியங்கள் வைப்பறை, ஆபரணங்களைப் பாதுகாக்க பெட்டகங்களுடன் கூடிய தனி அறை, பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த அறை, சமையல் அறை, காற்றோட்ட வசதிக்கு மையத்தில் முற்றம், அந்தக்காலத்திலே மழைநீர் சேமிப்பு முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட முற்றம், அதைச் சுற்றிலும் அமர்ந்து மழையை ரசிக்க வசதி, உறவினர்கள், நண்பர்கள் தங்க சிறப்பு அறை, பூஜை அறை, மதில் போன்ற சுற்றுச்சுவர், விலங்குகளுக்குத் தனி இடம், தோட்டம், விளையாட்டு மைதானம் எனச் சிறப்பான கட்டட அமைப்பு பெரும் பாலான மாளிகைகளில் இடம் பெற்றிருக்கிறது. கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக இந்த மாளிகைகள் இன்றைக்கும் விளங்கிவருகின்றன. தமிழ்நாடு அரசின் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளில் காரைக்குடிப் பகுதி அயல்நாட்டவரைக் கவர்ந்து ஒரு சிறந்த சுற்றுலாத் தளமாக விளங்கி, அந்நியச் செலாவணியைக் குவிக்கும் என்பதில் வியப்பில்லை.

– ஆ.கோபாலன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாடு

9-8-2004, 10-8-2004 மற்றும் 11-8-2004


தமிழரசு
R.N.I. NO.21446/70
RGN NO.TN/PMG (CCR)/836/03-05. WPP - 518.
TSE 4316

தமிழரசு
செப்டம்பர் 2004



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
ஆவணி – புரட்டாசி
மலர் : 36 இதழ் : 3
செப்டம்பர் 2004
விலை ரூ.10

அட்டைப்பட விளக்கம்

முதலாம் பக்க அட்டை : மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு (புதுடெல்லி – 16.9.2004)

இரண்டாம் பக்க அட்டை : மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் புதுடெல்லியில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள [illegible] விருந்தினர் இல்லத்தை 16.9.2004 அன்று திறந்து வைத்தார்கள்.

மூன்றாம் பக்க அட்டை : தந்தை பெரியார் பிறந்த நாள் விழா

நான்காம் பக்க அட்டை : பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

தமிழ்நாடு ... சென்னை-600 008
227157

இந்த இதழில்...

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி 2
- ஆசிரியர் தினவிழா 3
- ஊட்டச்சத்து நிலையில் உயர்ந்து வரும் தமிழகம் 5
- தமிழக அனல் மின் நிலையங்களுக்கு மத்திய அரசின் தங்கக் கேடயம் 9
- உலக தென்னை தினத்தையொட்டி இரண்டு சிறப்புத் திட்டங்கள் 10
- வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள் விழா 12
- தீரன் சின்னமலை விழா 14
- கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் – கீரப்பாளையத்தில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் உரை 17
- 3 திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கொடை 21
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் பல்துறைப் பணி விளக்க முகாம் 22
- தமிழ்நாடு வனத்துறைக்கு அகில இந்திய அளவில் விருது 24
- உயராய்வில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 25
- மும்பை மாணவ, மாணவியருக்கு இலவச தமிழ்ப்பாட நூல்கள் 29
- கடலூர் சுற்றுலா கோடை விழா 30
- செக்கிழுத்த செம்மல் 33
- நாகை மாவட்டத்தில் சம்பா முனைப்பு இயக்கம் 36
- தமிழக அனல் மின்நிலையங்களில் மின் உற்பத்தி பாதிக்கப்படா வண்ணம் தேவையான நிலக்கரி வழங்கப்பட வேண்டும் 37
- இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் 41
- காவல்துறை அலுவலர்களுக்கு ரொக்கப் பரிசு 43
- கண் தானம் 45
- முந்து தமிழ்க் கல்வெட்டுகள் 47
- கவுரவிப்பு (சிறுகதை) 49
- தந்தை பெரியார் பொன்மொழிகள் 57
- பேரறிஞர் அண்ணா அறிவுரைகள் 58
- தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் ஆடிப்பெருக்கு விழா 59
- தேனியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த மாவட்ட விளையாட்டு அரங்கம் 62
- இதய நோய்கள் (மருத்துவம்) 65
- விருதுநகர் மாவட்டத்தில் அனைவருக்கும் கல்வி இயக்கம் 69
- தமிழக தடகள வீரருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ.1 இலட்சம் நிதி உதவி 72
- கரூர் மாவட்டத்தில் மகளிர் சுகாதார வளாகங்கள் 73
- திண்டுக்கல் மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் நடைபெற்று வரும் பணிகள் 78
- மாணவர் பக்கம் 80

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம், ஒமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

ஆசிரியர் பணி சிறக்கட்டும், அறிவோங்கித் தமிழகம் உயரட்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி

அறிவுலகம் படைக்கும் ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் என் அகம் கனிந்த ஆசிரியர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

கல்வியைக் கண் என்றும், அதைப் பெற்றவரைக் கண்ணுடையர் என்றும் வள்ளுவர் பெருமான் கூறுகிறார். அத்தகைய கல்விக் கண்ணை அளிப்பவரை, உச்சிமேல் வைத்துப் போற்றுவது நமது மரபு. அந்த மரபின் அடிப்படையில், மகத்தான மனிதவள மேம்பாட்டுப் பணியாம் கல்விப் பணியில் சிறந்து நிற்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு ஆண்டுதோறும் உரிய விருது அளித்து நாம் உவகை கொள்கிறோம்.

செப்டம்பர் 5–ஆம் நாள் ஆசிரியர் தினம். நமது தாயகத்தின் தத்துவச் சிறப்பைத் தரணிக்கு உணர்த்திய தத்துவஞானி சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் பிறந்த திருநாள் அது. கல்லூரிப் பேராசிரியராக மட்டும் அல்லாமல், மானுடத்தின் பேராசிரியராகவும் விளங்கிய அந்த மாமனிதரின் பிறந்தநாளே ஆசிரியர் தினமாக நாடெங்கும் கொண்டாடப்படுகிறது.

இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவராக விளங்கிய பேராசிரியர் டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்தநாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுவதும், அவரது பெயரால் நல்லாசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்படுவதும் மிகப் பொருத்தமானது. அந்த வகையில் இக்கல்வியாண்டில் நல்லாசிரியர் விருது பெறும் அனைத்துப் பெருமக்களையும் நான் வாழ்த்துகிறேன்.

'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்னும் மகாகவி பாரதியாரின் கூற்றைத் தமிழக அரசு மெய்யாக்கி வருகிறது. அனைவருக்கும் கல்வி அளிப்பதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது என்பது பெருமைக்குரியது.

எனது அரசு பள்ளிக் கல்விக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. 2004–2005ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 4,203 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். எனது அரசு பொறுப்பேற்ற பிறகு, 22,178 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், 22,817 ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்பவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

தங்களிடம் ஒப்படைக்கப்படும் மாணவச் செல்வங்களை, தேசத்தின் விலைமதிப்பில்லாச் செல்வங்களாக உருவாக்கித் தர வேண்டிய பொறுப்பு ஆசிரியப் பெருமக்களுக்கு உள்ளது. தேசத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் இந்தத் திருப்பணியில், கடமை உணர்வும், கல்வித் திறனும் உள்ள நமது ஆசிரியப் பெருமக்கள் முத்திரை பதிக்க எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும், மீண்டும், எனது உளமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஆசிரியர் பணி சிறக்கட்டும்!
அறிவோங்கித் தமிழகம் உயரட்டும்!

❖ ❖ ❖

ஆசிரியர் தின விழா

பாரதத் திருநாட்டின் முன்னாள் குடியரசுத்தலைவர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாள் விழா, 5.9.2004 அன்று, தமிழகஅரசின் சார்பில் ஆசிரியர் தினவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

சென்னை கலைவாணர் அரங்கில் நிகழ்ந்த இந்த விழாவில் 354 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்பட்டது.

5.9.2004 பிற்பகல் 4.00 மணிக்கு மங்கல இசையுடன் தொடங்கிய இவ்விழாவுக்கு, கல்வித்துறைச் செயலர் திரு. கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தலைமையேற்றார். மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் திரு. சி.வி.சண்முகம் ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு கல்வியமைச்சர் தம் சிறப்புரையில், "நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் உயர்சக்தியாக விளங்குபவர்கள் ஆசிரியர்களே, நம் நாட்டிலுள்ள ஆசிரியர்கள் யாவரும் நல்லாசிரியர்களே. அவர்கள் யாவருடைய பிரதிநிதிகளாக இந்த 354 ஆசிரியர்களும் நல்லாசிரியர் விருது பெறுகிறார்கள் எனக்கூறி ஆசிரியர்களுக்கு வாழ்த்து வழங்கினார். மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய நல்லாட்சியில், தமிழகக் கல்வித் துறையில் ஒரு மவுனப்புரட்சி நடந்து வருகிறது. கல்வித்துறையோடு தாம் வகித்து வரும் வணிகவரித்துறை மூலமாகக் கிடைக்கும் 12 ஆயிரம் கோடி ரூபாய் வருமானத்தில் 5 ஆயிரம் கோடி ரூபாய் கல்வித்துறைக்குப் பயன்படுத்தப் படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில், கல்வித் துறைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை இதுகாட்டுகிறது என்றும் எடுத்துக்காட்டினார். அனைவருக்கும் ஆரம்ப கல்வி இயக்கத்தின் மூலம் தமிழகக் கல்வி செழித்து வருகின்றது. நமது தமிழக மாணவர்கள்,உலக அளவில் போட்டியிட ஆங்கில மொழி அறிவும் திறமையும் மிகவும் தேவை என்பதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பிரிட்டனிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்கள். இதன்படி, நம் மாநிலத்தில் உள்ள 225 பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. இதுபோன்ற தமிழகக்கல்வி வளர்ச்சி தொடர்பான தமிழக அரசுப்பணிகளை ஆசிரியர்கள் பொதுமக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

மேலும் "இதுபோன்ற எத்தனையோ சிறந்த கல்விச்செயல்பாடுகள் இருக்கும்பொழுது, எங்காவது ஒரு அசம்பாவிதம் நடந்தால் அதைச் சிலர் பெரிதுப்படுத்துகிறார்கள். தல்விக்கூடங்களில்கூட பீதிகளைக் கிளப்பும் பணியைச் சிலர் செய்து வருகிறார்கள். இவ்வாறு பீதி கிளப்புவோர் பள்ளிக் குழந்தைகளின் வாழ்க்கையோடு விளையாடுகிறார்கள் என்பதுதான் அர்த்தம். அது மிகவும் கண்டிக்கத் தக்கது'' என்றும் கூறினார்.

விழாவுக்குத் தலைமையேற்ற கல்வித்துறைச் செயலர் திரு. கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தம் தலைமையுரையில், அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் தின வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு, தமிழகக் கல்வித் துறையின் சிறப்புகள் பலவற்றை எடுத்துரைத்தார்.



10 மற்றும் 12 ஆவது வகுப்புகளில் அரசுத்தேர்வு முடித்து வெளிவரும் மாணவர் எண்ணிக்கை பிற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில்தான் அதிகம் என்றார். மேலும், தமிழக இளைஞர்கள் உலகத்தின் பல பகுதிகளில் சென்று பணியாற்றி வருகின்றனர். தமிழக மாணாக்கர்களின் தரத்தை மேம்படுத்த கலைத்திட்டம் பாடத் திட்டமும் பாடநூல்களும் உலகத் தரத்துக்கு இணையாக மாற்றியமைக்கப் பட்டு வருகின்றன என்றும், 8ஆம் வகுப்பு வரையிலான ஆசிரியர்களுக்கு ஆண்டு தோறும் 20 நாள்கள் பணியிடைப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிகளின் போது, தீ விபத்துத் தடுப்பு பயிற்சியும் அளிக்கப்படும் என்றார். இதன் மூலம் 2 இலட்சம் ஆசிரியர்கள் பயனடைகிறார்கள் என்றும் கூறினார்.

நடப்பு ஆண்டில் , தமிழக அரசு கல்வித்துறைக்கு 4,800 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதில் 4,200 கோடி பள்ளிக் கல்விக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது மொத்த பட்ஜெட்டில் 20 சதவிகிதமாகும் என்றார். மேலும் தமிழ்நாட்டில் ஒரு கி.மீட்டர் தொலைவில் தொடக்கப் பள்ளியும் 3 கி.மீட்டர் தொலைவுக்குள் நடுநிலைப் பள்ளிகளும் அமைக்கப்பட்டுள்ளன என்று பெருமையுடன் குறிப்பிட்டார். 364 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அது குறித்து ஆய்வு செய்த மத்தியக்குழு, மாணவர்களின் வசிப்பிடங்களுக்கும் பள்ளிகளுக்கும் இடையிலான தொலைவு பெருமளவு குறைக்கப்பட்டிருப்பதைப் பாராட்டி 1,031 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக உயர்த்த அனுமதி வழங்கியுள்ளது என்றும் கூறினார்.

மேலும், அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் சிறப்பானச் செயல்பாடுகள் மூலம், பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்துவோர் தொகை 4.5 இலட்சத்திலிருந்து 2.5 இலட்சமாகக் குறைந்துள்ளது என்றும் மேலும் அது குறையக்கூடும் என்றும் கூறினர்.

வாழ்த்துரை வழங்கிய கல்வித்துறைச் சிறப்புச் செயலர் திரு. அ.பன்னீர்செல்வம், இ.ஆ.ப., தம் உரையில், தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு வரை 45 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அடுத்த மூன்றாண்டுகளில் 50 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்தியாவில் உத்திரப் பிரதேசத்தில் 23 இலட்சம் பேர் எழுத்தறிவு பெறாதவர்கள், தமிழ்நாட்டில் 4 இலட்சம் பேர்தான். அனைவருக்கும் ஆரம்பக்கல்வித் திட்டத்தின் மூலம் மேலும் அது குறையும் வாய்ப்புள்ளது என்றும் கூறினார்.

பள்ளிக்கல்வி இயக்குநர் திரு.சு.பரமசிவன் வரவேற்புரையாற்றினார். அவர் தம் வரவேற்புரையில், டாக்டர் இராதாகிருஷ்ணனின் ஆசிரியப்பணி, கல்விக்குழுத் தலைவராக இருந்து ஆற்றியபணி, இந்தியத் தத்துவங்களை உலகறியச் செய்த பெரும்பணி ஆகியவற்றை நினைவு கூர்ந்து தமிழ்நாட்டு ஆசிரியர்களின் சிறப்புகளையும் எடுத்துரைத்தார்.

அனைவருக்கும் ஆரம்பக்கல்வி இயக்கத்தின் இயக்குநர் திரு. டி.கே.இராமச்சந்திரன், இ.ஆ.ப., மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர் திரு. ரெ.நாராயணசாமி, தேர்வுத்துறை இயக்குநர் திரு.தெ. ஜெகந்நாதன், பள்ளி சாராக் கல்வி இயக்குநர் திருமதி. சீ.லட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். சென்னை மாவட்ட ஆட்சியர் திரு. வெ.கண்ணுச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் ஆசிரியர்களுக்கு வாழ்த்துரை வழங்கிப் பேசியதோடு, ஆசிரியர் தேசிய நல நிதியாகத் திரட்டப்பட்ட ரூ.6 இலட்சத்தை மாண்புமிகு கல்வியமைச்சரிடம் வழங்கினார்.

விழா நிறைவில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் முனைவர் கா.மாரியப்பன் நன்றியுரையாற்றினார்.

விழா ஏற்பாடுகளை, சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திரு. தர்ம. இராசேந்திரன் சிறப்பாகச் செய்திருந்தார். □

ஊட்டச்சத்து நிலையில் உயர்ந்து வரும் தமிழகம்

தாய் சேய் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட தமிழக அரசு பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அவற்றில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் முக்கியமானதாகும். குழந்தைகள், வளரிளம் பெண்கள், தாய்மார்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து, சுகாதார நிலையை உயர்த்துவதே திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

தேசிய ஊட்டச்சத்து வார விழா :

‘தேசிய ஊட்டச்சத்து வாரம்’ ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் முதல் வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 23ஆவது தேசிய ஊட்டச்சத்து வாரம் சென்னை கலைவாணர் அரங்கில் 9.9.2004 அன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார். ஒவ்வொரு ஆண்டும் ஒரு மையக் கருத்தை வலியுறுத்தும் வகையில் ஒரு வாசகம் வெளியிடப்படுகிறது.

இவ்வாண்டு வெளியிடப்பட்ட முக்கியக் கருத்தாவது ‘Malnutrition - A Silent Emergency’ – ‘ஊட்டச் சத்துக் குறைபாடு ஒரு மறைமுக நெருக்கடி’ – அதாவது ஊட்டச்சத்துக் குறைபாடு வெளிப்படையாய் உடனே தெரியாமல் பெண்கள், குழந்தைகள், வளரிளம் பெண்கள் ஆகியோரின் ஆரோக்கிய நிலைக்கு சவாலாக இருந்து வருகிறது. இதனால் பல நிலையில் வளர்ச்சிக் குறைபாடும், நலக் குறைபாடும் உண்டாகின்றன. ஆகவே இந்த ஊட்டச்சத்துக் குறைபாட்டை உடனடியாகத் தீர்க்க வேண்டும். எனவேதான் இந்த மறைமுக குறைபாட்டை தீர்க்க ஆண்டுதோறும் ஊட்டச்சத்து வாரம் அனுசரிக்கப்பட்டு, மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு நல்வாழ்வுக்கு வழிவகை செய்யப்படுகிறது. பல்வேறு தகவல் தொடர்புப் பணிகள் மூலம் மக்களின் அறிவாற்றலைப் பெருக்கி ஊட்டச்சத்துப் பழக்க வழக்கங்களில் நல்ல மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன.

“தமிழகத்தை ஊட்டச்சத்துக் குறைபாடில்லா மாநிலமாக மாற்றுவோம்” – என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையாகும். அதனை நிறைவேற்றும் வகையில் குழந்தைகள் பெண்கள் நலத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் பல பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே தொடங்கிய இவ்விழாவில், உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் டாக்டர். சு. முத்தையா வரவேற்புரையாற்றினார்.

– **திரு. எஸ். சந்திரமோகன்**,இ.ஆ.ப.,
சமூக நல இயக்குநர், திட்ட ஒருங்கிணைப்பாளர்
உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை
வளர்ச்சித் திட்டம், தரமணி, சென்னை.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில், "தாய் சேய் நலம் மேம்பட பல திட்டங்களைத் தீட்டி அல்லும் பகலும் அரும்பணி ஆற்றி வருகிறது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு. மகளிரின் ஒட்டு மொத்த மேம்பாடு மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாட்டில் உயர்கிறது.

இந்த 23ஆவது தேசிய ஊட்டச்சத்து வார விழாவில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. நேர்த்தியாகவும் உள்ளது. சுகாதாரத்துறை மற்றும் பிற துறைகளின் நலப் பணிகள் மக்களைச் சென்றடைய வேண்டும். அதற்கு ஒன்றிணைந்த செயல்பாடுகள் வேண்டும். யாவரும் ஒன்று பட்டு உழைக்க வேண்டும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையான,

"தமிழகத்தை ஊட்டச்சத்து குறைபாடில்லா மாநிலமாக மாற்றுவோம்''

– என்ற வைர வரிகளுக்கு ஏற்ப யாவரும் இணைந்து செயல்படுவோம். இந்த அருமையான விழாவில் நல்ல தகவல்களை நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்கள். இதனை மற்றவர்களிடமும் கூறி விழிப்புணர்வடையச் செய்து நல்வாழ்வு வாழச் செய்ய வேண்டும். மகளிர் மாண்புடன் வாழ வேண்டும்.

"நம் மாநிலத்தில் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துவோம். உயர்வடைவோம்.''

– என்ற உறுதியுடன் தமது உரையை நிறைவு செய்தார்.

ஊட்டச்சத்தும், சுகாதாரமும்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தம் உரையில், "அயோடின் கலந்த உப்பை நேரில் கொண்டு வந்து விளம்பரப்படுத்தி மக்களின் கவனத்தை ஈர்த்த யூனிசெஃப் நிறுவன பிரதிநிதி திரு.டிப் ஷாப்டர் அவர்களை பாராட்டுகிறேன்.

சுகாதாரத்துறையின் மூலம் எந்தெந்த வகையில் மக்களுக்கு நலப்பணிகளை ஆற்ற இயலுமோ அந்தந்த வகையில் மக்கள் சுகாதார முறையில் நலமுடன் வாழ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு பணியாற்றி வருகிறது. அதன் வெளிப்பாடாகவே இன்று தமிழகத்தில் ஊட்டச்சத்து நிலை உயர்ந்துள்ளது.

குழந்தைகளுக்குக் கண் நோய் வராமல் தடுக்க மருத்துவமனையில் தனிப்பிரிவு, ஆண்டுக்கு 50 நபர்களுக்கு பேஸ் மேக்கர் எனும் இதயத்தை இயக்கும் கருவி, இலவசமாக இதய அறுவை சிகிச்சை என பல நலப்பணிகள் தமிழகமெங்கும் நடந்தேறி வருகின்றன.

மகாராஷ்டிர மாநிலத்தில் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் மெலிந்த நோஞ்சான் குழந்தையைப் படம் பிடித்து பத்திரிகையில் செய்தி வந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு தாய் சேய் நலத்தில் அதிக அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது.

எல்லா மாநிலத்தையும் விட நம் தமிழகம் ஊட்டச்சத்து, சுகாதாரத்தில் உரிய இடத்தை அடைந்துள்ளது. அதே போன்று, சமூக நலத்துறை எடுத்துக்காட்டாக விளங்குகிறது'' என்று கூறினார்.

திட்டம் தொடர்ந்து நலப்பணிகளாற்ற ...

உலக வங்கி ஆலோசகர் திரு. ப. சுப்ரமணியம் அளித்த இனிப்பான செய்தியாவது, தமிழகத்தில் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3ஆவது திட்டம் இம் மாதம் செப்டம்பர் 2004இல் நிறைவடையும் தருணம். ஆனால் தமிழகத்தில் குழந்தை வளர்ச்சிப் பணிகள், தாய் சேய் நல மேம்பாடு சிறப்பாக நடைபெறுவதைக் கருத்தில் கொண்டு 18 மாதங்கள் நீட்டிப்பு செய்த தகவலை மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். இச்செய்தி விழாவிற்கு மேலும் சிறப்பை சேர்த்தது.

அவர் சிறப்புரையில் கூறியதாவது: "தமிழ்நாட்டில் சமூக் நலத்துறையும், சுகாதாரத் துறையும் இணைந்து

மக்களுக்கு ஆற்ற வேண்டிய நலப் பணிகளைக் குறைவின்றி ஆற்றுவதால் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை வெகு குறைவு. அதாவது 0.1 சதவிகிதம். அதே நேரம், மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தை 36 சதவிகிதம். இந்த நிலையும் குறைந்து ஊட்டச்சத்துக் குறைபாடே இல்லாத நிலை உருவாக வேண்டும். இதற்காக 92 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.''

அயோடின் கலந்த உப்பையே பயன்படுத்துவீர்

யுனிசெஃப் நிறுவன பிரதிநிதி திரு.டிப் ஷாப்டர், நுண்ணூட்டச் சத்தில் ஒன்றான அயோடின் சத்தை பற்றி விழா மேடையில் நேரடி விளக்கம் தந்தார்.

அயோடின் சத்து கலந்த உப்பு பாக்கெட் ஒன்றை உடன் கொண்டு வந்து, மக்களுக்குக் காட்டி அயோடின் சத்தின் அவசியத்தை விளக்கினார். அயோடின் சத்தை பெறும் குழந்தைகள் அறிவுப் பூர்வமாக, நல்ல புத்திசாலியாகவும் விளங்குகின்றனர். மந்தபுத்தி, முன்கழுத்து கழலை போன்ற நோய்கள் அணுகாது. ஆகவே, யாவரும் அயோடின் கலந்த உப்பையே அவசியம் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். குழந்தைகளை முறையாக வளர்க்க போதிய வழி முறைகளைக் கூறினார்.

முக்கியமாக, இந்தியாவிலேயே சிறந்த ஊட்டச் சத்துக் கொள்கையை உருவாக்கி செயல்படும் தமிழக அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்று வெகுவாக பாராட்டினார்.

மையங்களுக்கு உதவி

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. ந. பாலகங்கா, சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு. கராத்தே தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள். அத்துடன் சென்னையில் அங்கன்வாடி மையங்களின் மேம்பாடு தொடர்பாக தேவையான உதவிகளை எப்போது வேண்டுமானாலும் செய்யத் தயாராக உள்ளதாகத் தெரிவித்தனர்.

உரிய வகையில் தொடர்புடைய அலுவலர்கள் அணுகினால் குழந்தைகள் நலனுக்கான தேவைகள் செய்வதாக உறுதியும் அளித்தனர்.

அங்கன்வாடி மையங்கள் புதிதாகக் கட்டவும், புதுப்பிக்கவும்

சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. விஜயகுமார்,இ.ஆ.ப., அவர்கள் விடுத்த ஆதரவுச் செய்தி:

தமிழ்நாட்டில் கடுமையான ஊட்டச்சத்துப் பற்றாக்குறை நிலை இல்லை என்றே சொல்லலாம். இருபதாண்டு காலமாகப் பணியாற்றி இந்த அளவிற்கு தாய் சேய் நலம் மேம்பட்டு இருப்பது பாராட்டுக்குரியது. இருப்பினும் மிதமான ஊட்டச்சத்துப் பற்றாக்குறை நிலையையும் இல்லாமல் செய்து எல்லா குழந்தைகளும் நல்ல ஆரோக்கிய நிலையை அடைய வேண்டும்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் செயல்படும் அங்கன்வாடி மையக் கட்டடங்கள் புதிதாகக் கட்டவும், புதுப்பிக்கவும் 4.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதே நேரம் மையங்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதாகவும், உரிய இடங்களில் புதிய மையக் கட்டடங்கள் கட்ட குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் அணுகினால் ஆவன செய்யப்படும் – என்று உறுதியளித்தார். மையத்தின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு தெரிவித்த செய்தியைக் கேட்ட யாவரும் மகிழ்ந்தனர்.

18 அம்ச திட்டம், மகளிர் நலம், தாய் சேய் நலத்திற்கு, மேம்பாட்டிற்கு ஒரு சிறந்த மைல் கல்

சமூக நலத்துறை இயக்குநரும், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் திட்ட ஒருங்கிணைப்பாளருமான திரு. எஸ். சந்திரமோகன்,இ.ஆ.ப., அவர்கள் ஆற்றிய உரையாவது:

"தமிழகத்தில் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் நலப் பணிகள் முறையாக முனைப்புடன் பயனாளிகளைச் சென்றடைகின்றன. திட்டம் சீராக செயல்பட்டு வருகிறது. மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். 15.9.1982ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். இதனால் குழந்தைகளின் வளர்ச்சி வெகுவாக மேம்பட்டது. இது வரலாற்றுச் சிறப்பு மிக்க மைல் கல்லாகத் திகழ்ந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆட்சியில் மூன்று அரிய சாதனைகளை தாய்–சேய் நலனில் செய்வித்தார்கள்.

- 18.12.2001 அன்று 18 அம்ச திட்டம் கொண்டு வந்தார்கள். இதனால் வளர் இளம் பெண்கள், தாய்மார்கள், குழந்தைகள் நலன் பாதுகாக்கப் பட்டது. அத்துடன் பொருளாதார மேம்பாடும் உயர்ந்தது.
- இரண்டாவதாக, 8.4.2002இல், "தமிழகத்தை ஊட்டச் சத்துக் குறைபாடில்லா மாநிலமாக மாற்றுவோம்'' – என்று அரசாணை வெளியிட்டு, செயல்படுத்திச் சிறப்பித்தார்கள். இதுவும் ஒரு முன்னேற்ற மைல் கல்.
- மூன்றாவதாக, 12.11.2003 அன்று ஊட்டச்சத்துக் கொள்கையினை வெளியிட்டு தமிழகத்தை ஊட்டச் சத்து நிலையில் தலை நிமிரச் செய்தது வரலாற்றுச் சிறப்பு மிக்க மைல் கல்லாகத் திகழ்ந்தது.
  - பிறந்த குழந்தைகளின் சீரான பிறப்பு எடை
  - பாதுகாப்பான தாய்மைப் பேறு
  - தாய்மார்களின் நல மேம்பாடு
  - வளர் இளம் பெண்களின் ஒட்டு மொத்த விழிப்புணர்வு
  - சிசு மரண விகிதத்தைக் குறைத்தல்
  - கர்ப்பிணிப் பெண்களின் இறப்பு விகிதத்தைக் குறைத்தல்
  - கடுமையான ஊட்டச்சத்துப் பற்றாக்குறை நிலையை இல்லாமல் செய்தல்
  - சத்துணவை மேலும் சத்துமிக்கதாக்கச் செய்தல்

போன்ற பல நலப் பணிகளை பல திட்டங்களின் மூலம் தமிழக அரசு நிறைவாக நிறைவேற்றி வருகிறது.

சுகாதாரத்துறை மற்றும் பிற துறைகளுடன் இணைந்து தாய்–சேய் நலமுடன் வாழ, ஊட்டச்சத்து நிலையை மேலும் உயர்த்துவோம். உறுதி கொள்வோம்" என்று உரையை நிறைவு செய்தார்.

ஊட்டச்சத்தும், நாட்டின் வளர்ச்சியும்

மத்திய அரசின், உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் திருமதி. ராதா சுந்தர்ராஜன் தனது சிறப்புரையில்,

"இவ்வாண்டின் மையக் கருத்தான, ஊட்டச்சத்துக் குறைபாட்டை உடனே தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊட்டச்சத்துக் குறைபாடு இருந்தால் மக்கள் நலமுடன் இருக்க முடியாது. ஆரோக்கியம் கெடும். இதனால் பொருளாதாரப் பின்னடைவும் உண்டாகும். நாட்டின் முன்னேற்றம் தடைபடும். எனவே, ஊட்டச்சத்து நிலையில் உயர வேண்டும்.

நுண்ணூட்டச் சத்துக்களான இரும்புச் சத்து, வைட்டமின் 'ஏ', அயோடின் சத்து போன்ற சத்துக்கள் அடங்கிய உணவுப் பொருட்களை தவறாமல் உட்கொள்ள வேண்டும். தாய்–சேய் நலம் மேம்பட வேண்டும். உணவு முறைகளை முறையாகக் கடைபிடிக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

பேரணியில் பெண்கள் முழக்கம்

மக்கள் மத்தியிலும், காண்போரின் மனதிலும் ஒரு விழிப்புணர்வை உண்டு பண்ணும் வண்ணம் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. பேரணியில் அங்கன்வாடிப் பணியாளர்கள், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள் மற்றும் கலைக் குழுவினர் கலந்து கொண்டனர்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்கள் கொடியசைத்து பேரணியை மன்றோ சிலையில் இருந்து தொடங்கி வைத்தார். கலந்து கொண்டோர் ்கையில் வாசக அட்டையுடன் முழக்கமிட்டு சென்றது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. வாசக அட்டைகளில்,

– பெண் குழந்தையைப் பேணிக் காப்போம்!
– பெண்மைக்குப் பெருமை சேர்ப்போம்!
– போக்குவாம்! போக்குவோம்!
ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்குவோம்!
– காப்போம்! காப்போம்!
குழந்தை நலம் காப்போம்!

என எழுதப்பட்டிருந்தது. இவ்வாசகங்களை ஒருவர் கூற மற்றவர்கள் முழங்கினர்.

இப்பேரணியில் தங்கள் உரிமையைப் பெறவும் குரல் எழுப்பியது குறிப்பிடத்தக்கது. பேரணி கலைவாணர் அரங்கில் நிறைவுற்றது.

கண்கொள்ளாக் கண்காட்சி

ஊட்டச்சத்து என்றால் என்ன ? எந்தெந்த உணவுப் பொருளில் எந்த சத்து அதிகம் உள்ளது? போன்ற கேள்விகளுக்கு விடை அளிக்கும் வகையில் கண்காட்சி அமைந்திருந்தது.

திட்டத்தின் நலப்பணிகள், நோக்கங்கள், ஊட்டச் சத்து குறைபாடு தோன்றும் விதம் பற்றி பொம்மைகளைக் கொண்டு விளக்கினர். காய்கறி, கிழங்கு வகைகளில் விலங்குகள், பறவைகள், சத்துபாப்பா என பல வகையில் அமைந்து இருந்தது விழாவிற்கு மேலும் மெருகு சேர்த்தது.

மகளிர் சுயஉதவிக் குழுவினர் செய்த கைவினைப் பொருட்கள் விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன.

கண்காட்சியினை அங்கன்வாடிப் பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் அமைத்திருந்தனர். கண்காட்சியினை அமைச்சர் பெருமக்களும், உயர் அலுவலர்களும் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை சென்னை திட்ட அலுவலர் திருமதி. இராமஜோதி செய்திருந்தார்.

விழாவில், மகளிர் சுயஉதவிக் குழுவினர், அங்கன்வாடிப் பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், செவிலியர்கள், மருத்துவ அலுவலர்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், சென்னை திட்ட அலுவலர், சென்னை மாவட்ட சமூக நல அலுவலர், திட்ட ஒருங்கிணைப்பாளர், அலுவலர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் கலைக் குழுவினர் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக, இணை ஒருங்கிணைப்பாளர் டாக்டர். சா. முருகன் நன்றி நவில, நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

"தன்னிகரில்லாத் தமிழகத்தை உருவாக்குவோம்! வாழ்க தாய்–சேய் நலம்! வளர்க அவர்கள் வளம்!"

★

தமிழக அனல் மின்நிலையங்களுக்கு மத்திய அரசின் தங்கக் கேடயம்

தமிழ்நாட்டில் உள்ள மேட்டூர், தூத்துக்குடி மற்றும் வடசென்னை அனல் மின் நிலையங்கள் சிறப்புடன் செயல்படுவதைப் பாராட்டி மத்திய அரசு தேசிய விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளது. மேட்டூர் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் 2000 முதல் 2003 வரையிலான 4 ஆண்டுகளுக்கு தொடர்ந்து தங்கக் கேடயங்களை வென்றுள்ளன. வட சென்னை அனல் மின் நிலையம் 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கு தங்கக் கேடயங்களையும், 2003ஆம் ஆண்டுக்கு வெள்ளிக் கேடயத்தையும் வென்றுள்ளது. புதுடெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் 24.8.2004 அன்று நடைபெற்ற விழாவில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்கள் இந்த விருதுகளை வழங்கினார். தமிழ்நாடு அரசின் சார்பில், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பம் மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் விருதுகளைப் பெற்றுக் கொண்டார்.

மின்சாரத்தின் தரத்தை நிலை நிறுத்துவதற்கும், தடையற்ற மின்சாரத்தை விநியோகிப்பதற்கும், அனல் மின் நிலையங்களின் தொடர்ச்சியான செயல்பாடு முக்கியப் பங்கு வகிப்பதால், தேசிய அனல் மின் கழகம், மாநில மின்சார வாரியங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றின் கீழ் செயல்படும் அனல் மின் நிலையங்களின் செயல்பாடுகள் மத்திய மின்சார ஆணையத்தால் மேற்பார்வையிடப்பட்டு கேடயங்கள் வழங்கப்படுகின்றன.

அனல் மின் நிலையத்தின் சுமைகாரணியை (Load factor) குறியீடாகக் கொண்டு மின் நிலையத்தின் செயல்பாடு மதிப்பிடப் பட்டு, ஒரு வருடத்திற்கு 1 கிலோ வாட்டிற்கு 7,500 யூனிட்டுகளுக்கு மேல் எனில் தங்கக் கேடயமும், 7,100 முதல் 7,500 யூனிட்டுகள் வரை எனில் வெள்ளிக் கேடயமும், 6,600 முதல் 7,099 யூனிட்டுகள் வரை எனில் வெண்கலக் கேடயமும் வழங்கப்படுகிறது.

இந்த வகையில், தமிழ்நாட்டில் உள்ள மேட்டூர் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் 2000 முதல் 2003 வரையிலான 4 ஆண்டுகளுக்கு தொடர்ந்து தங்கக் கேடயங்களை வென்றுள்ளன. மேலும், வடசென்னை அனல் மின் நிலையம் 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கு தங்கக் கேடயங்களையும், 2003ஆம் ஆண்டுக்கு வெள்ளிக் கேடயத்தையும் வென்றுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளின் படி, தமிழ்நாட்டில் உள்ள மேட்டூர், தூத்துக்குடி மற்றும் வடசென்னை ஆகிய அனல் மின் நிலையங்கள் திறம்பட செயல்படுவதன் காரணமாகவே, அவை தொடர்ந்து கேடயங்களை வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்து வருகின்றன. ▫



உலக தென்னை தினம் 2.9.2004 அன்று கொண்டாடப்பட்டதையொட்டி கிராமப்புறத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகள் மற்றும் தென்னை விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் 2 சிறப்புத் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2.9.2004 அன்று அறிவித்துள்ளார்கள். கிராமப் பகுதிகளில் பிறக்கும் பெண் குழந்தைகள் பலனடையும் விதத்தில் ஒரு திட்டமும் பூச்சிகளால் தாக்கப்படும் தென்னம் பிள்ளைகளைப் பாதுகாக்கும் விதத்தில் தென்னை சாகுபடியாளர்களுக்குப் பலன் தரும் விதத்தில் இன்னொரு திட்டமுமாகும்.

உலக தென்னை தினத்தையொட்டி இரண்டு சிறப்புத் திட்டங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு

பெண்களைப் பொருளாதார ரீதியாக தன்னிறைவு அடையச் செய்ய வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இலட்சியத்தை செயல்படுத்தும் வகையில் "உலக தென்னை தினம்" கொண்டாடப்படும் இந்நாளில் தென்னை சாகுபடியை பெருக்குவதுடன் அதன் மூலம் பெண் குழந்தைகளின் கல்விக்குப் பயன்படும் வகையிலும் அவர்களுக்கு உறுதியான வருமானம் கிடைக்க வழிசெய்யும் வகையிலும், சிறப்புத் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இத்திட்டத்தின்படி கிராமப்புறங்களைச் சேர்ந்த ஒருவயதிற்குட்பட்ட ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் 2 தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும். அந்தக் குழந்தை 5 வயது நிரம்பி, பள்ளிக்குச் செல்லத் தொடங்கும்போது, தென்னை மரங்களும் வளர்ந்து ஆண்டுக்கு மரத்திற்கு 100 காய்கள் வீதம் காய்க்கும்.

இதன் மூலம், அந்தப் பெண் குழந்தையின் கல்விக்கு ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் வருமானம் கிடைக்கும். மேலும் அப்பெண் குழந்தைகளின் உயர்கல்விக்கு உரிய வருமானமும் இதனால் கிடைக்கப்பெறும். அத்துடன் இந்தத் திட்டம் தமிழகத்தில் தென்னை சாகுபடி பரப்பளவை அதிகரிக்கவும் வழிவகுக்கும்.

தமிழ்நாட்டில், தென்னை விவசாயிகளை கடுமையாக பாதித்து வரும் ஈரியோஃபைட் எனப்படும் செம்பான் சிலந்திப் பூச்சி நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான மற்றொரு சிறப்புத் திட்டத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதன்படி 5 ஏக்கர் வரை நிலம் உள்ள ஏழை விவசாயிகளுக்கு இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்காக தமிழக வேளாண் பல்கலைக்கழகத்தின் பரிந்துரையின்படி வேம்பை அடிப்படையாகக் கொண்ட பூச்சிக்கொல்லி மருந்து ஒரு தென்னை மரத்திற்கு 10 மில்லி வீதம் அதிகபட்சமாக 350 மரங்கள் வரை இலவசமாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் பாதிப்புக்குள்ளான 1 கோடியே 35 இலட்சம் தென்னை மரங்கள், 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் குணப்படுத்தப்படும். மீதியுள்ள 1 கோடியே ஒரு இலட்சம் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பயனளிக்கும் வகையில் 8 கோடியே 32 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. ❖

இந்திய விடுதலைப் போராட்ட வீரருக்கு வாடகைக் குடியிருப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.9.2004 அன்று தலைமைச் செயலகத்தில், இந்திய விடுதலைப் போராட்ட வீரரான விருதுநகர் மாவட்டம் கனிசேரி கிராமத்தைச் சேர்ந்த திரு.ராஜூ பிள்ளை அவர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வாடகைக் குடியிருப்பு ஒன்றினை ஒதுக்கீடு செய்து, அதற்கான ஆணையை அவரிடம் நேரில் வழங்கினார்கள்.

விருதுநகர் மாவட்டம் கனிசேரி கிராமத்தைச் சேர்ந்த திரு.ராஜூ பிள்ளை, வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடந்த வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றுப் போராடி சிறை சென்று தியாகம் செய்த இந்திய விடுதலைப் போராட்ட வீரர் ஆவார். 20 ஆண்டுகளுக்கு மேலாக சென்னை காங்கிரஸ் மைதானத்தில் தங்கியிருந்த தான் தற்பொழுது அங்கிருந்து வெளியேற்றப்பட்டு தங்குவதற்கு இடமின்றித் தவிப்பதாகவும், 90 வயதான தானும், 80 வயது நிரம்பிய தனது மனைவியும், நிம்மதியோடும் பாதுகாப்பாகவும் வாழ்கின்ற வகையில் அரசு வாடகைக் குடியிருப்பு ஒன்றை ஒதுக்கீடு செய்து தர வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் அவர் கோரிக்கை மனு கொடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கை மனுவினை பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவரது நிலையைக் கருத்தில் கொண்டு வயதான காலத்தில் நிம்மதியாக வாழ்ந்திட ஏதுவாக, சென்னை தாடண்டர் நகரிலுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்பு ஒன்றை ஒதுக்கீடு செய்து அதற்குரிய ஆணையை திரு. ராஜூ பிள்ளை அவர்களிடம் 9.9.2004 அன்று நேரில் வழங்கினார்கள்.

சுதந்திரப் போராட்ட தியாகியான தன்னுடைய கோரிக்கையை உடனடியாக ஏற்று தனக்கு நிம்மதி அளிக்கும் வகையில் அரசு குடியிருப்பினை ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு திரு. ராஜூ பிள்ளை தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். □

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில்

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார்

பிறந்தநாள் விழா

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 133ஆவது பிறந்த நாள் விழா 5.9.2004 அன்று மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. என்.தளவாய் சுந்தரம் அவர்கள் வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து பேசும்போது, "தமிழ்நாடு அரசு, சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகச் செம்மல்களைப் போற்றிடும் வகையில் அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கும் பொருட்டு மணிமண்டபங்களை அமைத்து வருகிறது. சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட வ.உ.சிதம்பரனாருக்கு திருநெல்வேலியில் மணி மண்டபம் கட்டும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. தமிழ்நாட்டில் 180 வட்டார மருத்துவமனைகள், 80 வட்டாரம் சாரா மருத்துவமனைகள், 29 தலைமை மருத்துவமனைகளைத் தரம் உயர்த்திட 600 கோடி ரூபாய் உலக வங்கியிடம் நிதி பெற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து வருகிறார்கள். இந்த நிதி இரண்டு மாதங்களில் கிடைத்து விடும்'' எனக் குறிப்பிட்டார்.

விழாவில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் பேசும்போது, "மக்கள் மத்தியில் மகத்தான இடம்பெற்ற தலைவர் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார். இந்திய நாட்டிற்கு, தமிழகத்திற்கு, ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்திற்குக் கிடைத்த தலை சிறந்த தியாகச் செம்மல் என்பதை யாரும் மறந்து விடமுடியாது. வறட்சி பிரதேசமாக இருந்தாலும் வளமான இதயம் பெற்றவர்கள் ஒட்டப்பிடாரம் மக்கள். தாமிரபரணி ஆறு ஓடினாலும் தூத்துக்குடி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் மற்றும் விளாத்திகுளம் பகுதி வறட்சியாகவே காணப்படுகிறது. இப்பகுதியில் குடிநீர்ப் பிரச்சினையினை போக்கிடும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 68 கோடி செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அனுமதியளித்துள்ளார்கள்'' என குறிப்பிட்டார்.



மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.சொ.கருப்பசாமி அவர்கள் பேசும்போது, "நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு சிறை சென்ற வ.உ.சி. அவர்களை சிறையில் ஆங்கிலேயர்கள் செக்கை இழுக்க வைத்தனர். கல்லுடைக்க வைத்தனர். பல்வேறு இன்னல்களை அனுபவித்த வ.உ.சிதம்பரனார் செக்கிழுத்த செம்மல் எனப் பேரும் புகழும் பெற்றார். வ.உ.சிதம்பரனார் அவர்கள் இறக்கும்போது கடன் மற்றும் வறுமைதான் மிஞ்சியது. இப்படிப்பட்ட தியாகிகளை கவுரவிக்கும் வகையில்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தியாகிகளின் பிறந்தநாள் விழாக்களை அரசு சார்பில் கொண்டாட உத்தரவிட்டுள்ளார்கள். விழாவில் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன'' என குறிப்பிட்டார்.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசும் போது, "சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தேசிய உள்ளம் கொண்ட நல்ல தலைவர்களை நினைவு கூறும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த பூமியில் அவரது பிறந்த நாளைக் கொண்டாட உத்தரவிட்டுள்ளார்கள். வீரபாண்டிய கட்டபொம்மன், வீரன் சுந்தரலிங்கம், வாஞ்சிநாதன், வீரன் அழகுமுத்துக்கோன் போன்ற சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் வாழ்ந்த பகுதியாகும் ஒட்டப்பிடாரம். வ.உ.சிதம்பரனார் நினைத்திருந்தால் செல்வச் செழிப்போடு வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை. ஆங்கிலேயர்களை எதிர்த்து சுதேசிக் கப்பல் விட்டதால் ஆங்கிலேயர்களால் இரட்டை ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டு சிறையில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தார்'' என குறிப்பிட்டார்.

விழாவில் தாட்கோ மகளிர் திட்டம் வருவாய்த்துறை மற்றும் ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறையின் சார்பில் 33 பயனாளிகளுக்கு ரூபாய் 7.65 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதில் ரூபாய் 3.30 இலட்சம் மானியமாகும். மேலும் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.சந்திரசேகரன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.சிவபெருமாள், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.கே.பெருமாள், தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.ராஜம்மாள், வ.உ.சிதம்பரனார் வழித்தோன்றல்கள் வ.உ.சி.ஆ.சங்கரலிங்கம், வ.உ.சி.ஆ.உலகநாதன், திரு. இளசை அருணா, திரு.இளசை மணியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

– துரை. ராஜ்குமார்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தூத்துக்குடி.

ஈரோடு மாவட்டம் - ஓடாநிலையில்

தீரன் சின்னமலை விழா

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு, தமிழ்நாட்டில் 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் வித்திட்ட வீரபாண்டிய கட்டபொம்மன், வேலு நாச்சியார், சிவகங்கை முத்து வடுகநாதன், இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி ஆகியவர்களின் வரிசையில் இந்திய விடுதலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சரித்திர நாயகன் தீரன் சின்னமலை ஆவார். கொங்கு மண்டலத்தின் சிங்கமென சிலிர்த்தெழுந்து அன்னியர் ஆட்சிக்கு அடிமையாய் இருந்த கொங்குப் பகுதி மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை. அவ்வாறு தியாகத்திற்கும், வீரத்திற்கும் வித்திட்ட தீரன் சின்னமலை அவர்களுக்கு அவரது நினைவாக 2.8.2004ஆம் நாளன்று விழா கொண்டாட அரசு உத்தரவிட்டது.

தீரன் சின்னமலை நினைவாக ஆடிப்பெருவிழா மற்றும் சுற்றுலா விழா 2.8.2004 அன்று ஈரோடு மாவட்டம் அரச்சலூர் ஓடாநிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து தீரன் சின்னமலை அவர்களின் வாரிசுகளை கௌரவித்த மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.சி.இராமசாமி அவர்கள் தமது உரையில், "இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்கள் பலர். ஆனால் வெள்ளையர்கள் இந்தியாவிற்குள் நுழைந்த காலம் முதலே தங்களுடைய எதிர்ப்பைக் காட்டி அவர்களையே அஞ்சி நடுங்கும்படி செய்த வீரர்கள் ஒரு சிலரே. தமிழகத்தில் அத்தகைய வீரர்களில் ஒருவர் தீரன் சின்னமலை என்றால் அது மிகையாகாது. கொங்கு நாட்டு மக்களிடம் தண்டல் வசூல் செய்ய வந்த மைசூர் அரசர் திப்பு சுல்தானின் ஆட்களைத் தடுத்து நிறுத்தி கொங்கு நாட்டு மக்கள் யாருக்கும் அடிமையல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் வரிப்பணம் வசூல் செய்ய வந்த தண்டல்காரர்களிடம் சிவன்மலைக்கும், சென்னிமலைக்கும் இடையே ஒரு சின்னமலை வரிப்பணத்தைப் பிடுங்கிக் கொண்டான் என்று உங்கள் மன்னனிடம் போய்ச் சொல் என்று கூறி அன்று முதல் தீரன் சின்னமலையாக உருவெடுத்தான். இந் நிகழ்ச்சியின் மூலம் தீரன் சின்னமலையின் வீரத்தையும்,



சுதந்திர வேட்கையையும் கொங்கு நாட்டு மக்கள் மட்டுமல்ல, தமிழக மக்களும் புரிந்து கொண்டார்கள்.

இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து தீரன் சின்னமலைக்கு அரசு விழா எடுக்க வேண்டும் என்ற எண்ணம் இதுவரை தமிழக முதல்வராக இருந்த யாருக்கும் தோன்றவில்லை. ஆனால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1995ஆம் ஆண்டே தீரன் சின்னமலைக்குப் பிறந்த நாள் விழா கொண்டாட உத்தரவிட்டார்கள். ஆனால் அதைத் தொடர்ந்து வந்த அரசு 1996ஆம் ஆண்டு முதல் 2001 வரை விழா கொண்டாடவில்லை. அதைத் தொடர்ந்து மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2003–ஆம் ஆண்டு தீரன் சின்னமலைக்கு அரசின் சார்பில் விழா எடுக்கவும், அவருக்கு அரசின் சார்பில் அரச்சலூர் ஓடாநிலையில் ரூ.32 இலட்சம் செலவில் மணிமண்டபம் அமைக்கவும் உத்தரவிட்டதன் அடிப்படையில் கடந்த ஆண்டு அரசின் சார்பில் மிகச் சிறப்பாக தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. தியாகம் செய்தவர்களைப் போற்றுவது, திறமையாளர்களைப் பாராட்டுவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய எண்ணமாகும். தீரன் சின்னமலைக்கு சென்னையில் சிலை வைக்கவும் அதோடு அவரது நினைவாக போக்குவரத்துக்கழகத்திற்கு பெயர் சூட்டியும் உத்தரவிட்டு கொங்கு மக்களின் மனதில் நீங்காத இடத்தை ஏற்படுத்தி கொடுத்தவர்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அவரது உத்தரவின்பேரில் இங்கு ரூ.32 இலட்சம் செலவில் அரசின் சார்பில் மணிமண்டபம் கட்டப்படும். தற்போது சமுதாயக் கூடம் கட்டுவதற்கு ரூ.20 இலட்சம் செலவில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது," என்றும் பெருமையுடன் குறிப்பிட்டார்.

தீரன் சின்னமலை அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்து அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்தும், ரூ.20 இலட்சம் மதிப்பில் சமுதாயக் கூடம் கட்ட அடிக்கல் நாட்டியும், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் தமது உரையில், "பழம்பெரும் தமிழகத்தின் பெருமை மிக்க பூமி கொங்கு நாடாகும். இங்கு வாழும் மக்களின் விருந்தோம்பல் பண்பும் மற்றவர்களை மதிக்கின்ற மாண்பும் வழிவழியாக வந்த சிறப்புமிக்க மரபாகும். அந்த மரபுகளில் பிறந்த மாவீரன்தான் தீரன் சின்னமலை ஆவார். அன்னியர் ஆட்சியை எதிர்த்து விடுதலை வேட்கையின் வீரம் செறிந்த போர் நடத்திய கொங்கு நாட்டின் மாவீரன் தீரன் சின்னமலையின் பெருமையைப் போற்றும் வகையிலும், ஆடிப்பெருக்கின் பெருமையை உணர்த்தும் வகையிலும் இங்கு நடைபெறும் இந்த இனிய விழாவில் பங்கேற்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். நாட்டுக்கு உழைத்த நல்லவர்களைப் போற்ற வேண்டும் என்பதில் ஆர்வமும், அக்கறையும் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல தலைவர்களுக்கு மணிமண்டபங்களைக் கட்டியும், நினைவுச் சின்னங்களை உருவாக்கவும் ஆணை பிறப்பித்துள்ளார்கள். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு திருநெல்வேலியில் ரூ.75 இலட்சம் செலவில் மணி மண்டபம் கட்ட ஆணை பிறப்பித்து அதற்கான கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. பெருந்தலைவர் காமராஜருக்கு ரூ.9 இலட்சம் செலவில் மணிமண்டபம், ரூ.5 இலட்சம் செலவில் நினைவுத் தூண் அமைக்கவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இதைப் போன்று தீரன் சின்னமலைக்கு ஈரோடு மாவட்டம் ஓடாநிலையில் ரூ.20 இலட்சம் செலவில் சமுதாயக் கூடம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி ஆணை வழங்கி, அதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆடிப்பெருக்கு தினத்தில் தீரன் சின்னமலைக்குப் பெருமை சேர்க்க கொங்கு நாட்டு மக்கள் ஒன்றாகக் கூடி நிற்கின்றார்கள்.

இத்தகைய பெருமைமிக்க விழாவில் சுற்றுலா வளர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து சுற்றுலா விழாவையும் இணைத்து நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழி வகுத்துள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளிலும் சாதனை படைத்துள்ளார்கள். நான் சார்ந்துள்ள ஊரக வளர்ச்சித் துறையில் கிராமப்பகுதியில் முழுமையான மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் “நமது கிராமம்” என்ற ஒரு புரட்சிகரமான திட்டத்தினை உருவாக்கியுள்ளார்கள். பழுதுபட்ட ஊரகச் சாலைகளைச் சீரமைக்க இந்த ஆண்டு ரூ.150 கோடி வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ரூ.150 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 581 சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன.

தீரன் சின்னமலையின் புகழ் ஓங்குக என்று குறிப்பிட்டு, பொதுமக்கள் அனைவருக்கும் ஆடிப்பெருவிழா வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்,” என குறிப்பிட்டார்.

இவ்விழாவில் மாண்புமிகு மத்திய சமூக நலம் மற்றும் சமூக நீதித்துறை இணை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள், பழனி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.கே. கார்வேந்தன், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு.என்.ஆர்.கோவிந்த ராஜர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், சிட்கோ தலைவர் திரு. சிந்து ரவிச்சந்திரன் மற்றும் கொங்கு பேரவை தலைவர்கள் கலந்து கொண்டனர்.



பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் 417 சாலைப் பணிகளுக்கு ரூ.117 கோடியே 91 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சொந்தக் கட்டடம் இல்லாத 5,876 சத்துணவு மையங்களுக்கு ரூ.58 கோடியே 76 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படவுள்ளது. 7,760 நீர்நிலைகளைப் புதுப்பிக்க ரூ.77 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு 44,330 புதிய தொகுப்பு வீடுகள்ரூ.141 கோடியே 85 இலட்சம் செலவில் கட்டித் தரப்படவுள்ளன. 2004–2005ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி அமைப்பிற்கு மானியம் வழங்க ரூ.721 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களைச் செயல் படுத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய முன்னேற்றத்திற்கு அனைவரும் துணை நிற்க வேண்டும்.

இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் தா.கார்த்திகேயன்,இ.ஆ.ப., தலைமை வகித்தார். ஈரோடு கோட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா. கெஜலட்சுமி அனைவரையும் வரவேற்றார்.

தீரன் சின்னமலை வாழ்க்கை வரலாற்றையும் அவரைப் போற்றும் கொங்கு மண்டல மக்களின் உணர்வுகளையும் மதிக்கின்ற வகையில் தமிழக அரசுக்கு அனைத்துத் தரப்பு மக்களும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

– எம். ஆர். லிங்கம்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம்!

கீரப்பாளையத்தில்

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்

அவர்களின் உரை!

சுகாதாரத் திட்டத்தைச் செயல்படுத்தியதில் தன்னிறைவு பெற்ற கிராமமான கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த கீரப்பாளையம் கிராமத்திற்கு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்கள் 27.8.2004 அன்று வருகை தந்தார்கள்.

பின்னர், பல்வேறு தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களால் அமைக்கப்பட்டிருந்த, மகளிர் சுயஉதவிக் குழுவினரால் உற்பத்தி செய்யப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்கினைப் பார்வையிட்டார். இந்தக் கண்காட்சி அரங்கில், மகளிர் சுயஉதவிக் குழுவினரால் உற்பத்தி செய்யப்பட்ட சேனிட்டரி நாப்கின், காகிதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட காகிதக் குவளை மற்றும் காகிதக் கோப்பைகள், கழிவறை கோப்பைகள், தார்ச் சாலைக்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் கழிவுகளின் துகள்கள், மின்சாரம் இன்றி மிதிவண்டி மூலம் மனித சக்தியைப் பயன்படுத்தி, மின் உற்பத்தி செய்து மாவு போன்ற இதர பொருட்களை அரைத்து எடுத்தல், மூலிகைச் செடிகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள், பெண்களால் சாண எரிவாயுக் கலன் அமைத்தல், இன்டர்நெட் கியாஸ்க் (INTERNET KIOSK) மூலம் கிராமப்புற மக்களுக்கு அறிவியல் வளர்ச்சியை எடுத்துரைத்தல் போன்றவை குறித்து கண்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன.



மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் இந்தக் கண்காட்சியினைப் பொறுமையாகப் பார்வையிட்டு, மகளிர் சுயஉதவிக் குழுவினரிடம், பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் விதம் குறித்து உரையாடினார். பின்னர் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் சுகாதாரத்தை வலியுறுத்தி நடத்தப்பட்ட, சுயஉதவிக் குழுவினரின் கலை நிகழ்ச்சியை மேடையிலிருந்தே கண்டுகளித்தார். பின்னர் தேசிய கீதத்துடன் விழா தொடங்கியதும், கீரப்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கே.பி. பன்னீர்செல்வம் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட ஆட்சியர் திரு.ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது, கடலூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் பற்றியும், ஊராட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்தும், சிறந்த ஊராட்சியாகத் தேர்வு செய்யப்பட்ட கீரப்பாளையம் ஊராட்சியின் சுகாதாரத் திட்டச் செயல்பாடுகள் குறித்தும் உரை நிகழ்த்தினார்.

பின்னர், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:

கீரப்பாளையம் பஞ்சாயத்து பெருமக்களாகிய உங்கள் எல்லோரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். சில மாதங்களுக்கு முன்பு, மழைநீர் சேகரிப்பது குறித்து அறிந்து கொள்வதற்காக, தமிழ்நாட்டிலிருந்து ஒரு பஞ்சாயத்துத் தலைவரின் குழு வடக்கே சில மாநிலங்களில் சுற்றுப் பயணம் செய்தது. அதன் பிறகு அவர்கள் தில்லியில் என்னைச் சந்தித்தார்கள். அப்போது திரு.பன்னீர்செல்வம் அவர்களும் என்னை சந்தித்து பேசும்போது உங்கள் கிராமத்துக்கு வருவதாக நான் ஒப்புக்கொண்டேன். இன்று உங்கள் எல்லோரையும் சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த கிராமத்திலே உள்ள 1,125 வீடுகளிலும் சுகாதார வசதிகள் உள்ளன என்று அறிகிறேன். இது ஒரு நல்ல செய்தி. எனக்கு தூரத்தில் இருந்த சிந்து சமவெளி நாகரிகமும், பக்கத்தில் இருந்த உத்திரமேரூர் கல்வெட்டுகளும் நினைவுக்கு வருகிறது.

புரா திட்டம் (Providing Urban facilities in Rural Areas)

கிராமங்களிலேயே நகரங்களின் அடிப்படை வசதிகளை நிறைவு செய்தால், கிராமங்களிலிருந்து நகரங்களுக்குக் குடிபெயர்வது குறையும். வாழ்க்கையின் அழகு கிராமங்களிலேயே இருக்கிறது. ஆகவே, கிராமங்களிலேயே வேலைவாய்ப்புகள் கிட்டினால் மக்கள் மகிழ்வார்கள். இதற்கு அடிப்படை சுகாதார வசதிகளோடு இன்ன பிற தொழில்நுட்ப வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். இதற்காக, கிராமப்புறங்களிலேயே நகர்ப்புற வசதிகளைச் செய்து கொடுக்கும் திட்டம் என்ற ஒரு திட்டம் உருவாகியுள்ளது. இதை ஆங்கிலத்தில் Providing Urban facilities in Rural Areas - PURA என்று அழைக்கிறோம். இப்படிச் செய்தால்தான் நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளும், அலுவலகங்களும் கிராமங்களில் அமைக்க முடியும். அதன்மூலம் வேலைவாய்ப்புகள் கிராமங்களிலேயே உண்டாகும்.

அத்திட்டத்தின்படி, முதலில் கிராமங்களை அகலமான நல்ல சுற்றுச்சாலைகள் மூலம் இணைத்து அதில் போக்குவரத்துக்கென பேருந்துகளும், கல்விக்கென பள்ளிக்கூடங்களும், நோய் சிகிச்சைக்கென மருத்துவமனைகளும் அமைத்து வசதியான பரஸ்பர இணைப்புகள் (Physical Connectivity) கொடுக்க வேண்டும். அதன் பிறகு மின்னணுவியல் இணைப்பு எனப்படும் எலக்ட்ரானிக் இணைப்புகளான டெலிபோன், இன்டர்நெட் வசதிகள் கொடுக்க வேண்டும். இதன்மூலம் அங்கெல்லாம் டெலி மெடிசின், டெலி எஜுகேஷன், இ-கவர்னென்ஸ் போன்ற வசதிகள் ஏற்படும். அதிக வருமானம் கொடுக்கும் புதுத் தொழில் வேலைகள் நாட்டுப்புறத்துக்கு வரும். இதன் மூலம் நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் அறிவு இணைப்பு (Knowledge Connectivity) கொடுக்க ஏதுவாகும். அதாவது, தொழிற்கல்வி வசதிகள், virtual class room போன்றவைகள் ஏற்பட வழி பிறக்கும். கிராமத்திலிருந்தே பெரிய படிப்புகள் படித்து முடிக்க வசதிகள் உண்டாகும்.

இதனால், அந்தந்த பிராந்தியங்களில் கிராமங்களில் பயிராகும் விவசாயப் பொருட்களுக்கு மதிப்பு கூட்டும் தொழில் அமைப்புகளும், உணவுப் பொருட்களை பதப்படுத்தும் தொழிற்சாலைகளும், இதர பிற கைத்தொழில்களும் செழிக்கும். ஏராளமான சுயதொழில் மற்றும் சிறுதொழில் முனைவர்கள் பல்கிப் பெருகுவர். வேலைவாய்ப்புகளும் பெருகும்.

இதனால், கீரப்பாளையம் போன்ற கிராமங்கள் செழிப்படையும். கிராமங்கள் செழிப்படைந்தால், மாநிலங்கள் செழிப்படையும். மாநிலங்கள் செழிப்படைந்தால் நம் நாடு வளமான நாடாகும். நாம் கனவு காணும் அறிவார்ந்த சமுதாயம் (Knowledge Community) நம் வசப்படும்.

இவ்வாறு, இந்தியாவில் உள்ள ஏறக்குறைய 6,00,000 கிராமங்களை 7,000 PURA Complexes மூலம் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் நீங்களும் பங்கேற்கலாம்.

வரப்புயர நீர் உயரும்

எனக்கு, ஔவையார் எழுதிய பாடல் நினைவுக்கு வருகிறது.

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்

பஞ்சாப் மாநிலத்தில் நான். சுற்றுப் பயணம் செய்த போது அங்கு மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங் கிராமத்திற்குப் போயிருந்தேன். அங்கு கில் என்று ஒருவரைச் சந்தித்தேன். அவர், அந்த கிராமத்திற்கு ஒரு அருமையான திட்டம் தீட்டி, அதனைச் செயல்படுத்தியுள்ளார். அந்த கிராமத்தில், அசுத்தப்படுத்தப்பட்ட கழிவு நீரை எல்லாம் சேகரித்து, சுத்தப்படுத்தி, அந்த நீரை, அந்த கிராம மக்களே, தங்களது தோட்டங்களில் பயன்படுத்தும் வகையில் ஒரு அருமையான திட்டம் அமலில் உள்ளது. அது போன்ற உபயோகமான திட்டங்கள் நடைமுறைக்கு வர வேண்டும்.

அங்கு மற்றொரு நல்ல காரியமும் நடக்கிறது. அங்கு பாபா சர்ச்சேவால் என்ற சீக்கிய துறவி இருக்கிறார். அவர் அங்கு ஓடுகின்ற புண்ணிய நதியை, அது ஓடுகிற வழியெங்கும் மக்களையெல்லாம் தன்னுடன் சேர்த்துக்கொண்டு நதியை சுத்தப்படுத்தி தூய இறை பணியாக செய்து வருகிறார். மகத்தான இது போன்ற நல்ல பணிகள் நாடெங்கும் நடக்க வேண்டும். எனக்கு திருவள்ளுவரின் குறள் ஒன்று நினைவுக்கு வருகிறது.

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற் கிவ்வைந்து.

நாம் குடியிருக்கும் வீடு அமைதி கண்டால், நம் கிராமங்களின் வாழ்வு சிறக்கும்; நம் கிராமங்களில் வாழ்வு சிறந்தால் மாநிலங்கள் உயரும். மாநிலங்களில் வாழ்க்கை உயர்ந்தால் ஒரு அமைதியான இன்பகரமான நாட்டை உருவாக்கலாம். ஆதலால் நமது நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை கீரப்பாளையம் போன்ற சிறந்த கிராமங்களே.

ஆண், பெண் சதவிகிதம்

உங்களது கிராமத்தைப் பற்றிய புள்ளி விவரங்களைப் பார்த்தேன். மொத்த ஜனத் தொகை 5,347. அதில் 3,012 ஆண்கள், 2,335 பெண்கள். ஆணுக்குப் பெண் குறைந்த பட்சம் எண்ணிக்கையில் உங்கள் கிராமத்தில் சமமாக இல்லை. பெண் குழந்தைகளைப் பேணிக் காக்க வேண்டும். அந்த சதவிகிதம் கூட ஒரு Development Index Indicator வளர்ந்த சமுதாயத்தைக் காட்டும் ஒரு குறியீடு.

உங்கள் கிராமத்தில், கல்வியறிவு 100 சதவிகிதமாக இருக்க வேண்டும். உங்கள் கிராமத்தில் உள்ள 6 ஊருணிகளுக்கும் தூர் வாருதல், மராமத்து வேலைகள் நல்லபடியாக நடப்பது குறித்து மகிழ்ச்சி. இது தொடர்ந்து செவ்வனே நடக்க வேண்டும். ஏனெனில் இந்தப் பணிதான் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவிடாமல் இருக்க உதவும். மழைநீர் சேகரிப்பது மற்றொரு நல்ல பணி.

உத்திகளும், உதாரணமாக காட்டாமணக்கு (Jatropha), பயோடீசல் கணிசமான அளவில் தயாரிக்க உபயோகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது போன்ற முயற்சிகளால், கிராமங்களில் வேலை வாய்ப்புகள் பெருகும். செல்வம் பெருகும். வளமான நாடாக வாய்ப்புகள் உருவாகும்.

உங்கள் எல்லோருக்கும் என் வாழ்த்துகள்.

உபயோகப்படுத்திய நீரை, நீர் சுழற்சி மூலம் மீண்டும் உபயோகத்திற்குக் கொண்டு வருதல்

ஒரு நாடு நல்ல வளமான நாடாகக் கருதப்பட வேண்டுமானால் அந்த நாட்டில் நோயின்மை, செல்வச் செழிப்பு, நல்ல விளைச்சல், அமைதியும், சுமூகமான சமுதாயச் சூழ்நிலையும், வலிமையான பாதுகாப்பும் அந்நாட்டில் நிலவ வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். என்ன அருமையாக ஒரு வளமான நாட்டைப் படம் பிடித்துக் காட்டுகிறார். நாம் எல்லோரும் உழைத்துத்தான் நம் நாட்டை வளமான நாடாக மாற்ற வேண்டும்.

வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பணி

"புரா" போன்ற திட்டங்களும், அந்தந்த கிராமங்களில் பயிராகும் விளை பொருட்களுக்கு மதிப்பு கூட்டும் தொழிற்கூடங்களும் இப்போது புதிதாக அறிமுகமாகி வருகிற புது தொழில்நுட்ப விவசாயம் போன்ற

இவ்வாறு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்.

இந்த விழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.ந. தளவாய் சுந்தரம், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.இ.பொன்னுசாமி, சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கி. சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மு.கணேசன், சிதம்பரம் சார் ஆட்சியர் திரு.ராஜேந்திர ரத்னூ,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறையின் கூடுதல் இயக்குநர் திரு.முருகன், கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் திரு.டி.ஜெகந்நாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

– என். பாலையா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கடலூர்.



3 திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கொடை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2004–ஆம் ஆண்டிற்கான மே, ஜுன் மற்றும் ஜுலை ஆகிய 3 மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகை மொத்தம் ரூபாய் 30 ஆயிரத்தை, மூன்று திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக 7.9.2004 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த, 2002–ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தை, தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் அன்னதானத் திட்டத்திற்காக, ஒவ்வொரு மாதம் ஒரு திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2004ஆம் ஆண்டு மே, ஜுன், ஜுலை ஆகிய மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகை ரூ.30 ஆயிரத்தை, தலா ரூ.10 ஆயிரம் வீதம், மதுரை மாவட்டம், மேலூர் அழகர் கோயிலில் உள்ள அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் மற்றும் கடலூர் மாவட்டம், திருப்பாதிரிபுலியூர், அருள்மிகு வீர ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக, முறையே, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் துணை ஆணையர் / செயல் அலுவலர் திருமதி பீ.பாரதி, அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலின் துணை ஆணையர் / செயல் அலுவலர் திருமதி. என். திருமகள் மற்றும் அருள்மிகு வீர ஆஞ்சநேயசுவாமி திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு.எ. கிருஷ்ணகுமார் ஆகியோரிடம் 7.9.2004 அன்று நேரில் வழங்கினார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில்

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின்

பல்துறை பணி விளக்க முகாம்

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் புஷ்கரமேளா சங்கு தீர்த்தப் பெருவிழா 19.8.2004, 20.8.2004 ஆகிய 2 நாட்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இப்பெருவிழாவில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். பெருவிழாவில் அரசின் சாதனைகள் மற்றும் அரசின் நலத்திட்டங்களை பொதுமக்கள் நன்கு அறிந்து கொள்ளும் வகையில் திருக்கழுக்குன்றம் பி.டி.வி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சி 18.8.2004 முதல் 20.8.2004 முடிய 3 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. இந்த பல்துறை பணி விளக்கக் கண்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, கூட்டுறவுத்துறை, கைத்தறித் துறை, சிறுசேமிப்புத்துறை, வனத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடும்ப நலத்துறை, தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், மீன் வளத்துறை, கல்வித்துறை, அறிவொளி இயக்கம், சுற்றுலாத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத் துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, தோட்டக்கலைத் துறை ஆகிய துறைகள் இக்கண்காட்சியில் சிறப்பான முறையில் அரங்குகள் அமைத்திருந்தன. இக்கண்காட்சியினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.வி.சோமசுந்தரம் அவர்கள் திறந்து வைத்து அனைத்துத் துறை அரங்குகளையும் பார்வையிட்டு விழாப்பேருரையாற்றினார்.

அவர் பேசும்போது, "செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் மிகச் சிறப்பாக பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. திருக்கழுக்குன்றம் நகரம் ஒரு தொன்மையான நகரமாகும். வேதகிரீஸ்வரர் திருக்கோயில் புஷ்கரமேளா – இலட்ச தீப பெருவிழாவில் செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 3 நாட்கள் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்ற பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார். காஞ்சிபுரம் மாவட்டம் அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாவட்டமாகத் திகழ்ந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களில் சிறந்த மாவட்ட ஆட்சித்தலைவராக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை தேர்ந்தெடுத்துள்ளார்கள். இதற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பாக வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். 'கடந்த 3 ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏழை, எளிய மக்கள் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டில் ஒரு பக்கம் வறுமை, ஒரு பக்கம் வறட்சி, இருப்பினும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கே முன்னோடியாக பல நல்ல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

அனைத்துத் துறைகளின் சார்பாக வைக்கப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி சிறந்த முறையில் அமைக்கப் பட்டுள்ளது. குறிப்பாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத் துறையினால் அமைக்கப்பட்ட கண்காட்சி சிறப்பாக உள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டு, அரசின் நலத் திட்டங்களை அறிந்து பயனடைய வேண்டும். மீன் வளத்துறையின் மூலம் மீனவ சமுதாயத்திற்கு என்னென்ன சலுகைகள் வழங்கியுள்ளார்கள் என்பதை இக்கண்காட்சி மூலம் அறியமுடிகிறது. மாநிலத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு ரூ.301 கோடி வட்டியை தள்ளுபடி செய்துள்ளார்கள். நாடு முன்னேற்றமடைய மகளிர் சமுதாயம் சிறப்பாகச் செயல்படவும், குடும்ப வருமானத்தைப் பெருக்கவும் கூட்டுறவுத்துறையின் மூலம் மகளிருக்கு கடன் வசதி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் முன்னோடித் திட்டமான "நமது கிராமம்" என்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இதற்காக ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். "நமது கிராமம்" திட்டத்தின் மூலம் கிராமத்திலுள்ள அனைவரும் கல்வி கற்க வேண்டும். யாரும் கல்வி கற்காமல் இருக்கக்கூடாது. "நமது கிராமம்" திட்டத்தில் அனைத்து வசதிகளும் குறிப்பாக குடிநீர், சாலை வசதி, மின்வசதி போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது. 3 ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தில் 9,694 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டங்களை தொடங்கி வைத்துள்ளார்கள். 5,31,784 நபர்களுக்கு சுமார் ரூ.326 கோடியே 60 இலட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளார்கள்'' என்று குறிப்பிட்டார்.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ந.கண்ணன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றிப் பேசும்போது, "செய்தி மக்கள் தொடர்புத்துறை திருக்கழுக்குன்றத்தில் ஏற்பாடு செய்துள்ள பல்துறைப் பணி விளக்க முகாம் மூலம் பொது மக்கள் அரசு நலத்திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்வதோடு, அவற்றை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நோக்கத்தில் இந்தக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளால், அனைத்துத் துறைகளும் வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருகிறது. நமது மாவட்டம் எந்த திட்டத்தைச் செயல்படுத்தினாலும், மாநில அளவில் முதல் 3 இடங்களுக்குள் ஒரு இடத்தைப் பெற்று வருகிறது. அரசால் அறிவிக்கப்பட்ட எந்தத் திட்டத்தையும் செயல்படுத்துவதிலும் காஞ்சிபுரம் மாவட்டத்தில், அரசுத் துறை அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும், மாவட்ட நிருவாகத்திற்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறார்கள் என தெரிவித்தார்.

மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.வாசுதேவன், அச்சரப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.பூவராகமூர்த்தி, மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.மா.தனபால், புனித தோமையர் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் திரு.ச.ராஜேந்திரன், திருக்கழுக்குன்றம் பேரூராட்சித் தலைவர் திரு.வீ.வேலாயுதம், இலட்ச தீப விழாக் குழுத் தலைவர் திரு.செ.து.வரதராஜன் ஆகியோர் முன்னிலையுரையாற்றிப் பேசினார்கள். மாவட்ட அரசு இசைப்பள்ளியின் மூலம் நாதசுர இசை நிகழ்ச்சி மற்றும் பள்ளி மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

20.8.2004 அன்று பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியின் நிறைவு விழா நடைபெற்றது. நிறைவு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா.வெங்கடேசன், இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு அனைத்துத்துறை அரங்குகளையும் பார்வையிட்டார். சிறப்பான முறையில் அரங்குகள் அமைந்திருந்த கூட்டுறவுத்துறை, மீன் வளத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், அறிவொளி இயக்கம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கல்வித்துறை ஆகிய துறைகளுக்குக் கேடயங்களை வழங்கினார். 18.8.2004 முதல் 20.8.2004 முடிய 3 நாட்கள் நடைபெற்ற பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அரசின் சாதனைகள் அடங்கிய வீடியோ படக்காட்சி காண்பிக்கப்பட்டது. இந்த 3 நாட்கள் நடைபெற்ற கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு பயன்பெற்றனர்.

– ந. இளங்கோ,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.

தமிழ்நாடு வனத்துறைக்கு அகில இந்திய அளவில் விருது

தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்று சூளுரைத்து, பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின்படி, தரிசு நில மேம்பாடு, வனப்பாதுகாப்பு போன்றவற்றில் திறம்பட செயல்பட்டமைக்காக அகில இந்திய அளவில் 3 விருதுகளைப் பெற்று தமிழ்நாடு அரசு வனத்துறை சாதனை படைத்துள்ளது.

தரிசு நிலங்களை மேம்படுத்தி மரங்கள் பயிரிடுதல் மற்றும் வனங்கள் அழியாது பாதுகாத்தல் போன்றவற்றில், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களையும் ஒப்பு நோக்கி, சிறப்பாக சேவை செய்யும் மாநில அரசின் வன அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், மகளிர் அமைப்புகள், தனி நபர்கள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு இந்திரா பிரியதர்சினி விருக்ஷ மித்ரா (Indira Priyadarshini Vriksha Mitra) விருதுகளை மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வன அமைச்சகம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது.

இவ்வகையில் 2001–2002ஆம் ஆண்டுக்கான விருதுகள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் மாநில அரசின் வன அமைப்புகள், கிராம வனக்குழு மற்றும் வன வளர்ச்சிக்கு பாடுபடும் தனி நபர் ஆகிய பிரிவுகளுக்கான விருதுகளை தமிழகம் வென்றுள்ளது. மாநில அரசின் வன அமைப்புகள் பிரிவில், வேலூர் வனக் கோட்டமும், கிராம வனக் குழுப் பிரிவில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் வனக் கோட்டத்தைச் சார்ந்த உங்கட்டி கிராம வனக் குழுவும், இந்திரா பிரியதர்சினி விருக்ஷ மித்ரா விருது பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. வன வளர்ச்சிக்குப் பாடுபடும் தனி நபர் பிரிவில், திருநெல்வேலி வனக் கோட்டத்தைச் சார்ந்த புளியங்குடியில் உள்ள திரு. வேலு முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அகில இந்திய அளவில் வழங்கப்படும் மொத்தம் 15 விருதுகளில், 3 விருதுகளை வென்று தமிழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின்படி, திறம்பட செயல்பட்டதன் காரணமாக தமிழக வனத்துறை இந்த சிறப்பு மிகுந்த சாதனையைப் படைத்துள்ளது. இந்தியாவிலுள்ள வேறு எந்த மாநிலமும் இது போன்று 3 விருதுகளைப் பெறவில்லை என்பதும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசுதான் இத்தகைய சாதனையைப் படைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விருது பெற்றவர்களுக்கு ரூ.50,000 ரொக்கப் பரிசும், பரிசுப் பதக்கமும், பாராட்டு மடலும் வழங்கப்படும். இந்த விருதுகள் செப்டம்பர் திங்கள் 9ஆம் தேதி அன்று, புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

❖ ❖ ❖



உயராய்வில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி,
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனம், சென்னை.

தோற்றம்

1968ஆம் ஆண்டு சனவரித் திங்களில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் 'தமிழிற்கு உயர் மைய ஆராய்ச்சி நிறுவனம்' ஒன்றைத் தொடங்க வேண்டும் என்னும் கருத்தை, தமிழ்நாட்டின் முதலமைச்சராக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிஞர் முன் வைத்தார்.

அதே சமயத்தில் பூனேவில் உள்ள 'தக்கணக் கல்லூரி முதுகலை ஆராய்ச்சி நிறுவனத்தின்' இயக்குநராக இருந்த டாக்டர் கத்ரே எனும் அறிஞர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அமைப்பிற்கு உரிய முன் வரைவுத் திட்டம் ஒன்றை, அக்கருத்தரங்கில் ஆய்வுரையாக வழங்கினார். அத்திட்டத்தில், பரந்துபட்ட நிலையில், மக்கள் வாழ்வியலோடு தொடர்புடைய அறிவுத்துறைகள் பலவற்றை ஒருங்கிணைத்த நிலையில் தமிழ்மொழி, இலக்கிய, பண்பாட்டு ஆராய்ச்சியை நடத்துவதற்குரிய நெறிமுறைகளை அவர் வகுத்துக் கொடுத்துள்ளார்.

மாநாட்டின் நிறைவு விழாவில், அத்திட்டத்தினை அண்ணா அவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றார். தம் உரையில்,

"பிரான்சு நாட்டிலுள்ள பிரெஞ்சு மொழிக் கலைக் கழகத்தைப் போன்ற நிலையில் நாம் அதனை உருவாக்க வேண்டும். அக் கலைக்கழகத்தின் அடிப்படைகளையும், நெறிமுறைகளையும் பின்பற்றி இங்குத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை அமைப்போமானால், சிறப்புமிகு இந்தியக் கலைக் கழகத்தை அல்லது தமிழகக் கலைக் கழகத்தை நாம் உருவாக்க இயலும். அப்பொழுதுதான், நமது தமிழ்மொழி ஆராய்ச்சிக் கழகம் உலகளாவிய நிலையில் வீறுடன் விளங்க இயலும்"

என்று தெரிவித்தார். இந்தக் கருத்தரங்கில்தான், முதன் முதலாக 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நிறுவ வேண்டும்' என்னும் எண்ணம் எழுந்தது. இந்த எண்ணத்தின் விளைவாக, இந்த நிறுவனத்தை உருவாக்குவதற்கு 'யுனெஸ்கோ'வின் உதவியை அறிஞர் நாடினர்.

1970–ஆம் ஆண்டு, ஜூலைத் திங்களில் மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு, பாரிஸ் மாநகரில் நடைபெற்றது. அப்பொழுது 'யுனெஸ்கோ' டைரக்டர் ஜெனரல் பொறுப்பிலிருந்த மதிப்பிற்குரிய டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் அம்மாநாட்டினைத் தொடங்கி வைத்தார். அவருடைய தொடக்க உரையில்,

"1968–ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்களில் கூடிய பதினைந்தாவது அமர்வில், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவுவது பற்றி, 'யுனெஸ்கோ' ஒரு

தீர்மானத்தை நிறைவேற்றியது. நீங்கள் முன்னர் நடத்திய மாநாட்டின்பொழுது விடுத்த வேண்டுகோளையும், பரிந்துரைகளையும் கருத்தில் கொண்டு அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது”

என்று குறிப்பிட்டுள்ளார்.

இம்மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டின் அறிஞர் பெருமக்களின் ஆய்விற்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கட்டமைப்புப் பற்றிய திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த மாநாட்டிலேயே இந்நிறுவனத்தை, பதிவுபெற்ற ஒரு சங்கமாக அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அதற்குரிய விதிமுறைகள் யாவும் வகுக்கப்பட்டன. இதற்கிணங்க 1970 அக்டோபர் 21 ஆம் நாள், ஒரு சங்கமாக இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. 1860 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சங்கங்களின் சட்டத் தொகுதி, 13ஆம் விதிக்கிணங்க உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒரு சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் தமிழுக்கென ஆரம்பிக்கப்பட்ட முதல் நிறுவனம் இது என்னும் பெருமை இந்நிறுவனத்திற்கு உண்டு.

நோக்கம்:

இயலும் வகையிலெல்லாம் தமிழாராய்ச்சியைத் தக்க முறையில் போற்றி வளர்ப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பது இந்நிறுவனத்தின் தலையாய நோக்கமாகும். உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ் அறிஞர்களின் ஒத்துழைப்புடன் பல்வேறு அறிவுத்துறைகளுடன் இணைந்த ஆராய்ச்சியைப் போற்றி வளர்ப்பது, இந்த அமைப்பினுடைய முதன்மையான நோக்கங்களுள் ஒன்றாகும்.

அமைப்பு:

தன்னாட்சி அமைப்புடைய இந்நிறுவனத்துக்கெனத் தனியே ஆளுகைக்குழு உள்ளது. இந்த ஆளுகைக்குழுவின் அலுவல்வழித் தலைவராகத் மாண்புமிகு தமிழக கல்வி அமைச்சர் அவர்களும், துணைத்தலைவர்களாக சென்னை, அண்ணாமலை, மதுரை காமராசர், மற்றும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களும் ஐ.ஏ.டி.ஆர். பிரதிநிதியாக திரு. வா.செ.குழந்தைசாமி அவர்களும், உறுப்பினர்களாகத் தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத்துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர் மற்றும் இந்திய மொழிகள் நடுவண் நிறுவன இயக்குநர்–மைசூர்) ஆகியோரும் உறுப்பினர்–செயலராக உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநரும் அமைவர்.

இயக்குநரமைவு:

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதன்மை அலுவல் ஆட்சியராக 1970 முதல் முனைவர் கா.மீனாட்சிசுந்தரம் அவர்களும், 1974 முதல் முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அவர்களும் பணியாற்றினர். பின்னர் 1–2–1976 முதல் 1986 ஆகஸ்டு வரை முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அவர்களும் 23–8–86 முதல் 1987 டிசம்பர் முடிய முனைவர் அ.நா.பெருமாள் அவர்களும், 1988 சனவரி முதல் 1989 மே 5 முடிய முனைவர் க.த.திருநாவுக்கரசு அவர்களும், 1989 ஆகஸ்டு முதல் 1991 பிப்ரவரி வரை முனைவர் சு.செல்லப்பன் அவர்களும் இயக்குநர்களாகப் பணியாற்றியுள்ளனர். 1991 பிப்ரவரி முதல் 1994 அக்டோபர் வரை முனைவர் அன்னிதாமசு இயக்குநர்–பொறுப்பாகப் பணியாற்றியுள்ளார். 1994 அக்டோபர் முதல் 2002 சனவரி முடிய முனைவர் ச.சு.இராமர் இளங்கோ அவர்கள் பணியாற்றியுள்ளார். 01–02–2002 முதல் முனைவர் சா.கிருட்டினமூர்த்தி அவர்கள் இயக்குநராகப் பணியாற்றி வருகிறார்.

நிதி :

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நிகரப் பற்றாக்குறைச் (Net deficit) செலவினம் முழுமையும் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.
- 1999–2000 ஆம் ஆண்டில் அரசு நல்கையாக ரூ.65.25 இலட்சம் வழங்கப்பெற்றது. 2000–2001ஆம் ஆண்டில் ரூ.58 இலட்சமாகவும், 2001–2002இல் ரூ.53 இலட்சமாகவும் வழங்கப் பெற்றுள்ளது.
- 2002–2003, 2003–2004 மற்றும் 2004–05ஆம் ஆண்டுகளுக்கு அரசு நல்கை ரூ.53 இலட்சமாகவே தொடர்ந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பெற்று வருகிறது.

வெளியீடுகள் :

- இந்நிறுவனத்தால் வெளியிடப்பெற்றுள்ள நூல்கள் மொத்தம் 515.
- தமிழ் நூல்கள் 433, ஆங்கிலம் 77, பிறமொழி 5.
- பரிசு பெற்ற நூல்கள் – 21.
- 2002–இல் மட்டும் 27 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- 2003–இல் 31 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- 2004– இல் இதுவரை 43 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இம்மூன்றாண்டுகளில் மட்டும் 101 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீட்டுக் கணக்கு 1986 முதல் தனியே பேணப்பட்டு வருகிறது. விற்பனை வரவுகளுக்கு ஏற்பச் செலவினங்கள் அமைக்கப்பட்டு இது சுழல் நிதியாகப் பேணப்பட்டு வருகிறது.

தமிழியல் பருவ இதழ்:

ஆண்டுக்கு இருமுறை வெளிவரும் பருவ இதழ் தமிழியல் இதழ். இது 1971 முதல் தொடர்ந்து வெளிவருகிறது. இறுதியாக வந்துள்ள இதழ் 65ஆகும்.

செய்திக்கதிர்:

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் செய்திகளைத் தாங்கி வரும் காலாண்டு இதழ் செய்திக்கதிர் ஆகும். இது திங்கள் இதழாக மே திங்கள் 2004 முதல் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனச் செய்திப்பரல்கள் என கொண்டு வரப்பட்டுள்ளது.

அறக்கட்டளைகள்:

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பல்வேறு பெரியோர்கள் மற்றும் அமைப்பின் சார்பில் 28 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன.
- 2002–ஆம் ஆண்டில் மட்டும் புதிதாக 4 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன.
- 2003–ஆம் ஆண்டில் இரண்டு அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன.
- 2004–ஆம் ஆண்டில் இரண்டு அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன.
- அறக்கட்டளைப் பொழிவுகளாக இதுவரை 95 நூல்கள் வந்துள்ளன.

நூலகம்:

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பெரிய ஆய்வு நூலகம் ஒன்று உள்ளது. தமிழாய்வுக்குப் பயன்படும் இந்நூலகத்தில் 78,500க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. 50,000 நூல்கள் கணினியில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மற்றும் புறநகர் சார்ந்த மாணவர்க்கும் அறிஞர்களுக்கும் மிகுந்த பயனுடைய நூலகம், இந்திய ஆட்சிப் பணி உள்ளிட்ட போட்டித் தேர்வுகள் எழுதப் பயன் தரும் பன்முக நூலகம் ஆகும்.
- தினமலர் நாளிதழிலிருந்து மதிப்புரைக்கு வரும் நூல்களின் ஒவ்வொரு படியினை மூன்று திங்களுக்கு ஒருமுறை இந்நிறுவனத்துக்கு நன்கொடையாக வழங்குகின்றனர்.
- அறிவியல் தமிழறிஞர் பெ.நா.அப்புசாமி அவர்களின் குடும்பத்தினர் சுமார் 2,500 நூல்களை இந்நிறுவன நூலகத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.
- 2,500க்கும் மேற்பட்ட பயனுள்ள நூல்களைப் பராசக்தி மகளிர் கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் திருமதி. இந்திரபவானி வரதராஜபாண்டியன் இவ்வாண்டில் இந்நூலகத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்தைச் செப்பம் செய்யத் தமிழக அரசு கடந்த நிதியாண்டில் ரூ.6.35 இலட்சம் சிறப்பு நல்கை வழங்கி அதனைப் பொதுப்பணித்துறை வழி வழங்கப்பட்டுச் செப்பம் செய்யப்பட்டுள்ளது.

கருத்தரங்குகள் :

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கீழ்க்குறித்த வகைப்பாட்டில் கருத்தரங்குகள் நடத்தப்பெற்று வருகின்றன.

ஆண்டுக்கருத்தரங்குகள்	–	20
திங்கள் கருத்தரங்குகள்	–	261
வெள்ளிக்கருத்தரங்குகள்	–	1,037
ஆய்வுமன்றக் கருத்தரங்குகள்	–	181
பயிலரங்குகள்	–	8
சிறப்புச் சொற்பொழிவுகள்	–	54

முனைவர் பட்ட ஆய்வுகள்:

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்ட ஆய்வுகளுக்குத் தொடர்ந்து வழிகாட்டப்பட்டு வருகின்றன. இந்நிறுவன ஆய்வு வழிகாட்டிகள் மூலம் இதுவரை 106 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். முனைவர் பட்டம் சென்னைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

இப்போது இந்நிறுவனத்தில் 10 முழுநேர மாணவர்களும் 7 பகுதி நேர மாணவர்களும் முனைவர் பட்ட ஆய்வினைத் தொடர்கிறார்கள்.

தமிழ் மொழிப் பயிற்சி வகுப்புகள்:

தமிழரல்லாதவர்கள் தமிழ் கற்கப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்று வருகின்றன.

தமிழ் அறிமுகம்	3 மாதம்,
தமிழ் முதுநிலை	6 மாதம்,
தமிழ் தனிப்பயிற்சி	12 மாதம்.

இப்பயிற்சி வகுப்புகள் வழி இதுவரை 222 வெளிநாட்டவர் பயன்பெற்றுள்ளனர். அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான், கொரியா, போலந்து, செக்கோஸ்லோவேகியா, சீனா, ரீ யூனியன் தீவுகள் நெதர்லாந்து போன்ற நாடுகள் உள்ளிட்ட இடங்களைச் சார்ந்தவர்கள் பயின்று பயனடைந்துள்ளனர்.

சுவடியியல் மற்றும் மொழிபெயர்ப்பியல் பட்டய வகுப்புகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 1979 முதல் சுவடியியல் மற்றும் மொழிபெயர்ப்பியல் பட்டய வகுப்புகள் தொடங்கித் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன. இதுவரை இதன்வழி 120 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

ஒலி நாடாக்களில் தமிழ்:

தமிழரல்லாதார் தானே தமிழ் கற்க வசதியாக இந்நிறுவனம் 6 ஒலிநாடாக்களையும், ஐந்து துணை நூல்களையும் வெளியிட்டுள்ளது.

குறுவட்டுகளில் தமிழ் :

தமிழரல்லாதார் கணினி உதவியுடன் தானே தமிழ் கற்க வசதியாகப் பல்முனை ஊடக வழி, ஒலி–ஒளிக் காட்சியுடன் தமிழுலகம் எனும் குறுவட்டினை (இரண்டு கொண்டது) இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது.

திட்டப் பணிகள் / பல்கலைக்கழக நல்கைக்குழுவின் பெருந்திட்டப் பணிகள்:

✧ பத்துத் திட்டப்பணிகள் தொடங்கி நடத்தப் பெறுகின்றன.

✧ பல்கலைக்கழக நல்கைக்குழுவிலிருந்து ஐந்து பெருந்திட்டப்பணிகள் முதன்முறையாக 2003–இல் இந்நிறுவனத்துக்கு நிதியுதவியுடன் கிடைத்துள்ளன. 1.7.03 முதல் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெறுகின்றன.

பிற செய்திகள்:

✧ நிறுவனத்துக்கு நன்கொடையாகக் கருத்தரங்க அறையும், படிப்பறையும் கட்டுவதற்குத் தினத்தந்தி அதிபர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்கள் ரூ.9.50 இலட்சம் முழு நன்கொடையாக வழங்கிப் பொதுப்பணித் துறை வழி, கட்டி முடிக்கப்பட்டுத் திறப்பிற்கு அணியமாயுள்ளது.

✧ அகரமுதலியின் வெளியீட்டுத் திட்டப்பணியினை இந்நிறுவனம் அரசு விரும்பியவாறு மேற்கொண்டு ஏற்று ஆறு தொகுதிகள் வெளியிட அணியமாக்கியது. இப்போது அகரமுதலியின் அச்சுப்பணி இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு அச்சுப்பணி முடியும் தருவாயிலுள்ளது.

✧ ஆய்வுக் கருத்தரங்குகள், திங்கள் கருத்தரங்குகள், தமிழ் அறிஞர் வரிசைக் கருத்தரங்குகள் ஆகியன தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன.

✧ தமிழறிஞர் வரிசைக் கருத்தரங்கில் இதுவரை 16 தமிழறிஞர்கள் பற்றிய பொழிவுகள் நடைபெற்றுள்ளன. இவ்வகையில் எட்டு நூல்கள் வெளிவந்துள்ளன.

✧ உலகத் தமிழ் இலக்கிய வரலாறு எனும் தமிழ்வளர்ச்சித்துறைத் திட்டப்பணியில் இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

✧ மத்திய அரசின் விஞ்ஞான் பிரசார் அமைப்பின் சார்பில் தென்னிந்திய மொழிகளில் அறிவியல் பரப்புதல் எனும் கருத்தரங்கு நடத்தப்பெற்றது.

✧ சாகித்திய அகாதெமியுடன் இணைந்து செய்யுளியல் கோட்பாடுகள் எனும் ஒருநாள் கருத்தரங்கு நடத்தப்பெற்றது.

✧ அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து உலகத் திருக்குறள் மாநாடு சென்னையில் சனவரி 17, 18, 19 ஆகிய நாட்களில் சென்னை அண்ணா பல்கலையில் நிகழ்ந்தது. நிறுவனம் மூன்று நூல்களை வெளியிட்டுள்ளது.

✧ நடுவண் அரசின் பண்பாட்டுத்துறை அமைச்சகம் வழி வரப்பெற்ற நல்கையுதவியுடன் தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளில் கவிதைத் திருவிழாக் கருத்தரங்கு நடத்தப்பெற்றது.

✧ இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கின் 35–ஆம் கருத்தரங்கினை விருந்தோம்பல் நிறுவனமாக அமைந்து இந்நிறுவனம் நடத்தியது.

✧ தமழ்நாடு அரசின் நிதியுதவியுடன் தமிழ் வளர்ச்சி இயக்கவழி இலக்கியச் சொல்லடைவுத் திட்டம் தொடங்கப் பெற்றுள்ளது.

✧ தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தமிழ் முதுகலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டம், முனைவர் பட்ட வகுப்புகள் தொடங்கி நடத்தச் செயன்மைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✧ டாக்டர் வ.சு.ப. மாணிக்கனார் இலக்கிய ஆய்வுக் கருத்தரங்கினை மேலைச்சிவபுரித் தமிழ்க் கல்லூரியில் நடத்தவுள்ளது. ◆

மும்பை மாணவ, மாணவியருக்கு இலவச தமிழ்ப் பாடநூல்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மகாராஷ்டிர மாநிலம், மும்பையில் வசித்து வரும் தமிழ்க் குழந்தைகளின் தமிழ்க் கல்வி மேம்பாட்டிற்காக, நகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் தமிழ்ப் பாட நூல்களை இலவசமாக வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

மகாராஷ்டிர மாநிலம், மும்பை மாநகரில், வசித்து வரும் தமிழர்கள், அங்கு 72 நகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 7–ஆம் வகுப்பு வரை 40,320 மாணவ, மாணவிகள் பயின்று வருவதாகவும், 25 நகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளில், 8–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை 6,000 மாணவ, மாணவிகள் பயின்று வருவதாகவும், அவர்களுக்கு, தமிழ்நாட்டில் கற்பிக்கப்படும் தமிழ்ப் பாட நூல்களைக் கொண்டே தமிழ்ப் பாடம் கற்பிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்து, இந்த மாணவ மாணவியர்கள் தடையின்றித் தமிழ்க் கல்வி பயின்றிட ஏதுவாக இவர்களுக்குத் தமிழ்ப் பாட நூல்களை இலவசமாக வழங்கிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மும்பை வாழ் தமிழ் மக்கள் விடுத்த கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, தமிழ் மொழிப் பாடம் கற்கும் குழந்தைகளுக்குத் தேவையான வசதிகளையும், உதவிகளையும் செய்து தர வேண்டியது கடமை என்ற உயரிய சிந்தனையின் அடிப்படையில் மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் வசிக்கும் மாணவ, மாணவியர்களின் தமிழ்க் கல்வி மேம்பாட்டிற்காக மொத்தம் 7 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான தமிழ்ப் பாடப் புத்தகங்களைத் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலமாக இலவசமாக வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த உத்தரவினால், மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் 1–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை தமிழ் மொழிப் பாடம் பயிலுகின்ற மொத்தம் 46,320 மாணவ, மாணவியர்கள் பயன் அடைவார்கள். ●

கடலூரில் சுற்றுலா கோடை விழா

கடலூர் சில்வர் பீச்சில் சுற்றுலா கோடை விழா 23, 24, 25.7.2004 ஆகிய மூன்று நாட்கள் அரசு சார்பில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முதல் நாள் நிகழ்ச்சியான 23.7.2004 அன்று கோடை விழா மற்றும் பல்துறை பணி விளக்கக் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து, அரசுத்துறை அரங்குகளைப் பார்வையிட்டார். பின்னர், அரசின் மூன்றாண்டுச் சாதனை மலரை வெளியிட்டு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது:

"சில்வர் பீச்சை மேம்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இங்கு சிமெண்ட் சாலை, குடில்கள், பார்வை கோபுரம், படகு குழாம், குழந்தைகள் பூங்கா, உயர்மின் கோபுர விளக்கு, சுற்றுலாப் பயணிகள் உட்கார்ந்து இளைப்பாற கல் இருக்கைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் செயல்படும் கடல் மீன் உணவகமும், மகளிர் தயாரிப்பு பொருட்கள் விற்பனையும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அரசுத்துறை மூலம் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை, பொதுமக்கள் அதிக அளவில் பார்வையிட்டு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், வழங்கப்படும் நிதி உதவிகள் பற்றிய விவரங்களை அறிந்து பயன்பெற வேண்டும்.

தேவனாம்பட்டினம் பாலம் கட்ட ரூ.1 கோடியே 35 இலட்சம் மதிப்பிலான முன்மொழிவு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அரசு ஆணை பெறப்பட்டு பாலம் கட்டத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறினார்.

முதல் நாளான 23.7.2004 அன்று கடலூர் ராகஸ்ரீ ஆர்கெஸ்ட்ரா, கடலூர் அரசு இசைப்பள்ளி மாணவர்களின் மங்கள இசையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள், 5 வயது முதல் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான மாறுவேடப் போட்டி, தஞ்சாவூர் மண்டல கலைப்பண்பாட்டு மையம் மற்றும் கடலூர் மாவட்ட கலை மன்றம் இணைந்து வழங்கிய கலைமாமணி சிங்கம்புணரி தங்கராஜ் குழுவினரின் நாட்டுப்புற ஆடல், பாடல், கலை நிகழ்ச்சி, தென்னகப் பண்பாட்டு மையம் வழங்கிய பாண்டிச்சேரி ஜெய்மூர்த்தி குழுவினரின் கரகம், கோலாட்டம், கும்மி, கிராமிய ஆடல், பாடல் நிகழ்ச்சி, ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் வழங்கிய மதுரை நட்சத்திராலயா குழுவினரின் பல்சுவை நிகழ்ச்சி ஆகியவை நடைபெற்றன.

இரண்டாம் நாளான 24.7.2004 அன்று 'சிவா ரிதம்ஸ்' ஆர்கெஸ்ட்ரா, பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள், புதையல் வேட்டை,கைப்பந்து, கபாடி போட்டிகள், நாய் கண்காட்சி, ருசிமிக்க உணவு தயாரிப்புப் போட்டி, கொழு கொழு குழந்தை போட்டி, கராத்தே நிகழ்ச்சி, அரசு இசைப்பள்ளி மாணவ, மாணவியரின் தமிழ் அமுது நாட்டிய நிகழ்ச்சி, தினமலர் நாளேடு வழங்கிய மதுரை "காமெடி பாய்ஸ்" நிகழ்ச்சி, பேருந்து உரிமையாளர்கள் வழங்கிய 'தரங்கினி கலை நிகழ்ச்சி' போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நாய்கள் கண்காட்சி மற்றும் ருசிமிக்க உணவு தயாரிப்புப் போட்டி, மாறுவேடப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியரின் துணைவியார் டாக்டர் ஜெய்தீப் பேடி அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

கோடை விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில், மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ. மில்லர் ஆகியோர் கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டனர்.

மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள், அரசுத்துறை சார்பில் சிறப்பாக அரங்கு அமைத்து முதலிடம் பெற்ற வேளாண்மைப் பொறியியல் துறை, இரண்டாமிடம் பெற்ற மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மூன்றாமிடம் பெற்ற கடலூர் நகராட்சி ஆகியவற்றிக்குப் பரிசுகள் வழங்கியும், 3 நாட்களும் பல்வேறு நிகழ்ச்சிகள் வழங்கிய கொடையாளர்கள் மற்றும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உதவிய அரசு அலுவலர்களுக்குப் பொன்னாடை அணிவித்து பேசும் போது தெரிவித்ததாவது:

"பொதுமக்கள் இக்கோடை விழாவில் அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளைப் பார்வையிட்டு, அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், வழங்கப்படும் உதவிகள் ஆகியவற்றை அறிந்து பயன்பெற வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் எண்ணம் அரசின் உதவிகள், திட்டங்கள் பொது மக்களை முழுமையாகச் சென்றடைய வேண்டும் என்பதுதான். மாண்புமிகு முதலமைச்சர் ஆட்சியில் தான் மகளிர் சுயஉதவிக் குழு தொடங்கப்பட்டு, பெண்கள் சுயமாக சம்பாதிக்க வழி வகுத்து இன்று பல்வேறு தொழில்களை அவர்கள் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். மக்களுக்காகப் பாடுபட்டு வரும் அரசு இந்த அரசு" என்றார்.

விழாவில், பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்குப் பரிசுகளும், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளும் வழங்கி மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ.மில்லர் அவர்கள் பேசும் போது தெரிவித்ததாவது:

"மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் சுற்றுலாத்துறை மேம்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறையின் மீது தனிக்கவனம் செலுத்தி வருகிறார். இந்த ஆண்டு சுற்றுலாத் துறையின் மேம்பாட்டிற்கு ரூ.30 கோடியே 35 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

2003–04ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறை மூலம் ரூபாய் 2 கோடியே 45 இலட்சம் வருமானம் பெறப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டம் சுற்றுலாத் துறையில் இரண்டாம் இடம் பெற்றுள்ளது. கடலூரில் உள்ள பிச்சாவரம், பரங்கிப்பேட்டை போன்ற கடற்கரைப் பகுதிகளை மேம்பாடு செய்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்றார்.

இவ்விழாவிற்கு, மாவட்ட ஆட்சியர் திரு. ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., தலைமையேற்றார். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. ஆ. அருண்மொழித் தேவன் முன்னிலை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. மு. கணேசன் வரவேற்புரையாற்றினார்.

விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எம்.சி. சம்பத், திரு. பி.எஸ். அருள், திரு. என். இராமு, கடலூர் நகர்மன்ற துணைத் தலைவர் திரு. ஜி. குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட ஊராட்சித் தலைவர் டாக்டர் சண்முக சுந்தரம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நிறைவு நாள் நிகழ்ச்சியாக தஞ்சாவூர் மண்டல கலை பண்பாட்டு மையம், கடலூர் மாவட்ட கலை மன்றம்

இணைந்து வழங்கிய செங்கை விநாயகா நாட்டியாலயா நாட்டிய நிகழ்ச்சியும், கடலூர் மாவட்ட திரைஅரங்க உரிமையாளர்கள் சங்கம் நடத்திய திரைப்பட நட்சத்திரங்களின் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

நாள்தோறும், கோடை விழா கண்காட்சி அரங்கில் அரசின் சாதனை விளக்க படக்காட்சி, செய்தி மக்கள் தொடர்புத்துறை மூலம் பொதுமக்களுக்குக் காண்பிக்கப் பட்டது.

இக்கோடை விழா, பல்துறை பணி விளக்கக் கண்காட்சியில் வேளாண் பொறியியல் துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கூட்டுறவுத் துறை, வேளாண்மைத் துறை, சுற்றுலாத்துறை, செய்தி–மக்கள் தொடர்புத் துறை, நகராட்சி, காசநோய்த்துறை, தொழுநோய்த்துறை, சுகாதாரத்துறை, சித்த மருத்துவம், மகளிர் திட்டம், வனத்துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, தோட்டக்கலைத் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, தாட்கோ, சமூக நலத்துறை, ஊட்டச்சத்துத்துறை, கல்வித்துறை, கதர் கிராம தொழில் வாரியம், சிறுசேமிப்பு, ஆவின், போக்குவரத்துத் துறை, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, மாவட்ட தொழில் மையம், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகிய துறைகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

கோடை விழா மற்றும் பல்துறை பணி விளக்க முகாம் கண்காட்சியினைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் நாள்தோறும் கண்டு களித்தனர். ஒவ்வொரு துறையின் சார்பில், அரசின் சாதனைகள் குறித்த விளக்கக் கையேடுகள் விநியோகம் செய்யப்பட்டன.

செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அரங்கு அமைத்து, அரசின் மூன்றாண்டுச் சாதனை குறித்து, பொது மக்களுக்கு விளக்கப்பட்டது. நாள் தோறும், அரசின் மூன்றாண்டுச் சாதனை குறித்த சிறு கையேடு, மற்றும் "நாட்டு மக்கள் நலன் காக்க அரசின் புது அறிவிப்புகள்" கையேடும் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

— என். பாலையா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கடலூர்.

சில துளிச் செய்திகள்

- தாவரங்களின் உணவில் நைட்ரஜன், பொட்டாசியம், பாஸ்வரம், மக்னீசியம், கந்தகம், இரும்பு போன்ற வேதிப் பொருள்கள் சேர்ந்துள்ளன.
- பாம்பு, பல்லி, ஆமை, முதலை போன்ற ஊர்வனவற்றில் ஏறத்தாழ 5 ஆயிரம் வகைகள் உள்ளன.
- உலகில் ஏறத்தாழ 500 எரிமலைகள் உள்ளன.
- மனித உடலில் மொத்தம் 206 எலும்புகள் இருக்கின்றன.
- ஐக்கிய நாடுகள் அவை 1945ஆம் ஆண்டு ஜூன் 26ஆம் நாள் நிறுவப்பெற்றது.
- பிரான்ஸ் தலைநகர் பாரீசில் உள்ள ஈபில் கோபுரத்தின் உயரம் 984 அடி.
- ஒட்டகச் சிவிங்கி 20 அடி உயரம் வரை வளரும்.
- ஒட்டகம் ஒரே நேரத்தில் 90 லிட்டர் தண்ணீர் குடிக்கும்.
- ஸ்காட்லாந்துக்கு அருகிலிருக்கும் ஸ்டாபா தீவில் உள்ள பிங்கல் எனும் குகையில் எழுப்பப்படும் எதிரொலிகள் இசைக்கருவிகளில் இருந்து மீட்டும் இசை போல நீண்ட நேரம் கேட்கிறதாம்.
- X–கதிர்கள் தற்செயலாக 1895இல் கண்டுபிடிக்கப்பட்டவை.

செக்கிழுத்த செம்மல்

தேசியத் திருவிளக்கு, தமிழ்நாடு தந்த தவப்புதல்வர், செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்கள் அரசியல் தலைவராகவும் அறிஞர் பெருமகனாராகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும், புகழ் வாழ்வு வாழ்ந்த புனிதர்.

வ.உ.சி. அவர்களின் வரலாறு, இந்தியத் தாயின் எழுச்சி வரலாறு.

செந்தமிழ்த்தாயின் சிறப்பு வரலாறு!

ஒட்டப்பிடாரத்தில், வ.உ.சி. தோன்றினார். தந்தை உலகநாதர். தாயார் பிரமாயி அம்மாள். 5.9.1872 கப்பலோட்டிய தமிழர், செக்கிழுத்த செம்மல் சிதம்பரம் பிள்ளை பிறந்த திருநாள்.

செல்வக்குடியில் அறிவார்ந்த பெருமக்கள் வழியிலே தோன்றியவர் வ.உ.சி. அவரது இளமைக்கல்வி ஒட்டப்பிடாரத்தில் தொடங்கியது.

அரிச்சுவடி, ஆத்திச்சூடி, எண்சுவடி, உலகநீதி, கொன்றைவேந்தன், குழிப்பெருக்கம், நளவெண்பா, மூதுரை, வெற்றிவேற்கை போன்ற நூல்களைச் சிதம்பரனார் இளமையில் பயின்றார்.

தெய்வத் தமிழைக் கற்ற சிதம்பரனாருக்கு ஆங்கிலம் கற்பிக்கும் பள்ளி அருகே இல்லாததால், உலகநாதபிள்ளை மகனுக்காக ஒரு பள்ளியை அமைத்தார். ஊராருக்கும் அது உதவியாய் அமைந்தது.

அடிப்படைக் கல்வியை ஒட்டப்பிடாரத்தில் முடித்த சிதம்பரனார், தொடர்ந்து கற்கத் தூத்துக்குடி சென்றார்.

சேவியர் உயர்நிலைப்பள்ளியில், இடைநிலைக்கல்வி, கால்டுவெல் உயர்நிலைப்பள்ளியில் சில காலம் கல்வி, பின் மறுபடி சேவியர் உயர்நிலைப்பள்ளியில் பள்ளி இறுதி. இப்படித் தொடர்ந்த பள்ளிக் கல்வி பாங்குற முடிந்தது.

திருநெல்வேலியில் இந்துக் கல்லூரி இவரையழைத்தது. பின்னர் திருமந்திரநகர் எனச் சிதம்பரனாரால் அழைக்கப்படும் தூத்துக்குடியிலேயே உயர் கல்வி தொடர்ந்தது.

ஆங்கிலம், அருந்தமிழ் இரண்டிலும் அறிஞரானார்! இந்த அறிவையளித்த ஆசிரியர் அனைவரையும் மறவாமல், வ.உ.சி. சுயசரிதை என்னும் தம் கவிதை நூலில் வாயாரப் புகழ்கிறார்.

சிதம்பரனாருக்கு 23 வயதிலேயே திருமணம் நிகழ்ந்தது. திருச்செந்தூர்த் திருவாளர் சுப்பிரமணிய பிள்ளையின் திருமகள் வள்ளியம்மையை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்.

வழக்கறிஞர் வ.உ.சி.

சிதம்பரனாரின் பாட்டனார், தந்தையார், பெரிய தந்தையார் ஆகிய அனைவருமே வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டவர்கள். வாழையடி வாழையென வந்த வழக்கறிஞர் தொழில் வ.உ.சி. அவர்களையும் இழுத்தது. திருச்சிராப்பள்ளியில் சட்டக் கல்வியைத் திறனுடன் பெற்று 1895 – ஆம் ஆண்டு வழக்கறிஞரானார்.

உரிமையியல், குற்றவியல் இந்த இரண்டு துறையிலும் சிறந்து விளங்கிய சிதம்பரனார் குற்றவியல் துறையில் வல்லுநராக விளங்கினார். நீதிபதிகளும் அஞ்சும் வண்ணம் நேர்மையின் இருப்பிடமாய் வ.உ.சி. விளங்கினார்.

ஒட்டப்பிடாரத்தில் தொடங்கிய வழக்கறிஞர் பணி 1900 ஆம்

ஆண்டிலிருந்து தூத்துக்குடியில் தொடர்ந்தது. வாதத்திறமையால் வெற்றி மேல் வெற்றி பெற்ற வ.உ.சி.அவர்கள் இல்லத்தில் செல்வம் செழித்தது. எல்லையில்லா நிதி ஈட்டினார்.

இந்நிலையில் 1901–ஆம் ஆண்டில் வள்ளுவன் கண்ட இலக்கணத்தின்படி வாய்ந்த வாழ்க்கைத் துணைவியாகிய வள்ளியம்மையார் இயற்கை எய்தினார்.

மறுமணம் வேண்டாம் என மனவுறுதி கொண்டிருந்த பிள்ளையவர்கள், பின் முதல் மனைவியின் குடும்பத்திலேயே மீனாட்சியம்மையை மணம் புரிந்து கொண்டார். நான்கு ஆண் மக்களும் நான்கு பெண் மக்களும் சிதம்பரனாரின் செல்வங்களாகத் தோன்றினார்கள்.

மாந்தருக்குள் கீழ்மேல் என்று கருதும் பைத்தியங்களுக்கு அவர் என்றும் எதிரி. ஆகவே தான் சென்னையில் இருந்த சுவாமி சகஜானந்தர் என்னும் அரிசனப் பெரியாரை அழைத்துச் சென்று தம்முடனே வைத்துக் கொண்டார்.

புகழ்பெற்ற வழக்கறிஞர். பொருட்செல்வம் நிரம்பியவர். வரையாது வழங்கும் வள்ளல் – இந்தப் பெருமைகளுடன் நில்லாது தமிழாராய்ச்சியும் தத்துவ ஆராய்ச்சியும் நடத்தி வந்தார். ஞான வேட்கை அவரின் இளமை தொட்டு இருந்து வந்த இயல்பு. ஆகவே ‘ விவேக பானு’ என்னும் மாத இதழை அவர் நடத்தி வந்தார்.

கடலாட்சியே வெள்ளையன் ஆட்சிக்குக் கால்கோளாக அமைந்தது என்பதை உணர்ந்த வ.உ.சி., அந்தக் கடலின் ஆட்சியைக் கப்பல் மூலம் கைப்பற்ற 1906 ஆம் ஆண்டிலே ‘சுதேசி நாவாய்ச் சங்கம்’ எனும் சங்கத்தை நிறுவினார்.

‘மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்’ என்றான் பாரதி. அவன் காலத்திலேயே அதை நனவாக்க கீழைக் கடல்வெளியில் வ.உ.சி.யின் இரு கப்பல்கள் மிதக்கத் தொடங்கின.

10 இலட்சம் ரூபாய் பங்கு முதலீட்டில் பிறந்த சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு ஏழைகள் கூட இயன்றதைத் தந்திருந்தனர். வ.உ.சி.யின் முயற்சி திருவினையாக்கியது. அதன் பயனாக ஆதாயம் திரண்டது. ஆனால், ஆங்கிலேய வணிகக் கும்பல் அதிர்ச்சியடைந்தது. சுதேசிக் கம்பெனியை ஒழிக்க எல்லா வழியிலும் முயன்றது.

இந்த நேரத்தில் சிதம்பரனாரின் தேசிய உணர்வு தீவிரமாகியது. இது வெள்ளைக்கார ஆட்சிக்கும், வெள்ளை வியாபாரக் கம்பெனிக்கும் வசதியாகப் போனது.

தேசியப் புயல்

பிள்ளையவர்களின் பேச்சு சுதந்திர உணர்வைத் தமிழ்நாடெங்கும் தூண்டியது. அரசியலில் மிதவாதிகள், தீவிரவாதிகள் என இரு பிரிவினர் இருந்த காலம் அது. வ.உ.சி. திலகரைக் குருவாகக் கொண்டு தேசியம் வளர்த்த வீரர். ஆகவே, அவர் தீவிரவாதி. தென்னாட்டிலே சிறந்த விடுதலை வீரர் சிதம்பரனார்தாம் என்று திலகர் பாராட்டுமளவுக்கு நாடெங்கும் தேசியம் வளர்த்த வீரர்.

1905–இல் தேசாபிமானிகள் சங்கம் எனும் சங்கத்தைத் திருநெல்வேலியில் சிதம்பரனார் நிறுவினார். பாமர மக்களுக்கு எழுச்சியூட்ட, தமிழிலே உரையாற்றித் தேசியம் வளர்த்தார் வ.உ.சி. மக்களுக்கெல்லாம் கைத்தொழில் கற்பிக்க ஜனசங்கம் எனும் சங்கத்தை ஏற்படுத்தினார்.

இந்த நேரத்தில் வந்தது 1908ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9–ஆம் நாள்! அது அரவிந்தகோஷ் மீது தொடரப்பட்ட சதி வழக்கில் ஆறுமாத சிறைத் தண்டனைக்குப் பின் விபின்சந்திரபாலர் விடுதலை செய்யப்படுகிற நாள், அந்நாளைக் கொண்டாடவும், அன்று முதல் “சுயராஜ்ஜியம்” எனும் பத்திரிகை வெளியிடவும், தரும புத்தகசாலை, தரும வைத்தியசாலை, நல்லதோர் பள்ளி இவை நிறுவவும் திட்டங்கள் தீட்டப்பட்டன.

கொதித்துப் போன வெள்ளையராட்சி, ‘கொண்டுவா பிள்ளையை’ என்று கூவிற்று! கலெக்டர் விஞ்சு அழைத்தான். ‘வேண்டாம் ஊர்வலம்’ என்று தடுத்தான்! அரசாங்கத்தை அவமதித்துப் பேசியதற்காக, அரசாங்கமே வழக்குத் தொடர்ந்தது. விசாரணை வந்தது. நாட்டின் ‘அமைதியைக் குலைத்தார், வந்தே மாதரம் என்று கூறி அரசாங்கத்தை அவமதித்தார்!’ என்ற குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டன!

ஆத்திரம் தாங்காத கலெக்டர் விஞ்சு, சிதம்பரனார், சிவா, பத்மநாபர் மூவரையும் சிறைக்கு அனுப்பினான். 1908 மார்ச் 12ஆம் நாள் மாலை 3 மணிக்கு மூவரும் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிதம்பரனாரை விடுதலை செய்ய சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு கொடுக்கப்பட்டது. வெளிவிடச் சொல்லி ஆணை பிறந்தது. வெள்ளை அரசாங்கம் அடம் பிடித்தது; ‘அரசநிந்தனைக் குற்றம்’ என்ற புதிய குற்றம் சாட்டி விடுதலை செய்ய மறுத்தது.

வழக்கு நடந்தது; முதலில் மாஜிஸ்டிரேட் வாலஸ், பிறகு மாவட்ட நீதிபதி ஃபின்ஹே வழக்கை விசாரித்தனர். இந்த விசாரணையைக் ‘கேலிக் கூத்து’ என்று வருணித்தார் சிதம்பரனார்.

தேசமே திகைத்த தீர்ப்பு

நீதிபதி ஃபின்ஹேயின் தீர்ப்பு –

அரசாங்கத்தை எதிர்த்துப் பேசியதற்காகக் கிடைத்த தீர்ப்பு – சிதம்பரனாரின் அருகே இருந்த சிறையதிகாரியைக் கூட அதிர்ச்சியடைய வைத்தது.

இருபதாண்டுகள் –
அரசநிந்தனைக்கு

இருபதாண்டுகள் – சிவாவுக்கு உடந்தையாய் இருந்தமைக்கு. ஆக மொத்தம் 40 ஆண்டுகள் அந்தமான் சிறையில்.

கூடியிருந்தவர் உள்ளம் பதைத்தார். குமுறத் தொடங்கியது தோழர்கள் உள்ளம். தீரர் சிதம்பரனார். நீதியை நினைத்து நெஞ்சோடு நகைத்தார்.

‘தாயை வணங்குவோம்’ என்ற முழக்கத்துக்குத் தனிமைச் சிறையா ? தமிழகம் அழுதது.

ஆனால் உறுதி படைத்த உள்ளம் கொண்ட சிதம்பரனார் சித்தம் கலங்கிடவில்லை.

ஃபின்ஹேயின் தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது.

ஒரு புனித யாத்திரை

அப்பீல் முடிவதற்குள், அந்தமான் அனுப்ப முடியாததால், கோவை சிறைக்குக் கொண்டு சென்றார்கள். வழி நெடுக மக்கள் கூட்டம். புகை வண்டிப் பயணம், அன்னை பாரதத்தின் விலங்கை ஒடிக்கும் புனிதப் பயணமாயிற்று.

கோவை சிறையில் சிதம்பரம்பிள்ளை பட்ட கொடுமைகள் கூறுந்தரமன்று. சணல் கிழிக்கும் இயந்திரத்தைச் சுற்றினார். கைத்தோல் உரிந்தது; கசிந்தது ரத்தம்!

எண்ணெய்ச் செக்கு. அதை இழுப்பதற்கு மாட்டுக்குப் பதிலாக மாமனிதர் வ.உ.சி. நுகத்தடியைக் கையிலேந்தி வெயிலிலே பகலெல்லாம் இழுத்த பரிதாபம்! அந்த நேரத்திலும் பாரதத்தாயின் ஆலயத்தை வலம் வருவதாகவே அகமகிழ்ந்தார் அவர்.

இதற்கிடையில், அரக்கத்தனமான ஃபின்ஹேயின் தீர்ப்பு ஆங்கிலேயருக்கும் அருவருப்பையூட்டியது. மார்லி பிரபு இந்தத் தண்டனை நியாயமற்றது என உரைத்தார். சென்னை உயர்நீதிமன்றம் சிதம்பரனார் தண்டனையைப் பத்து ஆண்டுகளாகக் குறைத்தும், அதை ஏககாலத்தில் அனுபவிக்குமாறும் தீர்ப்பளித்தது. அதன் பின்னர், லண்டன் பிரிவு கவுன்சிலில் முறையீடு மூலமாக அது ஆறு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

சிதம்பரனார் சிறைக்குச் செல்கையில் வயது முப்பத்தைந்து. வாலிபப் பருவம்! வாழ்வின் இன்பங்கள் அழைக்கிற வேளையில், சிறையிலே தண்டனை; செக்கிழுக்கும் கொடுமைகள். குறைக்கப்பட்டது தண்டனைக் காலம்தானே தவிர, தண்டனையல்ல!

1912ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு நாள் மாலை, சிறைச்சாலையின் கதவு திறந்தது. சிங்கம் ஒன்று வெளியே வந்தது. மைத்துனர் அனுப்பிய பட்டுடை தரித்து, கைதியாய்ச் சென்ற வ.உ.சி. அவர்கள், தமிழகத்தார் மன்னனென மீண்டார்.

சென்னை வந்தார் சிதம்பரம் பிள்ளை. மயிலை, சிந்தாதிரிப்பேட்டை, பெரம்பூர் ஆகிய பகுதிகளில் அரிசி, நெய் வாணிபம் செய்து வாழ்ந்தார்; இல்லை, வாடினார் வ.உ.சி. வழக்குரைஞர் பட்டயம் பறிக்கப்பட்டிருந்தது; வழக்காட வழியில்லை.

தென் ஆப்பிரிக்காவிலிருந்த அண்ணல் காந்தியடிகள் அவருக்கு நிதி திரட்டி உதவினார். சிதம்பரனார் துன்பம் கண்டு துடித்தபெருமக்கள் இருவர், ஒருவர் சிவா, மற்றவர் பாரதி. ஈ.எச். வாலஸ் என்ற நீதிபதி தேடி வந்து வக்கீல் சன்னத்தைத் திரும்ப வழங்கியதால் கோவில்பட்டியிலும், தூத்துக்குடியிலும் வழக்குரைஞராயிருந்தார்.

இறந்தார் என்றும் இருப்பவரானார்

சிறையிலே அவர் உடல் நலம் சிதைந்தது. பின்னர் வறுமை அவரை வாட்டிக் கொண்டிருந்தது. இந்த இருமுனைத் தாக்குதலால் 1935–இல் சிதம்பரனார் நோய்வாய்ப்பட்டார். இறுதி நேரத்தில் பாரதியாரின் நாட்டுப்பாடலைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டே 1936 நவம்பர் 18 அன்று அவர் உயிர் பிரிந்தது. ❖

நாகை மாவட்டத்தில்

சம்பா முனைப்பு இயக்கம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வழக்கமாக நெல் சாகுபடி குறுவையில் 34,200 எக்டரிலும், சம்பாவில் 1,06,000 எக்டரிலும், தாளடியில் 26,800 எக்டரிலும் ஆக கூடுதல் 1,67,000 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நெல்லுக்கு அடுத்தபடியாக இம்மாவட்டத்தில் கரும்பு, பருத்தி, பயறு வகைப் பயிர்கள், எண்ணெய்வித்துப் பயிர்களான எள், கடலை, தென்னை, காய்கறி, மலர் மற்றும் பழவகைப் பயிர்களும் பயிரிடப்படுகின்றன.

நெல் சாகுபடி இம்மாவட்டத்தில் காவிரி ஆற்றுப் பாசன நீரை மட்டுமே நம்பி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சென்ற ஆண்டு வறட்சி நிலைமையைச் சமாளிக்க கோடைப்பருவத்தில் மாற்றுப் பயிர்த்திட்டம் செயல்படுத்தப்பட்டு எள், நிலக்கடலை, சூரியகாந்தி, பயறுவகைப் பயிர்களும், காய்கறிகளும் இம்மாவட்டத்தில் சோதனைமுறையில் பயிரிடப்பட்டன.

இதன் மூலம் இம்மாவட்ட விவசாயிகள் கணிசமான நிகர லாபம் அடைந்துள்ளனர்.

சென்ற ஆண்டில், வறட்சியின் காரணமாக நெல் சாகுபடி 1,34,917 எக்டரில் மட்டுமே செய்யப்பட்டது. எனவே, இவ்வாண்டில் நெல் சாகுபடியினை சீரிய முறையில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. எனினும் இவ்வாண்டில் குறுவை நெல் சாகுபடி 21,200 எக்டரில் நிலத்தடி நீர் வசதியுள்ள காவிரி ஆற்றுப் பாசனப் பகுதிகளான மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் செம்பனார்கோவில் கோட்டங்களில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டு தற்சமயம் அறுவடை நடைபெற்று வருகிறது. மகசூல் சராசரியாக எக்டருக்கு 5.8 மெ.டன் கிடைத்துள்ளது.

தற்சமயம் சம்பா சாகுபடிக்கு பாசன நீர் திறந்து விடப்பட்டுள்ள நிலையில் இவ்வாண்டு சம்பா சாகுபடியினை 1,19,000 எக்டரில் மேற்கொண்டு 6.5 இலட்சம் மெ.டன் நெல் உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகள் உரிய தொழில் நுட்பங்களை மேற்கொண்டு அதிக மகசூல் பெற 14.8.2004 அன்று இம்மாவட்ட விவசாயப் பணிகளை ஆய்வு செய்த வேளாண்மைத் துறை ஆணையர் திரு. ஜக்மோகன்சிங் ராஜ் அவர்கள், மாவட்ட ஆட்சியர் திரு. மா. வீரசண்முகமணி,இ.ஆ.ப. அவர்களுடன் கலந்தாலோசித்து ஒரு மாத காலத்திற்கு தீவிர சம்பா முனைப்பு இயக்கங்கள் இம்மாவட்டத்தில் அனைத்து வருவாய் கிராமங்களிலும் நடத்திட முடிவு செய்யப்பட்டு 16.8.2004 முதல் முனைப்பு இயக்கங்கள் நடைபெற்று வருகின்றன. இம்முனைப்பு இயக்கம் 15.9.2004 முடிய நடத்திடவும் மாலையில் விவசாயிகள் கூட்டம் நடத்தப்பட்டு அவர்களது ஐயங்களைத் தீர்த்து வைத்தல், செயல் விளக்கங்கள் செய்து காட்டுதல் மற்றும் சிறு கருத்துக்காட்சி அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் பயோ டீசல் உற்பத்திக்காக காட்டாமணக்கு, சர்க்கரைக் கிழங்கு மற்றும் சர்க்கரைச் சோளம் ஆகியவற்றைப் பயிரிடவும், இதற்கான ஆலைகள் அமைத்திடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். எனவே, இப்பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் இதன் சாகுபடி தொழில் நுட்பங்களை ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு சம்பா முனைப்பு இயக்கத்தில் எடுத்துரைக்கப்பட்டு வருகின்றது.

மேலும் நாகப்பட்டினம் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் சம்பா தகவல் மையம் ஒன்று அமைக்கப்பட்டு காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்பட்டு வருகின்றது. இதன் மூலம் சம்பா சாகுபடி பற்றிய ஐயங்கள், இடுபொருட்கள் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள இத்தகவல் மையத்தை விவசாயிகள் பயன்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையத்தினை விவசாயிகள் தொடர்பு கொண்டு பயன்பெற்று வருகின்றார்கள்.

இது தவிர விவசாயிகளுக்கு விதைகள், உயிர் உரங்கள், நுண்சத்துகள் தடையின்றிக் கிடைத்திட அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களும் விடுமுறை தினமான சனிக்கிழமைகளிலும், 15.9.2004 முடிய திறந்து வைத்து செயல்பட உத்தரவிடப் பட்டுள்ளது.

நாகப்பட்டினம் வேளாண்மை, இணை இயக்குநர் திரு. ஜி. சுவாமிநாதன் தலைமையில் சம்பா முனைப்பு இயக்கத்தில் இம்மாவட்டத்தின் அனைத்து வேளாண்மைத் துறை அலுவலர்களும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சம்பா முனைப்பு இயக்கங்களில் பங்குகொண்டு உரிய விளக்கங்கள் பெற்று, சம்பா பட்டத்தில் அதிக மகசூல் அடைந்து அதன் மூலம் நல்ல லாபம் பெற்று தங்களது வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ள நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளை மாவட்ட ஆட்சியர் திரு. மா. வீரசண்முகமணி,இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

– கா. பேரின்பநாயகம்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகப்பட்டினம்.

தமிழக அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி பாதிக்கப்படா வண்ணம் தேவையான நிலக்கரி வழங்கப்பட வேண்டும்

மாண்புமிகு இந்தியப் பிரதமர்
டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
எழுதிய கடிதம் (27.8.2004)

இந்திய அரசின் நிலக்கரி நிறுவனங்களால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்படும் நிலக்கரி விநியோகத்தின் அளவு போதுமான அளவில் இல்லை என்பதையும், அதனால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை குறித்து தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விழைகின்றேன். தமிழ்நாடு மின்சார வாரியம் மொத்தம் 2,970 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட 4 அனல் மின் நிலையங்களை இயக்கி வருகிறது. இந்த அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியானது மேற்கு வங்கத்திலுள்ள கிழக்கத்திய நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தும் மற்றும் ஒரிசா மாநிலத்திலுள்ள மகாநதி நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தும் இரயில்–கடல்–இரயில் வழியாகக் கொண்டுவரப்படுகிறது.

இந்த அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி ஆண்டுக்கு 14.5 மில்லியன் டன்கள் ஆகும். இந்த அளவு நிலக்கரியை இந்திய அரசின் ஒருங்கிணைப்பு நிலைக்குழு ஒதுக்குகின்றது. மத்திய நிலக்கரித்துறை, இரயில்வேத்துறை, எரிசக்தித்துறை ஆகியவற்றிலிருந்து தலா ஓர் உறுப்பினர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் காலாண்டிற்கு ஒருமுறை கூடி முடிவெடுக்கின்றனர்.

மேற்கண்ட நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து மிழ்நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களுக்கு டுத்து வரப்படும் நிலக்கரியானது மிக நீண்ட அளவில் ரயில்–கடல்– இரயில் வழியாக எடுத்துவர வேண்டியுள்ளது. அனல் மின் நிலையங்கள் மின் ற்பத்திப் பணியில் ஈடுபடும்போது குறைந்தபட்சம் 1 நாட்களுக்குத் தேவையான நிலக்கரி அந்தந்த மின் ற்பத்தி நிலையங்களில் கையிருப்பாக வைக்க வேண்டும் என்ற நிலையானது நிலக்கரிச் ரங்கங்களிலிருந்து நிலக்கரி விநியோகம் செய்வது ாலதாமதம் ஏற்படும் பட்சத்திலும் அதே போன்று லக்கரிச் சுரங்கங்களிலிருந்து அனல் மின் உற்பத்தி லையங்களுக்கு எடுத்து வரப்படும் நிலக்கரி பாக்குவரத்தில் ஏற்படும் காலதாமதங்களில் ராமரிப்பதற்கு மேற்கண்ட அனல் மின் நிலையங்களில் 1 நாட்கள் கையிருப்பு நிலக்கரி இருக்க வேண்டும் என்ற அடிப்படை நியதியைக் கூட பின்பற்ற இயலாத சூழ்நிலை ள்ளது.

கடந்த 6 மாதங்களாக மத்திய அரசின் நிலக்கரி றுவனங்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குக் குறைவாக லக்கரி விநியோகத்தைச் செய்துள்ளது. கடந்த னவரி 2004 முதல் ஜூன் 2004 வரையுள்ள இடைப்பட்ட ாலத்தில் வழங்கப்பட வேண்டிய 82.95 இலட்சம் டன் லக்கரிக்குப் பதிலாக மேற்கண்ட காலக்கட்டங்களில் 0 இலட்சம் டன் நிலக்கரி மட்டுமே மத்திய அரசு நிறுவனங்க்ளால் தமிழக மின்வாரியத்திற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த ஜூலை 2004 முதல் செப்டம்பர் 004–க்கு இடைப்பட்ட காலாண்டுப் பகுதிகளில் ஜூலை 004க்கான நிலக்கரியின் அளவை 11.55 இலட்சம் ன்களாகக் குறைத்து ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களுக்கு 12.55 இலட்சம் டன்களாக பின்னர் உயர்த்தியுள்ளது. ஆனால் உண்மையிலேயே ஜூலை மாதம் தமிழக மின்சார வாரியம் பெற்ற லக்கரியின் அளவு 10.31 இலட்சம் டன்கள்தான். மேலும் ஆகஸ்ட் மாதத்திற்கான நிலக்கரி ஒதுக்கீட்டில் 5.8.2004 வரை 9.20 இலட்சம் டன்கள்தான் பெறப்பட்டுள்ளது.

கணிசமான அளவிற்கு நிலக்கரி விநியோகம் குறைந்ததன் விளைவு அனல் மின் உற்பத்தி லையங்களில் கையிருப்பில் இருக்க வேண்டிய லக்கரியின் அளவு மிகவும் வேகமாக ஒரு இக்கட்டான லைக்குக் குறைந்து தற்போது 6 நாட்களுக்குத் தேவைப்படும் அளவிலான நிலக்கரியைத்தான் கையிருப்பில் வைத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ருவாகியுள்ளது.

கடந்த ஜனவரி 2004–இல் மேற்கண்ட அனல் மின் நிலையங்களில் கையிருப்பில் இருந்த நிலக்கரியின் அளவு 17 நாட்கள் போதுமான அளவுக்கு இருந்தது. தற்போது நிலக்கரி விநியோகம் மிகவும் மோசமான ஒரு வீழ்ச்சியில் உள்ளது. மேலும் இது கைக்கும், வாய்க்கும் பற்றாக்குறையான சூழ்நிலையில் உள்ளது. தற்போது கையிருப்பில் இருக்கும் நிலக்கரியின் அளவு மிகவும் அபாய நிலையை எட்டியுள்ளது.

இதே நிலை தொடருமானால் தேவைக்கு ஏற்ப அனல் மின் நிலையங்கள் மின் உற்பத்தி செய்ய முடியாத நிலையை எதிர்கொள்ள நேரிடும். தமிழக மின் தொகுப்பிற்கு மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்தான் அடிப்படையாக அமைந்துள்ளது. ஒருவேளை நிலக்கரி கட்டுப்பாட்டால் இந்த அனல் மின் நிலையங்களின் உற்பத்தி தடைபடும் சூழ்நிலை உருவாகும் பட்சத்தில் தமிழக மின் தொகுப்பில் மிகப்பெரிய அளவிற்கு மின் தடை உருவாகும்.

நிலக்கரி விநியோக சூழ்நிலை தற்போது மிகவும் ஒரு சிக்கலான சூழ்நிலையை எட்டியுள்ளது. எனவே அனல் மின் உற்பத்தி நிலையங்களில் மின் உற்பத்தி பாதிக்கப்படாத வண்ணம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை வழங்குவதற்கு உடனடியாக தாங்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றேன்.

தற்போது மாதம் ஒன்றுக்கு அதிகபட்சம் 10 இலட்சம் டன்கள் என்ற அளவில் நிலக்கரி பெறப்பட்டு வருகின்றது. இதனை குறைந்தபட்சம் மாதமொன்றுக்கு 14.5 இலட்சம் டன்கள் நிலக்கரி என்ற அளவுக்கு ஒதுக்கீடு செய்து வழங்க வேண்டும். நிலக்கரி கையிருப்பு சூழ்நிலை கணிசமான அளவுக்கு அதிகரிக்கப்பட வேண்டும். உற்பத்தி நடைமுறைகள் மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளது. உடனடியாக இப்பிரச்சினையில் மேம்பாடு காணப்படாவிட்டால் தமிழ்நாடு மின்சார வாரியம் நிலக்கரி பற்றாக்குறை பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

இச்சூழ்நிலையால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உட்பட்ட அனல் மின் நிலையங்கள் உற்பத்தி பாதிப்பதுடன் இந்த மின் உற்பத்தித் தொகுப்பில் மிகப்பெரிய அளவிற்கு மின்தடை ஏற்படும் சூழ்நிலை உருவாகும். எனவே தாங்கள் இவ்விஷயத்தில் உடனடியாகத் தலையிட்டு தேவையான அளவு நல்ல நிலக்கரி விநியோகம் கிடைப்பதை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கீழ் இயங்கும் அனல் மின் நிலையங்களில் நிலக்கரி கையிருப்பு 21 நாட்கள் என்ற நிலையை எட்ட இயலும்.



தமிழகத்திற்கு ரூ.1,682 கோடி நிதி உதவி வழங்கவேண்டும்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதம்
(28.8.2004)

தமிழ்நாடு ... சென்னை-600 008 நூலகம்

கடந்த 29.7.2004 அன்று நான் தங்களுக்கு எழுதிய கடிதம் குறித்து தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விழைகின்றேன். அக்கடிதத்தில் தமிழ்நாட்டில் மழைப் பற்றாக்குறையால் உருவாகியுள்ள சூழ்நிலை குறித்து தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தேன். அக்கடிதத்தில் மழையளவு பற்றாக்குறை உள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டையும் இணைத்து அம்மாநிலங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகைகள் தமிழ்நாட்டிற்கும் கிடைப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்றும் நான் எழுதியிருந்தேன். இந்தக் கடிதம் நடப்பு 2004–2005–ஆம் ஆண்டில் தற்போது பெய்து வரும் தென்மேற்குப் பருவ மழை அடிப்படையில் எழுதுகின்றேன்.

தற்போது 11 மாவட்டங்களில் மழை அளவு விகிதம் மிகப்பெரிய அளவுக்கு மாறுபாடு உள்ளது. நடப்பு மழைக்காலத்தில் சில இடங்களில் 20 சதவிகிதம் அளவிற்குக் கடுமையான பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இந்தச் சூழ்நிலையிலும் தென்மேற்குப் பருவமழையின் போக்கு மேம்படும் என்று நாங்கள் மிகப்பெரிய அளவில் எதிர்பார்த்து நம்பி இருக்கின்றோம். தென்மேற்குப் பருவமழையால் குஜராத், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் நல்ல பலனை அடைந்துள்ளன. ஆனால் தமிழகத்தில் நிலைமையோ மிக மோசமான நிலையில் உள்ளது. சமீபத்தில் நான் மழை அளவு குறித்த புள்ளி விவரங்களை ஆய்வு செய்தேன்.

கடந்த 1.6.2004 முதல் 18.8.2004 வரையுள்ள இடைப்பட்ட காலக் கட்டத்தில் தமிழ்நாட்டில் பெய்த மழையின் அளவு வழக்கத்தைவிடக் குறைவாக, அதாவது 26 சதவிகிதம் குறைவாகப் பெய்தது எனக்குத் தெரியவந்தது. மேலும் மேற்கண்ட அதே புள்ளி விவரங்கள் தெரிவிப்பது என்னவென்றால் தமிழகத்திலுள்ள 30 மாவட்டங்களில் 18 மாவட்டங்களில் மழை அளவு வழக்கத்தைவிட 20 சதவிகிதம் குறைவாகத்தான் பெய்துள்ளது என்பதை தெரியப்படுத்துகிறேன். மேற்கண்ட தகவல்களின் மூலம் வறட்சியான சூழ்நிலை உருவாவது தெரிய வருகின்றது.

2004–ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவமழை குறித்து ஆய்வு செய்த போது கிடைத்த உண்மைநிலை என்னவென்றால் தமிழ்நாட்டில் இந்தப் பருவ நிலையின்போது மிகவும் மோசமான மழை அளவைத்தான் பெற்றுள்ளது தெரிய வருகின்றது. நான் ஏற்கெனவே தமிழ்நாட்டில் வறட்சியின் காரணமாக ஏற்பட்ட நிலை குறித்து ஒரு விரிவான அறிக்கை அனுப்பி அதனைச் சீர் செய்வதற்குத் தேவையான நிதியுதவியும் கேட்டிருந்தேன். தமிழ்நாடு கடந்த 2002–2003 மற்றும் 2003–2004 ஆகிய நிதியாண்டுகளில் கடுமையான வறட்சியை எதிர்நோக்கியதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். தற்போது 2004லிலும் தென்மேற்குப் பருவமழை பொய்த்துள்ள நிலையில் இப்பிரச்சினையை உடனடியாக கவனமுடன் பரிசீலனை செய்ய வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

கடந்த 1.2.2004 அன்று தமிழ்நாட்டில் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் நிலவும் வறட்சியான சூழ்நிலை குறித்து தமிழ்நாடு அரசு தங்களுடையக் கவனத்தை ஈர்ப்பதற்காக ஒரு விரிவான அறிக்கையை அனுப்பி வைத்தது. மேலும் சென்னை மாநகரில் இதுவரை இல்லாத அளவிற்கு குடிநீர்ப் பற்றாக்குறை மிகவும் கடுமையான சூழ்நிலை நிலவுவதை சீர்செய்து அந்நிலையைச் சீரமைத்து மேம்படுத்துவது குறித்து தனியாக ஓர் அறிக்கையை கடந்த 16.1.2004 அன்று தமிழக அரசு அனுப்பியுள்ளது.

நாங்கள் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் வறட்சி நிவாரண நிதி ரூ.1,584 கோடியும் மற்றும் 10.8 இலட்சம் டன் அரிசியும் வேலைக்கு உணவு திட்டத்தை மாவட்டங்களில் செயல்படுத்துவதற்குக் கேட்டிருந்தோம். மேலும் சென்னை மாநகரில் நிலவி வரும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்குத் தனியாக ரூ.700 கோடி நிதியுதவியும் ஏற்கெனவே கேட்டிருந்தோம். இந்திய அரசு, இந்தக் கோரிக்கையின்படி ரூ.292.95 கோடி மற்றும் 3.04 டன் அரிசியும் வேலைக்கு உணவு திட்டத்திற்கு வழங்கியுள்ளது.

கடந்த 2003–2004–ஆம் ஆண்டிற்கான வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்பான மேற்கண்ட மத்திய அரசு வழங்கிய நிதியையும் உணவு தானியத்தையும் வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் முழுமையாகப் பயன்படுத்தியுள்ளோம். வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நாங்கள் மத்திய அரசிடமிருந்து பெற்ற உதவியைவிட அதிக அளவிற்குச் செலவுகள் செய்துள்ளோம்.

கடந்த 1.6.2004–இல் தொடங்கிய தென்மேற்குப் பருவ மழையின் அளவுகளைப் பொருத்து உருவாகியுள்ள நடப்பு 2004–2005–ஆம் ஆண்டிற்கான வறட்சி நிலையின் அடிப்படையில் நாங்கள் மீண்டும் நிதியுதவியைக் கோர வேண்டிய நிலையில் உள்ளோம். கடந்த 2003–2004–ஆம் ஆண்டிற்கான வறட்சி நிவாரண திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு ஒதுக்கிய நிதியையும், அரிசியையும் நாங்கள் ஏற்கெனவே முழுமையாகப் பயன்படுத்தி விட்டோம் என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன்.

மாநிலத்தில் பல்வேறு பகுதிகள் நடப்பு தென்மேற்குப் பருவமழைக் காலங்களில் போதுமான அளவு மழையளவைப் பெறாததால் உருவாகியுள்ள புதிய வறட்சி சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அதனை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான பணிகளை நாங்கள் தொடங்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

எனவே நடப்பு 2004–2005–ஆம் ஆண்டில் உருவாகியுள்ள வறட்சியை எதிர்கொள்வதற்கு எடுக்கப்பட உள்ள நிவாரணப் பணிகளுக்குத் தேவையான நிதியுதவியையும் மற்றும் அனைத்து உதவிகளையும் முழு அளவில் செய்துதர வேண்டும் என்று நான் தங்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகரம் எதிர்கொண்டு வரும் மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினை குறித்து நான் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விழைகின்றேன். சென்னை மாநகரில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை நிலவி வருவதில் தங்களுக்கு எந்தவித ஐயமும் இருக்காது என்று நான் நம்புகின்றேன். நடப்பு தென்மேற்குப் பருவ மழைக்காலத்தில் சென்னை மாநகரம் பெற்ற மழையளவு, வழக்கமாகப் பெய்யும் மழையளவைவிட 52 சதவிகிதம் குறைவாகத்தான் பெய்துள்ளது.

அருகிலுள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெய்துள்ள மழையின் அளவு 64 சதவிகிதம் பற்றாக்குறையுடனும் மேலும் திருவள்ளூர் மாவட்டத்தில் பெய்த மழை அளவில் பற்றாக்குறை 51 சதவிகிதமாகவும் உள்ளது.

சென்னை மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களிலும் நடப்பு தென்மேற்குப் பருவமழை காலத்தில் போதுமான அளவிற்கு மழை பெய்யவில்லை. இது ஏற்கெனவே உள்ள சூழ்நிலையை மேலும் சிக்கலாக்கி உள்ளது. நாங்கள் இப்பிரச்சினையின் விளைவாக ஒவ்வொரு மாதமும் குடிநீர் வழங்குவதற்காக மேலும் ரூ.27 கோடி கூடுதலாக செலவு செய்து வருகின்றோம். நிலத்தடி நீர் மட்டமும் வெகு வேகமாகக் குறைந்து வருகின்றது. சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக மிக நீண்ட தொலைவிலிருந்து லாரிகள் மூலம் தேவைப்படும் குடிநீரை வழங்கி வருகின்றோம். இதுபோன்ற சூழ்நிலை வெகு அரிதாகத்தான் ஏற்படும். எனவே இதற்குத் தேவையான முழு நிதியுதவியையும் மத்திய அரசு அளிக்க வேண்டும்.

நடப்பு தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் மழை அளவு பற்றாக்குறை குறித்தும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் குறித்தும் ஒரு விரிவான அறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். பல்வேறு மாவட்டங்களில் மழையளவு மிகவும் குறைவாகத்தான் பெய்துள்ளது. பல மாவட்டங்களில் பெய்த மழையளவு வழக்கத்தைவிட 40 சதவிகிதம் பற்றாக்குறையுடன்தான் பெய்துள்ளது. நடப்பு தென்மேற்குப் பருவமழை போதுமான அளவு பெய்யாததால் கடுமையான பற்றாக்குறை உருவாகியுள்ளது. நான் ஏற்கெனவே சென்னை மாநகரம் மிகப்பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாகி இருப்பதை தங்களுக்கு விளக்கியுள்ளேன். சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் 3 ஏரிகளும் முற்றிலும் வறண்டு விட்டன. எனவே இந்த நிலையை எதிர் கொள்ளும் விதமாக லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள இப்பிரச்சினை ஒட்டு மொத்தத்தில் மிகவும் ஒரு சிக்கலான சூழ்நிலையாகும்.

நாங்கள் அனுப்பியுள்ள விரிவான அறிக்கையில் நடப்பு தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை எதிர்கொள்வதற்குத்' தேவையான நிவாரண வழிமுறைகள் குறித்து விளக்கியுள்ளோம். இதற்கு ரூ.1,682 கோடி நிதியுதவி தேவைப்படும். இந்த நிதியுதவி மட்டுமின்றி கூடுதலாக வேலைக்கு உணவு திட்டத்திற்கு 5.4 இலட்சம் டன் உணவு தானியமும் வழங்க வேண்டும் என்று நான் தங்களை வேண்டி, கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு தொடர்ந்து 3–ஆவது முறையாக கடுமையான வறட்சியைச் சந்தித்துள்ளது. எனவே மத்தியக்குழுவை அனுப்பி தமிழகத்தில் நிலவும் சூழ்நிலை குறித்து ஆய்வு செய்ய உத்தரவிட வேண்டும். மத்தியக் குழுவின் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் நிதியுதவியும் உணவு தானிய உதவியையும் மழைநீர்ப் பற்றாக்குறை உள்ள மற்ற மாநிலங்களுக்கு வழங்கப்படும் அளவிற்குத் தமிழகத்திற்கும் நிவாரண உதவியும் உணவு தானியமும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நிலவும் மிகவும் கடுமையான வறட்சி நிலையை எதிர்கொள்வதற்கும் தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கும் நிதியுதவியும், உணவு தானியமும் வழங்குவதற்கு உடனடியாக முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, தங்களை வேண்டி கேட்டுக் கொள்கின்றேன். *



இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில், 25.8.2004 அன்று தலைமைச் செயலகத்தில், இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வழங்கும் வர்த்தக ஆங்கிலச் சான்றிதழ் கல்வியை, தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் கற்பிக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் தொழில் நுட்பக் கல்வித் துறைக்கும், பிரிட்டிஷ் கவுன்சில் அமைப்புக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. இந்த நிகழ்வின்போது, தென்னிந்தியாவிற்கான பிரிட்டிஷ் துணை ஹை கமிஷனர் திரு.ஸ்டுவர்ட் இன்னஸ் (Mr.Stuart Innes, Deputy High Commissioner, British Deputy High Commission, Chennai) உடன் இருந்தார்.

தகவல் தொழில் நுட்பத்துறை மற்றும் சேவைத்துறை நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் தொழில்நுட்பம், பணி ஈடுபாடு மற்றும் கடமை உணர்வு ஆகியவற்றில் உலக அளவில் சிறந்து விளங்கினாலும், பேச்சுத் திறன், தன்னம்பிக்கை மற்றும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுதல் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் இன்னும் தங்களது திறமையை மேம்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்பது தெரிய வந்துள்ளது.

தமிழ்நாட்டில், உலகளாவிய பன்னாட்டு நிறுவனங்கள் பலவும் தங்களுடைய தொழில் மையங்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழகத்து மாணவர்கள் அந்நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெருமளவில் பெறும் வகையில், அவர்களுக்கு இத்தகைய திறமைகள் வழங்கப்பட்டு, மேம்படுத்தப்பட வேண்டுமென்று தெரிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இதற்கென ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்த ஆணையின்படி தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள் சரளமாக

ஆங்கிலத்தில் பேசவும், தங்கள் பேச்சுத் திறனை மேம்படுத்திக் கொள்ளவும், தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும், தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வித் துறை பொறியியல் கல்லூரிகளில் வர்த்தக ஆங்கிலச் சான்றிதழ் கல்வியை வழங்கும் புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது. உலகப் புகழ் வாய்ந்த கல்வி நிறுவனமான இங்கிலாந்து நாட்டின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வழங்கப்பட உள்ள இந்த வர்த்தக ஆங்கிலச் சான்றிதழ் கல்வித் திட்டம் பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், 25.8.2004 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வித் துறையின் சார்பாக தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் திரு. எஸ். கே. பிரபாகர் அவர்களும், பிரிட்டிஷ் ஹை கமிஷனின் பிரிட்டிஷ் கவுன்சில் சார்பாக அதன் பண்பாட்டுத் துறை முதல் செயலர் யூனிஸ் குருக் (Ms. Eunice Crook, First Secretary (Cultural Affairs), British Council Division, British Deputy High Commission) அவர்களும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின் போது, தென்னிந்தியாவிற்கான பிரிட்டிஷ் ஹை கமிஷனர் திரு. ஸ்டூவர்ட் இன்னஸ் (Mr.Stuart Innes, Deputy High Commissioner, British Deputy High Commission, Chennai) அவர்கள் உடன் இருந்தார்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது குறித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமது மன நிறைவையும், மன மகிழ்வையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்தத் திட்டத்தில் பயன்படுத்துவதற்கான பாடங்களின் வடிவமைப்பு, பயிற்சிக்கான புத்தகங்கள், ஆசிரியர்களுக்கான பயிற்சி ஆகியவை பிரிட்டிஷ் கவுன்சில் மூலமாக ஏற்பாடு செய்யப்படும். தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் இந்த சான்றிதழ் கல்வியை அளிக்கக்கூடிய கல்லூரிகளை ஆய்வு செய்து அனுமதி அளிப்பதுடன், இத்திட்டம் செயல்படும் முறையைக் கண்காணிக்கும். மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்களைக் கல்லூரிகள் தேர்ந்தெடுக்கும். இப்பயிற்சிக்கான காலம் மூன்று மாதங்க்ள் ஆகும்.

வர்த்தக ஆங்கிலக் கல்விச் சான்றிதழ் தேர்வு பிரிட்டிஷ் கவுன்சில் மூலம் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்குக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் தேர்வுக் குழுவினால் சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்தச் சான்றிதழ் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இத்திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் ஏறத்தாழ 12,000 மாணவ, மாணவிகள் பயன் பெறுவார்கள்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சார்பாக, மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர், நிதித்துறை திரு. என்.நாராயணன், இ.ஆ.ப., உயர் கல்வித்துறைச் செயலாளர், திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., ஆகியோரும், பிரிட்டிஷ் கவுன்சில் சார்பாக, தென்னிந்திய தேர்வு சேவைப் பிரிவின் தலைமைப் பொறுப்பாளர் நிருபா பெர்ணான்டஸ், மேலாளர் திரு. டி.கே. அருணாசலம் ஆகியோரும் பங்கேற்றனர். ❋



காவல்துறை அலுவலர்களுக்கு ரொக்கப் பரிசு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8.9.2004 அன்று தலைமைச் செயலகத்தில், ஐதராபாத்தில் அண்மையில் நடைபெற்ற 47-ஆவது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகளில் (All India Police Duty Meet, Hyderabad) பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த காவல் துறை அலுவலர்களுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான ரொக்கப் பரிசுகளை நேரில் வழங்கினார்கள்.

அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகள் (All India Police Duty Meet, Hyderabad) இந்த ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரை ஆந்திர மாநிலம் ஐதராபாத் நகரில் நடைபெற்றன. இந்தக் காவல் பணித்திறன் போட்டிகள் 1) அறிவியல் சார்ந்த புலன் விசாரணை திறன் போட்டி, 2) கணினி திறன் போட்டி, 3) ஒளி/ஒலி படம் எடுத்தல் திறன் போட்டி, 4) நாசவேலைத் தடுப்புத் திறன் போட்டி, 5) நிழற்படம் எடுக்கும் திறன் போட்டி, 6) மோப்ப நாய்கள் திறன் போட்டி ஆகிய ஆறு பிரிவுகளில் நடைபெற்றன. இப்போட்டிகளில் 22 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசம் மற்றும் 6 மத்தியஅமைப்புகள் என 29 காவல்துறைக் குழுக்கள் கலந்து கொண்டன. இதில், காவல் பணி சார்ந்த பல்வேறு போட்டிகளில் பங்கேற்ற தமிழ்நாடு காவல் துறை குழு ஒரு தங்கப்பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம், நான்கு வெண்கலப் பதக்கங்கள் என ஆறு பதக்கங்களையும், நிழற்பட தொழிற் கலைஞர் பிரிவுக்கான சுழற் கோப்பையையும் வென்று, அகில இந்திய அளவில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

தமிழக காவல் துறை அலுவலர்கள் வென்ற பதக்கங்களின் விவரம்

காவல் துறை சார்ந்த நிழற்படம் எடுக்கும் திறன் போட்டியில், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த காவல் துறை நிழற்படக் கலைஞர் திரு. வி. சந்தானம் தங்கப்பதக்கம் வென்றார்.

போதைப் பொருள்களைக் கண்டுபிடிக்கும் மோப்ப நாய் திறன் போட்டியில், சென்னை தமிழ்நாடு கமாண்டோ பள்ளியைச் சேர்ந்த தலைமைக் காவலர் திரு.எஸ். காமராஜ் வெள்ளிப்பதக்கம் வென்றார். இவர் பயிற்றுவித்த மோப்ப நாயின் பெயர் ஷீபா ஆகும்.

அறிவியல் சார்ந்த புலன் விசாரணைத் திறன் போட்டியில், கால் தடம் பதிவு மற்றும் நிழற்படம் எடுத்தல் ஆகிய இரு பிரிவுகளில் சென்னை காவல் துறை கணினிப் பிரிவைச் சேர்ந்த சார் ஆய்வாளர் திரு.எம்.இ.ராமச்சந்திரமூர்த்தி தனித்தனியே இரண்டு வெண்கலப் பதக்கங்களையும், கைரேகைப் பதிவுப் பிரிவில், வேலூர் மாவட்டம் குருசிலாப்பேட்டை காவல் நிலைய சார் ஆய்வாளர் திரு.புகழ்மாறன் வெண்கலப் பதக்கத்தையும், கணினி திறன் பிரிவில், சென்னை, தமிழ்நாடு கமாண்டோப் பள்ளியைச் சேர்ந்த முதல் நிலைக் காவலர் திரு.வி.ராஜகோபால் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

இது மட்டுமின்றி, நிழற் படம் எடுக்கும் போட்டி பிரிவுக்கான சுழற் கோப்பையைத் தமிழக காவல் துறை குழு வென்றுள்ளது.

ரொக்கப் பரிசுத் தொகையை அதிகரித்து
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை

அகில இந்திய காவல் பணித் திறன் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்குக் கடந்த ஆண்டில் தங்கப் பதக்கத்திற்கு ரூ.10,000, வெள்ளிப் பதக்கத்திற்கு ரூ.5,000 வெண்கலப் பதக்கத்திற்கு ரூ.3,000 ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டது. தமிழ்நாடு காவல் துறையினர் பணித் திறன் போட்டிகளில் மேலும் திறனுடன் பங்கேற்கவும், பதக்கங்கள் வென்றிடும் வகையில் அவர்களுக்கு ஊக்கப் அளித்திடவும் இந்த ஆண்டு முதல் தங்கப்பதக்கம் வெல்வோருக்கு ரூ.50,000–ம், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.30,000–ம், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.20,000–ம் ரொக்கப் பரிசாக வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 8.9.200 அன்று தலைமைச் செயலகத்தில், தங்கப்பதக்கம் வென்ற திரு.வி. சந்தானம் அவர்களுக்கு ரூ.50,000, வெள்ளிப் பதக்கம் வென்ற திரு.எஸ்.காமராஜ் அவர்களுக்கு ரூ.30,000, வெண்கலப் பதக்கம் வென்ற திரு.எம்.இ.ராமச்சந்திரமூர்த்தி அவர்களுக்கு ரூ.40,000 (இரண்டு பதக்கங்கள்) மற்றும் திரு.புகழ்மாறன் திரு.ராஜகோபால் ஆகிய இருவருக்கும் தலா ரூ.20,000 ஆகிய ரொக்கப் பரிசுகளுக்கான காசோலைகளை நேரில் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

இந்த நிகழ்வின் போது, தமிழக அரசின் உள்துறைச் செயலாளர் திருமதி. ஷீலா ராணி சுங்கத்,இ.ஆ.ப., காவல் துறை தலைமை இயக்குநர் திரு.ஐ.கே.கோவிந்த், இ.கா.ப கூடுதல் காவல் துறை இயக்குநர் திரு.கே.வி.எஸ். மூர்த்தி இ.கா.ப., ஆகியோர் உடனிருந்தனர். ●

கண் தானம்

தேசிய கண் தான இருவார விழா ஆகஸ்ட் 25ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் 8ஆம் தேதி வரை கொண்டாடப்படுகின்றது. இதன் முக்கிய நோக்கம் கண் தானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே ஆகும்.

கண் தானம் என்பது நாம் இறந்த பிறகு கண்களை தானமாக எடுத்து கருவிழி பாதிப்படைந்தவர்களுக்கு பயன்படும்படி பொருத்த அனுமதி வழங்குவதே.

நம் நாட்டில் 10 இலட்சம் பேர் கருவிழி (Cornea) பாதிப்பினால் பார்வையிழந்தவர்கள். இதில் கணிசமானவர்கள் இருபது வயதிற்குட்பட்டவர்கள். ஒவ்வொரு ஆண்டும் ஏழாயிரத்திலிருந்து எட்டாயிரம் நபர்களுக்கு மட்டுமே கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகின்றது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் 15,000 முதல் 20,000 புதிய நபர்கள் ஏற்கெனவே காத்திருக்கும் 10 இலட்சம் எண்ணிக்கையோடு கூடுதலாகின்றனர்.

தானமாக வழங்கிய இறந்தவர்களின் கண்களை சேகரித்து பாதுகாத்து கண் மருத்துவமனைகளுக்கு கருவிழி மாற்று அறுவை சிகிச்சைக்காகக் கொடுக்கும் நிறுவனம்தான் கண் வங்கி. இந்தியாவிலேயே முதன் முறையாக கண்வங்கியை ஆரம்பித்ததும் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்ததும் சென்னையில் உள்ள அரசு கண் மருத்துவமனையில்தான். இதை 1948ஆம் ஆண்டு செய்தவர் மருத்துவர் முத்தையா என்பவர்.

கருவிழி (கார்னியா) என்பது கருப்பானது அல்ல. இது கைக்கடிகாரங்களில் முன்புறம் பொருத்தப்பட்டுள்ள ஒளி ஊடுருவும் கண்ணாடி போன்றது. இந்தப் பகுதியில் ஏதேனும் வெண்மை படர்ந்தால் ஒளி ஊடுருவிச் செல்ல முடியாமல் பார்வை பாதிக்கப்படுகின்றது. இந்த வெண்மை படர்வதற்குக் காரணங்கள் பின்வருமாறு: 1.கருவிழியில் புண் அல்லது காயம், 2.புரதச்சத்து மற்றும் வைட்டமின் 'ஏ' குறைபாடு, 3.பிறவியிலேயே கருவிழியில் குறைபாடு, 4.தட்டம்மை, சின்னம்மை பாதிப்பு, 5.கண்ணீர் பற்றாக்குறை, 6.தவறான மருந்துகளை உபயோகித்தல்.

வெண்மை படிந்த கருவிழியை எடுத்துவிட்டு இறந்தவரின் தெளிவான கருவிழியை பொருத்துவது தான் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை என்பது. மற்ற மாற்று உறுப்பு அறுவை சிகிச்சைகளை விட இதில் ஒவ்வாமை மிகவும் குறைவு. அதனால் இந்த அறுவை சிகிச்சையில் நல்ல வெற்றி வாய்ப்பு உள்ளது.

கண் தானம் எப்படி செய்வது என்பதைப் பார்ப்போம். கண் வங்கிகளில் கண் தான உறுதிப்பத்திரங்கள் பெற்று அதில் நம் பெயர், முகவரி முதலானவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். பிறகு நமக்கு கண் தான அட்டை வழங்கப்படும். நம் விருப்பத்தை நம் நெருங்கிய உறவினர்களுக்கோ, பிள்ளைகளுக்கோ அல்லது நண்பர்களுக்கோ சொல்லி வைக்க வேண்டும். இறந்தவர்கள் கண் தான உறுதிப்பத்திரம் பூர்த்தி செய்து கொடுக்காவிட்டாலும் நெருங்கிய உறவினர்கள் விரும்பினால் கண் தானம் செய்யலாம்.

இறந்தவர்களின் கண்கள் கெடாமல் பாதுகாப்பதற்கு கண்களை மூடி வைக்க வேண்டும். அதன் மேல் ஈர பஞ்சினை வைக்கலாம். தலையை ஒன்று அல்லது இரண்டு தலையணைகளால் உயர்த்தி வைக்க வேண்டும்.

கண் தானம் பற்றி தெரிய வேண்டிய சில அரிய தகவல்கள் :

1. கண் தானம் செய்வதில் பெரியவர், சிறியவர் என்றோ ஆண், பெண் என்றோ வேறுபாடு இல்லை. இரத்த இன வேறுபாடும் இல்லை.
2. கண் தானம் என்பது ஒருவர் இறந்தவுடன் அவருடைய கண்களை, இறந்த 6 மணி நேரத்திற்குள் எடுத்துவிட வேண்டும்.

மரு. கு. மோகன்ராஜ், எம்.எஸ்.டி.ஒ.,
திட்ட இயக்குநர்,
தமிழ்நாடு மாநில கண்பார்வை இழப்பு
தடுப்புச் சங்கம்



3. கண் தானம் பற்றிய தகவலை கண்வங்கிகளுக்குத் தெரிவித்தவுடன் மருத்துவர் வீட்டிற்கே வந்து கண்களை எடுத்து கண்வங்கியில் சேர்ப்பார்.

அறுவை சிகிச்சைக்கு முன்



அறுவை சிகிச்சைக்குப் பின்

4. கண்களை எடுக்க 15 முதல் 20 நிமிடங்கள் ஆகும். இதனால் முகத்தில் விகாரம் ஏற்படாது.

5. ஒருவர் கண் தானம் செய்தால் இருவர் பார்வை பெறுவர்.

6. எடுத்த கண்களை அநேகமாக 24 முதல் 48 மணி நேரத்திற்குள் உபயோகப்படுத்துவார்கள்.

7. இறந்தவர்களின் முழு கண்களை மற்றவர்களுக்கு பொருத்த முடியாது. கருவிழி மட்டும் தான் பொருத்த முடியும்.

8. சென்னையில் மிகச் சிறப்பாக செயல்பட்டு வரும் கண்வங்கி, அரசு கண் மருத்துவமனையில் உள்ள அரிமா கண் வங்கி ஆகும். இதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் பின் வருமாறு – 28555281 அல்லது 28553840. மற்ற மாவட்டங்களில் உள்ளவர்கள் அங்குள்ள கண் வங்கிகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டும்.

9. அரசு கண் மருத்துவமனையில் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை முற்றிலும் இலவசமாக செய்யப் படுகின்றது.

இவ்வுலகில் பிறந்த யாவரும் வாழ்ந்து கடைசியில் இறந்தே ஆக வேண்டும் என்பது இயற்கை நியதி. இதிலிருந்து யாரும் தப்ப முடியாது. இறந்த பிறகு யாரும் எதையும் கொண்டு செல்லவும் முடியாது. இத்தருணத்தில் ஒருவர் இறந்தவுடன் எரித்து விடுகின்றோம் அல்லது புதைத்து விடுகின்றோம். அவ்வாறு செய்யும் போது இறந்தவரின் உடல் எரிந்து சாம்பலாகி விடுகின்றது. அல்லது மண்ணில் புதைந்து மண்ணோடு மண்ணாகி விடுகின்றது. இப்படி வீணாகும் மனித உறுப்பாகிய கண்களைப் பிறருக்குத் தானமாகக் கொடுப்பதனாலும், அதன்மூலம் மற்றவர்கள் பெறும் பார்வையினாலும் நம் வாழ்நாளுக்குப் பின்னரும் நம் உறுப்பு இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்ற மனநிறைவும், மட்டற்ற மகிழ்ச்சியும் நமக்குக் கிடைக்கும். கண் தானம் கொடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் கண் தானத்திற்காகப் பதிவு செய்து காத்திருப்போரின் எண்ணிக்கை குறையும்.

“கண்களை தானமாகக் கொடுப்பீர்; இருவர் வாழ்வினை ஒளி பெறச் செய்வீர்''

முந்து தமிழ்க் கல்வெட்டுகள்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் மாதாந்திரச் சொற்பொழிவு வரிசையில் ஆகஸ்ட் மாதச் சொற்பொழிவு தரமணியிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. “முந்து தமிழ்க் கல்வெட்டாய்வு – அண்மைக் கால வளர்ச்சி” என்ற தலைப்பில் ஐராவதம் மகாதேவன் சொற்பொழிவு நிகழ்த்தினார். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் மதுரைக்கருகிலுள்ள மாங்குளம், கீழவளவு, கேரளத்திலுள்ள எடக்கல் ஆகிய ஊர்களில் தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டபோதும் 1906இல் இந்தியத் தொல்லியல் துறைக் கல்வெட்டாய்வாளர் வெங்கையாதாம் இவை அசோகன் பிராமி எழுத்துகளில் அமைந்திருப்பதைக் கண்டறிந்து வெளிப்படுத்தினார். ஆனாலும் இவை பிராகிருத மொழிக் கல்வெட்டுகள் என்றே அவர் கருதினார். 1919இல் ஹெச். கிருஷ்ணசாஸ்திரி, இக்கல்வெட்டுகளில் திராவிட மொழி குறிப்பாகத் தமிழ் இடம் பெற்றிருக்கலாம் என்ற கருத்தை வெளியிட்டார். “ள” என்ற தமிழ் பிராமி எழுத்து இக்கல்வெட்டுகளில் இடம் பெற்றிருப்பதையும் கண்டறிந்தார். 1924இல் கே.வி. சுப்பிரமணிய ஐயர் ‘ழ, ள, ற, ன’ என்ற தமிழுக்கே உரிய எழுத்துகள் இக்கல்வெட்டுகளில் இடம் பெற்றிருப்பதைக் கண்டறிந்தார். 1964இல் புகளூர்(கரூர்)க் கல்வெட்டில் சேர அரசர் பரம்பரையும், மாங்குளம் கல்வெட்டில் பாண்டிய மன்னர் நெடுஞ்செழியனும் குறிப்பிடப்பட்டிருப்பதை ஐராவதம் மகாதேவன் வெளிப்படுத்தினார். மேலும், இக்கல்வெட்டுகளில் 75% தமிழ்ச் சொற்களும் 25% பிராகிருதச் சொற்களும் கலந்து எழுதப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் கி.பி.7–13ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையிலான பல்லவர், சோழர் கல்வெட்டுகளை விட வடமொழிக் கலப்பு குறைவே. மேலும் தமிழ்ச் சொற்றொடரமைப்பு, வினைச் சொல் வடிவங்கள் ஆகியவையே இக்கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

சித்தன்னவாசல் கல்வெட்டில் சிறுவாசல் (சித்தன்னவாசல்) என்பது சிறுபோசில் எனக் குறிப்பிடப்படுகிறது. போசில் என்பது வாசல் என்பதற்குரிய கன்னடச் சொல்லாகும்.

தாய்லாந்தில் கண்டறியப்பட்டுள்ள “பெரும்பதன்கல்” எனப் பொறிக்கப் பட்ட பொன் உரைகல், க்வாஸிர் அல்காதிம் துறைமுகத்திலும் பெரனி கேயிலும் கண்டறியப்பட்ட பானை ஓடுகளில் கணன் சாதன், கொ(ற்)ற பூமான் ஆகிய தமிழ் பிராமிப் பொறிப்புகள் ஆகியவை, தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட வணிகர்களும், பொற் கொல்லர் (பத்தன்) போன்ற கைவினைஞர்களும் உலகின் பல பகுதிகளுக்குச் சென்று தொழில் புரிந்துள்ளனர் என உணர்த்து கின்றன.

இக்கல்வெட்டு வழக்குகளையும் இலக்கிய வழக்குகளையும் இணைத்து ஆராய்ந்து தமிழ் மொழிக்கு வரலாற்று முறை இலக்கணம் தயாரிக்கப்பட வேண்டும். இது மிகவும் அவசியமான பணியாகும் என்று ஐராவதம் மகாதேவன் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் 90 இடங்களில் பாறைகள், குன்றுகளில் பொறிக்கப் பட்டுள்ள தமிழ் பிராமிக் கல்வெட்டு களை டிஜிட்டல் நிழற்படம் எடுத்து, கணினி மூலமாகத் தெளிவான பிரதிகள் எடுத்தல், வண்ண வீடியோ படம் எடுத்தல், இக்கல்வெட்டுகளை மழை, வெயிலிலிருந்து பாதுகாத்தல் ஆகிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கல்குவாரிகளால் ஏற்படும் சிதைவுகளிலிருந்தும் இக்கல்வெட்டுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ள பாறைகளைச் சுற்றி மேற்கூரையுடன் கூடிய செங்கல் கட்டுமானங்கள் எழுப்பலாம் என்றும் அவர் ஆலோசனை வழங்கினார்.

சொற்பொழிவுக்குப் பார்வையாளராக வந்திருந்த திரு. கொடுமுடி சண்முகன், பண்டைய நாணயங்கள் சிலவற்றைத் தொல்லியல் துறைக்கு அன்பளிப்பாக வழங்கினார். முன்னதாகத் தொல்லியல் துறை சிறப்பு ஆணையர் திரு. தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,இ.ஆ.ப., அறிமுக உரை நிகழ்த்தினார். கல்வெட்டாய்வாளர் திரு. சு. இராசகோபால் வரவேற்புரை நிகழ்த்தினார். கல்வெட்டாய்வாளர் திருமதி.ஆ.பத்மாவதி, கூட்டத்தின் இறுதியில் நன்றி கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் சென்னை தொல்லியல் அலுவலர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி செய்திருந்தார்.

❖ ❖ ❖



கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 133ஆவது பிறந்த நாளையொட்டி, தமிழக அரசின் சார்பில், 5–9–2004 அன்று சென்னையிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயகுமார் அவர்களும், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்களும் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

கவுரவிப்பு

• சி.சு. செல்லப்பா

ஒரு கைத்தாங்கலைக் கூட வேண்டாம் என்று கையசைத்துவிட்டு, கைத்தடியை டொக் டொக்கெனப் படிகளில் சப்திக்கச் செய்துகொண்டே அந்தத் தொண்டு கிழம் மேடைக்கு ஏறி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டதைப் பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தின் வியப்புக்கு ஒரு எல்லையே இல்லை. கிழவர் வரும்போது சற்று அடங்கினாற்போல் தோன்றிய கசமுசல் மறுபடியும் ஆரம்பமாயிற்று.

"என்ன இது. ஒரு கிழத்துக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பாரேன்" என்று ஒரு குரல்.

மற்றொரு குரல்: 'இந்தப் பூமாலையை வ்ாங்கிப் போட்டுக் கொள்வதற்காக எண்பது. வயதையும் முழுங்கிட்டு ஜாம்பவான் மாதிரி உட்கார்ந்து இருக்கிறதே' என்று மூக்கில் விரல் வைக்கும்.

அதே சமயம் வேறு ஒரு குரல், 'இதெல்லாம் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதா? பூர்வ ஜன்மத்தில் அது ரொம்ப புண்ணியம் செய்திருக்க வேண்டும்' என்றது.

அதைத் தொடர்ந்து வேறொன்று, 'இத்தனை வயதாகியும் கண்ணும் காதும் பல்லும் அவருக்கு கொஞ்சமாவது ஒச்சமாகி இருக்கணுமே, வீட்டில் இருந்து, கிழவர் தானே நடந்து பள்ளிக்கூடத்துக்கு வந்தாராமே' என்று வியக்கும்.

'பழங்காலக் கிழடு அல்லவா, நல்ல வைரக்கட்டை' என்று இன்னொரு குரல் கலந்தது.

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பது போல ஒருவர் 'சாமிநாத முதலியாரால்தான் இந்தப் பெருமை பூராவும் கிழவருக்கு. நாமும் இந்த ஊரிலேயே இருக்கிறோம். இந்தக் கிழத்தைப் பற்றி யாராவது கவலைப்பட்டோமா? இல்லை, அவரது பூர்வகாலத்தைப் பற்றித்தான் நம்மில் எத்தனை பேர்களுக்குத் தெரியும் என்றார்.

'ஆமாம், பாருங்களேன், சாமிநாத முதலியார் இங்கு வந்து மூன்று மாதத்திற்குள் எப்படியோ இந்தக் கிழவரைக் கண்டு பிடித்துவிட்டாரே, கண்டு பிடித்தது மட்டுமின்றி ஊரையே திரட்டி விட்டாரே. அவருக்குத்தான் எவ்வளவு அக்கறை!

'அக்கறை கிடக்கட்டும். கிழவர் பக்கத்தில் அவர் உட்கார்ந்திருக்கிற தோரணையைப் பாருங்களேன்.



ரிடயர்ட் சப் ஜட்ஜ் சாமிநாத முதலியார் மாதிரியாகவா தெரிகிறது? பள்ளிக் கூடத்துப் பையன் உபாத்தியாயர் கிட்ட உட்கார்ந்திருக்கிற மாதிரி எவ்வளவு பவ்யம், மரியாதை கிழவரிடம்! அவர் பேசும்போது தான் பாருங்கள், வாயில் விரல்களை வைத்துப் பொத்திக் கொண்டு குனிந்து முகத்தோடு முகம் கொண்டு போய் எவ்வளவு பயபக்தியான குரலில் பேசுகிறார்!'

'பின்னே இருக்காது? ஐம்பது வருஷத்திற்கு முந்தி அவர் கிட்ட பாடம் கற்றுக் கொண்டது இன்னும் முதலியார் நினைவில் இருக்கிறாப் போலிருக்கு' என்று பேசி நடந்த சந்தேக சம்பாஷணையை தெளிவுபடுத்தியது ஒரு குரல்.

' என்ன! நமது முதலியார் இவர்கிட்ட படித்தவரா? முதலியாருக்கே அறுபதுக்கு சமீபம் ஆகிக் கொண்டிருக்கே. அவரே கிழவராகிவிட்டார். அவருக்கு அரிச்சுவடி பாடம் சொல்லிக் கொடுத்த கிழமா இன்னும் உயிரோடு இருக்கிறது!'

'அப்படி சொல்லுங்கள்; அதுதான் முதலியாருக்கு இவ்வளவு அக்கறை, நியாயம்தானே. இது ரொம்ப ஆச்சர்யமான சம்பவம்தான்.' "இதை மனுஷன் நினைத்து வைத்துக் கொண்டு செய்கிறார் பாரு, அதுதான் தன்மை.' இப்படிப் பல குரல்கள் பேசிக்கொண்டன.

'அதுதான் கிழவர் முகத்தை பாருங்களேன். அந்த சருகு முகத்திலேயேும் ஒரு பளபளப்புத் தெரிகிறது. இவ்வளவு பெருமை தனக்குக் கடைசி காலத்தில் கிடைக்கப்போகிறது' என்று எப்போதாவது எதிர்பார்த்திருக்குமா கிழம்? ஏதோ புது உலகத்திலே நுழைந்த மாதிரி அல்லவா கூட்டத்தை வெறித்து வெறித்துப் பார்க்கிறது!'

'பின்னே, இருக்கத்தான் செய்யும்; டெபுடி கலெக்டர் கையால் மாலை கழுத்திலே விழப்போகிறதே. அதை நினைத்துப் பார்த்துக் கொள்கிற சந்தோஷத்திலே கிழத்துக்கு வயதுகூட இருபது குறைந்துவிட்டது மாதிரி இருக்கு இல்லையா?'

'இந்தக் குறை ஏதாவது அதன் மனதிலே உறுத்திக்கிட்டே இருந்திருக்கும்.' 'அதற்காக உயிரைப் பிடித்துக் கொண்டு இருந்திருக்கும்.'

'அதெல்லாம் இல்லை. இப்படி வரப்போகுதுன்னு அவருக்கு எப்படித் தெரியும். எல்லாம் ஒத்துக் கொண்டது அவ்வளவுதான்.'

' ஆமாம் சாமிநாத முதலியார் இந்தக் கிழம் கிட்ட படித்து முன்னுக்கு வந்தார் என்றால் கிழம் மண்டை போடுகிற வரைக்கும் இரண்டு வேளைச் சோற்றுக்கு ஏற்பாடு செய்யட்டுமே, இதற்கு ஊரைக் கூட்டி........' என்று ஒரு சந்தேகக் குரல் கிளம்பியது.

' நன்றாகச் சொன்னீர்கள்? கிழத்தை கவுரவிக்க செய்யப்பட்டுள்ள இந்த ஏற்பாடு சாமிநாத முதலியாருக்கும் கிழவருக்கும் ஏற்பட்டுள்ள தனிப்பட்ட உறவைப் பொறுத்ததல்ல. கதையை விவரமாகக் கேளுங்கள். வைபவம் ஆரம்பமாவதற்குள் முடித்துவிடுகிறேன்' என்று அங்கிருந்த ஒரு குரல் விஸ்தாரமாக பேசவும் விஷயம் அறிய வராத காதுகள் அத்தனையும் அந்த விவரத்தை கேட்கத் தயாராயின.

இந்த தேவதான பாளையம் கிராமத்து உயர்தரப் பள்ளியில் இப்படி கிராமமே திரண்டு கவுரவிக்கக் கூடியிருக்கும் இந்தத் தொண்டு கிழவர் செந்நெல்பட்டி நமசிவாயம் பிள்ளையை சாமிநாத முதலியார் கண்டுபிடிக்கும் வரையில், சாதாரணமாக யாருக்கும் தெரியாதுதான். கோவிலை அடுத்து உள்ள ஒரு ஓரத்துக் கோடி வீட்டிலே திண்ணையோடு திண்ணையாகக் கண்களை அவ்வப்போது மூடிமூடித் திறந்து சதா ஏதோ யோசனையில் ஆழ்ந்து ஒருவேளை கழியும் நேரத்தை விநாடி விநாடியாக எண்ணிக்கொண்டு இருக்கிறதோ என்று தோன்றும்படியான பாவனையில் உட்கார்ந்திருக்கும் ஒரு முடிச்சுப்போன்ற வற்றிச் சருகான உயிர் மூட்டையை தெருவில் பம்பரம், குண்டு ஆடிக்கொண்டிருக்கும் ஒரு தலைமுறை கொஞ்சமும் தெரிந்து கொண்டிருக்கப் பிரமேயமே இல்லை.

இந்தப் பால தலைமுறை என்ன, வாலிப தலைமுறை, நாற்பதுக்கு இரண்டு மூன்று கூடியும் குறைந்தும் உள்ள வயதான ஒரு நடுத்தர வயது பரம்பரைக்கும் கூட அவரைப் பற்றி ஒரு வார்த்தை தெரிய வராது. அந்தக் கிராமத்து வாழ்வோடு இணைந்திருந்த நமசிவாயம் பிள்ளையின் வாழ் நாட்கள் அவ்வளவு பழமையானது. அந்தப் பழமையான நாளத்து உறவைத்தான் இந்தக் கிராமம் பூராவும் இன்றைய ஒரு பொழுதுக்காவது ஞாபகப்படுத்திக் கொள்ளும் சம்பவம் நடைபெற இருக்கிறது.

இப்போதைய தேவதான பாளையத்தைத்தான் உங்களுக்குத் தெரியும். இது ஒரு பெரிய மேஜர் யூனியனாகி ஒரு ஹைஸ்கூல், ஒரு ஜில்லா போர்டு ஆஸ்பத்திரி, சப் ரிஜிஷ்டிரார் ஆபீஸ், போலீஸ் ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்டு, சினிமா தியேட்டர் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. ஐம்பது வருஷத்திற்கு முன் இந்தக் கிராமம் இருந்த நிலைமை இங்கு கூடி இருக்கும் எத்தனை பேருக்குத் தெரியுமோ?

•

பஸ் ரூட் எல்லாம் இப்போதுதான். தபால் வண்டி ஓடிக் கொண்டிருந்த காலம் அது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து பத்து மைல், இந்தக் கிராமம். இதுக்குவர இரண்டு தடவை நடுவில் மாடு மாற்றி தபால்வண்டி ஆட்களை சுமந்து கொண்டு வந்த நாட்கள் ஊரைச் சுற்றி ஏதோ பயிர் பச்சை கணிசமாக விளைகிற நஞ்சை புஞ்சை உள்ள

ஊராக இருந்ததினால் இந்த வட்டையிலே குடிபடை அதிகமாக உள்ள கிராமமாக அந்தக் காலத்திலேயே விளங்கியது.

இப்படியெல்லாம் இருந்த இந்த ஊரிலே ஒரு பள்ளிக்கூடம்--அந்தக் காலத்திலே திண்ணைப் பள்ளிக்கூடம் தானே கிராமங்களில் இருக்கும்-- கிடையாது. இந்த ஜில்லாவிலே, டவுன்கள் ஒன்று இரண்டிலே கொஞ்சம் பெரிய பள்ளிக்கூடங்கள் இருக்கும். ஐந்து கிளாஸ் படிக்கணும்னாலும் டவுனுக்குத்தான் பிள்ளைகள் படிக்கப் போகணும். அதுவும் கொஞ்சம் பசை உள்ள பிள்ளைகள் தான் அங்கே போக முடியும்.

இப்படி இருந்த நாட்களில் தான் செந்நெல்பட்டி நமசிவாயம் பிள்ளை இந்த ஊருக்கு வந்து சேர்ந்தார். இப்போது நீங்கள் பார்க்கிறீர்களே இந்த நமசிவாயம் பிள்ளைக்கும் அப்போது வாலிப வயதாக இருந்த நமசிவாயம் பிள்ளைக்கும் ரொம்ப வித்தியாசம்.

நீங்கள் யூகிக்கவே முடியாது.

காலம் அப்படி உருக்குலைத்து விடுகிறது மனித உடலை.

இதை மறித்து ஒரு குரல், 'யூகிக்க முடியாமல் என்ன? கூனல் இல்லாமல் அதோ நாற்காலியிலே நிமிர்ந்து பாலியப் பிள்ளை மாதிரி உட்கார்ந்து இருப்பதைப் பார்த்தாலே தெரியுதே' என்றது.



கதை சொன்னவர் தொடர்ந்து ஆரம்பித்தார். 'சீக்கிரம் சொல்லி விடுகிறேன். அதோ கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் டெபுடி கலெக்டர் வருகிறார் போல் இருக்கிறது. தடபுடல் செய்கிறதைப் பார்த்தால் வேறென்ன இருக்கும்? சரி.'

நமசிவாயம் பிள்ளைக்கு சொந்த ஜில்லா திருநெல்வேலி, செந்நெல்பட்டி நமசிவாயம் பிள்ளை என்று தான் சொல்லிக் கொண்டார். தமிழ் படிப்பில் நல்ல பாண்டித்யம் என்றாலும் இங்கிலீஷ் படிப்பு சிறிதும் தெரியாத அவர் இளம்வயதிலேயே தன் வாழ்வுக்குச் சிறிதும் ஏது இல்லாத அந்த கிராமத்தை விட்டு புறப்பட்டு எங்காவது சற்று ஆதரவும் அனுகூலமும் கிடைக்கும் இடத்தைத் தேடி ஜில்லா விட்டு ஜில்லா வந்தவர், நமது ஊருக்கு வந்து சேர்ந்தார். அவரை வைத்து ஊரிலே காணியாச்சி உடைய முதன்மைக்காரர்கள் ஒரு சாவடியிலே திண்ணைப் பள்ளிக்கூடம் அமைத்தார்கள். ஆமாம் இன்று நீங்கள் இப்போது உட்கார்ந்திருக்கும் இந்த இடம் தான் அந்தச் சாவடியாக இருந்தது என்றால் நீங்கள் நம்பவே முடியாது.

அதோ அந்தக் காம்பவுண்டின் ஓரத்திலே பள்ளிக்கூடக் காவற்காரனுக்கு ஒரு சிறு ஓட்டுக்கொட்டகை இருக்கிறது பாருங்கள். அதிலே தான் நமசிவாயம் பிள்ளை நாலு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து தன் பாடுக்கு வழி செய்து கொண்டார்.

நமசிவாயம் பிள்ளை பாடம் சொல்லிக் கொடுத்த முறையைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால் நீங்கள் சாமிநாத முதலியாரைக் கேட்டால் சொல்லலாம். அவர் இந்தக் கூட்டத்தில் அதையெல்லாம் சொல்லுவாரோ என்னமோ? இதெல்லாம் ஞாபகத்திலே இருக்கணுமே. எதானாலும் சரி, அவர்கிட்ட படித்த சாமிநாத முதலியார் ரிடயர்ட் சப்ஜட்ஜாக ஆனது மாதிரி இன்னும் எத்தனையோ பேர்கள் நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் இந்த ஊருக்கு வரவில்லை. சாமிநாத முதலியார் மாதிரி.

நமசிவாயம் திண்ணைப் பள்ளிக்கூடம் நன்றாகத் தான் வளர்ந்து வர ஆரம்பித்தது.

'அதோ டெபுடி கலெக்டர் வந்து விட்டார்' என்று ஒரு குரல் கிளம்பியது.

'இருக்கட்டும். விவரத்தை தெரிந்து கொள்வோம். மேலே சீக்கிரமாக கதையைச் சொல்லுங்கள், விழா ஆரம்பிப்பதற்குள்' கதைக்காரர் மேலே தொடர்ந்தார்.

சுற்று வட்டாரத்தில் உள்ள நடை தூரத்து கிராமங்களிலிருந்தெல்லாம் பிள்ளைகள் வந்து

நமசிவாயம் பிள்ளையிடம் பாடம் கற்றுக் கொண்டன என்றால் பாருங்களேன். அவ்வளவு பிரபலம் அடைந்து விட்டது பிள்ளைவாளுடைய திண்ணைப் பள்ளிக்கூடம்.

சொல்ல மறந்துவிட்டேனே. பிள்ளை ஒரு பிரம்மச்சாரி, தானே சோறு சமைத்துத்தான் சாப்பிடுவார்.

'அப்படியா ? அதுதான் தேகம் இந்த வயதுக்கு இவ்வளவு தெம்பாக இருக்கிறது. அப்புறம் மேலே.'

ஊர் ஆதரவு எல்லாம் பிள்ளைவாளுக்கு எவ்வளவோ இருந்தும் பத்து வருஷத்திற்குப் பிறகு அந்த ஒரு சமயத்திலே அடி பலமாக விழுந்து விட்டபோது நமசிவாயம்பிள்ளை அப்படியே இடிந்து போய் உட்கார்ந்துவிட்டார்.

ஹூம்... சொல்கிறேன். இரண்டு எழுத்து இங்கிலீசு சொல்லித் தருகிற பள்ளிக்கூடம் வேணும்னு கிராமத்தாருக்கு யோசனை தோன்றிவிட்டது. அப்படிப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தினால் தாங்கள் உதவித் தொகை கொடுப்பதாக ஜில்லா போர்டு நிருவாகம் எழுதி அனுப்பியதுதான் காரணம். ஜில்லா போர்டு இந்த ஆசையை காட்டினவுடனே – அவ்வளவுதான். கிராமப் பெரியதனக்காரர்கள் அந்த ஒரு க்ஷணத்திலேயே நம் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குப் பதில் இங்கிலீஷ் முறைப்பள்ளிக்கூடமாக ஆக்கிவிட முடிவு செய்துவிட்டார்கள்.

'அட பாவமே! இவர் பிழைப்பு என்ன ஆகிறது ?'

'அதோ பாருங்கள். சாமிநாத முதலியார் டெபுடி கலெக்டரிடம் விஷயத்தைப் பேசிக் கொண்டிருக்கிறார். பிரசங்கம் ஆரம்பமாகிவிடும் போலிருக்கு. சீக்கிரம் சொல்லுங்கள்'.

கதைக்காரர் மீண்டும் தொடர்ந்தார்.

பிழைப்பு ஆகிறதென்ன ? நமசிவாயம் பிள்ளை திண்ணைப் பள்ளிக்கூடத்தை அப்படியே நாலாம் கிளாஸ் வரைக்கும் உள்ள எலிமென்டரி ஸ்கூலாக மாற்றிவிட்டார்கள். நமசிவாயம் பிள்ளை அவர்களிடம் அழாக்குறையாக 'நீங்கள் வேறே பள்ளிக்கூடம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நான் இப்படியே ஏதாவது சொல்லிக் கொடுத்துக்கொண்டு என் நாளைத் தள்ளிக்கொண்டு போகிறேன்' என்றார்.

அவர்கள் அதற்கு பதில், 'எங்கள் பிள்ளைகளுக்கு இந்தப் படிப்பு இனிக் கட்டாது. ஏதோ கடை கண்ணியிலே உட்காருவதற்கு உங்கள் படிப்பு போதும். மதிப்பாக இருப்பதற்கு இது எடுத்துக் குத்தாது. ஜில்லா டிரெயினிங் பள்ளிக்கூடத்திலேயிருந்து இரண்டு வாத்தியார்களை அனுப்புவதாக ஜில்லா நிருவாகக்காரர்கள் எழுதி இருக்கிறார்கள். நீங்கள் இவ்வளவு நாளாக இருந்ததுனாலே வேணுமானால் தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருங்கள். மற்றவைகளை எல்லாம் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்று முடிவாகச் சொல்லிவிட்டார்கள்.

நமசிவாயம் பிள்ளை துடித்துப் போனார். 'என்ன, இத்தனை வருஷமாக இந்தப் பள்ளிக்கூடத்திலே நிமிர்ந்து நடமாடிக் கொண்டு இருந்ததற்கு இப்போது தலை குனிந்து நடக்கவா சொல்கிறீர்கள். நமசிவாயம் இனி இன்னொரு வாய் உத்தரவுக்கு எதிர்பார்த்து நிற்கவா ?' என்று நெஞ்சை அழுத்தும் துக்கக் குரலில் தட்டுத்தடுமாறி பேசியபோது பொலபொலென கண்ணீர் உகுத்துவிட்டார். ஆனால் இதெல்லாமா ஊர்க்காரர்கள் முடிவை மாற்றச் செய்துவிடும்–ஊர் முக்கியமா, பிள்ளை முக்கியமா என்பதில் இரண்டிலொன்றைத் தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு!

அவ்வளவுதான், நமசிவாயம் பிள்ளை கண்களைத் துடைத்துக் கொண்டார். உறுதியும் தீர்க்கமுமான குரலாக மாறியது அவர் பேச்சு.

இந்தத் திண்ணையை இப்போதே ஒப்பித்து விடுகிறேன். ஒப்புக்கொள்ளுங்கள். என் ரத்தத்தை வற்ற வைத்து நாலு பிள்ளைகளுடன் ஆரம்பித்து நூற்றுக்கு மேற்பட்ட தொகை வளர்ந்துவிட்ட இந்தத் திண்ணையின் எதிர்காலம்தான் நமசிவாயத்தின் எதிர்காலத்தைவிட மிகமிக முக்கியமானது. அது நன்றாக நடப்பதை எட்டி இருந்து பார்த்துக் கொண்டிருப்பேன். 'இந்தக் கை நட்டு, குழந்தைகள் தண்ணீர்விட்டு வளர்ந்திருக்கும் இந்த குட்டி அரசமரங்கள் கிளை வீசி வளர்ந்து நிழல் பரப்புவதை எட்டி நின்று பார்த்துக் கொண்டிருப்பேன். எனக்கு நிழல் தரத் தவறிவிட்டது இந்த விருக்ஷம். சந்ததி சந்ததிக்குமாக நிழல் தருவதைப் பார்த்து ஆனந்தித்துக் கொண்டிருப்பேன். நான் வருகிறேன்' என்று அந்தக் கூட்டத்தை விட்டு கிளம்பியவர்தான் நமசிவாயம் பிள்ளை...

'பாவம்! மனிதனுக்கு அப்போது எப்படி இருந்திருக்கும்!' 'மனசே முறிந்து போயிருக்குமே.' 'அப்போது பெரியவர்கள் செய்த அநீதிக்குப் பிராயச்சித்தமாக சாகிற காலத்திலே கிழத்துக்கு இந்த மரியாதையாவது கிடைச்சது சரிதான்.' 'கிழத்தின் குறை இப்போதாவது தீருமல்லவா' என்றெல்லாம் ஆளுக்கொரு அபிப்பிராயமாகப் பேசினார்கள்.

'அதோ சாமிநாத முதலியார்கிட்ட பள்ளிக்கூட ஹெட் மாஸ்டர் பேசிக்கொண்டிருக்கிறார். அப்புறம் என்ன ஆச்சு ? சீக்கிரம் கதையை முடியுங்கள், கிழவரைப் பாருங்கள், அரச மரத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்' என்றார் ஒருவர்.

கதைக்காரர் தொடர்ந்தார்: அந்த அரச மரம் அவருக்கு பழைய ஞாபகம் அவ்வளவையும் கொண்டு வராமல் இருக்க முடியுமா ?

அப்போது கன்றுகளாக இருந்த அதுகள் பக்கத்திலே இருந்துதான் அவர் அந்தக் குழந்தைகளிடம் விடை பெற்றுக் கொண்டார். அந்தக் காட்சியை பார்த்தவர்கள் உருகிப் போய் விடுவார்கள். 'குழந்தைகளே, நமசிவாயம் பெயர் சொல்லும் படியாக நீங்கள் எல்லாம் நடந்து கொள்ளுவீர்களல்லவா ? இந்த அரசங் கன்றுகளை பட்டுப்போக விட்டு விடாதீர்கள். நான் வருகிறேன். நன்றாகப் படியுங்கள்' என்று கண்ணீருடன் தனக்குச் சொந்தமாக இருந்த ஒரு கோரப்பாய், கட்டைப் பலகை அடங்கிய படுக்கையையும் சில தட்டு முட்டு சாமான்களையும் எடுத்துக் கொண்டு ஊர்ப் பிரமுகர்கள் முன்னால் அந்தப் பள்ளிக்கூடத்தை விட்டுச் சென்றவர்தான் நமசிவாயம் பிள்ளை, இப்போது தெரு ஓரத்துத் திண்ணையிலே அவர் குந்திக்கொண்டு இருக்கிறாரே அந்த இடத்திற்குச் சென்றார்.

'பாவம்! அப்புறம் ?'

'அதோ சாமிநாத முதலியார் பேச எழுந்திருக்கிறார்' என்று ஒருவர் உஷார்ப்படுத்தினார். 'பேசட்டுமே, அவரும் இதைத்தானே சொல்லப் போகிறார். நான் இதோ முடித்து விடுகிறேன்' என்று கதைக்காரர் கதையை தொடர்ந்தார்.

நமசிவாயம் எந்த வேளையிலே அந்தப் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தாரோ பள்ளிக்கூடம் துடியாக முன்னேறியது. கமிட்டியிடம் இருந்த பள்ளிக்கூடத்தை தாலுகா போர்டு ஒப்புக்கொண்டு ஐந்தாவது வகுப்பு வரைக்கும் உயர்த்தியது. அப்புறம் மிடில் ஸ்கூலாகி ஏழாம் வகுப்பு வரை உயர்ந்தது. இப்போதுதான் இது ஜில்லா போர்டு ஹைஸ்கூலாக சுற்று வட்டம் முப்பது மைலுக்கு ஒரே பள்ளிக்கூடமாக உயர்ந்து நிற்பதைப் பார்க்கிறீர்களே!' என்று கதைக்காரர் நிறுத்தினார்.

சாமிநாத முதலியார் பேசிக்கொண்டிருந்தார். ஒருவரைத் தவிர கதை கேட்டுக்கொண்டிருந்த மற்றவர்கள் எல்லோரது பார்வைகளும் மேடைப் பக்கம் திரும்பின. ஒரு குரல் மட்டும் கதைக்காரரை, 'அப்புறம் கிழவர் பிழைப்பு என்ன ஆயிற்று ? எனக்குச் சொல்லுங்கள்' என்று கேட்டது.

அடங்கிய குரலிலே கதைக்காரர் தொடர்ந்தார்.

பிழைப்பென்ன ? வைராக்கிய மனிதன். கைத்தாங்கல் இல்லாமல் இப்போது மேடைமேல் ஏறின



கிழம் அந்த வாலிபத்திலே எப்படி இருந்திருக்கும். யூகித்துப் பாருங்கள். 'வேறே ஊருக்குப் போய் பள்ளிக்கூடம் ஆரம்பித்து நடத்தி இப்படி திரும்பவும் வாழ்க்கை முறிவு எனக்கு வேண்டாம். ஒரு அதிர்ச்சி போதும். இந்தப் பள்ளிக்கூடம் வளருவதை பார்த்துக் கொண்டு இருந்தாலே மனதுக்குப் போதும். என் ஆசையையும் அபிமானத்தையும் இன்னொரு ஊருக்கும் பள்ளிக்கூடத்துக்கும் மாற்றவா ?' என்று சொல்லிவிட்டார்.

வலியபோய் பாடம் சொல்லித் தரமாட்டார். தன் திண்ணை தேடி யாராவது அனுப்பும் ஏழைக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதுடன் நிறுத்திக் கொண்டார். தான் மனம் இன்றிப் பிரிந்த பள்ளிக்கூடத்துக் குழந்தைகள் இன்னும் வந்து போய்க் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசை நமசிவாயம் மனதிலே உறைந்தது. தன் திண்ணை வாசலிலேயே பொட்டுக்கடலை, பொரி, சர்க்கரை மிட்டாய், கொடுக்காப்புளி, சிலேட்டுக் குச்சி இதெல்லாம் வைத்து விற்க ஆரம்பித்தார். நமசிவாயத்தின் வாழ்க்கை இப்படித்தான் கழிந்து கொண்டிருந்தது...'

அப்போது சாமிநாத முதலியாரின் பேச்சு அவர்கள் காதில் விழுந்தது... 'நீங்கள் சுருக்கமாக டி.என்.ஹைஸ்கூல் என்று அழைக்கிறீர்களே அதன் முழுப்

பெயர் என்ன தெரியுமா? தேவதான பாளையம் நமசிவாயம் ஹைஸ்கூல் என்பது, கமிட்டி அவரிடம் இருந்து ஒப்புக்கொண்டதும் இந்தப் பெயரை வைத்தது.'

அட, கிழவர் பெயர் தாங்கிய பள்ளிக்கூடமா இது! என்று சபை ஆர்ப்பரித்து கரகோஷம் செய்தது.

'இவ்வளவு நாட்களாக யாருக்கும் தெரியவராதே.' 'நல்ல ஞாபகார்த்தம்தான் கிழவர் சாதனைக்கு.' 'அதோ பாருங்கள். இதைக் கேட்டு சந்தோஷத்தாலே கிழம் படுகிற பாட்டைப் பாரு. நாற்காலியிலே இருந்து கீழே விழுந்து விடுவது போலல்லவா தள்ளாடுகிறது' என்று குரல்கள் பல தினுசாகப் பேசின.

'அடடா, சொல்ல மறந்து விட்டேனே' என்று கதைக்காரர் மீண்டும் பக்கத்து ஆளிடம் தொடர்ந்தார்.

இருக்காதா சந்தோஷம் அந்தத் தொண்டு கிழத்துக்கு? இந்த ஊர் பூராவும் அதைத் தெரிந்து கொண்ட இந்தச் சமயம் தானே கிழத்தின் வாழ்க்கையிலேயே உச்சஸ்தாயில் நிற்கும். நீங்கள் எல்லாம் அது ஏதோ ஒரு கிழடு என்று தள்ளிப் போய் விடுவீர்கள். அவர் மனதிலே இது எப்படி அழுத்திக் கொண்டு இருந்தது தெரியுமா? தினம் காலையிலே கம்பை ஊன்றிக் கொண்டு இந்தப் பள்ளிக்கூடம் பக்கமாக இந்தக் கிழம் தள்ளாடிக் கொண்டு போகிறதை எத்தனை பேர்கள் கவனித்திருக்கிறார்களோ? அப்படிக் கவனித்தாலும் அவர்களில் எத்தனை பேர் ஏன் அந்தக் கிழம் தடியை ஊன்றிக் கொண்டு அப்படி நின்று அந்தக் கட்டடத்தையும் அரச மரங்களையும் வெறித்துப் பார்த்துவிட்டு திரும்பத் திண்ணைக்குப் போவதன் அர்த்தத்தை அறிந்திருப்பார்கள்? யார் கிட்டவும் வாயைத் திறந்து தானாக எதுவும் சொல்லாமல் நாட்களைத் தள்ளி விட்டது கிழம். தன் மாதிரி கிழம் ஏதாவது இது கிட்ட வந்து பேசி இருந்தால் தன் மனத்திலே உள்ளதைச் சொல்லி இருக்குமோ என்னமோ? மற்றவர்களிடம் சொன்னால் பைத்தியக்காரப் பட்டம் தானே மிச்சம்...

'அதோ பாருங்கள், சாமிநாத முதலியார் பழங்கதையெல்லாம் சொல்லிக் கொண்டு வரும்போது கிழவர் எப்படித் தலையை ஆட்டுகிறார் பாருங்கள்' என்றார் கதை கேட்டுக் கொண்டிருந்தவர்.

இந்தப் பழைய நினைவும், பழைய நாளும் இருக்கிறதே அதைக் கிளறிப் பார்க்கிற போது ஏற்படுகிற உணர்ச்சியின் வேகமே தனி தான். அதிலே சிறிது சபலத்தையும் சேர்த்துக் கொண்டால் கேட்க வேண்டுமா? எந்த மனுஷனுக்குத் தான் படபடப்பு இருக்காது! நமது கதையை நிறுத்தி சாமிநாத முதலியார் சொல்வதைக் கேட்போம் என்றார் கதை சொன்னவர். சாமிநாத முதலியார் சொல்லிக் கொண்டிருந்தார்.

'ஐம்பது வருஷங்களுக்கு முன்பு திடீரென ஒரு நாள் இந்த கிராமம் செந்நெல்பட்டி நமசிவாயம் பிள்ளை அவர்களை மறந்துவிட்டது. இன்று ஐம்பது வருஷத்திற்குப் பிறகு நாம் இங்கு கூடி இருப்பது அன்று அவருக்குச் செய்யப்பட்ட அநீதிக்கு மாற்றுச் செய்வதாக மட்டும் இல்லை. சாமிநாதன் மாதிரி சிறு பையன்களை மனிதர்களாக ஆக்கி விட்டதற்காக மட்டும் இல்லை. இன்று அரச மரம் தழைத்து ஓங்குவது போல் நம் ஊர் ஒரு மதிப்பாக ஆக அன்று இந்த கல்வி திண்ணையை கட்டிய பாட்டயாவைக் கும்பிடவே நாம் கூடி இருக்கிறோம்.'

சபையின் கரகோஷம், அரச மரத்தையும் ஒரு ஆட்டம் காணச் செய்த மாதிரி இருந்தது.

கதைக்காரர் பக்கத்து ஆசாமியை உஷார்ப்படுத்தி 'எங்கேயோ பார்க்கிறீர்களே. கிழவரைப் பாருங்கள். இந்த மரங்களையும் கட்டடத்தையும் மாறி மாறி வெறித்துப் பார்க்கிறதைப் பாருங்கள்.'

'அடடா, கண்களிலிருந்து கண்ணீர்... என்ன இது! பைத்தியம் மாதிரி அல்லவா மிரள மிரளப் பார்க்கிறார்!' என்றார் அவர்.

மனிதனுக்கு சந்தோஷம் துக்கம் எதுவானாலும் சரி ஒரு அளவுக்கு மேல் டோஸ் அதிகமாக ஆகிவிட்டால் அவன் நிதானம் தடுமாறித்தான் விடும். இதிலே ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அப்போது சாமிநாத முதலியார் மேலும் தொடர்ந்தார்:

'ஐம்பது வருஷ கால ஓட்டம் ஒரு தேச வாழ்விலேயே பெரிய நடப்பு. சராசரி வயது இருபத்தாறாக இருக்கும் நம் நாட்டிலே இதையும் தாண்டி வாழ்ந்து, அன்று இளம் கைகள் மண்ணைப் பிசைந்து கட்டிய திண்ணையும் தண்ணீர் விட்டு வளர்த்த அரசங் கன்றும் இன்று நீங்கள் பார்க்கும் கல்விக் கோயிலாக ஆகி இருப்பதைத் தான் பார்க்கும் பாக்கியம் பெற்ற பாட்டயாவை அவர் கட்டிய கோவிலிலேயே கவுரவித்துக் கும்பிடக் கூடி இருக்கிறோம்... இந்தக் கிராமத்தின் சார்பாக இந்த வயதில் அவருக்கு நாம் அளிக்கும் கவுரவம் இதைவிடச் சிறந்தது வேறென்ன இருக்கிறது' என்று கூறிக் கொண்டே கையிலிருந்த புஷ்ப மாலையைக் கிழவரின் கழுத்தில் அணிவித்து விட்டு அவரது பாதங்களை தொட்டுக் கும்பிட்டார்.

சபையின் பலத்த கரகோஷம் அந்த க்ஷணத்தில் அந்தக் கிழட்டு உருவத்தையே ஒரு அலட்டு அலட்டி விட்டது. அதே சமயம் இன்னும் பலர் மேடைக்கு வந்து அவரது கால்களைத் தொட்டுக் கும்பிட்டு மரியாதையை தெரிவித்துக் கொண்டனர்.

மறுபடியும் கதைக்காரர் குரல் பக்கத்து நண்பரை உஷார்ப்படுத்தியது. 'எங்கேயோ பார்க்கிறீர்களே

கிழவரைப் பாருங்கள். ஒரு நிலையில் நிலைக்க முடியாமல் தவியாகத் தவிக்கிறதை.'

'ஏதோ வெறி பிடித்த மாதிரியல்லவா கிழவர் மிரண்டு மிரண்டு பார்க்கிறார். ஏன் இப்படி? பாருங்கள், எழுந்திருக்கவல்லவா பார்க்கிறார். சாமிநாத முதலியார் கையைப் பிடிச்சு ஏதோ சொல்லி அமர்த்தினாலும் முரண்டிக் கொண்டு உதறி எழுந்திருக்கிறாரே! என்ன இது...'

அதே சமயம் உடல் முழுவதும் நடுநடுங்க திகைத்து அண்ணாந்து பார்த்த கிழவர், உதறல் எடுக்கும் விரல்களை சேர்த்து கூப்பிக் கொண்டே அந்த அரச விருக்ஷங்களையும் மாடிக் கட்டடத்தையும் விறைக்கப் பார்த்துக் கும்பிட்டு விட்டு கீழே குனிந்தார். நாற்காலியில் உட்காரப் போனார் கிழவர். சாமிநாத முதலியாரும் டெபுடி கலெக்டரும் ஆளுக்கொரு கை கொடுத்து கிழவரை சரியாக நாற்காலியில் அமர்த்தினார்கள்.

நாற்காலியில் கிழவர் தட்டித் தடவி உட்கார்ந்ததும் உடலும் உள்ளமும் சேர்ந்து அயர்ச்சி காட்டும் பாவனையில் நாற்காலி முதுகுப் பக்கமாக தலையை சாய்த்துக் கொண்டார் கிழவர். அவர் கண்கள் மூடி இருந்தன.

'அடடா என்ன ஆசை ஐயா மனுஷனுக்கு?'

'எப்போதோ தனக்கு ஒரு சம்பந்தம் இருந்ததைப் பற்றி இவ்வளவு மனதிலே வைத்துக் கொள்வதென்றால் ஆச்சரியம் தான்.'

'இருக்கிறது நியாயம் தானே. தன்னுடையது என்றால் மனுசனுக்கு ஒரு விதன் தான்.'

இப்படி கூட்டத்துக்குக் குரல் ஆளுக்கொரு அபிப்ராயம் பேசிக் கொண்டன.

"அதோ சாமிநாத முதலியார் கிழவரை கூப்பிட்டு ஏதோ பேசச் சொல்லுகிறார் போல் தெரிகிறதே" என்றார் ஒருவர்.

'ஆமாம், கிழவரை கூப்பிட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் கிழவர் கண்ணைத் திறக்கக் காணோம். அயர்ச்சி இன்னும் தீரவில்லை போலிருக்கு.'

'என்ன இது, ஆளைத் தொட்டு உலுப்பியும் அசையக் காணோமே, ஏன், என்னது!'

அதே சமயம் நாற்காலியில் சாய்ந்தபடியே கிழவர் கண்களை திறந்து கூட்டத்தை ஒருதரம் சுழற்றிப் பார்த்தார். அடுத்த விநாடி கண் மூடிக்கொண்டது. தலை நாற்காலியில் தொங்கினாற் போல் சாய்ந்துவிட்டது.

கிழவரை தொட்டுக் கொண்டிருந்த சாமிநாத முதலியார் பதறிப்போய் கிழவரைத் தாங்கினார்.

'அடடா'... 'ஐயோ!" 'பாவம்!' 'ச்சு! சொ!' என்ற குரல்கள் கூட்டத்தில் நாலா பக்கத்திலும் வெடித்த மாதிரி மேடையை நோக்கித் தெறித்தன.

'கிழவருக்கு என்ன ஆகிவிட்டது?'

'மூச்சு இருக்கா பாருங்கள்!'

'என்ன, தலை தொங்கிவிட்டதே!'

'டாக்டர்--டாக்டரைக் கூப்பிடுங்கள்!'

வைபவத்தில் கலந்து கொண்டிருந்த ஆஸ்பத்திரி டாக்டர் மேடை மீது ஏறிக் கிழவரின் கையைத் தொட்டுப்பார்த்தார்.

கிழவரின் மூச்சு நின்றுவிட்டது.

கூட்டத்தில் பேச்சு கலவரத்தது.

'ஆஹா! தொண்டு கிழத்துக்கு இவ்வளவு அஞ்ஞானம் இருந்தால்...'

'கிழமாவது குஞ்சாவது! மனித உடம்பை முழுக்க முழுக்க மூடி இருக்கிறது அஞ்ஞானம்தானே. தோலியை உறிச்சு எறிகிற மாதிரி முடிகிறதா!'

ஆசையை சுடுகாட்டு வரைக்கும் மனிதன் கொண்டு போகத்தானே ஆசைப்படுகிறான்.

'ஆசை மனதிலே இருந்தால் நெஞ்சு லேசில் வேகாது என்று சொல்வார்களே. இந்த கிழத்தின் நெஞ்சு இனி...'

'ரோஜாப்பு மாலையோடே நெஞ்சு வேகுவதற்கு இந்த எண்பதுக்கு அப்புறம் இந்தக் கிழத்துக்கு கிடச்ச கவுரவிப்பு இருக்கிறதே இது காணாத அதிசயம்தான்.'

இப்படி பல குரல்கள் பேசின. ஒரு கைத்தாங்கலைக் கூட வேண்டாம் என்று கையலைத்து மேடையில் ஏறிய அந்தக் கிழம் பல கைகள் தாங்க மேடையிலிருந்து இறக்கப்பட்டதை பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தின் வியப்புக்கு எல்லையேயில்லை. கிழவரை அப்புறப்படுத்தும்போது அடங்கினாற் போல் தோன்றிய கசமுசல் மறுபடியும் ஆரம்பமாயிற்று.

— — — — — — — — — —

"தலைவாழை"

(மூத்த தலைமுறைச் சிறுகதைகள் நூலிலிருந்து)

குற்றாலம் சாரல் திருவிழா



தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும் திருக்குற்றாலம், நெல்லை மாவட்டத்தில் தென்காசி நகருக்கு தென்மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. தென்றல் மணம் கமழ்ந்து வரும் தென்பொதிகை மலையைச் சேர்ந்த குற்றால அருவிகளின் இன்பத்தை அனைவரும் நுகர்ந்திடும் வகையில் சாரல் திருவிழா அரசின் சார்பில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு ஜூலை மாதம் சாரல் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. விழாவின் தொடக்க நாளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அதுல் ஆனந்த்,இ.ஆ.ப., வரவேற்புரையாற்றிட, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்திட, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் தலைமை வகித்திட, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ. மில்லர் அவர்கள் சாரல் திருவிழா கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார்கள்.

விழாவிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வண்ணம் கலைவாணர் அரங்கில் தினந்தோறும் கரகாட்டம், காவடியாட்டம், தப்பாட்டம், தேவராட்டம், களியாட்டம், பரதநாட்டியம், இன்னிசை நிகழ்ச்சி, பல்சுவை நிகழ்ச்சி, சமூக நாடகம் போன்றவை நடத்தப்பட்டன. வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு நீச்சல் போட்டி, படகு போட்டி; ஸ்கேட்டிங் போட்டி, வண்ணகோல போட்டி, நீண்டதூர ஓட்ட போட்டி, புதையல் தேடுதல் வேட்டை போட்டி போன்றவை நடத்தப்பட்டன. சாரல் திருவிழாவினை சுற்றுலாப் பயணிகள் கண்டு மகிழ்ந்திடும் வகையில் அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி, குழந்தைத் தொழிலாளர் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் கை வண்ணத்தில் உருவான கலைப் பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு நாளும் துறை வாரியாக அரசின் சாதனைகள், திட்டங்கள் பற்றி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு எடுத்துக் கூறியது மக்களை மிகவும் கவரும் வண்ணம் இருந்தது.

சாரல் விழா நிறைவு நாளன்று இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் பங்கேற்று போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். நாள் தோறும் விழா நிகழ்ச்சிகளை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்த்து மகிழ்ந்தனர்.

தாய்த் திருநாட்டின் எல்லாப் பிரிவு மக்களையும் குற்றாலத்தில் பார்க்கலாம். ஓடிவரும் அருவிகளைக் காண வருவோர் பலர், உள்ளத்திலுள்ள பல்வேறு

சுமைகளை இறக்கி விட்டு ஓய்வுக்காக கூடி வருவோர் பலர், இப்படி மகிழ்ச்சிக்கு ஏற்ற இடமாக இருக்கும் குற்றாலத்தில் ஆண்டுதோறும் சாரல் திருவிழாவினை அரசு சார்பில் நடத்தி திருக் குற்றாலத்தின் பெருமையைத் தரணி முழுவதும் அறியச் செய்து வருவது உள்ளூர் மக்களை மட்டுமின்றி சுற்றுலாப் பயணிகளையும் பெரிதும் மகிழ்விக்கும் வண்ணம் இருந்தது.

– உல. இரவீந்திரன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி.

தந்தை பெரியார்
பொன்மொழிகள்



- ஒருவன், தான் விரும்பும் நலன்கள் அனைத்தும் பிறருக்கும் உண்டாகச் செய்வதுதான் நாகரிகம். அதற்கேற்ற வகையில் நமது உழைப்புப் பயன்பட வேண்டும்.
- ஒருவன் தன்னுடைய சொந்தக் காரியத்தைப் பொறுத்தமட்டில்தான் மானத்தையும், கவுரவத்தையும் கவனிக்க வேண்டும். பொதுநலம், பொதுத் தொண்டு என்று வந்துவிட்டால் அவை இரண்டையும் பார்க்கக் கூடாது.
- ஒவ்வொரு பெண்ணும், தானும் எதாவது சம்பாதிக்கும் தகுதிபெறத் தக்கபடி ஒரு தொழில் கற்றிருக்க வேண்டும். குறைந்தது தன் வயிற்றுக்குப் போதுமான அளவாவது சம்பாதிக்கத் தகுந்த திறமை இருந்தால், எந்தக் கணவனும் அடிமையாய் நடத்தமாட்டான்.
- மனிதனிடம் கலபத்தில் ஒழுக்கத்தைப் புகுத்த வேண்டுமானால், மாணவப் பருவத்தில்தான் முடியும்.
- பிறருக்கு எவ்விதத் தொல்லையும் தராத வாழ்வே ஒழுக்கம். இது எல்லாவித பேத நிலையும் ஒழிந்த நிலையில்தான் வளர முடியும்.
- ஒழுக்கம் என்பது தனக்கும் அந்நியனுக்கும் துன்பம் தராமல் நடந்து கொள்ளுவதாகும்.
- எப்படிப்பட்ட கலையும், ஒழுக்கக் குறைவுக்கும் மூட நம்பிக்கைக்கும் சிறிதும் பயன்படக்கூடாததாய் இருக்க வேண்டும்.
- அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக்கொள்ளக் கூடியனவும், இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இயைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்துகளையே கொண்டு இயங்குகிறது வள்ளுவர் குறள்.
- இலக்கியம் என்பது நாகரிகத்தைப் புகட்ட வேண்டும். மக்களிடம் உயரிய குணங்களைப் புகுத்துவதாக இருக்க வேண்டும்.
- மக்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியதும் அறிவையும் திறமையையும் தைரியத்தையும் உண்டாக்கக் கூடியதும் ஆகிய சிறந்த கலைகளையெல்லாம் தமிழில் எழுதிப் பரவச் செய்வதன் மூலம், மக்களுடைய அறிவையும், தமிழ் மொழியையும் செம்மை செய்வதே உண்மையான தமிழ் உணர்ச்சியாகும்.
- மாணவர்கள் கடைபிடிக்க வேண்டிய அருங்குணங்கள் – ஒழுக்கம், நாணயம், நேர்மை, மற்றவர்களுக்கு நன்மை பயத்தல், பிறருக்கு ஊறு செய்யாமல் இருத்தல்.
- படிப்பு எதற்கு ? அறிவுக்கு, அறிவு எதற்கு ? மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்ந்து மற்ற மனிதனுக்கு உதவியாய் – தொல்லை கொடுக்காதவனாய் – நாணயமாய் வாழ்வதற்கு.
- உலக உயிர்களில் அறிவு நிரம்பப் பெற்ற உயிர் – பகுத்தறிவுள்ள உயிர் மனிதன்தான். அவன் தன் அறிவைப் பயன்படுத்தினால் மிகச் சிறந்த காரியங்களை எல்லாம் சாதிக்க முடியும்.
- எனக்கு மக்கள் நலம்தான் இலட்சியம்.
- மக்கள் உலகம் முழுவதும் ஒன்றுபட வேண்டும். மற்ற உயிர்களுக்குத் தன்னால் கெடுதி இல்லாத வாழ்வு பெற வேண்டும். மனிதனிடத்திலே பொறாமை, வஞ்சகம், துவேசம், கவலை, துக்கம் ஏற்படுவதற்கு இடமில்லாத சாந்தி வாழ்வுக்கு வகை தேட வேண்டும். இதுதான் எனது ஆசை.
- எனது சீர்திருத்தம் என்பதெல்லாம் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்து சரி என்று பட்டபடி நடவுங்கள் என்பதேயாகும்.

◆ ◆ ◆

செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்

பேரறிஞர் அண்ணா

அறிவுரைகள்

- இந்த உலகிலே நாம் காணுகின்ற பேருண்மைகளில் ஒன்று – இங்கே ஏழையும் வாழ முடியாது. பணக்காரனும் வாழ முடியாது.

- கட்டுப்பாடும், ஒழுங்கும் சட்டாயம் நமக்குத் தேவை. இவை சாதாரணமானவைதான். ஆனால் இம்மாதிரி சாதாரண விஷயங்களைக் கொண்டுதான் ஒரு சமூகத்தை எடை போட முடியும்.

- சொற்சுவையும், பொருட்சுவையும் இழைத்து கேட்போருக்குக் களிப்பூட்டுவதோடு கருத்தையும் குழைத்தூட்டும் இசை போன்ற பருவம் – சுயநலமும் சுக போகப் பித்தும் எருமை எனப் புகுந்து இருதய கமலத்தைத் துவைத்துப் பாழ் செய்யாப் பருவம் மாணவப் பருவம்.

- காலம் மாறக்கூடியது. மாறிக்கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

- இலட்சியம் வெற்றி பெறவேண்டுமானால் அந்த இலட்சியத்தின் நியாயத்தை விளக்கிவிட்டால் போதாது. அந்த இலட்சியத்திற்குப் பலத்தையும் சேர்த்தாக வேண்டும். ஏனெனில் எவ்வளவு நியாயமான இலட்சியமும் பலத்துடன் கூடி இருந்தாலொழிய வெற்றி பெற முடியாது.

- தொழிலாளி வெறும் உழைப்பாளியாக மட்டும் இருக்கும் நிலை மாறி, அவன், தொழிற்சாலைகளிலே பங்காளியாகவும் ஆக்கப்பட்டால்தான் விஞ்ஞானத்தைத் தன் கூட்டாளி என்று உறவு கொண்டாட முடியும்.

- மலர் கொண்டு மாலை தொடுத்தலில் கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் கைத்திறன் முழுவதும் காட்டி காகிதப் பூமாலை தொடுத்தால் பயன் என்ன? பேச்சுக்கு அழகு தேவைதான். ஆனால் அழகு மட்டுமே இருந்து கருத்து இல்லையானால் என்ன பயன்?

- ஒரு சிறு மின்சார விளக்கு தரும் அளவுக்கு ஒளிபெற நாம் எத்தனை அகல் விளக்குத் தேட வேண்டும் – கணக்குப் போட்டுப் பாருங்கள் – பிறகு கூறுங்கள். விஞ்ஞானம் அதிக உழைப்பு எனும் சிறையிலிருந்து நம்மை மீட்டு, விடுதலை வீரனாக்குமா, அல்லவா என்பதை!

- வாலிபர்கள் ஆசிரியர்களாக வேண்டும் – உலகத்தைக் கிராமத்தாருக்குக் காட்ட வேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும் – நாட்டு மக்களின் உடல், உள்ளம் இரண்டிலும் உள்ள நோய் தீர்க்கும் மருந்தளிக்க வேண்டும். ஆம்! வாலிபர்கட்கு வேலை ஏராளமாக இருக்கிறது.

- நமக்கென்ன என்று கூறும் சுயநலமிகளும், நம்மால் ஆகுமா என்று பேசும் தொடை நடுங்கிகளும், ஏன் வீண் வம்பு என்று சொல்லும் கோழைகளுமல்ல நாட்டுக்குத் தேவை. வீரர்கள் தேவை. உறுதிபடைத்த உள்ளங்கள் தேவை.

- கருகிவிட இருந்த அரும்பு மலர்ந்தது போல – மங்கி விட்ட கண்கள் மீண்டும் ஒளி பெறத் தொடங்கியது போல – தேய்ந்த நிலவு திடீரென முழு மதியானது போல – ஒரு நாட்டின் வரலாற்றிலே ஏற்படுகின்ற உன்னதமான சம்பவம் – சுதந்திரம்!

- மாற்றான் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கும் மணம் உண்டு – ரசிக்கத்தான் செய்வோம். அது போலத்தான் பேசுபவரின் கருத்து பயன் தருமாயின் கேட்போரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும் கேட்பவர்கள் ஏற்றுக் கொள்வது உறுதி.

- எல்லாப் புத்தகங்களையும் விட சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம்தான். உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது. □

தருமபுரி மாவட்டம்
ஒகேனக்கல் ஆடிப்பெருக்கு விழா

“வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி”

– என்பது ஆன்றோரின் வாக்கு.

அவ்வாக்கின்படி வானம் பொய்த்தாலும் தான் பொய்க்காமல் அன்னை காவிரி தன் கடமையை அல்லும் பகலும் அயராது செவ்வனே செய்து கொண்டிருக்கிறாள். வளம் நிறைந்த காலத்தில் பிறர் போற்றுவதையும் வளம் குறைந்த நிலையில் தன்னை தூற்றுவதையும் பொருட்படுத்தாமல் உழைத்துக் கொண்டிருப்பவள் அன்னை காவிரி என்பது மிகையாகாது.

பண்டைக்காலத்தில் நம் முன்னோர்கள் பெண்களை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை பேரிளம்பெண் என ஏழு பருவங்களாகப் பகுத்தனர். அவ்வேழு பருவங்களையும் தன்னகத்தே உள்ளடக்கியவள் அன்னை காவிரி. ஒவ்வொரு பருவத்திலேயும் தன் பணியினைச் சிறப்பாகச் செய்து வருகிறாள். இயற்கை எழில்மிகு குடகிலே பிறந்து பேதையாகத் தவழ்ந்து பெதும்பையாக நடந்து மங்கையாக ஓடி மடந்தையாக நாணி அரிவையாகப் பொங்கி எழுந்து தெரிவையாக விரிந்து பேரிளம்பெண்ணாகக் குறுகி அமைதியுடன் ஆழ்கடலில் சென்று ஐக்கியமாகிறாள். இத்தகு சிறப்புமிகு அன்னைக் காவிரியைப் பற்றி எழுதாத இலக்கியங்கள் இல்லை; பாடாத கவிதைகள் கிடையாது; புகழாத புராணங்கள் இல்லை. உலகில் எத்தனையோ நதிகள் இருந்தாலும் காவிரிக்குக் கிடைத்த புகழ் வேறெந்த நதிகளுக்கும் கிடைக்கவில்லை என்பது திண்ணம்.

வரலாற்றில் தனக்கென்று தனி இடத்தைப் பிடித்த அன்னை காவிரி குடகிலே பிறந்து கடலிலே கலக்கும் வரை மேடு பள்ளங்களைக் கடந்து பல்வேறு மாவட்டங்கள் வழியாகச் சென்றாலும் புன்னகைப் பொலிவோடு பொங்கி வழிவது தருமபுரி மாவட்டம் ஒகேனக்கலில்தான் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஆடியிலே பெருக்கெடுத்து ஆடிவரும் காவிரிக்கு மேலும் பெருமை சேர்ப்பது ஒகேனக்கல். அன்னை காவிரியின் கரையோரங்களில் எல்லாம் ஆடிப் பதினெட்டாம் நாளினை சிறப்பாகக் கொண்டாடினாலும் இலட்சக்கணக்கான மக்கள் புனித நீராடுவது ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியில்தான். புதுமணத் தம்பதிகள், சுற்றுலாப் பயணிகள் இந்நீர் வீழ்ச்சியில் நீராட ஆர்வத்துடன் வருகை தருகின்றனர். இந்நாளில் இவர்களையெல்லாம் மேலும் மகிழ்விக்க ஒகேனக்கல்லில் ஆண்டுதோறும் அரசின் சார்பில் ஆடிப்பெருக்கு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் பகுதியை சிறந்த சுற்றுலாத் தலமாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அர்ப்பணித்து ஆடிப்பெருக்கு விழா நடத்தவும் ஆணையிட்டதின் பேரில் இவ்விழா சிறப்பாக நடத்தப்பட்டது.

ஒகேனக்கல்லில் ஆடி பதினெட்டாம் நாள் 2.8.2004 அன்று ஆடிப்பெருக்கு விழா மாவட்ட ஆட்சித்தலைவர்

திரு.ஆஷிஷ் வச்சானி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்தோடு விழாத் தொடங்கிற்று. விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் சுற்றுலா அலுவலர் திரு. அ. இஸ்மாயில் அவர்கள் வரவேற்றார். மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் அரசின் பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சியினைத் திறந்து வைத்தார். இக்கண்காட்சியில் அரசின் பல்துறையும் இடம் பெற்றிருந்தன. அரசின் சாதனைகளோடு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் நம்நாட்டின் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றையும் விளக்கும் வகையில் அரங்குகள்

அமைக்கப்பட்டிருந்தன. இவ்வரங்குகளை மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டுப் பாராட்டினார்கள்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரண்யா பூங்காவில் காட்டாமணக்குச் செடியினை நடவு செய்யும் பணியினைத் தொடங்கி வைத்து ரூ.41.29 இலட்சம் மதிப்பில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குக் கடன் உதவிகள், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட உதவிகள், முதியோர் உதவித் தொகை, நலிவடைந்தோர் உதவித் தொகை, இலவச வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரையாற்றினார். அவர் பேசும்போது,

“மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2001இல் தமிழக ஆட்சியை நடத்த பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் குறிப்பாக, சுற்றுலாத்துறை, ஒரு முன்னுரிமை பெற்ற துறையாகச் செயல்பட ஆரம்பித்தது. தமிழகத்திலுள்ள சுற்றுலா வளங்களை உலகில் பல பகுதிகளிலும் தெரியும் வண்ணம் விளம்பரங்கள் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் உள் கட்டமைப்பு வசதிகளை அதிகரித்து அடிப்படை வசதிகளைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் முதலாண்டில் (2001–2002) ரூ.17 கோடியும், அடுத்த ஆண்டில் (2002–2003) ரூ.26.79 கோடியும், இவ்வாண்டு ரூ.30.35 கோடியும் அனுமதித்து உள்ளார்கள்.

தமிழ்நாடு, சிறப்பு மிக்க கோயில்கள், கோட்டை கொத்தளங்கள் தமிழகத்தின் சிறப்பைப் பறைசாற்றும் பாரம்பரியமிக்க கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை, எழில் கொஞ்சும் இயற்கை சூழல் மிக்க மலை வாழிடங்கள், வனவிலங்கு சரணாலயங்கள், உலகப் புகழ் பெற்ற அழகான கடற்கரை, சுற்றுலாவுக்குத் தேவையான அமைப்புகள், முகில் முட்டும் சிகரங்கள், அதில் இருந்து உருவாகி வரும் அருவிகள், கடல், தாவர உயிரினங்கள் முதலான சுற்றுலாச் சிறப்பியல்புகளை, தன்னகத்தே கொண்டுள்ளது.

ஒரு நாட்டின் மொழி, மதம், நிறம், இனம் என்ற எல்லைகளைக் கடந்து மக்களிடையே மனித நேயத்தை வளர்க்கும் ஒரு சக்தி வாய்ந்த பாலமாக சுற்றுலாத் திகழ்கிறது.

சுற்றுலாத்துறை பல்வேறு விழாக்கள் நடத்தி சுற்றுலா குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி வருகிறது. தமிழகத்தில் கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு ஆகிய இடங்களில் கோடை விழாக்களும், குற்றாலத்தில் சாரல் விழா, மாமல்லபுரத்தில் நாட்டிய விழா, சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழாவும் நடத்தி வருகிறது. ஒகேனக்கல்லில் ஆண்டுதோறும் ஆடிப்பெருக்கு விழாவும் நடத்தப்பட்டு வருகிறது.

2003–2004ஆம் ஆண்டில் சுற்றுலா மூலம் சுமார் ரூ.17 ஆயிரம் கோடி ரூபாய் அந்நியச் செலாவணியாக கிடைக்கப் பெற்றது. அந்நியச் செலாவணி ஈட்டுவதில் ஜவுளித்துறை, விலையுயர்ந்த ஆபரணங்கள் ஏற்றுமதி ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக சுற்றுலாத்துறை மூன்றாம் இடத்தில் உள்ளது.

இந்தியாவிற்குக் கடந்த ஆண்டு சுமார் 23 இலட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளார்கள். இதில் தமிழ்நாட்டிற்கு வந்தவர்களின் எண்ணிக்கை 8 இலட்சம் ஆகும்.

ஒகேனக்கல் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளுக்காகச் சுற்றுலாத்துறை ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து இருந்தது. இதில் பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் இன்னும் ஒரு மாதத்தில் செய்து முடிக்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள தீர்த்தமலை சுற்றுலாத் தலத்திற்கு சுற்றுலாத்துறை ரூ.50 இலட்சம் நிதி அனுமதி



வழங்கி உள்ளது. இத்திட்டப் பணிகள் இந்த ஆண்டிலேயே தொடங்கப்படும்.

ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தில் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளுக்காகவும், அடிப்படை வசதிகள் செய்திடவும் மற்றும் சுற்றுலா வசதிகள் செய்திடவும், ரூபாய் இரண்டு கோடி அளவில் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு சுற்றுலாத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி அணைப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்படும் வகையில் உல்லாசப் படகு வசதிகள் ஒரு சில தினங்களில் தொடங்கப்படவுள்ளது.

மனமகிழ்விற்காக, வேலைவாய்ப்பிற்காக, இந்திய ஒருமைப்பாட்டிற்காக, அந்நியச் செலாவணி ஈட்டுவதற்காக பாரம்பரிய கலைகளை வளர்க்க சுற்றுலா பயன்படுகிறது” என்று கூறினார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆஷிஷ் வச்சானி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றும் போது, “தருமபுரி மாவட்டத்தைப் பின் தங்கிய பகுதி என்று கூறுகிறார்கள். அதனை மாற்றியமைக்க ஒரு முக்கியத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. வாணியாறு, தும்பலஅள்ளி, சித்தேரி மலை ஆகிய பகுதிகளை ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாத் தலமாக மாற்றியமைக்க அரசுக்குத் திட்ட அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒகேனக்கல்லில் கண்ட இடங்களில் குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொட்டாமல் சுத்தமாக வைத்துக் கொள்வது ஒவ்வொருவரின் தலையாயக் கடமையாகும். இதற்குப் பொது மக்களும் சுற்றுலாப் பயணிகளும் மிகுந்த ஒத்துழைப்புத் தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்” என்று பேசினார்.

மேலும், இவ்விழாவில் மொரப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. பழனியப்பன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் சுற்றுலாத் துறை, கலைப் பண்பாட்டுத் துறை சார்பில் கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, மயில் நடனம் ஆகிய கிராமியக் கலை நடனங்கள், இன்னிசை நிகழ்ச்சிகள், இசைப்பாட்டு மன்றம், நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் ஆடல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இவ்விழாவினை ஒட்டி அமைக்கப்பட்ட வளம் தரும் திசையில் வளரும் தருமபுரி மாவட்டத்தின் பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியினை ஆயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் கண்டுகளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மூன்றாண்டு காலச் சாதனைகளைப் பாராட்டினார்கள்.

– மூ. நா. கிருட்டிணசாமி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.

தேனியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த மாவட்ட விளையாட்டு அரங்கம்

தேனி மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி, அரசு கலைக் கல்லூரி, மகளிர் தொழில்பயிற்சி நிலையம், சேடப்பட்டி – ஆண்டிபட்டி கூட்டுக் குடிநீர் திட்டம், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் போன்ற எண்ணற்ற சிறப்பான பணிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக பதவி ஏற்றவுடன் நடைபெற்று வருகின்றது. இத்தனை சிறப்புகள் அமைந்த தேனி மாவட்டத்திற்கு விளையாட்டு அரங்கம் வேண்டும் என்று மாணவ/மாணவியர்களிடமும், விளையாட்டு ஆர்வமுள்ளவர்களிடமும் மேலோங்கி நின்றது.

இந்த நீண்ட நாள் கனவை நனவாக்கிடும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேனி மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம் அமைக்க உத்தரவிட்டார்கள். அதனைத் தொடர்ந்து தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சுனீல் பாலீவால்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட விளையாட்டு அலுவலர் ஆகியோர் விளையாட்டு அரங்கத்திற்கான இடத்தினை தேர்வு செய்தார்கள். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறத்தில் பெருந்திட்ட வளாகத்தில் நவீன விளையாட்டு அரங்கம் அமைத்திட முடிவு செய்யப்பட்டது. இங்குள்ள 15.66 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு அரங்கமும், விளையாட்டு மைதானமும் அமைக்கப்படவுள்ளது. விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ரூ.43 இலட்சமும், 400 மீட்டர் ஓடுதளம் ரூ.4.5 இலட்சத்திலும், கால்பந்து, ஹாக்கி மைதானங்கள் அமைப்பதற்கு ரூ.4.05 இலட்சமும், வாலிபால் மைதானம் அமைக்க ரூ.69,950மும், கபடி மைதானம் ரூ.30 ஆயிரம் மதிப்பீட்டிலும், கோ–கோ மைதானம் ரூ.75 ஆயிரம் மதிப்பீட்டிலும் அமைக்கப்படவுள்ளன. உடற்பயிற்சி செய்வதற்காக நவீன கருவிகள் கொண்ட உள்விளையாட்டு அரங்கம் ரூ.13.50 இலட்சத்தில் கட்டப்படவுள்ளது. மொத்தம் ரூ.70,48,850 மதிப்பீட்டில் விளையாட்டு அரங்கம் கட்டப்படவுள்ளது.

மாநிலங்களவை உறுப்பினர் திரு.டிடிவி தினகரன் அவர்கள் ரூ.25 இலட்சத்தை இறகு பந்து உள் விளையாட்டு அரங்கத்திற்கும், ரூ.10 இலட்சத்தை மாவட்ட விளையாட்டு அரங்கத்தின் சுற்றுச் சுவருக்கும் நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மொத்தம் ரூ.35 இலட்சம் உடனடியாக ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள்.

மேலும் இந்த விளையாட்டு அரங்க வளாகத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நீச்சல் குளமும், ரூ.4.5 இலட்சம் மதிப்பீட்டில் ஸ்குவாஷ் உள் விளையாட்டு அரங்கமும் மற்றும் திறந்தவெளி டென்னிஸ் மைதானமும் அமைக்கப்பட உள்ளது. திறந்தவெளி ஜிம்னாஸ்டிக் பயிற்சி அரங்கமும் கட்டப்படவுள்ளது.

மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்கான கால்கோள் விழா மாண்புமிகு பொதுப்பணித்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட விளையாட்டு அரங்கிற்கு கால்கோள் நாட்டி மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில், "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தொகுதி அடங்கிய இம்மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அரசு திட்டங்களின் முழுப் பயன்களும் கிராமப்புறங்களில் வாழ்கின்ற அடித்தட்டு மக்களைச் சென்றடையும் வகையில் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழகத்தை விளையாட்டுத் துறையில் முதன்மை மாநிலமாகஆக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தனி கவனம் செலுத்தி வருகிறார். மாநிலத்தில் விளையாட்டு பல்கலைக்கழகம் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் ஏராளமான வளர்ச்சிப் பணிகள் நடை பெற்றாலும், இதுவரை மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்கப் படாமல் இருந்தது. விளையாட்டு அரங்கம் அமைக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் நகர பொதுமக்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்து வந்தனர். அதன் அடிப்படையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு முதலாவதாக ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் பணிகளைத் தொடங்க பூமி பூஜை நடை பெற்றுள்ளது. இந்த விளையாட்டு அரங்கம் தமிழகத்திலேயே சிறந்த விளையாட்டு அரங்கமாக அமைக்கப்பட உள்ளது. இந்த விளையாட்டு அரங்கத்திற்கு, வரும் ஆண்டில் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் வழங்கப்படும். தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டு அரங்கங்களைவிட இது மிகச் சிறந்ததாகவும், உலகத்தரம் வாய்ந்ததாகவும் அமையும். மாவட்டத்தில் தொழிற்சாலைகள் அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இம்மாவட்டத்தில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்கள் மற்றும் கச்சாப் பொருள்களை வைத்து எந்தவிதமான தொழிற்சாலைகள் அமைக்கலாம் என்பதற்கான கருத்துரு தயாரித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

தேனியில் புதிதாக பஸ் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் பஸ் நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்திற்குப் பதிலாக வனத்துறைக்கு அரசு நிலம் இரண்டு மடங்கு கூடுதலாக வழங்குவதற்கும் மாவட்ட நிருவாகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் பஸ் நிலையம் அமைக்கப்படும். தேனி மாவட்டம் அனைத்துத் துறைகளிலும் சிறந்த மாவட்டமாகத் திகழும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுனீல் பாலிவால் இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில் " தேனி மாவட்டத்தில் நிறைய வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மக்கள் கேட்பதற்கு முன்பாகவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து மாவட்டத்திற்குத் தேவையான கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறோம்.

தேனி மாவட்டத்தில் விளையாட்டை ஊக்குவிப்பதற்காக மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்க குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு விளையாட்டு அரங்கத்தை தேனி–பெரியகுளம் புறவழிச்சாலையில் மாவட்ட பெருந்திட்ட வளாகத்திற்குள் அமைக்க முடிவு செய்யப்பட்டு இன்று பூமி பூஜை நடைபெற்றுள்ளது.

மத்திய அரசின் பங்குத் தொகையாக ரூ.28 இலட்சமும், மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.14 இலட்சமும், பொதுமக்களின் பங்களிப்பாக ரூ.14 இலட்சமும் நிதி கோரப்பட்டுள்ளது. மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் ஷட்டில்காக் அரங்கம் அமைப்பதற்கு ரூ.25 இலட்சமும்,

வளாகத்தைச் சுற்றி பாதுகாப்புச் சுவர் கட்டுவதற்கு ரூ.10 இலட்சம் உட்பட மொத்தம் ரூ.35 இலட்சத்தை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாநிலங்களவை உறுப்பினர் திரு.டிடிவி தினகரன் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார். பொதுமக்களின் பங்குத் தொகை ரூ.14 இலட்சத்தில் நன்கொடை மூலமாக ரூ.5.65 இலட்சம் பெறப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள தொகையையும் நன்கொடையாளர்கள் இம்மாதத்திற்குள் வழங்குவதாக தெரிவித்துள்ளார்கள்.

இந்த விளையாட்டு அரங்கில் வேறு சில விளையாட்டு அரங்கங்களும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதில் இரண்டு திடல் கொண்ட ஷட்டில்காக் வளாகம், இரண்டு மேஜை கொண்ட டேபிள் டென்னிஸ் வளாகம், புல் மெத்தை டென்னிஸ் அரங்கம், ரூ.40 இலட்சத்தில் நீச்சல் குளம் ஆகியவை சர்வதேச தரத்திற்கு நிகராக அமைக்கப்படவுள்ளன. நீச்சல் குளத்திற்கு வைகை ஆற்றிலிருந்து கிணறு அமைக்கப்பட்டு அதிலிருந்து பைப் லைன் மூலமாக தண்ணீர் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. இக்கூடுதல் பணிகளை நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் தமிழக அரசு மானியம் பெற்று ஸ்குவாஷ் அரங்கம் அமைக்கப்படவுள்ளது. அரங்கத்தின் அனைத்துப் பணிகளும் உலகத்தரம் நிர்ணயித்ததின்படி மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணிகள் அனைத்தும் முடிவுறும் பொழுது மாணவ/மாணவியர்கள், பொதுமக்கள், விளையாட்டு ஆர்வலர்கள் ஆகியோர் பயனடைவார்கள் என்பது திண்ணம். மாவட்ட நிருவாகம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் அனைத்து தரப்பினரும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர்கள் திரு.டிடிவி தினகரன், திரு.தங்க தமிழ் செல்வன், திரு.எஸ்.பி.எம்.சையதுகான், போடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.இராமராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் எஸ்.செல்லமுத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அ.அமல்ராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் திருமதி ஜி.முத்துமீனாள், மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.சின்னபொன்ராஜ் மற்றும் நன்கொடையாளர்களும், பொதுமக்களும் திரளாக கலந்துகொண்டனர். தேனி மாவட்டத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ள இந்த விளையாட்டு அரங்கம் மேலும் ஒரு சிறப்பைச் சேர்த்து முன்னோடியாகத் திகழும்.

– ச. செல்வராஜ்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி.



கல் நாதஸ்வரம்

நாதஸ்வரம் ஒரு மங்கல வாத்தியம். தென்னந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் கோயில் திருவிழாவாக இருந்தாலும் சரி திருமணம் முதலான மங்கலமான நிகழ்ச்சியானாலும் சரி அல்லது பொங்கல் தீபாவளி முதலான பண்டிகையாக இருந்தாலும் சரி, நாதஸ்வர நிகழ்ச்சி இல்லாமல் நடைபெறாது. இது ஒரு காற்றிசை துளைக்கருவி. இதைக் கல்லிலேயே செய்து பெருமை படைத்தது தமிழ்நாடு.

திருநெல்வேலி சந்திப்பிலிருந்து திருச்செந்தூர் செல்லும் நெடுஞ்சாலையில் 30 ஆவது கிலோ மீட்டரில் தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் அமைந்த திருப்பதியில், ஆதிநாதசுவாமி கோயிலில் கல்லினால் செய்யப்பட்ட இரு நாதஸ்வரங்கள் உள்ளன. இதில் ஒன்று சற்று உடைந்துவிட்டது. மற்றொன்று நல்ல நிலையில் உள்ளது.

இந்த நாதஸ்வரம் ஊர் பெயர் தெரியாத ஒரு கற்சிற்பியின் அபூர்வமான கைவண்ணம். அடி அகன்று மேலே குறுகி இருக்கும்படி ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. பின்னர் இதிலே துளையிட்டு நாதஸ்வரமாக உருவாக்கப்பட்டது. வாய் வைத்து ஊதுமிடத்தில் ஒரு அங்குல குறுக்களவும் அடுத்த முனையில் மூன்று அங்குல குறுக்களவும் கொண்ட நீள் துளை இரண்டு அடி நீளமுள்ள இந்த நாதஸ்வரத்தின் உட்புறமாகச் செல்லுகிறது.

இதன் மேல்புறத்தில் விரல் வைத்து ஸ்வர ஒழுங்கு செய்வதற்கான ஏழு துளைகள் ஒரு குறிப்பிட்ட இடைவெளி விட்டு அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்றொரு புறத்தில் நான்கு துளைகள் தொனி, அளவைக் கட்டுப்படுத்த வைக்கப்பட்டவைதான் இந்த துளைகள். மிக வழுவழுப்பாகவும், மென்மையாகவும் செய்யப்பட்டிருக்கின்றன. வாய் வைத்து ஊதி, பக்கவாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் விரல் துளைகளைச் சரியாக கையாளுவதன் மூலம் எந்தப் பாடலையும் இதிலே இசைக்கமுடியும்.

இன்தப்போன்று கல் நாதஸ்வரம் ஒன்று கும்பகோணத்திலுள்ள கும்பேஸ்வரர் கோயிலிலும் உள்ளது. நம் முன்னோர்கள் செய்த விந்தைகளில் இதுவும் ஒன்று. ✧

இதய நோய்கள்

□ பேராசிரியர் **ச. இளங்கோவன்,** எம்.டி.டி.எம்., (இதயம்)
□ பேராசிரியர் **வா. செகந்நாதன்,** எம்.டி.டி.எம்., (இதயம்)
'இதயஇயல் துறை'
சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும்
அரசு பொது மருத்துவமனை, சென்னை.

.லக இதய கூட்டமைப்பு (Vorld Heart Federation)

உலக இதய நாளினை வருடந்தோறும் காண்டாடி வரும் உலக இதய கூட்டமைப்பு Vorld Heart Federation) ஒரு அரசு சாராத புமைப்பாகும். இது ஜெனிவா நகரைத் தலைமை புலுவலகமாகக் கொண்டு இயங்கி வருகின்றது.)வ்வமைப்பில் ஐந்து கண்டங்களைச் சார்ந்த 97 ாடுகளின் 166 அமைப்புகள் அரிய பல சேவைகளைச் |சய்து வருகின்றன.



உலக இதய நாள்

உலக இதய நாள் என்பது ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் திங்கள் கடைசி ஞாயிறன்று இதயம் பற்றிய நோய்களின் அறிவியல் குறித்த விழிப்புணர்வை உலக மக்களுக்கு உண்டாக்கிட ஏற்படுத்தப்பட்ட நாளாகும். இந்நாளை உலக இதய கூட்டமைப்பினர் (World Heart Federation) ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடு கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளை (Theme) மையமாகக் கொண்டு அது சார்ந்த நோய்களைத் தடுத்திடும் (Prevention) விதமாய் இது தன் பணியினைச் செய்து வருகின்றது.

இவ்வாண்டின் உலக இதய நாளின் கருப்பொருள் (Theme) "குழந்தைகள், இளம் சிறார்கள் – இதய நோய்" பற்றிய விழிப்புணர்வு என்பதாகும்.

குழந்தைகள், இளம் சிறார்களுக்கு ஏற்படும் பிறவி இதய நோய்கள், கீல்வாத காய்ச்சலைத் தொடர்ந்து வரும் இதயத்து தடுப்பி நோய்கள் பற்றியும், உடல் பருமன், மற்றும் இதய அழற்சி நோய் பற்றியும், உடற்பயிற்சி செய்யாமலிருந்தால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் அறிந்திடுவோம்.

பிறவி இதய நோய்கள்

பிறவி இதய நோய்கள் என்பது குழந்தை, தாயின் கருப்பையில் உண்டாகி வளரும் காலத்து நிறப்புரிக் குறைபாடுகள் (chromosomal defects), மரபுவழிக் காரணிகள் (genetic factors), சுற்றுப்புறச் சூழல் காரணிகள் (environmental factors) மற்றும்



மேற்கூறிய காரணிகள் ஒன்றோடொன்று கலந்து வருவதால், அவற்றைப் பல்வகைக் காரணிகள் (multifactorial) என நால்வகை காரணங்களால் வருவதாகும்.

பிறவி இதய நோய் வகைகள்

இத்தகு இதயக் குறைபாடுகளை நீலம் ஏறாப் பிறவிக்குறை இதய நோய் (acyanotic congenital heart disease), நீலம் ஏறிய பிறவிக்குறை நோய் (Cyanotic congenital heart disease) என்றும் இரு வகையாகப் பிரிப்பர்.

நீலம் ஏறாப் பிரிவு

இப்பிரிவில் உள்ள குறைபாடுகளினால் அசுத்த இரத்தமும், சுத்த இரத்தமும் கலக்காத உள்ள நிலையில் அமைந்திட்ட குறைபாடுகளாகும். பிறவி குறைப் பெருந்தமனி தடக்கிதழ்க்குறுக்கம் (congenital aortic valve disease), பிறவிக் குறை நுரையீரல் தமனி தடுப்பிநோய் (congenital pulmonic valve disease), மேலறைத் தடுப்புச் சுவர் குறை / ஓட்டை (atrial septal defect), கீழறைத் தடுப்புச் சுவர் குறை / ஓட்டை (ventricular septal defect), பெருந்தமனி / நுரையீரல் தமனி இணைப்புக் குழல் திறப்பு (patent ductus arteriosus) போன்றவை இப்பிரிவில் அடங்கும்.

நீலம் ஏறும் பிரிவு

இதில் இருவகை இரத்தமும் கலந்து விடுவதால், இக்குறைபாடுடைய குழந்தைகள் நீல வண்ணத்தில் இருப்பர். இது பெரும்பாலும் உதடு, நாக்கு போன்ற பாகங்களில் நன்கு காணப்படும். ஃபேலோ நான்மை (tetralogy of fallot) மூவிதழ்க் குறை (tricuspid atresia) போன்றவை இதில் அடங்கும்.

கீல்வாதக் காய்ச்சல் மற்றும் அதன் சார்பான இதய நோய்கள்

கீல்வாதக் காய்ச்சல் என்ற நோயானது தொண்டை மற்றும் நாவடிச் சதை எனச் சொல்லப்படுகின்ற நிணநீர் முடிச்சினை குருப் "ஏ" பீட்டாஈமாலிடிகஸ் என்னும் நுண்கிருமிகள் தாக்குவதால் உண்டாவதாகும். இந்த நுண்கிருமி ஸ்ரெப்டோகாக்கஸ் என்னும் நுண்கிருமி வகையின் உட்பிரிவில் ஒன்றாகும்.

இந்நோயானது வளரும் நாடுகளான இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் அதிகமாக உள்ளது. உலக நல்வாழ்வுக் கழகத்தினரின் (World Health Organisation) 1997ஆம் ஆண்டின் ஆய்வு, உலக மக்களில் ஏறத்தாழ 120 இலட்சம் பேர் கீல்வாதக் காய்ச்சல் மற்றும் கீல்வாத இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடுகின்றது.

மேலும், ஆண்டொன்றுக்கு சுமார் 20 இலட்சம் பேர் இந்நோயின் பாதிப்பால் சிகிச்சைக்காக மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். அடுத்ததாக இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 10 இலட்சம் பேர் இந்நோய் வந்த ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்குள் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர். இதுமட்டுமின்றி இந்நோயால் ஆண்டு ஒன்றிற்குச் சற்றேறக்குறைய 5 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். பல்லாயிரக் கணக்கானோர் முடமாக்கப்படுகின்றனர் (disabled) என்பதையும் அறிதல் வேண்டும். இந்திய மருத்துவ

ஆராய்ச்சி மன்றம் (Indian council of Medical Research) நடத்திய ஆய்வின்படி இந்தியாவில் ஆயிரத்தில் ஐந்து பேருக்கு, குறிப்பாக ஆறு வயது முதல் பதினாறு வயது வரை உள்ள பள்ளிச் சிறார்களுக்குப் பெருமளவில் வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

கீல்வாதக் காய்ச்சல் வந்த பின்னர், அதனைச் சரியாக நோய் வந்த தொடக்க காலத்திலே முதல் நிலை தடுப்பினை (Primary prevention) மேற்கொள்ளாத நிலையில், அதன் தாக்கம் இதயத்தில் உள்ள மூன்று அடுக்குகளையும் அதாவது இதய மேலுறை, இதய உள்ளுறை, இதய தசை உறை ஆகிய மூன்றையும் தாக்கும். இதய தடுக்கிதழ்களான ஈரிதழ் தடுப்பி, தமனித் தடுக்கிதழ், மூவிதழ் தடுப்பி, நுரையீரல் தடுக்கிதழ் ஆகியவற்றை பாதிக்கும். இதய தடுக்கிதழ்களில் குறுக்கமும், பின்னொழுக்கும் ஏற்பட்டு நாளடைவில் இதயம் சரியாகச் செயல்படாமல் இதயத் தளர்ச்சி வந்து உயிரிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இதய அழற்சி நோய்

இது பெரும்பாலும் வைரஸ், பாக்டீரியா போன்ற நுண்கிருமியால் வருவதாகும். எனவே இளம் வயதினருக்குத் தொடர்ந்து காய்ச்சல் இருக்குமிடத்து (மருந்துகள் பல நாட்கள் கொடுத்தும்) இதய அழற்சி உள்ளதா என்பதைக் கண்டறிதல் வேண்டும். இதனை குருதி ஆய்வுகள் மற்றும் செவிவழியுணரா இதய எதிரொலி ஆய்வு (echocardiography) மூலமாகக் கண்டறியலாம்.



கீல் வாதநோயினால் ஈழிதழ் தடுப்பி குறுக்கம்

உடல் பருமன்

ஒருவரின் உடல் எடை குறிப்பிட்ட அளவிற்கு மேல் அதிகமாயிருப்பின், அதிக எடையுள்ளவர் என்றும், மிக அதிகமாக எடையிருப்பின் உடல் பருமன் (obesity) உள்ளவர் என்றும் கூறுவர்.

அண்மைக் காலத்தில் வந்துள்ள ஒரு ஆய்வின்படி உலகின் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 22 மில்லியன் குழந்தைகள் மிகு உயர் எடையும், பருத்த உடல்பருமன் உடையவராகவும் கண்டறியப்பட்டுள்ளது.

ஒருவரின் உடல் எடை எவ்வகையினைச் சாரும் என்பதை அறிய உடல்நிறை குறியீட்டெண் பயன்படுகிறது. இதனை கீழ்க்கண்ட வாய்பாட்டின் மூலம் கண்டறியலாம்.

உடல்நிறை குறி எண் = உடலின் எடை (கி.கி) / உடலின் உயரம் x உயரம் (மீட்டரில்)

உடலின் எடை வகைகள்	உடல்நிறைக் குறியெண்
குறை எடை	< 18.5
இயல்பு நிலை எடை	18.5 - 24.9
மிகு உயர் எடை	25 - 29.9
பருத்த உடல் நிலை	> 30

உடல்பருமன் உடையோருக்குக் கொழுப்புத் திசுக்கள் மிகுந்து காணப்படுகிறது. இதயமானது தன் பணியைச் செய்திட இதய தசைகள் மிகுந்தும் அல்லது அவை பெருக்கமுற்றும் இருந்தால்தான் இதயக் குருதியின் வெளிசெல் அளவு (cardiac output), உடலின் தேவைக்கு ஏற்றவாறு அதிகரித்திட முடியும். இவ்வித இதய பெருக்கத்தால் நாளடைவில் இதயம் தளர்ந்து இதய தளர்ச்சி நோயாக உருப்பெற வாய்ப்புள்ளது.

உடற் பயிற்சி



குழந்தைகள் மற்றும் சிறார்கள் சரியான உடற்பயிற்சி செய்யாமல் இருக்கும் பழக்கம் அண்மை காலங்களில் பெருகிவருவதைக் காணலாம். இதனால் அவர்கட்கு உடல் பருமனும், இரத்த அழுத்தம் மற்றும் மாரடைப்பு நோய் முதலிய நோய்கள் இளமைக் காலத்தில் வர அதிக வாய்ப்பு உள்ளது.

இறுதியாக,

"இதயம்
உடலின் உறுப்புகளுக்கு
உணவினை வழங்கிடும்
அட்சய பாத்திரம்"

என்பதை அறிந்து, அதனை நன்றாக பேணிக்காப்பதன் மூலம் நல வாழ்வு வாழ்ந்திடலாம். ◆

இதயத்தைக் காப்போம்

உலகத்து மாந்தர்தம்
இதயத்தை ஒருங்கிணைத்து
உரியநல் விழிப்புணர்வை
வெளிப்படுத்த வேண்டுமென

உலகத்து இதயக்
கூட்டமைப்பர் கூறிட்டார்
செப்டம்பர் திங்கள்தனின்
இறுதி ஞாயிறை உலக
இதய நாள் என்றே.

குழந்தைகள் – சிறார்கள்
அடைந்திடும் இதயத்து
நோய்பற்றி உலகோர்க்கு
விழிப்புணர்வு ஊட்டுதலே
இவ்வருட இதயநாள்
கருப்பொருளாம்.

இதுகுறித்த விழிப்புணர்வை
இசைந்து நாம் செயல்பட்டால்
இதயத்து நோய்கள்பல
இருக்கும் இடம் தெரியாமல்
உருண்டோடிப் போய்விடும்
இது உறுதி நம்பிடுவீர்
இதற்காக முயன்றிடுவீர்

பேராசிரியர் மருத்துவர் **ச. இளங்கோவன்**

விருதுநகர் மாவட்டத்தில்
அனைவருக்கும் கல்வி இயக்கம்

எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு

கல்விக்கண் திறந்த காமராசரை ஈன்றெடுத்த பெருமைக்குரியது விருதுநகர். ஒளி தந்து வழிகாட்டும் விழியாகிய அறிவுக் கண்களை அனைவரும் பெறவேண்டியது அவசியமாகும். நல்லறச் செயல்களாய்ப் பல்லறங்கள் பாரினில் இருந்தாலும் "புண்ணியம் கோடி ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்'' என்பதனை உணர்ந்து, தெளிந்து, தெரிந்து, தேர்ந்து, கல்வியை அனைவரும் பெறுவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அரசால் நடத்தப்படுவதே, அனைவருக்கும் கல்வி இயக்கம் ஆகும். இது விருதுநகர் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுகிறது என்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

இளமையில் கல்வி சிலை மேல் எழுத்து என்ற அடிப்படையில் 5 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைச் செல்வங்கள் அனைவருக்கும் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கும் அற்புதத் திட்டமே அனைவருக்கும் கல்வித் திட்டமாகும்.

கல்வியே அழியாச் செல்வம் என்பதனை உணர்ந்து கிராமக் கல்விக் குழுவின் மூலம் மக்களே முன் நின்று ஈடுபாட்டுடன் நடத்தும் ஓர் உன்னத இயக்கமாக அமைவதால் இது "அனைவருக்கும் கல்வி இயக்கம்'' என்று பெயர் பெற்று அழைக்கப்படுகிறது.

இத்தகைய சீரிய திட்டம் விருதுநகர் மாவட்டத்தில் 2001ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் கல்வி பயின்றிட பள்ளியில் சேர்த்தல், தொடர்ந்து பள்ளியில் பயிலச் செய்தல், இடை நிறுத்தல் இல்லாது அனைவரையும் தக்க வைத்தல், கல்வித்தரத்தை உயர்த்தி, தரமான கல்வியை வழங்குதல், அவர் தம் அடைவுநிலை உயரச் செய்தல், பள்ளிகளுக்கு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவைகளே இத்திட்டத்தின் செயல்பாடுகளாகும்.

விழிப்புணர்வுப் பேரணிகள் மற்றும் கூட்டங்கள்

2003 ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மக்களிடையே கல்வியின் அவசியத்தை உணர்த்தும் வகையில் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊர்களிலும் விழிப்புணர்வுப் பேரணிகள் மற்றும் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் முதல் வகுப்பில் 38,336 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் 18,507 பெண் குழந்தைகளும் அடங்குவர்.

புதிய பள்ளிகள்



விருதுநகர் மாவட்டத்தில் பள்ளிகள் இல்லாத கிராமங்கள் ஏதும் இல்லை என்று கூறுகின்ற அளவில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலம் 2001–2002ஆம் ஆண்டில் 3 தொடக்கப் பள்ளிகளும், 2002–2003ஆம் ஆண்டில் 3 தொடக்கப் பள்ளிகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மேலும் 2001–2002ஆம் ஆண்டு ஒரு தொடக்கப் பள்ளியும், 2002–2003ஆம் ஆண்டில் 4 தொடக்கப் பள்ளிகளும் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு, கழிப்பறை வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இவற்றுள் இராஜபாளையம் வட்டாரத்தில் தென்றல் நகர், அம்பேத்கர் நகர் ஆகிய தொடக்கப் பள்ளிகள், ஆதிதிராவிடர் குடியிருப்பில் உள்ள பள்ளிகள் ஆகியவையாகும்.

கற்றல் கற்பித்தல் பொருட்கள்

கற்பித்தலின் போது ஆசிரியர்கள் சில உபகரணங்களையும், வரைபடங்களையும், வண்ணப் படங்களையும், மாதிரி உருவங்களையும் வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய வகையில் கற்றல் கற்பித்தல் பொருட்கள் வாங்க 2002–2003ஆம் ஆண்டில் ஒரு ஆசிரியருக்கு தலா ரூ.500 வீதம் 6,000 ஆசிரியர்களுக்கு ரூபாய் 30 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2003–2004ஆம் ஆண்டில் 5,708 ஆசிரியர்களுக்கு ரூபாய் 28 இலட்சத்து 54 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் ஆதிதிராவிடர் நலப்பள்ளியில் பணிபுரியும் 71 ஆசிரியர்களுக்கு கற்றல் கற்பித்தல் பொருட்கள் மானியமாக ரூபாய் 35,500 தரப்பட்டுள்ளது.

கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்

புதிதாகத் தொடங்கப்பட்ட 6 தொடக்கப் பள்ளிகளுக்கு தலா ரூபாய் 10 ஆயிரம் வீதம் 60 ஆயிரமும், புதிதாக தரம் உயர்த்தப்பட்ட 5 நடுநிலைப் பள்ளிகளுக்கு தலா ரூபாய் 50 ஆயிரம் வீதம் 2 இலட்சத்து 50 ஆயிரமும், கற்றல் கற்பித்தல் உபகரணங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

பள்ளிகளுக்கான மானியம்

பள்ளிகளுக்கான தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு 2002–2003ஆம் ஆண்டில் ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூபாய் 2 ஆயிரம் வீதம் 874 பள்ளிகளுக்கு ரூபாய் 17 இலட்சத்து 48 ஆயிரமும், 2003–2004ஆம் ஆண்டில் 867 பள்ளிகளுக்கு ரூபாய் 17 இலட்சத்து 34 ஆயிரமும் பள்ளி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிட நலப் பள்ளிகள் 19 பள்ளிக்கு தலா ரூபாய் 2,000 வீதம் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு ரூபாய் 38,000 பள்ளி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி மராமத்து மானியம்

பழுதடைந்த பள்ளிக் கட்டடங்களைச் சீரமைக்கும் வகையில் பள்ளி மராமத்து மானியம் 2002–2003ஆம் ஆண்டில் ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூபாய் 5,000 வீதம் 862 பள்ளிகளுக்கு ரூபாய் 43 இலட்சத்து 10 ஆயிரமும், 2003–2004ஆம் ஆண்டில் 827 பள்ளிகளுக்கு ரூபாய் 41 இலட்சத்து 35 ஆயிரமும், பள்ளி மராமத்து மானியமாக வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்புக்காக ரூபாய் 5,000 வீதம் 19 ஆதிதிராவிடர் பள்ளிக்கு ரூபாய் 95,000 வழங்கப்பட்டுள்ளது.

கட்டடப் பணிகள்

2001–2002ஆம் மற்றும் 2002–2003ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டின்படி 4 வட்டார வள மைய கட்டடப் பணிகளும், 30 இரண்டு வகுப்பறைக் கட்டடப் பணிகளும், 9 மூன்று வகுப்பறைக் கட்டடப் பணிகளும், 11 பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மைய கட்டடப் பணிகளும், 141 பள்ளிகளுக்கான குடிநீர் வசதி மற்றும் 162 கழிப்பறை வசதிப் பணிகளும், ரூபாய் 2 கோடியே 30 இலட்சத்து 5 ஆயிரம் செலவில் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. 2003–2004ஆம் கல்வியாண்டில் 4 வட்டார வள மைய கட்டடங்கள் தலா ரூபாய் 6 இலட்சம் வீதம் 24 இலட்சத்திற்கும் 6 தொகுப்பு கருத்தாய்வு மையக் கட்டடங்கள் தலா ரூபாய் 2 இலட்சம் வீதம் ரூபாய் 12 இலட்சத்திற்கும், 18 மூன்று வகுப்பறைக் கட்டடங்கள் தலா ரூபாய் 4.5 இலட்சம் வீதம் ரூபாய் 81 இலட்சத்திற்கும், 31 இரண்டு வகுப்பறைக் கட்டடங்கள் தலா ரூபாய் 3 இலட்சம் வீதம் ரூபாய் 93 இலட்சத்திற்கும், 150 குடிநீர் வசதிகள் தலா ரூ.15,000 வீதம் ரூ.22.5 இலட்சத்திற்கும் 150 கழிப்பறை வசதிகள் தலா ரூபாய் 20,000 வீதம் 30 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் தலா ரூபாய் 2 கோடியே 62 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான புதிய கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோட்டையூர் ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்கு 2 வகுப்பறைக் கட்டடம் ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.



சிறப்பு பயிற்சி வகுப்புகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பு மாணவ, மாணவிகள் மற்றும் அனைத்து வகுப்பைச் சேர்ந்த பெண் குழந்தைகள் மற்றும் இயலாக் குழந்தைகளின் கல்வித்தரத்தை உயர்த்தும் வகையில் பள்ளி வேலை நேரம் நிறைவடைந்த பின்னர் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு அதற்கான ஊதியத் தொகையாக ரூபாய் 8 இலட்சத்து 97 ஆயிரத்து 427 செலவிடப்பட்டுள்ளது.

பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்கள்

133 பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் நான்காம் சனிக்கிழமைகளில் இம்மையங்களில் கருத்தாய்வு கூட்டம் நடைபெறுகிறது. இக்கருத்தாய்வு மையங்களில் பாடத்தின் கடினப் பகுதிகளில் மற்றும் ஐயங்கள் தீர்வு காணப்படுகிறது. கற்றல் கற்பித்தல் கருவிகள் தயாரிப்பது பற்றி பயிற்சி வழங்கப்படுகிறது. இதனால் ஆசிரியர்களின் கற்பிக்கும் திறன் மேம்பாடு அடைந்துள்ளது. பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்களுக்கு மேஜை, நாற்காலிகள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு ஒவ்வொரு கருத்தாய்வு மையத்திற்கும் தலா 45 நாற்காலிகள் வீதம் 133 மையங்களுக்கு ரூபாய் 12 இலட்சத்து 86 ஆயிரத்து 850 வழங்கப்பட்டுள்ளது.

இயலாக் குழந்தைகளுக்கான மருத்துவ முகாம்

இயலாக் குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் பொருட்டு 11 வட்டார வள மையங்களிலும் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பெற்று இயலாக் குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு சமூகநலத்துறையின் மூலம் கருவிகள் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இயலாக் குழந்தைகளுக்கு போதிப்பது எவ்வாறு என்பது பற்றிய பயிற்சி அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் 1,690 இயலாக் குழந்தைகள் கண்டறியப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்க ரூபாய் 1,63,718 செலவிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு தர மேம்பாட்டு பயிற்சி

ஆசிரியர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் அனைத்து வட்டார வள மையங்களிலும் தரமேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் 900 ஆசிரியர்களுக்கு 6ஆம் வகுப்பு புதிய பாடத் திட்டத்திற்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தலைமை ஆசிரியர்களுக்கும் தனிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் அவசியம் பற்றி கிராமக் கல்விக் குழு உறுப்பினர்களுக்கு மூன்று நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மாற்றுப் பள்ளிகள்

இதுவரை பள்ளியில் சேராத மற்றும் இடைநின்ற மாணவர்களை பள்ளியில் சேர்க்கும் பொருட்டு 124 இணைப்பு மையங்கள் தொடங்கப்பட்டு 2,460 இடைநின்ற மற்றும் குழந்தைத் தொழிலாளர்களும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கணினிப் பயிற்சி

2003–2004இல் வட்டார வள மைய மேற்பார்வையாளர் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர் ஆகியோருக்கு கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்டத்தில் 98 பள்ளிகளில் பயிலும் 4,127 ஆறாம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு கணினிக் கல்வி அளிக்கப்பட்டது. இதில் 806 ஆதிதிராவிட மாணவ, மாணவிகள் அடங்குவர்.

விருதுநகர் மாவட்டத்தில் அனைவருக்கும் கல்வி இயக்கம் பெருமைக்குரிய இயக்கமாக செயல்படுகிறது என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

– பொ.முத்தையா,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
விருதுநகர்.



ஏத்தென்ஸ்
ஊனமுற்றோர் ஒலிம்பிக்கில் பங்கேற்கும்
தமிழக தடகள வீரருக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
ரூ.1 இலட்சம் நிதி உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 7.9.2004 அன்று தலைமைச் செயலகத்தில், இந்த ஆண்டு ஏத்தென்ஸில் நடைபெறும் ஊனமுற்றோர் ஒலிம்பிக் போட்டிகளான, '2004 பாராலிம்பிக் கேம்ஸ்' (The Paralympic Games-2004) போட்டிகளில் பங்கேற்க உள்ள இந்திய அணியில் இடம் பெற்றிருக்கும் தமிழக தடகள வீரர் எஸ்.ராஜரெத்தினம் இப்போட்டிகளில் கலந்து கொண்டு திரும்பும் வரையிலான அனைத்து செலவினங்களையும் தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில் ரூபாய் 1 இலட்சத்திற்கான காசோலையை அவரிடம் நேரில் வழங்கினார்கள்.

நான்காண்டுகளுக்கு ஒரு முறை உலக அளவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளைத் தொடர்ந்து, அப்போட்டிகள் நடைபெறும் அதே இடத்தில் ஊனமுற்றோர்க்கான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. உடல் ஊனமுற்றோர்க்கு என நடத்தப்படும் இந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி 'பாராலிம்பிக் கேம்ஸ்' (The Paralympic Games) என்று அழைக்கப்படும். இந்த வகையில், இந்த ஆண்டு, அண்மையில் முடிவுற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளைத் தொடர்ந்து ஏத்தென்ஸ் நகரில் நடைபெற உள்ள ஊனமுற்றோர்க்கான ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியில் எஸ்.ராஜரெத்தினம் என்னும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தடகள வீரர் இடம் பெற்றுள்ளார். 2002–ஆம் ஆண்டு நடைபெற்ற பூசான் பஸிபிக் போட்டிகள், தேசிய போட்டிகள் மற்றும் பெங்களூரில் நடந்த தேர்வுப் போட்டிகள் ஆகியவற்றில் ராஜரெத்தினம் பங்கேற்று வெளிப்படுத்திய திறமையின் அடிப்படையில் இவர் இந்திய அணியில் பங்கு பெற தேர்வு செய்யப்பட்டுள்ளார். 'பாராலிம்பிக் கேம்ஸ்' போட்டிகளில் நீளம் தாண்டுதல், மும்முறை தாண்டுதல் ஆகிய விளையாட்டுகளில் இவர் பங்கேற்க உள்ளார்.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகே உள்ள காளாப்பூர் கிராமத்தில், எளிமையான ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து உடல் ஊனமுற்ற நிலையிலும், ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வகையில் திறமை படைத்துள்ள எஸ். ராஜரெத்தினம், இப்போட்டிகளில் பங்கேற்றுத் திரும்புவதற்கு ஆகும் செலவினங்களை ஏற்று தனக்கு உதவிட வேண்டும் என்று வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனுவினை கொடுத்திருந்தார். இவரது கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், எஸ்.ராஜரெத்தினம் ஏத்தென்ஸ் '2004 பாராலிம்பிக் கேம்ஸ்' போட்டிகளில் கலந்து கொண்டு திரும்பும் வரையில் ஆகும் அனைத்து செலவினங்களையும் மேற்கொள்வதற்கு ஏதுவாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கிட ஆணையிட்டார்கள்.

இதன்படி, தமிழக தடகள வீரர் எஸ். ராஜரெத்தினம் ஏத்தென்ஸ் 'பாராலிம்பிக் கேம்ஸ்' போட்டிகளில் பங்கேற்க மேற்கொள்ளும் பயணச் செலவு, ஒலிம்பிக் கிராமத்தில் தங்கும் செலவு மற்றும் இதரச் செலவினங்கள் ஆகியவற்றை மேற்கொள்ளும் வகையில் ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 7.9.2004 அன்று நேரில் வழங்கினார்கள். அப்போது, எஸ்.ராஜரெத்தினம் '2004 பாராலிம்பிக் கேம்ஸ்' போட்டிகளில் வெற்றி பெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று தனது இதயப் பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தனது பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு தக்க சமயத்தில் நிதி உதவி அளித்து ஏத்தென்ஸ் நகரில் நடைபெறவுள்ள 'பாராலிம்பிக் கேம்ஸ்' போட்டிகளில் பங்கேற்க வகை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தனது நன்றியை எஸ். ராஜரெத்தினம் தெரிவித்துக் கொண்டார். ⊏

கரூர் மாவட்டத்தில் மகளிர் சுகாதார வளாகங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்காக பல சிறப்பான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார். கிராமங்களில் வாழும் ஏழை எளிய குடும்பத்தினர் அவர்களுக்கென்று தனியாக கழிவறை அமைத்துக் கொள்வது கிடையாது. இதனால் கிராமங்களில் பெண்கள் அவதியுறும் நிலையை அறிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மகளிர் சுகாதார வளாகங்கள் அமைத்துக் கொடுப்பதற்கான சிறப்பான திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறார். கிராமங்களில் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்தவர்கள் நோயின்றி வாழவேண்டும், சுகாதாரத்துடன் வாழவேண்டும் என்பது தான் இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் உள்ள கிராமங்கள் சுகாதார மேம்பாடு அடைகின்றன. இத்திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் 214 பெண்கள் சுகாதார வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட சுகாதார வளாகங்கள் ஹட்கோ நிதியுதவி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மத்திய அரசு நிதி மூலம் கட்டப்பட்டுள்ளன. கரூர் மாவட்டத்தில் 158 ஊராட்சிகளும் 1,000–த்திற்கும் மேற்பட்ட குக்கிராமங்களும் உள்ளன.

கரூர் மாவட்டத்தில் 2001–2002 ஆம் நிதியாண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஹட்கோ திட்டங்களில் 82 பெண்கள் மற்றும்

குழந்தைகளுக்கான சுகாதார வளாகங்களும், 2002–2003ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் முழு சுகாதார இயக்கத்தில் 78 சுகாதார வளாகங்களும் 2003–2004ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் முழு சுகாதார இயக்கத்தில் 54 சுகாதார வளாகங்களும் ஆக மொத்தம் கரூர் மாவட்டத்தில் 214 சுகாதார வளாகங்களுக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, 207 வளாகங்களின் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு பயனாளிக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 7 சுகாதார வளாகப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களிலும் மகளிர் சுய உதவிக் குழுவினரால் பயனாளிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, வங்கி கணக்கு துவங்கி 11–ஆவது நிதிக்குழு மானியத்திலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ.1,000/– என்ற விகிதத்தில் வருடத்திற்கு ரூ.12,000/– பயனாளிகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, சுகாதார வளாகத்திற்குத் தேவையான பினாயில், குவளை, பிரஷ், பக்கெட் மற்றும் மின் கட்டணம் போன்ற அனைத்து செலவுகளும் பயனாளிக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு சுகாதார வளாகங்களைப் பயன்படுத்துபவர்களே பராமரிப்புச் செலவுகளை ஏற்று பயன்படுத்துவதால் சுகாதார வளாகங்கள் மிகவும் சுத்தமாக இருக்கின்றன.

இத்திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் களப்பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர், மேற்பார்வையாளர்கள் ஒவ்வொரு கிராமமாகச் சென்று அங்குள்ள உள்ளாட்சி பிரதிநிதிகள், சத்துணவு அமைப்பாளர்கள் ஆகியோரின் உதவியுடன் சுகாதார வளாகங்கள் அமைந்துள்ள ஊராட்சிகளுக்குச் சென்று, பொதுமக்களை சந்தித்து சுகாதார வளாகங்களின் பயன்பாடு பற்றி எடுத்துக் கூறி முழுமையான பயன்பாட்டிற்குக் கொண்டுவர கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.ராமமூர்த்தி,இ.ஆ.ப., அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் அனைத்து வளாகங்களையும் முழுமையான பயன்பாட்டிற்குக் கொண்டுவர மாவட்ட ஆட்சியர் தொடர் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

கிராமங்களில் சுகாதார வளாகங்களை மக்கள் முறையாக, முழுமையாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். பெண்கள் மாதவிடாய் காலங்களில் பயன்படுத்தும் நாப்கின் மற்றும் துணியினை சுகாதாரமான முறையில் அப்புறப்படுத்த ஒவ்வொரு ஒருங்கிணைந்த சுகாதார வளாகத்திலும் நாப்கின் எரியூட்டும் கருவி பொருத்தப்பட்டு, இதனை பயன்படுத்தும் முறை பற்றி தொண்டு நிறுவனங்கள் மூலம் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் வளாகங்களைப் பயன்படுத்தும் பெண்கள், சுத்தம், சுகாதாரத்தைக் கடைபிடிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சுகாதார வளாகங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் நீர் வீணாவதைத் தடுப்பதற்கும், சுற்றுப்புறச் சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டும் வளாகத்தைச் சுற்றி தோட்டங்கள் பயனாளிக் குழுக்களால் அமைக்கப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் வெளியூரிலிருந்து வருபவர்கள் இவ்வளாகத்தை விரும்பி பயன்படுத்தும் வகையில் ஒவ்வொரு சுகாதார வளாகமும் அமைந்துள்ளது.

பெண்கள் அனைவரும் மனமுவந்து இந்த சுகாதார வளாகங்களைப் பயன்படுத்தி வருவதால்அவர்களது கிராமம் மிகவும் சுத்தமாக இருப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கிராம சுகாதாரத்திற்கு இத்தகைய வளாகங்கள் உறுதிசெய்துள்ளது. இதனை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கிராமப் பெண்கள் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளனர்.

– **எஸ். கண்ணதாசன்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கரூர்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வு ஊதியம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆணை

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று, சுதந்திரம் அடைவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களான தங்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனுக் கொடுத்திருந்த சேலம், திருச்சி, நாமக்கல், வேலூர், கோயம்புத்தூர், காஞ்சிபுரம், தேனி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 13 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்குமாறு வேண்டி கோரிக்கை விடுத்த சென்னை மற்றும் மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் மனைவியர்க்கு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வு ஊதியம் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சேலம் மாவட்டம், ஜாகீர் காமநாய்க்கன்பட்டியைச் சேர்ந்த திரு. ஆர்.இராமகவுண்டர், திருச்சிராப் பள்ளி மாவட்டம் அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த திரு.வே.நாகமலை, நாமக்கல் மாவட்டம், பாண்ட மங்கலத்தைச் சேர்ந்த திரு. எஸ்.தர்மலிங்கம்பிள்ளை, வேலூர் மாவட்டம், கஸ்பா 'ஏ' ஆம்பூரைச் சேர்ந்த் திரு.எம்.ஆர்.சீனிவாசுலு, கோயம்புத்தூர் மாவட்டம் கண்ணம்பாளையத்தைச் சேர்ந்த திரு.பி.கருப்பண்ணன், காஞ்சிபுரம் மாவட்டம், பழைய பெருங்களத்தூரைச் சேர்ந்த திரு.எஸ்.பி.வி.கணேசன் நாயடு மற்றும் தேனி மாவட்டம் குப்பி நாயக்கன்பட்டியைச் சேர்ந்த திரு.ஏ.வி.ராமசாமி, கொடுவிலார் பட்டியைச் சேர்ந்த திரு.பி.ஏ.மாரிமுத்துச்சாமி, அல்லிநகரத்தைச் சேர்ந்த திரு.கே.வி.லட்சுமணன், போடிநாயக்கனூரைச் சேர்ந்த பொ.இராமலிங்கம், அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த திரு.பி.பி.ராமசாமி நாயுடு, சில்லமரத்துப்பட்டியைச் சேர்ந்த திரு.ஆர்.எஸ்.சீனியப்பன், கூடலூரைச் சேர்ந்த திரு.எஸ்.பி.கனகராஜ் – ஆகிய விடுதலைப் போராட்ட வீரர்கள், தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்ததாகவும், அதன் அடிப்படையில் தங்களுக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கக் கோரி பல ஆண்டுகளாக கோரிக்கை மனுக்கள் கொடுத்த போதும், தங்களது கோரிக்கை இதுவரை ஏற்கப்படவில்லை என்றும் தெரிவித்து, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியத்தைத் தங்களுக்கு வழங்கி உதவிட வேண்டும் என்று வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இவர்களது தியாகத்தைப் போற்றி மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியத்தை உடனடியாக வழங்கிட ஆணையிட்டார்கள். இதன்படி, இவர்கள் அனைவருக்கும் ஓய்வு ஊதியமாக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

மேலும், சென்னை மாவட்டம், திருவல்லிக்கேணியைச் சேர்ந்த திருமதி எஸ்.ரங்கநாயகி மற்றும் மதுரை மாநகர் மேலமாசி வீதியைச் சேர்ந்த திருமதி ஆர்.பார்வதி அம்மாள் ஆகியோர், மறைந்த தங்களது கணவன்மார் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சிறைத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர் எனவும், தங்களுக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டும் எனவும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு அளித்திருந்தனர். இம்மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மேற்படி இருவருக்கும் மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி, குடும்ப ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றுக்கு 15 ரூபாயும், ஆக மொத்தம் 1,515 ரூபாய் மாதந்தோறும் விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியமாக அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, சிறையில் அடைக்கப்பட்டு, துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு மதிப்பளித்து, கௌரவிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ள இந்த ஓய்வு ஊதியத்திற்கான அரசு ஆணை 11.9.2004 அன்று அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் அம்மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் மேற்காணும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்களின் மனைவியர் ஆகியோரிடம் நேரில் வழங்கப்பட்டது. □

திருக்கோயிலைச் சீரமைத்து கும்பாபிஷேகம் நடத்திட

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை

சென்னை வேளச்சேரியில் உள்ள அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில் ஆயிரம் ஆண்டு காலம் பழமை வாய்ந்த மிகவும் பிரசித்தி பெற்ற திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் தற்போது சரியாகப் பராமரிக்கப்படாமல் இருப்பதாகவும், இத்திருக்கோயிலின் திருக்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் குப்பைகள் கொட்டப்படும் இடமாக மாறி வருவதாகவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கவனத்திற்குத் தெரிய வந்தது.

பழம்பெருமை வாய்ந்த இத்திருக்கோயிலுக்கு எந்தவித பாதிப்பும் வராமல் பாதுகாக்க வேண்டியதும், உரிய வகையில் சீரமைக்க வேண்டியதும் மிக அவசியம் என்று தெரிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் மனம் குளிரவும், இப்பகுதியில் வாழ்கின்ற பொதுமக்கள் பயன் அடையவும், திருக்கோயிலை நல்ல முறையில் சீரமைத்திட கீழ்க்கண்டவாறு ஆணையிட்டுள்ளார்கள்:

- ➢ இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் பொதுநல நிதியைப் பயன்படுத்தி, திருக்குளத்தைத் தூர்வாரி மேம்படுத்தும் பணி உட்பட திருக்கோயிலைப் புதுப்பித்துச் சீரமைக்கும் அனைத்துப் பணிகளும் இந்து சமய அறநிலையத் துறை மூலம் நிறைவேற்றப்படும்.
- ➢ இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடத்தை குடியிருப்பு மற்றும் வணிக உபயோகங்களுக்குப் பயன்படுத்தி திருக்கோயிலின் வருவாயைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- ➢ இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில், திருக்கோயிலின் தெற்கு கோபுரத்திற்கு எதிரே உள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடத்தில் ஒரு திருமண மண்டபம் கட்டப்படும்.
- ➢ திருக்கோயிலின் பாதுகாப்பு கருதி, பகல் நேரத்திலும் காவல் பணி மேற்கொள்ள ஒரு பாதுகாவலர் நியமிக்கப்படுவார்.

அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில் திருப்பணிகள் அனைத்தும் 2005–ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முழுமையாக முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

□ □ □



திண்டுக்கல் மாவட்டத்தில்

வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் நடைபெற்று வரும் பணிகள்

திண்டுக்கல் மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் ராஷ்டிரிய சாம்விகாஸ் யோஜனா (RSVY) திட்டத்தின் கீழ் 11 கிராமங்களில் ரூ.155.75 இலட்சத்தில் பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு. முருகய்யா,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்து விரைவுபடுத்தினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ராஷ்டிரிய சாம்விகாஸ் யோஜனா (RSVY) திட்டத்தின் கீழ் 23 துறைகளின் வாயிலாக நடப்பாண்டிற்கு ரூ.15 கோடியில் பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 18.7.2004 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு. முருகய்யா,இ.ஆ.ப., அவர்கள் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் இத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகளைப் பார்வையிடுவதற்காகவும், ஆய்வு மேற்கொள்வதற்காகவும் சென்றிருந்தார். கசவனம்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட அரவன்குளம் அல்லது மருதன்குளத்திலிருந்து குட்டத்துப்பட்டி பஞ்சாயத்திற்கு உட்பட்ட ஆவாரன்குளம் வரையிலான 6.9 கி.மீ. நீளமுள்ள நீர்வரத்து வாய்க்காலின் 5.3 கி.மீ. தூரத்திற்கு முட்களை அகற்றி தூர்வாரும் பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. அரவன்குளத்தின் மொத்த பரப்பு சுமார் 24 ஏக்கராகும். ஆவாரன்குளத்தின் மொத்த பரப்பு சுமார் 32 ஏக்கராகும். இந்த இரண்டு குளங்களினால் பயனடையும் விளை நிலங்கள் 1,625 ஏக்கராகும். சுமார் 75 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாரப்படாமல் இருக்கும் இவ்வரத்து வாய்க்காலை மத்திய அரசின் புதிய திட்டமான ராஷ்டிரிய சாம்விகாஸ் யோஜனா (RSVY) திட்டத்தின் கீழ் எடுத்து செப்பனிட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில் இப்பணி ரூ.5.4 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வருகிறது. முதலாவதாக, கந்தசாமிபுரம், சின்னப்பாபுரம், மைலாப்பூர் மற்றும் குட்டத்துப்பட்டி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் பணிகளை 1½ கி.மீ. தூரம் வாய்க்காலில் நடந்து சென்று இயந்திரங்கள் பணியாற்றுவதைப் பார்வையிட்டு வாய்க்காலில் கரைகளை நன்கு அகலப்படுத்துமாறும், அதிக அழுத்தம் உள்ள இடங்களில் அரிப்புகள் ஏற்படா வண்ணம் கற்களைப் பரப்பி பணிகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

மேலும், அப்பகுதியிலுள்ள விவசாயிகளை நேரடியாகச் சந்தித்து இந்த வரத்து வாய்க்கால் செம்மைப்படுத்தப் படுவதால் வாய்க்கால் வழியில் உள்ள ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட விளை நிலங்கள் பயன்பெறும் என்றும், சில இடங்களில் வரத்து வாய்க்கால்களில் நீர் அழுத்தத்தைக் கட்டுப்படுத்த விவசாயிகள் தானாக முன்வந்து தங்களது பங்கீட்டினையும் அளிக்குமாறும், தாங்களும் அப்பணியில் கலந்து கொண்டு வாய்க்கால் அமைக்கும் பணிகளைச் செம்மையாக முடிப்பதற்கு உதவிடுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். அப்பகுதி மக்களும் இப்பணிக்குத் தங்களின் முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாகத் தெரிவித்தார்கள்.

பணிகளைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது: "ராஷ்டிரிய சாம்விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு குஜிலியம்பாறை மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியங்களில் 11 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அக்கிராமங்களில் 17 வகையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில இடங்களில் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. குஜிலியம்பாறை ஒன்றியத்தில் கூடலூர், கரிக்காலி, தொழிப்பட்டி, பாளையம், ஆர்.கோம்பை மற்றும் கருங்கல் ஆகிய கிராமங்களிலும், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் குட்டத்துப்பட்டி, தாமரைக்குளம், கசவனம்பட்டி, பழைய கன்னிவாடி மற்றும் சத்திரப்பட்டி ஆகிய கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இக்கிராமங்களில் சம உயர வரப்பு அமைத்தல், நிலம் உழுதல், நிலம் சீர் செய்தல், குழாய் பதித்தல், பழக்கன்று நடுதல், வெற்றுக்கல் தடுப்பணை, கம்பிவலை தடுப்பணை, சிமெண்ட் சிறிய தடுப்பணை, சிமெண்ட் பெரிய தடுப்பணை, வாய்க்கால் சீரமைத்தல், ஓடை சீரமைத்தல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், ஊருணி அமைத்தல், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல், சிறு பாசனக் குளம் சீரமைத்தல், கசிவு நீர்க் குட்டை சீரமைத்தல் மற்றும் உலர்களம் அமைத்தல் போன்ற 17 வகையான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது" என்று கூறினார்.

கோனூர் ஊராட்சியில் சம உயர வரப்பு அமைத்தல், நிலம் உழுதல் மற்றும் பழக்கன்று நடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ள இடத்தினை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மேலும் கூறியதாவது:

"இப்பகுதியில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் சம உயர வரப்பு அமைத்தல், நிலம் உழுதல் மற்றும் பழக்கன்று நடும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. சம உயர வரப்பு அமைப்பதற்கு 1 எக்டேருக்கு ரூ.1,800, நிலம் உழுதலுக்கு ரூ.1,200, பழக்கன்றுகள் நடுவதற்கு ரூ.4,000 ஆக மொத்தம் ரூ.8.40 இலட்சம் செலவிடப்பட உள்ளது. இதனால், எதிர்காலத்தில் இப்பகுதி வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் ஒரு மேம்படுத்தப்பட்ட விவசாயப் பகுதியாக மாற்றப்படும் என்பதில்எவ்வித ஐயமும் இல்லை. வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் பணிகள் நடைபெறும் இடங்களில் மக்களின் ஆதரவுடனும், பஞ்சாயத்தின் தீர்மானத்தின் படியும் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. கிராமத்தில் உள்ள மக்களுக்கு வேலை வழங்கும் நோக்குடனும், அனைத்துக் குளங்களுக்கும் நீர் பகிர்ந்தளிக்கும் வகையிலும் உள்ள வரத்து வாய்க்காலின் கடை நிலையில் உள்ள கிணறுகள் பயனடையும் வகையிலும் பணிகள் மேற்கொள்ளப் படுவதோடு அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும் நடைமுறைப்படுத்தப்படுவதால் அப்பகுதியைச் சார்ந்த மக்கள் முழு ஒத்துழைப்பு நல்குமாறும், அப்பணிகளில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

பின்னர், மைலாப்பூர் கிராமத்தில் பொதுமக்கள் தானாக முன்வந்து அளித்துள்ள நிலத்தில் ரூ.2 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட உள்ள கதிரடிக்கும் களம் அமைய உள்ள இடத்தினையும் அவர் பார்வையிட்டார்.

– மு. பழனிசாமி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல்.

மாணவர் பக்கம்

எல்லாம் அவன் சித்தம்

காட்டிலே ஒரு முனிவர் வாழ்ந்து வந்தார். அவர் இறைவனை நோக்கிக் கடுந்தவம் இயற்றினார். அந்த முனிவரின் எண்ணமெல்லாம், 'தனக்கு மரணமே வரக்கூடாது' என்று இறைவனிடம் வரம் வாங்க வேண்டும் என்பதுதான்.

இறைவன் அவருடைய நோக்கத்தைப் புரிந்து கொண்டார். ஆயினும் தன்னை நோக்கி ஐம்புலன்களை அடக்கி அவர் தவம் செய்து வந்ததைக் கண்டு, 'வரம் தராமல் இருக்க முடியாதே' என்று எண்ணினார்.

'சரி, காலம் வரும்போது பார்க்கலாம்' என்று எண்ணி இறைவனும் அமைதியாக இருந்து விட்டார். முனிவரின் தவம் நாளுக்கு நாள் முற்றியது.

'இனி, இந்த முனிவரைச் சோதிக்கக் கூடாது' என்று கருதிய இறைவன் அவர் முன் தோன்றினார்.

'பக்தா, கண் திறந்து பார், உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டார்.

முனிவர் இறைவனைக் கண்டு மகிழ்ந்தவராய், 'இறைவா எனக்கு மரணம் இல்லாப் பெருவாழ்வு வேண்டும்!' என்று கேட்டுக் கொண்டார்.

'அது இயலாத காரியம். பிறந்தவர்கள் இறந்தே தீர வேண்டும்!' என்று உறுதியாகக் கூறினார் கடவுள்.

முனிவர் யோசித்தார்.

'சரி, சாகா மருந்து என்று சொல்லப்படுவது தேவ அமிர்தம். அதைக் கேட்போம்!' என்று தீர்மானித்தார்.

'எனக்குத் தேவாமிர்தம் வேண்டும்!'என்றார் அவர்.

இறைவன் இப்போது சிந்தித்தார்.

'இவனுக்கு அமிர்தத்தைத் தந்தால் இவனால் அதை அருந்தத்தக்க அளவு நல்லதிர்ஷ்டம் இருக்கிறதா?'

'இல்லை' என்று தோன்றியது.

'சரி, இவன் அனுபவித்தாலும் சரி, அனுபவிக்காவிட்டாலும் சரி, இவன் கேட்ட வரத்தைத் தருவோம்', என்று எண்ணி ஒரு சின்னத் தங்கக் குடத்தில் அமிர்தத்தை வரவழைத்துக் கொடுத்தார்.

அதை முனிவர் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டார். அப்போது இறைவன் –

'அன்பனே! இந்தக் குடத்தை நீ தரையில் வைக்கக் கூடாது. நேராக அருகில் உள்ள சிவாலயம் எங்காவது சென்று இதை நீ குடி! உன் ஆசை நிறைவேறும்!' என்று கூறி மறைந்தார்.

முனிவர் மிகவும் மகிழ்ந்தார்.

காட்டிற்குள் பாழடைந்த சிவாலயம் ஒன்று இருந்தது. அங்கே வேகமாக நடக்கத் துவங்கினார்.

நீண்ட நாட்களாகத் தவம் இருந்ததால் அவருள் தாகம் பெருகியது. 'அருகிலிருந்த நீரோடையிலிருந்து தாகத்தைத் தணித்துக் கொள்ளலாம்' என்று அவர் எண்ணினார். 'ஆனால் அமிர்தக் குடத்தை என்ன செய்வது?'

அப்போது அவ்வழியே ஒரு மனிதன் வந்தான்.

'அவனிடம் அமிர்தக் குடத்தைக் கொடுத்துத் தாகத்தைத் தணித்துக் கொள்ளலாம்' என்று அவர் எண்ணினார். 'ஆனால் அமிர்தம் என்று சொன்னால்அந்த மனிதன் தான் நீர் அருந்தும் வேளையில் அதைக் குடித்து விட்டால் என்ன செய்வது?' என்று எண்ணினார்.

'எனவே இந்தக் குடத்தில் இருப்பது கொடிய விஷம்! ஜாக்கிரதை! நான் நீர் அருந்தி வரும் வரை இதை வைத்திரு!' என்று சொல்லி அந்த மனிதனிடம் கொடுத்தார்.

அதை அந்த மனிதன் பெற்றுக் கொண்டான். முனிவர் நீர் அருந்திவிட்டு வந்து குடத்தைப் பெற கையை நீட்டினார். அந்த மனிதனும் குடத்தைக் கொடுத்தான். குடம் காலியாக இருந்தது.

'ஸ்வாமி, நான் வாழ்க்கையை வெறுத்துத் தற்கொலை செய்து கொள்ள வந்தேன். எனக்குக் கடுமையான நோய்! எனவே இந்த விஷத்தைக் குடித்துவிட்டேன். ஆனால் ஆச்சர்யம் நோயே பறந்து விட்டது!' என்றான்.

முனிவர் நினைத்தார். கடவுளின் விருப்பத்துக்கு மாறாக எதையும், எவரும் பெற முடியாது.

எல்லாம் அவன் சித்தம்.

– *"சிறுவர்களுக்கான சீர்திருத்தக் கதைகள்"*
நூலிலிருந்து.



தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WPP-518



தமிழரசு
அக்டோபர் 2004
International Human Rights Defence Committee, Ukraine
(A Chartered consultative body of United Nations)
Presentation of
Golden Star of Honour and Dignity Award
to
Selvi J Jayalalithaa
Chief Minister of TamilNadu

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
புரட்டாசி – ஐப்பசி
மலர்:36 இதழ்: 4
அக்டோபர் 2004
விலை ரூ.10

இந்த இதழில்...

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இரத்ததான தினச் செய்தி 2
★ மக்களின் நன்மைக்காகவே அனைத்துச் சட்டங்களும் இயற்றப்பட வேண்டும் 3
★ விவசாயிகளின் நலனுக்கு என் இதயத்தில் எப்போதுமே ஒரு தனி இடம் உண்டு 9
★ திரைப்படத் தொழிலை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல அரசு செயல்படுத்தவிருக்கும் தொகுப்பு நடவடிக்கைகள் 11
★ தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் 14
★ தமிழகத்தில் வறட்சி நிலையை ஆராய மத்தியக் குழுவை உடனடியாக அனுப்ப வேண்டும்
– மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை 21
★ குற்றம் இல்லா சமூகமும் அச்சமில்லா சுதந்திரமான வாழ்வுமே அமைதிக்கான அடிப்படைக் கூறுகளாகும் 25
★ தமிழகத்தில் வறட்சி நிலையை விரிவாக ஆய்வு செய்ய மத்தியக் குழுவிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தல் 31
★ புதிய வீராணம் திட்டம் 33
★ இலக்குகளை விரைவில் எய்தும் பாதையில் ஏறுநடை போடும் தமிழ்நாடு 37
★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள் உறுதி 45
★ தியாகி திருப்பூர் குமரன் 49
★ பெரியார் விருது, அம்பேத்கர் விருது, திரு.வி.க. விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, கி.ஆ.பெ. விருது வழங்கும் விழா 51
★ தமிழ்நாடு அரசின் சார்பில் மகாத்மா காந்தியடிகளின் 136ஆவது பிறந்த நாள் விழா 54
★ அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர்களுக்குச் சலுகைகள் 57
★ காற்று (சிறுகதை) 62
★ அண்ணல் காந்தியடிகளின் அமுத மொழிகள் 68
★ இந்தியாவிலேயே முதன்முதலாக கணினிமயமாகும் கிராம ஊராட்சிகள் 69
★ தமிழக அரசின் சார்பில் மருது பாண்டியர் நினைவு நாள் மற்றும் மருது பாண்டியர் நினைவு தபால் தலை வெளியீட்டு விழா 73

அட்டைப்பட விளக்கம்

முதலாம் பக்க அட்டை	: நன்மதிப்பு மற்றும் மேதகைமைக்கான தங்கத் தாரகை விருது வழங்கும் விழா.
இரண்டாம் பக்க அட்டை	: திருப்பூர் குமரன்
மூன்றாம் பக்க அட்டை	: இந்தியாவிலேயே முதன்முதலாக கிராம ஊராட்சிகள் கணினி மயமாக்கும் திட்டம் தொடக்கம்.
நான்காம் பக்க அட்டை	: மகாத்மா காந்தியடிகளின் 136ஆவது பிறந்தநாள் விழா.

ஆசிரியரும் வெளியிடுபவரும் :**வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

தேசிய தன்னார்வ இரத்த தான தினம்

அக்டோபர் 1, 2004

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
இரத்த தான தினச் செய்தி

உயிர் காக்கும் ஒப்பற்ற திரவம் இரத்தம். எனவேதான், எத்தனையோ தானங்கள் இருந்தாலும் இரத்த தானம் தலை சிறந்த தானமாய் உலகெங்கும் போற்றப்படுகிறது.

இன்றைய சூழலில் சாலை விபத்துகளினாலும், தீ விபத்துகளினாலும், அறுவை சிகிச்சைகளின்போதும் ஏற்படும் பெருமளவு இரத்த இழப்பை, இரத்தத்தைப் பிறரிடம் இருந்து பெறுவதன் மூலம் மட்டுமே ஈடு செய்ய இயலும். பணத்திற்காக இரத்த தானம் செய்வது என்ற நிலை மாறி, தமிழகத்தில், தற்பொழுது, தன்னார்வ இரத்தக் கொடையாளர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருகிறது. மேலும், சிறப்பாகச் செயல்படும் இரத்த வங்கிகளை ஊக்குவிப்பதற்காக சுழற் கோப்பைகளையும், தன்னார்வ இரத்தக் கொடையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் தங்கப் பதக்கங்களையும் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் வழங்கி வருகிறது. இன்று இந்தியாவில் தன்னார்வ இரத்த தானத்தில் தமிழகம் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. அரசு இரத்த வங்கிகளும், தனியார் இரத்த வங்கிகளும் அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களும், தன்னார்வ இரத்த தானப் பணிகளில் ஈடுபட்டுத் தமிழகம் முதலிடம் அடைய எனது அரசு முனைப்புடன் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

ஆண்டுதோறும் அக்டோபர் முதல் தேதி இரத்த தான நாளாக அனுசரிக்கப்படுகிறது. சில தனி நபர்கள் மட்டும் முன் வந்து இரத்த தானம் செய்வது போதாது. இரத்த தானம் என்பது ஓர் இயக்கமாக மாற வேண்டும். இரத்தக் கொடையாளர்கள் உயிர் காப்பவர்கள். ஆதலால், உங்கள் மனித நேயத்தை உங்கள் இரத்த தானத்தால் வெளிப்படுத்துங்கள்!

இரத்த தானம் செய்யுங்கள்!
உயிர்களைக் காப்பாற்றுங்கள்!

மக்களின் நன்மைக்காகவே அனைத்துச் சட்டங்களும் இயற்றப்பட வேண்டும்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சென்னை-600 008 22715

புதுடில்லியில் 18.9.2004 அன்று நடைபெற்ற
முதலமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

நாட்டுமக்களின் மனதில் சட்ட ஆட்சியின் மாட்சிமை பற்றிய எண்ணத்தை வலுப்பெறச் செய்யும் நோக்கில் வழக்குகளை விரைந்து தீர்ப்பதற்குரிய புதிய செயல்திட்டம் ஒன்றைத் தயாரிக்கவும் நாட்டில் சட்ட ஆட்சி முறையை நிலைநிறுத்துவதில் நாம் கண்டுள்ள முன்னேற்றம் குறித்து மதிப்பீடு செய்வதற்காகவும் கூட்டப் பட்டுள்ள இந்த முதலமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் மாநாட்டில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்வு கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சில கருத்துகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். வளர்ச்சிதான் சுதந்திரம் என்ற கோட்பாட்டை திரு. அமர்த்தியா சென் போன்ற பிரபல பொருளாதார நிபுணர்கள் விரிவாக எடுத்துரைத்துள்ளார்கள். அரசியல் சுதந்திரம், பொருளாதார வாய்ப்புகள், சமூக வசதிகள், ஒளிவுமறைவற்ற நடவடிக்கைகளுக்கான உத்தரவாதம், பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட நிலை ஆகியவை தொடர்பாக குடிமக்களுக்குள்ள உரிமைகள் மற்றும் வாய்ப்புகள் மனித சுதந்திரம் மேம்படத் துணைபுரியும் உள்ளிணைந்த காரணிகள் என்று திரு. அமர்த்தியா சென் கூறியுள்ளார். இதைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, நம்முடைய சமூக அமைப்பில் அமர்த்தியா சென் குறிப்பிட்ட அந்த ஐந்து சுதந்திரங்களோடு நாட்டிலுள்ள அனைவரும் நீதித்துறையை எளிதில் அணுகும் வசதி அல்லது அவற்றைப் பெறுவதற்குரிய வாய்ப்பும், தனிமனித சுதந்திரத்தை உயர்த்தக் கூடிய உரிமையாகக் கொள்ளப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன். சமத்துவத்திற்கான அடிப்படை உரிமையைப் பொறுத்த வரையில், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நிலையை நமது அரசியலமைப்புச் சட்டம் அனைவருக்கும் வழங்கியுள்ளது. இருந்தாலும், சமுதாயத்தில் மற்றவர்களுக்குக் கிடைக்கின்ற கல்வி அல்லது பொதுச் சுகாதாரம் அல்லது அங்காடி வாய்ப்புகள் என்னென்ன சமூக – பொருளாதாரக் காரணிகளால் நலிந்த பிரிவினருக்குக் கிடைக்கவில்லையோ, அதே காரணிகளால் அவர்களால் பல்வேறு நிலைகளில் நீதியமைப்புகளையும் அணுகி பயன்பெற முடியவில்லை. இதனால், அப்பிரிவினரின் பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகள், பறிபோகிற நிலை உருவாகின்றது. அறியாமை, அதிகப்படியான செலவு, நீண்டு கொண்டே செல்கின்ற வழக்கு நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தாக்குப் பிடிக்க முடியாத நிலை காரணமாக அவர்களால், நீதிமன்றம் மூலமாக விரைவான பயனுள்ள நிவாரணம் பெற முடியவில்லை.

இச்சூழ்நிலையில், இந்திய அரசியலமைப்புச் சட்டச் சிற்பிகளான நமது முன்னோர்கள் வழி காட்டிக் கொள்கைகளாக நமக்கு உருவாக்கித் தந்துள்ள சட்ட

ஆட்சி முறைமையின் மாட்சியை உயர்த்திப் பிடிக்கவும், நமது குற்றவியல் நீதிமுறையின் நியாயத் தன்மையை நிலை நிறுத்தவும், நாம் போதிய அளவுக்கு அணியமாக இருக்கிறோமா என்பதை இந்த மாநாட்டில் நாம் மதிப்பிட வேண்டியுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டமானது, ஓர் ஆட்சியின் மூன்று உறுப்புகளான சட்டமன்றம், நிருவாகம் மற்றும் நீதித்துறை ஆகிய இழைகளைக் கொண்டு நேர்த்தியாக நெய்யப்பட்டதோர் ஒப்பற்ற ஓவியத் திரை ஆகும். இது ஓர் உறுப்பின் செயல்பாடு. மற்றோர் உறுப்பினால் பாதிக்கப்படாத வகையில் தடுப்புகளும், எதிரீடுகளும் ஒத்திசைவான முறையில் அமையப் பெற்ற உள் கட்டமைப்பைக் கொண்டு விளங்குகிறது. நிருவாகம், சீர்குலைவுச் சக்திகளை ஒரு கட்டுக்குள் வைத்து, நாட்டின் சட்டம் மற்றும் பொது ஒழுங்கமைதியைப் பாதுகாப்பதுடன், விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, அதன் மூலம், சட்டமன்றமும் நீதித்துறையும் தங்களுடைய பணிகளைச் செவ்வனே செய்வதற்குத் தேவையான சுமூகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு அமைப்பும் மற்ற அமைப்புகளின் செயல்பாட்டில் அத்துமீறி நுழையாமல் அவற்றை மதித்துச் செயல்பட வேண்டும்.

இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ள குறிப்பான பொருள் குறித்துப் பேசுவதற்கு முன்னதாக, இம் மாநாடு வாயிலாக, நாம் உணர்த்த வேண்டிய உட்பொருள் பற்றி ஒரு சில வார்த்தைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். ''தாமதப்படும் நீதி தடுக்கப்படும் நீதி''யாகும் என்ற வில்லியம் கிளாட்ஸ்டன்ஸ் அப்ஹாரிசம் முதுமொழி சுட்டிக்காட்டும் தளையைத் தகர்த்து வெளிவரக் கூடிய ஒரு சகாப்தத்திற்கு இந்த மாநாடு அடித்தளம் அமைக்க வேண்டும். நீதி மன்றங்களில் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்ற ஒரு கடினமான சூழலில் நாம் சிக்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. நீதிமன்ற நடவடிக்கைகள் மீது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுவிடாதவாறு வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. நீதிமன்றங்களில் அளவிற்கு அதிகமாகத் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைந்து முடித்துத் தீர்வுகாணத் தேவையான புதிய உத்திகளையும் அணுகு முறைகளையும் வகுக்க வேண்டிய கடினமான பொறுப்பு இந்த மாநாட்டிற்கு ஏற்பட்டுள்ளது. நாட்டின் பெரும்பான்மையான மாநிலங்கள் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில், அவை தம் வசமுள்ள நிதி ஆதாரங்களை ஏழை, எளிய மக்களுக்கும் தேவைகள் உள்ள மக்களுக்கும் நேரடியாகப் பயனளிக்கக் கூடிய திட்டங் களுக்காகச் செலவிட வேண்டிய கட்டாயம் அம்மாநிலங்களுக்கு உள்ளது.

என்னுடைய தலைமையிலான அரசு, தமிழ்நாட்டில் நீதித்துறைக்கு இயன்ற அளவுக்கு அதிகபட்ச நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. மதுரையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளையை ஏற்படுத்த ரூ.65.44 கோடி அளவுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளையைத் திறக்கும் சிறப்புமிகு திட்டம் முடிக்கப்பட்டு, கடந்த 24.7.2004 அன்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டின் தென் மாவட்ட மக்களின் நீண்டகாலக் கனவு மெய்ப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு நாங்கள் தொடர்ந்து அளித்து வந்த ஆதரவும் நிதியுதவியும் சட்ட ஆட்சியின்பாலும், நீதி நிருவாகத்தின்பாலும் எங்களுக்குள்ள உறுதி பாட்டையே உணர்த்துகின்றன. உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தீர்த்து வைக்கும் வழக்குகளின் வீதம் அதிகமாக உள்ள சில உயர்நீதிமன்றங்களுள், சென்னை உயர்நீதிமன்றமும் ஒன்று என்ற சாதனை படைக்கப்பட்டிருப்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே செல்வதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கும் நிலை உருவாகாதிருக்க வேண்டுமாயின், குறித்த காலத்தில் வழக்கு நிலுவைகளை முடிப்பதற்கு, மத்திய அரசின் தாராள நிதியுதவித் திட்டம் அவசியம் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அனைத்து வசதிகளையும் கொண்ட புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய தக்கதொரு திட்டத்தை இம்மாநாட்டின் ஒரு பகுதியாக இறுதி செய்யவேண்டும் என்கிற என்னுடைய அவாவினை இங்கே நான் எடுத்துரைக்க விழைகிறேன்.

தமிழ்நாட்டில் உண்மையான பாலின நிகர்மையை எய்த வேண்டும் என்பதில் நான் மிகவும் ஆர்வமாக இருக்கிறேன். சட்டத்தின்முன் பெண்களுக்குச் சமஉரிமை கிடைக்கச் செய்யும் இலக்கை நோக்கிய பயணத்தில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தமிழகம் முழுவதும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும், மகளிருக்கான நீதிமன்றங்களையும், குடும்ப நீதிமன்றங்களையும் ஏற்படுத்தி மேற்சொன்ன சாதனையை எய்திட நான் காரணமாக இருந்திருக்கிறேன். 1992–இல் நாட்டிலேயே முதல் முறையாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தை நான் தொடங்கி வைத்தேன். இன்று தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் அனைத்துக் காவல்துறை உட்கோட்டங்களிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் செயல்படுவதை உறுதி செய்துள்ளேன். இம்மாநிலத்தில் இது வரையிலும், முற்றிலும் மகளிரால் நிருவகிக்கப்படுகிற 195 காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நடமாடும் ஆலோசனை மையங்களையும் நான் ஏற்படுத்தியுள்ளேன். மகளிர், எவ்வித அச்சமுமின்றி, தங்களுடைய குறைகளை எடுத்துக்கூற முன்வர இயலும் வகையில், மகளிரிடையே அதிக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஓர் அமைப்பாக இந்தக் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த விழிப்புணர்வின் காரணமாகக் குறைகளை விரைந்து களைய வேண்டுமென்ற கோரிக்கைகள் எழுந்து வருகின்றன. அதன் காரணமாக, ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 6 மகளிர் நீதிமன்றங்களோடு கடலூரில் ஒன்றும், பெரம்பலூரில் இன்னொன்றுமாக மேலும், இரண்டு மகளிர் நீதிமன்றங்களை ஏற்படுத்த அண்மையில் நான் ஆணையிட்டுள்ளேன். நிருவாகத்தின் தரத்தை உயர்த்தும் திட்டத்தின் ஓர் அங்கமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு மகளிர் நீதிமன்றமாவது ஏற்படுத்தப்படுவதற்கு ஏதுவாக அனைத்து மாநிலங்களுக்கும் போதிய நிதிகளை ஒதுக்க வேண்டுமென, சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம், பன்னிரண்டாவது நிதி ஆணையத்தை அணுகிக் கோரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய சமுதாயத்தில் ஆழமாக வேர் விட்டுள்ள பாலினப் பாகுபாடு மற்றும் அடக்குமுறைகளை நாம் திறம்பட சமாளிக்க வேண்டுமாயின், கட்டாயமாக இவ்வாறு நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

1984–ஆம் ஆண்டு குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழும், தமிழ்நாட்டில் 6 குடும்ப நீதிமன்றங்களை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம். ஒரு மில்லியனுக்கும் அதிகமாக மக்கள்தொகை கொண்ட மாநகரங்களில் மட்டுமே இத்தகைய நீதிமன்றங்கள் நிறுவப்பட வேண்டும் என்றாலும், மக்கள்தொகை, இன்னும் ஒரு மில்லியனைத் தாண்டாத, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் போன்ற மாநகரங்களிலும் நாங்கள் குடும்ப நீதிமன்றங்களை ஏற்படுத்தியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2001–ஆம் ஆண்டில் இந்த நீதிமன்றங்கள் 4,897 வழக்குகளைத் தீர்த்து வைத்தன என்பதையும், 2003–ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 7,163 ஆக அதிகரித்துள்ளது என்பதையும், 2004–ஆம் ஆண்டில் இதுவரையிலும் 7,381 வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2002–2003–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம், முன்னரே குடும்ப நீதிமன்றங்களை ஏற்படுத்திய மாநிலங்களுக்குச் சாதகமாக இல்லாதது துரதிருஷ்டவசமானதாகும். இத்திட்டம் தொடங்கப் படுவதற்கு முன்னரே, ஏற்படுத்தப்பட்டுள்ள இத்தகைய குடும்ப நீதிமன்றங்களையும், மத்திய அரசு, இத்திட்டத்தின் வரம்பிற்குள் கொண்டுவந்து, அவற்றிற்கும் நிதி வழங்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். நிதியுதவியின் அளவு மிகவும் சொற்பமாக உள்ளது என்பதும், அது அதிகரிக்கப்பட வேண்டும் என்பதும் என்னுடைய கருத்தாகும். தாராள நிதியுதவி திட்டம், மாநிலங்கள் மேலும் அதிக மாவட்டங்களில் விரைந்து குடும்ப நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும்.

வழக்குகளை விரைவாகத் தீர்த்துவைப்பதை எளிதாக்கும் பொருட்டும், சட்ட நடவடிக்கைகளில் இயல்பாக ஏற்படக்கூடிய காலதாமதங்களைக் களைவதற்காகவும் நவீனமயமாக்கும் திட்டத்திற்கு எனது அரசு முன்னுரிமை அளித்துள்ளது. நாட்டிலேயே "தொலை நீதி" "(Tele Justice)" திட்டத்தைத் தொடங்கிய முதல் மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை மதிப்பிற்குரிய இம்மாமன்றத்தில் நான்

பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஏற்பாட்டின் மூலம், தமிழ்நாட்டிலுள்ள மகளிருக்கான தனிப்பட்ட இரண்டு சிறைகள் உட்பட, 9 சிறைகளும், 270 நீதிமன்றங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் உள்ள 78 இடங்கள் ரூ.8.61 கோடி செலவில், இந்த ஏற்பாட்டின் மூலம் இணைக்கப் பட்டுள்ளன. இந்த வசதியினால், வீடியோ கலந்தாய்வு மூலம், நீதித்துறை நடுவர்கள், நீதிமன்றத்தில், தங்களுடைய அறைகளில் இருந்துகொண்டே, சிறை வளாகங்களில் இருக்கும் கைதிகளின் காவல் கால அளவை நீட்டிக்க இயலும். இத்திட்டத்தினால், சிறைக் கைதிகளுக்குப் பாதுகாப்பளித்தல், நீதிமன்றங்களில் நீதித்துறை நடுவர்கள் முன்னிலையில் அவர்களை ஆஜர்படுத்துதல் ஆகிய வகையிலான இடையூறு நிறைந்த நடைமுறைகளைத் தவிர்க்க முடிகிறது. மேலும், கைதிகளை அழைத்துச் செல்லும்போது, அவர்கள் தப்பிச் சென்றுவிடுதல் அல்லது சிறை வளாகங்களுக்குள் குற்றத்திற்குள்ளாக்கும் பொருட்களைக் கள்ளத் தனமாகக் கடத்துதல் மற்றும் நீதிமன்றங்களில் பெரும் கூட்டம் சேர்தல் ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் அற்றுப் போவதுமன்றி, வழிப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்ற காவலர்கள் குறித்த செலவு மற்றும் எரிபொருள் செலவுகள் ஆகியவற்றிலும் கணிசமான மிச்சமேற் படுவதால், இது முழுக்க முழுக்க ஒரு வெற்றித் திட்டமாகும். ஏனைய மாநிலங்களும் இத்திட்டத்தைப் பின்பற்றலாம் என நான் பரிந்துரைப்பதோடு இத்திட்டத்திற்காக மத்திய அரசு, மாநில அரசுகளுக்குத் தாராளமாக நிதியுதவி அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து எனது அரசு, ஏற்கெனவே அதற்காக, ரூ.2.80 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. அதில், சென்னை உயர்நீதி மன்றத்தையும் மதுரையில் உள்ள உயர்நீதிமன்றக் கிளையையும் கணினி மயமாக்குவதற்காக மத்திய அரசின் பங்காக அளிக்கப்பட்ட ரூ.1.42 கோடியும் அடங்கும். இருப்பினும், நாம் மேலும் முன்னேறிச் சென்று, தகவல் தொழில்நுட்பத்தின் அனைத்து வசதிகளையும் தொடர்ந்து அளிப்பதற்கான திட்டமொன்றைச் செயற்படுத்த வேண்டும். அத்தகைய இரு திட்டச் செயற்குறிப்புகள், அதாவது, ரூ.5 கோடி செலவில், சென்னை உயர்நீதிமன்றத்திற்கான திட்டமொன்றும், ரூ.2.54 கோடி செலவில், மதுரையில் உள்ள உயர்நீதிமன்றக் கிளைக்கான மற்றுமோர் திட்டமும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் ஒப்புதலுக்காக மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இச்செயற்குறிப்புகளுக்கு மத்திய அரசு விரைவில் அனுமதி வழங்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல நீதிமன்றங்கள் பாழடைந்த பழைய கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன; அவற்றிற்குப் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. மேலும், நீதித்துறை அதிகாரிகளுக்குப் போதிய வீட்டுவசதிகள் அளிக்க வேண்டியதும் இன்றியமையாததாகிறது. ரூ.140 கோடி செலவில், நீதிமன்றக் கட்டடங்களும் நீதித்துறை அதிகாரிகளுக்குரிய வீடுகளும் கட்டுவதற்கான விரிவான செயற்குறிப்பு ஒன்றை எனது அரசு அனுப்பி வைத்துள்ளது. இந்தச் செயற்குறிப்புகளைச் செயற்படுத்த மத்திய அரசு, மாநிலத்திற்குக் கணிசமான நிதியுதவி அளிக்க வேண்டும் என்பது என்னுடைய உறுதியான கருத்தாகும்.

விரைவு நீதிமன்றங்களை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. இதுவரையிலும், நாங்கள், 49 விரைவு நீதிமன்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். இந்நீதிமன்றங்கள் வாயிலாக 1,05,395 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன. இது, நாட்டில் வேறு எந்த மாநிலமும் எய்தாத ஒப்பற்றதோர் சாதனையாகும். இந்த வேகத்தில் தொய்வில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எனவே, மத்திய அரசு, போதிய நிதி உதவிக்கு வகை செய்யும் திட்டம் வாயிலாக, இந்த விரைவு நீதிமன்றங்களுக்கு 31.3.2005–ஆம் நாளுக்கு அப்பாலும் தொடர்ந்து நிதியளிக்க வேண்டும். அவ்வாறு நிதியுதவி கிடைக்குமாயின் சென்னை உயர்நீதிமன்றம் கோரியுள்ளவாறு, விரைவு நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும்.

தமிழ்நாட்டில், தகராறுகளுக்குத் தீர்வு காண்பதற்கான பல்வேறு மாற்று அமைப்புகளுக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளோம். 1987–ஆம் ஆண்டு சட்டப் பணிகள் அதிகாரமன்றச் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட மக்கள் நீதிமன்றத் (லோக் அதாலத்) திட்டத்தில்அபார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் அண்மையில், ரூ.1.85 கோடி செலவில் மாநில சட்டப் பணிகள் அதிகார மன்றத்திற்காகத் தனியே கட்டடம் ஒன்றைக் கட்டித் தந்துள்ளோம். ஒவ்வொரு மாவட்ட நீதிமன்ற வளாகத்திலும் பொருத்தமான சட்ட உதவி மையங்களைக் கட்டுவதற்கான திட்டமொன்றையும் நாங்கள் தொடங்கியுள்ளோம். மக்கள் நீதி மன்றங்களை நடத்துவதற்கு இது வசதியாக இருக்கும். வட்ட அளவிலும் நாங்கள் இத்தகைய அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளோம். வட்ட அளவிலான 141 சட்டக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

மாநில சட்டப் பணிகள் அதிகார மன்றம், சட்டம் பற்றிய விழிப்புணர்வையும், சட்ட அறிவையும் மக்களிடம் பரப்புவதை ஓர் இயக்கமாக மேற்கொண்டு வருகிறது. மக்கள் தொடர்பு ஊடகம், குறுவட்டுகள், சிற்றேடுகள்,செய்திப் படங்கள் உட்பட வெவ்வேறு தகவல் தொடர்பு உத்திகளைப் பயன்படுத்தி செய்தி, கல்வி, தகவல் தொடர்பு இயக்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள 14, 184 குடியிருப்புகளில், சட்ட அறிவு குறித்த முகாம் ஏற்கெனவே நடத்தப்பட்டுள்ளது. செலாவணி முறிச்சட்டம் தொடர்பான வழக்குகள் உட்பட,

புதிய வழக்குகள் மக்கள் நீதிமன்றங்களின் செயல்வரம்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. சிறப்பு மக்கள் நீதிமன்றங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்பான வழக்குகளைக் கூட தீர்த்து வைக்கின்றன. சட்ட அறிவுக்கு அப்பாற்பட்ட சட்டக் கல்வி பற்றிய ஏற்பாட்டு முறை ஒன்றினை நாம், திறம்பட்ட வகையில் செயல்படுத்த வேண்டும். அதனால், மக்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து அறிந்து கொள்ள முடியும். இது, அவர்களுடைய உரிமைகள் மீறப்படுகிற போது, அதற்கான பரிகாரங்களைக் காண்பதற்கு அவர்களுக்கு உதவும். வழக்குத் தொடுப்பதால் ஏற்படுகிற செலவைத் தவிர்க்க, இணக்கமான முறையில் தகராறுகளைத் தீர்த்துக் கொள்கிற முறைக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

கைதிகள் நீதிமன்றத் திட்டம் (Prisoners Adalat) தமிழ்நாட்டில் நன்கு செயல்பட்டு வருகிறது. இந் நீதிமன்றம், சென்னை மத்திய சிறையில் முதலில் தொடங்கப்பட்டது. தற்போது, ஏனைய மத்திய சிறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால், கைதிகள், நீதித்துறை அதிகாரிகளை அணுகுவது எளிதாக இருப்பதால் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

நீதித்துறையின் சுதந்திரமானச் செயல்பாடு நமது அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சமாகும். நீதியின் மாண்பினை நிலைநிறுத்த உதவும் இந்தச் சுதந்திரமானச் செயல்பாட்டை உறுதி செய்வதற்காக, நீதித் துறையின் பணி நிலைமைகளில் பல சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியமாகிறது. உயர்நீதிமன்ற நீதிபதி மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளின் பழுத்த அனுபவம் நமக்குப் பயன்பட, உயர்நீதிமன்ற நீதிபதியின் ஒய்வு பெறும் வயதினை 62–லிருந்து 65 ஆகவும் உச்சநீதிமன்ற நீதிபதியின் ஒய்வு பெறும் வயதினை 65–லிருந்து 67 ஆகவும் நாம் உயர்த்த வேண்டும். உச்சநீதிமன்ற நீதிபதிகள் முற்றிலும் வேறுபட்ட தனி வகையினராகக் கருதப்பட்டு, அவர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியத்திற்கு நிகரான ஒய்வூதியமும், வாகன வசதி, தனிப் பணியாளர்கள் முதலியன உள்ளிட்ட அவர்கள் பணியில் இருந்த போது பெற்று வந்த அனைத்துப் பயன்களும், வசதிகளும் பணியிலிருந்து ஒய்வு பெற்ற பின்னரும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதில் எனக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை. பல நீதிபதிகள், பணியிலிருந்து ஒய்வு பெற்ற பின்னர் விசாரணை ஆணையங்களின் நீதிபதிகளாகவும், நடுவர்மன்ற நீதிபதிகளாகவும் அரும்பணியாற்றுகின்றனர். அவர்களுக்குப் பணியிலிருக்கும் நீதிபதிகளுக்கு வழங்கப்படுவது போன்ற வசதிகளையும், சலுகைகளையும் அளிப்பதே பொருத்தமாக இருக்கும்.

அண்மைக் காலத்தில் வெளியான சட்ட நூல்கள், குறித்த கால வெளியீடுகள், பத்திரிகைகள் ஆகியவற்றைப் படித்து, அன்றாட விவரங்களை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக, உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவருக்கு, ஆண்டொன்றுக்கு, சிறப்பு ஒதுக்கீடாக ரூ.50,000 வழங்கப்பட வேண்டும். தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் நடைபெறுகிற மாநாடுகளில் நீதிபதிகள் கலந்து கொள்வதற்கு ஏதுவாக அவர்கள் மேற்கொள்கிற வெளிநாட்டுப் பயணங்களுக்கு

உச்சவரம்பு எதுவும் விதிக்காமல் மாநில அரசுகள் முழு ஆதரவு அளிக்க வேண்டும். இந்த வசதி, பணியிலிருந்து ஓய்வுபெற்ற நீதிபதிகளுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

பணியிலிருந்து ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதிகளின் பரந்த அனுபவத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாட்டின் தூதர்கள், ஆளுநர்கள் முதலிய உயர் பதவி நியமனங்களில் உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

இன்று, நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள பொருள்கள் மீதான என்னுடைய கருத்துகளைச் சுருக்கமாகத் தெரிவித்துள்ளேன். உச்சநீதிமன்றம் தெரிவித்த கருத்துரைகளின் அடிப்படையில், நீதித்துறை அதிகாரிகளுக்கு நல்ல வசதிகளையும், பணி நிலைமைகளையும் உருவாக்கித் தருவதுடன் ஊதியமும் வழங்க தமிழ்நாட்டில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நான் ஏற்கெனவே கோடிட்டுக் காட்டியபடி பல்வேறு கணக்குத் தலைப்புகளின் கீழ், மாநில அரசுகளுக்குத் தாராளமாக நிதியுதவி அளிக்க வேண்டும். விரைவு நீதிமன்றங்கள் உட்பட புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்த, முற்றிலும் புதிய மத்திய அரசுப் பொறுப்பேற்கும் திட்டம் ஒன்று அவசியம் என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விழைகிறேன். இதனால் மட்டுமே நீதித் துறைக்குப் புதிய உத்வேகம் அளிக்க முடியும்.

நமது நிலையை மதிப்பீடு செய்து விரைவில் நீதி வழங்கப்படுவதை உறுதி செய்வதான குறிப்பான செயல் திட்டங்களை வகுக்கும் ஒரு முயற்சியாக, நிருவாகத் துறையையும், நீதித்துறையையும் ஒரே இடத்தில் அமரச் செய்துள்ள வகையில் இந்த மாநாடு தனிச் சிறப்பைப் பெறுகிறது. தற்போது பெருகி வரும் புதிய வழக்குகளைச் சமாளிப்பதற்கான இடைவிடாத போட்டியில் தேவைப்படுகிற உத்வேகத்தை அளிக்க, இந்த விவாதங்கள் நிச்சயம் உதவும். சட்டம் மற்றும் நீதி நிருவாகத்தை நிலை நிறுத்துவது, அதன் மேன்மையை மிளிரச் செய்வது என்ற பொதுவான குறிக்கோளை எட்ட வேண்டுமேயானால், தகராறைத் தீர்த்து வைக்கும் மாற்று அமைப்புகள் உட்பட விரைவான நடவடிக்கைகளை நாம், தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்பது தெளிவாகிறது.

நீதி நிருவாகம் திறம்படச் செயல்படுவதற்காக, தேவையான ஆதாரங்களையும், வசதிகளையும் அளிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுமென்றாலும், நீதித்துறை, தனக்கென மிக உயரிய தொழில் ரீதியான தரங்களையும் நன்னெறிகளையும் வரையறுத்துக் கொண்டு சட்ட நிருவாகத்தின் மாண்பினை நிலை பெறச் செய்ய வேண்டியது அதன் கடமையாகிறது. சுய நெறிமுறைகளை வகுத்துக் கொண்டு அவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்றி பதில் சொல்லும் பொறுப்பையும் கட்டுப்பாட்டமைதியையும் உருவாக்க வேண்டும் என்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். நாட்டின் உயரிய நீதி நிருவாகத்தில் உள்ளவர்களை வேறு எந்த வெளி அமைப்பும் கட்டுப்படுத்த வேண்டியதில்லை. நாட்டின் உயரிய நீதி நிருவாகத்தில் உள்ளவர்கள் தங்களுக்குள்ளாகவே சுயக்கட்டுப்பாடுகளை உருவாக்கிக் கொண்டு, அதனடிப்படையில் பணியாற்றும்போதுதான் நீதித்துறையின் மேன்மை மிளிரும் என்பதில் முழு நம்பிக்கையும் உறுதியும் நமக்கு இருக்கிறது.

பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள நம் முன் உள்ள வினா இதுதான் – நாம் மக்களுக்குச் சேவை செய்வது எந்த முறையில் ஆட்சி அதிகாரத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களாகவா ? அல்லது மக்களுக்குப் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள அரசு பணியாளர்கள் என்ற முறையிலா ? அல்லது நீதி வழங்கும் ஆயத்தில் இடம்பெற்றுள்ள நீதிபதியாகவா, இது தொடர்பாக ஹென்றி புரௌஹாம் அவர்களின் வார்த்தைகளை இங்கே மேற்கோள் காட்ட விழைகிறேன்:

"ரோமப் பேரரசு, நான் வரும்போது, வெறும் செங்கற்களாலான கட்டடமாக இருந்தது. அதை பளிங்கு மாளிகையாக மாற்றிவிட்டு வந்தேன் என்று அகஸ்டஸ் மன்னன் பெருமை கூறி மார்தட்டிக் கொண்டார். ஆனால், அதற்குப் பதிலாக நான் பார்க்கும்போது முத்திரையிடப்பட்ட புத்தகமாக இருந்த சட்டத்தை உயிரோட்டமுள்ளதாக மாற்றிவிட்டு வந்தேன்; செல்வந்தர்களின் பரம்பரைச் சொத்தாக இருந்ததை வறியவர்களின் உரிமைச் சொத்தாக மாற்றிவிட்டு வந்தேன்; ஒரு புறம் தந்திரம், மற்றொருபுறம் அடக்குமுறை என இருபுறமும் கூர் தீட்டப்பட்ட வாளாக இருந்ததை, நேர்மையின் செங்கோலாகவும், ஏதுமறியாத அப்பாவிகளின் கேடயமாகவும் மாற்றிவிட்டு வந்தேன் என்று அவர் மார்தட்டியிருந்தால் அது அம்மன்னன் புகழுக்கு பெருமை சேர்த்திருக்கும்".

"மக்களின் நலன்தான் முடிவான சட்டமாகும்" என்று சிசெரோ கூறியுள்ளார். ஒரு ஜனநாயக நாட்டில், அரசின் ஆதார சுருதியாக விளங்குவது மக்களின் நலன்தான். மக்களின் நன்மைக்காகவே அனைத்து சட்டங்களும் இயற்றப்பட வேண்டும். அது, சட்டமன்றத்திற்குள்ள புனிதமான கடமையாகும். இதே கருத்து ஜனநாயகத்தின் மற்றொரு தூணாக விளங்கும் நீதித்துறைக்கும் பொருந்தும். எனவே, வழக்குகளை விரைந்து தீர்ப்பதற்கு மட்டுமின்றி, வழங்கப்படும் நீதியின் தரத்தை உயர்த்தத் தேவையான வசதிகளையும், உதவியையும் அளிப்பதற்கும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு முயற்சி மேற்கொள்வோமாக.

* * *

விவசாயிகளின் நலனுக்கு என் இதயத்தில் எப்போதுமே ஒரு தனி இடம் உண்டு



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
(24.9.2004)

"என்னுடைய அரசு, வளமான காலமோ, வறட்சிக் காலமோ, எப்போதுமே, விவசாயிகளின் தோழனாகவே இருந்து வந்துள்ளது. தமிழக விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் வேகமாக முன்னேற்றம் அடைவதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு, நான் எப்போதுமே உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளேன். விவசாய உற்பத்தித் திறன், தண்ணீர் உள்ளிட்ட இடுபொருட்களின் திறமையான பயன்பாடு மற்றும் பயிர்ச் சாகுபடியைப் பல்திறப்படுத்தி, பாசனத்திற்குக் குறைவான தண்ணீரே தேவைப்படக்கூடியப் பயிர்களான, காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு போன்ற பயிர்களைச் சாகுபடி செய்தல் ஆகிய நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலமே இதனைச் சாதிக்க வேண்டியுள்ளது. இந்நோக்கத்தை அடைய, தொலைநோக்குடன் கூடிய திட்டங்கள் தேவைப்படும். வேளாண்மைத் துறையில் உண்மையான முன்னேற்றம் காண இவற்றை எல்லாம் செய்ய நான் திட்டமிட்டுள்ளேன்.

2001–ஆம் ஆண்டு மே திங்களில், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதுமே, நமது விவசாயிகள், தங்களுக்கு விவசாயத்திலிருந்து கிடைக்கின்ற வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாக, புதுப் புதுத் திட்டங்களை மேற்கொள்ள உதவுவது என முடிவு செய்தேன். இந்த நோக்கத்தில்தான் ஒரு பெரும் நிவாரண நடவடிக்கையாக, விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளுக்கு வட்டி மற்றும் அபராத வட்டி வகையில் செலுத்த வேண்டி இருந்த மொத்தம் 310.50 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து நான் உத்தரவிட்டேன். இதனால், கூட்டுறவு அமைப்புகளுக்குப் பாதகம் வராமல் பாதுகாக்க அரசிடமிருந்து, அவ்வமைப்புகளுக்கு உரிய இழப்பீடு கிடைப்பதை நான் உறுதி செய்தேன். 2001–ஆம் ஆண்டு, மே திங்களில், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, நான் மேற்கொண்ட இந்த நடவடிக்கையானது, விவசாயிகளின் நலனுக்கு என் இதயத்தில் எப்போதுமே ஒரு தனி இடம் உண்டு என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது.

2002–2003ஆம் ஆண்டில், தமிழ்நாடு கடும் வறட்சியினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. அது போதாதென்று, காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின் அடிப்படையில் நமக்குச் சேரவேண்டிய தண்ணீரைக் கர்நாடக அரசு வழங்க மறுத்துவிட்டதால், காவிரி டெல்டா மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. முந்தைய தி.மு.க. ஆட்சி விட்டுச் சென்ற நெருக்கடியான நிதி நிலைமையின் பிடியில் சிக்கித் தவித்த என்னுடைய அரசுக்கு, இது ஒரு கடும் சவாலாக அமைந்தது. எங்களுடைய இடத்தில் வேறு எந்த அரசு இருந்திருந்தாலும் நிச்சயமாக, எங்களைப் போல நிலைமையைத் திறம்படச் சமாளித்திருக்க முடியாது. 2002–2003ஆம் ஆண்டில் நிலவிய வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள்

பயன்பெறுகின்ற விதத்தில் தொகுப்பு நிவாரண நடவடிக்கைகளை நான் மேற்கொண்டேன்.

2002–2003 ஆம் ஆண்டில், 250 கோடி ரூபாய் குறுகிய காலப் பயிர்க் கடன்களை, மத்திய காலப் பயிர்க் கடன்களாக மாற்றி என்னுடைய அரசு ஆணையிட்டது. வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் மோசமான நிலைமையைக் கருத்தில் கொண்டு, சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைகின்ற விதத்தில், 2002–2003ஆம் ஆண்டில், 61.05 கோடி ரூபாய் அளவுக்கு வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து நான் உத்தரவிட்டேன்.

மீண்டும், 2003–2004–ஆம் ஆண்டிலும் வறட்சி ஏற்பட்டது. அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சிகளினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எப்படியேனும் உதவிட வேண்டுமென என்னுடைய இதயம் துடித்தது. ஆகவே 2003–2004ஆம் ஆண்டில், மற்றொரு தொகுப்பு நிவாரண நடவடிக்கைகளை நான் அறிவித்தேன். 1.4.2002 முதல் 31.3.2004 வரையிலான கால அளவில், விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர் இழப்பை ஈடுசெய்து, அவர்கள் மீண்டும் வேளாண்மைப் பணிகளைத் தொடங்கிட வழங்கப்பட்ட 325.56 கோடி ரூபாயையும் சேர்த்து, என்னுடைய அரசு வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்காக மொத்தம் 850.44 கோடி ரூபாய் வழங்கியது. மேலும், 2003–2004–ஆம் ஆண்டில், பயிர்க் கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி வகையில் விவசாயிகள் செலுத்த வேண்டி இருந்த பாக்கித் தொகை 62 கோடி ரூபாயையும் என்னுடைய அரசு தள்ளுபடி செய்தது.

இந்த ஆண்டிலும் (2004–2005), வறட்சி தொடருமோ என்ற அச்சுறுத்தல் இருந்தது. 2004ஆம் ஆண்டு, செப்டம்பரில், நிலைமை சிறிது சீரடைந்துள்ளது. இதனால், மக்களிடையே மகிழ்ச்சியும், நம்பிக்கையும் துளிர்த்துள்ளது. விவசாயிகள் இந்த ஆண்டில் நல்ல விளைச்சல் கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும். அதே நேரத்தில், அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சியினாலும், கூட்டுறவு நிறுவனங்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகைகளை விவசாயிகள் செலுத்தாததாலும், அந்த கூட்டுறவு நிறுவனங்கள் தற்போது புதிய கடன் வழங்க முடியாத அளவுக்கு அவற்றின் நிதி நிலைமையில் முடக்கம் ஏற்பட்டுள்ளது. சாகுபடிப் பணிகளை மேற்கொண்டு நல்ல விளைச்சல் காண வேண்டும் என்ற ஆர்வத்துடன் விவசாயிகள் இருக்கின்ற இத்தருணத்தில், கூட்டுறவுக் கடன் நிறுவனங்களால், அவர்களுக்குத் தேவையான கடனை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பது கடும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

தொலைநோக்குப் பார்வையுடனும், விவசாயிகளின் நலனின்பால், என்னுடைய அரசுக்கு உள்ள உண்மையான அக்கறையினாலும், கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள், விவசாயிகளுக்கு இந்த ஆண்டில் வழங்குகின்ற கடனைக் கணிசமான அளவுக்கு உயர்த்திட நாங்கள் உறுதி செய்துள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 2003–2004ஆ ஆண்டில், பயிர்க் கடனாக 688 கோடி ரூபா வழங்கப்பட்டதற்கு மாறாக, 2004–2005ஆம் ஆண்டி கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் இதனை 1,037 கோ ரூபாயாக உயர்த்தி வழங்கிட வேண்டும் என இலக் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மேலும் பய அடைவதை உறுதி செய்யும் வகையில், 2004–2005ஆ பருவ ஆண்டில், பயிர்க் கடன்கள் மீதான வட்டி விகித ஆண்டு ஒன்றுக்கு 9 சதவிகிதமாகக் குறைக்க பட்டுள்ளது. கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்(புத்துயிர் ஊட்டி, வலுப்படுத்துவதன் மூலம், 1,037கோ ரூபாய் என்ற உயர்த்தப்பட்ட இலக்கை எய்துவ சாத்தியமாகும். இந்த இலக்கை அடைய, என்னுடை அரசு கூட்டுறவு வங்கிகளுக்கு ரொக்க உதவியா 217.32 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

பொதுவாக, கூட்டுறவுக் கடன் நிறுவன களிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தாம மிகைப் பற்று வைத்துள்ள விவசாயிகளுக்குப் புதிதா கடன் வழங்கப்பட மாட்டாது. அடுத்தடுத்து ஏற்பட் வறட்சியின் காரணமாக, பெரும்பாலான விவசாயிக புதிய கடன் பெறும் தகுதியை இழந்து விட்டார்கள் இக்கடன் பாக்கியைத் திருப்பிச் செலுத்துவதற்(அவர்களுக்குப் போதிய அவகாசம் அளிக்கப்ப வேண்டும். அதிலும் முக்கியமாக, இந்த பருவத்தில், அவர்களுக்கு மேலும் புதிதாகக் கட வழங்கி அவர்கள் அமோக விளைச்சல் காண்பதற்கா வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

விவசாயிகள் புதிதாகக் கடன் பெறுவதற்கா தகுதியைப் பெறுவதற்கு ஏதுவாக, தொடக் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தமட்டில் 31.3.2004 நிலவரப்படி, ஒவ்வொரு உறுப்பின கணக்கிலும், நிலுவையாக உள்ள குறுகிய கால கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான கா அட்டவணையை மாற்றி அமைக்க நான் உத்தரவிட்டுள்ளேன். தமிழக விவசாயப் பெருமக்களின் நலன் கருதி, 2,598 கோடி ரூபாய் அளவுக்கான குறுகிய கால பயிர்க்கடன்களை, முதல் இரண்டாண்டு கால கடன் தவணைகளை ஒத்தி வைத்து, அதற்குப் பிறகு 3 ஆண்டுகளில் அந்தக் கடன்களைச் சம தவணைகளாகத் திருப்பிச் செலுத்தும் வகையில் மொத்தம் 5 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தத்தக்க நீண்ட காலக் கடன்களாக மாற்றி அமைக்க நான் ஆணையிட்டுள்ளேன். இந்த ஏற்பாட்டின் மூலமாக ஏற்கெனவே பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தாததால் புதிதாகக் கடன் பெறும் தகுதியை இழந்துள்ள விவசாயிகளும், புதிதாகக் கடன்பெற முடியும். இதனால் கூட்டுறவு வங்கிகளும், நடப்பாண்டுக்குரிய (2004–2005) இலக்கான 1,037 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் வழங்க இயலும். அனைத்து விவசாயிகளும், இந்தப் பருவத்தில், புதிதாகக் கடன்பெற்று, சாகுபடிப் பணிகளை மேற்கொள்ள வசதியாக, ஒரு பெரும் நிவாரண நடவடிக்கையாக குறுகிய காலக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால அட்டவணையை நான் மாற்றி அமைத்து ஆணையிட்டுள்ளேன். ◆

திரைப்படத் தொழிலை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல அரசு செயல்படுத்தவிருக்கும் தொகுப்பு நடவடிக்கைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 27.9.2004

கடந்த 23.9.2004 அன்று, ஒட்டுமொத்த தமிழ்த் திரைப்படத் துறையினர் சென்னை மாநகரில் ஒரு பெரும் பேரணியை நடத்தி அன்று என்னைச் சந்தித்து, தமிழ்த் திரைப்படத் துறை சந்தித்து வருகின்ற பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறினர். இந்தச் சந்திப்பின் போது, தமிழ்த் திரைப்படத் துறையைச் சார்ந்த பல்வேறு சங்கங்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் தமிழ்த் திரைப்படத் துறை சந்தித்து வருகிற பல்வேறு பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறியதுடன், அந்தப் பிரச்சினைகளைச் சீர்படுத்தி தமிழ்த் திரைப்பட உலகிற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். திரைப்படத் துறையின் ஓர் அங்கமாக நானே முன்னர் இருந்த காரணத்தால், திரைப்படத் தொழிலைப் பாதிக்கின்ற அனைத்து பிரச்சினைகள் குறித்து நானும் அறிவேன். திரைப்படத் துறைப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற விரிவான ஆலோசனைக்குப் பின், கடும் வீழ்ச்சியில் இருக்கும் தமிழ்த் திரைப்படத் தொழிலை இந்தச் சரிவில் இருந்து மீட்டு முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல உதவிடும் நோக்கத்துடன் தொகுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நான் முடிவெடுத்து உள்ளேன். என்னுடைய அரசு செயல்படுத்தவிருக்கும் தொகுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:–

திரைப்படம் பார்ப்பவர்களை திரையரங்குகளுக்கு வர விடாமல் செய்கின்ற, திருட்டு வீடியோ பிரச்சினை தான் தமிழ் திரைப்படத் துறை சந்தித்து வரும் மிக முக்கியமான பிரச்சினை ஆகும். இவ்வாறு திரைப்படத் தொழிலை வெகுவாகப் பாதிக்கின்ற திருட்டு வீடியோ தயாரிப்பை ஒடுக்க கடுமையான புதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று திரைப்படத் துறையின் பிரதிநிதிகள் என்னைக் கேட்டுக் கொண்டனர். திருட்டு வீடியோவுக்கு எதிராக நான் ஏற்கெனவே கடுமையான நிலை எடுத்து, மிகவும் திறமான நடவடிக்கைகளால் இந்தத் தொல்லைக்கு ஒரு முடிவு கட்டுமாறு கண்டிப்பாக உத்தரவுகள் பிறப்பித்துள்ளேன். என்னுடைய உத்தரவின் காரணமாகவே 1995–ஆம் ஆண்டில் 6 வீடியோ திருட்டு தடுப்பு சிறப்புப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. இந்த 6 வீடியோ திருட்டு தடுப்பு சிறப்புப் பிரிவுகளும் திருட்டு வீடியோ தொல்லையைத் தடுத்து நிறுத்த தங்களால் இயன்ற அளவு சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன. 2003–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்த 9 ஆண்டு காலத்தில் 2,354 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 12 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவால் பறிமுதல் செய்யப்பட்டன. ஆனால், என்னுடைய கண்டிப்பான உத்தரவின் பேரில், 2004–ஆம் ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களில் 959 குற்றங்கள் கண்டறியப்பட்டு, 10 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. திருட்டு வீடியோவைத் தடுப்பதற்கு எனது அரசின் சிறப்பான நடவடிக்கைகள் எத்தகைய பயன்களை விளைவித்துள்ளன என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டு ஆகும்.

திருட்டு வீடியோவை ஒழிப்பதற்கு எனது அரசு எடுத்துள்ள கடுமையான நடவடிக்கைகளுக்கு தங்களது

பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்ட தமிழ் திரைப்படத் துறையின் பிரதிநிதிகள், வீடியோ திருட்டு திறம்படத் தடுக்கப்படுவதை உறுதி செய்ய புதிய வழிவகைகள் காணப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். நான் இந்தக் கோரிக்கை மீது முழுமையான ஆய்வு மேற்கொண்டு, அதன் அடிப்படையில் திருட்டு வீடியோவைத் திறம்படத் தடுக்கும் வகையில் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று தீர்மானித்து உள்ளேன். பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில், திரையிட அனுமதிக்கப்படாத திரைப்படங்கள், அதுவும், தணிக்கை செய்யப்படாத திரைப்படங்கள் உள்ளிட்ட பல திரைப்படங்கள் திருட்டு வீடியோக்கள் மூலம் மக்களுக்குக் காட்டப்படுகின்றன. 1982–ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்கு குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மற்றும் குடிசைப் பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 14/1982) வரம்பின்கீழ் வீடியோ திருட்டு செய்பவர்களையும் கொண்டு வரும் வகையில் திருத்தம் செய்ய எனது அரசு முடிவெடுத்து உள்ளது. பொது ஒழுங்கிற்குக் குந்தகம் விளைவித்து அரசுக்கு நிதி இழப்பையும் உருவாக்குகின்ற இந்த வீடியோ திருட்டை மிகவும் திறம்படத் தடுப்பதற்கு இது உதவும். சமூக விரோத சக்திகள் அமைப்பு ரீதியான குழுக்களாக இயங்கி, திருட்டு வீடியோ தயாரிப்பு வேலைகளைச் செய்து வருகின்றன. இதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தை அவர்கள் மற்ற சமூக விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ள பயன்படுத்துகிறார்கள். இதன் விளைவாக இத்தகைய குழுக்களுக்கிடையே மோதல்கள் உருவாகி பொது அமைதிக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. ஆக, வீடியோ திருட்டையும் இந்தச் சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்பதையே இவை எல்லாம் சுட்டிக் காட்டுகின்றன. எனவே, இவ்வாறு சட்டத்தில் திருத்தம் செய்திட எனது அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

1982–ஆம் ஆண்டின் சட்டம் 14–ன் கீழ் திருட்டு வீடியோவைத் திறம்பட தடுக்கும் நடவடிக்கையை அறிமுகப்படுத்துவதுடன், 1957–ஆம் ஆண்டின் பதிப்புரிமைச் சட்டத்தையும் (மத்திய சட்டம்) கண்டிப்புடன் செயல்படுத்த எனது அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். இந்தச் சட்டத்தின் கீழ் வருகின்ற குற்றங்கள், ஆறு மாதங்களுக்குக் குறையாமல் ஆனால் 3 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய சிறை தண்டனையும், 50,000 ரூபாய்க்குக் குறையாமல் ஆனால் 2 இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய அபராதமும் விதித்து தண்டிக்கப்படத் தக்கனவாகும். 1957–ஆம் ஆண்டின் பதிப்புரிமைச் சட்டத்தின் கீழ் வழக்குகள் மேலும் திறம்பட நடத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் எனது அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். சாட்சிகளை ஆஜர்படுத்துவது, சிறை தண்டனை உள்ளிட்ட உரிய தண்டனை கிடைக்கும் வகையில் வழக்கை விரைவாக நடத்துவதை உறுதிப்படுத்துவது ஆகியவை இதில் அடங்கும். இதன் பொருட்டு, தற்போதுள்ள 6 வீடியோ திருட்டு தடுப்பு சிறப்புப் பிரிவுகளுடன், கூடுதலாக மேலும் 6 வீடியோ திருட்டு தடுப்பு சிறப்புப் பிரிவுகள் உருவாக்கப்படும். இதனால் மொத்த வீடியோ திருட்டு தடுப்பு சிறப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை 12–ஆக உயரும். அத்துடன் தற்போதுள்ள 6 வீடியோ திருட்டு தடுப்பு சிறப்புப் பிரிவுகளும் உடனடியாக வலுப்படுத்தப்படும்.

தொலைபேசி எண் 100–ஐத் தொடர்பு கொண்டு, காவல்துறை கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்கலாம். புகார் கிடைக்கப் பெற்றவுடனே அவர்கள் திருட்டு வீடியோ பிரிவை உஷார்படுத்துவர். இதன் மூலம் உடனடியாக நடவடிக்கை எடுப்பது உறுதிப்படுத்தப்படும்.

அடுத்தப்படியாக, பேருந்துகளில் பரவலாக திருட்டு வீடியோ திரைப்படங்கள் காட்டப்படுவது என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பேருந்துகளில் திருட்டு வீடியோ திரைப்படம் எதனையும் காட்டக் கூடாது என அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குக் கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் அத்தகைய திருட்டு வீடியோ திரைப்படங்கள் திரையிடாதவாறு பார்த்துக் கொள்ளும், தவிரவும் தனியார் பேருந்துகளில் இத்தகைய திருட்டு வீடியோ திரைப்படங்களைத் திரையிடக் கூடாது என தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு திருட்டு வீடியோ திரைப்படங்கள் காட்டுவதானது, தமிழ்நாடு 1984–ஆம் ஆண்டு வீடியோ பேழைகள், பதிவுக் கருவிகள் மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பு மூலமாக தொலைக்காட்சிகளில் திரைப்படங்கள் காட்டல் (முறைப்படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/84) கீழ் குற்றமாகும். இச்சட்டத்தின் விதித் துறைகளை மீறுகின்ற பேருந்து உரிமையாளர்கள் மீது, இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். இரண்டாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இவ்விரண்டும் விதிக்க வகை செய்து இச்சட்டத்தின் 15(2) பிரிவைத் திருத்தவும் என்னுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். இவ்வாறு விதிக்கப்படுகின்ற அபராதமானது 1 இலட்சம் ரூபாய்க்குக் குறையாமலும் 5 இலட்சம் ரூபாய் வரையிலும் இருக்கும். திரும்பத் திரும்ப இக்குற்றம் புரிபவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத்தை அதிகரிக்க வகை செய்யும் 15(2) பிரிவு திருத்தப்படும்.

திரைப்படத் தொழில் சந்தித்து வருகின்ற இன்னல்களைக் கருத்தில் கொண்டு கேளிக்கை வரி குறைக்கப்பட வேண்டுமெனவும் திரைப்படத் தொழில் சார்ந்த பிரதிநிதிகள் என்னைக் கேட்டுக் கொண்டார்கள். கேளிக்கை வரி விதிப்பு தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளையும் நான் கவனமாகப் பரிசீலித்தேன். திரைப்படத் தொழிலுக்கு உயரளவு ஊக்கமும் உத்வேகமும் அளிக்கின்ற விதத்தில் கேளிக்கை வரி விதிப்பு முறையில் பெரிய அளவில் மாற்றங்கள் செய்ய நான் முடிவு செய்துள்ளேன்.

தற்போது மாநகராட்சிப் பகுதிகளிலும் சிறப்புநிலை நகராட்சிப் பகுதிகளிலும் புதிய திரைப்படங்களுக்கு வசூலிக்கப்படுகின்ற மொத்தத் தொகையில் 25 சதவிகிதம், பழைய திரைப்படங்களுக்கு வசூலிக்கப் படுகின்ற தொகையில் 20 சதவிகிதம் என்ற அளவில் கேளிக்கை வரிகள் விதிக்கப்படுகின்றன. இது புதிய படங்களுக்கு 15 சதவிகிதமாகவும் பழைய படங்களுக்கு 10 சதவிகிதமாகவும் குறைக்கப்படும். இந்த வரி விகிதமானது இந்த உள்ளாட்சிப் பகுதிகளிலிருந்து 5 கிலோ மீட்டர் சுற்றளவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நிரந்தரமான மற்றும் ஓரளவு நிரந்தரமான திரையரங்குகளுக்கும் பொருந்தும்.

மற்ற பகுதிகளில், காட்சி ஒன்றுக்கு அல்லது வாரம் ஒன்றுக்கான இணக்க வரி அடிப்படையில் கேளிக்கை வரி விதிக்கப்படுகிறது. இந்த இணக்க வரி விதிப்பு முறையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக இப்பகுதிகள் அனைத்திலும் வசூலிக்கப்படுகின்ற மொத்தத் தொகையில் 10 சதவிகிதம் என்ற எளிமையான வரி விதிப்பு முறையை அறிமுகப்படுத்த நான் முடிவு செய்துள்ளேன்.

கேளிக்கை வரி விதிப்பு மூலமாகக் கிடைக்கின்ற வருமானத்தில் 90 சதவிகிதம் தற்போது உள்ளாட்சி மன்றங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு வரி விகிதங்கள் கடுமையாகக் குறைக்கப்படுவதனால் உள்ளாட்சி மன்றங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படக்கூடும். உள்ளாட்சி மன்றங்களுக்கு வருவாய் இழப்பு எதுவும் ஏற்படாதவாறு பாதுகாக்க அவற்றுக்குத் தக்க இழப்பீட்டு ஏற்பாடுகள் செய்யப்படும்.

நல்ல கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு குறைந்த செலவில் தயாரிக்கப்படுகின்ற திரைப் படங்களுக்குக் (Low Budget Films) கேளிக்கை வரி விதிப்பிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. சமூகத்தில் நல்ல சிந்தனையை உருவாக்கி நல்ல செய்திகளைப் பரப்புகின்ற விதத்தில் தயாரிக்கப் படுகின்ற குறைந்த செலவிலான திரைப்படங்கள், கேளிக்கை வரி விதிப்பிலிருந்து முழுமையாக விலக்குப் பெற தகுதி பெறும்.

திரைப்படக் கட்டணங்கள் கடைசியாக திருத்தியமைக்கப்படுவதற்கு முன்னதாக பராமரிப்புச் செலவுத் தொகைகள் அனுமதிக்கப்பட்டு வந்தன. அரங்குகளையும், திரைப்படக் கொட்டகைகளையும் நல்ல முறையில் பராமரிப்பதற்கு வசதியாக முன்னர் வழங்கப்பட்டு வந்த பராமரிப்புக் கட்டணங்கள் மீண்டும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு குளிர்சாதனை வசதி இல்லாத திரையரங்குகளைப் பொறுத்த வரையில் அனுமதிச் சீட்டு ஒன்றுக்கு 50 காசு என்ற வீதத்திலும், குளிர்சாதன வசதி உள்ள திரையரங்குகளைப் பொறுத்த வரையில் அனுமதிச் சீட்டு ஒன்றுக்கு ரூபாய் ஒன்று என்ற வீதத்திலும் பராமரிப்புச் செலவினம் அனுமதிக்கப்படும்.

திரைப்படத் தொழில் தற்போது சந்தித்து வருகின்ற இக்கட்டான நிதிநிலைமையில் வெளிப்புறப் படப்பிடிப்பு பிரிவுகள், திரைப்படச் சாதனங்களை வாடகைக்கு விடுவோர், படப்பிடிப்பு அரங்கங்கள், ஆய்வுக் கூடங்கள், ஒலிப்பதிவு அரங்குகள், ஆடியோ, வீடியோ, சேட்டிலைட் உரிமைகள் ஆகியவற்றுக்கான குத்தகையின் மீது 12 சதவிகிதத்தில் விற்பனை வரி விதிக்கப்படுவது இன்னலை ஏற்படுத்துவதாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஆகவே திரைப்படத் தொழில் சார்ந்த இத்தகைய குத்தகை நடவடிக்கைகளுக்கு மூன்றாண்டுகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது என நான் முடிவு செய்துள்ளேன். இம்முடிவினைக் கருத்திற்கொண்டு அத்தகைய குத்தகைகள் மீது விற்பனை வரி வசூலிக்க எடுக்கப்பட்ட தண்டனை நடவடிக்கைகளும் திரும்பப் பெறப்படும்.

தமிழ்நாட்டில் திரைப்பட படப்பிடிப்புகள் நடத்தப்படுவதை ஊக்குவிக்குகின்ற வகையிலும் நலிந்து வரும் திரைப்படத் தொழிலுக்கு, கைகொடுத்து உதவுகின்ற வகையிலும் பொது இடங்களில் படப்பிடிப்புகள் நடத்துவதற்கான கட்டண வீதங்கள் குறைக்கப்பட வேண்டும் என்றும் திரைப்படத் தொழில் சார்ந்தவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டார்கள். கல்லூரிகள், கொடைக்கானல் மற்றும் உதகை ஏரி, வன விலங்கு உய்விடங்கள், மருத்துவமனைகள் முதலிய வகை–Iஐச் சேர்ந்த இடங்களில் படப்பிடிப்புகள் நடத்த தற்போது நாள் ஒன்றுக்கு 50,000 ரூபாய் கட்டணம் விதிக்கப்படுகிறது. இக்கட்டணம் நாள் ஒன்றுக்கு 10,000 ரூபாயாகக் குறைக்கப்படும். ஏனைய பொது இடங்களை உள்ளடக்கிய வகை–IIஐச் சேர்ந்த இடங்களுக்கான கட்டணம் நாள் ஒன்றுக்கு 25,000 ரூபாயிலிருந்து நாள் ஒன்றுக்கு 5,000 ரூபாயாகக் குறைக்கப்படும். ராஜாஜி ஹாலில் படப்பிடிப்பு நடத்துவதற்கான கட்டணம் நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து நாள் ஒன்றுக்கு 25,000 ரூபாயாகக் குறைக்கப்படும்.

திரைப்படத் தொழிலுக்கு ஊக்கம் அளிக்கின்ற விதத்தில் முன்னர் மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் அரசுக்கு 2000–ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட கடும் நிதி நெருக்கடி காரணமாக இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த இயலவில்லை. திரைப்படத் தொழில் சந்தித்து வருகின்ற இக்கட்டான நிலைமையைக் கருத்தில் கொண்டு இத்திட்டம் மீண்டும் செயற்படுத்தப்பட வேண்டும் என திரைப்படத் துறையினர் ஒரு கோரிக்கை வைத்துள்ளனர். மொத்தம் 25 பிரதிகளுக்கு மேல் எடுக்கப்படாத மற்றும் 3,000 மீட்டர் நீளத்திற்கு மேற்படாத குறைந்த செலவிலான திரைப்படங்களுக்கு, திரைப்படம் ஒன்றுக்கு 7 இலட்சம் என்று உயர்த்தப்பட்ட வீதத்தில் மானியம் வழங்குகின்ற புதிய திட்டம் 2003–ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். □

தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள்

கடும் வீழ்ச்சியில் இருந்த தமிழ்த் திரைப்படத் தொழில் மீட்சியுறும் வகையில் பல்வேறு சலுகைகளை அறிவித்து ஆக்கமும், ஊக்கமும் அளித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்த் திரைப்படத் துறையினருக்கு மேலும் உற்சாகம் அளிக்கும் வகையில், 2000, 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கான, சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த இயக்குநர்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகைகள் மற்றும் சிறந்த தொழில் நுட்பக் கலைஞர்கள், கலைத்துறை வித்தகர்கள், மற்றும் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறும்படங்களின் சிறந்த இயக்குநர், நடிகர், தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகிய விருதுகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளோரின் பெயர்களை 30.9.2004 அன்று அறிவித்துள்ளார்கள்.

தமிழ்த் திரைப்படத் தொழிலுக்கு ஊக்கம் கொடுத்து, தமிழ்த் திரைப்படத் துறையினருக்கு உற்சாகம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகளை வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் வழங்கும் இந்தத் திட்டத்தின்கீழ், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த இயக்குநர்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகைகள் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறும்படங்களின் சிறந்த இயக்குநர், நடிகர், தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. மேலும், தமிழ்த்திரைப்படத் தொழிலின் மேம்பாட்டுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு, சாதனைகள் படைத்து, சிறந்த சேவையாற்றி வருகின்ற சாதனையாளர்களுக்கு, கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகளை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

இவ்வகையில் 2000, 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கு, இவ்விருதுகளுக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ள சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த இயக்குநர்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகைகள் மற்றும் சிறந்த தொழில் நுட்பக் கலைஞர்கள், கலைத்துறை வித்தகர்கள், மற்றும் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறும்படங்களின் சிறந்த இயக்குநர், நடிகர், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரின் பெயர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.9.2004 அன்று அறிவித்தார்கள்.

தமிழ்த் திரைப்படத் துறைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் வகையிலும், தமிழ்த் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் உற்சாகமும், புத்துணர்வும் பெறும் வகையிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ள விருதுகள் விவரம்:

2000–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்

1	சிறந்த படம்	முதல் பரிசு	வானத்தைப்போல
2	சிறந்த படம்	இரண்டாம் பரிசு	வானவில்
3	சிறந்த படம்	மூன்றாம் பரிசு	வெற்றிக்கொடி கட்டு
4	சிறந்த படம்	சிறப்புப் பரிசு	பாரதி
5	பெண்களைப்பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படம்	சிறப்புப் பரிசு	இனிய உதயம்
6	அளவான திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படம்	முதல் பரிசு	பட்ஜெட் பத்மநாபன்
7	அளவான திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படம்	இரண்டாம் பரிசு	முகவரி
8	அளவான திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படம்	மூன்றாம் பரிசு	உயிரிலே கலந்தது

1	சிறந்த நடிகர்	முரளி	(கடல் பூக்கள்)
2	சிறந்த நடிகை	தேவயானி	(பாரதி)
3	சிறந்த நடிகர்	சிறப்புப் பரிசு	ஜெயராம் (தெனாலி)
4	சிறந்த நடிகை	சிறப்புப் பரிசு	ஷாலினி(அலை பாயுதே)
5	சிறந்த வில்லன் நடிகர்	பிரகாஷ்ராஜ்	(வானவில் / அப்பு)
6	சிறந்த நகைச்சுவை நடிகர்	வடிவேலு	(வெற்றிக்கொடி கட்டு)
7	சிறந்த இயக்குநர்	விக்ரமன்	(வானத்தைப் போல)
8	சிறந்த கதையாசிரியர்	மனோஜ்குமார்	(வானவில்)

9	சிறந்த உரையாடலாசிரியர்	சேரன்	(வெற்றிக்கொடி கட்டு)
10	சிறந்த இசையமைப்பாளர்	தேவா	(குஷி / உயிரிலே கலந்தது / சந்தித்த வேளை)
11	சிறந்த பாடலாசிரியர்	தாமரை	(தெனாலி)
12	சிறந்த பின்னணிப் பாடகர்	ஹரிஷ் ராகவேந்திரா	(பாரதி)
13	சிறந்த பின்னணிப் பாடகி	பவதாரணி	(பாரதி)
14	சிறந்த ஒளிப்பதிவாளர்	ஆனந்தகுட்டன்	(கண்ணுக்குள் நிலவு)
15	சிறந்த ஒலிப்பதிவாளர்	சிவகுமார்	(ரிதம்)
16	சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்)	மோகன் ராஜ்	(சீனு)
17	சிறந்த ஆர்ட் டைரக்டர்	ஜி. கிருஷ்ணமூர்த்தி	(தெனாலி / வானவில்)
18	சிறந்த சண்டைப் பயிற்சியாளர்	ஸ்டண்ட் சிவா	(கண்ணுக்குள் நிலவு)
19	சிறந்த நடன ஆசிரியர்	பிருந்தா	(முகவரி)
20	சிறந்த ஒப்பனைக் கலைஞர்	கிரிசன்	(சீனு)
21	சிறந்த தையற்கலைஞர்	ஜி. கிருஷ்ணமூர்த்தி	(பாரதி)
22	சிறந்த குழந்தை நட்சத்திரம்	யுவகாந்த்	(மாயி)
23	சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்)	ராஜீவ்	(பாரதி)
24	சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்)	சவீதா	(பிரியமானவளே)

2000–2001ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்படத் தொலைக்காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்

1	சிறந்த இயக்குநர்	வி. அறிவழகன்	(புதினம்)
2	சிறந்த ஒளிப்பதிவாளர்	வினோத் குமார்	(சிறகுகள்)
3	சிறந்த ஒலிப்பதிவாளர்	தமிழ்வாணன்	(வெளிச்சம்)
4	சிறந்த படத் தொகுப்பாளர்	ஜெயா	(ஐயா)
5	சிறந்த படம் பதனிடுபவர்	நரசிம்மலு	(சிறகுகள்)
6	சிறந்த நடிகர்	விஜய் ராகவேந்திரா	(மலரட்டும்)

கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் – 2000

1	அறிஞர் அண்ணா விருது	திருமதி. அஞ்சலிதேவி
2	கலைவாணர் விருது	திருமதி. பத்மினி
3	ராஜா சாண்டோ விருது	திரு. குன்னக்குடி வைத்தியநாதன்
4	எம்.ஜி.ஆர். விருது	திருமதி. ஜமுனா
5	கவிஞர் கண்ணதாசன் விருது	திருமதி. S. வரலட்சுமி
6	நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விருது	திருமதி. சுகுமாரி
7	தியாகராஜ பாகவதர் விருது	திருமதி. எம்.என். ராஜம்

2001–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்

1	சிறந்த படம்	முதல் பரிசு	விரும்புகிறேன்
2	சிறந்த படம்	இரண்டாம் பரிசு	பாண்டவர் பூமி
3	சிறந்த படம்	மூன்றாம் பரிசு	ஆனந்தம்
4	சிறந்த படம்	சிறப்புப் பரிசு	நந்தா
5	பெண்களைப்பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படம்	சிறப்புப் பரிசு	ஜுமீலா
6	அளவான திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படம்	முதல் பரிசு	சொன்னால்தான் காதலா
7		இரண்டாம் பரிசு	பூவெல்லாம் உன் வாசம்

1	சிறந்த நடிகர்	சூர்யா	(நந்தா)
2	சிறந்த நடிகை	சினேகா	(விரும்புகிறேன் / ஆனந்தம் / புன்னகை தேசம்)
3	சிறந்த நடிகர்	சிறப்புப் பரிசு	அஜீத் (பூவெல்லாம் உன் வாசம்)
4	சிறந்த நடிகை	சிறப்புப் பரிசு	கவலெட்சுமி (ஜுமீலா)
5	சிறந்த வில்லன் நடிகர்	அலெக்ஸ்	(மிட்டா மிராசு)
6	சிறந்த நகைச்சுவை நடிகர்	வடிவேலு	(தவசி)
7	சிறந்த இயக்குநர்	சுசி கணேசன்	(விரும்புகிறேன்)
8	சிறந்த கதையாசிரியர்	சாரா அபூபக்கர்	(ஜுமீலா)
9	சிறந்த உரையாடலாசிரியர்	ஷாஜகான்	(புன்னகை தேசம்)
10	சிறந்த இசையமைப்பாளர்	வித்யாசாகர்	(தில் / தவசி / பூவெல்லாம் உன் வாசம்)
11	சிறந்த பாடலாசிரியர்	சினேகன்	(பாண்டவர் பூமி)
12	சிறந்த பின்னணிப் பாடகர்	உன்னிகிருஷ்ணன்	(தில்)
13	சிறந்த பின்னணிப் பாடகி	சுஜாதா	(தில்)
14	சிறந்த ஒளிப்பதிவாளர்	ரத்னவேலு	(நந்தா)
15	சிறந்த ஒலிப்பதிவாளர்	சத்யா	(சாக்லெட்)

16	சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்)	காசி விசுவநாதன்	(ஆளவந்தான்)
17	சிறந்த ஆர்ட் டைரக்டர்	பிரபாகரன்	(பூவெல்லாம் உன் வாசம்)
18	சிறந்த சண்டைப் பயிற்சியாளர்	சூப்பர் சுப்பராயன்	(தவசி / மிட்டா மிராசு)
19	சிறந்த நடன ஆசிரியர்	சின்னி பிரகாஷ்	(தவசி)
20	சிறந்த ஒப்பனைக் கலைஞர்	நாகேஸ்வர ராவ்	(தில்)
21	சிறந்த தையற்கலைஞர்	சாய்	(பூவெல்லாம் உன் வாசம் / தவசி)
22	சிறந்த குழந்தை நட்சத்திரம்	டி.ஆர்.குறளரசன்	(சொன்னால்தான் காதலா)
23	சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்)	சாய் ரவி	(தில்)
24	சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்)	ஸ்ரீஜா	(தில்)

2001–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் (முதல் தடவையாக)

1	சிறந்த குணச்சித்திர நடிகர்	ராஜ்கிரண் (பாண்டவர் பூமி / நந்தா)
2	சிறந்த குணச்சித்திர நடிகை	ஈஸ்வரி ராவ் (விரும்புகிறேன்)
3	சிறந்த நகைச்சுவை நடிகை	கோவை சரளா (பூவெல்லாம் உன் வாசம்)

2001–2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்படத் தொலைக்காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்

1	சிறந்த இயக்குநர்	சம்பத்குமார் (பயணம்)
2	சிறந்த ஒளிப்பதிவாளர்	பிரேம்குமார் (பரமபதம்)
3	சிறந்த ஒலிப்பதிவாளர்	ஜெகன் (தாத்தா)
4	சிறந்த படத் தொகுப்பாளர்	பாலாஜி (சுவடுகள்)
5	சிறந்த படம் பதனிடுபவர்	சேதுரகுராமன் (பரமபதம்)

கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் – 2001

1	அறிஞர் அண்ணா விருது	திரு. பாரதிராஜா
2	கலைவாணர் விருது	திருமதி. ராஜ சுலோசனா
3	ராஜா சாண்டோ விருது	திரு. கே. பாலாஜி
4	எம்.ஜி.ஆர். விருது	திருமதி. பி.எஸ். சரோஜா
5	கவிஞர் கண்ணதாசன் விருது	திருமதி. வாணிஸ்ரீ
6	நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விருது	திரு. ரவிச்சந்திரன் (நடிகர்)
7	தியாகராஜ பாகவதர் விருது	திருமதி. வைஜயந்திமாலா

2002–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்

1	சிறந்த படம்	முதல் பரிசு	ரமணா
2	சிறந்த படம்	இரண்டாம் பரிசு	கன்னத்தில் முத்தமிட்டால்
3	சிறந்த படம்	மூன்றாம் பரிசு	உன்னை நினைத்து
4	சிறந்த படம்	சிறப்புப் பரிசு	கிங்
5	பெண்களைப்பற்றி உயர்வாக சித்தரிக்கும் திரைப்படம்	சிறப்புப் பரிசு	குருவம்மா

1	சிறந்த நடிகர்	மாதவன்	(ரன் / அன்பே சிவம் / கன்னத்தில் முத்தமிட்டால்)
2	சிறந்த நடிகை	மீனா	(இவன்)
3	சிறந்த நடிகர்	சிறப்புப் பரிசு	பிரபு (சார்லி சாப்ளின்)
4	சிறந்த நடிகை	சிறப்புப் பரிசு	நந்திதா தாஸ் (கன்னத்தில் முத்தமிட்டால்)
5	சிறந்த வில்லன் நடிகர்	நாசர்	(தமிழ்)
6	சிறந்த நகைச்சுவை நடிகர்	விவேக்	(ரன்)
7	சிறந்த இயக்குநர்	மணிரத்னம்	(கன்னத்தில் முத்தமிட்டால்)
8	சிறந்த கதையாசிரியர்	சுசி கணேசன்	(பைவ் ஸ்டார்)
9	சிறந்த உரையாடலாசிரியர்	ஏ.ஆர்.முருகதாஸ்	(ரமணா)
10	சிறந்த இசையமைப்பாளர்	சிற்பி	(உன்னை நினைத்து)
11	சிறந்த பாடலாசிரியர்	ரவிசங்கர்	(உன்னை நினைத்து / வருஷமெல்லாம் வசந்தம்)
12	சிறந்த பின்னணிப் பாடகர்	உன்னிமேனன்	(உன்னை நினைத்து / வருஷமெல்லாம் வசந்தம்)
13	சிறந்த பின்னணிப் பாடகி	சின்மயி	(கன்னத்தில் முத்தமிட்டால்)
14	சிறந்த ஒளிப்பதிவாளர்	அர்ஜூன் ஜெனா	(காதல் வைரஸ்)
15	சிறந்த ஒலிப்பதிவாளர்	கணேசன்	(ரமணா)
16	சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்)	வி.டி. விஜயன்	(ரன்)
17	சிறந்த ஆர்ட் டைரக்டர்	சாபு சிரில்	(கன்னத்தில் முத்தமிட்டால்)
18	சிறந்த சண்டைப் பயிற்சியாளர்	ஜாக்குவார் தங்கம்	(பகவதி)

19	சிறந்த நடன ஆசிரியர்	தினேஷ்	(கிங்)
20	சிறந்த ஒப்பனைக் கலைஞர்	வி.பி. ராஜன்	(அன்பே சிவம்)
21	சிறந்த தையற்கலைஞர்	எஸ். ராஜேந்திரன்	(அன்பே சிவம்)
22	சிறந்த குழந்தை நட்சத்திரம்	கீர்த்தனா,பி.எஸ்.	(கன்னத்தில் முத்தமிட்டால்)
23	சிறந்த பின்னணி குரல் கொடுப்பவர் (ஆண்)	முரளிகுமார்	(ரன்)
24	சிறந்த பின்னணி குரல் கொடுப்பவர் (பெண்)	அனுராதா	(ரோஜாக் கூட்டம்)

2002–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் (முதல் தடவையாக)

1	சிறந்த குணச்சித்திர நடிகர்	ஜனகராஜ்	(கிங்)
2	சிறந்த குணச்சித்திர நடிகை	அனுஹாசன்	(ரன்)

2002–2003ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்படத் தொலைக்காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்

1	சிறந்த இயக்குநர்	ஜெ. நந்தினி	(ஓட்டம்)
2	சிறந்த ஒளிப்பதிவாளர்	பிரபாகர்	(பின்குறிப்பு)
3	சிறந்த ஒலிப்பதிவாளர்	அன்பரசு	(சித்தார்த்)
4	சிறந்த படத் தொகுப்பாளர்	ராஜேஸ்வரி	(ஓட்டம்)
5	சிறந்த படம் பதனிடுபவர்	எஸ். சுரேஷ்	(பின்குறிப்பு)

கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் – 2002

1	அறிஞர் அண்ணா விருது	செல்வி ஜமுனா ராணி
2	கலைவாணர் விருது	திரு. பி.பி. ஸ்ரீனிவாஸ்
3	ராஜா சாண்டோ விருது	திரு. ஏ.வி.எம். சரவணன்
4	எம்.ஜி.ஆர். விருது	திருமதி. ஈ.வி.சரோஜா
5	கவிஞர் கண்ணதாசன் விருது	திரு. எம்.எஸ். விஸ்வநாதன்
6	நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விருது	திருமதி. எம். சரோஜா
7	தியாகராஜ பாகவதர் விருது	திருமதி. ஜி. சகுந்தலா

* * *

தமிழகத்தில் வறட்சி நிலையை ஆராய மத்தியக் குழுவை உடனடியாக அனுப்ப வேண்டும்

– மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை

தமிழ்நாட்டில் செயல்படுத்த வேண்டிய பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் பல்வேறு திட்டப்பணிகள் தொடர்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 16.9.2004 அன்று புதுடெல்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். அப்போது தமிழக நலன்கள் தொடர்பான வளர்ச்சிப்பணிகள் மற்றும் திட்டங்கள் குறித்த விரிவான ஓர் அறிக்கையையும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அளித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் நிலவிவரும் கடுமையான வறட்சி நிலையை பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். இது தொடர்பாக கடந்த 28.8.2004 அன்று தமிழக அரசின் சார்பில் வறட்சி நிலைமை குறித்து மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான அறிக்கை குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களின் சிறப்புக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் நிவாரணத் தொகை மற்றும் உதவிகளை தமிழ்நாட்டிற்கு வழங்குவதற்காக, தமிழ்நாட்டில் நிலவும் வறட்சியான சூழ்நிலை குறித்து ஆய்வு செய்து அது தொடர்பான

அறிக்கையை மத்திய அரசுக்கு வழங்குவதற்காக ஒரு மத்தியக் குழுவை அமைத்து, அதனை தமிழ்நாட்டிற்கு அனுப்பி ஆய்வு செய்ய உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

அதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தமிழகத்தில் நிலவும் வறட்சி சூழ்நிலை குறித்து ஆராய்வதற்காக மத்தியக்குழு விரைவில் உருவாக்கப்படும் என்றும் விரைவில் அக்குழு தமிழ்நாட்டில் ஆய்வுகள் மேற்கொண்டு அக்குழு தரும் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசு வறட்சி நிலவும் மாநிலங்களுக்கு வழங்கும் நிதியுதவி மற்றும் நிவாரணத்தொகை வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்கு அதற்குரிய பங்கான நீரை கர்நாடக அரசு திறந்துவிடாமல் இருந்துவரும் சூழ்நிலையால் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் கடுமையான சூழலுக்கு ஆளாகியுள்ள நிலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

கடந்த 2 ஆண்டுகளாக ஒருபோகம்கூட விளைச்சலை செய்ய இயலாத நிலையில் மிகவும் மோசமான நிலைக்கு காவிரி டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தள்ளப்பட்டு அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து பிரதமரின் சிறப்பு கவனத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள். நடப்பாண்டிலும் விவசாயிகள் சம்பா சாகுபடியைச் செய்ய இயலாத நிலையில் உள்ளனர். தற்போது கையிருப்பில் உள்ள நீரின் அளவைப் பொறுத்து விவசாயிகள் சம்பா சாகுபடியைத் தொடங்கியுள்ளனர். சம்பா சாகுபடியின் அறுவடையானது 2005 ஜனவரியில்தான் நடைபெறும். கர்நாடகாவில் தற்போது 97.38 டி.எம்.சி. அடி அளவுக்குத் தண்ணீர் கையிருப்பில் உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் உள்ள மேட்டூர் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரின் அளவு வெறும் 43 டி.எம்.சி. அடிதான் உள்ளது.

காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் உத்தரவின்படி மேட்டூர் அணைக்கு கர்நாடக அரசு தன்னுடைய அணையில் தேக்கி வைத்துள்ள நீரிலிருந்து விடுவிக்க வேண்டிய 35.36 டி.எம்.சி. நீரைத் திறந்துவிட வேண்டும். காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் உத்தரவின்படி கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய அதற்குரிய பங்கை உடனடியாக விடுவிக்காவிட்டால் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மிகவும் மோசமான நிலையை எட்டக்கூடும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்தார்கள்.

சம்பா சாகுபடியானது கடந்த 2 ஆண்டுகளில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. நடப்பாண்டு சம்பா சாகுடியானது தற்போதுதான் தொடங்கியுள்ளது. அதனை பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். காவிரி நதிநீர் ஆணையத்தை விரைவில் கூட்டி தமிழ்நாட்டிற்கு காவிரி நதிநீரில் உள்ள உரிய பங்கை கர்நாடக அரசு உடனடியாகத் திறந்துவிடத்தேவையான உத்தரவுகளை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் செயல்பாடுகளை தடுத்து நிறுத்தும் வண்ணம் கர்நாடக அரசு எடுத்துவரும் முயற்சிகள் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அப்போது காவிரி நடுவர் மன்றம் தன்னுடைய இறுதி உத்தரவை வழங்கக்கூடிய இறுதிக்கட்ட நிலையில் உள்ளது குறித்தும் நினைவூட்டினார்கள். ஏற்கெனவே காவிரி நதிநீர் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு 14 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் தற்போது அந்த நடுவர் மன்றம் தன்னுடைய இறுதி உத்தரவை வழங்கக்கூடிய சூழ்நிலையில் இதுபோன்ற தவறான முயற்சிகளுக்கு வழி ஏற்படுத்தித் தந்துவிடக்கூடாது என்று பிரதமரிடம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்மொழியின் தனித்தன்மையையும் அதனுடைய உயர்ந்தபட்ச இலக்கியச் சிறப்பையும் பிரதமரிடம் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். ஏற்கெனவே உயர் தனிச் செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ள சமஸ்கிருதம், பெர்சியன் மற்றும் அராபிக் ஆகிய மொழிகளை ஒத்து தமிழ் மொழியையும் உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் வலியுறுத்தினார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 8–ஆவது அட்டவணையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மற்றும் பிற மொழிகளுக்கு இந்திய அரசின் ஆட்சிமொழிக்கான அந்தஸ்தை வழங்கி அறிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள்.

திருக்குறளின் இலக்கிய நடையின் சிறப்பு மற்றும் அதில் அடங்கியுள்ள கருத்துகள், நீதிபோதனைகள் மற்றும் பன்னாட்டு அளவிலான இலக்கியத்தில் அதற்கென்று உள்ள தனித்தன்மைகள் குறித்தும் பிரதமரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். மேலும், முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் திருக்குறளைத் தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்றும் அப்போது வேண்டுகோள் விடுத்தார்கள்.

பொடா சட்டத்தைத் திரும்பப்பெற மத்திய அரசு திட்டமிட்டிருப்பதன் மூலம் மாநில அரசுகள் தீவிரவாதத்தை ஒருங்கிணைந்த வகையில் தடுக்கும் அதிகாரங்களை செயலிழக்கச் செய்வதாக அமைந்துவிடும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரின் சிறப்புக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். பொடா சட்டத்தை திரும்பப்பெறும் எந்த ஒரு முயற்சியும் தீவிரவாத மற்றும் பயங்கரவாத அடிப்படை சக்திகளால் பல்வேறு மாநில அரசுகளுக்கு உருவாகியுள்ள ஆபத்துக்களைத் தடுப்பதற்குரிய ஒரு வலிமையான அமைப்பை இல்லாமல் செய்வதற்கு ஏதுவாகிவிடும் என்று தெரிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசின் சார்பில் பிரதமரிடம் கோரிக்கை ஒன்றை வைத்தார்கள். அதன்படி பொடா சட்டம் 2002ஐ திரும்பப் பெறும் மத்திய அரசின் முடிவையும், அச்சட்டத்தைக் கைவிடுவதையும் உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

இந்தியக் கடற்பகுதிகளில் தமிழக மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது இலங்கை கடற்படையால் மிகவும் அதிக அளவில் தாக்குதலுக்கு உள்ளாகும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் கச்சத்தீவை நீண்டகாலக் குத்தகைக்கு எடுப்பது ஒன்றே நிரந்தரத் தீர்வாக அமையும். என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் எடுத்துக் கூறினார்கள்.

பொதுவிநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவைக் கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், நதிகளை இணைப்பது, குறிப்பாக

"திருக்குறளின் இலக்கிய நடையின் சிறப்பு மற்றும் அதில் அடங்கியுள்ள கருத்துகள், நீதிபோதனைகள் மற்றும் பன்னாட்டு அளவிலான இலக்கியத்தில் அதற்கென்று உள்ள தனித்தன்மைகள் குறித்தும் பிரதமரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். மேலும், முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் திருக்குறளைத் தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்றும் அப்போது வேண்டுகோள் விடுத்தார்கள்."

தீபகற்ப நதிகளின் "தொகுப்பை" உருவாக்குவது.மேலும் உள்ளாட்சி அமைப்புகளில் ஈரடுக்கு அமைப்பாக மாற்ற சட்டத்திருத்தம், நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டியில் அமைந்துள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலையை மறுசீரமைப்பு செய்வது குறித்தும் அப்போது மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

தமிழகத்தை வளர்ச்சி பெற்ற மாநிலமாக மாற்றுவதற்காகச் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்களான சேது சமுத்திரக் கால்வாய் திட்டம், குளச்சல் துறைமுக வளர்ச்சித் திட்டம், சென்னையில் புதிய பன்னாட்டு விமான நிலையம் மற்றும் எரிவாயுத் தொகுப்பைத் தமிழகத்தில் அமைப்பதற்கு ஏதுவாக சென்னையில் திரவ நிலையில் உள்ள எரிவாயு முனையம் ஒன்றை உருவாக்குவது ஆகியவை குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் வலியுறுத்தினார்கள்.

தமிழ்நாட்டில் சென்னை மாநகரில் நிலவும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்காக மாநில அரசின் கீழ், நாள் ஒன்றுக்கு, 300 மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியுதவியைத் தமிழக அரசுக்கு மத்திய அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் வலியுறுத்தினார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள சிறு குளங்கள் மற்றும் ஏரிகளைப் புனரமைப்பதற்காக ஒருங்கிணைந்த நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் மற்றும் நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்குவதற்காகச் செயல்படுத்தப்பட்டு வரும் மழைநீர் சேகரிப்பு ஆகிய திட்டங்களுக்கு மத்திய அரசு தேவையான நிதியுதவியைச் செய்துதர வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தினார்கள். ★

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் ஆய்வுக் கூட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை ஆய்வு செய்ய ஒரு கூட்டம் நடத்தப்பட்டது.

மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களால் 04.10.2004 அன்று மேற்குறிப்பிட்ட கூட்டம் நடத்தப்பட்டது. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு. பாண்டுரங்கன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி, தாட்கோ தலைவர் டாக்டர் வி. சரோஜா, மற்றும் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களும், அவரவர் துறை அதிகாரிகளுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திரு.எம்.அபுல் ஹசன், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றார். விவாதத்தை மேலாண்மை இயக்குநர் தொடங்கி வைத்தார். தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களுக்கு அவர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காக நிதியுதவி அளித்து செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களைப் பற்றிய தொகுப்பை அளித்தார்.

நிலம் வாங்கும் திட்டம், சுயஉதவிக் குழுக்களுக்கு பொருளாதார முன்னேற்றத்திற்கான நிதியுதவி, இளைஞர்களுக்கான தொழிற்கல்விப் பயிற்சி, துப்புரவுத் தொழிலாளர்களுக்கான நலத்திட்டம், கறவை மாடுகள் அளிப்பது, ஆடு வளர்ப்பது போன்றவற்றிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவருக்கு கடன் உதவி செய்தல் ஆகியவை தாட்கோவில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களாகும். இத்திட்டங்களின் நோக்கங்கள் மற்றும் இவற்றைச் செயல்படுத்துவதில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் பற்றியும் விரிவாகக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது.

மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் சிறப்பானக் கருத்துகளை எடுத்துக்கூறி வங்கிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்குக் கடனுதவி அளிப்பதில் தாராளப் போக்கைக் கடைபிடிக்க வேண்டும் என்றார். மேலும், நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ் நிலம் தெரிவு செய்யும்பொழுது தொலை உணர்வு தொழில்நுட்ப வரைப்படம் மூலம் ஆய்வு செய்யப்பட வேண்டும்

என்றும் தெரிவித்தார். மாவட்ட அளவில் அமைக்கப்படும் குழுக்களில் அலுவல்சாரா உறுப்பினர்களை நியமிப்பதினால் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டெனில் அதனையும் ஆராய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

முடிவில், கூடுதல் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார் ❖

குற்றம் இல்லா சமூகமும் அச்சமில்லா சுதந்திரமான வாழ்வுமே அமைதிக்கான அடிப்படைக் கூறுகளாகும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



மாண்புமிகு தமிழக அமைச்சர்களே!

உள்துறை செயலாளர் திருமதி ஷீலா ராணி சுங்கத் அவர்களே!

தமிழ்நாடு காவல்துறைத் தலைமை இயக்குநர் திரு.ஐ.கே.கோவிந்த் அவர்களே!

காவல்துறை தலைமை இயக்குநர் (பயிற்சி) திரு.எஸ்.ரமணி அவர்களே!

இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இக்கருத்தரங்கில் பங்கேற்க வருகை தந்திருக்கும் பெரியோர்களே!

தமிழக அரசின் அதிகாரிகளே!

சீர்சால் விருந்தினர்களே! பெருமக்களே!

தமிழ்நாடு காவல்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, "இந்தியாவில் பயங்கரவாதம் உருவெடுக்கும் முறைகளும், காவல்துறையின் நடவடிக்கைகளும்" எனும் தேசிய அளவிலான இக்கருத்தரங்கத்தை இன்று தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். காவலர் பயிற்சிக் கல்லூரியின் இந்த முயற்சி பெரிதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். அண்மையில், 10.8.04 அன்று நடைபெற்ற காவல்துறை அதிகாரிகளின் மாநாட்டில் உரையாற்றிய போது "பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் மற்றும் அடிப்படை மதவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் எந்தவிதமான சுணக்கத்தையும் என்னால் சகித்துக் கொள்ள முடியாது" என்று நான் தெரிவித்திருந்தேன். இம்மாநிலத்தில் பயங்கரவாதக் கும்பல்களும் அடிப்படை மதவாத சக்திகளும் ஒடுக்கப்பட்டுள்ளன. எனவே, தமிழ்நாட்டில் மட்டுமின்றி நாடு முழுவதும் பயங்கரவாதம் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட வேண்டுமென்ற என்னுடைய கருத்திற்கு ஒத்திசைவான முறையில் இந்தத் தேசியக் கருத்தரங்கம் இன்று நடத்தப்படுகிறது.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர், 2003–ஆம் ஆண்டு ஜனவரியில் இதே அரங்கில் "குற்றத் தடுப்பு நிருவாகம் – ஒரு பல்முனை அணுகுமுறை" என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கை நான் தொடங்கி வைத்து உரையாற்றும்போது, "இன்றைய உலகம் எங்கணும் வியாபித்திருக்கிற வன்முறை, பயங்கரவாதம் மற்றும் குற்ற நடவடிக்கைகளால் சீர்குலைந்து காணப்படுகிறது. தொடர் குண்டு வெடிப்புச்

சம்பவங்கள், திட்டமிடப்பட்ட வன்முறைச் செயல்கள் ஆகியவை, மூன்றாம் உலக நாடுகள் மட்டுமே தனியே நின்று சமாளிக்க வேண்டிய ஒரு பிரச்சினை அல்ல; வன்முறை இன்று உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்து தொற்று நோய்க்கிணையாக பரவி வருகிறது" என்று குறிப்பிட்டேன். பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தவர்களை மீட்கும் போராட்டத்தில் தெற்கு ரஷ்யாவிலுள்ள பள்ளி ஒன்றில் 350க்கும் மேற்பட்ட அப்பாவி பள்ளிச் சிறார்கள் கொடூரமாகக் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் பயங்கரவாதிகளால், பகிரங்கமாகக் கொடூரமான வகையில் 'நேபாள தேசத்தைச் சார்ந்த 12 நபர்கள்' தலை துண்டித்துக் கொல்லப்பட்ட கொடுமை ஆகியவற்றால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து நாம் இன்னும் மீளவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரையில், 2003–ஆம் ஆண்டில், ஜம்மு – காஷ்மீரத்தில் மட்டுமே பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் காரணமாக, பொதுமக்கள் 658 நபர்கள் கொல்லப்பட்டனர் என்று "சவுத் ஏசியா டெரரிசம் போர்டல்'' என்ற பத்திரிகை, செய்தி வெளியிட்டுள்ளது. மேற்சொன்ன புள்ளிவிவரங்கள் உள்ளபடியே மிகுந்த வேதனையைத் தருவதோடு கடுமையான எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் நமக்கு உணர்த்துகின்றன.

உலகமயமாக்கல் இன்றைக்கு உலகின் எந்த ஒரு முனையுடனும் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுத்து உள்ளது. தகவல் தொழில் நுட்பமும், தகவல் தொடர்பு தொழில் நுட்பமும்,அசுர வேகத்தில் முன்னேறி வருகின்றன. இதனால், உலகின் ஓர்முனையிலிருந்து தொலை தூரத்திலுள்ள மறுமுனையுடன் நொடிப்பொழுதில் உடனடியாகத் தொடர்பு கொள்ள முடிகிறது. ஆனால், உலக மயமாக்கலுக்காக மனிதன் மிகவும் அதிக விலை கொடுத்துள்ளான். குற்றங்கள் மற்றும் குற்றத் தன்மைகளின் எல்லைகள் விரிவடைந்து திட்டமிட்ட குற்றங்கள், பொருளாதாரக் குற்றங்கள், அடிப்படை மதவாதம் மற்றும் பயங்கரவாதச் செயல்களுக்கு வழியமைத்துக் கொடுத்துள்ளது. செல்லிட தொலைபேசி இணைப்புகள், இணைய தளத் தொடர்புகள் போன்ற உலகளாவிய தொர்டர்பு கட்டமைப்புகளின் உதவியுடன், இந்த நவீன காலத்தில் நடைபெறுகின்ற பயங்கரவாதச் சம்பவங்கள், வெட்ட வெட்ட வளருகின்ற பல தலை நாகம் போன்று ஒழிக்க முடியாத அளவிற்குப் பல்கி பெருகி வருகின்றன. நவீன கால பயங்கரவாத செயல்கள் பலமுகங்களுடனும், பல்வேறு அமைப்புகளின் ஆதரவுடன் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. போதைப் பொருள் சார்ந்த பயங்கரவாதம் வளம்கொழிக்கும் ஆயுதக் கடத்தலுடன் இணைந்து நிகழ்த்தப்படுகிறது. சட்டப்படிக்கான வணிக நிறுவனங்கள் மற்றும் அறநிலையங்கள் மற்றும் சமய அறக் கட்டளைகள் பல, பின்னணியில் நடைபெறும் வஞ்சக பயங்கரவாதச் செயல்களை மறைக்கும் முகப்புகளாகச் செயல் படுகின்றன. மின்னணு முறையிலான வங்கி நடவடிக்கைகள் பயங்கரவாத நடவடிக்கை களுக்கு நிதியுதவி செய்யும் பணச்சலவை நடவடிக்கைக்கு நல்லதொரு வாய்ப்பாக உள்ளன. நவீன கால பயங்கரவாதிகள், கடவுச்சீட்டு மற்றும் விசா கட்டுப்பாடுகளைக் கேலிக் கூத்தாக்கிடும் விதத்தில் பன்னாட்டு எல்லைகளைப் பச்சோந்திகள் நிறம்மாற்றி கொள்வது போல, தங்களை மாற்றிக் கொண்டு எளிதில் கடந்து செல்லும் திறமைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். முன்னாள் பாரத பிரதமரைக் கொலை செய்தவர்கள் நம்முடைய எல்லைகள் மற்றும் சுங்க அரண்களை மட்டுமின்றி மிக முக்கியப் பிரமுகர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு வளையத்தையும் எளிதாக ஊடுருவ இயன்றது, நவீன கால பயங்கரவாதிகளின் அசாதாரண, அதிவேக செயல்பாட்டு வீச்சை நமக்குப் புலப்படுத்துகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் முற்றிலும் புதியதொரு பரிமாணமாக அரசு ஆதரவு பயங்கரவாதம், பாகிஸ்தானுடனான நம்முடைய பிரச்சினைகளோடு தொடர்புடையதாக இருக்கிறது. ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் நிலவுகிற இடைவிடாத பயங்கரவாத நடவடிக்கை, நமது பாராளுமன்றத்தின் மீது நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதல் மற்றும் குஜராத் மாநிலத்திலுள்ளஅக்ஷர்தம் கோவில் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஆகியவை இந்தியாவில் பயங்கரவாதிகளின் நடவடிக்கை அதிகரித்துள்ளதையே காட்டுகின்றன. பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் தங்குவதற்குப் புகலிடம்அளிப்பது, நிதி மற்றும் ஆயுத உதவிகள் வழங்குவது, பயிற்சி முகாம்கள் அமைப்பதற்கு இடம் வழங்குவது ஆகிய செயல்கள் பயங்கரவாதத்திற்கு எல்லை தாண்டிய தொடர்புகள் இருப்பதையே காட்டுகின்றன. ஜெய்ஷ் –இ– முகமது அல்லது லஷ்கர்–இ–தொய்பாவைச் சேர்ந்த ஜிஹாதிகளின் மதவாத பயங்கரவாதத்திற்கும் பான்–இஸ்லாமிக் உம்மா(சமூகம்) குழுக்களுடனும், மத்தியக் கிழக்கு நாடுகளிலிருந்து செயல்படும் பயங்கரவாத அமைப்புகளான அல்கொய்தா மற்றும் ஹமாஸ் ஆகியவற்றுடன் தொடர்பு உள்ளது.

நம்முடைய அமைதியைச் சீர்குலைக்க முயலும் பயங்கரவாத சக்திகளும் சீர் குலைவு சக்திகளும் இரும்புகரம் கொண்டு ஒடுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய உறுதியான நிலைப்பாடாகும். நாம் மென்மைப் போக்கைக் கடைபிடித்துப் பயங்கர வாதத்தைக் காலூன்ற அனுமதித்தால் பின்னர் அதனை ஒடுக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்ற என்னுடைய திடமான நம்பிக்கையே, என்னுடைய இந்த உறுதியான நிலைப் பாட்டிற்குக் காரணமாகும். இதற்கு எடுத்துக்காட்டாக ஜம்மு – காஷ்மீர், பஞ்சாப் வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைக் குறிப்பிடலாம். பயங்கரவாதிகள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகளில் நாம் தொடர்ந்து கவனம்

செலுத்துவதானது, நாம் விரும்புகிற துரிதப் பொருளாதார வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும். பயங்கரவாத சக்திகளுக்கு ஒருபோதும் இடம்கொடாது அவர்களை ஒடுக்குவதில் உறுதியுடன் இருப்பது நல்லது. சில அரசியல் கட்சிகள், தமது குறுகிய கால அரசியல் ஆதாயத்திற்காக, நாம் விரும்புகின்ற நாட்டின் பாதுகாப்பையும் அமைதியையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டு இவர்களை ஆதரிக்கின்றன.

பயங்கரவாதத்தையும், அது உருவாக்கும் தீயசக்திகளையும் ஒடுக்குவதில் நான் மிக உறுதியாக இருப்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். பயங்கரவாதக் குழுக்களும் அடிப்படை மதவாத சக்திகளும் என்னுடைய ஆட்சியில் அடக்கப்பட்டு ஒரு கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் முற்றிலுமாக ஒடுக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பு, 1967 ஆம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழும் 2002 ஆம் ஆண்டு "பொடா" சட்டத்தின் கீழும் தடை செய்யப்பட்டுள்ளது. தமிழ் தேசிய மீட்சிப்படை, தமிழ் தேசிய விடுதலைப்படை போன்று ஏனைய தீவிரவாத இயக்கங்கள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தருவதாகத் திட்டவட்டமான உளவுத்தகவல் கிடைத்துள்ளது. எனவே, இந்த இயக்கங்கள், 1908 ஆம் ஆண்டு குற்றவியல் (திருத்தச்) சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டன. மத்திய அரசும், மாநில அரசின் பரிந்துரையின் பேரில், இந்த இயக்கங்களை 2002 ஆம் ஆண்டு "பொடா" சட்டத்தின் கீழ் தடை செய்துள்ளது. விடுதலைப்புலிகள், இகழார்ந்த சந்தேகத்திற்கிடமான ஒரு வஞ்சக அமைப்பாகும். அவர்கள், பலமுறை ஸ்ரீலங்காவில் நடந்த அமைதிப் பேச்சுவார்த்தைகளை நிராகரித்துள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கம், ஸ்ரீலங்காவிற்குள் மீண்டும் கொலைச் செயல்களில் ஈடுபட்டிருப்பதிலிருந்து இது தெளிவாகிறது. விடுதலைப்புலிகள் இயக்கம், பன்னாட்டுக் கடல்பரப்பில் அனுமதியற்ற கப்பல் போக்குவரத்தை நடத்தியுள்ளதுடன், மன்னார் கடற்கரையில் பன்னாட்டுக் கடல் எல்லை தங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறி இந்திய மீனவர்களைக் கடத்திச் சென்றுள்ளனர். இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நிகழ்வுகளில் விடுதலைப்புலிகள் போன்ற மிகவும் பயங்கரவாத இயக்கம் பங்கு பெறுவதால் இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு, குறிப்பாக, தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கு ஊறுவிளையும் என்பதால் தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே படகுப் போக்குவரத்துத் தொடங்குவதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்தேன். அப்படி படகுப் போக்குவரத்து நடத்தினால், இது கடுமையான பாதுகாப்பு அபாயத்தை ஏற்படுத்துவதுடன், போதைப் பொருள் கடத்தலுக்கும், பயங்கரவாதிகள், புகலிடம் தேடுவோர் ஆகியோர் ஊடுருவதற்கும் வழிவகுக்கும். இவ்வாறு என் உயிருக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாது, ஒவ்வொரு நிலையிலும் விடுதலைப்புலிகள் தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டைப் பகிரங்கமாகவே எடுத்து வந்துள்ளேன்.

தமிழ்நாட்டிலுள்ள கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் செயல்படும் மக்கள் யுத்தக்குழு என்றழைக்கப்படும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) குற்றம் மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளின் வரலாறு நமக்கு நன்கு தெரியும்.

ஆந்திரப்பிரதேச அரசு, தனது கொள்கையை மாற்றிக் கொண்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) (மக்கள் யுத்தக் குழு) மீதான தடையை 2004 ஜூலைக்குப் பிறகு நீட்டிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளது. இதன் விளைவாக, மக்கள் யுத்தக் குழுவினரும், அவர்களுடைய ஆதரவாளர்களும் தமிழ்நாட்டுக்குள் ஊடுருவக்கூடும். எனவேதான், இந்திய கம்யூனிஸ்டு கட்சியையும் (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) (மக்கள் யுத்தக்குழு) அதன் முன்னணி அமைப்புகளையும்1908ஆம் ஆண்டு குற்றவியல் (திருத்தச்)சட்டத்தின் கீழ் சட்ட விரோத அமைப்புகளென நான் அறிவித்துள்ளேன்.

பயங்கரவாதத்திற்குப் பல பரிமாணங்கள் இருப்பதாலும் அதற்குப் பலர் உதவி செய்வதாலும், உலகம் முழுவதும் அவர்கள், அதன் நடவடிக்கைகள் பரவியுள்ளதாலும் பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டுமாயின் உளவுத் துறையை வலுப்படுத்தி, அரசியல் அமைதியின்மைக்குக் காரணமான அடிப்படைக் குறைகளைப் போக்கும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வது பாதுகாப்பு குறித்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது போன்று பல்வேறு வழிகளிலும் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொடிய வறுமை, ஊரகக் கடன், வேலை வாய்ப்பின்மை, சுரண்டல் போன்ற சில காரணங்களினால் தேசிய நீரோட்டத்திலிருந்து ஒதுங்கியிருக்கும் வறிய பிரிவினர் தீவிரவாதப் பிரச்சாரத்திற்கு, குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி – மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் (மக்கள் யுத்தக் குழு) போன்ற பிரிவுகளின் தீவிரவாதப் பிரச்சாரத்திற்கு எளிதில் இரையாகி விடுகின்றனர். மாநிலத்தில் சீர்குலைவை ஏற்படுத்தி பயங்கரவாதத்தை வளர்ப்பதற்கு ஏற்ற நாற்றங்கால்களாக இப்பிரிவைக் கருதி, வெளிநாட்டு அமைப்புகள் இவற்றுக்கு நிதியுதவி அளித்து வருவதற்கான ஆதாரம் உள்ளது. நாம் தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டுமானால் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தவேண்டும். இது முழுக்க முழுக்க காவல்துறையினரின் பணி என்று கருதிவிடலாகாது. பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு இளைஞர்களை ஆதாயமுள்ள வேலை வாய்ப்பில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன் வாயிலாகவும் காவல்துறையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவை மேம்படுத்துவதன் வாயிலாகவும் இப்பிரச்சினைக்கு நாம் தீர்வு காண வேண்டும். பயங்கரவாதத்திற்கும் வன்முறைக்கும் இளைஞர்களை இட்டுச் செல்வதற்கு முக்கியக் காரணமாக விளங்கும் விரக்தியிலிருந்தும் பணமயக்கத்திலிருந்தும் அவர்களை விடுவிக்க இது பெரிதும் உதவும்.

இதனைக் கருத்திற்கொண்டே, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த மாவட்டங்களைச் சேர்ந்த பின்தங்கிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு, குறிப்பாக, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித்தர வழிகோலும் பொருளாதார மறுமலர்ச்சித் திட்டங் களுக்கென ரூ.5 கோடி அனுமதிக்க நான் சிறப்பு நடவடிக்கைகள் எடுத்துள்ளேன்.

2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் நிகழ்வுக்குப் பின்னர் உலக பாதுகாப்புச் சூழல் மற்றும் இந்திய உள்நாட்டுப் பாதுகாப்புச் சூழலில் பெரியளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சிறப்புச் சூழ்நிலைகளைச் சமாளிக்கச் சிறப்புச் சட்டங்கள் தேவை என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. பழிபாவச் செயல்களில் ஈடுபடச் சிறிதும் அஞ்சாத சர்வதேச தீவிரவாத அமைப்புகளின் தூண்டுதலால் நடக்கும் பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் இந்த அமைப்புகளுக்கு இடையே நடக்கும் போதைப் பொருள் கடத்தல் போன்றவை நமது நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் உள்ள மக்களிடையே வெறுப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. இந்தத் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகள் கட்டவிழ்த்து விடும் சீர்குலைவு நடவடிக்கைகளிலிருந்து எந்த மாநிலத்திற்கும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை நிலவுகிறது. "பொடா" போன்ற சிறப்புச் சட்டங்களால் மட்டுமே அத்தகைய அமைப்புகளின் அசாதாரண செயல்களையும் செல்வாக்கையும் ஒடுக்க முடியும். "பொடா" சட்டம் ரத்து செய்யப்பட்டதன் மூலம் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிக்க மாநில அரசுக்கு இருந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. தீவிரவாத மற்றும் பயங்கரவாத அமைப்புகளைத் திறம்பட ஒடுக்கத் தேவையான எந்த ஒரு சிறப்புச் சட்டமும், செயலாக்க அமைப்புகளுக்கு தற்போது இல்லாமல் போய்விட்டது. கொடூர குற்றங்களைக் கையாளுவதற்குக்கூட போதுமானவையல்ல என்று பலமுறை நிருபிக்கப்பட்ட பழைய சட்டங்களையே அவை நம்பி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியக் குற்றவியல் சட்டக் கோவையில், பயங்கரவாதிகளால் நடத்தப்படுகின்ற நாசவேலை என்பதற்கான பொருள் விளக்கம் கூட இல்லை. எனவே, பயங்கரவாத சக்திகளின் வன்முறைச் செயல்களிலிருந்து நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கட்டிக்காக்க வேண்டுமெனில், சட்டச் செயலாக்க அமைப்புகளின் படைக்கலக் கொட்டிலில் "பொடா" போன்ற சிறப்புச் சட்டங்கள் இருக்க அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் எனக்கு இல்லை. அந்தச் சட்டத்தின் ரத்து, அந்தச் செயலாக்க அமைப்புகளைப் பலவீனப்படுத்தியுள்ளது. 'பொடா' சட்டம் ரத்து செய்யப்பட்டதை ஈடுசெய்கின்ற வகையில் தற்போதுள்ள சட்டங்களில் தேவையான விதித்துறைகள் சேர்க்கப்படும் என்ற உறுதிமொழியால் பயன் விளையப் போவதில்லை என்றே நான் கருகிறேன். உண்மையில் இத்தகைய நிலைப்பாடு உறுதியற்ற நிலையையும்

ஊசலாட்டத்தையுமே காட்டுகிறது. பொடா சட்டத்தை ரத்து செய்வதானது அரைகுறையாக பரிசீலிக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவு. பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தக் கூடியது என்ற எங்களின் நிலைப்பாட்டிற்கு அரண் சேர்ப்பதாக இந்நடவடிக்கை அமைந்துள்ளது.

இரசாயன ஆயுதங்கள் உட்பட, நவீன ரக ஆயுதங்கள் மற்றும் சாதனங்கள் தீவிரவாதிகளின் கைவசம் இருப்பதால், நமது காவல்துறையை நவீனமயமாக்குவதில் அல்லது வலுப்படுத்துவதில் அரைகுறையான நடவடிக்கைகளுக்கு இடமளிக்க முடியாது. எனவே, தமிழ்நாட்டில் ரூ.8.61 கோடி செலவில் 78 வெவ்வேறு இடங்களிலுள்ள 11 சிறைச் சாலைகளை 270 நீதிமன்றங்களுடன் இணைத்து, வீடியோ கலந்துரையாடல் (Video - conferencing) மூலமாக தொலை நீதி வழங்கும் (Teli-Justice) ஏற்பாடு ஒன்றினைத் தொடங்கி வைத்ததன் மூலம், நமது பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சீர்குலைக்க பயங்கரவாத சக்திகள் செய்யும் முயற்சிகளை முறியடிக்கும் வகையில் காவல்துறையை நான் வலுப்படுத்தியுள்ளேன். இவ்வாறாக பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் நாம், எப்போதும் ஒரு அடி முன்னால் இருப்பதை நான் உறுதிப்படுத்தியுள்ளேன். 2002–ஆம் ஆண்டில் நான் தொடங்கி வைத்து, காவல் துறையினருக்காக ஆயுதங்கள், நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றுக்காக ரூ.361 கோடிக்கும் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் பயனாக, தீவிரவாதிகளுக்கு எதிரான இந்த யுத்தத்தில் காவல்துறையினருக்குப் பக்க பலமாக நவீன, தொழில்நுட்ப வசதிகள் அவர்களுக்குக் கிடைத்திடுவதை நான் உறுதி செய்துள்ளேன்.

உளவு அமைப்பை வலுப்படுத்த வேண்டியது கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு முக்கிய விஷயமாகும். பல்வேறு பயங்கரவாத வன்முறை நடவடிக்கைகளை அலசி ஆராய்ந்ததில் பெரும்பாலான நேர்வுகளில் உளவு அமைப்பின் கவனக் குறைவும் அவற்றுக்கு ஒரு காரணம் என்று தெரிய வந்துள்ளது.தங்களுடைய கொலை பாதகத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய தற்கொலைப் படைகளை எளிதில் கண்டறிவது, பயங்கரவாதக் குழுக்களின் அதி தீவிர முனைப்பு, வெறியுணர்வு ஆகிய தன்மைகள், உளவு அமைப்புகளின் வேலையைச் சிக்கலாக்கியுள்ளன என்பதில் ஐயத்திற்கிடமில்லை. ஆகவே தற்போது புதிய அணுகுமுறை ஒன்று தேவைப்படுகின்றது. காவல்துறையினருக்குக் கண்காணிப்பு உபகரணங்கள், உயர் தொழில்நுட்ப வசதிகள் ஆகியவற்றை வழங்குவதோடு, பொது மக்களுக்கு உணர்வுறுத்தும் திட்டத்தைச் செயற்படுத்தி, மக்களின் பங்கேற்புடன் கூடிய கண்காணிப்பு அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். மாநில மற்றும் மத்திய முகவரமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைவு இல்லாமல் அவற்றுக்கிடையே நிலவும் பனிப்போர் உளவுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு ஒரு தடையாக உள்ளது. குற்றவழிகளில் ஈட்டிய பணத்தை வெள்ளையாக்கும் பணச்சலவை, அமைப்பு ரீதியான குற்றங்கள், போதைப் பொருள் கடத்தல் போன்றபயங்கரவாதத்தின் பன்முகத் தன்மை



பல்வேறு இடங்களைத் தளமாகக் கொண்டு இயங்கும் தீவிரவாத அமைப்புகளுக்கிடையிலான தொடர்பு (எடுத்துக்காட்டாக எல்.டி.டி.ஈ. உல்பா (LTTE, ULFA) ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பார்க்குமிடத்து இந்தத் தீவிரவாதக் குழுக்களின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய முக்கியமான பணியில் மாநில காவல்துறை, புலனாய்வுத்துறை, சுங்கத்துறை மற்றும் உள்நாட்டு வருவாய்த்துறை, போதை மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு அலுவலகம், கடலோரக் காவல்படை ஆகியவற்றோடு ரா (RAW) ஆகிய அமைப்புகளைத் தகவல் தொழில்நுட்ப அடிப் படையிலான தரவுத்தளம், தகவல் பகிர்வு ஏற்பாடு ஆகியவற்றைக் கொண்ட ஒரு நிறுவன ரீதியான அமைப்பின்கீழ் கொண்டு வருவது மிக முக்கியமாகிறது. மாநில அளவில், இந்த அமைப்பு முதலமைச்சர் தலைமையின் கீழும், மத்திய அரசு அளவில், மத்திய உள்துறை அமைச்சர் அல்லது பாதுகாப்பு குறித்த அமைச்சரவைக் குழுவின் தலைமையின் கீழும் செயல்பட வேண்டும்.

2001 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 ஆம் நாள் நிகழ்வுக்குப் பிந்திய பாதுகாப்புச் சூழல் மாநில பாதுகாப்புக் கட்டமைப்பைத் திருத்தி அமைக்க வேண்டியதன் அவசியத்தை வெட்ட வெளிச்சமாக்கி இருக்கிறது. காவல் துறைகளின் செயல் திறனை உயர்த்தும் நடவடிக்கையை மேற்கொண்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். சீர் பெருமக்கள் பாதுகாப்பு தவிர, அணுசக்தித் தளவாடங்கள், அணைகள், மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற மதிப்புயர் பொருளாதார அடிப்படை கட்டமைப்புகளையும் பாதுகாப்பதற்கு, சிறப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள், இராசாயன ஆயுதங்கள் ஆகியவை தீவிரவாதிகளின் கைவசம் இருக்கும் நிலையில், வழக்கமான வெடிமருந்துகள், வெடி குண்டுகளையும் தாண்டி அத்தகைய தாக்குதல்களையும் முறியடிப்பதற்கான பயிற்சிகளையும் அவர்களுக்கு அளிக்க வேண்டும். பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்து மிரட்டும் நெருக்கடியான சூழ்நிலையைச் சமாளிப்பதற்கு ஏற்ற வகையில் தீவிரவாதிகளோடு சமரசப் பேச்சு வார்த்தை நடத்துதல், பேரம் பேசுதல் போன்ற உத்திகளில் மாநிலக் காவல்துறையினருக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

கடத்தல், விமானக் கடத்தல், பிணையக் கைதிகளைப் பிடித்து வைத்தல் போன்ற பயங்கரவாத நடவடிக்கைகள் மூலமாக நெருக்குதல்களை ஏற்படுத்தி, அதன் மூலமாக, ஊடகங்கள் வழியாக ஆதாயம் தேடும் முயற்சிகளுக்குப் பணிந்து விடாமல் இருப்பது அவசியம் என நான் நம்புகிறேன். நெருக்குதல்களை ஏற்படுத்தினால், பயங்கர வாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், சமரசம் செய்து கொள்ளவும் தயாராக இருக்கக்கூடிய மென்மையான நாடு அல்லது எளிதில் தாக்குதலுக்குள்ளாகும் நாடு இந்தியா என்ற எண்ணம் உருவாக இடமளிக்கக் கூடாது. இவற்றுக்கெல்லாம் மேலாக, எங்கு வேண்டுமானாலும் பயங்கர வாதத்தை எதிர்த்துப் போராடும் அரசியல் ரீதியான மனத்திண்மை மிக அவசியம்.

நமக்கு வாக்களித்து ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தியிருக்கும் மக்களின் அடிப்படையான மூன்று அவாக்கள், அமைதி, முன்னேற்றம், நல்ல நிருவாகம் ஆகியவைதான் என்று நான் எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளேன். குற்றம் இல்லா சமூகமும், அச்சமில்லா சுதந்திரமான வாழ்வுமே அமைதிக்கான அடிப்படைக் கூறுகளாகும். தற்போது, தீவிரவாதத்தை ஒடுக்க, நாம் விரிவானத் திட்டங்களை வகுக்கவில்லையென்றால், தாமஸ் ஹோபெஸ் தன்னுடைய லெவியத்தான் என்ற நூலில் விவரித்துள்ளது போல், "கலைகள், இலக்கியங்கள், சமுதாயம் என்ற எதுவுமே இல்லாது அற்றுப்போய், மனித வாழ்க்கையே ஓயாத பயம், கொடூரமான சாவு பற்றிய அபாயம் ஆகியவற்றால் அலைக்கழிக்கப்பட்டு, ஏகாந்தமும் ஏழ்மையும் மிருகத்தன்மையும் தொல்லைகளும் மிகுந்து குறுகிப் போய்விடும் நிலைக்கு உலகம் திரும்பிவிடும்''.

பயங்கரவாதம், அதனால் காவல் துறையினர் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் சவால்கள் பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த இக்கருத்தரங்கில் முன் வைக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில், ஹோபெஸ் விளக்கியுள்ள நிலையிலிருந்து நம் சமுதாயத்தினரைப் பாதுகாப்பதற்குரிய பரிந்துரைகள் அளிக்கப்பட வேண்டும் என நான் விரும்புகிறேன். வன்முறை எப்போது சட்டப்படி ஏற்புடையதாகிறது என்றால், அது தீவிரவாதத்திற்கெதிரான போரில் மட்டுமே.

இறுதியாக, இன்று நாம் நிம்மதியாகத் தூங்குகிறோம் என்றால், அதற்குக் காரணம் நமக்குத் தீங்கு விளைவிப் போரிடமிருந்து நம்மைப் பாதுகாக்க காவல் துறையினர் இரவு நேரத்திலும் விழிப்புடன் இருப்பதுதான் என்பதை என்னைக் கடுமையாக விமர்சிப்பவர்களுக்கும் பொது மக்களுக்கும் நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

நன்றி.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** *அவர்கள்*
22.9.2004 அன்று
சென்னை தலைமைச் செயலகத்தில்
"தீவிரவாதமும் – காவல் துறை அணுகுமுறையும்"
என்ற கருத்தரங்கினைத்
தொடங்கி வைத்து
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

தமிழகத்தில் வறட்சி நிலையை விரிவாக ஆய்வு செய்ய மத்தியக் குழுவிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 27.9.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் வறட்சி நிலையை ஆய்வு செய்வதற்காக வந்துள்ள மத்திய அமைச்சகங்களுக்கிடையேயான உயர்மட்டக் குழுவினைச் சேர்ந்த உறுப்பினர்கள் சந்தித்துப் பேசினார்கள்.

மாநிலத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சி குறித்தும் அதனால் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள் குறித்தும் விரிவான அறிக்கை ஒன்றைத் தயாரித்து மாநில அரசு மத்திய அரசுக்கு ஏற்கெனவே அனுப்பியிருந்தது. அந்த விரிவான அறிக்கையில் தேசியப் பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ.1,680 கோடி நிவாரண உதவி வழங்க வேண்டும் என்றும் இதில் சென்னை மாநகரில் நிலவும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையை எதிர் கொள்வதற்கு ரூ.500 கோடி உட்பட மேற்கண்ட நிதியையும், மேலும், வேலைக்கு உணவுத் திட்டத்தைச் செயல்படுத்த 5.4 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும் வழங்க வேண்டும் என்றும் தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தியிருந்தது.

மேலும், இந்த வறட்சி தொடர்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். அக்கடிதத்தில் உடனடியாகத் தமிழ்நாட்டில் வறட்சி நிலையை ஆய்வு செய்ய தமிழகத்திற்கு மத்திய நிபுணர் குழுவை நியமனம் செய்து அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மத்திய அரசு தமிழகத்தின் வறட்சி சூழ்நிலையை ஆய்வு செய்வதற்காக உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட ஓர் ஆய்வுக் குழுவை அனுப்பியது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை இக்குழுவினர் 27.9.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்கள்.

மத்திய வேளாண்மைத் துறையின் வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறை இணைச் செயலாளர் திரு. ஏ.கே.அகர்வால் தலைமையில் இக்குழு வருகை தந்தது. இக்குழுவில் இடம்பெற்றுள்ள மற்ற உறுப்பினர்கள் விவரம் வருமாறு:

மத்திய வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறையின் கீழ் வரும் தோட்டக்கலைத் துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சகதேவ்சிங், மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை இயக்குநர் திரு.வி.வெங்கடேசன், கோவையில் உள்ள மத்திய நீர்வள ஆணையத்தின் இயக்குநர் திரு.வி.சைதன்ய மூர்த்தி, சென்னையில் உள்ள புகையிலை மேம்பாட்டு இயக்குநரகத்தின் பொறுப்பு இயக்குநர் திரு.கே.மனோகரன், மத்திய நகர்ப்புற மேம்பாட்டு உதவி ஆலோசகர் எம். சங்கர நாராயணன், உதவி ஆலோசகர், குடிநீர் வழங்கல் துறை டாக்டர் டி. ராஜசேகர் மற்றும் மத்திய திட்டக்குழுவின் ஆராய்ச்சி அலுவலர் திரு.ஆர்.பி.மிஸ்ரா ஆகியோர்.

இக்குழுவினர் மாநில அரசின் உயர் அதிகாரிகளுடன் இணைந்து இரு குழுக்களாக மாவட்டங்களில் வறட்சி நிலையை ஆய்வு செய்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இக்குழுவிடம் கடந்த மூன்றாண்டுகளாக மாநிலத்தில் போதுமான மழையளவு இல்லாததாலும், போதுமான

மழைநீர் பெறாததாலும் ஏற்பட்ட சூழ்நிலை குறித்து விவரமாக எடுத்துரைத்தார்கள். கடந்த 2002–2003–ஆம் ஆண்டுகளில் மாநிலம் சந்தித்த கடுமையான வறட்சிக்குக் காரணம் போதுமான மழையளவு இன்மைதான் என்றும், நடப்பு ஆண்டில் (2004) கடந்த 1.6.2004 தொடங்கி 22.9.2004 இடையேயான காலகட்டத்தில் மழையளவு மிகவும் குறைவான அளவே பெய்து வந்துள்ளது. குறிப்பாக 9 மாவட்டங்களில் அதாவது வழக்கமாகப் பெய்யும் மழையளவை விட 20 சதவிகிதத்திற்கும் மேலாக குறைவாகவே பெய்துள்ளது. கடந்த ஒரு வார காலமாக பெய்துவரும் மழையால் நிலத்தடி நீர்மட்டம் மெச்சத்தக்க அளவில் உயர்ந்துவிடவில்லை. மேலும், மாநிலத்தில் உள்ள அணைக்கட்டுப் பகுதிகளில் விவசாயத்திற்குப் போதுமான நீர் கிடைக்கப் பெறவில்லை.

சென்னை மாநகரில் குறைந்தபட்ச குடிநீர் வழங்கலைச் செய்யும் பணிக்காக மாதந்தோறும் ரூ.27 கோடிக்கும் அதிகமாக மாநில அரசு செலவிட்டு வருகிறது. நிலத்தடி நீர்மட்டக் கையிருப்பும் வெகுவாகக் குறைந்துள்ளது. எனவே, சென்னை மாநகருக்கு மிக நீண்ட தொலைவில் இருந்து வாகனங்கள் மூலம் குடிநீர் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். எப்போதாவது ஏற்படுகின்ற இது போன்ற ஒரு சூழ்நிலையை எதிர்கொள்ள தமிழக அரசுக்குத் தேவையான அதிகபட்ச நிவாரண உதவியை மத்திய அரசு தர வேண்டிய நிலையில் உள்ளது.

மாநிலத்தில் உள்ள வறட்சிச் சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு மாநில அரசு எடுத்து வந்துள்ள மற்றும் எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து நிபுணர் குழுவிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

மேலும், மத்தியக் குழுவினர் மாநிலத்தில் நிலவும் வறட்சிச் சூழ்நிலையை விரிவான அளவில் ஆய்வு செய்து தமிழகத்தில் நிலவும் உண்மையான சூழ்நிலையை முழு புள்ளி விவரங்களுடன் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் அப்போதுதான் தமிழகத்திற்குக் கணிசமான அளவிற்கு வறட்சியை எதிர் கொள்ளத்தேவையான நிவாரண உதவி கிடைக்கப்பெறும். எனவே, நிபுணர் குழுவினர் விரிவான அளவில் தங்களுடைய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியின் போது மாண்புமிகு தமிழக பொதுப்பணி, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர், தமிழக தலைமைச் செயலாளர் பொறுப்பு வகிக்கும் நிதித்துறை முதன்மை செயலாளர் மற்றும் மேம்பாட்டு ஆணையர், வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் சிறப்பு ஆணையர், வேளாண்மைத்துறை செயலாளர், வருவாய்த் துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

* * *



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 23.09.2004 அன்று தலைமைச் செயலகத்தில், திரைப்படத் தயாரிப்பாளர்கள், நடிகர், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்கள், திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் திரைப்படத் தொழிலாளர்கள் ஆகிய அனைத்துப் பிரிவுகளின் பிரதிநிதிகள் நேரில் சந்தித்து, புதிய தமிழ் திரைப்படங்களின் திருட்டு விசிடிகளைத் தயாரித்து தமிழ்த் திரைப்படத் தொழிலின் அழிவுக்குக் காரணமாக இருப்போர் மீது கடுமையாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் மற்றும் திரைப்படத் தொழில் சம்பந்தமான மேலும் பல கோரிக்கைகளும் அடங்கிய மனுவினை அளித்தனர்.

புதிய வீராணம் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 13.10.2004

புதிய வீராணம் திட்டம் சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்கும் அரிய திட்டம் என்பது, எனது அரசின் அயராத உழைப்பாலும், குலையாத நம்பிக்கையாலும், தளராத முயற்சியாலும் இன்று நிரூபிக்கப்பட்டுவிட்டது என்பதை மக்களுக்குத் தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால், இந்த அரிய திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் எத்தனை பேர்! இதனைத் தடுக்கத் துடித்தவர்கள் எத்தனை பேர்! இதைப் பற்றித் தப்புப் பிரச்சாரம் செய்தவர்கள் எத்தனை பேர் என்பதை யாரும் மறந்துவிட இயலாது! "வீராணம் திட்டம் வீணான திட்டம்" என்று எள்ளி நகையாடியோர், ஏகடியம் பேசியோர், அச்சம் ஊட்டியோர், அபாயச் சங்கு ஊதியோர், நாளொரு பொய்ப் பிரச்சாரத்தால் நாட்டு மக்களைக் குழப்பி வந்தோர், "இத்திட்டம் நடக்கவே நடக்காது" என்று கொக்கரித்தோர் யார் யார் என்பதைத் தமிழகமே நன்கு அறியும்.

இந்த மக்கள் நல விரோதிகளின் விதண்டா வாதங்களைப் பற்றிக் கவலைப்படாமல், தமிழகத் தலைநகரத்தின் தாகத்தைத் தணிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளை முன்வைத்து நான் செயல்பட்டேன். அந்தத் தளராத முயற்சிக்குக் கிடைத்த தனிப்பெரும் பரிசுதான் புதிய வீராணம் திட்டத்தின் வெற்றி!

கடந்த பல ஆண்டுகளாக, குறிப்பாக, சென்ற 2 ஆண்டுகளில் சென்னைப் பெருநகரைப் பெரிதும் பாதித்துள்ள கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை பிரச்சினையை சென்னைப் பெருநகர் வாழ் மக்கள் அனைவரும் அறிவர். அடுத்தடுத்த ஆண்டுகளில் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததனால், சென்னை மாநகரில் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினை நிலவி வருகிறது. 2002 அக்டோபர் – டிசம்பரில் வடகிழக்குப் பருவ மழையும் போதிய அளவு பெய்யாததால், அந்த ஆண்டில், மாநகரின் மூன்று குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களிலும் மிகக் குறைவான நீர் இருப்பே இருந்தது. அதன் விளைவாக, 18.1.2003 முதல், ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்கும் ஏற்பாட்டை அரசு அறிமுகப்படுத்த வேண்டியது ஆயிற்று.

சென்னை மாநகரில் ஏற்படக்கூடிய பூதாகரமான தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டும் எனில், உடனடியாகக் கூடுதலாக ஒரு நீர் ஆதாரம் தேவை என்பதை நான் அப்போதே உணர்ந்தேன். சென்னை மாநகரின் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினைக்கு உடனடியாக ஒரு தீர்வு காண்பதற்காக, கூடுதலாகத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வேண்டும் என நான் அப்போதே முடிவு செய்தேன். அந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே, 2003 பிப்ரவரித் திங்களில் புதிய வீராணம் திட்டப் பணிகளை நான் துவக்கி வைத்தேன். வீராணம் ஏரியில் தண்ணீர் இல்லை; ஆகவே, இத்திட்டத்தினால் ஒரு பயனும் விளையப் போவதில்லை என்றெல்லாம் விமர்சித்து, புதிய வீராணம் திட்டம் மேற்கொள்ளப்படுவதைப் பல எதிர்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும் குறை கூறினர். சென்னைக்குத் தண்ணீர் வழங்க கூடுதலாக மேலும் ஒரு ஆதாரம் இல்லாவிட்டால், மீண்டும் ஒரு முறை வடக்கு கிழக்குப் பருவ மழை பொய்க்குமேயானால், சென்னை மாநகரில் கடும் தண்ணீர்ப் பிரச்சினை உருவெடுத்து, மாநகரை விட்டு மக்களை வெளியேற்ற வேண்டிய ஒரு அவல நிலை ஏற்படும் என அப்போதே அஞ்சினேன்.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும் செய்த கடும் விமர்சனங்களையும் பொருட்படுத்தாது, புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த நான் முடிவு செய்தேன். அப்போது நான் எடுத்த முடிவு, மிகவும் சரியானது என்பது இப்போது நிரூபணமாகி, எதிர்க்கட்சிகளின் சந்தேகங்களும், குறை கூறுவோரின் ஒப்பாரிகளும் தவறு என மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. புதிய வீராணம் திட்டத்தை நான் செயல்படுத்தாமல் விட்டிருந்தால், 2004–ஆம் ஆண்டின் கோடையில் சென்னை மாநகரிலிருந்து மக்களை வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அந்த நிலைமையை நான் தவிர்த்து விட்டேன்.

வடகிழக்குப் பருவமழை முற்றிலும் பொய்த்துவிட்டது என்பது 2003–ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலேயே தெளிவாகிவிட்டது. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளிலும் தண்ணீர் இருப்பு கடந்த 54 ஆண்டுகளில், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு, மிகவும் குறைந்து விட்டது. இதன் விளைவாக, 2003–ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலேயே சென்னை மாநகரில் குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதை அறவே நிறுத்த வேண்டியதாயிற்று. இவ்வாறு டிசம்பர் இறுதியிலேயே குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதை நிறுத்த வேண்டிய நிலைமை முன் எப்போதும் ஏற்பட்டதில்லை. சாதாரணமாக, டிசம்பர் திங்கள் இறுதியில் மூன்று நீர்த் தேக்கங்களிலும், மேலும் சில மாதங்களுக்குக் குழாய் மூலம் தண்ணீர் வழங்கக் கூடிய அளவுக்கு நீர் இருக்கும். புதிய வீராணம் திட்டத்தை விரைந்து செயல்படுத்தி, அதன் பயனாகக் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு, 2004ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு நிலவும் கடும் தண்ணீர் பற்றாக்குறையைச் சமாளித்த விவேகத்தை, இப்போதும் கூட எதிர்க்கட்சித் தலைவர்களும், வழக்கமாக விமர்சிக்கும் வேறு சிலரும் உணரவில்லை.

> ***"கடுமையான எதிர்ப்புகளுக்கு இடையிலும், நான் மிகவும் துணிச்சலோடு, 2003 பிப்ரவரியில் புதிய வீராணம் திட்டத்தைத் தொடங்கி வைத்ததால்தான், 2004 ஜூன் வாக்கில் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தென்பட்டது. என்னுடைய அரசு புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம், பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப் படுகைகளின் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீரை எடுத்து, அதன் மூலம் 2004 ஜூன் மாதத்தில் சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 75 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டுவர முடிந்தது".***

சென்னை மாநகரில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்துகின்ற வகையில், ஒரு தெருகூட தவறாமல், நகரின் மூலை முடுக்குகளில் எல்லாம் கூட, நாள்தோறும் தவறாது லாரிகள் மூலம் தண்ணீர் வழங்க என்னுடைய அரசு மேற்கொண்ட அசாதாரண முயற்சிகளுக்காக, சென்னை மாநகர் வாழ் மக்கள் எனக்கும் என் தலைமையிலான இந்த அரசுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்கள். சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளும் அறவே வற்றிப் போனது, கிணற்று வயல்களில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து போனது, கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து போதிய கிருஷ்ணா நீர் பெற முடியாத நிலைமை ஏற்பட்டது ஆகியவற்றின் காரணமாக, மிக மோசமான தண்ணீர்ப் பற்றாக்குறையை சென்னை மாநகர் சந்தித்தது. ஆனால், வழங்கப்படுகின்ற தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டாலும், தண்ணீர்ப் பற்றாக்குறையின் கடுமையை மக்கள் உணரா வண்ணம், கிடைக்கின்ற நீர் குறை சொல்ல முடியாத அளவுக்கு முறையாக பகிர்ந்து வழங்கப்படுவதை என்னுடைய அரசு உறுதி செய்தது. 2004 ஜூன் வாக்கில் சென்னை மாநகரில் இருந்து மக்களை வெளியேற்ற வேண்டியிருக்கும் என்பது தான் அன்றைக்கு இருந்த எதார்த்த நிலை. கடுமையான எதிர்ப்புகளுக்கு இடையிலும், நான் மிகவும் துணிச்சலோடு, 2003 பிப்ரவரியில் புதிய வீராணம் திட்டத்தைத் தொடங்கி வைத்ததால் தான், 2004 ஜூன் வாக்கில் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தென்பட்டது. என்னுடைய அரசு புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம், பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப் படுகைகளின் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீரை எடுத்து, அதன் மூலம் 2004 ஜூன் மாதத்தில் சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 75 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டுவர முடிந்தது. இந்த அளவு, நாள் ஒன்றுக்கு 90 மில்லியன் லிட்டராக மேலும் உயர்த்தப்பட்டது. இது சென்னை மாநகர மக்களின் துயரைப் பெரும் அளவுக்குத் தணித்தது. தண்ணீர் வழங்கல் 2004 ஜனவரியில் நாள் ஒன்றுக்கு 175 மில்லியன் லிட்டர் என்ற அளவிலிருந்து, 2004 ஜூனில் 205 மில்லியன் லிட்டராக உயர்த்தப்பட்டது.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகள் அறவே வறண்ட கோடையிலும், தண்ணீர் வழங்கப்படும் அளவை உயர்த்திய அதிசயம் நிகழ்ந்தது என்றால், அதற்குக் காரணம் புதிய வீராணம் திட்ட குழாய்களைப் பதித்து, ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீர் கொண்டு வர முடிந்ததுதான். தொலைநோக்குப் பார்வையோடு நான் புதிய வீராணம் திட்டத்தை மேற்கொண்டு, அதற்கான குழாய் அமைக்கும் பணிகளையும் உடனடியாகத் தொடங்கி, ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீர் கொண்டு வந்ததால்தான், தண்ணீர்ப் பஞ்சத்திலிருந்து சென்னை மாநகர மக்களைக் காப்பாற்ற முடிந்தது.

பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப் படுகையைச் சேர்ந்த ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுத்து, புதிய வீராணம் திட்டம் குழாய்கள் மூலம் 2004 ஜூன் மாதத்தில் கொண்டு வரப்பட்ட போதும் கூட, எதிர்க்கட்சித் தலைவர்கள் "ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் தான் வருகிறது; வீராணம் ஏரியில் தண்ணீர் எதுவும் இல்லை; ஆகவே, இந்தத் திட்டம் தோல்வி அடைந்து விட்டது" என்று விமர்சிக்கத் தயங்கவில்லை. அந்த அளவுக்கு இந்த எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும், என்னுடைய தலைமையிலான அரசு மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சியையும், நியாய உணர்வு எதுவும் இன்றி விமர்சித்தார்கள். ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் கோடையில் சென்னை மாநகருக்கு வழங்கப்படும் என்றும், பருவ மழை பெய்து வீராணம் ஏரிக்குத் தண்ணீர் வந்தவுடன், அங்கிருந்து புதிய வீராணம் திட்டம் மூலமாக சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்படும் என்றும், அப்போதே நான் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன்.

வீராணம் ஏரியின் நீர்ப் பிடிப்புப் பகுதியில் பெய்த தென் மேற்குப் பருவ மழை மற்றும் இந்தப் பருவத்தில் காவேரி மற்றும் கொள்ளிடம் நதிகளில் கிடைக்கப்பெற்ற நீர்வரத்து ஆகியவற்றை அடுத்து, வீராணம் ஏரி விரைவாக நிரம்பி வருகிறது. பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப்படுகையில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்படும் தண்ணீரை நம்பியிராமல், 13.10.2004 முதல் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம், முற்றிலும் வீராணம் ஏரியில் இருந்து மட்டுமே, நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கத் தொடங்கி உள்ளது என்ற நல்ல செய்தியை, சென்னை மாநகர் வாழ் மக்களாகிய உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். வீராணம் ஏரியில் இருந்து தற்போது நாள் ஒன்றுக்கு எடுக்கப்படுகின்ற 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் முழுவதும், சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம், புதிய வீராணம் திட்டம் தொடர்பாக, எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும், என்னுடைய அரசுக்கு எதிராக பாரபட்சத்துடன், நியாயமற்ற முறையில் எழுப்பிய அடிப்படையற்ற விமர்சனங்கள் அனைத்தும் தவிடுபொடியாகி விட்டன!

வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் எடுப்பதால், அந்த ஏரி ஆயக்கட்டு பகுதியில் உள்ள விவசாயிகளின் நலன் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதையும் என்னுடைய அரசு உறுதி செய்து வருகிறது. கல்லணையில் இருந்து கூடுதலாக விடுவிக்கப்படும் தண்ணீரே சென்னை மாநகருக்கு இந்தத் திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வாறாக, வீராணம் ஏரி ஓர் இடைப்பட்ட நீர்த்தேக்கமாகத் தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, வீராணம் ஏரி ஆயக்கட்டு பகுதியில் உள்ள விவசாயிகள், எந்த வகையிலும் இந்தத் திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக எவரும் ஒரு போதும் கூற முடியாது.

தற்போது, நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் கிடைக்கிறது என்ற நற்செய்தி, சென்னை வாழ் மக்களின் மகத்தான வரவேற்பைப் பெறும். இன்றும் கூட, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளிலும் தண்ணீர் இருப்பு இல்லை. மேலும், கிருஷ்ணா நதி நீரும் இன்னும் வந்து சேரவில்லை. இந்தச் சூழ்நிலையில், குழாய்கள் மூலமாக தண்ணீர் வழங்குவது என்பது ஒரு தொலைதூரக் கனவாகவே இருக்க முடியும். ஆனால், திட்டமிட்டவாறு நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்குகின்ற வகையில், புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதனாலேயே, குழாய்கள் மூலம் சென்னை மாநகரத்தில் தண்ணீர் வழங்குவது சாத்தியமாகி உள்ளது. 13.10.2004 பிற்பகல் முதல் சென்னை மாநகரில் குழாய்கள் மூலமாக மீண்டும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில், ஒரு சில நாட்களுக்கு இந்தக் குழாய்கள் வழியாக தண்ணீர் அனுப்பப்பட்டு, குழாய்கள் சுத்தம் செய்யப்படும். அதன் பிறகு, ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்குவது நிலைப்படுத்தப்படும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்படும் போது, சில கடைக்கோடிப் பகுதிகளுக்குத் தண்ணீர் போய் சேராமல் போகக் கூடும். இத்தகைய பகுதிகளுக்கும், குழாய் மூலமாக தண்ணீர் வழங்கப்படுவதை நிலைப்படுத்தும் வரையில், தற்போது உள்ளவாறே லாரிகள் மூலமாக தொடர்ந்து தண்ணீர் வழங்கப்படும். இதுவன்றி சென்னைக் குடிநீர்க் குழாய் இணைப்பு இல்லாத பகுதிகளுக்கும், சென்னை பெருநகர்

குடிநீர் வாரிய லாரிகள் மூலம் தொடர்ந்து தண்ணீர் வழங்கப்படும்.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகள் முற்றிலும் வறண்டு போய், கிருஷ்ணா நதி நீரும் இன்னும் வந்து சேராத நிலையில், சென்னை மாநகரில் குழாய் மூலம் தண்ணீர் வழங்கும் ஏற்பாட்டை என்னால் தொடங்கி வைக்க முடிகிறது என்றால், அதற்குக் காரணம், நான், சென்னை மாநகர் வாழ் மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்கின்ற வகையில், தொலைநோக்குப் பார்வையோடு திட்டம் தீட்டி, புதிய வீராணம் திட்டத்தை உரிய நேரத்தில் நிறைவேற்றி முடித்தது தான். எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும் இந்தத் திட்டத்தின் மூலம் எந்தப் பயனும் விளையாது, அது தோல்வியில் தான் முடியும் என்று பொதுமக்களை திசை திருப்பும் வகையில், கெடுமதியோடு பரப்பி வந்த விமர்சனங்கள், புதிய வீராணம் திட்டத்தின் இந்த வெற்றியால், குப்பைத் தொட்டிக்கு அனுப்பப்பட்டு, இறுதியில் புதை குழிக்குத் தான் போய்ச் சேரும்! வீராணம் திட்டத்தின் வெற்றியால் தான், சென்னை மாநகரில் மீண்டும் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது என்பதை மக்கள் உணருவார்கள்.

புதிய வீராணம் திட்டம், மிகக் குறுகிய காலத்தில், சிறப்பான முறையில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவ மழை பொய்த்து, குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளுக்குப் போதிய நீர் வராத போதிலும் கூட, இந்தத் திட்டம், சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் நம்பகமான ஒரு நீர் ஆதாரமாக அமைவதை, நான் உறுதிப்படுத்தி உள்ளேன். மக்களைப் பாதிக்கும் மாபெரும் பிரச்சினைகளுக்குப் பல்வேறு தீர்வுகளைச் சிந்தித்து, அவற்றில் ஒற்றைத் தீர்வை மட்டும் நம்பியிராமல், ஏற்புடைய தீர்வுகள் எல்லாவற்றிற்கும் செயல்வடிவம் தந்தால் தான், நிரந்தரத் தீர்வு நிச்சயமாகக் கிடைக்கும். ஆகவே தான், சென்னைப் பெருநகர் பகுதிக்கு நாள் ஒன்றுக்கு தேவைப்படுகிற 840 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்க இயலும் வகையில், தற்போதைய மூன்று நீர்த்தேக்கங்கள், கிருஷ்ணா நதி நீர், கிணற்று வயல்களில் இருந்து கிடைக்கின்ற நிலத்தடி நீர், தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள புதிய வீராணம் திட்டம் மற்றும் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டு நடவடிக்கைகளை, நான் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறேன்.

தொலைநோக்குப் பார்வையோடும், உள்ளத்தின் உறுதிப்பாட்டோடும், மக்களிடத்தில் நான் வைத்த நம்பிக்கையும், "மக்கள் என்னிடம் வைத்த நம்பிக்கையும் எத்தகைய வெற்றியைத் தரும் என்பதற்குப் 'புதிய வீராணம்' ஒரு மகத்தான எடுத்துக்காட்டு!" ✦

தியாகி திருப்பூர் குமரனுக்கு நினைவு அஞ்சல் தலை

இந்தியத் திருநாட்டை அடிமைப் படுத்தி ஆட்சி நடத்திய வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, தம் உயிரைத் துச்சமென நினைத்துப் போராடிய தியாகச் செம்மல்களுள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றவர் திருப்பூர் குமரன் ஆவார். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசின் சிப்பாய்கள் சூழ்ந்து நின்று தடி கொண்டு தாக்கிய போதும், கொஞ்சமும் அஞ்சாது, துணிவின் சிகரமாக நின்று தன் இன்னுயிரை ஈந்து தன் கரங்களில் இருந்த இந்திய நாட்டின் கொடியைக் காத்து, "கொடி காத்த குமரன்" என்று சரித்திரத்தில் நீங்காத இடம் பிடித்தவர் திருப்பூர் குமரன் ஆவார்.

தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் தியாகத்தைப் போற்றி கவுரவிக்கும் வகையில், அவர் உருவம் பொறித்த அஞ்சல்தலை வெளியிடப்பட வேண்டும் என்பது தமிழக மக்களின் நெடுநாள் கோரிக்கையாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழக மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில், தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் நினைவாக, அவரது நூறாவது பிறந்த நாளின் போது நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட வேண்டும் என்று மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்கள். தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் நினைவாக அஞ்சல் தலை வெளியிட முடிவு செய்திருப்பதாக மத்திய அரசிடமிருந்து 22.8.2004 நாளிட்ட கடிதத்தில் மாநில அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு தியாகி திருப்பூர் குமரன் நினைவாக அவரது உருவம் பொறித்த நினைவு அஞ்சல் தலையை 4.10.2004 அன்று ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் வெளியிட்டது.

தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் தன்னிகரற்ற தியாகத்திற்கு மேலும் கவுரவம் அளித்து, அவரது புகழுக்குப் புகழ் சேர்க்கின்ற வகையில் அவரது நூற்றாண்டு விழாவை தமிழக அரசின் சார்பாக சிறப்புடன் நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். விழா நடக்கும் நாள் மற்றும் விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

❖ ❖ ❖

இலக்குகளை விரைவில் எய்தும் பாதையில் ஏறுநடை போடும் தமிழ்நாடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் பாலின நிகர்மை மற்றும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் பாதுகாப்புக்காக நான் ஆற்றிய பணிகளைப் பாராட்டி ஐ.நா.சபையின் அதிகாரப்பூர்வ ஆலோசனை அமைப்பான சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்புக்குழு எனக்கு " நன்மதிப்பு மற்றும் மேதகைமைக்கான தங்கத்தாரகை விருது" (The Golden Star of Honour and Dignity Award) வழங்குகிற இந்த விழாவில் கலந்து கொள்வதை எனக்குக் கிடைத்த பெருமைக்குரிய பேறாகக் கருதுகிறேன். இந்த விருதைப் பெற்றுக் கொள்வதற்காக இன்று உங்கள் முன் பணிவோடு நிற்கிறேன். நான் என் உயிரினும் மேலாக நேசிக்கும் தமிழக மக்களுக்கும் இப்பரந்த பாரத தேசத்தின் மக்களுக்கும் தொண்டு செய்ய எனக்குக் கிடைத்துள்ள வாய்ப்பை, எனக்குக் கிடைத்ததொரு பேறாகக் கருதுகிறேன். என்னுடைய இலட்சியமே தமிழ்நாட்டைப் பொருளாதார வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம் ஆகிய அனைத்து வகையிலும், குறிப்பாக, பெண்களுக்கும், சமுதாயத்தின் நலிந்த

பிரிவினருக்கும் நியாயமான வாய்ப்புகள் கிடைக்கச் செய்வதிலும், நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக உருவாக்குவதுதான்.

இந்த விருதோடு வாசித்தளிக்கப்பட்ட பாராட்டுப் பத்திரத்தில், சமூகத்தின் நலிவடைந்த பிரிவினரின் மேம்பாட்டுக்காகவும் பாலின நிகர்மைக்காகவும் நான் ஆற்றிய பணிகளுக்காக என்னைப் பாராட்டிப் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நான் மிகவும் நேசிக்கிற பணிகளாகும். அதற்காகத்தான் இந்த நன்மதிப்பு மற்றும் மேதகைமைக்கான தங்கத்தாரகை விருது வழங்க என்னைத் தெரிவு செய்துள்ளீர்கள். இந்நாள் என் வாழ்நாளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான நாளாகும். அன்றாட வாழ்வில் தங்களுக்கு இழைக்கப்படும் அநியாயம், அடக்குமுறை, சுரண்டல், அவமதிப்பு, அவமானம், பாகுபாட்டுக் கொடுமைகளை எதிர்த்துப் போராடி வருகிற இலட்சோப இலட்சம் சகோதரிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கின்ற வகையில், நான் என்னுடைய சொந்த வாழ்க்கையையும் மற்றும் பொது வாழ்க்கையையும் வகுத்துக் கொண்டு வாழ்ந்து வருகிறேன். என்னுடைய சகோதரிகள் அன்றாடம் அனுபவிக்கும் மேற்கண்ட பிரச்சினைகளையும் கணக்கில் அடங்காத சவால்களையும் நானும் என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் சந்திக்க வேண்டியிருந்தது. பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும், இன்னல் களையும், புறங்கண்டு, வெற்றியும், அதிகாரமும் பெற முடியும் என்பதை உணர்த்த வேண்டுமென்ற தணியாத வேட்கையும், பெண்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற அளவிடற்கரிய ஆர்வமும்தான், எந்தத் தடையையும் தகர்த்தெறியும் உறுதியை எனக்கு அளித்தன. அதனால்தான், இந்த நிலைக்கு உயர்ந்து இன்றைக்கு நான் உங்கள் முன் நின்று கொண்டிருக்கிறேன். எனவே, என்னுடைய பொதுப் பணியையும் பெண்களுக்கும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் மேம்பாட்டில் காட்டிவரும் ஆழ்ந்த ஈடுபாட்டையும் சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்புக்குழு

> நம் மாநில வரலாற்றிலேயே முதல் முறையாகப் பெண்மைக்கு முக்கியத்துவம் அளித்துக் கல்வி நிலையங்களில் குழந்தைகளைச் சேர்க்கும்போது, அவர்களின் பெயருக்கு முன்னால், தாயின் பெயரையும் முதலெழுத்தாகச் சேர்க்கலாம் என்று உத்தரவிட்டுள்ளேன். இதைப் போன்றே, தமிழ்மொழியில் "குடிமகள்" என்ற சொல்லையும் கூடுதலாகச் சேர்க்க நான் உத்தரவிட்டுள்ளேன். 'சிட்டிசன்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக, ஆண்களைச் சுட்டும் 'குடிமகன்' என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது. தற்போது "குடிமகன்" என்ற சொல்லுக்கு நிகரான பெண்பாற் சொல்லாகக் 'குடிமகள்' என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது.

அங்கீகரித்திருப்பது என்னை மிகவும் நெகிழவைக்கிறது. இந்த இலட்சியங்கள்தான் என்னுடைய வாழ்க்கைப் பயணத்தின் அச்சாணியாக இருந்து என்னை வழிநடத்திச் செல்கின்றன. பெண்களுக்குச் சம அந்தஸ்து மற்றும் நீதி கிடைப்பதற்காகவும் சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களின் மேம்பாட்டிற்காகவும் நான் ஆற்றி வரும் பணிகளை அங்கீகரிக்கும் விதமாக சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்புக்குழு எனக்கு இந்த விருதை வழங்கி கௌரவப்படுத்தியமைக்காக, என்னுடைய சிரந்தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களுக்குச் சம அந்தஸ்து குறித்த என்னுடைய கருத்துகளை இந்த நேரத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். பெண்களின்

கண்ணியத்தையும் கௌரவத்தையும் கட்டிக் காக்கத் தவறும் எந்தவொரு சமுதாயத்தையும் ஒரு பண்பட்ட சமுதாயம் என்று கூற முடியாது என்பது என்னுடைய உறுதியான கருத்தாகும். இது தொடர்பாக, சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளதை இங்கே குறிப்பிட விழைகின்றேன். பெண்களுக்கு உரிய மரியாதை அளித்த எல்லா நாடுகளுமே உயர்ந்த நிலையை அடைந்துள்ளன. பெண்களை மதித்துப் போற்றாத எந்தவொரு நாடும் எப்போதும் உயர்ந்த நிலையை அடைய முடிந்ததில்லை. எதிர்காலத்தில் அடையப் போவதும் இல்லை.

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைக் கண்டு ஆழ்ந்த கவலைக்குள்ளாகி பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் குறித்து தனிப்பட்ட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமானால் அதற்கான ஒரே வழி காவல்துறையில் அமைப்புரீதியிலான மாற்றத்தை உருவாக்குவதுதான் என்ற முடிவுக்கு வந்தேன். எனவே, காவல் துறையை மனித நேயமிக்க, மக்களின், குறிப்பாகப் பெண்களின் நலனில் அக்கறை கொள்கிற கருணை மிகுந்த காவல் அமைப்பாக உற்றுழி உதவிடும் நண்பனாக, நல்ல ஆலோசனைகள் தரும் அமைப்பாக மாற்ற வேண்டுமென்பதை இலட்சியமாகக் கொண்டேன். இந்தச் சிந்தனையின், இந்த இலட்சியத்தின் வெளிப்பாடாகவே, இந்தியாவிலேயே முதல் முறையாக, தமிழ்நாட்டில் 1992 ஆம் ஆண்டு அனைத்து மகளிர் காவல் நிலையத்தை நான் ஏற்படுத்தினேன். இதன் மூலம் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் உள்ள மகளிருக்கு ஒரு பாதுகாப்பையும், அச்சமற்ற உணர்வையும் ஏற்படுத்தியுள்ளேன். தமிழகத்தில் 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், இதனை ஒரு முழுமையான இயக்கமாக மாற்றிடும் நடவடிக்கையாக, காவல் துறையில் பெண்களைச் சேர்ப்பதற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறேன். தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திலும், ஒரு மகளிர் உதவி ஆய்வாளரின் தலைமையில் ஒரு மகளிர் காவல் பிரிவு இருக்கும். இதனால், பெண்கள், தங்களுடைய பிரச்சினைகளுக்காக மகளிர் காவல் நிலையத்தை எளிதில் அணுக முடியாத தற்போதைய நிலைக்கு ஒரு தீர்வு ஏற்படும்.

நாட்டிலேயே முதன் முறையாக, அனைத்து மகளிர் அதிரடிப்படை (பெண் கமாண்டோ படை) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், மகளிரை மட்டுமே கொண்ட காவல் ப்டைப் பிரிவு ஒன்றும் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் ஒரு சம்பிரதாயத்திற்காக உருவாக்கப்பட்டவையல்ல. இவை, சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலுமுள்ள மகளிருக்கும் ஒரு தன்னம்பிக்கை உணர்வை ஊட்டியுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் நடமாடும் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் மகளிர் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அனைத்துக் கொடுமைகளையும் விசாரிக்கும் போது பிரச்சினைகளின் தன்மையை அறிந்து பரிவுடன் தீர்வு காணும் வகையில், செயல்பட

தொடக்கப் பள்ளிகளில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களை அதிக எண்ணிக்கையில் சேர்ப்பதும் புத்தாயிரமாண்டின் வளர்ச்சி இலக்காகும். பெண் குழந்தைகள், சமுதாயத்தில் ஓரங்கட்டப்படுவதும், சுரண்டப்படுவதும் எனக்குப் பெரிதும் கவலையளிக்கிறது. கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பெண்களும் முன்னேற வேண்டும் என்பதற்காக, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்ற தனித்துவம் வாய்ந்த சிறப்புத் திட்டம் ஒன்றை நான் அறிவித்துள்ளேன். இத்திட்டம், பெண் குழந்தைகள் பொருளாதார ரீதியாகப் பாதுகாப்புப் பெற்று ஒரு போதும் தம் பெற்றோருக்கு ஒரு சுமையாக கருதப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

வேண்டும் என்று ஒட்டுமொத்த காவல் துறைக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக உரிய மன்றத்தை அணுகி விரைவில் தீர்வு காணுவதற்கு ஏதுவாக மகளிர் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பெண்களுக்கெதிரான பாலியல் பலாத்காரக் குற்றங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் அளித்திட ஏதுவாக தற்போது இருக்கும் சட்டத்தில் நான் திருத்தங்களையும் கொண்டுவந்துள்ளேன். இந்த நடவடிக்கைகளால், மக்களிடையே குறிப்பாகப் பெண்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களே முன்வந்து காவல் துறையை அணுகும் நிலை உருவாகியுள்ளது.

நமது சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு சிறுவயதிலேயே தொடங்கி விடுகிறது. இந்தியாவின் சில பகுதிகளிலும், தமிழ்நாட்டிலும் சில சமுதாயத்திலும் இந்த வழக்கம் கருவிலேயே தொடங்கி விடுகிறது. பெண் சிசுக்கொலைக் கொடுமைகளைத் தடுப்பதற்காக, தொட்டில் குழந்தைத் திட்டத்தை நான் தொடங்கிவைத்தேன். பெண் சிசுக் கொலை அதிகம் நடைபெறும் வழக்கமுள்ள மதுரை, தேனி, திண்டுக்கல், தருமபுரி, சேலம் போன்ற மாவட்டங்களில் இது குறித்த விழிப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, இத்தகைய கொடுமையான சிசுக்கொலைக் குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மீதும் அதற்குக் காரணமானவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெண் சிசுக் கொலைகளைத் தடுப்பதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அனுமதியற்ற முறையில் கருவிலிருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா, என்பதைக் கண்டறிவதற்கான சோதனைகளை நடத்துகிற ஆய்வுக் கூடங்கள் மற்றும் நோயறி மையங்களுக்கெதிராக, கருவுறலுக்கு முந்தைய மற்றும் மகப்பேற்றுக்கு முந்தைய அறுதியிடல் தொழில்நுட்ப உத்தி (பாலினத் தேர்வுத் தடை) சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கைகளை

எடுக்க அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மக்கள் தொகையில் பெண்களின் எண்ணிக்கை குறைவதைத் தடுக்க இது பெரிதும் உதவும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பெயர் வைப்பதில் கூட பாலினப்பாகுபாடு தென் படுகிறது. இங்கு தந்தைவழி பெயரே பின்பற்றப்படுகிறது. இதனை மாற்றியமைக்க வேண்டும் என்பதற்காக நம் மாநில வரலாற்றிலேயே முதல் முறையாகப் பெண்மைக்கு முக்கியத்துவம் அளித்துக் கல்வி நிலையங்களில் குழந்தைகளைச் சேர்க்கும்போது, அவர்களின் பெயருக்கு முன்னால், தாயின் பெயரையும் முதலெழுத்தாகச் சேர்க்கலாம் என்று உத்தரவிட்டுள்ளேன். இதைப் போன்றே, தமிழ் மொழியில் "குடிமகள்" என்ற சொல்லையும் கூடுதலாகச் சேர்க்க நான் உத்தரவிட்டுள்ளேன். 'சிட்டிசன்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக, ஆண்களைச் சுட்டும் 'குடிமகன்' என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது. தற்போது "குடிமகன்" என்ற சொல்லுக்கு நிகரான பெண்பாற் சொல்லாகக் 'குடிமகள்' என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது. இச்சொல், தமிழ் மொழியில், முதன் முதலாக பெண்ணினத்தைச் சமூக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் அடையாளம் காட்டும் ஒரு சொல்லாக அமையும். இது பாலின நிகர்மையை நோக்கிய பயணத்தில் ஒரு எக்காள முழக்கமாக ஒலித்துக் கொண்டிருக்கும். இது, தமிழ்நாட்டில் பெண்களுக்கு உரிமையேற்றத்திற்கான ஒருமுக்கிய நடவடிக்கையாகவும் அமையும்.

பெண்களின் உரிமையேற்றம் என்பது என் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றாகும். உலக அரசியல் இயக்க வரலாற்றில் என்னுடைய தலைமையிலான கட்சிதான் முதன் முதலாகக் கட்சியின் அனைத்துப் பதவிகளிலும் பெண்களுக்கென்று 33 சதவிகித இட ஒதுக்கீட்டையும், தமிழ்நாட்டில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டையும் அறிமுகப் படுத்தியது என்பதைக் கூறிக் கொள்வதில் நான் பெருமையடைகிறேன். தவிரவும், நாடாளு

மன்றத்திலும், மாநிலச் சட்ட மன்றங்களிலும் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்க வேண்டுமென்று முதன்முதலாகக் குரல் கொடுத்ததும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

இந்திய அரசமைப்புச் சட்டம், அனைவருக்கும் கல்வி அளிக்கும் உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கிறது. ஆனால், உண்மையில் பல குடும்பங்களில் வீட்டில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்காகப் பள்ளி படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிடுகிற அவல நிலைக்குத் தள்ளப் படுவதும் கடினமான வீட்டு வேலைகள் செய்வதும் பெண் குழந்தைகள்தான். தொடக்கப் பள்ளிகளில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களை அதிக எண்ணிக்கையில் சேர்ப்பதும் புத்தாயிரமாண்டின் வளர்ச்சி இலக்காகும். பெண் குழந்தைகள், சமுதாயத்தில் ஓரங்கட்டப்படுவதும், சுரண்டப்படுவதும் எனக்குப் பெரிதும் கவலையளிக்கிறது. கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பெண்களும் முன்னேற வேண்டும் என்பதற்காக, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்ற தனித்துவம் வாய்ந்த சிறப்புத் திட்டம் ஒன்றை நான் அறிவித்துள்ளேன். இத்திட்டம், பெண் குழந்தைகள் பொருளாதார ரீதியாகப் பாதுகாப்புப் பெற்று ஒரு போதும் தம் பெற்றோருக்கு ஒரு சுமையாக கருதப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

இன்றைக்கு, தமிழ்நாட்டில் எங்கு நோக்கினும் பெண் குழந்தைகள், நிறைந்த நம்பிக்கையுடன், மிதிவண்டியில் பள்ளிக்குச் செல்வதைக் காணலாம். ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த பள்ளி செல்லும் பெண் குழந்தைகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம் கிராமச் சமுதாயத்தின் முகத்தையே மாற்றியமைத்துள்ளதுடன் ஆண்களுக்கு நிகராக உண்மையான சமத்துவத்தை எய்தும் இலக்கை நோக்கி பெண்கள் முன்னேறிச் செல்லவும் உதவியுள்ளது.

பெண்களுக்குத் தொடர்ச்சியான ஆதாயமுள்ள வேலைவாய்ப்பை அளிப்பதன் மூலம், அவர்கள் சமுதாயத்தில் அதிகாரம் பெற்று,

ஆண்களோடு சரிநிகராக முன்னேறுவதற்குக் காரணமாயிருப்பது நிச்சயமாக, பொருளாதார சுதந்திரம்தான். மொத்தத்தில் தொழில் நுட்ப வளர்ச்சியில் நமது கிராமப்புற பெண்கள் பெரிதும் புறக்கணிக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் பல்வேறு கடமைகளைச் செய்ய வேண்டிய கட்டாயமும் அதன் காரணமாகத் தங்களுடைய ஆற்றலைப் பல்வேறு பணிகளுக்காகச் செலவிடும் கட்டாயமும் ஏற்படுகிறது. பெண்களிடம் அதிக வேலை வாங்கப்படுகிறது. ஆனால், குறைவான ஊதியமே கொடுக்கப்படுகிறது. பெரும்பாலும் ஊதியம் கொடுக்காமலும் வேலை வாங்கப்படுகிறது. ஆண்—பெண் பாகுபாட்டு அடிப்படையிலான வங்கி நடைமுறைகளால் வறுமை ஒழிப்புத் திட்டத்துடன் இணைந்த வழக்கமான கடனுதவியைப் பெறுவதிலும் கூட பெண்கள் கடுமையான சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர். 1992ஆம் ஆண்டில் நான் தொடங்கி வைத்த மகளிர் சுய உதவிக்குழு என்ற இயக்கம், இன்று இலட்சக்கணக்கான பெண்களின் வாழ்க்கைத் தர பாதுகாப்பிற்கு நிச்சயமான உத்தரவாதத்தை அளிக்கின்றது.

பெண்களுக்கு நியாயமான வாய்ப்புகள் அளிக்கப்பட்டால் அவர்கள் எந்தத் துறையிலும், ஏன், ஆண்களுக்கே உரியவை என்று கருதப்பட்டு ஆண்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்ற துறைகளிலும்கூட ஆண்களைக் காட்டிலும் சிறப்பாகச் செயல்பட முடியும் என்பது என்னுடைய திண்மையான எண்ணம். இந்த எண்ணத்திற்கு மேலும் அரண் சேர்க்கும் நடவடிக்கையாக, மறைந்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா நினைவாக அவர் பெயரில் வீரதீர மற்றும் துணிகர முயற்சி களுக்கான கல்பனா சாவ்லா விருதை நான் ஏற்படுத்தியுள்ளேன்.

பெண்களுக்கு நியாயமான வாய்ப்புகள் அளிக்கப்பட்டால் அவர்கள் எந்தத் துறையிலும், ஏன், ஆண்களுக்கே உரியவை என்று கருதப்பட்டு ஆண்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்ற துறைகளிலும்கூட ஆண்களைக் காட்டிலும் சிறப்பாகச் செயல்பட முடியும் என்பது என்னுடைய திண்மையான எண்ணம். இந்த எண்ணத்திற்கு மேலும் அரண் சேர்க்கும் நடவடிக்கையாக, மறைந்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா நினைவாக அவர் பெயரில் வீரதீர மற்றும் துணிகர முயற்சிகளுக்கான கல்பனா சாவ்லா விருதை நான் ஏற்படுத்தியுள்ளேன்.

பொருளாதார வளர்ச்சி என்பது நடைமுறைகள் சமூகத்தில் நலிவுற்று ஏழ்மை நிலையிலுமுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு நம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளிக்கக்கூடிய அனைத்தளாவியதாக இருக்க வேண்டும். இதனை நடத்திக் காட்டுவதில் நான் முழுமையாக ஈடுபட்டு வருகிறேன். புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகளைக் குறித்த காலத்திற்கு முன்பாகவே எய்தும் வகையில் ஏறுநடை போட்டு முன்னேறி வருகிறது தமிழ்நாடு. நிர்ணயிக்கப்பட்ட நாட்களுக்கு முன்னதாக வறுமை நிலையைக் குறைப்பதோடு, வாழ்க்கைத்தரம், உரிமையேற்றம், சுய மதிப்பை உயர்த்துதல் போன்ற துறைகளில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சமூகத்தின் நலிந்த பிரிவினர் மற்றும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்கள் ஆகியோருக்கு உதவிகள் சென்றடைந்தால்தான் பொருளாதார வளர்ச்சி அர்த்தமுள்ளதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அரசுத் திட்டங்களின் பயன்கள் ஏழை மக்களுக்கும் சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கும் சென்று சேரும் வகையில், பணியின் தரம் மேம்படுத்தப்பட்டு அதன்மூலம் அவர்களுக்கு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும்

ஊட்ட வேண்டும் என்பதே என்னுடைய இடையறா முயற்சியாக இருந்து வருகிறது.

சில நேரங்களில், உரிமையேற்றம் என்றால் என்ன அல்லது அதிகாரம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளாமலேயே, மகளிரின் உரிமையேற்றம் பற்றி எளிதாகப் பேசி வருகிறோம். மகளிர் உரிமையேற்றம் என்பதன் உண்மையான பொருள் என்ன என்பதை விளக்குவதற்காக, நெய்லே பிராண்டிஸ் எழுதிய " Fruitflesh - Seeds of Inspiration for Women Who Write" என்ற புத்தகத்திலிருந்து சில வரிகளை இங்கே நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

"அதிகாரம் என்பது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட ஒரு வார்த்தை. நமது கலாச்சாரத்தில் அதிகாரம் என்பது, பெரும்பாலும் வல்லமை, மிருக பலம், வலிமை என்றே பொருள் கொள்ளப்படுகிறது. இச்சொல் நம் மனக் கண் முன் ஒரு முஷ்டியையும் ஒரு காலையும் ஒரு வெடிகுண்டையும் கொண்டு வந்து நிறுத்துகிறது. அது மற்றவர்கள் மீது செலுத்தும் அதிகாரத்தையும், மற்றவர்களை அழிக்கக்கூடிய அதிகாரத்தையுமே குறிப்பிடுகிறது. இதுவே அதிகாரம் என்பதற்கு ஆண்களால் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாக உள்ளது. ஆனால், அதிகாரம் குறித்து பெண்கள் கொண்டுள்ள கருத்து முற்றிலும் வேறு. பெண்கள் என்ற முறையில், நாம் மற்றவர்கள் மீது ஆளுமை செலுத்தும் போது, அதிகாரத்தை உணர்வதில்லை. மாறாக, நாம் மற்றவர்களுடன் உண்மையான நட்பு கொள்ளும் போதும் நாம் நமக்கும் நம்முடைய உணர்வுகளுக்கும் நாம் உண்மையாக இருக்கும் போதுமே அதிகாரத்தை உணர்கிறோம். பெண்களின் அதிகாரம் என்பது ஆக்கப்பூர்வமான வளர்ச்சியைத் தூண்டக்கூடிய ஒருசக்தியாகும். அது ஒரு முஷ்டி அல்ல. எழுதக்கூடிய, செதுக்கக்கூடிய, நடனமாடக் கூடிய, குணப்படுத்தக்கூடிய, கொடுக்கவும் பெறவும் தெரிந்த, விரிந்த கரங்களாகும்". அதிகாரம் என்பதற்கு மேற்கண்ட இந்தப் பொருள் விளக்கமானது. நம்முடைய இந்தியப் பார்வையில் 'சக்தி' என்று குறிப்பிடப்படுகிறது. இந்த

பெண்களின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் கட்டிக் காக்கத் தவறும் எந்தவொரு சமுதாயத்தையும் ஒரு பண்பட்ட சமுதாயம் என்று கூற முடியாது என்பது என்னுடைய உறுதியான கருத்தாகும். இது தொடர்பாக, சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளதை இங்கே குறிப்பிட விழைகின்றேன். பெண்களுக்கு உரிய மரியாதை அளித்த எல்லா நாடுகளுமே உயர்ந்த நிலையை அடைந்துள்ளன. பெண்களை மதித்துப் போற்றாத எந்தவொரு நாடும் எப்போதும் உயர்ந்த நிலையை அடைய முடிந்ததில்லை. எதிர்காலத்தில் அடையப் போவதும் இல்லை.

ஆக்கப்பூர்வமான சக்தியை என்னுடைய சக பெண்ணினத்திற்கு ஒரு உந்து சக்தியாக ஊட்டுவதே என்னுடைய இடையறாத முயற்சியாக இருந்து வருகிறது. எனக்கு இன்று வழங்கப்பட்டுள்ள நன்மதிப்பு மற்றும் மேதகைமைக்கான 'தங்கத்தாரகை விருது' என்னுடைய இந்தக் குறிக்கோளை அடைய நான், மென்மேலும் கடுமையாக உழைப்பதற்கு எனக்கு ஓர் உந்து சக்தியாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்வதில் எனக்கு கிஞ்சித்தும் தயக்கம் இல்லை. சிறப்புமிகு இவ்விருதினை எனக்கு வழங்கி என்னைப் பெருமைப்படுத்திய உங்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியை உரித்தாக்குகின்றேன்.

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 11.10.2004 அன்று நடைபெற்ற, உக்ரைன் நாட்டிலுள்ள சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்புக் குழுவின் "நன்மதிப்பு மற்றும் மேதகைமைக்கான தங்கத்தாரகை விருது" வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

சென்னை மக்களுக்குக் குடிநீர் வழங்க ஸ்ரீசைலம் அணையிலிருந்து 10 ஆயிரம் கனஅடி நீர் :

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள் உறுதி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதல்வர் டாக்டர் ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டி அவர்களை 1.10.2004 அன்று ஐதராபாத்தில் உள்ள அம்மாநில தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்கள். அச்சந்திப்பின் போது சென்னை நகர குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கிருஷ்ணா நதிநீரை ஸ்ரீசைலத்திலிருந்து திறந்துவிடுவது பற்றி உடனடியாகப் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்ததற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் டாக்டர் ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டி அவர்களுக்கு தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இச்சந்திப்பின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 2.9.2004 அன்று மாண்புமிகு ஆந்திர முதல்வருக்குத் தாம் எழுதிய கடிதம் மற்றும் அதற்கு 6.9.2004 அன்று ஆந்திர முதல்வரிடமிருந்து தமக்கு வரப்பெற்ற கடிதம் மற்றும் கடந்த 10.9.2004 அன்று இது தொடர்பாக தாம் ஆந்திர முதல்வருக்கு எழுதிய கடிதம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்கள் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரின் தனிப்பட்ட சிறப்புக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

மேலும், கடந்த 18.9.2004 அன்று ஆந்திர முதல்வர் தாம் எழுதிய கடிதத்தில் கிருஷ்ணா நதிநீர் சென்னை மாநகருக்கு விநியோகிக்கப்படும் விதம் குறித்து இணைந்து ஓர் ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்று, குறிப்பிட்டிருந்ததைப் பாராட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கிருஷ்ணா நதிநீர் சென்னை மாநகருக்கு வழங்குவதற்கான ஒரு நல்ல வழியை இனம் கண்டறிய வேண்டுமென்று அப்போது வலியுறுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகர் எதிர்கொண்டு வரும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை குறித்து ஆந்திர முதல்வரின் தனிப்பட்ட சிறப்புக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். கடந்த 54 ஆண்டுகால வரலாற்றில் இல்லாத அளவாக சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளிலும் நீர் கையிருப்பானது, கடந்த 2003 டிசம்பர் இறுதியில் மிகவும் குறைந்த அளவு நீர் கையிருப்பு

இருந்ததை நீங்கள் அறிவீர்கள் என்றும், சென்னை மாநகரின் தற்போதைய மக்கள் தொகை 70 இலட்சத்துக்கும் அதிகமாக உள்ள நிலையில் முன் எப்போதுமே சந்தித்திராத மோசமான குடிநீர்த் தட்டுப்பாட்டுப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. மேலும், சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காகச் சென்னையின் புறநகர் பகுதிகளில் மிக நீண்ட தொலைவில் உள்ள பகுதிகளிலிருந்து நிலத்தடி நீரைப் பம்ப் செய்து லாரிகள் மூலம் சென்னைக்குக் கொண்டு வந்து விநியோகிப்பதில் ஏற்படும் நிருவாகச் சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சரிடம் விளக்கிக் கூறினார்கள்.

மேலும் கடந்த 2003, டிசம்பர் இறுதியில் இருந்து சென்னை மாநகரில் விநியோகிக்கப்படும் குடிநீரானது குழாய்கள் வழியே வழங்குவது நிறுத்தப்பட்டுவிட்டது. இதுமிகவும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய பிரச்சினை என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

இந்நிலையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஸ்ரீசைலத்திலிருந்து கிருஷ்ணா நதிநீர் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காகக் கடந்த 1983ஆம் ஆண்டு ஆந்திரப்பிரதேசத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று ஆந்திர முதல்வரிடம் வலியுறுத்தினார்கள்.

மீண்டும் இந்த ஒப்பந்தம் குறித்து எடுத்துக்கூறிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஸ்ரீசைலத்திலிருந்து 15 டி.எம்.சி. அடி நீர் இதற்கென்று பிரத்யேகமாகத் திறந்துவிடுவதற்குத் தேவையான நெறிமுறைகளை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். மேலும், அவ்வாறு செய்யும் போதுதான் குறைந்தபட்சம் 12 டி.எம்.சி. அடி தண்ணீர் தமிழ்நாடு எல்லையில் கிடைக்கப்பெறும் என்றும் தெரிவித்தார்கள்.

கிருஷ்ணா நதிநீர் தமிழக எல்லையை அடைவதன் மூலம் சென்னை மாநகரில் குடிநீர்த் தேவைகளை எதிர்கொள்வதற்காகத் தமிழக அரசு இப்பணிகளை மேற்கொள்ள ஆந்திரப்பிரதேச அரசுக்கு ஏற்கெனவே ரூ.512 கோடி வழங்கியுள்ள உண்மை நிலை குறித்து அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

கடந்த 1996–ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச அரசு வகுத்துக்கொண்டு ஏற்றுக் கொண்ட முதன்மையாகச் செய்ய வேண்டிய பணிகள் குறித்த உத்தரவில் முதல் முன்னுரிமைத் திட்டமாகச் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக ஸ்ரீசைலத்திலிருந்து 15 டி.எம்.சி. அடி வரை தண்ணீர் திறந்து விடுவதென்று தெரிவிக்கப் பட்டிருந்தது. அதனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகரில் குடிநீர் வழங்குவதை முன்னுரிமையாக எடுத்துக்கொண்டு உடனடியாக தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்றும் அப்போது வேண்டுகோள் விடுத்தார்கள். தற்போது சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளும் ஒட்டுமொத்தமாக வறண்டு காணப்படுகிறது. சென்னை நகரிலுள்ள நிலத்தடி நீர்மட்டமும் மிகவும் குறைந்துள்ளது. சென்னையைச் சுற்றி புறநகர் பகுதிகளிலும் நிலத்தடி நீர்மட்டம் வெகுவேகமாகக் குறைந்து வருகிறது.

சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் கிருஷ்ணா நதிநீரை நம்பி இருப்பதைத் தவிர வேறு மாற்று வழி ஏதும் இல்லை என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அப்போது வலியுறுத்திக் கூறினார்கள். இப்பிரச்சினையில் ஆந்திர முதல்வர் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

சோமசீலா நீர்த்தேக்கத்தில் 21.5 டி.எம்.சி. அடி தண்ணீர் இருந்தால்தான் அங்கிருந்து தண்ணீர் திறந்துவிட முடியும் என்ற தொழில்நுட்பக் காரணங்களைச் சுட்டிக்காட்டிய ஆந்திரப்பிரதேச மாநில முதல்வர், தற்போதுள்ள சூழ்நிலையில் அங்கு 18.5 டி.எம்.சி. அடி நீர்தான் உள்ளது என்றும் இந்நிலையில் 1.10.2004 அன்று சோமசீலாவிலிருந்து கண்டலேறுக்குத் தண்ணீர் திறந்துவிட இயலாது என்றும் தெரிவித்தார். அதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாக முன்னுரிமை வழங்கி ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து தேவையான அளவு நீர் திறந்துவிட வேண்டும் என்றும், அப்போது சோமசீலா நீர்த்தேக்கத்தில் உள்ள கொள்ளளவு அதிகரித்து 21.5 டி.எம்.சி. அடியை விட அதிகரிக்கும் என்றும் வலியுறுத்தினார்கள்.

ஸ்ரீசைலம் அணையிலிருந்து சோமசீலாவுக்கு தற்போது திறந்துவிடப்படும் 2,000 கன அடி என்ற அளவானது சோமசீலா நீர்த்தேக்கத்தை வந்தடைந்து நிரம்புவதற்கு அதிக நேரம் பிடிப்பதுடன் கண்டலேறு

நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் திறந்துவிடத் தேவையான அளவு தண்ணீர் நிரம்புவதற்கும் காலம் அதிகமாகும் என்று தெரிவித்தார்கள். எனவே, சோமசீலா நீர்த்தேக்கத்திற்குத் திறந்துவிடப்படும் நீரின் அளவை அதிகபட்ச அளவிற்கு உயர்த்தத் தேவையான, சாதகமான நடவடிக்கையாக எடுத்து சோமசீலா நீர்த்தேக்கத்தில் கண்டலேறு அணைக்கு நீர் திறக்கத் தேவையான நீர் விரைவாக நிரம்பும் அளவுக்குத் தண்ணீர் திறந்துவிடுவதுடன் அங்கிருந்து சென்னை மாநகருக்கு சென்றடைய தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள்.

தெலுங்கு கங்கை திட்டக் கால்வாயில் இதுவரை பணி நிறைவடையாத 13.8 கி.மீ. தூரப் பாதைக்கு மாற்றுப் பாதையாகத் தற்போது தண்ணீர் திறந்துவிடப்படும் நிலப்புலவாகு கால்வாயில் அதிக அளவு தண்ணீர் திறந்துவிடுவதுடன் இந்நீர் வக்கீலேர்வாகு வழியாக சோமசீலா நீர்த்தேக்கத்தை அடைய ஆவன செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்கள். மேலும், தற்போது கண்டலேறு நீர்த்தேக்கத்தில் 1.44 டி.எம்.சி. அடி அளவு நீர்தான் உள்ளது. ஆனால், சென்னை நகருக்குக் குடிநீர் வழங்குவதற்காகக் கண்டலேறு பூண்டி கால்வாயில் தண்ணீர் திறந்துவிடுவதற்கு, குறைந்தபட்ச நீர் கொள்ளளவு 6.9 டி.எம்.சி. அடி தண்ணீர் இருக்க வேண்டும். எனவே அதற்கேற்ற வகையில் நீர் கையிருப்பு அளவை அதிகரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

எனவே, ஸ்ரீசைலத்திலிருந்து சோமசீலாவுக்கு உடனடியாக அதிகபட்ச அளவில் தண்ணீரைத் திறந்துவிட வேண்டிய ஒரு சூழ்நிலை தற்போது நிலவி வருகிறது என்று அப்போது வலியுறுத்திக் கூறினார்கள். மேலும், சோமசீலாவிலிருந்து கண்டலேறுக்கு நீரைத் திறந்துவிடுவதன் மூலம் கண்டலேறு நீர்த்தேக்கத்தில் நீர் கையிருப்பு அளவானது 6.9 டி.எம்.சி. அடி தண்ணீரை அப்போதுதான் எட்ட இயலும் என்றும் தெரிவித்தார்கள்.

கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தமிழகத்திற்குத் திறந்துவிடப்படும் நீர் மிகக் குறைந்த அளவே தமிழக எல்லையில் கிடைக்கப் பெறுகின்றது என்ற பிரச்சினையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரின் சிறப்புக் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மேலும் தற்போது கண்டலேறு – பூண்டி கால்வாய் முழுவதும் சீர்செய்யப்பட்டுள்ள நிலையில் கால்வாயில் திறந்துவிடப்படும் நீர் சிறிதளவும் வீணாகாமலும், திருடப்படாமலும் கண்டலேறு – பூண்டிக்கு இடைப்பட்ட இடங்களில் இருக்கும் நிலை உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்கள்.

இந்த ஒட்டுமொத்த நடைமுறைகளையும் நெறிமுறைப்படுத்துவதற்கு ஒரு சிறப்பான – தெளிவான சட்ட விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்றும், அது விரைந்து வரையறுக்கப்பட வேண்டும் என்றும், அதை இரு மாநிலங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரிடம் எடுத்துக் கூறினார்கள். இந்த வரையறைகளில் முக்கிய காரணியாகச் சோமசீலா மற்றும் கண்டலேறு நீர்த்தேக்கங்களில் குறைந்தபட்ச நீரைத் தேக்கி வைப்பதை உறுதி செய்ய வரையறை செய்ய வேண்டும் என்பதாகும். இதன் மூலம் ஸ்ரீசைலத்திலிருந்து திறந்துவிடப்படும் நீர் விரைவில் சென்னை நகருக்குத் திறந்துவிட ஏதுவாகும்.

தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை உருவாக்கி அதில் தமிழகத்தைச் சேர்ந்த அதிகாரிகளையும் இடம்பெறச் செய்து அவர்களைக் கொண்டு அதிகாரப்பூர்வக் குழுவுக்கான நெறி முறைகளை வகுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஓர் ஆலோசனையைத் தெரிவித்தார்கள். மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த அதிகாரப்பூர்வ குழு 2004 அக்டோபர் 11ஆம் தேதி இப்பிரச்சினை குறித்து விவாதித்து அதற்கென்று ஒரு கால அட்டவணையைத் தயாரித்து 2004, டிசம்பருக்கு முன்னதாக இதற்கென்று ஒரு வரைமுறையை உருவாக்கி அதற்கு ஒப்புதல் பெற வேண்டும் என்று மற்றொரு ஆலோசனையைக் கூறினார்கள்.

ஸ்ரீசைலத்திலிருந்து சோமசீலாவுக்குத் திறந்துவிடப்படும் கிருஷ்ணா நீரின் அளவை அதிகரிப்பதோடு அங்கிருந்து சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு தேவையான நீர் கண்டலேறுவிலிருந்து திறந்துவிடுவதற்கு, சோம சீலாவிலிருந்து நீரைத் திறந்துவிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரைக் கேட்டுக் கொண்டார்கள்.

மாண்புமிகு ஆந்திர முதல்வர் ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டி சென்னை மாநகரில் நிலவிவரும் குடிநீர்ப் பிரச்சினையை மிகுந்த கவனத்துடனும் அக்கறையுடனும் கேட்டறிந்தார். மேலும் 1983ஆம் ஆண்டு சென்னை

மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக ஆந்திராவுக்கும் தமிழகத்திற்கும் இடையே கடந்த 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட கிருஷ்ணா நதிநீர் ஒப்பந்தத்தின்படி நடந்து கொள்வோம் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் ஆந்திர முதல்வர் உறுதியளித்தார். ஸ்ரீசைலத்திலிருந்து சோமசீலாவுக்குத் திறந்துவிடப்படும் கிருஷ்ணா நதிநீரின் அளவை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகளை அவர் ஏற்றுக் கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் ஆந்திர முதல்வர் தங்களுக்குள் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையிலும் கிருஷ்ணாவிலிருந்து சோமசீலாவுக்கு திறந்துவிடப்படும் நீரின் அளவை வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பதற்குத் தேவையான சிறப்பான நடவடிக்கைகளை தாம் எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஆந்திரப் பிரதேச முதல்வர் தற்போது திறந்துவிடப்படும் நீரின் அளவை வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடியாக 1.10.2004 முதல் அதிகரிக்க தாம் உத்தரவிடுவதாகவும் அப்போது அவர் உறுதியளித்தார். இதன் மூலம் சோமசீலா நீர்த்தேக்கத்தில் நீர் அளவு விரைவில் உயர்வதுடன் சோமசீலாவிலிருந்து கண்டலேறுக்கு, தண்ணீர் திறந்துவிடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் ஆந்திரப் பிரதேச முதல்வர் கண்டலேறு நீர்த்தேக்கத்திற்குத் தேவையான அளவுக்கு நீர் திறந்துவிடப்படும் என்றும், அதே போன்று கண்டலேறு–பூண்டி கால்வாயில் நீர் திருட்டு மற்றும் கசிவைத் தடுப்பதற்குத் தேவையான சட்ட நெறிமுறைகளை வகுக்க வேண்டும் என்ற கருத்தை ஆந்திர முதல்வர் ஏற்றுக் கொண்டதோடு அதனை விரைவில் வரைவு செய்து அதிகாரப்பூர்வ குழு கூடும் தேதியான 2004, அக்டோபர் 11ஆம் தேதி பரிசீலனைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் இந்த சார்ந்திருத்தல் முறைக்கு நெறிமுறைகள் விரைவில் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்போது கிருஷ்ணா நதிநீர் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்தார். இந்த நெறிமுறைகளை வகுப்பதற்கு ஒரு தொழில்நுட்பக்குழு தமிழக தொழில்நுட்ப வல்லுநர்களையும் உள்ளடக்கிய குழு உருவாக்கப்படும்.

1.10.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் அடிப்படையிலும் அவருடைய கோரிக்கையின் அடிப்படையிலும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் சென்னை மாநகருக்கான கிருஷ்ணா நதிநீர் விநியோகம் அடுத்த 15 அல்லது 20 நாட்களில் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகர மக்களின் சார்பாக, தாம் விடுத்த வேண்டுகோளை ஏற்று அதிகபட்சமாகச் சாதகமான நல்லதொரு தீர்வு ஏற்பட வழிவகை செய்த மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் டாக்டர் ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த சந்திப்பு சுமார் 40 நிமிடங்கள் நடைபெற்றது. இந்த சந்திப்பின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன், மாண்புமிகு தமிழக பொதுப்பணி, வருவாய் மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திரு. என். நாராயணன், பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு. என்.எஸ்.பழனியப்பன், காவிரி தொழில்நுட்பப் பிரிவு தலைவர் பேராசிரியர் ஏ.மோகனகிருஷ்ணன், பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் திரு. எம். தீனதயாளன் ஆகியோரும், ஆந்திரப்பிரதேச அரசின் சார்பில் அம்மாநில முதல்வர் டாக்டர் ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டி, பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் துறை அமைச்சர் திரு. பொன்னாள லட்சுமையா, உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கொன்னேறு ரங்காராவ், சாலை மற்றும் கட்டடங்கள் துறை அமைச்சர் திரு. ஜே. ராமமோகன் ராவ், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. ஷபீர் அலி, நிலத்தடி நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. மாரப்பா, தலைமைச் செயலாளர் திரு. மோகன்கந்தா, நீர்ப்பாசனத் துறை முதன்மை செயலாளர் திரு. ஓ.வி.கே.எஸ்.சர்மா, நீர்ப்பாசனத்துறை (திட்டங்கள்) செயலாளர் திரு. சுரேஷ் சந்தா, கடப்பா நீர்ப்பாசனத்துறை தலைமைப் பொறியாளர் திரு. பிரபாகர் ரெட்டி மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

* * *

தியாகி திருப்பூர் குமரன்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத ஊர் அன்றைய கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பூர்; இந்த ஊரில்தான், 1932 ஜனவரி மாதம் ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற அறப்போராட்டத்தில் தாயின் மணிக்கொடியான இந்திய தேசியக் கொடியைக் காப்பதற்காக தடியடியைத் தாங்கிக் கொண்டு, உயிர்த் தியாகம் செய்தார் குமாரசாமி என்கிற இளைஞர். அத் தீரர், குண்டாந்தடியால் தாக்கப்பட்டுக் குருதி வெள்ளத்தில் குற்றுயிராகக் கிடந்த போதும், இந்தியத் தாயின் மணிக்கொடியைத் தரையில் வீழாது காத்த குணக்குன்று. குமாரசாமி 'திருப்பூர் குமரன்' என்ற புகழ்ப் பெயரைப் பெற்று, இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனி இடத்தைப் பெற்றுவிட்டார்.

தற்போதைய ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சென்னிமலையில் நெசவாளர் குடும்பத்தில், நாச்சிமுத்து – கருப்பாயி தம்பதியருக்கு, 1904 அக்டோபர் மாதத்தில் பிறந்தவர் குமாரசாமி. இவருக்கு ஆறு சகோதரர்கள். ஐந்தாவது வயதில் சென்னிமலையில் பள்ளியில் சேர்க்கப்பட்ட குமாரசாமி ஐந்தாவது வகுப்பு வரையில்தான் படித்தார். அதற்குமேல் அவரைப் படிக்க வைக்க அவரது பெற்றோரின் பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லை.

பள்ளிப்பாளையத்தில் தனது தாய்மாமன் வீட்டில் தங்கி, நெசவுத் தொழிலைக் கற்றுக் கொண்டு, சென்னிமலை திரும்பி, நெசவுத் தொழிலைச் செய்யத் தொடங்கினார். இவரது பத்தொன்பதாவது வயதில் பதினான்கு வயதுப் பெண் இராமாயியை இவருக்கு இவரது பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். நெசவுத் தொழிலில் போதிய வருமானம் இல்லாததால், திருப்பூர் பஞ்சரைக்கும் தொழிற்சாலையில் எடைப்பதிவு எழுத்தர் வேலையில் சேர்ந்தார்.

கள்ளுக்கடை மறியல், கதராடை உற்பத்தி என எதிலும் முன்னிலையில் நின்ற ஊர் திருப்பூர்; காந்தியடிகள் காட்டிய வழியில் விடுதலைப் போராட்டத்தில் அவ்வூர் மக்கள் காட்டிய ஆர்வமும், எழுச்சியும் போற்றத் தக்கவை. தேசபந்து வாலிபர் சங்கம் என்ற பெயரில் ஒரு அமைப்பு திருப்பூரில் இயங்கி வந்தது. அதில் குமாரசாமியும் உறுப்பினராகச் சேர்ந்து, விடுதலைப் போராட்டத்தில் தீவிர ஆர்வம் காட்டினார். காந்தியடிகள் கூறியபடி கதர் உடையையே உடுத்தினார். தம் மனைவியையும் கதர்ச் சேலை அணியும்படி செய்தார். தினந்தோறும் ராட்டையில் நூல் நூற்பதைத் தம் கடமைகளுள் ஒன்றாகக் கருதி செயல்பட்டார்.

வேதாரணியத்தில் மூதறிஞர் ராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளத் துடித்தார். ஆனால், குடும்பத்தினரும், தொழில் நிலையத்தினரும் தடுக்கவே, அவரது ஆசை நிறைவேறவில்லை. இதனால் மனம் உடைந்து, ஒருநாள் முழுவதும் உண்ணா நோன்பு இருந்து, மன அமைதி பெற்றார். இவரது நாட்டுப் பற்றுக்கும் விடுதலை உணர்வுக்கும் இது தக்க சான்றாகும்.

1932ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் நாள் ஆங்கிலேய வைசிராய் லார்டு வெல்லிங்டன் கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறை காரணமாக அண்ணல் காந்தியடிகள் மும்பாயில் கைது செய்யப்பட்டார். நாடே கொந்தளித்தது. அறப்போர் தொடங்கப்பட்டது. திருப்பூரும் களத்தில் இறங்கியது. ஜனவரி 6ஆம் நாள் திருப்பூரில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடந்தது. ஜனவரி 10 முதல் அறப்போர் தொடங்கும் என அறிவிக்கப்பட்டது.

ஜனவரி 10ஆம் நாள், 144 தடை உத்தரவை மீறி, பி.எஸ். சுந்தரம் என்கிற வீரர், ஒன்பது தொண்டர்களுடன் ஒத்துழையாமை ஊர்வலத்தை நடத்தினார். 'வந்தே மாதரம்' முழக்கத்துடன், 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற நாமக்கல் கவிஞரின் பாடலை எழுச்சியுடன் பாடிக்கொண்டே, திருப்பூர் நகர வீதியில் தொண்டர்கள் வீறுநடை போட்டனர். அந்தத் தொண்டர்களில் ஒருவராக, குடும்பத்தினர் தடுத்தும், நண்பர்கள் அறிவுரை கூறியும் கேளாமல், எல்லோருக்கும் முன்னால், முன்னணி வீரராக, தாய்த்திருநாட்டின் மூவர்ணக் கொடியுடன் குமாரசாமியும் வீரநடை போட்டார்.

போலீஸ் படை 'கலைந்து செல்லுங்கள்' என்று எச்சரித்தும், கலைய மறுத்து, "அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" என்று முழங்கினார்கள் விடுதலை வீரர்கள். போலீசார் அவர்களை ஓட ஓட விரட்டி அடித்து நொறுக்கினார்கள். கொடியைத் தாங்கி, முன்னால் சென்று கொண்டிருந்த குமாரசாமிக்குச் சரியான அடி. அவரை ஆளுக்கொரு பக்கம் குண்டாந்தடியால் தாக்கினர். குமாரசாமியின் மண்டை எலும்பு உடைந்தது. குருதி கொட்டிய நிலையிலும், தாங்கிப் பிடித்த தாயின் மணிக்கொடியை வீரர் குமாரசாமி விடவில்லை. அவரது கைகளிலிருந்து போலீசாரால் கொடியைப் பறிக்க முடியவில்லை.

பட்ட அடியால், மூளை செயலற்றதும், மாவீரன் குமாரசாமியின் உடல் மண்ணில் சாய்ந்தது. குருதியில் மிதந்தது. ராமன் நாயர் என்பவர் மார்பில் பலமான அடி விழுந்தது. மார்பு எலும்பு ஒன்று ஒடிந்தது. சுந்தரம் என்பவரின் உடலெல்லாம் எலும்பு முறிவு.

தெரு ஓரங்களில் வீசி எறியப்பட்டிருந்த தொண்டர்களை அவர்களது உறவினர்களும், நண்பர்களும் வந்து எடுத்துச் சென்றனர். குமாரசாமி, ராமன் நாயர், சுந்தரம் ஆகிய மூவர் மட்டும் நடுத்தெருவில் குற்றுயிராகக் கிடந்தனர். வெகுநேரத்திற்குப் பிறகுதான், திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அவர்கள் எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

ஆபத்தான நிலையில் குமாரசாமி நினைவு இழந்தார். அடுத்தநாள் ஜனவரி 11 – விடியற்காலை 4 மணிக்கு அரசு மருத்துவமனையில் திருப்பூர் குமரன் அமரர் ஆனார். சுந்தரமும், ராமன் நாயரும் நீண்ட சிகிச்சைக்குப் பிறகு, உயிர் பிழைத்தனர்.

சென்னிமலையில் பிறந்து வளர்ந்த குமாரசாமி திருப்பூர் குமரனாக மறைந்தார். தாயின் மணிக்கொடியைக் காக்க இன்னுயிர் ஈந்த குமாரசாமி, திருப்பூரை, இந்திய மக்கள் மறக்க முடியாதபடி செய்து விட்டார்.

❖ ❖ ❖

தமிழக அரசின் சார்பில்
▣ பெரியார் விருது - ▣ அம்பேத்கர் விருது - ▣ திரு.வி.க.விருது - ▣ பாரதியார் விருது - ▣ பாரதிதாசன் விருது - ▣ கி.ஆ.பெ. விருது வழங்கும் விழா

நாட்டுக்காகவும் மொழிக்காகவும், சமுதாயத்திற்காகவும் பாடுபட்ட பெரு மக்களின் நினைவைப் போற்றும் வகையிலும், தமிழ்ச் சான்றோர்களுக்குக் கவுரவமும் தமிழ் அறிஞர்களுக்கு ஊக்கமும் அளிக்கும் வகையிலும், தமிழ்நாடு அரசின் சார்பில், 2002, 2003, 2004ஆம் ஆண்டுகளுக்கான பெரியார் விருது, அம்பேத்கர் விருது, திரு.வி.க.விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, கி.ஆ.பெ.விருது ஆகிய விருதுகள் வழங்கும் விழா, 17.9.2004 அன்று சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தமிழ்ச் சான்றோர்களுக்கும், சமூக சீர்திருத்தவாத அறிஞர்களுக்கும் 2002, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளுக்கான பெரியார் விருது, அம்பேத்கர் விருது, திரு.வி.க. விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, கி.ஆ.பெ.விருது ஆகிய விருதுகளை வழங்கி, விழாப் பேருரையாற்றினார்கள்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், 2002ஆம் ஆண்டிற்கான பெரியார் விருதினைத் திரு. கா. ஜெகவீரபாண்டியன் அவர்களுக்கும், அம்பேத்கர் விருதினைத் திரு.எம்.தாமோதரம் அவர்களுக்கும், திரு.வி.க. விருதினைப் பேராசிரியர் திரு.வே.கோபாலய்யர் அவர்களுக்கும், பாரதியார் விருதினைத் திரு.கே.வி. கிருஷ்ணன் அவர்களுக்கும்,



பாரதிதாசன் விருதினை முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கும், கி.ஆ.பெ. விருதினை முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் வழங்கினார்.

2003ஆம் ஆண்டிற்கான பெரியார் விருதினைத் திரு.துரை கோவிந்தராஜன் அவர்களுக்கும், அம்பேத்கர் விருதினைத் திரு.வீ.சுப்பரத்தனம் அவர்களுக்கும், திரு.வி.க. விருதினை முனைவர் ம.ரா.போ.குருசாமி அவர்களுக்கும், பாரதியார் விருதினைத் திரு.ரா.அ.பத்மநாபன் அவர்களுக்கும், பாரதிதாசன் விருதினைப் பேராசிரியர் முனைவர் அ.தட்சிணாமூர்த்தி அவர்களுக்கும், கி.ஆ.பெ.விருதினை முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அவர்களுக்கும் வழங்கினார்.

தொடர்ந்து, 2004 ஆம் ஆண்டிற்கான பெரியார் விருதினை நீதியரசர் பி.வேணுகோபால் அவர்களுக்கும், அம்பேத்கர் விருதினைத் திரு.ஆ.சக்தி தாசன் அவர்களுக்கும், திரு.வி.க. விருதினை முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கும், பாரதியார் விருதினைத் திரு.சீனி விசுவநாதன் அவர்களுக்கும், பாரதிதாசன் விருதினைப் பேராசிரியர் லெ.ப.கரு.இராமநாதன் அவர்களுக்கும், கி.ஆ.பெ.விருதினை முனைவர் பு.பா. இராஜ இராஜேஸ்வரி அவர்களுக்கும் வழங்கினார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.ஓ.பன்னீர் செல்வம் அவர்கள் விருதுகள் வழங்கி, தமிழக அரசின் சார்பில், ஒரே நேரத்தில் ஆறு மாபெரும் விருதுகளை வழங்குகின்ற இவ்விழா, தமிழ்ச் சான்றோர்கள் சமுதாய சீர்திருத்தத்திற்குப் பாடுபட்டவர்களின் புகழுக்குப் புகழ் சேர்கின்ற விழாவாகத் திகழ்கிறது என்று தெரிவித்தார்கள்.

மேலும், ஒரு நாடு உயர்ந்த நாடாக விளங்க வேண்டுமென்றால் அங்கு தன்னலம் கருதாத தலைவர்கள் உருவாக வேண்டும். தன் வீடு, தன் பெண்டு, தன் பிள்ளை என்று எண்ணாத தலைவர்கள் அங்கு இருக்க வேண்டும். நாட்டு மக்கள் வளம்பெற என்ன செய்ய வேண்டுமென்று சிந்திக்கின்ற பரந்த மனது கொண்ட தலைவர்கள் இருக்க வேண்டும்.

அப்படி உயர்ந்த சிந்தனை கொண்ட தன்னலம் கருதாத தலைவர்களாகத் தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், திரு.வி.க., மகாகவி பாரதியார், பாரதிதாசன், கி.ஆ.பெ. ஆகியோர் விளங்கினர். அவர்களது பெயரால் அமைந்த இந்த விருதுகளை அவர்கள் வழிநடந்து தங்களை வளர்த்த தமிழ் அன்னைக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் தொண்டு செய்கின்ற பெருமக்களுக்கு வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்று தெரிவித்தார்கள்.

மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று பேசும்போது கூறியதாவது:–

"மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நல்லவர்களைத் தக்க தருணத்தில் பாராட்ட வேண்டும், போற்ற வேண்டும், விருதுகள் வழங்கி

கௌரவிக்க வேண்டும் என்பதில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட நல்ல உள்ளத்திற்குச் சொந்தக்காரர் ஆவார். நாட்டிற்காகவும் சமுதாயத்திற்காகவும் உழைத்த ஒப்பற்ற தலைவர் தந்தை பெரியார் ஆவார்கள். அடிமைப்பட்டு கிடந்த மக்களின் தலைவராக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக உரிமைக் குரல் கொடுத்த சிந்தனைச் சிற்பியாக டாக்டர் அம்பேத்கர் அவர்கள் போற்றப்படுகின்றார். சொல் புதிது, சுவை புதிது என்று குறிப்பிடும் வகையில் எளிய நடையில், எழுச்சிக் கவிதை படைத்து, தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் மகாகவி பாரதியார் அவர்கள். தமிழ் வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் பாடுபட்ட ஒப்பற்ற கவிஞர் என்ற பெருமையினைப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பெற்றிருக்கின்றார். தமிழ் இலக்கிய உலகிலும் நாட்டு விடுதலைக்காகவும் தொழிலாளர் நலனுக்காகவும் தொண்டாற்றிய பெருமகனார் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விஸ்வநாதன் அவர்கள் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பெரும் தொண்டாற்றிய பெருமகனார் ஆவார்.

ஆற்றலால், அறிவுத்திறத்தினால் மக்களுக்குச் செய்த சேவையால் மக்கள் நெஞ்சில் நிலைபெற்று புகழோடு வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தப் பெருமக்களின் பெயரில் உருவாக்கப்பட்ட இவ்விருதுகளைத் தகுதியானவர்களுக்கு வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்து, விருதுகள் வழங்கப்படுகின்றன.

விருது பெற்ற பெரியோர்கள் அனைவரையும் பாராட்டுவதிலும் வாழ்த்தி வணங்குவதிலும் மகிழ்ச்சி அடைகின்றேன்" என்றார்.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. செ. கருப்பசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. செ.ம.வேலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்து உரையாற்றினர்.

முன்னதாக, செய்தி–சுற்றுலாத்துறை அரசுச் செயலாளர் திரு.வ.ராமதாஸ், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், தமிழ்ச் சான்றோர்கள், கல்லூரி, பள்ளி மாணவ–மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழா நிகழ்ச்சிகளை செய்தி – மக்கள் தொடர்புத்துறை இணைஇயக்குநர் (நிர்வாகம்) திரு. ஆர்.பரதன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

நிறைவாக செய்தி – மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு.எஸ்.எம். சண்முகசுந்தரம் அவர்கள் நன்றி கூறினார்.

❖ ❖ ❖

தமிழ்நாடு அரசின் சார்பில்

மகாத்மா காந்தியடிகளின் 136ஆவது பிறந்தநாள் விழா

நம் இந்தியத் திருநாடு, சுதந்திரம் பெற, தன்னலம் கருதாது போராடிய வீரர் மகாத்மா காந்தியடிகள் ஆவார்கள்.

'அகிம்சை' எனும் ஆயுதத்தைக் கையிலேந்தி, ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றுத் தந்தவர் அண்ணல் காந்தியடிகள் அவர்கள்.

உலக அரங்கில், "மகாத்மா" எனப் பெயரெடுத்த ஒப்பிலா மாமனிதரான காந்தியடிகள், நாமெல்லாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க அரும்பாடுபட்டவர். எளிமையைக் கைப்பிடித்தவர்; வன்முறையை நாடாதவர்; இந்தியத் திருநாட்டின் இணையற்ற தலைவர் மகாத்மா காந்தியடிகள் ஆவார்கள். மகாத்மா காந்தி அவர்களின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் உலக நாடுகள் பின்பற்ற நினைக்கும் இந்த இனிய கால கட்டத்தில், உலக அரங்கில் ஒரு உதாரண புருஷராக நம்மிடையே இன்றும் வாழ்ந்து வரும், மகாத்மா காந்தியடிகள் அவர்களின் 136ஆவது பிறந்த நாள் விழா, தமிழ்நாடு அரசின் சார்பாக, சென்னையில் 2.10.2004 முதல் 4.10.2004 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மகாத்மா காந்தியடிகள் திருவுருவச் சிலைக்கு மாலையணிவிப்பு

2.10.2004 அன்று காலை 8.00 மணியளவில் மெரினா கடற்கரையில் உள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு.பெ.ஸ்ரீ.ராமமோகன்ராவ் அவர்கள், மாண்புமிகு சட்ட பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து இராட்டை மூலம் நூல் நூற்கும் நூற்பு வேள்வி நடைபெற்றது. ஏராளமானவர்கள் நூற்பு வேள்வியில் பங்கேற்று நூல் நூற்றனர்.

மேலும், சர்வோதய சங்கம் மற்றும் கல்லூரி, பள்ளிகள் மூலம் நடத்தப்பட்ட பஜனை மற்றும் பிரார்த்தனை பாடல்கள் நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

சைக்கிள் பேரணி :

தீண்டாமை ஒழிப்பு, சமூக ஒற்றுமை மற்றும் உலக அமைதி ஆகியவற்றை வலியுறுத்தி, கல்லூரி–பள்ளி மாணவர்கள் பங்கேற்ற சைக்கிள் பேரணியை மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தொடங்கி வைத்தார். சைக்கிள் பேரணியில் நூற்றுக்கணக்கான கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

கண்காட்சி :

சென்னை காந்தி மண்டபத்தில் மகாத்மா காந்தியடிகள் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் அரசின் திட்டப் பணிகளின் செயல்பாடுகள் குறித்த, தமிழக அரசு மற்றும் இந்திய கள விளம்பரத் துறை சார்பாக அமைக்கப்பட்டிருந்த கண்காட்சிகளை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.அ.மில்லர் அவர்கள் திறந்து வைத்தார்.

மகாத்மா காந்தியடிகள் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த பல்வேறு குறிப்புகள், காந்தியடிகள் அவர்களின் பல்வேறு காலகட்ட அரிய புகைப்படங்கள் மற்றும் பல்வேறு அரசுத்துறைகளின் திட்டப் பணிகளின் விவரங்கள் ஆகியவைகள் கண்காட்சிகளில் இடம் பெற்றிருந்தன. இந்தக் கண்காட்சிகள் 2.10.2004 முதல் 4.10.2004 வரை 3 நாட்கள் நடைபெற்றது.

இக்கண்காட்சிகளை ஏராளமான பள்ளி – கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் கண்டு இன்புற்றனர்.

காந்தி மண்டபத்தில் காலை 9.30 மணி முதல் 12.00 மணி வரை சர்வோதயா சங்கம், கல்லூரி, பள்ளி மாணவ–மாணவியர்கள் மூலம் நாட்டுப்பற்றை வலியுறுத்தும் பஜனைப் பாடல்கள், பிரார்த்தனைப் பாடல்கள் மற்றும் நூல் நூற்பு வேள்விகள் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாள் விழா :

2.10.2004 அன்று மாலை 5.00 மணிக்கு, காந்தி மண்டப கலை அரங்கில், மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் விழா, மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி.வி.சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேதகு தமிழக ஆளுநர் திரு.பெ.ஸ்ரீ.ராமமோகன்ராவ் அவர்கள், மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி, நடைபெற்ற பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவ–மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரையாற்றிப் பேசும்போது, "மகாத்மா காந்தியடிகள் கடைபிடித்த சத்தியம், அகிம்சை மற்றும் சமூக சேவை ஆகிய 3 தர்மங்களை அனைத்து மாணவ–மாணவியர்கள், பொதுமக்கள் நினைவு கூற வேண்டும். வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும். தன்னம்பிக்கையையும், சுய மரியாதையையும் வளர்த்துக் கொண்டு, இந்தியா வலுப்பெறும் போது உலகின் அனைத்துப் பகுதிகளிலும் இந்தியாவின் பெருமை உயரும்" என்றார்.

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் வரவேற்புரையாற்றிப் பேசும் போது, "வையகம் போற்றும் வரலாற்று நாயகர் மகாத்மா காந்தியடிகள், அன்பு, அகிம்சை, அறநெறி, தியாக வாழ்வு, அமைதியான போராட்ட முறை ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த ஒரு உத்தமத் தலைவர். ஒவ்வொரு கிராமமும்

ஒரு தனிக்குடியரசு போன்று திகழ வேண்டுமென்பது மகாத்மா காந்தியடிகளின் எண்ணமாகும். அந்த மகான் கண்ட கனவுகளை நிறைவேற்றுகின்ற ஒப்பற்ற முதலமைச்சராக விளங்கி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், *'நமது கிராமம்'* திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் *'நமது கிராமம்'* திட்டம் செயல்வடிவம் பெறும் போது, மகாத்மா காந்தியடிகளின் கனவு நனவாகிவிடும் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்" என்றார்.

மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தலைமை உரையாற்றிப் பேசும்போது "மகாத்மா காந்தியடிகள் நாமெல்லாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்காக, அயராது பாடுபட்டவர். நாட்டின் முன்னேற்றமே கிராமப்புறத்தில்தான் உள்ளது என்ற காந்தியடிகள் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் *'நமது கிராமம்'* எனும் ஒரு புரட்சித் திட்டத்தை அறிவித்துள்ளார்கள்" என்றார்.

பரிசளிப்பு:

மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ–மாணவியர்கள், இளைஞர்கள் உட்பட மொத்தம் 34 நபர்களுக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு.பெ.ஸ்ரீ.ராமமோகன்ராவ் அவர்கள் பரிசுகளையும், பாராட்டுச்சான்றிதழ் களையும் வழங்கினார்கள்.

விழாவில், தீண்டாமை ஒழிப்பு, சமூக ஒற்றுமை, மத நல்லுணர்வை வலியுறுத்தும் வகையில் கல்லூரி மாணவியர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விழா நிகழ்ச்சிகளை, செய்தி – மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் (நிருவாகம்) திரு. ஆர். பரதன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

விழாவின் இறுதியாக, செய்தி–மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.வ.கனகராஜ், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை விளக்கிடும் திரைப்படம் திரையிடப்பட்டது.

ஏராளமான பொதுமக்கள் நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர்.

மாமனிதர் மகாத்மா காந்தியடிகள் உலகை விட்டு மறைந்திருக்கலாம்; ஆனால், மனித குலம் தழைக்க அவர் விட்டுச் சென்ற சத்தியம், அகிம்சை, மனிதநேயம் மற்றும் சமூக சேவை போன்ற கொள்கைகள் நம்மை விட்டு என்றும் மறையாது, காந்திய வழியைப் பின்பற்றி நடப்போம்.

* * *

அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர்களுக்குச் சலுகைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 12.10.2004

நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்குச் சிறப்பான வாழ்க்கைத் தரம் அமைத்துக் கொடுத்தால்தான் அவர்கள் ஊக்கத்துடன், முழுத் திறமையுடன் பணியாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதுமே உண்டு. அரசு போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம் முதலிய பொதுத்துறை நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் பணி நிலைமைகளை மேம்படுத்தி அவர்களுக்கு நல்ல பல சலுகைகள் வழங்க வேண்டும் என்ற விருப்பம் எனக்கு எப்போதுமே உண்டு. அப்போதுதான் அவர்களின் உற்பத்தித் திறன் மேம்பட்டு, அவர்கள் மக்களுக்குப் பயனுள்ள வகையில் சேவை செய்ய முடியும். இது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள நான் பெரிதும் விரும்பியபோதிலும், 2001–ஆம் ஆண்டு மே திங்களில் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் பயனுக்காக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாத அளவுக்கு முந்தைய தி.மு.க. அரசு தன்னுடைய தவறான நிருவாகத்தின் வாயிலாக மோசமான நிதி நிலைமையை உருவாக்கி விட்டுச் சென்றது.

முந்தைய தி.மு.க. அரசு பதவியை விட்டு இறங்கிய போது, அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமை மிகவும் சீர்கெட்டு இருந்தது. 2000–2001–ஆம் ஆண்டில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இயங்கி, கடன் வழங்கிய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளைக்கூட செலுத்த முடியாத அளவுக்கு அவற்றின் நிதி நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. எரிபொருள் வழங்கிய எண்ணெய் நிறுவனங்களுக்குக்கூட அவற்றால் தொகை வழங்க முடியவில்லை. அவற்றின் நிலைமை அவநம்பிக்கையூட்டுவதாக இருந்ததோடு, இக்கழகங்கள் மூடப்படுகின்ற நிலையில் இருந்தன. 31.3.2001 அன்று நிலவரப்படி அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் சேர்ந்து வந்த இழப்பு (–) 2031.19 கோடி ரூபாய் என்ற மிக உயரிய அளவில் இருந்தது. 2000–2001–ஆம் ஆண்டில் மட்டும் ஏற்பட்ட இழப்பு (–) 228.87 கோடி ரூபாய் ஆகும். சம்பளங்கள், எரிபொருள் செலவு போன்ற நடப்பு இயக்க செலவுகளைக்கூட செய்ய முடியாத அளவுக்கு நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. சம்பளங்கள்கூட வழங்க முடியுமா என்ற கடுமையான ஐயப்பாடு எழுந்தது.

என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிலைமையும் கூட அதேபோன்று மோசமாகத்தான் இருந்தது. 2000–2001ஆம் ஆண்டு வரையில் முந்தைய அரசு, அரசு வழங்க வேண்டிய மானியங்கள் என்று காட்டி நிலைமையை மூடி மறைத்தது. மானியம் வழங்கப்படாமலே நிலுவையில் இருந்தது. இதன் விளைவாக என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று சரியான நிலைஃமயை வெளிக் கொணர்ந்தபோது, 2001–2002–ஆம் ஆண்டில் (–) 4,851 கோடி ரூபாய் நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. முந்தைய தி.மு.க. அரசின் தவறான நிருவாகத்தின் காரணமாக தமிழ்நாடு மின்சார வாரியம், மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் பிறரிடமிருந்து வாங்கப்பட்ட மின்சாரத்திற்கான உரிய தொகையை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டது. பணியாளர்களுக்கான சம்பளம், நிலக்கரி வகையிலான செலவு மற்றும் இதரச் செலவுகள் போன்ற வாலாயமான செலவுகளுக்குப் பணம் வழங்க இயலவில்லை. சுருக்கமாகச் சொல்லப் போனால் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாட்டையே அறவே நிறுத்தக் கூடிய ஒரு நிலை நிலவியது.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு மற்றும் இதரப் பயன்களை உடனடியாக வழங்க நான் விரும்பியபோதிலும், மாதாந்திரச் சம்பளப் பட்டுவாடா மற்றும் இதர இயக்க செலவுகளைக்கூட செய்ய முடியாத அளவுக்கு நிலைமை மிகக் கடுமையாக இருந்ததால் நான் விரும்பிய வண்ணம் அவர்களுக்குச் சலுகைகள் எதனையும் வழங்க இயலாமல் போயிற்று. அதற்குப் பிறகு என்னுடைய அரசு, அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றின் நிதி நிலைமைகளைச் சீரமைக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாட்டில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

2000–2001ஆம் ஆண்டில் (–) 228.87 கோடி ரூபாய் நஷ்டத்தை எதிர்கொண்ட அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டு, 2003–2004–ஆம் ஆண்டில் சொற்ப அளவாக 2.38 கோடி ரூபாய் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லாம் காரணம் என்னுடைய அரசு எடுத்த உறுதியான நடவடிக்கைகள்தான். முந்தைய தி.மு.க. அரசின் மோசமான நிருவாகத்தின் காரணமாக ஏற்பட்ட சீரழிவிலிருந்து அரசு போக்குவரத்துக் கழகங்களை மீட்டு, அச்சுறுத்தலுக்குள்ளான தொழிலாளர்களின் வாழ்க்கையைப் பாதுகாக்க என்னுடைய அரசு உளப்பூர்வமாக மேற்கொண்ட முயற்சிகளை அனைத்துப் பணியாளர்களும் உணர்வார்கள். தொழிலாளர்களும், பணியாளர்களும் நிலைமையின் கடுமையைப் புரிந்து கொண்டு எதிர்காலத்தில் அவர்களுக்கு உண்மையான பயன் கிடைக்கின்ற வகையில் நிலைமையைச் சீரமைக்க என்னுடைய அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு மிகுந்த ஒத்துழைப்பை நல்கினார்கள். அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களும், பணியாளர்களும் அளித்த சிறப்பான ஒத்துழைப்பின் காரணமாக நிலைமை முற்றிலுமாகச் சீரமைக்கப்பட்டு, கடந்த 18 ஆண்டுகளில் முதல் முறையாக 2003–2004–ஆம் ஆண்டில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஆதாயம் ஈட்டியுள்ளன. இச்சாதனையை எய்த காரணமாக இருந்த பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசு அறிவித்த டீசல் விலை உயர்வு காரணமாக இப்போதுகூட அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஆரோக்கியமான நிதி நிலைமைக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது 2004–2005ஆம் ஆண்டில் அரசு போக்கு வரத்துக் கழகங்களை மீண்டும் பாதித்துள்ளது. விலை உயர்வு காரணமாக எழுந்துள்ள இந்தப் புதிய அச்சுறுத்தலை, திறமையான செயல்பாடு, உற்பத்தித் திறன் உயர்வு ஆகியவற்றின் மூலமாக நாம் சமாளித்தாக வேண்டும். அரசு போக்குவரத்துக் கழகங்கள் இலாபகரமாக இயங்கி அதன் மூலம் தொழிலாளர்களுக்குக் கூடுதல் பயன்கள் கிடைக்கச் செய்வதற்கான என்னுடைய அரசின் முயற்சிகளுக்கு தொழிலாளர்கள் முழு ஒத்துழைப்பு நல்குவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் 1999–2000ஆம் ஆண்டில் ஏற்பட்ட உண்மையான இழப்பு (–) 850.65 கோடி ரூபாய் ஆக இருந்தது. 2000–2001ஆம் ஆண்டில்

இது (–) 1,055.34 கோடி ரூபாயாக இருந்தது. அரசின் மானியத்தின் மூலமாக இது ஈடு செய்யப்பட்டு விடும் எனக் காட்டப்பட்டது. ஆனால், உண்மையில் அவ்வாறு மானியம் வழங்கப்படவில்லை. இந்த சேர்ந்து வந்த இழப்புகளை 2001–ஆம் ஆண்டு மே திங்களில் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அவற்றை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. இதன் விளைவாக, முந்தைய அரசு உண்மையில் மானியம் எதுவும் வழங்காமலேயே, ஆனால் வழங்கப்படுவதாகச் சொல்லி ஈடு செய்யப்படும் என காட்டப்பட்டு சேர்ந்து வந்த இழப்புகள் அனைத்தையும் 2001–2002–ஆம் ஆண்டில் இவ்வரசு சரி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. முந்தைய ஆண்டில் சேர்ந்து வந்த உண்மையான இழப்பையும் சேர்த்து, 2001–2002–ஆம் ஆண்டில் என்னுடைய அரசு சமாளிக்க வேண்டியிருந்த மொத்த இழப்புத் தொகை (–) 4,851 கோடி ரூபாய் ஆகும். 2002–2003–ஆம் ஆண்டில் என்னுடைய அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக அந்நிலைமையிலிருந்து மீண்டு வர முடிந்தது. தி.மு.க. அரசால் மத்திய அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்படாமல் விடப்பட்ட நிலுவைத் தொகை 1,962 கோடி ரூபாயைக் கொடுத்துத் தீர்க்க என்னுடைய அரசு ஏற்பாடு செய்தது. வருவாயைப் பெருக்குவதற்கான நடவடிக்கையையும் நாங்கள் மேற்கொண்டோம். இந்த நடவடிக்கைகளின் பயனாக 2002–2003–ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியம் 112.57 கோடி ரூபாய் நிகர ஆதாயம் ஈட்ட முடிந்தது.

2003–2004–ஆம் ஆண்டில் நிலவிய மோசமான பருவ நிலையின் காரணமாகவும், அதனையடுத்து கடும் வறட்சி ஏற்பட்டு குறிப்பாக புனல்மின் நிலையங்களின் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு மீண்டும் தமிழ்நாடு மின்சார வாரியம் (–) 1,166.42 கோடி ரூபாய் நஷ்டத்தை சந்திக்க வேண்டி இருந்தது. 2004–2005–ஆம் ஆண்டில் நீர்த் தேக்கங்களின் நீர் இருப்பு சீரடைந்து நிதி நிலைமையும் மேம்படும். இவ்வாறாக, முற்றிலும் நம்பிக்கையற்ற நிலைமையிலிருந்து மீண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட இழப்புகளைத் தமிழ்நாடு மின்சார வாரியம் கணிசமான அளவுக்கு ஈடு செய்துள்ளது. முந்தைய தி.மு.க. அரசு செலுத்தாமல் விட்டதால் ஏற்பட்ட நிலுவைப் பொறுப்புகள் அனைத்தும் கொடுத்துத் தீர்க்கப்பட்டு விட்டன. திவாலான நிலைமையிலிருந்து மீட்டு தமிழ்நாடு மின்சார வாரியம் புதிய வளர்ச்சிப் பாதையில் நடைபோட என்னுடைய அரசு காரணமாக இருந்தது. மத்தியில் புதியதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள அரசு, நிலக்கரி விலைகளை உயர்த்தியுதன் காரணமாக 2004–2005–ஆம் ஆண்டில் செலவு 167 கோடி ரூபாய் மேலும் உயர்ந்து, அதன் விளைவாக தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலைமைக்குப் புதிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. இருந்தாலும், நாங்கள் ஏற்கெனவே மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாகவும், என்னுடைய அரசு உறுதியளித்த மானியங்களை ரொக்கமாக வழங்கியதன் காரணமாகவும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலைமையில் பெருத்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக, என்னுடைய வழிகாட்டுதலின் பேரில் என்னுடைய அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளின் பயனாக அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவை சந்தித்து வந்த மிக மோசமான நிதி நிலைமை கணிசமான அளவு சீரடைந்துள்ளது.

நிதி நிலைமையை சீரமைப்பதற்காக மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் அரசோடு ஒத்துழைத்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஒத்துழைப்பு மட்டும் இல்லாது போயிருந்தால், இந்த அமைப்புகளுக்கு புத்துயிர் ஊட்டி புதுவாழ்வு அளித்திருக்க முடியாது.

உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருந்த காரணத்தினால், அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் சம்பளங்கள் தொடர்பாக முன்னதாகவே உடன்படிக்கை செய்து கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நேர்விலும்கூட அண்மைக்காலம் வரையில் உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் இருந்ததால் ஊதியம் தொடர்பாக தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்த முடியாமல் போய்விட்டது. இவற்றை நான் முழுமையாகப் பரிசீலித்து, ஊதிய உடன்படிக்கைகள் தொடர்பாக முறையான பேச்சு வார்த்தைகள் தொடங்குவதை எதிர்நோக்கி, இந்த நிறுவனங்களின் நிதி நிலைமையைச் சீரமைத்து அவற்றின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு அளப்பரிய

ஒத்துழைப்பு நல்கிய அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டும் என்று முடிவு எடுத்துள்ளேன். எனவே, அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் 1.9.2003–ஆம் நாளிலிருந்து முன் தேதியிட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.250 வீதம் இடைக்கால நிவாரணம் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இந்த இடைக்கால நிவாரணம் ஒரு இடைக்கால் ஏற்பாடுதான். ஊதிய உயர்வு தொடர்பான பேச்சு வார்த்தையின் முடிவில் ஏற்படுகின்ற உடன்படிக்கையில் இத்தொகை சரிக்கட்டப்படும். ஊதிய உயர்வு தொடர்பான பேச்சு வார்த்தைகளைத் தொடங்க அரசு போக்குவரத்துக் கழகங்களும் தமிழ்நாடு மின்சார வாரியமும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். ஊதிய உடன்படிக்கை தொடர்பான பேச்சு வார்த்தைகள் முடிவு அடைகிற வரையில் காத்திருக்காமல் இடைக்கால நிவாரணம் வழங்குவது தொடர்பாக நான் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பை அனைத்துத் தொழிலாளர்களும், ஊழியர்களும் பெரிதும் வரவேற்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இது தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் நலனில் இவ்வரசு கொண்டுள்ள நல்ல எண்ணத்தை தெளிவுபடுத்துகிறது.

மாதம் ஒன்றுக்கு ரூ.250 என்ற வீதத்தில் வழங்கப்படும் இந்த இடைக்கால நிவாரணத்தின் காரணமாக அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 34.52 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். இத்தொகை 2004–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் சம்பளத்தோடு சேர்த்து வழங்கப்படும். 1.9.2003 முதல் 30.9.2004 வரையிலான 13 மாத காலத்திற்குரிய நிலுவைத் தொகையான 37.40 கோடி ரூபாய் ரொக்கமாக வழங்கப்படும். இதனால், அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த 1,15,000 தொழிலாளர்களும், பணியாளர்களும் பயன் பெறுவர்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் மாதம் ஒன்றுக்கு ரூ.250 இடைக்கால நிவாரணம் வழங்குகிற வகையில் ஆண்டு ஒன்றுக்கு 26.10 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். இந்த இடைக்கால நிவாரணத் தொகை 2004–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், சம்பளத்தோடு சேர்த்து வழங்கப்படும். 1.9.2003 முதல் 30.9.2004 வரையிலான 13 மாத காலத்திற்குரிய நிலுவைத் தொகையான 28.28 கோடி ரூபாய் ரொக்கமாக வழங்கப்படும். இதனால், தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சேர்ந்த 87,000 தொழிலாளர்களும், பணியாளர்களும் பயன் பெறுவர்.

பொதுமக்கள்தான் நம்முடைய உண்மையான எஜமானர்கள் என்பதைத் தொழிலாளர்களும், பணியாளர்களும் உணர வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும் நாம் பொதுமக்களுக்கு இடையூறுகள் விளைவிக்கக் கூடாது என்ற கோட்பாடு 2001–ஆம் ஆண்டில் நிலைநிறுத்தப் பட்டது. எனவே, தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுடனான நல்லுறவை மேம்படுத்தும் என்னுடைய அரசின் ஒரு அனுகூலமான நடவடிக்கையாக, 31.12.2000–க்கு முன்னர் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களின் நேர்வில், குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டவர்கள் நீங்கலாக, ஏனையோரைப் பொறுத்த வரையில் அவர்களது வேலை நிறுத்தக் கால அளவை, அவர்களுக்குத் தகுதி உடைய விடுப்பாகக் கருத முடிவு செய்துள்ளேன்.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் கடும் நிதி நெருக்கடியை சந்தித்து வந்ததைக் கருத்தில் கொண்டு, அந்நிறுவனங்கள் தொடர்ந்து செயல்பட ஏதுவாக அவற்றின் நிதி நிலைமையை எப்படியாவது சீரமைப்பதற்கான அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்தது. அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்காவிட்டால், அந்நிறுவனங்கள் திவாலாகி அவற்றை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும். இந்தச் சீரழிவு நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக என்னுடைய அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டி இருந்தது. அத்தகைய தொகுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பணியாளர்கள் ஒரு ஆண்டில் 15 நாட்கள் ஈட்டிய விடுப்பை சரண் செய்து, அதற்கு ஈடாக ரொக்கத் தொகைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டு வந்த வசதிக்குத் தற்காலிக கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. தொழில் தகராறு காரணமாக, தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் ஈட்டிய விடுப்பை சரண் செய்து பணம் பெறுவது சம்பந்தமான கட்டுப்பாடு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. அரசு

போக்குவரத்துக் கழகங்களிலும், தமிழ்நாடு மின்சார வாரியத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகிற செயல்பாட்டு பாதுகாப்பும், உயரிய செயல் திறனும் வேண்டியுள்ள பணிகளின் சிறப்புத் தன்மையைக் கருத்தில் கொண்டு, இந்தக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டும் என தொழிலாளர்களும், பணியாளர்களும் தற்போது கோரிக்கை வைத்துள்ளார்கள். இனி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஒரு ஆண்டில் தங்களுடைய கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பில் 15 நாட்களை சரண் செய்து அதற்கு ஈடாக ரொக்கத் தொகையை, ஏற்கெனவே உள்ள சுழற்சி முறையில் பெற்றுக் கொள்ள அனுமதிக்க நான் முடிவு செய்துள்ளேன். இந்த அமைப்புகளின் ஒட்டு மொத்த உற்பத்தித் திறன் மற்றும் செயல்பாடு மேம்பட்டு, அதன் வாயிலாக அவர்கள் பண பலன்கள் பெற உதவும் இந்த நடவடிக்கையை அனைத்துத் தொழிலாளர்களும், பணியாளர்களும் வரவேற்பார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

கடந்த 18 ஆண்டுகளில் முதல் முறையாக 2003–2004–ஆம் நிதி ஆண்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் இலாபம் ஈட்டியுள்ளன. தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில், மோசமான பருவ நிலையின் காரணமாக 2003–2004–இல் இழப்பு ஏற்பட்டது. ஆனால், 2004–2005–ஆம் ஆண்டில் இவ்வாரியத்தின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் நஷ்டத்திலிருந்து மீள்வதில் அவற்றின் தொழிலாளர்களும், பணியாளர்களும் மிகுந்த ஒத்துழைப்பு நல்கினார்கள். நிதி நிலைமை முற்றிலுமாக சீரடையவில்லை; தவிரவும், டீசல் மற்றும் நிலக்கரியின் விலை உயர்வுகள் காரணமாக செலவு மேலும் அதிகரித்து, இந்த நிறுவனங்களின் நிதி நிலைமை பாதிக்கப்படும் என்ற போதிலும்கூட, தொழிலாளர்களும், பணியாளர்களும் அர்ப்பணிப்பு உணர்வோடு தொடர்ந்து பணியாற்றி, தங்களுடைய நிறுவனங்களின் உற்பத்தித் திறனையும், செயல் திறனையும் மேம்படுத்த அவர்களை ஊக்குவிக்க வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே, நான் பெருந்தன்மையான ஒரு முடிவை எடுக்க தீர்மானித்துள்ளேன். அதன்படி, கடந்த ஆண்டில் வழக்கமான முறையில் 8.33 சதவிகித போனஸ் பெற்ற தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, 2003–2004–ஆம் ஆண்டிற்கு 8.33 சதவிகித போனசுடன் 1.67 சதவிகித கருணைத் தொகையும் சேர்த்து மொத்தம் 10 சதவிகித தொகை வழங்கப்படும். இதனால், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 34.38 கோடி ரூபாயும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 23 கோடி ரூபாயும் செலவு ஏற்படும். இந்த 8.33 சதவிகித போனஸ் மற்றும் 1.67 சதவிகித கருணைத் தொகை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்த பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 3.5 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்ற நான் உறுதி பூண்டுள்ளேன். தமிழ்நாடு பல துறைகளில் விரைவான முன்னேற்றம் கண்டு வருகிறது. உற்பத்தி, உற்பத்தித் திறன் செயல்பாடு மற்றும் செயல் திறன் ஆகியவற்றில் முன்னேற்றம் காண்பதன் மூலம் மேலும் விரைவான வளர்ச்சி பெற்று, நிர்ணயித்த இலக்கை எய்த முடியும். அவசியமான போது சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு நிர்ணயித்த இலக்கை நோக்கி முன்னேற பணியாளர்களும், தொழிலாளர்களும் தங்களது முழு ஒத்துழைப்பை நல்கி உள்ளனர். அரசு போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவை நஷ்டத்தில் இருந்து வெற்றிகரமாக மீண்டதற்கு அவற்றின் தொழிலாளர்களும், பணியாளர்களும் அளித்த பங்களிப்பை நான் முழு மனதோடு பாராட்டுகிறேன். இந்த முயற்சியில் அவர்கள் காட்டிய முழுமையான அர்ப்பணிப்பு உணர்வையும், நல்கிய ஒத்துழைப்பையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். நம் அனைவரின் ஒன்றுபட்ட முயற்சியின் பயனாக விளைந்த இந்த வெற்றியில் மனநிறைவு அடைந்து நான் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் ஆக்க வேண்டும் என்ற இலக்கை நோக்கிய பாதையில் இன்னும் விரைவாக பயணம் செய்ய ஊக்குவிக்கும் வகையில், பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இந்த இடைக்கால நிவாரணம், போனஸ், கருணைத் தொகை மற்றும் இதரச் சலுகைகளை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

❖ ❖ ❖

காற்று

- கு. அழகிரிசாமி

அந்தத் தெருவில் நூறு வீடுகள் இருக்கும். ஆனால் ஒரு வீட்டில்தான் தெருத் திண்ணை இருந்தது. மற்ற வீடுகள் சிலவற்றில் திண்ணை இருந்தபோதிலும், அது கம்பிக் கதவுக்கு உட்புறமாக இருந்தபடியால், அதைக் கணக்கில் சேர்க்க முடியாது. பெரும்பாலான வீடுகள் திண்ணையில்லாத நவநாகரிக மோஸ்தரிலேயே கட்டப்பட்டவையாகும்.

மேற்படி வீட்டின் தெருத் திண்ணை அக்கம் பக்கங்களில் வசிக்கும் குழந்தைகளுக்கு ஒரு பாலைவனச் சோலையாக இருந்தது. அவர்கள் தங்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வந்தால், ஒரு முக்கால் மைல் வட்டாரத்தில் அந்தத் திண்ணையைத் தவிர வேறு எங்கும் ஒதுங்க முடியாது. இதனால் எப்பொழுது பார்த்தாலும் திண்ணையில் ஐந்தாறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கும். விளையாட்டு என்றால் கூச்சல் இல்லாமல் இருக்குமா? உற்சாகம் மீறியதும், கூச்சலும் கும்மாளமும் அதிகமாகிவிடும். உடனே வீட்டின் உள்ளே இருந்து ஒருவன் ஓடிவருவான். தினந்தோறும் விரட்டியடித்தும் கூட, குழந்தைகள் திரும்பத் திரும்ப வந்து அமர்க்களம் பண்ணுவதைக் கண்டு அவனுக்குக் கோபம் சிரசை முட்டிக் கொண்டிருந்தது. அதனால் கைக்கு எட்டிய குழந்தைகளை அடித்து விரட்டுவான்; எட்டாத குழந்தைகளை வாய்க்கு வந்தபடி திட்டி விரட்டுவான். ஒரு வழியாகத் திண்ணை காலியாகும். ஆனால், இது எவ்வளவு நேரத்துக்கு? அவன் தலை மறைந்தால் போதும், மறுபடியும் திண்ணைக்குக் குழந்தைகள் ஓடி வந்துவிடுவார்கள். அடியையும் மிரட்டலையும் வசவையும் ஒரு பொருட்டாகவே அவர்கள் கருதவில்லை. அதற்குப் பதிலாகத் தங்கள் விளையாட்டின் ஒரு பகுதியாகவே நினைத்து விட்டார்கள் போல் தோன்றியது.

வீட்டுக்குள் வாடகை கொடுத்துக் குடியிருக்கும் ஆசாமி, குழந்தைகளை நிரந்தரமாக ஒழித்துக் கட்டுவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு குழந்தையையாவது பயங்கரமாகக் கீழே இழுத்துப் போட்டு, மூச்சுப் பேச்சு அற்றுப் போகும் வரையில் மிதித்துத் துவைக்க வேண்டுமென்பது அவனது நீண்ட நாள் திட்டம். அவ்வாறு செய்தால், தன் கோபமும் தணிந்து சற்று ஆறுதல் பிறக்கும், நாலைந்து நாட்களுக்காவது குழந்தைகள் அந்தப் பக்கம் தலைகாட்டாமல் இருப்பார்கள் என்று நினைத்தான்.

ஒருநாள் அவனுக்கு வேலையில்லை. அதனால் வெளியே போகவேண்டிய அவசியமில்லாமல்,

வீட்டுக்குள்ளேயே உட்கார்ந்து கொண்டிருந்தான். சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. குழந்தைகள் எப்போது வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டுதான் உட்கார்ந்திருந்தான்.

உரிய காலத்தில் குழந்தைகள் வந்துவிட்டார்கள். வெறுமனே கைவீசிக்கொண்டு வந்தார்கள் நான்கு பேர். இரண்டு சிறுமிகள், இரண்டு கைக்குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு வந்தார்கள். குழந்தைகளைத் திண்ணையின் ஒரு மூலையில் விட்டார்கள். உடனே விளையாட்டும் ஆரம்பமாகி விட்டது. அவர்கள் உலகத்தையே மறந்துவிட்டனர். சொல்ல முடியாத உற்சாகம். அவ்வப்போது தெருவே எதிரொலிக்கும் படியான சிரிப்பு, கைதட்டல். இப்படித் தம்மை மறந்து ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்த சமயத்தில், சமயம் பார்த்துக் காத்திருந்த ஆசாமி புலிப் பாய்ச்சலாகப் பாய்ந்து வெளியே வந்தான். வந்த வேகத்தில் ஒரு சிறுவனை இடுப்பில் மிதித்துத் தெருவில் போய் விழும்படி தள்ளினான். ஒரு பெண் குழந்தையின் தலை முடியை வலது கையால் எட்டிப் பிடித்தான். இதைப் பார்த்து மற்ற குழந்தைகள் ஒரே ஓட்டமாக ஓடி மறைந்து விட்டன. தெருவில் வந்து விழுந்த சிறுவன் அழுது கூப்பாடு போட்டுக் கொண்டே எழுந்து, நொண்டி நொண்டி நடந்து கொண்டு தன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

குடித்தனக்கார ஆசாமி, அந்தச் சிறுமியின் கூந்தலை வலதுகையிலிருந்து இடதுகைக்கு மாற்றினான். "இனிமேல் இங்கே வராதே! இனிமேல் இங்கே வராதே!" என்று பத்துப் பதினைந்து தடவையாவது சொல்லியிருப்பான்; ஒவ்வொரு தடவையும் குழந்தையின் கன்னத்தில் பொறி பறக்கும்படி அறை விழுந்து கொண்டிருந்தது. அந்த ஐந்து வயதுக் குழந்தை புத்தி பேதலித்துப் போய், அழக்கூட பிரக்ஞையின்றி முகத்தை ஒரு மாதிரி கோரமாக வைத்துக் கொண்டு நின்றது. தெருவோடு சென்ற ஒருவன் வந்து விலக்கியிராவிட்டால், குழந்தையின் மூச்சு நிற்கும் வரையிலும் அடி விழுந்திருக்கும்.

விடுதலைப் பெற்றுத் தன் வீட்டை நோக்கி அடி எடுத்து வைத்தபோதுதான், அதற்கு அடி வாங்கியிருக்கிறோம் என்ற ஞாபகம் வந்தது. அதைத் தொடர்ந்து கன்னம் எரியவும் ஆரம்பித்தது. உடனே "கோ" வென்று அழுதுகொண்டு நாலைந்து வீடுகள் தள்ளியிருக்கும் தன் வீட்டுக்குச் சென்றாள். அதற்குள், சிவந்து தடிப்பேறியிருந்த இடது கன்னம் வீங்கி, இடது கண்ணும் தீக்கங்கு மாதிரி சிவந்து விட்டது. அவளுடைய அழுகுரலைக் கேட்டு எதிரே ஓடிவந்து, "என்ன? ஏது" என்று விசாரித்த தாயிடம் அவள் விஷயத்தைச் சொல்லவில்லை. சொல்வதற்கு வார்த்தைகளே உருவாகவில்லை. அடியினால் ஏற்பட்ட அதிர்ச்சியும், அனுமதி இல்லாமல் விளையாடப் போனதற்காக அம்மாவும் அடிப்பாள் என்ற பயமும் சேர்ந்து அவள் நாவைக் கட்டிவிட்டன. அவளால் அப்போது அழத்தான் முடிந்தது.

"சனியன்! சொன்னாலும் நிற்காமல் தெருவுக்கு ஓடி ஓடிப் போகுதே!... உனக்கு இதுவும் வேணும்; இன்னும் வேணும்" என்றாள் அம்மா.

கூட விளையாடும் சிறுவர்களில் எவனாவது அடித்திருப்பான் என்பது அவள் எண்ணம். விஷயத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்று அவள் தெருவுக்கு வந்து, இரண்டு பக்கமும் திரும்பிப் பார்த்தாள். அவளால் எதையுமே அறிந்து கொள்ள முடியவில்லை. தெரு வழக்கம்போலவே இருந்தது. உள்ளே திரும்பி வந்து, "என்ன சனியனே! எங்கே போய் அடி வாங்கிக்கினு வர்ரே; சொல்லித் தொலையேன்!" என்று சீறினாள்.

அப்பொழுதும் குழந்தையால் பேச முடியவில்லை.

"அப்பா வரட்டும். உன்னைத் தூணோடு, சேர்த்துக் கட்டி வைக்கச் சொல்றேன். அப்பொத்தான் நீ வீட்டிலே கெடப்பே" என்று சொல்லிக் கொண்டு, தன் வலக்கையால் குழந்தையின் கூந்தலைப் பிடித்துத் தரதரவென்று உட்பக்கம் இழுத்துக் கொண்டு சென்றாள். உள்ளே கொண்டுபோய் கைக் குழந்தையின் பக்கம் தள்ளிவிட்டு, சமையற் கூடத்தின் புகைக்குள் மறைந்து விட்டாள் அம்மா. அவ்வளவில் சிறுமியின் பயமும் தெளிந்து விட்டது; அழுகையையும் நிறுத்திவிட்டாள். அப்புறம் கைக்குழந்தைதான் புகை எரிச்சல் தாங்க முடியாமல் அழுது கொண்டிருந்தது. சிறுமி அதற்கு விளையாட்டுக் காட்டி, அழுகையை நிறுத்த வேண்டுமென்றுதான் ஆசைப்பட்டாள்; முயற்சியும் செய்தாள். ஆனால் குழந்தை அக்காளின் விளையாட்டைக் கண்டு ஏமாந்து விடவில்லை. அதற்கு உடம்பில் என்னென்னவோ கோளாறு. அப்புறம் இந்த

ஆளை மறைக்கும் புகை வேறு. கண்கள் எரிந்து, மூச்சும் திணறியது. வீட்டுக்குள்ளேயே சுற்றிச் சுழன்று வரும் புகைக்கு, அந்தத் தாய், அந்தச் சிறுமி, இந்தக் கைக்குழந்தை ஆகிய மூவருடைய நாசித் துவாரங்களைத் தவிர வேறு போக்கிடம் இல்லை. விளையாட்டுக் காட்ட முயன்ற சிறுமியும் புகையால் திணறினாள். தெருவுக்கு எப்பொழுது போவோம் என்றிருந்தது. இனி ஓடினால் அம்மா கழுத்தை முறித்து அடுப்பில் திணித்து விடுவாள் என்று எண்ணி, அறையின் வாசற்பக்கத்துக்குக் குழந்தையை இழுத்துக் கொண்டு வந்து கொஞ்சம் தாராளமாக சுவாசிக்க முயன்றாள். அங்கே, பக்கத்துக் குடித்தனத்திலிருந்து புகை வந்து கொண்டிருந்தது. என்றாலும் அவ்வளவு கனத்த புகையல்ல. சிறுமிக்குக் கொஞ்சம் ஆசுவாசமாக இருந்தது. அந்தச் சின்னஞ்சிறு முற்றவெளிக்கு மேலாகத் தெரியும் வானத்தை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டாள். அப்பொழுது அவள் மனம் உண்மையில் வானவெளியை நினைத்து ஏங்கவில்லை; திண்ணையை நினைத்துத்தான் ஏங்கியது. 'நாளை முதல் அந்தத் திண்ணைக்குப் போக முடியாதே! போனால் கன்னம் வீங்கும்படியாக அடிவாங்க வேண்டுமே! வீடு திரும்பினால் அம்மா அடிப்பாளே! இனி என்ன செய்வது? எப்படி உயிர் வாழ்வது?' என்று அந்தத் தன் ஐந்தாவது பிராயத்திலே எதிர்காலத்தை எண்ணி அவள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். திண்ணை என்றால், அவள் நடக்கத் தெரிந்த நாளிலிருந்து அவளுக்குக் காற்றும் வெளிச்சமும் கொடுத்து வாழ்க்கை இன்பத்தை அளித்து வந்த திண்ணை அது. இப்பொழுது அதுவும் போய்விட்டது. இனி திண்ணையும் இல்லை; காற்றும் இல்லை. வாழ்க்கையின் சந்தோஷம் என்பதும் இருக்க முடியாது. அவளுக்கு ஒரு சமயம், தன் வீட்டில் ஏன் தெருத் திண்ணை வைத்துக் கட்டவில்லை என்றும் தோன்றியது. தன் வீடு எதற்காகத் தெருவிலிருந்து வெகுதூரம் உள்ளே தள்ளி ஒரு மூலையில் இருக்க வேண்டுமென்று தன்னையே கேட்டுக் கொண்டாள். திண்ணை வைத்துக் கட்டாததற்காக அப்பாவிடம் அவளுக்குக் கோபமும் வந்தது. அப்பா வீட்டுக்குச் சாப்பிட வரும்போது, அவரிடமே இதைக் கேட்பது, அழுது, முரண்டு பண்ணி திண்ணை கட்டச் சொல்வது என்று நினைத்தாள். தன்னிடம் பிரியமாக இருக்கும் அப்பன், தன் சொல்லைத் தட்டமாட்டான் என்று அவளுக்கு நம்பிக்கையும் பிறந்தது. அதனால் புகையைத் 'தற்காலிகமாகச் சகித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.'

கற்பகத்தின் தகப்பன் வேதகிரி வாயையும் வயிற்றையும் கட்டிப் பழகியவன்தானே ஒழிய, எந்தக் காலத்திலும் திண்ணை கட்டியவனல்ல. வருஷம் 365 நாளும் தினந் தவறாமல் ஒரு வேளைச் சாப்பாடின்றிப் பட்டினி கிடக்கிறான். பதினான்கு வருஷ சேவைக்குப் பிறகு இப்பொழுது அவன் வாங்கும் சம்பளம் நாற்பத்தெட்டு ரூபாய். மந்தைவெளியின் ஒரு கோடியில், தன் வீட்டுக்கு மூன்று பர்லாங்கு தூரத்திலேயே ஒரு சிறு ஜவுளிக் கடையில் ஒரு சிப்பந்தியாக வேலை செய்து வருகிறான். சம்பளத்தில் பத்து ரூபாய் வீட்டு வாடகைக்குப் போய் விடும். ஆம், பத்து ரூபாய் வாடகை! சென்னை மாநகரத்தில் அந்த வாடகைக்கு வீடும், அந்த வீட்டில் ஒரு குடித்தனமும் இருக்கிறது என்றால், வீட்டையும் வாழ்க்கையையும் பற்றி அதிகம் சொல்ல வேண்டாம். ஒரே ஒரு அறைதான் வீடு. அதற்குள்ளேயே சமையல் பகுதி. மழைக்காலத்தில் ஒழுகாத பகுதி பார்த்து, கூட்டிச் சுருட்டிப் படுத்திருக்க வேண்டும், வீட்டின் முகட்டில் நாழி ஓடுகளிலிருந்து வெயில் காலத்தில் 'தொப்புத் தொப்பு'என்று தேள் விழுவதும் உண்டு. வீட்டுக்கு வாசல்தான் ஜன்னல். முற்றத்தில் குழாய் இருந்ததால் எப்பொழுது பார்த்தாலும் அங்கே ஈரமாக இருக்கும். அந்த வீட்டுக்குள்ளேயே ஐந்தாறு பகுதிகளில் பத்தும் பதினைந்தும் கொடுத்துக் குடியிருப்பவர்கள் அத்தனை பேருக்கும் குழாயும் முற்றமும் பொது. எந்த வீட்டுச் சப்தமும் எல்லா வீடுகளுக்கும் கேட்கும். எந்த வீட்டுப் புகையும் எல்லா வீடுகளுக்கும் பரவி, சுவாசத்திலும் வானத்திலும் கலக்கும். இப்படிப்பட்ட இடத்தில் வேதகிரியின் மனைவி, கற்பகத்தையும், மேலும் நான்கு குழந்தைகளையும் பிரசவித்திருக்கிறாள். அவற்றுள், கற்பகத்தையும் கைக்குழந்தைகளையும் தவிர மற்ற குழந்தைகள் செத்துப் போய்விட்டன. அவள் மட்டும் அந்த உடம்பை வைத்துக்கொண்டு இன்னும் சாகாமல் சமாளித்துக் கொண்டு வருகிறாள்.

வேதகிரி கல்யாணம் பண்ணிக்கொண்டு அந்த வீட்டுக்குக் குடித்தனம் வந்தபோது நிலைமை இவ்வளவு மோசமாக இல்லை. இப்பொழுது குடியிருக்கும் பகுதியோடு, மேலும் ஒரு சிறு அறையையும் சேர்த்தே பத்து ரூபாய் வாடகைக்குப் பிடித்தான். ஆனால் மந்தைவெளியைச் சுற்றி மாடமாளிகைகளுடன் புதுநகரம் ஒன்று ராக்ஷஸ நாகம் போல் வளைத்துக் கொண்டு கிளம்பவே, அவன் குடியிருந்த பகுதிக்கு விலை மதிப்பு உயர்ந்து விட்டது. ஒவ்வொரு வீட்டின் மதிப்பும் ஆறு மடங்கு ஏழு மடங்காகக் கூடிவிடவே வாடகையும் உயர்ந்தது. வேதகிரி பத்து ரூபாய்க்குமேல் கொடுக்கத் தனக்குச் சக்தியில்லை என்றான். அப்படியானால் சமையல் பகுதியை மட்டும் தான் பத்து ரூபாய்க்கு விடமுடியும் என்று வீட்டுக்காரன் சொன்னான். வெளியே விரட்டாமல், அம்மட்டுக்காவது இடம் கொடுத்தானே என்று, தன் குடித்தனத்தைச் சமையற்கூடத்துக்குள்ளே ஒடுக்கிக் கொண்டு பக்கத்து அறையைக் காலி செய்து கொடுத்தான். அதன்பின் கற்பகம் பிறந்தாள். பிறந்த நாளிலிருந்து அவள் சமையற்கூடத்தைத்தான் பார்த்திருக்கிறாளே ஒழிய, திண்ணையை, தெரு வாசலை, மரத்தை, மைதானத்தை அனுபவிக்க வில்லை. ஊரின் சுற்றுப்புறம் அழகிய நகரமாக விரிவடைந்ததும், சென்னையின் ஜனத்தொகை பெருகியதும் அவளுக்குப் பெருங் கேடாக முடிந்தது. அவள் அந்த இருட்டறைக்குள் வசிப்பதற்கு, நகரமும், நகரில் வசிக்கும் அத்தனை பேருமே காரணங்கள் என்று சொல்லலாம் போல் இருந்தது.

வேதகிரி மத்தியானச் சாப்பாட்டுக்கு ஜவுளிக் கடையிலிருந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தான். வந்ததும் வராததுமாக அவனிடம், கற்பகம் அடி வாங்கி வந்த கதையைச் சொன்னாள் அவன் மனைவி. அதைக் கேட்டதும் அவன் குழந்தையை வெளியே முற்ற வெளிக்கு அழைத்து வந்து வெளிச்சத்தில் நிறுத்திப் பார்த்தான். வீங்கிச் சிவந்த கன்னத்தைப் பார்த்ததும் அவன் கண்கள் கலங்கி விட்டன.

"இந்தச் சனியன் ஒரு நிமிசம் வீடு தங்க மாட்டேங்குது. 'குழந்தையைப் பார்த்துக்கொ'ன்னு விட்டுட்டு அந்தப் பக்கம் திரும்பினேன் அவ்வளவு தான், மாயமா மறைஞ்சிட்டா. இவளை உசிரோட வச்சிக் கொளுத்தினாத்தான், என் மனசு ஆறும்..." என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போது,

"போதும்!... போய் வேலையைப் பார்" என்று அவள் வாயை அடைத்துவிட்டு, கற்பகத்தைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள் போனான் வேதகிரி. "யார் அடிச்சது?" என்று அவளை அன்பாதரவுடன் கேட்டான்.

திண்ணையில் நடந்த நிகழ்ச்சியை அப்படியே சொன்னாள் கற்பகம்.

அடித்தவனை என்ன செய்ய முடியும்? அவன் வீட்டுத் திண்ணை. அங்கே போய் விளையாடினால் அவன் எதுவும் செய்வான். யார் கேட்க முடியும்? அதற்காகக் குழந்தையை மனைவி சொல்வதுபோல வீட்டுக்குள்ளே கட்டிப்போடுவதா? 'என்ன பாவம் பண்ணினயோ எனக்குக் குழந்தையாப் பிறந்தே!' என்று மகளைப் பார்த்து நொந்து கொண்டே அவளையும் கூட உட்கார வைத்துக்கொண்டு சாப்பிட்டான். வாரத்துக்கு ஒருநாள் விடுமுறை தினத்தன்று தன்னால் சேர்ந்தாற்போல் ஒரு மணி நேரம்கூட அந்த வீட்டுக்குள் உட்கார்ந்திருக்க முடியாதிருக்கும்போது, கற்பகம் வருஷம் முழுவதும் அங்கேயே எப்படி அடைபட்டுக் கிடப்பாள் என்று நினைத்தான். மகளுக்கு எந்த வகையில் விடுதலை அளிக்கமுடியும் என்று யோசித்து யோசித்துப் பார்த்தும் அவனுக்கு ஒரு வழியும் புலப்படவில்லை. ஏதோ அற்ப சாந்தியாகவாவது இருக்கட்டும் என்று கடைக்குத் திரும்பும்போது கற்பகத்தையும் அழைத்துக் கொண்டு போய், ஒரு டீக்கடையில் ஒரு அணாவுக்குப் பக்கடாப் பொட்டலம் வாங்கிக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பினான். கற்பகம் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அந்தத் திண்ணையில் குழந்தைகள் வழக்கம்போல் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். ஆனால், தானும் போய் விளையாட வேண்டுமென்று அவள் நினைக்கவில்லை; நேரே வீட்டுக்கு வந்துவிட்டாள்.

அன்றிலிருந்து கற்பகத்தின் சிறைவாசம் ஆரம்பமாகிவிட்டது. வீட்டைவிட்டு எங்கும் போகக் கூடாது என்று தாய் கண்டிப்பாகச் சொல்லித் தடுத்து நிறுத்திவிட்டாள். மிஞ்சிப் போனால், தெரு வாசலுக்கு வந்து சிறிது நேரம் நிற்கலாம்; அதற்குமேல் அடி எடுத்து வைக்க அனுமதியில்லை. யாருக்கும் சொந்தமில்லாத தெருவுக்குக் கூட அவள் போய் விளையாட முடியவில்லை. அந்தச் சின்னத் தெருவிலும் கார், டாக்ஸி, சைக்கிள் முதலிய வாகனங்களின் போக்குவரத்து அதிகமாக இருந்ததால், அங்கே போகக் கூடாது என்றும் அம்மா எச்சரித்திருந்தாள்.

கற்பகத்துக்கு இரவும் பகலும் திண்ணையைப் பற்றிய கனவுதான். தன் வீட்டில் தெருவைப் பார்த்து ஒரு திண்ணை இருக்க வேண்டும்.

அப்பா எப்பொழுது கட்டிக் கொடுப்பார்? அப்பாவிடம் கேட்டதற்கு அவர் ஒரு பதிலும் சொல்லாமல் சிரித்தார். வற்புறுத்திக் கேட்ட பிறகு, "குழந்தே! உனக்கு என்ன தெரியும்? திண்ணை கட்டவும் வீடு கட்டவும் சக்தி இருந்தால் நாம் ஏன் இப்படி இருக்கிறோம்?" என்று 'அர்த்தமில்லாமல்' ஏதேதோ சொல்லுகிறார். அவளுக்கு

ஒன்றுமே புரியவில்லை. நாலைந்து நாட்களுக்குப் பிறகு, அடி பட்டாலும் பரவாயில்லை, பழைய திண்ணைக்கே போய் விளையாடலாம் என்று ஒரு ஆசை பிறந்தது. ஆனால் அந்த அற்ப ஆசை நீடிக்கவில்லை. பயம் ஆசையைக் கருக்கிவிட்டது. கடைசியில் வீடே கதி என்று, காற்றும் வெளிச்சமும் இல்லாத அறையில் புகைமூட்டத்துக்கு நடுவில் திக்குமுக்காடிக் கொண்டு கிடந்து தவித்தாள். சோற்றுக்குத் தரித்திரம் ஏற்படுவது போய், காற்றுக்கும் தரித்திரம் ஏற்பட்டு விட்டது. சரியான ஆகாரமின்றி, காற்றடைத்த பையாக அலைந்து திரிந்த கற்பகம், இப்போது காற்றுக்கும் வழியின்றித் திணறினாள்.

நாட்கள் செல்லச் செல்ல அவள் முகத்தில் இருள் படர்ந்தது. கண்கள் ஆழத்தில் அமுங்கிக் கொண்டிருந்தன. உடம்பும் மெலிந்தது. சரியாகச் சாப்பிடக்கூட அவளால் முடியவில்லை. தன்னை வீட்டுக்குள் போட்டு அடைக்கும் அம்மாவும், எந்நேரமும் நச்நச்சென்று அழுது கொண்டிருக்கும் தம்பியும், திண்ணை கட்டித் தராமல் ஜால்ஜாப்புச் சொல்லும் தந்தையும் தன்னைக் கொல்ல வந்த எமன்களாகவே அவளுக்குக் காட்சி அளித்தார்கள். அவளுடைய பொறுமை எல்லை கடந்து விட்டது. பயந்த சுபாவம் மாறி, திமிற ஆரம்பித்தாள். ஒருநாள் அம்மாவுக்குத் தெரியாமல் பழைய திண்ணைக்கே ஓடிவிட்டாள்.

நாள் கணக்கில் யோசித்த வேதகிரிக்கு ஒரு நாள் திடீரென்று மார்க்கம் புலப்பட்டது. அதனால் பரம சந்தோஷத்தோடு கடையிலிருந்து வீட்டுக்குத் திரும்பினான், ஒரு நல்ல நாள் பார்த்து, கற்பகத்தைப் பக்கத்துத் தெருப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட முடிவு செய்தான்.

ஒரு பிரதான சாலையைக் கடந்து செல்ல வேண்டும் என்பதைத் தவிர, பள்ளிக்கூடம் அருகாமையிலேயே இருந்தது. மத்தியானம் தர்மச் சோறும் போடுகிறார்கள். கற்பகத்துக்கு நல்ல காலம் பிறந்து விட்டது என்று எண்ணிச் சந்தோஷப்பட்டவனாய், மனைவியிடமும் விஷயத்தைச் சொன்னான். மகளின் ஓடுகாலித் தனத்தை ஒடுக்குவதற்கு அது ஒரு நல்ல உபாயம் தான் என்ற நினைப்பில், வேதகிரி சொன்னதை அவள் ஆமோதித்தாள்.

பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினால்தான் இவளுடைய கொட்டம் ஒடுங்கும். எந்த நேரமும் இதுக்கு யாரால் காவல்

காக்க முடியும்? அப்படியாவது தொலையட்டும்", என்றாள் மனைவி.

நல்ல நாளில், கற்பகத்தைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக் கொண்டு போனான் வேதகிரி. கற்பகத்தை ஒரு மாணவியாகச் சேர்த்துக் கொண்டார்கள். பிரவேசக் கட்டணத்துக்காக ஒரு ரூபாய் செலவாயிற்று. வேறு செலவில்லை. நாலைந்து நாளில் புத்தகம் வாங்கித் தருவதாக ஆசிரியரிடம் சொன்னான் வேதகிரி. அப்புறம் கற்பகத்தைப் பார்த்து, "பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீட்டுக்கு வரணும். பக்கத்து வீட்டுப் பசங்களோடு வந்துவிடு. ரோட்டில் கார், பஸ் போகும், பார்த்து வரணும் கற்பகம்" என்று சொல்லி விட்டுக் கடைக்குப் போய்ச் சேர்ந்தான்.

கற்பகத்தின் வாழ்வில் உண்மையிலேயே ஒரு புதுயுகம் ஆரம்பமாகிவிட்டது. விடுமுறை நாட்களில் கூட பள்ளிக்கூடம் போனால் தேவலை என்று நினைத்தாள். வீட்டில் திண்ணை இல்லாத குறை, அவளுக்கு அப்பொழுது குறையாகவே படவில்லை. குறித்த நேரத்தில் பள்ளிக்கூடம் போய், குறித்த நேரத்தில் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். ஒரு பெரிய பிரச்சினை தீர்ந்தது என்று தாயும் தகப்பனும் மூச்சு விட்டார்கள்.

புதியதாகக் கிடைத்த விடுதலையினால் கற்பகத்தின் உற்சாகம் பொங்கி வழிந்தது. பள்ளிக்கூடம் போவது என்பது அவளுக்கு ஒரு இன்ப போதையாகவே இருந்தது. ஐந்து மணிக்குப் பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீட்டுக்கு

வராமல், எங்காவது தெருவில் சுற்றித் திரியலாம் என்று தினமும் ஆசைப்படுவாள். கஷ்டத்திலிருந்து நீங்கிச் சுகம் பெற்றதும், சுகத்தை மென்மேலும் பெருக்குவதற்கே அவள் உள்ளம் விரும்பியது. இந்த நிலையில் ஒரு நாள் அவளுக்குப் பழைய ஞாபகம் ஒன்று வந்தது– ஏழெட்டு மாதங்களுக்கு முன், தன்னை அப்பாவும் அம்மாவும் சாந்தோம் கடற்கரைக்கு அழைத்துச் சென்றதையும், ஓடியாடி விளையாடுவதற்கு அங்கே கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும் இடம் இருந்ததையும், "குளுகுளு" என்று காற்று வீசிக் கொண்டிருந்ததையும், நினைவு கூர்ந்தாள். அவளுக்குத் தெரிந்த வரையில் சாந்தோம் கடற்கரை ஒன்றுதான் வாழ்க்கைக்கு ஏற்ற இலட்சிய உறைவிடமாக இருந்தது. அங்கே குறுக்குச் சுவர்கள் இல்லை. எவ்வளவு தூரம் போனாலும், எங்கே விளையாடினாலும் அடிப்பாரும் தடுப்பாரும் இல்லை. புகை என்பதோ அறவே கிடையாது. அதற்குப் பதிலாகக் காற்றும், சுகமும் வேண்டிய மட்டும் இருந்தன. இதையெல்லாம் எண்ணிப் பார்த்த கற்பகம் பள்ளிக்கூடம் எப்பொழுது விடும் என்று ஆவலோடு காத்துக் கொண்டிருந்தாள்.

மணிச்சத்தம் கேட்டதோ இல்லையோ, முதல் குழந்தையாகப் புத்தகப் பையுடன் வெளியே ஓடிவந்தாள், பக்கத்து வீட்டுக் குழந்தைகளுக்குத் தெரியாத வண்ணம், தெருவில் இறங்கி, பிரதான சாலையைப் பார்த்து அதிவேகமாக நடந்தாள். சாலைக்கு வந்து சேர்ந்ததும், மூலை திரும்பி, கடற்கரையை இலட்சியமாகக் கொண்டு நடக்கத் தொடங்கினாள். தன்னை யாரும் பார்க்கவில்லை என்ற துணிவு ஒரு புறம், சாலையின் இருமருங்கிலும் கண்ணுக்கு இனிய கட்டடங்கள் நின்ற அழகு ஒருபுறம்.

இதனால் சாவதானமாக நடந்து, தெருக்காட்சியை அணு அணுவாக ரசித்துக் கொண்டு சென்றாள். கண்ணில்பட்ட ஒவ்வொன்றுமே அழகாக, கவர்ச்சியாக, அதிசயமாக இருந்தது. எத்தனை மாடி வீடுகள்! எத்தனை மரங்கள்! எத்தனை பூஞ்செடிகள்! பிரம்மாண்ட மானவையாக ஓடும் பஸ்கள்தான் எத்தனை! இந்தக் கண்காட்சியைத் தன் பெற்றோர் தினமும் தன்னை அழைத்து வந்து காட்டாததற்காக அவர்களைக் கடிந்து கொண்டாள். தனக்கு அப்பாவோ, அம்மாவோ இல்லாமல் இருந்தால், தன்னிச்சையாகச் சாலையில் சுற்றித் திரியலாம் அல்லவா என்று நினைத்தாள்.

நிதானமாக நடந்து போய்க் கொண்டிருந்தாள் கற்பகம். ஒரு பங்களாவின் வாசலில் பூத்து,

"உலகம் என்ற ஒன்றைப் பற்றி அவளுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் அதுவும் தனக்குச் சொந்தம் என்றே கருதியிருப்பாள்"

வேலிக்கம்பியின் இடைவெளி வழியாகத் தெரிந்த செந்நிறப் பூ ஒன்றைக் கையை விட்டுப் பறித்தாள். சொல்ல முடியாத ஆனந்தம். அவளுக்கு அந்தச் சாலை முழுவதுமே சொந்தமாகிவிட்டது போன்ற உணர்ச்சி பிறந்தது. உலகம் என்ற ஒன்றைப் பற்றி அவளுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் அதுவும் தனக்குச் சொந்தம் என்றே கருதியிருப்பாள்.

கற்பகம் நடந்து கொண்டே இருந்தாள். நாலு திசைகளையும் அவள் கண்கள் துழாவிக் கொண்டிருந்தன. இதனால் எதிரிலோ, பக்கத்திலோ வரும் யாரையும், எதையும் அவள் கவனிக்கவில்லை.

அரை பர்லாங் தூரத்தைக் கடக்கவில்லை. அதற்குள்ளேயே கற்பகத்தின் நடை நின்று விட்டது. நடை மட்டுமல்லாமல் மூச்சும் நின்று விட்டது.

ஒரு பெரிய லாரியில் அடிபட்டு, அந்த க்ஷணத்திலேயே செத்துப் போய்விட்டாள். உருச் சிதைந்து நடுச் சாலையில் இரத்தத்திலே கிடந்தாள் கற்பகம். சுற்றிலும் கூட்டம் கூடி விட்டது, வாகனப் போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டது. எல்லோரும் கற்பகத்தின் பிணத்தைப் பார்த்துத் துக்கித்தார்கள், இரக்கப்பட்டார்கள். கேவலம், அவள் பிணமாகி விட்டதைத்தான் அவர்களால் பார்க்க முடிந்தது. அதே சமயத்தில் அவள் தன் வாழ்நாளெல்லாம் ஆசைப்பட்ட காற்றாகவும் ஆகிவிட்டாள் என்பது யாருக்குத் தெரியும்?

– "தமிழ்ச் சிறுகதைகள்"
தொகுதி – 2 நூலிலிருந்து
வெளியீடு: சாகித்திய அகாதெமி

* * *

அண்ணல் காந்தியடிகளின் அமுத மொழிகள்

ஜனநாயகம்

★ பொது நலனுக்காக எல்லாப் பிரிவினரின் உடல் வலிமை, பொருளாதார, ஆன்மிக வசதிகளை ஒன்று திரட்டும் கலை–விஞ்ஞானம்தான் ஜனநாயகம்!

தமிழ்

★ தென்னாப்பிரிக்காவில் தமிழ் மக்கள் புரிந்த துணையைப்போல் வேறு எந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயில வேண்டுமென்று நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழியைப் பயில்வதில் மிக ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங்கவரும் ஓர் இனிய மொழி. தமிழ் மக்களுள் பண்டைநாளிலும் இந்நாளிலும்கூட பல அறிஞர் இருந்தனர், இருக்கின்றனர் என்பதை அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறிய முடிந்தது. இந்தியாவில் ஒருமைப்பாடு ஏற்பட வேண்டுமானால் சென்னை மாநிலத்திற்கு அப்புறமுள்ளவரும் தமிழ் உணர்தல் வேண்டும்.

ஆணும் பெண்ணும்

★ ஆணின் தோழி பெண்; ஆணைப் போலவே பெண்ணுக்கும் அதே சிந்தனைத்திறன் இருக்கிறது. அடிப்படையில் ஆண்களும் பெண்களும் ஒன்றே என்று நான் நினைக்கிறேன். ஆகையால் அவர்களுடைய பிரச்சினையின் சாரமும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயமாகும். இருவரும் ஒரே வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஒரே மாதிரியான உணர்ச்சிகளுடையவர்களாக இருக்கிறார்கள். ஒருவருடைய தீவிரமான உதவியில்லாமல் மற்றொருவர் வாழ முடியாது.

நீதி

★ அகிம்சையின் முதல் நிபந்தனை, வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும், எல்லாக் காரியங்களிலும் நீதியாக நடப்பதே. மனித இயல்புக்கு இது முற்றிலும் அதிகப்படியானதாக இருக்கலாம். என்றாலும் நான் அவ்வாறு எண்ணவில்லை.

அன்பு

★ நம்மிடம் அன்பாக இருப்பவர்களிடம் மாத்திரமே அன்பாக இருப்பது என்பதல்ல அகிம்சை. நம்மை வெறுப்பவர்களிடம் அன்பு கொள்ளுவது ஒன்றே அகிம்சை.

அகிம்சை

★ அகிம்சையை விற்றுவிட்டு என் நாட்டின் சுதந்திரத்தை நான் வாங்கவே மாட்டேன் என்பதை எண்ணற்ற தடவைகள் திரும்பத் திரும்ப உலகிற்குச் சொல்லவே நான் விரும்புகிறேன்.

சரண்டல்

★ எந்த வகையிலும் பிறரைச் சுரண்டுவதை அடியோடு விட்டுவிட வேண்டியதை அகிம்சைக் கொள்கை அவசியமானதாக்குகிறது.

தீண்டாமை

★ தீண்டாமை, பகுத்தறிவுக்கும், இரக்கம், அன்பு அல்லது அனுதாப உணர்ச்சிக்கும் முரணாக இருக்கிறது.

தாய்

★ தேக ஆரோக்கியமுள்ள புத்திசாலிகளான நல்ல குழந்தைகளைத் தேசத்திற்கு அளிக்கும் தாய், தேசத்திற்கு உண்மையாகச் சேவை செய்தவளாகிறாள்.

மாணவர்

★ நாட்டின் நாளைய தந்தையராய் உரிமை கொண்டாடும் இன்றைய மாணவர்கள் நல்லோராக வாழவேண்டும். உப்பு தனது உப்புத் தன்மையை இழந்துவிட்டால் அதை வேறு எங்கிருந்து பெற முடியும். □

இந்தியாவிலேயே முதன்முதலாக கணினிமயமாகும் கிராம ஊராட்சிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 13.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில், இந்தியாவிலேயே முதன்முதலாக கிராம ஊராட்சிகளைக் கணினிமயமாக்கும் புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். மேலும், இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலகத்தில் இயங்க உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களின் விற்பனை மையம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர் நடத்தும் சிற்றுண்டியகம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.



கணினிமயமாகும் கிராம ஊராட்சிகள்

அரசின் அனைத்துத் துறைகளிலும் கணினிகளைப் பயன்படுத்தி, மின் ஆளுமையை நடைமுறைப்படுத்துவதில் முன்னோடியாக விளங்கும் தமிழக அரசு, கிராமங்களில் மின் ஆளுமை மூலம் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளையும் கணினிமயமாக்கும் புதிய திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

கணினிகளையும், மென்பொருளையும் முறையாகப் பயன்படுத்திட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் மற்றும் மண்டல அளவிலான ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் வாயிலாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதற்கான மென்பொருட்கள் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, 1,113 கிராம ஊராட்சிகள், 385 எண்ணிக்கையிலான அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட அளவிலான 29 உதவி இயக்குநர் (ஊராட்சி) அலுவலகங்கள் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்ககம் ஆகியவற்றிற்கு 1,537 கணினி மற்றும் இதர உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

முதற்கட்டமாக, மொத்தம் 10 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும் இந்தப் புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் ராஜகோபாலன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. டி. செல்வராஜ், பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம் முடிச்சூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. நிர்மலா பாஸ்கர் ஆகியோரிடம் கணினிகளை வழங்கித் தொடங்கி வைத்தார்கள்.



சுயஉதவிக் குழு இண்டர்நெட் மையம்

கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கணினிகளை முழுமையாகப் பயன்படுத்தும் நோக்கில் இந்தக் கணினிகளை ஊராட்சி நிருவாகம் பயன்படுத்திய நேரம் போக எஞ்சிய நேரத்தில் சுயஉதவிக் குழுக்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க அரசு முடிவு செய்துள்ளது. எனவே, இக்கணினிகளைக் கொண்டு 1,113 ஊராட்சிகளிலும் இண்டர்நெட் (RASI) மையங்கள் உருவாக்கப்படுகின்றன. ஏற்கெனவே தமிழகத்தில் சுயஉதவிக் குழுக்களால் நடத்தப்படும் 626 ராசி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மகளிருக்கு அதிகாரம் அளிப்பதிலும், கணிசமான அளவில் வருவாயைப் பெருக்குவதிலும் மற்றுமொரு குறிப்பிடத் தகுந்த மைல்கல்லாக இத்திட்டம் அமைந்துள்ளது. இதுதவிர, கிராம மக்கள் பெருமளவில் பயன்பெறத்தக்கத் தேவையான பல்வேறு தகவல்கள் அவர்களின் கிராமத்திலேயே கிடைக்கும் வகையில் இந்த ராசி மையங்கள் பயன்படும். கிராம மக்கள் பயன்பெறத்தக்க முதியோர் கல்வி, சுகாதார மற்றும் மருத்துவ ஆலோசனைகள், வானிலை அறிக்கை, விலைவாசி நிலவரம், நடைமுறையிலுள்ள வேளாண் தொழில் நுட்பங்கள், வேளாண் செய்முறைகள் போன்ற தகவல்களை இம்மையங்கள் மூலம் பெறலாம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இம்மையங்களில் பயன்படுத்திக் கொள்ளத் தேவையான 'வெப் காமிரா' மற்றும் துணைக் கருவிகளை (web camera and accessories) 13.10.2004 அன்று வழங்கினார்கள். இந்த web camera கருவிகளை ஆண்டிபட்டி திம்மரசநாயக்கனூர் முல்லைவனம் சுய உதவிக்குழுத் தலைவி திரு. ஆர். சுமதி, ஆண்டிபட்டி குன்னூர் வைகை அறிவொளி சுயஉதவிக் குழு தலைவி திருமதி. எம். லிங்கம்மாள் ஆகியோரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

மாதிரி கிராமப் பயிற்சி மையங்கள் – வீடியோ கருத்தரங்க மையங்கள்

இந்தியாவின் பிற மாநிலங்களில் உள்ள ஊராட்சிகளும் பின்பற்றும் வகையில் முன்னோடியாகத் திகழ்வதோடு மட்டுமல்லாமல், சிறந்த செயல்பாடுகளைப் பயிற்றுவிக்கும் பயிற்சிக்களமாக மாதிரி கிராமப் பயிற்சி மையங்களை உருவாக்கும் புதுமையான முயற்சியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவுரைப்படி தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கிராம சுகாதார இயக்கம், முழுச் சுகாதார இயக்கம், மேம்படுத்தப்பட்ட திடக்கழிவு மேலாண்மை, மரபுசாரா மாற்று எரி சக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துதல், வளர்ச்சித் திட்டங்களில் பொது மக்களின் பங்கேற்பு, பங்களிப்பு மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மழைநீர் சேகரிப்புத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் மிகச்சிறப்பாகச் செயல்படும் ஊராட்சிகள் இத்தகைய கிராமப் பயிற்சி மையங்களாகச் செயல்படும்.

ஒவ்வொரு மாதிரி கிராமப் பயிற்சி மையமும் நிரந்தர வீடியோ கருத்தரங்க மையமாகவும் செயல்படும். கிராம அளவிலான நிருவாகிகள், மாவட்ட மற்றும் மாநில நிருவாகத்திற்கு இடையே ஒரு பயனுள்ள பாலமாக இம்மையம் செயல்படும். அதுமட்டுமல்லாமல், அரசு கணினி வாயிலாக கிராம அளவிலான நிருவாகிகளுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் மையமாகவும் இவை செயல்படும். அடித்தள நிருவாகிகள் தங்களின் குறைகளைத் தங்களின் கிராமத்தில் இருந்து கொண்டே நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான உயர் அலுவலர்களிடம் முறையிடவும் கலந்து ஆலோசனை பெறவும் இது வழிவகை செய்கிறது.

இந்தப் புதிய திட்டத்தை, 13.10.2004 அன்று தொடங்கி வைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தேனி மாவட்டம், அரண்மனைபுதூர் ஊராட்சி மன்றத் தலைவி திருமதி. முத்துமணி அவர்களுடன் வீடியோ கான்பரன்சிங் முறையில் கலந்துரையாடினார்கள். அப்போது, மூன்றாம் வகுப்பு வரை மட்டுமே படித்த தான் இன்றைக்கு ஒரு ஊராட்சி மன்றத்தின் தலைவராக உயர்ந்து, மன்றத் தலைவர் என்ற முறையில் தனது கிராமத்தைச் சேர்ந்த மக்களின் மேம்பாட்டிற்குப் பாடுபடுவதாகத் திருமதி. முத்துமணி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார். அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஊராட்சி மன்றத் தலைவி திருமதி. முத்துமணி மேலும் சிறப்புடன் செயல்பட தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

'மாண்புமிகு முதலமைச்சர் தங்கப்பதக்கம்'

ஊரக வளர்ச்சித் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாவட்ட ஆட்சியருக்கு விருது வழங்க 29.10.2003 அன்று தமிழக அரசு முதன்முறையாக ஆணையிட்டது. இந்த விருது, பாராட்டுச் சான்றிதழையும் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் தங்கப் பதக்கத்தையும் கொண்டதாகும். 2003–2004–ஆம் ஆண்டில்



மாண்புமிகு முதலமைச்சர் தங்கப்பதக்கம் பெற்றிடத் தேர்வு செய்யப்பட்ட, கோவை மாவட்ட முன்னாள் மாவட்ட ஆட்சியர் திரு. என். முருகானந்தம் அவர்களுக்கு, இந் நிகழ்வின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தங்கப்பதக்கத்தையும் பாராட்டுச் சான்றினையும் வழங்கினார்கள்.

தலைமைச் செயலகத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருள் விற்பனை மையம் மற்றும் சிற்றுண்டியகம்

9.8.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டின்போது பேசிய பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தங்கள் மாவட்டங்களில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலமாகத் தயாரிக்கப்படுகின்ற பொருட்களை சென்னையில் வைத்து விற்பனை செய்யும் வகையில் ஒரு விற்பனை மையம் அமைத்திட ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் மகளிர் சுயஉதவிக் குழு சிற்றுண்டி மையம் அமைக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த விற்பனை மையத்தைத் தலைமைச் செயலகத்திலேயே அமைக்கலாம் என்று தெரிவித்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த ஆணையின்படி, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தயாரிக்கின்ற பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், மூலிகைப் பொருட்கள், தோல் மற்றும் கலைப் பொருட்கள் முதலான பல்வேறு தயாரிப்புப் பொருட்களைப் பொதுமக்கள் வாங்கிப் பயன் அடைகின்ற வகையில் ஒரு விற்பனை மையம் தலைமைச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விற்பனை மையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

மேலும், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் முழுவதும் பங்கேற்றுச் செயல்படுத்தும் சிற்றுண்டியகத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள். அப்போது இந்தச் சிற்றுண்டியில் பயன்படுத்திட மின்அணு சமையல் கருவி (Microwave Oven) வழங்கி சிற்றுண்டியகத்தைச் சிறப்புடன் நடத்த தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இதனையடுத்து, மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் இயற்கை உரங்களால் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிகள், ஆர்சிட் (Orchid) மலர்களால் தயாரிக்கப்பட்ட பூங்கொத்து போன்ற பொருட்களை மாண்புமிகு 'தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினர். இப்பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலம் தங்களுக்கு நல்ல வருவாய் கிடைப்பதாக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர். இந்த சிறப்பு முயற்சிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெகுவாகப் பாராட்டி தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

❖ ❖ ❖



கோ-ஆப்டெக்ஸ்

துணிகளில் முதன்மை...
சிறப்பிலே மேன்மை!
உங்கள் கோ-ஆப்டெக்ஸ்!

- பட்டுப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- பருத்திப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- கூடுதல் தள்ளுபடி விற்பனைத் திட்டம்
- வாடிக்கையாளரை சிறப்பிக்கும் திட்டம்
- மாணவர்களுக்கான ஹாஸ்டல் செட்
- குறைந்த விலையில் பருத்தி பிரிண்டட் சேலைகள் குறிப்பிட்ட சில ஷோரூம்களில் கிடைக்கும்
- வட்டியில்லாத கடன் வசதியை பயன்படுத்திக் கொள்வீர்

மேலும் விவரங்கள் அறிய அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அனுகவும்.

Visit us at www.tn.gov.in Visit us at www.cooptex.com

எண்ணமெல்லாம் துணிமணிகள் என்றால்... வாங்குவதெல்லாம் கோ-ஆப்டெக்ஸ்!

தமிழக அரசின் சார்பில்

மருதுபாண்டியர் நினைவு நாள் மற்றும் மருதுபாண்டியர் நினைவுத் தபால்தலை வெளியீட்டு விழா

மருதுபாண்டியர் நினைவு நாள் மற்றும் நினைவுத் தபால்தலை வெளியீட்டு விழா, மதுரை தமுக்கம் கலையரங்கில், தமிழக அரசின் சார்பில் 24.10.2004 அன்று மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு பொதுப்பணி, வருவாய், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் மருதுபாண்டியர் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து மருதுபாண்டியர் நினைவுத் தபால்தலையைப் பெற்று, விழாப் பேருரையாற்றினார்கள்.

தனது பேருரையில், "சிவகங்கைச் சீமையின் வரலாற்று வீரர்களான மருது சகோதரர்களுக்கு வணக்கம் செலுத்துகின்ற, இந்த நினைவுநாள் விழாவில் கலந்து கொண்டு, மருதுபாண்டியர் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்து மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முழு முயற்சியின் காரணமாக வெளியிடப்படுகின்ற மருதுபாண்டியர் நினைவுத் தபால் தலையைப் பெற்றுக் கொள்ளும் நல்ல வாய்ப்பு கிடைத்தமைக்காக மிகவும் பெருமைப்படுகிறேன்.

இந்த நாள், ஆதிக்க வெறி பிடித்த வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு வீரமரணம் அடைந்த மருதுபாண்டியர்கள் தியாகத் திருநாள்! இன்று 2004 அக்டோபர் திங்கள் 24-ஆம் நாள். 203 ஆண்டுகளுக்கு முன்னால் 1801-ஆம் ஆண்டு இதே நாளில் வீரம் விளையும் வெற்றித்திருமண்ணாம் சிவகங்கைச் சீமை திருப்பத்தூரில், ஆங்கிலேயரால் மருதுபாண்டியர்கள் தூக்கிலே தொங்க விடப்பட்டார்கள். அன்றைக்கு அவர்கள் மட்டுமல்ல, 500-க்கும் மேற்பட்ட வீர இளைஞர்களும் அவர்களுடன் தூக்கிலிடப் பட்டார்கள்.

மருதுபாண்டியர்களையும், அவர்களது தோளோடு தோள் நின்று போராடிய வீர மறவர்களையும் வெள்ளையர்கள் வேட்டையாடி, விரட்டிப் பிடித்து, தூக்கிலே தொங்கவிட அவர்கள் செய்த தவறுதான் என்ன? தங்கள் உரிமையைக் கேட்டார்கள். அருள் உள்ளம் கொண்ட மருதுபாண்டியர்கள் நம்பி வந்த வீரபாண்டிய கட்டபொம்மனின் இளவல் ஊமைத் துரைக்கு அடைக்கலம் கொடுத்தார்கள். ஆங்கிலேயரின் பார்வையில் அது மன்னிக்க முடியாத குற்றமாம்! வீரமங்கை வேலு நாச்சியாரின் போர்ப்படைத் தளபதிகளான சின்னமருதுவும், பெரிய மருதுவும் இதற்கெல்லாமா அஞ்சுவார்கள்.

இந்த நாடு என்னுடைய நாடு. இந்த மக்கள் என்னுடைய மக்கள். இவர்களை அடிமை கொள்ள



ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்று வீர முழக்கமிட்டுப் புரட்சிக் கொடியை உயர்த்தினார்கள் மருது சகோதரர்கள்.

ஏனைய பாளையக்காரர்களுக்கும் மற்ற கிராமத் தலைவர்களுக்கும் சுதந்திர தாகத்தை ஊட்டி, அவர்களையும் தங்களது புரட்சிப் படையில் இணைத்து கொண்டார்கள். ஆனால், பிரித்தாளும் சூழ்ச்சியைக் கடைபிடித்த ஆங்கிலேயர்கள், பகைமை உணர்வை உள்ளுக்குள்ளேயே உருவாக்கி, அதற்கு ஊட்டமளித்து மருது சகோதரர்களுக்கு எதிராகத் திருப்பி அவர்களை நயவஞ்சகமாக வெற்றி கொண்டார்கள்.

அடைக்கலமாய் வந்த கட்டபொம்மனின் இளவல் ஊமைத்துரையைத் தங்கள் வசம் ஒப்படைத்துவிட்டால் நாடு முழுவதையும் தருவதாக நப்பாசை காட்டியபோதும், நம்பி அடைக்கலமாய் வந்த வீரனை ஆங்கிலேயர் கையில் ஒப்படைப்பது ஒருபோதும் நடக்காது என்று தெளிவுபட மருது சகோதரர்கள் மறுத்துவிட்டதால், சிவகங்கைச் சீமையைச் சின்னா பின்னமாக்கிய ஆங்கிலேயர்கள் மருது சகோதரர்களுக்குத் தூக்குத் தண்டனையைப் பரிசாகக் கொடுத்தார்கள்.

ஆங்கிலேயரால் மருதுபாண்டியர்களின் உயிரைத் தான் பறிக்க முடிந்ததே தவிர, அவர்களது உணர்வுகளைப் பறிக்க இயலவில்லை. அதன் அடிப்படையில்தான், 203 ஆண்டுகள் கழிந்த பின்னும், மருதுபாண்டியர்களின் வீரத்தை நினைவுகூர்ந்து, இங்கே விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம். மருது பாண்டியர்கள், ஆட்சித் திறத்தில், அறிவாற்றலில், தமிழ் உணர்வில், ஈகை குணத்தில், ஈடற்றவர்களாக விளங்கியவர்கள். அருந்தமிழை ஒரு கண்ணாகவும், ஆன்மீகத்தை மறு கண்ணாகவும் கொண்டு அரும்பணி ஆற்றியவர்கள்.

காளையார்கோயிலிலும், குன்றக்குடியிலும் அவர்கள் ஆற்றிய கோயில் திருப்பணிகள், அவர்களது கடவுள் பக்தியை இன்றைக்கும் நமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இந்த பண்புகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், நம்பி வந்தவர்களைக் காக்கின்ற அருள் உள்ளமும், நாட்டு மக்களைத் தங்கள் இதயத்திலே ஏந்தி, அவர்களுக்கு நன்மை செய்கின்ற நல்ல உள்ளமும் கொண்டவர்களாக மருதுபாண்டியர்கள் திகழ்ந்தார்கள்.

இத்தகைய அருங்குணங்கள் படைத்த மருது பாண்டியர்கள் உயரிய வகையில் கௌரவிக்கப்பட வேண்டும், அவர்களது பெருமையை எதிர்கால சந்ததியினரும் அறிந்து, தங்களது வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொள்ளவேண்டும். நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் இளைய சமுதாயத்தின் இதயங்களில் வீற்றிருக்க வேண்டும் என்று எண்ணுகின்ற மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த விழா மிகச் சிறப்புடன் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாட்டுக்காகவும், மொழிக்காகவும், போராடிய பெருமக்கள் எவராக இருந்தாலும், அவர்களுக்கு விழா எடுத்துச் சிறப்பிப்பதில் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் பெருமிதத்துடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திருப்பத்தூரில் மருதுபாண்டியர் நினைவிடத்தை அரசுடைமையாக்கி, 21.10.1992 அன்று மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அந்த நினைவிடத்தில் வீரச் சகோதரர்கள் சின்னமருது, பெரியமருது ஆகிய இருவருக்கும் எட்டு அடி உயர முழு உருவச் சிலைகள் அமைத்து, அன்றே மாண்புமிகு அம்மா அவர்கள் திறந்து வைத்தார்கள். மருது பாண்டியர்களின் நினைவிடம் மேலும், கூடுதல் வசதிகளுடன் விரிவாக்கப்பட வேண்டும் என்றும், மருது சகோதரர்களுக்கு மேலும் சிறந்த முறையில் புதிய திருவுருவச் சிலைகள் நிறுவப்பட வேண்டும் என்றும் சிவகங்கை மாவட்ட மக்கள் விடுத்த கோரிக்கைகளை ஏற்று, மருதுபாண்டியர் நினைவிடத்தில் ரூபாய் இருபது இலட்சம் செலவில் நினைவகத்தை மேம்படுத்தியதுடன், மருது சகோதரர்களின் சிலைகளையும் ரூபாய் ஐந்தரை இலட்சம் செலவில் புதியதாக வடிவமைத்துத் தந்தார்கள்.

அதுமட்டுமல்ல, மருது சகோதரர்களின் தியாகத்தை மேலும், போற்றும் வகையில், தமிழக மக்களின் நீண்டநாள் கோரிக்கைக்கும் இன்று செயல்வடிவம் தந்திருக் கிறார்கள். வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்து, சுதந்திரத்திற்காகப் போர் புரிந்து, தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்த மருது பாண்டியர்களின் நினைவாகத் தபால்தலை வெளியிடப்பட வேண்டு மென்பது இன்றல்ல, நேற்றல்ல, நீண்ட நெடுங்காலமாகத் தமிழக மக்களின் விருப்பமாகும்.

தமிழக மக்களின் இந்த விருப்பத்தை முன்மொழிந்து, மத்திய தகவல் தொடர்புத் துறைக்குப் பலமுறை கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், அதன்மீது சாதகமான ஒரு முடிவை நீண்ட நாட்களாகவே மத்திய அரசு மேற்கொள்ளாமலேயே இருந்தது. இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்துக்குக் கொண்டு சென்றவுடன், அதன்மீது தனி அக்கறை கொண்டு, மருதுபாண்டியர்களின் நினைவாகத் தபால்தலை நிச்சயமாக வெளியிடப்பட வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் இந்தக் கோரிக்கையை, அன்றைக்கு இருந்த மத்திய அரசு ஏற்று,

மருது சகோதரர்களின் நினைவாகத் தபால்தலை வெளியிட ஒப்புதல் அளித்து, அதனை 22.3.2004 அன்றைய கடிதத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தெரிவித்தது.

மருதுபாண்டியர்களின் நினைவாகத் தபால்தலை வெளியிடப்பட வேண்டுமென்ற கோரிக்கை, காலம் காலமாக மறுக்கப்பட்டுவந்த நிலையில், மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முயற்சியால் தபால்தலை வெளியிடப்படுவது, வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட மருது சகோதரர்களின் வீரத்திற்கும், தீரத்திற்கும் பெருமை செய்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனை ஆகும்.

மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அந்தச் சாதனை செயல் வடிவம் பெறுகின்ற திருநாள் இந்த நாள். இந்தத் திருநாளிலே, இந்த விழா மேடையில், மருது பாண்டியர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்து, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முழு முயற்சியால் இன்று வெளியிடப்படுகின்ற மருது பாண்டியர்களின் நினைவுத் தபால்தலையைப் பெற்றுக் கொள்வதை என் வாழ்வின் மிகப் பெரும் பாக்கியமாகப் போற்றுகிறேன். இதற்கெல்லாம் காரணமாக இருக்கும் எங்கள் ஒப்பற்ற தலைவியாம் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு மீண்டும் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மருது, சகோதரர்களின் வானளாவிய புகழ் வளர்க! வளர்க!'' என்று கூறினார்.

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் பேசும்போது,

“தென்பாண்டிக் குயில் கூவினால் நெஞ்சம் நெகிழும், தென்பாண்டி மறவர் பெயர் தாக்கினால் அவர்களது மார்பு தகரும் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட தென்பாண்டி மண்டலத்தின் வீரமைந்த தலைநகராம் மதுரை மாநகரில் மாவீரர்கள் மருது பாண்டியர்கள் போற்றுகின்ற வகையில் இந்த விழா நடைபெறுகிறது.

இந்த விழாவிற்குத் தலைமையேற்கின்ற தகுதியில் சிறப்பை உயர்வை எனக்கு நல்கிய மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். ஒரு கால் நூற்றாண்டு



காலமாகத் தமிழ்நாட்டில் நடக்காத ஒரு நிகழ்ச்சி அண்மையில் நடந்திருக்கிறது. இதுவரைக்கும் தமிழ்நாட்டிற்கு ஒரு முதலமைச்சர்: தமிழ்நாட்டுக் காட்டிற்கு ஒரு முதலமைச்சர் என்றுதான் இருந்தார்கள். இப்பொழுதுதான் முதல்முறையாகத் தமிழ்நாட்டுக்கும் நானே முதலமைச்சர், தமிழ்நாட்டுக் காட்டுக்கும் நானே முதலமைச்சர் என்று புரட்சித் தலைவி அவர்கள் நிலைநாட்டிக் காட்டியுள்ளார்கள். அவர்களது முயற்சியின் தொடர்விளைவாக மருதுபாண்டியரின் அஞ்சல்தலை இன்று வெளியிடப்படுகிறது.

நம்முடைய அருமைச் சகோதரர்கள் வாழ்த்துரையில் தெரிவித்தார்கள். மருதுபாண்டியர்கள் போராடியகாலம்

எப்போது? அவர்களுக்கு அஞ்சல்தலை வெளியிடும் காலம் எப்போது? என தங்களது மனக்குறையைத் தெளிவுபடுத்தினார்கள். "Better Late than Never" என்று ஆங்கிலத்தில் பழமொழி உண்டு. வெளியிடப் படாமல் இருந்ததை விட இப்போதாவது வெளியிடக் கூடிய ஒரு காலம், புரட்சித் தலைவி அவர்களின் வற்புறுத்தலால் மத்திய அரசுக்கு வந்ததுவே என்பதிலே மகிழ்ச்சி அடைகிறேன். மத்திய அரசைப் பாராட்டுகிறேன்.

இந்தியாவின் வரலாறு, கங்கைக் கரையினிலே தொடங்கப்பட வேண்டும் என்று சொல்வது தவறு. உண்மையிலேயே இந்தியாவின் வரலாறு, இன்னும் சொல்லப்போனால் உலகத்தின் வரலாறு வைகைநதி கரையினிலும், தாமிரபரணி கரையினிலும் தான் தொடங்கப்பட வேண்டும் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுவார்கள். அதே போல, இந்திய விடுதலைப் போராட்ட வரலாறும், தொடங்கப்பட வேண்டிய இடம் தென் தமிழ்நாடு. வடநாடும் கிடையாது, வட மாநிலமும் கிடையாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால், மத்திய அரசின் கவனத்திற்கு இந்திய விடுதலைக்குப் போராடிய பல தலைவர்களுடைய பெயர்கள் அவர்களது வாழ்க்கை வரலாற்று குறிப்புகள் இடம் பெறவில்லை. இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு குறித்த அதிகாரபூர்வமான புத்தகத்தில் செக்கிழுத்த வ.உ.சி. பற்றிய தகவல்கள் இல்லை.

ஒரு சகோதரர் ஒரு கருத்தைத் தெரிவித்தார். மத்திய அரசின் ஆவணகாப்பகத்தில் இந்திய விடுதலைக்குப் போராடிய ஏறத்தாழ ஐம்பதாயிரம் பேரின் படங்கள் இடம் பெற்றிருக்கிறது என்றும், தான் அதை தேடித் தேடிப் பார்த்தும், அதில் நான்கு, ஐந்து தமிழ்நாட்டுப் பெருமக்களின் படங்கள் தான் இடம்பெற்றிருந்தன என குறிப்பிட்டார். ஆனால், இந்த மனக்குறையை எல்லாம் போக்கக்கூடிய வகையில் இன்றைக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக மாவீரர்கள் மருதுபாண்டியர்கள் அவர்களுக்கு விழா நடக்கிறது.

மருதுபாண்டியர் சரித்திரம் என்பது ஒரு வீர சரித்திரம். ஒரு மிகப்பெரிய தீரர்களின் சரித்திரம். உலகமே போற்றி உயர்த்திப் பார்க்க வேண்டிய மாவீரர்களின் சரித்திரம். அவர்கள் மன்னர் குலத்தில் பிறந்தவர்கள் அல்ல. முக்குலம் என்ற குக்கிராமத்தில் பிறந்தவர்கள். ஒரு சாதாரண குடும்பத்தில் தான் பிறந்தார்கள். அவர்களது தந்தை இராமநாதபுரத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த பழனிச்சாமி என்ற பெயரில் ஆனந்தாயி என்பவருக்குப் பிறந்த இரண்டு பேரும் தங்களுடைய வீரத்தால் மன்னர்களுடையக் கவனத்தை எல்லாம் கவர்ந்தார்கள். அவர் பிறந்தது விருதுநகர் மாவட்டம். அவர்கள் பயிற்சி பெற்றது இராமநாதபுரம் மாவட்டம். அவர்கள் வீரத்தைக் காட்டி ஆட்சிபுரிந்தது சிவகங்கை மாவட்டம். நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளம் தென்றலே என்று கண்ணதாசன் பாடியது போல விருதுநகர் மாவட்டத்தில் பிறந்து, இராமநாதபுரம் மாவட்டத்திலே பயிற்சி பெற்று, சிவகங்கை மாவட்டத்தில் அரசேற்று விடுதலை போராட்டக் களத்திலே இன்னுயிர் ஈந்தவர்கள் மருதுபாண்டியர் சகோதரர்கள். 21 ஆண்டு காலம் அவர்களது ஆட்சி சிவகங்கையில் இருந்தது. சிவகங்கை என்பது ஒரு பெரிய நிலப்பரப்பு அல்ல. ஒரு குறுகிய நிலப்பரப்பு தான். ஆனால், அதில் அவர்கள் தங்களது வீரத்தை நிலைப்படுத்தினார்கள். ஆற்றல் திறமையை வெளிப்படுத்தினார்கள்.

இங்கே சகோதரி வளர்மதி ஜெபராஜ் அவர்கள் குறிப்பிட்டது போல, முத்துவடுகநாதர் இந்த இரண்டு இளைஞர்களையும் வேட்டைக்குக் கூட்டிக்கொண்டு போனார். வேட்டைக்குச் சென்ற பொழுது பதுங்கிக்கிடந்த ஒரு புலி பாய வருகிறது. பெரிய மருது இந்தப் புலியின் வாலைப் பிடித்து புலியைத் தரதர வென இழுத்து அடித்து அதன் வாயைப் பிளக்கச் செய்தார். இதைப் பார்த்த வடுகநாதர் திடுக்கிட்டு போனார். இவ்வளவு அஞ்சாமையா! இவ்வளவு ஆற்றலா! என்று கருதித்தான் பெரிய மருதை படைத் தளபதி ஆக்கினார். சின்ன மருதுவை அமைச்சராக ஆக்கினார்.

மற்ற விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட விடுதலைப் போராட்ட வீரர் பெருமக்களுக்கும் மருதுபாண்டியர்களுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. அந்தந்த பாளையக்காரர்கள் சிலர் போரிட்டனர். இந்தியாவின் சரித்திரத்தில் எல்லா பாளையத்தையும் ஒருங்கிணைத்துக் காட்டி, விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட பாளையகாரர்கள் எல்லாம் எங்கெங்கெங்கு இருக்கிறார்கள் என்று ஒன்றுபடுத்திக் காட்டி, வெள்ளை ஆதிக்கத்தைக் களத்தில் எதிர்த்த முதல் மாவீரர்கள் மருதுபாண்டியர்கள் தான் என்பதை நான் சரித்திரத்தில் பதிவு செய்யப்பட வேண்டியவர்கள் எனக் கருதுகிறேன். பாஞ்சாலங்குறிச்சி வீழ்ந்தவுடன் கட்டபொம்மன் அடைக்கலம் தேடி வந்தான் வெள்ளைக்காரர்களை எதிர்க்கக் கூடிய பகுதி என்று, சிவகங்கையை நோக்கித்தான் கட்டபொம்மன் வந்தான். வந்த கட்டபொம்மனை மருதுபாண்டியர்கள் புதுக் கோட்டையில் மன்னர் ஆங்கிலேயர்களுக்கு நண்பனாக இருக்கிறார். அவருடைய நாட்டுக் காட்டிலே மறைத்து வைத்தால் ஆங்கிலேயர்கள் தேட மாட்டார்கள் என்றுதான் புதுக்கோட்டை தொண்டைமான் காட்டுப்பகுதியில் கொண்டு போய் கட்டபொம்மனை ஒழித்து வைத்தார். புதுக்கோட்டை தொண்டைமானுக்கு ஓலை வந்தது. கட்டபொம்மன் காட்டில் பதுங்கியிருந்தால் பிடித்துக் கொடுங்கள் என்று கூற, புதுக்கோட்டை தொண்டைமான் பிடித்துக் கொடுத்துவிட்டார். அதே போலத்தான் ஊமைத் துரையும் பாளையங்கோட்டை சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்தும், மறுபடியும் பாஞ்சாலங்குறிச்சியில் போர் நடைபெற்றதால் அதனை முன்னின்று நடத்திக் கொண்டிருந்தவர்களும் மாவீரர் மருதுபாண்டியர்கள்தான் என்பதைக் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இது ஒரு சரித்திர உண்மை. அதற்குப் பிறகுதான் ஊமைத்துரையும் ஓடி ஒழிந்தார். ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்தார். ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்ததனாலேயே வெள்ளைக்காரர்களுடன் போரிடவில்லை. சிவகங்கை சீமையிலே படத்திலே கடைசியா மருது சகோதரர்களைக் கூறுவதுபோல நண்பர்களுக்காகப் போரிட்டோம் நாட்டுக்காகச் சாகிறோம் என்றார்களே. அது தான் உண்மை. ஊமைத்துரைக்காகப் போரிட்டார். ஆனால், அவர்கள் இறந்தது நாட்டுக்காக, சிவகங்கைப் பகுதியில் எப்படிப்பட்ட துடிப்போடு பாளையத்திற்காக நாட்டுக்காகக் களத்திலே போரிட்டதை எண்ணிப்பார்த்து பெருமைப்படுகிறேன்.

எத்தனையோ நாட்டுப்புறப் பாட்டுகள் உண்டு. கருவறையில் கல்லெடுத்துக் காளையார்கோவில் கோபுரத்தில் ஏறிபார்த்தால் மதுரை கோபுரம் தெரியும். அந்த ஆலயத்தை எழுப்பியவர்கள், கோபுரத்தை நிர்மாணித் தவர்கள் மருது சகோதரர்கள். இந்து ஆலயங்களுக்கு மட்டுமல்ல. நரிக்குடி, மதுரை பள்ளிவாசல், செக்காணூரணி கட்டவும், சருகணியில் மாதா கோவிலுக்கும் மானியம் கொடுத்தார்கள்.

எல்லா பெருமக்களையும் மதித்ததற்கு எடுத்துக் காட்டாக ஒன்று கூற விரும்புகிறேன். சிவகங்கையில் கடுமையான குடிநீர் பஞ்சம் இருந்தது. மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் ஒரு ஊருணி வெட்ட வேண்டுமென்று பெரியமருது தீர்மானித்தார். ஊருணியை வெட்டச் சொன்னார். ஊருணியை வெட்டுகின்ற நாளில் பூமி பூஜை போடவேண்டிய நாளில் பெரியமருது ஒரு இடத்தில் நின்றார். கொத்தனார் வெட்ட ஆரம்பிக்கிறார். ஆரம்பிக்கிற பொழுது பெரிய மருதுவிடம் கேட்டார். அய்யா ஒருசந்தேகம். இந்த ஊருணியைச் சந்திரன் விருத்தியில் வெட்டலாமா, சூரிய விருத்தியில் வெட்டலாமா என்று கேட்டார். பெரியமருதுக்கு ஒன்றும் புரியவில்லை. அய்யா நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லை. சந்திர விருத்தி என்றால் என்ன? சூரிய விருத்தி என்றால் என்ன? அதில் ஏதாவது தொழில் ரகசியம் இருக்கிறதா? என்னிடத்தில்சொல்ல முடிந்தால் தயவு செய்து சொல்லுங்கள் என்று கேட்டார். கொத்தனார் சொன்னார். சந்திரன் விருத்தி என்பது தெற்கு வடக்காக அகலமாகவெட்டுவது, சூரிய விருத்தி என்றால் கிழக்கு மேற்காக அகலமாக வெட்டுவது. ஆனால், குடிநீர்க்காக ஊருணி வெட்ட வேண்டுமானால் சந்திர விருத்தியில்தான் வெட்ட வேண்டும் என்று கொத்தனார் சொன்னார். பெரிய மருது சொன்னார். பிறகு எதற்கு யோசிக்கிறீர்கள். சந்திரன் விருத்தியிலே வெட்டுங்கள் அதில் என்ன சங்கடம். கொத்தனார் கொஞ்சம் தயங்கிவிட்டு மறுபடியும் பெரிய மருதுவிடம் சொன்னார். அய்யா, அதில் ஒரு ரகசியம் இருக்கிறது. சந்திர விருத்தியில் ஊருணி வெட்டச் சொன்னவர்களுக்குச் சந்ததிகள் விருத்தியாகாது. மக்கள் விருத்தியாகமாட்டார்கள். அவர்களுக்குக் குழந்தை பேறு இல்லாமல் போய்விடும். அப்படி குழந்தை பிறந்தாலும் விளங்காமல் போய்விடுவார்கள் என்று நம்பிக்கை இருக்கிறது. அதை நான் மகாராஜாவிடம் சொல்ல வேண்டியது எனது கடமை. அதனால் சொன்னேன் என்று சொன்னார். உடனே பெரிய மருது கொஞ்சம் கூட யோசிக்கவில்லை. அவர் சொன்னார். சந்திர விருத்தியில் வெட்டினால் எனக்கு பிள்ளை இல்லாமல் போய்விடும் அல்லது பிள்ளைகள் உருப்படாமல் போய்விடும் என்பதைக் கருதி சொல்கிறீர்களா? தேவையே இல்லை. எனக்கு மக்கள் தான் பிள்ளைகள் அந்த மக்களுக்காகத்தான் இந்த ஊருணியை வெட்டுகிறேன். என் பிள்ளைகள் என்ன ஆனாலும் பரவாயில்லை. ஊருணியில் குடி தண்ணீருக்கான வகையில் சந்திரவிருத்தியில் வெட்ட வேண்டுமென்றால் அப்படி வெட்டுங்கள் என்று கட்டளையிட்ட மன்னர்பெரிய மருது என்பது சரித்திரத்தைப் படிக்கின்றபோது மெய்சிலிர்க்கிறது.

இன்னும் சொல்லபோனால், வீரத்தில் நிகரற்றவர். எத்தனையோ ஆயுதங்களைப் பயன்படுத்தினார்கள். ஆஸ்திரேலியர்கள் பயன்படுத்தும் பூமராங் என்று அழைக்கப்படும் இந்த ஆயுதம் எதிரிகளைத் தாக்கிவிட்டு விட்டெறிந்தவர்களின் காலடியில் நாய்குட்டியைப் போல் கிடக்கும். அதற்கு பெயர் தான் வளரி என்று பெயர். இந்த வளரியைப் பயன்படுத்தக் கூடிய ஆற்றல் மிக்க மாவீரர்கள் பெரிய மருதுவும் சின்னமருதுவையும் மட்டும் தவிர வேறு யாருக்கும் அந்த அளவுக்குப் பயிற்சி கிடையாது. ஒரு ஆங்கிலேயர் படை வீரரே எனக்கு வளரியைப் பயன்படுத்த சின்னமருது கற்றுக் கொடுத்தார் என்று எழுதியுள்ளார். அதை வேகமாக வளைத்து வீசி எறிய வேண்டும். அந்த வளரி என்கிற ஆயுதம் சிவகங்கையிலே மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்ட பின்னர் போராளிகளிடமிருந்து ஆயுதங்களை எல்லாம் பறிமுதல் செய்தார்கள். அப்படி பறிமுதல் செய்யப்பட்ட போது போராளிகளிடமிருந்து எடுக்கப்பட்ட வளரிகளின் எண்ணிக்கை, பத்தாயிரத்திற்கும் மேல். அந்த ஆயுதத்தைச் சாதாரண ஆள் பயன்படுத்த முடியாது. திப்புச் சுல்தானின் வாளுக்கு எவ்வளவு பெருமை இருக்கிறதோ அதேபோல் திப்புசுல்தான் இறந்த பின்னர் அவரது வாளில் பதிக்கப்பட்ட வைரங்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள். அதேபோல் வளரியும் ஒரு அற்புதமான ஆயுதம்.

மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தின் வட பகுதியிலிருந்து பெரிய மருது வீசிய வளரி, தெப்பக்குளத்தின் மையப்பகுதியையும் தாண்டி தெற்குப் பகுதியில் உள்ள முக்தீஸ்வரர் மேட்டில் போய் விழுந்தது என்று வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. தெப்பக்குளம் என்பது தெற்கு வடக்காகச் சுமார் ஆயிரம் அடி தூரம். கிழக்கு மேற்காகச் சுமார் தொள்ளாயிரத்து எழுபது. இதுவரையில் இந்த பூமரங்கு ஆயுதத்தைப் பயன் படுத்தியவர்கள் எவரும் பெரிய மருது எரிந்த இந்த சாதனையை மிஞ்சிய ஒலிம்பிக்வீரர்கள் எவரும் இல்லை.

அப்படிப்பட்ட மாவீரரிடம் ஊமைத்துரை அடைக்கலமாக வந்தார். ஊமைத்துரையை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள்

என்று கர்னல் அக்னியு பேசினார் என்று அக்னியுவே எழுதியிருக்கிறார். ஊமைத்துரையை எங்களிடம் ஒப்படைக்காவிட்டால் நீங்களும் கலகக்காரர்களாகக் கருதப்படுவீர்கள் என்று எச்சரித்து விட்டு வந்திருக்கிறார். எச்சரித்து வந்ததற்குப் பின்னர் என்ன நடந்தது. ஊமைத்துரையை ஒப்படைத்தார்களா ? சின்ன மருது பாண்டி எல்லா பாளையக்காரர்களையும் ஒருங்கிணைப்பதில் பேசிக்கொண்டிருந்தார். ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சின்ன மருதுவுக்கும், திப்புசுல்தானுக்கும் நட்பு இருந்தது. தீரன் சின்னமலைக்கும் நட்பு இருந்தது. இன்னும் சொல்லப்போனால், மாவீரன் நெப்போலியனுக்குமே நட்புஉண்டு. கருப்பையா சேர்வை என்பவரை நெப்போலியனுக்குத் தூதுவராக அனுப்பி வைத்தார். அந்த கருப்பையா என்பவர் தீரன் சின்னமலை இடத்தில் அமைச்சராக இருந்தவர். அவர் நெப்போலியனிடத்தில் பதில் கடிதம் வாங்கி வந்து திப்புசுல்தானை வந்து சந்திக்கின்ற பொழுது, நோய்வாய்பட்டு இறந்து போய்விட்டார் என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகிறது.

ஊமைத்துரையை ஒப்படையுங்கள் என்று கேட்ட நேரத்தில் சின்னமருது பாண்டியர் வெள்ளை ஆதிக்கத்தை வேரறுப்பதற்காகச் சகல திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டிருந்தார். ஒரு குறிப்பைக் குறிப்பிட விரும்புகிறேன். சின்ன மருது பாண்டியர் போர் பிரகடனத்தை எழுதினார். அந்த பிரகடனத்தை ஸ்ரீரங்கம் கோவில் மதில் சுவரில் ஒட்டச் செய்தார். ஸ்ரீரங்கம் கோயிலில் ஒட்டினால் இந்துகள் மட்டும் தான் படிப்பார்கள். எல்லாரும் படிப்பதற்காகத் திருச்சி மலைக்கோட்டையில் ஒட்டச்செய்தார். அந்த பிரகடனத்தின் காப்பி அப்படி வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. அதில் அவர் எழுதியிருக்கிறார் இதைபடிக்கிறவர்கள் எழுத்து எழுத்தாகக் கவனமாகப் படிக்க வேண்டும். இதனால் சம்புத் தீவில் இருக்கிற சகல ஜாதி மக்களுக்கும் நான் தெரிவிக்கிறேன். சம்புத் தீவு என்பது ஒட்டுமொத்த இந்தியாவை, இந்தியாவிலுள்ள சகல ஜாதி மக்களுக்கும் தெரிவிக்கிறேன் என்று தெரிவித்துவிட்டு சின்னமருது கடுமையான வார்த்தைகளில் ஆங்கிலேயர்களை திட்டியிருக்கிறார். ஐரோப்பியர்களைக்கண்ட இடத்தில் விடாதீர்கள். கொல்லுங்கள். வேரறுங்கள். விடாதீர்கள். அவர்களுக்குக் கீழ் பணியாற்றாதீர்கள். அவர்கள் சொன்ன வேலையைச் செய்யாதீர்கள். நம்மாலேதான் இந்த நாட்டை பிடித்தார்கள். நம்முடைய வீரர்களைப் பயன்படுத்தித்தான் இந்த நாட்டை கைப்பற்றினார்கள். ஆகவே அத்தகைய ஐரோப்பியர்களை ஒட்டமொத்தமாக வேரறுக்க வேண்டும் என்று சின்ன மருதுபாண்டியர் எழுதியிருக்கிறார். அதனைப் படியெடுத்து படிக்க சொல்கிறார். அதனை அத்தனை நண்பர்களுக்கும் அனுப்பச் சொல்கிறார். அதனை படியெடுத்துக் கொடுக்காதவர் பன்றியின் இரத்தத்தைக் குடித்த பாவத்திற்கு ஆளாகிறான் என்று சொல்லிவிட்டு கீழே எழுதுகிறார். இப்படிக்குச் சிவகங்கை பேரரசின் ஊழியக்காரன் ஐரோப்பியர்களை ஒருபோதும் மன்னிக்காத சின்ன மருதுபாண்டி என்று எழுதி ஸ்ரீரங்கம் கோவில் மதில் சுவரில் ஒட்டினார்.

ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தார் திப்புசுல்தான். திப்புசுல்தானின் ராஜ்ஜியம் பெரியது. அந்த போர் எத்தனை நாள் நடந்தது. 2 மாத காலத்திற்குள் வெள்ளைக்காரர்கள் முடித்துவிட்டனர். ஆனால் சிவகங்கைச் சீமையோடு வெள்ளக்காரர்கள் நடத்திய போர், எட்டு மாத காலம் நீடித்தது. தொன்னூற்று எட்டு பயிற்சி பெற்ற வெள்ளையர் தளபதிகள் சிவகங்கையில் இறந்தார்கள். திப்புசுல்தானுடன் நடத்திய போர்களத்தில் இழந்ததை விட அதிகமான வெள்ளைய வீரர்களைச் சிவகங்கை சீமைக் களத்தில்தான் அதிக அளவில் பறி கொடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஜெனரல் வீர்ச் என்பவரால் எழுதப்பட்ட நாட்குறிப்பின் உச்சகட்ட தகவல்தான் அன்றைய நாள். 1801 அக்.24 சனிக்கிழமை அன்றுதான் இந்த மாவீரர்கள் இரண்டு பேரையும் பிடித்தார்கள். காட்டுப்பகுதியில் பெரிய மருதுவைத் தலைமறைவாக நடத்தினார். அவர்கள் வாழ்க்கையில் அனுபவித்த அத்தனை துன்பங்களையும் தெரிவிக்க நேரம் இல்லை. காட்டில் முள் தைத்து விட்டது. உட்கார்ந்து முள்ளை எடுக்க நேரமில்லை. ஆகவே, இடையில் இருக்கும் வாளை எடுத்து அதன் கைபிடியால் முள்ளை அடித்து முழுமையாகக் காலின் உள்ளே செலுத்திவிட்டு மதகுபட்டி காட்டை நோக்கி நடந்தவர் பெரிய மருது.

அதே போல் சின்ன மருதுவைத் தொடையில் சுட்டு பிடித்துதான் சிவகங்கை கொண்டு வந்தார்கள். ஜாலியன் வாலாபாக் படுகொலை சம்பவத்தில் இறந்தவர்கள் 400 பேர். ஆனால் அதற்கு 118 ஆண்டுகளுக்கு முன்பே மருது சகோதரர்கள் மற்றும் 500 பேர் தூக்கிலிடப்பட்டு அவர்களின் தலை துண்டிக்கப்பட்டு வெறும் முண்டத்தை ஆங்கிலேயர்கள் ஊர்வலமாக இழுத்து வந்தனர். ஜாலியன் வாலாபாக் சம்பவத்திற்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம், மருது சகோதரர்களுக்கு வழங்கப் படவில்லை என்பது வருத்தத்திற்குரியது. வீரர்கள் புதைக்கப்படுவதில்லை. விதைக்கப்படுகிறார்கள். விதைக்கப்பட்ட வீரர்கள் மருது சகோதரர்களுக்கு வீரத்தின் விளைநிலமாகத் திகழும் தமிழக முதல்வரின் பெரும் முயற்சியால் தபால் தலை வெளியிடும் வரலாற்று நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று இவ்விழாவில் சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இந்திய அஞ்சல் பணிகள் வாரிய உறுப்பினர் புதுடெல்லி திரு.ஆர்.கணேசன், இ.அ.ப., அவர்கள் மருதுபாண்டியர் தபால்தலையை வெளியிட்டார்.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு.ஆர்.விஸ்வநாதன் அவர்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்கள், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.எம்.இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எல்.சந்தானம், திருமதி வளர்மதி ஜெபராஜ், திரு.காமாட்சிபுரி ஆதினம் சாந்தஸ்ரீ சிவலிங்கேஸ்வர சுவாமிகள் சேர்வை, மாமன்னர் மருதுபாண்டியர் பண்பாடு மற்றும் நலச்சங்க தலைவர் திரு.லெ.கருப்பையா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சி.துரைராஜ், திரு.எஸ்.எம்.சீனிவேல், திரு.பி.பொன்னம்பலம், திரு.ஆர்.சாமி, திரு.வி.ஆர்.இராஜாங்கம், திரு.கு.அன்பழகன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.மா.இளங்கோவன், தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாடு வாரியத் தலைவர் திரு.எம்.ஜெயராமன், மாவட்ட அறங்காவல் குழுத்தலைவர் திரு.கு.செல்லப்பாண்டி, மாவட்ட வேளாண் விளைபொருள் விற்பனைக்குழுத் தலைவர் திரு.வி.எஸ்.பூமிபாலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வாரியத் தலைவர்கள், மாமன்னர் மருதுபாண்டியர் பண்பாடு மற்றும் நலச்சங்க தலைவர் திரு.லெ.கருப்பையா, செயலர் ஆர்.சி. இராமசாமி, மாமன்னர் மருதுபாண்டியர் பேரவை அமைப்பாளர் ஏ.ரத்தினவேல், மூவேந்தர் பண்பாட்டுக் கழகத்தின் மாநில தலைவர் திரு.எஸ்.பரங்குன்றம், மாவீரன் பூலித்தேவன் ஆராய்ச்சி மையத்தைச் சார்ந்த டாக்டர் என். ராசையா, திரு.காமாட்சிபுரி ஆதினம் சாந்தஸ்ரீ சிவலிங்கேஸ்வர சுவாமிகள் சேர்வை. திரு.எஸ்.பாஸ்கரன், பட்டுக்கோட்டை ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்று பேசும்போது, நமது இந்திய திருநாட்டில் விடுதலைப் போராட்ட வரலாற்று குறிப்பில் தென்னிந்தியாவிற்குத் தனி இடம் உண்டு. இவ்வரலாற்றில் இடம்பெறுகின்ற வகையில் தென் தமிழகத்திலே மருதுபாண்டியர் சகோதரர்கள் ஆங்கில ஏகாதிப்பத்தியத்தை எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் தம்பி ஊமைத்துரை அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததற்காக வெள்ளையர்களின் கோபத்திற்கு ஆளாகி கடைசியில் தூக்கு தண்டனைப் பெற்று தியாக தீபங்களாக

விளங்குகின்றனர். இந்த தியாக செம்மல்களுக்குத் தபால்தலை வெளியிடுவதன் மூலமாக தேசமே இன்று மருது சகோதரர்களை நினைவு கூறுகிறது.

இந்தியத்திருநாடு ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகத் தன்னுயிரையும் பொருட் படுத்தாது இரத்தம் சிந்திய மருதுபாண்டியர் சகோதரர்களின் திருவுருவ தபால்தலை வெளியிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இன்றைக்கு மாமன்னர் மருதுபாண்டிய சகோதரர்களின் தபால்தலை வெளியிட மத்திய அரசு உத்தரவிட்டத்தின் பேரில் தபால்தலை வெளியீட்டு விழா மதுரையில் மிக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

விடுதலைப்போராட்ட வீரர்களாக இருந்தாலும் சரி, விடுதலைப்போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்ற தியாகிகளாக இருந்தாலும் சரி, அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தனிப்பட்ட முறையில் அக்கறை எடுத்து அவர்களின் குடும்பங்களுக்கு ஓய்வூதியமாக ரூ.3,000/–ம் மாதம் ரூ.15/– வீதம் மருத்துவ செலவிற்கும் வழங்கி தியாகிகளின் குடும்பங்களையும் பாதுகாத்துக் கௌரவித்து வருகிறார்கள். கடந்த மாதம் விடுதலைப் போராட்ட தியாகி ஒருவருக்கும் இந்த மாதம் இரண்டு நபர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்க, அரசு உத்தரவிட்டதின் பேரில் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வருவாய் துறை அமைச்சர் நேரில் வந்து ஓய்வூதிய ஆணையை வழங்கி கௌரவித்தார்கள். ஆக, தமிழக முதல்வர் அவர்கள் விடுதலைப் போராட்ட தியாகிகளையும் வீரர்களையும் கௌரவிப்பதிலும் அவர்களின் குடும்பங்களை அரவணைத்து செல்வதிலும் முதன்மையாகிறார் என்று கூறினார். முடிவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கா. ஆசைத்தம்பி அவர்கள் நன்றி கூறினார்.

– சிவ.சு.சரவணன்,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களுக்கு தமிழக மீனவர் நன்றி



இலங்கை கடற்படையினரால் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தமிழக மீனவர் திரு. நாகநாதனின் உயிரைக் காப்பாற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இட்ட ஆணையின்படி, அந்த மீனவர் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுத் தீவிர உயர் சிகிச்சை அளிக்கப்பட்டு, பூரண குணமடைந்துள்ளார். துப்பாக்கிக் குண்டு பாய்ந்து அபாய நிலையிலிருந்து மீண்டு மறுபிறவி எடுத்துள்ள திரு. நாகநாதன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 13.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து தனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

தனுஷ்கோடிக்கும், கச்சத் தீவுக்கும் இடையே கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவரான பசும்பொன் கிராமத்தைச் சேர்ந்த தவசி ஆண்டித்தேவர் என்பவரது மகன் திரு. நாகநாதன் 8.9.2004 அன்று, இலங்கை கடற் படையினர் துப்பாக்கியால் சுட்டதில் தொண்டையில் குண்டு பாய்ந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். இந்த நிலையை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவருக்கு உடனடியாக உயர்நிலை அறுவை சிகிச்சை நடத்தி அந்த துப்பாக்கிக் குண்டை அகற்ற, விமானம் மூலமாக சென்னைக்கு அழைத்து வந்து அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதித்து, அறுவை சிகிச்சை செய்திட ஆணையிட்டார்கள். இதன்படி, 11.9.2004 அன்று மதுரையில் இருந்து சென்னைக்கு விமானம் மூலமாக அழைத்து வரப்பட்ட மீனவர் நாகநாதன், அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை அப்பல்லோ மருத்துவமனையில், திரு. நாகநாதனுக்கு உயரிய சிகிச்சைகள் சிறப்புடன் வழங்கப்பட்டு அவர் தற்போது பூரண குணம் அடைந்துள்ளார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது ஆணையின்படி திரு. நாகநாதன் மதுரையில் இருந்து சென்னைக்கு அழைத்து வரப்பட்ட விமானச் செலவு மற்றும் அப்பல்லோ மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிகிச்சைக்கான அனைத்து செலவுகளையும் அரசே ஏற்றுக் கொண்டது.

உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தனக்கு மறு பிறவி அளிக்கும் வகையில் தக்க சிகிச்சை அளிக்கவும், அதற்குண்டான அனைத்துச் செலவுகளை அரசே ஏற்கவும் ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து தனது நன்றியைத் தெரிவிக்க வேண்டும் என்று திரு. நாகநாதன் விரும்பினார்.

திரு. நாகநாதனின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 13.10.2004 அன்று தலைமைச் செயலகத்திற்கு அவரை வரவழைத்து நேரில் சந்தித்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்த திரு. நாகநாதன் மற்றும் அவரது மனைவியும் கண்ணீர் மல்க தங்களது நன்றியைத் தெரிவித்தார்கள். அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திரு. நாகநாதன் மற்றும் அவரது துணைவியாரிடம், தமது தனிப்பட்ட பரிசாக ரூ.5,000–மும் மேலும், புது ஆடைகளையும் வழங்கி தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள். □





தமிழரசு
நவம்பர் 2004



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
ஐப்பசி – கார்த்திகை
மலர்:36 இதழ்: 5
நவம்பர் 2004
விலை ரூ.10

இந்த இதழில்...

- ★ தமிழ்நாடு, வெளிநாடுகளுடனான வர்த்தகத் தொடர்பை விரிவுபடுத்துவதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது (மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்களின் உரை) — 2
- ★ புதிய பொற்காலத் தமிழகத்தை நான் அமைத்தே தீருவேன் (தமிழ்த் திரைப்படத் துறையினர் நடத்திய பாராட்டு விழாவில் மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்களின் உரை) — 9
- ★ சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு — 15
- ★ புது வடிவம் பெற்றுள்ள மெரீனா நீச்சல்குளம் — 17
- ★ மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குப் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் — 19
- ★ தமிழக காவல்துறை விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசுகள் — 21
- ★ பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் கம்பிவட ஊர்தி — 24
- ★ வேளாண் அறிவியல் தமிழ் இதழ்கள் — 25
- ★ தருமபுரி மாவட்டத்தில் உயிர்த்தெழும் பயிர்த்தொழில் — 29
- ★ டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா — 33
- ★ தமிழ்நாடு காவல்துறை இந்தியாவிலேயே இணையற்ற காவல்படை (மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்களின் உரை) — 37
- ★ கண் பாதுகாப்பு — 47
- ★ அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஒய்வூதியதாரர்களுக்குச் சலுகைகள் — 49
- ★ சேலம் மாநகராட்சி – பனமரத்துப்பட்டி ஏரி ஆக்கிரமிப்பு அகற்றம் — 55
- ★ போலியோவை ஒழிக்க அரசு நடவடிக்கை — 57
- ★ நீலகிரி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்பாடுகள் — 59
- ★ மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகள் — 62
- ★ புதிய வடிவமைப்புடன் கூடிய பட்டு மற்றும் பருத்தி ரக சேலைகள் விற்பனை — 65
- ★ ஆண்டிபட்டியில் ரூ.74 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் — 69
- ★ விருதுநகர் மாவட்டத்தில் மீன்வள மேம்பாடு — 71
- ★ வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வாழ்க்கை மேம்பட மாற்றுப் பயிர்த் திட்டம் — 73
- ★ உலகெங்கும் தமிழோசை — 75
- ★ இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒய்வூதியம் — 77
- ★ தமிழர் நாகரிகத்தில் தகவல் தொடர்பு அறிவியல் சாதனங்கள் — 79

அட்டைப்பட விளக்கம்

முதலாம் பக்க அட்டை	: தமிழக ஆளுநராக மேதகு திரு. எஸ். சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் பதவியேற்பு (3.11.2004)
இரண்டாம் பக்க அட்டை	: அதிரடிப்படையினருக்குப் பாராட்டு விழா
மூன்றாம் பக்க அட்டை	: பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் கம்பிவட ஊர்தி
நான்காம் பக்க அட்டை	: பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பிறந்தநாள் விழா.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: **வ. கனகராஜ்,** இ.ஆ.ப, இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஒமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

தமிழ்நாடு, வெளிநாடுகளுடனான வர்த்தகத் தொடர்பை விரிவுபடுத்துவதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

இந்தியாவின் கிழக்கு நுழைவு வாயிலாகத் திகழும் சென்னை மாநகரில், இன்று, 3–வது இந்தியா – 'ஏசியன்' வர்த்தக மாநாடு கூட்டப்பட்டுள்ளதைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியத் தொழில் மற்றும் வர்த்தகக் கூட்டமைப்பும், இந்தியத் தொழில் கூட்டமைப்பும், மத்திய வெளியுறவுத் துறை, வர்த்தகம் – தொழில்துறை மற்றும் தமிழக அரசு ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டில் பங்கேற்று உங்கள் அனைவரையும் சந்திக்கக் கிடைத்த இந்த வாய்ப்பினை எனக்குக் கிடைத்த ஒரு பேறாக நான் கருதுகிறேன். முதற்கண், கீர்த்திமிகு மாநிலமாம் தமிழ்நாட்டில் ஏற்றமிகு சென்னை மாநகரில் இன்று **(20.10.2004)** நடைபெறும் இம்மாநாட்டில் பங்கேற்க வருகை புரிந்துள்ள அனைத்துப் பேராளர்களுக்கும் 'ஏசியன்' கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகளின் அமைச்சர் பெருமக்களுக்கும் எனது வணக்கங்களைத் தெரிவித்து உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறேன்.

இந்தியாவிற்கும்–ஏசியன் நாடுகளுக்குமிடையிலான உறவு மேம்பட்டு பரஸ்பர பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிற இத்தருணத்தில் இந்த மாநாட்டில் முக்கிய உரை நிகழ்த்த நான் அழைக்கப்பட்டுள்ளேன். இந்த மாநாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றி, அதிலும் குறிப்பாக, தொடர்ச்சியான பேச்சுவார்த்தையின் முக்கியத்துவம் பற்றி நான் ஆழ்ந்து சிந்தித்தேன். அவ்வாறு சிந்தித்தபோது, தற்போதைய புதிய உலக சூழலில் பரஸ்பரம் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலை பற்றிய கருத்து திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டு வருவது என்னை வெகுவாகக் கவர்ந்தது. ஒரு காலத்தில், இந்தியா தன்னிடமுள்ள அதிக அளவிலான மக்கள் தொகையைக் கொண்டு, மற்ற நாடுகளுடன் தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்ளாப் போக்குடன் ஒரு கூட்டுப்புழு போல தனித்து இருந்து விடலாம் என்ற கருத்தைக் கொண்டிருந்தது. ஆனால், இன்றைக்கு இப்போக்கு மாறிவிட்டது. முதல் நிலை சீர்திருத்தங்கள் என்று சொல்லப்படுகிற தொடர்ச்சியான நடவடிக்கைகள் மூலமாக இந்தியா, 1991ஆம் ஆண்டிலிருந்து உலகப் பொருளாதாரத்துடன் தன்னை இணைத்துக் கொண்டது. உள்ளபடியே இது ஆச்சரியத்திற்குரிய ஒரு திடீர் மாற்றம்தான். இதைக் கண்ட சிலர் இந்தியாவிற்கு ஏதோ அழிவு காலம் தொடங்கிவிட்டதென ஆருடம் கணித்தனர். அவற்றைப் பொய்யாக்குகின்ற வகையில் மிகக் கடுமையான நிலையிலும் எந்த அதிரடியான மாற்றத்திற்கும் தங்களை ஈடு கொடுத்து அதை உள்வாங்கிக் கொண்ட இந்திய மக்களின் ஒப்பற்ற தன்மை போற்றுதலுக்குரிய ஒன்றாகும்.

பரஸ்பரம் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் இந்தப் பின்னணியில்தான் 'ஏசியன்' நாடுகளுக்கும் இந்தியாவுக்குமிடையே வளர்ந்துவரும் உறவை மேலும் வலுப்படுத்துவதற்காக புதிய கூட்டணிகளை உருவாக்கவும் புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும் இன்றைக்கு நாம் இங்கே கூடியுள்ளோம். 'ஏசியன்' நாடுகள் மற்றும் இந்தியாவின் பாரம்பரியமும், கலாச்சாரமும், எப்போதுமே இவற்றிற்கிடையே வலுவான பிணைப்புக்குக் கட்டியம் கூறிவந்துள்ள போதிலும், இந்நாடுகளுக்கிடையிலான இந்தப்பரஸ்பர சார்புத் தன்மைக்குப் புத்துருவாக்கம் அளிக்க வேண்டியிருப்பது உள்ளபடியே ஒரு வரலாற்று விபத்தே என்பது கருத்தாகும். இதற்கு தமிழ்நாடு ஒரு சரியான எடுத்துக்காட்டு ஆகும். ஒரு கடற்கரை மாநிலம் என்ற முறையில், ஏசியன் நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த பாரம்பரியம் தமிழ்நாட்டுக்கு உண்டு. இந்தப் பாரம்பரிய உறவை அடித்தளமாகக் கொண்டு, பல நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட இவ்வுறவுக்கு நாம் புதிய வலு சேர்க்க வேண்டும். இந்த மாநாடு, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர சார்பு நிலையை நோக்கிய புதிய பயணத்தில் குறிப்பிடத் தகுந்ததொரு மைல் கல்லாக விளங்குகிறது.

நம்மிடையே காணப்படும் பொதுவான தன்மை என்ன ? முதலாவதும், முக்கியமானதுமான அம்சம், புவியியல் அமைப்புதான். நாம் எல்லோரும் ஆசிய–பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, நாம் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் எழுகிறது. இந்தியாவும் ஏசியன் நாடுகளும் உலகத்தின் பெரும்பான்மையான மதங்களை உள்ளடக்கிய, பலதரப்பட்ட கலாச்சார செல்வங்களைத் தன்னகத்தே கொண்ட தம்முடைய சமூக அமைப்பின் பன்முகத் தன்மையை அங்கீகரிக்கின்றன. நமக்குப் பழக்கப்பட்ட ஆசிய வழியில் நமது மக்களின் நாட்டங்களைப் புரிந்து கொள்வதில் நம்மிடையே ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. நமது மக்களுக்கு உயரிய வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட, நவீன, அதே நேரத்தில் நாம் மிகவும் நேசிக்கின்ற பண்புகளையும் கலாச்சாரத்தையும் கட்டிக் காக்கிற சமூகம் ஒன்றை உருவாக்கித் தருவதே நமது பொதுவான கொள்கையாக உள்ளது. ஆசியக் கண்டத்தைச் சேர்ந்தவர்களுக்கே உரித்தான இந்த தனித் தன்மையும் பண்பாடும்தான், உண்மையிலேயே நம் எல்லோரையும் பிணைக்கும் ஒரு சக்தியாக விளங்குகிறது. இந்தப் பண்பு நமக்கிடையே உறவை மேலும் ஆழப்படுத்துவதோடு அதற்கு ஒரு உயிர்த்துடிப்பையும் அளித்து வருகிறது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நம்முடைய இந்தப் பாரம்பரிய மற்றும் பண்பாட்டுப் பின்னணி, ஆசியப் பண்புகளின் அடிப்படையிலான நவீன சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற பொதுவான குறிக்கோள்கள் ஆகியவற்றின் அடிப்படையிலான பாதையில் நமக்கிடையேயான பொருளாதார உறவுகளும் ஒத்துழைப்பும் வெற்றிநடை போட வேண்டும். 10 தெற்காசிய நாடுகளில் வாழும் இந்திய வம்சா வழியைச் சேர்ந்த 3 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் இந்தப் புதிய உறவுப்பாலம் அமைக்கும் தூதுவர்களாகச் செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் ஏற்கெனவே புதிய இணைப்புகளை ஏற்படுத்தி பரஸ்பர சார்புத் தன்மையின் அவசியம் பற்றிய செய்தியைப் பரப்பி வருகிறார்கள். இதனை அடித்தளமாகக் கொண்டு அவ்வுறவை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டும். இதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. நெடுங்காலம் வெவ்வேறு பாதைகளில் பயணித்த நம்மிடையே! தற்போது ஒரு புதிய கருத்தொற்றுமை ஏற்பட்டுள்ள நிலையில், நம்மிடையே உறவு வலுப்படுவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. நம்மிடையே வணிக மற்றும் வியாபாரத்தொடர்புகள் பெருகும்போது, பொருளாதார நடவடிக்கைகள் பெருகுகின்றன. இவை வெற்றிக்கான உறுதியான வழித்தடம் அமைக்கின்றன. தடையற்ற வணிகம் மற்றும் வர்த்தகத்தால் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டின் பயன்கள், எவ்விதச் செலவுமின்றி கிராமப்புற மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாதது. தடையற்ற வர்த்தக மற்றும் பரஸ்பர சார்புத் தன்மையை மேம்படுத்துவதற்கான சிந்தனையின் மையக் கருத்து இதுவேயாகும்.

இந்தியாவுக்கும் ஏசியன் நாடுகளுக்குமிடையிலான உறவை, ஏற்கெனவே ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் அடிப்படையில் மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. இந்நாடுகளுக்கிடையே தற்போது சுமார் 13 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருவழி வர்த்தகம் நடைபெற்று வருகிறது. ஆண்டொன்றுக்கு, ஒன்றரை டிரில்லியன் டாலர் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்து வருகின்ற, மொத்தம் 1.5 மில்லியன் மக்களால் உருவாக்கப்பட்டுள்ள பெருத்த வாய்ப்பு வளத்தைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, இது போதுமானதாகத் தோன்றவில்லை.

வர்த்தகத்தைப் பெருக்கி வளர்ச்சியை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. இதற்குச் சிறந்த வழி, வர்த்தக சபைகளுடன் முனைப்புடனும் அர்த்தமுள்ள வகையிலும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வியாபாரக் குழுக்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதுதான். இதுபோன்ற உயர்நிலை மாநாடு நமது ஒட்டுமொத்தச் செயல்பாடுகளை மறு ஆய்வு செய்து புதிய செயல்திட்டங்களை வகுக்க நல்லதொரு வாய்ப்பை உருவாக்கித் தருகிறது.

ஏசியன் நாடுகளும் இந்தியாவும் வர்த்தக பங்குதாரர்களாக விளங்குவதைக் கருத்திற்கொண்டு, தடையற்ற வர்த்தக ஏற்பாடுகள் உள்ளிட்ட பரஸ்பர சார்புடைமையை மேம்படுத்துவதற்கான அனைத்து வாய்ப்புகளையும் நாம் ஆராய வேண்டியது அவசியமாகிறது. இந்த அடிப்படையில்தான், இந்தியா ஏசியன் நாடுகளுக்கிடையிலான தடையற்ற வர்த்தக உடன்படிக்கையும், பரஸ்பரம் உடன்பாட்டின் அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்பட்ட இனங்களுக்கு வரிச்சலுகை, வரி நீக்கம் ஆகியவற்றிலும் வகை செய்யப்பட்டுள்ளது. பழைய நடைமுறைகள் மாறி தடையற்ற வர்த்தகக் காற்று வீசத் தொடங்கும்போது சில அச்சங்களும் ஐயுறவுகளும் எழுவது இயல்பே. நமது மதிநுட்பத்தைப் பயன்படுத்தி இத்தகைய அச்ச உணர்வுகளைப் போக்கி இந்தப் பிராந்தியத்தில் தடையற்ற வர்த்தகத்திற்கான வாய்ப்பைப் பெருக்குகின்ற வகையில் நடைமுறைகளைச் சீரமைத்து எளிமைப்படுத்த வேண்டும். நாம் ஒருவரோடொருவர் ஒருங்கிணைந்து இணக்கமாகச் செயல்பட ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. தமிழ்நாட்டைச் சேர்ந்த வணிகர்கள், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மியான்மர் மற்றும் ‘ஏசியன்’ பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் தொழில் உறவுகள் வைத்துள்ளது அனைவரும் அறிந்ததே. இந்தியாவிற்கும் இந்த நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவு மிகவும் பிரபலமான ஒன்று. இப்பிராந்தியத்தில், வர்த்தகம் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்த இது போன்ற உறவுகள் புதுப்பிக்கப்பட வேண்டும். இதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன என்பது என்னுடைய கருத்தாகும். இதற்கு உதாரணமாக, தமிழ்நாட்டிலும், தாய்லாந்திலும் உள்ள சர்க்கரைத் தொழிலைக் கூறலாம். நெருங்கி ஒருவரோடொருவர் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தி அந்தந்தப் பிராந்தியத்தில் நமது செயல்பாட்டை, நாம் மேலும் மேம்படுத்திக் கொள்ள முடியும். பொறியியல் மற்றும் மூலதனப் பொருட்களில் வலுவான நிலையிலுள்ள தமிழ்நாடு, புதிய முயற்சிகளுக்கு நிச்சயமாக ஆதரவு அளிக்க முடியும். நாம் இணைந்து உயிரி எரிபொருள் துறையிலுள்ள சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆராயலாம். சர்க்கரைத் தொழிலைச் சீரமைப்பதிலும் நாம் இணைந்து பணியாற்றலாம். இதே போன்று மோட்டார் வாகன உதிரி பாகங்கள், தோல் பொருட்கள் துணித் தொழில் முதலியவற்றிலும் நாம் இணைந்து பணியாற்ற நல்ல வாய்ப்பு உள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையில் பிரமாண்டமான வளர்ச்சி கண்டுள்ள இந்தியா – ஏசியன் நாடுகளின் தேவைகளை நிறைவு செய்ய இயலும். உண்மையிலேயே இவ்வாறாக பரஸ்பரம் ஒருவரோடொருவர் இணைந்து வினையாற்றுவதன் வாயிலாக அனைவருக்கும் நல்ல வாய்ப்பு உருவாக்க முடியும். இருந்தாலும் கிராமப்புற பொருளாதார வளர்ச்சி பாதிப்படையாத வகையில், நாம் இந்த வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு கவனத்துடன் செயல் வடிவம் கொடுக்க வேண்டும்.

அடுத்து, எனது நெஞ்சுக்கு நெருக்கமான கருத்துக்கு வருகிறேன். அனாடலி பிரான் “நாம் கனவு காணாவிட்டால் நமது வாழ்வே தாங்கவொண்ணாத தாகிவிடும்” என்று ஒருமுறை கூறியதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நான் தமிழகத்தை இந்நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக மாற்ற வேண்டுமெனக் கனவு கண்டு வருகிறேன். அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி ஏற்பட்டு நம்முடைய மக்கள் வளமுடன் வாழவேண்டுமென்றும் நான் கனவு கண்டு வருகிறேன்.

நான் கனவு காணத் துணிந்த காரணத்தால் இன்றைக்கு என்னுடைய இரண்டு கனவுகள் நனவாகி இருக்கின்றன என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கனவுகளின் விளைவான என்னுடைய இரண்டு திட்டங்களும் ஒரு போதும் நிறைவேறப் போவதில்லை என்று எல்லோருமே கூறி வந்தனர். அதில் ஒன்று, ‘வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம். மற்றொன்று, பயங்கர காட்டுக் கொள்ளையன் வீரப்பனை பிடித்து தீர்த்துக் கட்டும் திட்டம். அனைத்து அரசியல் கட்சிகள், அரசியல் விமர்சகர்கள், பட்டறிவு இல்லாது படிப்பறிவு மட்டுமே கொண்ட விமர்சகர்கள், ஊடக நபர்கள் அனைவருமே இது நடக்காது; வீராணம் குடிநீர் சென்னை நகரை வந்தடையாது; வீரப்பன் பிடிபடமாட்டான் எனக் கூறினர். இந்த இரண்டு திட்டங்களையும் நான் வெற்றிபெறச் செய்துள்ளேன். வீராணம் திட்டம் மூலம் சென்னை மாநகருக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை நான் வெற்றிகரமாகச் செயற்படுத்தியுள்ளேன். தற்போது சென்னை மாநகரில் வாழ்கிற 7 மில்லியன் மக்களுக்குத் தினந்தோறும் வீராணம் குடிநீர் வழங்கப்படுகிறது. நேற்றைக்கு முன் தினம்தான் நம்முடைய சிறப்பு அதிரடிபடையினர் சமுதாயத்திற்கு ஒரு அச்சுறுத்தலாக இருந்து வந்த பயங்கரவாதி வீரப்பனைப் பிடித்து ஒழித்து கட்டுவதில் வெற்றியடைந்துள்ளனர் என்பதை நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். எனவே எனக்குக் கனவு காணும் துணிவிருந்த காரணத்தால், என்னுடைய இரண்டு கனவுகள் நனவாகியுள்ளன. தமிழ்நாடு மேம்பட என்னுடைய மற்ற கனவுகளும் இனிவரும் காலங்களில் மெய்ப்படும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

1991ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதையடுத்து நான் தமிழக முதலமைச்சராக இருந்த 1991 முதல் 1996 வரையிலான காலக் கட்டத்தில் தமிழ்நாடு அதிவிரைவாக வளர்ச்சி அடைந்ததால், இல்லாமை கணிசமாகக் குறைந்தது. மனிதவள மேம்பாட்டுக் குறியீடும் உயர்ந்தது. 1990ஆம் ஆண்டின் இறுதிவாக்கில் இவ்வளர்ச்சி வேகம் குறைந்தது. அதனைத்தொடர்ந்து, அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சியினால் பொருளாதாரம் மிகவும் பாதிப்படைந்தது. துணிச்சலான, புதிய பொருளாதாரக் கண்ணோட்டத்தில், பொருளாதாரத்திற்கு நான் புத்துயிரூட்ட வேண்டியிருந்தது. சில கொள்கை சீர்திருத்தங்கள் வாயிலாக இதனைச் செய்துமுடிக்க நான் விரும்புகிறேன். மீண்டும், தமிழ்நாடு, வெளிநாடுகளுடனான வர்த்தகத்தொடர்பை விரிவுபடுத்துவதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. தமிழ்நாடு கடற்கரை மாநிலமாக இருப்பதால் இது இயல்பாகவே நடைபெற்று வருகிறது. வேளாண்மை வளர்ச்சிக்குப் புத்தெழுச்சி ஊட்டுதல், தயாரிப்பு மற்றும் சேவைத் துறைகளில் முதலீட்டுச் சூழ்நிலையை மேம்படுத்துதல், நிதி நிலையைச் சீர்படுத்தி நிலைப்படுத்துதல், இவை எல்லாவற்றிற்கும் மேலாக, வறுமை நிலைமையைக் குறைப்பதை உறுதிப்படுத்துதல் ஆகியன, இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகளில் அடங்கும். இது சுலபமல்ல என்று எனக்குத் தெரியும். இருந்தாலும், தமிழ்நாட்டின் நீண்ட கால வளர்ச்சிக்கு இது மிகவும் இன்றியமையாதது என்பதால் இதனைத் தெளிவாக உணர்ந்தே தமிழ்நாட்டுக்காக இப்புதிய பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை நான் மேற்கொண்டுள்ளேன்.

என்னுடைய இந்தக் கனவை நனவாக்கும் முயற்சியாக என்னுடைய அரசு புதுமையான பலகொள்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு செயற்படுத்தத் தொடங்கியுள்ளது. மக்கள் தொகை மிகுந்த இந்தியாவில் முதன்மைத் துறையில், குறிப்பாக, வேளாண்மைத்துறையில் அனைத்து வகையிலும் வளர்ச்சியடைந்தால்தான், தொழில் துறையில் வளர்ச்சி அடைய இயலும். தமிழ்நாட்டில் ஒரு வகையான பல் திறப்பட்ட வேளாண் தட்பவெட்ப நிலைகள் நிலவுகின்றன. இங்கு, கனிகளும் காய்கறிகளும் அபரிமிதமாக விளைகின்றன. இங்குள்ள பெருமளவிலான வேளாண் ஆதார வள வாயில் ‘ஏசியன்’ நாடுகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்ற அதிக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருள் பதப்படுத்தும் தொழிலில் நாங்கள் முதலீடுகளை வரவேற்கிறோம். நாங்கள் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தியதன் காரணமாக பல புதிய அங்காடிகள் திறந்து விடப்பட்டிருப்பதால், இங்கு வளர்ச்சிக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இப்புதிய வாய்ப்புகளை உங்கள் முதலீட்டுத் திட்டங்களுடன் இணைத்துப் பயன் பெறுவது தொழில் அதிபர்களான உங்கள் கையில் தான் உள்ளது.

தயாரிப்புத் துறையில் விரைவான வளர்ச்சியை எட்டுவதற்காக, என்னுடைய அரசு இரண்டாம் நிலை சீர்திருத்தத்திற்கான தொகுப்புத் திட்டங்களைச்

செயற்படுத்த உறுதி பூண்டுள்ளது. விரைவான அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாடு, தரமான எரிசக்தி வழங்குவதை உறுதிசெய்தல், கால அளவு மற்றும் செலவைக் குறைக்க கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல், தொழிலாளர் நலச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் ஏற்கெனவே உள்ள தொழிலாளர்களுக்கு மறுபயிற்சி அளித்து அவர்களின் இயக்காற்றலை மேம்படுத்துதல், மாநில அளவிலான வரிச் சீர்திருத்த நடைமுறைகளை எளிமையாக்குதல் ஆகியவை இவற்றில் அடங்கும். 2003 ஆம் ஆண்டு புதியதொழில் கொள்கையை நான் அறிவித்ததன் நோக்கம், உலக அளவிலான ஒரு தயாரிப்பு மையம் என்ற முறையில் தமிழ்நாட்டின் போட்டித் திறனை வலுப்படுத்தவேண்டும் என்பதேஆகும். இந்த இலக்கை எய்துவதற்கான தெளிவான நடைமுறைத் திட்டங்கள், இந்தக் கொள்கை அறிவிப்பில் இடம்பெற்றுள்ளன. தயாரிப்புத் துறையில் புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னிலை வகிக்கும் மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்று என்ற ஒரு செய்தியை இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் (CMIE) 2004, ஜூலை வெளியீடு வெளியிட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு ஜூலை இறுதி நிலவரப்படி, தமிழ்நாட்டில் செய்யப்பட்டுள்ள மொத்த முதலீடுகள் ரூ.1,38,151/– கோடியாக இருந்தது. இந்நாட்டில் செய்யப்பட்டுள்ள மொத்த முதலீடுகளில் 8.4 சதவிகிதம் ஆகும். வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னிலை வகிக்கும் மூன்று இந்திய மாநிலங்களிடையே தமிழ்நாடும் ஒன்றாகத் திகழ்கிறது. உலக வங்கி ஃபோர்டு, ஹூண்டாய், செயின்ட்கோபன், ஸ்டேன்சார்ட், ஏபிஎன் அம்ரோ வங்கி, சான்சா முதலியவை நடத்திய மதிப்பீட்டாய்வுகளின் முடிவுகளின்படி, தமிழ்நாடு, தொழில் தொடங்க விரும்பித் தேர்ந்தெடுக்கும் இடமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தயாரிப்புத் துறையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே ஒரு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. சென்னை மாநகரம், தெற்காசியாவின் டெட்ராய்ட்–ஆக உருவெடுத்து வருகிறது. பயணிகள் சீருந்து தயாரிக்கும் ஃபோர்டு நிறுவனம் அதன் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு தமிழ்நாட்டைத் தெரிவு செய்துள்ளது. தென்கொரிய சீருந்து தயாரிப்பு நிறுவனமான "ஹூண்டாய்" நிறுவனம், ஐரோப்பா மற்றும் வடஅமெரிக்கா அங்காடிகளுக்குச் சீருந்துகளை ஏற்றுமதி செய்வதற்காக சென்னையில் தயாரிப்புத் தொழிற்சாலையை நிறுவியுள்ளது. தற்போது, தமிழ்நாடு, 251 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டில் 2,621 வெளிநாட்டு நிறுவனங்கள் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டு வரும் ஒரு மாநிலமாக விளங்கி வருகிறது.

தமிழ்நாட்டின் சிறப்புகள் குறித்த சில விவரங்கள் உங்களுக்குச் சுருக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியாவிலேயே தொழில் தொடங்குவதற்கு, முதலீடு மற்றும் வர்த்தகத்திற்கு ஏற்ற மிகச் சிறந்த இடம் தமிழ்நாடு தான் என்பதனை இந்த விவரங்கள் உங்களுக்குத் தெளிவுபட உணர்த்தும். சிறப்பான சட்டம் ஒழுங்கு பராமரிப்பு – என்ற வகையில் தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடம் வகிக்கிறது.

- விழுமிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்
- இந்தியாவிலேயே மிக அதிகமான திறமைமிகு மனிதவள ஆற்றல்.
- தயாரிப்புத்துறை, தகவல் தொழில் நுட்பம், உயிரி தொழில் நுட்பம், வர்த்தகம் மற்றும் வணிகத் துறைகளில் இயல்பாய் விளங்கும் வலிமை.
- நீண்ட கால வளர்ச்சியை நோக்கமாக் கொண்ட தெளிவான பொருளாதார தொலைநோக்கு
- மூன்று மிகப் பெரிய துறைமுகங்களைக் கொண்ட கடற்கரை.
- மனித வள மேம்பாட்டில் கடிதான வளர்ச்சி – தமிழ்நாடு தற்போது இந்திய மாநிலங்களிடையே மனிதவள மேம்பாட்டில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டை இந்தியாவின் உண்மையான மற்றும் நடைமுறையில் மெய்யான கிழக்கு நுழைவாயில் என்று அழைக்கத்தக்க சிறந்த தகவல் தொடர்பு வசதி.

எனக்கு எப்போதுமே சாதனை படைப்பதில் தனியாத தாகம் உண்டு. ஒவ்வொரு துறையிலும், தமிழ்நாடு சிறப்பான சாதனை படைத்து தனது முத்திரையைப் பதித்து வருகிறது. தமிழ்நாடு தன்னுடைய பயணம் நெடுகிலும் வெற்றியைக் குவித்து வருகிறது என்பதை நீங்களே ஏற்றுக் கொள்வீர்கள்.

உலகின் மிகச் சிறந்த தொலைத்தொடர்பு இணைப்பு வசதிக்கு நிகரான தொலைத்தொடர்பு இணைப்பு வசதியைத் தமிழ்நாடு பெற்று விளங்குகிறது.

சென்னையை சிங்கப்பூருடன் இணைக்கின்ற வகையில், கடலுக்கடியில் அமைக்கப்பட்டுள்ள கண்ணாடியிழை கம்பிவட இணைப்பானது, உலகின் மிகப் பெரிய கற்றை அகலம் (Bandwidth) கொண்டதாகும். இது இந்தியாவிலேயே மிகச்சிறந்த இணைப்பு வசதியைக் கொண்ட மாநிலம் என்ற பெயரை தமிழ்நாட்டுக்குப் பெற்றுத் தந்துள்ளது. இது தவிர, இரண்டாவது கண்ணாடியிழைக் கம்பிவடக் கட்டமைப்பை கடலுக்கடியில் அமைக்கும் பணியை வி.எஸ்.என்.எல். நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் தகவல் தொடர்பு மிகவும் எளிதாகி உள்ளது. கற்றை அகலம் (Bandwidth) இனி ஒரு தடையே அல்ல. தகவல் தொழில் நுட்ப திட்டங்கள் 24 x 7 என்கிற அளவுக்கு நம்பகமான இணைப்பு வசதியைப் பெறலாம்.

தகவல்தொழில் நுட்ப வளர்ச்சியானது தமிழ்நாட்டை, தெற்காசியாவிற்கு மட்டுமின்றி, உலகிற்கே

இந்தியாவின் கிழக்கு நுழைவு வாயிலாக மாற்றுகின்ற அளவுக்கு, அதன் பொருளாதார வளர்ச்சிக்கு வழியமைத்துக் கொடுத்துள்ளது. தமிழ்நாடு மென்பொருள் ஏற்றுமதியில் இந்தியாவில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. நமது மாநிலம் ஆண்டொன்றுக்கு சுமார் 1.7 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள மென்பொருளை ஏற்றுமதி செய்து வருகிறது. மேலும், தகவல் தொழில் நுட்பத்தில் உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பத் திறமையும் தகுதிகளும் கொண்ட கட்டுப்பாடுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் பணியாற்றக் கூடிய மிகச் சிறந்த மனித ஆற்றலையும் தமிழ்நாடு பெற்று விளங்குகிறது. வங்கிப் பணி, நிதியுதவிப் பணிகள் மற்றும் ஈட்டுறுதி, சுகாதார ஏற்பாட்டு முறை மேலாண்மை, கணினி சார்ந்த வரைகலை, கணினி சார்ந்த பொறியியல் போன்ற தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவையின் சில குறிப்பிட்ட பிரிவுகளில், தமிழ்நாடு உலகிலேயே வலுவான இடத்தைப் பிடித்துள்ளது. மின் ஆயத்த நிலை மற்றும் மின் ஆளுகை ஆகியவற்றில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாகத் திகழ்கிறது. வன்பொருள் துறையில் ஏசியன் நாடுகள் முத்திரை பதித்து வருகின்றன. மென்பொருள் துறையில் எங்கள் மாநிலத்தின் பலமும், வன்பொருள் துறையில் நீங்கள் அடைந்துள்ள முன்னேற்றமும், பரஸ்பர ஒத்துழைப்பை வளர்த்து வெற்றியடைவதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்துள்ளன.

அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகம் அளித்த வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்ப அலகுகளின்படி, ரூ.12.5 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.62.5 கோடி) செலவில் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள 'டைசல் உயிரிப் பூங்கா' தற்போது ஆயத்த நிலையில் உள்ளது. இந்தப் பூங்கா, உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சியை, வணிக ரீதியிலான உத்திகளாக மாற்றுவதற்கு களம் அமைத்துத் தருகிறது. ஏசியன் பிராந்தியங்களின் உயிரிதொழில்நுட்பம் மற்றும் மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் நம்முடைய 'டைசல்' உயிரிப் பூங்காவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்தத் தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், மதுரைக்கு அருகில் நிலக்கோட்டையில் உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு இணையான தொழில் பூங்கா ஒன்றையும், சென்னைக்கு அருகில் கடல் சார்ந்த உயிரி தொழில்நுட்பப் பூங்கா ஒன்றையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உயிரி தொழில் நுட்பப் பூங்காக்கள், தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனான வணிகம் மற்றும் முதலீடு சார்ந்த நம்முடைய பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றன.

தமிழ்நாடு 3 பெரிய துறைமுகங்களையும், 15 சிறிய துறைமுகங்களையும் கொண்ட 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள நீண்டநெடிய கடற்கரையைக் கொண்டுள்ளது. எங்களுடைய துறைமுக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஏசியன் நாடுகள் பெரிய அளவில் ஒத்துழைப்பை நல்கும் என எதிர்பார்க்கிறேன். நம்முடைய மீன் பிடி தொழிலை மேம்படுத்துவதற்காக, ஏசியன் நாடுகளின் நிபுணத்துவத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். துறைமுகங்கள் மட்டுமின்றி ஏசியன் நாடுகளுடன் மிகச் சிறந்த வான் இணைப்பையும் சென்னை பெற்றுள்ளது. என்னுடைய அரசு பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் பங்கேற்புடன் எண்ணூர், சென்னை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஏற்படுத்தக் கருதியுள்ளது. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தொழில் முனைவோர் தங்களுடைய தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதற்கான அனைத்து வசதிகளையும் கொண்டிருக்கும்.

இந்த மாநாட்டில் விவாதிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மற்றொரு முக்கியமான பொருள் மருத்துவ சேவை ஆகும். சென்னை மாநகரம், "இந்தியாவின் மருத்துவ சேவை தலை நகரம்" என்று அழைக்கப்படுகிறது. இங்கு பல உலகத்தரம் வாய்ந்த நவீன மருத்துவமனைகளும், உயர்சிறப்பு மருத்துவ மனைகளும் அமைந்துள்ளன. மிகப் பெரிய அறுவை சிகிச்சைகள் மற்றும் மாற்று உறுப்புகள் பொருத்துதல் ஆகியவற்றுக்கு ஐரோப்பிய நாடுகளில் ஆகக் கூடிய செலவில் ஒரு பின்ன அளவுக்குத்தான் இங்கு செலவு ஆகிறது. ஆனால், அதே நேரத்தில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சை மற்றும் சேவையில் எந்த சமரசத்திற்கும் இடமளிக்கப்படுவதில்லை. இந்த பிராந்தியத்தில் மருத்துவ சேவைக்கு மக்கள் விரும்பி நாடிவரும் இடமாக சென்னை மாநகரம் உருவெடுத்துள்ளது.

நல்ல வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள மற்றொரு முக்கியமான துறை சுற்றுலாத்துறை. தமிழ்நாடு இத்துறையில் உங்களின் முதலீட்டை வரவேற்கிறது. 10 ஆண்டுகளுக்கு முன், ஒரு சில இந்தியர்களே சுற்றுலா சென்றனர். இன்று பாங்காக் அல்லது கோலாலம்பூருக்கு செல்லும் விமானங்களில் இந்தியப் பயணிகள் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறது. இவ்வாறு சுற்றுலாப் பயணிகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வதால், நமது நாட்டின் பொருளாதாரம் நன்கு வளர்ச்சி அடைகிறது. நாம் ஒருங்கிணைந்து செயல்பட்டு இந்தியா–ஏசியன் சுற்றுலாவை மேம்படுத்த வேண்டும். இத்துறையில் வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன.

இந்தியா–ஏசியன் நாடுகளுக்கிடையிலான உறவையும், வணிகத் தொடர்பையும் ஊக்குவிப்பதுதான் இந்தியா – ஏசியன் வர்த்தக மாநாட்டின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டின் 2003ஆம் ஆண்டுக்கான புதிய தொழில் கொள்கையில், தமிழ்நாட்டிலுள்ள தயாரிப்புப் பிரிவுகளில் பயன்படுத்துவதற்காக, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற பொருட்களுக்கு நுழைவு வரி விதிக்கப்படமாட்டாது என்று என்னுடைய அரசு அறிவித்தது. இதனையும் இந்த வர்த்தக மாநாட்டில் வலியுறுத்தப்பட்ட பரஸ்பர சார்பு நிலை கொள்கையின் அடிப்படையிலான கூட்டுறவு

உணர்வையும் கருத்திற் கொண்டு நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டு தமிழ்நாட்டில் தயாரிப்புப் பணியில் பயன்படுத்தப்படுகிற அனைத்துப் பொருள்களுக்கும், உறுதிமொழிக்கு உட்பட்டு, நுழைவு வரியிலிருந்து இனி விலக்களிக்கப்படும் என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதில் முழுமையான பொருள் பட்டியல் அடங்கும். இதனால் பொருட்களின் தடையற்ற வணிகத்திற்கான வசதிகள் பெருகும். இதே போன்று, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற வணிகர் ஒருவரால் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிற, 100 சதவிகிதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற்பிரிவுகள், சென்னை ஏற்றுமதி வர்த்தக மண்டலங்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஆகியவற்றில் அமைந்துள்ள தொழில் பிரிவுகளின் தயாரிப்புப் பணியில் பயன்படுத்தப்படுகிற அட்டவணையிடப்பட்ட பொருட்களுக்கும் நுழைவு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த மூன்றாவது இந்தியா – 'ஏசியன்' மாநாடு, இந்நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் வாயிலாக புதிய ஆற்றல் பெற்று, தற்போதுள்ள உறவுகளை மேலும் விரிவாக்குவதற்கும், புதிய கூட்டாண்மையை ஏற்படுத்துவதற்கும், உடலுழைப்பின் புதிய துறைகளை இனங் கண்டறிவதற்கும் இந்திய மற்றும் ஏசியன் நாட்டு வர்த்தகத் தலைவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பினை நல்கியுள்ளது என்று நான் உறுதியாக நம்புகிறேன். பரந்துபட்ட இயற்கை வள வாயில்கள், நல்ல விற்பனை வாய்ப்புகள். பலவகையான தொழில்நுட்ப உத்திகள் இந்திய மற்றும் 'ஏசியன்' நாட்டு மக்களின் திறமைகள் ஆகியவற்றை ஒருங்கு திரட்டி நாம் பரஸ்பரம் அதிகப் பயன்பெற முடியும்.

தமிழக மக்களாகிய நாங்கள் பரந்துபட்ட அளவில் அனைத்து ஏசியன் நாடுகளுடனும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்பை ஆவலுடன் எதிர்நோக்குகிறோம். இந்தப் பிராந்தியத்தின் ஒட்டு மொத்த மேம்பாட்டுக்கான முயற்சியில் நாங்களும் தோள்கொடுக்க விழைகிறோம்.

இந்த முக்கியமான மாநாட்டை, சென்னையில் ஏற்பாடு செய்தமைக்காக இந்திய தொழில் மற்றும் வர்த்தகக் கூட்டமைப்புக்கும் இந்திய தொழில் கூட்டமைப்புக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலீல் கிப்ரனின் வரிகளை இது தொடர்பாக நான் இங்கு சுட்டிக் காட்ட விழைகிறேன். 'முன்னேற்றம் என்பது உள்ளதைப் பெருக்குவதில் மட்டும் இல்லை; முன்னேற்றம் எவ்வாறு இருக்கவேண்டுமோ அதை நோக்கி முன்னேறுவதாகும்'. இந்த இந்தியா – ஏசியன் வர்த்தக அமைப்பு மூலம் நமது நாடுகளுக்கு, நமது பிராந்தியத்திற்கு மற்றும் உலகிற்கு பரஸ்பர நன்மைகளைப் பெறுவதற்கான ஒரு வலுவான அடித்தளத்தை நாம் உருவாக்க முடியும் என்று நான் உளமார நம்புகிறேன்.

நன்றி.

சென்னையில் 20.10.2004 அன்று நடைபெற்ற 3ஆவது இந்தியா–'ஏசியன்' வர்த்தக மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** *அவர்கள் நிகழ்த்திய ஆங்கில உரையின் தமிழாக்கம்*

புதிய பொற்காலத் தமிழகத்தை நான் உருவாக்கியே தீருவேன்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், தென்னிந்திய நடிகர்கள் சங்கம், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனம், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம், தமிழ்நாடு திரைப்பட விநியோகஸ்தர்கள் கூட்டமைப்பு, தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம், வெளிப்புறப் படப்பிடிப்பு உரிமையாளர்கள் சங்கம், திரைப்பட லேப் உரிமையாளர்கள் சங்கம் ஆகிய இத்தனை அமைப்புகளும் ஒன்று சேர்ந்து இந்த பிரம்மாண்டமான விழாவிற்கு ஏற்பாடு செய்து இங்கே கலந்து கொள்ள வருகையும் தந்திருக்கிறீர்கள். இந்த அத்தனை அமைப்புகளையும் சார்ந்த திரையுலகத்தைச் சார்ந்த சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் முதற்கண் எனது கனிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சரியாக மாலை 6 மணிக்கு நான் இந்தஅரங்கத்திற்கு வந்தேன். இப்போது நான் பேசத் தொடங்கும்போது இரவு 11.35 மணி ஆகிறது. 5½ மணி நேரத்திற்கு மேல் என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் நீங்கள் ஆழ்த்தி இருக்கிறீர்கள். உண்மை சொல்ல வேண்டும் என்றால், என்ன பேசுவது என்றே எனக்குத் தெரியவில்லை.

மனதில் துக்கம் மீறும் போது பேச வராது. அதைப் போலவே உள்ளத்தில் மகிழ்ச்சி மிகுதியாகும் போதும் பேச வராது. இன்று மகிழ்ச்சி வெள்ளத்தில் என்னை திக்குமுக்காட வைத்து விட்டீர்கள். அதனால் சந்தோஷ மிகுதியால் என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

தமிழ்த்திரை உலகமே இங்கு என் கண் முன் அமர்ந்திருக்கின்ற காட்சியைக் காணும் போது உற்றாரை, உடன்பிறந்தாரைக் காணுகின்ற உவகையே எனக்கு ஏற்படுகின்றது. காரணம் திரையுலகம் எனது தாய் வீடு! நான் தாய் வீட்டுக்கு வரும் போது என்னை வரவேற்பதற்காக ஒட்டு மொத்தத் திரை உலகமே வந்து கூடி இருப்பதைப் பார்க்கும் போது மகிழ்ச்சி அடைகிறேன். மன நெகிழ்ச்சி அடைகிறேன். படப்பிடிப்புப் பணிகளை எல்லாம் நிறுத்தி விட்டு என்னைப் பாராட்ட வந்த பாச மலர்களே! இந்தப் பரிவையும் அன்பையும் நான் என்றும் மறக்கமாட்டேன்.

உங்களைப் பார்க்கும் போது நீங்களும் மகிழ்வோடு இருப்பது தெரிகிறது. இந்தப் பாராட்டு விழாவில் கலந்து கொள்வதில் ஏற்படும் மகிழ்ச்சி –– இன்று தமிழ்த் திரை உலகம் மீண்டும் தலை நிமிர்ந்து இருப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி –– இந்த இரட்டை மகிழ்ச்சியில் நீங்கள் இருப்பதைப் பார்க்கும் போது இன்னும் மகிழ்ச்சியும், மன நிறைவும் எனக்கு ஏற்படுகின்றன.

இத்தகைய பாராட்டு, வாழ்க்கையில் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்கும். எத்தனையோ பேர் நல்ல காரியங்கள் செய்து இருந்தாலும் அவர்கள் வாழ்நாளில் பாராட்டைப் பெற்றதில்லை. அவர்கள் மறைந்த பின்னர் தான், அவர்களுடைய அருமையை மற்றவர்கள் உணர்ந்து காலம் கடந்து போற்றி இருக்கிறார்கள். அத்தகைய பல உதாரணங்கள் வரலாற்றில் உண்டு. ஆனால், நான் செய்த செயலுக்காக உடனே நன்றி தெரிவித்து இவ்வளவு பிரம்மாண்டமான பாராட்டு விழாவையும் எடுத்து இருக்கிறீர்கள். இந்த அன்பை நான் என்றும் மறக்க மாட்டேன்.

திரையுலகம் என்று நான் சொன்னேன். உண்மையில் இது ஒரு தனி உலகம்தான். திரைத்துறை என்று அழைக்கப்பட்டாலும் கூட இது ஒற்றைத் துறையல்ல; பல்வேறு துறைகளும் இடம் பெற்றிருக்கும் ஓர் உலகம். இது கலை உலகம்! அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் அற்புத சக்திகளைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டிருக்கின்ற ஒப்பற்ற கலை உலகம்! இது கலையும், அறிவியலும் கலந்த கவின்மிகு உலகம்!

Anatole France என்ற மேலை நாட்டு அறிஞர் சொல்லியிருக்கிறார். "Existence would be Intolerable if *we were never to dream*", அதாவது. "*கனவு காண முடியவில்லை என்றால் இந்த வாழ்க்கையே நம்மால் சகித்துக் கொள்ள முடியாதது ஆகிவிடும்*" என்பது பொருள். யோசித்துப் பாருங்கள். ஒவ்வொரு மனிதரின் வாழ்க்கையிலும் எத்தனையோ பிரச்சினைகள்–– எத்தனையோ கஷ்டங்கள், ஏழை ஆனாலும் சரி, பணக்காரர் ஆனாலும் சரி அவரவர் சூழ்நிலைக்கு ஏற்ப எல்லோருக்கும் வாழ்க்கையில் ஏதோ பிரச்சினைகள் இருக்கும். கவலைகள் இருக்கும். அவ்வப்போது அந்தக் கவலைகளை மறந்து சில மணி நேரமாவது மனதிற்கும் ஒரு Relief கிடைத்தால்தான், மீண்டும் பிரச்சினைகளைச் சந்தித்து வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்த முடியும். அதனால்தான் எல்லோரும் திரைப்படங்களைப் பார்க்க விரும்புகிறார்கள். யாருக்கு என்ன கவலை இருந்தாலும் ஒரு சினிமா படத்தைப் பார்க்கின்ற அந்த மூன்று மணி நேரமாவது கவலையை மறந்து ஒரு கனவுலகில் சஞ்சரிக்க முடிகிறது அல்லவா?

உள்ளதைச் சொன்னால் அது உண்மை! அதையே உள்ளம் விரும்புகின்ற வண்ணம் சொன்னால் அது கலை! இது கலை உலகம்! இது கனவுலகம்! என்றாலும் இது முற்றிலும் கற்பனை உலகமல்ல! வாழ்க்கையின் பிரதிபலிப்பே திரைப்படம். ஆதலால் இது எதார்த்த உலகம்! அழகுணர்ச்சி ஆட்சி செலுத்துவதால் இது கனவுலகம்.

ஆகவேதான் இது சாமானிய மக்களையும் வசீகரிக்கும் சந்தோஷ உலகமாக விளங்குகிறது. மனிதனின் கண்டுபிடிப்புகளில் இது மகத்தான கண்டுபிடிப்பு. பொழுது போக்காகவும், அதேசமயம் வாழ்க்கையின் திறனாய்வாகவும் திரை உலகம் விளங்குவதால் சிறியவரை ஈர்ப்பதைப் போலவே பெரியவரையும் ஈர்க்கின்றது. அது மட்டும் அல்லாமல் இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் அட்சய பாத்திரமாகவும் திரைப்பட உலகம் திகழ்கிறது!

உலகிலேயே அதிகமான திரைப்படங்களை உருவாக்கித் தரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பதும், இந்தியாவிலேயே அதிகத் திரைப்படங்களை உருவாக்கித் தரும் நகரம் சென்னை மாநகரம் என்பதும் நாம் பெருமைப்படத்தக்க செய்திகளாகும்.

இத்தகைய பெருமைக்கு உரிய தமிழ்த் திரைப்படத் துறை பல்வேறு காரணங்களால் நலிவுற்றுக் கிடந்த போது, 'சரிவிலிருந்து மீண்டு வருமா தமிழ்த்திரை உலகம்?' என்ற சந்தேகத்தில் எல்லோரும் தவித்துக் கிடந்த போது நீங்கள் என்னைச் சந்தித்தீர்கள். உங்கள் கோரிக்கைகளை என் முன் வைத்தீர்கள். திரையுலகம் நசிவடையும் போது அதைக் காப்பாற்ற வேண்டியது எனது கடமை என எண்ணி, அதை எனது சொந்தப் பிரச்சினையாகவே கருதி உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் உதவிகளை வழங்கி இருக்கிறேன்.

பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினி கிடக்க வேண்டிய பரிதாபத்தில் இருந்த வேளையில் அழிவின் விளிம்பிலே இருந்த திரைப்படத் தொழிலை மீட்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த நான் உங்கள் கோரிக்கைகளை உடனே நிறைவேற்ற உத்தரவிட்டேன்.

அடுத்தவருடைய அறிவை, ஆற்றலை, உழைப்பை, அதன் பயனைத் திருட்டுத்தனமாக அபகரித்து வந்த திருட்டு VCDயை ஒழிக்க பல நடவடிக்கைகள் எடுக்க ஆணையிட்டேன். அதன் காரணமாக திருட்டு VCD ஒழிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாகத் திரையரங்குகளை மக்கள் நாடி வரத் தொடங்கி இருக்கிறார்கள். இந்த மாற்றத்தை உடனடியாக ஏற்படுத்தியதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சிலபேர் திரைப்படத்தால் என்ன பயன் என்று கேட்கிறார்கள். மக்களுக்கு மகிழ்ச்சி அளிப்பவற்றை விடச் சிறந்த பயன் உலகத்தில் உண்டா? மக்களுக்கு

மகிழ்ச்சி அளிப்பவர்கள் நீங்கள். மகிழ்ச்சி அளிக்கும் நீங்களே மனக் கவலையில் ஆழ்ந்து விட்டால் மக்களுக்கு நீங்கள் எப்படி மகிழ்ச்சி அளிக்க முடியும்? தமிழ்த் திரைப்பட உலகம் மகிழ்ச்சியாக இருந்தால் தானே தமிழ் மக்கள் மகிழ்ச்சியோடு விளங்க முடியும்? உங்கள் துயரைப் போக்குவது என்பது சமுதாயத்துக்கு மகிழ்ச்சி அளிக்கும் செயல்அல்லவா?

திரைப்படத்தைக் குறை கூறுபவர்கள் யார்? அதன் ஆளுமையைக் கண்டு அச்சப்படுபவர்கள்! அது தானே உண்மை? அவர்கள் திராவிட இயக்க வரலாற்றையே அறியாதவர்கள் என்பதே அதை விட பெரிய உண்மை!

திரைப்படத்தைச் சமூகப் போராட்டத்துக்கான ஆயுதமாகப் பயன்படுத்தியவர் பேறறிஞர் அண்ணா!

திரைப்படத்தைச் சமூக விழிப்புணர்ச்சிக்காகப் பயன்படுத்தியவர் இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.!

இவர்களைப் பற்றியும் இவர்களது ஆயுட்காலப் பணியைப் பற்றியும் அரை குறையாகத் தெரிந்து கொண்டவர்களும், தெரிந்து கொண்டு இருந்தாலும், அதை எப்படியாவது மூடி மறைக்க நினைப்பவர்களும் தான் இன்றைக்குத் திரைஉலகைத் தங்கள் எதிரியாக நினைக்கிறார்கள்.

நீங்கள் எந்த எந்தக் கோரிக்கைகளை முன் வைத்தீர்களோ, அவற்றை எல்லாம் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் ஏற்றுக் கொண்டதோடு நிற்காமல் உங்கள் எதிர்பார்ப்புக்கும் மேல் சலுகைகளை வழங்கியுள்ளேன் என்று பலரும் குறிப்பிட்டீர்களே– அதைச் செய்யும் வாய்ப்பு கிடைத்ததை எண்ணி நான் அக மகிழ்கிறேன்.

திரைப்படத் தொழிலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தகுதியுள்ள திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கடந்த செப்டம்பர் 23 ஆம் தேதி அன்று நீங்கள் என்னை நேரில் சந்தித்த போதுகேட்டுக்கொண்டீர்கள். இந்தக் கோரிக்கையை நான் உடனடியாக ஏற்றுக் கொண்டதுடன் 2003–ஆம் ஆண்டு முதல், குறைந்த செலவில் த்யாரிக்கப்படும் தகுதியுள்ள திரைப்படங்களுக்கு மானியத்தொகையை, திரைப்படம் ஒன்றிற்கு 7 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் ஆணையிட்டேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் கடந்த ஆண்டுகளில் திரைப்படத் தொழில் சந்தித்து வந்த இக்கட்டான நிலையைக் கருத்தில்கொண்டு, 2000 முதல் 2002 வரையிலான 3 ஆண்டுகளுக்கும் இந்த மானிய உதவியை வழங்கிட வேண்டும் என்று நீங்கள் பின்னர் விடுத்த கோரிக்கையை மிகவும் கவனத்தோடும் கனிவோடும் பரிசீலித்து கடும் நிதி நெருக்கடி காரணமாக, 2000, 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்த, குறைந்த செலவில் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட தகுதியுள்ள தமிழ்த் திரைப்படங்களுக்கான மானியம் வழங்கிட நான் முடிவு செய்துள்ளேன். அதன்படி 2000, 2001 மற்றும்

2002 ஆகிய ஆண்டுகளில் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தகுதியுள்ள தமிழ்த் திரைப்படங்களுக்கு படம் ஒன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும் என்பதை இந்தநேரத்தில் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைத்துறை என்பது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் திரிவேணி சங்கமம் ஆகும். இங்கே இயல் வல்லவர்கள் இருக்கிறீர்கள்! இசை வல்லவர்கள் இங்கே இருக்கிறீர்கள்! நாட்டியத்தில் வல்லவர்களும், நடிப்பில் வல்லவர்களும் இருக்கிறீர்கள்! அதாவது பேசும் கிளிகளும், பாடும் குயில்களும், ஆடும் மயில்களும் இந்த அவையில் நிரம்பி இருக்கிறீர்கள். எனக்கு நீங்கள் ஆடும் மயிலாகத் தெரிகிறீர்கள்! பாடும் குயிலாகத் தெரிகிறீர்கள்! பேசும் கிளியாகத் தெரிகிறீர்கள்! ஆனால் ஒருவருக்கோ நீங்கள் காக்காய்க் கூட்டமாகக் கண்ணுக்குத் தெரிகிறீர்கள்! அப்படியானால் அவர் பார்வையில் தான் ஏதோ கோளாறு என்று சொல்ல வேண்டும்.

நீங்கள் கலைத்தாயின் செல்லக் குழந்தைகள் ! நீங்கள் காக்காய்க் கூட்டமா ? அப்படி ஒருவர் சொல்லி இருக்கிறார் என்றால் – அது காட்சியின் பிழையா ? இல்லை கண்ணின் பிழையா ? அதையும் நீங்கள் தான் சொல்ல வேண்டும் !

அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க நான் எடுத்து வரும் முயற்சிகளை எல்லாம் நீங்கள் அறிவீர்கள்.

திட்டமிட்டு சிலர் ஏற்படுத்தும் தடைகளைத் தகர்த்து எறிந்து தங்கத் தமிழகத்தை புதிய பொற்காலத் தமிழகத்தை நான் உருவாக்கியே தீருவேன். அந்த சாதனைகளுக்கு எல்லாம் தோளோடு தோள் நின்று நீங்கள் ஊக்கம் அளிப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இன்று இந்த மறக்க முடியாத விழாவில் எனக்கு வழங்கப்பட்ட வாழ்த்துகளுக்கும், பாராட்டுகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அருமை கலை நிகழ்ச்சிகளை வழங்கியவர்களுக்கும், அவற்றை உருவாக்கியவர்களுக்கும், திரை உலக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக இந்த விழாவை இத்தனைச் சிறப்பாக ஏற்பாடு செய்தவர்கள் அனைவருக்கும் எனது அன்பையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தானத்தில் சிறந்த தானம் அன்னதானம் என்பார்கள். இன்றைய தினம் நீங்கள் அனைவரும் சேர்ந்து திருக்கோயில் அன்னதான திட்டத்திற்கு 1 கோடியே 8 ஆயிரம் ரூபாய் நிதியாக வழங்கி இருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் இன்று அன்னபூரணிகளாக மாறிவிட்டீர்கள். உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இனிய விழாவில் தமிழ்த் திரைப்பட உலகத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமின்றி, கர்நாடகா, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்தும் கூட அந்த Film Chambers of Commerce–லிருந்தும், திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கங்களிலிருந்தும் பிரதிநிதிகள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் இவ்வளவு தூரம் வந்து இந்த விழாவில் கலந்து கொண்டமைக்காக அவர்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலை நிகழ்ச்சிகள் நடத்தியவர்கள் அனைவருமே மிகவும் சிறப்பாக இந்த நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். இதில் என் மனதைத் தொட்ட ஒரு விஷயம் என்னவென்றால், இப்போது ரமலான் மாதம். இஸ்லாமியர்கள், ரம்ஜான் நோன்பு கடைபிடிக்கிறார்கள். இந்த நேரத்தில் அந்த இஸ்லாமிய இனத்தைச் சார்ந்த அன்புச் சகோதரர் ஏ.ஆர். ரஹ்மான் அவர்கள் நோன்பு கடைபிடிக்கும் நேரத்தில் எந்த மேடை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதில்லை என்ற மரபையும் இன்றைக்கு ஒதுக்கிவிட்டு, எனக்காக, இன்று நோன்பு கடைபிடிக்கும் நேரத்தில்கூட இவ்வளவு தூரம் மும்பையிலிருந்து சென்னைக்கு வந்து இங்கே அற்புதமான கலைநிகழ்ச்சி நடத்தினார். அவருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேரத்தின் அருமையைக் கருதி நான் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி, குறிப்பிட முடியவில்லை என்றாலும், அனைவருக்கும் எனது அன்பையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டதாக எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, இன்றைய தினம் பேசியவர்கள் எல்லோருமே சொன்ன பாராட்டு மொழிகள், வெறும் மேடை சம்பிரதாயத்திற்காக அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வந்த வார்த்தைகள் அவை என்பதை நான் நன்கு உணருகிறேன்.

அந்த வகையில், இங்கே வந்து என்னை பெருமைப்படுத்திய அன்புச் சகோதரர் ரஜினிகாந்த் அவர்களுக்கும், அன்புச் சகோதரர் கமலஹாசன் அவர்களுக்கும், என் அன்பு அக்கா மனோரமா அவர்களுக்கும், என் தாய் ஸ்தானத்தில் இருக்கும் பழம்பெரும் நடிகை அஞ்சலிதேவி அவர்களுக்கும், என் மூத்த சகோதரி சரோஜாதேவி அவர்களுக்கும், என் அன்புச் சகோதரி சச்சு அவர்களுக்கும், இன்னும், இளைய தலைமுறையைச் சேர்ந்த விஜய், தனுஷ் போன்றவர்களுக்கும், அற்புதமான உரை நிகழ்த்திய திரு. சத்யராஜ் அவர்களுக்கும், திரு. பார்த்திபன் அவர்களுக்கும், மிகவும் சிந்திக்க வைத்த ஓர் உரையை

வழங்கிய அன்புச்சகோதரர் பாரதிராஜா அவர்களுக்கும், இன்னும் சொல்லப் போனால் இங்கு பேசிய அனைவருக்குமே, இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவருக்குமே, நான் எப்படி நன்றி சொல்வது என்றே எனக்கு புரியவில்லை.

இன்றைய விழாவில் பல கோரிக்கைகள் வைக்கப்பட்டன. பெப்ஸி தொழிலாளர்கள் சார்பாக முன்னாள் பெப்ஸி தலைவர் இயக்குநர் சிகரம் பாலச்சந்தர் அவர்களும் அதே கோரிக்கையை முன் வைத்தார். அதேபோல பெப்ஸி தலைவர் திரு. விஜயன் அவர்களும் அந்த கோரிக்கையை முன் வைத்தார். இப்போது பேசிய சகோதரர் விஜயகாந்த் அவர்களும் அதே கோரிக்கையை முன் வைத்தார். அதைப் போலவே இயக்குநர்கள் சங்கத்திற்கு சொந்தமாக ஒரு இடம் வேண்டும் என்று கேட்டார்கள். இன்னும் பல கோரிக்கைகள் இங்கே வைக்கப்பட்டன.

உங்களுக்கெல்லாம் என்னைப் பற்றி ஒரு விஷயம் நன்றாக புரிந்திருக்கும் என்று நம்புகிறேன். நான் எப்போதுமே என்ன செய்ய முடியுமோ அதைத் தான் சொல்வேன். எதையாவது சொன்னால், வார்த்தைக் கொடுத்து விட்டால், உயிரே போனாலும், கொடுத்த வார்த்தையைக் காப்பாற்றாமல் விட்டுவிட மாட்டேன். ஆகவேதான் – இங்கே ஒருவர் பேசினார். எப்போதும் இறுக்கமாக இருக்கிறார் என்று – அது இறுக்கம் அல்ல. ஒரு reserved தன்மை. நான் இயற்கையாகவே அப்படித்தான். ஏனென்றால், உணர்ச்சிப் பெருக்கில் வார்த்தைகளை அள்ளிக் கொட்டிவிட்டால், வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டால் நாளை அவற்றை எல்லாம் நான் செயல்படுத்தி ஆகவேண்டுமே. அதனால் தான் யோசித்து, அளந்து வாக்குறுதிகளை அளிக்கிறேன். இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்கிறேன். நான் ஒன்றைச் சொன்னால் என்னை நம்பலாம் என்று உங்களுக்கு தெரியும். பெப்ஸி தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சினைக்கு நிச்சயமாக மிக விரைவில் ஒரு நல்ல தீர்வைக் காண்பேன். இயக்குநர்கள் சங்கத்திற்கு ஒரு தனி இடம் வழங்கப்படும். இதைப்போலவே, உங்கள் கோரிக்கைகள் ஒவ்வொன்றும் கனிவுடன், பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்ற வாக்குறுதியை அளித்து, மீண்டும் ஒரு முறை இவ்வளவு பிரம்மாண்டமான பாராட்டு விழாவை எனக்காக நீங்கள் எடுத்து, என்னை கௌரவப்படுத்தியதற்காக, பெருமைப்படுத்தியதற்காக உங்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க !
புரட்சித்தலைவர் நாமம் வாழ்க !
என்று கூறி, விடைபெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

8.11.2004 அன்று திரைப்படத் துறையினர்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு
வழங்கிய பாராட்டு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** *அவர்களின் ஏற்புரை*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் **விஜயதசமி வாழ்த்துச் செய்தி**

நவராத்திரி விழாவையும், விஜயதசமித் திருநாளையும் மகிழ்ச்சியோடு கொண்டாடும் இந்த மங்கல வேளையில், என் அன்புக்குரிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த இனிய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'யாதும் ஆகி நிற்கும்' அன்னை பராசக்தியை, மலைமகளாகவும், அலைமகளாகவும், கலை மகளாகவும் வழிபடும் திருவிழா நவராத்திரித் திருவிழா! வாழ்வுக்கு வேண்டிய மூன்று பொருள்கள் ஆற்றல், செல்வம் மற்றும் கல்வி ஆகும். ஆற்றலில் மிகுந்து, செல்வத்தில் சிறந்து, கல்வியில் உயர்ந்து விளங்க, அன்னையை ஒன்பது நாட்கள் வழிபட்டு, சரஸ்வதி பூஜையையும், ஆயுத பூஜையையும் கொண்டாடி, பத்தாம் திருநாளை – வெற்றித் திருநாளாக – விஜயதசமித் திருநாளாகக் கொண்டாடி வருகிறோம்.

காலம் காலமாக நமது முன்னோர்கள் கொண்டாடி வரும் சீர் மிகுந்த இந்தப் பண்டிகை, கவின்மிகு கைவினைஞர்களின் – கடும் உழைப்பை நல்கிடும் பல்வகைத் தொழிலாளர்களின் – வாழ்க்கை வளத்திற்கு வழிவகை செய்திடும் திருநாளாக விளங்குவதால், சமூக நோக்கிலும் இது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. செய்யும் தொழிலே தெய்வம் என்பதால் தங்களது தொழிலுக்கு ஆதாரமான தொழிற்கருவிகளை பூஜைக்குரிய பொருட்களாக வைத்து மென்மேலும் தொழில் வளர அன்னையின் அருள் வேண்டி வழிபடும் திருநாளாகவும் இப்பண்டிகை அமைகிறது.

இத்தகைய சிறப்புமிக்க திருநாளில், அனைத்துத் தமிழரும் வெற்றி மேல் வெற்றி பெற்று வெற்றிப் பண்பாட, எனது மனம் கனிந்த விஜயதசமித் திருநாள் வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் **தீபாவளி வாழ்த்துச் செய்தி**

எங்கும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்க, தீபாவளித் திருநாள் உற்சாகத்துடன் கொண்டாடப்படும் இந்த இனிய வேளையில், அனைவருக்கும் எனது தீபாவளி நல்வாழ்த்துகளை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்..

தீபாவளி நாள், மறம் மடிந்த நாள் ! அறம் எழுந்த நாள் ! எனவே, வீழட்டும் மறம் ! வெல்லட்டும் அறம் !

இந்தத் திருநாளில், அகத்தே இருக்கும் இருளும், புறத்தே இருக்கும் இருளும் மறையட்டும் ! எங்கும் ஒளிமயம் ஆகட்டும் !

இந்தத் தீபாவளி நன்னாளில் எத்திக்கும் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் எனது தித்திக்கும் தீபாவளி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.



"சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு"

– என்னும் நூலினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வெளியிட்டார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்23.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன் கலைமாமணி பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்கள் எழுதியுள்ள "சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு" என்னும் நூலை வெளியிட்டார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து இந்த நூலின் முதல் பிரதியைப் பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் திரு. ஏவிஎம். சரவணன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

சென்னையைச் சேர்ந்த பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்கள் தமிழ்த் திரைப்படத் துறையில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் தொடர்புத் துறையிலும், கலைத்துறையைச் சேர்ந்த பல்வேறு பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு அரும்பணியாற்றி வருபவர் ஆவார். இவ்வகையில் 1931–ஆம் ஆண்டு முதலான தமிழ்த் திரைப்படங்கள் குறித்த புகைப்படங்கள், தமிழ்த் திரையுலகக் கலைஞர்கள் பற்றிய புத்தகங்கள், திரைப்படமான நாவல்கள், நாடகங்கள், தமிழ்த் திரைப்படங்கள் குறித்த பல்வேறு புத்தகங்கள், கலையுலகைச் சார்ந்த பல்வேறு சேகரிப்புகள், தமிழ்த் திரைப்படங்கள் குறித்த கிடைத்தற்கரிய விவரங்கள் ஆகியவற்றைச் சேகரித்து வைத்துள்ளதாகவும், இவையனைத்தும் எதிர்கால சந்ததியினருக்குப் பயன்படும் வகையில், தமிழக அரசு பெற்றுக் கொண்டு, ஒரு தொகையைத் தனக்கு உதவியாக வழங்கவேண்டும் என்றும் மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் அவர் கோரியிருந்தார். மேலும், இந்தத் தகவல்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் "சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு" என்னும் நூலை எழுதியுள்ளதாகவும், அதனை வெளியிட நிதியுதவி வழங்கவேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

திரு. பிலிம் நியூஸ் ஆனந்தனின் இந்தக் கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திரு. ஆனந்தன் சேகரித்து வைத்துள்ள அரிய தகவல்கள் மற்றும் அவர் எழுதியுள்ள நூலின் சிறப்பு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு நூலை அச்சிட்டு வெளியிட 5.5 இலட்சம் ரூபாயும், அவரது சேவைக்காக 10 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 15.5 இலட்சம் ரூபாயைத் தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கினார்கள்.

நூல் வெளியிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிய நிதி உதவியின் மூலம் திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் "சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு" என்னும் பெயரில் தமிழ் திரைப்பட உலகைப் பற்றிய விவரங்கள் அடங்கிய தகவல் களஞ்சியமாக நூலை உருவாக்கி உள்ளார். இந்தச் சிறப்புமிகு நூலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 23.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்கள். இந்த நூலின் முதல் பிரதியைப் பிரபல திரைப்பட தயாரிப்பாளர் திரு. ஏவிஎம். சரவணன் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திரு. ஏவிஎம். சரவணன் அவர்களிடத்தில், இந்த நூல் திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களின் நீண்ட நாள் கனவு. அந்தக் கனவு இன்று நனவாகி நூல் வடிவம் பெற்று வெளியாகி உள்ளது. அதன் முதற் பிரதியை உங்களிடம் நான் வழங்குகிறேன் என்று தெரிவித்தார்கள். அப்போது, திரு. ஏவிஎம். சரவணன் தமக்கு இந்த வாய்ப்பை வழங்கியமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

* * *

நேருவின் மணிமொழிகள்

- நாம் சுதந்திரம் பெற்றதோடு ஒரு யாத்திரை முடிந்து விட்டது. ஆனால் இன்னொரு யாத்திரை தொடங்கி விட்டது. வறுமையை ஒழிப்பதற்காகவும் நல்வாழ்வுக்கு உகந்த சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்காகவும் தொடங்கியுள்ள யாத்திரையே அது.
- ஜனநாயகத்தின் அர்த்தமே சமத்துவம்தான்.
- ஒழுக்கம், பொறுமை, பரஸ்பர மதிப்பு ஆகியவையே ஜனநாயகத்திற்குத் தேவையானவையாகும். ஒரு ஜனநாயக அமைப்பில் இணக்கம், பரஸ்பர விவாதம் ஆகியவற்றினால்தான் மாற்றங்கள் நிகழுகின்றன. வன்முறைகளினால் அல்ல.



புதுவடிவம் பெற்றுள்ள மெரினா நீச்சல் குளம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது ஆணையின்படி உலகப் புகழ் பெற்ற சென்னை மெரினா கடற்கரையின் அணிகலனாக விளங்கும் வகையில், சென்னை காமராஜர் சாலையில் உள்ள மெரினா நீச்சல் குளம் புதுப்பிக்கப் பட்டுள்ளது. சீருடன் மேம்படுத்தப்பட்டுப் புது வடிவம் பெற்றுள்ள நவீன மெரினா நீச்சல் குளத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 23.10.2004 அன்று திறந்து வைத்தார்கள்.

உலகில் இரண்டாவது மிக நீளமான கடற்கரை என்று புகழ் பெற்றுள்ள சென்னை மெரினா கடற்கரையை அந்தப் பெருமைக்கு நிகரானதாக மாற்றிடவும், அதன் மணற்பரப்பின் மாசுகளை அகற்றி சுற்றுச்சூழலைக் காத்திடவும், பொது மக்கள் சிறப்புடன் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் உலகத் தரத்திற்கு இணையாகக் கடற்கரையை மேம்படுத்திடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அதன் ஒரு அங்கமாக, பராமரிப்பின்றி சிதிலமடைந்து கிடந்த சென்னை மெரினா நீச்சல் குளத்தை, அழகுடன் வடிவமைத்துப் புதுப்பித்திட ஆணையிட்டார்கள்.

சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள இந்த மெரினா நீச்சல் குளம் 100 மீட்டர் நீளமும் 30 மீட்டர் அகலமும் கொண்டதாகும். 1947– ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த நீச்சல் குளம் நீந்திப் பழகுபவர்களுக்கு ஏற்ற வகையில் குறைந்தபட்சம் 3 அடியாகவும் அதிகபட்சம் 5½ அடியாகவும் ஆழம் கொண்டதாகும். இந்த நீச்சல் குளம், ஏழை, எளிய நடுத்தர மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பொது மக்கள் இதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், தனது முந்தைய ஆட்சியின் போது

இதைப் புதுப்பிக்க ஆணையிட்டார்கள். அதன்படி 1993–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியால் இந்த நீச்சல் குளம் புதுப்பிக்கப்பட்டது.

எனினும், அதன் பின்னர் பெரிய அளவிலான பராமரிப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படாத காரணத்தால் இந்த நீச்சல் குளம் பழுதுபட்டுப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உலகப் புகழ் பெற்ற மெரினா கடற்கரைக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் மெரினா நீச்சல் குளத்திற்கு முற்றிலும் ஒரு புதிய வடிவம் கொடுத்துப் பழுதுகளை நீக்கி முழுமையாகப் புதுப்பித்திட ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, பராமரிப்பின்றி சிதிலமடைந்து கிடந்த உடை மாற்று அறைகள், சுற்றுச் சுவர் ஆகியவை முற்றிலுமாக அகற்றப்பட்டு, நவீன வடிவ பிளாஸ்டிக் சுற்றுச் சுவர், உடை மாற்றும் அறைகள், குளிக்கும் வசதி மற்றும் கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், காண்போரைக் கவரும் வகையில் நீச்சல் குளத்தின் உள்ளேயும், சுற்றிலும் உள்ள நடைபாதையிலும் புதிய வண்ண ஓடுகள் (Tiles) அழகுற பதிக்கப்பட்டுள்ளன. நீச்சல் குள வளாகத்தில் கண்ணைக் கவரும் வகையில் மலர் செடிகள் நடப்பட்டுச் சுற்றுச் சூழல் பாதிக்காத வண்ணம் புல்வெளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. சலவைக் கற்களால் அமைக்கப்பட்ட இருக்கை வசதியும் அமைக்கப்பட்டுள்ளது. நீச்சல் குளத்தில் உள்ள நீரைக் குறைந்த கால அளவில் விரைவாகச் சுத்திகரிக்க சுத்திகரிப்பு நிலையமும் நவீனப்படுத்தி மேம்படுத்தப்பட்டுள்ளது.

நுழைவாயில் அருகே புல்வெளி, நீருற்று, நீச்சல் குளத்தின் வெளிப்புறத்தைச் சுற்றிலும் புல்வெளிகள் ஆகியவற்றுடன் மெரினா நீச்சல் குளம் எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவுரைப்படி, கடற்கரைச் சூழலுடன் இணைந்து பொலிவூட்டும் வகையில், மொத்தம் 50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வடிவத்துடன் புதுப்பிக்கப்பட்டுள்ள சென்னை மெரினா நீச்சல் குளத்தை 23.10.2004 அன்று காலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தமிழக அரசின் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், சென்னை மாநகராட்சியின் துணை மேயர் திரு. கராத்தே ஆர்.தியாகராஜன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திருமதி. சி.கே. கரியாலி இ.ஆ.ப., சென்னை மாநகராட்சியின் ஆணையாளர் (பொறுப்பு) திரு. சிவதாஸ் மீனா இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.□

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ரம்ஜான் வாழ்த்துச் செய்தி

(நவம்பர் 15)

ஈகைத் திருநாளாம் 'ஈத்' திருநாளை இன்புறக் கொண்டாடி மகிழும் எனது அன்பிற்குரிய இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும், எனது இதயம் கனிந்த 'ஈத் பெருநாள்' வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு மாத காலம் அரிய நோன்பிருந்து உடலை, உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி இறையருளால் பெற்ற பொருளின் ஒரு பங்கை ஏழையர்க்கு வழங்கி இன்புறும் திருநாள்! ஈகைத் திருநாள் ஈந்து மகிழும் நாள்! ஏழையின் மகிழ்ச்சியில் இதயம் நிறையும் நாள்!

இந்தத் திருநாளில் ஏகநாயகன் இறைவன் அருளால் அமைதி நிலைக்கட்டும்! அன்பு தழைக்கட்டும் ! மனங்களில் எல்லாம் மகிழ்ச்சி பெருகட்டும்!

இந்தப் பெருநாளில், என் அன்பிற்கினிய தமிழக இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் ஈத் திருநாள் வாழ்த்துகளை இயம்பி மகிழ்கிறேன்.

* * *

மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு அரசு நலத் திட்டங்கள்

(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 25.10.2004)

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகளையும் சார்ந்த மக்களின் நலனில் மிகுந்த அக்கறையும், தனி ஈடுபாடும் கொண்டு, சிறப்பான திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகின்றது. எனது அரசு எப்போதுமே மீனவர்கள் மற்றும் அவரது குடும்பங்களைப் பாதுகாக்கும் மீனவ நண்ப அரசாகத் திகழ்கிறது. தமிழகத்திலுள்ள மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு எனது தலைமையிலான அரசு, பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

கடலுக்குள் சென்று மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுவதை முற்றிலுமாக நீக்கிட முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு, அவர்களது துயர் நீக்க எனது அரசு பாடுபட்டு வருகின்றது. இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்படும் தமிழக மீனவர்களை உடனே விடுவித்திடவும், அவர்களது படகுகளை மீட்டு தமிழகத்திற்குக் கொண்டு வரவும் மைய அரசை வலியுறுத்தி எனது அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தமிழக மீனவர்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்காக இலங்கை கடல் பகுதியில் 5 கடல் மைல் தூரம் வரை மீன்பிடிப்பு மேற்கொள்வதற்குத் தமிழக மீனவர்களுக்கு உரிமம் வழங்க இலங்கை அரசை வலியுறுத்துமாறு கேட்டு மத்திய அரசை நான் கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

மேலும், கச்சத்தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் தமிழக மீனவர்கள் மீன்பிடித் தொழில் மேற்கொள்வதற்கு ஏதுவாக, இப்பகுதியை நிரந்தர குத்தகை அடிப்படையில் பெறுவதற்கும், மைய அரசை நான் வலியுறுத்தி வருகிறேன். 2004 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புதுடெல்லியில் நான் நேரில் சந்தித்த போது இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளேன்.

தமிழக மீனவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டிலும் செப்டம்பர் முதல் டிசம்பர் வரையிலான மீன்பிடிப்பு இல்லாத நான்கு மாதங்களுக்கு, மாதம் ஒன்றிற்கு இருபது கிலோ அரிசி வீதம், மொத்தம் 80 கிலோ அரிசி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ், ஒரு கிலோ அரிசி ரூ.3.50 வீதம் பெற்றுக் கொள்ளும் திட்டத்தை எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 2003–2004 ஆம் ஆண்டில் 3,01,773 மீனவர்கள் மற்றும் மீனவ மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ், மீனவர் இறந்தாலோ அல்லது முழு ஊனமடைந்தாலோ காப்புறுதி நிவாரணமாக ரூ.50,000/– அவரது குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. காப்புறுதி செய்யும் மீனவர்களுக்குப் பிரிமியத் தொகை மொத்தமும் அரசால் செலுத்தப்படுகிறது. மீனவர்களிடமிருந்து பிரிமியத் தொகை ஏதும் வசூலிக்கப்படுவதில்லை.

தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் 1,70,259 மீனவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு மீன் பிடிப்பு இல்லாத காலங்களில் 4 மாதங்களுக்கு, உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு 300 ரூபாய் வீதம் மொத்தம் 19.48 கோடி ரூபாய் நிவாரணத் தொகையாக

வழங்கப்பட்டது. அதே போன்று, இத்திட்டத்தின் கீழ், 42,992 மீனவ மகளிருக்கும் நிவாரணம் வழங்கும் திட்டத்தையும் என்னுடைய தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

மீன்பிடி விசைப்படகுகளில் உபயோகிக்கப்படும் டீசலுக்கான விலையை மத்திய அரசு சமீப காலங்களில் வெகுவாக உயர்த்திவிட்டதன் காரணமாக, மீனவர்களுக்கு இது ஒரு மாபெரும் சுமையாக விளங்கி வருகிறது. கடந்த ஜூலை 2002–இல் லிட்டர் ஒன்றுக்கு ரூ.20.06 என்று இருந்த டீசல் விலை, தற்போது லிட்டர் ஒன்றுக்கு ரூ.26.93 என்று அதிகரித்துள்ளது. மத்திய அரசு விசைப் படகுகளுக்கும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கும் வழங்கப்படும் டீசல் விலையைக் கணிசமான அளவு குறைக்க வேண்டும். மத்திய அரசு டீசல் விலையை குறைக்காத இந்தச் சூழ்நிலையில், தாங்க முடியாத இந்தச் சுமையைக் குறைத்து, தங்களுக்கு உதவிட வேண்டும் என்று என்னிடம் மீனவ சமுதாயத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கையை நான் கனிவுடன் பரிசீலித்து, அவர்களது துன்பத்தைக் குறைத்து அவர்களது வாழ்விற்கு வளம் சேர்க்கும் வகையில், டீசல் மீதான விற்பனை வரியை முழுவதுமாக நீக்க நான் முடிவெடுத்துள்ளேன். இதனால், மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசலுக்கு விற்பனை வரி எதுவும் இனிமேல் விதிக்கப்பட மாட்டாது. இதனால் மீனவர்களுக்கு டீசல் விலையில் லிட்டர் ஒன்றுக்கு ரூ.5.33 என்ற அளவிற்குச் சலுகை கிடைக்கும். இதுவரை மீனவர்கள் லிட்டர் ஒன்றுக்கு சுமார் ரூ.26.93 என்ற விலையில் டீசல் பெற்று வந்தார்கள். விற்பனை வரியை முழுவதுமாக நீக்கிட நான் ஆணையிட்டதன் காரணமாக, இனி டீசல் லிட்டருக்குச் சுமார் ரூ. 21.60 என்ற விலையில் மீனவர்களுக்குக் கிடைக்கும். ஏறத்தாழ 5,000 விசைப் படகுகள் மற்றும் 15,200 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் வைத்துள்ள மீனவர்கள் இதனால் பயன் பெறுவார்கள். இதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 51 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்ற போதிலும், மீனவ சமுதாயத்தின் நலன் கருதி இந்தச் சலுகையை வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன்.

தற்போது மீனவர்கள் டீசல் பெற்று வரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் (TNFDC), தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவர் கூட்டுறவு இணையம் (TAFCOFED), மற்றும் குறிப்பிட்ட தனியார் நிறுவனங்கள் நடத்தும் 36 டீசல் விநியோக மையங்கள் மூலம் மேற்சொன்ன குறைக்கப்பட்ட விலையில் டீசல் வழங்கப்படும். மீனவர்களின் நலன் கருதி இந்த டீசல் விநியோகம் செய்யும் மையங்கள் மேலும் அதிகரிக்கப்படும்.

மேலும், மீன்பிடி விசைப் படகுகளில் பயன்படுத்தப்படும் உயர்வேக டீசல் எரி எண்ணெய்க்கு மைய அரசு உதவியுடன் மானியமாக ஒரு லிட்டருக்கு ரூ.1.50 வீதம் வழங்க நான் முடிவெடுத்துள்ளேன். இதன் மூலம் இவ்வாண்டில் (2004–2005) 5.48 கோடி ரூபாய் மானியத் தொகை மீனவர்களுக்கு வழங்கப்படும். மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசலுக்கான விலையை, வெளிச்சந்தையில் உள்ள விலையுடன் ஒப்பிட்டுப் பார்க்காமல், மானியம் வழங்கி கணிசமாகக் குறைக்க வேண்டும் என்று மத்திய அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு தமிழகத்திற்குப் பொது விநியோகத் திட்டத்தில் வழங்குவதற்காக, 2000–ஆம் ஆண்டில், மாதம் ஒன்றுக்கு 77,108 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்தது. அதன் பிறகு, பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினை மத்திய அரசு படிப்படியாகக் குறைத்து, தற்போது, அதாவது நடப்பு ஆண்டில் (2004) மாதம் ஒன்றுக்கு 58,392 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் மட்டுமே பொது விநியோகத் திட்டத்தில் வழங்க, ஒதுக்கீடு செய்து வருகிறது. இதனால், பொது விநியோகத் திட்டத்தில் தற்போதுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டுமே மண்ணெண்ணெய் வழங்க முடிகிறது. 16.9.2004 அன்று புது டில்லியில் பாரதப் பிரதமர் அவர்களை நான் நேரில் சந்தித்து, தற்போது, தமிழகத்திற்குப் பொது விநியோகத் திட்டத்தில் வழங்க மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் அளவினை மாதம் ஒன்றுக்கு 58,392 கிலோ லிட்டருக்குப் பதிலாக, 1,00,200 கிலோ லிட்டர் உடனடியாக வழங்க வேண்டுமென கோரிக்கை மனு ஒன்றினை அளித்துள்ளேன். 4,550 இயந்திரம் பொருத்திய நாட்டுப் படகுகளைப் பயன்படுத்தும் மீனவர்கள், மண்ணெண்ணெயைப் பயன்படுத்தி, படகுகளில் மீன் பிடிக்கச் செல்கின்றனர். எனவே, அவர்களுக்கு, பொது விநியோகத் திட்டத்தில் கூடுதல் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று எனது அரசு மத்திய அரசிடம் கேட்டுள்ளது. இதற்கான கூடுதல் ஒதுக்கீடு மத்திய அரசால் இன்னமும் வழங்கப்படவில்லை. இச்சூழ்நிலையில், மத்திய அரசிடமிருந்தும், எண்ணெய் நிறுவனங்களிடமிருந்தும் மண்ணெண்ணெயைப் பெற்று, மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எனது அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ✶

தமிழக காவல்துறை விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசுகள்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்27.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில், இந்த ஆண்டு (2004) நடைபெற்ற தேசிய அளவிலான காவல் துறை விளையாட்டுப் போட்டிகள், காவல்துறை நீர் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய தடகள விளையாட்டுப் போட்டிகள் ஆகிய பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்ற தமிழக காவல் துறை விளையாட்டு வீரர்களுக்கு, மொத்தம் 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான ரொக்கப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

தேசிய அளவில் நடைபெறும் பல்வேறு காவல் துறை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்கள் வெற்றி பெறும் காவல் துறை விளையாட்டு வீரர்களுக்குத் தங்கப் பதக்கம் வென்றால் ரூ.50,000, வெள்ளிப் பதக்கம் வென்றால் ரூ.30,000, வெண்கலப் பதக்கம் வென்றால் ரூ.20,000 ரொக்கப் பரிசு வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி இந்த ஆண்டு (2004) நடைபெற்ற தேசிய அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற காவல் துறை விளையாட்டு வீரர்களுக்கான ரொக்கப் பரிசுகளை 27.10.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

தேசிய அளவிலான காவல் துறை நீர் விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் வெற்றி

உத்திராஞ்சல் மாநிலம் ரூர்கி நகரில், அனைத்திந்திய காவல் துறை நீர் விளையாட்டுப் போட்டிகள் – 2004, அக்டோபர் மாதம் 16–ஆம் தேதியிலிருந்து 19–ஆம் தேதி வரை நடைபெற்றன. இதில் துடுப்புகளைப் பயன்படுத்தி படகு ஓட்டும் போட்டியில் தமிழகத்தின் சார்பாக திரு. ஆர். கோவிந்தராஜ், திரு. டி. அந்தோணி ஆரோக்கியராஜ், திரு. எம். முனிவரதன், திரு. எம். தமிழரசு ஆகிய 4 பேர்கள் கொண்ட அணி பங்கேற்றது. இந்த அணி, 4 பேர் கலந்து கொள்ளும் 500 மீட்டர் தூரப் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், 2,000 மீட்டர் தூரப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றது. மேலும், இருவர் கலந்து கொள்ளும் 500 மீட்டர் மற்றும் 2,000 மீட்டர் தூரப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்களையும் வென்றுள்ளது. 500 மீட்டர் போட்டியில் தங்கம் வென்றமைக்காக நான்கு வீரர்களுக்கும் தலா 50,000 ரூபாய், 2,000 மீட்டர் போட்டியில் வெள்ளி வென்றமைக்காக நான்கு வீரர்களுக்கும் தலா 30,000 ரூபாய், இருவர் பங்கேற்கும் போட்டியான 2,000 மீட்டர்



போட்டியிலும், 500 மீட்டர் போட்டியிலும் வெள்ளிப் பதக்கங்கள் வென்ற திரு. கோவிந்தராஜ் மற்றும் திரு. அந்தோணி ஆரோக்கியராஜ் இருவருக்கும் இரு வெள்ளிப் பதக்கங்களுக்காகத் தலா ரூ.30,000 + ரூ.30,000 ஆக ரூ. 60,000 ஆக மொத்தம் 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுக்கான காசோலைகளையும், இவர்களுக்குப் பயிற்சி அளித்த பயிற்சியாளர் திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு ஊக்கத் தொகையாக 25,000 ரூபாய்க்கான காசோலையினையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

தேசிய அளவிலான கபடிப் போட்டியில்
முதன் முறையாக
வெள்ளிப் பதக்கம் வெற்றி

ஜம்மு–காஷ்மீர் மாநிலம், ஜம்மு நகரில் 53–ஆவது அனைத்திந்திய காவல் துறை கையுந்துப் பந்து, கூடைப் பந்து, கபடி மற்றும் கைப்பந்து விளையாட்டுப் போட்டிகள் – 2004. இந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் 23–ஆம் தேதியிலிருந்து 28–ஆம் தேதி வரை நடைபெற்றன. இதில் கபடிப் போட்டியில் பங்கேற்ற 12 பேர் கொண்ட தமிழக காவல் துறை அணி முதல் முறையாக வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளது. கபடிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற திருவாளர்கள். பி. சந்திரகுமார், எம். சுரேந்திரமுகன், ஐ. ஆனந்த் அப்பாராஜ், பி. காமாட்சி, பி. ராஜாராம், எஸ். முருகன், யு. பிரபாகரன், டி. லிங்கேஸ்வரன், பி. உதயகுமார், எம். குமரன், ஜி. சுந்தரபாண்டியன், எஸ். ராஜா ஆகிய தமிழக காவல் துறை விளையாட்டு வீரர்களுக்கும், பயிற்சி அளித்த காவல் துறை பயிற்சியாளர் திரு. எ.எஸ். மனோகரன் அவர்களுக்கும் தலா ரூ.30,000 வீதம் மொத்தம் 3 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

தேசிய அளவிலான தடகளப் போட்டியில்
'போல் வால்ட்' கம்பு ஊன்றித் தாண்டும்
போட்டியில் வெண்கலப் பதக்கம் வெற்றி

மராட்டிய மாநிலம் மும்பை நகரில், 44–ஆவது தேசிய தடகளப் போட்டிகள் இந்த ஆண்டு செப்டம்பர் 10–ஆம் தேதி முதல் 12–ஆம் தேதி வரை நடைபெற்றன. இதில் கம்பு ஊன்றித் தாண்டும் 'போல் வால்ட்' போட்டியில் பங்கேற்ற திரு. ஆர். ரஞ்சித்குமார் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். இதனைப் பாராட்டி ரொக்கப் பரிசாக ரூ.20,000–க்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

தேசிய அளவிலான காவல் துறை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வென்றெடுத்த 17 விளையாட்டு வீரர்கள் மற்றும் 2 பயிற்சியாளர்கள் ஆக மொத்தம் 19 பேர்களுக்கு ரொக்கப் பரிசுகளாக மொத்தம் 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான

காசோலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கி, அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் தனது மனமுவந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின் போது காவல் துறை தலைமை இயக்குநர், திரு. ஐ.கே. கோவிந்த், இ.கா.ப., காவல் துறை கூடுதல் இயக்குநர் திரு. கே.வி.எஸ். மூர்த்தி, ஆயுதப் படை காவல் துறைத் தலைவர் திரு. எம். பாலச்சந்திரன், ஆயுதப் படை காவல் துறை துணைத் தலைவர் திரு. எம்.எஸ்.ஜாபர் சேட் ஆகியோர் உடனிருந்தனர். ✶

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாடுகளில் வேலை தேடும் இந்தியர்களுக்கு குறிப்பாகத் தமிழர்களுக்கு மேலைநாடுகளில் வேலைவாய்ப்புகளைக் கண்டறிந்து கிடைக்கச் செய்ய பணிபுரிந்து வரும் தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 25 ஆண்டு கால சேவையை நிறைவு செய்து வெள்ளிவிழா கண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 25 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கானோர் இந்த நிறுவனத்தின் மூலம் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இந்த நிறுவனத்தில் பதிவு பெற்றவர்கள் மருத்துவர்கள், செவிலியர்கள், ஆசிரியர்கள், கணினிப் பொறியாளர், தொழிற்சாலைகளில் பணிபுரிவோர், கட்டுமானத் தொழிலாளர் என பல தரப்பட்ட வேலைவாய்ப்புகள் பெற்றுள்ளனர். இந்த நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பதிவைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் வேலைவாய்ப்புகள் வரும்போது பதிவுதாரர்களுக்கு தெரிவிக்க இயலும், பல்வேறு காரணங்களுக்காக சிலர் பதிவை புதுப்பிக்கத் தவறி உள்ளனர்.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், வெள்ளி விழா கொண்டாடும் இந்த வேளையில் பதிவைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு ஒரு சலுகையினை அறிவித்துள்ளது. இந்த நிறுவனத்தில் பதிவு செய்து பதிவைப் புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்கள் ரூ.221–க்கான வரைவோலையினை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், சென்னை (Overseas Manpower Corporation Ltd, Chennai) என்ற பெயருக்கு அனுப்பி தங்கள் பதிவை புதுப்பித்து முந்தைய பதிவு மூப்பை தக்க வைத்துக் கொள்ளலாம். 31.10.2004 வரை அறிவிக்கப்பட்டிருந்த இச்சலுகை, இச்சலுகையினை அறிந்திராத பதிவுதாரர்கள் பயன்பெறும் வகையில் 30.11.2004 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். 30.11.2004க்குள் புதுப்பிக்கத் தவறியவர்களின் பதிவுகள் நிறுவனத்திலிருந்து நீக்கப்படும். எனவே, இந்த கடைசி வாய்ப்பை பயன்டுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவைப் புதுப்பிக்க விரும்பும் மனுதாரர்கள் தங்கள் பதிவு எண் மற்றும் விலாசம் ஆகியவற்றினை தெளிவாக எழுதி தற்போதைய கல்வித்தகுதி, முன் அனுபவம் போன்ற விவரங்களை கணினி வழியில் தயார் செய்து விண்ணப்பத்துடன் இணைத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

"நிர்வாக இயக்குநர்,
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்,
(தமிழக அரசு நிறுவனம்)
41, மெக்னிக்கல்ஸ் ரோடு,
சேத்துப்பட்டு, சென்னை – 600 031"

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் கம்பி வட ஊர்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.11.2004 அன்று திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் 4 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள கம்பிவட ஊர்தியை (Rope Car) தொடங்கி வைத்தார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் தனிச்சிறப்பு வாய்ந்தது ஆகும். தமிழகத்திலிருந்து மட்டுமல்லாமல், இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலிருந்தும் தண்டாயுதபாணி சுவாமியை தரிசனம் செய்ய பக்தர்கள் அதிக அளவில் நாள்தோறும் இத்திருக்கோயிலுக்கு வருகை தருகின்றனர்.

கடல் மட்டத்திலிருந்து 150 மீட்டர் உயரத்தில், மொத்தம் 693 படிகளுடன் கூடிய இத்திருக்கோயிலுக்கு பக்தர்கள் வருகை புரிய ஏதுவாக ஏற்கெனவே மூன்று இழுவை இரயில்கள் உள்ளன. ஆனால், இவற்றைக் கொண்டு, பெருந்திரளாக வருகை தருகின்ற பக்தர்கள் கூட்டத்தை சமாளிக்க இயலவில்லை என்பதனை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கூடுதல் வசதியாகவும், பக்தர்கள் சிரமமின்றி திருக்கோயிலை எளிதில் அடைந்திட ஏதுவாகவும், கம்பிவட ஊர்தியை (Rope Car) அமைத்திட ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையை ஏற்று, கம்பிவட ஊர்தி அமைக்கும் பணிகள் சிறப்பாகவும், விரைவாகவும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. கம்பிவட ஊர்தியின் கீழ்தள நிலையம் பழனி மலையடிவாரம் கிரி வீதியில், கிழக்கு மூல வாய்க்கால் அருகில் அமைக்கப்பட்டுள்ளது. மேல்தள கம்பிவட ஊர்தி நிலையம் மலை உச்சியில் திருக்கோயிலின் கீழ்ப்புறம் திருமஞ்சன பாதை முடியும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கம்பிவடத்தின் நீளம் 323 மீட்டர்



ஆகும். பக்தர்கள் பயணிக்க மொத்தம் 24 பெட்டிகள் அமைக்கப் பட்டுள்ளன. ஒரு பெட்டியில் 4 நபர்கள் அமர்ந்து பயணிக்கலாம். ஒரு வழிப் பயணம் செய்ய 2 நிமிடம் 45 நொடிகள் பிடிக்கும். இதன் மூலம், ஒரு மணி நேரத்தில் 800 நபர்களை மலையடிவாரத்திலிருந்து, மலை உச்சியில் உள்ள திருக்கோயிலுக்கு ஏற்றிச் செல்ல முடியும்.

அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமியை தரிசனம் செய்து, அவரை வழிபட்டு அருள் பெற்றிட வருகை தருகின்ற பக்தர்களின் வசதிக்காக, 4 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள இந்த புதிய கம்பிவட ஊர்தியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.11.2004 அன்று பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலில் தொடங்கி வைத்தார்கள். ●

வேளாண் அறிவியல் தமிழ் இதழ்கள்



வேளாண் தமிழ் அறிவியல் இதழ்கள் பற்றிய ஆய்வுக்கு முன், சென்ற காலங்களில் உழவர்களுக்காக நடத்தப்பட்ட இதழ்களைத் தொகுத்துப் பார்ப்பது கூடுதல் புரிதலைக் கொடுக்கும் என்பதால், அவை இங்குத் தொகுக்கப்பட்டுள்ளன. இதழ் தொடங்கப்பட்ட காலம் மற்றும் அவற்றில் வெளிவந்த படைப்புகள் குறித்தும் பொதுவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

'உழுவோன்' மற்றும் 'விவசாய தீபிகை' என்ற வேளாண் அறிவியல் இதழ்கள் 1904–ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன. இதில் உழுவோன், உழவர் சிறப்பு, நீர்வள வேளாண்மை போன்ற விபரங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து விவசாயிகளுக்கான சங்கத்தினர் தேவை வலியுறுத்தப்பட்டது. விவசாய தீபிகை இதழில் விவசாய அறிவியல் கட்டுரைகளுடன் விவசாயச் சார்புத் தொழில்களான கால்நடை வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு பற்றியும், இந்திய மற்றும் வெளிநாட்டு விவசாய முறைகள் பற்றியும் உள்ள விபரங்களையும் வெளியிட்டன. இதில் புதிய வடிவங்களாக உரையாடல்கள், குழந்தைகளுக்கான வேளாண்மைக் கருத்துகள், வேளாண் புதிர்கள், கேள்வி பதில்கள் ஆகியன இடம் பெற்றிருந்தன.

இந்த இதழ்களுக்கு அடுத்து வந்த இதழ்களில் தமிழ்நாடு அரசாங்கத்தில் இருந்து வெளிவந்த 'மேழிச்செல்வம்' குறிப்பிடத்தக்க ஒரு இதழாகும். இதில் உழவர்களுக்குப் பயன்படும் வேளாண் அறிவியல் கட்டுரைகள், வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சியாளர்களால் எழுதப்பட்டன. தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் ஒவ்வொரு மாதமும் பயிரிடப்பட வேண்டிய பயிர்களின் பட்டியலை மாதந்தோறும் வெளியிட்டு வந்தன.

இதை அடுத்து 1950க்குப் பின் செங்கல்பட்டில் இருந்து வெளிவந்த 'விவசாயி' என்ற இதழ் ஒரு மாறுபட்ட கோணத்தில் இருந்துள்ளது. இவ்விதழில் பயிர்த்தொழிலுக்குத் தேவையான வேளாண் அறிவியல் கட்டுரைகள் அதிகம் இடம் பெறவில்லை. மாறாக, விவசாயிகளின் கடன் நிவாரண மசோதா, நிலக்கரி வசூல், விவசாயிகளின் கடன் சுமையை நீக்கும் சட்ட மசோதா முதலான, நிலம் தொடர்பான சட்டப் பிரச்சினைகளுக்கே அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருந்தது.

தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் பகுதியில் இருந்து 1956களில் 'பயிர்த்தொழில்' என்ற வார இதழ் வெளிவந்தது. இதில் வாராந்திர பாரத நாட்டுப் பயிர்த்தொழில் செய்திகள், உழவர்கள் மற்றும் உழவுத் தொழில் சார்ந்த கட்டுரைகள், சிறுகதைகள், தொடர்கதை நாடகங்கள் பிரசுரமாகின. இத்துடன் கால பலன், ஜோதிடம், காலநிலை ஆகியனவும் வெளிவந்தன.

விவசாய புரட்சி மாத இதழ் என்ற முழக்கத்துடன் 1962இல் 'விவசாய உலகம்' என்ற இதழ் சென்னையில் இருந்து வெளிவந்தது. வேளாண்மை பற்றிய பொதுவான தகவல் கட்டுரைகளுடன் அடிப்படை வேளாண் அறிவியல் கட்டுரைகள், இலக்கியச் செய்திகள், வீட்டு வைத்தியம், வேளாண் சாதனங்கள், சிறுதொழில்களிலும் வேளாண்மை போன்ற செய்திகளைத் தாங்கி வந்தது.

விவசாயப் பிரச்சினைகளை விளக்கும் ஒரே பத்திரிகை என்ற முழக்கத்துடன் 'விவசாய நாடு' என்ற இதழ் 1968இல் திருவாரூரிலிருந்து வெளிவந்தது. உழவர்களுக்குத் தேவையான வேளாண் அறிவியல்

கட்டுரைகள், புதிய இயந்திரங்கள், விவசாய சங்கச் செய்திகள், சட்டச் சிக்கல்கள் போன்றவற்றிற்கு இவ்விதழ் முதலிடம் கொடுத்தது.

சென்னையிலிருந்து 'வேளாண்மை வளம்' என்ற இதழ் 1968இல் காலாண்டு இதழாக வெளிவந்த்து. இது குறிப்பாக, டிராக்டர்ஸ் அண்டு ஃபாம் எக்யூப்மெண்ட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் இதழாக வெளிவந்தது. அந்நிறுவனத்தின் செயல்பாடுகளை உழவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவிக்கும் நோக்கில் இவ்விதழ் நடத்தப்பட்டது. புதிய கருவிகள், பயிரிடும் முறைகள், உரங்கள் பற்றிய கட்டுரைகள் இதில் அதிகம் இடம் பெற்றிருந்தன.

இந்தக் காலகட்டத்தில்தான் 'வளரும் வேளாண்மை' என்ற இதழைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்டு வந்தது. ஆராய்ச்சியின் முடிவுகளை உழவர்களுக்குத் தெரிவிப்பதே இதன் நோக்கமாக இருந்து வந்துள்ளது. இவ்விதழ் பற்றிய ஆய்வே பின்பகுதியில் தொகுக்கப்பட்டுள்ளது. 1976களில் 'விஞ்ஞான விவசாயம்' என்ற இதழ் கோயில்பட்டியில் இருந்து வெளிவந்தது. இவ்விதழ், விவசாயிகளுக்கான நவீன வேளாண்மைத் தகவல் கட்டுரைகளையும், புதிய முறைகள், கருவிகள், உரங்கள் பற்றிய உழவர்களுக்கான செய்திகளையும் வெளியிட்டுள்ளது. இதில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் கட்டுரைகளே அதிகம் வெளிவந்தன. இத்துடன் உழவர்களின் அனுபவக் கட்டுரைகள், உழவர்களின் கேள்விகளுக்குப் பதில் பகுதி, உழவியல் தொடர்பான இலக்கியக் கட்டுரைகள், உழவர்களிடம் வழங்கி வரும் வேளாண்மைப் பழமொழிகள் போன்றனவும் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் சார்பில் 1977லிருந்து 'நிலவளம்' என்ற இதழ் வெளியிடப்படுகிறது. இவ்விதழில் வேளாண்மைத் தொழில்கள், கிராமத் தொழில்கள், வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

தமிழ்நாடு கால்நடை அறிவியல் மருத்துவப் பல்கலைக்கழகத்திலிருந்து 1981 முதல் 'கால்நடைக் கதிர்' என்ற இதழ் வெளி வருகிறது. இவ்விதழும் 'வளரும் வேளாண்மை' இதழ் போன்றே உழவர்களுக்குக் கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு ஆகியன பற்றிய அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது.

எஸ்.கே.எம். நிறுவனத்தின் சார்பில் 1982இல் இருந்து 'கோழி நண்பன்' என்ற இதழ் வெளியிடப்படுகிறது. இவ்விதழில் கோழி வளர்ப்பு, தீவனங்கள், நோய்த் தடுப்பு முறை பற்றிய கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

'உங்கள் விவசாயம்' என்ற இதழ் 1988லிருந்து வெளி வருகிறது. வேளாண்மை அறிவியல் செய்திகளை ஆராய்ச்சி நிலையங்களில் இருந்து உழவர்களுக்குக் கொண்டு செல்வதே இதன் நோக்கம் எனப் பிரகடனப்படுத்தியுள்ளது.

'நம் வழி வேளாண்மை' என்ற இதழ் மதுரையிலிருந்து 1999 முதல் வெளிவருகிறது. இவ்விதழ் இயற்கை வேளாண்மை, உழவர்களின் ஆய்வுகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை தருகிறது.

'நவீன வேளாண்மை' என்ற இதழை 1996இல் சென்னையில் இருந்து வெளியிட்டு வருகின்றனர். இவ்விதழ் பல்வேறு வடிவமைப்புகளுடன் மாறி மாறி வந்து கொண்டுள்ளது. கட்டுரை மற்றும் குறிப்புகள் என்ற வடிவங்களையும் படங்களுடன் கூடிய உதாரணங்களையும் தாங்கி வருகிறது.

இன்னும் இதில் குறிப்பிடப்படாத சிறிய மற்றும் பெரிய இதழ்கள் பல காலங்களில் வெளியிடப்பட்டன. சில இதழ்கள் சில காலம் வெளிவந்தன. சில இதழ்கள் ஒன்றிரண்டு ஆண்டுகளில் காணாமல் போயின. நிறுவனங்களின் உதவியுடன் நடத்தப்படும் இதழ்கள் மட்டுமே நிலைத்து நிற்கின்றன. இதுவரை வணிகரீதியில் வெளிவந்த இதழ்கள் அதிக காலம் நீடித்து நிற்க முடியாமல் பல வடிவங்களுக்கு உட்பட்டு பின் மறைந்துபோயின. நிறுவனங்களின் உதவியுடன் வரும் இதழ்கள், பெரிய அளவுக்குப் பாதிப்புகள் எதையும் ஏற்படுத்த முடியவில்லை. வேளாண்மை என்ற உடன் குறிப்பிட்டுச் சொல்லும்படியோ, உழவர்கள் முன்வந்து கேட்டு வாங்கும்படியோ, இதுநாள் வரை வேளாண் அறிவியலில் இதழ்கள் வெளிவரவில்லை என்றே கூறலாம். எழுபது சதவிகிதம் வேளாண்மையை மையமாகக் கொண்ட நாட்டில் இலட்சக்கணக்கான படித்த உழவர்கள் உள்ள தமிழ்நாட்டில் தொடர்ந்து இதழ்களைக் கொண்டு வர முடியாத நிலைமைக்குக் காரணம் என்ன ? மற்ற இதழ்களை வாங்கும் உழவர்களே கூட இந்த இதழ்களை வாங்காதது ஏன் ? என்ற பல கேள்விகளுக்கு விடை காணும் நோக்கில் முயற்சித்தால், முடிவு உழவர்களிடம் இல்லை. இதழ்களின் உள்ளடக்கத்திலும், வடிவத்திலும்தான் உள்ளது என்பதை அறிய முடியும்.

வேளாண்மை வளர்ச்சிக்குச் சென்ற காலங்களில் வந்த வேளாண் அறிவியல் தமிழ் இதழ்களின் பங்கு போதுமான அளவு இல்லை என்பதே. வேளாண் அறிவியல் என்பது காலத்தின் கட்டாயம். உழவர்களுக்குப் பெரிதும் இன்றியமையாதது. ஒவ்வோர் அறிவியல் இதழுக்கும் தனிநடை உண்டு. சொல்லமைப்பு உண்டு, மரபு உண்டு. ஆனால், வேளாண் இதழ்களில் அத்தகைய மாற்றம் கொண்டு வரப்படவில்லை. ஏற்கெனவே இருக்கும் மற்ற துறை இதழ்கள் போன்றே இவ்விதழ்களும் கொண்டு வரப்பட்டதால் அதிக அளவு உழவர்களைச் சென்றடையவில்லை. மற்ற துறைகளில் நாளிதழ்கள், வார இதழ்கள், திங்கள் இதழ்கள், பருவ இதழ்கள் என இருப்பினும் இதில் திங்கள் இதழ்களே அதிகம் கொண்டுவரப்பட்டுள்ளன.



வேளாண் அறிவியல் இதழ்களின் வடிவம்

வேளாண் இதழ்களின் வடிவம், தொடக்க காலத்தில் இருந்தே அதிகம் கட்டுரை வடிவத்தையே கொண்டிருந்தன. அதுவும் ஆராய்ச்சி நிறுவனங்களில் இருப்பவர்களின் மொழிபெயர்ப்புத்தன்மை கொண்ட கட்டுரைகளே அதிகம் இடம் பெற்றன. குறிப்பாக, வேளாண் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளிவரும் இதழில் முழுக்க முழுக்கக் கட்டுரை வடிவமே பின்பற்றப்படுகிறது. இதிலும் பல பக்கங்கள் நீளும். பெரிய கட்டுரைகளும் அதிக அளவு புள்ளி விவரங்களைக் கொண்டதாகவும் இக்கட்டுரைகள் இருந்தன. இதழ்களின் அட்டைப் படங்களும் மற்ற வணிக ரீதியான இதழ்களுக்கு முற்றிலும் மாறுபட்டும், ஈர்ப்பு இன்றியும் உள்ளன. அதிக அளவு படங்கள் இல்லாமலே செய்திகள் கொடுக்கப்படுவதும், சிறு குறிப்புகள் அதிகமின்றியும் இருப்பதுமே நடைமுறையாக உள்ளது. இதழ்களின் உள்ளடக்கம் என்று பார்த்தால் அவை உடனடிச் செய்திகளைக் கொடுப்பது என்று தொடங்காமல், தெரிந்த விபரங்களைக் கொடுப்பதாகவே உள்ளன. தொடர்ந்து வேளாண்மையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு ஏற்ப இதழின் உள்ளடக்கம் மாற்றப்படுவதில்லை. எப்போதும் ஒரே வடிவத்தையும் ஒரே மாதிரியான உள்ளடக்கத்தையும் கொண்டனவாக உள்ளன. உதாரணமாக, வேளாண் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளிவரும் வேளாண்மை இதழை எடுத்துக்கொள்வோம். இவ்விதழ் 1972 முதல் வெளிவருகிறது. அப்போதிலிருந்து அதன் வடிவத்தில் சென்ற ஆண்டு வரை எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. உள்ளடக்கத்திலும் இதே நிலைதான்.

ஒன்று இந்த வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் இதழ் விரிவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தொடர்ந்து இதழ்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதும், அதுவே சுயமாக இயங்குவது என்று இன்றி, நிறுவனத்தைச் சார்ந்து இருப்பதும், அதன் வளர்ச்சி இன்மையைக் காட்டுகிறது. இருந்தும் அதிக மாற்றங்கள் கொண்டு வரப்படவில்லை. தொடர்ந்து, மாற்றத்திற்கு உள்ளாகி வரும் வேளாண்மைக்கு ஏற்பத் தொடர்ந்து இதழிலும் ஏற்படுத்தி இருக்க வேண்டும். புறநிலை எதார்த்தம் எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாதது ஆச்சரியமே. அதேபோல, உழவர்களின் நிலைமைக்கு ஏற்பப் படைப்புகளில் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை. இதுவே ஒரு பொதுவான இதழாக வளராததற்கு முக்கியக் காரணமாகும். வடிவங்களில் கட்டுரை வடிவத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்ததற்குப் பதில், உரையாடல் செய்திகள், கவிதை, கதை எனப் பல்வேறு வடிவங்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

வேளாண் அறிவியல் இதழ்கள் சிறப்பாக வெளிவரவும் பெரும்பான்மை உழவர்களைச் சென்றடையவும் செய்யப்பட, மேற்கொள்ளப்பட வேண்டிய சில ஆலோசனைகள்:

வேளாண்மை அறிவியல் தமிழ் இதழ்கள் கட்டுரைத் தொகுப்புகளாக இன்றி, செய்திகளின் தொகுப்புகளாக வெளிவர வேண்டும். தொழில்நுட்பம் மட்டுமே வேளாண்மை உற்பத்திக்கு முக்கியமான காரணமில்லை. உழவர்களின் நிலை, அரசின் கொள்கை, உற்பத்தி முறை, வளர்ந்துவரும் உற்பத்திச் சக்திகளின் நிலை, நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரம் போன்ற அனைத்தும் வேளாண்மை உற்பத்திக்குப் பங்காற்றுகின்றன.



இவற்றோடு இணைத்தோ தொடர்புபடுத்தியோ தொழில் நுட்பங்கள் கொடுக்கப்பட வேண்டும். இத்தகைய இதழ்களின் பிரதான முகவர்கள் உழவர்களே, உழவர்களில் அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வேளாண்மை செய்யும் உழவர்கள் முதல், இன்னும் பழமையான முறைகளில் பின்தங்கிய காலாவதியான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் உழவர்களும் இவை இரண்டுக்கும் இடைப்பட்ட பல்வேறு நிலைகளில் உள்ள உழவர்களும் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் ஒரே வடிவத்துடன் ஒரே மாதிரியான உள்ளடக்கத்துடன் கருத்துகளைக் கொடுப்பது என்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரே அளவில் வடிவமைத்த ஆயத்த ஆடையைக் கொடுப்பது போலிருக்கும். தொழில்நுட்பங்களே பல்வேறு நிலையில் உள்ளன. அவையே இன்னும் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது.

இதைப் புதுக்கவிதையில் சொல்வதென்றால்,

வேளாண் தொழில்நுட்பங்கள்
அளவெடுக்கப்படாமல் தைக்கப்பட்ட
ஆயத்த ஆடைகள்
பொருந்தியவர்கள் போட்டுக்கொண்டார்கள்
பொருந்தாதவர்கள்
இன்னும் கோவணத்துடன்

என்று கூறலாம். ஒட்டுமொத்தமாக அறுவடை செய்து, தானியத்தைப் பிரித்து மூட்டையில் சேகரிக்கும் அறுவடை இயந்திரமும் உள்ளது. அதே சமயத்தில் கையால் அறுவடை செய்யும் நிலையும் நிலவுகிறது என்பதைத்தான் இக்கவிதை சுட்டிக்காட்டுகிறது.

வேளாண்மை இதழ்கள் இந்த நிலையைக் கணக்கில் கொண்டு, இதில் ஒவ்வொருவருக்கும் வடிவத்தையும் தொழில்நுட்பத்தையும் கொடுப்பதாகக் கொண்டுவரப்பட வேண்டும். இதழ்கள் வெறும் விபரத்தைக் கொடுப்பதாக மட்டுமின்றி, அவற்றை நடைமுறைப்படுத்தத் தேவையான வழிமுறைகளையும் முன் வைக்க வேண்டும். உடனடித் தேவையை நிறைவு செய்யும் அதே சமயத்தில் தொலைநோக்குப் பார்வையையும் கொடுக்க வேண்டும். அன்றாட வாழ்வில் உழவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்வதோடு, பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகளையும் பயிற்றுவிப்பதாக இதழ்கள் இருக்க வேண்டும்.

உதாரணமாக, இன்று உழவர்களிடம் எழுந்துள்ள கேள்விகளான, உலகமயமாதலால் வேளாண்மை பாதிக்கப்படுமா? இதனால் நமக்கு நன்மையா? தீமையா? உலக வர்த்தக நிறுவனத்தின் செயல்பாடு என்ன? முழுமையான இயற்கை வேளாண்மை சாத்தியமா? இதனால் உற்பத்தி குறைந்துவிடுமா? பன்னாட்டு நிறுவனங்கள் இங்கு வருவதால் ஏற்படும் பாதிப்புகள் என்ன? அதைத் தடுக்க நாம் என்ன செய்ய வேண்டும்? இயற்கை வளங்களைப் பாதுகாக்காததால் ஏற்படும் பிரச்சினைகள் என்ன? எதிர்காலத்தில் வேளாண்மை எப்படி இருக்கும்? இது போன்ற கேள்விகளுக்குப் பதில் கொடுப்பதாகவும், இதன் மீதான விவாதத்தைத் தொடர்ச்சியாக எடுத்துச் செல்வதாகவும் படைப்புகள் இருக்க வேண்டும்.

எனவே, இன்றைய நிலையில் வேளாண் அறிவியல் தமிழ் இதழ்கள் தங்களை முற்றாக மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. வளமான ஒரு தமிழகத்தை உருவாக்கும் நோக்குடன் அவை புனரமைக்கப்பட வேண்டும். விளம்பரதாரர்களின் தயவிலும் நிறுவன நிதியின் தயவிலும் நடத்தப்படும் இவ்விதழ்கள் உழவர்களின் ஆதரவில் நடத்தப்பட வேண்டுமானால் மேற்கண்ட மாற்றங்கள் தவிர்க்கப்பட முடியாத வையாகும். இது, வேளாண்மை அறிவியல் தமிழ் இதழ்களின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி தமிழக வேளாண்மை வளர்ச்சிக்கும் அவசியமான தவிர்க்கப் படவியலாத தேவையாகும்.

– **முனைவர் ப. வெங்கடாசலம்**

– *அறிவியல் தமிழ் நூல்களும், இதழ்களும் என்ற நூலிலிருந்து*

வெளியீடு: அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர் – 613 005.

* * *

தருமபுரி மாவட்டத்தில்

உயிர்த்தெழும் பயிர்த்தொழில்

தருமபுரி இயற்கை எழில் கொஞ்சும் மாவட்டம். மலையையும் மலைசார்ந்த பகுதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இம்மாவட்டத்தில் தனிநபர் வருமானத்தை உயர்த்துவது என்பது அவ்வளவு எளிதல்ல. மாவட்டத்தின் பெரும்பாலான பகுதி கிராமமாகும். அதில் வாழும் மக்கள் விவசாயத்தையே நம்பி உள்ளனர். சராசரியாகச் சாகுபடி மேற்கொள்ளப்படும் 1.69 இலட்சம் எக்டேர் பரப்பளவில் 88% சிறு மற்றும் குறு விவசாயி எல்லைக்குட்பட்டே உள்ளது. சவால்கள் வெகு தூரம் இருப்பினும் அதற்கான கூறுகள் மிகவும் குறைவே.

ஆனால், தற்பொழுது இது வெகுவாக மாறி வருகிறது. தருமபுரி மாவட்ட விவசாயிகள் அதிக அளவில் வருமானம் ஈட்டித்தரக் கூடிய மற்றும் சுற்றுச் சூழலில் நிலைத்து நீடித்து இருக்கக் கூடிய புதிய தொழில்நுட்ப அணுகுமுறைகளைத் தைரியமாகக் கையாள முன்வந்துள்ளனர். மாநில அரசின் இத்தகைய ஒருமித்த ஒருங்கிணைக்கக் கூடிய திட்டச் செயல்பாட்டிற்கு விவசாயிகள் அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த இரண்டு ஆண்டு காலத் தொடர் மழையின்மையும், வறட்சியும் நெல், கரும்பு மற்றும் நிலக்கடலை பயிர்ச்சாகுபடிப் பரப்பினைக் கணிசமாகக் குறைத்துள்ளது.

ஆனால், தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பு 2002–2003ஆம் ஆண்டு 19,385 எக்டேரிலிருந்து, 2003–2004ஆம் ஆண்டு 22,378 எக்டேராக பரப்பு அதிகரித்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டசபையின் நிதிநிலை அறிக்கை கூட்டத்தின் பொழுது, அனைவரும் உயர்வடையும் நோக்குடன் கூடிய மாற்றுப்பயிர்த் திட்டத்தினை அறிவித்தார்கள். தமிழகத்தில் முத்தாய்ப்பாக இந்த மாற்றுப் பயிர் திட்டத்திற்கான ஓர் செயல் திட்டத்தினைத் தீட்டி முன் நிற்கிறது தருமபுரி மாவட்டம்.

புழுதிக்கரை என்கிற கிராமத்தில் 28.50 ஏக்கர் தரிசு நிலம் சாகுபடி செய்திட ஏற்றதாக்கி, ஜெட்ரோபா, சொர்க மரம் மற்றும் புங்க மரம் ஆகியன வளர்த்து ஓர் தாவர எரிபொருள் உற்பத்தி மாதிரி பண்ணையம் அமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் சுயஉதவிக் குழுக்களும், அப்பகுதி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுக் குழுக்களும் அதனைப் பராமரித்து அப்பகுதி விவசாயக் குடும்பங்களின் வருமானத்தை

பயிர்	இயல்பான பரப்பு (எக்டரில்)	சாகுபடி பரப்பு (எக்டரில்)		
		2002 – 2003	2003 – 2004	2004 – 2005 (ஆகஸ்ட் 04 வரை)
நெல்	18,259	9,170	4,035	2,585
கரும்பு	17,038	13,553	7,548	5,524
நிலக்கடலை	17,648	5,391	12,932	10,685

உயர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாது, இம்மாவட்டத்தில் செயல்படும் 142 நீர்வடிப்பகுதிக் கிராமங்களில் நீர்வடிப்பகுதி ஒன்றிற்கு 5 எக்டேர் வீதம் மொத்தம் 710 எக்டேர் பரப்பளவில் ஜெட்ரோபா சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. சர்க்கரைச்சோளம் மற்றும் சர்க்கரைக்கிழங்கு ஆகியன கரும்புச் சாகுபடி மேற்கொள்ளப்படும் சுமார் 4,000 எக்டேர் பரப்பளவில் மாற்றுப் பயிராகப் பயிரிட விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

நெல், கரும்பு போன்ற பயிர்களுக்குப் பயிர்க் கடன்கள் வழங்குவதைப் போல் காட்டாமணக்கு, சர்க்கரைச்சோளம் மற்றும் சர்க்கரைக்கிழங்கு பயிர்களுக்கும் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்துள்ள சாகுபடிச் செலவின விவரங்களை நபார்டு மற்றும் முன்னோடி வங்கிகள் மூலம் பயிர்க் கடன்கள் வழங்கும் பட்டியலில் சேர்த்து, விவசாயிகள் பயிர்க் கடன் பெற மாவட்ட நிருவாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும், மேற்கண்ட பயிர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் (Clusters) சாகுபடி செய்யும் விவசாயிகளுக்காகத் தனி திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு அவைகளுக்கு வங்கிகள் 'திட்டங்களின்அடிப்படையில் முதலீடு' (Project Based Investment) செய்யும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநில அரசின் துல்லியப் பண்ணையம் திட்டம் தருமபுரி மாவட்டத்தில் காரிமங்கலம் வட்டாரத்தில் வெற்றிச் சின்னங்களாக வெளிவந்து கொண்டிருப்பதும், இதர வட்டாரங்களில் அதனைச் செயல்படுத்திட நாட்டம் செலுத்தவும், இத்திட்டம் மூலம் பலரும் பயனடைவர் என்பதில் ஐயமில்லை. சுமார் 50 விவசாயிகள் தாமே முன்வந்து இத்தகைய திட்டத்தில் பங்கு கொண்டு வருமானம் ஈட்டித்தரும் காய்கறி பயிர்ச் சாகுபடி மேற்கொள்ள உள்ளனர்.

இந்தத் திட்டத்தின் கீழ், மின் மோட்டார் அல்லது ஆயில் என்ஜின் உதவியுடன் ஆண்டு முழுமையும் நீர்ப்பாசன ஆதாரம் கொண்ட குறைந்தபட்சம் ஒரு எக்டேர் வயல்கள் தேர்வு செய்யப்படும். இதில் இராசயன உரங்கள் திரவ நிலை உர நிருவாகத்துடன் கூடிய சொட்டு நீர்ப் பாசனம் முறை நிறுவப்படும். இதன் மூலம் பயன் பெறும் விவசாயிகள் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குக் காய்கறிப் பயிர்களைச் சாகுபடி செய்தல் வேண்டும். இதற்கான அனைத்துத் தொழில்நுட்ப ஆலோசனைகளும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை மூலம் வழங்கப்படும்.

தேவையினை உணர்ந்து மாறுதலுக்கு உட்பட்ட பயிர்க்கடன் இத்தகைய மாற்றுப்பயிர் திட்டம் செயல்படுத்திட அவசியம். மாவட்ட நிருவாகம் பலரும் விரும்பத்தக்க வகையில், எளிமையாக்கப்பட்ட ரூ. 202 கோடி நிதி ஆதாரம் கொண்ட பல்வேறு பயிர்க் கடன் திட்டம் மூலம் செயல்படுத்திட திட்டமிடப் பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு வழங்கப்பட்ட தொகையினைவிட ரூபாய் 108.50 கோடி கூடுதலாகும். கடன் வழங்கும் நிறுவனங்கள் தங்களின் கடன் வழங்கும் வரன்முறைகளை மாற்றி நீடித்த நிலையான வேளாண்மை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கி ஊக்கப்படுத்திட முன்வந்துள்ளனர்.

தருமபுரி மாவட்டத்தில் சுயஉதவிக்குழு நன்றாக உள்ளது. இருப்பினும் ஒவ்வொரு சிறு மற்றும் குறு விவசாயக் குடும்பத்திலும் ஒரு உறுப்பினரேனும் ஒரு சுயஉதவிக் குழு உறுப்பினராகச் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஓராண்டிற்கு மேல் சுயஉதவிக் குழுக்களாகச் செயல்பட்டு வருகிறது. மாவட்ட நிருவாகம், வட்டார அளவில் சுய வேலை வாய்ப்பிற்கு வழி வகுக்கும் வகையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள உள்ளது. இத்தகைய பணிகள் தொடர் வறட்சியின் போது விவசாய நிலங்களில் வருமானம் இல்லாத பொழுது, ஒவ்வொரு கிராமக் குடும்பத்திற்கும் வருமானத்தை ஈட்டித்தரும் ஓர் அங்கமாக இருக்கும்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 118ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, 14–11–2004 அன்று, சென்னை கத்திபாரா சந்திப்பில் உள்ள பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவச்சிலைக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மாலையணிவித்து மரியாதை செலுத்தினர்.



வேளாண் விரிவாக்கம் எளிமையாக்கப்பட்டு வட்டார அளவில் கருத்தரங்குகளும், விவசாயக் கருத்துப் பரிமாற்றக் குழுக்களும் அமைக்கப்பட்டு துறையின் தொழில் நுட்பம் விவசாயிகளுக்குச் சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேளாண் துறையின் பயிற்சி வழி தொடர்பு திட்டம் திருத்தியமைக்கப்பட்டு விவசாயிகளுக்குப் பயனுள்ள வகையில் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. தொய்வுடன் காணப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை, புத்துணர்வு ஊட்டப்பட்டு வேளாண் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்குத் தெரிவித்து விற்பனைத் தொடர்பினை ஏற்படுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் பயிர்த்தொழில் உயிர்த்தெழ தொடங்கியுள்ளது. சோதனைகள் அதிகமிருப்பினும், வாய்ப்புகள் கூடுதலாக உள்ளது. இதில் ஆரம்ப இடர்பாடுகளும், கஷ்டங்களும் இருக்கும். எனினும், சுற்றுப்புறச் சூழல் பாதகமின்றி வருமானத்தைக் கூட்டித்தரக்கூடிய, மாற்றுப்பயிர்த் திட்டம் தருமபுரி மாவட்ட விவசாயிகளுக்கு வழி வகுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

– மூ.நா. கிருட்டிணசாமி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.

பெயர்ப் பலகைகள் தமிழில் இருக்க வேண்டும்

– மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா
அவர்கள் ஆணை

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் தமிழில் இருக்க வேண்டும் என்றும், மற்ற மொழிகளும் பெயர்ப் பலகைகளில் உபயோகிக்கப்பட்டால், ஆங்கிலம் இரண்டாவது இடத்திலும், இதர மொழிகள் மூன்றாவது இடத்திலும் இருக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு தனது 29.12.1983–ஆம் நாளிட்ட தொழிலாளர் துறை ஆணை எண். 3312 மற்றும் 29.2.1984–ஆம் நாளிட்ட தொழிலாளர் துறை ஆணை எண்.499 ஆகியவற்றின் மூலமாக ஆணைகள் வெளியிட்டது. இந்த ஆணைகளின்படி, பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்துகள், மற்ற மொழி எழுத்துகளைவிட பெரிய அளவில் இருக்க வேண்டும் என்றும், பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழியில் எழுதப்பட்ட பெயருக்கு அதிக இடம் அளிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது. இந்த அரசு ஆணைகள் தற்போதும் நடைமுறையில் உள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்கள் தங்கள் கடைகள் மற்றும் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் இந்த அரசு ஆணைகள் தவறாது கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தற்போது ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த ஆணையை அமல்படுத்தும் வகையில் தொழிலாளர் ஆணையர் தனது சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளார். 1983 மற்றும் 1984–ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசாணைகளின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் தமிழில் இருக்க வேண்டும் என்றும், மற்ற மொழிகள் பெயர்ப் பலகைகளில் உபயோகிக்கப்பட்டால், தமிழ் வடிவம் முதலிலும், ஆங்கில வடிவம் இரண்டாவது இடத்திலும், மற்ற வடிவங்கள் மூன்றாவது இடத்திலும் இருக்க வேண்டும் என்றும், அப்பெயர்ப் பலகைகளில் தமிழ் வடிவத்திற்கு அதிக இடம் அளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தும் இந்த அரசாணையைத் தீவிரமாக அமல்படுத்துமாறு, தொழிலாளர் ஆணையர் தனது துறையின் சார்நிலைஅலுவலர்களுக்கு அந்தச் சுற்றறிக்கையில் அறிவுறுத்தி உள்ளார். மேலும், அந்தச் சுற்றறிக்கையில், மேற்கண்ட விதிகளின்படி பெயர்ப் பலகைகளை அமைக்காத கடைகள், நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களின் மீது தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகள் மற்றும் தமிழ்நாடு உணவு விடுதிகள் விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்து உள்ளார். கடைகள் மற்றும் நிறுவனங்கள் இந்த விதிகளை மீறி நடக்குமாயின், அதற்குச் சம்பந்தப்பட்ட துறை ஆய்வு அலுவலர்களே பொறுப்பாக்கப்படுவார்கள் என்றும் தொழிலாளர் ஆணையர் தமது சுற்றறிக்கையில் தெரிவித்து உள்ளார்.

டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 10–11–2004 அன்று சென்னை தரமணியில், 62.5 கோடி ரூபாய் செலவில், அமெரிக்க நாட்டின் கார்னெல் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப உத்திகளையும், வடிவமைப்பையும் பெற்று, உருவாக்கப்பட்டுள்ள டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவினை (TICEL Bio Park) தொடங்கி வைத்தார்கள்.

உயிரியல் தொழில்நுட்பத் தொழில்களுக்கு உலக அளவில் வரவேற்பு உள்ளதாலும், பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும் என்பதாலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கும் அதன் மேம்பாட்டிற்கும் ஏற்ற வகையில், உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன், உயிரியல் தொழில்நுட்ப பூங்கா ஒன்றினை அமைத்திட 22–4–2003 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் கார்னெல் பல்கலைக்கழக உதவியுடன், அதன் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப உத்திகளைப் பெற்று, 62.5 கோடி ரூபாய் செலவில் தமிழக அரசின் TIDCO நிறுவனத்தின் மூலமாக சென்னை தரமணியில் டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா 1,32,642 சதுர அடி பரப்பளவில் மொத்தம் 6 தளங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

இதில், மொத்தம் 22,000 சதுர அடி பரப்பு கொண்ட தரைத்தளத்தில் நுண்ணுயிரியல் மற்றும் புளித்துப் பொங்கும் திறன் (Micro biology and Fermentation), மூலக்கூறு உயிரியல் (Molecular Biology), தாவரத் திசு வளர்ப்பு (Plant Tissue Culture), விலங்கின திசு வளர்ப்பு (Animal Tissue Culture), பதனிடுதல் (Downstream Processing), பகுப்பாய்வு (Analysis) மற்றும் உயிரியல் சார்ந்த ஆராய்ச்சிகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் வகையில் அனைத்து அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளுடன் 6 நவீன சோதனைக்கூடங்கள் அடங்கிய உயிரியல் வாய்ப்பு வள மையம் (Bio Resource Centre) அமைக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி வழங்கவும், இது அறிவார்ந்த திற நுட்பங்களைப் பெற்றிடவும், வீடியோ கலந்தாய்வு மையத்துடன் கூடிய பயிற்சி மையம் ஒன்றும் இங்கே அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு முன்னணி ஆய்வு நிறுவனங்களுடன் சேர்ந்து, ஆராய்ச்சி மேற்கொள்ளவும் டைசல் திட்டமிட்டுள்ளது.

ஏனைய 5 தளங்களும், உயிரியல் ஆராய்ச்சி மையங்கள் நிறுவிட முன்வரும் நிறுவனங்

களுக்கும், தனியாருக்கும் ஒதுக்கீடு செய்து தரப்படும். இந்தப் பகுதிகள், இரண்டு மற்றும் மூன்றாம் நிலை உயிரி பாதுகாப்பு அளவு (Bio Safety Level - BSL-2 & BSL-3) கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையங்கள் அமைத்திட விரும்புவோர் இந்த இடத்தை வாடகைக்கோ, குத்தகைக்கோ பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் விரும்பினால் விலை கொடுத்து உரிமையாக்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்படும். நிறுவனங்களுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர், அழுத்தக்காற்று, வெற்றிடம் ஏற்படுத்தும் வசதி மற்றும் ஆய்வகப் பணிகளுக்குத் தேவைப்படும் கனிமம் நீக்கப்பட்ட தண்ணீர் ஆகிய வசதிகள் தடையின்றி கிடைத்திட தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆய்வகத்திற்குத் தேவையான வடிகட்டப்பட்ட தூய காற்று வசதியளிக்கும் ஒருமுகப்படுத்தப்பட்ட குளிர்சாதன வசதி, மின்சாரத் தேவைகளை சமாளிக்க 100% ஜெனரேட்டர் வசதிகள், ஆய்வகக் கழிவுகளை செம்மைப்படுத்தி அகற்றுதல் ஆகிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மழை நீர் சேகரிப்பு வசதிகள் உரிய முறையில் செய்யப்பட்டுள்ளன.

தற்போது, டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவில் எஸ்.ஜி.எஸ். இந்தியா நிறுவனம் 15,250 சதுர அடியையும், விம்டா லேப்ஸ் நிறுவனம் 12,200 சதுர அடியையும், பிராண்டியர் லைப் லைன் நிறுவனம் 1,525 சதுர அடியையும் வாடகைக்கு எடுத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் உயிரியல் தொழில்நுட்பத் தொழில்களின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான உந்துசக்தியை அளிக்கும் மையமாக டைசல் தொழில்நுட்பப் பூங்கா விளங்கும். இதன் மூலம் முதற்கட்டமாக 1,500 பேர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும். இதன் செயல்பாடுகளால் அடுத்த 5 ஆண்டுகளில் ரூபாய் 1000 கோடிக்கு உயிரியல் தொழில்நுட்ப முதலீடுகளை தமிழகம் ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் உயிரியல் தொழில்நுட்ப மேம்பாட்டின் செயல் மையமாகத் திகழும் வகையில் தரமணியில் 62.5 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 10–11–2004 அன்று தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன், தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., தொழில்துறை செயலாளர், டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவின் தலைவர் திரு. ரமேஷ் ராம் மிஸ்ரா, இ.ஆ.ப., டைசல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவின் மேலாண்மை இயக்குநர் திரு. கே.ஆர். விசுவநாதன் ஆகியோர் பங்கேற்றனர். ✶

வீரதீரச் சாகசச் செயல்கள் புரிந்த அதிரடிப்படையினருக்குச் சிறப்பு காவல் பதக்கங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை (28.10.2004)

காட்டுக் கொள்ளையன் வீரப்பனையும், அவனது கும்பலையும் ஒழித்துக் கட்டித் தமிழகம் மற்றும் கர்நாடக மக்கள் அமைதியுடன் வாழ வழி அமைத்துக் கொடுத்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையினரைக் கௌரவிக்கும் வகையில், அவர்கள் அனைவருக்கும் ஒரு படி பதவி உயர்வு, தலா 3 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் வீட்டு மனைகள் வழங்கப்படும் என்று நான் அறிவித்து, 30.10.2004 அன்று சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற உள்ள விழாவில் இந்தப் பரிசுகளை வழங்க உள்ளேன்.

வீரதீரச் சாகசச் செயல்கள் புரிந்த அதிரடிப் படையினருக்கு மேலும் சிறப்பு செய்யும் வகையில், கீழ்கண்ட 'சிறப்பு காவல் பதக்கங்களை' (Special Police Medals) வழங்கிட நான் முடிவெடுத்துள்ளேன்.

தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையில் பணியாற்றிய காலத்தில் வீரதீரம் மற்றும் சாகசச் செயல்கள் புரிந்த காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்குத் "தமிழக முதலமைச்சரின் சிறப்பு அதிரடிப்படை வீரதீரச் செயல் பதக்கம்" (Tamil Nadu Chief Minister's Police Medal for Gallantry Bravery and Heroic Action) என்னும் பெயரில் தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

வீரப்பனுக்கும், அவனது கும்பலுக்கும் எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளில் காயம் அடைந்த காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்குத் "தமிழக முதலமைச்சரின் சிறப்பு அதிரடிப்படை வீர விழுப்புண் பதக்கம்" (Tamil Nadu Chief Minister's Special Task Force Injury Medal) என்னும் பெயரில் தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும்.

மேலே குறிப்பிட்ட வீரதீரச் செயல் பதக்கம் மற்றும் வீர விழுப்புண் பதக்கம் ஆகிய இரு பதக்கங்களைப் பெறுபவர்களைத் தவிர்த்து, சிறப்பு அதிரடிப்படையில் தற்போது பணிபுரியும் அனைவரும் "தமிழக முதலமைச்சரின் சிறப்பு அதிரடிப்படை பங்கேற்பு பதக்கம்" (Tamil Nadu Chief Minister's Special Task Force Participation Medal) என்னும் பெயரில் தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும்.

மேலும், சிறப்பு அதிரடிப்படையில் இதற்கு முன்னதாகக் குறைந்தது இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்து தற்போது வெவ்வேறு பிரிவுகளில் பணியாற்றி வரும் காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களும் இந்த வெள்ளிப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள். அவர்களும் 30.10.2004 அன்று நடைபெறவுள்ள விழாவில் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொள்ள அழைக்கப் படுவார்கள்.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனை ஒழித்துக் கட்டும் பணியில் முன்னர் நடந்த மோதல்களில் தங்களது இன்னுயிரை இழந்தவர்கள் மற்றும் காயம் அடைந்தவர்களின் தியாகத்தை மறந்து விடாமல் அவர்களுக்குத் தகுந்த கௌரவம் அளித்திட வேண்டும் என்பது என்னுடைய எண்ணமாகும்.

அதன் அடிப்படையில், தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்த சிறப்பு அதிரடிப்படை. காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களின் குடும்பங்களுக்குத் தற்போதுள்ள நடைமுறை விதிகளின்படி 10 இலட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்கப்படுகிறது. ஆனால்,

திரு.நாகராஜ் அவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவியாக 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மட்டும் வழங்கப் பட்டிருப்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. எனவே, கருணைத் தொகை மொத்தம் 10 இலட்சம் ரூபாய் என்ற அளவில், ஏற்கெனவே அளிக்கப்பட்ட இந்த 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் போக, மீதமுள்ள 8 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயை தற்போது ரொக்கமாக அவரது மனைவி திருமதி. மாதேஸ்வரி அவர்களுக்கு வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன்.

அதேபோல, சிறப்பு அதிரடிப்படையில் பணியாற்றி வீரப்பனுக்கு எதிரான முந்தைய நடவடிக்கைகளில் காயமுற்ற காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள், மொத்த நிதி உதவியாக 3 இலட்சம் ரூபாய் பெறும் வகையில், அவர்கள் குழுகாப்பீடாகவும், கருணைத் தொகையாகவும் முன்னர் பெற்ற தொகை போக, மீதமுள்ள தொகையை ரொக்கமாக தற்போது வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன். மேலும் காயமடைந்த அனைவருக்கும் அவர்கள் விரும்புகிற இடத்தில் வீட்டுமனை வழங்கிடவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இதுவன்றி, காட்டுக் கொள்ளையன் வீரப்பனை வீழ்த்த சிறப்பு அதிரடிப்படைக்கு உதவிய வனத்துறை அலுவலர் மற்றும் காவலர்களுக்கு உரிய சிறப்பு செய்திட வேண்டும் என்னும் நோக்கத்துடன், அவர்களுடைய பணியைப் பாராட்டி கீழ்கண்ட அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

1. முன்பு, சிறப்பு அதிரடிப்படைய்டன் சென்று தாக்குதலில் காயம்பட்ட வனவர் திரு.பி.அழகேசன் அவர்களுக்கு, 1 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

2. வனப் பகுதியில் அதிரடிப்படையுடன் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட 8 வனச்சரகர்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

3. சிறப்பு அதிரடிப்படையுடன் இணைந்து பணியாற்றிய வனவர் (Forester) வனக் காப்பாளர் (Forest Guard) மற்றும் வனக் காவலர் (Forest Watcher) ஆகிய நிலைகளில் உள்ள 42 வன அலுவலர்களுக்கு ஒரு படி பதவி உயர்வும், 1 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்படும்.

4. வீரப்பனுடன் முன்னர் நடந்த தாக்குதலின் போது 1993–ஆம் ஆண்டில் தங்கள் உயிரினை இழந்த வனத்துறை பணியாளர்கள் இருவரின் குடும்பங் களுக்கு நிதி உதவியாக தலா 10 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு முன்னதாக வீரப்பனால் கொல்லப்பட்ட சேலத்தைச் சேர்ந்த வனச் சரகர் திரு.வி.சிதம்பரம், அந்தியூரைச் சேர்ந்த வனக் காப்பாளர் திரு.என்.பழனிச்சாமி, திருச்செங் கோட்டைச் சேர்ந்த வனக் காப்பாளர் திரு.எம்.எஸ்.சுப்பிரமணியம் ஆகியோரின் குடும்பங்களுக்கு மிகச் சிறிய அளவிலான தொகை மட்டுமே வழங்கப்பட்டிருப்பது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. தமது இன்னுயிரை இழந்த அவர்களது தியாகத்தைப் போற்றி அவர்களது குடும்பங்களுக்கும் தலா மொத்தம் 10 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கும் வகையில், ஏற்கெனவே வழங்கப்பட்ட நிதி உதவி போக, மீதமுள்ள தொகை தற்போது ரொக்கமாக வழங்கப்படும்.

5. காயம் அடைந்த வனவர் திரு.பி.அழகேசன் அவர்களுக்கு தமிழக முதலமைச்சரின் வீரவிழுப்புண் பதக்கமும், வீரப்பனைப் பிடித்திட உதவிடும் வகையில் பணியாற்றிய 50 வனப் பணியாளர் களுக்கு தமிழக முதலமைச்சரின் சிறப்பு அதிரடிப் படை பங்கேற்பு பதக்கமும் வழங்கப்படும்.

6. சிறப்பு அதிரடிப்படையுடன் பணி புரிந்த 105 தினக் கூலித் தோட்டக் காவலர்கள், வனம் மற்றும் தோட்டக் காவலர்களாக முறையான தொகுப்பு ஊதியத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்கள்.

வீரப்பனை ஒழித்துக் கட்டும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, பணியாற்றிய எவரும் – அவர்கள் ஆற்றிய பணி சிறியதாயினும் அல்லது பெரியதாயினும் சரி – அதற்குரிய சிறப்பை அவர்களுக்கு வழங்காமல் விட்டுவிடக் கூடாது என்ற சீரிய நோக்கத்துடன் மேற்காணும் அறிவிப்புகளை நான் வெளியிட்டுள்ளேன். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்தப் பரிசுகளும், பதக்கங்களும் இம்மாதம் 30–ஆம் தேதி நடைபெற உள்ள விழாவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீரப்பனை பிடிக்கின்ற பணியில் ஈடுபட்டு தங்களது இன்னுயிரை இழந்த தமிழக சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்களின் வீரத்தை, எதிர்காலச் சந்ததியினரும் போற்றிட வேண்டும் என்பது எனது விருப்பமாகும். எனவே அவர்களது தீரச் செயலை என்றென்றும் நினைவு கொள்ளும் வகையில், நினைவுச் சின்னம் ஒன்றினை எழுப்பிட நான் ஆணையிட்டுள்ளேன். இந்த நினைவுச் சின்னத்தை காணுகின்ற இளைய தலைமுறையினர் வீர உணர்வுபெற்று, தங்களது வாழ்க்கையில் தீரச் செயல்கள் புரிந்திட இது தூண்டு கோலாக அமையும். இந்த நினைவுச் சின்னம் புதிதாகக் கட்டப்பட உள்ள காவலர் பயிற்சிக் கழக (Police Academy) வளாகத்தில் அமைக்கப்படும்.

வீரப்பனின் கொடுமைக்கு ஆளாகி, அவனால் கொலை செய்யப்பட்ட மலை வாழ் மக்கள் மற்றும் ஏனையோர் பற்றிய முழு விவரங்களை உடனடியாகச் சேகரிக்குமாறு அதிகாரிகளுக்கு நான் ஆணையிட்டு உள்ளேன். இது பற்றிய விவரங்கள் கிடைக்கப்பெற்ற உடன், அந்தக் குடும்பங்களுக்கு தகுந்த நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு, அவர்கள் மறுவாழ்வு பெறும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்வதில் மனநிறைவு அடைகிறேன்.

❖ ❖ ❖

தமிழ்நாடு காவல்துறை இந்தியாவிலேயே இணையற்ற காவல்படை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

இந்நாள் தமிழகக் காவல் துறை வரலாற்றிலேயே ஒரு பொன்னாள்! தமிழகக் காவல் துறைக்கு மட்டும் அல்லாமல் தமிழகம் முழுமைக்குமே ஒரு திருநாள்!

தமிழக வரலாற்றில் 2004–ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க ஆண்டாக ஆகியிருக்கிறது. இல்லை, ஆக்கப்பட்டிருக்கிறது! நாம் ஆக்கி இருக்கிறோம்! கடந்த நூற்றாண்டின் கடைசிப் பகுதியிலே எடுக்கப்பட்ட முயற்சிக்கு இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலே வெற்றி கிடைத்து இருக்கிறது.

இது மகத்தான வெற்றியா? ஆம், மகத்தான வெற்றி தான்! 20 ஆண்டுகளாக இரவும் பகலும் நடைபெற்று வந்த ஒரு போராட்டம் இருபதே நிமிடங்களில் முடித்து வைக்கப்பட்டு இருக்கிறது என்பது சாதாரண விஷயமா? அந்த வெற்றி சாதாரண வெற்றியா? அந்த வெற்றியைச் சாதித்துக் கொடுத்த நீங்கள்தான் சாதாரணமானவர்களா?

அசாதாரண ஆற்றலோடு, அசாதாரணப் பொறுமையுடன், அசாதாரண விவேகத்தின்

துணையோடு, அசாதாரண வீரத்தால், அசாதாரண வெற்றியைப் படைத்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை வீரர்களாகிய உங்களைப் பாராட்டச் சாதாரண விழா போதாது என்றுதான் இந்த மகத்தான விழாவுக்கு நான் ஏற்பாடு செய்தேன்.

உங்களோடு இன்று உங்கள் குடும்பத்தாரும் இந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன்.

இத்தனை சிறப்புகளை இன்று நீங்கள் பெறுவது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அந்தச் சிறப்புகளை உங்கள் குடும்பத்தார் சூழ்ந்திருக்க நீங்கள் பெறுவதோ உங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி அளிக்கும். அதைக் கண்ணார நேரில் காண்பதில் உங்கள் குடும்பத்தாரும் களிப்படைவார்கள். அதற்காகவே வீரப்பனையும் அவன் கூட்டாளிகளையும் வீழ்த்திய உங்களுக்குப் பாராட்டு விழாவை உங்கள் குடும்பத்தார் முன்னிலையிலேயே நடத்த நான் விரும்பினேன்.

போராடும்போது தனியாக நின்றீர்கள்! பெற்ற வெற்றிக்கு வாகை சூடும் வேளையிலோ குடும்பத்தாருடன் வந்திருக்கிறீர்கள்! அன்று ஒரு தாய் பெற்ற மக்களாகப் போராடினீர்கள்! இன்று ஒரே குடும்பமாகக் கூடியுள்ளீர்கள். இந்தக் காட்சியின் மாட்சிக்காகவே இத்தனை ஏற்பாடுகளைச் செய்து, இந்த விழாவை மறக்க முடியாத விழாவாக நான் உங்களுக்கு உருவாக்கித் தந்திருக்கிறேன்.

இரக்கமற்ற கொடியவன் வீரப்பனையும் அவன் கூட்டாளிகளையும் எதிர்த்து நடத்திய அசுர வேட்டை 20 ஆண்டு காலம் நடைபெற்றது. 20 நிமிட சாகசச் செயல் அதற்கு வெற்றிகரமாக முற்றுப் புள்ளி வைத்தது.

இரண்டே வரிகளில் இவ்வாறு சுருங்கச் சொன்னாலும் இடைப்பட்ட காலத்தில் வீரப்பன் நடத்திய கொலைகள் எத்தனை? கொள்ளைகள் எத்தனை? கொடுமைகள் எத்தனை? அவற்றை எதிர்த்துக் காவல் துறை வீரர்களும், வனத் துறை வீரர்களும், பொது மக்களும் செய்த தியாகங்கள் தான் எத்தனை, எத்தனை?

மனித உயிர்களை மலிவாகக் கருதிய வீரப்பன் செய்த படுகொலைகள், அழித்து நாசமாக்கிய அரிய வன வளங்கள், கொன்று குவித்த யானைகள் – ஆகியவற்றைக் கண நேரம் நினைத்துப் பாருங்கள்.

இவற்றை எல்லாம், பொறுப்புள்ள எந்த அரசால் தான் சகித்துக் கொள்ள இயலும்? எனவேதான் பயங்கரக் கொள்ளைக்காரனும் அவனுடைய கூட்டாளிகளும் ஏற்படுத்தி வந்த இன்னல்களுக்கு முடிவு கட்டும் வகையில் 1993–ஆம் ஆண்டு நான் சிறப்பு அதிரடிப்படையை உருவாக்கினேன். 1996–ஆம் ஆண்டு என்னுடைய ஆட்சிக் காலம் முடிவடையும் வரையில் வீரப்பனைப் பிடிக்கும் முயற்சிகள் தொய்வு இல்லாமல் தொடரப்பட்டன. வீரப்பனின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. அவனுடைய கூட்டாளிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது.

தமிழ்நாடு காவல் துறை சிறந்த காவல் படை – இந்தியாவிலேயே இணையற்ற காவல் படை – என்பதை நான் எப்போதும் வலியுறுத்தி வந்திருக்கிறேன். தமிழ்நாடு காவல் துறையின் திறமையிலும், அதன் அர்ப்பணிப்பு உணர்விலும் எனக்கு எப்போதும் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. பணியின் கடுமை காரணமாகவும், பொல்லாதவர்களின் பொய்ப் பிரச்சாரம் காரணமாகவும், உங்கள் மீது உங்களுக்குக் கூட கொஞ்சம் நம்பிக்கை குறைந்து இருக்கலாம். ஆனால், இந்த நாட்டிலேயே உங்கள் மீது வைத்த நம்பிக்கை ஒரு சிறிதும் குறையாதவர் ஒருவர் உண்டு என்றால், அவர் உங்கள் அன்புக்குரிய முதலமைச்சர் ஒருவர்தான்.

ஆனால், அதற்குப் பின் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு வீரப்பனைப் பிடிப்பதில் ஏதாவது அக்கறை காட்டியதா? அந்த அரசு நான் அமைத்த சிறப்பு அதிரடிப்படையின் நடவடிக்கைகளை நிறுத்தியது; அதனைச் செயல் அற்றதாக ஆக்கியது. அதனால் சிறப்பு அதிரடிப்படை பயன் அற்றதாகப் போனது. இது தானே முந்தைய ஆட்சியில் நடந்தது?

2001–ஆம் ஆண்டு நான் மீண்டும் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றேன். உடனே, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படைக்குப் புத்துயிர் அளித்தேன். அதை உயிர்த் துடிப்புள்ளதாக ஆக்கினேன். நான் பொறுப்பு ஏற்ற பிறகுதான், தமிழக சிறப்பு அதிரடிப் படைக்கும், கர்நாடக அதிரடிப் படைக்கும் சுமுகமான அணுகுமுறை ஏற்பட்டது. சிறப்பு அதிரடிப் படைக்கான வீரர்களை உடல் தகுதி மற்றும் மன உறுதி ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களது ஆர்வத்தினைக் கருத்தில் கொண்டு தெரிவு செய்ததோடு, நவீன ரக துப்பாக்கிகள், புதிய வகைக் கருவிகள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றை அவர்களுக்கு வழங்கினேன். உளவுப் பிரிவுத் தகவல் என்பது எந்த ஒரு நடவடிக்கையின் வெற்றிக்கும் அடிப்படையான ஆதாரம் என்பதால் நுண்ணறிவுப் பிரிவைப் பலப்படுத்தினேன். இத்தனைக்கும் மேலாக கொடியவன் வீரப்பனைப் பிடிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதிரடிப்படையை முற்றிலும் சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்தேன்.

இவ்வாறு இன்றைய வெற்றிக்கான ஒவ்வொரு அம்சத்தையும் தீர்க்கமாக ஆராய்ந்து தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படைக்குத் தேவையான வசதிகளை எல்லாம் வழங்கி அதற்கு இலக்கையும் நான் நிர்மாணித்துத் தந்தேன்.

வீரத்தில் சிறந்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படை வீரர்களாகிய நீங்களும் பசி, தாகம் இவற்றை மறந்து கண் துஞ்சாது கடமையிலே கருத்தாய் இருந்தீர்கள். அப்படி இருந்தும் இவற்றுக்கெல்லாம் பாராட்டு கிடைத்ததா? பாராட்டு கிடைக்காவிட்டால் கூடப் பரவாயில்லை! எள்ளி நகையாடியவர் எத்தனை பேர்! வீரப்பனைப் பிடிக்க மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் சிலரால் கேலி செய்யப்பட்டனவே! 2003–2004–ஆம் ஆண்டுக்கான காவல் துறை மானியக் கோரிக்கை மீது சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதங்களுக்குப் பதில் அளிக்கும் போது ஏளனம் செய்தவர்களுக்கும், எகத்தாளமாய்க் கேள்வி கேட்டவர்களுக்கும் ஏற்ற பதிலை நான் அளித்தேன்.

ஐந்தாண்டு காலம் எனக்கு முன் ஆட்சி நடத்தியவர்கள் என்ன செய்தார்கள்? வீரப்பனோடு கண்ணாமூச்சி ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தார்கள்!

குப்பை மீது கோழி பிடிக்கப் போனவர்கள் ––

கோழிப் பிடிப்பதாகப் பாவலா காட்டிக் கொண்டிருந்தவர்கள் ––

'கோழியே கோழியே! நீ முட்டை கொடுத்தால் போதும், நிச்சயம் உன்னைப் பிடிக்க மாட்டோம்!' என்று திருட்டுக் கோழியிடம் திரை மறைவு ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் ––

'தூதர்கள்' என்று அழைக்கப்பட்டவர்களின் துணையோடு பேரம் பேசியவர்கள்--

கடத்தப்பட்டவர்களை மீட்கும் நாடகத்துக்குக் கதை வசனம் எழுதியவர்கள் --

அதில் காசு பார்த்தவர்கள் --

இவர்கள் எல்லாம் யார் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்; நாட்டு மக்களும் மிக நன்றாக அறிவார்கள்.

இப்படி தீமைக்குப் பக்க மேளம் வாசித்துக் கொண்டிருந்தவர்கள் பகடி செய்த போதும் சட்டமன்றப் பேரவையில் நான் அன்று சொன்ன



வாசகம் இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

"வீரப்பனைப் பிடிப்பது ஒன்றுதான் பாக்கி. அதையும் விரைவில் செய்து முடிப்போம்" என்று அன்று நான் முழக்கம் இட்டேன்.

சொன்னதைச் சொன்னபடி இன்று நீங்கள் நடத்திக் காட்டி இருக்கிறீர்கள்!

தமிழ்நாடு காவல் துறை சிறந்த காவல் படை – இந்தியாவிலேயே இணையற்ற காவல் படை – என்பதை நான் எப்போதும் வலியுறுத்தி வந்திருக்கிறேன். தமிழ்நாடு காவல் துறையின் திறமையிலும், அதன் அர்ப்பணிப்பு உணர்விலும் எனக்கு எப்போதும் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. பணியின் கடுமை காரணமாகவும், பொல்லாதவர்களின் பொய்ப் பிரச்சாரம் காரணமாகவும், உங்கள் மீது உங்களுக்குக் கூட கொஞ்சம் நம்பிக்கை குறைந்து இருக்கலாம். ஆனால், இந்த நாட்டிலேயே உங்கள் மீது வைத்த நம்பிக்கை ஒரு சிறிதும் குறையாதவர் ஒருவர் உண்டு என்றால், அவர் உங்கள் அன்புக்குரிய முதலமைச்சர் ஒருவர்தான்.

'மாயமான் மாரீசன்' போல எப்போதும் நழுவி வந்தான் வீரப்பன். அந்த வீரப்பனையும், அவன் கூட்டாளிகளையும் நிச்சயம் நீங்கள் பிடிப்பீர்கள் அல்லது முடிப்பீர்கள் என்பதை நான் அறிந்திருந்தேன்.

20 ஆயிரம் சதுர மைல் பரப்புள்ள அடர்ந்த காடு அங்கே விஷம் கக்கும் பாம்புக்கும், கொட்டு

தேளுக்கும், கடும் புலிக்கும், கரடிக்கும், கடும் பசிக்கும், கொடு நோய்க்கும் அஞ்சாது குள்ள நரி வீரப்பனின் கொடுமைகளுக்கும் பயப்படாது அயராது பாடுபட்டு அக்டோபர் 18–ஆம் நாள் கொடுமையைக் கொன்று அமைதியை மீட்டுத் தந்த வீரர்களே, உங்களைப் பாராட்டுகிறேன்!

அபாயகரமான இந்தப் பணியை விரும்பி மேற்கொண்டு தங்கள் குடும்பங்களை விட்டுப் பல ஆண்டுகளாகப் பிரிந்திருந்து தங்கள் பாதுகாப்பையும் தங்கள் இல்லத்தின் வசதிகளையும் துறந்திருந்த சிறப்பு அதிரடிப் படையின் தலைவரும், கூடுதல் காவல் துறை இயக்குநருமாகிய திரு. கே. விஜயகுமார் முதலாக, சிறப்பு அதிரடிப் படையின் கடைசிக் காவலர் வரைக்கும் – அதிகாரிகள் முதலாக சமையல்காரர் மற்றும் ஏவலர் வரைக்கும் உள்ள அனைவருக்கும் – கொலைகாரப் பேரழிவில் இருந்து நமது மக்களைக் காப்பாற்றியுள்ள அற்புதச் சாதனைக்காக ஒவ்வொருவருக்கும் ஒரு படி பதவி உயர்வு, தலா 3 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் வீட்டு மனை ஆகியவற்றை நான் மகிழ்ச்சிப் பெருக்கோடு வழங்கியுள்ளேன்.

அது மட்டுமின்றி, உங்களது செயல்திறனை அறிந்து நீங்கள் புரிந்துள்ள தியாகத்தை உணர்ந்து வீரதீர சாகசச் செயல்கள் ஆற்றியமைக்கும், வீரவிழுப்புண் பெற்றமைக்கும் இப்பணியில் பங்கேற்றமைக்கும் மனமுவந்து பாராட்டி, தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை அணிவித்து மகிழ்ந்துள்ளேன்.

இரக்கமில்லா அரக்கன் வீரப்பனை ஒழித்துக் கட்டும் பணியில் துணிவுடன் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் ஒருவர் கூட உரிய சிறப்புச் செய்யப்படாமல் விடுபட்டுவிடக் கூடாது என்ற உணர்வுடன் சிறப்பு அதிரடிப் படையுடன் இணைந்து பணியாற்றிய வனவர் முதல் வனத் தோட்டக் காவலர் வரையிலான வனத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கும் ஒரு படி பதவி உயர்வு, ரொக்கப் பரிசு ஆகிய பரிசுகள் வழங்கியும், வீரப் பதக்கங்கள் அணிவித்தும் கௌரவித்துள்ளேன்.

வீரப்பனைப் பிடிக்கின்ற பணியில் ஈடுபட்டு தங்களது இன்னுயிரை இழந்த தமிழக சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்களின் வீரத்தை எதிர்காலச் சந்ததியினர் போற்றிட வேண்டும் என்பதற்காக, அவர்களது தீரச்செயலை என்றென்றும் நினைவுகொள்ளும் வகையில் நினைவுச்சின்னம் ஒன்றினைப் புதிதாக கட்டப்பட உள்ள காவலர் பயிற்சிக் கழக வளாகத்தில், அதாவது Police Academy வளாகத்தில் அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன். இந்த நினைவுச் சின்னத்தைக் காணுகின்ற இளைய தலைமுறையினர் வீர உணர்வு பெற்று இந்த நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காகத் தன்னலம் கருதாது உழைத்திடவும் – தங்களது வாழ்க்கையில் தீரச் செயல்கள் புரிந்திடவும் – இது தூண்டுகோலாகத் திகழும்.

தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை பெற்ற வெற்றியை இன்று நாடு பாராட்டுகிறது. ஏன்? உலகமே பாராட்டுகிறது. ஆனால், சில உள்ளூர் மனிதர்களுக்குப் பாராட்ட மனம் வரவில்லை. ஒரு வேளை அவர்களது மனம் பாராட்ட நினைத்தாலும், அவர்களது வாய் ஒத்துழைக்க மறுக்கிறதோ என்னவோ! காரணம், என்றைக்கும் நல்லதை அவர்கள் பாராட்டியதே இல்லை. 20 ஆண்டு காலப் போராட்டத்துக்கு இறுதியில் ஒரு வெற்றி கிடைத்து இருக்கிறது. இது இமாலய வெற்றி! உலகமே அதைக் கொண்டாடும் போது ஒரு சிலர் அதைப் பற்றி என்ன குறை சொல்லலாம் என்பதிலேயே குறியாக இருக்கிறார்களே? அவர்களைப் பற்றி என்ன சொல்வது? அதிரடிப்படையினரின் வீரத்தையும், தீரத்தையும் அவர்கள் செய்த தியாகத்தையும் கொச்சைப்படுத்துகின்ற இவர்களைப் பார்த்து இந்த நாடே எள்ளி நகையாடுகிறது.

இந்த நேரத்தில் காவல் துறையைச் சேர்ந்த அனைவருக்கும் உங்கள் வாயிலாக நான் ஒரு வேண்டுகோளை முன் வைக்கிறேன். தீரத்தில் சிறந்த தமிழகக் காவல் துறை, திறமையில் சிறந்த தமிழகக் காவல் துறை, உழைப்பில் சிறந்த தமிழகக் காவல் துறை பழி வராத வண்ணம் பணியாற்ற வேண்டும். புகழ் வரும் என்றால் அதற்காக உயிரையும் தரலாம். ஆனால், பழி வரும் என்றால் உலகமே பரிசாகக் கிடைத்தாலும் அதனை ஒதுக்கி விட வேண்டும். இது தானே தமிழர் நெறி!

தமிழர்கள் நுண்ணறிவு மிக்கவர்கள். தமிழகக் காவல் துறை நுட்பமாக உணரும் திறன் உடையது. ஆகவே, வாழ்வாங்கு வாழ வழி சொன்ன வள்ளுவப் பெருமானின் வாய் மொழி ஒன்றை நான் இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

ஒருவரது பெருமைக்கும், அவரது சிறுமைக்கும் அவர் செய்யும் செயலே உரை கல்லாகும் என்பது தான் இந்தக் குறளின் பொருள். இந்தத் திருக்குறளை தமிழகக் காவல் துறையினர் என்றைக்கும் நினைவில் கொள்ள வேண்டும்; நிச்சயம் பின்பற்ற

வேண்டும் என்பது என் எதிர்பார்ப்பு! இது என் எதிர்பார்ப்பு மட்டும் அல்ல, இந்த நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் கூட!

நீங்கள் மகத்தான செயலைச் செய்துதான் மகத்தானப் புகழைப் பெற்று இருக்கிறீர்கள். செயல் என்பது செடியானால் புகழ் என்பது பூவாகும்! புகழ் என்பது வீரச் செயலின் விழுமிய நறுமணம்! அந்த நறுமணத்தை உணர்ந்த நன்றிப் பெருக்குதான் இன்று நடைபெறும் இந்த விழா!

கொடியவன் வீரப்பனைப் பிடித்தே ஆக வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் திரு. வால்டர் தேவாரம் அவர்களை அதிரடிப்படைத் தலைவராக முதலில் நான் நியமித்தேன். திரு.தேவாரம் அவர்கள் சிறப்புடன் பணியாற்றி 100 பேராக இருந்த வீரப்பன் கும்பலை ஐந்து பேராகக் குறைத்தார். அடர்ந்த காட்டின் உட்பகுதியில் இருந்து கொண்டு தமிழகத்தின் நலனைத் துச்சமென நினைத்த தீயவர்களின் துணையுடன் தமிழகத்தை ஆட்டிப் படைக்க எண்ணிய வீரப்பனின் மன உறுதியைக் குலைத்து அவனது நம்பிக்கையைத் தகர்த்தார்.

அதே போல, இன்றைக்குச் சென்னை மாநகரத்தின் காவல் துறை ஆணையராகப் பணியாற்றி கொண்டிருக்கும் திரு. ஆர்.நடராஜ் அவர்கள் வீரப்பனை ஒழித்துக் கட்டிய இன்றைய வெற்றிக்கு அடித்தளம் அமைத்துத் தந்தார். திரு. ஆர். நடராஜ் சிறப்பு அதிரடிப்படையின் தலைவராக இருந்து கொலைகாரன் வீரப்பனுக்கு அஞ்ச வேண்டியது இல்லை என்ற துணிவை மலைவாழ் மக்களுக்கும் உள்ளூர் பகுதி மக்களுக்கும் அளித்தார். அவர்களின்

மேம்பாட்டுக்காக உளப்பூர்வமாகப் பணியாற்றி சிறப்பு அதிரடிப்படையின்பால் அவர்களை நம்பிக்கை கொள்ள வைத்தார். உளவுத் தகவல்களைத் துல்லியமாகப் பெற்றிடும் வகையில் நுண்ணறிவுப் பிரிவைப் பலப்படுத்தினார். வீரப்பனை எப்படியும் வெற்றிக் கொண்டே தீருவோம் என்று சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் உறுதி பூண ஒரு தூண்டுகோலாகத் திகழ்ந்தார்.

இப்படி தனக்கு முன்னே இருந்த சிறப்பு அதிரடிப் படைத் தலைவர்கள் அமைத்து தந்த அடித்தளத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு வீர உணர்வையும், விழுமிய திறத்தையும் வெளிப்படுத்தி மதி நுட்பத்துடன் சிறந்த உத்திகளைக் கையாண்டு இன்றைய சிறப்பு அதிரடிப்படைத் தலைவர் திரு. கே. விஜயகுமார் வீரப்பனை ஒழித்துக் கட்டியதன் மூலம் மகத்தான சாதனை படைத்துள்ளார். திரு. விஜயகுமார் அவர்கள் நிகழ்த்தியுள்ள இந்தச் சாதனை, உலகப் புகழ்மிகு சாதனை! காலம் காலமாகச் சரித்திரத்திலே இடம் பெறப் போகும் சாதனை!

இப்படிப்பட்ட சரித்திரச் சாதனை படைத்த இவர்களுக்குத் தங்கப் பதக்கம் அணிவித்துப் பரிசுகள் வழங்கியதில் உள்ளபடியே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

'செயலைச் செய்! பலனை எதிர்பாராதே!' என்கிறது பகவத் கீதை. எல்லாச் செயலுக்கும் பலன் உண்டு. ஆனால் பலனை நினைத்துக் கொண்டே இருப்பவர்களால் செயலைச் சிறப்பாகச் செய்ய முடியாது. நீங்கள் பலன் கருதாது பாடுபட்டீர்கள்; இன்று உங்களுக்குக் கை மேல் பலன் கிடைத்து இருக்கிறது! சாதாரண பலன் அல்ல! உங்கள் தலைமுறைகள் நினைவு கூறப்போகிற பலன்! எதிர்காலத்தில் உங்கள் பேரப் பிள்ளைகள் "என்ன Reward கிடைத்தது தாத்தா?" என்று கேட்டால், "இதோ Award கிடைத்தது" என்று சொல்லி ஒரு பதக்கத்தை மட்டும் காட்டாமல், "என்ன Reward என்றா கேட்டாய்? இன்றைக்கு நாம் இருக்கிற இந்த இடமே என் வீரத்துக்குப் பரிசாக எங்கள் முதலமைச்சர் அம்மா கொடுத்தது அல்லவா!" என்று நீங்கள் கூறும் வண்ணம் உங்களது வீரத்துக்குப் பரிசாக வீட்டு மனை வழங்கியிருக்கிறேன்.

வீரத்துக்கு வீட்டு மனை பரிசா? என்று சிலர் வினாத் தொடுக்கலாம். எந்தத் தமிழ் நிலத்தை வன்முறைக்காரர்களிடம் இருந்து மீட்க நீங்கள் போராடினீர்களோ, அந்த நிலத்திலே ஒரு சிறு பகுதியை உங்களுக்குப் பரிசு அளிப்பதுதானே பொருத்தம்?

எந்தப் பதவியில் இருந்து கொண்டு நீங்கள் தீமையை அழிக்கப் போராடினீர்களோ, அந்தப் பதவிக்கு ஒரு படி மேல் உங்களை உயர்த்தி உட்கார வைப்பதுதானே முறை?

காட்டுப் பொருள்களைக் கொள்ளையடித்த கொள்ளையர்களுக்கு நாட்டுப் பொருளையும் தாரை வார்த்தார்களே? அந்தக் கூட்டுக் கொள்ளைக்கு முடிவு கட்டிய உங்களுக்குத் தக்க பரிசு என்பது ரொக்கப் பரிசாய்த் தானே இருக்க முடியும்?

எனவேதான், இங்கே உங்களுக்கு முப்பரிசை நான் வழங்கி இருக்கிறேன்.

தமிழகக் காவல் துறைக்கு, உலகளாவிய புகழைப் பெற்றுத் தந்த உங்களுக்குத் தமிழக மக்கள் சார்பாக என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்!

இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பதை என்றும் சரித்திரம் சொல்லும்!

என்பதைத் தெரிவித்து, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தமிழக சிறப்பு அதிரடிப்படையினர்
மற்றும் வனத்துறையினரைப் பாராட்டி
பரிசுகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
30.10.2004 அன்று ஆற்றிய உரை.

விண்ணில் பாய்ந்த முதலாவது கல்விக்கான செயற்கைக் கோள்



இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் தமது புவிநிலை செயற்கைக்கோள் செலுத்து வாகனமான ஜிஎஸ்எல்வி – எஃப்–1 மூலம் நாட்டின் முதலாவது கல்விப் பணி செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி வரலாறு படைத்துள்ளது. சென்னையிலிருந்து 80 கி.மீ. தொலைவில் ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள சதிஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து கல்விச் செயற்கைக்கோளை தாங்கியவாறு ஜிஎஸ்எல்வி செலுத்து வாகனம் விண்ணில் வெற்றிகரமாகப் பாய்ந்தேறியது.

19.9.2004 அன்று அதிகாலை ஒரு மணிக்கு தொடங்கி செயற்கைக்கோள் செலுத்துவதற்கான கால அட்டவணை குறித்த காலத்தில் முடிவடைந்து மாலை சரியாக 4.01 மணிக்கு ஜிஎஸ்எல்வி செலுத்து வாகனம் வானில் பாய்ந்தது. சதீஷ் தவான் விண்வெளி தளத்தில் கூடியிருந்த விஞ்ஞானிகள், பொறியாளர்கள், அலுவலர்கள் ஆகியோரின் பலத்த கையொலிக்கிடையே ஜிஎஸ்எல்வி வாகனம் தமது இலக்கை நோக்கி சீறிப் பாய்ந்தது.

ஜிஎஸ்எல்வி ரக வாகனங்கள் திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் தயாரிக்கப்படுகின்றன. 2001 மற்றும் 2003 ஆகிய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட ஜிஎஸ்எல்வி வாகனங்கள் வளர்ச்சி ஆய்வு நோக்கங்களுக்காக செலுத்தப்பட்ட நிலையில், தற்போது விண்ணில் பாய்ந்த ஜிஎஸ்எல்வி–எஃப்–1 செலுத்து வாகனம் இந்த ரக வாகனங்களில் முதலாவது முழுமையான பயன்பாட்டு வாகனமாகும்.

ஏஜுசாட் எனப்படும் கல்விக்கான செயற்கைக்கோள் நாட்டின் கல்வித்துறையில் பெரும் புரட்சியை உருவாக்கக் கூடியதாகும். டிடிஎச் எனப்படும் வீட்டிற்கே நேரடி ஒளிபரப்பு எனும் அதிநவீன தொழில் நுட்பத்தின்மூலம் தொலை தூரக் கல்வி வசதிகளை வீடுகளுக்கே கொண்டு சேர்க்க இந்த செயற்கைக்கோள் உதவும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு முழுமையாக சேவை வழங்கும் வகையில் ஏஜுசாட் செயற்கைக்கோள் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் ஐந்து சமிக்ஞை அனுப்பிகள் நாட்டின் வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு மண்டலங்களுக்கு முழுமையாக சேவையாற்றும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன.

செலுத்து நிலையில் 1,950 கிலோ எடையுள்ள ஏஜுசாட் செயற்கைக்கோளில் 1,110 கிலோ அளவிற்கு அதன் சுற்றுப்பாதை நிலைப்பாட்டிற்கும், பராமரிப்பிற்கும் தேவையான எரிபொருட்கள்அடங்கியுள்ளன. ஏழு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பணியாற்றும் அளவிற்கு இந்த செயற்கைகோள் உருவாக்கப்பட்டுள்ளது.

பூமியிலிருந்து 35,985 கிலோ மீட்டர் உயரத்தில் புவிவட்டப் பாதையில் இந்த செயற்கைகோள் நிறுத்தப்பட்டுள்ளது.எஜீசாட் செயற்கைக்கோள்களுடன் இணை நிலையில் நிறுத்தப்படும்.

புவியின் சுற்றுப்பாதையில் விடப்பட்டபின் இந்த செயற்கைக்கோளில் இரண்டு சூரிய மின்தகடுகள் செயல்படத்துவங்கின. இந்தோனேஷியா நாட்டில் பியாக் தீவிலிருந்து செயல்படம் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்தின் மூலம் செயற்கைக்கோள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. செயற்கைக்கோள் செலுத்தப்பட்ட பிறகு தேவைப்படும் அனைத்து கட்டுப்பாடுகளும் கர்நாடக மாநிலம் ஹசனில் அமைந்துள்ள தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்தது கண்காணிக்கப்படுகிறது. இப்பணிக்கு தேவையான உதவிகளை கனடா நாட்டின் லேக் கொவிச்சன் இத்தாலியின் ஃபுசினோ மற்றும் சீனாவில் அமைந்துள்ள தரைக்கட்டுப்பாட்டு நிலையங்கள் ஹசனில் உள்ள நிலையத்துக்கு கண்காணிப்பு பணிகளில் உதவி வருகின்றன. வரும் நாட்களில் எஜுசாட் செயற்கைக்கோள் தற்போதுள்ள புவியின் நீள்வட்ட பாதையிலிருந்து இறுதி சுற்றுப்பாதைக்கு உந்தப்படும்.

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்கள் ஆகிய நிலைகளில் கல்வித் தொடர்பு

காவல்துறை அதிகாரிகளுக்கு மகாத்மா காந்தி காவல்துறைப் பதக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

அறிவிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் கள்ளச்சாரயத்தை ஒழிப்பதில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியதற்காக தமிழக காவல் துறையைச் சேர்ந்த நான்கு காவல்துறை அதிகாரிகள், 2004ஆம் ஆண்டிற்கான "மகாத்மா காந்தி காவல்துறைப் பதக்கம்" வழங்கப்பட தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்கள்.

காந்தி ஜெயந்தியை ஒட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்தப் பதக்கங்களைப் பெறுபவர்களில் 1) செல்வி பி.கே.செந்தில்குமாரி, காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, செங்கை கிழக்கு மாவட்டம் 2) திருமதி. லஷ்மி சுப்பிரமணியன், காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, விழுப்புரம் மாவட்டம் 3) திரு.ஏ.எஸ்.நந்தகுமார், காவல்துறை துணை கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, கோவை மாவட்டம் 4) திரு.ஆர்.சுசில்குமார், ஆய்வாளர், மத்திய புலனாய்வுப் பிரிவு, சென்னை ஆகியோர் அடங்குவர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும் இந்தப் பதக்கங்களுடன் ஒவ்வொரு வருக்கும் ரூபாய் பத்தாயிரத்துக்கான ரொக்கப் பரிசும் வழங்கப்படும். "மகாத்மா காந்தி காவல் துறை பதக்கங்கள்" வருகின்ற குடியரசு தினத்தன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழங்கப்படும். ❖

சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப் பட்டுள்ள இந்தசெயற்கைக்கோள் முறைசாரா கல்விக்கும், வளர்ச்சிப் பணி பற்றிய தகவல் தொடர்புக்கும் பயன்படும்.

முதல் நிலையில் ஏற்கெனவே இயங்கி வரும் இன்சாட்–3பியில் அமைந்துள்ள சமிக்ஞை அனுப்பி பயன்படுத்தப் படும். இந்நிலையில் கர்நாடகா, மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் பயனடையும்.

இரண்டாவது கட்டத்தில், குறிப்பிடப்பட்டுள்ள புவி நிலையில் ஏஜுசாட் செயற்கைக்கோள் நிலை நிறுத்தப்பட்ட பின் நாட்டின் ஐந்து மண்டலங்களுக்கும் குறைந்தபட்சம் ஒருஇணைப்பு மூலம் சேவை வழங்கப்படும். இந்நிலையில் ஒவ்வொரு மண்டலத்திலும் 200 பள்ளிகள் வரை பயன் பெறுவதோடு கூடுதலாக இரண்டு மாநிலங்களும் ஒரு தேசிய ஆய்வு நிறுவனமும் பயனடையும்.

மூன்றாவது கட்டத்தில் ஏஜுசாட் செயற்கைக்கோள் கட்டமைப்பு முழுமையான செயல் திறனைப் பெற்று 30 இணைப்புகள் வரை வழங்கக் கூடிய நிலையில் செயல்படும். இதன் ஒவ்வொரு இணைப்பின் மூலமும் சுமார் 5,000 தொலைதூர முனையங்கள் பயன்பெறும்.

ஏஜுசாட் செயற்கைக்கோளுக்குத் தேவையான விண்வெளிப் பகுமானத்தையும், செயல் திறனையும் செயற்கைக்கோள் வாயிலான இருதரப்பு தொலை தூரக் கல்விக்கான வசதிகளையும் இந்திய விண்வெளி ஆய்வு



நிறுவனம் வழங்கும். இச்செயற்கைக்கோள் மூலமான கல்வித் திட்டங்களை வகுப்பது இதனை பயன்படுத்திக்கொள்ளும் கல்வி நிறுவனங்களைச் சார்ந்ததாகும். உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு செலுத்தப்பட்டுள்ள ஏஜுசாட் செயற்கைக்கோள் நாடு தழுவிய தொலைதூரக் கல்விக்கு பெரும் ஊக்கத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

– பத்திரிகைத் தகவல் அலுவலகம்
சென்னை

அக்டோபர் 10 சர்வதேச பார்வை தினம்

கண் பாதுகாப்பு

கண் நமது உடலில் உள்ள மிக முக்கியமான உறுப்புகளில் ஒன்று. கண் பழுது ஆகிவிட்டால், ஒருவரது வாழ்க்கையே மிகவும் பாதிக்கப்படும். அத்தகைய கண்ணானது பல வழிகளில் பாதிப்படைய வாய்ப்புகள் உண்டு. அவற்றில் மிக முக்கியமானது விபத்துகளால் கண்ணில் ஏற்படும் காயங்கள், ஏற்படக்கூடிய பல்வேறு சாத்தியக் கூறுகளையும், அவற்றைத் தவிர்க்கக்கூடிய வழிமுறைகளையும் பார்ப்போம்.

காயங்களால் கண் பாதிப்பு ஏற்படுவோரில் சிறுவர்கள் மிக முக்கியமானவர்களாவார்கள். பல்வேறு கூர்மையான விளையாட்டுப் பொருட்கள், வில் அம்பு, கில்லி தாண்டு அல்லது கட்டிப்புள், கூர்மையான குச்சிகள், பென்சில், பேனா, விசைத் துப்பாக்கி போன்றவைகளை வைத்து விளையாட அனுமதிக்கக் கூடாது. கத்தி, கத்திரிக்கோல், காம்பஸ் போன்ற கூர்மையான பொருட்களை அவர்கள் வைத்திருக்கும் போது நாம் கண்காணிக்க வேண்டும். மேலும் அவர்கள் உபயோகிக்கும் விளையாட்டுப் பொருட்கள் அவர்களை மட்டுமின்றி, அருகில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் மற்றவர்களையும் பாதிக்கலாம். மேலும் சிறுவர்கள் ஒருவரோடு ஒருவர் விளையாடும் போது அவர்களது கை மற்றும் விரல் நகம் போன்றவற்றாலும் கண்கள் பாதிக்கப்பட வாய்ப்புகள் உண்டு. சிறுவர்களை குளிப்பாட்டும் போது உபயோகிக்கும் சீயக்காய் துகள்களும், கண்களில் ரணம் ஏற்படுத்தக்கூடும். வீட்டில் உபயோகிக்கும் பிளீச்சிங் பவுடர், பெனாயில் மற்றும் பல இரசாயனப் பொருட்கள் அவர்களது கண்களில் பட வாய்ப்புகள் உண்டு. ஆகையால் இது போன்ற பொருட்கள் அவர்கள் வசம் கொடுக்காமல் இருக்க வேண்டும். இது போன்ற பாதிப்பு ஏற்பட்டால் சிறுவர்களுக்கு உடனடியாக பெற்றோரிடம் கூறத் தெரியாததால் நாம் அவர்கள் கண்களில் ஏற்படும் கண்ணீர் கசிதல், கண்ணில் வலி ஏற்படுதல், கண் சிவப்பாகி விடுதல், வெளிச்சத்தைப் பார்க்க இயலாது போகுதல் போன்ற எந்தவொரு சிறு அறிகுறியையும் உடனடியாகக் கவனித்து கண் மருத்துவரிடம் அழைத்துச் சென்று தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும்.

இயன்ற வரையில் சிறுவர் சிறுமியரிடம் இத்தகைய கூர்மையான பொருட்கள் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. குழந்தைகள் மட்டுமின்றி பெரியவர்களுக்கும் சாலை விபத்துகளில் கண்கள் பாதிக்கப்படலாம். கண்ணாடித் துண்டுகள், தூசி ஆகியன கண்ணில் குத்தி உட்புகலாம் அல்லது கண்களின் மேற்புறத்தில் தங்கி ரணமாகலாம். மேலும் நாம் நமது வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகள் நம்முடன் பழகும் போது அதனுடைய நகங்களாலும் ரோமங்களாலும் நமது குழந்தைகள் மட்டுமின்றி நமது கண்களும் பாதிப்புக்கு உள்ளாகும். இரசாயனப் பொருட்கள் நிறைந்த பாட்டில்களைத் திறக்கும் போது கவனத்துடன் இல்லாவிடில் இரசாயனம் கண்ணில் தெளித்து பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். இவ்வாறு ஏற்பட்டால் உடனடியாக மிகச் சுத்தமான தண்ணீரில் கண்களைக் கழுவி உடனடியாக மருத்துவச் சிகிச்சை பெற வேண்டும்.

இத்தகைய விபத்து ஏற்பட்டால், கண்களை பலமாக அழுத்தித் தேய்ப்பதைத் தவிர்க்க வேண்டும். இல்லையெனில் கண்ணின் முக்கியப் பகுதியான கார்னியா என்னும் கருவிழி மிகவும் பாதிக்க வாய்ப்புள்ளது.

மேலும் சூரியனையும் கிரகங்களையும் முறையான பாதுகாப்பு இன்றி பார்த்து கண்ணின் விழித்திரை பாதிக்கப்பட்டு பார்வை இழப்பவர்கள் ஏராளம். இதற்கு சிகிச்சையே இல்லாததால் இவ்வாறு பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். சில தொழிற்சாலைகளில் நாள் முழுவதும் வெல்டிங் (Welding) செய்பவர்கள் அதற்குத் தகுந்த கருப்பு கவசம் (Shield) அணிந்து வெல்டிங் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் கண்ணில் நடுப்பார்வை (Centre Vision) மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு விடும்.

இப்பொழுது விளையாட்டுத் துறையில் ஏராளமானவர் ஈடுபட்டு வருகிறார்கள். ஆக்கி, கால்பந்து போன்ற விளையாட்டுகளில் கம்பிகளால் ஆன முக மறைப்புகளையும், முகமூடிகளையும் உபயோகிப்பது நலம். நீச்சல் போன்ற நீர் விளையாட்டுகளில் அதற்கான சிறப்புக் கண்ணாடிகள் அணிவது நல்லது.

ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்ற இரு சக்கர வாகனத்தில் செல்பவர்கள் பாதுகாப்பிற்கர்க கண் கண்ணாடி அல்லது ஹெல்மெட்டை அணிந்து செல்ல வேண்டும். இதனால் பயணிக்கும்போது தூசி அல்லது சிறு பூச்சிகள் கண்ணில் விழாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

தொழில் துறையில் பணிபுரிபவர்கள் பல்வேறு வகையில் கண் பாதிப்புக்குள்ளாகிறார்கள். சுத்தியினால் அடிக்கும்போதும் உளியினால் செதுக்கும்போதும் கடைசல் பிடிக்கும் போதும் மிக வேகமாகப் பறந்து வரும் இரும்பு, செம்பு, பித்தளை போன்ற பல்வேறு உலோகத் துகள்கள் கருவிழியின் மேற்புறத்தில் தங்கி விடுவது மட்டுமின்றி கண்களின் உட்புறத்தில் சென்று தங்கி

விடுவதும் உண்டு. இத்துகள்கள் பின்பு சீழ்பிடித்து கண்ணையே எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படக்கூடும். தொழிற்சாலைகளில் உருக்கிய உலோகங்களும், கண்களில் பட்டு கண்ணிமைகள் கருவிழிகள் வெந்துபோக வாய்ப்புகள் உண்டு. சுரங்கங்களிலும், மலைகள் உடைக்கும் இடத்திலும், வெடி வைத்து கிணறு தோண்டுபவர்களும், கண்களையே இழக்க நேரிடுகிறது.

இவர்கள் தகுந்த பாதுகாப்பு அணிகலன்களை அணிந்து கொண்டு பணி செய்தால், இத்தகைய விபத்துகளையும், கண்பார்வை இழப்பையும் தவிர்க்க முடியும்.

தொழிற்சாலைகளில் உபயோகப்படுத்தப்படும் இரசாயனங்கள், ஆவி மூலமாகவோ அல்லது சிறு துகள்களாக தெளித்து கண்ணில் விழக் கூடும். சில சமயங்களில் நமது தோல் மூலமாகவோ அல்லது சுவாசிப்பது மூலமாகவோ நமது பார்வை நரம்புகளை பாதித்து, பார்வையை இழக்க நேரிடும். ஆகையால் இத்தகைய தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் பார்வையில் மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக கண் மருத்துவரை அணுக வேண்டும்.

மேலும் சில தொழிற்சாலைகளில் புறஊதாவும் (Ultraviolet), அகச்சிவப்புக் கதிர்களையும் (Infrared) உபயோகிக்கிறார்கள். லேசர் மற்றும் கதிர்வீச்சு தன்மையுடைய பொருட்களையும் அவற்றிலிருந்து வெளிப்படும் உபயோகமற்ற ஆனால் கதிர்வீச்சு தன்மையுடைய பொருட்கள் கண்களையும், கருவிழி படலத்தையும் பாதிக்கும் லேசர்கள் நேரடியாக அல்லது வழுவழுப்பான பொருட்களின் மீது பட்டு திரும்பும் போதே கண்களை தாக்கக் கூடும்.

இவர்கள் பாதுகாப்புக் கண்ணாடி அணிந்து (Protective glasses) வேலை செய்வதால் விபத்தில் ஏற்படும் கண்பார்வை இழப்பினைத் தவிர்க்க முடியும்.

விவசாய வேலைகளில் ஈடுபட்டு இருப்பவர்களும், கண்களில் தூசி படுவதாலும், மண், சேறு, இலைகள் நிறைந்துள்ள கைகளினால் கண்களை துடைத்துக் கொள்வதாலும் கருவிழியில் புண் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றன. சேற்றிலும், சகதியிலும் நிறைந்து காணப்படும் காளான் கிருமிகள் கண்களை தாக்கும் அபாயம் இவர்களுக்கு மிக அதிகமாகவே இருக்கின்றன. அறுவடைக் காலங்களில் நெல்மணி மற்றும் கதிர் இலைகளினால் கண்களில் காயம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு கண்கள் பாதிக்கப்படும் போது சிறிதும் காலதாமதமின்றி கண் மருத்துவரை அணுகி சரியான முறையில் சிகிச்சை பெற்றுக் கொள்ள தவறினால் பார்வை நிரந்தரமாக இழந்திடும் சூழல் ஏற்படும். சுத்தமான தண்ணீரினால் கண்களை கழுவ வேண்டும். அசுத்தம் நிறைந்த கைகளினால் கண்களைத் துடைப்பதைத் தவிர்ப்பதாலும் கண்களில் புண் ஏற்படக்கூடிய அபாயத்தைத் தவிர்க்கலாம்.

முக்கிய வேண்டுகோள்

பள்ளிக்குழந்தைகளையும், அதைவிட சிறிய குழந்தைகளையும் நல்ல அனுபவமிக்க கண் மருத்துவரிடம் பரிசோதித்தல் மிகவும் அவசியம். ஏனென்றால் சில கண்களில் உள்ள குறைபாடுகள் பலருக்கு இருப்பதே தெரிவதில்லை. அவர்கள் கண் பார்வைக் குறைவிற்கு கண்ணாடி கடையில் (Optical shop) சென்று Power மட்டும் பரிசோதித்துக் கண்ணாடி அணிந்து கொள்கிறார்கள். இது நல்லதல்ல. ஏனென்றால், சில கண் குறைபாடுகள் ஆரம்பத்திலேயே கண்டு பிடிப்பது கண்ணாடி பரிசோதகர்களினால் இயலாது. உதாரணத்திற்கு கிளாகோமா (Glacoma) என்ற கண் நீர் அழுத்த நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சையைத் தொடங்கினால், கண் பார்வை இழப்பை முற்றிலும் தவிர்க்கலாம். மேலும் இதே நோய் முற்றிய நிலையில் கண்டுபிடித்தால் கட்டாயமாக அறுவை சிகிச்சைதான் செய்ய முடியும். அப்படிச் செய்தாலும் இழந்த பார்வையைத் திரும்பப் பெறுவது இயலாத காரியம்.

அதேபோல் ஒரு கண்ணில் கிட்டப்பார்வை அதிகமாகவும் அடுத்த கண் நன்றாகவும் இருக்கும்பட்சத்தில் குறையுள்ள கண் உபயோகப்படாமல் சென்று விடும். இந்தக் குறையை ஆரம்பத்தில் கண்டு பிடித்தால் அந்தக் கண் குறைபாட்டைத் தவிர்க்கலாம்.

மேலும் மாறுகண் என்பது அதிர்ஷ்டத்தைக் குறிப்பது அல்ல. எனவே சிறு குழந்தையாக இருந்தாலும் மாறுகண் இருந்தால் உடனே அனுபவமிக்க கண் மருத்துவரை அணுகி ஆலோசிப்பது பல வகையில் உங்கள் குழந்தைக்கு நன்மை பயக்கும்.

• **மரு. எம்.எஸ். ராஜரத்தினம்**, எம்.எஸ்.டி.ஓ.,
அரசு கண் மருத்துவமனை, எழும்பூர்,
சென்னை.

ஓர் அரசின் திட்டமிடப்பட்ட பயன்கள் ஏழை, எளிய மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்திட, அந்த அரசின் சேவை செயலாக்க ஏற்பாடு மேம்படுத்தப்பட வேண்டும் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. பொது நிதியில் எப்போதுமே நிதி ஆதாரப் பற்றாகுறை நிலவுகின்ற நெருக்கடியான ஒரு சூழ்நிலையில், இந்தச் சேவை செயலாக்க ஏற்பாடுகள் எந்த அளவிற்கு மேம்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தத் தேவையில்லை. ஒருபுறம், நிலையை உறுதிப்படுத்த வேண்டிய நிலை இருந்தது. அந்த நேரத்தில், தமிழ்நாட்டின் நிதி நிலைமை கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அளவுக்குச் சீரழிந்து இருந்தது. 1996–2001 வரையில் ஆட்சி செய்த முந்தைய தி.மு.க.அரசு, அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஏராளமானச் சலுகைகளை வாரி வழங்குவது போல பாசாங்கு செய்தது. ஆனால், அந்த அரசால், தான் அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியவில்லை. முந்தைய தி.மு.க. அரசு, ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில்

அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்குச் சலுகைகள்

(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 20.10.2004)

அரசுப் பணியாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அதன் வாயிலாக அவர்கள் மக்களுக்கு மேலும், சிறப்பாகச் சேவையாற்ற ஊக்கம் அளித்திட வேண்டும். மறுபுறம், ஏழை, எளிய மக்களுக்குப் போதிய பயன்கள் உரிய நேரத்தில் சென்றடைவதை உறுதிப்படுத்தவும் வேண்டும். இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட நுட்பமான சம நிலையைக் கண்டறிந்து பராமரித்து வருவதில்தான் ஒரு நல்லாட்சியின் நிருவாகத் திறமையே இருக்கிறது. அரசின் சேவைகளை மக்களிடத்தில் சென்று சேர்க்கின்ற சேவை செயலாக்க அமைப்பின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் ஒரு நல்லாட்சியின் இந்த இன்றியமையாத அம்சத்தைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

என்னுடைய அரசு, 2001–ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இந்தச் சம

வழங்கப்பட வேண்டிய சம்பளம் மற்றும் படிகளின் நிலுவையில் 60 சதவிகிதத் தொகை வழங்கப்படுவதை 2003–2004–ஆம் ஆண்டுக்கு ஒத்தி வைத்தது. அதேபோன்று, ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளும் முந்தைய தி.மு.க. அரசால் ஒத்தி போடப்பட்டன. பொறுப்புள்ள எந்த ஒரு அரசும், தன்னால் நிறைவேற்ற முடியாத சலுகைகளை அறிவிக்காது.

எதிர்காலத்தில் வழங்க முடியும் என்ற நம்பிக்கை இல்லாத போதும், முந்தைய தி.மு.க. அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆனால், நிறைவேற்றாமல் விட்டுச் சென்றதால் ஏற்பட்ட நிதிப் பொறுப்புகளை என்னுடைய அரசு, படிப்படியாக நிறைவேற்ற அண்மையில் முன் வந்துள்ளது. ஏழை, எளிய மக்களின் தேவைகளை மனதில் கொள்ளும் அதே நேரத்தில்,

அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் மக்களுக்கு மேலும், சிறப்பாகச் சேவை ஆற்றிட ஏதுவாக, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு, என்னுடைய அரசு எந்த அளவிற்குப் பொறுப்புடன் பொது நிதியை நிருவகித்து வருகிறது என்பதை இதுவே எடுத்துக்காட்டும்.

2001–ஆம் ஆண்டு மே திங்களில் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற போது, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பணப் பட்டிகளுக்குக் கூட தொகை வழங்க முடியாத நிலைமையில் அரசு கஜானா இருந்தது என்பதும், அத்தகைய பட்டிகள் பல மாதங்களாக, ஏன் ஆண்டுகளாகக்கூட நிலுவையில் வைக்கப்பட்டு இருந்தன என்பதும் அனைவரும் அறிந்ததே. 2001–2002–ஆம் ஆண்டின் இறுதிவாக்கில் 11–ஆவது நிதிக் குழுவின் பரிந்துரைகளையடுத்து, மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதி ஆதாரங்கள் மேலும் குறைந்து, சமாளிக்க முடியாத அளவுக்கு நிதி நிலைமை மிகவும் மோசமாகி, நடப்புப் பொறுப்புகளும், தொகை வழங்கப்படாத பட்டிகளும் 4,000 கோடி ரூபாய் அளவிற்கு நிலுவையாக இருந்தன. அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும், தமிழ்நாடு மின்சார வாரியத்திலும் இதே நிலைமை நிலவவே, முந்தைய தி.மு.க. அரசால் என்னுடைய அரசின் மீது திணிக்கப்பட்ட சீர்கேடான நிதி நிலைமையைச் சீரமைப்பதைத் தவிர, இவ்வரசிற்கு வேறு வழியில்லாமல் போயிற்று. மக்களுக்குத் தேவையான எந்த ஒரு புதிய திட்டத்தையுமே செயல்படுத்த முடியவில்லை. அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கப் பட்டு வரும் பயன்களைக் கூட தொடர்ந்து வழங்க முடியாத இக்கட்டான நிலைமை ஏற்பட்டது.

இந்தக் காரணத்திற்காகத்தான், நிலைமை சீராகும்வரை பொறுமை காத்திடும்படி நான் அரசுப் பணியாளர்களையும், ஆசிரியர்களையும் கேட்டுக் கொண்டேன். துரதிருஷ்டவசமாக, என்னுடைய வேண்டுகோளையும் மீறி, கடந்த 2003–ஆம் ஆண்டில், சில அரசுப் பணியாளர் சங்கங்களும், ஆசிரியர் சங்கங்களும், சில அரசியல் தலைவர்களின் தூண்டுதலின் பேரில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன. அரசு, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருமே நமது உண்மையான எஜமானர்களான மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற கோட்பாட்டை அப்போது என்னுடைய அரசு நிலை நாட்ட வேண்டியிருந்தது. நாம் எந்த ஒரு சூழ்நிலையிலும் பொது மக்களுக்கு இன்னல் விளைவிக்கக் கூடாது என்ற கோட்பாடு கடந்த ஆண்டு நிலை நிறுத்தப்பட்டது.

இந்த நிலைமை தெளிவுபடுத்தப்பட்டதுமே, அரசுப் பணியாளர்கள் அல்லது ஆசிரியர்கள் மீது எந்தவித கசப்புணர்வோ அல்லது அவர்களைப் புண்படுத்தும் நோக்கமோ எதுவும் இவ்வரசிற்கு இல்லை என்பதை நான் தெளிவுபடுத்தினேன். அனைத்து சங்கங்களையும் பேச்சு வார்த்தைக்கு நான் இன்று (20.10.2004) அழைத்துள்ளதே எனக்கோ என்னுடைய அரசுக்கோ அவர்கள் மீது எந்தவிதமான கசப்புணர்வும் இல்லை என்பதை உணர்த்துகிறது. நீதிபதிகள் குழுவின் பரிந்துரைப்படி தண்டிக்கப்பட்டவர்களுக்கும் நான் பொது மன்னிப்பு அளிப்பதாக அறிவித்தேன். இதனை நான் 2004–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலேயே சட்டமன்றப் பேரவையில் அறிவித்தேன். அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது எனக்கு எந்தவிதமான கசப்புணர்வும் இல்லை என்பதனை மீண்டும் 2004–ஆம் ஆண்டு மே திங்களில் வலியுறுத்தினேன்.

முந்தைய தி.மு.க. அரசு அதலபாதாளத்தில் தள்ளிவிட்டுச் சென்ற நிதி நிலைமையை, மிகுந்த சிரமப்பட்டு மீட்டு, என்னுடைய அரசு கணிசமான அளவுக்குச் சீர்படுத்தியுள்ளது. இதற்காக, எல்லோருமே சில தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தது. இந்தச் சரிக்கட்டல் காரணமான சுமை ஏழை, எளிய மக்களின் தோள்களில் சுமத்தப்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும் என்னுடைய அரசுக்கு இருந்தது. அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் இந்தப் பின்னணியைப் புரிந்து கொள்ள வேண்டும். 2004–ஆம் ஆண்டு மே திங்களில் ஏழை, எளிய மக்களுக்காக நான் புதிய சலுகைகளை அறிவித்தேன். இது அரசின் நிதி நிலைமை மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இருந்தாலும், நிதி நிலைமையைச் சீரமைக்க நாம் மேற்கொண்டுள்ள முயற்சிகளால், ஏழை, எளிய மக்களுக்கான இந்தச் சலுகைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியாதாரங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதே நேரத்தில், டீசல் விலை உயர்வினால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும், நிலக்கரி விலை உயர்வினால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் புதிதாக ஏற்பட்டுள்ள செலவு உயர்வு காரணமாக எழுந்துள்ள அச்சுறுத்தலுக்கு இன்னும் நாம் முழுமையாகத் தீர்வு காணவில்லை. விவசாயிகள், குடிசை வாழ்வோர் மற்றும் வீட்டுப் பயன்பாட்டிற்காக, மின்சாரம் வழங்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உரிய மானியத் தொகைகளை ரொக்கமாக அளிக்க வேண்டியுள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அதிகரித்துள்ள மானியத்தையும் வழங்க வேண்டியுள்ளது. இந்த அனைத்துத் தேவைகளையும் நாம் நிறைவு செய்தாக வேண்டும். நான் ஏற்கெனவே தெரிவித்தவாறு, இந்தத் தேவைகளுக்கும், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் இடையே சரியானதொரு சமநிலையை நாம் காண வேண்டியுள்ளது.

இந்தப் பின்னணியில் தான், சில அரசியல் கட்சித் தலைவர்கள் கூறி வருவதைப் போல, என்னுடைய அரசுக்கு, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது எந்தவிதமான கசப்புணர்வோ அல்லது பாரபட்சமோ அறவே இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைகளை நேரில் கேட்டறிவதற்காக, அவர்களது சங்கப் பிரதிநிதிகளை நான் அழைத்தேன். ஏழை, எளிய மக்களுக்குச் சேவை செய்வது என்ற நமது பொதுவான குறிக்கோளை நிறைவேற்றும் முயற்சியில் அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் சங்கங்கள் முழு ஒத்துழைப்பு நல்கியிருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும், நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்ற ஆக்கபூர்வமான சிந்தனையோடும், புதிய தீர்மானத்தோடும், அர்ப்பணிப்பு உணர்வோடும் மக்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவை புரிவதற்கு வாய்ப்பான நிலைமை உருவாகி இருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் பரஸ்பர புரிதலின் அடிப்படையில்தான் என்னுடைய அரசிடம் வைக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்தும் கருதிப் பார்க்கப்பட்டுள்ளன. அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பல சலுகைகளை வழங்க வேண்டும் என்று என்னுடைய மனம் விரும்பினாலும், நிதி நிலைமை அதற்கு இடம் கொடுக்காமல் இன்னமும் அச்சுறுத்தி வருகிறது. அனைத்துக் கோரிக்கைகளையும் என்னுடைய அரசு மிகுந்த கவனத்துடனும், விரிவாகவும் பரிசீலித்துள்ளது. அதே நேரத்தில் நிதி நிலைமையையும் மறு மதிப்பீடு செய்துள்ளோம். 2003–ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு நிதிப் பொறுப்புகள் சட்டத்தின் கீழ் எழுந்துள்ள பொறுப்புகளையும் என்னுடைய அரசு கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இவற்றிற்கெல்லாம் மேலாக, நம்முடைய உண்மையான எஜமானர்களான மக்களுக்கு இன்னும் சிறப்பாகச் சேவையாற்றிட வேண்டியுள்ளது. இதற்காக என்னுடைய அரசு மிகவும் பாடுபட்டு வருகிறது.

இந்த அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டும், என்னுடைய அரசுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே ஒரு சுமூகமான உறவை ஏற்படுத்தும் நோக்கத்தோடும், 1.7.2004–ஆம் நாள் முதற்கொண்டு, அடிப்படைச் சம்பளத்தில் 4 விழுக்காடு என்ற வீதத்தில், ஒரு தவணை அகவிலைப்படி வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இது, அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பொருந்தும். அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள், உள்ளாட்சி மன்ற பணியாளர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் பிறருக்கும் இது பொருந்தும். இப்பயன், ஓய்வூதியதாரர்களுக்கும் வழங்கப்படும். இதன்மூலம், மொத்த அகவிலைப்படியானது 1.7.2004 முதல் 55 விழுக்காட்டிலிருந்து 59 விழுக்காடாக உயரும். 1.7.2004 முதல் வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படியின் நிலுவைத் தொகை ரொக்கமாக வழங்கப்படும். மேலும், 1.7.2004 முதல் தொகுப்பூதியம் பெறுவோர், அறுதியிட்ட சம்பளம் பெறுவோர் (Fixed Pay) மற்றும் 1.1.96 அன்றையபடி மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய்க்கு மேல் மதிப்பூதியம் பெறுவோர் ஆகியோருக்கு ஒட்டுமொத்தமாக மாதம் ஒன்றுக்கு ரூ.20/–ம், மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய்க்கும் குறைவாக மதிப்பூதியம் பெறுவோர்க்கு; மாதம் ஒன்றுக்கு ரூ.10/–ம் உயர்த்தப்படும். இந்த அகவிலைப்படி வழங்குவதன் மூலம் 12.33 இலட்சம் அரசு பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிறரும், 4.37 இலட்சம் ஓய்வூதியதாரர்களும் பயன் பெறுவர். இதன்மூலம் அரசுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, மொத்தம் 267.08 கோடி ரூபாய் செலவு ஏற்படும். 1.7.2004 முதல் 30.9.2004 வரையிலான காலத்துக்கு உரிய, 66.77 கோடி ரூபாய் அளவுக்கான நிலுவைத் தொகை முழுவதும் உடனடியாக ரொக்கமாக வழங்கப்படும்.

எஞ்சிய அகவிலைப்படி தவணைகளையும் வழங்க வேண்டுமென அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் கேட்டுக் கொண்டுள்ளனர். அடிப்படைச் சம்பளத்தில் 2 விழுக்காடு என்ற விகிதத்திலான அடுத்தத் தவணை அகவிலைப்படி 1.1.2005 முதல் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறேன். இதனால், ஆண்டு ஒன்றுக்கு, அரசுக்கு 135.38 கோடி ரூபாய் செலவாகும். இதன்மூலம் 1.1.2005 முதல் மொத்த அகவிலைப்படி 61 விழுக்காடாக உயரும். இவ்வாறாக, மத்திய அரசு வழங்கும் அகவிலைப்படிக்கும், மாநில அரசு வழங்கும் அகவிலைப்படிக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறைக்க பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசின் நிதிநிலைமை மேலும் சீரடையும்போது, இந்த இடைவெளியை எதிர்காலத்தில் மேலும் குறைக்க என்னுடைய அரசு முயற்சி எடுக்கும். இந்த அகவிலைப்படி உயர்வை அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் பெரிதும் வரவேற்பார்கள் என நான் நம்புகிறேன்.

நெருக்கடியான நிதி இடர்ப்பாட்டிலும் ஈட்டிய விடுப்பை சரண் செய்து, அதற்கு ஈடாக ரொக்கத் தொகை பெற்றுக் கொள்ளும் வசதியை வழங்குவது பற்றி நான் பரிசீலிக்க வேண்டும் என அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் இன்று என்னிடம் கோரிக்கை வைத்தனர். ஈட்டிய விடுப்பைச் சரண் செய்து ரொக்கத் தொகை பெற்றுக் கொள்ளும் வசதி, பெரும்பாலான மாநிலங்களிலும், மத்திய அரசுப் பணியிலும்கூட இல்லை. அப்படி இருந்தும், அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் தங்களுக்கு இச்சலுகை வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளனர். அவர்களது கோரிக்கையை நான் மிக கவனமுடன் பரிசீலித்து, ஆண்டு ஒன்றுக்கு 7 நாட்கள் ஈட்டிய விடுப்பைச் சரண் செய்து, அதற்கு ஈடாக ரொக்கத் தொகை பெற்றுக்கொள்ளும் வசதியை வழங்குவதென நான் முடிவு செய்துள்ளேன். அரசுக்கு ஏற்படும் செலவு ஆண்டு முழுவதும் ஒரே சீராக இருக்கின்ற வகையில், ஏற்கெனவே உள்ள சுழற்சி முறையில் இது வழங்கப்படும். இச்சலுகை இன்று முதல் (20.10.2004) செயலுக்கு வரும். இதனால், அனைத்துப் பணியாளர்களும், ஆசிரியர்களும் பயன்பெறுவர். இந்த வகையில் ஆண்டு ஒன்றுக்கு, அரசுக்கு, 171.34 கோடி ரூபாய் செலவு ஏற்படும். பொது நிதித் தேவைக்காக நிதி

ஆதாரங்களைச் சேமிக்க வேண்டிய கட்டாய நிலை இருந்தும், மேலும், இச்சலுகை பெரும்பாலான மாநிலங்களிலும், மத்திய அரசுப் பணியிலும் இல்லாத நிலையிலும்கூட, அரசுக்கும், அரசு ஊழியர்களுக்கும் இடையிலான நல்லெண்ணத்தை மேம்படுத்தவும் ஏழை எளியவர்களுக்குச் சேவையாற்றுவதில் அரசுப் பணியாளர்கள் மேலும், சிறப்பாகச் செயல்பட ஊக்கமளிக்கும் வகையிலும் நான் இந்தச் சலுகையை வழங்க முடிவு செய்துள்ளேன்.

நான் ஏற்கெனவே தெரிவித்தவாறு, பொதுமக்கள்தான் நம்முடைய உண்மையான எஜமானர்கள். அவர்களுக்கு நாம் ஒருபோதும் இடையூறு விளைவிக்ககூடாது. எனவே, அரசுப் பணியாளர்கள் கோரிக்கைகளை வைக்கும்போது, இந்த எண்ணம் அவர்கள் மனதில் மேலோங்கி நிற்க வேண்டும். என்னுடைய அரசு, பொதுநலக் கொள்கையாக, "வேலை செய்யாத நாட்களுக்கு சம்பளம் இல்லை" என்ற கோட்பாட்டை வரையறுத்துள்ளது. இந்தக் கோட்பாட்டிலிருந்து விலக முடியாது. கடந்த ஆண்டு 1.7.2003 முதல் 24.7.2003 வரையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு, பணிக்கு வராத நாட்களை, பெருந்தன்மையோடு பணிக் காலமாக கருதவேண்டும் என்று அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் இன்று என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் ஏற்கெனவே உயர்நீதிமன்றத்தில் வருத்தம் தெரிவித்து, வேலைநிறுத்தத்தின் தொடக்கத்திலேயே அதனை முடித்துக்கொண்டு, பணிக்குத் திரும்ப விருப்பம் தெரிவித்ததையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். "வேலை செய்யாத நாட்களுக்கு சம்பளம் இல்லை" என்ற கோட்பாட்டில் உள்ளடங்கியுள்ள ஒழுங்குணர்வு நிலைநாட்டப்பட வேண்டும். அதே நேரத்தில், கடந்த ஆண்டில் அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தை, தவறான வழிகாட்டுதலின்பேரில் நடைபெற்ற ஒரு துரதிருஷ்டவசமான, மறக்கப்பட வேண்டிய ஒரு சம்பவமாகக் கருத முடிவு செய்துள்ளேன். இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே பெருந்தன்மையான ஒரு முடிவெடுப்பது எனத் தீர்மானித்துள்ளேன். 1.7.2003 அல்லது 2.7.2003 முதல் 4.7.2003 முடிய உள்ள கால அளவு, சம்பளமில்லாக் கால அளவாக கருதப்படும். 24.7.2003 வரையிலான எஞ்சியுள்ள கால அளவு பணிக்காலமாகக் கருதப்படும். "வேலை செய்யாத நாட்களுக்கு சம்பளம் இல்லை" என்ற கோட்பாட்டிலிருந்து பெரிதும் விலகி, அரசுப் பணியாளர்களும் ஆசிரியர்களும் இந்த உணர்வை முழுவதும் பிரதிபலித்து ஏழை எளிய மக்களின் நன்மைக்காக இவ்வரசு மேற்கொள்கிற அனைத்து முயற்சிகளிலும், முழுமனதுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதற்காக நான் இந்த முடிவை எடுத்துள்ளேன்.

அரசு மக்களுக்குச் செம்மையாகவும், சிறப்பாகவும் சேவை செய்திட, அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் அரசோடு நெருங்கி ஒத்துழைத்து, பொறுப்புணர்வுடன் பணியாற்ற வேண்டியது அவசியமாகிறது. அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் ஒரு கணம்கூட தங்களுடைய இந்தப் பொறுப்பை மறந்துவிடலாகாது. அவர்களுக்குக் குறைகள் இருக்கலாம், கோரிக்கைகளும் இருக்கலாம். ஆனால், அரசின் திட்டங்கள் ஏழை எளிய மக்களை சென்றடைந்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே அரசின் தலையாயக் கடமை என்பதனை பணியாளர் சங்கங்களும், அமைப்புகளும் உணர வேண்டும். அரசுப் பணியாளர் சங்கங்களும், ஆசிரியர் சங்கங்களும் ஆட்சி நிருவாகத்தின் இந்த தலையாய குறிக்கோளை மறந்து, தவறான வழியில் சென்றுவிடலாகாது. என்னுடைய அரசு அவர்களுடைய கோரிக்கைகளையும், வேண்டுகோளினையும் ஏழை எளிய மக்களின் நலனுக்கு அரசு அளிக்க வேண்டிய முன்னுரிமையின் அவசியத்தையும் கருத்தில் கொண்டு ஒரு சமன்பாட்டுடன் எப்போதும் பரிசீலிக்கும். இந்த அணுகுமுறை உணர்ந்துகொள்ளப்படவேண்டும். இதை ஏற்றுக்கொண்டு, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் 2003 ஜூலை திங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தை அடுத்து ரத்து செய்யப்பட்ட சங்கங்களின் அங்கீகாரத்தை மீண்டும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்கள். அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து தங்கள் கடமைகளையும், பொறுப்புகளையும் மிகுந்த கவனத்துடன் நிறைவேற்றுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்கள். அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் வெளிப்படுத்திய நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பு உணர்வையும் கருத்தில்கொண்டு, 2003 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் வேலை நிறுத்தத்திற்கு முந்தைய நிலையை மீண்டும் ஏற்படுத்துவதென நான் முடிவு செய்துள்ளேன். வேலை நிறுத்தத்தையடுத்து, அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட 37 அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் அனைத்திற்கும் மீண்டும் அங்கீகாரம் அளிக்கப்படும். இச்சங்கங்கள் பொறுப்பான முறையில் செயல்பட்டு, தங்கள் சங்க உறுப்பினர்களிடையே, மக்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவை செய்திட வேண்டும் என்ற உணர்வை ஊட்டும் என்று என்னுடைய அரசு எதிர்பார்க்கிறது.

பொருத்தமான அமைப்புகள் ஏற்படுத்தப் படுமேயானால், பல சிறு பிரச்சினைகளை மாவட்ட அளவுகளிலும், துறை அளவுகளிலுமே எளிதாக தீர்த்துக் கொள்ளலாம் என்று அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் இன்று என்னிடம் தெரிவித்தனர். மேம்பட்ட செயல்பாடு மற்றும் செயல்திறனில் கவனம் செலுத்தவும், பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கெனவும், மாவட்ட நிலையிலும், துறையளவிலும் மற்றும் தலைமைச் செயலகத் துறையளவிலும் "சேவை செயலாக்க மேம்பாடு மற்றும் குறைதீர்ப்புக் குழுக்கள்" ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தலைமைச் செயலாளர் தலைமையிலான, "மாநில அளவிலான கூட்டுக்குழு" திருத்தியமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற பிரச்சினைகளை இந்தக் குழுவில் விவாதித்துத் தீர்வு காணலாம். மேற்சொன்ன இந்த நடவடிக்கைகள், மக்களுக்கு மேலும் சிறந்த முறையில் சேவை செய்வதற்காக என்னுடைய அரசு, அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்களோடு நடத்தக்கூடிய கலந்துரையாடல்களுக்கு உதவும் என்று நம்புகிறேன்.

ஒய்வூதியமில்லாப் பணிகளைச் சேர்ந்த மதிய உணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பணியாற்றும் அங்கன்வாடிப் பணியாளர், ஆயாக்கள், சமையற்காரர்கள், உதவியாளர்கள் போன்றவர்களுக்குச் சில சலுகைகள் வழங்கிட வேண்டுமென்று கோரப்பட்டது. அதைப் போலவே, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வசதியாக இருக்கும் வகையில், பள்ளி நேரங்கள், குறிப்பாகக் கிராமப் புறங்களில், தக்கவாறு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கையும் வைக்கப்பட்டது. இக்கோரிக்கைகள், சாதகமாக பரிசீலிக்கப் பட்டு அறிவிப்புகள் தனியே. வெளியிடப்படும்.

அரசுப் பணியாளர் சங்கங்கள் முன்வைத்த கருத்துகள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலித்த பின்னர் நான் இந்தச் சலுகைத் தொகுப்பை வகுத்துள்ளேன். அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முதன்மையான இடத்திற்குக் கொண்டு செல்வது என்ற என்னுடைய அரசின் உறுதியான முயற்சிக்கு, அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர்கள் தங்களது முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் அளிப்பார்கள் என்ற நம்பிக்கையில் நான் இந்த முடிவை எடுத்துள்ளேன். ★

8.5 சதவிகிதம் பிழி திறன் கொண்ட கரும்புக்கு வழங்கப்பட்ட தொகை உயர்வு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைக் கரும்பு விவசாயிகளின் நலன் கருதி 2003 – 2004 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 சதவிகிதம் பிழி திறன் (Recovery) கொண்ட கரும்புக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு முதற்கட்டமாக வழங்கப்பட்ட தொகை 695 ரூபாயுடன் தற்போது கூடுதலாக 35 ரூபாயும் சேர்த்து வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் கரும்பு விவசாயிகளுக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு 730 ரூபாய் விலையாகக் கிடைக்கும்.

2003 – 2004 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு (Crushing Season) 8.5 சதவிகிதம் பிழி திறன் (Recovery) கொண்ட கரும்புக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு 730 ரூபாய் குறைந்தபட்ச விலையாக (Statutory Minimum Prices) மத்திய அரசு அறிவித்தது. இதில் முதற்கட்டமாக தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளைச் சேர்ந்த கரும்பு விவசாயிகளுக்கு 695 ரூபாய் வழங்கப்பட்டது. கரும்பு விவசாயிகளின் நலன் கருதி டன் ஒன்றுக்கு மீதமுள்ள 35 ரூபாயை உடனடியாக வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளைச் சேர்ந்த 85,337 கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள். மேற்கண்ட ஆலைகளிலிருந்து 11.04 கோடி ரூபாய் கூடுதலாக கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

* * *

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள்

மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா
அவர்கள் திறந்து வைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்23.10.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சென்னையில் 35 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 3,340 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 13 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 1,832 தனி வீடுகள், ஆக மொத்தம் 49 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட 5,172 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகளைத் திறந்து வைத்தார்கள்.

சென்னையில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள தனி வீடுகள் பற்றிய விவரம் வருமாறு:

சென்னை அடுக்கும்ாடிக் குடியிருப்புகள்: (மொத்த எண்ணிக்கை 3,340 – மதிப்பு ரூ.35.25 கோடி)

வ. எண்.	திட்டத்தின் பெயர்	இல்லங்கள் எண்ணிக்கை	மதிப்பு (ரூ. லட்சத்தில்)
1.	ஒக்கியம் துரைப்பாக்கம்	2,538	2,623.30
2.	பாரதி நகர்	324	381.80
3.	காமராஜ் நகர்	144	151.80
4.	மகாகவி பாரதி நகர்	48	54.50
5.	பீர்க்கங்கரணை	198	217.50
6.	செம்மஞ்சேரி	88	96.10

மதுரை தனி வீடுகள்: (மொத்த எண்ணிக்கை 916 – மதிப்பு ரூ.6.875 கோடி)

வ. எண்.	திட்டத்தின் பெயர்	இல்லங்கள் எண்ணிக்கை	மதிப்பு (ரூ. லட்சத்தில்)
1.	விளாச்சேரி	84	63.00
2.	தனக்கன்குளம்	170	127.50
3.	கடலூர்	202	152.00
4.	இடையப்பட்டி	432	324.00
5.	வலையான்குளம்	28	21.00

கோயம்புத்தூர் தனி வீடுகள்: (மொத்த எண்ணிக்கை 916 – மதிப்பு ரூ.6.875 கோடி)

வ. எண்.	திட்டத்தின் பெயர்	இல்லங்கள் எண்ணிக்கை	மதிப்பு (ரூ. லட்சத்தில்)
1.	கோண்டி நகர்	56	42.00
2.	பெரியார் சதுக்கம்	27	20.25
3.	சுகுணாபுரம் பகுதி–1	242	182.00
4.	சுகுணாபுரம் கிழக்கு	289	216.75
5.	பிள்ளையார்புரம்	302	226.50

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 49 கோடி ரூபாய் மதிப்பில், சாலை வசதி, தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் முதலான அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்டப்பட்ட மேற்காணும் 5,172 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேற்காணும் குடியிருப்புகள், தவணை முறை திட்டத்தின் கீழ் மாதம் 250 ரூபாய் வீதம் 20 ஆண்டுகள் செலுத்தி உரிமையாக்கிக் கொள்ளும் வகையில் ஆற்றோரங்கள், சாலை ஓரங்கள், ஏரிக்கரை ஓரம் மற்றும் கடற்கரைப் பகுதி முதலான இடங்களில் குடிசை போட்டு வாழ்கின்ற குடிசைவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்து தரப்படும். ●

சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான 2,200 ஏக்கர் பரப்பளவுள்ள பனமரத்துப்பட்டி ஏரி ஆக்கிரமிப்பு அகற்றம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி நடவடிக்கை

சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான இயற்கை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி என்றழைக்கப்படும் 2,200 ஏக்கர் பரப்பளவுள்ள பனமரத்துப்பட்டி ஏரி ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளது. மிகப்பெரிய மழைநீர் சேகரிப்பு அமைப்பை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி சேலம் மாநகராட்சி நிறைவேற்றியுள்ளது.

பனமரத்துப்பட்டி ஏரி இயற்கையாகவே நான்கு புறமும் மலைகளால் சூழப்பட்டு, சேலம் மாநகரிலிருந்து சுமார் 100 அடி உயரத்தில் அமைந்துள்ள இயற்கை மேல்நிலை நீர்த்தேக்க ஏரியாகும். இந்த ஏரியில் 30 ஆண்டுகளாகச் சிலர் ஆக்கிரமிப்புச் செய்து விவசாயம் செய்து, சிறிய குடிசை வீடுகள் கட்டிக் கொண்டு ஏரியின் நீர்பிடிப்பு முக்கியப் பகுதிகளை அடைத்து ஆக்கிரமிப்பு செய்திருந்தனர்.

தற்பொழுது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், நீர் ஆதாரங்களை முழுமையாகப் பாதுகாக்கவும், ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் மாநிலம் முழுவதும் மழைநீரைச் சேமித்திடவும் சிறப்பு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். இதன் அடிப்படையிலும் நீதிமன்ற உத்தரவுகளின்படியும் பனமரத்துப்பட்டி ஏரி ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அக்டோபர் 2ஆம் தேதி முதல், பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வந்தன.

பனமரத்துப்பட்டி ஏரி 1910ஆம் ஆண்டு முதல் சேலம் நகராட்சி மூலம் 2,200 ஏக்கர் நிலம் சொந்தமாக வாங்கப்பட்டுக் குடிநீர்த் தேவைக்கு முழுமையாக பயன்படுத்தப்பட்டு வந்தது. தொடர்ந்து 1965ஆம் ஆண்டு வரை சேலம் நகருக்குப் பனமரத்துப்பட்டி ஏரி தண்ணீர்தான் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதன்பிறகு, மேட்டூர் கூட்டுக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டதாலும், மழைக் குறைவினால் ஏற்பட்ட வறட்சி காலங்களில் ஏரியின் நீர்மட்டம் குறைந்தால், காலப்போக்கில் பனமரத்துப்பட்டி ஏரி தண்ணீர் பயன்படுத்தப்படாமலும், ஏரி சரியான பராமரிப்பின்றியும் அப்பகுதி மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது, மீண்டும் அடிக்கடி குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதாலும் உள்ளாட்சி அமைப்புகள் தங்களது நீர் நிலைகளை முழுமையாகப் பாதுகாத்து மழை நீரைச் சேகரித்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டுள்ளதால், சேலம் மாநகராட்சி மூலம் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு ஏரி ஆக்கிரமிப்

பாளர்களை நீதிமன்ற உத்தரவு மூலம் அகற்றிட ஆணைகள் பெறப்பட்டு தொடர்ந்து 20 நாட்கள் சுமார் 1,200 பணியாளர்கள் நாள்தோறும் பணியில் ஈடுபட்டும் மாநகராட்சி, வருவாய்த்துறை, காவல்துறை, இணைந்து 14 புல்டோசர்கள், பொக்லின் எந்திரங்கள் மூலம் ஏரியின் நீர்பிடிப்புப் பகுதிகளில் கட்டப்பட்டிருந்த அனைத்துக் குடிசை வீடுகளும், விவசாயப் பயிர்களும் அழிக்கப்பட்டு ஏரி ஆக்கிரமிப்பு முழுமையாக அகற்றப்பட்டுள்ளது. ஏரியின் நுழைவுப் பகுதிகளான வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில் முள்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டும், 24 மணி நேரமும், காவலர்கள், மாநகராட்சி ஊழியர்கள் இனி யாரும் ஆக்கிரமிப்புச் செய்யாமல் கண்காணித்திட ரூ.8 இலட்சம் மதிப்பில் காவலர் அறைகள் கட்டப்பட்டு வருகின்றன. பிடாரி அம்மன் கோயில் அருகில் செக்போஸ்ட் அமைக்கப்பட்டுள்ளது. நீர்ப் பிடிப்பு பகுதிகளிலிருந்து மழைநீரைச் சேமித்திட 6 இடங்களிலிருந்து வரத்து வாய்க்கால்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வரும் மழை காலத்தில் ஏரியின் முழு கொள்ளளவும் மழை நீர் சேமித்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாகப் பனமரத்துப்பட்டி ஏரி மூலம் மாநகராட்சிக்கு வருவாயைப் பெருக்கிட இங்குள்ள தென்னை மரங்கள் சிறப்பாகப் பராமரிக்கப் படவுள்ளன. சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திட நிழல் தரும் மரங்களும் நடப்படவுள்ளன. ஏரியின் பழமையை இயற்கைச் சூழலுக்கேற்ப மீண்டும் புதுப்பித்துப் பாதுகாக்கப்படும்.

சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான பனமரத்துப் பட்டி ஏரி ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு மழை நீர் சேகரிக்கப்படுவதன் மூலம், கடல் கரையிலிருந்து மிகவும் தொலைவில் உள்ள சேலம் பகுதி மக்களுக்கு ஓர் கடலைப் பார்ப்பது போல் தோற்றமளிக்கும். மேலும், சேலம் மற்றும் பனமரத்துப்பட்டி ஒன்றியப் பகுதிகளைச் சார்ந்த சுமார் 200 கிராமங்களின் நிலத்தடி நீர் மட்டம் உயரும். இதனால் அப்பகுதிகளில் எந்த நாளும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட வாய்ப்பில்லை. எதிர்காலத்தில் பனமரத்துப்பட்டி ஏரி சுற்றுலாத் தலமாகவும் பல்வேறு மூலிகைப் பண்ணைகளை உருவாக்குவதன் மூலம் சேலம் மாநகராட்சிக்கு நிரந்தர வருவாய் பெருகவும் வாய்ப்புகள் உள்ளன.

ஏரியின் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணியில் மாநகர மேயர் வணக்கத்திற்குரிய ஆர். சுரேஷ்குமார் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் திரு. பால்சாமி, மாநகரப் பொறியாளர் திரு. இரா. விஜய்குமார், மாநகர திட்டப்பிரிவு நிருவாகப் பொறியாளர் திரு. ச.ந. மணி ஆகியோர் மற்றும் மாநகராட்சியின் பொறிஞர் பிரிவைச் சேர்ந்த அனைத்து உதவிப் பொறியாளர்களும், தொழில்நுட்ப உதவியாளர்களும் பனமரத்துப்பட்டி ஏரியில் முகாமிட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணியில் ஈடுபட்டார்கள். சேலம் மாநகராட்சிப் பகுதிகளின் இயற்கை நீர் ஆதார அமைப்பை ஆக்கிரமிப்பாளர் களிடமிருந்து மீட்டு ஏரியைத் தூய்மைப்படுத்தியதைப் பாராட்டி சேலம் மாநகர மக்கள் மாநகராட்சிக்கும் தமிழக அரசுக்கும் பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளார்கள்.

– த. மருதபிள்ளை
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம் மாநகராட்சி

* * *

போலியோ என்ற வைரஸ் நுண்கிருமிகள் குழந்தைகளைப் பாதிக்கச் செய்து அவர்களின் கால்களை நிரந்தரமாக ஊனமடையச் செய்கின்றன. போலியோ நுண் கிருமிகள் அசுத்தமான தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்கள் மூலம் குழந்தைகளிடையே பரவுகின்றன. இந் நோய் வருமுன் காப்பதே முக்கியமாகும். அதற்கு ஒரே வழி, ஆண்டுதோறும் நடத்தப்படும் பல்ஸ் போலியோ முகாம்களில் அனைத்து குழந்தைகளுக்கும் தவறாமல் சொட்டு மருந்து கொடுப்பதுதான். உலக அளவில் 15 நாடுகளைத் தவிர ஏறக்குறைய எல்லா நாடுகளும் போலியோவை ஒழித்துவிட்டன. அந்த 15 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

<u>முக்கிய அம்சங்கள்</u>

1. போலியோ சொட்டு மருந்து மிகவும் பாதுகாப்பானது.
2. எத்தனை முறை வேண்டுமானாலும் கொடுக்கலாம், அதனால் எந்த பாதிப்பும் இல்லை.
3. ஓரிரு நாட்களுக்கு முன்பு சொட்டு மருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும் முகாம் நாட்களில் மீண்டும் கொடுக்கவேண்டும்.
4. முகாம் நாட்களில் கொடுக்கப்படும் சொட்டு மருந்து வழக்கமான தவணைகளில் கொடுக்கப்படும் சொட்டு மருந்திற்கு மாற்று அல்ல. இது ஒரு கூடுதல் தவணையாகும்.
5. வயிற்றுப்போக்கு, சளி, காய்ச்சல் மற்ற சிறு சிறு உபாதைகள் உள்ள குழந்தைகளுக்கும் முகாம் நாட்களில் தவறாமல் சொட்டு மருந்து கொடுக்கப்பட வேண்டும்.
6. இரண்டொரு நாட்களுக்கு முன் பிறந்த குழந்தைகளுக்கும் முகாம் நாட்களில் சொட்டு மருந்து கொடுப்பது அவசியமாகும்.
7. சென்ற முகாமின்போது விடுபட்ட குழந்தைகளுக்கும் இந்த முகாமில் தவறாமல் சொட்டு மருந்து கொடுக்கவேண்டும்.

போலியோவை ஒழிக்க அரசு நடவடிக்கை

பல்ஸ் போலியோ முகாம் எதற்காக ?

ஒரே சமயத்தில் ஒட்டு மொத்தமாக ஐந்து வயதிற்குட்பட்ட எல்லா குழந்தைகளுக்கும் சொட்டுமருந்து கொடுப்பது போலியோ நோய் ஒழிப்புத் திட்டத்தின் முக்கியச் செயல்பாடாகும். பாதுகாப்பான வேக்ஸின் கொடுக்கப்படும்போது, நோய் பாதிப்புக்கு ஏதுவாகும் குழந்தைகளின் குடல்களிலுள்ள போலியோவை உண்டாக்கும் கொடிய நுண்கிருமிகள் இரத்தத்திற்குள் செல்லவிடாமல், மலத்தின் வழியாக வெளியேற்றப்பட்டு, சூரிய வெப்பத்தால் அழிக்கப்படுகின்றன. வழக்கமாகக் கொடுக்கும் தடுப்புமருந்தின் மூலம் போலியோநோய் பரவாமல் தடுக்கப்பட்டாலும் ஒரே சமயத்தில் அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம் போலியோ நுண்கிருமிகள் பரவாமல் சுற்றுச் சூழலிலிருந்து அறவே ஒழிக்க முடியும். ஆகவே ஒரு குழந்தை கூட விடுபடாமல் அனைத்து ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் சொட்டுமருந்து கொடுக்கப்பட வேண்டும்.

சென்ற முறையைப் போலவே இந்தச் சுற்றிலும், தமிழ்நாட்டில் சுமார் 40,399 சிறப்பு மையங்கள் மூலம் சொட்டு மருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இம்மையங்கள் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிக் கூடங்கள்

மற்றும் முக்கியமான பொது இடங்களில் அமைக்கப்பட்டன. மேலும் பேருந்து நிலையம், ரயில் நிலையம், கோயில்கள் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகிய இடங்களில் நடமாடும் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு முகாம் நாட்களில் பயணம் மேற்கொள்ளும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தனியார் மருத்துவர்களும் தங்களது மருத்துவமனைகளில் முகாம் நாட்களில் போலியோ சொட்டு மருந்து இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

சுமார் 70 இலட்சம் குழந்தைகள் இதன் மூலம் பயன் பெற்றனர். இப்பணியைச் சிறப்பாகச் செய்ய பல்வேறு அரசுத் துறைகள், ரோட்டரி சங்கம் மற்றும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் சேர்ந்த சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்த முகாம்களில் ஈடுபடுத்தப்பட்டனர். சொட்டு மருந்து கொடுக்கப் பட்டதற்கான அடையாளம் தெரிந்து கொள்வதற்காக, குழந்தையின் இடது கை சுண்டு விரலில் “ஜென்ஷன் வயலட்” என்ற அடையாள திரவம் வைக்கப்பட்டது. குழந்தைகள் வாய்க்குள் விரலை வைத்தாலும் இந்தத் திரவத்தால் எந்த ஆபத்தும் ஏற்படாது.

ஒவ்வொரு வீட்டையும் பார்வையிட்டு அந்த வீட்டில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து தரப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் இதுவரை நடத்தப்பட்ட பல்ஸ் போலியோ முகாம்கள் நல்ல வெற்றியைத் தந்துள்ளன. ஆனாலும் அண்டை மாநிலங்களிலிருந்து போலியோ கிருமிகள் தமிழ்நாட்டிற்குள் பரவ நேரிட்டதால் எல்லா குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்குவது முக்கியமாகும்.

இதுவே சரியான தருணம். நாட்டிலேயே போலியோ பாதிப்பு தற்போது மிகவும் குறைவாக உள்ளது. ஆகவே முகாம் நடைபெறும்போது ஒரு குழந்தை கூட விடுபடாமல் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டால் போலியோ நோயை எளிதில் ஒழித்துவிடலாம்.

போலியோ இல்லாத சமுதாயத்தை உருவாக்குவோம்.

* * *

நீலகிரி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்பாடுகள்

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் 3ஆவது கட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றைய தேதியில் மொத்தம் 3,788 குழுக்கள் மாவட்டம் முழுமையிலுள்ள அனைத்துக் கிராமங்களிலும், நகராட்சி தொகுதிகளிலும் செயல்பட்டு வருகிறது. அங்கீகரிக்கப் பட்ட 9 தொண்டு நிறுவனங்களின் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள 60,879 குடும்பங்களில் சுமார் 59,564 மகளிரைக் கொண்டு இக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

தாழ்த்தப்பட்ட பழங்குடியினத்தைச் சார்ந்த 19,132 வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களில் இருந்து சுமார் 15,000 பெண்களைக் கொண்டு அவர்களுக்கென சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகையில் 30 சதவிகிதம் உள்ள இம்மக்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் ஜூலை 2004 மாதம் வரை ரூ.7.69 கோடி அளவிற்கு தங்களது வாரந்திர சிக்கன சேமிப்பின் மூலம் சேமித்து அத்தொகையைத் தங்களுக்குள்ளாகவே கடன் வழங்கி அதை ரூ.8.23 கோடியாகப் பெருக்கியுள்ளதுடன் கந்து வட்டிக்காரர்களின் பிடியிலிருந்தும் வெளி வந்துள்ளனர்.

அரசு இக்குழுக்களுக்குப் பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கித் திட்டம் (NABARD) மற்றும் பொது உடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளின் நேரடிக் கடன் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் மானியத்துடன் கூடிய சுழல் நிதி (முதல் திட்டம்) மற்றும் பொருளாதார நடவடிக்கை கடன் மற்றும் வாழ்க்கைச் செலவினங்களுக்கான கடன் (நுகர்வோர்) ஆகியவற்றின் மூலம் நிதி உதவிகள் செய்து வருகின்றன.

ஜூலை2004 முடிய இக்குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்ட விவரம்:

வ. எண்	திட்டம்	கடன் பெற்ற குழுக்களின் எண்ணிக்கை	கடன் பெற்ற தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	எஸ்.ஜி.எஸ்.ஒய். சுழல் நிதி	497	124.25
	எஸ்.ஜி.எஸ்.ஒய். பொருளாதார கடன்	130	283.71
2.	நபார்டு	1,346	523.56
3.	தாட்கோ–சுழல் நிதி	341	85.25
	தாட்கோ பொருளாதார கடன்	192	267.39
4.	எச்.ஏ.டி.பி.–சுழல் நிதி	12	3.00
5.	கூட்டுறவு வங்கி (பி.சி. / எம்.பி.சி.)	40	25.00
6.	கே.வி.கே. – உபாசி	4	20.00
	மொத்தம்	2,562	1,332.16

அனைத்து அரசுத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் இக்குழுக்களுக்கு வருவாய் துறையின் மூலம் 35 நியாய விலைக் கடைகள் நடத்தும் உரிமையையும், பால் நிறுவனத்தின் மூலம் பால் பொருட்கள் சில்லரை விற்பனை உரிமங்களும், வனத் துறையின் மூலம் சிறு வனப் பொருட்கள் சேகரித்து விற்பனை செய்யும் உரிமங்களும், சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலா மையங்களைப் பராமரிக்கும் உரிமங்களும் தோட்டக்கலைத் துறையின் மூலம் பசுமைக் குடில்கள் அமைத்து அந்தோரியம் மற்றும் கார்னேஷன் போன்ற விலை உயர்ந்த மலர்களைச் சாகுபடி செய்ய கடன் மற்றும் தொழில்நுட்ப உரிமங்களும் மற்றும் அரிய மருத்துவக் குணங்கள் கொண்ட மூலிகைச் செடிகளை உற்பத்தி செய்து அவற்றை விற்பனை செய்ய வசதிகளும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் இக்குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்ய சந்தை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஊரக வளர்ச்சி முகமையின் சார்பிலும் கிராமப் பகுதிகளிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள வணிக வளாகங்களில் சுயஉதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் குறைந்த வாடகையில் அவர்களது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய சந்தை வாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளது. நீதித்துறை வல்லுநர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் மூலம் மகளிருக்கான வன்முறைகளுக் கெதிரான சட்டப் பாதுகாப்புகள் மற்றும் குடும்பச் சொத்தில் அவர்களுக்கு உள்ள உரிமைகள் மற்றும் சமூக அந்தஸ்து குறித்து விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு விதிமுறைகள் அடங்கிய புத்தகங்கள் மகளிர் திட்டம் மூலம் அச்சடிக்கப்பட்டு *(சட்டம் என்ன சொல்கிறது)* விநியோகிக்கப்பட்டுள்ளது. இந் நடவடிக்கைகளின் மூலம் மகளிருக்கான அதிகாரப் பகிர்வு பரவலாக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு மகளிர் அதிகாரப் பகிர்வு ஆண்டாக அனுசரிக்கப்பட்டதுடன் ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் தேதி சர்வதேச மகளிர் தினமாக அனைத்து உலக நாடுகளிலும் அனுசரிக்கப்பட்டு மகளிருக்கான சமூகப் பொருளாதார அந்தஸ்து வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் வாழும் எளிய மக்கள் சுற்றுச் சூழல் மாசுப்படாத வகையில் அன்றாட சமையல் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தமிழக அரசின் மூலம் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் இடையே புதுமண தம்பதிகளுக்குத் தலா ரூ.750 செலவில் இலவச எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்தில் இம்மாவட்டத்தில் இதுவரை ரூ.64,100 வரை 81 தம்பதியினருக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் மூலம் சுயஉதவிக் குழுக்களுக்குக் கடன் வசதிகள் ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் அவர்கள் தலைமைப் பண்புகளைப் பெற்று அவர்கள் செய்யும் தொழில் மேன்மை அடைந்து வெற்றிபெற தேவையான அனைத்துப் பயிற்சிகளும் பல்வேறு நிலைகளில் வழங்கி அவர்கள் நிலைத்த தன்மையை அடைவதற்கு வழிவகை செய்யப்படுகிறது. குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி, ஊக்குனர் மற்றும் பிரதிநிதிப் பயிற்சி, திறன் வளர்ப்புப் பயிற்சி, தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி போன்ற பயிற்சிகள் இதில் அடங்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையுடன் தொடங்கப்பட்ட "ஐந்து ஆண்டுகளில் 5 இலட்சம் மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சி" வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த 3 ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும், இதுவரை இம்மாவட்டத்தில் 7,350 மகளிருக்கு இந்த அவசியமான அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 2,275 சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சியும், 928 உறுப்பினர்களுக்குத் திறன் பயிற்சியும், 134 உறுப்பினர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் மகளிர் திட்டச் செயல்பாடுகளைச் சமூக நலத்துறைச் செயலரும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்ட மேலாண்மை இயக்குநருமான திரு. எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு மகளிர் திட்ட செயல் இயக்குநர் திரு. என்.முருகானந்தம், இ.ஆ.ப., மற்றும் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.எஸ். முத்துசாமி,இ.ஆ.ப., ஆகியோர் கடந்த 21.8.2004 முதல் 23.8.2004 தேதிகளில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து இச்சுயஉதவிக் குழுக்களின் நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். குன்னூரில் சுயஉதவிக் குழுவினர் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், பொம்மைகள், ஆயத்த ஆடைகள் தயாரிப்பு, கைப்பைகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு அவற்றின் விற்பனையை மேலும் பெருக்க ஆலோசனை வழங்கினார்கள்.

வண்டிச்சோலை பகுதியில் மகளிர் சுயஉதவிக் குழுவினர் புதிதாகத் தொடங்கிய பல்பொருள் அங்காடியைத் திறந்து வைத்து அவர்கள் விற்பனையைப் பெருக்க ஆலோசனை வழங்கினார்கள். சோலாடாமட்டம் கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் அடங்கிய சுயஉதவிக் குழு ஈடுபட்டுள்ள நீலகிரி தைலம் காய்ச்சும் இடத்தைப் பார்வையிட்டுக் காய்ச்சுதல் மற்றும் வடிகட்டுதலில் புதிய மேம்படுத்தப்பட்ட முறையைப் பின்பற்றி தைல உற்பத்தியை அதிகரித்து அதிக இலாபம் ஈட்ட அறிவுரைகள் வழங்கினார்கள். மாலையில் தேயிலை வாரியம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கியுள்ள வாய்ப்பினைப் பயன்படுத்தி தரமான "பச்சைத் தேயிலை" கொள்முதல் செய்யும் திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகளிடமிருந்து தரமான தேயிலை பெற்று தனியார் தேயிலை தொழிற்சாலைகளுக்கு அவற்றைத் தரம் பிரித்து விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு சுயஉதவிக் குழுவைச் சந்தித்து அவர்களின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்து தக்க ஆலோசனைகள் வழங்கினார்கள்.

தேயிலை வாரியம் மற்றும் உபாசி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் தக்க பயிற்சிகள் அளிக்கப்பட்டுச் சுயஉதவிக் குழுக்கள் தரமான தேயிலை கொள்முதல் செய்யப்படுவதன் மூலம் கடந்த 2 வருடங்களுக்கு முன் நிலவிய தேயிலைத் தொழிலில் ஏற்பட்ட இக்கட்டான பின்னடைவு தற்போது சீர் செய்யப்பட்டுத் தரமான பச்சைத் தேயிலையின் விலை கிலோவிற்கு ரூ.9.50 என்ற நிலையில் ஏறுமுகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

22.8.2004 அன்று உதகை அருகிலுள்ள நீர்காசிமந்து பழங்குடியினர் தோடா இன மக்கள் வசிக்கும் பகுதியைப் பார்வையிட்டு, அவர்களுடைய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் "தோடா எம்ராய்டரி" என அழைக்கப்படும் தயாரிப்புகளைப் பார்வையிட்டு அவர்கள் விற்பனையை மேம்படுத்த மகளிர் திட்ட அலுவலருக்கு அறிவுரைகள் வழங்கினார்கள்.

கூடலூர் பகுதியில் ஏழுமரம் குடியிருப்பில் தாழ்வான சமவெளிப் பகுதிகளில் மழைநீரைத் தேக்கியும், மண்ணின் ஈரத் தன்மையைப் பயன்படுத்தியும் தாழ்த்தப்பட்டோர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் ஈடுபடும் நெல், வாழை, இஞ்சி, மஞ்சள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி நடவடிக்கைகளைப் பார்வையிட்டு அவர்களது வாழ்க்கைத் தரம் உயர தக்க ஆலோசனைகளை வழங்கினார்கள்.

மசினகுடி சொக்கனல்லி ஆதிவாசிகள் குடியிருப்பில் பயிற்சி பெற்ற ஆதிவாசிப் பெண்கள் பயிர் செய்து வரும் "அந்தோரியம்" வகை கொய் மலர்ச் சாகுபடியைப் பார்வையிட்டு அவற்றின் உற்பத்தி மற்றும் சாகுபடியை விரிவுபடுத்த ஆலோசனைகள் வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து சமவெளிப் பகுதியான ஆனைகட்டி மற்றும் சிறியூர் பகுதிகளில் பழங்குடியினர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் போதிய பயிற்சிகளுக்கு பின் மேற்கொண்டு வரும் மூலிகை / மருத்துவச் செடிகள் பயிர் செய்து வருவதைப் பார்வையிட்டு, அவற்றின் விற்பனையை மேம்படுத்தவும் தக்க ஆலோசனைகள் வழங்கினார்கள். அப்போது உடன் இருந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வ) அவர்களை மலர்ச் சாகுபடியை விரிவாக்கம் செய்யத் தேவையான கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிதி உதவிகளை ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

தலைவர் / மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் சுய சார்பு அடைவதில் அடுத்த கட்டமான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்ததுடன் இக்கூட்டமைப்புகள் நன்கு செயல்படும் முகமாக முதல் நாள் குன்னூர் பகுதியில் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் விவாதித்து அவர்களுடைய கருத்துகளைக் கேட்டறிந்து தக்க ஆலோசனைகள் வழங்கியதுடன் இரண்டாம் நாள் கூடலூர் பகுதியில் செயல்படும் கூட்டமைப்புகளுடன் கலந்துரையாடி அவர்களின் முன்னேற்றத்திற்குத் தக்க ஆலோசனைகள் வழங்கினார்கள்.

குன்னூர் உபாசி வேளாண் அறிவியல் மற்றும் மத்திய தேயிலை வாரியமும் இணைந்து குன்னூரில் நடத்திய "தரமான தேயிலை உற்பத்தியில் சுயஉதவிக் குழுவின் பங்கு" என்ற தலைப்பில் நடத்திய கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வேளாண்மை இயக்குனர் அவர்கள் சிறப்புரையாற்றி உபாசி மூலம் வழங்கப்பட்ட கடன் தொகைகள் மற்றும் வேளாண் உபகரணங்களைச் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கி அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்தினார்கள். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடந்தது. செயல் இயக்குநர், தேயிலை வாரியத்தின் முதன்மை மண்டல செயல் அலுவலர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

தலைவர் / மேலாண்மை இயக்குநர் மற்றும் செயல் இயக்குநர் ஆகியோர் இம்மாவட்டத்தில் மூன்று தினங்கள் சுற்றுப் பயணம் செய்து சுயஉதவிக் குழுக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் முன்னேற்றத்திற்குத் தக்க ஆலோசனைகள் வழங்கியதன் மூலம் மகளிர் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மேலும் சிறப்பாக நடைபெற புதிய உத்வேகத்தை அளித்துள்ளது.

– திரு. வி. ராமநாதன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
(முழுக் கூடுதல் பொறுப்பு)
நீலகிரி

* * *

மகளிர் சுயஉதவிக்குழுக்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகள்

திருநெல்வேலி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தங்களுடைய உறுப்பினர்களின் தேவையை மட்டும் பூர்த்தி செய்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், சமூகப் பிரச்சினைகள், கிராமப் பொது அடிப்படை வசதிகள் ஆகியவற்றிலும் அக்கறை காண்பித்து ஒட்டு மொத்தக் கிராமமும் மேம்பாடு அடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 72 குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளிகளில் 9 பள்ளிகளை மகளிர் சுயஉதவிக் குழுவினர் சிறப்பாக ஏற்று நடத்தி வருகின்றனர்.

இந்த மாவட்டத்தில் உள்ள 7,440 மகளிர் சுயஉதவிக் குழுக்களில் 1.41 இலட்சம் மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுவினர் அழகான ஆடை தயாரிப்பது முதல் ஊறுகாய் தயாரிப்பது வரை பல்வேறு தொழில்களைச் சிறப்பாகச் செய்து பொருளாதாரத்தில் மேம்பாடு அடைந்து வருகின்றனர்.

சமுதாயத்தின் புதிய சக்தியாக உருவெடுத்துள்ள மகளிர் சுயஉதவிக் குழுவினர் தற்போது கல்வி மேம்பாட்டிலும் ஈடுபட்டுள்ளனர். சமூகத்தின் நலிவடைந்த குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளைச் சேர்த்து அவர்களுக்குக் கல்வி கற்பித்து வருகின்றனர்.

இந்த மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் திட்டம் பகுதி–2ன் கீழ் 72 சிறப்புப் பள்ளிகள் தொடங்கப்பட்டு 2,500 குழந்தைகளைச் சேர்க்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதைத் தொடர்ந்து, மகளிர் சுயஉதவிக் குழுவினரிடம் இந்த சிறப்புப் பணிகளை ஒப்படைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார். கீழநீலிதநல்லூர், குலசேகரப்பேரி, அரியப்பபுரம், காசிதர்மம், தேவிப்பட்டணம், தென்காசி, மீனாட்சிபுரம், ஊர்க்காடு, சிந்தாமணி ஆகிய ஊர்களில் உள்ள 9 சிறப்புப் பள்ளிகளை அந்தந்தப் பகுதியில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுவினர் ஏற்றுள்ளனர்.

இந்த ஆண்டு தொடங்கப்பட்டுள்ள இந்தச் சிறப்புப் பள்ளிகளில் தலா 25 குழந்தைத் தொழிலாளர்கள் வீதம் மொத்தம் 225 பேர் கல்வி கற்று வருகின்றனர். ஆடு, மாடு மேய்க்கவும், பீடி சுற்றவும், கட்டுமான வேலைக்கும் சென்று கொண்டிருந்த குழந்தைகளை மகளிர் சுயஉதவிக் குழுவினரே மீட்டுவந்து பள்ளிகளில் சேர்த்துள்ளனர்.

ஆயத்த ஆடைகள் தயாரித்தல், கோலப்பொடி தயாரித்தல், மலர்க் கொத்து செய்தல், கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் இப்போது கல்வி கற்பிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மகளிர் சுயஉதவிக் குழு மூலம் தென்காசியில் சிறப்புப் பள்ளியை நடத்தி வரும் ‘மேதினி’ குழுவின் ஊக்குநர் அந்தப் பள்ளியின் ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார். அவர், “இதில் இலாபம் கிடையாது. ஆனால், ஏழைக் குழந்தைகளுக்கு கல்விக் கற்றுக் கொடுப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது” என்றார். இந்தப் பள்ளியின் மூலம் 2 பேர் ஆசிரியர், ஒரு உதவியாளர் என 3 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.1,500/– ஊதியம் கிடைக்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எண்ணப்படி ஏழைப் பெண்கள் சமூகப் பொருளாதார முன்னேற்றம் அடைந்து தம் காலில் தாமே நின்று நிலைக்கவும், ஏழைக் குழந்தைகளின் வாழ்வு ஏற்றமடையவும் திருநெல்வேலி மாவட்டம் ஒரு முன்னுதாரணமாக விளங்குகிறது.

– உல. இரவீந்திரன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி

* * *

துணி வகைகளில் சிறந்தது...
அதுவே முதலிடமும் வகிப்பது!
உங்கள் கோ-ஆப்டெக்ஸ்!

கோ-ஆப்டெக்ஸ்

- பட்டுப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- பருத்திப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- கூடுதல் தள்ளுபடி விற்பனைத் திட்டம்
- வாடிக்கையாளரை சிறப்பிக்கும் திட்டம்
- மாணவர்களுக்கான ஹாஸ்டல் செட்
- குறைந்த விலையில் பருத்தி பிரிண்டட் சேலைகள் குறிப்பிட்ட சில ஷோரூம்களில் கிடைக்கும்
- வட்டியில்லாத கடன் வசதியை பயன்படுத்திக் கொள்வீர்

மேலும் விவரங்கள் அறிய அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அனுகவும்.

Visit us at www.tn.gov.in Visit us at www.cooptex.com

எண்ணமெல்லாம் துணிமணிகள் என்றால்... வாங்குவதெல்லாம் கோ-ஆப்டெக்ஸ்!

புதிய வடிவமைப்புடன் கூடிய பட்டு மற்றும் பருத்தி ரக சேலைகள் விற்பனை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.11.2004 அன்று தலைமைச் செயலகத்தில், உலகச் சந்தையில் போட்டியிடும் வண்ணம் தமிழக கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள, 300–க்கும் மேற்பட்ட முற்றிலும் புதிய வடிவமைப்புடன் கூடிய பட்டு மற்றும் பருத்தி ரகச் சேலைகளை விற்பனைக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டு ஒன்றுக்கு 500 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி துணி வகைகளை உற்பத்தி செய்து வருகின்றன. கைத்தறி நெசவாளர்களின் மீது தனி அக்கறை கொண்டு,அவர்களும் அவர்களது குடும்பமும் வளம் பெற்று வாழ்ந்திட வேண்டும் என்ற சீரிய நோக்குடன் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவ்வாறு அவர்கள் தயார் செய்கின்ற துணி வகைகள் யாவும் உடனுக்குடன் விற்று, முதல் காணப்பட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன் உலகச் சந்தையில் போட்டியிடும் வண்ணம் புதிய வடிவமைப்பு மற்றும் வண்ணங்களுடன் கூடிய நவீன ரகங்களை உற்பத்தி செய்திட ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையை ஏற்று, குஜராத் மாநிலம், அகமதாபாத்திலுள்ள

தேசிய வடிவமைப்பு நிறுவனம், சென்னையிலுள்ள நெசவாளர் சேவை மையம், தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனம் மற்றும் முன்னணி வடிவமைப்பாளர்களிடமிருந்து பல்வேறு வண்ணங்கள் மற்றும் வடிவமைப்புகளில்



300–க்கும் மேற்பட்ட நவீன வடிவமைப்புகள் பெறப்பட்டன. இந்த வடிவமைப்புகளைக் கொண்டு, காஞ்சிபுரம், ஆரணி, சேலம், பரமக்குடி, ஈரோடு, விருதுநகர், கும்பகோணம் மற்றும் கடலூர் ஆகிய பகுதிகளிலுள்ள கைத்தறி நெசவாளர்களால் கண்ணைக் கவரும் வகையில் பட்டு மற்றும் பருத்தி ரக சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

புதியதும், புதுமையானதுமான வடிவமைப்புகளுடன் கூடிய இந்த நவீன ரக பட்டு மற்றும் பருத்திச் சேலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.11.2004 அன்று தலைமைச் செயலகத்தில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த கோயம்புத்தூரில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி ரக சேலையினை 443 ரூபாய் கொடுத்து பெற்றுக் கொண்டார்கள்.

தீபாவளிப் பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடும் தமிழகத்து மக்கள் வாங்கிப் பயன் பெறும் வகையில் புதிய வடிவமைப்புடன் கூடிய இந்தப் பட்டு மற்றும் பருத்திச் சேலைகள் தமிழகம் எங்கும் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை நிலையங்கள், கோ–ஆப்டெக்ஸ் அங்காடிகள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், திருச்சி, கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய பகுதிகளில் உள்ள லூம்வேர்ல்ட் (Loom World) விற்பனை நிலையங்கள் ஆகிய இடங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, புதிய புதிய வடிவமைப்புகளுடன் கூடிய பட்டு மற்றும் பருத்தி ரகச் சேலைகள் கண்ணையும், கருத்தையும் கவரும் வகையில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை இந்த ஆண்டு கணிசமாக அதிகமாகும்.

இதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு அதிகக் கூலியும் தொடர்ந்து வேலைவாய்ப்பும் கிடைப்பதுடன் அவர்களது வாழ்க்கைத் தரமும் உயரும்.

* * *

ஈத்து உவக்கும் இன்பம்

இரத்ததானம் என்பது ஒரு சிறப்பான போற்றுதற்குரிய செயலாகும். உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மனிதர்கள் வாழ்கின்றனர். பலவித உயிரினங்கள் வாழ்கின்றன. இதில் ஒருவருக்கொருவர் அன்புடனும், பாசத்துடனும் ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டு ஒப்புர வாழ்தலே சிறப்பாகும். இயற்கை ஒரு நல்ல ஆசான், வழிகாட்டி. அது எவ்வளவோ வளங்களையும், பொருட்களையும் அனைவருக்கும் பாகுபாடின்றி அளிக்கிறது. இயற்கை கூறும் பாடம் கொடுத்து உதவுதல், இத்தகைய கொடுத்து உதவுதல், பிரதி பலன் பாராது மனமுவந்து கொடுத்தல் வேண்டும். வள்ளுவப் பெருந்தகையும் இதையேதான்,

ஈதல்; இசைபட வாழ்தல்; அது அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

– என்று கூறுகிறார்.

“மற்றவர்க்கு உதவி, வேண்டுபவர்களுக்கு உதவி, அவர்களின் துன்பத்தில் பங்கு கொண்டு ஒற்றுமையுடன் அமைதியாக வாழ்தல்தான் இந்த உலகில் பிறந்தவர்களின் ஊதியம் அல்லது பரிசு” என்கிறார். எனவே, நாம் அனைவரும் அத்தகைய ஈத்து உவக்கும் எண்ணம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

குருதிதானம் அல்லது இரத்ததானம் என்பது மகத்தானச் செயலாகும். அது ஒரு உயிர் காக்கும் உன்னதப் பணியாகும். இந்தச் செயல் என்பது ஒருவருக்கு மறுபிறவி அளிப்பதாகும்.

நம் ஒவ்வொருவர் உடலிலும் தோராயமாக 5 முதல் 6 லிட்டர் இரத்தம் உள்ளது. இதில் இரத்ததானத்தின் போது எடுக்கப்படுவது 350 மில்லி லிட்டர் மட்டுமே. அதாவது, சுமார் ஒன்றரை டம்ளர் அளவு. உடலில் அதனுடைய அளவு குறையாத அளவுக்கு உற்பத்தி ஆகிக் கொண்டிருக்கும். தானம் கொடுத்த அளவு இரத்தம், அடுத்த 24 மணி நேரத்திற்குள் சரி செய்யப்பட்டுவிடும். இதனால் கவலைப்பட வேண்டியதில்லை. கொடுப்பவருக்கு வலியோ, பலவீனமோ ஏற்படாது. ஆனால் ஒரு உயிரைக் காப்பாற்றிய பெருமை கிடைக்கும்.

> **இரத்ததானம் செய்ய**
> **20 நிமிடங்களே ஆகும்.**
> **இரத்ததானம் செய்தவுடன்**
> **வழக்கம்போல அன்றாட**
> **வேலைகளைச் செய்யலாம்.**
> **எனவே, இரத்ததானம் கொடுக்க**
> **தகுதியுள்ளோர் அனைவரும்**
> **தயக்கமின்றி, மனமகிழ்ச்சியுடன்**
> **உயிருக்குப் போராடிக்**
> **கொண்டிருப்போருக்கு**
> **இரத்ததானம் கொடுத்து**
> **மனித நேயத்தை வார்த்தைகளால்**
> **அல்ல, செயலால் காட்டலாம்.**

மற்ற தானங்களைப் போல் அல்லாமல் இரத்த தானம் கொடுப்பதால் எந்தக் குறையும் ஏற்படாது. உயிர் காத்தோம் என்னும் மகிழ்ச்சி ஏற்படும். ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் இரத்ததானம் கொடுக்கலாம். இடைவெளி குறைந்தது மூன்று மாதம் இருக்க வேண்டும். டாக்டர்கள், வழக்கறிஞர்கள், வங்கி அதிகாரிகள், தொழிலதிபர்கள் என பல தரப்பினரும் மனமுவந்து இரத்ததானம் அளிக்க முன்வருகிறார்கள். ஐம்பது, அறுபது முறைக்கும் அதிகமாக இரத்ததானம் செய்து மகிழ்ந்து இருப்பவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அரிமா சங்கம், ரோட்டரி கிளப் மற்றும் பல சமூக நல அமைப்புகள் அதில் அக்கறைகாட்டி, தங்கள் உறுப்பினர்களையும், பிறரையும் இந்த நல்ல செயலுக்கு ஊக்கமூட்டி, மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன. இத்தகைய அரிய செயலில், உயிர்காக்கும் பணியில், மற்றவருக்கு மறு பிறவி தரும் மகத்தான பணியில் நாம் அனைவரும் ஈடுபடாமல் இருக்கலாமா? நாம் செய்யாமல் இருக்கலாமா. இன்றே இரத்ததான முகாமிலே பங்கு பெறுவோம். இரத்ததானம் செய்து மனநிறைவு அடைவோம்.

இரத்ததானத்தின் அவசியம்

விபத்துகளில் சிக்கும்போது இரத்த இழப்பு ஏற்படுகிறது. பெரிய அறுவை சிகிச்சை மேற்கொள்ளும்போது கூடுதலாக இரத்தம் தேவைப் படுகிறது. தீக்காயம் அடைந்தவர்களுக்கும், இரத்த சோகை அதிகம் உள்ளவர்களுக்கும், தாலசீமியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இரத்தம் அளிக்க வேண்டியுள்ளது. இரத்தப் புற்று நோய் தாக்கியவர் களுக்கும் உயிர் காக்கும் மருந்தாக இரத்தம் தேவைப்படுகிறது. மேலும் பல சூழ்நிலைகளில் புதிய இரத்தம் (Fresh Blood) தேவைப்படுகிறது. எனவே, மனமுவந்து இரத்ததானம் செய்வோரின் சேவை அதிகம் தேவைப்படுகிறது. இரத்தத்தை நீண்ட நாட்களுக்குச் சேமித்து வைக்க இயலாது. எனவே, இரத்ததானம் கொடுக்க விழைவோர் இரத்த வங்கிகளில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டால், தேவைப்படும்போது அவசர நேரத்தில் அவர்களைத் தொடர்பு கொண்டு அழைக்க ஏதுவாக இருக்கும்.

18 முதல் 60 வயது வரையுள்ள எல்லா ஆண்களும், பெண்களும் இரத்ததானம் செய்யலாம். இரத்ததானம் செய்பவரின் எடை குறைந்தபட்சம் 45 கிலோ இருக்க வேண்டும். ஹீமோகுளோபின் (Haemoglobin) அளவு 12.5 கிராமுக்கு மேல் இருக்க வேண்டும். இரத்த அழுத்தம் இயல்பாக இருக்க வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தாராளமாகக் கொடுக்கலாம். மஞ்சள் காமாலை, மலேரியா, எச்.ஐ.வி,/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் அவற்றினால் பாதிக்கப்படாதவராக இருக்க வேண்டும்.

இரத்ததானம் செய்ய 20 நிமிடங்களே ஆகும். இரத்ததானம் செய்தவுடன் வழக்கம்போல அன்றாட வேலைகளைச் செய்யலாம். எனவே, இரத்ததானம் கொடுக்க தகுதியுள்ளோர் அனைவரும் தயக்கமின்றி, மனமகிழ்ச்சியுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்போருக்கு இரத்த தானம் கொடுத்து மனித நேயத்தை வார்த்தைகளால் அல்ல, செயலால் காட்டலாம். உயிர் காக்கும் உன்னதப் பணியைச் செய்து ஈத்து உவக்கும் பெருமையடையலாம். மன நிறைவும் அடையலாம்.

– டாக்டர் ஆர். திருநாராயணன்
இராயப்பேட்டை அரசு மருத்துவமனை,
சென்னை.

* * *

ஆண்டிபட்டியில் ரூ.74 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

தேனி மாவட்டம் மலைகள் சூழ்ந்துள்ள மாவட்டமாகும். தேனி மாவட்டம் ஆண்டிபட்டிக்கு அருகில் சுமார் 7 கி.மீ. தொலைவில் வைகை அணை குறுக்கே 1958–ஆம் ஆண்டு வைகை அணை கட்டப்பட்டு மதுரை, திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்குக் குடிநீர் மற்றும் பாசனத்திற்குத் தண்ணீர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆண்டிபட்டி பகுதிக்குக் குடிநீர் தேவைக்கருதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 15.4.2002 அன்று நடைபெற்ற அரசு விழாவில், வைகை அணையை நீர் ஆதாரமாகக் கொண்டு ரூ.74 கோடி மதிப்பீட்டில் ஆண்டிபட்டி–சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இதனையடுத்துத் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஒன்றியத்தில் 43 கிராமங்களுக்கும், பெரியகுளம் ஒன்றியத்தில் 11 கிராமங்களுக்கும், ஆண்டிபட்டி தேர்வு நிலை ஊராட்சிக்கும் குடிநீர் வழங்க திட்டப் பணிகள் வேகமாக நடைபெற்று வந்தன.

மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி ஒன்றியத்தில் 83 கிராமங்கள், சேடப்பட்டி ஒன்றியத்தில் 127 கிராமங்கள், டி. கல்லுப்பட்டி ஒன்றியத்தில் 113 கிராமங்கள், செல்லம்பட்டி ஒன்றியத்தில் 29 கிராமங்கள், கள்ளிக்குடி ஒன்றியத்தில் 82 கிராமங்கள், திருமங்கலம் ஒன்றியத்தில் 16 கிராமங்கள் உள்பட மொத்தம் 504 கிராமங்களுக்கும், எழுமலை, பேரையூர், டி.கல்லுப்பட்டி ஆகிய தேர்வு ஊராட்சிகளுக்கும், உசிலம்பட்டி நகராட்சி உட்பட சுமார் 5.66 இலட்சம் பொதுமக்கள் பயன் அடையும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வைகை தடுப்பு அணை வலது கரையில் 5 மீட்டர் ஆழத்தில் கிணறு அமைக்கப்பட்டு, வினாடிக்கு 15 கன அடி நீர் எடுக்கப்படுகிறது. இதனை 100 எச்.பி., மின்பம்ப் மூலம் 24 மணி நேரமும் உறிஞ்சி "எரேட்டர்"க்கு அனுப்பப்படுகிறது. எரேட்டரில் திறந்த வெளியில் நீரை வடியச்செய்யும்போது ஆக்சிஜனோடு கலந்து துர்நாற்றம், இரும்புச் சத்து குறைக்கப் படுகிறது. பின்னர், சிமெண்ட் கால்வாய் வழியாகக் கொண்டு செல்லப்பட்டு நீரில் உள்ள மாசுகளைப் படியவைக்க ஆலம் திரவமாகக் கலக்கப்படுகிறது. 'கிளார் பிளாக்குலேட்டர்' என்னும் 2 மெகா தொட்டியில் நீர் சேமித்து, ஒரு மணி நேரத்திற்கு 6.30 இலட்சம் லிட்டர் நீர் வடிகட்டி வெளியேற்றப்படுகிறது. தொடர்ந்து "பில்டர்பெட்"

பகுதிக்குச் செல்கிறது. அங்குள்ள 10 தொட்டிகளில் கூழாங்கற்கள், மணல் பரப்பிய தொட்டிகளில் வடிகட்டி, குளோரின் வாயு கலந்து, 100 சதவிகித தூய்மையான குடிநீர் சப்ளைக்குத் தயாராகிறது. நிமிடத்திற்கு 18 ஆயிரம் லிட்டர் வெளியேற்றப் படுகிறது. 52 கி.மீ. தூரத்திற்குப் பல்வேறு குழாய்கள் மூலம் 18 இடங்களில் உள்ள பிரதான நீர்த்தேக்கத் தொட்டிகளில் நீர் சேகரமாகிறது. அங்கிருந்து பிரித்து அனுப்பப்படுகிறது.

அதில், ஆண்டிபட்டி பகுதியில் பணிகள் முழுமையாக முடிவடைந்து, கடந்த 20 நாட்களுக்கு மேலாக நாள்தோறும் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அதே போல், மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தினால் பயன் பெறக்கூடிய மற்ற கிராமங்களில் 90 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சுனீல் பாலீவால், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பணிகளை ஆய்வு செய்து பணிகளைத் துரிதப்படுத்தி, வேகமாகப் பணிகள் நடைபெறும் வகையில் வழி கண்டு உள்ளார்கள்.

இத்திட்டத்தினால் பயன்பெறக்கூடிய ஆண்டிபட்டி பகுதி பொதுமக்கள் கூறுகையில், "வறட்சியால் டி.சுப்புலாபுரம், டி. பொம்மிநாயக்கன் பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் கடந்த பல ஆண்டுகளாகக் குடிநீருக்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆண்டிபட்டி – சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் ஆண்டி பட்டியிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் நாள்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. குடிநீர்ப் பஞ்சம் தீர்ந்தது. இப்பகுதி வாழ் மக்களின் நீண்ட நாள் கனவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியுள்ள வர்களாக இருப்போம்" என ஆண்டிபட்டி மக்கள் மகிழ்ச்சித் தெரிவித்தார்கள்.

– ச. செல்வராஜ்
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி.

* * *

விருதுநகர் மாவட்டத்தில் மீன்வள மேம்பாடு



பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப, சத்துணவுத் தேவையை நிறைவு செய்ய செயல்படுத்தப் படும் பல்வகை உணவு உற்பத்திக்கான செயல் திட்டங்களில் மீன்வள மேம்பாட்டுப் பணிகளும் அடங்கும். அறிவியல் சார்ந்த மீன்வளர்ப்புத் தொழில் நுட்பங்களைக் கடைபிடிப்பதன் மூலம், உள் நாட்டு நீர் ஆதாரங்களைத் திறம்பட முழுமையாகப் பயன்படுத்தி கிராமப்புறங்களில் சுய வேலைவாய்ப்பை உருவாக்குதல், உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்குதல், சத்துணவைக் கிராமப்புற மக்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்தல், உள்நாட்டு மீனவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் மீன்வளத்துறையால் மாநில அளவில் பல்வேறு மீன்வளத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

உள்நாட்டு நீர் நிலையில் இயற்கையாக வளர்ந்து வந்த மீன்களை மட்டுமே காலங்காலமாகப் பிடித்து வந்த நிலை மாறி, விரைவில் வளரும் மீன் குஞ்சுகளை நீர் நிலையில் இருப்புச் செய்து வளர்த்துப்பிடிக்கும் நிலை உருவாகி பல்வேறு தரப்பினரும் மீன் வளர்ப்பைச் சுய வேலைவாய்ப்பாகவும் சிறிய/பெரிய நிறுவனங்களால் தனித் தொழிலாகவும் இன்றளவில் செய்துவரப்படுவது உள்நாட்டு மீன் வளர்ப்பில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய மாற்றமாகும்.

விருதுநகர் மாவட்டம் வறட்சிக்கு இலக்காகும் பகுதியாக இருந்தாலும் மேற்கு மலைத் தொடர்ச்சியை யொட்டி மாவட்டத்தில் ஒரு பகுதி அமைந்திருப்பதாலும், நான்கு நீர்த்தேக்கங்கள் அமைக்கப் பெற்றிருப்பதாலும் பல நீர்ப்பாசனக் கண்மாய்கள் ஏற்படுத்தப்பட்டு இருப்பதாலும் பிற மாவட்டங்களுக்கு இணையாக மீன்வளம் பெருக வாய்ப்புள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் 4 சிறிய நீர்த்தேக்கங்கள் (946 எக்டர்) 420 சிறிய நீர்ப்பாசனக் கண்மாய்கள் (7,827 எக்டர்), 312 பெரிய நீர்ப்பாசனக் கண்மாய்கள் (17,328 எக்டர்), 974 ஊராட்சிக் குளங்கள் (4,792 எக்டர்), 2 நகராட்சிக்குளங்கள் (27 எக்டர்), 16 இந்து சமய அறநிலையைச் சார்ந்த குளங்கள் (19 எக்டர்) மற்றும் 90 தனியார் குளங்கள் (130 எக்டர்) உள்ளன.

மீன்வள மேம்பாட்டுப் பணிகள்

1. பிளவுக்கல் அணையில் (வத்திராயிருப்பு ஒன்றியம்) 0.35 எக்டர் பரப்பளவு கொண்ட அரசு மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணை செயல்பட்டு வருகிறது. அரசு மீன் குஞ்சு பொறிப்பகங்களிலிருந்து (மணிமுத்தார், பவானிசாகர், மேட்டூர் அணை) உயர்ரக நுண் மீன் குஞ்சுகளை (கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாக்கெண்டை) பருவ காலங்களில் (ஜூன் – செப்டம்பர்) பெற்று வந்து, இருப்புச் செய்து, விராலிகளாக வளர்த்து மீன்வளத்துறை நீர் நிலைகளில் இருப்புச் செய்வதுடன் பொது மக்களுக்கும் அரசு நிர்ணயவிலையில் விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டுக்கு 7 இலட்சம் மீன் விராலிகள் வளர்த் தெடுப்பதற்கான இலக்குடன் இப்பண்ணை செயல்பட்டு வருகிறது.

2. துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 4 நீர்த்தேக்கங்களில்– பெரியார் நீர்த்தேக்கம் (76.10 எக்டர்), கோவிலார் நீர்த்தேக்கம் (73.67 எக்டர்) (வத்திராயிருப்பு ஒன்றியம்), குல்லூர்சந்தை நீர்த்தேக்கம் (316.40 எக்டர்) (அருப்புக்கோட்டை ஒன்றியம்) மற்றும் வெம்பக்கோட்டை நீர்த்தேக்கம் (480 எக்டர்) (வெம்பக்கோட்டை ஒன்றியம்), ஆண்டுதோறும் உயர்ரக மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யப்பட்டு, மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மூலம் பங்கு முறை மீன்பிடிப்புச் செய்து பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு சுமார் 30டன் மீன் உற்பத்தி செய்யப்படுகிறது.

3. *மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ளோருக்கும், மீன்* வளர்ப்போருக்கும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கி மீன் வளர்ப்பைச் சுய வேலைவாய்ப்பாக

மேற்கொள்ளவும், மீன் வளர்ப்பில் இலாபம் பெறவும் இத்துறை உதவி வருகிறது. மேலும், உள் நாட்டு மீன்வளத்துறை நிரந்தரமாகக் கொடுக்கும், 'ஆப்பிரிக்க தேளி மீன் வளர்ப்பு' தடை செய்யப்பட்டுள்ள விவரம் மீன் வளர்ப்போருக்கு எடுத்துரைக்கப்படுகிறது.

4. ஊராட்சி/ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஊருணி/குளம்/கண்மாய்களில் மீன் வளர்த்துப் பயன்பெறும் உரிமையைக் குத்தகைக்கு விட தொழில்நுட்ப ரீதியாக மீன் வளத்துறையால் அரசு குறைந்தபட்ச குத்தகைத் தொகை நிர்ணயம் செய்து ஊராட்சிகளின் வருவாய் கணிசமாகப் பெருகவும் உதவப்படுகிறது.

மீனவர் நலன்

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 5 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தம் 1,642 உறுப்பினர்கள் உள்ளனர். துறையின் கட்டுப் பாட்டிலுள்ள நீர் நிலைகளில் மீன் பிடிப்பில் ஈடுபட மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இதன் மூலம் சுமார் 100 மீனவர் குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றனர். அரசு நீர் நிலைகளின் மீன் பாசி உரிமையைப் பெற்றிட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றன.

மீனவர்களின் நலன் கருதி, மத்திய, மாநில அரசே இலவசமாக மீனவர் குழு விபத்துக் காப்புறுதித்திட்டம் செயல்படுத்துகிறது. மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் எவரேனும் விபத்தில் இறந்தால் அவரின் வாரிசுதாரருக்கு ரூ. 50,000/– காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது. இதோடு தனிநபர் காப்பீட்டுத்திட்டம் மற்றும் மீன்வளத்துறை மற்றும் மாவட்ட நிருவாகம் மூலம் இலவச வீடு கட்டும் திட்டமும் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் குடும்பத்தில் எவரேனும் இறந்தால் ஈமக்கிரியைக்கு ரூ.500/–ம் இலவசமாக வழங்கப்படுகிறது.

மீன் வளர்ப்போர் பயிற்சி

மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ளோரை ஊக்குவிக்கும் வகையில், மத்திய, மாநில அரசுத்திட்டத்தின் கீழ் பல்வேறு மீன் வளர்ப்புத் தொழில் நுட்பங்களான தூண்டுதல் முறையில் மீன் குஞ்சு உற்பத்தி, கூட்டின மீன் வளர்ப்பு, ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்புக் குளங்கள் கட்டுமானம்; செப்டம்பர் 2004–ஆம் மாதத்தில் 73 நபர்களுக்கு 3 நாட்கள் இலவசமாகப் பயிற்சி அளித்து, நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.75/– பயிற்சி

படியும், போக்குவரத்துக் கட்டணமாக 3 நாட்களுக்கு ரூ. 20/–ம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட நிருவாகம் மூலம் விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள 50 பண்ணைக் குட்டைகளில் (ஒவ்வொன்றும் 0.09 எக்டர்) பண்ணைக்குட்டை உரிமையாளர்கள் மீன் வளர்ப்பை மேற்கொள்ளச் செய்யும் வகையில் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

மீன் வளர்ப்பு

மீன் வளர்ப்பு இலாபகரமான தொழிலாகும். மீன் வளர்ப்பவரின் அனுபவம், இருப்பு செய்யப்படும் மீனினங்கள், தொழில்நுட்பத்தின் வகை மற்றும் மூலதனத்திற்கேற்ப அதிக மீன் உற்பத்தி செய்ய முடியும். மித தீவிரமான தொழில் நுட்பங்களைக் கையாண்டு எக்டரில் 2–3 டன் இலகுவாக உற்பத்தி காணலாம்.

மீன் வளர்ப்பைச் சுயவேலைவாய்ப்பாக மேற்கொள்ள குறைந்தபட்சம் 0.2 எக்டர் நீர்ப்பரப்பு தேவை. சுமார் 2 மீட்டர் ஆழத்திற்கு 6 மாதத்திற்குக் குறையாது நீர் நிறுத்தம் இருக்க வேண்டும். ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஊருணி/குளம் கண்மாய்களைக் குத்தகைக்கு எடுத்தும் மீன்வளர்ப்புச் செய்யலாம். வேளாண்மை நிலத்தின் ஒரு பகுதியில் மழை நீர் சேகரிப்புக்குக் குட்டை அமைத்து, மீன் வளர்த்துக் கூடுதல் பயன் பெறலாம்.

பண்ணைக் குட்டை அமைத்து மழை நீர் சேகரிப்பீர்! மீன்வளம் பெருக்குவீர்!

– பொ. முத்தையா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
விருதுநகர்.

* * *

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வாழ்க்கை மேம்பட மாற்றுப் பயிர்த்திட்டம்

காலநிலை மாற்றத்தாலும் பூமியில் நீர்மட்டம் குறைவதாலும் தமிழகத்தில் பொழியும் மழையின் அளவு பெரிதும் குறைந்துவிட்டது. வறட்சி மேலோங்கிவிட்டது. இதனால் முக்கியப் பயிர்களான நெல், உளுந்து, பயிர், கரும்பு சாகுபடிகள் செய்ய முடியாமல் கிராம விவசாயிகளின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வறட்சியான எரிபொருளுக்கும் பயன்படும் திட்டமாகவும் அமைந்துள்ளது. நெல், கரும்பு, வாழை போன்றவற்றைப் பயிர் செய்து போதிய பயன்பெற முடியாத சூழ்நிலையில் நீர்வளப் பற்றாக்குறையால் விவசாயத் தொழில் செய்யாமல் இருப்பதால் விவசாயக் குடும்பம் மட்டும் பாதிப்பதில்லை. நாட்டின் கிராமப் பொருளாதாரமே பாதிக்கப்படுகிறது.

சூழ்நிலையில் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமலும், வேறு தொழில் அறியாததாலும் பெரும் இன்னல்படுவதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், வேளாண் விஞ்ஞானிகளுடன் கலந்து ஆலோசனை செய்து வேளாண்துறை மேம்பட பல புதியத் திட்டங்களை அறிமுகப்படுத்தினார்கள். அதில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வாழ்க்கை மேம்பட, வறட்சியிலும் வளம் காணும் திட்டமாக "மாற்றுப் பயிர்த் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது.

"மாற்றுப் பயிர்த் திட்டம்" விவசாயிகளுக்கு மட்டும் வளமான திட்டமாக இல்லாமல் உயிரி

இது பற்றி திருவள்ளுவர்,

"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை"

– என்று கூறியுள்ளார்.

உழவுத்தொழில் புரிவோர், அத்தொழிலைத் தொடர்ந்து புரியாமல் கையைக் கட்டிக் கொண்டு இருந்து விட்டால், பந்த பாசங்களையெல்லாம் விட்டுவிட்டு வாழ்கின்ற துறவிகளுக்குக்கூட வாழ்வில்லாமல் போய்விடும் என்று விவசாயிகள் பற்றி வள்ளுவர் கூறியிருக்கின்றார்.

நீர்வளம் குறைவால் விவசாயிகள் விவசாயம் செய்யாமல், கைகட்டி நிற்பதை மாற்றி, வறட்சியிலும் பயிராகும் பயிர்களைப் பயிர் செய்ய வலியுறுத்துவது "மாற்றுப் பயிர்த் திட்டம்".

இம்மாற்றுப் பயிர்த் திட்டம் செயல்படுத்தப் படும்போது அதனுடன் உயிரி எரிபொருள் திட்டமும் வளர்ச்சி பெறுகிறது. இவ்விரண்டும் செயல்படும் போது, விவசாயிகளின் வாழ்க்கை மேன்மை பெறுகிறது. கிராமப் பொருளாதாரமும் மேம்படுகிறது.

மாற்றுப் பயிர்த் திட்டத்தின் கீழ் தற்பொழுது, சர்க்கரைச்சோளம், சர்க்கரைக்கிழங்கு மற்றும் காட்டாமணக்கு ஆகிய பயிர்கள் இடம் பெறுகின்றன.

சர்க்கரைச்சோளம், சர்க்கரைக்கிழங்கு பயிர் செய்வதற்குக் கரும்பு பயிருக்குத் தேவையான தண்ணீரின் அளவில் 40 சதவிகிதம்தான் தேவைப்படும். இவ்விரண்டும் குறுகிய காலப் பயிர்களாகும்.

சர்க்கரைச்சோளம், சர்க்கரைக்கிழங்கு இவை களிலிருந்து கிடைக்கும் "எத்தனால்" உயிரி எரிபொருளாகப் பயன்படுகிறது.

இதுபோலவே காட்டாமணக்கு வறட்சியைத் தாங்கி மிகக் குறைந்த அளவு மழையுள்ள இடங்களில் வளரக்கூடியது. இதுவும் உயிரி எரிபொருளாகப் பயன்படுகிறது.

உயிரி எரிபொருள் சிறப்பையும், பயன் பாட்டினையும் பொது மக்களிடையே பரவலாக்கும் வகையில், மாநில ஊரக வளர்ச்சித் துறை மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் திருச்சிராப்பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வை.பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் உயிரி எரிபொருள் கருத்தரங்கம் நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்கள் இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், "வறண்டு கிடக்கும் பகுதிகளில் நீரின் தேவையின்றி சாதாரணமாக விளையக் கூடிய காட்டாமணக்குச் செடியைப் பயிரிட்டால் ஏக்கருக்குச் சாதாரணமாக ரூபாய் 5,000 முதல் ரூபாய் 7,000 வரை வருவாய் கிடைக்கும். அதாவது 30 ஆண்டுகள் வரை இந்தப் பயன் கிடைக்க வாய்ப்புண்டு. மேலும், எண்ணெய் போக மீதமுள்ள கழிவுகளிலிருந்து சோப்பு போன்ற பொருட்களையும் உற்பத்தி செய்ய முடியும்" என்றார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வை. பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையில், "வேளாண்மையில் மாற்று ஏற்பாடுகளுக்குப் போகும் போது விவசாயிகளிடம் பெரும் தயக்கம் ஏற்படுகிறது. அந்த தயக்கத்தைப் போக்க ஆய்வாளர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு. கா.அலாவுதீன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரையில்,

"இந்தியாவில் உள்ள எண்ணெய் வளம் அடுத்த 50 ஆண்டுகளில் தீர வாய்ப்புள்ளதால் மாற்று எண்ணெய் வளங்களைக் கண்டறிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எரிசக்தித் துறையில் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதன் மூலம் நாடு தன்னிறைவு பெறுவதோடு வல்லரசு நாடுகளில் ஒன்றாகவும் மாற முடியும். எண்ணெய் இறக்குமதியைத் தவிர்ப்பதன் மூலம் அந்நியச் செலாவணியைச் சேமித்து நாட்டின் பொருளாதாரத்தையும் தக்க வைக்க இயலும்.

பெட்ரோலியத் தேவையைப் பூர்த்தி செய்ய காட்டாமணக்குப் போன்ற உயிரி எரிபொருள் தாவரங்களைப் பயிரிடுவதன் மூலம் வேலை வாய்ப்பைப் பெருக்கி பொருளாதாரத்தை மேம்படுத்துவதோடு சுற்றுச்சூழல் சீர்கேட்டையும் தவிர்க்கலாம். காட்டாமணக்குச் செடியைப் பயிரிடும் விவசாயிகளுக்கு விற்பனை செய்ய முடியுமா ? என்ற சந்தேகம் தேவையில்லை. இரயில்வே மற்றும் தமிழக அரசு போக்குவரத்துக்கழகங்கள் இந்த உயிரி எரிபொருளைப் பயன்படுத்தத் தயாராக உள்ளன. அதே போல் இதற்கு பெரிய அளவிலான ஆலைகளும் தேவையில்லை" என்று கூறினார்.

கோயம்புத்தூர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் திரு. வடிவேலு அவர்கள் வாழ்த்துரை வழங்கிப் பேசுகையில் "ஜெர்மனியில் எண்ணெய் வளம் குறைவதைக் கண்ட அந்நாட்டு அரசு தொலைநோக்குப் பார்வையோடு மாற்று ஏற்பாடுகளைக் கண்டறிந்ததன் காரணமாக எண்ணெய் வளத்தில் பிற நாடுகளை எதிர்பாராமல் தன்னிறைவு பெற்றுள்ளது" என்றார்.

கருத்தரங்கில் திட்ட அலுவலர் திரு. மனோகரசிங் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். வேளாண்மைத் துறை துணை இயக்குநர் திரு. தட்சிணாமூர்த்தி நன்றி கூற கருத்தரங்கம் நிறைவு பெற்றது.

– *ச. பாண்டியன்,*
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி

★ ★ ★

உலகெங்கும் தமிழோசை

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்றான் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் நம் பாரதி. எல்லா வளமும் பெற்ற நம் தமிழின் பெருமையை உலக மக்கள் உணர வேண்டும் தொன்மை வாய்ந்த நம் மொழியின் வளத்தை நானிலமும் போற்றிப் புகழ வேண்டும், அதன் மூலம் தமிழர்தம் பண்பாடு, கலாச்சாரம் போன்றவை உலக மக்களால் உணரப்பட்டு நம் சமுதாயத்தின் அருமை, பெருமைகளை வையம் போற்றும்; இதன்கண் உலக அரங்கில் தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வீறுநடை போட்டு வலம் வருதல் உறுதி செய்யப்படும் என்ற அசைக்க முடியாத உயர்வுள்ளலின் வெளிப்பாடுதான் மேற்காணும் பாரதியின் தமிழ் முழக்கம்.

உலக அரங்கின் பல்வேறு நாடுகளில் பல்வேறு மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. ஆங்கிலம், சீனம், ஜப்பான், மலாய், சிங்களம், பாரசீகம், இந்தி, தமிழ் என பேசப்பட்டு வந்தாலும் உலக மக்களை ஒருங்கிணைக்கும் வண்ணம், படித்த மற்றும் வணிக–அறிவியல்–தொழில் நுட்ப–தகவல் சாதனத் தொடர்புகளுக்கு ஆங்கிலமே பெரிதும் பயன்பட்டு வருகின்றது. இன்றைய நாளில் உலகின் தொடர்பு மொழி என்ற நிலையில் ஆங்கில மொழியே முன்னிலை வகிக்கின்றது. ஆங்கிலப் புலமை இருந்தால் வணிகம், அறிவியல், தொழில்நுட்பம், தகவல்தொடர்பு போன்றவற்றில் பிரகாசிக்கப் பெரிதும் ஏதுவாக இருக்கும் என்ற நிலை உருவாகி, உறுதி செய்யப்பட்டுள்ள நிலை தற்போது நிகழ்வதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

உலகின் பல பாகங்களிலும் நம் தமிழர்கள் குடியேறியுள்ளனர். பல்வேறு துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். கடல் கடந்த வாணிகமும் வளர்ந்து வரும் தொழில்நுட்பமும், கற்ற கல்விக்கேற்ற வேலைவாய்ப்பும், வெளிநாட்டில் பணிபுரிந்தால் கௌரவத்தோடு உயர் ஊதியமும் கிட்டும் என்ற நடப்பும் தமிழ் மக்களை உலகெங்கும் பணிபுரியவும்– குடியேறவும் வைத்துள்ளது. மேலும் அறிவியல், மருத்துவம், பொறியியல், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் நம் தமிழர்கள் பெரிதும் முன்னணியில் இருந்து வருகின்றனர். அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகளில் தகவல்நுட்பம் மற்றும் பொறியியல் துறையில் நம் தமிழர்கள் நல்லதொரு இடத்தில் உள்ளனர். அவ்வாறு இருந்தாலும் அவர்களின் தனித் திறமைகளை (SKILLS) உலக நாடுகளில் முழுதும் வெளிப்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. இது ஒப்புக்

கொள்ளக் கூடிய விஷயம் மட்டுமன்றி ஆராய்ந்து பார்க்கவும் தேவையான ஒன்றாகும். இதன் பல்வேறு நிலைகள் அவசியம் பரிசீலிக்கப்பட வேண்டியவைகள் தான் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

இதனால் பல்வேறு நிலைகளில் உணர்ந்து ஆய்வு செய்யக்கூடிய சூழ்நிலை நம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டதன் விளைவு ஒரு புதிய நிலை உருவாகி உள்ளது. ஒரு புதிய பாதைக்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. ஆம், நம் தமிழர்கள் பல்வேறு துறைகளில் முன்னேறினாலும் அவர்தம் ஆங்கிலப் புலமை முதன்மையானதாக இல்லாததால் தான்

அவர்களால் பிரகாசிக்க முடியவில்லை என்ற நிலை உணரப்பட்டுள்ளது. இதனை மாற்றும் வண்ணம் முன்னேறியுள்ள தமிழன் முன்னணியில் பிரகாசிக்க வேண்டும் என்ற உயர்வுள்ளத்துடன், முதற்கட்டமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் பெரிதும் புகழ்பெற்ற இலண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளார்கள். அதன்கண் நம் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலும் ஆங்கில மொழியில் தனித்திறன் பெறும் வண்ணம் தனிக்கவனம் செலுத்தப்படும். மேற்காணும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தினர் இப்பொறியியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கட்கு ஆங்கில மொழிப்பயிற்சி அளிக்கவுள்ளார்கள். இம்மாணவர்களின் தனித்திறனை (பொறியியல் சார்ந்தது) உலக அரங்கில் முனைப்புடன் தெளிவுப்படுத்த– உலக இணைப்பு மொழியான ஆங்கிலத்தின் மூலம் உலகறியச் செய்ய – இந்த ஆங்கில மொழிக்கான தனிப்பயிற்சி ஏதுவாக மட்டுமின்றி – வரப்பிரசாதமாகவும் அமையக்கூடும் என்பதில் ஐயமில்லை.

இதேபோன்று இனி வரும் ஆண்டுகளில் ஒவ்வொரு துறையிலும் ஏன் கல்லூரி, மேல்நிலை, உயர்நிலைப் பள்ளி அளவில் கூட பிரிட்டன் கேம்பிரிட்ஜ் ப்ல்கலைக்கழக உதவியுடன் ஆங்கில மொழிப் பயிற்சிக்குத் தனிக்கவனம் அளிக்கப்படும் நிலை வரவுள்ளது என்பதனைச் சென்ற ஆசிரியர் தின விழாவன்று பேசிய தமிழகக் கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு தெரிவித்துள்ளார்கள். தற்போது கூட முதலாம் வகுப்பு மாணவர்கட்கு ஆங்கிலம் அறிதல் என்ற நிலையில் ஆங்கிலப் பாட புத்தகம் வழங்கப்பட்டு அவர்களுக்கு போதனை செய்வதற்கானப் பயிற்சியை முதலாம் வகுப்பு பயிற்றுவிக்கும் ஆசிரியர்கட்கு 'அனைவர்க்கும் கல்வி திட்டத்தின்' (சர்வ சிக்ஷ அபியான்) கீழ் செயல்படும் வட்டார வளமையங்களில் அளிக்கப்பட்டுள்ளது. இது மேற்கண்ட ஆங்கிலமொழித் தனிப்பயிற்சிக்கான ஆரம்ப அடிப்படை என்றால் அது மிகையாகாது.

இந்த முயற்சியும், செயல்பாடும் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். இதனால் நம் தாய் மொழிக் கல்வியை புறந்தள்ளுகிறோம் என்று அர்த்தமல்ல. நம் தாய்மொழியின் பெருமையை உலக அரங்கில் ஒலிக்க வேண்டுமெனில் ஆங்கிலமொழியில் நாம் புலமை பெறுவது, தொடர்பு சாதனத்தில் இலகுவடைய ஒரு சிறந்த வழிகாட்டுதலாக அமையும். நம் மொழியின் பெருமையை மற்றவர் உணர வேண்டுமானால் மற்ற அந்த நபர்களும் உணரும் வண்ணம் அவர்தம் மொழியினை அல்லது அவரால் உணர்ந்து கொள்ளக்கூடிய பொதுத் தொடர்பு மொழியினை நாமும் தெரிந்து நம் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்தால் தான் கேட்பவரும் தெளிவடைவார். சொல்பவரின் இலட்சியமும் ஈடேறும். இந்த உண்மையை உணராது – இடைப்பட்ட காலத்தில் நம் உணர்வுகள் மடைமாற்றம் செய்யப்பட்டதனால்– இந்தச் சரிவு நமக்கு ஏற்பட்டுள்ளது என்பதனை மறுப்பதற்கில்லை.

இனியும் நாம் வாளாவிருக்காது – தெளிவு பெற்று உலகத் தொடர்பு மொழி என்ற நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிற ஆங்கில மொழியிலும் புலமை பெறுவோம். சங்கம் வளர்த்த நம்தெள்ளு தமிழின் அருமை, பெருமைகளை – பண்பாட்டின் கூறுகளை – கலாச்சாரத்தின் பண்புகளை – வளத்தின் முதன்மையினை உலகம் உணரத் தொடர்ந்து செயலாற்றுவோம். உயர்தனிச் செம்மொழியாம் தமிழுக்கு நடுவணரசு வழங்கிய செம்மொழிக்கான அங்கீகாரமும் நமக்கு இந்நிலையில் பெரிதும் உதவும். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை நம் தமிழில் மொழி பெயர்த்துக் கொணர்வோம். அறிவியல் பெருமைகளை–புதுமைகளை அன்னைத் தமிழில் கொண்டு வருவோம்.

தமிழின் பெருமைதனை எட்டுத் திக்கும் கொண்டு செல்வோம். அதே நேரத்தில் எட்டுத் திக்கின் அரிய செய்திகளைத் தமிழுக்கும் கொண்டு வருவோம். அப்போதுதான் முண்டாசுக் கவிஞன் பாரதி சொன்னபடி தேமதுரத் தமிழின் ஒலி உலகெங்கும் ஓங்கி ஒலிக்கும். ஆங்கிலத்தில் நல்ல புலமைபெற் – தமிழக மக்களை முதன்மையாக்கத் தமிழக அரசும் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் மேற்கொள்ளும் முயற்சிக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சியின்றி முழு ஒத்துழைப்புத் தர முயல்வோம்.

உதட்டு அளவிலான பேச்சுகளைப் புறந்தள்ளி – யதார்த்த நிலையை உணர்ந்து – உள்ளத்து உணர்வுகளுக்கு இடமளிப்போம்.

பைய நாவையசைத்த பழந்தமிழின் பெருமையை வையம் உணர இந்தக் கன்னி முயற்சி அவசியம் தேவையான ஒன்றாகும். உலகை வெல்ல உலகம் உணர்வோம் – உலகம் உணர உயர்வுள்ளலுடன் முனைவோம். முயற்சி திருவினையாக்கும்.

கா.இர.குப்புதாசு,
தலைமை ஆசிரியர், பி.யூ.நடுநிலைப்பள்ளி,
முடையூர் – 604 206, செஞ்சி தாலுக்கா.

இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆணை

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று, சுதந்திரம் அடைவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களான தங்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனுக் கொடுத்திருந்த திருவண்ணாமலை, மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, இராமநாதபுரம், தேனி, விருதுநகர், திருவள்ளூர், நீலகிரி மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 18 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டு உள்ளார்கள். மேலும், மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்குமாறு வேண்டி கோரிக்கை விடுத்த சேலம், விழுப்புரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 3 விடுதலைப் போராட்ட வீரர்களின் மனைவியர்க்கு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்

திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. என். தனகோடி, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கே. பாலகிருஷ்ணன் மற்றும் திரு. கே.எம். தோப்பு நயினார், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கே. மணி உடையார், திரு. என். கந்தசாமி மற்றும் திரு. வி. சுப்பிர மணியன், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பி. ரத்தினசாமி நாடார், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ். சண்முகம் மற்றும் திரு. ஏ. வியாகப்பன், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கே.என். ராமச் சந்திரன், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கே.எஸ். சவுண்டய்யா, திரு. ஏ. பெத்தண்ண ஆச்சாரி, திரு. ஏ.என். ரங்கசாமி மற்றும் திரு. எஸ். பொம்முசாமி, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எஸ். சண்முகம், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஜேபி. சுப்பையா, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கேபி. நஞ்சுண்ட கவுடர், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சி. காரை யூசுப் ஆகிய விடுதலைப் போராட்ட வீரர்கள், தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்ததாகவும், அதன் அடிப்படையில் தங்களுக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கக் கோரி பல ஆண்டுகளாகக் கோரிக்கை மனுக்கள் கொடுத்தபோதும் தங்களது கோரிக்கை இதுவரை ஏற்கப்படவில்லை என்றும் தெரிவித்து, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தைத் தங்களுக்கு வழங்கி உதவிட வேண்டும் என்று வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவர்களது தியாகத்தைப் போற்றி, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை உடனடியாக வழங்கிட ஆணையிட்டார்கள். இதன்படி, இவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியமாக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஒய்வூதியம்

மேலும், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. டி. மேரி தேவதாஸ், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. பி. சகுந்தலா மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பல்பீனம்மாள் ஆகியோர், மறைந்த தங்களது கணவன்மார் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சிறைத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர் எனவும், மாநில அரசு தங்களுக்கு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஒய்வூதியம் வழங்க வேண்டும் எனவும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு அளித்திருந்தனர். இம்மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மேற்படி மூன்று நபர்களுக்கும் மாநில அரசு, விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஒய்வூதியம் வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி, குடும்ப ஒய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றுக்கு 15 ரூபாயும், ஆக மொத்தம், 1,515 ரூபாய் மாதந்தோறும் விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஒய்வூதியமாக அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு மதிப்பளித்து கௌரவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிட ஆணையிட்டுள்ள இந்த ஒய்வூதியத்திற்கான அரசு ஆணை, 16.10.2004 அன்று, அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில், மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மேற்காணும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்களின் மனைவியர் ஆகியோரிடம் நேரில் வழங்கப்பட்டன. ❖

கதர் துணி ரகங்களுக்கு இவ்வாண்டு முழுதும் தள்ளுபடி

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு

கதர் துணி ரகங்களுக்கு இந்த ஆண்டு முழுவதும் தள்ளுபடி வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது குறித்து தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை வருமாறு:

இந்தியாவின் இதயம் கிராமங்களில் வாழ்கிறது. அந்தக் கிராமங்களின் பொருளாதார மேம்பாடு, கிராமத் தொழில்களையே சார்ந்துள்ளது. கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்வை வளம் பெறச் செய்வதில் ஊரகத்தொழில்களே முக்கியப் பங்கு வகிக்கின்றன.

ஊரகத் தொழில்களில் சிறப்பிடம் பெறுவது கதர் உற்பத்தித் திட்டம் ஆகும். இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அண்ணல் காந்தியடிகள் அரும்பாடுபட்டபோது, அவரது எண்ணத்தில் தோன்றிய இணையற்ற திட்டம்தான் கதர் உற்பத்தித் திட்டம். கதர் ஆடைகளைப் பயன்படுத்துவது ஊரகத் தொழிலுக்கு ஊக்கம் அளிப்பதாகும்.

வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் எண்ணற்ற ஏழை, எளிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, அவர்களுக்குத் தொடர் வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்ற ஆண்டு கதர் ஆடைகளை வாங்கிப் பயன்படுத்திய தமிழக மக்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கதர் தொழிலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், கதர் பட்டு ரகங்களுக்கு 20 சதவிகிதம் தள்ளுபடியும் மற்ற அனைத்து கதர் ரகங்களுக்கு 30 சதவிகிதம் தள்ளுபடியும் இவ்வாண்டு முழுவதும் வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறத்தில் இக்கதர் உற்பத்தித் திட்டத்தில் பெருமளவு பெண்களே ஈடுபட்டு வருகின்றனர். அனைத்துத் துறைகளிலும் பெண்கள் முன்னின்று சிறந்து விளங்க வேண்டும், மேம்பட்டுச் சிறக்க வேண்டும் என்னும், என்னுடைய எண்ணங்களைச் செயல்படுத்தும் விதமாக தமிழக மக்களாகிய நீங்கள் கதர்த் துறைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, இந்த ஆண்டு கடந்த ஆண்டை விட அதிக அளவில் கதர்த் துணிகளை வாங்கி, ஏழை, எளிய கிராமப்புற நெசவுத் தொழிலாளர்களை ஆதரித்து உதவிடுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

* * *

பயனுறு சமுதாயத்தை உருவாக்குவதற்கான அறிவியல் சார்ந்த நடைமுறையே மக்கள் தொடர்பு ஆகும். மனிதன் தன் மகிழ்ச்சிப் பெருக்கைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளப் பல்வேறு ஊடகங்களைக் கையாண்டான். தகவல்களைப் பகிர்ந்து கொள்ள நம்பகமானதும் முதன்மையானதுமான முறை யாதெனில் நேரடியாகச் செய்திகளை நாம் பிறருடன் பரிமாறிக் கொள்வதே ஆகும்.

உள்நாட்டில் மக்களிடையே செய்திகளைக் கூறவும், பிற்காலத்தில் அவை அழியாச் சின்னங்களாக இருந்து வரலாற்றின் சான்றுகளாக உருவெடுத்துப் பிற்காலச் சந்ததியினருக்கு எடுத்துக் கூறிடக் கல்வெட்டுகளைப் பொறித்தனர்.

பறையறைந்தும், கல்வெட்டுகளில் பொறித்தும், ஆடல் பாடல் மூலமாகவும் வளர்ச்சியடைந்த தகவல் பரிமாற்றம் அச்சுக்கலையின் தோற்றத்தால் தகவல் தொழில்நுட்பக் கலையாக வளரத் தொடங்கியது. அயல் நாட்டில் உருவான அச்சுக் கூடங்கள் தமிழ்நாட்டிலும்



தகவல்நுட்பக் குழவிகளாக தமிழ்ப் பத்திரிகைகளைத் தோன்றச் செய்து தமிழர்களிடையே வியக்கத்தக்க விழிப்புணர்ச்சியையும் விடுதலை வேட்கையையும் ஏற்படுத்தின. பின்னர் ஏற்பட்ட தந்திமுறை, தொலைபேசி போன்றவை தமிழர் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின.

தொலைபேசி

தொலை தூரத்தில் இருப்பவர்களுடன் குரல் வழித் தொடர்பு மூலம் தகவல் பரிமாறிக் கொள்ள உதவும் கருவியே தொலைபேசி ஆகும்.

செம்பவழ வாய் திறந்து நீ
செப்புமொழி கேட்கில்
உம்பர் அமுதமெல்லாம் செவியகத்து
ஓடி யொழுகுதடி

என்று கவிமணி கூறும் இந்த மகிழ்ச்சியைக் கிரஹாம் பெல் என்ற அறிஞர் கண்டறிந்த தொலைபேசி என்ற கருவி, நாம் எங்கிருந்தாலும் கேட்டு உணரவும் நமக்கு வேண்டியவர்கள் கடல் கடந்து வசிப்பவராக இருந்தாலும் கூட அவர்கள் குரலைக் கேட்பதுடன் நாமும் செய்திகளைப் பகிர்ந்து கொள்ளவும் உதவுகிறது. அவ்வறிஞர் கண்டறிந்த அந்தக் கருவி தற்சமயம் கைக்கடக்கமான செல் தொலைபேசிகளாகவும் நின்ற இடத்தில், பயணிக்கும் நிலைகளில், எந்த நிலைகளிலும் தகவல்களைத் தெளிவாகவும், தகவல் பரிமாற்றத்துடன் செல்பேசிகளில் பேசுபவரின் உருவங்களைக் காணும் வகையிலும் நவீனத் தொலைபேசிகளின் தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது.

பேக்ஸிமிலி தகவல் தொடர்பு

தாள்களில் உள்ள படங்கள், செய்திகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளின் உண்மை நகல்களைத் தொலை தூரத்திற்கு உடன் அனுப்பப் பயன்படும் கருவியே பேக்ஸிமிலி என்ற தகவல் தொடர்பு சாதனமாகும்.

ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செய்திகளை அல்லது படங்களை அவற்றின் உண்மை நகல்களாகத் தாளில் மிக விரைந்து அனுப்புவதற்குப் பேக்ஸிமிலி தகவல் தொடர்பு சாதனம் பயன்படுகிறது. இது சுருக்கமாக பேக்ஸ் என அழைக்கப்படுகிறது. ஒரு தொலைபேசி இணைப்பு உதவியுடன் படங்களோ அல்லது தாளில் உள்ள தகவல்களோ மின்னணு உதவியால் ஸ்கேன் செய்யப்பட்டு மற்றொரு இடத்திற்கு அனுப்பப்படுகின்றன.

தொலைக்காட்சி

ஜான் பியர்டு என்ற அறிஞரால் உருவாக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டி என்ற கருவி வானொலிப் பெட்டிகளை ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒதுக்கித் தள்ளி, ஒவ்வொரு வீடுகளிலும் தகவல் தொடர்பிற்கான கருவியாகவும், (தகவலைப் பெறுவதற்கான கருவியாக மட்டும்) வலிமை மிக்க சாதனமாகவும், வசதியான சாதனமாகவும் விளங்குகிறது. ஒலி, ஒளி பரப்பு நிலையில் உயரிய இடம் பெற்று, ஒருவர் நம்மிடம் நேரடியாகத் தகவல்களைத் தருவது போன்ற உணர்வை ஏற்படுத்துவது இதன் சிறப்பாகும்.

தொலைக்காட்சி மூலம் கேளிக்கைக் காட்சிகள் மட்டுமல்லாமல் நாட்டு நடப்புகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் மற்றும் கல்வி அறிவு சம்பந்தமான விவரங்கள் நாட்டின் பட்டிதொட்டியிலுள்ள மக்களும் தெரிந்து கொள்ளும் வண்ணம் செயற்கைக் கோள்களின் உதவியுடன் உடனடியாக ஒளிபரப்பப்படுகின்றன.

கணினி என்ற கணிப்பொறி

சார்லஸ் பாப்பேஸ் என்ற ஓர் அறிஞரால் கணக்கிடக் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் எந்திரம் பல அறிஞர்களின் அறிவால் விரிவாக்கப்பட்ட நவீனக் கற்பக விருட்சமாக மாறியுள்ளது. கணிப்பொறி இல்லாத துறையே இல்லை என்று கூறும் அளவிற்கு அதன் உபயோகம் மிக அதிக அளவில் உள்ளது.

முதலில் கணிப்பொறி கணிதப் பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படும் வண்ணம் உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது எண்களைக் கொண்டு கணக்குகள் செய்யவும் எத்தகைய கருத்துகளையும், கதைகளையும், கவிதைகளையும், கட்டுரைகளையும், படங்களையும், ஓவியங்களையும் உருவாக்கவும் பாதுகாத்து வைக்கவும் கணிப்பொறி உதவுகின்றது.

பலசரக்குக் கடைகளில் உள்ள மளிகைச் சாமான்களின் இருப்பைக் கணக்கிடுவது முதல் சிக்கலான மருத்துவ அறுவை சிகிச்சைகளில் மருத்துவருக்கு உதவிடுவது வரை கணிப்பொறியின் பங்கு மகத்தான்து. நாட்டின் பாதுகாப்பில் இருந்து விண்வெளியில் ஆய்வு செய்வது வரை இதன் பங்கு அளவிடற்கரியது. வீடுகளில் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தருவது, செஸ் விளையாட்டைக் கற்றுத் தருவது போன்றவற்றிலும் இது பயன்படுகிறது. அதிக வேகமும் 100 சதவிகிதத் துல்லியத் தன்மையும் இதன் சிறப்பம்சமாகும்.

இணையம்

தொலைபேசியும் கணினியும் ஒன்றிணைந்து இணையம் என்றொரு புதிய தகவல் தொடர்பிற்கான உலகை உருவாக்கி உள்ளனர். இதில் ஒருவருக்கோ பலருக்கோ அஞ்சல்களை அனுப்ப மின்னஞ்சல் என்ற சேவை உள்ளது. பேக்ஸிமிலி கருவி போலச் செய்திகளையும் படங்களையும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பலாம். பல இணையத்தள முகவரிகளிலிருந்து தகவல் சுரங்கங்களை இலவசமாகவோ சிறிய தொகையைக் கொடுத்தோ நாம் பெறலாம். பல ஆண்டுகள் உழைத்துத் தொகுக்கும் தகவல்களை நாம் சில நொடிகளில் இணையத்திலிருந்து இறக்கம் செய்து கொள்ளலாம். பத்திரிகைகள், மின்னணு இதழ் போன்றவற்றை நாம் படிக்கலாம். இவையனைத்தையும் வீட்டிலிருந்தபடியே அதாவது உட்கார்ந்த இடத்திலிருந்தே நாம் பெற இயலும் என்பதே இதன் சிறப்பாகும். கணினிக் கருத்தரங்குகளும் இணைய வணிகம் என்ற பொருட்கள் வாங்கும் சந்தையும் கூட இந்த இணையத்தில் உள. விரல் நுனியில் தகவல்கள் விரலசைவில் பரிமாற்றம் என உலகையே உள்ளங்கைக்குள் அடக்கி விடுகின்றன. மக்களுக்குப் பயன்படும் வகையில் அறிவியல் செய்திகள் அனைத்தையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

மின் அஞ்சல்

'நொடிதோறும் புதுமை சேர்' என்ற பாரதியின் பாடல் வரிகளை நனவாக்கும் பல புதுமைகள் தகவல் தொடர்பில் ஏற்பட்டு வருகின்றன. ஒரு கணினியின் ஒரு முனையிலிருந்து (டெர்மினல்) எண்மனத் தகவல்கள் மற்றொரு கணினிக்கு அனுப்பப்பட்டுத் தகவல் தொடர்பு நிகழ்கின்றது. உலகின் எந்த மூலைக்கும் இம்முறையின் செய்தியினையும் படங்களையும் நொடியில் அனுப்பலாம் என்பதே இம்முறையின் சிறப்பம்சமாகும். இணையத்தில் நமக்காக ஏறத்தாழ 4 மெகா பைட்டுகள் அளவில் இடமும் இலவச மின்னஞ்சல் சேவையையும் யாகூ, ஹாட்மெயில் போன்ற இணையத்தளங்கள் தந்து உதவுகின்றன.

மின்னணு இதழ்

மின்னணு முறையில் பல்வேறு ஆசிரியர்களின் கட்டுரைகளும் ஒரு மத்தியக் கணிப்பான் இணைத் தொடர்பில் செயல்முறைப்படுத்தப்பட்டுச் சேமித்து வைக்கப்படும். மின்னணு இதழ் முறையில் சந்தாதாரர்கள் ஒரு குறிப்பு மொழியின் உதவியுடன் இவ்வகையில் தொடர்பு கொண்டு தேவைப்படும் செய்திகளைத் தங்கள் தங்கள் கணினி மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அறிவியல் இதழ்களை வெளியிடுவதற் காக மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய முறை இதுவாகும். இதில் சந்தாதாரர் ஆவதற்குச் சிறுதொகை கட்டணமாகச் செலுத்த வேண்டியிருக்கும்.

தொலைதூரக் கருத்தரங்கம்

வீடியோ கான்பரன்சிங் என அழைக்கப்படும் பல நபர்களுடன் கணினி மற்றும் வீடியோ சாதனங்கள் மூலம் தகவலைப் பகிர்ந்து கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டது மின்னணுத் தொடர்பு ஆகும். இம்முறையில் ஒருவரோடு ஒருவர் பார்க்கவும் பேசவும் முடியும். தற்போது கணினியை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இத்தகவல் தொடர்பு சாதனத்தின் மூலம் குறிப்பிட்ட நபர் செய்தியையும் கருத்துகளையும் மற்ற உறுப்பினர்களுக்கு அனுப்ப முடியும். பல்வேறு பகுதிகளில் வர்த்தகம் மேற்கொள்பவர்கள், ஆய்வு மாணவர்கள், அறிஞர்கள் தங்கள் கருத்துகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளப் பயனுடையதாக இருக்கின்றது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாவட்ட ஆட்சியர்களுடன் இம்முறையின் மூலம்தான் நேரடித் தொடர்பு கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இம்முறையின் மூலம் நேரம் மிச்சமாகிறது.

முடிவுரை

இன்றைய நவீனத் தகவல் தொடர்புச் சாதனங்கள் உலகமெங்கும் இருக்கும் நம் உறவினர்களுடன் எளிதாக உடனடியாகத் தொடர்பு கொண்டு மகிழ உதவுகின்றன. பரந்து விரிந்த உலகம் என்ற கருத்து தகவல் தொடர்பின் நவீன வசதிகளின் காரணமாகச் சுருங்கிய உலகம் (Global Village) என்று மாறிவிட்டது. கருத்துகள், பரிமாற்றங்கள் விஞ்ஞானப் பூர்வமான அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நிற்கின்றன. தகவல் புரட்சியின் விளைவாகக் கணிப்பொறித் துறையில் தமிழர்கள் மகத்தான சாதனைகளைச் செய்து வருகின்றார்கள். தமிழர்கள் உருவாக்கிய பலமென் பொருள்கள் உலகளாவிய ஆதரவைப் பெற்றுள்ளன.

–முனைவர். தி. செல்வநாயகி
"அறிவியல் தமிழ் ஊடகங்கள்" நூலிலிருந்து

வெளியீடு :
அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம்,
தஞ்சாவூர்.



தமிழரசு

டிசம்பர் 2004



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
கார்த்திகை – மார்கழி
மலர்:36 இதழ்: 6
டிசம்பர் 2004
விலை ரூ.10

227159

இந்த இதழில்...

★ கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் – நிதி உதவி
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை (28.12.2004) — 2

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் கொடிநாள் செய்தி (டிசம்பர் 7) — 8

★ சமூகக் கோளாறுகளைச் சுட்டிக் காட்டுங்கள்: அதே நேரத்தில் சமூகமே கோளாறானது என்பது போல் காட்டி விடாதீர்கள் (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் உரை) — 9

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் உலக எய்ட்ஸ் தினச் செய்தி — 13

★ காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை) — 14

★ சென்னையில் பன்னாட்டுத் தரத்தில் மென்பொருள் வளாகம் — 16

★ தூத்துக்குடி மாவட்ட அரசு விழா — 17

★ உடல் ஊனமுற்றோருக்கான தேசிய விருதுகள் — 22

★ அச்ச உணர்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதே காவல் துறையின் முக்கிய நோக்கம்
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் உரை) — 25

★ 2004–2005ஆம் ஆண்டுக்கான இரண்டாம் துணை மதிப்பீடுகள் — 30

★ திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் நன்கொடை — 32

★ சட்டப்பேரவையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை (22.11.2004) — 33

★ தேனி மாவட்ட அரசு விழா — 37

★ கிருஷ்ணகிரி மாவட்ட அரசு விழா — 41

★ இந்தியாவிலேயே முதன்முதலாக 365 நாட்களும் இயங்கும் கடவுச்சீட்டு மையங்கள் — 46

★ யானைகள் புத்துணர்வு முகாம் — 48

★ தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகள் பிரகாசமடைந்துள்ளன!
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்) — 49

★ புதிய வீராணம் திட்டம் – **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின் தொலைநோக்குப் பார்வை — 57

★ சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்தநாள் விழா — 62

★ பெரம்பலூர் மாவட்ட அரசு விழா — 65

★ முக்கடல் சங்கமத்தில் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா — 71

★ படமும் செய்தியும் — 74

★ தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா — 79

முதலாம் பக்க அட்டை	:	**தேனி மாவட்ட அரசு விழா**
இரண்டாம் பக்க அட்டை	:	**தூத்துக்குடி மாவட்ட அரசு விழா**
மூன்றாம் பக்க அட்டை	:	**திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றாலை தொடக்க விழா**
நான்காம் பக்க அட்டை	:	**கிருஷ்ணகிரி மாவட்ட அரசு விழா**

ஆசிரியரும் வெளியிடுபவரும் **ஆ. கனகராஜ்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் - நிதி உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விரைந்து சென்று ஆறுதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
(28.12.2004)

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளை முன் எப்போதும் இல்லாத அளவிலான பேரிடர் ஒன்று திடீரென பெரும் சீற்றத்தோடு **26.12.2004** அன்று தாக்கியது. இதன் தாக்கம் மிகப்பரந்த அளவில் இருந்தது. இதனால் அனைத்துக் கடற்கரைப் பகுதி நெடுகிலும் அமைந்திருந்த கிராமங்களும் நகரங்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டன. இதுபோன்ற ஒரு இயற்கைப் பேரிடரை இதுவரை நாம் கண்டதே இல்லை. இந்தப் பேரிடரின் காரணமாக, மிகப் பெரும் அளவில் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி **3925** நபர்கள் உயிரிழந்துள்ளனர். லட்சோப லட்சம் மக்கள் வீடுகளை இழந்து விட்டனர். இந்தப் பேரிடர் தமிழ்நாடு முழுவதிலும் கடலோரப் பகுதிகளின் பொருளாதாரத்தை முற்றிலுமாக சேதப்படுத்தி நசித்துவிட்டது. இப்பேரிடர், மீனவர்களின் வாழ்க்கையையே நாசத்திற்கு உள்ளாக்கி விட்டது. மீனவர்கள் தங்களின் வீடுகளையும், உடைமைகளையும், வாழ்வையும் இழந்து விட்டனர். இந்தோனேசியா கடல் பகுதியில் ஏற்பட்ட நில அதிர்ச்சியைத் தொடர்ந்து எழுந்த சுனாமி அலைகளால் விளைந்த மரணங்கள் மற்றும் நாசங்கள் என்னைச் சோகக் கடலில் ஆழ்த்தியுள்ளன.

26.12.2004 அன்று ஏற்பட்ட பேரிடர் பற்றிய விவரங்களை அறிந்த உடனேயே, தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள மாநில அரசு இயந்திரத்தை நான் முடுக்கி விட்டேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட நிருவாகத்துடன் தொடர்பு கொண்டு காவல் துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையினர், வருவாய்த்துறையினர், மருத்துவ மற்றும் சுகாதாரப் பணிகள் துறை மற்றும் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதை நான் உறுதிப்படுத்தினேன். முன்னெச்சரிக்கை இல்லாமல் திடீரென நிகழ்ந்துவிட்ட இந்த சம்பவத்தினால் பெரும்அதிர்ச்சி ஏற்பட்ட போதிலும், அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த நிருவாக அமைப்புகள் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் மிகுந்த அக்கறையுடனும் அர்ப்பணிப்பு உணர்வோடும் உடனடியாக ஈடுபட்டனர். தமிழ்நாடு அரசின் மாவட்ட நிருவாகம் மேற்கொண்ட பணிகளுக்கு ராணுவம், கப்பற்படை, விமானப்படை மற்றும் கடலோர எல்லை பாதுகாப்புப் படை ஆகிய அமைப்புகள் பேருதவி புரிந்தன. தமிழக அரசு மேற்கொண்ட இந்த அசாதாரணமான முயற்சியின் பயனாக, பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களையும் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தி, நிவாரண முகாம்களில் உணவு வழங்கிட முடிந்தது. அதே நேரத்தில், போர்க்கால அடிப்படையில் தேடுதல் பணிகளும், மீட்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. அநேகமாக அனைத்துச் சடலங்களும் மீட்கப்பட்டு விட்டன. சில சடலங்கள் கடற்கரை ஓரங்களில் இன்னமும் ஒதுங்கி வருகின்றன. இது மிகக் கொடூரமான ஒரு சோக நிகழ்வு என்பதில் ஐயமில்லை. எனவே, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அனுதாபத்தையும் நமது வருத்தங்களையும் தெரிவிப்பதில் நாம் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும்.

நான், உடனடியாக, 26.12.2004 அன்று ஹெலிகாப்டர் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டேன். கோடியக்கரை முதல் சென்னையின் வட பகுதியில் அமைந்துள்ள எண்ணூர் வரை அனைத்துப் பகுதிகளையும் நான் பார்வையிட்டேன். கோடியக்கரை, வேளாங்கண்ணி, அக்கரைப்பேட்டை, நாகப்பட்டினம், நாகூர், கடலூர், மரக்காணம், கல்பாக்கம், மாமல்லபுரம், நீலாங்கரை, கொட்டிவாக்கம், பெசன்ட் நகர், சீனிவாசபுரம், பட்டினப்பாக்கம், மெரினா கடற்கரை, துறைமுகம், காசிமேடு, எண்ணூர் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட பேரழிவுகளை நான் பார்வையிட்டேன். இவ்வாறு ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டபோது, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்களுக்கு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வது பற்றி குறிப்பான உத்தரவுகளை மீண்டும் பிறப்பித்தேன்.

மீண்டும், 27.12.2004 அன்று சென்னை ஆளுநர் மாளிகையில் மத்திய உள்துறை அமைச்சர் திரு.சிவராஜ் பாட்டீல் அவர்களைச் சந்தித்த பிறகு நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் புறப்பட்டுச் சென்றேன். கன்னியாகுமரி, மண்டைக்காடு, முட்டம் மற்றும் குளச்சல் ஆகிய பகுதிகளை ஹெலிகாப்டர் மூலம் ஆய்வு செய்தேன். கடல் அலைகளின் தாக்கத்தால் ஏற்பட்ட நாசங்களை நான் பார்வையிட்டேன். பாதிப்புகள் மிகவும் கடுமையாக இருந்தன. நாகர்கோவிலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை கோட்டாறு மற்றும் வேப்பமோடு நிவாரண



மையங்களிலும், காயம் அடைந்தவர்களை ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினேன். அவர்கள் இந்தச் சோகமான பேரிடர்களில் இருந்து மீண்டு புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு அளிக்கும் என நான் அவர்களுக்கு உறுதி அளித்தேன்.

நான் 27.12.2004 அன்று மீண்டும் நாகப்பட்டினத்திற்குச் சென்றேன். பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து, மீண்டும் பாதுகாப்பான புது வாழ்க்கை அமைவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுக்கும் என்று நான் உறுதியையும், நம்பிக்கையையும் அளித்தேன். நாகப்பட்டினத்தில் உள்ள மாவட்ட மருத்துவமனைக்குச் சென்றேன். காயமடைந்து சிகிச்சை பெறுபவர்களிடம் நலம் விசாரித்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு, இடைவிடாத மழை பெய்து வருகின்ற போதிலும் நிவாரணப் பணிகளை முடுக்கி விடுமாறு அவர்களுக்கு நான் உத்தரவிட்டேன். சடலங்கள் அனைத்தும் மீட்கப்படுவதையும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் நிவாரண முகாம்களுக்குக் கொண்டு வரப்பட்டு உதவிகள் வழங்கப்படுவதையும் மாவட்ட நிருவாகம் உறுதிப்படுத்தி உள்ளது.

கடலூருக்குச் செல்லும் வழியில் பொறையார், பரங்கிப்பேட்டை, கடலூர் ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்டேன். நாகப்பட்டினத்திற்கும், கடலூருக்கும் இடைப்பட்ட இப்பகுதிகளில் ஏற்பட்ட சேதாரங்களை நான் ஆய்வு செய்தேன். கடலூரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து அவர்கள் முழு மறுவாழ்வு பெற்று இந்தச் சோகத்தில் இருந்து மீண்டு புதிய வாழ்க்கையைத் தொடங்குவதை உறுதிப்படுத்து வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் என நான் உறுதி அளித்தேன்.

நான் பார்வையிட்ட பகுதிகள் அனைத்திலும் குடிசைகளும், நிலையான வீடுகளும்கூட இடிந்து தரைமட்டமாகி, மீன்பிடிப் படகுகள் உருக்குலைந்து கிடப்பதையும், பேருந்துகளும் பெரிய டேங்கர் லாரிகளும் கூட ஆங்காங்கே தூக்கி எறியப்பட்டு கவிழ்ந்து கிடப்பதையும் என்னால் காண முடிந்தது. இப்பகுதிகளில் அளப்பரிய சேதாரங்கள் ஏற்பட்டுள்ளன. சேதத்தின் அளவை முழுவதுமாக மதிப்பிடுவதற்குச் சில நாள் பிடிக்கும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்திற்கும் தேவையான நிவாரணங்கள் அளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதுதான் நாம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டிய பணியாகும். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்தும் நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு அளித்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாவட்ட நிருவாகம் உறுதிப்படுத்தி உள்ளது. தேவைப்படுகிற வரை இந்த ஏற்பாடு தொடரும். உதவி தேவைப்படுகின்ற அனைவருக்கும் இந்த நிவாரண மையங்களில் உணவும், தங்கும் வசதியும் அளிக்கப்படும்.

கடலோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த குடும்பங்கள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்துவிட்டன. அவர்கள் மீண்டும் புதிதாக வாழ்க்கையைத் தொடங்குவதற்கு ஏதுவான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில், பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும் உடனடி நிவாரண உதவி தொகுப்பு (Relief Package) அளித்திட நான் ஆணையிட்டுள்ளேன். இந்த நிவாரண உதவித் தொகுப்பில் கீழ்க் கண்டவை அடங்கும்.

★ ஒரு வேட்டி, ஒரு சேலை மற்றும் இரண்டு போர்வைகள்

★ 60 கிலோ அரிசி

★ 3 லிட்டர் மண்ணெண்ணெய்

★ சமையலுக்குத் தேவையான பொருள்கள், பருப்பு, எண்ணெய் முதலியன வாங்குவதற்காக ரூ.1,000/–

★ பாத்திரங்கள் மற்றும் அடுப்பு வாங்குவதற்காக ரூ.1,000/–

★ தற்காலிக நடவடிக்கையாக குடிசை அமைத்திட ரூ.2,000/–

★ இக்குடும்பங்களை அவர்களுடைய சம்மதத்துடனும், ஒத்துழைப்புடனும் அருகில் உள்ள பாதுகாப்பான இடங்களுக்கு நிரந்தரமாக இடம் மாற்றி அவர்களுக்கு நிலையான வீடுகள் கட்டித் தர வகை செய்யும் தனியான மறுவாழ்வுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இது பற்றிய அறிவிப்பு தனியாக வெளியிடப்படும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்திற்கும் மேற்சொன்ன நிவாரண உதவிகளை உடனடியாக வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டு இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ள ஒரு லட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கும் உடனடி நடவடிக்கையாக இந்த உதவித் திட்டத்திற்கு நான் ரூ.29.12 கோடி அனுமதித்து உத்தரவிட்டுள்ளேன். இத்துடன், தற்காலிக நடவடிக்கையாக குடிசைகள் அமைத்திட ரூ.20கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டு உள்ளேன்.

பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களுடைய உடைமைகளை முற்றிலுமாக இழந்து விட்டன. அவர்கள் மீண்டும் தங்களுடைய வாழ்க்கையைத் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு அரசு வழங்கும். நான் அறிவித்துள்ள தொகுப்பு உதவித் திட்டம் இதற்கு பெரிதும் உதவும். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மீண்டும் வாழ்க்கையைத் தொடங்க ஏதுவாக துணிகள், உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் இதர அன்றாடத் தேவைகளுக்கான பொருட்களை வழங்க பொதுமக்கள் விரும்புவதாக எனக்கு ஏராளமான கோரிக்கைகள் வந்துள்ளன. சுனாமி அலைகள் இம்மக்களுடைய வீடுகளைத் தரைமட்டமாக்கி விட்டதால், இவர்கள் குடியிருக்க வீடுகள் அற்ற நிலையில் உள்ளனர். இவர்கள் இழந்த வீடுகளை மீண்டும் கட்டுவதற்கு வேண்டிய பொருட்களை வழங்குவதற்கு பல நன்கொடையாளர்கள் முன் வந்துள்ளனர். நான் 26.12.2004 அன்று ஏற்கெனவே தெரிவித்தவாறு இது ஒரு கொடூரமான மிகப் பெரிய சோக நிகழ்வாகும். ஆகவே, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மீண்டும் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கிடத் தேவைப்படும் உதவிகளைத் தாராளமாக வழங்க அனைவரும் முன் வரவேண்டும். இவ்வாறு தமிழ்நாட்டில் உள்ளவர்களால் நன்கொடையாக வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் அனைத்தும் அவர்கள் சார்ந்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அளிக்கப்படலாம். அவர்கள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள ஆட்சித் தலைவர்களுக்கு

அவற்றை அனுப்பி வைப்பார்கள். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அப்பொருட்கள் விநியோகிக்கப் படுவதை அம்மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதிசெய்வர். நன்கொடையாளர் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்து, அப்பொருட்களை விநியோகம் செய்வதற்காக மாநில அரசிடம் வழங்க விரும்பினால், அவற்றை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் அவர்களிடம் வழங்கலாம். அவர் மாநில துயர் துடைப்பு ஆணையாளர் அவர்களின் மேற்பார்வையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அப்பொருட்கள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வார். இவ்வாறு வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் அனைத்தையும் கையாளுவதற்காக மாநில நிவாரணப் பணிகள் ஆணையாளரின் அலுவலகத்தில் **044-28593990** என்ற எண்ணுள்ள தொலைபேசி வசதியுடன் ஒரு கட்டுப்பாடு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பணியின் அளப்பரிய தன்மையைக் கருத்தில் கொண்டு, அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நிதிஉதவி வரவேற்கப்படுகிறது என நான் ஏற்கெனவே அறிவித்துள்ளேன். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைத்திற்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலும், வெளிநாட்டிலும் உள்ள நல்லெண்ணமும், கொடை உள்ளமும் கொண்ட நபர்களும், நிறுவனங்களும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்குத் தாராளமாக நிதி உதவி வழங்கிடவேண்டும் என நான் மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகையாக ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என நான் ஏற்கெனவே அறிவித்துள்ளேன். இந்தச் சோகத்தின் கடுமையைக் கருத்தில் கொண்டும், மிகவும் அடிமட்ட நிலையில் உள்ள ஏழை எளிய மக்களே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதாலும், இந்தப் பேரிடரில் மரணம் அடைந்த ஒவ்வொரு நபருக்கும் ஒரு இலட்சம் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கிட நான் முடிவு செய்துள்ளேன்.

இந்தப் பேரிடரில் மீனவர்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையின் ஆதாரத்தையே இழந்து விட்டார்கள்.





தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்து விட்டார்கள். அவர்கள் உடனடியாகத் தங்கள் பிழைப்புக்குத் தேவையான ஊதியத்தை ஈட்டுவதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். மீனவர்கள் மீண்டும் கடலுக்குள் சென்று மீன்பிடி தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக உடனடி தொகுப்பு உதவித் திட்டம் ஒன்றுக்கு நான் அனுமதி வழங்கியுள்ளேன். இந்தத் தொகுப்பு உதவியில் பின்வருபவை அடங்கும்.

★ வள்ளங்களுக்கான ‘செவுள் வலையை’ (Gill Net) மாற்றுவதற்காக வள்ளம் ஒன்றுக்கு ரூ.20,000 என்ற வீதத்தில் 10,000 வள்ளங்களுக்கு மொத்தம் ரூ.20 கோடி வழங்கப்படும்.

★ மீன்பிடி வலைகளை மாற்றுவதற்காகக் கட்டுமரம் ஒன்றுக்கு ரூ.10,000 என்ற வீதத்தில் 20,000 கட்டுமரங்களுக்கு மொத்தம் ரூ. 20 கோடி வழங்கப்படும்.

★ வள்ளங்களைப் பழுது பார்ப்பதற்காக / மீண்டும் கட்டிக் கொள்வதற்காக வள்ளம் ஒன்றுக்கு ரூ.15,000 என்ற வீதத்தில் 10,000 வள்ளங்களுக்கு மொத்தம் ரூ.15 கோடி வழங்கப்படும்.

★ கட்டுமரங்களைப் பழுது பார்ப்பதற்காக / மீண்டும் கட்டிக் கொள்வதற்காகக் கட்டுமரம் ஒன்றுக்கு ரூ.5,000 என்ற வீதத்தில் 20,000 கட்டுமரங்களுக்கு மொத்தம் ரூ.10 கோடி வழங்கப்படும்.

மீனவர்கள் உடனடியாக மீன்பிடித் தொழிலைத் தொடங்குவதற்காக உடனடி மதிப்பீட்டின் அடிப்படையில் ரூ.65 கோடி செலவில் இந்தத் தொகுப்பு உதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விரிவான மதிப்பீட்டின் அடிப்படையில் தேவையான அனைவருக்கும் இந்த உதவிகள் அளிக்கப்படும். இந்தப் பணியை உடனடியாக மேற்கொள்வதற்கு வசதியாக மீன்வளத்துறை இயக்குநருக்கு இந்த நிதி வழங்கப்படும். பாதிப்புக்கு உள்ளான வெளியே மோட்டார் பொருத்தப்பட்ட படகுகள், விசைப் படகுகள் மற்றும் மீன்பிடி இழுவை வலைகள் (Trawl Nets) ஆகியவை தொடர்பாக, விரிவான தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் தனியான ஒரு தொகுப்பு உதவித் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

தற்போது நான் அனுமதித்துள்ள உடனடி நிவாரணப் பணிகளுக்கு ரூ.153.37 கோடி செலவாகும். வீடுகளை மீண்டும் கட்டுதல், படகுகள், மீன்பிடி வலைகள் வழங்குதல் ஆகியவை உள்ளிட்ட நிரந்தர மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு பல நூறு கோடி ரூபாய் தேவைப்படும். விரிவான ஆய்வுப் பணிகள் முடிந்த பிறகு மறுவாழ்வு மற்றும் மறு சீரமைப்புக்கான கூடுதல் தொகுப்பு உதவித் திட்டம் பற்றி நான் அறிவிப்பேன்.

தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இந்த அளப்பரிய துயரத்தைக் கருத்தில் கொண்டு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காகத் தமிழ்நாட்டிற்குச் சிறப்புத் தொகுப்பு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும் மத்திய உள்துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொண்டுள்ளேன். □

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கொடிநாள் செய்தி

(டிசம்பர் – 7)

நம் தாய்த் திருநாட்டின் எல்லைகளை இரவு பகலாக காத்து வருபவர்கள் நமது முப்படை வீரர்கள். இமயத்தின் பனிமுகடுகளிலும், வடகிழக்கு எல்லைப் பகுதியின்



அடர்ந்த காடுகளிலும், நீண்ட நெடிய கடல் நெடுகிலும் தம் இன்னுயிரைப் பணயம் வைத்து, கண் இமையாமல் காவல் புரியும் முப்படை வீரர்கள் செய்த தியாகங்களைப் போற்றி நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் டிசம்பர் 7–ஆம் நாள் கொடி நாளாக அனுசரிக்கப் படுகிறது.

நாட்டின் எல்லைகளை மட்டும் அல்லாமல் இறையாண்மையைக் காப்பதிலும் முன்நிற்பவர்கள் முப்படை வீரர்கள். அந்த முப்படை வீரர்களின் நலம் காப்பதில் எம்மாநிலத்தையும் விட முன்நிற்பது நமது மாநிலம். நாடு காக்கும் பணியில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட இராணுவ வீரர்களின் குடும்பங்களைக் காத்திடுவதும், வீர மரணம் எய்திய போர் வீரர்களின் குடும்பங்களுக்கு இயன்ற உதவிகளை அளித்திடுவதும் நாட்டு மக்களின் கடமையாகும்.

இந்த இனிய வேளையில் முப்படை வீரர்கள் மற்றும் முன்னாள் படை வீரர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் சேவைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், கொடிநாள் நிதிக்கு நன்கொடையினை வாரி வழங்கும்படி எனதருமை தமிழக மக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

* * *

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு தமிழ்த் திரைப்பட உலகின் நட்சத்திரங்களுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் 2000,2001 மற்றும் 2002 ஆகிய 3 ஆண்டுகளுக்கான தமிழக அரசின் திரைப்பட விருதுகளை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீல வானத்து நட்சத்திரங்கள் எல்லாம் நிலத்துக்கு வந்ததைப் போல் தமிழ்த் திரையுலகத்தைச் சேர்ந்த நீங்கள் எல்லாம் இந்தப் பல்கலைக்கழக மண்டபத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். உங்களை எல்லாம் ஒருசேரக் காண்பது மகிழ்ச்சி! உங்களோடு பேசுவது பெருமகிழ்ச்சி! உங்களுக்கு விருதுகள் வழங்குவதோ மிகப் பெரும் மகிழ்ச்சி!

தமிழ்த் திரைப்படத் தொழிலுக்கு ஊக்கம் கொடுத்து திரைப்படத் துறையினருக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு, திரைப்பட விருதுகளை வழங்கி வருகிறது. அதன்படி இன்றைக்கு 2000, 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கான சிறந்த திரைப்படங்களுக்கான விருதுகளையும், சிறந்த இயக்குநர்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகைகள் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறும்படங்களின் சிறந்த இயக்குநர், நடிகர், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கும் விருதுகளை வழங்குகிறேன். மேலும், தமிழ்த் திரைப்பட உலகில் சாதனை படைத்துவரும் பெருமக்களுக்குக் கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகளையும் வழங்குகிறேன். இவ்வாறு மொத்தம் 136 பேருக்கு விருதுகளை வழங்குகின்ற முத்தான வாய்ப்பு இன்று கிடைத்தது குறித்து நான் மகிழ்கிறேன்; பெருமிதம் அடைகிறேன்.

திரைப்படத் தொழிலினை வளங் கொழிக்கும் தொழில் என்றுதான் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எத்தனை பொருளாதாரப் பூகம்பங்களைச் சந்தித்த பின்பு திரைப்படம் மக்கள் மன்றத்துக்கு வருகிறது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

அது மட்டுமா?

மக்களின் கவலையைப் போக்கி, களிப்பை ஊட்டும் திரைப்படக் கலைஞர்களின் வாழ்வில்தான் எத்தனை ஏற்றத் தாழ்வுகள்?

சமூகக் கோளாறுகளைச் சுட்டிக்காட்டுங்கள்: அதேநேரத்தில் சமூகமே கோளாறானது என்பதுபோல் காட்டிவிடாதீர்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

ஒரு மருத்துவரிடம் நோயாளி ஒருவர் வந்தார். “எனக்கு மனக் கவலை மிக அதிகமாக இருக்கிறது ஏதாவது மருந்து கொடுங்கள்” என்று கேட்டார்.

மருத்துவர் சொன்னார். “மனக்கவலை என்பது மருந்துகளால் தீராது. அப்படித் தீர்க்கவும் முடியாது. உங்களுக்கு நான் நல்லவழி ஒன்று கூறுகிறேன். வாய்விட்டுச் சிரியுங்கள், வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்று பழமொழி இருக்கிறது. எனவே சிரியுங்கள்: சிரித்துக் கொண்டே இருங்கள்: உங்கள் மனக்கவலை மாறும்” என்று மருத்துவர் சொன்னார்.

“எப்படிச் சிரிப்பது? “எனக்கு இருக்கும் கவலைகளை நினைத்தால் சிரிக்கத்தான் முடியுமா? எப்படி நான் சிரிப்பது?” என்றார் வந்தவர்.

“கவலைப்பட வேண்டாம்! இந்த நாட்டிலே மிகச் சிறந்த நகைச்சுவை நடிகர் ஒருவர் இருக்கிறார். அவர் பெயர் க்ரிமால்டி (Grimaldi) அவர் இப்போது நம் நகரில்தான் தங்கி இருக்கிறார். அவரிடம் போங்கள். அவர் சிரிக்க வைப்பார். எப்படிப்பட்ட கவலையும் பறந்து போகும். பிறரைச் சிரிக்க வைப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். அவரைச் சந்தியுங்கள். உடனே போங்கள்!” என்று மருத்துவர் சொன்னார்.

உடனே வந்த நபர் விக்கி விக்கி அழ ஆரம்பித்தார்.

டாக்டருக்குப் பயமாய்ப் போய் விட்டது. நாம் ஏதாவது தப்பாகப் பேசிவிட்டோமோ என்று அச்சப்பட்டார்.

அவர் கேட்டார்! “ஏன் அழுகிறீர்கள்? நகைச்சுவை நடிகர் க்ரிமால்டியைப் பார்க்கத் தானே நான் சொன்னேன்? அதில் என்ன தவறு? அதற்கேன் அழுகிறீர்கள்?” என்று கேட்டார்.

வந்த நபர் அழுகையை நிறுத்தாமல் டாக்டரின் கைகளைப் பிடித்துக் கொண்டு சொன்னார்.

“டாக்டர்! நான் தான் அந்த க்ரிமால்டி! எந்த நகைச்சுவை நடிகரை நீங்கள் பார்க்கச் சொன்னீர்களோ அந்த நகைச்சுவை நடிகரே நான்தான்” என்று அவர் சொன்னார். அப்போது டாக்டருக்கு மனக்கவலை அதிகமாகிவிட்டது.

எப்படிப்பட்ட கருத்தாழம் மிக்க வேடிக்கை கதை இது! பார்த்தீர்களா?

இப்படி தங்கள் நிலை எப்படி இருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் தங்களுடைய ரசிகர்களை மகிழ்வூட்டத் துடிக்கிறவர்கள்தான் திரைப்படக் கலைஞர்கள்! திரைப்பட இயக்குநர்கள்! திரைப்படத் தொழில்நுட்பக் கலைஞர்கள்!

ஒவ்வொரு திரைப்படத்துக்குப் பின்னும் ஒரு சரித்திரம் ஒளிந்திருக்கிறது. ஆனால், தங்கள் சொந்தக் கவலையைப் பற்றி நினைக்காமல் மக்கள் கவலையைப் போக்குகின்ற மகத்தான சமூக மருத்துவர்கள் தான் திரைப்படக் கலைஞர்கள்.

அப்படிப்பட்ட பெருமக்களாகிய உங்களது தொழிலே அழிவடைந்துவிடுமோ என்ற நிலை வந்தபோது உடனடியாக நடவடிக்கை எடுத்தேன். தமிழ்த்

திரைப்படத்துறைக்கு உயிர் கொடுக்கும் பணி எவ்வளவு அவசியமானது, எவ்வளவு அவசரமானது என்பதை உங்களில் ஒருவராகிய, உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னால்தானே உணரமுடியும்?

ஆகவேதான், திருட்டு விசிடி–யைத் தடுத்து நிறுத்தினேன்! கேளிக்கை வரி விதிப்பு முறையில் மாற்றங்கள் செய்தேன்! திரையரங்குகளின் பராமரிப்புக் கட்டணத்துக்குக் கேளிக்கை வரி இல்லாமல் செய்தேன்!

திரையரங்குகளின் வசதிகளுக்கும், தூய்மைக்கும் உறுதியளிக்கும் வகையில் அவற்றைக் கண்காணிக்க ஆணையிட்டேன். பொதுமக்களுக்குக் கூடுதல் கட்டணச் சுமை ஏற்பட்டுவிடாதபடி, இந்த மாற்றங்களைக் கொண்டு வந்தேன். மேலும், பொது இடங்களில் திரைப்படப் படப்பிடிப்புகள் நடத்துவதற்கான கட்டணத்தைப் பெரும் அளவில் குறைத்தேன். குறைந்த செலவிலான திரைப்படங்களுக்கு வழங்கப்படும் மானியத்தை 7 இலட்சம் ரூபாயாக உயர்த்தினேன்.

இவற்றின் விளைவாக, திரையரங்குகள் திருமண மண்டபங்களாகவும், வணிக வளாகங்களாகவும் மாறிவந்த அவலம் இன்று மறைந்து வருகிறது. திருட்டு விசிடி கடைகள் புத்தகக் கடைகளாகவும், வேறு கடைகளாகவும் புதிய பரிணாமம் எடுத்து வருகின்றன.

இந்த மாற்றங்கள் எல்லாம் தமிழ்த் திரை உலகில் புதிய எழுச்சியை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன். அந்த எழுச்சி புதிய சாதனைகளைத் தேசிய அளவிலும், உலக அளவிலும் படைக்க உதவும் என்றும் நான் நம்புகிறேன்.

ஜீவனுள்ள கலைப்படைப்புகளை வழங்குங்கள். ஒரு திரைப்படம் உயிர்த்துடிப்புள்ளதாக அமையும் போது அது காலங்களைத் தாண்டி வாழும் காவியம் ஆகிறது. அப்போது அது திரைப்படம் அல்ல; திரைப் பாடம்! குழந்தைகள் முதல் வயோதிகர் வரை அனைவரையும் வசீகரிக்கக் கூடிய மிக வலிமையான ஊடகம் திரைப்படம்.

சாமானிய மக்களிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் சக்தி திரைப்படத் துறையைத் தவிர வேறு எந்தத் துறைக்கும் இல்லை என்பதை நினைவில் வையுங்கள்.

‘எப்படிச் சொல்வது?’ என்னும் கலையை, எவரைக் காட்டிலும் அதிகம் அறிந்தவர்கள் நமது தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள். அதை ‘எப்படிப் படைப்பது?’ என்பதில் மிகுந்த திறமை படைத்தவர்கள் நமது தொழில்நுட்பக் கலைஞர்கள்.

ஆனால், ‘எதைச் சொல்வது?’ என்பதிலும் அக்கறை இருக்க வேண்டும்.

கலை உலகப் பெருமக்களாகிய உங்களுக்குச் சமூக அக்கறை அதிகம் வேண்டும் என்று இந்த நாடு எதிர்பார்க்கிறது. எனவே, சமூக அக்கறையோடு இருங்கள். சமூக அக்கறையோடு படைப்புகளைத் தாருங்கள்.

வன்முறையைத் திரைப்படங்கள் மூலம் வளர்க்காதீர்கள். அது ஆபத்தானது! ஆதாய ஆசையில் ஆபாசத்தை வளர்த்து விடாதீர்கள். அது அபாயகரமானது!

சமூகத் தீமைகளைச் சாடுங்கள். சமூகத்தில் மலிந்து கிடக்கும் மூட நம்பிக்கைகள், பெண்ணடிமைத்தனம், சாதி வேற்றுமை ஆகியவற்றைத் தகர்த்து எறியுங்கள். ஆனால் உடைப்பது மட்டுமே கடமை என்று இருந்து விடாமல் உருவாக்க வேண்டியதும் நமது கடமைதான் என்பதை உணர்ந்து செயல்படுங்கள்.

காவல்துறையைக் கேவலமாகச் சித்தரிக்காதீர்கள். அது காக்கின்ற கரங்களைப் பலவீனப்படுத்தும் – அதனால் சமுதாயம் பாதிப்படையும்.

சமூகக் கோளாறுகளைச் சுட்டிக் காட்டுங்கள்! அதேநேரத்தில், சமூகமே கோளாறானது என்பது போல் காட்டி விடாதீர்கள்! உங்களுடைய சமூகப் பொறுப்பு, மிகப் பெரியது என்பதை உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இந்த வேளையில் சுட்டிக் காட்ட வேண்டியது எனது கடமை என்று கருதுகிறேன்.

இந்தியாவிலேயே எல்லாத் துறையிலும் முதல் மாநிலம் தமிழகம் என்ற நிலைமையை நான் உருவாக்கியே தீருவேன். அந்தப் புனிதப் பணியில் என் அன்புக்குரிய சகோதர, சகோதரிகளாகிய நீங்கள் அனைவரும் எனக்கு உறுதுணையாக இருப்பீர்கள் என்று உறுதியாக நான் நம்புகிறேன்.

இன்று விருது பெற்ற அனைவரையும் பாராட்டுகிறேன். இன்னும் பல விருதுகளை நீங்கள் பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

விருது பெறாதவர்கள் அடுத்த முறை விருது பெற இப்பொழுதே எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். விருது பெறாதவர்கள் திறமையற்றவர்கள் என்று பொருள் அல்ல. உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் அளப்பரிய ஆற்றல் உள்ளது. அந்த ஆற்றலைப் பயன்படுத்தி அடுத்த முறை வெற்றி பெற வேண்டும். விருது பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் சாதனைச் சரித்திரம் படைக்க உங்கள் அன்புச் சகோதரியின் வாழ்த்துகளைத் தெரிவித்து,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
3–12–2004 அன்று நடைபெற்ற
தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்
வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

உலக எய்ட்ஸ் தினச் செய்தி

ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் முதல் நாள் உலக எய்ட்ஸ் நாளாக அனுசரிக்கப்படுகிறது. இன்றைய உலகின் மிகக் கொடியதொரு நோயிலிருந்து மனித குலத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு நினைவூட்டாக இது அமைகிறது. எய்ட்ஸ் நோயால் இளம் வயதினரே அதிக அளவில் பாதிக்கப்படுவதால், இக்கொடிய நோயிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

பெண்கள், சிறுமிகள், எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் (Women, Girls, HIV and AIDS) என்பது இந்த ஆண்டு எய்ட்ஸ் தினத்தின் கருப்பொருள் ஆகும். குடும்பத் தலைவரை எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோய் பாதித்தால், அவர் மூலம் அவரது மனைவிக்கும், கருவில் இருக்கும் குழந்தைக்கும் இந்நோய் பரவுகிறது. எனவே, அனைத்துப் பெண்களும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் சம்பந்தமான தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற இன்றியமையாத தகவல்கள் பற்றி நன்கு அறிந்து இருக்க வேண்டியதும், நோயிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் திறன் பெற்றவர்களாக இருக்க வேண்டியதும் அவசியமாகும்.

இந்தக் கொடிய நோயிலிருந்து பெண்களையும், குழந்தைகளையும் காப்பதற்காக செயல்படுத்தப்பட்டு வரும் 'தாய் சேய் மேவா திட்டத்தின்' காரணமாக, இதுவரை 2,300 எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட தாய்மார்கள் 1,500–க்கும் மேற்பட்ட எச்.ஐ.வி. இல்லாத குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளனர். மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் அயராத உழைப்பினால் இது சாத்தியமாகியுள்ளது. அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயினைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் நோய் தாக்குண்ட நபர்களை அரவணைத்துப் பராமரித்தல் ஆகியவற்றில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும், எய்ட்ஸ் இல்லாத தமிழகத்தை உருவாக்க துணை நிற்க வேண்டும் என்றும் இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

விழிப்புணர்வு ஏற்படுத்துவோம்!
எச்.ஐ.வி. பரவாமல் தடுப்போம்!

❖ ❖ ❖

வானிலே விமானங்கள் மோதாமல் இருப்பதற்காக, ஒரு திசையில் செல்லும் விமானங்கள் ஒற்றைப்படை ஆயிர அடி உயரத்திலும் (5,000, 7,000, 9,000 அடி உயரம்) எதிர்த் திசையில் செல்லும் விமானங்கள் இரட்டைப்படை ஆயிர அடி உயரத்திலும் (6,000, 8,000, 10,000 அடி உயரம்) செல்லும்.



காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்



திருநெல்வேலி மாவட்டம் செட்டிகுளத்தில் இன்று நடைபெறும் இந்த விழாவில், என் அன்புக்குரிய உங்களை எல்லாம் காண்பதற்கும், சுஸ்லான் நிறுவனத்தின் 2 மெகாவாட் காற்றாலையைத் தொடங்கி வைப்பதற்கும் வாய்ப்புக் கிடைத்தது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சக்திகளில் தலைசிறந்த சக்தி, மின் சக்தி. மின்சாரத்தைப் பயன்படுத்தி நாம் பெறும் பயன்கள் ஏராளம்; நாம் பெறும் வசதிகளும் ஏராளம். மின்சாரம் இல்லாத உலகத்தை இன்று நாம் நினைத்துக் கூடப் பார்க்க இயலாது. இன்றைக்கு உலகையே ஒளிமயம் ஆக்கிக் கொண்டிருப்பது மின்சாரம்.

மின்சாரத்தை உற்பத்தி செய்ய நிலக்கரியைப் பயன்படுத்தும் அனல் மின் நிலையங்களையும், நீரைப் பயன்படுத்தும் புனல் மின் நிலையங்களையும் நாம் உருவாக்கி இருக்கிறோம். மேலும், அனல் மின் நிலையத்திற்கான நிலக்கரியைப் பெறுவதற்கு, நாம் வட மாநிலங்களையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. அங்கேயும் கூட, நிலம் உள்ளவரை நிலக்கரியும் இருக்கும் என்று சொல்ல இயலாது. 'சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்' என்பது, நம் தமிழ் மொழியில் உள்ள பழமொழி. எனவேதான், மரபு சாராத எரிசக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது.

மரபு சாராத எரிசக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் முயற்சிகளில், நாம் முனைப்போடு செயல்பட்டு வருகிறோம். அப்படிப்பட்ட முயற்சிகளில் முக்கியமானதுதான், காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் முயற்சி ஆகும்.

காற்று எல்லா இடங்களிலும் வீசுகிறதே, அதனால் எல்லா இடங்களிலும் காற்றாலைகளை அமைத்து, மின் உற்பத்தி செய்து விட முடியுமா? முடியாது! காற்றின் அளவு குறிப்பிட்ட அளவுக்குக் குறையாமல் இருந்தால்தான், காற்றாலையை நிறுவி மின்சாரம் தயாரிக்க இயலும்.

தமிழ்நாட்டில் பாலக்காடு கணவாய்ப் பகுதி, செங்கோட்டைக் கணவாய்ப் பகுதி, மற்றும் ஆரல்வாய்மொழிப் பகுதியில் காற்றின் வேகம் மணிக்கு 18 முதல் 25 கிலோ மீட்டர் அளவுக்கு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. எனவேதான், இங்கெல்லாம் காற்றாலை நிறுவப்படுவதை எனது அரசு ஊக்குவித்து வருகிறது.

பல்வேறு துறைகளில் இந்தியாவிலேயே முதல் இடம் வகித்து வரும் தமிழ்நாடு, காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்வதிலும், தொடர்ந்து இந்தியாவிலேயே முதல் இடம் வகித்து வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

நான் முதலமைச்சராக முதலில் பொறுப்பேற்பதற்கு முன்னால் – அதாவது, 1991–ஆம் ஆண்டு வரை, தமிழ்நாட்டில் 102 காற்றாலைகள் நிறுவப்பட்டன. அதன் மொத்த நிறுவுதிறன் 19 மெகா வாட் ஆகும். ஆனால், 1991 முதல் 1996 ஏப்ரல் வரை எனது ஆட்சிக் காலத்தில் 538 மெகாவாட் மொத்த நிறுவுதிறன் கொண்ட 1,929 காற்றாலைகள் நிறுவப்பட்டன. 1996 மே முதல் 2001 ஏப்ரல் மாதம் வரை– அதாவது, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 256 மெகாவாட் மொத்த நிறுவுதிறன் கொண்ட 859 காற்றாலைகள் மட்டுமே நிறுவப்பட்டன. ஆனால், நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற மே 2001 முதல் தற்போது வரை, 854 மெகாவாட் மொத்த நிறுவுதிறன் கொண்ட 1,439 காற்றாலைகளை எனது அரசு நிறுவி இருக்கிறது. அதாவது, தற்போதுள்ள காற்றாலைகளின் நிறுவுதிறனில், 83.5 சதவிகிதம் எனது தலைமையிலான அரசால்தான் நிறுவப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட காற்றாலையின் மொத்த நிறுவுதிறன் 1,667 மெகாவாட் ஆகும். இது, இந்தியாவின் மொத்தக் காற்றாலை நிறுவுதிறன் ஆன 3,080 மெகாவாட் திறனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, 54 விழுக்காடு ஆகும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சாதனைகளுக்கு எல்லாம் காரணம், *காற்றாலை மின் உற்பத்தியை ஊக்குவிக்கும்* பொருட்டு, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு வழங்கி வரும் சலுகைகளே ஆகும்.

தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு மின் வாரியமும், காற்றாலையின் உற்பத்தியை யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 70 காசு என்ற விகிதத்தில் கொள்முதல் செய்கிறது. மேலும், காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்பவர்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தைத் தங்களுடைய தொழிற்சாலைகளுக்கும், தங்களுடைய சார்பு நிறுவனங்களுக்கும் உபயோகித்துக் கொள்ள அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்பவர்களுக்கு, வீலிங் (Wheeling) கட்டணமாக 5 விழுக்காடு கழிக்கப்படுகிறது. தமிழ்நாடு மின் வாரியக் கட்டமைப்பில் மின் இழப்பு சுமார் 18 விழுக்காடாக உள்ளது. இதைக் கருத்தில் கொள்ளாமல், காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்பவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில், 5 விழுக்காடு மட்டும் உற்பத்தியில் கழிக்கப்படுகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுல்லாமல், சேமிப்பு (Banking) முறையும் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிப்பவர்களுக்கு வழங்கப்படுகின்றது. காற்று உள்ள போது உற்பத்தி செய்யும் மின்சாரத்தை, மற்ற காலங்களில் தங்களுடைய தொழிற்சாலைக்கு அதே ஆண்டில் பயன்படுத்திக் கொள்ள அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தமிழ்நாடு மின்வாரியக் கட்டமைப்புக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவாக, 100 கோடி ரூபாய் மதிப்பிலான 20 துணை மின் நிலையங்கள் நிறுவப் பட்டுள்ளன. காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை, மின்வாரியக் கட்டமைப்புக்குக் கொண்டு வர, மேலும் 176 கோடி ரூபாய் மதிப்பிலான உள் கட்டமைப்பு வசதிகளை, மின்வாரியம், அடுத்த இரண்டு ஆண்டுகளில் நிறுவும் என்பதையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று, சுஸ்லான் கம்பெனியின் 2 மெகாவாட் காற்றாலையை நான் தொடங்கி வைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த 2 மெகாவாட் காற்றாலையை சுஸ்லான் நிறுவனம் மட்டும்தான் நிறுவி உள்ளது என்பதையும், இது ஆசியாவிலேயே அதிகபட்சத்திறன் கொண்டதாகும் என்பதையும் அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்த ஆண்டில், சுஸ்லான் நிறுவனம் 400 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது என்று அறிகிறேன். சுஸ்லான் எடுத்து வரும் இந்த ஆக்க பூர்வமான முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு மின்சார வாரியம் இங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தை எடுத்துச் செல்வதற்குத் தேவையான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலீட்டுக்கு இணக்கமான தமிழ்நாடு அரசின் கொள்கைளைப் பயன்படுத்திக் கொண்டு, மரபு சாரா முறைகளின் மூலம் மின் உற்பத்தி செய்ய முன்வர வேண்டும் என்று தொழில் நிறுவனங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

சுஸ்லான் நிறுவனத்திற்கு எனது பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!
என்று கூறி, விடை பெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

8.12.2004 அன்று திருநெல்வேலி மாவட்டம் செட்டிகுளத்தில் சுஸ்லான் நிறுவனத்தின் 2 மெகாவாட் காற்றாலையைத் தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை

* * *

சென்னையில் பன்னாட்டுத் தரத்தில் மென்பொருள் வளாகம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைச் சத்யம் கம்ப்யூட்டர் சர்வீஸ் நிறுவனத்தின் தலைவர் ராமலிங்கராஜு சென்னை தலைமைச் செயலகத்தில் 17.11.2004 அன்று சந்தித்தார். அவருடன் அந்நிறுவனத்தின் அதிகாரிகள் முரளி, ஆத்மராஜ் ஆகியோரும் இருந்தனர்.

இச்சந்திப்பின்போது சத்யம் நிறுவனத்தின் வளர்ச்சியை ராமலிங்கராஜு மாண்புமிகு முதலமைச்சருக்கு எடுத்துரைத்தார். 1987–இல் நிறுவப்பட்ட இந்நிறுவனம் உலக அளவில் பன்னாட்டு நிறுவனமாக வளர்ந்துள்ளது. இப்போது 45 நாடுகளில் 18ஆயிரம் கம்ப்யூட்டர் வல்லுநர்களைக் கொண்டு வளர்ந்து வருகிறது. இதுவரை 350 பன்னாட்டு வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள இந்நிறுவனம் விரைவில் 500 வாடிக்கையாளர்களைப் பெறவுள்ளது.

சென்னையில் மட்டும் சத்யம் கம்ப்யூட்டர் நிறுவனம் 7 கிளைகளைக் கொண்டுள்ளது. 3500 வல்லுநர்கள் இந்த அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர். சென்னையில் உள்ள பன்னாட்டுத் தரம் வாய்ந்த கம்ப்யூட்டர் வல்லுநர்களைக் கொண்டு சத்யம் நிறுவனம் அதன் ஏற்றுமதி தலைமை அலுவலகத்தை இங்கேயே நிர்மாணித்துள்ளது. 1997–இல் சென்னையில் கிளையைத் தொடங்கிய இந்நிறுவனம் அப்போது ரூ.2 கோடி மென்பொருள் ஏற்றுமதி செய்தது. இப்போது கடந்த மார்ச் 2004 வரை ரூ.154 கோடிக்கு மென்பொருள் ஏற்றுமதி செய்த நிறுவனமாக வளர்ந்துள்ளது.

மிக விரைவில் சென்னையில் இருந்து மட்டும் ரூ.400 கோடிக்கு மென்பொருள் ஏற்றுமதி செய்ய இலக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது பன்னாட்டுத் தரத்தில் கல்வி மையத்துடன் கூடிய மிகப்பெரிய மென்பொருள் வளாகம் ஒன்றை உருவாக்க சத்யம் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதற்காக 100 ஏக்கர் நிலப்பரப்பைத் தமிழக அரசு ஒதுக்கித் தரவேண்டும் என்று ராமலிங்கராஜு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். இந்தப் புதிய மையம் உருவானால் 15 ஆயிரம் கம்ப்யூட்டர் வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அப்போது அவர் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சத்யம் நிறுவனத்தின் இந்தப் புதிய முயற்சியை வரவேற்று வாழ்த்தினார்கள். இந்த முயற்சிக்குத் தமிழக அரசு எல்லா விதத்திலும் ஒத்துழைப்பு நல்கும் என்று உறுதியளித்தார்கள். மேலும், சத்யம் நிறுவனம் தமிழகத்தில் சமூக வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் அப்போது அவர்கள் வலியுறுத்தினார்கள்.

இந்தச் சந்திப்பின்போது தமிழக அரசின் வளர்ச்சித்துறை ஆணையர் மற்றும் நிதித்துறை செயலாளர் என். நாராயணன், இ.ஆ.ப., மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை செயலர் விவேக் ஹரிநாராயன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். □

தமிழ்நாட்டில் மின் தட்டுப்பாடு வராமல் தடுக்க பல்வேறு மின் திட்டங்கள்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

தென்னிந்தியாவின் தலை வாயில் என்று அழைக்கப்படும் தூத்துக்குடி நகரில் இன்று நடைபெறும் மகத்தான அரசு விழாவில் என் அன்புக்குரிய மக்களாகிய உங்களை எல்லாம் காண்பதிலும், உங்களைக் கண்டு ஒரு சில வார்த்தைகள் பேசுவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய தினம் தூத்துக்குடி அனல் மின் நிலைய வெள்ளி விழாவில் பங்கேற்று உங்கள் முன்னிலையில் ஒப்பற்ற மின் திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்து, முடிவுற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி தூத்துக்குடியின் நீண்ட நெடிய வரலாற்றுச் சிறப்புக்குப் புதிய பெருமைகளைச் சேர்த்துள்ளேன்.

‘இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
எந்திரங்கள் வகுத்திடுவீரே’

என்று பாடினார் இந்த மண்ணிலே எட்டயபுரத்திலே பிறந்த எழுச்சிக் கவிஞர் பாரதியார்.

ஆயிரம் தொழில்கள் செய்யலாம். ஆனால், அவ்வாறு தொழில் வளம் பெருக வேண்டும் என்றால் அதற்கு அவசியமாகத் தேவைப்படுவது மின்சாரம்.

தமிழகத்தின் முதல் அனல் மின் நிலையம் சென்னை அருகில் எண்ணூரில் 60 மெகாவாட் திறனில் 1970–ஆம் ஆண்டு இயக்கி வைக்கப்பட்டது. தூத்துக்குடியில் 210 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்தி நிலையம் 1979–ஆம் ஆண்டு ஜூலை மாதம் மின் உற்பத்திக்கு இயக்கி வைக்கப்பட்டது. பின்னர் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறனுடைய மேலும் நான்கு இயந்திரங்கள் நிறுவப்பட்டன. தூத்துக்குடி அனல் மின் நிலையம் 25 வருட காலமாக செவ்வனே இயங்கி இன்று வெள்ளி விழா காண்கின்றது. இன்றைய நிலவரப்படி தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 26 மில்லியன் யூனிட்டுகள் என்றும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சராசரி மின் உற்பத்திச் செலவு யூனிட் ஒன்றுக்கு 180 காசுகள் என்று உள்ள போது, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்திச் செலவு யூனிட் —

ஒன்றுக்கு 170 காசுகள் மட்டுமே என்றும் அறிகிறேன். இது பாராட்டத்தக்க செயல்பாடு ஆகும்.

நமது அனல் மின் நிலையங்கள் சிறப்புடன் செயல்பட்டு மத்திய அரசின் தேசிய விருதுகளைப் பெற்று வருகின்றன. மேட்டூர் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் 2000–ஆம் ஆண்டு முதல் 2003–ஆம் ஆண்டு வரையிலான 4 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து தங்கப் பதக்கங்கள் வென்றுள்ளன. வட சென்னை அனல் மின் நிலையம் 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கான தங்கப்பதக்கங்களையும், 2003–ஆம் ஆண்டுக்கான வெள்ளிப்பதக்கத்தையும் வென்றுள்ளது.

இந்தச் சாதனைகள் எல்லாம் தற்செயல் விளைவுகள் அல்ல. நமது கூர்ந்த மதிக்கும், கடின உழைப்புக்கும் கிடைத்த பரிசுகளாகும்.

எத்தகைய கடுமையானச் சூழலை வெற்றி கொண்டு நாம் இந்தச் சாதனைகளை படைத்து இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

2001–ஆம் ஆண்டு என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிலைமை மிக மோசமாக இருந்தது. 2000–2001–ஆம் ஆண்டு வரையில் முந்தைய அரசு இழப்புகளை மானியங்கள் என்று காட்டி நிலைமையை மூடி மறைந்து அந்த மானியங்களை வழங்காமல் இருந்த காரணத்தால் 2001–2002ஆம் ஆண்டில் (–)4,851 கோடி ரூபாய் நஷ்டத்தை மின் வாரியம் எதிர்கொள்ள வேண்டி இருந்தது. முந்தைய அரசின் தவறான நிருவாகத்தின் காரணமாக மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் பிறரிடமிருந்து வாங்கப்பட்ட மின்சாரத்திற்கான உரிய தொகையை வழங்க முடியாத நிலைமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டது. பணியாளர் களுக்கான சம்பளம், நிலக்கரி வகையிலான செலவு மற்றும் இதரச் செலவுகள் போன்ற வாலாயமான செலவுகளுக்கும் பணம் வழங்க இயலவில்லை. சுருக்கமாகச் சொல்லப் போனால், என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாட்டையே அறவே நிறுத்தக்கூடிய ஒரு நிலைமைதான் நிலவியது. ஆனால், எனது அரசு எடுத்த உறுதியான பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக அந்த நிலைமையிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியம் மீண்டு எழுந்தது. முந்தைய தி.மு.க. அரசால் மத்திய அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்படாமல் விடப்பட்ட நிலுவைத் தொகை 1,962 கோடி ரூபாயைக் கொடுத்திட என்னுடைய அரசு ஏற்பாடு செய்தது. அது மட்டுமல்லாமல் நிருவாக சீர்திருத்த நடவடிக்கைகளையும் எனது அரசு மேற்கொண்டது. இந்த நடவடிக்கைகளின் பயனாக தமிழ்நாடு மின்சார வாரியம் புத்துயிர் பெற்றது என்பதை மன நிறைவோடும் மகிழ்ச்சியோடும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மின் கட்டமைப்பு, நான் முதலில் ஆட்சிப் பொறுப்பேற்ற 1991 முதல் 1996 வரையிலான எனது ஆட்சிக் காலத்தில் புதியதாக 1,300 மெகாவாட் அளவிற்கு நிறுவுதிறன் சேர்க்கப்பட்டது. 1996 முதல் 2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்ட திறன் 560 மெகாவாட் மட்டுமே ஆகும். ஆனால், 2001 முதல் இன்று வரை எனது ஆட்சிக் காலத்தில் 1,530 மெகாவாட் நிறுவு திறனான 9,394 மெகாவாட்டில் 30% எனது அரசால் நிறுவப்பட்டது ஆகும் என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர 1,667 மெகாவாட் மின் நிறுவுதிறன் கொண்ட காற்றாலைகளும், 275 மெகாவாட் தொழிற்சாலை இணை உற்பத்தியும் (Co-Generation)ம் உள்ளது. இதன் பயனாக உச்ச மின் தேவையான 7,311 மெகாவாட் அளவை சுலபமாக நம்மால் நிறைவு செய்ய முடிகிறது. இந்த அளவு நிறுவுதிறன் அதிகரித்துள்ளதால் தான் மின்வெட்டு இல்லாத மாநிலமாக தமிழகம் இன்றைக்கு விளங்குகிறது.

இது மட்டுமல்லாமல் தமிழ்நாடு தொடர்ந்து காற்றாலை மின் உற்பத்தித் துறையில் இந்தியாவிலேயே முதல் இடம் வகித்து வருகின்றது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டில் காற்றாலை மூலம் மின் உற்பத்தி 500 மெகாவாட் என நிர்ணயிக்கப்பட்டது. தற்சமயம் காற்றாலை மூலம் மின் உற்பத்தித் துறையில் இந்தியாவிலேயே முதல் இடம் வகித்து வருகின்றது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டில் காற்றாலை மூலம் மின் உற்பத்தி மொத்தம் 810 மெகாவாட் அளவை எட்டியுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட 310 மெகாவாட் கூடுதல் ஆகும். இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 250 மெகாவாட் அளவிற்கு காற்றாலைகள் நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வளர்ந்து வரும் மின் தேவையை ஈடு செய்யவும், தமிழகத்தில் என்றுமே மின் தட்டுப்பாடு வரக்கூடாது

என்பதைக் கருத்தில் கொண்டும், தூத்துக்குடியில் மேலும் 1,000 மெகாவாட் திறனுடைய ஒரு அனல் மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் நிறுவவும், வட சென்னையில் 1,000 மெகாவாட் திறனுடைய அனல் மின் நிலையத்தை தேசிய அனல் மின் கழகத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவவும் எனது அரசு திட்டமிட்டு இந்த நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. மேலும், நிலக்கரி மற்றும் எரிவாயு மூலம் மின் உற்பத்தி செய்யவும் புதிய திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.

இவ்வாறு தொலைநோக்கோடு செயல்பட்டு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிற அதே வேளையில், திட்டங்களின் பயன்கள் ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேர வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். விவசாயிகளுக்கும், குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்துள்ள முன்னோடி அரசு உங்கள் அன்புச் சகோதரியின் அரசுதான். மேலும், வீட்டு உபயோகிப்பாளர்களின் கட்டணத்தை வெகுவாகக் குறைத்திடவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது அரசு மானியம் வழங்கி வருகிறது. தமிழகத்திலுள்ள 1 கோடியே 16 இலட்சத்து 57 ஆயிரம் வீட்டு உபயோகிப்பாளர்கள் பயன் பெறும் வகையில், ஆண்டுக்கு 910 கோடி ரூபாய் மானியத் தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது அரசு வழங்கி வருகிறது. இத்தகைய நிவாரணத்தை இந்தியாவில் வழங்கி வரும் ஒரே ஒரு அரசு உங்கள் அன்புச் சகோதரியின் அரசுதான் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரப் பயனீட்டாளர்களின் நலன் பேணுவதில் எனது அரசு முன் நிற்கிறது என்பதையும் இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். புதிய கணினி அடிப்படையிலான மின்தடை நீக்கப் பணி மையத்தினை அதாவது Computer Power Failure Redressal Centre-ஐ நான் 12.11.2003 அன்று சென்னையில் தொடங்கி வைத்தேன். சென்னை மாநகரத்தில் உள்ள 18 இலட்சம் மின் நுகர்வோர்கள் இதனால் பயன் பெற்று வருகிறார்கள். இத்திட்டம் விரைவில் கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி மாநகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

மின் இணைப்புகளுக்கான மின் கட்டணப் பட்டியலைத் தயாரிப்பதிலும், மின் கட்டணத் தொகை வசூலிப்பதிலும் தொழிலாளர்களுக்கும் பொது மக்களுக்கும் உள்ள சிரமங்களைக் களைய மின் கட்டணப் பட்டியல் மற்றும் வசூல் முறை கணினிமயம் ஆக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

இதன் அடிப்படையில் ஒரு சில பிரிவு அலுவலகங்களில் மின் கட்டண வசூல் முறை பரிட்சார்த்தமாகக் கணினி மயம் ஆக்கப்பட்டது. இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதால் சென்னையில் உள்ள அனைத்துப் பிரிவு

அலுவலகங்களிலும், 5 மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் அமைந்துள்ள 600 விரிவு அலுவலகங்களிலும் மின்கட்டணப் பட்டியல் மற்றும் வசூல் முறையை சுமார் 120 கோடி ரூபாய் செலவில் கணினிமயம் ஆக்கும் திட்டத்தினை இன்று அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதனால் சுமார் 55 இலட்சம் மின் பயனீட்டாளர்கள் பயன் அடைவார்கள் என்பதையும், இத்திட்டம் கிராமப்புறங்களிலும் படிப்படியாக அமல்படுத்தப்பட உள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்கள் நலனையும் பயனீட்டாளர் நலனையும் போலவே மின் வாரியத் தொழிலாளர் நலத்திலும் பெரிதும் அக்கறை கொண்டுள்ளது எனது அரசு. எனவேதான் மின் வாரிய நிதி நிலைமையைச் சீரமைத்து அதன் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டும் என்று முடிவெடுத்து அவர்கள் அனைவருக்கும் 1.9.2003 அன்று முதல், முன் தேதியிட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் இடைக்கால நிவாரணம் வழங்க அண்மையில் நான் ஆணையிட்டேன். மேலும், இந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகையின் போது, கடந்த ஆண்டில் வழக்கமான முறையில் 8.33 சதவிகித போனஸ் பெற்ற தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இந்த ஆண்டிற்கு 1.67 சதவிகித கருணைத் தொகையையும் சேர்த்து, மொத்தம் 10 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க உத்தரவிட்டேன். தொழிலாளர்கள்பால் இந்த அரசு கொண்டுள்ள நம்பிக்கைக்கு ஏற்ப அவர்கள் தங்கள் முழுத் திறனையும் வெளிப்படுத்தி திறம்படப் பணியாற்றுவார்கள் என்பது உறுதி.

25 ஆண்டுகள் வெற்றிகரமாகச் செயல்பட்டு தூத்துக்குடி அனல் மின் நிலையம் இன்று வெள்ளி விழாக் கொண்டாடுகிறது. இந்த மகிழ்ச்சிகரமான வேளையில் பொறியாளர்களுக்கும் மற்றுமுள்ள பணியாளர்களுக்கும் அவர்களுடைய சிறந்த பணியைப் பாராட்டி அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்கத் தொகையாக 1,000 ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய அரசால் அனல் மின் நிலைய ஊழியர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர அனல் ஊக்கப் படி (Monthly Thermal Incentive Allowance) மற்றும் வருடாந்திர அனல் ஊக்க போனஸ் (Annual Thermal Incentive Bonus) ஆகியவற்றிற்கு மத்திய அரசால் நடப்பு ஆண்டில் இருந்து வருமான வரி விதிக்கப்படும் நிலை உள்ளது என்று தூத்துக்குடி அனல் மின் நிலைய ஊழியர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். தற்போது அனல் மின் நிலைய ஊழியர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர அனல் ஊக்கப் படி (Monthly Thermal Incentive Allowance) மற்றும் வருடாந்திர அனல் ஊக்க போனஸ் (Annual Thermal Incentive Bonus) ஆகியவற்றிற்கு வருமான வரி விதிக்கப்படும் என்று மத்திய அரசின் வருமானவரித்துறை சுட்டிக் காட்டி உள்ளதையடுத்து, அனல் மின் நிலைய ஊழியர்கள் பெற்று வரும் ஊக்கத் தொகையின் நிகர அளவு குறையும் என்ற உங்களது கவலையை நான் அறிவேன். அனல் மின் நிலைய ஊழியர்கள் பெறுகின்ற அனல் ஊக்கத் தொகைக்கு வருமான வரியிலிருந்து விலக்குப் பெற்றிட தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நான் உறுதி அளிக்க விரும்புகிறேன். அவ்வாறு வரி விலக்குப் பெற இயலவில்லை என்றால் அனல் மின் நிலைய ஊழியர்கள் தற்போது பெறுகின்ற அனல் ஊக்கத் தொகை எந்த விதத்திலும் குறையாத அளவிற்குக் கூடுதல் தொகையினை சேர்த்து வழங்க தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்று இந்த வேளையில் நான் உறுதி அளிக்க விரும்புகிறேன்.

தூத்துக்குடி அனல் மின் நிலைய வெள்ளி விழா நாளாகிய இன்று நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணிப்பதிலும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதிலும் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில் அமைந்திருக்கும் குத்தாலத்தில், சுமார் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள எரிவாயு சுழலி மின் திட்டத்தை இன்று நாட்டுக்கு அர்ப்பணிப்பதில் அளப்பரிய மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், 107 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட்டுள்ள 26 புதிய துணை மின் நிலையங்களையும் இன்று நாட்டுக்கு அர்ப்பணிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

63 கோடி ரூபாய் செலவில் நாமக்கல் மாவட்டத்தில் நிறுவப்படும் கொல்லிமலை நீர் மின் திட்டம் ;

19 கோடி ரூபாய் செலவில் தேனி மாவட்டத்தில் நிறுவப்படும் வைகை சிறுபுனல் நீர் மின் திட்டம் ;

350கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வழுதூரில் நிறுவப்படும் கூடுதல் 95 மெகா வாட் எரி வாயு சுழலி மின் திட்டம்;

35 கோடி ரூபாய் செலவில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறுவப்படும் பவானி கதவணை-1 சிறுபுனல் நீர்மின் திட்டம்.

ஆகியவற்றுக்கு, இன்றைக்கு அடிக்கல் நாட்டியதில் நான் பெருமிதமும், பேருவகையும் அடைகின்றேன்.

தூத்துக்குடி மாவட்டத்திற்கு இதற்கு முன்னதாக 14.3.2003 அன்று வருகை தந்து உங்களை எல்லாம் நான் சந்தித்தேன். அன்றைய தினம் நடைபெற்ற அரசு விழாவில் 163 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினேன் என்பதையும், அதன் பின்னர் 11.2.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 84 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினேன் என்பதையும் இந்த நேரத்தில் நினைவு கூர்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அதன் தொடர்ச்சியாக இன்று மீண்டும் உங்களை எல்லாம் நேரில் சந்தித்து இந்த இனிய விழாவில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாக 49 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிவுற்ற 2,116 பணிகளைத் திறந்து வைத்தும், 126 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 309 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளின் அடிப்படையில் சிறப்பாகத் தொழில் செய்து வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா சீரும் சிறப்புமாக அமைந்திடப் பணியாற்றிய தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்திரசேகரன் அவர்களுக்கும், மின்சார வாரியத் தலைவர் திரு. ஸ்கந்தன் அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

8.12.2004 அன்று
தூத்துக்குடியில் நடைபெற்ற
தூத்துக்குடி அனல் மின் நிலைய
வெள்ளி விழா மற்றும்
தூத்துக்குடி மாவட்ட வளர்ச்சித்
திட்டப் பணிகள் தொடக்க விழாவில்
கலந்து கொண்டு மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை



உடல் ஊனமுற்றோருக்கான தேசிய விருதுகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உடல் ஊனமுற்றோரின்பால் தனி அக்கறை கொண்டு, அவர்கள் வேலைவாய்ப்புப் பெறவும், சமூக நிலையில் உயர்ந்திடவும் மேற்கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் விளைவாக, 2003–2004ஆம் ஆண்டிற்கான 14 தேசிய விருதுகளைத் தமிழ்நாடு பெற்று, ஊனமுற்றோருக்கு உறுதுணையாக இருப்பதில், முதன்மையான மாநிலம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

மத்திய அரசின், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஊனமுற்றோரையும், ஊனமுற்றோருக்கு உதவிபுரிபவர்களையும் ஊக்குவிக்க தேசிய அளவிலான விருதுகளை வழங்கி வருகிறது. ஆண்டுதோறும் 12 பிரிவுகளின் கீழ் இவ்வாறு வழங்கப்படும் 70 தேசிய விருதுகளில், 2003–2004ஆம் ஆண்டுக்கு, சிறந்த பணியாளர் பிரிவில் 3 விருதுகள், சிறந்த தொழிலதிபர் பிரிவில் 4 விருதுகள், சிறந்த பணியமர்த்தும் பிரிவில் 2 விருதுகள் மற்றும் சிறந்த தனிநபர், சிறந்த நிறுவனம், சிறந்த திறன்மிகு நபர், சிறந்த திறன்மிகு குழந்தை, சிறந்த மாவட்டம் என மொத்தம் 14 விருதுகளைத் தமிழ்நாடு பெற்று சாதனை படைத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநலம் குன்றியோர் நலனில் தனி அக்கறை கொண்டு அரசின் செயல்திட்டங்களில் ஊனமுற்றோர் நலனுக்கு முன்னுரிமை அளித்து வருகிறார்கள். ஊனமுற்றோர் நலனுக்கான அரசின் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்த 1992–1993ஆம் ஆண்டில் இதற்கென்று ஒரு தனித் துறையை உருவாக்கினார்கள். இதன்கீழ் மாவட்டங்கள்தோறும் அனைத்து வசதிகளும் கொண்ட அலுவலகங்களும், உள்கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்பட்டு உடல் ஊனமுற்றோரின் மறுவாழ்வுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதில் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. ஊனமுற்றோருக்கு உதவித் தொகை, ஊனமுற்ற வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை, ஊனமுற்றோருக்கான கல்வி உதவித் தொகை வழங்கல் முதலான பல முன்னோடித் திட்டங்கள் தமிழ்நாடு அரசால் முனைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஊனமுற்றோருக்கு உபகரணங்கள் வழங்குவதிலும் தமிழக அரசு முன்னோடியாகத் திகழ்கிறது. அதுமட்டுமன்றி, தேசிய அறக்கட்டளைச் சட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் இயங்கும் உள்ளூர் குழுக்கள் மனவளர்ச்சி குன்றியோருக்குப் பாதுகாவலர் நியமனத்தைச் சிறப்பாக செய்து வருவது மிகவும் பாராட்டைப் பெற்றுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு வழங்கி வரும் ஆக்கத்தினாலும், ஊக்கத்தினாலும், தமிழ்நாட்டில் 237 தனியார் சமூக சேவை நிறுவனங்கள் சிறப்புடன் செயல்பட்டு, உடல் ஊனமுற்றோருக்குச் சிறப்புக் கல்வி மற்றும் சிறப்புப் பயிற்சி ஆகியவற்றை அளித்து வருவதுடன், ஊனத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உதவுகின்ற மையங்கள் மூலமாகவும் அரும்பணி ஆற்றி வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இவ்வாறு உளப்பூர்வமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக 2003–2004ஆம் ஆண்டில் தமிழ்நாடு மிக அதிக அளவில் விருதுகள் பெற்றுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது, 1995ஆம் ஆண்டில் இதே போன்று ஊனமுற்றோர் நலனுக்கான 14 தேசிய விருதுகளைத் தமிழ்நாடு பெற்றது என்பதும், அதன்பின் இந்த அளவு அதிக எண்ணிக்கையில் விருதுகள் பெறுவது 2003–2004ஆம் ஆண்டில்தான் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இதில், தமிழகத்தில் உள்ள பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம், ஊனமுற்றோக்கு உதவிகள் வழங்கி மறுவாழ்வு அளிப்பதில், இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாவட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்டுத் தேசிய விருது பெறுகின்றது என்பது பெருமைக்குரியது ஆகும்.

இந்த விருதுகள் அனைத்தும் 3.12.2004 அன்று புதுடில்லியில் நடைபெற்ற உலக ஊனமுற்றோர் தின விழாவில் மேதகு இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களால் வழங்கப்பட்டது.

2003–2004ஆம் ஆண்டில் தேசிய விருதுகள் பெற்றோர் பட்டியல் வருமாறு:

வ.எண்.	விருது பெற்றவ்ர் பெயர்	விருதின் வகை
1.	டாக்டர். உஷா நாகராஜன், மதுரை.	சிறந்த பணியாளர் (கண் பார்வையற்றோர்)
2.	திரு. எம்.முத்துசாமி, கரூர் மாவட்டம்	சிறந்த பணியாளர் (கை, கால் ஊனமுற்றோர்)
3.	திரு. ஆம்புரோஸ் துரைராஜ், சென்னை	சிறந்த பணியாளர் (தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர்)
4.	டைட்டன் இண்டஸ்ட்ரீஸ் லிட்., ஓசூர், தருமபுரி மாவட்டம்	சிறந்த தொழிலதிபர்
5.	அன்னை ஜே.கே.கே. சம்பூரணி அம்மாள் அறக்கட்டளை, கொமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்	சிறந்த தொழிலதிபர்
6.	சக்தி மசாலா (பி) லிட்., மாமரத்துப்பாளையம், ஈரோடு மாவட்டம்	சிறந்த தொழிலதிபர்
7.	சேரன் மண்டல ஊனமுற்ற குழந்தைகளுக்கான கிறிஸ்துவ சங்கம், கிரே டவுன், கோயம்புத்தூர்	சிறந்த தொழிலதிபர்
8.	திரு. ஜெயின் சிங், துணை இயக்குநர், உடல் ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு மையம், கிண்டி, சென்னை – 32.	சிறந்த பணியமர்த்தும் அலுவலர்

வ.எண்.	விருது பெற்றவர் பெயர்	விருதின் வகை
9.	திரு. டி. விஜயகுமார், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை.	சிறந்த பணியமர்த்தும் அலுவலர்
10.	திரு. எஸ். சிவசங்கரன், வேலூர் மாவட்டம்	சிறந்த தனிநபர் விருது
11.	மதுரம் நாராயணன் சிறப்பு குழந்தைகளுக்கான மையம், தி. நகர், சென்னை – 17.	சிறந்த நிறுவனம்
12.	திரு. எஸ். அப்துல் ஹமீத், சென்னை – 18.	சிறந்த திறன்மிகு நபர்
13.	மாஸ்டர் கே. ஜனார்தனன், த/பெ. பி.எஸ். கேசவன், இராமாபுரம், சென்னை.	சிறந்த திறன்மிகு குழந்தை
14.	இராமநாதபுரம் மாவட்டம்	சிறந்த மாவட்டம்

புழு மீன்

இருநிலை வாழ்விகள் அதாவது நீரிலும், நிலத்திலும் வாழும் உயிரினங்களில் இன்று மூன்று வரிசைகளே உள்ளன. இவற்றுள் சாலியன்ஷியா வரிசையைச் சேர்ந்தவை தவளைகளும், தேரைகளும். யூரோடெலா வரிசையைச் சேர்ந்தவை ஸாலமண்டர்களும் நியூட்களும். அபோமி அல்லது சிசிலியன் வரிசையைச் சேர்ந்தவைகளுக்குக் கால்கள் கிடையாது. பார்ப்பதற்குப் புழுக்கள் போல் இருக்கும். இந்த வரிசையைப் பற்றி அதிக விவரங்கள் தெரியவில்லை. இதில் ஒரு சில இனங்கள் உள்ளன.

கால்களில்லாத இந்த வகையைச் சேர்ந்த உயிரினங்கள் மத்திய தென் அமெரிக்காவிலும், இந்தியா, ஆப்பிரிக்கா, ஸ்ரீலங்கா ஆகிய இடங்களிலும் பரவலாக உள்ளன. இவற்றை சிசிலியன் அல்லது குருட்டுப் புழுக்கள் என்று சொல்லுவார்கள். இலத்தீன் மொழிச் சொல்லான சீகஸ் என்பதற்கு குருடு என்று பொருள். ஈரப்பதமான இடங்களில் வளை தோண்டி வாழும். இதன் உடல் முழுவதும் சளி படர்ந்தாற் போலிருக்கும். மீன்களைப் போல செதில்கள் அதிலே பொதிந்திருக்கும். கண்கள் மிகச் சிறியது. இமைகளும் கிடையாது. கண்களுக்கும் மூக்குத் துவாரத்திற்கும் நடுவில் சிறிய உணர்க்கைகள் உள்ளன.

புழு மீன் என்றும் இலங்கை பாம்பு மீன் என்றும் குறிப்பிடப்படும் உயிரினம் இந்த வரிசையைச் சேர்ந்தது. இதன் உடல் அமைப்பு பாம்பு அல்லது புழுவைப் போல் இருப்பதாலும் மீனைப் போல் நீரில் வசிப்பதாலும் இதற்கு இந்தப் பெயர் வந்தது. இதன் உடல் கறுப்பாக இருக்கும். இதன் உணவு சிறு புழுக்கள். ஏறக்குறைய 50 செமீ. நீளம் வரை வளரக் கூடியது. தரையில் வளை தோண்டி வாழும். இனப் பெருக்கக் காலத்தில் பெண் பாம்பு மீன் நீர்நிலை ஓரங்களில் குழி தோண்டி முட்டைகளிட்டு அடைகாக்கும். முட்டையில் இருந்து வெளிவரும் இளரிகளுக்கு சிறிய பின் கால்களும், கால் பகுதியில் துடுப்பு போன்ற அமைப்பும், புறச் செவுள்களும் உண்டு. இவர்களின் வாழ்க்கை ஓடைகளில் தொடங்கும். அப்போது செவுள்கள் மூலம் சுவாசிக்கும். இவற்றுள் ஒரு சில முட்டைகளிடாமல் இளம் புழுக்களையே ஈனும். ✱

அச்ச உணர்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதே காவல்துறையின் முக்கிய நோக்கம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



தமிழ்நாடு காவல்துறைக்குப் பெருமை சேர்க்கும் நாளான இன்றைய விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். மொத்தம் ரூ.87 கோடிக்கும் அதிகமான செலவில் தமிழ்நாடு காவல்துறையின் அடிப்படை வசதிகளை மேலும் அதிகரிப்பதற்காக அடிக்கல் நாட்டி, தொடங்கி வைப்பதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கும் வகையில் தமிழ்நாடு காவலர் பயிற்சிக் கழகமும் புதிய காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகமும் இரு முக்கியக் கட்டடங்களாக விளங்கும்.

இந்தியாவில் தொழில் முறையில் தனக்கென்று தனி இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாடு காவல்துறை மேன்மேலும் சிறப்புற இயங்குவதற்கு எனக்கென்று ஒரு இலக்கைக் கொண்டுள்ளேன். இந்நாட்டிலேயே தமிழ்நாடு காவல்துறை முதலிடம் வகிக்க வேண்டுமென்பதே என்னுடைய அவா. இதற்காகவே, தமிழ்நாடு காவல்துறை தங்களுடைய தொழில்முறைத் திறமையை மேம்படுத்துவது மட்டுமின்றி, ஒழுங்குமுறை மற்றும் குழு மதிப்புணர்ச்சியையும் மேம்படுத்துவதைத் தவிர இத்துறையை நவீனப்படுத்துதல், அதற்குத் தேவையான சாதனங்களை வழங்குதல், பயிற்சியளித்தல், நலத் திட்டங்களைச் செயற்படுத்தல் ஆகியவற்றிற்கு நான் மிக முன்னுரிமை அளித்துள்ளேன். 2001 மே திங்களில் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து, இரண்டாவது முறையாக நான் உள்துறைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட வரை, காவல்துறைக்குக் கட்டடங்கள், சாதனங்கள், ஆயுதங்கள், பயிற்சி, வீட்டுவசதி ஆகியவற்றிற்கு வகை செய்ய என்னுடைய அரசு

ரூ.514.54 கோடி அனுமதித்துள்ளது. இவ்வாறு வரவு செலவுத் திட்டத்திலேயே நிதி ஒதுக்கியது தமிழ்நாடு காவல் துறை வரலாற்றிலேயே முன் எப்போதும் இராததாகும்.

ரூ.30 கோடி செலவில் தரமணியில் அமையவுள்ள புதிய காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம் தற்போது மிகப் பழமையான தொன்மை வாய்ந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இதனை விரிவுபடுத்தவோ நவீனப்படுத்தவோ இயலாத வகையில் இக்கட்டடம் உள்ளது. காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலக புதிய வளாகம் தரமணியின் பிரதான பகுதியில் 24 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ளது. இது 3 இலட்சம் சதுர அடி கட்டடப் பரப்புடன், நவீன தகவல் தொழில் நுட்ப அடிப்படையிலான அடிப்படை வசதி மற்றும் புதுமையான தகவல் தொடர்பு வன் பொருட்களுடன், தமிழ்நாடு காவல்துறை போன்று மிக உயர்ந்த தொழில்நுட்பப் படையின் தலைமை அலுவலகத்திற்கு ஏற்ற வகையில் அமைந்திருக்கும். இக்கட்டடம் கட்டப்பட்டு முடிந்தவுடன் தமிழ்நாடு காவல் படையின் தலைமை அலுவலகம், இந்நாட்டிலேயே தலை சிறந்ததாக விளங்கும்.

ஒவ்வொன்றும் ரூ.3 கோடி செலவில் திருவண்ணா மலையிலும், விழுப்புரத்திலும் கட்டப்பட்ட மாவட்ட காவல் துறை அலுவலக வளாகங்கள் திருவண்ணாமலையில் ரூ.87.66 இலட்சம் செலவில் கட்டப்பட்ட ஆயுதப்படை வளாகம், முறையே ரூ.85 இலட்சம், ரூ.86 இலட்சம் செலவில் விழுப்புரத்திலும், இராமநாதபுரத்திலும் கட்டப்பட்ட வட்டார தடய அறிவியல் ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றைத் திறந்து வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்நாடு அமைதியுடன் வளத்துடனும் சொர்க்கமாகத் திகழ இயலும் வகையில் தமிழ்நாடு காவல்துறையை முற்றிலும் திறமையாகவும் சிறப்பான படையாக ஆக்குவதற்குத் தேவையான அடிப்படை வசதிக்காகப் போதுமான நிதி ஒதுக்கீடுகளை நான் தொடர்ந்து ஒதுக்குவேன்.

சட்டம் ஒழுங்கைத் திறம்படப் பராமரிப்பதற்கு நாம் உத்தரவாதம் அளிக்காவிடில், மாநிலத்தில் முன்னேற்றம் எதையும் நாம் எய்த இயலாது என்பது ஒரு நிதர்சனமான உண்மையாகும். அமைதி மற்றும் சமூகநல்லிணக்கத்தின் ஒரு சொர்க்கமாகத் தமிழ்நாட்டை ஆக்குவதில் நான் ஒருபோதும் எந்த வகையிலும் சமரசம் செய்து கொண்டது கிடையாது. இது ஏதோ ஒரு சந்தர்ப்பத்தின் அடிப்படையில் அல்ல. அமைதியைக் குலைக்க அல்லது பொது சட்டம் ஒழுங்கைக் கெடுக்க முயற்சி செய்கின்ற சமூக விரோத சக்திகள், தீவிரவாத மற்றும் அடிப்படைவாதச் சக்திகள் அனைத்தையும் தமிழக எல்லையை விட்டு அப்புறப் படுத்துவதற்குத் தீவிரக் கவனத்துடன், சளைக்காமல், திட்டமிட்ட முறையில் உங்களுடைய முயற்சிகளைச் செயல்படுத்தியதன் மூலம் இது எய்தப்பட்டுள்ளது. இந்த இலக்கை எய்துவதற்காகத்தான், தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்துதல், ஆயுதங்கள் மற்றும் சாதனங்களை மேம்படுத்துதல், கட்டடங்கள் மற்றும் பயிற்சியளித்தல் ஆகியவற்றிற்கு வரவு–செலவுத் திட்டத்தில் தாராளமாக நிதியொதுக்கம் செய்வதன் மூலம் தமிழ்நாடு காவல் படையை திறம்பட்ட முறையில் நவீனப்படுத்துவதற்கு நான் திட்ட மிட்டுள்ளேன்.

மாநிலத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களும் தற்போது கணினிமயமாக்கப்பட்டுள்ளது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். காவல் நிலையம் அளவில் பயன்படுத்துவதற்காக 1,365 வீடியோ கேமராக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீ உயர் அலை (VHF) மற்றும் மொபைல் தகவல் தொடர்பு சாதனங்களை வழங்குவதன் மூலம் தகவல் தொடர்பு வசதிகளை நாங்கள் திட்டமிட்ட முறையில் வலுப்படுத்தியுள்ளோம். மாநிலத்தில் உள்ள நுண்ணலை தகவல் பரிமாற்ற முறை கணினிமயமாக்கப்பட்டுள்ளது. பயனற்றவை என்று கழித்து ஒதுக்கப்பட்ட வண்டிகளை மாற்றிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக புதிய வண்டிகள் வாங்கப்படும் முறையான திட்டம் மட்டுமின்றி, காவல்துறை வாகனங்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது.

இருப்பினும், காவல் படையை நவீனமயமாக்குவது, அதிக நிதிகளை ஒதுக்குவது அல்லது புதிய தொழில் நுட்பத்தை அளிப்பது மட்டுமின்றி, தமிழில் 'காவலர்' என்ற சொல்லுக்கான உண்மையானப் பொருளை அவர்கள் பின்பற்றுவதற்குத் தேவையானவற்றை அவர்களுக்கு வழங்குவதுதான் என்று நான் நம்புகிறேன். காவலர் என்பதற்கு சட்டத்தைப் பாதுகாப்பவர் மற்றும் மக்களைப் பாதுகாப்பவர் என்று பொருளாகும். பாதுகாவலர் என்ற கடமையில், காவல்துறையினர் வீரம் மற்றும் கடுமை ஆகியவற்றைப் பெற்றிருப்பதுடன், கனிவும் பரிவும் அவர்களிடம் ஒருங்கே காணப்பட வேண்டும். தொழில் முறையில் தயாரிக்கப்பட்ட ஒரு பாடத்திட்டம் மற்றும் முறையான பணியிடை பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் கடுமையான பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் இந்தப் பண்புகளை அவர்களுக்கு அளிக்க முடியும். இந்தக் காரணத்தினால்தான், ரூ.48கோடி செலவில், ஊனமாஞ்சேரி கிராமத்தில் தமிழ்நாடு காவலர் பயிற்சிக்



கழகத்தை ஏற்படுத்த நான் முடிவு செய்தேன். புதிதாகப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படும் காவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளித்தல், ஏற்கெனவே பணியிலுள்ள ஏனைய காவல்துறை பணியாளர்களுக்குப் பணியிடை புத்தாக்கப் பயிற்சியளித்தல் ஆகிய பல தரப்பட்டத் தேவைகளை நிறைவு செய்யும் இந்த அதிநவீன காவலர் பயிற்சிக் கழகத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பயிற்சிக்கழகம், பல்வேறு பதவித் தரங்களைச் சேர்ந்த காவல்துறையின் 800 பணியாளர்களுக்கு ஒரே நேரத்தில் உலகத்தரம் வாய்ந்த பயிற்சியளிக்கும் தனிப்பட்ட வசதிகளையும், பயிற்சி பெறுபவர்களுக்கான இடவசதி, பயிற்சி பெறும் பணியாளர்களுக்கான குடியிருப்பு வளாகம் ஒன்று, கடை வளாகம் ஒன்று, ஒரு மருத்துவமனை மற்றும் மருந்தகம், நவீன உடற்பயிற்சிக் கூடம் ஒன்று ஆகிய அடிப்படை வசதிகளைக் கொண்டதாக இருக்கும். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயிற்சிக் கல்லூரி, கலை நயத்துடனும், பயன்பாட்டிற்கு ஏற்ற வடிவமைப்புடனும், சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில், பன்னாட்டுத் தரங்களுக்கு ஏற்ப 132.92 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும். இது, இந்தியாவில் உள்ள காவல்துறை பணியாளர்களுக்கான பயிற்சிக் கல்லூரிகளில் முதன்மையானதாக விளங்கும் என்பதில் எனக்கு எவ்விதச் சந்தேகமும் இல்லை.

பொது சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது மிகவும் சிக்கலான நடவடிக்கையாக மாறியுள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். தீவிரவாதம் மற்றும் அடிப் படைவாதம், தொலைதூரங்களில் இருந்து இயங்கச் செய்வதன் மூலம் பொது இடங்களில் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தல், திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தும் கும்பல்கள் ஆகியவை காவல்துறையினர் முன்னிலையில் உள்ள புதிய சவால்கள் ஆகும்.

தகவல்–தொழில்நுட்பவியல் புரட்சியானது, கணினி வழிக்குற்றங்கள் என்ற புதிய தொற்று நோய் உண்டாக்கும் நச்சுக் கிருமியை உருவாக்கியுள்ளன. அதனால் குற்றமும், குற்றவியலும் மிகவும் நவீன மயமாகியுள்ளன. புதிய உத்திகளும், முற்றிலும் சீரமைக்கப்பட்ட பயிற்சித் திட்டமும் மட்டுமே அத்தகைய பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுக்க, காவல்துறையைத் தயார்படுத்த முடியும். தமிழ்நாடு காவலர் பயிற்சிக் கழகமானது, அது தொடங்கப்பட்ட நாளிலிருந்து, மன அழுத்தத்தை நீக்குவதற்கான பயிற்சித் திட்டங்களுடன், கணினி பயிற்சி, வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்தல், நவீன ஆயுதங்களைக் கையாளுதல், சிறப்பு அதிரடி நடவடிக்கைகள், நெருக்கடி நிலைமைகளை எதிர்கொண்டு தீர்வு காணல், அதிகாரிகளின் பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கும் திறமைகள் ஆகியவற்றிற்கு ஏற்ற உடல்தகுதி மற்றும் திறன் உருவாக்கம் ஆகியவை குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். இக்கழகம்,– காவல் படையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கு பல அடுக்கு கொண்ட பயிற்சித் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துவதோடு மட்டுமன்றி, நவீன யுகத்தில், காவல்துறையினர் புதியச் சவால்களை

எதிர்கொள்வதற்கு, காவல்துறையின் வெவ்வேறு மட்டத்திலுள்ள அதிகாரிகளையும் தயார்படுத்த வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனுக்கு எதிரான நடவடிக்கைகளின்போது தங்கள் இன்னுயிரை ஈந்த தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் காவலர்களின் நினைவைப் போற்றும் வகையில், தமிழ்நாடு காவலர் பயிற்சிக் கழகத்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் நினைவிடம் ஒன்று கட்டப்படும் என்று நான் அறிவித்துள்ளேன். சிறப்பு அதிரடிப்படையானது, என்னுடைய தெளிவான மற்றும் உறுதியான ஆணையைப் பின்பற்றியும், நான், அவர்களுக்கு அளித்த மனப் பூர்வமான ஆதரவைத் தொடர்ந்தும், கொலை, கொள்ளை, வனச் செல்வங்களை அழித்தல் ஆகியவற்றின் மூலம் தமிழ்நாட்டை சுமார் 20 ஆண்டு காலம் பீடித்திருந்த பயங்கரமான சகாப்தத்தை, சிறந்த பயிற்சி மற்றும் திறமையுடன் மிகக் கவனமாகத் திட்டமிட்டு நமது சிறப்பு அதிரடிப் படையினர் செவ்விய முறையில் நிறைவேற்றிய அதிரடி நடவடிக்கைகள், முடிவுக்குக் கொண்டு வந்தன. வீரப்பனை வீழ்த்திய துணிகரமான மற்றும் திடீர் தாக்குதல், தேசிய அளவில், தமிழ்நாடு காவல் துறையின் புகழைப் பாராட்டச் செய்ததோடு, தமிழ்நாடு காவல்துறைக்கு பெயரும் புகழும், பெருமையும் பெற்றுத்தந்துள்ளது. எனவே, தமிழ்நாடு காவலர் பயிற்சிக் கழகத்தில் ஒரு நினைவிடம் அமைப்பது பொருத்தமானதாக இருக்கும். அப்போது தான், காவலர் பயிற்சிக் கழகத்தின் வாயிலுக்குள் நுழைகிற தமிழ்நாடு காவல் படையைச் சேர்ந்த ஒவ்வொரு ஆணும், பெண்ணும் மற்றும் அதிகாரியும், இந்த வீரர்களின் துணிகரமான தியாகத்தைப் பற்றி அறிந்து கொள்வர். அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதோடு, அதே போன்ற துணிகரமான, தியாகச் செயல்களைத் தாமும் செய்வதற்கு உத்வேகம் பெறுவர்.

பெண்களுக்கு உரிமை அளித்தல், பெண்கள் தவறாகப் பயன்படுத்தப்படாத சமுதாயம் ஒன்றையும், பெண்கள் குற்றம் மற்றும் பாதிப்புக்கு ஆளாக்கப்படுதல் ஆகியவற்றுக்கு எதிராக முழு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கிற குற்றவியல் நீதி வழங்கும் முறை ஒன்றையும் உருவாக்குதல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, காவல் நிலையங்களை, பெண்களுக்கு நேசக்கரம் நீட்டுவதாகச் செய்ததன் மூலம் மாநிலத்திலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் முற்றிலும் புதிய புத்தாக்கப்பயிற்சி ஒன்றை நான் அளித்தேன். 1992ஆம் ஆண்டில் நான் முதன்முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் தொடங்கி வைத்தேன். இன்று, நமது மாநிலத்திலுள்ள 188 காவல்துறை துணைக் கோட்டங்கள் அனைத்து மகளிர் காவல் நிலையத்தைக் கொண்டுள்ளன. நமது மாநிலத்தில் தற்போது வழக்கமாக உள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் காவல்துறை பெண் உதவி ஆய்வாளர் ஒருவர், நிலை II–ஐச் சேர்ந்த பெண் காவலர்கள் இருவர் ஆகியோரை நியமிக்குமாறு நான் உத்தரவிட்டுள்ளேன். இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத வகையில், தமிழ்நாட்டில் முதன்முதலாக அனைத்து மகளிர் காவல்படையை ஏற்படுத்துவதற்காக, அனைத்து மகளிர் அதிரடிப்படை ஒன்றையும், அனைத்து மகளிர் காவல் படையணி ஒன்றையும் தொடங்க நான் நடவடிக்கைகள் எடுத்துள்ளேன். மனிதாபிமானம் மிக்கவராக, பரிவு காட்டுபவராக, கருணையுடன் பாதுகாப்பவராக, ஆபத்தில் உதவுகிற நண்பனாக, மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு ஆலோசனை அளிப்பவராக, தமிழ்நாட்டின் அனைத்து மகளிர் காவல்நிலையங்களில் காவல் துறையினர் செயல்பட வேண்டும் என்பது என்னுடைய எண்ணமாகும்.

எழும்பூர், வேப்பேரி, அயனாவரம், வடபழனி, இராயப்பேட்டை, தேனாம்பேட்டை மற்றும் உயர்நீதி மன்ற வளாகம் ஆகிய இடங்களில் புதிதாக ஏழு அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, சென்னை காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் திறந்து வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சென்னை காவல் துறை ஆணையர் அலுவலகம், தற்போது, 27 சரகங்கள் ஒவ்வொன்றிலும் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்றைக் கொண்டிருக்கும். சென்னை மாநகருக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு, பாதுகாப்பு நிறைந்த மாநகர் என்ற நற்பெயரைப் பெற்றுத் தருவதில் இவை உதவும் என நான் நம்புகிறேன்.

காவல்துறைக்கு எண்ணற்ற நலத் திட்டங்களை நான் அறிவித்து, செயல்படுத்தியுள்ளேன். என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். ரூ.224.75 கோடி செலவில், காவலர்களுக்கான வீட்டுவசதித் திட்டம் மட்டுமின்றி, வீரதீரச் செயல்களில் கொல்லப்பட்ட அல்லது கடுமையாகக் காயமுற்ற அதிகாரிகள், ஆண் காவலர்கள் மற்றும் பெண் காவலர்களுக்கான உதவித் தொகையையும் உயர்த்த நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். காவல்துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கும் எண்ணற்ற கல்வித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இது ' 'போலவே, காவல்துறை பணியாளர்களுக்கு முற்போக்கான சுகாதாரத் திட்டம் ஒன்றும் என்னால் அறிமுகப் படுத்தப்பட்டது. காவல்துறையினர் எவ்வித சவால்களையும் எதிர்கொண்டு செயல்படவும், காவல்துறையின் எத்தகைய கடுமையான பணிகளையும் விருப்பத்துடன் தாங்களே முன்வந்து ஏற்று, தங்களுடைய கடமையைத் தியாக உணர்வுடன் ஆற்றவும் இயலும் வகையில், நம்முடைய காவல் துறையின் ஒழுக்க – நேர்மையுணர்வை தொடர்ந்து பின்பற்றவும் நான் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன்.

தன்னிகரற்ற கடமைப் பற்றுணர்வு, தனிச் சிறப்பிற்குரிய வீரச் செயல்கள், தொழில்முறை பண்புகள் ஆகியவற்றைப் புலப்படுத்தக்கூடிய சூழ்நிலைகளில் தமிழ்நாடு காவல்துறை குறிப்பிடத்தக்க சாதனையை எய்தி எப்போதும் சிறப்பான பணியை ஆற்றியுள்ளது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் பெண்களுக்குரிய பிரச்சினைகளில், நீங்கள் மிகுந்த கவனத்துடன் செயலாற்ற வேண்டும். அச்ச உணர்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதும், மக்களிடையே பாதுகாப்பு உணர்வை வலுப்படுத்துவதும் உங்களுடைய முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். மனித நேயம், நியாயம், செயல் திறன்மிக்க காவல்துறைக்கு முன் மாதிரியாக நம் மாநிலத்தை உருவாக்க நீங்கள் கடுமையாகப் பணியாற்ற வேண்டும்.

ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியையும், முன்னேற்றங்களையும் எய்துவதன் மூலம், எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கி, நாட்டிலேயே தமிழ்நாடு மாநிலத்தை முதன்மை மாநிலமாக உருவாக்குவதே என் நோக்கமாகும். சட்டம் – ஒழுங்கை முறையாகப் பராமரிப்பதே இதற்கான அடித்தளமாகும். இந்நோக்கத்தை நடைமுறையில் செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடு காவல்துறை அதிகாரிகளும், ஆண், பெண் காவலர்களும் தளராத ஒத்துழைப்பையும், பற்றுறுதியையும் அளிக்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன். காவல்துறையினரின் உயரிய செயல் பாடுகளையும், தொழில்முறை பண்புகளையும் கொண்டு, நீங்கள், மக்களின் நம்பிக்கைக்குரிய தோழனாகவும், ஏழை எளிய மக்களின் பாதுகாவலனாகவும் திகழ்ந்து, ஒட்டுமொத்த நாட்டிற்கும் முன் மாதிரியான ஒரு காவல்துறையை உருவாக்குவீர்கள் என நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
10.11.2004 அன்று காவல்துறை
தலைமை இயக்குநர் அலுவலகம் மற்றும்
காவலர் பயிற்சிக்கழகம் அடிக்கல் நாட்டு
விழா மற்றும் பல்வேறு காவல் துறை
அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவில்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தி

எங்கும் கிறிஸ்துமஸ் திருநாள் கொண்டாடப் படும் இந்த இனிய நன்னாளில் கிறிஸ்தவப் பெருமக்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை உரிதாக்கிக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கிறிஸ்துவின் பிறப்புக்கு முன் என்றும், கிறிஸ்துவின் பிறப்புக்குப் பின் என்றும் காலம் பிரிக்கப்படுகிறது. இந்த இணையற்ற சிறப்புக்கு காலத்தை வென்று நிற்கும் அவரது கருணையே காரணம் !

இரக்கத்தின் வடிவம் இயேசு பெருமான்!

அன்பே அவரது மொழி !

அன்பே அவரது வழி !

அந்த அருளாளரின் வாக்கும் வாழ்வும் அன்றும் இன்றும் என்றும் அகிலத்தை அற வழியில் நடத்தும் ஆற்றல் பெற்றவை. வன்முறையால் வதைப்படும் இந்த வையம் அவரது வழி நின்றால் உய்யும்.

இயேசு பெருமான் பிறந்த இந்தப் பெருநாளில்,

தவழட்டும் அமைதி !

அதனால் தழைக்கட்டும் இன்பம் !

எனது அன்புக்குரிய தமிழக கிறிஸ்தவப் பெருமக்கள் அனைவருக்கும் என் இனிய கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

2004-2005ஆம் ஆண்டுக்கான இரண்டாம் துணை மதிப்பீடுகள்



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2004–2005–ஆம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை, இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூ.60.35 கோடி நிதி ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூ.53.12 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூ.7.23 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2004–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாளன்று இந்த நிதியாண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று "புதுப்பணிகள்" குறித்துச் செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப்பெறவும், எதிர்பாராச்செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

மீனவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, 20 மீட்டர் நீளத்திற்குக் குறைவான மீன்பிடி விசைப் படகுகளுக்கு வழங்கப்படும் உயர்வேக டீசல் எண்ணெய் குறித்த மத்திய ஆயத் தீர்வையை ஈடுசெய்வதற்காக, மானியமாக அரசு ரூ.1.83 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச்செலவு நிதியிலிருந்து, முன்பணமாக ரூ.1.83 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண்.7 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம்" என்ற தலைப்பின் கீழ் ரூ.1.83 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனைகளில் அளிக்கப்படும் மருத்துவ வசதிகளை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக, மதுரை, அரசினர் இராஜாஜி மருத்துவமனைக்குச் சாதனங்கள் வழங்குவதற்காக அரசு, ரூ.1.95 கோடி அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண்.18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை" என்பதன் கீழ் ரூ.1.95 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர பகுதிக்குள், 26 முக்கியமான சாலைப் பணிகளை மேற்கொள்ள அரசு ரூ.369.90 கோடி அனுமதித்துள்ளது. இந்தச் சாலைகளில் போக்குவரத்துச் சீராக இயங்க இது பெரிதும் துணை புரியும். இது ஒரு புதுப்பணி என்பதால் இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண்.20 – நெடுஞ்சாலைகள் துறை" என்பதன் கீழ் அடையாள நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனையும் அவனது கும்பலையும் தீர்த்துக்கட்டும் பணியை வெற்றிகரமாக முடித்த சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த 757 காவல்துறை அதிகாரிகள் / காவலர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.3 இலட்சம் ரொக்கப் பரிசு வழங்க அரசு ரூ.22.71 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ.22.71 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண். 21 – உள் துறை – காவல்" என்பதன் கீழ், ரூ.22.71 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், திருநெல்வேலியிலுள்ள அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிபள்ளத்திலுள்ள கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, தூத்துக்குடியிலுள்ள அரசு தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, வேலூரிலுள்ள அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மற்றும் தேனி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஆகியவற்றிற்குக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக் கட்டடங்களைக் கட்ட, அரசு ரூ.187.29 கோடி அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண்.38. பொதுப்பணித் துறை" என்பதன் கீழ் அடையாள நிதியொதுக்கமாக ரூ.6,000 சேர்க்கப்பட்டுள்ளது. பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் தேவையான நிதி ஒதுக்கப்படும்.

" மீனவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, 20 மீட்டர் நீளத்திற்குக் குறைவான மீன்பிடி விசைப் படகுகளுக்கு வழங்கப்படும் உயர்வேக டீசல் எண்ணெய் குறித்த மத்திய ஆயத் தீர்வையை ஈடுசெய்வதற்காக, மானியமாக அரசு ரூ.1.83 கோடி அனுமதித்துள்ளது. "

"அனைவருக்கும் கல்வி" திட்டத்தைச் செயற்படுத்த கூடுதலாக ரூ.15.61 கோடி தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண்.41. பள்ளிக் கல்வித் துறை" என்பதன் கீழ் அடையாள நிதியொதுக்கமாக ரூ.2,000 சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மறு நிதியொதுக்கம் மூலம் ஒதுக்கீடு செய்யப்படும்.

யானைகளுக்குப் புத்துணர்வூட்டும் முகாம்கள் நடத்துவதற்காக அரசு, 2004–2005ஆம் ஆண்டுக்கு ரூ.87 இலட்சம் அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண். 45. தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை" என்பதன் கீழ் ரூ.87 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005ஆம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன்.

வணக்கம்!

மாண்புமிகு நிதியமைச்சர்
திரு. சி. பொன்னையன் அவர்கள்,
2004–2005ஆம் ஆண்டிற்கான
இரண்டாம் துணை மதிப்பீடுகளை,
சட்டமன்றப் பேரவை முன் வைத்து,
2004–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்–
17–ஆம் நாளன்று ஆற்றிய உரை.

திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கொடை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2004–ஆம் ஆண்டிற்கான ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆகிய 3 மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகை மொத்தம் ரூபாய் 30 ஆயிரத்தை, மூன்று திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக 6.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 2002–ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தை, தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் 'அன்னதானத் திட்ட'த்திற்காக, ஒவ்வொரு மாதமும் ஒரு திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2004–ஆம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகை ரூ.30 ஆயிரத்தை, தலா ரூ.10 ஆயிரம் வீதம், திருச்சி மாவட்டம், குணசீலம் அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயில், சென்னை, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு சுப்ரமணியசாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கி னார்கள். இந்த நன்கொடைக்கான காசோலைகளை, அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில் பரம்பரை நிர்வாக அறங்காவலர் திரு. கே.ஆர். பிச்சுமணி அய்யங்கார், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் திரு. பாரதி, அருள்மிகு சுப்ரமணியசாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் திரு. ஆர்.முத்துசாமி ஆகியோரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.12.2004 அன்று நேரில் வழங்கினார்கள்.

★ ★ ★

வீரப்பனின் கொடுமைக்கு முடிவு கட்டிய வெற்றிச் செயல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சட்டப்பேரவையில் அளித்த அறிக்கை (22–11–2004)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்

என்பது வள்ளுவர் வாக்கு. வள்ளுவரின் அந்த வாய்மொழிக்கு இணங்க எப்போது செயல்படுவது, எப்படிச் செயல்படுவது, எந்த இடத்தில் செயல்படுவது என்று தீர்க்கமாகச் சிந்தித்து, திடமாகச் செயல்பட்டு தமிழ்நாடு காவல் துறை ஒரு மகத்தான வெற்றியை, ஒரு மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. காட்டுக் கொள்ளையன் வீரப்பனுக்கு ஒரு முடிவு கட்டியதுதான் அந்த மகத்தான வெற்றி!

வன வளங்களைக் கபளீகரம் செய்த பயங்கரக் காட்டுக் கொள்ளைக்காரன்– மனித உயிர்களை மலிவாகக் கருதிய கொலைகாரன் – யானைகளை இரக்கமின்றி கொன்று குவித்த அசுரன் – ஈவு இரக்கம் அறியாத வழிப்பறிக் கொள்ளையன் – தமிழ்நாட்டை மட்டும் அல்லாமல் கர்நாடகாவையும் கடந்த 20 ஆண்டுகளாகப் பீடித்திருந்த இழிவான சாபக்கேடு– இத்தகைய இழிவுகளின் இருப்பிடமாய்த் திகழ்ந்த வீரப்பன் கொடுமைகளுக்கு எல்லாம் 18.10.2004 அன்று ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. தமிழக அதிரடிப்படை மேற்கொண்ட துணிவான சாகச நடவடிக்கையால் அன்றைய தினம் வீரப்பனும் அவனது கூட்டாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனை உயிருடன் பிடித்து, சட்டத்தின் முன் அவனை நிறுத்தி, அவன் செய்த தவறுகளுக்கு உரிய தண்டனை பெற்றுத் தர வேண்டும்; அவனுக்குப் பக்கபலமாகவும், பின் புலமாகவும் நின்றிருந்தவர்களை, அவனை வைத்துக் காசு பார்த்தவர்களை, மக்கள் மத்தியில் அடையாளம் காட்ட வேண்டும் என்பதுதான் எனது தலைமையிலான இந்த அரசின் எண்ணம். இதன் அடிப்படையில்தான், தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையினர் உரிய வியூகங்கள் வகுத்து, தருமபுரியில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் பாப்பாரப்பட்டிக்கும், தருமபுரிக்கும் இடையே நெடுஞ்சாலையில், வீரப்பனையும், அவனது கூட்டாளிகளையும் வழி மறித்தார்கள். அவர்கள் வந்து கொண்டிருந்த வாகனத்தில் இருந்து இறங்கி வந்து சரணடையுமாறு கூறினார்கள். ஆனால், வீரப்பனும், அவனது கூட்டாளிகளும், சுற்றி நின்ற அதிரடிப்படையினரை சுட்டுக் கொன்று விட்டுத் தப்பித்து விடலாம் என்ற எண்ணத்தில், சரணடைவதற்குப் பதிலாக துப்பாக்கியால் சுட ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகும் கூட, அதிரடிப்படையினர் மேலும் ஒரு வாய்ப்புக் கொடுத்து சரணடையுமாறு மீண்டும் ஒரு எச்சரிக்கை விடுத்தனர். ஆனால், அந்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல், வீரப்பனும், அவனது கூட்டாளிகளும், தொடர்ந்து அதிரடிப்படையினர் மீது சுட்டதால், பதிலுக்கு அதிரடிப்படையினர் திரும்பச் சுட்டு, அவர்களை வெற்றி கொண்டார்கள். இந்தச் சாகச நடவடிக்கையின் போது, கொலைகாரன் வீரப்பனும்,

அவனது மொத்தக் கூட்டாளிகளாகிய சேத்துக்குளி கோவிந்தன், சந்திர கௌடா மற்றும் சேதுமணி ஆகியோரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த நடவடிக்கையில் காவல் துறையைச் சார்ந்த மூன்று பேர் காயமடைந்தனர்.

20 ஆண்டுகளாக, இரவும் பகலும் நடைபெற்று வந்த ஒரு போராட்டத்திற்கு, கொடியவன் வீரப்பனையும், அவனது கூட்டாளிகளையும் எதிர்த்து நடத்திய அசுர வேட்டைக்கு, தமிழ்நாடு காவல் துறையின் சிறப்புஅதிரடிப்படை மதி நுட்பத்துடன் வியூகங்கள் வகுத்து, தனது 20 நிமிட சாகசச் செயலால் ஒரு முடிவு கண்டது. ஆனால், இதற்கு இடைப்பட்ட காலத்தில் வீரப்பன் எத்தனை பேரைக் கொலை செய்தான்? அவன் மேற்கொண்ட கொள்ளைச் செயல்கள் எத்தனை? அவன் இழைத்த கொடுமைகள்தான் எத்தனை, எத்தனை?

கொடியவன் வீரப்பனால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 124! அவனால் அழிக்கப்பட்ட யானைகளோ ஆயிரத்திற்கும்மேல்! கடத்தப்பட்ட சந்தனக் கட்டைகளின் மதிப்போ பல கோடி ரூபாய்க்கும் அதிகம்! இந்தக் குற்றங்களுக்காக அவன் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளோ, தமிழகத்தில் 102, கர்நாடகாவில் 70 என்பதே தீயவன் வீரப்பன் எப்பேர்ப்பட்ட கொடுமைக்காரனாகத் திகழ்ந்தான் என்பதை எடுத்துக்காட்டும்.

இவற்றை எல்லாம் பொறுப்புள்ள எந்த அரசால்தான் சகித்துக் கொள்ள இயலும்? எனவேதான், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது, 1993-ஆம் ஆண்டில், பயங்கரக் கொள்ளைக்காரன் வீரப்பனும், அவனுடைய கூட்டாளிகளும் ஏற்படுத்தி வந்த இன்னல்களுக்கு ஒரு முடிவு கட்டும் வகையில், சிறப்பு அதிரடிப்படையை உருவாக்கினேன். எப்படியாவது வீரப்பனின் கொடுமைக்கு முடிவு கட்டிவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் சிறப்பு அதிரடிப்படைக்கு ஊக்கம் அளித்தேன். உற்சாகம் கொடுத்தேன். அவர்கள் சர்வ சுதந்திரமாகப் பணியாற்ற வாய்ப்பு அளித்தேன். எனது முந்தைய ஆட்சிக் காலம் முடிவடைந்த 1996-ஆம் ஆண்டு மே மாதம் வரையில், வீரப்பனைப் பிடிக்கும் முயற்சிகள் தொய்வு இன்றி தொடரப்பட்டன. இதன் விளைவாக, வீரப்பனின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டன; அவனுடைய கூட்டாளிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. செயல்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டான் வீரப்பன்.

ஆனால், 1996ஆம் ஆண்டு அமைந்த தி.மு.க. அரசு, சிறப்பு அதிரடிப் படையின் நடவடிக்கைகளை நிறுத்தி அதனைச் செயல் அற்றதாகச் செய்தது. 2001-ஆம் ஆண்டு நான் மீண்டும் தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை, சிறப்பு அதிரடிப்படை செயல்படா நிலைக்கு ஆளாக்கப்பட்டிருந்தது.

நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படைக்குப் புத்துயிர் அளித்து, அதை உயிர்த் துடிப்புள்ளதாக ஆக்கினேன். நான் 2001இல் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு தான், தமிழக சிறப்பு அதிரடிப்படைக்கும், கர்நாடக அதிரடிப்படைக்கும் சுமுகமான அணுகுமுறை ஏற்பட்டது. நவீன ரக துப்பாக்கிகள், புதிய வகைக் கருவிகள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றைச் சிறப்பு அதிரடிப்படைக்கு வழங்கினேன். உளவுத் தகவல்களைச் சரியாகவும், உடனுக்குடனும் பெற்றிட நுண்ணறிவுப் பிரிவைப் பலப்படுத்தினேன். இத்தனைக்கும் மேலாக, கொடியவன் வீரப்பனைப் பிடிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அதிரடிப்படை முற்றிலும் சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்தேன்.

இவ்வாறு வீரப்பனை வெற்றி கொள்வதற்கான ஒவ்வொரு அம்சத்தையும் தீர்க்கமாக ஆராய்ந்து, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படைக்குத் தேவையான வசதிகளை எல்லாம் வழங்கி, அதற்கான இலக்கையும் நிர்மாணித்துத் தந்தேன்.

வீரப்பனைப் பிடிப்பதற்காக நான் இவ்வாறு மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சிகள் கேலி செய்தன. ஆனால், நான் உறுதியாக இருந்தேன். அந்தப் பயங்கர கொள்ளையனைப் பிடிக்கும் முயற்சியில் நான் சற்றும் தளர்வடையவில்லை. தமிழ்நாடு காவல்துறையின் திறமையிலும், அதன் அர்ப்பணிப்பு உணர்விலும், அசைக்க முடியாத நம்பிக்கையோடு இருந்தேன்.

துணிவிலும், சாகசத்திலும் இணையற்ற தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை வீரர்கள், எனது அந்த நம்பிக்கைக்கு உயிர் கொடுத்தார்கள். அதனை உண்மையாக்கினார்கள்.

பசி நோக்காது, கண் துஞ்சாது, கருமமே கண்ணாய் கடமையிலே கருத்தாய்ப் பணியாற்றி தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையினர் இன்றைக்கு வெற்றி பெற்றுள்ளார்கள். இன்றைக்கு, இந்த

வெற்றிக்குப் பாராட்டு கிடைக்கிறது. ஆனால், அன்றைக்கு? பாராட்டு வேண்டாம். வெறும் ஊக்கம் கொடுத்திருந்தால் கூடப் போதும். ஆனால், அப்படிச் செய்யவில்லை சிலர், மாறாக, ஏளனம் செய்தார்கள்! எள்ளி நகையாடினார்கள். வீரப்பனைப் பிடிக்க மேற்கொண்ட அனைத்து நடவடிக்கை களையும் கேலியும், கிண்டலும் செய்தார்கள்! இதற்கு எல்லாம் பதிலாக, 2003-2004ஆம் ஆண்டுக்கான காவல் துறை மானியக் கோரிக்கை மீது சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதங்களுக்குப் பதில் அளிக்கும் போது, நான் எனது இலட்சியத்தைத் தெளிவாக வெளியிட்டேன்.

“வீரப்பனைப் பிடிப்பது ஒன்று தான் பாக்கி. அதையும் விரைவில் செய்து முடிப்போம்” என்று அன்றைக்கு சட்டமன்றத்தில் நான் முழக்கமிட்டேன். அன்று நான் சொன்னதைச் சொன்னபடி செயல்படுத்தி, தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் வீரப்பனின் கொடூர வரலாற்றுக்கு ஒரு முடிவு கட்டினார்கள்.

இதற்கு அடிப்படை, தமிழ்நாடு காவல் துறையின் திறமையிலும், அதன் அர்ப்பணிப்பு உணர்விலும் எனக்கு எப்போதும் இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைதான்! தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையினரின் ஆற்றல் மீது யார் வேண்டுமானாலும் நம்பிக்கை இழந் திருக்கலாம். அவர்கள் மீது அவர்களுக்கே கூட ஒரு கால கட்டத்தில் நம்பிக்கை குறைந்து போய் இருக்கலாம். ஆனால், உடல் தகுதி, மன உறுதி ஆகியவற்றின் அடிப்படையில் வீரப்பனைப் பிடித்தே தீருவது என்னும் அவர்களது ஆர்வத்தினை அடையாளம் கண்டு சிறப்பு அதிரடிப்படைக்கான வீரர்களைத் தெரிவு செய்த எனக்கு மட்டும், சிறப்பு அதிரடிப் படையினர் மீது எள்ளளவும் நம்பிக்கை குறைய வில்லை. தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை வீரர்களும் அந்த நம்பிக்கைக்கு உயிர் கொடுத்து, கடும்பசிக்கும், கொடும் நோய்க்கும் மனம் தளராது, கொத்துகிற பாம்புக்கும், கொட்டுகிற தேளுக்கும் பயப்படாது, அடாத பணிக்கும், விடாத மழைக்கும் அயராது, குள்ளநரி வீரப்பனின் கொடுமைகளுக்கெல்லாம் கொஞ்சமும் அஞ்சாது, 2004 அக்டோபர் 18-ஆம் நாள் கொடுமையைக் கொன்று, அமைதியை மீட்டுத் தந்தார்கள்.

சிறப்பு அதிரடிப்படையின் தலைவர் திரு.கே.விஜயகுமார், தன்னுடைய வீர உணர்வையும், விழுமிய திறத்தையும் வெளிப்படுத்தி, அதிரடிப்படை வீரர்களின் ஆற்றலை ஒருமுகப்படுத்தி, மதி நுட்பத்துடன் சிறந்த உத்திகளைக் கையாண்டு, சரித்திரத்தில் இடம் பெறும் இந்த மாபெரும் வெற்றியை ஈட்டித் தந்தார்.

சிங்கமாக இருந்தால் அதன் குகைக்குள்ளே சென்று அதனை சந்திக்கலாம். அங்கே வீரம் இருந்தால் போதும். அதுவே காட்டு எலியாக இருந்தால் அதனை அதன் வளையிலிருந்து வெளிக் கொணர்ந்து பொறியிலே சிக்க வைத்துத் தான் பிடிக்க வேண்டும். அங்கே வீரத்துடன் விவேகமும், தந்திரமும் வேண்டும். அப்படி காட்டுக்குள்ளே இருந்த வீரப்பனை நாட்டுக்குள் வரவழைத்து, சரண் அடைந்திட ஒன்றுக்கு இரண்டு முறை எச்சரிக்கை விடுத்து, அதனை வீரப்பன் ஏற்றுக் கொள்ளாதது மட்டும் அல்ல, 124 உயிர்களைப் பறித்த தனக்கு இவர்கள் எம்மாத்திரம் என்ற துணிவில் துப்பாக்கியால் சுட்ட போது, துள்ளி வரும் தோட்டாக்களுக்கு அஞ்சிடாமல் வீரத்துடன் திருப்பிச் சுட்டு, வீரப்பனின் கொடுமைகளுக்கு தமிழ் நாடு சிறப்பு அதிரடிப் படைத் தலைவரும், காவல்துறை கூடுதல் இயக்குநருமான திரு. விஜயகுமாரும் அவரது குழுவினரும் ஒரு முடிவு கட்டினார்கள்.

தங்களது குடும்பங்களை விட்டு பல ஆண்டுகள் பிரிந்து, தங்களது இல்லத்தின் வசதிகளைத் துறந்து, தங்களது பாதுகாப்பை பொருட்படுத்தாது அபாயகரமான பணியை விரும்பி மேற்கொண்டு, தமிழகம் மட்டும் அல்லாமல், கர்நாடக மக்களும் அமைதியுடன் வாழ வழி அமைத்துக் கொடுத்தமைக்காக, தமிழக மக்களின் நன்றி உணர்வை பிரதிபலிக்கும் வகையில், அதிரடிப்படைத் தலைவர் முதலாக, அதன் கடைசி காவலர் வரை - அதிகாரிகள் முதலாக, சமையல்காரர் மற்றும் ஏவலர் வரை - அனைவருக்கும் ஒருபடி பதவி உயர்வு, தலா 3 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு, அவர்கள் விரும்பிய இடத்தில் வீட்டு மனை ஆகியவற்றை தமிழக அரசின் சார்பில் பரிசாக வழங்கி கௌரவப்படுத்தினேன்.

வீர சாகசச் செயல்கள் ஆற்றியமைக்கும், வீர விழுப்புண் பெற்றமைக்கும், அந்தப்பணியில் பங்கேற்றமைக்கும் மனமுவந்து பாராட்டி தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை அணிவித்தேன். தற்போது பணியாற்றுபவர்கள் மட்டும் அல்லாமல், இதற்கு முன்னர் சிறப்பு அதிரடிப்படையில் இருந்து வீரப்பனைப் பிடிப்பதற்கான அடித்தளம் அமைத்துக் கொடுத்த உயர் அதிகாரிகளையும், காவலர்களையும் மறந்து விடாமல், அவர்களுக்கும் தகுந்த மரியாதை செய்து கௌரவித்தேன். தமிழ்நாடு சிறப்பு

அதிரடிப்படையினருடன் இணைந்து பணியாற்றிய வனவர் முதல் வனத் தோட்டக் காவலர் வரையிலான வனத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கும் ஒரு படி பதவி உயர்வு, ரொக்கப் பரிசு ஆகிய பரிசுகள் வழங்கியும், வீரப்பதக்கங்கள் அணிவித்தும் கௌரவித்தேன்.

தமிழகக் காவல் துறைக்குப் பெரும் புகழைப் பெற்றுத் தந்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையினருக்கு, தமிழக மக்களின் நன்றி உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில், பார் வியக்கும் வண்ணம் ஒரு பாராட்டு விழா நடத்தி, அந்த விழாவிலே இந்தப் பரிசுகளை எல்லாம் அவர்களுக்கு அளித்து, அதில் அவர்களது குடும்பத்தினர்கள் அனைவரையும் கலந்துகொள்ள வைத்து, அறுசுவை விருந்து தந்து பாராட்டி மகிழ்ந்தேன்.

அது மட்டுமின்றி, இளைய தலைமுறையினர் வீர உணர்வு பெற்று இந்த நாட்டுக்காகவும், இந்த நாட்டு மக்களுக்காகவும், தன்னலம் கருதாது உழைத்திட – தங்களது வாழ்க்கையில் தீரச் செயல்கள் புரிந்திட – தூண்டுகோலாகத் திகழும் வகையில், வீரப்பனைப் பிடிக்கின்ற பணியில் ஈடுபட்டு தங்களது இன்னுயிரை இழந்த தமிழக சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்களின் வீரத்தை நினைவு கொள்ளும் வகையில் நினைவுச் சின்னம் ஒன்றினை, வண்டலூர் அருகே ஊனமாஞ்சேரியில் புதிதாக அமைக்கப்பட உள்ள காவலர் பயிற்சிக் கழக வளாகத்தில் நிறுவிட ஆணையிட்டேன்.

இவ்வாறு தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை, அர்ப்பணிப்பு உணர்வுடன் போராடி, உலகளாவிய புகழைப் பெற்றுத் தந்தது. தமிழகக் காவல் துறை தரணியில் தன்னிகரற்ற காவல்துறை என்ற பெருமையைப் பெற்றுத் தந்தது.

இந்த வெற்றி, தமிழகக் காவல் துறை மீது, நான் வைத்திருக்கின்ற அசைக்க முடியாத நம்பிக்கைக்குக் கிடைத்த வெற்றி!

இந்த வெற்றி, எதிர்க்கட்சியினரின் ஏகடியங்களை ஒரு பொருட்டாக மதிக்காமல், வீரப்பனைப் பிடிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்ட எனது மன உறுதிக்கும், சிறப்பு அதிரடிப்படையின் வீரத்திற்கும், விவேகத்திற்கும் கிடைத்த வெற்றி.

இந்த வெற்றி, சொன்னதைச் சொன்னவாறு செய்து முடித்த, எனது அரசிற்குக் கிடைத்த தனிப்பெரும் வெற்றி என்று கூறி அமைகிறேன். □

இசை அரசி
எம்.எஸ். சுப்புலட்சுமி மறைவு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
இரங்கல் செய்தி – 12.12.2004

இசை அரசி திருமதி. எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்து நான் அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் அடைந்தேன்.

நம் காலத்தில் கர்நாடக இசையை வளர்த்த பெருமக்களில் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களும் ஒருவர். எளிமை மற்றும் அடக்கத்தின் வடிவமாக விளங்கியவர் அவர். அவருடைய இசையின் இனிமையும், ஆன்மீகப் பண்பும் இலட்சக்கணக்கான இந்தியர்களுக்கு இறைவனோடு தொடர்பு கொள்ளும் இனிய வாய்ப்பை வழங்கின. மதுரை மாநகரில் பிறந்த இந்தத் தமிழகத்தின் தவப்புதல்வி, தமது தெய்வீக இசையின் உலகார்ந்த தன்மையால் புவி முழுமைக்கும் சொந்தமானவர். மகிழ்ச்சி, பக்தி மற்றும் தேச பக்தி ஆகிய உணர்வுகளை உருவாக்கும் ஆற்றல் பெற்றவை அவருடைய கீதங்கள். அந்த கீதங்களின் இனிமையைக் கேட்டுக் கேட்டு வளர்ந்தது அண்மைக் கால இந்தியத் தலைமுறை. அவருடைய குரலின் ஆன்மீக அழகும், உள்ளம் ஒன்றி அவர் பாடும் பாங்கும், அவருடைய கீர்த்தனைகளுக்கும், பஜனைப் பாடல்களுக்கும், தோத்திரப் பாடல்களுக்கும் ஒப்புவமை இல்லாத ஒரு புனிதத்தை அளித்தன. அது, சாதி, மதம், மொழி, வயது, ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு ஆகியவற்றை எல்லாம் கடந்து மக்களை மனம் உருக வைத்தது.

70 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட நீண்டதொரு இசை வாழ்வு கொண்ட திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள், பத்ம பூஷண், பத்ம விபூஷண் ஆகிய விருதுகள் முதல் ரேமன் மக்சாசே மற்றும் பாரத ரத்னா விருது வரை பல்வேறு பெருமைக்குரிய விருதுகளைப் பெற்றவர். எத்தனை விருதுகள் பெற்றிருந்தாலும், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி என்னும் பெயர் 'கருணை' என்றும் 'தர்மம்' என்று பொருள்படும் என்று சொல்லப்படும் அளவுக்கு அவர் பெற்றிருக்கும் உலகளாவிய அங்கீகாரத்திற்கு ஈடாகாது. தான் ஈட்டிய பொருளை இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள அற நிறுவனங்களுக்கு வழங்கியவர் அவர்.

அவருடைய இழப்பு ஈடு செய்ய முடியாதது. அவருடைய இடம் இன்னொருவரால் நிரப்ப இயலாதது. உலகம் ஒரு பெரிய இசை அரசியை இழந்து விட்டது. அதை விட ஓர் உயரிய மனிதரை இழந்து விட்டது. ★

சிறப்பான திட்டம், சிறப்பான ஈடுபாடு, சிறப்பான செயல்பாடு இவற்றால் சிறப்பான சாதனை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அழகுற அமைந்த தேனி மாவட்டத்தில், எனது தொகுதியான ஆண்டிபட்டியில் உள்ள திருமலாபுரத்தில், அமைக்கப்பட்டு உள்ள தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை துவக்கிவைத்து, வேலூர் மற்றும் கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கான புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து, தேனி மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, உங்களுடன் சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள கிடைத்த இந்த இனிய வாய்ப்புக்காக அகமிக மகிழ்கிறேன்.

நான் தேனி மாவட்டத்திற்கு அரசு விழாக்களில் கலந்து கொள்வதற்காக, நான்காம் முறையாக இங்கு வந்துள்ளேன். முதலமைச்சர் என்ற முறையில், தமிழ்நாட்டில் உள்ள எல்லா தொகுதிகளும் எனது தொகுதிதான் என்றாலும், இந்தத் தொகுதி எனது சொந்தத் தொகுதி என்பதால், ஆண்டிபட்டித் தொகுதி மீது நான் கூடுதலாக அக்கறை கொள்வது இயல்புதானே! ஆகவே தான், என் அன்பிற்குரிய தொகுதி மக்களை அடிக்கடி பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாக, மீண்டும் இந்த அழகிய மாவட்டத்திற்கு நான் வருகை புரிந்துள்ளேன்.

16.9.2002 அன்று ஆண்டிபட்டி தொகுதியில் மேல்மங்கலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தேனி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி ஆண்டிபட்டியில் அமையும் வகையில், அதன் முன்னோடி நடவடிக்கையாக அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்திலேயே மருத்துவமனை கட்ட நான் அடிக்கல் நாட்டினேன். 4 மாடிகளுடன் கூடிய இந்த மருத்துவமனையும், மருத்துவக் கல்லூரிக்கான கட்டடங்களும் 12 கோடி ரூபாய் செலவில் பாங்குடன் கட்டி முடிக்கப்பட்டு, இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

300 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனையில் ஆய்வுக்கூடங்கள், மருந்துக் கிடங்கு, நிருவாக அலுவலகங்கள், நவீன வசதிகளுடன் கூடிய சமையலறை முதலான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் 46 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கான கூடுதல் கட்டடங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். மேலும், உபகரணங்களுக்காக 15 கோடியே 39 இலட்சம் ரூபாய் வழங்கி ஆணையிட்டுள்ளேன். அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய தேனி அரசு மருத்துவக் கல்லூரி 2005–2006ஆம் கல்வி ஆண்டு முதல் இயங்கத் தொடங்கும் என்பதையும், ஆண்டுதோறும் 100 மாணவ மாணவியர் மருத்துவக் கல்வி பயில வாய்ப்பாக இது அமையும் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளதன் முக்கிய நோக்கமே ஆண்டிபட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்து வரும் ஏழை எளிய மக்கள்



பயன் அடைய வேண்டும் என்பதே ஆகும். இன்று நான் தொடங்கி வைத்துள்ள புதிய மருத்துவமனை, தேனி மாவட்ட மக்களின் உடல் நலன் காப்பதில் உறுதுணையாக இருக்கும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த மருத்துவக் கல்வியின் மூலம் சிறந்த மருத்துவர்களை உருவாக்கினால்தான், அரசு மருத்துவமனைகளில் சீரிய மருத்துவ வசதிகளை அளிக்க முடியும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், மருத்துவக் கல்லூரிகளுக்கு உரிய வசதிகளை வழங்குவதற்கு எனது அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

வேலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட 144 கோடியே 21 இலட்சம் ரூபாயும், இந்த மருத்துவக் கல்லூரிகளுக்கு உபகரணங்கள் மற்றும் அறைக் கலன்கள் வாங்க 38 கோடியே 72 இலட்சம் ரூபாயும் வழங்கி உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் நான் மிகுந்த மன நிறைவு அடைகிறேன். ஒரே ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளுக்கு இவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்தது தமிழகத்தின் வரலாற்றில் இதுவே முதன் முறை ஆகும்.

மருத்துவரின் பணி மகத்தானது. அதற்கு இணையே இல்லை.

நல்லவன் ஆனாலும், கெட்டவன் ஆனாலும், புண்ணியவான் ஆனாலும், பாவி ஆனாலும், மருத்துவர் வேற்றுமை பாராட்டக்கூடாது.

குற்றவாளியானாலும், கொலையாளியானாலும், பேத பாவம் பார்க்காமல் பணியாற்ற வேண்டியது ஒரு மருத்துவரின் கடமையாகும்.

“கடமையைச் செய்யவே உனக்கு அதிகாரம்” என்பது பகவத் கீதையின் வாசகம். இந்த பகவத் கீதை வாசகம் மருத்துவர்களுக்கு மிகவும் பொருந்தும். எந்தச் சூழ்நிலையிலும், தங்கள் பணியைச் சிறப்புறச் செய்ய வேண்டியது அவர்கள் கடமை.

அப்படி கடமையே கண்ணாக இருக்கும் மருத்துவர்களை – எந்தவித வித்தியாசமும் பாராமல் யாவருக்கும் பணி ஆற்றும் மருத்துவர்களை – நமது மருத்துவக் கல்லூரிகள் உருவாக்க வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. எனது இந்த எதிர்பார்ப்பை மருத்துவ

மாணவ மாணவியர்களும், ஆசிரியர்களும் நிச்சயம் நிறைவேற்றுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் எப்போது வந்தாலும் வெறும் கையோடு வந்தது இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். கை நிறைய திட்டங்களோடும், நலத் திட்ட உதவிகளோடும் உங்களை ஒவ்வொரு முறையும் நான் சந்தித்திருக்கிறேன்.

தேனி மாவட்டத்தில் நான் முன்பு கலந்து கொண்ட மூன்று அரசு விழாக்களிலும், 86 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பில் 2,728 முடிவுற்ற பணிகளை துவக்கிவைத்து, 263 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 2,156 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 10 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை 17,289 பயனாளிகளுக்கு வழங்கியுள்ளேன். இவற்றின் மொத்த மதிப்பு 360 கோடியே 27 இலட்சம் ரூபாய் என்பதை நினைவுபடுத்துவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய தினம், இந்த இனிய விழாவில், பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாக, 152 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 349 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்துள்ளேன். 64 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 274 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன். மேலும், பல்வேறு துறைகளின் சார்பாக, 6 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை 12,159 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் ஆண்டிபட்டி தொகுதியில் மட்டும் 103 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 124 பணிகளைத் திறந்து வைத்துள்ளேன். 55 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 136 பணிகளுக்கு அடிக்கல் நாட்டி உள்ளேன். மேலும், 1 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 2,831 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி மாவட்டத்தில் வேளாண்மை தலையாய தொழிலாக விளங்குகிறது. வேளாண் தொழில் சிறக்க நீர் வளமும், பாசன வசதியும் நன்கு அமைய வேண்டும். தேனி மாவட்டத்தில் பாசன வசதியைப் பெருக்குவதற்காக ராயப்பன்பட்டி கிராமத்தின் அருகில் சண்முகா நதியின் குறுக்கே 14 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சண்முகா நதி நீர்த் தேக்கத் திட்டம் உருவாக்கப்பட்டு இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 79.57 மில்லியன் கன அடி கொள்ளளவு உள்ள காட்டாற்று நீர் தேக்கப்பட்டு, 18 கிலோ மீட்டர் நீளமுள்ள வாய்க்கால் மூலம் 8 கிராமங்களில் உள்ள 1,678 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ஆண்டிபட்டி வட்டத்திலும், உத்தம பாளையம் வட்டத்திலும், 1 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நான்கு புதிய குளங்கள் அமைக்க இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

மக்களுடைய குடிநீர்த் தேவைகளைப் போர்க்கால அடிப்படையில் நிறைவு செய்வதை எனது அரசு தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில், ஏற்கெனவே இம்மாவட்டத்தில் 10 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு கூட்டுக் குடிநீர் மற்றும் மின்விசை குடிநீர்த் திட்டங்கள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. 15.4.2002 அன்று ஆண்டிபட்டியில், 74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆண்டிபட்டி நகரம் மற்றும் தேனி, மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த 406 கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் ஆண்டிபட்டி – சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நான் அடிக்கல் நாட்டினேன். அத்திட்டம் நிறைவேற்றப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டதில் நான் மனநிறைவு அடைகிறேன். இதுவன்றி 8 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டங்களைத் திறந்து வைத்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நிருவாகத்தைச் செம்மைப்படுத்தவும், அரசுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தவும், மக்கள் தேவைகளை அலுவலர்கள் உணர்வு பூர்வமாகப் புரிந்து செயல்படவும், பொதுமக்களிடம் அலுவலர்களும், பணியாளர்களும் — நல்ல அணுகுமுறையினை வளர்த்துக் கொள்வதற்கும், அரசு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பது இன்றியமையாதது ஆகும். ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் நிதிஉதவியுடன் 40 இலட்சம் ரூபாய்

மதிப்பீட்டில், தேனி மாவட்டத்தில் அரசு அலுவலர்களுக்காக செயல்படுத்த உள்ள பயிற்சித் திட்டத்தை இன்று துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதனால் இம்மாவட்டத்தைச் சேர்ந்த 5,460 அலுவலர்கள் திறன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

எந்தச் செயலையும் சிறப்பாகச் செய்ய வேண்டும்; அந்தச் செயல்பாட்டில் மற்றவர்களுக்கும் நமக்கும் வித்தியாசம் இருக்க வேண்டும் என்பதுதான் எனது இலட்சியம்.

வெற்றியாளர்கள் யார்?

வித்தியாசமான செயல்களைச் செய்பவர்களா? இல்லை!

வித்தியாசமாக செயல்களைச் செய்பவர்களே வெற்றியாளர்கள்.

ஒவ்வொரு செயலிலும் அந்தத் தனித்துவ முத்திரை இருக்க வேண்டும் என்று உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் நினைக்கிறேன்.

வழக்கமான முடிவுகள் மற்றும் வழக்கமான செயல்பாடுகளால் நாம் எதிர்பார்க்கும் புதுமையைக் கொண்டு வர முடியாது.

சிறப்பான திட்டம், சிறப்பான ஈடுபாடு, சிறப்பான செயல்பாடு, இந்த மூன்றால் மட்டுமே சிறப்பான சாதனையை நாம் செய்திட இயலும் என்பது எனது நம்பிக்கை.

பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்றைய தினம் நானே எனது கரங்களாலேயே வழங்கவேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தாலும் நேரம் போதாது என்பதை நீங்களே அறிவீர்கள். ஆகவே, நலத்திட்ட உதவிகளை 10 பேர்களுக்கு மட்டும் இந்த மேடையில் நான் வழங்க இருக்கின்றேன். மற்ற பயனாளிகளுக்கு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும் இங்கேயே இப்போதே வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெறுகின்ற நீங்கள், அவற்றை உங்கள் வாழ்வின் ஆதாரமாகப் பயன்படுத்தி உண்மையான உழைப்பால் உயர்வு பெற்று, செய்கின்ற தொழில்களில் மென்மேலும் உயரவேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இந்த விழா சீரோடும், சிறப்போடும் நடைபெற காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுனீல் பாலீவால் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

8.12.2004 அன்று தேனி மாவட்டம், ஆண்டிபட்டியில் நடைபெற்ற தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தொடக்க விழா, வேலூர், கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கான புதிய கட்டடங்கள் திறப்பு விழா மற்றும் தேனி மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடக்க விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை

உழைப்பும், உள்ளத்தில் ஊக்கமும் இருந்தால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறலாம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

இன்று சீரோடும் சிறப்போடும் நடைபெறும் கிருஷ்ணகிரி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதிலும் என் அன்புக்குரிய மக்களாகிய உங்களைச் சந்திப்பதிலும் உங்களோடு சில சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்வதிலும் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அண்மையில் தொடங்கப்பட்ட காரணத்தால் கிருஷ்ணகிரி மாவட்டம் தமிழகத்தின் கடைக்குட்டி மாவட்டம் என்ற தகுதியைப் பெறுகிறது. புதிய மாவட்டம் என்ற தகுதியைப் பெற்றது அண்மையில் என்றாலும் இந்தப் பகுதி வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பெருமை படைத்த பழம் பெரும் பகுதி ஆகும் என்பதை நாம் மறந்து விட இயலாது.

தமிழகத்தின் முப்பதாவது மாவட்டம் என்ற சிறப்பினைப் பெற்ற கிருஷ்ணகிரி மாவட்டத்தை நான் 9.2.2004 அன்று தொடங்கி வைத்தேன். அவ்வாறு தொடங்கி வைத்து 10 மாத காலத்தில் மீண்டும் உங்களைச் சந்திப்பதற்கு உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் வந்திருக்கிறேன்.

மக்கள்தானே ஜனநாயகத்தின் ஆணி வேர்! அந்த மக்களுக்காக மாபெரும் திட்டங்களை உருவாக்குவதும், மக்கள் நலப் பணிகளில் முனைப்போடு ஈடுபடுவதும் ஒரு மக்கள் அரசின் கடமை என்பது உங்கள் அன்புச் சகோதரியாகிய எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

வெளிச்சம், விழிகளுக்கு எப்படி முக்கியமோ –

காற்று, நுரையீரலுக்கு எப்படி முக்கியமோ –

அன்பு, இதயத்திற்கு எப்படி முக்கியமோ –

அப்படி சுதந்திரம் ஆன்மாவுக்கு முக்கியம்!– என்று உலகச் சிந்தனையாளர்களில் ஒருவராகிய மேலை நாட்டு அறிஞர் இங்கர்சால் கூறுவார்.

What light is to the eyes - what air is to the lungs - what love is to the heart - liberty is to the soul of man! என்பது அவரது வாசகம்.

அந்தச் சுதந்திரத்தை மக்களாட்சிதான் மனிதனுக்கு வழங்குகிறது.

அந்த மக்களாட்சித் தத்துவத்துக்கு அடிப்படை எது?

மக்களால் உருவாக்கப்படும் அரசுக்கும், மக்களுக்கும் இடையே இருக்கும் உறவுதான் அந்த அடிப்படை.

மக்களால், மக்களுக்காக உருவாக்கப்படும் மக்கள் அரசு, எந்த எந்த வழிகளில் எல்லாம் மக்களுக்கு நன்மை செய்யலாம் என்று சிந்தித்தபடி இருக்க வேண்டும்.

இந்த ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவதில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு எப்போதும் முன் நிற்கிறது.

மாவட்டப் பரப்பு பெரிதாக இருக்கும்போது மக்களை நிருவாகம் அணுகுவதற்கும், மக்கள் நிருவாகத்தை அணுகுவதற்கும் அதிக காலம் பிடிக்கும். எனவே, மக்களுக்கும் நிருவாகத்துக்கும் இடையே நெருக்கத்தை வளர்க்க மாவட்டங்கள் சிறியவையாகவே இருக்க வேண்டியது அவசியம்.

இந்த அவசியத்தை நன்கு உணர்ந்த நான் கிருஷ்ணகிரியைத் தலைநகராகக் கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தை உருவாக்கினேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் புதியதாகத் துவக்கி வைத்து உரையாற்றிய போது அரசு அலுவலகங்கள் பல்வேறு இடங்களில் வாடகைக் கட்டடங்களில் செயல்படுவதால் மக்கள் சிரமத்திற்கு உள்ளாகக் கூடாது என்ற நோக்கில் மாவட்டப் பெருந்திட்ட வளாகம் அமைப்பதாக அறிவித்து அதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தேன். அதன்படி கிருஷ்ணகிரி – பெங்களூர் நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள 136.35 ஏக்கர் நிலத்தில் பெருந்திட்ட வளாகம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, 10 கோடி ரூபாய் செலவில் கட்டுமானப் பணிகளைத் துவக்க இன்று அடிக்கல் நாட்டுவதில் நான் பெருமிதம் கொள்கின்றேன்.

இந்தப் பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட ஆட்சியரின் இல்லம் மற்றும் முகாம் அலுவலகம், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், காவலர் அணிவகுப்பு மைதானம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், பிற அரசு அலுவலகங்கள், சுற்றுலா இல்லம், குடியிருப்புகள் போன்றவை கட்டப்படும். இதனால் பொதுமக்கள் வெவ்வேறு இடங்களில் அரசு அலுவலகங்களைத் தேடி அலைய வேண்டிய அவசியம் இருக்காது; ஒரே இடத்தில் பல்வேறு அலுவலகங்களில் தங்களது பணிகளை நிறைவேற்றிக் கொள்ள இயலும் என்பதை மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக் கொள்கிறேன். முதல் கட்டமாக, 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகமும், 2 கோடி ரூபாய் மதிப்பில் சுற்றுலா இல்லமும், 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்ட ஆட்சியர் இல்லம் மற்றும் முகாம் அலுவலகமும் கட்டுவதற்கு இன்று அடிக்கல் நாட்ட உள்ளேன்.

9.2.2004 அன்று இதே இடத்தில் இம்மாவட்டத்தின் துவக்க விழா நடைபெற்றது. அன்றைய தினம் அந்த விழாவில், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 23 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சிப் பணிகளைத் துவக்கி வைத்தும், 25 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் வளர்ச்சிப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியும் உள்ளேன்.

மீண்டும் இன்று, இந்த இனிய விழாவில் கிருஷ்ணகிரி மாவட்டத்து மக்கள் பயன் அடையும் வண்ணம், பல்வேறு அரசுத் துறைகள் சார்பாக, 26 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 1,200 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைக்கிறேன். 59 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 548 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்ட உள்ளேன். மேலும் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாக, 13 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை 10,754 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன். ஆக மொத்தம், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 99 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை நான் இன்று வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டங்களுக்கு நேரில் சென்று நான் மக்களைச் சந்திப்பதைக் கூடத் தாங்கிக் கொள்ள இயலாத மகானுபாவர்கள் தமிழகத்தில் உண்டு. இவர்களைப் பற்றி நினைக்கின்ற போது ஒரு கதை தான் எனக்கு நினைவுக்கு வருகிறது.



பாவம் செய்த ஒருவன் நரகத்துக்கு அனுப்பப்பட்டான். நரகப் பள்ளத்தாக்கில் இருந்து வந்த அவன் நடந்து கொண்டிருந்தபோது, பாதையில் ஒரு சிலந்திப் பூச்சி இருந்ததைப் பார்த்து, அதை மிதிக்காமல் கவனமாகச் சென்றான். பிற உயிரைக் கொல்லாமல் இருந்ததற்காக அவன் கணக்கில் கொஞ்சம் புண்ணியம் சேர்ந்தது. உடனே அந்தப் புண்ணியத்திற்கான பயனும் கிடைத்தது. நரகத்தில் இருந்து மேலே வருமாறு அவனை மேலே இருந்து அழைத்தார்கள்!

'எப்படி மேலே ஏறி வருவது?' என்று அவன் கேட்டான்.

'இதோ தொங்குகிறது பார் சிலந்தி இழை; இதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வா' என்று சொன்னார்கள்.

அவனுக்கோ அவ நம்பிக்கை! 'இவ்வளவு மெல்லிசாக இருக்கும் இந்தச் சிலந்தி இழை நம்மைத் தாங்குமா? கையால் தொட்டதும் அறுந்து போகுமே இதை நம்பி எப்படி மேலே ஏறிச் செல்வது?' என்று யோசிக்கத் தொடங்கினான்.

அவனது தயக்கத்தைப் பார்த்து மேலே இருந்தவர்கள் 'தைரியமாக வா; இழை அறுந்து விடாது' என்று சொன்னார்கள்.

அவனும் சிலந்தி இழையைப் பிடித்து மேலே பாதி வரை ஏறி வந்து விட்டான். அப்போது திடீரென்று கீழே பார்த்தான். அவனைப் போலவே பல பேர் சிலந்தி இழையைப் பிடித்து மேலே வந்து கொண்டிருந்தார்கள்.

அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'புண்ணியம் செய்தது நான்! பலனைப் பெற வேண்டியது நான்! இவர்கள் எல்லாரும் வரப் பார்க்கிறார்களே!' என்று கோபித்து, கீழே இருந்தவர்களைக் காலால் எட்டி

உதைத்தான். எல்லாரும் கீழே விழுந்தார்கள்; அவனும் கூட திரும்பவும் நரகத்துக்குள் விழுந்து விட்டான். என்ன காரணம்?

எப்போது அவன் பொறாமைப்பட்டானோ, எப்போது சுயநலத்தால் மற்றவர்களை எட்டி உதைத்துக் கீழே தள்ளினானோ, அப்போதே சிலந்தி இழையும் அறுந்து விழுந்தது. அந்தச் சுயநலக்காரனும் கீழே விழுந்தான்.

சுயநலக்காரர்களுக்குப் பொறாமை எப்போதும் அதிகம். அப்படிப்பட்ட சுயநலக்காரர்களுக்குத் தமிழ்நாட்டில் பஞ்சமே இல்லை. அவர்களிடம் பொறாமைக்கும் பஞ்சம் இல்லை.

அப்படிப்பட்ட பொறாமைக்காரர்களின் வஞ்சகங்களை எல்லாம் பொருட்படுத்தாமல், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் மாவட்டந்தோறும் பயணம் செய்து, அந்தந்தப் பகுதிகளின் சிறப்புத் தன்மைகளுக்கு ஏற்பத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் தட்ப வெப்ப நிலை மற்றும் மண் வளம் போன்றவை தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்கு மிகவும் உகந்ததாக உள்ளன. இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்ப்பதில் மலர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஒசூர், தென்கனிக் கோட்டை பகுதிகள் மலர்ச் சாகுபடிக்கு மிகவும் ஏற்றவையாக உள்ளன. இங்குள்ள 14 தனியார் மலர் உற்பத்தி நிலையங்களில், பசுமை இல்லங்களில் ரோஜா, கார்னேஷன், ஜெர்பரா (Gerbera) போன்ற கொய் மலர்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் ஆண்டுக்கு 25 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. இம்மாவட்டத்தில் மலர் உற்பத்தியால் கிடைக்கும் பொருளாதார வாய்ப்பைக் கருத்தில் கொண்டு, ஒசூரைத் தலைமையிடமாகக் கொண்டு மலர் ஏற்றுமதி மண்டலத்தை அமைக்க நான் உத்தரவிட்டேன். அதன் அடிப்படையில், ஒசூர் ஏற்றுமதி மண்டலத்தில் 'டான்ஃப்ளோரா' அடிப்படைக் கட்டமைப்புப் பூங்கா – TANFLORA Infrastructure Park - 245 ஏக்கர் பரப்பில் நிறுவிட, 25 கோடி ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பூங்காவில் தனியார் மலர்ச் சாகுபடி நிறுவனங்கள் 50 எக்டேர் பரப்பில் பசுமை இல்லங்கள் அமைத்து ரோஜா மலர்களை உற்பத்தி செய்து 'டான்ஃப்ளோரா' நிறுவனத்தின் மூலம் ஏற்றுமதி செய்யும்.

'டான்ஃப்ளோரா' நிறுவனம் 3 எக்டேர் பரப்பளவில் மாதிரி அலகுகள் – model units – அமைக்க உத்தேசித்து, தற்போது ஒரு எக்டேர் பரப்பில் பணிகள் முடிக்கப்பட்டு ரோஜா மலர்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

'டான்ஃப்ளோரா' நிறுவனத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 6 கோடியே 75 இலட்சம் பூக்கள் உற்பத்தி

செய்து ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஒசூர் மற்றும் தென்கனிக்கோட்டையிலுள்ள தனியார் கொய் மலர்ச் சாகுபடியாளர்களிடமிருந்து ஆண்டிற்கு 2 கோடியே 70 இலட்சம் மலர்கள் ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் இம்மாவட்ட மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். எனவே இங்குள்ள மலர்ச் சாகுபடியாளர்கள் ஏற்றுமதி வாய்ப்புள்ள மலர்களை உற்பத்தி செய்து பயன்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மலர்ச் சாகுபடியில் மிக்க சிறப்புடன் விளங்கும் இந்த மாவட்டத்தில், ஒசூர் நகரத்தில் நடைபெற இருக்கும் 1–ஆவது சர்வதேச மலர்க் கண்காட்சியினை Video Conferencing மூலமாக இன்று துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது எனது அரசின் குறிக்கோளாகும். கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 10 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகள் என்னால் ஏற்கெனவே முந்தைய அரசு விழாக்களில் திறந்து வைக்கப்பட்டன. இன்றைய தினம் மேலும் 12 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்காக அவற்றைத் திறந்து வைப்பதிலும், 2 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பில் கிருஷ்ணகிரி நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கும், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சின்ன காவாப்பட்டி மற்றும் 9 வழியோர கிராமங்களின் கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுவதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உழைப்பும், உள்ளத்தில் ஊக்கமும் இருந்தால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறலாம். அப்படி வெற்றி பெற்றவர்களுடைய வரலாறுகள்தான், இன்றைக்கு உலக வரலாற்றையே உருவாக்கி இருக்கின்றன.

அமெரிக்க குடியரசுத் தலைவராக இருந்த ஆப்ரகாம் லிங்கன் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்.

அவருக்குப் படிப்பதில் அபார ஆர்வம் இருந்தது. ஆனால் புத்தகம் வாங்கக் கூட அவரிடம் பணம் இல்லை. யாரிடமாவது புத்தகத்தை இரவல் வாங்கிப் படிப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒரு நாள், ஒரு நண்பரிடம் புத்தகம் வாங்கி பின்னால் படிக்கலாம் என்று வீட்டுக் கூரையில் செருகி வைத்திருந்தார். அன்றைக்குத் திடீரென்று மழை பெய்தது. புத்தகம் முழுவதும் நனைந்து பாழாய்ப் போய் விட்டது. நண்பரிடம் ஆப்ரகாம் லிங்கன் விஷயத்தைச் சொன்ன போது, நண்பருக்குப் பயங்கரமான கோபம் வந்தது. 'புத்தகத்திற்குரிய விலையைக் கொடு' என்று கேட்டார். 'கொடுப்பதற்குப் பணம் இல்லை' என்று மிகுந்த வருத்தத்தோடு லிங்கன் சொன்னார். "அப்படியானால் என் மாடுகளுக்குப் புல் அறுத்துக் கொண்டு வந்து போடு" என்று நண்பர் சொன்னார்.

அவ்வாறே, 5 நாட்கள் தொடர்ந்து புல் அறுத்துக் கொண்டு வந்து மாட்டுத் தொழுவத்தில் போட்டார் லிங்கன். அவரைப் பார்த்துப் பரிதாபப்பட்ட நண்பர், "போதும், இனிமேல் புல் அறுக்க வேண்டாம்" என்றாராம்.

இப்படி, ஒரு புத்தகம் வாங்கக் கூட இயலாத வறுமையில் இருந்த ஆப்ரகாம் லிங்கன்தான், அமெரிக்க நாட்டின் இணையில்லாத குடியரசுத் தலைவராக ஆனார் என்பது வரலாறு.

எனவே, எந்தத் தடையையும் தடையாக நினைக்காமல் அதை முன்னேற்றத்திற்கான படி என்று நினைத்து ஊக்கத்தோடு உழைத்து வாழ்வில் நீங்கள் உயர்வு அடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை இன்றைய தினம் நானே எல்லாப் பயனாளிகளுக்கும் எனது கரங்களாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் நேரம் போதாது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, மேடையில் 10 பயனாளிகளுக்கு மட்டும் நான் இந்த உதவிகளை வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும், இங்கேயே இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளின் அடிப்படையில் சிறப்பாகத் தொழில் செய்து வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா சீரும் சிறப்புமாக அமைந்திடப் பணியாற்றிய கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. மங்கத் ராம் சர்மா அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களை உரித்தாக்கிக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித்தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

15.12.2004 அன்று நடைபெற்ற
கிருஷ்ணகிரி மாவட்ட அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை

இந்தியாவிலேயே முதன்முதலாக 365 நாட்களும் இயங்கும் கடவுச்சீட்டு மையங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 10.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை – பூக்கடை, அண்ணா நகர் மற்றும் அடையாறு காவல்துறை துணை ஆணையாளர் அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட கடவுச் சீட்டு மையங்களைத் (District Passport Centres) தொடங்கி வைத்தார்கள்.

இந்த மூன்று மாவட்ட கடவுச்சீட்டு மையங்களும் கடவுச்சீட்டு (Passport) தேவைப்படும் பொதுமக்களுக்குத் தொடர்ந்து, தொய்வின்றி சேவையாற்றும் வகையில் ஆண்டின் 365 நாட்களும் இயங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, இந்த மையங்கள் விடுமுறை ஏதுமின்றி ஆண்டின் அனைத்து நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை இயங்கும்.

வருடத்திற்கு 365 நாட்களும் இயங்கும் மாவட்ட கடவுச்சீட்டு மையங்கள் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில்தான் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் கடவுச்சீட்டு பெறுவதில் உள்ள சிரமங்களைக் களைவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கி, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 2002–ஆம் ஆண்டிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில், மாவட்ட கடவுச் சீட்டு மையங்கள் தொடங்கப்பட்டன. சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகரங்களில் மத்திய அரசின் பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகம் வாயிலாக இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

சென்னை பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகத்தில், தற்போது ஒவ்வொரு மாதமும் ஏறத்தாழ 4,000 முதல் 4,500 வரையிலான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவை ஆய்வு செய்து சரி பார்க்கப்படுவதற்காக சென்னை மாநகரக் காவல் துறைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வளவு விண்ணப்பங்களும் ஒரே இடத்தில் பெறப்படுவதால், பொது மக்களுக்கு ஏற்படும் சிரமத்தைக் குறைக்கும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் 6.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் (TAMIN) சார்பில் 2003–2004–ஆம் ஆண்டுக்கான ஈவுத் தொகை (Dividend) 54 இலட்சம் ரூபாய் மற்றும் நியமனக் கட்டணம் (Nomination Charges) 11.54 கோடி ரூபாய் ஆக மொத்தம் 12 கோடியே 8 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் வழங்கினார். அப்போது, தமிழக அரசின் தொழில் துறைச் செயலாளர், திரு. ரமேஷ்ராம் மிஷ்ரா இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. என். கோவிந்தன் இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

வகையில் சென்னை மாநகரக் காவல் துறை, சென்னை பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகத்துடன் இணைந்து, சென்னை மாநகரில் பூக்கடை, அண்ணாநகர் மற்றும் அடையாறு ஆகிய மூன்று இடங்களில் கடவுச் சீட்டு விண்ணப்பங்களைப் பொது மக்கள் சமர்ப்பிக்கும் வகையில், இம் மூன்று இடங்களிலும் உள்ள காவல் துறை துணை ஆணையாளர் அலுவலகங்களில் மாவட்ட கடவுச் சீட்டு மையங்களை அமைத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 10.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில் இந்த மூன்று மாவட்ட கடவுச்சீட்டு மையங்களைத் திறந்து வைத்து, மத்திய அரசின் பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகமும், மாநில அரசின் சென்னை மாநகரக் காவல் துறையும் ஒருங்கிணைந்து செயல்படுத்தும் இந்தப் புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

பொதுமக்கள் தங்களது கடவுச்சீட்டு விண்ணப்பங்களை, வீண் அலைச்சல் இன்றி, இனி தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள கடவுச்சீட்டு மையங்களிலேயே சமர்ப்பிக்கலாம். இதன் மூலம், விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் இடங்களில் நெரிசல் வெகுவாகக் குறைவதுடன், விண்ணப்பதாரர்கள் வெகு நேரம் காத்திருக்க வேண்டிய தேவையும் இருக்காது.

சென்னை மாவட்ட கடவுச்சீட்டு மையங்கள் ஒவ்வொன்றும் ஒரு உதவி ஆணையாளரின் பொறுப்பில் இயங்கும். பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகத்தால் திறம்பட பயிற்சி அளிக்கப்பட்ட பெண் காவலர்கள் இம் மையங்களில் பணியாற்றுவார்கள். பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகமும், சென்னை மாநகரக் காவல் துறை அலுவலகமும் கடவுச்சீட்டுத் தொடர்பான பணிகளை மேற்கொள்ள எந்நேரமும் தகவல் தொடர்பு நிலையத்தின் மூலம் கணினி இணைப்பில் இருக்கும் என்பது இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் ஆகும்.

ஒரு மத்திய அரசு அமைச்சக அலுவலகமும், மாநில அரசின் கீழ் செயல்படும் காவல் துறையும் எந்த நேரமும் கணினி அமைப்பிலிருந்து தகவல்களைப் பரிமாறிக் கொண்டு, பொது மக்களுக்கு சேவையாற்றுவது என்பது இதுவே முதன் முறையாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், e-Governance எனும் மின் ஆளுமையில் காட்டி வரும் அளவற்ற ஈடுபாட்டின் காரணமாகவே இது சாத்தியமாகியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள சென்னை மாவட்ட கடவுச்சீட்டு மையங்கள் மூலம் புதிய கடவுச்சீட்டுகள் பெறவும், ஏற்கெனவே பெற்றுள்ள கடவுச் சீட்டுகளைப் புதுப்பித்துக் கொள்ளவும் முடியும். விசா அங்கீகாரம் உள்ள கடவுச் சீட்டுகளையும் இம்மையங்களிலேயே புதுப்பித்துக் கொள்ளலாம்.

இந்த நிகழ்ச்சியில், தமிழக அரசின் உள்துறை செயலாளர் திருமதி. ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப., அவர்கள் காவல் துறை தலைமை இயக்குநர் திரு. ஐ.கே. கோவிந்த், இ.கா.ப., அவர்கள், சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர் திரு. ஆர். நடராஜ், இ.கா.ப., அவர்கள் பிராந்திய கடவுச் சீட்டு அலுவலர் திரு. மதிவதனன் மற்றும் இணை ஆணையர் திரு. சி. சைலேந்திர பாபு ஆகியோர் உடனிருந்தனர். *

யானைகள் புத்துணர்வு முகாம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவுப்படி, இந்த ஆண்டுக்கான தமிழ்நாட்டிலுள்ள யானைகள் புத்துணர்வு முகாம் முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தில் 18.11.2004 அன்று தொடங்கியது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.சி.ராமசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. ஆர்.வைத்திலிங்கம் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ.மில்லர் ஆகியோர் பங்கேற்றனர். 18.11.2004 அன்று தொடங்கப்பட்ட இந்த முகாம் 4.1.2005 வரை மொத்தம் 48 நாட்கள் நடைபெறும்.

தமிழகத்தின் திருக்கோயில்கள், மடங்கள், தனி நபர்கள் மற்றும் வனத்துறை பராமரிப்பில் உள்ள அனைத்து யானைகளின் உடல் நலமும், மன நலமும் பேணப்படும் வகையில் ஆண்டுக்கு ஒரு முறை, ஒரு மாத கால அளவிற்கு நல வாழ்வு முகாம் நடத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2003–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவுப்படி, தமிழக அரசின் இணையற்ற திட்டமான, யானைகளுக்கான புத்துணர்வு முகாம் 2003–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16–ஆம் நாள் தொடங்கி ஒரு மாத காலம் நடைபெற்றது. இந்த முகாமில் மொத்தம் 100 யானைகள் கலந்து கொண்டன. வழக்கமாக ஆற்றிவரும் வேலை பளுவிலிருந்து முழு ஓய்வும், ஒரு மாத காலம் வழங்கப்பட்ட ஊட்டச் சத்துள்ள உணவும் அந்த யானைகளுக்குப் புத்துணர்ச்சி அளித்ததுடன், அவை மீண்டும் தங்களது வழக்கமான பணிகளை உற்சாகத்துடன் மேற்கொள்ள வகை செய்தன.

கடந்த ஆண்டில் நடைபெற்ற யானைகளுக்கான இந்தப் புத்துணர்வு முகாம் மாபெரும் வரவேற்பைப் பெற்றதையடுத்து, இந்த ஆண்டும் (2004) யானைகளுக்கான இத்தகைய புத்துணர்வு முகாமை நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். இதன்படி முதுமலை வன விலங்கு சரணாலயம் தெப்பக்காட்டில் யானைகளுக்கான புத்துணர்வு முகாம் தொடங்கப்பட்டது.

18.11.2004 அன்று தொடங்கப்பட்ட இந்த முகாமில் பங்கேற்கும் யானைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 16.11.2004 மற்றும் 17.11.2004 ஆகிய நாட்களில் லாரிகள் மூலமாக மிகுந்த பாதுகாப்புடன் முகாமிற்கு அழைத்து வரப்பட்டன. இந்த முகாமில் திருக்கோயில் யானைகள், மடங்கள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான யானைகள், வனத் துறையைச் சேர்ந்த யானைகள் ஆக மொத்தம் 112 யானைகள் பங்கேற்றுள்ளன.



கடந்த ஆண்டைப் போலவே, முகாமில் பங்கேற்றுள்ள அனைத்து யானைகளுக்கும், உடல் நலமும், மன நலமும் பேணும் வண்ணம் அவற்றுக்கு முழுமையான ஊட்டச் சத்து கொண்ட உணவினை அளித்து, அவற்றுக்கு அமைதியும், ஓய்வும் அளிக்கும் வகையில் பராமரிக்க, சிறப்பான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

★ ★ ★

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகள் பிரகாசமடைந்துள்ளன!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



மத்திய திட்டக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர், டாக்டர் எம்.எஸ். அலுவாலியா அவர்களே!

மத்திய திட்டக் குழுவின் மாண்புமிகு உறுப்பினர்களே! மூத்த அதிகாரிகளே!

திருத்தி அமைக்கப்பட்டுள்ள மத்திய திட்டக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2005–2006ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் ஆண்டுத் திட்டம் குறித்து விவாதித்து, முடிவு செய்வதற்காக நாம் இங்கு கூடியுள்ளோம். பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்த இடைக்கால மதிப்பீடு பற்றி சில கருத்துகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள நான் ஆசைப்படுகிறேன். பெங்களூரில் அண்மையில் நீங்கள் கூட்டிய கூட்டத்தில், இதனை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் எண்ணியிருந்தேன். ஆனால், அப்போது தமிழ்நாட்டின் சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற்றதால் அதில் கலந்துகொள்ள வேண்டிய தவிர்க்கவியலாத சூழ்நிலை எனக்கு ஏற்படவே, பெங்களூரில் நடைபெற்ற கூட்டத்தில் என்னால் பங்கேற்க இயலாமல் போய்விட்டது.

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்த இடைக்கால மதிப்பீட்டின் அடிப்படையில் பார்க்கும்போது, நாம் வளர்ச்சி விகிதத்தை மேலும் அதிகரித்து, வறுமையை விரைந்து குறைக்க முயலவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

அந்நியச் செலாவணி இருப்பின் ஒரு பகுதியை, மிகுந்த கவனத்துடன் பயன்படுத்தி அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள வளர்ச்சிப் பணிகளை மீண்டும் நாம் துரிதப்படுத்த வேண்டும் என்ற துணைத் தலைவர் அவர்களின் கருத்தை நான் வரவேற்கிறேன். இக் கருத்தை மேலும் ஆராய்ந்து எதிர்காலத்தில் வளர்ச்சிப் பணிகள் மேலும் துரிதமாக நடைபெறத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் முதலீடு செய்ய விரும்பும் மாநிலங்களுக்கு இந்நிதியை அளிக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

2005–2006ஆம் ஆண்டு பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நான்காவது ஆண்டாகும். பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கண்காணிக்கத்தக்க இலக்குகளை எய்துவதிலும், பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நான் நிர்ணயித்த ரூ.40,000 கோடி என்ற திட்டமிட்ட ஒதுக்கீட்டை எய்துவதிலும் தமிழ்நாடு சிறப்பாகச் செயல்பட்டு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. 2000–2001ஆம் ஆண்டு இறுதியில் இம் மாநிலத்தைக் கவ்வியிருந்த சிக்கலான நிதி நெருக்கடியிலிருந்து மீண்டு, இன்றைக்கு நாங்கள் இந்நிலையை எட்டியுள்ளோம் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வோராண்டுக்கும் வரையறுக்கப்படும் திட்ட ஒதுக்கீட்டை நாங்கள் எய்தியுள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை, தொடர்ந்து எய்திவரும் ஒரு சில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்று என்பதை நீங்கள் அறிவீர்கள். இதனை உறுதிப்படுத்த நாங்கள் 2003ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை பற்றிய பொறுப்புடைமைச் சட்டத்தைச் செயல்படுத்தியுள்ளதுடன், இச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள நடுத்தர கால நிதி சீரமைப்புத் திட்டத்தையும் செயற்படுத்தி வருகிறோம். நாங்கள் சொன்னதைச் செய்வோம் என்பது உங்களுக்குத் தெரியும்.

பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட இடைக்கால மறு ஆய்வு, விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு நாம் புதிய உத்திகளை வகுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இதனையும் நாங்கள் செயல்படுத்தத் தொடங்கிவிட்டோம். இதற்கான உத்தியில், வேளாண்மை வளர்ச்சிக்குப் புத்தெழுச்சி ஊட்டுதல் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் விரைவான வளர்ச்சி காண்பதற்கு ஏதுவான முதலீட்டுச் சூழலை உருவாக்குதல் நிதி நிலையைச் சீரமைத்து நிலைப்படுத்தல், இவற்றுக் கெல்லாம் மேலாக வறுமைக் குறைப்பை உறுதி செய்தல் ஆகியவையும் அடங்கும். இம் முக்கிய நோக்கங்களைக் கருத்தில் கொண்டு எங்களுடைய பொருளாதார உத்திகளைச் சீரமைத்துள்ளோம்.

முதல்நிலைத் துறைகளுக்கு புதிய உத்வேகம் அளிக்க வேண்டியது நமது முதலாவதும் தலையாயதுமான பணியாகும். தமிழ்நாடு தொடர்ந்து மூன்றாண்டுகள் வறட்சியைச் சந்திக்க நேர்ந்தது. இதனால், விளைச்சலும் வருவாயும் கடுமையாகக் குறைந்தன. இந்த ஆண்டில், இதுவரையில், வடகிழக்குப் பருவ மழை நன்கு பெய்துள்ளதால், முதல்நிலைத் துறைகள் புத்தெழுச்சி பெற்று நல்ல வளர்ச்சியை அடையும் என்று நம்புகிறோம். நபர் ஒருவருக்குக் கிடைக்கும் தண்ணீர் அளவு நமது நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் மிகவும் குறைவாக இருக்கிறது. இத்தகைய நிலையில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வறட்சி மற்றும் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையின் பாதிப்பு ஆகியவற்றால் கிடைத்த அனுபவம் என்னை, நம்முடைய சாகுபடி உத்தியை மாற்றியமைக்கச் செய்தது. தண்ணீர் குறைவாகத் தேவைப்படுகிற சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு மற்றும் காட்டாமணக்கு போன்ற மாற்றுப் பயிர்களை பயிரிட வேண்டுமென்று நான் மிகவும் வலியுறுத்தி வருகிறேன். மற்றும் இதனோடு இணைந்து உயிரி எரிபொருள் தயாரிப்புத் திட்டத்திற்கும் நான் முக்கியத்துவம் அளித்து வருகிறேன். இந்தப் பயிர் பல்திறப்படுத்தல் திட்டத்தின் கீழ் தோட்டக்கலையில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு மதிப்புக் கூட்டலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

தற்போது தரிசாகவுள்ள சுமார் இரண்டு மில்லியன் எக்டேர் நிலத்தையும் நிரந்தரமாகத் தரிசாக இருக்கும் நிலங்களையும் படிப்படியாகச் சாகுபடியின் கீழ் கொண்டுவருவதற்காக தரிசு நில மேம்பாட்டு அடங்கல் திட்டம் ஒன்றையும் நான் தொடங்கி வைத்துள்ளேன். இவ்வாண்டில், இத்திட்டத்தின் கீழ் நல்ல முன்னேற்றம் ஏற்படும். முதல்நிலைத் துறைக்கான எங்களது புதிய உத்திகளில் பயிர்களைப் பல்திறப்படுத்தல், பண்ணை உற்பத்தியைப் பெருக்குவதற்கான புதிய தொழில்நுட்ப உத்திகள், புதிய நடைமுறைகளை விரைந்து ஏற்று பின்பற்றுவதற்காகத் தகவல் தொடர்பு உத்திகளை

உருவாக்குதல், கிடைக்கக்கூடிய தண்ணீரைத் திறமையாகப் பயன்படுத்துதல் மற்றும் மேம்பட்ட அங்காடி வாய்ப்புகள் ஆகியவை அடங்கும்.

போதிய நன்னீர் கிடைக்காதது, உற்பத்தி பெருக்கத்திற்கு ஒரு முக்கியத் தடையாக உள்ளது. தமிழ்நாடு, தனது மேற்பரப்பு நீர்வளம் முழுவதையும் பயன்படுத்தி விட்டது. எனவே, எந்தவொரு பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களையும் புதிதாக மேற்கொள்ள வாய்ப்பு இல்லை. இந்தப் பின்னணியில்தான் தமிழ்நாட்டில் அமைந்துள்ள பாரம்பரிய நீர் ஆதாரங்களைப் புதுப்பித்துச் சீரமைக்க இயலும் வகையில் விரைவுபடுத்தப்பட்ட பாசனப்பயன் திட்டம் தொடர்பான வழிகாட்டிக் குறிப்புகள் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று நான் மீண்டும் மீண்டும் கூறி வருகிறேன்.

16.9.2004 அன்று நான் மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்தபோது அவரிடமும் நான் இது குறித்து விவாதித்துள்ளேன். மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்கள், இதில் தலையிட்டு, விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்பாட்டுத் திட்டத்தின்கீழ் (AIBP) தற்போது நடப்பிலுள்ள வழிகாட்டிக் குறிப்புகள் காரணமாக, தண்ணீர்ப் பற்றாக்குறையால் வாடும் தமிழ்நாடு போன்ற மாநிலம் புறக்கணிக்கப் படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட வேண்டுமென்றும், கேட்டுக் கொள்கிறேன்.

வழிகாட்டிக் குறிப்புகள் திருத்தியமைக்கப் படுவதோடு, இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது ரூ.200 கோடியாவது ஒதுக்கப்பட வேண்டுமெனவும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நதிகள் இணைப்புத் திட்டத்தை விரைவில் தொடங்க வேண்டுமென்பதில் நானும் மிகவும் ஆர்வமாக இருக்கிறேன். இப்பணியை தீபகற்ப நதிநீர்க் கட்டமைப்பிலிருந்து தொடங்கலாம். முதலாவதாக, மகாநதியை, தமிழ்நாட்டிலுள்ள குண்டாறு நதியுடன் இணைக்கலாம். இத்தகையத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் சீன நாடு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

உயிரி எரிபொருள் திட்டத்திற்கு ஆக்கம் அளித்து பயிர் பல்திறப்படுத்தல் திட்டத்திற்கு ஊக்கமளிக்க வேண்டியதன் அவசியத்தையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உயிரி எரிபொருள் உற்பத்தியை ஊக்கப்படுத்த ஊக்க உதவித் தொகுப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென நான் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதமெழுதியுள்ளேன். இத்திட்டத்திற்கான தொழில் நுட்பம் மற்றும் மூலதனப் பொருள்களின் இறக்குமதி குறித்த தீர்வை விதிப்பிலிருந்து விலக்களித்தல்; உயிரி எரிபொருள் தொழிலை மின் உற்பத்தித் துறையைப் போன்று அடிப்படைக் கட்டமைப்பு வசதித்துறைக்கு நிகராகக் கருதி அவற்றிற்கு அளிக்கப்படும் அதே போன்ற சலுகைகளை அளித்தல் உயிரி எரிபொருளுக்கு மத்திய ஆயத்தீர்வை விதிப்பிலிருந்து விலக்கு அளித்தல் மற்றும் இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருள்களுக்கு இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

உயிரி எரிபொருள் திட்டத்திற்கு உயரளவு ஊக்கமளித்து, பெட்ரோலியப் பொருட்களின் விலை அடுத்தடுத்து உயர்ந்துகொண்டே போவதால் ஏற்படும் நெருக்கடிக்கு, நீண்டகாலத் தீர்வு காணப்பட வேண்டும். விரைவிலே, ஊக்க உதவித் தொகுப்புத் திட்டம் ஒன்றை அறிவிக்க ஏதுவாக, இது குறித்து முனைப்புடன் பரிசீலிக்க வேண்டுமாய், நான் மத்திய திட்டக் குழு துணைத் தலைவரை கேட்டுக் கொள்கிறேன்.

உற்பத்தித் துறைக்குப் புதிய உத்வேகத்தை அளிக்க வேண்டும் என்று அண்மையில் நீங்கள் வெளியிட்டுள்ள கருத்தை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். தமிழ்நாட்டிற்காக, 2003ஆம் ஆண்டு புதிய தொழில் கொள்கை ஒன்றை நான் வகுத்துள்ளேன். மாநில அளவில் தொடங்கி சீர்திருத்தங்களை மேற்கொள்ள வகைசெய்யும் இக்கொள்கை தரமான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், போதிய அளவு மின்சக்தி அதன் நம்பகத் தன்மை மற்றும் அதன் தரம் செயலாற்றலை ஊக்குவிக்கும் தொழிலாளர் சீர்திருத்தங்கள் நடைமுறை கால அளவையும் செலவையும் குறைக்கின்ற வகையில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல், நிருவாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல், மாநில அளவில் வரி சீர்திருத்தங்கள் செய்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இந்த அம்சங்கள் ஒவ்வொன்றிலும் திட்டவட்டமான முன்னேற்றம் கண்டு வருகிறோம். இச்சீர்திருத்தங்களால் நல்ல பயன்களும் விளைந்துள்ளன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகச் சந்தையில் மற்ற நாடுகளோடு நாம் போட்டியிட வேண்டுமானால், அதற்கு உலகத் தரத்திலான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மிகவும் அவசியமாகும். பொதுத் துறையில் தொடர்ந்து பெரிய அளவில் முதலீடுகள் செய்யப்பட வேண்டியது அவசியமே என்றாலும் பொதுத்துறை தனியார் துறை கூட்டுப் பங்கின் மூலம் முதலீடுகளையும் நாங்கள் ஊக்குவித்து வருகிறோம். இதுபோன்ற பல முன் முயற்சிகளில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. மாநில அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் பெறுகின்ற கடன்களுக்கு உச்சவரம்பு விதித்து பொதுத் துறை நிறுவனங்களின் முதலீடு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.



இத்தகைய கடன் உச்சவரம்பைக் கணக்கிடுவதில் ஒளிவுமறைவற்ற தன்மையும் ஒரு தெளிவும் இருக்க வேண்டும். மேலும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்யவும் போதிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்.

மின் துறையைப் பொறுத்தவரையில், நீங்கள் சற்று கவலை கொண்டிருப்பதை நான் அறிவேன். தமிழ்நாடு மின் வாரியம், மேலிருந்து கீழ் வரை நன்கு ஒருங்கிணைந்த கட்டமைப்பைக் கொண்ட ஒரு நிறுவனமாகும். மின் பயனீட்டாளர்களுக்கு, நம்பகமான, தரமான மின் சக்தியை வழங்கி வருகின்ற ஒரு நிறுவனம் என்ற தனிச் சிறப்பு இதற்கு உண்டு.

நாட்டிலேயே மிக அதிகபட்சமாக, தமிழ்நாட்டில்தான் மொத்த மின்சாரத்தில், 61 சதவிகிதம் அளவை மானிகள் பொருத்தப்பட்டு வழங்கப்படுகின்றன. மின் அனுப்புகை மற்றும் மின் விநியோகம் வகையிலான இழப்புகள், நாட்டிலேயே இங்குதான் மிகவும் குறைவு. இவ்வாறு சாதனை படைக்கப்பட்டிருந்தும், விரைவுபடுத்தப்பட்ட மின் சக்தி மேம்பாட்டுச் சீர்திருத்தத் திட்டத்தின் (APDRP) கீழ் வழங்கப்படும் நிதியுதவி கணிசமாகக் குறைக்கப்பட்டிருப்பது எனக்கு வியப்பை அளிக்கிறது. இந்நிதியுதவியை மீண்டும் பழைய அளவுக்கே வழங்கிட வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

வெவ்வேறு மின் பயனீட்டாளர்களுக்கான மின் கட்டணங்களை நிர்ணயித்தல், கட்டுப்பாடுகளை அகற்றி போட்டியை அறிமுகம் செய்தல், ஒரே படித்தான மின் கணக்கிடு முறை போன்ற மின் துறை தொடர்பான பிரச்சினைகள் அனைத்துமே சிக்கலானவையாகும். தொடர்ந்து நிலவிய வறட்சியையும், தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக விளைச்சல் வெகுவாகக் குறைந்ததையும் கருத்திற்கொண்டு பண்ணைத் துறையைப் போற்றிப் பாதுகாத்து சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். நாளாவட்டத்தில், தேசிய அளவில் உண்மையான கருத்தொற்றுமையை உருவாக்க இயலும் வகையில், துணைத்தலைவர் அவர்கள், தனது செல்வாக்கைப் பயன்படுத்தி மின் துறை தொடர்பான சிக்கல் வாய்ந்த பிரச்சினைகள் அனைத்தையும் குறித்து

கலந்தாய்வு நடத்துவதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

மிகச் சிறந்த திறமையை ஈர்க்கும் உலகின் மிகச் சிறந்த மாநகரங்களின் வரிசையில் சென்னைப் பெருநகரையும் சேர்க்க வேண்டுமென்பது என் அவா. இந்நோக்கத்திற்காகவே, சென்னைப் பெருநகருக்காக 2003–2004ஆம் ஆண்டில், ரூ.18,000 கோடி மூலதனச் செலவில், பத்தாண்டு முதலீட்டுத் திட்டம் ஒன்றை நான் தொடங்கினேன். இது நல்ல பயனை அளித்துள்ளது. இது குறித்து மீண்டும் புதியதாக ஒரு மதிப்பீடு செய்ததில் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிப் பணிகள் இன்னும் நிறையவே உள்ளன என்று நான் அறிகிறேன். டில்லி, மும்பை மாநகரங்களின் தேவைகளை நீங்கள் பரிசீலித்து வருகிறீர்கள் என நான் கருதுகிறேன். சென்னைப் பெருநகரம் புறக்கணிக்கப்பட்டு விடக்கூடாது. இத்திட்டத்தில், சென்னைப் பெருநகரமும் சேர்க்கப்பட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன். சென்னையில், உலகத் தரம் வாய்ந்த பன்னாட்டு விமான நிலையம் ஒன்றைப் புதிதாக அமைப்பதற்கான இசைவை இத்திட்டக் குழு அளிக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு, குறிப்பாக, சென்னை மாநகரம் தகவல் தொழில்நுட்ப முதலீடுகளை பெரிய அளவில் ஈர்த்து வருகிறது. இதனைச் சமாளிக்கும் வகையில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கான திட்டங்களில் பெருமளவில் நாங்கள் முதலீடு செய்து வருகின்றோம்.

இதற்கு அரசு, ஏராளமாக முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என்பது உங்களுக்கே தெரியும். ஆனால், துரதிருஷ்டவசமாக, இந்த முயற்சிக்கு தமிழ்நாட்டுக்கு, குறிப்பாக, சென்னைக்கு வருவாய் உள்ளிட்ட எந்தவிதமான உதவியும் கிடைப்பதில்லை. இத்தகைய மாநிலங்களுக்கு அவற்றின் சாதனையோடு இணைந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதி நிதி கிடைக்கின்ற வகையில் இதற்குத் தீர்வு ஒன்றைக் காண வேண்டுமென உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலம் முழுவதற்குமான கட்டமைப்புப் பணி (Statewide Area Network) உள்ளிட்ட மின் ஆளுகைத் திட்டங்களையும் நாங்கள் செயற்படுத்தி வருகிறோம். இந்த மின் ஆளுகை முன் முயற்சிகளுக்குச் சிறப்பு நிதியுதவி அளிக்க வேண்டுமென உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சமூக நலத் துறையில் தமிழ்நாடு ஆற்றியுள்ள பணி மகத்தானது. கடந்த பத்தாண்டுகளில், 7ஆம் நிலையிலிருந்து மனித வள மேம்பாட்டுக் குறியீடு கடிதே விரைந்து 3ஆம் நிலைக்கு உயர்ந்துள்ளது. தமிழ்நாடு, புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளை நோக்கிய பாதையில் வெற்றி நடை போடுகிறது என்பதை உங்களிடம் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். சத்துணவுத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், குழந்தைப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, மகப்பேற்றின் போது தாய் இறப்பு விகிதத்தைக் குறைத்தல் போன்ற சிறப்பு முயற்சிகளுக்கு நான் மிக உயரிய முக்கியத்துவம் அளித்து வருகிறேன். இவற்றில் நாங்கள் வேகமாக முன்னேறி வருகிறோம்.

தேசிய குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில், பள்ளிக் குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டமும் அடங்கும். இத்திட்டத்திற்குக் கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று நான் அறிகிறேன். இந்தத் திட்டங்களில் தமிழ்நாடு, உலக அளவில் புகழ்பெற்று முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. அனைத்து சத்துணவுத் திட்டங்களுக்கும் சேர்த்து ஆண்டு ஒன்றுக்கு நாங்கள் ரூ.844.97 கோடி செலவு செய்கிறோம். ஆனால், மத்திய அரசிடமிருந்து எங்களுக்குக் கிடைக்கின்ற நிதியுதவி, வெறும் ரூ.201.17 கோடிதான். தொடக்கப் பள்ளியை மட்டுமே எடுத்துக் கொண்டாலும் நமக்கு ஆகும் செலவு, ரூ.418.77 கோடியாகும். ஆனால், நமக்கு அரிசிக்காக மட்டும் ரூ.48.98 கோடி நிதியுதவி அளிக்கப்படுகிறது. எங்களுடைய ஒட்டு மொத்தத் திட்டங்களுக்கும் முழு நிதியுதவி அளிக்க வேண்டுமென உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய குறைந்தபட்ச பொதுத் திட்டத்தின்கீழ், சில திட்டங்களுக்கான நிதியுதவி அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நான் அறிகிறேன். நிதி ஒதுக்கீடு இரட்டிப்பாக்கப்பட்டுள்ள தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிற்கு அளிக்கப்படும் நிதியுதவியைக் கணிசமான அளவிற்கு அதிகரிக்க வேண்டுமென உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழும் நிதி ஒதுக்கீடு கணிசமான அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளதை அறிந்து

நான் மகிழ்ச்சி அடைகிறேன். எனவே, தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிற்கு மேலும் கூடுதலாக ரூ.100 கோடி நிதியொதுக்கம் செய்ய வேண்டுமென உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ரூ.80 கோடி அளவுக்கு நிலுவையாகவுள்ள கோரிக்கைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கே இத்தொகை தேவைப்படுகிறது.

2001ஆம் ஆண்டு மே திங்களில் நான் பதவியேற்ற போது, மிகவும் தொய்வுற்றிருந்த தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகள் தற்போது மிகவும் பிரகாசமடைந்துள்ளன. இந்த முயற்சியில் எங்களுக்கு உதவியளிக்க வேண்டியது அவசியம். திறம்பட செயல்படும் மாநிலங்களை தண்டித்து, பின்தங்கியுள்ள மாநிலங்களுக்கு சமத்துவம் என்ற பெயரில் வெகுமதி அளிக்கின்ற ஒரு போக்கு காணப்படுகிறது. இந்த வாதம், இதற்கு முன்பு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம். நன்கு செயல்படும் ஏனைய மாநிலங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் விதத்தில், பின்தங்கிய மாநிலங்களுக்கு மேலும் மேலும் நிதிகளைக் குவிப்பது, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஆகாது என்பது என்னுடைய ஆய்ந்த கருத்தாகும். சிறப்புத் திட்ட நிதியுதவி என்ற பெயரில் அதிகரிக்கப்பட ரூ.1,600 கோடியின் நேர்விலும் இதுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திட்டமிட்ட வளர்ச்சி என்பது, நன்கு செயல்படுகின்ற மாநிலங்களை பின்னுக்கு இழுக்கும் ஒரு நடைமுறையாகி விடக்கூடாது. அத்தகைய மாநிலங்கள் முன்னேற்றமடைய, அவற்றின் செயல் திறனை மேம்படுத்துவதுடன் நிருவாகச் சீர்திருத்த நடவடிக்கைகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாட்டிற்கான, வெளிநாட்டு நிதியுதவி பெறும் சில திட்டங்களைப் பற்றி இங்கே நான் குறிப்பிட விழைகிறேன்.

2001ஆம் ஆண்டு மே திங்களில் நான் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, தமிழ்நாட்டில் புதிய திட்டங்கள் எவையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. நாங்கள்தான் பெருமுயற்சி எடுத்து, உலக வங்கியிடமிருந்தும் பிற பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவி பெற்று செயற்படுத்தத்தக்க பெரிய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கியுள்ளோம்.

சமூக நலத் துறையில் தமிழ்நாடு ஆற்றியுள்ள பணி மகத்தானது. கடந்த பத்தாண்டுகளில், 7ஆம் நிலையிலிருந்து மனித வள மேம்பாட்டுக் குறியீடு கடிதே விரைந்து 3ஆம் நிலைக்கு உயர்ந்துள்ளது. தமிழ்நாடு, புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளை நோக்கிய பாதையில் வெற்றி நடை போடுகிறது என்பதை உங்களிடம் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். சத்துணவுத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், குழந்தைப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, மகப்பேற்றின் போது தாய் இறப்பு விகிதத்தைக் குறைத்தல் போன்ற சிறப்பு முயற்சிகளுக்கு நான் மிக உயரிய முக்கியத்துவம் அளித்து வருகிறேன். இவற்றில் நாங்கள் வேகமாக முன்னேறி வருகிறோம்.

சுகாதார ஏற்பாட்டு முறை திட்டம், வறுமைக் குறைப்புத் திட்டம், ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டம் மற்றும் துப்புரவுத் திட்டம், நீர் ஆதாரங்கள் ஒருங்கிணைப்புத் திட்டம் II, தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் III, மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று திட்டம் III ஆகியவை இவற்றுள் அடக்கம். இந்நிதி ஒரு சில மாநிலங்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்ற வகையிலும், தமிழ்நாடு போன்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில் இந் நிதியைக் குறைக்கப்படுகின்ற வகையிலும் புதிய உத்தி ஒன்று திடீரென்று வகுக்கப்பட்டுள்ளது. இது மாற்றியமைக்கப் பட வேண்டும். அனைத்து மாநிலங்களுக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படுகின்ற வகையிலும் நன்கு செயல்படுகின்ற மாநிலங்களுக்கு நிதிகள் மறுக்கப்படாதிருக்கின்ற முறையிலும் இந்தக் கொள்கை திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

'கிழக்கு மலைத் தொடர்' மற்றும் 'கடலோரப் பகுதிகள்' மேம்பாட்டுக்காக, சிறப்பு நிதியுதவி கோரி, முறையே ரூ.411 கோடி மற்றும் ரூ.265.50 கோடி செலவிலான செயற்குறிப்புகளை, மத்தியத் திட்டக் குழுவிற்கு நாங்கள் ஏற்கெனவே அனுப்பியுள்ளோம்.

மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுப்பதுடன், எங்களுடைய இயற்கை ஆதாரங்களைப் பாதுகாக்கவும், இந்தப் பகுதிகளின் உயிரின வாழ்க்கைச் சூழலைப் பராமரிக்கவும் உதவக் கூடிய இவ்விரண்டு செயற் குறிப்புகளையும் பரிசீலிக்க வேண்டுமென இத் தருணத்தில் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திட்டத்திற்கான நிதியாதாரங்கள் பற்றிய வினாவுக்கு வருகிறேன். மாநிலத்தின் நிதி நிலையைச் சீரமைப்பதிலும், எவ்விதக் குறைபாடுமின்றி மாநிலத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியாதாரங்களை உருவாக்குவதிலும் நாங்கள் வெற்றி கண்டுள்ளோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு எங்களுக்கு முழு ஆதரவு அளிக்கப்பட்டால், தமிழ்நாடு உயர் வளர்ச்சிப் பாதையை எட்டுவது திண்ணம்.

2005–2006ஆம் ஆண்டுக்காக, திட்ட ஒதுக்கீடு செய்ய நாங்கள் இலக்கு ரூ. 9,000 கோடிக்கு மேல் நிர்ணயித்துள்ளோம். இது சாத்தியமே என்று நிதியாதாரங்களின் மதிப்பீட்டிலிருந்து தெரிகிறது. ஆனால், இதற்கு, உங்கள் வழக்கமான மத்திய நிதியுதவியைப் பெருமளவில் உயர்த்தி முழு ஆதரவு நல்க வேண்டும். குறிப்பாக உங்களிடமுள்ள சிறப்பு ஒதுக்கீட்டிலிருந்து "மத்திய அரசின் ஏனைய நிதியுதவி" என்பதன் கீழ் சிறப்பு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்நாட்டிலேயே, தமிழ்நாட்டின் நிதிநிலை தர அளவீடுதான் சிறப்பாக உள்ளது. எனவே, பொதுமக்களிடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும் பெறுகிற கடன்களிலிருந்து ரூ.300 கோடி தமிழ்நாட்டிற்கு, கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆதரவைக் கொண்டு, தமிழ்நாட்டில் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒரு புதிய உத்வேகமூட்டுவதற்காக, எங்களால், 2005–2006ஆம் ஆண்டுக்கு மேலும் அதிக அளவில் திட்ட ஒதுக்கீடு செய்ய முடியும்.

2005–2006ஆம் ஆண்டுத்திட்டம் குறித்து
புதுதில்லியில் 30.11.2004 அன்று திட்டக்குழு
துணைத்தலைவருடன் நடத்திய
விவாதத்தின்போது
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

உடும்பு

பல்லிகள் குடும்பத்தைச் சேர்ந்த உடும்பு ஒரு விந்தையான பிராணி. பிடித்த பிடியை விடவே விடாது. "உடும்புப் பிடி" என்ற சொற்றொடரே இதன் பிடியிலிருந்துதான் உருவானது. கோட்டை மதிலின் மேல் ஏற இதன் உடல் பகுதியில் கயிற்றைக் கட்டி விடுவார்களாம். மதில் சுவரின் உச்சியை அடைந்ததும் இது நன்றாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளும். பின்னர் அதன் உடல் பகுதியிலிருந்து தொங்கும் கயிற்றைப் பிடித்துக்கொண்டு வீரர்கள் கோட்டை மதில் சுவர் மேல் ஏறுவார்கள் என்று கூறுவதுண்டு. கிழக்குப் பகுதியிலுள்ள பல கண்டங்களிலும் தீவுகளிலும் இது பரவலாகக் காணப்படும். 20 செ.மீ. நீளத்திலிருந்து 300 செ.மீ. நீளமுடையவை வரை உள்ளன. பெரும்பாலானவை 120 செ.மீ. நீளமுடையவையே.

பெண் உடும்பு 7 முதல் 35 முட்டைகள் வரை இடும். தோலுறை கொண்ட பெரிய முட்டைகள் இவை. நிலத்திலுள்ள குழிகளில் முட்டைகளிட்டு விட்டு பெண் உடும்பு போய்விடும். முட்டை பொரிந்து குஞ்சு வெளிவர பல மாதங்கள் வரை ஆகும்.

இன்று இந்தக் குடும்பத்தில் மிகப் பெரிய உருவம் கொண்டது கொமோடோ டிராகன் எனும் இனம். இந்தோனேஷியாவில் கொமோடோ எனும் இதன் நீளம் 3 மீட்டர். எடை 130 கிலோ. இன்று உயிர் வாழும் பல்லியினங்களில் மிகப்பெரியது இதுதான். இதன் உறுதியான தோல் பழுப்பு அல்லது கறுப்பு நிறத்தில் இருக்கும். இதன் உணவு சிறிய மான்கள், பன்றிகள், இறந்த விலங்குகள் முதலியன.

நம்நாட்டில் பசுங்காடுகளிலும், பாலைவனப் பகுதிகளிலும் பலவகை உடும்புகள் உள்ளன. சாதாரண உடும்பின் உடல் நீளம் 175 செ.மீ. வரை இருக்கும். இதில் வாலின் நீளம் மட்டும் 100 செ.மீ. வரைஇருக்கும். உடலில் ஒரு சில மங்கலான கறுப்புக் கோடுகள் இருக்கும். தலைப் பகுதியிலுள்ள செதில்கள் பெரிதாக இருக்கும். இதன் பற்கள் கூர்மையாகவும், நாக்கு மிக நீளமாகவும் பிளவுபட்டுமிருக்கும்.

இந்திய பாலைவனப் பகுதிகளில் காணப்படும் பாலைவன உடும்பின் உடல் பச்சை கலந்த மஞ்சள் நிறத்திலிருக்கும். அதன் மேல் சாம்பல் வண்ணப் புள்ளிகள் இருக்கும். இதன் வால் சாட்டைப்போல் இருக்கும். பொந்துகள்தான் இதன் உறைவிடம். ★

கோயில் மேலாளர் குடும்பத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதி உதவி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 24.11.2004 அன்று தலைமைச் செயலகத்தில், 3.9.2004 அன்று படுகொலை செய்யப்பட்ட காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜ பெருமாள் திருக்கோயிலின் மேலாளர் திரு.சங்கரராமன் அவர்களின் குழந்தைகள் தொடர்ந்து கல்வி கற்கவும், அவரது குடும்பம் தொடர்ந்து வாழ்க்கை நடத்தவும் ஏதுவாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சத்திற்கான காசோலையை அவரது மனைவி திருமதி. பத்மா அவர்களிடம் நேரில் வழங்கினார்கள்.

காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் மேலாளராகப் பணியாற்றிய திரு. சங்கரராமன் அவர்கள் 3.9.2004அன்று அத் திருக்கோயிலின் உள்ளே உள்ள அவரது அலுவலகத்தில் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து, திரு.சங்கரராமன் அவர்களின் மனைவி திருமதி. பத்மா, தங்களது குடும்பத்தலைவர் அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்டு விட்டதால், வருவாய் ஏதுமின்றி தங்களது குடும்பம் வறுமையில் வாடுகிறது என்றும், தனது மகன் ஆனந்த சர்மா, தனது மகள் உமா ஆகியோர் தொடர்ந்து கல்வி கற்க வழியின்றி இருப்பதாகவும் தெரிவித்து, தாங்கள் தொடர்ந்து வாழ்க்கை நடத்துவதற்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு விடுத்திருந்தார். இந்தக் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவரது குடும்ப நிலையை நன்கு கவனத்தில் கொண்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டு, அதனை 22.11.2004 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 24.11.2004 அன்று தலைமைச் செயலகத்தில் 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை கொலை செய்யப்பட்ட திரு.சங்கரராமனின் மனைவி திருமதி. பத்மா அவர்களிடம் நேரில் வழங்கினார்கள். அப்போது, அவரது மகன் ஆனந்த சர்மா, மகள் உமா ஆகியோர் உடனிருந்தனர். நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட திரு.சங்கரராமன் அவர்களின் மனைவி திருமதி. பத்மா, அவர்களது மகன் ஆனந்த சர்மா மற்றும் மகள் உமா ஆகியோர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு கண்ணீர் மல்க தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். ★

புதிய வீராணம் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்கும் அரிய திட்டமான புதிய வீராணம் திட்டத்தின் வெற்றியால், இன்றைக்குச் சென்னை மாநகரத்தின் குடிநீர்ப் பற்றாக்குறை தீர்க்கப்பட்டுள்ளது; சென்னை மாநகர் முழுமைக்கும் மீண்டும் குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள்.

புதிய வீராணம் திட்டம், சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்கும் அரிய திட்டம் என்பது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அயராத உழைப்பாலும், குலையாத நம்பிக்கையாலும், தளராத முயற்சியாலும் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு, ஒரு திட்டத்தைத் தொலைநோக்குப் பார்வையோடும், உள்ளத்தின் உறுதிப்பாட்டோடும் செயல்படுத்தினால், அந்தத் திட்டம் எத்தகைய மாபெரும் வெற்றியைப் பெறும் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் புதிய வீராணம் திட்டம்.

இந்த அரிய திட்டத்தை அறிவிக்கும் போதே எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் எத்தனை பேர்! இதற்கு அடிக்கல் நாட்டும்போது தடுக்கத் துடித்தவர்கள் எத்தனை பேர்! இதனைச் செயல்படுத்த முனைந்த ஒவ்வொரு கட்டத்திலும் தப்புப் பிரச்சாரம் செய்தவர்கள் எத்தனை பேர், எத்தனை பேர்? "வீராணம் திட்டம் – வீணான திட்டம்" என்று எள்ளி நகையாடினர் சிலர்.

கடந்த சில தினங்களாகச் சென்னை மாநகரில் ஓரளவு மழை பெய்து வருகிறது. மழை வெள்ளத்தைக் காணும்போது நமது மனங்களில் மகிழ்ச்சி வெள்ளம் ஊற்றெடுக்கிறது. ஆனால், அதற்கு முன் இருந்த நிலைமை என்ன?

கடந்த பல ஆண்டுகளாக, குறிப்பாக, சென்ற 3 ஆண்டுகளில் அடுத்தடுத்து பருவ மழை பொய்த்ததனால், கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுச் சென்னை மாநகரமே தண்ணீரின்றித் தவித்தது. இதனால், மாநகரின் மூன்று குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களிலும் மிகக் குறைவான நீர் இருப்பே இருந்தது. இதன் விளைவாக, 18.1.2003 முதல், ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்கும் ஏற்பாட்டை அரசு அறிமுகப்படுத்த வேண்டியது ஆயிற்று.



வீராணம் ஏரி – சுத்திகரிக்கப்படாத நீர் உள்வாங்கும் அமைப்பு

சென்னை மாநகரில் ஏற்படக்கூடிய பூதாகரமான தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டும் எனில், கூடுதலாக ஒரு நீர் ஆதாரம் தேவை என்பதை 1993–ஆம் ஆண்டிலேயே உணர்ந்த காரணத்தால், சென்னை மாநகரின் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண, கூடுதலாகத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வேண்டும் என்று தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் புதிய வீராணம் திட்டத்தை அப்போதே அறிவித்தார்கள். இந்தத் திட்டத்திற்கு உலக வங்கியும் 1,638 கோடி ரூபாய் கடன் வழங்க ஒப்புக் கொண்டது. இந்த நிலையில்தான் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பில் புதிதாக அப்போது பொறுப்பேற்ற தி.மு.க. இந்தத் திட்டம் குறித்து உளப்பூர்வமாக ஆய்வு செய்து இருந்தால், இதன் மூலம் கிடைக்க இருக்கும் பலன்கள் குறித்து நன்கு உணர்ந்து, இந்தத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி இருக்கும். ஆனால், அவ்வாறு செய்தால் இதில் கிடைக்கும் பெயரும், புகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்குப் போய் விடும் என்ற குறுகிய நோக்கத்துடன் இத்திட்டம் கைவிடப்பட்டது. 2001–ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், புதிய வீராணம் திட்டத்துக்கு புத்துயிர் அளித்து, 2003–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் புதிய வீராணம் திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

வடகிழக்குப் பருவமழை மீண்டும் ஒரு முறை பொய்க்குமேயானால், சென்னை மாநகரில் கடும் தண்ணீர் பிரச்சினை உருவெடுக்கும். அந்தநேரத்தில், சென்னைக்குத் தண்ணீர் வழங்க கூடுதலாக மேலும் ஒரு நீர் ஆதாரத்தை நாம் ஏற்படுத்தவில்லை என்றால், சென்னை மாநகரை விட்டே மக்களை வெளியேற்ற வேண்டிய ஒரு அவல நிலை ஏற்பட்டு விடும். ஒருபோதும், அப்படி நிகழ இடம் கொடுத்து விடக்கூடாது என்று உறுதி பூண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்பட ஆரம்பித்தார்கள். இதன் அடிப்படையில்தான் எதிர்க்கட்சித் தலைவர்களும், வேறு சிலரும் செய்த கடும் விமர்சனங்களையும் பொருட்படுத்தாது, புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் முடிவு செய்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அப்போது எடுத்த முடிவு, மிகவும் சரியானது என்பது இப்போது நிரூபணமாகி, எதிர்க்கட்சிகளின் சந்தேகங்களும், குறை கூறியோரின் கூற்றுகளும் தவறு என்று இன்று மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. இடையூறுகளைத் தகர்த்து, இடர்ப் பாடுகளைத் தவிடு பொடியாக்கி, புதிய வீராணம் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தியதன் மூலம், 2004–ஆம் ஆண்டின் கோடையில் சென்னை மாநகரிலிருந்து மக்கள் வெளியேற வேண்டிய நிலைமை தவிர்க்கப்பட்டது.

வடகிழக்குப் பருவமழை முற்றிலும் பொய்த்துவிட்டது என்பது 2003–ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலேயே தெளிவாகி விட்டது. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளிலும் தண்ணீர் இருப்பு கடந்த 54 ஆண்டுகளில், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு, மிகவும் குறைந்து விட்டது. இதன் விளைவாக, 2003–ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலேயே சென்னை மாநகரில் குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதை அறவே நிறுத்த வேண்டியதாயிற்று. இவ்வாறு டிசம்பர் இறுதியிலேயே குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதை நிறுத்த வேண்டிய நிலைமை முன் எப்போதும் ஏற்பட்டதில்லை. சாதாரணமாக, டிசம்பர் திங்கள் இறுதியில் மூன்று நீர்த் தேக்கங்களிலும், மேலும் சில மாதங்களுக்குக் குழாய் மூலம் தண்ணீர் வழங்கக் கூடிய அளவுக்கு நீர் இருக்கும். புதிய வீராணம் திட்டத்தை விரைந்து செயல்படுத்தி, அதன் பயனாக கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு, 2004–ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு நிலவும் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மிகுந்த சாமர்த்தியத்துடனும், விவேகத்துடனும் சமாளித்தார்கள்.

சென்னை மாநகரில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்துகின்ற வகையில், ஒரு தெரு கூட தவறாமல், நகரின் மூலை முடுக்குகளில் எல்லாம் கூட, நாள்தோறும் தவறாது லாரிகள் மூலம் தண்ணீர் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு அசாதாரண முயற்சிகளை மேற்கொண்டது. தொடர்ந்து பருவமழை பொய்த்ததால், சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளும் அறவே வற்றிப் போயின. கிணற்று வயல்களில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து போனது. கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நீர் பெற முடியாத நிலைமை ஏற்பட்டது. இவற்றின் காரணமாக, மிக மோசமான தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சென்னை மாநகர் சந்தித்தது. ஆனால், வழங்கப்படுகின்ற தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டாலும், தண்ணீர்ப் பற்றாக்குறையின் கடுமையை மக்கள் உணரா வண்ணம், கிடைக்கின்ற நீர் குறை சொல்ல முடியாத அளவுக்கு முறையாகப் பகிர்ந்து வழங்கப்படுவதை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு உறுதி செய்தது. 2004 ஜூன் வாக்கில் சென்னை மாநகரில் இருந்து மக்களை வெளியேற்ற வேண்டியிருந்திருக்கும் என்பதுதான் அன்றைக்கு இருந்த எதார்த்த நிலை. கடுமையான எதிர்ப்புகளுக்கு இடையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மிகவும் துணிச்சலோடு, 2003 பிப்ரவரியில் புதிய வீராணம் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். 2004 ஜூன் வாக்கில் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தென்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, புதிய வீராணம் திட்டக் குழாய்கள் மூலம், பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப் படுகைகளின் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீரை எடுத்து, அதன் மூலம் 2004 ஜூன் மாதத்தில், சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 75 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டுவர முடிந்தது. இந்த அளவு, நாள் ஒன்றுக்கு 90 மில்லியன் லிட்டராக மேலும் உயர்த்தப் பட்டது. இது சென்னை மாநகர மக்களின் துயரைப் பெரும் அளவுக்குத் தணித்தது. தண்ணீர் வழங்கல் 2004 ஜனவரியில் நாள் ஒன்றுக்கு 175 மில்லியன் லிட்டர் என்ற அளவிலிருந்து, 2004 ஜூன் மாதத்தில் 205 மில்லியன் லிட்டராக உயர்த்தப்பட்டது. இதனால், 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சென்னையிலிருந்து மக்கள் வெளியேற வேண்டிய நிலை தவிர்க்கப்பட்டது.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகள் அறவே வறண்ட கோடையிலும், தண்ணீர் வழங்கப்படும் அளவை உயர்த்திய அதிசயம் நிகழ்ந்தது என்றால், அதற்குக் காரணம் புதிய வீராணம் திட்டக் குழாய்களைப் பதித்து, ஆழ்துளைக்கிணறுகளில் இருந்து தண்ணீர் கொண்டு வர முடிந்ததுதான்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு புதிய வீராணம் திட்டத்தை மேற்கொண்டு, அதற்கான குழாய் அமைக்கும் பணிகளையும் உடனடியாகத் தொடங்கி, ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீர் கொண்டு வந்ததால்தான், தண்ணீர்ப் பஞ்சத்திலிருந்து சென்னை மாநகர மக்களைக் காப்பாற்ற முடிந்தது.



குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் – சுத்திகரிக்கப்பட்ட நீரேற்று நிலையம் – வடக்குத்து



நீர் அழுத்தம் குறைக்கும் தொட்டி – காடாம்புலியூர்

நீர் கொண்டு செல்லும் தேனிரும்புக் குழாய்கள்

பண்ருட்டி–நெய்வேலி ஊற்றுப் படுகையைச் சேர்ந்த ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுத்து, புதிய வீராணம் திட்டம் குழாய்கள் மூலம் 2004 ஜூன் மாதத்தில் கொண்டு வரப்பட்ட போதும்கூட ஒரு சிலர் "ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீர்தான் வருகிறது ; வீராணம் ஏரியில் தண்ணீர் எதுவும் இல்லை; ஆகவே, இந்தத் திட்டம் தோல்வி அடைந்து விட்டது" என்று விமர்சிக்கத் தயங்கவில்லை. ஆனால், இந்த விமர்சனங்களைப் பொருட்படுத்தாது ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் கோடையில் சென்னை மாநகருக்கு வழங்கப்படும் என்றும், பருவ மழை பெய்து வீராணம் ஏரிக்குத் தண்ணீர் வந்தவுடன், அங்கிருந்து புதிய வீராணம் திட்டம் மூலமாக சென்னை மாநகருக்கு, நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்படும் என்றும், 5.8.2004 அன்றே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அன்றைக்குக் கூறியதைப் போலவே, 13.10.2004 அன்று முதல், பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப்படுகையில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து எடுக்கப்படும் தண்ணீரை நம்பியிராமல், முற்றிலும் வீராணம் ஏரியில் இருந்து மட்டுமே நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கும் பணி தொடங்கப்பட்டது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். தொடர்ந்து, வீராணம் ஏரியில் இருந்து தற்போது நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப் படுகின்றது. இந்தத் தண்ணீர் முழுவதும், சென்னை மாநகர மக்களுக்கு ஒருநாள் விட்டு ஒருநாள், குழாய்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம் குறித்து கூறப்பட்ட இன்னொரு குற்றச்சாட்டு, ஏரியின் ஆயக்கட்டு விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், விவசாயிகள் பாதிக்கப்படும்படி விட்டுவிட மாட்டேன் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். அன்றைக்குச் சொன்னதை, சொன்னபடி, இன்றைக்கு உறுதிப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் எடுப்பதால், அந்த ஏரி ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள விவசாயிகளின் நலன் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு உறுதி செய்து இருக்கிறது. கல்லணையில் இருந்து கூடுதலாக விடுவிக்கப்படும் தண்ணீரே, சென்னை மாநகருக்கு இந்த திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வாறாக, வீராணம் ஏரி ஓர் இடைப்பட்ட நீர்த்தேக்கமாகத்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, வீராணம் ஏரி ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள விவசாயிகள், எந்த வகையிலும் இந்தத் திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக எவரும் ஒரு போதும் கூற முடியாது.

வீராணம் ஏரி ஆயக்கட்டுப் பாசனம் எக்காலத்திலும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்ற நோக்கத்திலும் வீராணம் திட்டத்தின் மூலம் ஏரியில் நீர் இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஆண்டு முழுவதும் சென்னைக்கு தினசரி 180 மில்லியன் லிட்டர் என்ற அளவில், நீர் விநியோகம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலும் மற்றுமொரு திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி கொள்ளிடம் ஆற்றுப் பரப்பிலேயே, 6 நீர் சேகரிப்புக் கிணறுகளை அமைத்து, தினசரி 150 மில்லியன் லிட்டர் நீர் எடுத்து, சேத்தியாதோப்பில் உள்ள வீராணம் ஏரியிலிருந்து நீர் எடுக்கும் கட்டுமான அமைப்பு வரை, குழாய் மூலம் எடுத்துச் சென்று, பின்னர் சென்னைக்குக் கொண்டு செல்லும், 300 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வீராணம் ஏரியின் நீர் இருப்பு குறைவாக இருக்கும் காலங்களிலும், நீர் இருப்பு இல்லாத காலங்களிலும், கொள்ளிடம் ஆற்றுப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள கிணறுகளிலிருந்து நீர் எடுக்கவும், இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், வீராணம் ஏரியின் பாசனம் பாதிக்கப்படாதது மட்டுமல்லாமல், சென்னைக்குத் தினசரி குறைந்தபட்சம் 150 மில்லியன் லிட்டர் நீர், தொடர்ந்து எக்காலத்திலும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பண்ருட்டி – நெய்வேலி ஊற்றுப்படுகையில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து நீர் எடுப்பதால், எவ்வித பாதிப்பும் இல்லை என்பது ஆதாரப்பூர்வமாக அறியப்பட்ட போதிலும், அந்த ஊற்றுப்படுகையில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து நீர் எடுக்கப்படுவது இதனால் தவிர்க்கப்படும்.

கடந்த அக்டோபர் மாதம் ஓரளவு மழை பெய்த போதும் கூட, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளிலும் போதிய தண்ணீர் இருப்புச் சேரவில்லை. மேலும், கிருஷ்ணா நதி நீரும் இன்னும் வந்து சேரவில்லை. இந்தச் சூழ்நிலையில், குழாய்கள் மூலமாகத் தண்ணீர் வழங்குவது என்பது, ஒரு தொலைதூரக் கனவாகத்தான் இருந்திருக்க முடியும். ஆனால், திட்டமிட்டவாறு நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்குகின்ற வகையில், புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதனாலேயே, குழாய்கள் மூலம் 13.10.2004 முதல் சென்னை மாநகரத்தில் தண்ணீர் வழங்குவது சாத்தியமாகி உள்ளது.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகள், முற்றிலும் வறண்டு போய், கிருஷ்ணா நதி நீரும் வந்து சேராத நிலையில், சென்னை மாநகரில் குழாய் மூலம் தண்ணீர் வழங்கும் ஏற்பாட்டை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் தொடங்கி வைக்க முடிந்தது என்றால், அதற்குக் காரணம், சென்னை மாநகர் வாழ் மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்கின்ற வகையில், தொலைநோக்குப் பார்வையோடு திட்டம் தீட்டி, புதிய வீராணம் திட்டத்தை உரிய நேரத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் நிறைவேற்றி முடித்ததுதான்.

புதிய வீராணம் திட்டம், மிகக் குறுகிய காலத்தில், சிறப்பான முறையில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. வட கிழக்குப் பருவ மழை பொய்த்து, குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளுக்குப் போதிய நீர் வராத போதிலும் கூட, இந்தத் திட்டம், சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும், நம்பகமான ஒரு நீர் ஆதாரமாக அமைவதை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் உறுதிப்படுத்தி உள்ளார்கள்.

மக்களைப் பாதிக்கும் மாபெரும் பிரச்சினைகளுக்குப் பல்வேறு தீர்வுகளைச் சிந்தித்து, அவற்றில் ஒற்றைத் தீர்வை மட்டும் நம்பியிராமல், ஏற்புடைய தீர்வுகள் எல்லாவற்றிற்கும் செயல்வடிவம் தந்தால்தான், நிரந்தரத் தீர்வு நிச்சயமாகக் கிடைக்கும். ஆகவேதான், சென்னைப் பெருநகர் பகுதிக்கு, நாள் ஒன்றுக்கு தேவைப் படுகிற, 840 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்க இயலும் வகையில், தற்போதைய மூன்று நீர்த்தேக்கங்கள், கிருஷ்ணா நதி நீர், கிணற்று வயல்களில் இருந்து கிடைக்கின்ற நிலத்தடி நீர், தற்போது நிறைவேற்றப் பட்டுள்ள புதிய வீராணம் திட்டம் மற்றும் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம், ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை இந்த அவைக்கு மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விதண்டாவாதங்களைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல், வீணான சந்தேகங்களுக்கு இடம் கொடுக்காமல், தமிழகத் தலைநகரின் தாகத்தைத் தணிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன், மக்கள் மீது முழு நம்பிக்கை வைத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்பட்டதன் விளைவாக, புதிய வீராணம் திட்டம் இன்று வெற்றிகரமான திட்டமாக ஆகியுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தளராத முயற்சிக்குக் கிடைத்த, தனிப்பெரும் பரிசுதான் புதிய வீராணம் திட்டத்தின் வெற்றி.

கடும் தண்ணீர்ப் பிரச்சினையால் சென்னை நகரம் பாதிக்கப்பட்டு, தவியாய்த் தவித்துக் கொண்டிருந்த நிலையில், அதிரடி மாற்றமாய், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தன்னிகரற்ற சாதனையால், சென்னை மாநகர மக்கள் குழாய்கள் மூலம் தண்ணீர் பெற்று, மன நிறைவு கொண்டிருக்கிறார்கள். இதற்கு அடிப்படையாக, புதிய வீராணம் திட்டத்தை, தொலைநோக்குப் பார்வையுடன் தீர்க்கமாய்த் திட்டமிட்டு, திறம்படச் செயல்படுத்தி, 'ஏற்றது ஒரு கருத்தை எனது உள்ளம் என்றால், எவர்வரினும் நில்லேன் அஞ்சேன்' – என்னும் உறுதிப்பாட்டோடு செயல்படுத்தி, இத்திட்டத்தின் வெற்றிக்கு வழி வகுத்து வரலாற்றுச் சரித்திரச் சாதனை படைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களைப் பொதுமக்கள் நன்றியுடன் மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

சென்னை மாநகர மக்களுக்குக்
குடிநீர் வழங்கும்
புதிய வீராணம் திட்டத்தின்
வெற்றி குறித்து
மாண்புமிகு பொதுப்பணி,
மதுவிலக்கு & ஆயத்தீர்வை
மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்
திரு. **ஓ.பன்னீர்செல்வம்** அவர்கள்
22.11.2004 அன்று
சட்டப்பேரவையில் அளித்த அறிக்கை.

சதாவதானி செய்குத்தம்பி பாவலர்
பிறந்தநாள் விழா

தமிழ் இலக்கண இலக்கியங்களில் தேர்ந்த ஞானம் பெற்ற தமிழ் அறிஞரான சதாவதானி செய்குத்தம்பி பாவலர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாறு – இடலாக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

1907 மார்ச் 10–ஆம் தேதி சென்னையில் தமிழ் அறிஞர்கள் முன்னிலையில் சதாவதான நிகழ்ச்சிகள் செய்து பாராட்டுப் பெற்ற, சிறந்த தமிழறிஞராகிய பாவலர் அவர்கள் நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, திருக்கோட்டாற்று திருப்பத்தந்தாதி, திருமதீனத்தந்தாதி, கோட்டாற்றுக் கலம்பகம், கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், கல்வத்து நாயகம், இன்னிசை பாமாலை, நீதி வெண்பா, ஷம்சுத்தாசீன் கோவை போன்ற கவிதை நூல்களையும், தேவலோக பழிக்குற்ற வழக்கு, வேதாந்த விவகார பழிக்குற்ற வழக்கு போன்ற வசன நடை காவியங்களையும் எழுதியுள்ளார்.

பாவலர் சீரிய தமிழறிஞர் மட்டுமின்றி நாட்டின் விடுதலைப் போராட்ட வீரராகவும் திகழ்ந்தவர். அயல்நாட்டுத் துணிகள் புறக்கணிப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்ற இயக்கங்களில் தீவிரமாகப் பங்கேற்றவர்.

பாவலரது தமிழ்த் தொண்டினையும், நாட்டுப் பற்றினையும் சிறப்பிக்கும் வகையில் முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் 29.4.1984 அன்று பாவலர் வாழ்ந்த இடமான கோட்டாறில் தமிழக அரசு சார்பில் நினைவுமண்டபம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு, பின்னர் 26.9.1987 அன்று திறந்து வைக்கப்பட்டது.

நாட்டிற்கு உழைத்த நல்லவர்களை, சுதந்திரப் போராட்டத் தியாகிகளை, தமிழறிஞர்களைப் போற்றி பாராட்டும் வகையில் விழா எடுத்து கௌரவிக்கும் தமிழக அரசு சார்பில் சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்தநாள் விழா ஆண்டுதோறும் அரசால் கொண்டாடப்பட்டு வருகிறது.

2004–ஆம் ஆண்டில் சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்தநாள் விழா தமிழக அரசின் சார்பில் அக்டோபர் திங்கள் 8–ஆம் நாளன்று கோட்டாறு–இடலாக்குடி சதாவதானி செய்குத்தம்பி பாவலர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் சதாவதானி செய்குத்தம்பி பாவலரின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து, பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் மற்றும் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. என். தளவாய் சுந்தரம் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர், "நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் தொண்டாற்றிய தியாகச் சீலர்களின் நிறைவான பணியை நினைவு கூறும் வகையிலும், அவர்களின் வரலாற்றை இளைய சமுதாயத்தினரும் அறிந்து, அவர்கள் காட்டிய நல்வழியைப் பின்பற்றி சமுதாயத் தொண்டாற்ற வேண்டும் என்ற நோக்குடன் தமிழறிஞர்களுக்கும், சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும் விழாக்கள் எடுத்து அரசு கௌரவித்து வருகிறது.

அந்த வகையில் தமிழுக்கு மட்டுமல்லாமல் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் சேவை செய்த பாவலருக்குப் பெருமை சேர்த்திடும் வகையில் அரசு சார்பில் பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது. பாவலரின் செயல்பாடுகளை, அவர் நாட்டுக்கு ஆற்றிய அரும்பணிகளை மாணவ சமுதாயம் முழுமையாகத் தெரிந்து பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அவரது பெயரில் அமைந்த பள்ளியில் விழா எடுக்கப்படுகிறது. நாடு நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதற்காக தன்னையே அர்ப்பணித்தவர் பாவலர் என்பதால் இன்னும் 100 ஆண்டுகள் கடந்தாலும் பாவலருக்கு விழா தொடர்ந்து நடக்கும். ஜாதி, மதத்திற்கு அப்பாற்பட்டு சமதர்ம சமுதாயம் படைத்திடும் வகையில் பாவலரது சேவை திகழ்ந்தமையால் அவர் மறைந்தாலும், அவரது புகழும் பெருமையும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழுக்காகப் பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர் பாவலரைப் பற்றி மாணவர்கள் நன்கு அறிந்து அவரது நல்ல கருத்துகளை உணர்ந்து நல்லவர்களாக ஒழுக்கச் சீலர்களாக திகழ வேண்டும்'' எனக் கூறினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றும் போது, "சதாவதானி என்று போற்றப்படும் செய்குத்தம்பி பாவலர் அவர்களால் குமரி மாவட்டம் மட்டும் பெருமை அடையவில்லை. தமிழ்ச் சமுதாயமே பெருமை பெற்றுள்ளது. சிறந்த தமிழ்ப் புலவராக மட்டுமின்றி சுதந்திரப் போராட்ட வீரராகவும், மதநல்லிணக் கத்திற்காகப் பாடுபட்டவராகவும் பாவலர் திகழ்ந்துள்ளார். அதுமட்டுமல்ல தீண்டாமையை ஒழிக்க தந்தை பெரியாருடன் இணைந்து பாடுபட்டவர் என அவரது வரலாறு தெரிவிக்கிறது. இப்படிப்பட்ட நல்லவர்களை நாம் மறந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் இது போன்ற விழாக்களை அரசு எடுத்து பெருமை சேர்த்து வருகிறது. நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் பாவலர் செய்த சேவைகளை மாணவர்களும் நன்கு அறிந்து அவர் வழியைப் பின்பற்றி நல்லவர்களாக வாழ்ந்து நாட்டுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்" என கேட்டுக் கொண்டார்.

திரு. எஸ். ஆஸ்டின், எம்.எல்.ஏ. அவர்கள், நாகர்கோவில் நகராட்சித் தலைவர் திருமதி. எம். மீனா தேவ் ஆகியோர் விழாவிற்கு முன்னிலை வகித்தனர். சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத் தலைவர் திரு. ஏ. ஜஸ்டின் செல்வராஜ், மாவட்ட வேளாண் விற்பனைக்குழுத் தலைவர் திரு. வி. சுயம்புலிங்கம், அறங்காவலர் குழுத்தலைவர் திரு. ஆர். கிருஷ்ணதாஸ், மாவட்ட கல்வி அலுவலர் திருமதி. மேரி ஜெசி ரோச், சதாவதானி பாவலர் அறக்கட்டளை தலைவர் பாவலர் பி.ஏ. சித்திக் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

– கு. தாணப்பா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகர்கோவில்.

* * *

அகில இந்திய ரக்பி கால்பந்துப் போட்டியில் பங்கேற்ற விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 26.11.2004 அன்று தலைமைச் செயலகத்தில், 5.11.2004 முதல் 7.11.2004 வரை நடைபெற்ற அகில இந்திய ரக்பி கால்பந்துப் போட்டியில் பங்கேற்று, தமிழ்நாடு காவல்துறை அணி இரண்டாம் இடம் பெற்றதைப் பாராட்டி, அணியின் விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசு மொத்தம் 3 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை நேரில் வழங்கினார்கள்.

ஒரிசா மாநிலத்தின் தலைநகரான புவனேஸ்வரில் 5.11.2004 முதல் 7.11.2004 வரை அகில இந்திய ரக்பி கால்பந்துப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 16 அணிகள் கலந்து கொண்டன. இதில் கலந்து கொண்ட தமிழ்நாடு காவல்துறை அணியானது, ஒரிசா பேந்தர்ஸ், கல்கத்தா கிரிக்கெட், கால்பந்து கிளப் மற்றும் சட்டீஸ்கர் அணிகளுடன் லீக் முறையில் போட்டிகளில் விளையாடி, வெற்றி பெற்று, அரையிறுதிப் போட்டியில் கொல்கத்தா காவல் துறை அணியைத் தோற்கடித்தது. பின்னர் நடைபெற்ற இறுதிப்போட்டியில் தமிழ்நாடு காவல் அணி, இந்திய இராணுவ அணியை எதிர்கொண்டு இரண்டாம் இடத்தைப் பெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி தமிழக காவல்துறை ரக்பி கால்பந்து அணி 15.2.2003 அன்றுதான் ஏற்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. இந்தக் குறுகிய காலத்தில் தமிழக காவல்துறை ரக்பி கால்பந்து அணி தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்றுப் பரிசுப் பெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது.

தமிழ்நாட்டில் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அகில இந்திய ரக்பி கால்பந்துப் போட்டியில் பங்கேற்று இரண்டாம் இடம் பெற்ற தமிழ்நாடு காவல்துறை ரக்பி கால்பந்து விளையாட்டு வீரர்கள் 10 பேர் மற்றும் ஒரு பயிற்றுநர், ஆக மொத்தம் 11 நபர்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபாய் வீதம் ரொக்கப் பரிசுக்கான காசோலைகளை 26.11.2004 அன்று நேரில் வழங்கி அவர்களைப் பாராட்டினார்கள்.

❖ ❖ ❖



தமிழகத்தில் புதிய தொழிற் புரட்சி! புதிய வேளாண்மைப் புரட்சி!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

தமிழ்நாட்டின் மையத்தில் அமைந்து இருக்கும் மாவட்டமாகிய பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறுகிற இந்த அரசு விழாவில் இன்று நான் கலந்து கொண்டு உங்களை எல்லாம் காண்பதற்கும் உங்களோடு என் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தது குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மாவட்டத்தை திருச்சி மாவட்டத்திலிருந்து பிரித்து புதிதாக உருவாக்கிய பெருமை உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்கே உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள்.

1995–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாள் பெரம்பலூர் மாவட்டம் பிறந்தது. இந்த மாவட்டம் என்னால் தொடங்கப்பட்டது என்பதற்காகவே, அடுத்து தமிழகத்தை ஆட்சி செய்ய வந்தவர்கள் இந்த மாவட்டத்தைப் புறக்கணித்தார்கள். வறட்சியால் அடிக்கடி பாதிக்கப்படும் மாவட்டம் என்பதை அறிந்திருந்தும் பொருளாதாரத்தில் பின் தங்கிய மாவட்டம் பெரம்பலூர் மாவட்டம் என்பது தெரிந்திருந்தும், இந்த மாவட்டத்தை முந்தைய அரசு வேண்டும் என்றே புறக்கணித்து மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொண்டது.

2001–ஆம் ஆண்டு மே மாதம் நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றதும், இந்த மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளில் மிகுந்த அக்கறை காட்டினேன். அதன் தொடர்ச்சியாக, பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி பெற்று வருகின்ற மாவட்டமாக இன்றைக்குப் பெரம்பலூர் மாவட்டம் விளங்கி வருகின்றது.

செய்வதைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்; அவ்வாறு சிறப்பாகச் செய்வதையும் விரைவாகச் செய்ய வேண்டும். இந்தக் குறிக்கோளையே முன் வைத்து உங்கள் அன்புச் சகோதரியின் அரசு செயல்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.



மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைகளில் கூட விரைந்து தீர்வு காண முடியாத தலைவர்களும், தீர்வு காண விரும்பாத தலைவர்களும் நம் நாட்டில் உண்டு.

ஆனால், மக்களுக்கான எந்தத் திட்டமும் தாமதம் இன்றி விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பது தான் உங்கள் அன்புச் சகோதரியின் விருப்பம்; இலட்சியம் !

அதனால்தான், எத்தனை விரைவாகத் திட்டங்களைச் செய்து முடிக்க முடியுமோ அத்தனை விரைவாகத் திட்டங்கள் செய்து முடிக்கப்படுவதை நான் கவனமாகக் கண்காணித்து வருகிறேன்.

அவ்வாறு விரைந்து செயல்பட்டு குறைந்த காலத்தில் நிறைவாகச் செய்து முடிக்கப்பட்டதே புதிய வீராணம் திட்டம். பல ஆண்டுகளாக சென்னை மாநகரத்தைப் பாதித்துள்ள கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க கூடுதலாக ஒரு நீர் ஆதாரம் தேவை என்பதை உணர்ந்து நான், 2003–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் புதிய வீராணம் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, மிகத் துரிதமாகப் பணிகளை முடுக்கி விட்டு, குறுகிய காலத்தில் பணிகளை நிறைவேற்றச் செய்து, 13.10.2004 அன்று முதல் சென்னை மாநகர மக்களுக்குக் குழாய்கள் மூலம் வீராணம் தண்ணீர் கிடைக்கச் செய்தேன்.

720 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வீராணம் திட்டம் மட்டும் நிறைவேற்றப்பட்டு இருக்காவிட்டால், தண்ணீரே இல்லாத காரணத்தால் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரத்தை விட்டே மக்கள் காலி செய்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கும். அந்த நிலை ஏற்படாமல் தடுத்து நிறுத்தியது எனது தொலைநோக்குப் பார்வையும், துரித நடவடிக்கையும் தான்.

ஆனால், 'வீராணம் திட்டம் வீணான திட்டம்' என்று வீம்பு பேசிக் கொண்டிருந்தவர்கள், இந்தத் திட்டத்தால் நிரந்தரப் பயனில்லை என்று ஜோதிடம் கூறியவர்கள், இந்தத் திட்டம் முழுக்க முழுக்கத் தோல்வியான திட்டம் என்று அபாயச் சங்கு ஊதியவர்கள் – இவர்களது தடைகளை எல்லாம் மீறித் தான் புதிய வீராணம் திட்டம் இன்று மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறந்து விட இயலாது.

இந்த மகத்தான வெற்றிக்குப் பிறகும் முழு மன நிறைவு அடைந்து விடாமல் சென்னை நகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய மேலும் என்ன செய்யலாம் என்பதை ஆராய்ந்து இன்னும் ஒரு திட்டத்தை நான் நிறைவேற்ற எண்ணினேன். குறைவாக மழை பெய்யும் ஆண்டுகளில் வீராணம் ஏரியில் போதுமான அளவு நீர் இருக்காது. அப்போதும் சென்னை மாநகருக்குத் தண்ணீர் கிடைத்தாக வேண்டும் என்று தீர்மானித்து கொள்ளிடம் நீர்ப் படுகையில் உள்ள ஆற்றின் உட்பரப்பு நீரை எடுத்து, சேத்தியாத் தோப்புக்குக் கொண்டு சென்று, ஏற்கெனவே வீராணம் திட்டத்தின் கீழ் செயலாக்கப் பட்டிருக்கும் உள் கட்டமைப்புகள் மூலம் சென்னை நகருக்கு நீரேற்றம் செய்யும் திட்டம்தான் அந்தத் திட்டம் !

வீராணம் ஏரியில் போதுமான அளவு நீர் இருக்கும்போது வீராணம் ஏரியிலிருந்து நீர் எடுத்தும், வீராணம் ஏரியில் நீர் இல்லாத போது தற்போது செயல்படுத்த உத்தேசித்துள்ள திட்டமாகிய கொள்ளிடம் ஆற்றின் உட்பரப்பு நீரை 6 கிணறுகளில் இருந்து எடுத்தும், சென்னை நகரின்

குடிநீர்த் தேவைக்கு தொடர்ச்சியாக நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டரிலிருந்து 180 மில்லியன் லிட்டர் வரை நீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட உள்ள இத்திட்டத்திற்கான அடிக்கல்லை இன்று நான் நாட்டியதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

புதிய வீராணம் திட்டத்தைப் போலவே புதிய வீராணம் விரிவாக்கத் திட்டமாகிய இந்தத் திட்டமும் விரைவில் நிறைவேற்றப்படும். 2005–ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் மொத்தப் பணிகளும் முடிக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படுவதால், இப்பகுதியிலுள்ள விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்று, உண்மைக்குப் புறம்பான அச்சத்தை விவசாயிகளின் மத்தியில் ஏற்படுத்த ஒரு சிலர் முனைந்துள்ளனர். புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தின் விவரங்களை மூடி மறைத்து, கொள்ளிடம் ஆற்றுப் பகுதியில் ராட்சத ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, நிலத்தடி நீர் உறிஞ்சி எடுக்கப்பட்டு, சென்னை நகருக்கு வழங்கப்படும் என்ற ஒரு பொய்யான பிரச்சாரத்தை, வேண்டும் என்றே ஒரு சிலர் மேற்கொண்டுள்ளனர். உண்மையில், இத்திட்டத்தின் கீழ், கொள்ளிடம் ஆற்றின் உட்பரப்பு நீரைச் சேகரிப்பதற்காக 6 நீர் சேகரிப்புக் கிணறுகள் அமைக்கப்பட்டு அதிலிருந்து தான் தண்ணீர் எடுக்கப்படும்.

கீழ் அணையில் (Lower Anicut) பாசனப் பருவத்தில் வினாடிக்கு 4,000 கன அடி என்ற வீதத்தில் மேற்பரப்பில் தண்ணீர் கிடைக்கும். கீழ் அணையின் ஆயக்கட்டு பகுதிகளுக்கு சாகுபடிக்கு அந்தப் பருவத்தில் எடுக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 3,000 கன அடி தான். எனவே, மேற்பரப்பில் உபரியாக உள்ள தண்ணீரின் பெரும் பகுதி, நீர் சேகரிப்புக் கிணறுகள் அமையும் ஆற்றின் உட்பரப்பில், சேமித்து வைக்கப்படுகிறது. சேமிப்பு கிணறுகள் அமையும் பகுதியின் உட்பரப்பில் மணல் பகுதியின் ஆழம் சுமார் 25 மீட்டர் என கணக்கிடப்பட்டுள்ளது. நீர் சேகரிப்புக் கிணறுகள் 20 மீட்டர் ஆழத்தில்தான் அமைக்கப்படும். எனவே, நீர் சேகரிப்புக் கிணறுகளில் இருந்து பெறப்படும் தண்ணீர், கொள்ளிடம் ஆற்றின் மணல் பரப்பில் சேகரிக்கப்படும் தண்ணீர் தான்; நிலத்தடி நீர் அல்ல.

கொள்ளிடம் ஆற்றின் மேற்பரப்பிலும், உட்பரப்பிலும் கிடைக்கப் பெறும் தண்ணீரின் அளவு நாள் ஒன்றுக்கு 2,360 மில்லியன் லிட்டர் என்று தொழில்நுட்ப வல்லுநர்களால் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் ஏற்கெனவே குடிநீர் வாரியத்தால் போடப்பட்டுள்ள கிணறுகளில் இருந்தும், தற்போது சென்னை குடிநீருக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள 6 நீர் சேகரிப்புக் கிணறு களிலிருந்தும், நாள் ஒன்றுக்கு 350 மில்லியன் லிட்டர் தண்ணீர் மட்டும் தான் எடுக்கப்படும். அதாவது, நீர் இருப்பில் 14.8 சதவிகிதம் தான் எடுக்கப்படும். எனவே, விவசாய நிலங்களில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் நீர்

வற்றிவிடும் என்பதற்கோ, அல்லது தண்ணீர் உப்பு நீராக மாறிவிடும் என்ற அச்சத்திற்கோ, எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லை.

இவ்வாறு, ஆற்றின் உட்பரப்பில் உள்ள தண்ணீரை எடுப்பதால், விவசாய நிலங்களில் உள்ள நிலத்தடி நீர் எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்பது, நிலத்தடி நீர் ஆய்வு இயக்ககம் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து உறுதி செய்யப்பட்ட பிறகுதான், இத்திட்டத்திற்கு எனது அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சென்னை மாநகர மக்களுக்குத் தடையின்றி குடிநீர் வழங்கிட முக்கியத்துவம் அளிக்கும் அதே வேளையில், விவசாயிகளின் நலன் எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் எனது அரசு மிகுந்த கவனத்துடன், கண்ணும் கருத்துமாக உள்ளது என்பதை இந்த வேளையில் அறுதியிட்டுத் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். விவசாயிகள் நலனைக் காப்பதில் வேறு எவரைக் காட்டிலும், அதிக அக்கறை கொண்டுள்ள எனது தலைமையிலான அரசு, விவசாயிகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாத வகையில் தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிவெடுத்துள்ளது என்று நான் உறுதியிட்டுக் கூற விரும்புகிறேன். எனவே, வீண் வதந்திகளால் விவசாயிகள் எந்தவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்ட மக்களாகிய உங்களைக் காண வந்திருக்கும் நான், இந்த மாவட்டத்திற்கு மாபெரும் வளர்ச்சித்திட்டங்களையும், மாவட்டத்தைச் சேர்ந்த அடித்தளத்து மக்களுக்கு நலத் திட்ட உதவிகளையும் வழங்குவதற்காக வந்திருக்கிறேன்.

இன்றைய தினம் பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து மக்களும் பயன் அடையும் வகையில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாக, 96 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 8,570 முடிக்கப்பட்ட பணிகளைத் திறந்து வைத்துள்ளேன். 183 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 493 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன். மேலும், பல்வேறு துறைகளின் சார்பாக, 9 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை 20,025 நபர்களுக்கு வழங்க உள்ளேன். ஆக மொத்தம், 289 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களைப் பெரம்பலூர் மாவட்டத்திற்குக் கொண்டு வந்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு எனது அரசு எப்பொழுதும் முன்னுரிமை தந்து வருகிறது.

“தமிழகத்தில் புதிய தொழிற் புரட்சியை நிகழ்த்தி வருவதைப் போலவே புதிய வேளாண்மைப் புரட்சியையும் எனது தலைமையிலான அரசு நிகழ்த்தி வருகிறது. அதன் ஓர் அங்கமாக தமிழ்நாட்டில் தரிசாக உள்ள சுமார் 50 இலட்சம் ஏக்கர் பயிரிடத்தக்க தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற விரிவான தரிசு நிலத் திட்டத்தை நான் அறிவித்தேன். மழையையே பெரிதும் நம்பியுள்ள பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு இத்திட்டம் பெரும் பயன் அளித்து வருகிறது.”

அதன் அடிப்படையில், எனது அரசு பொறுப்பேற்றதில் இருந்து, இந்த மூன்றரை ஆண்டு காலத்தில் இம்மாவட்டத்தில் குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக, 52 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

இந்த இனிய விழாவில் ஜெயங்கொண்டம், உடையார்பாளையம், குரும்பலூர், லப்பைகுடிகாடு பகுதிகளும், ஆண்டிமடம் மற்றும் ஜெயங்கொண்டம் ஒன்றியங்களைச் சேர்ந்த 240 குடியிருப்புகளும் பயன்பெறும் வண்ணம், 43 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு குடிநீர்த் திட்டங்களைத் திறந்து வைத்ததிலும்; 20 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்ற இருக்கும் பல்வேறு கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கும், சிறு மின்விசை மற்றும் தனி மின்விசைக் குடிநீர்த் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டியதிலும் அகமிக மகிழ்கின்றேன்.

கிராமப்புற பொருளாதாரம் துரித வளர்ச்சி அடைய சிறந்த சாலைகள் இன்றியமையாதவை ஆகும். எனவே தான் சாலை மேம்பாட்டுக்கு எனது அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

1995–ஆம் ஆண்டு எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தமிழகச் சாலைகளை உலக வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்தத் திட்டமிட்டு செயல்பட்டேன். அதன் பின் வந்த தி.மு.க ஆட்சி இதனைச் செயல்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் தற்போது என்னுடைய அரசின் சீரிய அணுகுமுறையால், 2,160 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு, சாலை மேம்பாட்டுப் பணிகள் துவங்கப் பட்டுள்ளன என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பெரம்பலூர் மாவட்டத்தில் 93.8 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை 145 கோடி ரூபாய் மதிப்பில் இருவழித் தடச் சாலைகளாக மாற்றுவதற்கும்; அரியலூரில் புறவழிச் சாலை

ஒன்று அமைப்பதற்கும்; புதிய மேம்பாலம் ஒன்று அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டியதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், 38 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்ட சாலை மேம்பாட்டுப் பணிகளைத் திறந்து வைத்ததிலும் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழகத்தில் புதிய தொழிற்புரட்சியை நிகழ்த்தி வருவதைப் போலவே புதிய வேளாண்மைப் புரட்சியையும் எனது தலைமையிலான அரசு நிகழ்த்தி வருகிறது. அதன் ஓர் அங்கமாக தமிழ்நாட்டில் தரிசாக உள்ள சுமார் 50 இலட்சம் ஏக்கர் பயிரிடத்தக்க தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற விரிவான தரிசு நிலத் திட்டத்தை நான் அறிவித்தேன். மழையையே பெரிதும் நம்பியுள்ள பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு இத்திட்டம் பெரும் பயன் அளித்து வருகிறது.

இம்மாவட்டத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 41,000 ஏக்கர் தரிசு நிலம் மேம்படுத்தப் பட்டுள்ளது என்பதை அறிந்து நான் மன நிறைவு அடைகிறேன்.

மேலும் 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் தரிசு நிலங்களை மேம்படுத்தும் பல்வேறு பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் அகமிக மகிழ்கின்றேன்.

பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்றைய தினம் நானே எனது கரங்களாலேயே அனைத்து பயனாளி களுக்கும் வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் நேரம் போதாது என்பதை நீங்களே அறிவீர்கள். எனவே, மேடையில் 10 பயனாளிகளுக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை நான் வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அதிகாரிகளும், இப்போதே இங்கேயே வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்ற நீங்கள் அனைவரும் அவற்றை ஆதாரமாகக் கொண்டு, உங்கள் தொழிலை மேம்படுத்தி கடின உழைப்பால் முன்னேறி வாழ்க்கையில் வளம் பெற வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இந்த விழா மிகச் சிறப்பாக நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. விவேகானந்தன் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

14.12.2004 அன்று நடைபெற்ற பெரம்பலூர் மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை

முக்கடல் சங்கமத்தில் அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா

இயற்கை அன்னையின் அரவணைப்பில், இந்தியத் திருநாட்டின் தென்கோடி முனையில் அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல், வங்காள விரிகுடா ஆகிய முக்கடலும் முத்தமிடும் வரலாற்றுச் சிறப்பு மிக்க தலம் கன்னியாகுமரி.

குமரியன்னை தவக்கோலத்தில் நின்று அருள் பாலிக்கும் புண்ணியத்தலம் கன்னியாகுமரியில் ஆதவன் உதித்தலும் மறைதலும் ஒரு தலத்திலே நிகழ்வது தனிச்சிறப்பு.

குமரி அன்னையின் திருக்கோயிலும், வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் தவமிருந்து ஞானோதயம் பெற்ற ஸ்ரீ பாதப்பாறையில் உருவாக்கப்பட்ட விவேகானந்தர் நினைவாலயமும், வான்புகழ் கண்ட வள்ளுவனுக்கு கடல் நடுவே 133 அடி உயர சிலையும், 1,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த இராஜராஜசோழனால் உருவாக்கப்பட்ட குகநாதீஸ்வரர் ஆலயமும், பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபமும், தென் இந்தியாவிலேயே சிறந்த சிற்பக் கலையுடன் கட்டப்பட்ட புனித அலங்கார உபகார மாதா ஆலயமும், அண்ணல் காந்தியடிகள் நினைவு மண்டபமும் கன்னியாகுமரியின் பழம் பெருமையைப் பறைசாற்றுகின்றன.

15.1.1937-இல் மகாத்மா காந்தியடிகள் கன்னியாகுமரிக்கு வருகை தந்தபோது "கடலின் எதிரேயுள்ள குமரிமுனையிலிருந்து இதனை எழுதுகிறேன். முக்கடலும் கூடி உலகத்தின் இணையற்ற எழிற் காட்சியைத் தருகின்றன. ஏனெனில் இது கலங்களை அழைக்கும் கடற்கரையல்ல. இத்திரு நிலத்துக்குமரி அன்னையைப் போலவே சூழ்ந்துள்ள கடல் நீரும் கன்னித்தன்மை பெற்றவையே" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

"I am writing this cape in front of the sea, where three waters meet and furnish a sight unequalled in the world. For this is no port of call for Vessels, like the Goddess, the waters around are virgin" (15-1-1937 - Gandhi).

இத்தகையச் சிறப்பு வாய்ந்த குமரி முனையில் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் அருகில் தேசபிதா மகாத்மா காந்தியடிகளுக்கு நினைவுமண்டபம் எழுப்பப்பட்டுள்ளது. குமரி கடற்கரையில் 1948-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12-ஆம் நாள் மகாத்மா காந்தியடிகளின் அஸ்தி கடலில் கரைக்கப்படுவதற்கு முன்பு பொதுமக்கள் பார்வைக்காக வைத்திருந்து பூஜைகள் செய்யப்பட்ட இடத்தில் நினைவு மண்டபம் அமைக்க, அப்போதைய கேரள அரசின் சார்பில் திரு. ஆச்சார்யா கிருபளானி அவர்களால் 1954-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20-ஆம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டு, 1956-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ஆம் நாள் மேதகு முன்னாள் கேரள ஆளுநர் பி.எஸ். ராவ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

காந்தியடிகளின் சர்வ மத சமத்துவ கொள்கையின்படி மண்டபத்தின் முன் பகுதி கிறிஸ்தவர்களின் ஆலயத்தின்

தோற்றத்துடனும், நடுப்பகுதி இந்துக் கோவிலின் கோபுர அமைப்புடனும் உட்பகுதி ஜும்மா பள்ளிவாசல் அமைப்பாகவும் அனைத்து மதங்களையும் பிரதிபலிக்கும் வகையில் மண்டபத்தின் தோற்றம் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் காந்தியடிகள் பிறந்த தினமாகிய அக்டோபர் திங்கள் 2–ஆம் நாள் பகலவனின் ஒளிக்கதிர்கள் பகல் 12 மணிக்கு மண்டபத்தின் தியானப் பகுதியின் உட்புறம் அமைந்துள்ள அஸ்தி பீடத்தின் மேல் விழுகின்ற வகையில் கட்டடக் கலையுடன் மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

அண்ணல் காந்தியடிகள் மண்டபத்தில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் 2–ஆம் நாள் மகாத்மா

காந்தியடிகள் பிறந்தநாள் விழா தமிழக அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவிற்கு பொதுமக்களும், உள்நாட்டு – வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்து அஸ்தி பீடத்தின் மேல் விழுகின்ற அதிசய ஒளி காட்சியினைக் கண்டுகளித்து அண்ணலுக்கு அஞ்சலி செலுத்துவது வழக்கம்.

இவ்வாண்டின் அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா தமிழக அரசின் சார்பில் அக்டோபர் திங்கள் 2–ஆம் நாள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் புகழஞ்சலி செலுத்தும் போது, "அகிம்சை, அன்பு, அமைதி ஆகியவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்து, உலகிற்கே வழிகாட்டிய உத்தமர் அண்ணல் காந்தியடிகளின் வழி நின்று சமதர்ம சமுதாயம் உருவாக்கிட இளைஞர்கள் உறுதியேற்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

காந்தி மண்டபத்தில் உள்ள அஸ்தி கட்டடத்தின் மீது நண்பகல் 12 மணிக்கு அபூர்வ சூரிய ஒளி விழுந்தது. அபூர்வ சூரிய ஒளி காட்சியை தேச பக்திப் பாடல்கள் முழங்க ஆயிரக்கணக்கானோர் கண்டு களித்தனர்.

விழாவில் திரு. எஸ். ஆஸ்டின், எம்.எல்.ஏ., சிறுபான்மையினர் நல மேம்பாட்டுக் கழகத் தலைவர் திரு. அ. ஜஸ்டின் செல்வராஜ், கன்னியாகுமரி சிறப்பு ஊராட்சித் தலைவர் திரு. குமரி எஸ். ஸ்டீபன், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மாவட்ட குழுத் தலைவர் திரு. எம். நாகப்பன் அவர்கள், கதர் கிராமத் தொழில்கள் வாரிய உதவி இயக்குநர் திரு. சங்கரலிங்கம் ஆகியோர் உட்பட ஆயிரக்கணக்கானோர் அண்ணலுக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

முன்னதாக காந்தி மண்டபத்தில் பெண்கள் திரளாகக் கலந்து கொண்ட ராட்டையில் நூல் நூற்கும் நூற்பு வேள்வியும், குமரி மாவட்ட சர்வோதய சங்கம் சார்பில் சர்வ சமயப் பிரார்த்தனை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

– கு. தாணப்பா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகர்கோவில்.

❖ ❖ ❖

தன்னம்பிக்கை வேண்டும்!

முன்னொரு காலத்தில் மிகப்புகழ் பெற்ற எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் மௌலானா ஜாமி. இவர் பாரசீக மொழியில் பலப்பல காவியங்களை எழுதினார். அவை அழியாப் புகழ் பெற்றவை. அவரிடம் ஒரு வினோதமான வழக்கம் இருந்து வந்தது.

அதாவது வெளியிலிருந்து வீட்டுக்குள்ளே நுழைந்தவுடன் அவர் தன் வீட்டுக் கதவுகள் இரண்டையும் நன்றாக மூடித் தாழ்ப்பாள் போட்டுக் கொள்வார். அவர் வீட்டை விட்டு வெளியேறும் போது இரண்டு கதவுகளையும் நன்றாகத் திறந்து போட்டு விட்டுப் போவார்.

இவர் இவ்வாறு செய்வது எல்லாருக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது.

"இவர் என்ன பைத்தியக்காரரா ? இப்படி ஒரு மனிதர் செய்வாரா ?" என்று அவர்கள் எண்ணிக் கொண்டார்கள். பொறுக்க முடியாத நிலைமை உருவானதும் அவர்களில் ஒருவர் கேட்டார்.

நீங்கள் இப்படிச் செய்வதன் காரணம் என்ன என்று எனக்கும், என் போன்ற உங்கள் நண்பர்களுக்கும் புரிந்து கொள்ள முடியவில்லை.

'இப்படிச் செய்வது ?'

' வீட்டை விட்டு வெளியேறும் போது கதவைத் திறந்து போட்டு விட்டுப் போய் விடுகிறீர்கள்.

வீட்டுக்குள் வரும் போது கதவை மூடிக் கொண்டு உள்ளே இருக்கிறீர்கள்!'

'சரி, அதற்கு என்ன இப்போது ?'

'உங்களின் செயல் எங்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது'

இப்போது மௌலானா ஜாமி சொன்னார்.

'நான் வீட்டுக்குள்ளே இருக்கும்போது அதற்கு உள்ளே இருக்கக் கூடிய மிகவும் விலை உயர்ந்த பொருள் நான்தான். அதனால்தான் கதவுகளை மூடிக் கொள்கிறேன்.

வெளியே செல்லும் போது வீட்டுக்குள் எந்த விலை மதிக்கத்தக்க பொருளும் இல்லை என்று கருதுகிறேன். அங்கிருக்கும் மற்ற பொருட்கள் என் முன் தூசுக்குச் சமானம்.

ஆகையினாலேயே நான் கதவுகளைத் திறந்து போட்டு விடுகிறேன்.'

கேட்டவர் சிலையானார்.

தன் மதிப்பு தனக்கே தெரியும் – நீதிமொழி

"பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்"
– திருக்குறள் 979

'பெருமைக் குணம் என்பது அகங்காரமே இல்லாதிருப்பது. சிறுமைக் குணம் என்பது அகங்காரமே நடத்தையாக உள்ளது.

– "திருக்குறள் காட்டும் எளிய நீதிக் கதைகள்" நூலிலிருந்து.

படமும் செய்தியும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களிடம் **6.12.2004** அன்று தலைமைச் செயலகத்தில், சென்னைப் பெருநகரில் கட்டப்பட்ட கட்டடங்களை "வரன்முறைப்படுத்தும் சிறப்புத் திட்டத்தின்" கீழ், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினால் பெறப்பட்ட ரூபாய் 5 கோடிக்கான காசோலையை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் திருமதி. ஜெயந்தி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள். வீட்டுவசதித்துறை அரசு செயலாளர் (பொறுப்பு) திரு.டி. ராஜேந்திரன், இ.ஆ.ப., மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் – செயலர் திரு.ஜி.சந்தானம், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களிடம் 6.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் (TNPL) சார்பில், 2003–2004ஆம் ஆண்டுக்கான அரசுக்குச் சேர வேண்டிய ஈவுத் தொகை 6 கோடியே 72 இலட்சத்து 23 ஆயிரத்து 475 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். அப்போது, தொழில்துறைச் செயலாளர் திரு. ரமேஷ்ராம் மிஷ்ரா, இ.ஆ.ப., உடனிருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களிடம் **6.12.2004** அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆர். விஸ்வநாதன் அவர்கள், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 2003–2004ஆம் ஆண்டுக்கு அரசுக்குச் சேர வேண்டிய ஈவுத் தொகை ரூபாய் 4 கோடியே 40 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். இந்த நிகழ்ச்சியின் போது, எரிசக்தித் துறைச் செயலாளர் (பொறுப்பு) திரு. என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., உடன் இருந்தார்.



19–11–2004 அன்று, தேசிய ஒருமைப்பாடு தினத்தினையொட்டி தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் தலைமையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டார்கள்.

மூதறிஞர் ராஜாஜி அவர்களின் 126ஆவது பிறந்தநாளையொட்டி, 10–12–2004 அன்று, சென்னை பாரிமுனை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



மகாகவி பாரதியாரின் 123ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள மகாகவி பாரதியாரின் சிலைக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் 11–12–2004 அன்று மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு. கராத்தே ஆர். தியாகராஜன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத் தலைவர் திரு. ஆதிராஜராம் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

உலக வங்கி உதவியுடன் 597.15 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை (19–12–2004)

ஒரு மாநிலம் மனித வளத்தில் மேம்பட்டு இருக்க வேண்டும் எனில், அங்குள்ள மக்கள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இதனால் தான், "அனைவருக்கும் நல்வாழ்வு" என்ற இலக்குடன், மாநில மக்கள் அனைவருக்கும் சுகாதாரச் சேவைகள் அளிப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழும் வகையில் எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில்தான், தன்னிகரற்ற தமிழகத்தைப் படைக்க நான் உருவாக்கிய 15 அம்சத் திட்டத்தில் 'சுகாதாரப் பாதுகாப்பு' ஒரு முக்கிய அம்சமாகச் சேர்க்கப்பட்டு, தமிழக மக்கள் அனைவரின் நலன் பேணுவதில், எனது தலைமையிலான தமிழக அரசு தனி கவனம் செலுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு இவ்வாறு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக இந்தியாவிலேயே சிறந்த சுகாதாரக் குறியீடுகளை அடைந்த மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது. சிசு இறப்பு விகிதத்தைக் குறைக்க தமிழகஅரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன் மாதிரியாகத் திகழ்கிறது. மேலும், குடும்ப நலம், குழந்தைப் பேறு சார் நலம், குழந்தைகள் நலம், தடுப்பூசித் திட்டங்கள் மற்றும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல் போன்ற பிரிவுகளில் தமிழ்நாடு பல சாதனைகளைப் படைத்துள்ளது. எய்ட்ஸ், தொழுநோய், காச நோய் மற்றும் பார்வைக் குறைபாடு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் சுகாதாரத் திட்டடங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது.

தமிழக மக்கள் அனைவருக்கும் தடையற்ற மருத்துவ சேவைகள் வழங்கவும், ஆண், பெண் மற்றும் குழந்தைகள் நலம் பேணி ஆரோக்கியமான வாழ்க்கையை அவர்களுக்கு வழங்கிடவும், எனது தலைமையிலான அரசு, உலக வங்கி நிதி உதவியுடன் 597.15 கோடி ரூபாய் மதிப்பில், 'தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்' என்னும் மாபெரும் சுகாதாரத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் நல்வாழ்வுக்கு என இத்தகைய மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்த நிதி உதவி கோரி உலக வங்கி அணுகப்பட்டது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும் என்று நான் மேற்கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாக ' தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்' உலக வங்கியால் மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதனைச் செயல்படுத்த 110.83 மில்லியன் அமெரிக்கன் டாலர் அதாவது, இந்திய மதிப்பில் 502.95 கோடி ரூபாய் கடன் உதவி வழங்க உலக வங்கி தற்போது ஒப்புதல் அளித்துள்ளது. மாநில அரசின் பங்கான 94.20 கோடி ரூபாயுடன் சேர்த்து 597.15 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களின், குறிப்பாக பெண்கள், ஏழை எளியோர், பழங்குடியினர் ஆகியோரின் உடல் நலத்தை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டம் 2005–ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இதற்கான ஒப்பந்தம் 2005–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உலக வங்கியுடன் செய்து கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 270 மாவட்ட, வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளின் உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். பேறுகால சிக்கல்களுக்கும் மற்றும் இளம் சிசுக்களுக்கான அவசர சிகிச்சைகளுக்கும் 24 மணி நேர சேவைகள் அளிக்க ஒருங்கிணைந்த பேறுகால மற்றும் சிசு கவனிப்பு மையங்கள் 62 மருத்துவமனைகளில் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலமாக தெற்கு ஆசியாவிலேயே முதன் முறையாக, தொற்று நோயல்லாத பிற நோய்களான உயர் இரத்த அழுத்தம், கருப்பை வாய் புற்று நோய் ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்தும் மற்றும் சிகிச்சை அளிக்கும் முன் மாதிரித் திட்டங்கள் தமிழகத்தில்தான் செயல்படுத்தப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எளிதில் சென்று அடைய முடியாத இடங்களில் வசிக்கக் கூடிய மலைவாழ் பழங்குடியின மக்களை அணுகி உயர் சிகிச்சை அளித்து அவர்களது உடல்நலத்தைப் பேணும் வகையில் மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்படும். இவை தவிர, நெடுஞ்சாலை விபத்துகளில் அடிபட்டவர்களுக்கு உரிய நேரத்தில் முதலுதவி மற்றும் சிகிச்சை அளிக்கவும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகள் மனநிறைவு அடையும் வண்ணம் மருத்துவமனைகளின் சேவைத் தரத்தை உயர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மருத்துவமனைக் கழிவுகளைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தும் திட்டமும் செயல்படுத்தப்படும்.

மேலும், இந்தத் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைக்ளில், மகப்பேறு பிரிவு உள்நோயாளிகள், வெளி நோயாளிகள் பிரிவுகள், அறுவைச் சிகிச்சை பிரிவு, தீவிர சிகிச்சை பிரிவு ஆகிய பிரிவுகளுக்குத் தேவையான கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். தீவிர சிகிச்சை, இரத்தசுத்திகரிப்புகளுக்கான (Haemodialysis) மருத்துவக் கருவிகள் உயிர்காக்கும் சுவாசக் கருவிகள் (Ventilators) எக்ஸ்–ரே மற்றும் அல்ட்ரா சோனோகிராம் போன்ற நவீன மருத்துவக் கருவிகள் இத்திட்டத்தின் கீழ் அரசு மருத்துவ மனைகளுக்கு அளிக்கப்படும்.

அவசரகால போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கு அவசரகால ஆம்புலன்சு ஊர்திகள் தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 385 வட்டாரங்களுக்கும் அளிக்கப்படும். அனைத்து மருத்துவமனைகளும் ஒருங்கிணைந்த சுகாதார தகவல் மேலாண்மைத் திட்டத்தின் மூலம் இணைக்கப்படும்.

அனைத்து பொது சுகாதார வசதிகளுக்கான கட்டமைப்பு வசதியை வலுப்படுத்துதல், ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்நிலை மருத்துவ நிறுவனங்களிடையே கலந்தாய்வு தொடர்புகளை உருவாக்குதல், மருத்துவப் பணியாளர்களின் திறமையை உயர்த்தி சுகாதார வசதிகளைப் பெருக்குதல், மருத்துவ வசதிகளை அளிக்க தகவல் தொழில் நுட்ப வசதிகளைப் பெருமளவில் பயன்படுத்துதல் மற்றும் சென்றடைய முடியாத குக்கிராமங்களுக்கும், தேவையான அளவு மருத்துவ வசதிகள் இல்லாத பகுதிகளுக்கும் மருத்துவ வசதிகளை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் தமிழக மக்களுக்கு 'சுகாதாரப் பாதுகாப்பு' அளிப்பது என்றும் என்னுடைய தலைமையிலான தமிழக அரசின் கொள்கையை நிறைவேற்ற ' தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்' பேருதவியாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள், 10.12.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தங்களது கல்விச் செலவினை மேற்கொள்ள போதிய நிதி வசதி இல்லாது தவித்த எம்.பி.பி.எஸ்., பல் மருத்துவம், செவிலியர், ஹோமியோபதி, பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் பயிலும் மாணவ மாணவிகள் 79 பேருக்கு, கல்வி நிதி உதவியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் 19 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை நேரில் வழங்கினார்கள்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம்

❖ ❖ ❖

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை

❖ ❖ ❖

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று சுதந்திரம் அடைவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களான தங்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு கொடுத்திருந்த திருநெல்வேலி, நீலகிரி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 6 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளத்தைச் சேர்ந்த திரு. எஸ். ஞான ஒளிவு, நீலகிரி மாவட்டம், நஞ்சநாடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பி.எம். குண்டன், திரு. ஜெ. ஹள்ளி கவுடர், திரு. எல்.காளு, திரு. சி. நஞ்சா கவுடர், மதுரை மாவட்டம், தும்பைப்பட்டியைச் சேர்ந்த திரு. வி. சோமய்யா ஆகிய விடுதலைப் போராட்ட வீரர்கள், தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி, சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்ததாகவும், அதனடிப்படையில் தங்களுக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கக் கோரி பல ஆண்டுகளாக கோரிக்கை மனுக்கள் கொடுத்த போதும் தங்களது கோரிக்கை இதுவரை ஏற்கப்படவில்லை என்றும் தெரிவித்து, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கக் கோரி பல ஆண்டுகளாக கோரிக்கை மனுக்கள் கொடுத்த போதும் தங்களது கோரிக்கை இதுவரை ஏற்கப்படவில்லை என்றும் தெரிவித்து, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியத்தை தங்களுக்கு வழங்கி உதவிட வேண்டும் என்றும் வேண்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவர்களது தியாகத்தைப் போற்றி மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியத்தை உடனடியாக வழங்கிட ஆணையிட்டார்கள். இதன்படி, இவர்கள் அனைவருக்கும் ஓய்வு ஊதியமாக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு மதிப்பளித்து கௌரவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிட ஆணையிட்டுள்ள இந்த ஓய்வு ஊதியத்திற்கான அரசு ஆணை, 4.12.2004 அன்று திருநெல்வேலி, நீலகிரி மற்றும் மதுரை ஆகிய மாவட்ட தலைநகரங்களில் அம்மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மேற்காணும் விடுதலைப் போராட்ட வீரர்களிடம் நேரில் வழங்கப்பட்டது. ❖

தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில்

வீரன் சுந்தரலிங்கம் பிறந்தநாள் விழா

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் வட்டம் கவர்னகிரியில் தமிழக அரசின் சார்பில் வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கு மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வெ. சந்திரசேகரன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. என். தளவாய்சுந்தரம் அவர்கள் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பேசும்போது,

''இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட சுதந்திரப் போராட்டத் தியாகிகளை என்றைக்கும் மறக்க கூடாது என்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தியாகிகளுக்கு விழா எடுத்து வருகிறார்கள். 200 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நாட்டின் நிலைமையினை நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும். அனைத்து நோய்களையும் நாம் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும். தமிழ்நாட்டில் ஆண்டுக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் லிட்டர் இரத்தம் தேவைப்படுகிறது. ஆனால் நம்மிடம் 1.7 இலட்சம் லிட்டர் மட்டுமே இரத்தம் உள்ளது. தமிழக அரசு சுகாதாரத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது'' என்று தெரிவித்தார்.

பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளி களுக்கு ரூ.6 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி அவர்கள் ஆற்றிய உரையில்,

''தென் தமிழகத்தில் 96 கிராமங்களை உள்ளடக்கி, வாழ்ந்து மறைந்த வீரபாண்டிய கட்டபொம்மன் அவையில் சிறந்ததொரு தளபதியாகத் திகழ்ந்தவர் வீரன் சுந்தரலிங்கம் அவர்கள். தியாகிகள் பிறந்த மண்ணில் பெருமை சேர்க்க வேண்டும் என்று பல்வேறுத் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறார்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் 42 ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கான விடுதிகள் உள்ளன. இதில் 10 விடுதிகள் மட்டுமே வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதில் 6 விடுதிகளுக்கு புதிய கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து பேசும்போது,

''வீரன் சுந்தரலிங்கம் அவர்கள் தனது இளம் வயதிலேயே கபடி, வில் வித்தை, வாள் அம்பு எறிதல் போன்ற பல்வேறு விளையாட்டுகளில் திறமை படைத்தவராக இருந்துள்ளார். இது ஒரு குக்கிராமமாக இருந்தாலும் இன்று இந்தியாவில் உள்ள அனைவரும் உற்று நோக்கும் வகையில் அமைந்துள்ளது. இன்று நாட்டில் பலர் சாதித் தலைவர்களாக உள்ளனர். ஆனால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சாதிக்க வல்லத் தலைவராக விளங்குகிறார். வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடும் இந்நாளில் சாதி சமய வேறுபாடு இன்றி அனைவரும் ஒன்றுபட்டு உயர்வோம் என உறுதி கொள்வோம்'' என்று கூறினார்.

திருக்குளத்தைச் சீரமைக்க

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை

சென்னை வில்லிவாக்கத்திலுள்ள அருள்மிகு அமிர்தவல்லித் தாயார் உடனுறை சௌம்ய தாமோதரப் பெருமாள் திருக்கோயில் திருக்குளத்தில் வளர்ந்துள்ள புல்பூண்டு, செடிகள் மற்றும் பாசிகளை உடனே அகற்றவும், திருக்குளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வளர்ந்துள்ள புதர்களை உடனடியாக அகற்றி, தொடர்ந்து தூய்மையாக பராமரிக்கவும், திருக்குளத்தின் படிக்கட்டுகளை செம்மைப்படுத்தி திருக்குளத்தைச் சீரமைக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சென்னை வில்லிவாக்கத்திலுள்ள அருள்மிகு அமிர்தவல்லித் தாயார் உடனுறை சௌம்ய தாமோதரப் பெருமாள் திருக்கோயில் 500 ஆண்டு காலம் பழமை வாய்ந்த மிகவும் பிரசித்திப் பெற்ற கோயிலாகும். இந்தக் கோயிலின் வடக்குப் பகுதியில் 'அமிர்த புஷ்கரணி' என்ற பெயரிலான திருக்குளம் அமைந்துள்ளது. இத் திருக்குளத்தில் தற்போது 10 அடி ஆழத்திற்குத் தண்ணீர் நிரம்பி உள்ளது. சிறப்பு மிக்க இந்தத் திருக்குளம் சரியாக பராமரிக்கப்படாமல் இருப்பதாகவும், திருக்குளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதர்கள் வளர்ந்துள்ளதாகவும், திருக்குளத்திற்குள் புல்பூண்டு, செடி முதலானவை வளர்ந்து பாசி படர்ந்து சரியான பராமரிப்பின்றி இருப்பதாகவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கவனத்திற்குத் தெரியவந்தது.

மிகவும் பிரசித்தி பெற்ற இந்தத் திருக்கோயிலின் திருக்குளத்தை உரிய வகையில் சீரமைத்துப் பாதுகாக்க வேண்டும் என்று தெரிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தத் திருக்கோயில் திருப் பணியை ஒரு இலட்சம் ரூபாய் செலவில் உடனடியாக மேற்கொள்ள ஆணை யிட்டுள்ளார்கள். இத் திருக்குளத்தில் வளர்ந்துள்ள புல்பூண்டு, செடிகள் மற்றும் பாசிகள் முதலானவையும், சுற்றியுள்ள பகுதிகளில் வளர்ந்துள்ள புதர்களும் உடனடியாக அகற்றப்படும். திருக்குளத்தின் அனைத்து படிகளும் செம்மைப்படுத்தப்பட்டு, ஒழுங்குபடுத்தப்படும்.

சென்னை, வில்லிவாக்கம் அருள்மிகு அமிர்தவல்லித் தாயார் உடனுறை சௌம்ய தாமோதரப் பெருமாள் திருக்கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்கள் பயனடையும் வகையில் இந்தத் திருக்கோயில் திருக்குளத் திருப்பணிகளை விரைந்து முடித்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை யிட்டுள்ளார்கள். ★

மாவட்ட கலை மன்றம் மூலம் தெரிவு செய்யப்பட்ட சிறந்த கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கி மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் அவர்கள் பேசும்போது,

''வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களை இராமநாதபுரத்தில் கலெக்டராக இருந்த ஜாக்சன் துரை சிறை பிடித்த நேரத்தில் அவரைக் காப்பாற்றிய தளபதி வீரன் சுந்தரலிங்கம் அவர்கள். வெள்ளையர்களின் ஆயுதக் கிடங்கு களைத் தகர்த்து எறிந்த தற்கொலைப் படை வீரராகத் திகழ்ந்தார். வீரன் சுந்தரலிங்கம் அவர்கள் வீரனாகப் பிறந்து வீரனாகவே மடிந்தார்'' எனக்கூறினார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் பேசும்போது கூறியதாவது,

''நாட்டுக்கு உழைத்த நல்லோர்களைப் போற்ற வேண்டும் என்பதில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முனைப்புடன் பணியாற்றி வருகிறார்கள். தமிழ்நாட்டில் கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 16 இலட்சத்து 8 ஆயிரம் ஊரக வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த ஆண்டு (2003–2004) ரூ. 58 கோடியே 15 இலட்சம் மதிப்பில் 29 ஆயிரத்து 291 பணிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன. நடப்பாண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.43 கோடியே 45 இலட்சம் மதிப்பில் 9 ஆயிரத்து 532 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கிராமங்கள் முன்னேற, நமது கிராமம் என்ற திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்து நிதி ஒதுக்கீடும் செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள்'' எனக்கூறினார்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அ. சிவபெருமாள் (ஒட்டப்பிடாரம்) திருமதி. எஸ். ராஜம்மாள் (தூத்துக்குடி) மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர். மண்டல கலை பண்பாட்டு மையம் சார்பில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

– துரை. ராஜ்குமார்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தூத்துக்குடி.



தமிழரசு
R.N.I.No.21446/70
RGN No.TN/PMG (CCR) 836/03-06, WPP-518